D
V211,31 'N75—
31N75. 69;2
61706

# Tamil Nadu Legislative Assembly Debates

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*4th, 5th and 7th April* 1975.

Volume LXIX (Nos. 1 to 3).

TABLE OF THE CONTENTS.

*Friday, 4th April* 1975.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | ix—xvi |
| 1. Government Motion— Suspension of Question Hour ... ... ... | 1 |
| 2. Presentation of Reports— | |
| (*a*) Committee on Estimates—Report on Labour including factories ... ... ... ... | 1 |
| (*b*) Committee on Government Assurances—Eighth Report ... ... ... ... | 1 |
| 3. Voting on Demands for Grants for the year 1975-76.—*cont.* | |
| (*a*) Demand No 31-Welfare of the Scheduled Tribes and Castes, etc. ... ... ... | 2—26<br>27—120 |
| (*b*) Demand No. 29—Labour including factories. | 120—122 |
| (c) Demand No. 33—Housing ... ... | 125—250 |

Pages.

*Friday, 4th April 1975*—cont.

3. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

4. Statements by Ministers—
   (*a*) Utilisation of drought relief aid ... ... 26—27
   (*b*) Power-cut ... ... ... ... ... 122—125

5. Papers laid on the Table ... ... ... 250—251

*Saturday, 5th April* 1975.

1. Government Motion—
   Suspension of Question Hour ... ... ... 311

2. Adjournment Motions—
   (*a*) Fall in power supply from Neyveli and consequent lay-off in industries ... ... ... 311—319
   (*b*) Closure of operation theatre of Tiruchi H.Q., Hospital ... ... ... ... ... 319—324

3. Point of Order—
   Suspension of Question Hour ... ... ... 324—326

4. Calling Attention—
   (*a*) Foodgrains scarcity in Palladam taluk and consequential starvation of mill workers ... 328—330
   (*b*) Delay in granting increased wages to the Electricity Board workers ... ... ... 330—332

5. Motion—
   Leave of absence to Thiru O. N. Sundaram, M.L.A. 332—333

6. Government Bill—
   The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 333

7. Voting on Demands for Grants for the year, 1975—76—*cont.*
   Demand No 28—Community Development Projects, etc. ... ... ... ... ... ... 335—447

8. Papers laid on the Table ... ... ... ... 447



Pages.

*Monday, 7th April* 1975.

1. Obituary Reference—
   Demise of Thiru A. Appu, ex-M.L.A. ... ... 455

2. Questions and Answers ... ... ... ... 455—488

3. Calling Attention—
   Lack of employment opportunities to Ceylon repatriates at Gudalore taluk ... ... ... 488—491

4. Presentation of Report—
   Committee on Public Undertakings—Report on audit of Electricity Board .. .. .. 491—492

5. Points of Information—
   (*a*) Death due to accident at public meeting in North Arcot district and assistance to the affected family from Chief Minister's Fund ... 492—493
   (*b*) Burglary at Thiruvanmiyur ... ... 493
   (*c*) University Examination Questions *re* Prime Minister's political view ... ... ... 493—494

6. Point of Order—
   Non-supply of accounts of Transport Corporations to Members ... ... ... ... 494—496

7. Voting on Demands for Grants for the year, 1975-76—*cont.*
   (*a*) Demand No. 3—Motor Vehicles Acts—Administration ... ... ... ... ...
   (*b*) Demand No. 40—Road Transport Services ... 496—608
   (*c*) Demand No. 44—Stationery and Printing ...
   (*d*) Demand No. 54—Capital Outlay on Road Transport Services ... ... ... ...

8. Papers laid on the Table ... ... ... ... 609—610

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர் இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம். கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

HIS EXCELLENCY THIRU KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN: (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wakfs

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. ஜி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம்.ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 | அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 6 | அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 | அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 | அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 | அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 | அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 | ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 | ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 | ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 | ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 | ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 | இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம் |
| 20 | இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 | இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 22 | இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 | இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 | இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 | இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம் 2. |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 27 | இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 30 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 34 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. அ. | கங்கைகொண்டான் (செ.வ |
| 57 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 60 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 62 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி |
| 74 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டிணம் |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை |
| 79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு.ச. | அம்பாசமுத்திரம் |
| 83 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம் |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மூ. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, திருமதி | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 91 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்காநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம் |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | வீரபாண்டி. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 4.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்து, பேரவைக்கு அறிவித்துள்ளதற்கிணங்க, பேரவை விதி 22-இன் கீழ், முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ளதை இன்று தளர்த்தி, இன்றைய நிகழ்ச்சி நிரலிலுள்ள 'இனம் 2—அறிக்கைகளை அளித்தல்' என்றுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

## 2. அறிக்கைகள் அளித்தல்

**(அ) தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை.**

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories.

**(ஆ) அரசினர் உறுதி மொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை**

THIRU J. JAMES: Sir, I rise to present the Eighth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முசைபூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பெரம்பலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ந. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. வ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையான்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர் |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மு. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. டா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | ால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | ங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. சா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில் |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 இராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

## 3. 1975-76ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

### (அ) நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் —

"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,48,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. சு. ம. துரைராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த தியாகத்தின் நினைவாக, அவரது திருவுருவப் படத்தினை சட்டமன்றத்திலும், பள்ளிக் கூடங்களிலும் வைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,00 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**THIRU J. JAMES:** Sir, to discuss about the necessity to suggest to the Central Government to include the converted Harijans also in the Scheduled Caste list, I move—

"That the allotment of Rs. 9,48,00,000 under Demand No. 31 — Welfare of the Scheduled Tribes and Castes, etc.—be reduced by Rs. 100.".

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும்போது அவர்களிடமிருந்து எந்தத் தொகையும் பெறக் கூடாது என்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





**திரு. எ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அரிசன மக்களை ஊரின் ஒதுக்குப்புறத்தில் குடியமர்த்தாமல் ஊருக்குள்ளேயே பிற சாதி மக்களோடு சேர்த்துக் குடியமர்த்தும் முறையினை வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. என் இராசாங்கம்:** தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. சு. ம. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை மானியத்தின்மீது எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை நல்கியமைக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்வன்றேன்.

அரிசன நலத் துறை மானியம் குறித்து இங்கே ஒரு புத்தகத்தை அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தைப் பார்த்தால் சில புள்ளிவிவரங்களை அதில் தந்திருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே அதன் பிரகாரம் நாட்டில் செய்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் கல்வியை எடுத்துக்கொண்டால், அரிசன நல இலாகாப் பள்ளிகளில் கல்வியினுடைய தரம் மிகவும் கேவலமான முறையில் போய்க் கொண்டிருக்கிறதென்பது நாடு அறியும் உண்மையாகும். கல்வித் தரம் அங்கே நல்ல விதத்தில் இருக்கச் செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை நான் மிகவும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதித் தேர்வில் 60 சதவீதத்திற்குமேல் மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்ற மாணவர்களுக்கு மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின்கீழ் விடுதிக்காக ஒன்றரை மடங்கு வழங்கப்படுவதைப்போல 'டே-ஸ்காலர்'களுக்கும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 1975–76 ஆம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

[திரு. சு. ம. துரைராஜ்] [1975 எப்ரல் 4

செங்கை மாவட்ட நலப் பள்ளி ஆசிரியர்கள் 1973 இலிருந்து மத்திய அரசின் அரை மிலியன் ப்ரோக்ராம் திட்டப்படி பணிபுரிகிருர்கள். அப்படி பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் முதல் தேதியன்று சம்பளம் பட்டு வாடா செய்ய முடியவில்லை. அவர்களுக்கு 20 23-ந் தேதிதான் சம்பளம் கிடைக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. அதைப் போக்கி, அவர்களுக்கு முதல் தேதியே சம்பளம் கிடைக்க வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு ஒழுங்குபடுத்தும் பணி இதுவரையில் செய்து முடிக்கப்படவில்லை. மற்ற அரசினர் பள்ளிகளில், குறிப்பாக யூனியன் பள்ளி களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஒழுங்குபடுத்தும் முறையினைச் செய்து விட்டார்கள். ஆனால், அரிசன நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இன்றுவரை ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் இதனைச் செய்து தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நலத்துறைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1970-ஆம் ஆண்டிலிருந்து பிராவிடெண்ட் பண்டு பிடிப்பதை விட்டுவிட்டு, இன்றைக்கு வாங்குகிற சம்பளத்தில் மொத்தமாக ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளுகிருர்கள். இது என்ன நியாயம்?

சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கு மற்ற கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தருவதுபோல் இன்னும் பட்டியல் போட்டுத் தரவில்லை. குறிப்பாக, எம்.ஏ. படிக்கின்ற மாணவர்களுக்கும், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் இதுவரை ஸ்காலர்ஷிப் தரப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்குக்கூட இன்னும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இன்றைக்குப் பார்த்தால் அரசினர் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிருர்கள். மூன்று இடங்களில் தங்கும் முறையில் இடம் கொடுத்திருக்கிருர்கள். ஜனவரி மாதம் கல்லூரி ஆரம்பித்தும் மார்ச் மாதம்தான் விடுதியில் இடம் தருகிருர்கள் என்ருல் அதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

1936 ஆம் ஆண்டுக்குப் பிறகு சட்டக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட பேராசிரியர் இதுவரை யாரும் பதவி ஏற்கவில்லை. 1936 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய தந்தை சிவராஜ் அவர்கள் பேராசிரியராகத் திகழ்ந்தார்கள். அவர்களுக்குப் பிறகு இன்றுவரை எந்தத் தாழ்த்தப்பட்டவரும் அங்கே பேராசிரியராக நியமிக்கப்படவில்லை. இது என்ன நியாயம்? தகுதி வாய்ந்த



## 1975–76 ஆம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

1975 எப்ரல் 4] [திரு. சு. ம. துரைராஜ்]

தாழ்த்தப்பட்டவர் யாரும் இல்லையா? சட்டக் கல்லூரிப் பேராசிரியாக வரத் தகுதி பெற்றவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்தும் அவர்களுக்குப் பதவி தராதது வெட்கக் கேடாகும். இதுவரை முன்சீப்கள், மாஜிஸ்ட்ரேட்கள் ஆகிய பதவிகள் எத்தனை பேருக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக் கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு மதிய உணவு தருகிருர்கள். குறிப்பாக, கண்டிராக்டர்களுக்கு மதிய உணவுக்கான ரேஷன் கொடுத்து சலுகை தந்திருக் கிருர்கள். ஆனல், தனியார் பள்ளிகளில் மதிய உணவு அளிப்பதற்கு தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படாமல், அவர்கள் அரிசி கிடைக்காமல் கஷ்டப்பட்டு அதிக விலை கொடுத்து மதிய உணவு வழங்கி வருகிருர்கள். அவர்களுக்கும் மதிய உணவு அளிப்பதற்காக ரேஷன் வழங்கும் நல்ல காரியத்தை இந்த இலாக்கா பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நல இயக்குநர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சூபரின்டெண் டெண்ட் ஒருவர் பதினைந்து ஆண்டு காலமாக இருந்தும், இன்னும் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஏன் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் வேலை செய்கிருர்கள் என்று பார்த்தால் நிச்சய மாகக் கேவலமாக இருக்கிறது. மூன்று பேர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கிளார்க் வேலை பார்க்கிருர்கள். 8 பேர்தான் பியூன் வேலை பார்க்கிருர்கள். இந்த அவல நிலை ஏன் என்பதும் கேள்விக் குறியாக இருக் கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக இயங்கும் அலுவலகத்திலேயே இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்ருல், மற்ற இடங்களில் எப்படிக் கிடைக்கும்? கனம் அமைச்சர் சிந்தித்துப் பார்த்து இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பகுதி நேர ஆசிரியர்கள் நலப்பள்ளிகளில் அமர்த்தப்படுகிருர்கள். பகுதி நேர ஆசிரியர்கள் நல்ல தேர்ச்சி பெற்றவர்களா என்பதை சிந்தித்து, நல்ல தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு நல்ல திறமையும் சட்டப் படிப்பும் படித்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பேராசிரியர்களாக நியமித்து நல்ல முறையில் தேர்ச்சி பெற ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. ம. துரைராஜ்] [1975 ஏப்ரல் 4

அரிசன நலப் பள்ளிகளில், குறிப்பாக என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் செவ்வாப்பேட்டையில் ஒரு அரிசன நலப் பள்ளி இருக்கிறது. அந்த நலப் பள்ளியில் கழிவு அறை கட்டப்படவில்லை. பஞ்சாயத்துத் தலைவரிடம் சொல்லியும், சமூக நலத்துறைக்குத் தெரிவித்தும் இன்னும் கழிவு அறை கட்டப்படவில்லை. அதை உடனடியாகக் கட்ட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சிறு தொழில் கழகங்களை எடுத்துக்கொண்டால் சென்னையிலே உள்ள ஆபிசிலே மிகவும் கேவலமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக குழு அமைத்திருந்தாலும் கூட அதில் ஏமாற்றம் நிறைய இருக்கிறது. ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் 200 ரூபாய் லோன் வாங்க வேண்டுமென்றால் படுகின்ற பாடு கொஞ்சநஞ்சமல்ல. அந்த 200 ரூபாய் லோன் வாங்குவதற்கு 150 ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டிய நிலைமையிருக்கிறது. எனவே, நல்லபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சீக்கிரத்தில் லோன் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிட்கோ, இன்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ் போன்ற நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் இதுவரையில் எத்தனை பேர் லோன் மனுச் செய்திருக்கிறார்கள்; அவர்களில் எத்தனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு லோன் கொடுத்திருக்கிறீர்கள் என்ற விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் ஒரு அரிசன காலனி இருக்கிறது. அதைப் பார்வையிட்ட அதிகாரிகள் உடனடியாகக் கட்ட வேண்டுமென்று ரிக்கார்டுகள் எல்லாம் வைத்து முயற்சித்தார்கள். ஆனால் அது இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி ஒன்றியத்தில் ஒட்டங்காடு என்ற இடத்தில் காலனி கட்ட வேண்டுமென்று இருந்தார்கள். அதுவும் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை.

சுமார் எண்பது ஆண்டுக்காலமாக பேசின் பிரிட்ஜ் பகுதியிலுள்ள மூலக்கொத்தளத்தில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் எத்தனையோ இலட்சம் பேர்களுக்கு பட்டா கொடுத்திருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த இடத்தில் ஒருவருக்குமே பட்டா கொடுக்கவில்லை என்றால் என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. சு. ம. துரைராஜ்]

அதேபோல திருத்தணி பகுதியில் ஆகூர் என்ற இடத்தில் உள்ள காலனியில் குடிதண்ணீர் இல்லை என்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாகப் போடப்பட்ட குழாய்களில் ஊர்மக்கள் தான் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர, காலனி மக்கள் எடுக்கச் சென்றால் அடித்து விரட்டுகிறார்கள். அந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை வியாசர்பாடியில் சிவகாமி காலனியில் பாதைகள் சரிவர அமைத்துத் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வள்ளுவர்புரம் என்று, நகரத்திற்கு அருகில் இருக்கிறது. அந்த மக்களுக்கு வீட்டு வசதியில்லாமல் இருக்கிறது. இது சம்பந்தமாகப் பல அதிகாரிகளிடம் கேட்டேன். இதுவரையிலும் அந்த நிலைமை அப்படியே இருக்கிறதே தவிர வேறு நிலைமை ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டித்தரும்பொழுது சிமெண்ட் மூலம் தான் இதுவரையில் கட்டப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. இன்றைக்கு ஓட்டு வீடுகள் கட்டும் பிரச்சினை இருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஓடு போடும் பிரச்சினையை இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால் அதில் நிறைய ஊழல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாகச் சிலர் சோளாவிலுள்ள ஓட்டுக் கம்பெனியில் பங்குதாரர்களாக இருப்பதால், ஓடுகளை வியாபாரம் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் அதைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அதனால் உளுத்துப்போன மரங்களை திருவொற்றியூரில் பாலிஷ் செய்து கட்ட வேண்டுமென்ற முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கேவலமான நிலைமையை நீக்க வேண்டுமென்று இந்தச் சட்டசபையின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீண்டாமையைப் பற்றி எடுத்துக்கொண்டால், சில மாவட்டங்களில், வலம் வரும் காவற்படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று இந்தப் புத்தகத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காவற்படைப்பிரிவினர் எத்தனை கேஸ்களைப் போட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் திருப்பத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் வீட்டை ஜாதி இந்துக்கள் கொளுத்தியது மட்டுமல்லாமல் கொலை செய்யக் கூட முயற்சித்து, காவல்துறையினர் பிடித்து நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்கள். நீதிபதி அந்தக் கலவரத்துக்கு 7 பேருக்கு கடுங்காவல் தண்டனையும், அபராதமும் கொடுத்து தீர்ப்பளித்தார்கள். ஆனால் வெண்மணியிலே அவ்வளவு பேர் இறந்தும் அவர்களை எப்படி விடுதலை செய்தார்கள் என்று தெரியவில்லை. சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. வாசுதேவன் அவர்கள் தீண்டாமையைப் பற்றிப் பேசும்பொழுது, முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது, எனவே இதோடு திருப்திக்கொள்ளுங்கள் என்று. இன்றுவரையிலும் அது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. இதுவரையில் நிலைமை என்னவாயிற்று என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இறப்பதற்கு முன்னால் பாலர் அரங்கத்தில்—இன்றைக்கு உள்ள கலைவாணர் அரங்கத்தில்—பேசியிருக்கிறார்கள், இந்தச் சட்டமன்றத்தில் முப்பெரும் தலைவர்களின் படத்தை வைக்க வேண்டுமென்று. இந்த நாட்டிலே சிலைகள் வைக்க வேண்டுமென்று, பேசியிருக்கிறார்கள். முதலாவதாக மகாத்மா காந்தியடிகளின் படம், இரண்டாவதாக பகுத்தறிவுச் சிங்கம் நமது தந்தை பெரியார் அவர்களின் படத்தை வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மூன்றாவதாக சட்ட மேதை பெரியார் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை வைக்கவேண்டுமென்று அன்றைக்குப் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு அண்ணாவின் தம்பி என்று சொல்லிக் கொள்பவர்களின் அமைச்சரவை இந்தச் சட்டமன்றத்திலே மதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை வைப்பதற்கு ஏன் தயங்குகிறது என்று புரியவில்லை. நிச்சயமாக அந்த முடிவை எடுத்து அந்த உத்தமர் படத்தை இங்கே மாட்ட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, இன்றையதினம் அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

எங்களுடைய ஒப்பற்ற தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களின் இதய தெய்வமாக விளங்கக்கூடிய டாக்டர் முதல்வரவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நல்ல பல காரியங்களையெல்லாம் இன்றையதினம் ஆற்றி வருகிறார்கள். அப்படிப் பணியாற்றிவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களைப் பற்றி இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்கள் ஏது



ஏதையோ சொல்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காக தங்களுடைய இயக்கங்கள்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விளக்கங்களை எடுத்துச் சொல்கிறார்கள். உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் உன்னிப்பாக எந்தெந்த இயக்கங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன, எந்த இயக்கம் தாழ்த்தப்பட்டவர்களைப் பாதுகாக்கிறேன் என்று சொல்லி தாழ்த்தப்பட்டவர்களைப் படுகுழிக்கு அழைத்துச் செல்கிறது என்ற விளக்கங்களையெல்லாம் மிகத் தெளிவாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இங்கே பேசிய அ.தி.மு.க.-வினர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக இன்னின்ன காரியங்களைச் செய்யவில்லை என்ற குறிப்புகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்களைப் படுகுழிக்கு அழைத்துச் செல்லும் ஒரு இயக்கமாக அ.தி.மு.க. இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள்.

தகுதியின் அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும், தகுதியின் அடிப்படையிலேதான் கல்விச் சலுகை கொடுக்கவேண்டும், தகுதியின் அடிப்படையிலேதான் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அந்தத் தகுதி என்று வரும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் 100, 200 ஆண்டுகளுக்குப் பிற்படுத்தப்பட்டவர்களாக, பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களாக ஆக்கப்படுவார்கள் என்பது அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை என்று நான் நிச்சயமாக வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு கொள்கை இந்த நாட்டிலே நிறைவேற்றப்படுமானால், இராஜாஜி அவர்கள் சொன்னார்களே குலக்கல்வி திட்டம் என்று. அந்தக் குலக்கல்வித் திட்டத்தை இன்றைய தினம் அ.தி.மு.க.-வினர் மறைமுகமாக—தாழ்த்தப்பட்டவர்கள் கலைஞருடைய ஆட்சியிலே நீதிபதிகளாக வருகிறார்களே, டாக்டர்களாக வருகிறார்களே, ஐ.பி.எஸ். அதிகாரிகளாக வருகிறார்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வருகிறார்களே, இப்படி அவர்கள் முன்னுக்கு வந்துவிட்டால் மக்கள் சமுதாயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுமே என்ற எண்ணத்தோடு—இராஜாஜியின் வாரிசாக இன்றைய தினம் அ.தி.மு.க.-வினர் செயல்படுகிறார்கள் என்பதை இந்த நோக்கில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர்களே, ஆளுங்கட்சியின் சார்பில் பேசும் உறுப்பினரவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாமல் இந்த மன்றத்தில் பேசிக்கொண்டிருக்

கிறார்கள். வெளியே உள்ள மக்கள் அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தவறான எண்ணம் கொள்ளவும், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த அரசுக்கும்தான் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது மிகுந்த அக்கறை இருப்பதாகவும், அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுடைய வளர்ச்சியைக் கண்டு பொறுமைப்படுவதாகவும் தவறான கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

அன்றையதினம்கூட இந்த மன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் மறுக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் ஒரு பக்கம் இருந்தாலும், உயர்ந்த ஜாதியிலே இருப்பவர்கள் அங்கேயிருக்கின்ற திறமை உள்ளவர்களையும் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு, திறமையிருந்தும் பொருளாதாரச் சிக்கல் இருப்பதால் முன்னேற முடியாதவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர, ஏதோ தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிபதியாகவோ, டாக்டராகவோ, எஞ்சினியராகவோ வருவதில் எங்களுக்கும் காழ்ப்புணர்ச்சி இல்லை என்று கூறி இப்படிப்பட்ட தவறான கருத்தை உறுப்பினரவர்கள் மன்றத்திலே சொல்ல வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** அதுமட்டுமல்ல; இன்றையதினம் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் 12 சதவிகிதமாக இருந்த வேலை வாய்ப்பு, கல்விச் சலுகையை நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 18 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள். நாங்கள் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம். 18 சதவிகிதம் போதாது. அதிகமாக ஆக்க வேண்டுமென்று தங்கள் உணர்வைத் தாழ்த்தப்பட்ட மக்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அ.தி.மு.க.-வினர் அப்படிச் செய்யக் கூடாது, தகுதியின் அடிப்படையில்தான் செய்ய வேண்டுமென்று சொன்னால் எப்படி அந்த மக்களின் உணர்வுகளை, உணர்ச்சிகளை . . . .

**திரு. க. டிரா. எட்மண்ட்:** அப்படிச் செய்யக் கூடாது என்று எங்கே சொல்லியிருக்கிறோம் என்று உறுப்பினர் சுட்டிக்காட்டிப் பேசட்டும். ஆகாயத்தில் பேசுவது மாதிரி பொறுப்புள்ள சட்டமன்றத்தில் பேசுவது சரியல்ல. நாட்டு மக்கள் பத்திரிகைகளில் இவற்றை எல்லாம் படிக்க இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடாது என்று தடுத்திருக்கிறோமா?





**திரு. தாழை மு. கருணாநிதி:** தடுத்திருக்கிறார்களா இல்லையா என்பதை அவர்களுடைய சட்டமன்றப் பேச்சைப் படித்துப் பார்த்தாலே தெரியும். இன்றையதினம் நாயைத் தொடுகிறார்கள், பன்றியைக்கூடத் தொடுகிறார்கள், ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைத் தொட மறுக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற உணர்வோடு செயல்படுகிறபோது அது கூடாது, தகுதியின் அடிப்படையில்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது மறைமுகமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் இழைக்கக்கூடிய அளவுக்குச் செயல்படுவதே தவிர, வேறு என்னவாக இருக்குமென்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் பல விவாதங்களின்போது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீங்கள் செய்த காரியம் என்ன? சொல்ல முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆற்றி வருகிற தொண்டுகளைச் சிந்தித்துப் பாருங்கள். 22 லட்சம் தாழ்த்தப்பட்ட அரிசன கிறித்தவ மக்கள் எங்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேருங்கள் என்று உணர்ச்சி பூர்வமாகக் கேட்கிறார்கள். அவர்கள் கிறித்தவர்களாக மாறிவிட்டதால் உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்டாலும் அவர்களும் இந்த அரிசனங்களை போல் மிகமிக மோசமான நிலைமையிலேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்தச் சலுகைகளை எல்லாம் பெறக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டத்தில் இடம் தாருங்கள் என்று நாங்கள் கேட்கிறோம் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் கட்சியின் சாதனைகளைச் சிறப்பித்துச் சொல்வதில் ஆட்சேபனை இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்களுக்காகப் பல ஏற்பாடுகள் இருக்கின்றன . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுரேந்திரன் அவர்கள் பேசப் போகிறார்கள். அப்போது ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னென்ன கருத்துக்களைக் கூற வேண்டுமோ கூறலாம்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் பெறுகிற அத்தனை வாய்ப்புகளும், சலுகைகளும் கிறித்தவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் அந்தப் போராட்டத்தின் அறிகுறியாக,

[திரு. தாழை மு. கருணாநிதி]

அந்த உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய சர்க்காருக்கு எவ்வளவோ தபால்கள் எழுதியும், நேரடியாக எடுத்துச் சொல்லியும் இதுவரை அவர்கள் அரிசனங்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அந்த அரிசன மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்கள், அவர்களை மதிக்காதவர்கள் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைப் பறிக்கக்கூடிய நிலையில் . . . .

திரு. க. உரொ. எட்மண்ட் : ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் எல்லாம் வேண்டாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த மன்றத்தில் யாரும் பேசாததை அதைப் பற்றி எந்த விதமான கருத்தும் சொல்லாத நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் சொல்லியிருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் அப்படி எல்லாம் பேசியிருக்கிறார்கள் என்று பேசுவது முறையல்ல. இரண்டு முறை அவ்வாறு சொல்லவில்லை என்று கூறியும் அவர் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அதைத்தான் படித்துக் கொண்டு வந்தாரோ என்னவோ தெரியவில்லை. அவர் தயாரித்துக் கொண்டு வந்த பேச்சைப் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயாரித்து வந்த பேச்சு என்று சொல்லக் கூடாது. நீங்கள் உங்கள் மறுப்பைக் கூறுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : மறுப்பைத் தெரிவித்த பிறகும் திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி? நாங்கள் சொல்லவில்லை என்று சொன்ன பிறகும் திரும்பத் திரும்ப அதையே பேசுவது முறையல்ல.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகிற கருத்து— இன்றைய தினம் திரு. எட்மண்ட் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியில் பேசப்பட்ட கருத்தின் விளைவாகும். சாதி, திறமை, வறுமை இவற்றின் அடிப்படையில் வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று பேசுகிறபோது சமூக தாழ்ச்சி அடிப்படையில் தரப்படுகிற அப்படிப்பட்ட வாய்ப்புகளுக்கு அது எதிர்ப்பாக அமைகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : எப்படி அமையும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது அவருடைய கருத்து.





திரு. க. உரொ. எட்மண்ட் : சொல்லாததைச் சொன்னதாகக் கற்பனை பண்ணிக் கொண்டால் எப்படி?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கற்பனை பண்ணத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இங்கே அவர்கள் பரிமாறிக் கொண்டதைப் போல் திறமை அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்ற விவாதம் 15 நாட்களுக்கு முன்னால் ஏற்கனவே நடந்தது. நேற்று நானே பதில் சொல்லியிருக்கிறேன். நேற்று மேலவையில் திரு. வெங்கா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிப் பள்ளிகள் கூடாது என்றார். அதை மறுத்து அதற்கான ஆதாரங்களைக் கொடுத்து நேற்று பேசியிருக்கிறேன். இதை வைத்துப் பார்க்கும்போது, ஒரு களங்கம் இருக்கிறது, ஒரு கெட்ட எண்ணம் இருக்கிறது என்ற தொனியில் அதைச் சுட்டிக்காட்டுவது உறுப்பினர்கள் கடமையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகிறபோது அப்படி தகுதியின் அடிப்படையில், வறுமையின் அடிப்படையில் கொடுப்பது என்று வந்தால் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வாய்ப்புகள் கிடைக்காது அடிப்பட்டுப் போகும் என்பது அவருடைய வாதம். நீங்கள் தகுதியின் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறீர்கள். அதை அடிப்படையாக வைத்து அவர் பேசுகிறார். இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகும்?

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல அமைச்சர் அவர்கள் மேலவையில் எங்கள் கட்சி உறுப்பினர் வெங்கா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னதாகச் சொன்னார்கள். அதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர்ந்த சாதி மாணவர்களோடு கலந்து படிக்கக்கூடிய விதத்தில் நிலைமை உருவானால்தான் அவர்கள் முன்னேற முடியுமே தவிர, அவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பதால் எப்படி முன்னேற முடியும்?

திரு. தி. பொன்னுமலை : பாயிண்ட் ஆப் ஆர்டர். சென்ற ஆண்டு இதே சட்ட மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் பேசிய பேச்சை திரு. எட்மண்ட் அவர்கள் திரும்பவும் படித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பேசக் கூடாது அல்லது விமர்சிக்கிற முறையில் மற்றொரு அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துச் சொல்லக் கூடாதே தவிர ஆதாரத்திற்குத் துணையாக பாராட்டக்கூடிய அளவில் எடுத்துக்காட்டுவதில் தவறு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இரண்டு சபைகளும் இன்டிபென்டன்ட் பாடீஸ். அந்த சபையில் இருப்பவர்கள் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். அதேமாதிரி நாமும் நம் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். லோக் சபாவைப் பொறுத்தவரையில் பொதுவாக ராஜ்ய சபாவில் பேசியதை இங்கு எடுத்துச் சொன்னது தவறு என்று ரூலிங் இருக்கிறது. நீங்கள் வேண்டுமென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

It is more for maintaining the autonomy and the power of each body.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பலமுறை மாநில சுயாட்சிபற்றி பேசுகிற நேரத்தில் மேலவையில் டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்கள் பேசிய பேச்சுக்கள்கூட இங்கு எடுத்துக்காட்டுகளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்வதை அல்லது வாதத்திற்குப் பொருந்துகிற விஷயங்களை எடுத்துச் சொல்வதைத் தவறானதாகக் கருதுவதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில்கூட இன்னொரு அவையில் நடந்ததைப்பற்றி குறைவாகப் பேசக் கூடாது என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறோம். அதைத் தவிர அங்கு சொல்லப்பட்ட கருத்துக்கள் எதையுமே சொல்லக் கூடாது என்ற மரபு ஏற்றுக்கொள்ளக் கூடாத மரபு.

THIRU R. PONNAPPA NADAR: Our rule only says:

*Rule 67 (iii)*—" Use Offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legistature or of the other House."

என்றுதானிருக்கிறது. அபன்ஸிவ் எக்ஸ்ப்ரஷன்ஸ் என்றுதானிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன்.

" When a Member objected to a Minister's referring to the discussion in the other House and also to the views of a person outside who could not reply, the Chair observed that while the Minister was entitled to paraphrase the contents of the White



Paper under discussion, he need not criticise the statement of, nor make any adverse remarks against, a Member of any other House ".

அப்படித்தானிருக்கிறதே தவிர. குறிப்பிடக்கூடாது என்ற முறையில் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** எங்களது கட்சி உறுப்பினர் நாவலர் கருணாநிதி அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சனம் செய்தார். அதற்கு எட்மண்ட் அவர்கள் ஆத்திரப்பட்டு நாங்கள் இப்படித்தான் சொன்னோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே அதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள்கூட இதற்கு முன்னால் ஆனந்தவிகடனில் அவர்களது கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆத்திரம் வருகிறது எட்மண்ட்க்கு. அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசும்போது சொல்லலாம்.

**திரு. கு. காமாட்சி:** நாவலர் மு. கருணாநிதி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது திரு. எட்மண்ட் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அப்போது நாங்கள் எல்லாம் எழுந்து நின்றோம். எங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. விவாதத்தில் கலந்து கொள்ளாத அளவிற்கு திடீரென்று நுழைந்த கோவை செழியன் அவர்களுக்கு இரண்டு முறை நீங்கள் வாய்ப்பளித்திருக்கிறீர்கள். ஆகவே எங்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன். நான் நான்கு முறை எழுந்தேன்.

**திரு. கோவை செழியன்:** திடீரென்று நுழைந்த என்று சொல்லி. . .

**திரு. கு. காமாட்சி:** திடீரென்று நுழைந்தார், அவருக்கு வாய்ப்பு அளிக்கிறீர்கள். எங்களுக்கு அளிக்கவில்லை என்பதுதான் என் முறையீடு.

**திரு. எஸ். வடிவேல்:** ஹரிஜன மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு நாள். சமுதாயத்தின் கடைக்கோடியில் ஒதுக்கப்பட்டவர்கள் நாங்கள். கடைக்கோடியில் விவாதத்திற்கு வந்திருப்பதை இடையில் இன்டரப்ட் செய்து கொண்டிருந்தால் அரை நாள் போய்விடும். அப்போது நாங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல முடியாது. எழுபத்துநாலு லட்சம் பேர்கள் வாழ்க்கையிலும் மண்தான் விழும். எனவே நேரத்தை வீணாக்காமல் எங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

[1975 ஏப்ரல் 4

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியினுடைய ஒரு கொள்கையைப்பற்றி இங்கே பேசுகிறபோது அது நாடு, உலகம் முழுவதும் பரவுகிறது. அதை வைத்து அந்த கட்சியைப்பற்றித் தவறாக நினைக்க வாய்ப்பு இருக்கிறது. எனைத் தலைவர் [illegible] அவர்களும், மற்றும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அல்லது பின்தங்கியவர்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடாது என்று பேசியதாக எதை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்? எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னது—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்கு என்னென்ன வசதிகள், என்னென்ன சலுகைகள் தரவேண்டுமோ அவைகளை எல்லாம் தரவேண்டும்; மற்றவர்களுக்குத் தருவதை விட அதிகமான அளவுக்கு ஆதரவையே முன்வந்து தரவேண்டும், அவர்களுக்கு எல்லா உதவியும் செய்து அவர்களும் சமுதாயத்தில் மற்றவர்களோடு சமமாக வருகிற அளவுக்கு எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். ஆனால் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்களாகவே வைக்கப்படக் கூடாது; எதிர்காலத்திலே அப்படிப்பட்ட நிலை நீடிக்கக்கூடாது என்றுதான் கூறியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சுயமரியாதை இயக்க பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை :** இந்தச் சட்ட மன்றத்தில் எம்.ஜி.ஆர். சொல்லவில்லை. நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் அவர்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வெள்ளையன் அவர்கள் தகுதி அடிப்படையில் தான் உதவிகள் வழங்க வேண்டுமென்று உறுதியாகச் சொன்னார்கள். அதைத் தான் மறுபடியும் உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை மீண்டும் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மேல் சபையில் நடந்த விவாதத்தை இங்கு எடுத்துச் சொல்லலாமா? மேல் சபையில் உறுப்பினர்கள் ஏதாவது கருத்துத் தெரிவித்திருப்பார்களானால் அந்த விஷயம் உங்களுக்கு வந்து தாங்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, மேல் சபையில் பேசியதாகப் பத்திரிகையில் வந்ததை இங்கே எடுத்துக் கூறலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேல் சபையில் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவதில் தப்பு இல்லை. அங்கு இருப்பவர்களைக் குற்றம் சாட்டுகிற முறையில், பழி சொல்லுகிற முறையில் போகக் கூடாது என்பதுதானே தவிர, அங்கே சொன்ன கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதில் முறைகேடு ஒன்றும் இல்லை.

(முற்பகல் 9.30)



1975 ஏப்ரல் 4]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இரண்டு சபைகள் இருக்கிறபோது ஒரு சபையில் நடந்த விஷயங்களைக் கூட எடுத்துச் சொல்லக் கூடாது என்ற நியதி இருக்கிறது. ஒரு தடவை நானே இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் மேல் சபையில் நடந்த ஒன்றைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் ஆட்சேபணை கிளப்பியிருக்கிறேன். மேல் சபையில் யார் யார் என்னென்ன பேசினார்கள் என்பதைப்பற்றி இங்கு எடுத்துச் சொல்வது சரிதானா என்பதைப் பற்றி தாங்கள் சிறிது தீர்க்கமாக யோசித்து முடிவு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரே ஒரு கருத்து. நம்முடைய தமிழ் சமுதாயமாகட்டும் அல்லது வேறு எந்த சமுதாயமானாலும் ஆண்டாண்டுக்கு, நூறு ஆண்டுகளுக்குப் பின்னாலும் ஜாதி அடிப்படையில் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றளவில் என்றைக்குமே இருந்து கொண்டிருக்க வேண்டுமென்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வரவில்லை.

**திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதற்கு என்னுடைய கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன், நீங்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால். அவர்கள் வலியுறுத்திக் கூறிய காரணத்தால் சொல்கிறேன். பொதுவாக நாடாளு மன்றமானாலும் சரி அல்லது வேறு சட்ட மன்றங்களானாலும் சரி அல்லது நமது சட்ட மன்றத்தில் கூட மேலவை, கீழவை என்று வரும்போது ஒரு சபையினுடைய நடவடிக்கைகளை, அந்த சபை நடவடிக்கைக் குறிப்பில் ஏறப்படுகிற குறிப்புகளை மேற்கோள் காட்டுவதில் எந்தவிதமான தவறும் இருப்பதாக எங்கும் இதுவரையில் ரூலிங் தரப்பட்டது கிடையாது. ஆனால் விமர்சிக்கக் கூடாது. விமர்சனம் கூட மாசு கற்பிக்கக்கூடிய வகையில் செய்யக் கூடாது. புகழ் தருகிற வகையில் போற்றிச் சொல்வதாக இருந்தால் அது ஆட்சேபிக்கப்படுவதில்லை. மாசு தருகிற வகையில் ஒரு சபையில் கூறப்பட்ட கருத்தை இன்னொரு சபையில் விமர்சிக்கக் கூடாது என்பதைத் தவிர, அந்தக் கருத்தை எடுத்துக்காட்டாக காட்டுவதில் அல்லது அந்தக் கருத்தைப் பெருமைப்படக் கூறுவதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கூட எனக்கு ஆதாரமாக மற்ற அவைகளில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறேன். அப்படி காட்டக் கூடாது என்பதில்லை. அவைகளைப் பழித்துப்

[1975 எப்ரல் 4

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டப்படி வழக்கு மன்றத்தில் முறையாக சார்ஜ் ஷீட் செய்யப்பட்டு பிறகு அது பூர்ணமாக வெற்றி பெற முடியவில்லை என்றால், போலீஸ்காரர்கள் டிபக்டிவ் வாக சார்ஜ் ஷீட் போட்டார்கள் என்பது மட்டுமல்ல, சொல்லக்கூடிய சாட்சிகள் அங்கே தரமாக கிராஸ் எக்சாமினேஷனுக்கு நின்று சாட்சிகள் சொல்லப்பட்டு இருக்குமானால் வழக்கு தள்ளுபடி ஆகியிருக்காது. அப்படிச் சாட்சி சொல்ப வர்கள் நம்ம ஜாதியைச் சேர்ந்தவர்கள், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான் மாற்றிச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் சொல்கிற சாட்சி சரியாக இல்லாத காரணத்தால், தள்ளுபடி ஆகியிருக்கலாம் அல்லவா ?

திரு. எஸ். வடிவேல் : நான் தள்ளுபடி செய்யப்பட்டதை தப்பாகச் சொல்ல வில்லை. சார்ஜ் ஷீட் எப்படி தயார் செய்கிறார்கள்—இந்த கேஸுக்கு என்று சொல்லவில்லை, பொதுவாகச் சொல்கிறேன், அதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

இதே மாதிரி வடபாதிமங்கலம் வீட்டில் ஆகி இருந்தால், உடனே பட்டாளம், பட்டாளமாக 800 போலீஸ் போட்டு நின்று இருக்கும். ஆயிரக் கணக்கான அரிசன சேரிகள் நாசம் செய்யப்பட்டு இருக்கும். ஏனென்றால் அவர்கள் சமுதாயத்தில் கடைசி தட்டில் இருப்பவர்கள். எப்படி அவர்களுக்கு நியாயம் கிடைக்கும்? நீதி இலாகாவை நான் குறை சொல்லவில்லை. அவர்கள் சட்ட ரீதியாக அதைச் செய்து இருக்கலாம். ஆனால், இன்று சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்கள் சம்பந்தப்பட்ட கேஸ்களில் கேஸ்கள் சரியாக ஜோடிக்கப்படுவது இல்லை. எந்த அளவுக்கு அவர்கள் ஜாதியைச் சொல்லி இழித்து பேசப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும் * "என்னடா, இங்கே வேலை, போங்கடா" என்று சொல்லி யிருக்கிறார்கள், நிறைய நேரம் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த போலீஸ் ஸ்டேஷனில் எல்லாம் சொல்லப்பட்டு இருக்கிறது என்று என்னால் எடுத்துச் சொல்ல முடியும். மன்னார்குடியில் அரவிந்தர் காலனியில் உள்ள அரிசன மக்கள்மீது மன்னை எஸ்.ஐ. பொய் வழக்கு போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு போலீஸ ஸ்டேஷனில் அரிசன மக்களை இழிவாகப் பேசினார்கள் என்று குறிப் பிட்டார்கள். அந்த அளவிலே அது இருக்கலாம். அந்த ஜாதியின் பெயரைச் சொல்லி, விவரங்கள் எல்லாம் சொன்னார்கள். அந்த வார்த்தையை எடுத்து விட்டு, போலீஸ் ஸ்டேஷனில் அரிசன மக்களை இழிவாகப் பேசினார்கள் என்று திருத்திக்கொண்டால் நன்றாக இருக்கும். நண்பர் வடிவேல் அவர்களும் இதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 எப்ரல் 4]

திரு. எஸ். வடிவேல் : ஜாதியின் பெயரைச் சொல்லி கேஸ் போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் சொல்வதை நான் மறுக்க வில்லை. அந்த இரண்டு வார்த்தைகள் சொன்னீர்கள்—அதை நான் திரும்ப உச்சரிக்க இயலவில்லை—அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் நல்லது.

திரு. எஸ். வடிவேல் : வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். அது இருந்தால் என் சமுதாயத்திற்கு அவமானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகள் நிகழ்ச்சிக் குறிப்பில் எடுக்கப்படாது.

திரு. எஸ். வடிவேல் : ஜாதியின் பெயரைச் சொல்லி, துன்புறுத்தி வருகிறார்கள். ஆகவே பொருளாதார மாற்றம் ஏற்பட்டால்தான், அந்த அடித்தளத்தில் வாழ்கிற மக்கள் முன்னேற்றம் காண முடியும்.

11 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. கன்னி நிலம் இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த 11 லட்சம் ஏக்கர் நிலத்தை அரிசன தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து, அவர்களைக் கை தூக்கி விட்டால், அந்தச் சமுதாயத்தில் மாற்றம் காண முடியும்.

அதைத்தான் காலம் சென்ற தமிழகத்தின் தலை சிறந்த தலைவன் ஜீவானந்தம் அவர்கள்

"காலுக்கு செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்கு உழைத்தோமடா
பசையற்றுப் போனோமடா"

என்று சொன்னார்கள்.

இன்றைக்கு 28 ஆண்டு காலம் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னாலே என்ன நிலைமை ஏற்பட்டு இருக்கிறது? காங்கிரஸ் காலத்தில் அரிசன மக்களுக்காக கோவிலுக்குள்ளே நுழைவதற்கு வாயில்கள் அகல திறந்து விடப்பட்டன. ஆனால் மாற்றம் எதுவும் நடக்கவில்லை.

வீடு கட்டித் தரும் திட்டம் கொண்டுவந்து இருக்கிறோம் என்று சொன் னார்கள். அது வரவேற்கத்தக்கது. அதை நான் எதிர்க்கவில்லை. வீடு கட்டித் தருவதிலே நிலைமை என்னவென்றால், காங்கிரஸ் காலத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனை வழங்கினார்கள், கழக காலத்தில் அதே மாதிரி நிலைமை நீடிக்கிறது.

[1975 ஏப்ரல் 4

**திரு. தாழை மு. கருணாநிதி:** தயாரிக்கப்பட்ட பேச்சு என்று எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அவர் பிறரால் தயாரிக்கப்பட்டவர் என்பதை அவர் ஒத்துக் கொண்டதற்கு நன்றி.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நானும் அண்ணாவால் தயாரிக்கப்பட்டவன் தான்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** நானும் அண்ணாவால் தயாரிக்கப்பட்டவன் தான். இன்றையதினம் மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கம்யூனிஸ்ட் காரர்களின் பிடியில் அகப்பட்டு மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். 1947-ம் ஆண்டு இந்த நாடு சுதந்திரம் பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள். நாங்கள்கூட நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறார்களா என்று சொன்னால் நிச்சயமாக சுதந்திரம் பெற வில்லை. கம்யூனிஸ்ட் கட்சியில், அந்த இயக்கத்தில் இருப்பவர்கள் அந்த இயக்கத்தை விட்டுவிட்டு ஹரிஜனங்கள் வெளியேறிவிட்டால் அவர்களுடைய வீடுகளைக் கொளுத்துகிறார்கள். அவர்களுடைய கைகளை வெட்டுகிறார்கள், கொலை செய்கிறார்கள். புளிச்சக்காடியில் ஒரு கொலை நடந்திருக்கிறது. திருக்கண்ணங்குடியில் ஒரு கொலை நடந்திருக்கிறது. வீடுகளைக் கொளுத்து வது, கொலை செய்வது, கைகளை வெட்டுவது என்பது போன்ற கொடுமையான செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே ஹரிஜனங்கள் விடுதலை பெறவேண்டுமென்றால் கம்யூனிஸ்ட்களின் பிடியிலிருந்து அவர்கள் விடுதலை பெறவேண்டும். அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எதையாவது பேசலாம் என்ற முறையில்
கம்யூனிஸ்ட்கள் கொலை செய்தார்கள், கைகளை வெட்டினார்கள் என்றெல்லாம்
சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் அங்கிருக்கக்கூடிய
அதிகாரிகளைத் தொந்தரவு செய்து—நேற்று கூட ஒரு விஷயத்தைச் சொன்
னேன்—ஒரு குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டதற்குக் காரணம்
இன்றைக்கு பேசக் கூடிய உறுப்பினர்தான். இன்றைக்குத்தான் நான் அவர்
களைப் பார்க்கிறேன். இம்மாதிரி செய்து கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்ட்
கட்சியைப்பற்றி சொல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்று சொன்னால் எந்த
கம்யூனிஸ்ட் என்று சொல்ல வேண்டும். அன்று ஒருவர் சொன்னார்,
கம்யூனிஸ்ட் நெருப்பு வைக்கிறார்கள் என்று. அப்படியெல்லாம் மேடையில்
பேசுவது பொருத்தமாக இருக்கலாமே தவிர இந்த மன்றத்தில் பேசும்போது
கொஞ்சம் பொறுப்போடும் அடக்கத்தோடும் பேசுவது நல்லது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு
வெளியேறியவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்று சொன்னால், ஒரு
உறுப்பினரை குற்றஞ்சாட்டிப் பேசுவது முறையல்ல.

**திரு. தாழை மு. கருணாநிதி:** எந்த கம்யூனிஸ்ட் என்று கேட்டார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இருக்கிற இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், வேலூரில் வீட்டைக் கொளுத்தியிருக்
கிறார்கள். கச்சணத்தில் கையை வெட்டியிருக்கிறார்கள். திருக்கண்ணங்குடியில்
கொலை செய்திருக்கிறார்கள். செய்தவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு.
கே. டி. கே. தங்கமணி அவர்கள் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சார்ந்தவர்கள்தான். போதும் என்று கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கொடுமைகளை ஹரிஜனங்கள்மீது செய்திருப்பவர்கள் இங்கு
வந்து எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் செய்கிற காரியங்களைக் குறை சொல்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு
துரோகம் இழைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நாட்டிலுள்ள ஹரிஜன
மக்களுக்கு நன்கு தெரியும் யார் யார் தவறு செய்கிறார்கள், யார் நல்லது
செய்கிறார்கள் என்று. நாட்டு மக்களுக்கும் அது நன்கு தெரியும்.

எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்
தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக 11 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்
கிறார்கள். அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றி கூறிக்
கொள்கிறேன்.

இன்றையதினம் கொடுமையில் வாழ்ந்துகொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட
மக்கள் இடுகாடுகளுக்கு, சுடுகாடுகளுக்குக்கூட செல்வதற்கு வழி அற்றவர்
களாக பாதை அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் இன்னல்களையும்,
இடையூறுகளையும் சிந்தித்துப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தி 30 லட்ச ரூபாய் செலவில் சுடுகாடுகளுக்கு
பாதை அமைத்துத் தர இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே நான்
நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தர வேண்டு
மென்று சொல்லி, 10 லட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு, அதில் 1 லட்சம்
வீடுகள் தற்போது கட்டித்தரும் முனைப்பான திட்டத்தில் ஈடுபட்டு இருக்
கிறார்கள்.

வீட்டு மனைப் பட்டா—இருப்பதற்கே இடம் அற்றவர்களாக—எலி
களுக்கும், எறும்புகளுக்கும் இருக்க இடம் இருக்கிறது—ஆனால் தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு இருப்பதற்குச் சொந்தமாக இடம் கிடையாது. ஆனால், எங்க

னுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞரின் ஆட்சி காலத்தில் அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருப்பதற்கு இடம் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, இந்த சிறப்பான மானியத்தை வரவேற்று வழிமொழிந்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 15 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இருப்பது நான்கு மணி நேரம். அதில் அமைச்சருக்கு ஒரு மணி நேரம் போக, மூன்று மணி நேரம் உறுப்பினர்கள் பேசுவதற்கு இருக்கிறது. ஆகவே, ஒரு உறுப்பினருக்கு 10 நிமிடத்திற்கு மேல் வராது.

**திரு. எஸ். வடிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்த அரிசன மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சமுதாயத்தில் ஏறத்தாழ 74 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களின் முன்னேற்றத்திற்காக 9¼ கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த 9¼ கோடி ரூபாயில் அவர்களுடைய நலனைப் பாதுகாக்க முடியும் என்று அரசுத் தரப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஏதோ யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டதுபோல் இருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் இது கடலில் பெருங்காயம் கரைத்த கதையாகத்தான் இருக்கும். குறைந்தது 25 கோடி ரூபாய் ஒதுக்கினால்தான், அவர்களின் நலனை ஓரளவுக்குப் பாதுகாக்க முடியும், அந்த வகையில் செய்தால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த நாட்டிலே குறிப்பாக அரிசன மக்கள், வறட்சி என்று எடுத்துக் கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான், காலரா என்று எடுத்துக் கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான், பட்டினி பஞ்சம் வந்தால் பாதிக்கப்படக்கூடியவர்கள் அவர்கள்தான், கல்வியை எடுத்துக் கொண்டாலும், வறுமையின் பிடிப்பில் என்று எடுத்துக்கொண்டாலும்—முதலமைச்சரின் கூற்றுப்படி—நிச்சயமாக பாதிக்கப்படுவது இந்த அரிசன மக்கள்தான்.

இந்த அரிசன மக்களின் மாறுதலை, மாறுபாட்டைக் காண்பதற்கு தேசப் பிதா காந்தியடிகள் சொன்னார்கள், சமுதாயத்தில் பாதிக்கப்படக்கூடிய சமுதாயம், உழைக்கக்கூடிய சமுதாயம், அடித்தளத்தில் இருக்கும் சமுதாயம், மாற்றம் காணவேண்டிய சமுதாயம், பொருளாதார மாற்றத்தில் படிப்படியாக முன்னேற்றம் கண்டால்தான் அவர்களுடைய சமுதாய கலாசாரத்திலும் முன்னேற்றம் ஏற்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு சுதந்திரம் அடைந்து 28 ஆண்டுகாலம் ஆனபின்னாலும்கூட, சமுதாயத்தில் இன்று ஓரளவு சலுகைகள் பெற்று இருந்தாலும்கூட, நல்ல பரிமளிக்கத்தக்க மாற்றம் இல்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.





அந்த நிலைமையில் பார்க்கிறபோதுதான், இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் கேட்கிற வேண்டுகோளாக இருந்தாலும் சரி, அவர்கள் சொல்கிறது நியாயமாக இருந்தாலும் சரி, அதை நீதி இலாகாவாக இருந்தாலும் சரி, மற்ற இலாகாவாக இருந்தாலும் சரி, சரியாக எடுத்துக் கொள்வது இல்லை என்பதை கண்கூடாகப் பார்க்கிறோம்.

குறிப்பாக நான் சொல்வேன், இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு கீழ்வெண்மணியில் ஒரு சம்பவம் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள், கீழ்வெண்மணி சம்பவம் குறித்த வழக்கு உச்சநீதி மன்றத்திற்கு அப்பீல் செய்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நேற்றையதினம் போலீஸ் மானியத்தில் பதில் சொல்கிறபோது, நீதி இலாகா அதைத் தள்ளுபடி செய்து விட்டது என்று குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்பீல் கொடுத்தோம், உயர் நீதி மன்றம் தள்ளி விட்டது. மறுபடி அப்பீலுக்கு உச்ச நீதி மன்றத்திற்கு முறையீடு அனுப்பிக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. எஸ். வடிவேல் :** ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அரிசன சமுதாயத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எவ்வளவுதான் கொடுமைப்படுத்தப் பட்டாலும், எவ்வளவுதான் தாக்கப்பட்டாலும், தீக்கிரையாக்கப்பட்டாலும், அதற்கு போலீஸ் இலாகாவோ, மற்ற, மற்ற இலாகாவோ எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சரியாக எடுப்பது இல்லை. வழக்குகளை சரியாக ஜோடிப்பது இல்லை. ஏனெனில், அண்ணா அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அந்த 44 பேர் கொளுத்தப்பட்டு இறந்ததற்காக அவர்களுடைய உள்ளம் வேதனையால் துடித்ததையும், மனம் வேதனையால் கஷ்டப் பட்டதையும் பார்த்தோம். நான் இருக்கும் இந்த ஆட்சி காலத்திலே, இந்த 44 பேர் எரிந்து இறந்தது மிகவும் மோசம், வருந்தத் தக்கது என்று மனம் வருந்தி சொன்னார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உயிரோடு 44 பேர் கொளுத்தப்பட்டு இறந்து இருக்கிறார்கள். தங்களுடைய வலது கரம் எரிந்து கொண்டிருக்கிறபோது, இடது காத்தில் தான் பெற்றெடுத்த குழந்தையை வைத்துக்கொண்டு ஒரு தாய் செத்து இருக்கிறாள். மாண்புமிகு மன்னை நாராயணசாமி, அன்று கலெக்டராக இருந்த ரங்கபாஷ்யம், நான் அந்தக் காட்சியைக் கண்ணால் கண்டோம். கைக் குழந்தையோடு அந்தத் தாய இறந்து இருந்தாலும், முகம் கருகவில்லை. அப்படி ஒரு கோர நிகழ்ச்சியைப் பார்த்தபின்பும், வழக்கு ஜோடித்த போலீஸ் தரப்பினர் அந்த அரிசன மக்களை இப்படிப் பார்க்கிறார்கள் என்றால், அவர்களுக்கு எப்படி நீதி கொடுக்க முடியும்?

இருக்கின்றவர்கள் மேம்பாடு அடைய வேண்டுமானால், சர்க்கார் செலவில் சகலரும் படிக்க வேண்டும். அந்த முறையில் கல்வி முறை மாற்றி அமைக்கப் படவேண்டும்.

மேலும் பூண்டி வாண்டையார் கிராமத்தில் தகராறு நடந்திருக்கிறது. அம்பலக்காரர், அரிசனங்கள் விஷயத்தில் போலீஸ் தலையிட்டிருக்கிறது. அங்குள்ள எம்.ஐ. வேதய்யன் என்பவர் தாறுமாறான முறையில் பேசியதாகக் கேள்விப்படுகிறோம். பூண்டி வாண்டையார் குடும்பத்தில் உள்ளவர்கள் கீழ் வெண்மணியில் எப்படி வீட்டில் வைத்துக் கொளுத்தினார்களோ, அப்படி நாங்கள் மரத்தில் வைத்துக் கொளுத்துவோம் என்று சபதம் பூண்டிருக்கிறார்களாம். அந்த மாதிரி இடங்களில் சர்க்கார் பாதுகாப்பில்லை. அப்படி கொளுத்துகிற இடம் தான் அலைகள். பின் தங்கிய ஏரியா. அமைச்சர்கள் தலையிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதைப் புனர் பரிசீலனை பண்ண வேண்டும்.

ஓலப்பாடி என்ற பகுதியில் கன்னையன் என்ற அரிசனனை குளத்தில் வெட்டிக் கொன்றார்கள். அவர் அண்ணா தி.மு. கழகம் என்று சொன்னார்கள். வழக்குப் போடுவதற்கு முன்பு தி.மு. கழகம் என்று சொன்னார்கள். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு ஒரு வருஷம் ஆகி விட்டது. அரிசனங்கள் சம்பந்தப்பட்ட அவர்கள் கொடுக்கின்ற வழக்குகளை நியாயமாகப் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியான முறையாகாது. எங்களுக்குச் சொந்தம் பந்தம் மேலிடத்தில் யார் இருக்கிறார்கள்? அந்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. ஆகவே நீதி இலாக்கா, நிர்வாக இலாக்கா சரியாக இயங்கினால் தான் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 4. அமைச்சரின் அறிக்கைகள்

### (அ) வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணத்திற்கென்று 1974-75 நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 10 கோடி. இதில் 31—3—1975 முடிய, செலவழிக்கப்பட்ட



தொகை சுமார் ரூபாய் 8 கோடியே 70 லட்சமாகும். தொடர்ந்து வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாலும், ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் துரிதமாக தொடர்ந்து நடைபெறவும், நடப்பு ஆண்டில் (1975-76), திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சிப் பணிகளுக்கென்று நிதி நிலை அறிக்கையில் கண்டிட்டுக் காட்டிய ரூபாய் 20 கோடியில் முதல் கட்டமாக இப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ரூபாய் 6 கோடியே 30 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்து இன்று ஆணை பிறப்பிக்கின்றது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திட்டத்திற்கு அப்பாற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளோடு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (3) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (அ) நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள் அரிசனங்கள் முதலியோர் நலன்—தொடர்ச்சி

**திரு. சி. பாண்டுரங்கன் :** இன்று விவாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் அரிசனங்கள், மற்றும் மலைவாழ் ஜாதியினர் மானியத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றை அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரிசனங்கள் என்று சொல்லும்போது அரிசனங்கள் என்பது இடையில் வந்த பெயராகும். அதாவது ஆதித் திராவிடர்கள், பழங் குடிமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது தான், அவர்களுக்கு முதன்மையாக இருந்தது. இந்த அரிசனங்கள் மீது, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகவும் பேரன்பு கொண்டு, அவர்களுக்காகக் கண்ணீர் வடித்த தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள், இந்த அரிசனங்களை யாருமே கைதூக்கி விட முடியாது, யாராலும் காப்பாற்ற முடியாது என்பதை அறிந்து அவர்களை அரிசனங்கள், கடவுளின் பிள்ளைகள் என்று விட்டு விட்டார். இவர்களை மனிதர்கள் காப்பாற்ற முடியாது, கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்ற நிலைமையில் தான் அப்படிச் சொன்னாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் சுதந்திரம் 1947-ல் வாங்கினோம். இப்பொழுது 1975-ம் வருடம். இன்று வரை சுதந்திர விழா கொண்டாடுகிறோம். அரிசன விழாவும் கொண்டாடுகிறோம். இதற்கு முடிவே இல்லையா என்று நினைத்து வேதனைப்பட

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன், நான் பிறந்த சொந்த ஊரான திருக்குவளையில் 75 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வடிவேல் அவர்களின் தொகுதியில் இருக்கும் மக்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** முதலமைச்சர் அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது. திருக்குவளை, இடையூர் ஆகிய இடங்களில் கட்டி இருப்பது உண்மை. என் தொகுதியில் என்ன நடந்து இருக்கிறது என்றால், நான்கு வருஷத்திற்கு முன்னாலேயே நான் எழுதிக் கொடுத்தேன். அம்மையார் அவர்கள் இருந்த போது எழுதிக் கொடுத்தேன். அதாவது நான் எழுதிக் கொடுத்தது, ஆலஞ்சேரி, அரூர், ராயபுரம், பனங்காட்டாங்குடி, மாதரைவேலூர், வடரங்கம், கற்கோவில், எறகுடி, அகனி இம்மாதிரி ஊர்களில் கட்ட வேண்டுமென்று எழுதிக் கொடுத்தேன்.

அம்மையார் அவர்கள் சொன்னார்கள், என்னிடத்தில் பொட்டிதானே வாயில்லை என்று. 'அதற்கு நான் 'பச்சைப் பொய்' என்று சொன்னேன், 'பச்சைப் பொய்' என்று சொல்லக் கூடாது என்று நீங்கள் சொன்னீர்கள், அதனால் நான் அந்த வார்த்தையை வாபஸ் பெற்றுக்கொண்டேன். ஆனால் இப்போது நான்கு வருஷத்திற்குப் பிறகு இப்போது இந்த அரிசன நல அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிக் கொடுத்த பகுதியில் கட்டவில்லை. கே. பி. எஸ். மணி அவர்கள் எழுதிக் கொடுத்த இடத்தில் கட்டுகிறார்கள். முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கிற இடத்தில் கட்டுகிறார்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அங்கேயிருப்பவர்களும் அரிசன மக்கள்தான், அவர்களுக்கும் கட்டிக் கொடுக்கவேண்டியதுதான். ஆனால் நான் ஒரு தொகுதி எம்.எல்.ஏ. என்கிறபோது, ஒரு 10 இடத்தில் அந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் செயல்படுத்தினால் எனக்கு நன்றாக இருக்கும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தெந்த ஊரில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். இப்போது திட்டம் போட்டு கட்டச் சொல்லுகிறோம்.

**திரு. எஸ். வடிவேல்:** இன்னும் ஒரு ஊருக்குக் கூட இல்லை. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அரிசனங்கள் என்ன முடிவுக்கு வந்து விட்டார்கள் என்றால் ஆளுகிற கட்சிக்குச் சாதகமாக காங்கிரஸ் கொடியை கட்டினார்கள். தி.மு. கழக ஆட்சி காலத்தில் இந்தக் கொடியை கட்டுகிறேன். கடைசியாக என் கொடி செங்கொடி, கம்யூனிஸ்ட் கட்சிக் கொடி தான்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தன்னை அறியாமல் தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் தெளிவை குறை கூறுகிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** ஆளுகின்ற அரசின் பக்கமாக போகின்றதற்கு அடிப்படைக் காரணத்தை இழிவாகக் கருதவில்லை. நான் அந்த சமுதாயத்தில் பிறந்தவன். நான் எப்படி இழிவாகக் கருத முடியும்? இன்றைக்கு நிலைமை அப்படி இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும், மறுபடியும் சொல்லத் தேவையில்லை. அவர்களே ஒப்புக் கொண்டார்கள். திருக்குவளை, இடையூர் போன்ற பகுதிகளில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி அரிசனங்கள் வாழ்கின்ற இடங்களில் கட்டித் தரப்பட்டதாக ஒப்புக் கொண்டார்கள். அவர் குறித்துக் கொடுத்திருக்கிற இடங்களில் படிப்படியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள். இன்னும் 17 பேர் பேச வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** உபரி நில விநியோகம் என்கிற போது, தாழ்த்தப்பட்ட சமுதாயம், அரிசனங்களுக்கு முன் உரிமை தரவேண்டும். அந்த மாதிரி முன்னுரிமை கொடுத்தால் பல லட்சக்கணக்கான ஏழை விவசாயத் தொழிலாளிகள், உழுது பயிரிடுகின்றவர்கள், அவர்கள் பெயரை வைத்துக் கொண்டு பல பேர் பட்டாவை அனுபவித்துக் கொண்டு இருக்கின்ற அந்த நிலைமை இருக்கிறது. மன்னார்குடி ஓவர்ச்சேரி பகுதியில் குன்னியூர் அம்மாள் பெரிய பண்ணைக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிசனங்கள் வயலில் அறுத்ததாக அவர்கள் மீது வழக்கு பதிவாகியிருக்கின்ற நிலைமை இருக்கிறது.

அடுத்தபடி கல்வியை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு ஆரம்பத்தில் 73 லட்சம், 74 லட்சம் பேர் படிக்கிறார்கள் என்றாலும், இடைக் காலத்தில் பாதி பேர் படிக்காமல் விட்டு விடுகிறார்கள். அது யார் என்றால் தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய சமூகத்தினராகவும் தான் இருக்கிறார்கள். காரணம் பொருளாதார நிலைமை. அம்மா, அப்பனுக்கு வயதாகி, பொருளாதார நிலைமை சீரழிந்து, அவர்கள் படிப்பை பாதியில் முடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் சோவியத் நாட்டில் 18 வயது நிரம்பியவர்கள் படிப்பை முடித்து, பட்டம் பெற்று, வேலையோடு வீட்டிற்குத் திரும்புகிறார்கள். அவர்களுக்கு என்ன சலுகை அளித்தாலும், அவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டால் நிலைமை என்னவாகும்? ஆகவே, சமுதாயத்தில் கீழ்த் தட்டில்

வேண்டியிருக்கிறது. இது தமிழ் நாட்டிற்குமட்டும் உரித்தான பிரச்னை இல்லை. இது அகில இந்தியாவிலும் கடைபிடிக்க வேண்டிய நிலைமை. இது அகில இந்தியப் பிரச்னை. தமிழ்நாட்டில் அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்னையைத் தீர்த்து விட்டாலும் இது அகில இந்திய அளவில் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கிறதா என்றால் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. எப்படி?

(முற்பகல் 10-00)

பிரிட்டிஷ் காலத்தில் இருந்த நிலைமை, இன்று இருக்கிற நிலைமை இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஓரளவு இன்றைக்கு அவர்களுக்கு செய்திருக்கலாம். ஆனால் பூரணமாக செய்திருக்கிறோமா என்று கேட்டால் இல்லை என்பதைத்தான் நான் சொல்லவேண்டியிருக்கிறது. சரியாகச் செயல்பட்டிருந்தால் 1947-லிருந்து 1975 வரையில் அரிசன விழாக்கள் கொண்டாட வேண்டிய நிலைமை ஏற்படுமா? அரிசனங்களுக்கு என்று ஒரு வாரியம் தனியாகத் தேவைப்பட்டிருக்குமா? சரியாகச் செயல்படாததால் தான் இன்றைக்கும் அரிசன விழா கொண்டாடுகிறோம், ஒரு தனித் துறையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஒரு தனி அமைச்சரைப் போட்டிருக்கிறோம். ஆகவேதான் இன்று வரையில் அந்த மக்களுக்காக சரியான முறையில் செயல்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்த அரிசனங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அவர்கள் தீராத நோய் பிடித்துள்ள ஒரு மனிதனைப் போல் இருக்கிறார்கள். இந்த நோயாளியைக் குணப்படுத்த பல டாக்டர்கள் முயற்சி செய்தார்கள். மகாத்மா காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், பேரறிஞர் அண்ணா, இப்போது முதலமைச்சராக இருக்கிற டாக்டர் கலைஞர் இவர்கள் எல்லாம் அந்த நோயாளியைக் குணப்படுத்த முயற்சி எடுத்த டாக்டர்கள். கலைஞர் அவர்கள் இப்போதும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள்? காந்தியடிகள் அரிசனங்களுக்கு சில சலுகைகளைக் கொடுத்து, சமுதாயத்தில் மற்றவர்களோடு சரிநிகராக வாழ வைக்க வேண்டுமென்பதற்காக சட்ட திட்டங்களைத் தீட்டச் சொன்னார்கள். டாக்டர் அம்பேத்கார் சட்ட திட்டங்களைத் தீட்டினார்கள். அதன் பின்னால் அவர்களால் சீர்பண்ண முடியாது என்று எண்ணி, எங்களுக்கு என்று தனியான ஒரு இடத்தைக் கொடுத்துவிடுங்கள், நாங்கள் வாழ்கிறோம் அல்லது சாகிறோம் என்று சொன்னார்கள். காந்தியடிகள் அதை ஒப்புக்கொள்ளவில்லை.



மற்றவர்களோடு அவர்களும் சரிநிகர் சமமாக வாழ வேண்டும்; பொருளாதாரத்தில், கல்வியில், சமுதாயத்தில் மற்றவர்களோடு சரிநிகர் சமமாக வாழ வேண்டும்; அதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்; சட்ட திட்டங்களைப் போட்டார்கள். ஆனால் அந்த சட்ட திட்டங்களை எந்த அளவுக்கு செயல்படுத்தினார்கள் என்று பார்த்தால், அகில இந்திய அடிப்படையில் பார்த்தால் அரிசனங்கள் அன்று எப்படி இருந்தார்களோ அப்படியேதான் இன்றும் இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களில் எத்தனை பேர் முழுமையாகத் துணி அணிந்து கொள்கிறார்கள், எத்தனை பேர் அரை நிர்வாணமாக இருக்கிறார்கள், எத்தனை பேர் கால் நிர்வாணமாக இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால் இவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை அறிய வாய்ப்பு ஏற்படும்.

நிலம் உள்ளவர்கள் எத்தனை பேர், நிலம் இல்லாதவர்கள் எத்தனை பேர், வீட்டு மனை உள்ளவர்கள் எத்தனை பேர், வீட்டு மனை இல்லாதவர் எத்தனை பேர், வீடு உள்ளவர் எத்தனை பேர், வீடு இல்லாதவர் எத்தனை பேர், கல்வி பெற்றோர் எத்தனை பேர், கல்வி அறிவே இல்லாதவர் எத்தனை பேர், பதவியில் இருப்பவர் எத்தனை பேர், பதவியில் இல்லாதவர் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கை எல்லாம் எடுத்துப் பார்த்தால் அவர்களின் நிலைமை இந்த சமுதாயத்தில் எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

ஆனால் யாரும் இந்தக் கணக்கை எடுப்பதில்லை; இந்த சர்வே எடுக்க யாரும் முயற்சி செய்யவில்லை. சரியாக எடுக்கவும் முடியாது. அகில இந்திய அடிப்படையிலே இந்தக் கணக்கை எடுத்து, அவர்களை எந்தெந்த வழி முறைகளில் முன்னேறச் செய்யலாம், சமுதாயத்தில் எந்த அடிப்படையிலே முன்னேறச் செய்யலாம் என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக அவர்களைப் பற்றிய சர்வேயை சரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும்.

மின்சாரம் பற்றாக்குறை என்றால் வெளிமாநிலங்களிலிருந்து வாங்குகிறோம் அல்லது உற்பத்தியைப் பெருக்குகிறோம். உணவுப் பிரச்சனை என்றாலும் இதே முறையைக் கையாளுகிறோம். ஆனால் இந்த அரிசனங்கள் பிரச்னைக்கு முடிவு காண வேண்டுமென்றால் முதலில் இந்த மாதிரியான ஒரு சர்வே எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் இந்த மக்களை எப்படி முன்னேற்ற வேண்டும் என்று பார்த்து, ஒரு சீர்திருத்தமான ஏற்பாட்டைச் செய்தால் இந்த சமுதாயம் முன்னேறும். அப்போது இந்த அரிசனத் துறை இருக்க வேண்டிய

இல்லை; அதற்கென்று தனி அமைச்சரும் இருக்க வேண்டியதில்லை. அந்த நிலைமை ஏற்படும் வரையில் ஏதோ செய்கிறோம், ஏதோ செய்கிறோம் என்று சொன்னால் முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்காகத்தான் சொன்னார்கள். 'உங்களுடைய பார்வை இந்த நாட்டிலிருக்கிற ஏழை எளிய மக்கள் பக்கம் திரும்ப வேண்டும்' என்று சொன்னார்கள். ஏழை எளிய மக்கள் என்றால் சமுதாயத்திலே பின்தங்கி இருப்பவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள். அவர்கள் பக்கம் இந்த அரசின் பார்வை திரும்ப வேண்டும்; அவர்களுக்கு வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அண்ணா சொன்னார்கள்.

காந்தியடிகள் இந்தத் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக ஒரு அரிசன பெண்ணை தன்னுடைய மடியில் இருத்தி வளர்த்து வந்தார்கள். இந்தச் சமுதாயம் மற்ற சமுதாயத்தோடு இணைந்து வாழவேண்டும்; தீண்டாதவர் என்று யாரையும் வைக்கக்கூடாது என்று சொன்னார்கள். மேலும் அவர்களே சொன்னார்கள். மீண்டும் மனிதப் பிறவி எடுக்க வேண்டுமென்றிருந்தால் ஒரு அரிசனனாக, ஒரு தாழ்த்தப்பட்டவனாகத்தான் பிறக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அரிசன சமுதாயத்தையே தன்னுடையதாக்கிக் கொண்டார்கள். தன்னுடைய குடும்பத்தோடு அரிசனங்களை இணைத்துக்கொண்டார்கள். காந்தியடிகள் நினைந்தார்கள், கலைஞர் அவர்கள் செய்து காட்டினார்கள். தன்னுடைய பிள்ளைக்கு ஒரு அரிசன பெண்ணை மணமுடித்துவைத்து, இந்தச் சமுதாயம் சீர்கெட்டது அல்ல, இந்தச் சமுதாயம் தீண்டப்படாதது அல்ல என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தீண்டப்படாத சமுதாயம், சீர்கெட்ட சமுதாயம் என்று சொல்லக்கூடாது. சொல்வது தவறு என்பதை இந்த நாட்டிற்கு நிரூபித்துக் காட்டி, இந்த சமுதாயத்தைச் சொந்தமாக்கிக்கொண்டார்கள். இந்தச் சமுதாயத்திற்கு டாக்டர் கலைஞர் மட்டும் இப்படிச் செய்தால் போதாது. நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, இந்த அரிசன மக்கள் பற்றிய சர்வேயை எடுத்து, எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை இருக்கிறது, எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை இல்லை; எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள், எத்தனை பேர் நிலமில்லாமல் இருக்கிறார்கள் என்பன போன்றவைகளை எல்லாம் பார்த்து, இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கே இருக்கிறோம். இப்படி இந்த நாட்டிலுள்ள எல்லா இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு இடம் கொடுக்க



வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் அரிசனங்களின் தொகை குறைந்து இந்த நாட்டிலுள்ள மற்ற ஜாதிக்காரர்கள் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லா இடங்களிலும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதோடு முக்கியமாக உங்களுடைய உள்ளத்தில் இடம் கொடுங்கள். உங்களுடைய உள்ளத்திலே இடம் கொடுத்து விட்டால் எல்லா இடங்களிலும் அவர்களுக்குப் பதவி கிடைக்கும், பட்டம் கிடைக்கும், கல்வி கிடைக்கும், பொருளாதார முன்னேற்றம் கிடைக்கும். ஆகவே, எல்லா இடங்களிலும் இடம் கொடுப்பதை விட உங்கள் உள்ளத்திலே இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு பிரச்சனைக்கும் ஆளாகி இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? பொருளாதாரத்தில் வசதி இல்லை, கல்வியில் வசதி இல்லை என்று நினைக்கும்போது, இது தொன்றுதொட்டு வந்த ஒரு குறையாக இருக்கிறது. அவர்களிடம் உழைப்பு இல்லையா என்றால் அவர்கள்தான் நல்ல உழைப்பாளிகள். மேலே ஒரு கந்தல், கீழே ஒரு கந்தல் கட்டிக்கொண்டு ஜாக்கெட் போட வழியில்லாமல் பெண்கள் எல்லாம் வயலிலே உழைக்கிறார்கள். ஆண்களும் அப்படி உழைக்கிறார்கள். உழைத்து, உழைத்து உடல் உரம் பெற்றவர்கள்தான் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்கள் கடமையைச் செய்கிறார்கள். கடமையில் இருந்து எப்பொழுதுமே தவறுவது கிடையாது. அவர்களிடம் கண்ணியம் இருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள விவசாய அறுவடையை செய்கிறார்கள் என்றாலும், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் அவர்களை நம்பி, அவர்களிடம் விட்டு விடுகிறார்; வயலுக்குப் போக மாட்டார். அந்த அளவுக்கு அவர்களிடம் கடமை இருக்கிறது; கண்ணியம் இருக்கிறது. ஆனால் கட்டுப்பாடு கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் சாட்சி சொல்ல வரவில்லை என்று சொன்னார்கள். சாட்சி கூற அவர்கள் வர முடியாது. ஏனென்றால் மற்றவர்களை நம்பி, மற்றவர்கள் கையை நம்பி, மற்றவர்கள் உபகாரத்தை எதிர்பார்த்து வாழக்கூடியவர்கள். ஆகையால் அவர்களால் தனியாக நின்று வாழ முடியாது. அதனால் மற்றவர்களுக்கு எதிராக சாட்சி கூற வர முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடு மட்டும் அவர்களிடம் இருந்தால், உண்மையிலேயே இந்தச் சமுதாயம் இவ்வளவு கேவலமாக, கீழ்த்தரமாக எண்ணப்பட மாட்டாது. கட்டுப்பாடு வந்துவிட்டால் அவர்களுக்கு இப்படி ஒரு தனித் துறையே தேவைப்படாது; இந்த மானியமும் தேவைப்படாது. இந்தக் கட்டுப்பாட்டை அடையும் நாள் எந்நாளோ என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 4

பழங்குடி மாணவர்களை எடுத்துக்கொண்டாலும்—அவர்களுக்காக நாம் 1973-74-இல் 23 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்றால் இந்த நடப்பு ஆண்டில்—1974 75-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 21 ஆயிரம்தான். இந்த அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு, இந்த மாணவர்கள் உதவித் தொகை பெற வேண்டுமென்று சொன்னால் வருமான வரம்பை 6,000-இல் இருந்து 9,000 ரூபாயாக மத்திய அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. ஆனால் மாநில அரசோ வருமான வரம்பை 2,500-இல் இருந்து 3,000 ஆகத்தான் ஆக்கியிருக்கிறது. இந்த அளவுக்கு வைத்துக்கொண்டிருந்தால் அந்தச் சமுதாய மக்களுக்கு எவ்வளவு பண உதவி அளிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த அளவு அளிக்க முடியாது போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருமான வரம்பை அதிகப்படுத்தி—தகுதி உடைய மாணவர்களுக்கு எல்லாம், அந்தச் சமுதாயம் பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைய, கல்விக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று. கடந்த பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வரும் இலவசக் கல்வித் திட்டத்தைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அமைச்சர் சொன்னார் என்பதாக பத்திரிகையில் பார்த்தேன். கவர்னர் அவர்களும் இதைப்பற்றி ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இலவசக் கல்வித் திட்டத்தின் காரணமாகத்தான் கொஞ்சமாவது தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஏற்கனவே நாட்டில் இருந்த குலக் கல்வி முறையை ஒழித்துவிட்டு—இலவசக் கல்வி முறையை காங்கிரஸ் அரசுதான் கொண்டுவந்தது. எந்தக் காரணம் கொண்டும் இந்த இலவசக் கல்வி முறையை ஒழித்துவிடக் கூடாது. தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இலவசக் கல்வியினால்தான் அதிகப் பயன் பெறுகிறார்கள். இலவசக் கல்வியை ஒழிப்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். யார் எதைச் சொன்னாலும் இந்த இலவசக் கல்வித் திட்டத்தை ஒழிப்பதற்கு நமது அரிசன நலத் துறை அமைச்சர் ஒத்துக்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்து, அரிசன மாணவர்களுக்கு தனி இல்லங்கள் அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கதாக இல்லை. அவர்களும் மற்ற சமுதாய மாணவர்கள் தங்குகின்ற இல்லங்களிலேயே தங்கி கல்வி பயில்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தீண்டாமை ஒழிய வாய்ப்பு



1975 ஏப்ரல் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஏற்படும்—மற்ற சமுதாய மக்கள் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைவதைப் போல அவர்களும் கல்வித் துறையில் முன்னேற்றம் காண முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மற்ற சமுதாய மாணவர்கள் தங்குகின்ற விடுதிகளிலேயே இவர்களையும் சேர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவு—சத்துணவு என்பதாக எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து வருவதாகக் காண்கிறோம். 1968 ஆம் ஆண்டு நான் எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினராக இருந்தபோது பல விடுதிகளைச் சென்று பார்வையிட வாய்ப்புக் கிடைத்தது. பெரும்பாலான அந்தச் சமுதாய மாணவர்கள் வாய்ப்புண்ணினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். காரணம் டெபிஷியன்ஸி—இந்த மாணவர்களுக்கு சத்துணவு என்று கொடுத்தாலும்— பிறப்பில்—அவர்கள் தாய்க்கருவில் இருந்தபோது சரியான சத்துணவு இல்லாத காரணத்தினால் குழந்தைகளாகிய இவர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையையும் பார்த்தோம். ஆகவே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள்— கருவுறுகிறபோதே நல்ல சத்துணவைப் பெற—தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ட்ரைபல் அட்வைசரி கமிட்டி இருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. 29—2—72-இல் அது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரத்தில் 50 படுக்கை கொண்ட மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கிறது. அந்தத் தீர்மானம் இதுவரை செயல் படுத்தப்படவில்லை. அதை இந்த அரசாங்கம் சிந்தித்ததாகக்கூடத் தெரியவில்லை. அங்கே அரிசன மக்கள்— மலைவாசி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பது குறைவாக இருக்கிறது. எதற்காகக் கூறுகிறேன் என்றால் காணி சமுதாயத்தைச் சேர்ந்த மலை சாதி மக்களுக்கு அம்மை நோய் வருகிறது. அம்மை நோய் வந்துவிட்டால் அம்மை நோய் வந்தவரை அங்கேயே போட்டுவிட்டு அங்கிருந்து மற்றவர்கள் போய்விடுகிற பழக்கம் அவர்களிடம் இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான மருத்துவ வசதி பெற வழியில்லாத காரணத்தினால் இது போல அவர்களை விட்டுவிட்டுப் போகிற பழக்கம் பழங்காலம் தொட்டே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் நிச்சயமாக ஒரு மருத்துவ மனையை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 4

அடுத்து, அரிசன மக்களுக்குத் தரிசு நிலப்பட்டா செய்து கொடுப்பதாக இந்த அறிக்கையிலிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் களியல் பகுதியில் ஏறத்தாழ 300 குடும்பங்கள் 786-வது சர்வே எண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் ஃபாரஸ்ட் இலாகாவானது, அந்த நிலம் ரெவின்யூ புறம்போக்கு அல்ல, ஃபாரஸ்ட் லான்ட் என்று சொல்லி, அங்குள்ள ஏழை அரிசனங்களை அப்புறப்படுத்துகிறது. மாண்புமிகு அரிசன நல அமைச்சரிடம்கூட ஒரு கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில், அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலம் இன்னும் பதித்துக் கொடுக்கப்படாததால், அவற்றை அவர்களுக்குப் பதித்துக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் அரிசன மக்களுக்கு இதுவரையிலும் பட்டா வழங்கப்படவில்லை. நான், அத்துறை அதிகாரிகளைக் கேட்டால், நீலகிரி மாவட்டத்திற்குக் குறிப்பாக, குன்னூருக்கு இந்தச் சட்டம் பொருந்தி வராது என்று கூறுகிறார்கள். அதனால் அங்கே பட்டா செய்து கொடுக்கவில்லையென்ற புகார் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அங்கேயிருக்கிற அரிசன மக்களுக்கு தற்போதுள்ள 200 ஏக்கர் நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம் அரசு இன்னும் அரிசன மக்களை இரண்டு விதமாகப் பிரித்து வைத்திருக்கிற அவல நிலை நிச்சயமாக மாறவேண்டும். கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாத இந்துக்கள் என இரு பிரிவுகளாக அவர்களை வைத்து கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கு சலுகைகள் மறுப்பது சரியல்ல, ஏதோ சூழ்நிலை காரணமாகச் சமுதாயத்தில் இருந்த நெருக்கடியின் காரணமாக, ஆங்கிலேயன் இருந்த காலத்தில், இங்கேயிருந்த இந்துக்கள் கிறிஸ்தவர்களாகியிருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர்களாகிவிட்ட காரணத்தால், பொருளாதார ரீதியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இன்னும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொருளாதாரத்தில் எந்த மாற்றமும் இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே, இந்துக்களுக்குக் கொடுக்கின்ற சகல நன்மைகளையும், மத்திய அரசிலே கொடுக்கிற அனைத்துச் சலுகைகளையும் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்க, இங்கேயிருக்கிற அரசு ஆணை எண் 19—பிரிவு 3 ஐ மாற்றியமைக்க வேண்டும். அந்த ஆணையில், இந்து அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அரிசன் என்று கருதப்படுவார்கள், மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் அரிசன் என்று கருதப்படமாட்டார்கள் என்ற விதிமுறையிருக்கிற காரணத்தால், இப்பொழுது கிறிஸ்தவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கவில்லை. ஆகவே, அரசாங்கம் சட்டத்தைத்



1975 ஏப்ரல் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

திருத்த ஆலோசிக்க வேண்டும். நான் தனியார் தீர்மானம் கொடுத்திருக்கிறேன், அதற்காக. அதை இந்த அரசாங்கம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மாநிலங்களில், கிறிஸ்தவர்களானாலும்கூட, இந்துக்களைப் போல், பல சலுகைகள் கிடைக்கின்றன. கேரளத்தில், எம். எஸ். ஜோசப் என்ற அதிகாரி காணிக்காரராக இருந்தாலும், அவருக்கு இந்துவைப்போல், ஐ.ஏ.எஸ். அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் கிறிஸ்தவராக இருந்தாலும், அரிசன் என்ற முறையில் ஐ.ஏ.எஸ். கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், நாகாலாந்தில் இருக்கிற கிறிஸ்தவ அரிசனங்களும், இந்து அரிசனங்களைப் போல், மத்திய அரசாங்கச் சலுகைகளையும், மாநில அரசின் சலுகைகளையும் பெற்றுவருகிறார்கள். இங்கே நமது அரசும் வேறுபாடு காட்டாமல், சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரிசன மேம்பாட்டு வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி ஒன்றைக் கூற முற்படுகிறேன். அது உண்மையிலே அரிசனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டதா அல்லது இந்த அரசாங்கத்திற்கு விளம்பரம் தேடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதாகத் திட்டம். ஆனால், இதுவரையில் கட்டியிருப்பது 10,000 வீடுகளே. திறப்பு விழாவுக்காக எந்த அளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறவேண்டும். எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் வந்திருக்கிறது. கட்டப்பட்டிருக்கிற வீடுகள் ஒரு காற்றுக்குக் கூடத் தாக்குப் பிடிக்காது என்று கூறுகிறார்கள். சாந்து சரியாகச் செய்யப்படவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, அது சரியான அளவுக்கு அரிசனங்களுக்குப் பயன்படுமா என்ற ஐயப்பாடிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் பயன் தரக்கூடிய அளவு நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தச்சூர் அரிசன கிராமத்திற்கு பாத்வே போட உத்தரவு பிறப்பிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

ஜாடையாக, கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நமது இன்ஃபர்மேஷன் டிபார்ட்மென்டானது ஒழுங்கான முறையில் அதை விளம்பரம் செய்யவில்லை. இந்த மன்றத்தில் சில நாட்

களுக்கு முன்னால் வைத்த ஒரு புத்தகத்தில் உள்ள படத்தில் 4 தம்பதிகளில் 4 ஆண்கள் இருக்கிறார்கள்; ஆனால் 3 பெண்கள்தான் இருக்கிறார்கள். இந்த இன்ஃபர்மேஷன் டிபார்ட்மென்ட்டானது ஏன் இந்த அளவு செயலாற்றுகிறது, என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்தப் புத்தகத்தைத் தருகிறேன். கலப்புத் திருமணம் 4 தம்பதிகளுக்கு நடத்தப் பட்டிருக்கிறது. ஆனால் அதில் 2 ஆண்கள் இருக்கிறார்கள், 3 பெண்கள் தானிருக்கிறார்கள். போடப்படாத இன்னொரு பெண்ணினுடைய கணவன் அரசாங்கம்மீது வழக்கு தொடர்ந்தால், ரூ. 1 இலட்சம் டாமேஜஸ் வேண்டுமென்று கேட்டால்கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அந்த அளவு இன்ஃபர்மேஷன் துறை வேலை செய்தால், அதைக் கண்காணிக்க அரசு சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அமைச்சரவர்கள் நல்லது செய்ய வேண்டுமென்று நினைத்தாலும், அந்த இலாகா, அவர் செய்பவைகளுக்குக் களங்கம் கற்பிக்கின்ற முறையில் இருக்கிறது என்று கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

* திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1967-க்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னாலே, தமிழகத்திலேயுள்ள அரிசன மக்களுக்கு எண்ணற்ற வசதிகளைச் செய்து முடித்து, இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையிலே நம்பிக்கை ஒளியை ஊட்டுகின்ற அளவிலே அரசு சேவை செய்து வருகின்றது என்பதைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் நன்றிப் பெருக்கோடு பாராட்டுத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு செய்யக்கூடிய ஒவ்வொரு காரியத்தையும்—இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்த 1947-லிருந்து 1967 வரையிலே, 20 ஆண்டுக் காலம் எண்ணற்ற தீர்மானங்கள் மூலமாகப், போராட்டங்கள் மூலமாக, பலவற்றை எடுத்துத் தெரிவித்தும் ஒன்றும் நடைபெறவில்லை—ஆனால் இன்று அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருப்பதையும் யாரும் மறக்க முடியாது. வீட்டு மனைப் பட்டா, வீட்டு வசதி வாரியம் இவற்றையெல்லாம் சாதாரணமானதாகச் சொல்ல முடியாது.

அது மட்டுமல்ல, நகர்ப்புறங்களிலே வசிக்கவே முடியாமலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றைய அரசு வழங்குகின்ற வட்டியில்லாக் கடன் மூலமாக, தொழில்களை, கடைகளை நல்ல முறையிலே அவர்கள் நடத்திட, சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து வாசம் செய்ய வாய்ப்பாக இருக்கிறது.



இன்றைக்கு அரிசன வீட்டு வசதி வாரியம் என்று எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த அரசு செய்திருக்கிறது. அதனை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எவரேனும் குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எந்த மாநிலத்திலாவது வீட்டு மனைப் பட்டா அல்லது அரிசனங்களுக்கு வட்டியில்லாக் கடன் அல்லது அவர்களுக்கென்று வீட்டு வசதி வாரியம், கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப் பதக்கம், கல்லூரியிலே இலவசப் படிப்பு, அவர்கள் தங்கிப் படிக்க விடுதிகள் இப்படிப்பட்ட காரியங்களை இந்த அரசு செய்ததைப்போல், அகில இந்தியாவிலும் எந்த மாநிலத்திலாவது செய்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாகச் செய்திருக்க மாட்டார்கள். இவ்வளவு காரியங்களைச் செய்து கொடுத்த பின்னாலும்கூட, நாம் எந்த நோக்கத்தோடு . . . .

(முற்பகல் 10-30)

திரு. எஸ். வடிவேல்: அவைத் தலைவரவர்களே, நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் கடன் இந்த் சர்க்கார் கொடுக்கிற மாதிரி வேறு எந்த சர்க்காரும் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். உத்திரப் பிரதேச சர்க்காரிலே, அரிசனங்கள் பல நூறு ஆண்டுக் காலம் கடன் பட்டிருந்தாலும், அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லியும், அப்படி அவர்களை மீறி வற்புறுத்தினால் அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும் என்றும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம்: அவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்து இந்த சர்க்கார் உதவி செய்திருக்கிறது, வேறு எந்த அரசு இப்படி உதவி செய்திருக்கிறது என்று கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய மரியாதைக்குரிய திரு. வடிவேலு அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் லாபம் பெறும் அளவிற்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு பாக்கி வைத்திருந்தாலும் அவர்கள் 1381 பசலி ஒரு வருடம் மட்டும் குத்தகை செலுத்தினால் மீதியெல்லாம் செலுத்த வேண்டாமென்று நமது அரசு சட்டம் போட்டது. இப்படிப்பட்ட வசதிகளை எந்த அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது என்று கேட்டேனே தவிர, கடன் தள்ளி விடுவது என்பது எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலையாக இருக்கலாம்.

இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்ததற்குப் பின்னால் இவைகளை எந்த நோக்கத்திற்காகச் செய்தோமோ அந்த நோக்கம் நிறைவேறியதாவென்றால் உள்ளபடியே ஜாதி ஒழிய வேண்டுமென்பதற்காக, தாழ்த்தப்பட்டவர்கள்

[திரு. சி. பாண்டுரங்கன்] [1975 ஏப்ரல் 4

மேலும், 1947-லிருந்து 1975 வரை நோயாளியாக வாழ்கிற இந்தச் சமுதாயம் இந்திய நாட்டையே நோயாளியாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நோயைக் குணப்படுத்த வேண்டும். ஏனென்றால் ஒரு வீட்டில் இருக்கிற குடும்பத்தில் ஒருவருக்கு 'கிரானிக் டிஸீஸ்' என்றால் அது தீராத நோயாக இருந்தால் அது அவனை மட்டும் கொல்லாது, அந்தக் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரையும் அந்த நோய் பிடித்து, அந்தக் குடும்பத்தையே கொன்று விடும். அதைப்போல இந்த சமுதாயத்தைப் பிடித்த நோய் இந்த நாட்டையே பிடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, டில்லி அரசை நோக்கி உங்கள் மூலமாகச் சொல்கிறேன். இந்த 'கிரானிக் டிஸீஸ்' குணப்படுத்தப்படவில்லை என்றால் அவர்களுக்கும் துன்பம், இந்த நாட்டில் உள்ள மற்றவர்களுக்கும் துன்பம்தான். எனவே, விரைந்து மத்திய அரசும் மாநில அரசும் தங்களுடைய கடமையைச் செய்து, இந்தச் சமுதாயம் வாழ வழிவகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 28 ஆண்டுகள் ஆகியும்கூட அரிசன மக்கள் வாழ்க்கையில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தைக் காணவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அதற்கு நாம் சமாதானம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டிலே பெரிய அளவு எண்ணிக்கையுள்ள சமுதாயம்—இந்த நாட்டிலே சுதந்திரத்தைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த சமுதாயம்—இந்த நாட்டில் எல்லாத் துறைகளிலும் உழைக்கின்ற சமுதாயம்—மிகத் தாழ்ந்த நிலையிலேயே கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலையிலேயே வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நாட்டு மக்களுக்கு குறிப்பாக நமது அரசாங்கம் அதற்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

சென்ற எட்டு ஆண்டுக் காலமாக பல்வேறு துறைகளில் ஏதோ அரிசனங்களுக்காக நாம் அதிக அளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம்—இந்த அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்து வந்திருக்கிறது என்று கூறினாலும்கூட, அரசு கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் எந்த அளவுக்குப் பணம் ஒதுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையும்கூட ஆண்டுக்கு ஆண்டு குறைந்தே வந்திருக்கிறது.



1975 ஏப்ரல் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இந்தச் சமுதாயத்தில் இன்னும் தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் அது எந்த அளவுக்கு இந்த அரசாங்கத்திற்கு இழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் கவனித்தே ஆகவேண்டும். தீண்டாமை தடுப்புச் சட்டம் இருக்கிறது. அதை அமல்படுத்த பல்வேறு துறைகள் இருக்கின்றன. இன்னும் இந்த நாட்டில் இருந்து தீண்டாமை என்னும் கொடிய, தீமையை அகற்றியாகவில்லை என்று சொன்னால் அதற்கு இந்த அரசாங்கத்தைப் பாராட்ட முடியாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கொடிய வியாதி நிச்சயமாக இல்லை என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் பல்வேறு மாவட்டங்களில் இது எந்த அளவுக்கு நம்முடைய சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றது என்பதை எண்ணும்போது நிச்சயமாக நாம் எல்லாம் வருத்தப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன். இதற்குக் காரணம் என்ன? அரிசன மக்கள் எந்த அளவுக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை. அதுதான் இந்த நாட்டில் தீண்டாமை இருப்பதற்குக் காரணம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதார முன்னேற்றம் காண வேண்டுமென்று சொன்னால் அந்தச் சமுதாய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை நாம் வகுத்துக் கொடுத்தாக வேண்டும். கல்வித் துறையில் அவர்கள் முன்னேற்றம் காண வழி செய்தாக வேண்டும்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் அரசின் இலாக்காவில் கல்விக்காக ஒதுக்கப்பட்டு வந்த பணம் ஆண்டுக்காண்டு குறைந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1972-73-ஆம் ஆண்டில் கல்லூரியில் பயில்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவ சமுதாயத்திற்காக ஒதுக்கிய படிப்பு உதவித் தொகை 98.79 லட்சம் ரூபாய். ஆனால் இந்த 1974-75 ஆம் ஆண்டு—நடப்பு ஆண்டில்—அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது 91.6 லட்சம் ரூபாய்தான்.

அதுமட்டுமல்ல—1972-73 ஆம் ஆண்டு கல்லூரியில் படித்த அரிசன மாணவர்களின் எண்ணிக்கை 7,604—ஆனால் இந்த நடப்பு ஆண்டில்—1974-75-இல் 4,749 பேர்கள் என்று விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் இருந்தே அந்தச் சமுதாய மாணவர்கள் படிப்புக்கு நாம் அதிகமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக செய்யப்பட்ட காரியங்கள் மனத் திருப்தி அளித்திருக்கிறதாவென்றால், இல்லை என்று நிச்சய மாகச் சொல்ல வேண்டும். கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுக்கிறோம். இது மட்டும் அவர்களை வாழ வைக்குமா என்பதை இந்தத் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து கேட்டுக் கொண்டு வருகிறோம். கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு எண்ணற்ற வசதி களைச் செய்து தர வேண்டும்.

ஊரில் ஒதுக்குப் புறமாக வாழ வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள். அவர்கள் குறைந்த கல்வி படித்திருந் தாலும், வேலை வாய்ப்பு அளியுங்கள். அவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுங்கள். இப்படி அவர்களுக்கு வாழ அத்தியாவசியமான பல தேவைகளைச் செய்தால் இந்த நாட்டில் இன்னும் ஆயிரக்கணக்கான கலப்புத் திருமணங்கள் நடைபெறுவதற்கு வழி வகை ஏற்படும். 1967-க்குப் பின்னாலேதான் அதிகமாக கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்த சர்க்கார் வந்த பிறகுதான் கலப்புத் திருமணங்களுக்குப் பாதுகாப்பு கிடைத்தது. ஆனாலும் 1967-க்கு முன்னால் கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத் திலே கலப்புத் திருமணங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.

ஒரு காலத்தில் மாநாடு நடத்தி சமபந்தி போஜனம் என்று சாப்பாடு போடுவதாகச் சொல்லி அவர்களுக்கு மொட்டை அடித்து அனுப்பினார்கள். அப்படி பாதுகாப்பு இல்லாத நேரத்திலே, 1967-க்கு முன்னால் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கும் மேலே சொன்ன சலுகைகளை அளிப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால் இந்த கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுப்பது மட்டுமல்லாமல் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே அவர்களுக்கு சதவிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். 18 சதவிதம் வேலை வாய்ப்பு அரசாங்க வேலைகளில் அளிக்கப்படுகிறது.

இந்த நாட்டில் அரசு சார்புடைய வேலை வாய்ப்புகள் குறைந்தவை. ஆனால் தனியார் துறையில் எத்தனையோ ஆலைகள், மில்கள், பல நிறுவனங்கள், எவ்வள வோ கல்லூரிகள், பள்ளிகள் இப்படி எண்ணற்ற இடங்கள் இருக்கின்றன அவைகளிலேயெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களை காவல்காரனுக்குக்கூட நியமிப்பது





கிடையாது. தனியார் கல்லூரிகள் தனிப்பட்டவர்கள் சொந்த முதலில் நடை பெறுவதில்லை. அரசாங்க மானியத்தில் நடைபெறுகின்றன. பல தனிப் பட்டோர் ஆலைகளுக்கு அரசாங்க மானியம், அல்லது கடன் கிடைக்கிறது. ஆனால் காவல் காப்பதற்குக்கூட தாழ்த்தப்பட்டவர்களை இந்த நிறுவனங் களுக்கு உரியவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

அரசாங்கத்தில் மட்டும் 18 சதவிதம் கொடுத்தால், ஒரு கோடி தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்க முடியுமா என்பதை தயவு செய்து அமைச்சரவர்கள் எண்ணிப்பார்த்து, வழிவகைகளைச் செய்ய வேண்டும். தனியார் துறைகளைப் பற்றிச் சொன்னேன்.

அரசு சார்புடைய துறையிலேகூட, இந்த நிலை இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தபோது போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதியை கொடுத்தார்கள். இது வரையிலே போக்குவரத்துத் துறை யிலே 2½ சதவிதம்தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அரசாங்க இலாகாவான இந்த இலாகாவில் 18 சதவிதம் வரை நிரம்புகிற வரையில் இருக்கிற காலி இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுமென்று பொது மேடையில் வாக்குறுதி அளித்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் மிக நன்றிப் பெருக்கோடு, மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவர்கூட இந்த 1½ ஆண்டு காலத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிக்குப் பின்னாலே எங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணங்களாக எதை எதையோ சொல்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத் திலிருந்து நம்பர் வரவில்லை, போர்டு அனுமதிக்கவில்லை என்று இப்படி பல காரணங்களைச் சொல்கிறார்கள். இப்படி எந்த சட்டம் இடையூறாக இருந் தாலும், குறுக்கீடாக இருந்தாலும், அரசு சார்புடைய போக்குவரத்துத் துறை, மாநகராட்சி, நகராட்சி அல்லது கூட்டுறவுத் துறை அல்லது மின்சாரத் துறை இப்படிப்பட்ட துறைகளிலேயாவது இந்த 18 சதவிதம் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டு, இதற்கு இன்று பதில் சொல்லும்போது தகுந்த பதிலைச் சொல்லி, எங்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி இங்கே கூட பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி விளம்பரம் அதிகமாக செய்யப்படுகிற தென்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, 1967-க்கு முன்னாலே பல இடங்களில் அரிசனங்களுக்காக வீடுகளை அவர்கள் கட்டினார் கள். அந்த இடங்களிலேயெல்லாம் அப்படி வீடுகள் கட்டினதற்கான அடிகூட

இப்போது கிடையாது. ஆனால் இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் சிமெண்டால் கட்டப்பட்ட வீடுகளாகும். முன்பு மண்ணால் கட்டினார்கள். இப்போது கட்டிய பல வீடுகளும் அடிமட்டத்திலிருந்து சிமெண்ட் கான்கிரீட்டால் கட்டியிருக்கிறோம். இப்போது சிமெண்ட் கட்டுப்பாட்டினால் சுண்ணாம்பு வைத்து கட்டுகிறோம். அவர்களுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தருகிறோம். ஒரு தனி இனம்தான் மாடி வீடு கட்டிக் கொள்ள முடியும் என்று இருந்த நிலை மாறி, தாழ்த்தப்பட்டவர்களுக்குக்கூட மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 100 ஆண்டு காலத்திற்குப் பிறகு, திரு. ஜேம்ஸ் காலத்திற்குப் பிற்பாடுகூட அவைகளைப் பார்க்கக்கூடிய அளவிற்கு அந்தக் கட்டிடங்கள் நிச்சயமாக நிலையாக இருக்கும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எங்கே இருந்த கட்டிடங்களைப் பார்த்தாரோ தெரியவில்லை.

எங்களுக்கு இருக்கிற குறையெல்லாம் இது முறைபடுத்தப்படவில்லை. வீடு கட்டுகிற இடத்தைத் தேர்ந்தெடுப்பது யார்? அமைச்சரா, அல்லது இந்த வாரியத் தலைவரா? இந்த இலாகா நல இயக்குநரா? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரா, அல்லது இதற்காக போடப்பட்ட தனி அதிகாரியா? அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களா?

இதற்கென்று இருக்கிற வாரியம் வீடுகளை நினைத்த இடங்களில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசப்பட்டதைப்போல திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்கல்ல, எங்கள் தொகுதியில் இரண்டு இடங்களில் திறப்பு விழா செய்திருக்கிறோம். ஒரு இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேலு அவர்கள் கட்சியைச் சேர்ந்த கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கிறோம். அம்மாபேட்டைக்கு அருகில் இன்றைக்கு காங்கிரஸ்கார அரிசனங்களுக்காக வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆக பாரபட்சமற்ற முறையில் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றும் எத்தனையோ வாரியங்களுக்கு தலைவர்களாக அரசு சார்பற்றவர்கள் இருக்கும்போது இந்த வாரியத்திற்கு மட்டும் ஏன் ஒரு அதிகாரியைத் தலைவராக போட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதை மறு பரிசிலனை செய்து, தாழ்த்தப்பட்டவர்கள் திறமையை இதில் சோதித்துப் பாருங்கள். ஒரு தாழ்த்தப்பட்டவனை இந்த வாரியத்தின் தலைவராக நியமித்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நான் என் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. நான் சொன்னது 15, 16 கிராமங்களை நான் எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிக் கொடுத்ததிலே ஒரு





இடத்திலேகூட வீடு கட்டிக் கொடுக்கவில்லை. நான் சொன்னதற்கு ஒரு இடத்தில் வீடு கட்டிக் கொடுத்தால் உபயோகமாக இருக்கும். என் கட்சிக்காரர்களுக்கு கட்டிக் கொடுக்கவில்லை, கழகக்காரர்களுக்கு கட்டிக் கொடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. யாருக்குக் கட்டிக் கொடுத்தாலும், தாழ்த்தப்பட்டவர்களுக்குத்தானே கட்டிக் கொடுக்கிறார்கள். ஆகவே, நான் ஆட்சேபிக்கவில்லை. நான் ஒரு தொகுதி எம்.எல்.ஏ. வாக இருக்கிறேன். நான் 15 இடங்களைச் சொன்னேனே, ஒரு இடத்திலேயாவது கட்டிக் கொடுக்கக் கூடாதா என்று கேட்டேன். இதைப் புரிந்து கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, அவர்கள் சொல்லும்போது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுப்ரவேலு அவர்கள் சொல்கிற இடங்களில் கட்டிக் கொடுக்கிறார்கள், அவர் தி.மு.க. வைச் சார்ந்தவர், ஆகவே தி.மு.க. காரர்களுக்கே கட்டிக் கொடுக்கப்படுகிறது என்ற தொனியிலே அவர் பேசுகிறார் என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு இல்லை. திரு. ஜேம்ஸ் அவர்கள்கூட கட்சிக் கண்ணோட்டத்தோடு காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னதற்காக இவைகளைக் குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரை, போலீஸ் இலாகாவிலே போலீஸ்காரனாக சேர்ந்தவன் போலீஸ்காரனாக செத்துக் கொண்டிருக்கிறான். அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டிய நேரத்தில், உயர் அதிகாரிகளுக்கு பண்ணை வேலை செய்தவர்களுக்குத்தான் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. பெரிய பணக்காரர்களுக்கு பண்ணை வேலை ஒருவன் செய்வது போல, அரசாங்கத் துறையில் மேல் அதிகாரிகளுக்குப் பண்ணை வேலை செய்பவர்களாக இருந்தால்தான் அவர்களுக்குத்தான் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. ஒருவன் நாணயமாக நடந்து கொண்டால் அவனுக்குப் பதவி உயர்வு அளிக்காமல் விட்டு விடுகிறார்கள். 18 சதவிதம் என்று நாம் சொல்கிறோம். ஆனால் ஆயிரம் இன்ஸ்பெக்டர்கள் இருந்தால் அதில் 10 பேர்கள்கூட தாழ்த்தப்பட்டவர்கள் கிடையாது. ஆயிரம் சப்-இன்ஸ்பெக்டர்கள் இருந்தால் அதில் 10 பேர்கள் கூட தாழ்த்தப்பட்டவர்களாக இல்லாத நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்கள் கண்காணித்து அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அற நிலையத் துறை பொறுத்தவரை, அரிசனங்கள் இல்லாத கோயில்தனோ இருக்கக் கூடாது என்று சட்டம் போட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாரியத்தைப்பற்றிப் பேசுங்கள். திரு. வடிவேலு அவர்கள் பேசினவுடனே, வாரியத்தைப் பேசிவந்தவர் அதை அப்படியே முடித்து விட்டீர்களே.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, வாரியத்தைப் பொறுத்தவரையிலே சிறப்பான பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு வகைப் படுத்தி, எப்படி வீடுகள் கட்டுவது, எப்படி இடங்களை தேர்ந்தெடுப்பது என்பதற்கு முறையான அபிப்பிராயங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அற நிலையத் துறையைப் பொறுத்தவரையிலே இந்த மன்றத்திலே சட்டம் போட்டோம். அரிசனங்கள் இல்லாத ஆலயங்கள் இருக்கக் கூடாதென்று சட்டம் போட்டோம். ஏற்படுத்தியிருக்கக் கூடிய அத்தனை வாரியங்களுக்கும் அரசுச் சார்பு இல்லாதவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அரிசன வாரியத்திற்கு மட்டும் ஒரு அதிகாரியைத் தலைவராகப் போட்டிருப்பது அரிசன மக்களை கேவலப்படுத்துவது மாதிரியாக இருக்கிறது என்பதை மனதிலேகொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்கும் தனி நபர் ஒருவரை, அதிகாரச் சார்பு இல்லாதவரை, அரசுச் சார்பு இல்லாதவரைத் தலைவராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் சட்டம் போட்டுக்கூட பல இடங்களிலே அரிசனங்கள் அல்லாதவர்கள்தான் காவலர்களாக நியமிக்கப்பட்டு நியமன உத்திரவுகள் சென்று கொண்டிருக்கின்றன. இதே மன்றத்திலே ஒரு முறையை எடுத்துச் சொல்லியும்கூட இந்த அதிகாரிகள் அப்படிச் செய்யாமல் அவர்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதை மாற்றக்கூடிய முறையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போலீஸ் துறையில் பதவி உயர்வு அவர்கள் பெறுவதற்கு ஏற்ற முறையில் நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர் தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகின்றபோது தெரிவித்த கருத்துக்கு அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் குறுக்கிட்டு அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை என்று கூறினார்கள். அண்ணாயிஸம் என்று அவர்களுடைய கொள்கையை அறிவித்த நேரத்திலேயே ஒரு ஜாதியினருக்கே ஏராளமான தனிச் சலுகைகளைக் கொடுத்துக்கொண்டே போனால் அந்த ஜாதி மலைபோல் மேலேபோய் உயர்ந்த ஜாதியாக இருக்கக் கூடிய ஜாதி கீழே போய்விடுமானால் பிறகு அதைத் தடுக்கக்கூடிய முறையிலே திட்டம் கொண்டு வரவேண்டியிருக்குமே என்று சொன்னார்கள் ....

**திரு. குழ. செல்லையா:** அண்ணாயிஸம் கொள்கையில் அரிசன மக்களுக்குத் தனிச் சலுகைகள் வேண்டாமென்று சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாக



அவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். அரிசன மக்களுக்கு தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு மேலும் மேலும் தனிச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலேதான் எங்கள் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர், புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவிலே ஒரு பேட்டியிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம், நீங்கள் உங்கள் பிரச்சினையைப் பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** அதிலே என்ன சொல்லியிருக்கிறார் என்று திரு. செல்லையா சொல்லவேண்டும்.

**திரு. குழ. செல்லையா:** நானும் படித்திருக்கிறேன், அவர்களும் அதைப் படித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம். சோமசுந்தரம் பேசட்டும்.

**திரு. ந. சோமசுந்தரம்:** அமெரிக்காவிலே சொன்னதைப்பற்றி இல்லை, தமிழகத்திலே அரிசனங்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்துக்கொண்டே போனால் அவர்கள் உயர்ந்த நிலைக்குப் போய்விடுவார்கள், இப்போது உயர்ந்த ஜாதியாக இருக்கிறவர்கள் கீழே போய்விடுவார்கள், அவர்களை உயர்த்துவதற்கு பிறகு திட்டம் போட வேண்டுமே என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள், பல பத்திரிகைகளிலே எல்லாம்கூட வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குழ. செல்லையா:** எந்தப் பத்திரிக்கை என்று சொல்லுங்கள்.

**திரு. ந. சோமசுந்தரம்:** இந்த அரிசனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் மற்ற அரிசனங்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்குச் சொல்லியும்கூட அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த ஆண்டே இங்கே ஒரு தீர்மானம் போட்டு அகில இந்தியாவிற்கும் நம்முடைய மாநிலம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய முறையிலே இந்த அரிசனங்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் மற்றவர்களுக்கும் அளிக்கப்படக்கூடிய முறையிலே ஏற்பாடுகள், வழிவகைகள் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் யாவும் சரியாக இந்த நாட்டிலே அமல் நடத்தப்படுவதில்லை. பல கமிட்டிகள் இருக்கின்றன, எஸ்டிமேட்ஸ் கமிட்டி, அஷ்யூரன்ஸ் கமிட்டி என்றெல்லாம் இருப்பதைப்போல

இதற்கும் ஒரு கமிட்டியைப் போடவேண்டும். அப்படி நிறுவி பல இடங்களிலே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் கொடுக்கப்படவில்லை; அவற்றைக் கண்காணிப்பதற்கு ஏற்ற வழிவகைகளைக் காணவேண்டும்.

வீட்டுவசதி வாரியத்திலேகூட அரிசனங்களுக்கு அதிகமான பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. நான் அறிந்தவரை பிராமணர்களுக்கும் மலையாளிகளுக்கும்தான் அதிகமாக வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது, இவர்களுக்கு இடம் இல்லை. ஆகவே, ஒரு கமிட்டியை நிறுவி அந்தக் காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக இந்தத் துறையைப்பற்றிச் சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அதிகமான சலுகைகள், வாய்ப்புகள், சிறப்புகளைக் கொடுக்கக் கூடிய முறையிலே உலகத்திலே வழிகாட்டியாக இருக்கக் கூடிய முறையிலே அவர்கள் தலைநிமிர்ந்து செல்லக் கூடிய முறையிலே ஒரு நிலையைப் பெற வேண்டுமானால் இந்த இலாகாவை—இந்த சமுதாயத்தை காலமெல்லாம் மனதிலேகொண்டு எண்ணற்ற நல்ல காரியங்கள் அவர்களுக்கு செய்து வருகின்ற நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே வாழ்கிற, தாழ்த்தப்பட்ட மக்களின் சம்பந்தியாக இருக்கிற—டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்று, இந்தத் துறையை நிர்வகிக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு வேறு ஒரு சிறப்பான துறையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். சுரேந்திரன்: துணைச் சபாநாயகர் அவர்களே, இங்கே அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சபையிலே பேசிய பல பேர்கள் இந்த அரிசன சம்பந்தமான பழைய காலச் சரித்திரத்தைத் திரித்துக் கூறுவதுபோல் சில பிரச்னைகளை இங்கே கூறினார்கள் சரித்திரத்தைத் திரித்து திரிபுவாதம் பேச வேண்டிய அவசியம் ஆளுங் கட்சிக்கோ அல்லது இந்தச் சபைக்கோ இல்லை என்று நினைக்கிறேன். சரித்திரத்தைத் திரித்துக் கூறினாலும் சரித்திரம் சரித்திரமாகவே இருக்கிறது. சமுதாயத்திலே ஏற்பட்ட எழுச்சியிலே சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னாலே ஏற்பட்ட எழுச்சியின் விளைவுதான் அரிசனங்களையும் மிகப் பொறுப்புடன் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய அமைப்பாக செயல்படுகிறதே தவிர மத்தியிலே யாரும் எடுத்துச் செய்தார்கள் என்ற வாதம் பொருத்தமல்ல.

அரிசனங்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவர்களுக்கு விசேஷமான சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற கருத்து சுதந்திரப் போராட்ட காலத்திலேயே தோன்றிய ஒன்றாகும். இதற்காக மகாத்மா காந்தியடிகள் அவர்களை அரிஜனம் என்று அழைத்தார். அவர்கள் தேவர்களுடைய குழந்தைகள்,



தெய்வக் குழந்தைகள் என்று சொல்ல வேண்டுமென்ற கருத்திலேதான் அப்படிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியதே அவர்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகள், துன்பங்கள், கஷ்டங்கள், அடிமைத்தனங்கள் இவற்றை மாற்றியமைக்க இந்த தேசத்திலே இருக்கக் கூடிய மற்றப் பிரிவினரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் செய்ய மாட்டார்கள், தெய்வம்தான் செய்ய வேண்டுமென்ற அளவிற்குப் பரிதாபமான நிலையில் இருந்தார்கள் என்ற கருத்திலேதான் சொன்னார்கள். தெய்வம்தான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னால் சாதாரண மனிதர்களைவிட தெய்வாம்சம் பொருந்தியவர்கள் அந்தப் பணியைச் செய்தால்தான் அவர்கள் முன்னேற முடியுமே தவிர இல்லாவிட்டால் முடியாது என்ற கருத்திலேதான் அப்படிச் சொன்னார்கள்.

அந்தக் கருத்தை, மகாத்மா காந்தி போன்றவர்கள் எல்லாம் அந்தப் பணியை எடுத்து இந்த தேசத்திலே செய்திருக்கிறார்கள், அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிற நோக்கிலே நம்முடைய இந்து மதத்திலே வெஜிடேரியன் தெய்வம் என்றும் நான்-வெஜிடேரியன் தெய்வம் என்றும் இருக்கின்றன. வெஜிடேரியன் முறையில் ஒரு வகையினரும் நான்-வெஜிடேரியன் முறையிலே ஒரு வகையினரும் இந்தப் பணியை எடுத்துச் செய்தால் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்னால் அரசியல் சட்டத்திலே அவர்களுக்கு என்று தனிச் சலுகைகள் அப்போதே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்ற முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ததன் காரணமாகத்தான் இவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றனவே தவிர வேறு காரணமல்ல. இப்படி நான் கூறுவதற்குக் காரணம் நம்முடைய மாநிலத்திலே எடுத்துக்கொண்டால் ஜாதி அமைப்புகள் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கிறிஸ்தவ சமுதாயத்தை ஆராய்ந்து பார்த்தால் தெரியும். கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்திருக்கிற இந்துக்கள் பல பேர்கள் கிறிஸ்தவ சமுதாயத்திலே உள்ள மத ஆசாரங்களைக் கையாளுகிறார்களே தவிர கிறித்துவ மதத்திலே சேர்ந்ததற்குப் பின்னால் இந்து மதத்திலே அவர்கள் இருக்கிறபோது எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்களோ அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் கொள்வினை கொடுப்பினை செய்வது எல்லாம் அவர்களுக்குள்ளேயேதான். ஒரு கவுண்டர் கிறித்துவ மதத்திற்குச் சென்றிருந்தாலும் அங்கே சென்ற பிறகும் கூட அந்த கவுண்டருக்குள்ளேயேதான் கொள்வினை கொடுப்பினை எல்லாம் இருக்கிறது. அதைப்போலவேதான் முதலியார் சென்றாலும், நாயுடு சென்றாலும் வேறு எந்தப் பகுதியினர் சென்றாலும் அப்படித்தான். கிறித்துவ சமுதாயத்

அந்த ஊருக்கு ஒரு பாதை போட வேண்டுமென்று 1967-ஆம் ஆண்டிலே யிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இதுவரையிலேயும் அந்தப் பழங்குடி மக்களுக்கு ஒரு பாதை போட இந்த அரசு முன்வரவில்லை என்றால் நீங்கள் அவர்களை முன்னேற்றுகிறோம் முன்னேற்றுகிறோம் என்று சொல்லும் வாதம். . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு, மூன்று நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இன்னும் கொஞ்சம் அதிக நேரம் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிற்பகல் 4 மணிக்கு வேறு செஷன் இருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஆக, அம்மாதிரி பழங்குடி மக்கள் முன்னேற வில்லை. ஆகவே, கீழே இருக்கின்ற மக்களை முன்னேற்றுவது என்றால், முன்னேறிய மக்களை மீண்டும் முன்னேற்றுவதுதான் என்று கருதிக்கொண் டிருக்கிறீர்கள். வீடு கட்டுவதைப்பற்றி ஏற்கனவே சட்டசபையிலே சொல்லி யிருக்கிறேன். எந்தெந்த இடத்தில் தவிர்க்க முடியாத நிலையில் மிகவும் சங்கடப்படுகிறார்களோ அதை சர்வே எடுத்து அந்த இடங்களிலே கட்டாயம் முன்னுரிமை கொடுத்து வீடு கட்டுவதற்கான வழிமுறைகளை வகுப்பதுதான சரியானது என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறினேன். ஆனால் அப்படிச் செய்ய வில்லை. எங்கே நிலம் வைத்திருக்கிறார்களோ, எங்கே அவர்கள் முன் வரு கிறார்களோ அங்கே வீடு கட்டித் தருகிறோம் என்று கூறுகிறீர்களே தவிர உண்மையிலே முன்னேற்றுவதை எங்கிருந்து துவங்குவது, எப்படி முடிவு செய்வது, எந்தெந்த முறைகளிலே செய்வது என்ற தெளிவான கண்ணோட்டம் இருக்கிறதா என்று கேட்டால் கட்டாயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அரிசனங்களில் கலப்புத் திருமணத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால், கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு பரிசுகள் தருவதாகச் சொல் கிறீர்கள். ஒரு கலப்புத் திருமணத்திலே பி.ஏ. படித்துவிட்ட ஒருவர், உயர்ந்த ஜாதிக்காரர், ஒரு அரிசனப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். அப்படிச் செய்து கொண்ட அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அந்த அரிசனப் பெண்ணுக்கும் வேலை கிடைக்கவில்லை. அந்த அரிசனப் பெண் நர்சாக டிரெயினிங் முடித்து அவளுக்கும் வேலை கிடைக்கவில்லை. ஆகவே, கலப்புத் திருமணம் செய்து கொண்ட அவர்கள் இரண்டு குடும்பத் தாராலும் நீக்கப்பட்டு துன்பத்திற்குள்ளாகி கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரி நிலைமைகள் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பட்டது)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. முத்துவேல் அவர்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இன்னும் ஓரிரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 10 பேர் பேச வேண்டும். மணி 11 ஆகப் போகிறது. மாலை வேபர் மானியத்தின் மீது பேசுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இன்னும் ஒரேயொரு பாயிண்டை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

பொருளாதாரத்திலே முன்னேறுவதற்கு நீங்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரக் கணக்குகளைப் பார்க்கும்பொழுது இந்தப் பொருளாதாரத்திலே பங்கேற்றுக் கொண்டவர்கள் 1973-74-ஆம் ஆண்டில் 1,546 பேர்கள் 10.01 என்றும் 1974-75-ஆம் ஆண்டில் 1,313 பேர்கள், 9.32 என்றும் பொருளாதார முன்னேற்றத்தின் கணக்கு இருக்கிறது. அதேபோல் சிறு தொழில்களைப் பற்றி எடுத்துக்கொண்டாலும் அதேபோன்ற முன்னேற்றம்தான் இருக்கிறது. இப்படி முன்னேற்றம் என்று சொல்வதற்கு, படிப்படியாக முன்னேறும் நிலையிலே உங்கள் புள்ளிவிவரம் இல்லை, அதிலே தெளிவான கண்ணோட்டம் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையிலே தெளிவான கண்ணோட்டத்தோடு சமுதாயத்தில் முன்னேறியவர்கள் போக, அருந்ததியர்கள் போன்றவர்கள், பழங்குடி மக்கள் போன்றவர்கள் மிகவும் கீழ்நிலையிலே இருக்கிறார்கள், அவர்களை முன்னேற்றுவதற்கு ஒரு விசேஷத் திட்டம் போட்டு நிறைவேற்ற வேண்டும். அமைச்சரவர்கள் அதைக் கட்டாயம் செய்வார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*** திரு. ந. முத்துவேல்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1975-76 ஆம் ஆண்டுக்கான அரிசன மக்கள், பழங்குடி மக்களுக்காக ஒதுக்கிய 10,89,58,000 ரூபாய்க்கான மானியத்தை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் இந்தப் பணத்தில் கல்விக்காக மட்டும் 6,81,17,000 ரூபாய் செலவு செய்யப்படுகிறது. மீதியில் 1 கோடி ரூபாய் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகச் செலவு செய்யப்படுகிறது என்று அறிகிறோம். இருந்தாலும் மீதியுள்ள 3 கோடி ரூபாயைக் கொண்டு மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செலவு செய்ய

திலே உள்ள அரிசனங்களும் அம்மாதிரித்தான் இருக்கிறார்கள். அவர்களும் கொள்வினை கொடுப்பினை செய்வது எல்லாம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளேதான்.

இதைப் பார்க்கிறபோது இந்து மதத்திற்குள்ளே ஜாதி எந்த அளவிற்கு ஆழமாகப் பதிந்து இருக்கிறது, வேரூன்றி இருக்கிறது, வேறு மதத்திற்குச் சென்றாலும் இந்த ஆணிவேரைப் பிடுங்கி எறிய முடியாது என்ற நிலைமையிலே இந்து மதம் இருக்கிற காரணத்தினால் மகாத்மா காந்தியடிகள் அவர்களை தெய்வக் குழந்தைகள் என்றும் தெய்வம்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும் என்ற கருத்திலே சொன்னார்கள். இன்றைக்கு நாம் செய்திருக்கிற, தி.மு.க. அரசு செய்திருக்கிற காரியங்களை இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆகவே, இந்த மாநிலத்திலேதான் இந்த அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் நாம் அதிகமாகச் செய்திருக்கிறோம் என்று பெருமைப்படும் ஒரு நிலையை நீங்கள் எடுத்துக் கொள்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

ஆனால், நீங்கள் சொல்கிறீர்கள், கல்வியிலே, பொருளாதாரத்திலே, சுகாதாரத்திலே, வேலைவாய்ப்பிலே, இன்னும் பல்வேறுவிதமான இனங்களிலேயும் சொல்லியிருக்கிறீர்கள். கல்வியைப் பற்றிக் கொடுத்திருப்பதை நான் பார்த்தேன். அந்தப் புள்ளிவிவரக் கணக்கைப் பார்க்கும்பொழுது எனக்கு என்ன தெரிகிறது என்றால் அரிசனக் கல்வியிலே 1973-74-ஆம் ஆண்டின் புள்ளி விவரம் என்ன சொல்கிறது என்றால் 99.68 என்று சொல்கிறது. 1974-75-ஆம் ஆண்டைப்பற்றி என்ன சொல்கிறது என்றால் 91.64 என்று சொல்கிறது. ஆகவே, இது முன்னேற்றமா அல்லது பின்னேற்றமா? எண்ணிக்கையிலே அதிகம் இருந்தால்தான் முன்னேற்றம் என்று நான் கருதி இருக்கிறேன். குறைவாகப் போனால் பின்னேற்றம் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே எல்லாம் முன்னேறியிருக்கிறது, முன்னேறியிருக்கிறது என்று சொல்லும்பொழுது புள்ளிவிவரங்களைப் பார்த்தால் பின்னேறியிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

அதேபோன்று பழங்குடியினரைப் பற்றி எடுத்துக்கொண்டாலும், பழங்குடி மக்களின் கல்வி எப்படியிருக்கிறது என்று பார்க்கும்பொழுது 1973-74-ஆம் ஆண்டிலே 0.23 என்று இருக்கிறது, 1974-75-ஆம் ஆண்டிலே 0.21 என்று இருக்கிறது. இது முன்னேற்றமா பின்னேற்றமா என்று எனக்குப் புரியவில்லை. உங்களுடைய முன்னேற்றங்களை எந்த அளவுகோலை வைத்துக் கொண்டு முன்னேற்றம் என்று சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, முன்னேற்றம் என்பதற்கான அளவுகோலைச் சரியாகக் கணக்கிடவில்லை, அப்படிக் கணக்கிடுவதற்கான எண்ணம் உங்களுக்கில்லை என்றுதான்



தெரிகிறது. திரு. ஜோன்ஸ் அவர்கள், வீடு கட்டிக் கொடுக்கும்பொழுது பிரச்சாரத்திற்காகக் கட்டுவதாகக் கூறினார்கள். அப்படியில்லையென்றால் அவர்களுக்காகச் செய்யும்பொழுது மற்ற சமுதாயத்தினரோடு மேம்படும் அளவிற்கு முன்னேற்ற வேண்டுமென்ற கருத்தாழம் இருக்க வேண்டும், அதற்கான பரிவு இருக்க வேண்டும், தயவு இருக்க வேண்டும். அரிசனங்களில் முக்கியமானவர்கள் யார் என்று பார்த்தால் பல பிரிவுகள் இருக்கின்றன. அந்தப் பிரிவுகளுக்கும் மிகக் கீழே உள்ள பிரிவினரை முன்னேற்ற நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? கீழே உள்ள பிரிவு யார் என்று பார்த்தால் உங்களுக்குத் தெரியும், அவர்கள்தான் அருந்ததியர் என்று சொல்லப்படும், குறிப்பாக சக்கிலியர் என்று சொல்லப்படும் அந்த அருந்ததியர்கள் இன்றைக்கு எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்று கணக்கிட வேண்டும். அரிசனங்களை முன்னேற்றி விட்டோம், முன்னேற்றி விட்டோம் என்று சொன்னால் மட்டும் போதாது. அரிசனங்களிலேயும் மிகவும் தாழ்த்தப்பட்ட பிரிவிலே இருப்பவர்களையும் சேர்த்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்தால்தான் முன்னேற்றியதாகப் பொருளே தவிர அப்படியில்லை என்றால் முன்னேற்றியதாகப் பொருள் இல்லை.

பழங்குடிமக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் அரிசனங்களைவிட பின்னும், கடையிலே இருக்கிறார்கள். அவர்களது முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவர்களுக்காக 15 மாணவர் இல்லங்கள் கட்டியிருக்கிறார்கள் மொத்தம் இருப்பவர்கள் 660 பேர். இல்லைதான் அவர்களுக்காகக் கட்டியிருக்கிறோம். மாணவர் இல்லங்களைப் பொறுத்தவரையில், மிகப் பின்தங்கியவர்களை முன்னேறுவதை மிகப் பிரதானமாக முதல் வேலையாக எடுக்கவில்லை. என்னுடைய தொகுதியிலே பாலமலை என்ற பகுதியில் ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. தனியாக மாணவர்கள் கல்வி கற்று, தங்கிப் படிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்று வெகு காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது இன்னும் செய்யப்படவில்லை.

வறட்சி நிவாரணம் எல்லாயிடத்திலும் நடக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே கிணறுகளை வெட்ட காண்டிராக்டர்கள் வரமாட்டேன் என்கிறார்கள். அங்கேயிருப்பவர்களும் அதை எடுத்துச் செய்ய முடியவில்லை. அங்கே வறட்சிப் பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும். அங்கே குடிதண்ணீர் இல்லாமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கிணறுகள் வற்றிப்போயிருக்கின்றன. அங்கே அம்மாதிரி வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை.

இயலாது என்ற நிலைமைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாதை வசதிகளைச் செய்யவும், குடிநீர் வசதிகளைச் செய்யவும், வீட்டுமனை கட்டிக் கொடுக்கவும் போதிய பணமாக இந்த 3 கோடி ரூபாய் போதவில்லை என்பதால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த வாரியத்திற்கு மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, கிராமங்களின் பகுதிகளிலேயும், நகரங்களின் பகுதிகளிலேயும் அரிசன முன்னேற்றம் என்று நாம் பேசிக்கொண்டிருந்தாலும், சட்டங்கள் பல நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களால் தீட்டப்பட்டிருந்தாலும் அவைகள் சரிவரச் செயல்பட முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், அரிசனங்களுக்கு 18 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களிலேயும், போக்குவரத்துத் துறைகளிலேயும், இன்னும் பல அரசாங்க அலுவலகங்களிலேயும் அது சரிவரச் செயல்பட முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய திண்டிவனம் பகுதியில் 4 ஊராட்சி ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஜூனியர் அசிஸ்டெண்டாகக் கூட இருக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதேபோல் போக்குவரத்துத் துறையிலேயும் எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமசுந்தரம் அவர்கள் கூறியதைப்போல 2½ சதவிகிதம் அரிசனங்கள்தான வேலை செய்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் இந்த மக்கள் தொகை பெருக்கமுள்ள இந்த நேரத்தில், அரிசன மக்களுக்காக இந்த நேரத்தில் எப்படித் தனித் தொகுதி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் தமிழ்நாடு சர்க்கார் பெரிதும் மனம் வைத்து, ஒன்றியங்களிலும் தனித் தொகுதியிலிருந்து ஒரு அரிசன் பெருந் தலைவராக வருவதற்கான வாய்ப்பை உண்டாக்கும் முறையில் தனித் தொகுதி நிறுவித் தரும்படி நான் தமிழ்நாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அடுத்தபடியாக, பல நியமனங்களைச் செய்கிற நேரத்தில் தாழ்த்தப்பட்ட மகன்—இயக்குநராக இருக்கிறார்கள்—பாங்குகளிலோ, வாரியத்திலோ தலைவர்களாக வரமுடியவில்லை. இனிமேலாவது வாரியங்களில் அரிசனங்கள் தலைவராக வர வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அரிசனங்களுக்காக பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் அரிசன மக்கள் சுகாதார வசதியோடு வாழ வேண்டுமென்று நல்ல பணிகளைச் செய்து வருகிறார்கள். பழைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது காங்கிரஸ்காரர்கள் தொகுதியில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். திண்டிவனம் வட்டத்தில் பழைய காங்கிரஸ் சார்ந்த ஊர்களில் குறூர், கொல்லிகுளம், மங்கலம் ஆகிய மூன்று ஊர்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த ஊர்களில் இந்தமாதிரி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் யாரால் இந்த ஊர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதும் புரியவில்லை. சட்டசபை உறுப்பினர்கள் கொடுக்கும் லிஸ்டில் வருகிறதா, கலெக்டர் லிஸ்ட்படி வருகிறதா அல்லது அமைச்சர் லிஸ்ட்படி வருகிறதா என்று தெரியவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் பல கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. சில வட்டங்களில் இரண்டு மூன்று கிராமங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர்த்து பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ரூரல் ஹவுசிங் ஸ்கீம் Rural Housing Scheme என்று இருந்தது. மூவாயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டு அரிசனங்கள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இனமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதால் ஏற்கனவே வீடுகள் கட்டியவர்கள் 3,000 ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இனிமேலாவது அப்படிக் கட்டுகிற வீட்டை புதிய திட்டத்தின்கீழ் வாரியம் கட்டிக் கொடுப்பதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழைய ரேட்டில் கட்டப்படுகிற வீடுகள் பூர்த்தியாகாமல் இருக்கின்றன. ஃபைனல் பில் ((Final bill) ஆகாமல் இருக்கிறது. இன்று விலைவாசி ஏற்றத்தின் காரணமாக குறிப்பிட்ட தொகையில் கட்ட முடியவில்லை. இன்றைய ரேட்டில் ஃபைனல் பில் முடிவு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு சிறு தொழில்களுக்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன் நகர்ப்புறங்களில 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. அதை நிறுத்திவிட்டால் கூட நல்லது. அதனால் அரிசன மக்கள் பெரும்பலன் பெறுவதில்லை. அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயாவது சிறு தொழில் கடன் கொடுக்க வேண்டும். பெரு நகரங்களில் ஒரு லட்சம் ரூபாய் கடனைப் பெற்று ஒரு சிலராவது முன்னுக்கு வந்தால் அவர்களிடம் மற்றவர்கள் வேலை செய்து முன்னுக்கு வர முடியும். சிறு தொழிற் கடனைப் போல் மற்றப் பொறுப்புகளும் அரிசனங்

களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வாழ்க்கை வசதிகளைப் பெருக்க வேண்டிய கடன் தொகைகளை சொந்த அடமானம் முறையில் கொடுக்க வேண்டும். அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளோ அரிசன நல இலாகாவின் மூலம் நடைபெறும் வேலைகளோ அரிசனங்கள் நல்ல முறையில் பலன் பெறும் வகையில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் ஹாஸ்டல்கள் (Hostel) சில இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்கள் விடப்பட்டிருக்கின்றன. மரக்காணம், புதுக்குப்பம் உயர்நிலைப்பள்ளி இருக்கும் பகுதிகள். அங்கு ஹாஸ்டல் கட்டவேண்டும்.

மதிய உணவுத் திட்டம் ஏற்கனவே இருந்தது மாற்றப்பட்டு புதிய திட்டம் வந்தும் சரிவர இயங்கவில்லை. இந்தத் திட்டத்தின் முழுப்பயன் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாணவர்களுக்கான சலுகைகள் நிறைய இருந்தும் அது ஒழுங்காக அரிசன மாணவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்க அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தவேண்டும். என்னுடைய தொகுதியில் உப்புவேலூர், காரட்டை, அறுமேடை, நல்லாவூர், எந்தூர், பிரம்மதேசம் ஆகிய பகுதிகளில் மனைகள் ஒதுக்கப்பட்டும் மனைப் பட்டா வழங்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அரிசனநல அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் வளம் காணவேண்டுமென்று காந்தியாரும், டாக்டர் அம்பேத்காரும் கனவு கண்டார்கள். அவர்கள் கண்ட கனவு இன்றைக்கு நினைவாகின்ற வகையில் தமிழகத்தில் பெரியாரும், பெரியாருக்குப் பின்னால் அண்ணாவும், அண்ணாவுக்குப் பின்னால் இன்றைய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞரும் அந்த மக்களுடைய நல்வாழ்விலே நாட்டம் கொண்டு செயலாற்றி வருகிறார்கள் என்பது உண்மை. அவர்கள் கண்ட கனவு அகில இந்திய ரீதியிலே நடைபெறுகிறதோ என்னவோ; ஆனால் தமிழ் நாட்டில் எப்படி ஒளிமயமாகப் பிரகாசிக்கிறது என்று நல்ல உள்ளம் கொண்டவர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.



தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்க்கையில் வளம் காண பல திட்டங்களை நம்முடைய அரசு செய்து கொண்டு வருகிறது. இனியும் செய்யும் என்ற நம்பிக்கை அந்த மக்களிடத்தில் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் ஆரம்ப காலத்திலே நசுக்கப்பட்டார்கள். நசுக்கப்பட்ட காரணத்தால் அவர்களுக்கு வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழியே இல்லை என்ற நிலை மாறி இன்றையதினம் சலுகை என்ற பெயராலே அவர்களுக்கு வழங்கப்படுகிற முக்கியத்துவம் அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் படிக்கட்டுகளாக அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய அறிகுறியாகத்தான் வாழ்க்கையில் நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் நிலம் இல்லாத ஏழைகளுக்கெல்லாம், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் இந்த அரசு நிலம் வழங்குகிறது என்பதையும், அதே நேரத்திலே நிலம் இருந்தால் மட்டும் போதாது, அவர்கள் சொந்த வீட்டுக்காரர்களாக மாற வேண்டுமென்று சொல்லும் அளவுக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கும் இடங்கள் எல்லாம் அழகான நகரமாக மாறி வருகிற உன்னதமான காட்சியை முதல்வர் கலைஞர் அவர்கள் செய்து வருகிறார்கள். உள்ளபடியே டாக்டர் அம்பேத்காரும், காந்தியாரும் இன்றைக்கு இருந்திருப்பார்களேயானால் அவர் இந்திய நாட்டினுடைய பெரும் தலைவராக வரக்கூடிய வாய்ப்பாக இருந்திருக்கும். காந்தியார் வாரிசாக, அம்பேத்கார் வாரிசாக தமிழக முதல்வரைத்தான் சொல்லுவார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிச் சலுகைகளை வழங்குகின்ற நேரத்தில் எல்லாம் இன்று ஆட்சி நடத்தும் முதல்வர் அவர்கள் துணிந்து பல காரியங்களைச் செய்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சலுகை என்ற பெயரிலே பல புரட்சிகளைச் செய்கிறார்கள். இப்படிச் செய்கிற புரட்சிகளைத் தாங்கிக் கொள்ள இதயம் இல்லாதவர்கள் இன்றையதினம் எப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வரலாம், ஆனால் அர்ச்சகனாக வரமுடியாது என்ற தத்துவத்தை உணர்ந்த காரணத்தால் தமிழக அரசு அரிசனங்கள் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற சட்டத்தை அங்கீகரித்து நம்முடைய மன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றினோம். ஆனால் உயர்நீதிமன்றத்தில் அது ஊசலாடி அழிந்து போய்

விட்டது என்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, அதற்கு மத்திய சர்க்கார்தான் உயிர் கொடுக்க வேண்டும். உயிர் கொடுக்கும் சக்தியாக, கடவுளாக மத்திய சர்க்கார்தான் இருக்கிறது என்ற காரணத்தால் தமிழக அரசு கோரிக்கையாக விட்டது.

ஆனால், மத்தியில் இருப்பவர்கள் ஏனோ தெரியவில்லை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் பிரச்சினைகளை அலட்சியம் செய்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர்கள் பாரபட்சம் காட்டுகிறார்கள். இன்றையதினம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் அர்ச்சகர்கள் ஆகலாம் என்பதற்கான சட்ட அங்கீகாரத்தை, சட்டத் திருத்தத்தை மத்திய சர்க்கார் இதுவரையில் செய்யாதது தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மத்திய சர்க்கார் இழைக்கும் பெரும் துரோகம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் அப்படிப்பட்ட புரட்சிகரமான காரியங்களைச் செய்து வருகிற இந்த அரசைக் சாடுகிற முறையில் சிலர் இறங்கியிருக்கிறார்கள். துணிந்து பல சலுகைகள் இந்த அரசின் மூலம் செய்யப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சலுகைகள் மூலம் ஆதாயம் பெற்று எங்கே மேலே ஏறி உட்கார்ந்துவிடுவார்களோ என்கிற அச்சம் காரணமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிலும் குறிப்பாக அவர்கள் தலைவராக இருக்கக்கூடிய திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மக்களைப் பழிவாங்குகிற படலத்தில் ஈடுபட்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் செல்கிற இடங்களில் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்தாலும்சரி அல்லது உள்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தாலும் நான் ஆட்சிக்கு வருவேனேயானால் தகுதி அடிப்படையில்தான், திறமையின் அடிப்படையில் நான் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும், சலுகைகள் தரப்படும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. பூ. எட்டியப்பன் :** இன்று நடக்கிற மானியத்தைப் புறக்கணிக்க வேண்டி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட இன்று இந்த மன்றத்தில் இல்லை. அதற்கு விளக்கம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சி என்றால் இருந்துதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்களை நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.



**திரு. செ. கந்தப்பன் :** தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அனுதாபம் காட்டக் கூடியவகையில் இருக்கக்கூடாதா என்ற முறையில்தான் இந்தக் கேள்வி எழுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு நான் விளக்கம் கொடுக்க முடியாது.

**திரு. வை. பாலசுந்தரம் :** எந்த அளவிற்கு அந்த மக்கள்மீது அவர்களுக்கு அனுதாபம் இருக்கிறது என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அவர்களின் தலைவர் ஏனோ இந்த மக்கள் மீது இந்தப் பழிவாங்கும் படலத்தில் ஈடுபட்டு விட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை நான் சொல்லவேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குத் தனிச் சலுகைகள் கூடவே கூடாது என்று சொன்னார்கள்.

மரியாதைக்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வேறுவிதத்தில் வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் அடுத்து பேசிய திருவாளர் எட்மண்ட் அவர்கள் அதை வலியுறுத்திச் சொல்லிவிட்டார்கள். தகுதியின் அடிப்படையில்தான், திறமையின் அடிப்படையில்தான் சலுகைகள் வழங்கவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொல்லிவிட்ட காரணத்தால் இன்று தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது, ஒரு சஞ்சலம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்தில் அதற்குத் தகுந்த விளக்கத்தை நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தந்துவிட்டார்கள்.

தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேட்டுக்குடி மக்களுக்கு நீங்கள் மேடை கட்டி மாலை கூடச் சூட்டி லாலி பாடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குச் சலுகைகள் மேலும் இருந்தால் அது எப்படி உயர்மட்டத்தில் இருக்கக்கூடிய மேட்டுக்குடி மக்களுக்குப் பயன் தராது என்று கருதுகிறீர்கள்? இன்றிருக்கிற சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சலுகைகள் பல வழங்கப்படுவதன் மூலம் நல்ல ஆதாயம் பெற்று வருகிறார்கள். இன்றிருக்கிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவில்லை என்றால் பின்னர் எப்போது அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும் என்ற நம்பிக்கையில் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

றூர்கள். இந்த அரசுக்கு அவர்கள் எவ்வளவோ மனுக்கள் போட்டும் பதில் வரவில்லை. சென்ற பட்ஜட் கூட்டத்தின்போதுகூட ஒரு லிஸ்ட் தயார் செய்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. சட்டசபை உறுப்பினர் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு தகவல் ஒன்றும் இல்லை. மனு கொடுத்தவர்களுக்கும் இல்லை. இப்படிப்பட்ட மனுக்கள் இந்த நிலையில் அரசாங்கத்தில் ஓடிக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது.

மாநிலத்திலே மனைக்கட்டுகள் எவ்வளவு கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றால், 2,33,954 ஆகும். அதில் கொடுக்கப்பட்டு இருப்பது 2,17,630, மீதி 16,324 கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஏன் கொடுக்கப்படவில்லை? அதிலே என்ன சிக்கல் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அரிசனங்களுக்கு உடனடியாக வீட்டு மனைப்பட்டா கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருந்தும், கொடுக்காமல் இருக்கிறது என்றால் எந்த இடத்தில் தவறு நடந்து இருக்கிறது என்பதை அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கடன்களைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ பல தொழில்களுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. அதை ஒப்புக்கொள்கிறேன். அது வரவேற்கத்தக்கது. உதாரணத்திற்கு ஒன்று மட்டும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சைக்கிள்கள் வாங்குவதற்குக் கடன் கேட்டால் ரூ. 750 கொடுக்கப்படுகிறது. ரூ. 750-க்கு எத்தனை சைக்கிள் வாங்கமுடியும்? இன்று இருக்கும் நிலைமையில் ஒரு சைக்கிள் விலை கிட்டத்தட்ட ரூ. 500 முதல் 600 ரூபாய் ஆகிறது. அந்த ஒரு சைக்கிளை வைத்துக்கொண்டு அவன் எப்படி ஜீவிக்க முடியும்? அந்த மாதிரி தொழில் செய்பவர்களைப் பொறுத்தவரையில், இப்போது கொடுக்கும் கடன் தொகையை உயர்த்திக்கொடுக்கவேண்டும். மூன்று சைக்கிள்கள் இருந்தால் தான் அவர்கள் ஜீவனம் செய்ய முடியும். ஏனெனில் ஒரு சைக்கிள் பழுதாகிவிட்டால், அவன் மற்ற சைக்கிள்களை வைத்துக்கொண்டு பிழைக்க முடியும். ஆகவே, அந்தக் கடன் தொகையை ரூ. 2,500 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு என்று சொல்கிறோம். ஆறு மாவட்டங்களில் உலவி வரும் காவல் படை வைக்கப்பட்டு இருக்கிறது, அப்படியானால் மற்ற மாவட்டங்களில் தீண்டாமை இல்லையா என்று கேட்கிறேன். எல்லா இடங்களிலும் தீண்டாமை இருக்கிறது. நேற்று கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீண்டாமை கேஸ் என்ற முறையில் எங்கெங்கே எல்லாம் நட



வடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, எல்லா மாவட்டங்களிலும் அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அரிசன மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

வீட்டு வசதி வாரியம் 1 லட்சம் வீடுகளைக் கட்டுவது என்றும், இந்த ஆண்டில் 10,000 வீடுகள் கட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். வீடுகள் எங்கே கட்டப்பட்டு இருக்கின்றன? யூனியன், பஞ்சாயத்து போன்ற இடங்களில் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டு, அங்கே கட்டப்பட்டு இருக்கின்றன. நகர்ப்புறங்களில் அரிசனங்கள் இல்லையா? அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. அவர்களுக்கு வீடு வேண்டாமா? அரிசனங்களுக்கு வீடு கட்ட நிலங்கள் நகர்ப்புறத்தில் கிடைக்காது என்று சொல்லலாம். ஆனால் நிலங்கள் கையகப்படுத்துவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, அந்தப் பணத்தில் நகர்ப்புறத்தில் உள்ள தனிப்பட்டவர்களின் நிலங்களை ஆர்ஜிதம் செய்து, நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்கும்—எல்லா மாவட்டங்களிலும்—வீடு கட்டித் தர அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொபைல் மெடிகல் வேன் என்று எங்கள் மாவட்டத்தில் வைத்து இருக்கிறார்கள். அந்த மொபைல் மெடிகல் வேன், தோடர்கள் இருக்கும் பகுதியை மட்டும் பார்த்துவிட்டு சென்று விடுகிறது. மற்ற மலைவாசிகள் வசிக்கும் பகுதிகளுக்குச் செல்வது இல்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். வெண்ணசால்-கூடலூரில் இருந்து 45 மைல் தூரத்தில் இருக்கிறது—அங்கே பழங்குடி மக்கள் பள்ளி ஒன்று இருக்கிறது. கடந்த மாதத்தில் அங்குள்ள மாணவர்களுக்கு சிரங்கு வந்துவிட்டது. அதற்கு வைத்தியம் செய்ய வேண்டுமென்றால் கூடலூருக்கு, 45 மைல் வந்துதான் செய்ய வேண்டும். அதற்கு செலவு என்ன ஆகும்? ஆசிரியர்கள் அந்த மாணவர்களை அழைத்துவர கன்வேயன்ஸ் ஏதாவது தருகிறார்களா? ஆகவே, மாதம், ஒருமுறை அங்கேயுள்ள பள்ளிகளுக்கும் மற்ற அரிசன, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்கும் சென்று வரவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்லர்கள்—அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கிருஸ்தவ அரிசனங்கள். அவர்கள் இந்துக்களாக இருந்தவர்கள் தான். வெள்ளைக்காரனோடு பழகிவந்த காரணத்தால், முனுசாமி 'மில்லட்' என்று வைத்துக்கொண்டான். ஆறுமுகம், 'ஆல்பர்ட்' என்று வைத்துக்கொண்டான். அவன் நகரத்தில் வாழ்ந்து பழக்கப்பட்டவன். அவனுக்கு

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 ஏப்ரல் 4

இந்த உணர்வு அந்த மக்களுக்கு இருப்பதால் நான் முதல் அமைச்சர் அவர்களிடம் தாழ்மையான முறையில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்பு கிறேன். அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வகையில் திட்டங்கள் திட்டி பொருளாதார அடிப்படையில் திட்டங்கள் திட்டித் தந்தால்தான் இந்த ஜாதிப் பாகுபாடு ஒழிவதற்கு சாத்தியக்கூறு பிறக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காகத் திட்டப்படுகிற திட்டங்கள், சற்று சிந்தித்துத் திட்டப்படுகிற அளவிற்கு திட்டங்கள் திட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அரிசன வீட்டு வாரியம் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளம் குளிர இத் திட்டத்தைத் திட்டி நமக்கு வாழ்வு வந்துவிட்டது என்று அவர்கள் கருது கிறார்கள்.

அதேநேரத்தில் ஒரு பகுதியில் ரூரல் டெவலப்மெண்ட் என்ற திட்டத்தின் மூலம் மூவாயிரம் ரூபாய் கடன் தந்து வீடு கட்டுகிற ஒரு சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் இனமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். கடையநல்லூர் தொகுதி, என் அச்சரப்பாக்கம் தொகுதி, மற்றப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஒரு யிடத்தில் கடன் கொடுத்து வீடு கட்டிக்கொள்ள வசதி செய்கிறார்கள், இன்னொரு இடத்தில் சும்மா வீடு கட்டித் தருகிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை சிலர் அரசியலுக்கு பயன்படுத்துகிறார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு தவறான எண்ணங் களை, திசை திருப்பி விடுகிற அளவிற்கு ஏற்படுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்து வரும்போது, இப்படிக் கடன் கொடுப் பதை விட்டுவிட்டு அவர்களுக்கும் இனமாக வீடுகள் கட்டித் தரும் நல்ல திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்று கேட்டு இந்த மானியத்தை வர வேற்று, அமைகிறேன்.

**திரு. கு. அ. பொம்மன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிஜன நல மானியக் கோரிக்கைமீது சுதந்திராக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை இந்த அவைமுன் வைப்பது சாலச் சிறந்தது என்று கருது கிறேன்.

முதலில் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் மானியத்தின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக் காகவும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் பாடுபட்டுக்கொண்டு வருகிறது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.



1975 ஏப்ரல் 4] [திரு. கு. அ. பொம்மன்]

நல்ல உள்ளம் படைத்த முதல் அமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் நான் எடுத்துச் சொல்வது என்னவென்றால், நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு உள்ள இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக இன்று இந்த மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 948 லட்சம் ஆகும். இதில் கல்விக்கு மட்டும் ஆறு கோடி ரூபாய் மற்றபடி மூன்றுகோடி சில்லறை ரூபாய் மற்றக் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று விளக்கக் குறிப்பில் தரப்பட்டிருக்கிறது.

அரிசன, பழங்குடி மக்களின் நலன்களைப் பேண மூன்று தலைப்புகளில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வி, பொருளாதார மேம்பாடு, சுகாதாரம்—வீட்டு வசதித் திட்டங்கள் என்று போடப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அரிசனங்களுக்குள்ள குறைபாடுகள்பற்றியும் அவற்றை எப்படி நிவர்த்திக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி நான் விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. பொருளாதார மேம்பாடு என்று சொல்லும்போது அரசு செய்கிற சலுகைகள் என்ன என்று கவனிக்கும்போது நிலம் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், தொழிற் கருவிகள் அளித்தல், நீண்ட காலக் கடன்கள் வழங்குவது போன்றவைகளைச் செய்து வருகிறது. பதினைந்து நாட் களுக்கு முன்னர் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள், 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாக. அவற்றை ஏன் அரிசனங்களுக்கு ஒதுக்கக்கூடாது என்று கேட்கிறேன். மற்ற மாவட்டங்களில் வளங்களைச் சார்ந்த நிலங்கள் தலைக்கு மூன்று ஏக்கர் வீதம் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வன இலாகாவில் நிலமே இல்லை என்று சொல்லப்படுகிறது. ஏன் இல்லை என்று கேட்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் செடி கொடிகள் வளராத நிலங்களை வன இலாகா ஏராளமாக வைத்துக் கொண்டிருக்கிறது. அதை சர்வே செய்து அரிசனங்களுக்குத் தலைக்கு மூன்று ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி ட்ரை லான்ட், வெட் லான்ட் அல்ல. ஆகவே, மூன்று ஏக்கர் வீதம் கொடுக்கவேண்டும். பின்னர் மசனக்குடி என்ற கிராமத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்து, நூறு பேர்கள் இருப்பார்கள். அதாவது அரிஜனங்கள், பழங்குடி மக்கள் என்று கருதுகிறேன். நிலத்தை இதுவரை உழுதுகொண்டு வருகிறார்கள். அவர்கள் தண்டத் தீர்வையும் கட்டி வருகி

[திரு. கு. அ. பொம்மன்] [1975 ஏப்ரல் 4

விவசாயம், மற்ற எந்தத் தொழிலேயும் செய்யத் தெரியாது. அவன் சுதாரக வெள்ளேக்காரனேடு இருந்தவன். அவர்களுக்கு, மாடுகள் வாங்குவதற்கு மான்யமும் கடனும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அவர்கள் சற்று நிம்மதியாக ஜீவனம் செய்யமுடியும். அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் வாழும் படுகாக்களேப் பொருத்தமட்டில் போன பிற்பட்டோர் மானியத்திலே கூட பேசினேன்— அவர்களேப் பிற்பட்டோர் பட்டியலில் கொண்டு வந்து விட்டார்கள். நான் சென்ற முறை பேசியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியாது. ஆகவே, அதை மீண்டும் இங்கே சொல்கிறேன். அந்த 'படுகா' இனத்தையும் 'ஹில் டிரைப்ஸ்' லிஸ்டில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன கிருஸ்தவர்களேப் பற்றிச் சொன்னர்கள். அரிசன கிருஸ்தவர் களுக்குக் கல்விச் சலுகை மட்டுமே தற்போது கொடுக்கிறேம். மற்றச் சலுகை கள் கொடுப்பது இல்லே. ஒரு கேள்விக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னர்கள் என்ருல், எதிர்க்கட்சித் தலேவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்று சொன்னர்கள். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலேவர்களின் கூட்டத்தைக் கூட்டி இதற்கு ஒரு முடிவு எடுத்து, அதைச் செய்யவேண்டும். அதை தாங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அருந்ததியர் சமூகம் மிகவும் பிற்போக்கான சமூகம். அந்தச் சமூகம் முன்னுக்கு வரவில்லே. அவர்களுக்கு ஸ்தாபனங்களில் முதன்மை ஸ்தானம் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அருந்ததியர் சமூகத்தில் யார் சிறப்பான முறையில் படித்து இருக்கிருர்களோ, அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதற்கு, நியமனம் செய்வதற்கு, அதற்குத் தகுந்த வகையில் முன்னுரிமை பெற ஆணே வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

1965-ம் ஆண்டில் ஜி.ஓ. 38 என்று ஐ.சி.எஸ். விஸ்வநாதன் அவர்கள் போட்டு இருக்கிருர்கள். அதன் அடிப்படையில் உத்தியோகத்தில் இருக்கும் அரிசனங்களுக்கு எலிஜிபிலிடி கன்சிடர் செய்து அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. அது எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது என்று தெரியவில்லே. அதையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அந்தச் சலுகையை அவர்களுக்கு வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. கு. அ. பொம்மன்]

உழவு மாடுகள் வாங்குவதற்கு எல்லா மாவட்டங்களிலும் கடன் கொடுக்கிருர்கள். எங்களுக்கு நீலகிரி ஜில்லாவில், கூடலூர் வட்டத்தைத் தவிர உழ முடியாது. ஆகவே இதற்குப் பதிலாக குன்னூர் உதகை வட்டத்தில் உழவர் களுக்கு மம்மட்டி, உழவுக் கருவிகள் கொடுத்து வந்தார்கள், இப்போது அதுவும் இல்லே என்று சொல்லிவிட்டார்கள். எதற்காக நிறுத்தினர்கள், கொடுக்க முடியாது என்று சொன்னர்கள் என்று தெரியவில்லே. அங்கே விவசாய மக்களுக்கு பூச்சி மருந்து அடிக்க உதவும் வகையில், பவர் ஸ்ப்ரேயர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ந. கருமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கொண்டு வந்து இருக்கின்ற மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களே நான் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

முதலில், சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கான அனுமதியை மேலும் 10 நிமிடம் அதிகமாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு உடல் நிலே சரியில்லே, எங்களுடைய மானியக் கோரிக்கை என்ற காரணத்தால் விரிவாக சில வார்த்தைகளேச் சொல்லலாம் என்பதற்காக இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நமது காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர், அருமை நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசும்போது, சரித்திரத்தை திசை திருப்பிக் கூறுகிறீர்களே என்று சொன்னர்கள். உள்ளபடியே, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் சரித்திரத்தை திருப்பித்தான் வைத்து இருக்கிருர்கள். 1967-க்கு முன் என்னென்ன செய்து இருக்கிருர்கள் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக, டாக்டர் கலேஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் என்ன செய்து இருக்கிருர்கள் என்பதை எல்லாம் ஏற்கனவே படித்துப் பார்த்து இருக்கிறேம். அப்படியிருந்தும் அவர் கூறியது உள்ளபடியே வருந்தத்தக்கது என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர் பொம்மன் அவர்கள் உழவு மாடுகள் வாங்குவதற்கு அளிக்கப்படும் கடன் குறித்துப் பேசினர்கள். 1967-க்கு முன்னல் ரூ. 250 மாடுகள் வாங்க மானியம் கொடுத்தார்கள். இந்த அரசு ரூ. 600 ஆக உயர்த்திக் கொடுக்கிறது. அதேபோல், கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 1,500 கொடுத்து வந்தார்கள், அது இப்போது ரூ. 2,000 ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** கிணறு வெட்டுவதற்கும், மாடு வாங்குவதற்கும் ஒதுக்கிய பணம் எவ்வளவு என்பதைப் பாருங்கள். 3.5 லட்சம், 6 லட்சம் என்றுதான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இருக்கிற நேரமே குறைவு, அதிலே குறுக்கீடுகள் வேண்டாம்.

**திரு. ந. தருமலிங்கம் :** இதேபோல் என்னுடைய தொகுதியில் இப்போது அரிசன நலத்துறையால் பல செயல்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நேரத்தில், ஒரு சில திட்டங்கள் எங்கள் பகுதியில் செய்யப்படவில்லை. அதையும் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உழவு மாடுகள் வாங்க ரூ. 600 கொடுப்பது, இந்த நேரத்தில் இருக்கும் விலைவாசியில் போதாது. ஆகவே, அதை ஆயிரம் ரூபாய் என்ற வகையில் உயர்த்தவேண்டும். கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,000 என்று இருக்கிறது, அதை வைத்து மண் கூட வெட்ட முடியாது—எனவே ரூ. 5,000 என்று உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதேபோல இங்கே குடிதண்ணீர் கிணறுகளெல்லாம் வெட்டித் தரப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறோம். இதற்காக நிறைய திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன என்றாலும், மூவாயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு குடிதண்ணீர் கிணறு வெட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மூவாயிரம் ரூபாய்க்கு மேலே ஐயாயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர சூப்பர்வைசர் மூவாயிரம் ரூபாய் தான் மதிப்பீடு கொடுக்கிறார். இதற்குள்ளே வெட்டவேண்டு மென்றால் காண்ட்ராக்ட்காரர்கள் வருவது கிடையாது. ஆகவே, இதை ஐயாயிரமாக உயர்த்தவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். தோட்டக்கலை என்று ஒரு புதிய திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து காய்கறித் தோட்டம், பழத்தோட்டம் போன்ற தோட்டங்களுக்காக 1.86 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என் பகுதியைப் பொறுத்தவரை இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை. இதை கிராமப்புறங்களில் அமுல்படுத்தினால் நன்றாக இருக்கும். இதற்காக துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருவிகள் வழங்குவதற்கு 2.5 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. கருமார் தொழில், தச்சுத் தொழில் இவைகளுக்கு கருவிகள்





வாங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியான கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் தொழில் கருவிகள் வழங்கப் பட்டு இருக்கின்றன. மீதி எங்கே செய்கிறார்கள் என்று தெரியவில்லை. தாலுகா வாரியாக, கூடுமான வரையில் தொழில் தெரிந்த 100 பேர்களுக்கு கருவிகள் வழங்க ஆக முன்வரவேண்டுமென்று கேட்டு, அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் நடத்துவதற்கு வட்டி இல்லாக் கடன் கொடுப்பது சம்பந்தமாக அருமை அண்ணன் பொம்மன் அவர்கள் சொல்லியதுபோல ஒரு சைக்கிள் கடை வைக்கவேண்டுமென்றால் 500 ரூபாய் கொடுக்கிறார்கள். இதனால் ஒரு சைக்கிள் தான் வாங்கமுடியும். நகர்ப்புறங்களில் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். இதை வைத்து சைக்கிள் கடை வைக்க முடியாது. கிராமப்புறங்களிலும் சைக்கிள் கடை வைப்பதற்கு இரண்டாயிரம் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் உயர்த்தி கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'டீ' கடை வைப்பதற்கு 150 ரூபாய் கொடுக்கிறார்கள். இதைக் கொண்டு பால் கூட வாங்க முடியாது. 150 ரூபாய் என்று இருப்பதை மாற்றி 500 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழக்கடை வைப்பதற்கு 300 ரூபாய் கொடுக்கிறார்கள். இதையும் மாற்றி ஆயிரம் ரூபாய் வரை அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் நான் கேள்விப்படுகிறேன். இது எங்கள் பகுதிக்கு இன்னமும் வரவில்லை. எங்கே அமைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. 352 சங்கங்களைத் திறந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு சங்கம் கூட திறக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக 1972-ல் எங்கள் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் அதைப் புறக்கணித்திருக் கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எங்கள் பகுதியில் மழை இல்லை. வரட்சி காணப்படுகிறது. பின்தங்கிய பகுதி, எங்கள் பகுதியிலும் சங்கங்கள் அமைத்து செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறத்தில் தோட்டி போன்ற சுகாதாரப் பணியாளர்களை நியமிப்பதைப் போல கிராமப்புறத்திலும் நியமிக்கவேண்டும். கிராமப்புறத்தில் இருக்கிறவர்கள் சுகாதாரமாக வாழவேண்டாமா? ஆகவே கிராமப்புறங்களிலும் இப்படிப்பட்ட சுகாதாரப் பணியாளர்களைப் போடவேண்டும். அப்போதுதான் கிராமப் புறங்களில் இருக்கிறவர்களும் சுகாதாரமாக வாழ வசதியாக இருக்கும். நான்காவது தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதுகின்ற அரிசன மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மாநிலத்தில் 15 இடங்களில் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. என்னுடைய பகுதியில் ஒன்றுகூட

ஆரம்பிக்கப்பட இல்லையே என்று என் தொகுதி மக்கள் கேட்கிறார்கள். இந்தத் திட்டம் எங்கள் பகுதிக்கு வரவில்லை. இதை எங்கே செயல்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தை பின்தங்கிய பகுதியான எங்கள் பகுதி முன்னேறுவதற்கு செயல்படுத்தவேண்டுமென்று விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் வீட்டு மனைப் பட்டாக்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இதை அதிகமாக வற்புறுத்திச் சொல்வதற்குத் தேவையில்லை என்பதற்காக சுருக்கமாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நாம் மக்களிடம் ஓட்டு கேட்கிற நேரத்தில் வீட்டு மனைப் பட்டா வாங்கித் தருகிறோம் என்று சொல்கிறோம். இதேபோலத்தான் எனக்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் கூடச் சொன்னார். நிலங்கள் சில பகுதிகளில் எடுக்கப்பட்டும் உடன் மனைப் பட்டா வழங்க முடியவில்லை. உயர்நீதி மன்றத்திலே நிலச் சொந்தக்காரர்கள் ஸ்டே வாங்கி நிறுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை அகற்றுவதற்கு சட்டத்தைத் திருத்தியாகவேண்டும். அரசு ஒருவரின் நிலத்தை எடுக்கிறதென்றால், அவருக்கு எந்தவிதத்திலும் அனுகூலம் இல்லாத வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும் (மணியடிக்கப் பட்டது). தலைவரவர்கள் மணி அடிக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரம் பேச வேண்டுமென்று முதலிலேயே அனுமதி கேட்டேன்.

**திரு. அ. சின்னசாமி:** தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த மானியத்தைப் பொறுத்தவரை, அரிசன் வெல்ஃபேர் டைரக்டர் அவர்கள் இங்கே இருக்கவேண்டும். ஆனால் அரிசன் வெல்ஃபேர் டைரக்டர் அவர்களைக் காணவில்லை. இந்த இலாகாவைப் பொறுத்தவரை பெரும்பாலான வேலைகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் வருவாரா அல்லது வர மாட்டாரா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, டில்லியில் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினருடைய மாநாடு நடைபெறுகிறது. அதற்கு எல்லா மாநிலங்களுடைய இயக்குநர்களும் போகவேண்டி வந்தது. நேற்று இந்த இலாகா மானியக் கோரிக்கையைப் பற்றி அவர் பேசி விட்டு அரசாங்க அனுமதியோடு டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆபீசர்கள் காலரியில் இருக்கிறார்களா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும். டைரக்டர் இல்லையென்றாலும் பரவாயில்லை We are not concerned. இது இப்போது பிரச்சினை இல்லை,



**திரு. ந. தருமலிங்கம்:** தலைவரவர்களே, அடுத்தபடியாக இரண்டு தாலுகாக்களுக்கு ஒரு தனி தாசில்தாரைப் போட்டிருக்கிறார்கள். இதனால் எதைச் சொன்னாலும் அந்த தாசில்தாரால் செய்ய முடியவில்லை. அப்படியே தாசில்தாரைத் தேடிக் கொண்டு போனால் அவர் ஹெட் குவார்ட்டர்ஸில் இருப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு தனி தாசில்தாரைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியக் கழகத்தைப் பற்றிப் பேசியவர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மேலும் நான் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவிலே 12 கோடி அரிஜன மக்கள் வாழ்கிறார்கள். அப்படியிருந்தும் இன்றைக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் சாதிக்க முடியாத ஒரு சாதனையை டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டில் 75 லட்சம் மக்கள் நலனைக் கருதி ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரிசன மக்களிடத்தில் அவர் எவ்வளவு பற்றுதல் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக இது எடுத்துக் காட்டுகிறது. இதை விட்டு பொம்மை மாதிரி விளம்பரத்திற்குக் கட்டுகிறார்கள் என்று மற்றவர்கள் மனச்சாட்சியை விட்டுப் பேசினால் அது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நிமிஷம். முடித்துவிடுங்கள். அடுத்தவர் பேசினதை விமரிசனம் பண்ணவேண்டாம், நேரமில்லை.

**திரு. ந. தருமலிங்கம்:** தலைவரவர்களே, குடி தண்ணீருக்காக 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது எங்கள் பகுதிக்குப் பயன்படவில்லை. இதைப்பற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லியும் அமைச்சரவர்கள் இதை ஏன் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சமுதாயக் கூடம் கட்டுகிறார்களாம். அதற்கு 15 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று புள்ளி கொடுத்திருக்கிறார்கள். என் தொகுதியில் கடம்பூர், மரூர், கள்ளக்குறிச்சி போன்ற கிராமங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுப்பதைப் பற்றிச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை.

கலப்புத் திருமணம் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு பேசியவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்தது 3 ஏக்கர் நிலமாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் படிக்காதவர்கள் கூட உடனே திருமணம் செய்து கொள்ள ஆவலாக இருப்பார்கள். படித்த வாலிபர்களாக இருந்தால்

[திரு. ந. தருமலிங்கம்] [1975 ஏப்ரல் 4

உத்தியோகத்தில் உயர்வுகள் கொடுத்தால் கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன் வருவார்கள். ஆகவே இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967-க்கு முன்னால் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்பு பற்றிச் சொன்னார்கள். சில மாவட்டங்களில் தீண்டாமை ஒழிப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டு அமுலில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரி இருப்பதில்லை, காரணம் அலுவலகம் அவர்களுக்கு இல்லை. நாம் எழுதிய கடிதங்களுக்கு 6 மாதங்களுக்குப் பிறகு தான் பதில் வருகிறது. தீண்டாமை ஒழிப்பு அதிகாரிகளுக்குத் தனி அலுவலகம், தொலைபேசி, வண்டி ஆகியவைகள் கொடுக்கப்பட வேண்டும். இதை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வார்டனாக இருப்பவர்கள் தொடர்ந்து இருப்பதால் அவர்கள் ஊழல் செய்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து வார்டனாக இல்லாமல் மாற்றி ஆசிரியர்களாகப் போட வேண்டும். ஒருவர் வார்டனாக இரண்டு வருஷங்களுக்கு மேல் இருக்கக் கூடாது. அப்படி இந்தச் சட்டத்தை மாற்றவேண்டும். தென்னாற்காடு மாவட்ட நல அதிகாரி தவறு செய்கிறார்கள். அவர்களை மாற்றவேண்டுமென்று 4, 5 எம்.எல்.ஏ.-க்கள் சொல்லியிருக்கிறோம். சோஷியல் வெல்ஃபேர் செக்ரடரி, ரெவின்யூ செக்ரடரி இவர்களிடம் சொல்லி இருக்கிறோம். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. என் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை.

மாவட்ட நல அதிகாரிகள் 5, 6 வார்டன்களைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்கிற நேரத்தில் கவனிக்கிறேன் என்று சொல்கிறார். அதற்குள்ளே எவ்வளவு கொள்ளை அடிக்கமுடியுமோ அவ்வளவும் கொள்ளை அடிப்பார்கள். நான்கு, ஐந்து எம்.எல்.ஏ.-க்கள் இதைப் பற்றி வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். டிரான்ஸ்ஃபர் செய்கிறோம் என்றார்கள். ஆனால் அந்த அதிகாரி இன்னும் அங்கேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார். ஏழைப் பிள்ளைகளுக்குப் போடுகிற சாதத்தை அவர்கள் வயிற்றில் அடித்து, கொள்ளை அடிக்கிறார்கள். அந்த வார்டன்கள் இந்த அதிகாரி அங்கேயே இருக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு அவருக்கு ஸ்வீட் கொடுக்கிறார்கள். ஆகவே, மக்கள் எங்களிடம் சொல்கிற புகார்களை அரசுக்குத்தானே எடுத்துச் சொல்லுகிறோம். இதில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த அதிகாரி



1975 ஏப்ரல் 4] [திரு. ந. தருமலிங்கம்]

டிரான்ஸ்ஃபர் செய்யப்படமாட்டார் என்கிறார்கள். கேட்டால் ரிலீவர் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஏன் ரிலீவர் வரவேண்டும்? இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது நேர்முக உதவியாளர் இவர்கள் யாரிடமாவது அவர் பொறுப்பைக் கொடுத்து ரிலீவ் ஆகவேண்டியதுதானே. இது பற்றி என்ன வென்று தெரியவில்லை.

என்னுடைய பகுதியில் ஒன்றியங்களில் ஒரு அரிசன் கூட வேலை பார்க்கவில்லை. நான் உள்ளபடியே வருந்துகிறேன். அதை முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து இந்த மக்களுக்கு விமோசனம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எனக்கு 26-ந் தேதி உடல் நிலைமை சரியில்லாமல் சீரியசாக இருந்தது. விடுதியில் இருக்கின்ற டாக்டர் எமெர்ஜன்ஸி வார்டில் அட்மிட் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். பொது மருத்துவமனைக்குக் கொண்டு போனவுடன் டாக்டர்கள் கிடையாது. சாதாரண ஆபரேஷன் செய்யப்படக் கூடிய படுக்கையில் கொண்டு விடுகிறார்கள். உள்ளபடியே வருந்துகிறேன். எல்லா டாக்டர்களும் அதற்குப் பிறகு தான் வருகிறார்கள். வந்தவுடன் ஸ்பெஷல் வார்டு வேண்டும் என்று வற்புறுத்தினேன். அதற்குப் பிறகு நான் போராடியதன் காரணமாக இரவு 9 மணிக்கு என்னை ஸ்பெஷல் வார்டுக்குக் கொண்டு செல்லுகிறார்கள். எமர்ஜன்ஸி வார்டு என்றால் என்ன அர்த்தம்? அதற்கு பெரிய டாக்டர் டீன், சூப்பிரண்ட் இருக்கிறார்கள். அவர் அந்த இடத்தை விட்டு நகருவதில்லை. என்னை வந்து பார்க்கவில்லை. நான் டிஸ்சார்ஜ் செய்து கொண்டு பிரைவேட் டிரீட்மெண்ட் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்படி நிலைமை இருக்கிறதென்றால் சாதாரண மக்கள் நிலைமை என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.எல்.ஏ.-க்கு உடல் நிலை சரியில்லை, சீரியஸாக இருந்தது என்று சொன்னார்கள். இந்த மாதிரி குறைகளுக்கு மருத்துவர்கள் இனி இடம் கொடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும், டாக்டர்கள் கவனிக்கவில்லை என்றும் கூறினார். இது சாதாரண புகார் அல்ல. அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர் தவறாகச் சொன்னாரா அல்லது அங்கே தவறாக நடந்ததா என்பதைப் பொறுத்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருக்கு என்ன சீரியஸான வியாதி என்ற விவரங்களை 5 நிமிடம் ஆனாலும் சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. ந. தருமலிங்கம்:** முதலமைச்சர் அவர்களை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு வயிற்று வலி என்று சொல்லி விடுதியில் இருந்த டாக்டர் அவர்கள் பொது மருத்துவமனை எமெர்ஜன்ஸி வார்டில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார், சாதாரண ஆபரேஷன் வார்டில் கொண்டு வந்து போட்டார்கள். நான் வருத்தப்பட்டு, வாதாடிய பிறகு தான் ஸ்பெஷல் வார்டு கொடுத்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திடீரென்று வயிற்றுவலி என்று சொல்லி எமெர்ஜன்ஸி வார்டுக்கு அனுப்புவதில் என்ன தவறு? சில நேரங்களில் வயிற்றுவலி ஏற்பட்டால் உடனடி ஆபரேஷன் செய்யாவிட்டால் ஆபத்து ஏற்படும். ஆகவே எமெர்ஜன்ஸி வார்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆபரேஷன் கேஸ் அல்ல என்று தெரிந்தவுடன் வேறு வார்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

* **திரு. எம். முத்தையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து நானும் எனது கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் இந்த மான்யத்தில் வரக் கூடிய சில காரியங்களை சுட்டிக் காட்டி ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள். நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு முன்பு பேசிய சித்தமல்லி சோமசுந்தரம் ஒரு வார்த்தை குறிப்பிட்டார்கள். அதை ஒட்டி நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குப் பழைய ஞாபகம் வருகிறது. 1937-லே ராஜாஜி மந்திரி சபை இருந்தபோது, இங்கு ஆலயப் பிரவேசச் சட்டம் பிரகடனம் செய்தபோது, அதை முன் நின்று நடத்திச் செல்லுவதற்கு அநேகம் பேர் தயங்கினாலும், அதிலே முக்கியமானவர்கள் ராஜாஜி, மதுரை வைத்தியநாத அய்யர் போன்றவர்கள், என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களும், முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களும் அதை முன் நின்று நடத்தினார்கள். அப்படி நடத்துகின்ற நேரத்திலே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஜாதி துவேஷம் காரணமாக ஒரு சிலர் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள். அதிலும் முக்கியமானவர் தவத்திரு முத்துராமலிங்கத் தேவர், அரிசன மக்களுக்குத் துரோகமானவர் என்று அவர் மேல் காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அப்பொழுதிருந்த மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களால் புறக்கணிக்கப்பட்டு, கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, அரசியலிலிருந்து அவர் ஒதுக்கப்பட்டிருந்தார். அப்பேற்பட்ட நிலையிலும் கூட அவர்கள் அரசியலுக்காக அரிசனங்களை பகடைக் காய்களாக உபயோகித்தார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே அரிசனங்களுக்கு முன் நின்று இப்பேர்பட்ட தலைவர்களெல்லாம் ஒதுக்கப்பட்டார்கள்



என்று தெரிந்தே [illegible] எந்த அரிசனங்களுக்கு [illegible] முன்நின்று செய்தார்களோ [illegible] அந்த மீனாட்சி அம்மன் கோவிலுக்கு [illegible] கொண்டு வந்தார் என்றால் அதைப் பற்றி நான் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அப்பேற்பட்ட [illegible] தலைவர், மதிப்பிற்குரிய நம் கலைஞரைப் பாராட்டுவதோடு அல்லாமல் நான் இந்த [illegible] தேசத் தந்தை மகாத்மா காந்தி என்று சொல்லப்பட்ட மகாத்மாவாலே அரிசன் என்று [illegible] பெயர் கொடுத்து பாடுபட்டார். இன்னும் நமக்கு [illegible] கிடைக்கவில்லை. அரிசன் என்ற பத்திரிகை கூட நடத்தினார். அவர் எழுத்திலே, பேச்சிலே சொல்லியுள்ளார். ஆனால் செயலில் [illegible] இல்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பேற்பட்ட மகாத்மா மகனுக்குக் கல்யாணம் எங்கே செய்தார் என்றால் அவரை விட உயர்ந்த ஜாதி, ஒரு அந்தணர் ராஜாஜி வீட்டில் தான் சம்பந்தம் செய்தார். நம் போன்ற தாழ்த்தப்பட்ட ஒரு அரிசன் வீட்டில் அவர் சம்பந்தம் செய்யவில்லை. ஆனால் நமது மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு அரிசனப் பெண்ணை அவர் மகனுக்குக் கட்டியிருக்கிறார். அவர் செயலில் செய்த ஒரு தியாகத்திற்கு நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மனப்பூர்வமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட [illegible] இந்த அரிசன, தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்றும் நன்றியுள்ளதாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு அல்லாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயம், கலைஞர் அவர்களுக்கு என்றென்றும் தோள் கொடுத்து நின்று அவர் உடல், உயிர், அத்தனைக்கும் தம் பாதுகாப்புக் கொடுப்போம் என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனைபேரும் சபதம் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால், நான் சார்ந்திருக்கக்கூடிய கட்சி வேறு, கலைஞர் சார்ந்திருக்கக் கூடிய கட்சி வேறு. அவர் எங்கள் சமுதாயத்திற்குச் செய்த நன்றிக் கடன், செயல் வீரர் என்ற முறையில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது தான் சித்தமல்லி சோமசுந்தரம் சொன்னார். என்னுடைய [illegible] என்று. அதற்கு நான் விளக்கம் சொன்னேன். தோழமைக் கட்சி நான். சில நேரத்தில் ஆட்சியில் உள்ள சில குறைகளைப் பற்றிப் பேசியிருப்பேன். அதனால் ஒரு மாதிரியாக தெரிந்து இருக்கும். எது நியாயம் என்று படுகிறதோ அதைப் பேசுவேன். மனதில் வைத்துக் கொள்ள

[1975 ஏப்ரல் 4

திரு. எம். முத்தையா : இன்னொரு [illegible] விவசாயிகள் [illegible] வருத்தமடைகிறேன். [illegible] அதிகாரிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். [illegible] என்ற [illegible] 35 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலத்தை [illegible] பட்டா கொடுக்காமல் [illegible] விஷயம், [illegible] அதைப்பற்றி [illegible] இன்னும் [illegible] அங்குள்ள அதில் நடவடிக்கை எடுக்கவில்லை. 35 ஆண்டுகளாக விவசாயம் செய்துவந்த [illegible] கிடைக்கிற [illegible] அதிகாரிகள் [illegible] தக்க நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு [illegible] விடுதிகளிலும் [illegible] இருக்க வேண்டும்; [illegible] வேண்டும் என்று சொல்கிறார்கள். மதிப்பு உள்ளவர்கள் [illegible] ஒரு விஷயம். அப்படி சொந்த நாட்டில் இல்லை. ஆனால் இந்த விடுதிகளுக்கும் இந்த [illegible] 18 வயதிற்குட்பட்டவர்கள் [illegible] இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எங்களுக்கு ஓரளவு [illegible] இருக்கும்; ஆகவே, கலைஞர் அவர்கள் இந்த [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, [illegible] பார்க்கும்போது [illegible] கொடுக்கிறார்கள், ஆதிதிராவிடர்களுக்கு [illegible] கொடுக்கிறார்கள். [illegible] மாணவர்களுக்கு [illegible] கொடுக்க வேண்டும். [illegible] முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். முற்போக்கான [illegible] வேண்டும். அப்படி இருந்தால்தான் தீண்டாமை [illegible] ஒழியும். இப்போது இந்த மதத்தில் தீண்டாமை நிறைய இருக்கிறது. இந்துக்கள் பல ஜாதி சங்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் [illegible] போனால் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் சங்கம், என்று ஜாதிச் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது இன்னொரு மதத்திற்குப் போய்விடலாமா என்று எண்ணத் தோன்றுகிறது. எந்த இடத்திலும் ஜாதிச் சங்கம் வைக்கக் கூடாது. அப்போதுதான் தீண்டாமை ஒழியும். கலைஞர் அவர்கள் இந்த ஜாதிச் சங்கங்களுக்கு [illegible] கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 11

திரு. மு. இராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் நலன் பற்றிய மானியங்களை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள் கிட்டத்தட்ட 80 லட்சத்திற்குமேல் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது 9 கோடியே 48 லட்சம் ரூபாய். இதில் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் கல்வித் திட்டத்திற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள தொகை பொருளாதார மேம்பாடு வசதிக்காகவும், சுகாதார வசதிக்காகவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்காகப் பல குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, பிற்பட்ட மாணவர் விடுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டிருக்கிறது; ஆனால் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டினேன். அதைக் கருத்திற்கொண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் மனமுவந்து, 1974-75-ஆம் ஆண்டுத் திட்டத்தில் பின்னர் அந்த எல்லா தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் சீருடை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்காக தாழ்த்தப்பட்ட உழவர்களுக்கு, நிலம் உள்ளவர்களுக்கு, 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சில இடங்களில் கிணறு வெட்டியும் தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் குழாய்க் கிணறு அமைத்துக்கொள்ள அரசு 2,000 ரூபாய் என்பதை 3,000 மாக உயர்த்திக் கொடுத்தால் பயனுடையதாக இருக்கும்.

கிணறு வெட்டி தண்ணீர் கிடைக்கவில்லை என்று வருகிறபோதும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு மாவட்ட நல அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். கிணறு வெட்டி, நல்லமுறையில் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் இந்தக் கடனைக் கண்டிப்பாக வஜா செய்ய வேண்டும். கடனை வசூல் செய்வது நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள்—9-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை—தங்கிப் படிக்கின்ற இல்லங்களில் அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் தற்போது நவம்பர் மாதத்திற்குப் பின்னால்தான் நியமிக்கப்படுகின்றார்கள். 5-மாத காலத்தில் அவர்களுக்குப் போதிய

[திரு. எம். முத்தையா] [1975 ஏப்ரல் 4

[illegible] இருந்தார் [illegible] இப்போது அரிசன இலாக்காவின் இயக்குநராக இருப்பவர் [illegible] வேண்டியவர் நல்ல முறையில் செய்கிறார் என்பதற்காக நான் பாராட்டினேன்.

ஆனால், அந்த இலாக்காவில் சில அதிகாரிகள் அதை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது மாவட்டத்தில் அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன சமுதாயத் பிள்ளைகளுக்கு பிப்ரவரி கடைசி வரை இன்னும் ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. அதைத் தான் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவராக இருக்க [illegible] அவர்களுக்கு எழுதிக் காட்டினேன். அதைப் [illegible]. இதைச் சொல்லும்போது வருத்தமாக இருக்கிறது. இதே போல சில விஷயங்களில் அதிகாரிகள் தவறு செய்து விடுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

இதற்கு முன்பாக மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்கார் மூலமாக அரிசனங்களுக்கு வியாபாரம் செய்வதற்காக லோன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதைப்பார்த்து எத்தனையோ அரிசனங்கள் மனு செய்தார்கள். அந்த மனுக்கள் அரிசன நலத்துறை அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டன. பணம் கிடைக்கும் என்று பலரும் பல வகைகளில் அதற்காகச் செலவிட்டார்கள். ஆனால், இன்று வரையில் அந்த லோன் கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரிகளின் போக்கால்தான் இந்த நிலைமை என்று தெரிகிறது. ஆகவே, அதிகாரிகள் கட்சிக் கண்ணோட்டம் பார்க்காமல், ஜாதிக் கண்ணோட்டம் பார்க்காமல் நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை அமைச்சரவர்கள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ் துறையின் நடைமுறையைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சம்பவம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. போலீசார் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால், சாதாரணமாக சந்தேக கேஸ் போடுவதாக இருந்தாலும் மற்ற கேஸ்களை போடுவதாக இருந்தாலும் அரிசன மக்கள் மீதுதான் போடுகிறார்கள். ஏன் அப்படி கேஸ் போடுகிறார்கள் என்றால், அரிசனங்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள், அப்பீல் செய்ய வசதி இல்லை. ஆகையால் சாராய கேஸா, அரிசனம் தான்; சந்தேக கேஸா அரிசனம் தான் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. ஒரு லிஸ்டே கொடுத்திருக்கிறேன். அதிலிருந்து ஒன்றிரண்டைக் குறிப்பிடுகிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. எம். முத்தையா]

சிவகிரி போலீஸ் ஸ்டேஷனில் ஒரு முறைகேடு நடந்திருக்கிறது. திருமலாபுரம் நெடுமாறனை அந்த போலீஸ் ஸ்டேஷனில் கூட்டிக்கொண்டு போய் அடக்குமுறை செய்திருக்கிறார்கள். கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போன செய்தி தெரிந்து அவருடைய மனைவி அன்னபாக்கியம் போலீஸ் ஸ்டேஷனில் போய் முறையிட்டிருக்கிறார். அப்படியும் விடாமல் நன்றாக அடித்திருக்கிறார்கள். பின் அவர் வீட்டுக்கு வந்த பின்னால் பார்த்ததில் அவருடைய காலில் பெருத்த காயம். இதில் நிறைய விவரம் இருக்கிறது; நான் மனு முழுவதும் படிக்கவில்லை. அந்த அம்மையார் இதுபற்றி கோர்ட்டில் கூட போய்ச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கூடப் பரிசீலனை செய்து பார்க்காமல் தள்ளிவிட்டார்கள். ஜாதி இந்துக்களால் தாழ்த்தப்பட்டவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், போலீசுக்கு பெட்டிஷன் போட்டால் தள்ளி விடுகிறார்கள்; போலீஸ் இலாகாவில் இந்தமாதிரி நடக்கிறது. அரிசனங்கள் என்றால் இவ்வளவு அலட்சியமாக நினைக்கிறார்கள் காவல்துறையினர்.

போலீஸ் இலாகாவை தவிர, மற்ற எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் சரியான அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள். ஹைகோர்ட்டிலும் ஜட்ஜ் பதவி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் போலீஸ் இலாகா தவிர, மற்ற எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர் போலீஸ் இலாகாவில் டிஸ்டிரிக்ட் சூப்பிரண்டு ஆப் போலீஸ் என்ற அந்தஸ்தில் தான் தாழ்த்தப்பட்டவர்கள் பதவியில் இருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சியிலும் இல்லை; இப்போதும் இல்லை. அதாவது மாநில அளவில் எங்களுக்கு என்று ஒரு ஆள் இல்லாததால் போலீஸ் இலாகாவினர் இப்படி நடத்துகிறார்கள். மாநில அளவில் இந்த இலாகாவில் ஒருவர் இருந்தால்தான் எங்களுக்கு நன்மை கிடைக்கும். அதுவரையில் போலீசார் இப்படித்தான் நடந்துகொள்வார்கள்.

சந்தேக கேஸ் என்றாலும், பொய் கேஸ் என்றாலும் எல்லாவற்றுக்கும் அரிசனங்களைத்தான் போலீசார் பிடிக்கிறார்கள். பெட்டிஷன் போட்டாலும் யாரும் கேட்பதில்லை; தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, அரிசனங்கள்மீது பொய் கேஸ் போட்டாலோ அல்லது சந்தேக கேஸ் போட்டாலோ அதை அமைச்சரவர்கள் தக்க முறையில் பரிசீலனை செய்து பார்த்து, எங்களுக்குப் பரிகாரம் தேடித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் அரிசன மானியத்தில் பேசவேண்டும். ஆனால் நேரம் இல்லை. இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

[திரு. மு. இராமன்]

தேர்வு பயிற்சி அளிக்க முடியாது. ஆகையால் பள்ளிகள் திறக்கப்படுகின்ற ஜூன் மாதத்திலிருந்தே பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற வகையில் பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில், தமிழ்நாட்டில் போக்குவரத்துக்கு இக்கட்டான இடங்களில் போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் அரிசன மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக 100 ஆசிரியர்கள் கொண்ட பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகை செய்திருக்கிறார்கள். அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் 80 லட்சத்திற்கு மேற்பட்ட இந்த மக்கள் இருக்கின்ற இந்த நாட்டில் 100 ஆசிரியர்கள் போதுமா என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் படிக்க அதிக வசதி இல்லாமல் போய்விடுகிறது. இதைக் கருத்திற் கொண்டு, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்த இடங்களில் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க முடியுமோ அங்கெல்லாம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வீட்டுவசதி வாரியம் என்ற தலைப்பின் கீழ் ஒரு கோடி ரூபாய்க்குமேல் இந்த ஆண்டு வகை செய்திருக்கிறார்கள். வீடுகளைக் கட்டிக்கொடுக்கும்போது அங்கே போதுமான பாதை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சாதாரணமாக, ஓடுகளைப் போடும்போது சாதாரண ஓடுகளை மாற்றி, ஆர்.சி. போட வேண்டும். புதிதாகப் போடும்போதும் ஆர்.சி. போட்டால் பயனுள்ளதாக இருக்கும். சற்றுச் செலவு கூடுதலாக இருந்தாலும் நல்ல முறையில் போட்டுத்தர வேண்டுமென்று இலாகா அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல காரியங்களை, தாழ்த்தப்பட்ட மக்களின் கருத்திற்கேற்ப செய்து கொடுத்தால் அந்த மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டுவார்கள்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் குடிநீர் வசதிக்காக, 1969-ல் 13 காலனிகளுக்குக் குடிநீர் வசதிக்காக கிணறு வெட்ட முடிவு செய்தார்கள். கிணறு வெட்டினால் நிச்சயமாகத் தண்ணீர் கொடுக்க முடியாது என்று கருதி



[திரு. மூ. இராமன்]

நீரேற்று முறையில் தண்ணீர் கொடுக்க ஒரு திட்டத்தை 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்து அரசுக்கு அனுப்பி, அதை நிதித் துறையில் பரிசீலனை செய்து, அவர்கள் அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லி, மீண்டும் கிணறுகளை வெட்டுங்கள் என்று சொல்லி, திருப்பி விட்டார்கள். அந்த இடத்தில், வீராணம் கிழப்பாதி அரிசன காலனி, இளங்காடு அரிசன காலனி, கெங்காரன்பாளையம் அரிசன காலனி, நரையூர் அரிசன காலனி போன்ற காலனிகளில் அரிசன நலத்துறை மூலம் 3,000 ரூபாய் செலுத்தி, போர் குழாய் போட்டு, கிட்டத்தட்ட 5 ஆண்டு ஆகிறது. இன்றுவரையில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, அரிசன நலத்துறை அமைச்சரவர்களும் முதலமைச்சரவர்களும் ஏழை அரிசன மக்களுக்கு உடனடியாகக் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு குடிநீருக்காக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தாலும், அவர்களுக்குக் குறைந்தபட்சம் 50 லட்சம் ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனைகள் விஷயத்தில் சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, பின்னர் 49.72 லட்சம் ரூபாயாக அது உயர்த்தப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும், தென்னாற்காடு மாவட்டத்தில் நில ஆர்ஜித வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவுக்குப் பணம் இல்லாததால், தேவையான மனைகள் வாங்கப்படவில்லை. ஆகவே, இப்போது 22 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை 50 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது கல்வி வசதி. மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், பொறியியலில் படிக்கின்ற மாணவர்கள், உழவியல் கல்வி கற்கும் மாணவர்கள் ஆகியோர்களுக்கு 3 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்க இந்த ஆண்டு வகை செய்யப்பட்டிருக்கிறது. எல்லாத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் கொடுக்கின்ற உதவித் தொகை போதாது என்பதால் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அது எல்லோருக்கும் கிடைக்கவில்லை. இந்தக் கடன் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதோடு அளவையும் சற்று கூட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விடுதிக் காப்பாளர்கள் நியமனம் செய்யப்படுவதில் பல தவறுகள் நடக்கின்றன. அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். விடுதிக் காப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள்

[திரு. மு. இராமன்]

வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். இன்னமும் அது கடைப்பிடிக்கப்படவில்லை. 45 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு நல்ல அனுபவமும், மாணவர்களைக் கண்டிக்கும் திறமையும், [illegible] இருக்கும். ஆகையால் 45 வயதுக்கு மேற்பட்டவர்களையே விடுதிக் காப்பாளர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு அரிசன மக்களும் மலை ஜாதி மக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் 9½ கோடி ரூபாயாகும். இது மிக மிகக் குறைவான ஒரு தொகை ஆகும். இந்தத் தொகையில் கல்விக்காக ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. மற்ற செலவுகளுக்கு, பொருளாதார மேம்பாடு, சுகாதாரம், வீட்டு வசதி போன்றவைகளுக்கு மீதித் தொகை செலவிடப்படுகிறது. இது மிக மிகக் குறைவான தொகையாகும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தொகை கூட முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல முடியும். அதற்கு நிர்வாகத்தில் ஏற்படுகிற சிக்கல்கள் காரணமாகும். இந்த நிர்வாகச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமானால் அரிசன நலத் துறை தனியாக இயங்க வேண்டும். இப்போது ரெவின்யூ இலாகாவும், அரிசன நல இலாகாவும் இரண்டறக் கலந்திருப்பதால் பல்வேறு கட்டங்களில் வேலைகள் சுலபமாக நடப்பதில்லை.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், அரிசன நலத் துறையிலே இருக்கக்கூடியவர்களில் பெரும்பகுதி ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆர்.டி.ஓ.வாக இருக்கக்கூடியவர்களை மாவட்ட நல அதிகாரிகளாக நியமிக்கிறார்கள். கிளார்க்குகள் கலெக்டர் ஆபீஸிலிருந்து நியமனம் செய்யப்படுகிறார்கள். அப்படி நியமனம் செய்யப்படுவதால் கிளார்க்குகள் முறையாக வேலைகளைச் செய்வதில்லை. வேலைக்கு வந்தாலும் அவர்கள் பல மாதம் லீவ் போடுகிறார்கள். அதுமட்டுமல்ல; இந்த இலாகாவுக்கு நியமனம் செய்யப்படுகின்றவர்கள் வேலையில் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை ஒழுங்காக நடப்பதில்லை.



 [திரு. ஆ. கு. சுப்பையா]

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதுவும் உரிய நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. கடந்த ஆண்டுக்கான உபகாரச் சம்பளம் இன்னும் சில மாவட்டங்களில் கொடுக்கப்படவில்லை. தொழில் படிப்புக்கு மாணவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. கடன் பெறத் தகுதி இருந்தும் வேலை சரியாக நடைபெறாததால், அவர்களுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைப்பதில்லை. வேலை ஒழுங்காக நடைபெறாததால், தொழில் கருவிகள் வாங்குவதற்கு ஒதுக்கப்படும் தொகை கூடத் தக்க சமயத்தில் கிடைப்பதில்லை. இந்தத் தொகையும் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த ஆண்டு பணம் இதுவரை வாங்கிக் கொடுக்கவில்லை; இப்போதுதான் வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்த மாதிரியான காலதாமதத்தைப் போக்க நாம் இந்த இலாகாவை, பஞ்சாயத்து அபிவிருத்தி இலாகாபோல் அமைத்து, இயக்குநர் இலாகா எப்படி தனிப்பட்ட அமைப்பாக இயங்கி வருகிறதோ அதைப்போல அரிசன நலத்துறை அதிகாரிகளைக் கொண்டு மேலிடத்திலிருந்து கீழ்மட்டம் வரையில் தனி இலாகாவாக இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால் தாமதத்தைத் தவிர்க்க முடியும். ஒதுக்கப்படுகின்ற தொகை முறையாகச் செலவழிக்கப்படும்; உரிய நேரத்தில் செலவழிக்கப்படும். இப்போது இந்தக் காலதாமதத்தினால் ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக இன்றையதினம் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஏதாவது சொன்னால், கலெக்டருக்கு எழுதுகிறார்கள். கலெக்டர் மாவட்ட நல அதிகாரிக்கு எழுதுகிறார். அதற்குப் பல மாதம் ஆகிறது. இம்மாதிரிக் காலதாமதம் ஏற்படுகிறது. இதை நீக்க வேண்டும்.

இன்றையதினம் அரிசன நல அதிகாரிகளாக நியமனம் செய்யப்படக்கூடியவர்கள் அரிசன மக்களோடு அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அரிசனங்கள்மீது அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் நாம் எதிர்பார்க்கின்ற பயனை அந்த மக்கள் அடைவார்கள். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தில் 154 பள்ளிகள் இருக்கின்றன; 44 ஆஸ்டல்கள் இருக்கின்றன. ஆக 198 ஸ்தாபனங்கள் இருக்கின்றன. வேலை செய்யக்கூடிய கிளார்க்குகள் 18 பேர்கள்தான். பாக்வெர்டு கிளாசை எடுத்துக்கொண்டால் 18 ஆஸ்டல்கள்தான் இருக்கின்றன; 4 கிளார்க்குகள் வேலை செய்கிறார்கள். இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும்.

அதைப்போல ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் 559 ஆசிரியர்களும் 44 வார்டன்களும் வேலை செய்கிறார்கள். மொத்தம் 603 பேர் பணியாற்றுகிறார்கள். இந்த 18 கிளார்க்குகளை வைத்துதான் அவர்கள் சம்பந்தப்பட்ட

திராவிட முன்னேற்றக் கழகம் தான். அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால்தான், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை வைத்திருக்கிற காரணத்தால்தான், தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரலாம் என்று இந்த அரசு சட்டம் வகுத்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கு, எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவரவர்கள் தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில்தான் உத்தியோகம் கொடுப்போம் என்று சொன்னார்கள். அப்படி, தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் என்றிருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் படுபாதாளத்திற்குப் போய்விடுவார்கள். அந்த நிலை அபாயகரமானது. அவர்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டால், தி.மு. கழகத்திற்கு அந்நிலை ஏற்படும். எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கொள்கையை ஆதரிப்பதாக இல்லையென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கடந்த 4, 5 ஆண்டுகளாக நமது டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு ஆற்றிவருகின்ற பணிகளை என்னைப்போன்ற தாழ்த்தப்பட்டவர்கள் பாராட்டாமலிருக்க முடியாது. அவர்கள் இந்த சாதி இழிவைப் போக்க, தன்னுடைய மகனுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தில் உள்ள பெண்ணைத் திருமணம் செய்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள்தான் சாதியைக் கடவுள் படைக்கவில்லை, மனிதன்தான் படைத்தான் என்று உத்திரப்பிரதேசத்தில் சொன்னார்கள். நமது பெருமதிப்பிற்குரிய சாந்தியடிகள் Varnasrama Dharma is a part and parcel of Hinduism என்றார். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா வழியிலே, பெரியார் வழியிலே வந்த டாக்டர் கலைஞர் அவர்கள், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் எடுத்து வருகின்ற முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட தலைவரைத் தமிழகம் போற்றியிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த மானியத்திலே நான் சில சலுகைகளைக் கேட்கும் முன்னால் டாக்டர் கலைஞர் அவர்களைப் புகழாமலிருக்க முடியாது. டாக்டர் கலைஞர் அவர்கள் மிகப் பெரிய தலைவர் என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.





Dr. Kalaignar, you are dedicating yourself heart and soul for the uplift of the downtrodden and the backward classes. Whatever may be the complex nature of the problems of the State, they could at your hands get simplified resulting in their solution.

Undaunted you have faced and won many a battle, political and other, never for a moment running away from realities or responsibilities. Crisis did not overcome you, but you revelled in them. History will give you a pre-eminent place as an eminent and popular Chief Minister and a pioneering social reformer.

என்று நான் டாக்டர் கலைஞர் அவர்களைப் புகழ்வதற்குப் பெருமைப்படுகிறேன்.

அதே சமயத்திலே என்னுடைய இந்தச் சமுதாயத்தைப் பற்றி ஒரு சில குறைகளைக் கூறி, அவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு—தொழில் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு—அதிலும் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, விவசாயக் கல்லூரியாக இருந்தாலும் சரி, மாணவர்களது செலவினங்கள் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட செலவினங்களை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். கடன் கொடுப்பதைவிட, செலவை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படுமானால் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். ஏழை எளிய மக்கள் செலவினங்களைச் சரிக்கட்ட முடியாமல் தொல்லைப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகிற செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாசர்பாடியில், தேசிகாநந்தபுரம் அரிசன சங்கம் ஒன்றிருக்கிறது. அதுமாதிரி எத்தனையோ சங்கங்களிருக்கின்றன. 1962-லேயிருந்தே மனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக ரூ. 13,000 கட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த நிலத்தைக் குடிசை மாற்று வாரியம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எந்த நோக்கத்திற்காக அவர்கள் ரூ. 13,000 கட்டியிருக்கிறார்களோ, அந்த நோக்கத்தில் அவர்களுக்கு வீட்டு மனையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட நலத்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1975 ஏப்ரல் 4

வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதிலும் 4, 5 பேர் லீவ் போட்டு விடுகிறார்கள்; 6 மாதமானாலும் வேலைக்கு வருவதில்லை. 18 ஹாஸ்டல் இருக்கிற பாக்வார்டு கிளாசில் 4 கிளார்க்குகள் வேலை செய்கிறார்கள். இவ்வளவு பெரிய அரிசன நல இலாகாவுக்கு இன்றையதினம் நியமனம் செய்யப்பட்டிருக்கிற கிளார்க்குகள் மிகவும் குறைவு.

அதைப்போல, இன்றையதினம் ஜாதியை ஒழிப்பதற்காக நம்முடைய அரசு தீவிரமாகக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இன்றையதினம் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுகிறது; தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைப் போல நம் மாநிலத்திலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். மகாராஷ்டிராவில் ஐந்தாயிரம் ரூபாய்க்கு நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறார்கள். அம்மாதிரி கொடுக்க வேண்டும். சும்மா இருநூறு, நானூறு ரூபாய்க்குத் தங்கப் பதக்கம், அல்லது 3 சென்டு நிலம்—குழந்தைகளுக்குப் படிப்பு வசதி என்று கொடுப்பதன் மூலமாக இது ஒரு கவர்ச்சி அளிக்கக்கூடியதாக நம் மாநிலத்தில் இல்லை என்பது என் கருத்தாகும்.

இம்மாதிரி கலப்புத் திருமணம் செய்துகொண்டு ஆணாக—இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துகிறார்கள் என்றால் அவர்களுக்கு அரசாங்கம் எல்லாவற்றிலும் முன்னுரிமை அளித்து—எல்லாவிதமான வசதிகளையும் அளிக்க வேண்டும்.

சிறு தொழில் நடத்த அரசாங்கம் வட்டி இல்லாக் கடன் கொடுத்து வருகிறார்கள். அதற்காக ஒதுக்கியுள்ள 10 லட்சம் ரூபாய் மிகக் குறைவான தொகையாகும். மேலும் ரூ. 250-ல் ஆரம்பித்து 15 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஒரு காய்கறிக் கடை வைக்கக்கூட ரூ. 250 போதாது. ஆகவே, குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாய்வரை கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(திரு. கு. காமாட்சி தலைமை.)

ப்ரஸ் வைக்க 15 ஆயிரம் ரூபாய் தருகிறேன், 3 பேர்களாக சேர்ந்து வைக்க வேண்டும் என்கிறார்கள், 3 பேர்கள் சேர்வது என்பது முடியாத காரியம். ஆகவே ஒரு நபராக இருந்தாலும் ப்ரஸ் வைக்க முன்வந்தால் 15 ஆயிரம் வரை கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



1975 ஏப்ரல் 4] [திரு. ஆ. கு. சுப்பையா]

இன்றையதினம் நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் ஆசிரியர்களுக்காகப் படித்துவிட்டு வேலையில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள். அரிசன நல இலாக்கா வேலையளிக்கிற ஸ்தாபனமாகவும் இருந்தாக வேண்டும். பஞ்சாயத்துகளில், பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில்—முனிசிபாலிட்டிகளில் இவர்களுக்கு வேலை கொடுப்பது கிடையாது. பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே, அரிசன நலத்துறை மூலமாக இவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பும் அளித்தாக வேண்டும். ஆசிரியர்கள்—மாணவர்களது விகிதாசாரத்தைக் குறைத்தாவது இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல இன்றையதினம் மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள்—புத்தகங்கள் ஆகியவற்றை வாங்கி ஆரம்ப காலத்திலேயே கொடுத்து விட வேண்டும்—பள்ளியாண்டு முடிகிறபோது கொடுத்துப் பயன் இல்லை. பள்ளி ஆண்டு துவங்குகிறபோது கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் கொடுக்கிற பணத்தில் பத்து இருபது தையல் மிஷின்களை மட்டும் வாங்கிக் கொடுத்து விட்டால் போதாது. இன்னும் அதிகமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அரிசன மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். மாணவிகள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கிறார்கள். அதில் பாசாவதும் கிடையாது. மறுபடியும் குடும்ப வாழ்க்கைக்கு வருகிறார்கள். அவர்களுக்குத் தையலைக் கற்றுக் கொடுத்து—மிஷினும் கொடுத்தால் குடும்பத்திற்கு வேண்டிய துணிமணிகளையும் தைத்துக்கொள்ளலாம். வெளியில் தைத்துக் கொடுத்தும் குடும்ப வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

தாழ்த்தப்பட்ட அதிகாரிகள்—சிப்பந்திகள் ஆகியவர்களை அடிக்கடி மாற்றுகிறார்கள்—கேள்வி முறையே கிடையாது. அந்த அளவுக்கு மாற்றுகிறார்கள். அவர்களை அனுதாப உள்ளத்தோடு பார்க்க வேண்டும். டாக்டர்களாக இருந்தாலும்—எஞ்சினியர்களாக இருந்தாலும்—சிப்பந்திகளாக இருந்தாலும்—தனி நபர்களுடைய விருப்பத்திற்கு, வேறு விஷயங்களுக்கு மாற்றுகிறார்கள். இவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு சரிவர அளிக்கப்படவில்லை. இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடைசியாக அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர அமைக்கப்பட்ட வாரியம் சிறந்த முறையில் பணியாற்றுகிறது. இதற்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் எங்கே போனது என்றே தெரியவில்லை. காங்கிரஸ் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து நாசமாகப் போய்விட்டன. அதுபோல இல்லாமல் இந்த வீடுகள் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. இதை இன்னும் வேகமாக நல்ல முறையில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் கருதி இதுபோன்றதொரு திட்டத்தை ஏற்படுத்தித் தந்தமைக்கு நான் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக அவருக்குப் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இந்தத் திட்டம் விரைவாகச் செயல்பட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய தடைகளையும் அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வீ. இராசகோபால்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு ஏறக்குறைய 11 கோடி ரூபாயை திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறது. அதற்கு உள்ளபடியே இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்த வேண்டும் என்கிற அடிப்படையில் இந்த அரசு செயல்பட்டு வருவதற்கு நான் என் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற இந்தச் சமுதாய மக்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு ஒரே வழி கல்வி ஒன்றுதான். அத்தகைய கல்வியைத் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக அளவில் கொடுத்துக்கொண்டிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

கல்வி பயின்று வேலைக்கு வரக்கூடியவர்களுக்கு இந்த அரசு 18 சதவிகிதம் கல்வித்துறைகளிலும், தொழில்துறைகளிலும் அளித்து வருகிறது. இதுபோல தனியார் கல்வித் துறைகளிலும், தொழில் துறைகளிலும் அளிக்கப்படுவதில்லை. தனியார் துறையிலும் இதுபோல 18 சதவிகிதம் வேலையில் ஒதுக்கித்தரவேண்டுமென்று—அதற்கான ஒரு சட்டத்தையே மாநில அரசு இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழக அரசு கிணறுகள் வெட்டுவதற்காக அரிசனங்களுக்கு மானியம் கொடுக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தவரை நிலமுள்ள அரிசனங்கள் சொந்தமாகச் சாகுபடி செய்கிறார்கள். நிலமற்றவர்கள் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். நிலம் உள்ளவர்களுக்குக் கிணறு வெட்ட இரண்டாயிரம் என்று கொடுப்பது போதாது. அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல பம்பு செட்டு போடுவதற்கு அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து மின்சார கனெக்ஷன் கொடுக்க வேண்டும். ஒருசில இடங்களில் மின்சார பம்புசெட்டு போட்டுக்கொள்ளக்கூடிய அளவில் அவர்கள் இருக்கிறார்கள். விண்ணப்பித்தும் இதுவரை மின்சாரம் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். இதைக் கண் கூடாகக் காண்கிறோம். ஆகவே உடனடியாக அவர்களுக்கு பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு திட்டத்தை வகுத்து டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய இழிவைப் போக்கவேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் எடுத்து வருகிற முயற்சிகளை எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களில் அர்ச்சகர்களாகவும் வரலாம் என்கிற முறையில் ஒரு சட்டத்தையே நிறைவேற்றினார்கள். நீதிமன்றங்களினால் அது செயல்படாமல் இருக்கிறது. அதற்காகவே மாநில சுயாட்சி வேண்டும் என்று நானும் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவில்களில் அறங்காவலர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் காலத்தில் இதற்காக ஒரு போராட்டமே நடந்தது. அடிபட்டு ரத்தக் காயம் அடைந்தவர்கள் பலர். ஆனால் சட்டத்தின் மூலமாகவே இத்தகைய மாறுபாட்டைக் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தவேண்டும் என்கிற அடிப்படை பாரம்பர்யத்தில் வந்திருக்கிற காரணத்தினால் இப்படிச் செய்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட, திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்தது என்று கேட்டால், உள்ளபடியே பொருத்தமாக இருக்கும். இன்றைய தினம் நாட்டிலே எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. இந்தியா முழுமைக்கும் எடுத்துக் கொண்டாலும், சமுதாயப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய கட்சி

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1975 ஏப்ரல் 4

இந்தச் சட்டமன்றத்திலே, இந்த மானியத்திலே பேசியவர்களை நான் கவனித்தேன். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் இதிலே அதிகமாக பங்கு வகித்தார்கள். சமுதாயத்திலேயிருக்கிற 6-லே 1 பங்கினரது நல்வாழ்விற்காகக் கோரப்படுகின்ற மானியத்தின்மீது விவாதம் நடக்கும்போது, பிரதம எதிர்க்கட்சியினரில் ஒருவரைக்கூட இப்பொழுது நான் பார்க்க முடியவில்லை. அவர்கள் இந்த அளவு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்மீது வைத்திருக்கிற அக்கறையைப் பார்க்கும்போது, இவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப்பட்டோர் நலனில் எந்த அளவு அக்கறை கொள்வார்கள் என்பதை வேதனையோடு எடுத்துச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இந்த விவாதத்தில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோரைச் சேர்ந்தவர்கள்தான் பேசினார்கள்.

எங்களுக்கு இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள், எங்களுக்கு இவ்வளவு சிரமங்களெல்லாம் இருக்கின்றன என்று அவர்கள் வாதாடுவதைவிட, உயர்ந்தவர்கள், உயர்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மேம்பாடு அடைந்தவர்கள், எழுந்து அவர்களும் எங்கள் சகோதரர்கள், அவர்கள் சமுதாயத்திலே சமமாக வாழவேண்டும், அவர்கள் முன்னேற்றத்திலேதான் நாட்டு முன்னேற்றமிருக்கிறது, நாட்டில் ஒரு பகுதி நைந்திருக்குமானால், அது நாட்டுக்கு நன்மையல்ல. ஆகவே, இதையெல்லாம் செய்யவேண்டுமென்று அரசிடம் வாதாட வேண்டியவர்கள் உயர்ந்தவர்களாக இருந்தால் நான் இன்னும் மகிழ்ச்சியுற்றிருப்பேன்.

முஸ்லீம்கள் தங்களுடைய மார்க்க முறைகளிலே, வழிபாட்டு முறைகளிலே, 1,400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நபிகள் நாயகம் அவர்களின் கூற்றுப்படி, மனிதனுக்கு மனிதன், பிறப்பின் காரணமாக வேற்றுமை காட்டுவதில்லை; அதுபோல், தான் செய்கிற தொழிலின் காரணமாகவும் வேற்றுமை காட்டுவதில்லை, என்று வைத்திருக்கிறார்கள்.

நான், மெக்கா நகரத்திற்குச் சென்றிருந்தபோது, எனது மிதியடியை சரி செய்ய ஒருவரிடம் கொடுத்தேன். அவரைப் பார்த்து நானே தடுமாறி விட்டேன். ஒரு மத குருவைப் போன்று தாடியெல்லாம் வைத்துக்கொண்டு இருந்த அவரைப் பார்த்து, மிதியடியைக் கொடுக்க மறுத்தேன். ஆனால், அவரோ என்னுடைய மிதியடியைப் பலவந்தமாக எடுத்து சரிசெய்து கொடுத்தார். எனக்கு முன்பாக நின்று தொழுகை நடத்துவாரானால், அதனை மிக்க மகிழ்ச்சியோடு செய்வேன். அவரோடு ஒரே தட்டிலே சாதத்தை வைத்து உண்பதையும் நாங்கள் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம். அப்படி தாழ்த்தப்பட்டவர்களை தங்களுடைய சகோதரர்களாக, ஆக்கிக் கொள்வதிலே என்ன தடையிருக்கிறது?



1975 ஏப்ரல் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

எத்தனையோ [illegible] பிரச்சினைகள் [illegible]படுகின்றன. அரிசனங்களை [illegible] மட்டும். இந்தச் சமுதாயம் உயர்ந்து விடாது. நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்து 27 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து இருக்கின்றனவென்று சொன்னால், இந்த நாட்டிற்கோ, நம்முடைய சமுதாயத்திற்கோ அவை நன்மை தருவதாக, பெருமை தருவதாக இல்லை என்றுதான் சொல்லவிரும்புகிறேன்.

பல பெரிய குடும்பங்கள் தாழ்த்தப்பட்டவர்களை அருகில்கூட நிற்க வைப்பது இல்லை. என் ஆற்காடு மாவட்டத்தில், முஸ்லிம் குடும்பங்களிலே பல அரிசனப் பெண்கள் வேலை செய்கிறார்கள். எந்தவித பாகுபாட்டையும் அக்குடும்பப் பெண்கள் காட்டுவதில்லை. அவர்கள் அரிசனங்கள் என்ற நினைப்பு கூட எங்கள் உள்ளங்களிலே ஏற்படுவதில்லை. அந்த அளவில் பழகிக் கொண்டிருக்கிறோம். அந்த முறைகள் எல்லா இடங்களிலும் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இவ்வளவு செய்தும்கூட, இன்னும் கூட அரிசனங்கள் முன்னேறவில்லையென்றால் அதற்கு என்ன காரணம் என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். அடிப்படையான கோளாறு என்ன? அரசாங்கத்திலே அவர்களுக்காக ரூ. 10, ரூ 11 கோடி ஒதுக்கினால் அவர்கள் முன்னேறமுடியாது. ரூ. 500 கோடிக்கு அறிக்கை தயார் செய்யப்படுகிற நேரத்திலே, ஆறிலே ஒரு பங்கு சமுதாயம் பல நூற்றாண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருப்பது உண்மையிலே இந்தப் புவியின் சொந்தக்காரர்களாக இருக்கிற அவர்களுக்கு ரூ. 11 கோடி ஒதுக்குவதென்பது நியாயத்தின் அடிப்படையில் இல்லை என்பதை முஸ்லீம் லீக் சொல்லித்தான் ஆகவேண்டும். இன்னும் பெரும் தொகை ஒதுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-30)

நான் முன்பு கூடப் பேசியிருக்கிறேன். கிராஷ் புரோகிராம் என்ற முறையிலே தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற ஒரு தனித்த வரியை விதித்து, அந்த வரியிலேயிருந்து பல கோடி ரூபாய்களைத் திரட்டி, இந்தச் சமுதாயத்திற்குச் செலவழித்து, இந்தச் சமுதாயம் மேம்பாடு அடையச் செய்தால், அது நாம் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடியவர்களாவோம் என்றுகூட நான் நினைக்கிறேன். இந்த மக்களிடத்திலேயே ஒரு இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் இருக்கிறது, நாம் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிற ஒரு நிலைமை அவர்களுடைய உள்ளத்திலே புகுந்து விட்டது, வாழையடிவாழையாக அவர்கள் உள்ளத்திலே வந்துவிட்ட எண்ணம் கிள்ளி எறியப்படவேண்டும். நானும் உயர்ந்தவன் தான் யாருக்கும் தாழ்ந்தவன் அல்ல என்ற எண்ணத்தை அவர்கள் உள்ளத்திலே

ஏற்படுத்தினால்தான் அவர்கள் மேம்பாடு அடையமுடியும். இந்த தாழ்வுமனப்பான்மையைப் போக்குவதற்கு அரசு செய்ய வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. நகரத்திலே பெரிய பெரிய ஓட்டல்கள் இருக்கின்றன, அந்த ஓட்டல்களிலே எல்லாம் கட்டாயமாக 20 சதவிகிதம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை சர்வர்களாக நியமிக்கவேண்டுமென்று சட்டம் போட வேண்டும். நான் ஒரு அரிசன் என்று அவர்கள் நெஞ்சிலே போர்டு போட்டுக்கொண்டு விருந்து பரிமாறினால் நான் அதைச் சாப்பிடுவேன் என்று சொல்லக்கூடிய நிலைமையில் புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் அரசு கொண்டுவர வேண்டும்.

தீண்டாமையைக் கையாளக்கூடாது. கையாண்டால தண்டனை என்றெல்லாம் போட்டிருக்கிறோம். அப்படியிருந்தாலும் இன்னும் நிலைமை மாறவில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயம் முழுவதையும் நாம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, அவன் தாழ்த்தப்படவில்லை என்று கருதப்படக்கூடிய முறையிலே பெரிய பெரிய ஓட்டல்களிலே 20 சதவிகிதம் பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களை நியமித்தால் தான் லைசென்ஸ் கொடுக்கமுடியும் இல்லாவிட்டால் கிடையாது. அப்படிச் செய்தால் தான் நீங்கள் கேட்டரிங் சர்வீஸாக இருக்கமுடியும் என்ற நிலைமையைக் கொண்டுவரவேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மேலேயே எனக்கு ஒரு குறை இருக்கிறது. என்ன குறையென்றால் ஒரு சிலருக்கு உத்தியோகம் போன்றவை கிடைத்துவிடுகிறது. வாழ்க்கையிலே அவர்கள் முன்னேறிவிடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் முன்னாள் அமைச்சராக இருந்த திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் போன்றவர்கள் வாழ்க்கையில் இப்போது முன்னேறி விட்டார்கள். இப்போது சின்னசாமி போன்றவர்கள் இருக்கிறார்கள், தம்பி தேவேந்திரன் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்த்து இப்போது நீ தாழ்த்தப்பட்டவன் ஒதுங்கியிருங்கள் என்று அப்படிச் சொல்லிவிடமுடியாது. அவர்கள் என்னதான் இருந்தாலும் அவர்கள் எந்த குடிசைவாழ் மக்கள் மத்தியில் இருந்து அவர்களாலே உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள், இன்றைக்கு அவர்கள் எல்லாம் குடிசையிலேதான் வசிக்கிறார்களா? அந்த மக்கள் மத்தியிலேதான் வாழ்கிறார்களா அவர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றிவிட்டார்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன். அவர்கள் தன்னை உயர்த்திக்கொண்டவுடனே அவர்கள் மேம்பாடு அடைய உதவியாக இருந்த மக்களை மறந்துவிட்டார்கள், குடிசை வாழ் மக்கள் மத்தியிலே அவர்கள் வாழ்வதில்லை, அவர்களுடைய சுகதுக்கங்களிலே பங்குகொண்டு அவர்களுக்கு தங்கள் உள்ளங்களிலே இடம் கொடுக்கவில்லை, அவர்களால் மேம்பாடு அடைந்துவிட்டு இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவவில்லை என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது, இனிமேலாவது அவர்கள் அப்படிச் செய்ய



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக வாழ்க்கையிலே முன்னேறிவிட்டவர்கள் அப்படிப்பட்ட முன்னேற்றமான வாழ்வை குடிசைவாழ்மக்கள் மத்தியிலேயும் ஏற்படுத்துவதற்கு அவர்கள் மத்தியிலே அவர்கள் வாழ்வதற்கு ஏற்றமுறையில் அவர்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு அது ஊக்கத்தையும் தெம்பையும் தர முடியும்.

நான் கிராம அதிகாரிகளைப்பற்றி சொன்னேன், அதனைப்பற்றி கிராம அதிகாரிகள் அசோசியேஷனிலே கண்டனத் தீர்மானம் என்னைப்பற்றிப் போட்டிருக்கிறார்கள் என்றுகூட கேள்விப்பட்டேன். சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் ஆற்றக்கூடிய பணிபற்றிக்கூட கண்டனத் தீர்மானம் வருகிறது. நான் ஒரு கல்லை எறிந்தேன், அவர்கள் ஒரு கல்லை எறிகிறார்கள், அதிலே ஒன்றும் எனக்கு ஆச்சரியம் இல்லை.' பல இடங்களிலே கிராம அதிகாரிகளாக முழுநேர ஊழியர்களாக, மாற்றுதல் பெறக்கூடிய முழுநேர ஊழியர்களாக, வில்லேஜ் முன்சீப்களாக, மணியக்காரர்களாக நியமியுங்கள். எங்களிடத்திலே அந்த ஊர் மக்கள் கைகட்டி நிற்கட்டும், இனிமேல் கிராம அதிகாரி பதவி காலியானால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலிடம் தரப்படும் என்ற சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகட்டும் திட்டத்திலே அதிகாரிகளின் கவனக்குறைவினாலே இரண்டு சமுதாயத்தினருக்கும் சிண்டு முடிகிற வேலையைச் சிலர் செய்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் ரத்தத்தோடு ரத்தமாக சகோதரர்களாக இருந்து வருகிறார்கள். அப்படியிருக்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய மதக்கோட்பாடு ஆகும். ஆனால் சில அதிகாரிகள் சிண்டுமுடிகிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிண்டுமுடிவது என்று சொன்னார்கள். அப்படியே சிண்டுமுடிவது என்றாலும்கூட சிண்டே கிடையாது, மொட்டையாக இருக்கிறது, ஆகவே எப்படி சிண்டுமுடியமுடியும் என்று கேட்கவிரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** எங்களுக்கு கிருதா விடுகிற முறையும் இருக்கிறது, அது சாத்தியம்தான்.

வீடுகளை ஊரின் மத்தியிலே கட்டிக்கொடுங்கள், வரவேற்கிறோம். 10 ஏக்கர், 20 ஏக்கர், நிலம் என்று இருந்தால் எடுத்து வீடுகளைக் கட்டிக்கொடுங்கள். புறம்போக்கு நிலமாக இருந்தாலும் வீடுகளைக் கட்டிக்கொடுக்கலாம். ஆனால்

காட்டினார்கள். அப்படிப் பார்த்துக்காட்டிச் சொன்ன பொழுது 99 இடங்கள், அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 இடங்கள், 100-க்கு 18, முடிந்து விட்டது. பிறகு அவர்கள் இங்கு சொன்னார்கள், நேற்றுகூட, ஜாதியிலே ஜாதி பிரிக்கக் கூடாது, தாழ்த்தப்பட்ட மக்களிலேயே பிரிக்கக் கூடாது, பின்தங்கிய மக்களிலேயே பிரிக்கக் கூடாது, நாதிநற்பவையாக நாம் அப்படிப் பிரித்துக் கொண்டு போராடுகிறோம் என்று. இன்றைக்கு நான் குற்றஞ்சாட்டுவது அப்படிப் பிரிப்பதே இந்த முதலமைச்சர்தான்.

அப்படிப் பிரிப்பதைப்பற்றி நான் ஆதாரம் காட்ட வேண்டுமென்று விரும்பினால், 99 இடத்தில் 18 இடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 100-க்கு 18 என்று பூர்த்தியாகிறது. ஆனால் அன்றைக்கு அவர் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. மற்றச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட்ட பதவிகளைப் பற்றிக் கணக்கிடும்பொழுது, கள்ளர் 6 பேர், மறவர் 5 பேர், அகமுடையார் 6 பேர், வன்னியர் 11, நாடார் 8, பிள்ளைமார் 1, முஸ்லீம் 7, செங்குந்தர் 3, கௌரா 3, படகா 1, வீரக்குடி வெள்ளாளர் 2, சலவைத் தொழிலாளி 2, பாக்கவ குல நத்தமான் 2, துளுவ வெள்ளாளர் 1, குறும்பர் 1, அப்பளார் 1, தொண்டமான் 1, வடுகர் 2, தேவாங்கர் 1, வலையர் 1, சங்கிலி 1, யாதவர் 4, சேனைத் தலைவர் 1, செட்டி பாலாஜி 1, வேட்டுவக் கவுண்டர் 1, மருத்துவர் 1, ஒட்டர் 1 என்று பின் தங்கிய மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. 99-இல் 69 பின்தங்கியவர்களுக்கு, ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18. ஏன் அவர்களுக்கு 69 என்று கேட்கமாட்டேன், அதைச் சொன்னால் அவர்களுக்கு ஏனோ அலர்ஜி என்று சொல்லலாம். ஆனால் 18-ஐ, 31-ஐ, 69 ஆக வரையறையில்லாமல் கொடுக்கும் அந்த சுவு இரக்கம் பெற்றுள்ள அந்தக் கை படு பாதாளத்தில் இருக்கின்ற அந்த மக்களுக்கு—அவர்களோடு சம்பந்தியாகி விட்ட பிறகும்—18-க்கு மேலே போகாமல் ஒரு 'கட்', கரெக்டாக 18 என்று போடுகிறீர்களே, அது நியாயந்தானா என்று கேட்கிறேன்.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் செய்தது, அரசு அல்ல. தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் மட்டும் பின்தங்கிய மக்களுக்குத் துருவித் துருவிப் பார்த்து, பட்டியலை வைத்து வைத்துப் பார்த்து குறும்பர், தொண்டமான், வடுகர், சேனைத் தலைவர் என்றெல்லாம் பார்த்துப் பார்த்து 69 இடத்தை, 31-ஐயும் மீறி கொடுக்க மனமிருக்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யும் அரசு, அகில இந்தியாவிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தலைவராக வேண்டுமென்று விரும்புகிற முதலமைச்சர் 18 என்று வரையறுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோடு கட்டுவதில் நியாயம் என்ன



இருக்கிறது? இதுதான் என்னுடைய நியாயமான கேள்வியாகும். அதையும் 18-க்கு மேல் 28, 30 என்று உயர்த்திக் கொடுத்திருந்தால் நான் இந்த அரசாங்கத்தையும் பாராட்டுவேன், முதலமைச்சரையும் பாராட்டுவேன். ஆனால் அன்றைக்கு அவர் பக்கத்தில் நான்காம் இடத்தில் அமர்ந்திருந்தேன், அதனால் வாய் மூடிக் கிடைப்பதைத் தவிர பேச முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகி நம்பர் ஒன் இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கிற கருணாநிதி அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அர்ச்சகர் அர்ச்சகர் என்று இங்கே பேசுகிறார்கள். நாம் கொண்டு வந்த சட்டம் என்ன தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆலயத்திலே அர்ச்சகராக இருக்க முடியாது என்று எக்ஸிஸ்டிங் சட்டமாக இருந்து அதை மாற்றி, எல்லா ஜாதிக்காரர்களும் அர்ச்சகராக சட்டம் இருக்கும்பொழுது ஏனோ தாழ்த்தப்பட்ட மக்கள் அர்ச்சகராக இருக்க முடியவில்லை என்று மாற்றி தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று போடப்பட்ட சட்டமா அது?

இந்த மன்றத்திலே பேசுகின்ற ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களையும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களையும் அத்தனை பேர்களையும் நான் கேட்கிறேன், அன்றைக்கு நாம் போட்ட சட்டம் பரம்பரை பரம்பரையாக ஆலயத்திலேயிருந்து அர்ச்சகம் செய்யலாம் என்ற முறையை மாற்றி யார் வேண்டுமானாலும் அர்ச்சகராக வரலாம் என்றுதான் போட்டோமே தவிர, செட்டியாரோ, நாயுடுவோ அல்லது வேறு பின்தங்கிய சமுதாய மக்கள் அத்தனை பேரும் அர்ச்சகராக வரலாம் என்றுதான் போட்டிருக்கிறோம்.

ஆலய ஆகம விதிகளின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் வரக்கூடாது என்று இருந்து அதை மாற்றி புதுச் சட்டம் போட்டு, தாழ்த்தப்பட்ட மக்களாக இருப்பவர்கள் அர்ச்சகர்களாக வருவதற்கே இந்தச் சுயமரியாதைப் பரம்பரை உணர்ச்சி கொண்ட அரசு சட்டமாக மாற்றியது என்று சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சி கொண்டிருப்பேன். இன்றைக்கு அந்த வார்த்தையை நான் கூறமாட்டேன். இதை இங்கு மட்டுமல்ல சட்டமன்றத்திலேயும் பேசுகிறார்கள். தேர்தல் காலத்திலேயும் செவி கொடுத்துக் கேட்க முடியவில்லை. ஏன், இங்கே வந்திருக்கின்ற அமைச்சர்கள் அர்ச்சகராக வர முடியுமா? என்னவோ உயர்ந்த ஜாதிக்காரராக இருக்கிற அறநிலைய அமைச்சர் அர்ச்சகராக வரமுடியுமா அல்லது சுகாதாரத் துறை அமைச்சரவர்கள் அர்ச்சகராக வரமுடியுமா அல்லது உயர்ந்த ஜாதிக்காரராக இருக்கின்ற கல்வியமைச்சரவர்களோ அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களோ அர்ச்சகராக வர முடியுமா? வர முடியாது.

அந்த லெட்டர் போட்ட சாந்தகுமாரி என்னிடம் இருக்கிறது. அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர் அல்ல, கையெழுத்துப் போடத் தெரியாதவர் அல்ல. தன் கைப்பட அவர் எழுதியிருக்கிறார்—

"திருத்தணி கோயில் தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்டுள்ள என் புகார் குறித்து எனது வாக்கு மூலத்தை என் சொந்தக் கையெழுத்து மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். 2—4—1973 அன்று திருத்தணி தேவஸ்தான பயணிகள் விடுதியில் என்னை அழைத்துக் கொண்டு போய் ஜெகதீசன் தங்க வைத்தார்—அங்கே கோயில் தர்மகர்த்தா சந்தேகித்த தாகத் தெரிகிறது. இதுகுறித்து ஜெகதீசன் ஆத்திரம் அடைந்தார். கோயில் நிர்வாகிகள் தர்மகர்த்தா மீது புகார் கொடுக்கும்படி ஜெகதீசனைத் தூண்டினார்கள். புகார் மனுவில் என்னையும் கையெழுத்துப் போடும்படி வற்புறுத்தினார்கள். நானும் கையெழுத்துப் போட்டேன். ஆனால் உண்மையில் நாங்கள் தேவஸ்தான பயணிகள் விடுதியில் தங்கியிருந்த 18-ம் எண் அறைக்கு யாரும் வரவும் இல்லை. என்னிடம் யாரும் தகாத முறையில் நடந்துகொள்ளவும் இல்லை. என்னைத் துன்புறுத்தவும் இல்லை. தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்ட புகார் அபாண்டமானது. இந்தப் புகார் பெரிதாக்கப்பட்டு தர்மகர்த்தா பழி வாங்கப்பட்டிருப்பதை அறிந்து மிகவும் வருந்துகிறேன். ஜெகதீசன் என்பவனுடைய கெட்ட நடவடிக்கைகளையும் திருட்டுத் தொழிலையும் உணர்ந்து நான் மனம் திருந்தி இப்போது என் கணவருடன், என் குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகிறேன். நான் நேரடியாக வந்து வாக்குமூலம் கொடுக்க முடியாத குடும்ப சூழ்நிலையில் இருக்கிறேன். மன்னித்தருளும்படி தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தர்மகர்த்தா மீது கொடுக்கப்பட்ட புகார் அபாண்டமான பொய் என்பதை தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்—சாந்தகுமாரி"

விசாரணைக்கு இந்த வாக்குமூலம் கொடுத்த பெண்ணையும் கூப்பிடவில்லை, ஜெகதீசனையும் கூப்பிடவில்லை, மற்றவர்களையும் கூப்பிடவில்லை. வழக்கைத் தொடுத்தது யார்? எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர். விசாரணை பண்ணுவது தீர்ப்புக் கூறியதும் அவர்தான். இதிலேயும் அப்பீலுக்கு வழக்கு மன்றம் செல்வார்களானால் சின்னசாமி கேஸ் போல்தான் இதுவும் போகும்.

காரணம் என்ன? அவசரம். ஏதாவது சொல்ல வேண்டும். பதவி நீக்கம் செய்யப்பட்டவரை சஸ்பெண்ட் செய்திருப்பதாக சரியாக விசாரிக்காமல் முதலமைச்சர் அவர்கள் இங்கு சொல்லிவிட்ட காரணத்தால், பின்னர் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்ற காரணத்தால் செய்ததாகச் சொல்லுகிறார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் பழி





வாங்குகிறார் முதலமைச்சர். எதிர்க்கட்சிக்காரர்கள் என்னென்னவோ சொல்லுகிறார்கள். அமைச்சர் ப.உ.ச. மீது சொல்லாத குற்றச்சாட்டா? மணலி கந்தசாமி சொல்லிவிட்டார் என்பதற்காக அந்தத் தாழ்த்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கிற நீங்கள் அமைச்சர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இப்போது இருக்கிற முதலமைச்சருக்கு நல்லெண்ணம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பால் பண்ணை பற்றிக் குறிப்பிடும்போது 6 லட்சம் ரூபாய் கடன் பற்றிக் கூறப்பட்டது. (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே 15 நிமிஷம் ஆகிவிட்டது. ஒரு மணிக்குள் முடித்து விடுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** ஒரு லட்சம் கடன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் கடன் எப்படித் தருகிறீர்கள்? எந்த வகையில் தருகிறீர்கள்? அரிசன நலத் துறை அமைச்சர் 10 சொசைடிக்குப் பணம் கேட்டார்—நான் அமைச்சராக இருக்கும்போது, காரம்பாடி சொசைடிக்கு நிதி உதவி கேட்டார். இலாகாவில் பரிசீலனை செய்யப்பட்டு பப்ளிக் டிப்பார்ட்மென்டில் எழுதுகிறார்கள்—

'தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இந்தப் பணத்தை
பெற்றுக் கொள்ளுங்கள்; அரசாங்கத்தில் நிதி இல்லை'

என்று.

சமூக நலத் துறைச் செயலாளர் எழுதுகிறார்—

I personally consider that the scheme for tre provision of loan from the nationalised bank is an eye-wash. So, Government should provide finance.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பணம் வாங்கி இதுபோன்ற திட்டங்களைச் செய்வது என்பது வெறும் கண்துடைப்பு. அவர்கள் கொடுக்க மாட்டார்கள்—

So, the Government should provide finance. Finance is really the problem. அதே வார்த்தை அல்ல. கருத்து இதுதான். நீங்கள் ஃபைலை எடுத்துப் பாருங்கள்.

[திரு. எ. கா. அப்துல் ஜப்பார்] [1975 ஏப்ரல் 4

வேண்டுமென்று [illegible] முஸ்லிம் சமுதாயத்திலிருந்துச் செலுத்தப்பட்ட [illegible] தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று [illegible] அதிகாரிகள் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். [illegible] தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிலம் கேட்கிறார்கள். [illegible] மாவட்டத்திலே அமைதியற்ற நிலைமை இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்திலே ஆலங்காயத்திலே [illegible] விஷயத்திலே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நின்று முடிக்க வேலை செய்கிற அதிகாரிகள் விஷயத்திலே [illegible] இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, [illegible] தர்க்காவுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது, அதற்குப் பக்கத்திலே ஒரு இந்துவுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது, அதை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார் — ஆனால், அது வேண்டாம் தர்க்காவுக்குச் சொந்தமான அந்த புனிதமான நிலம் தான் வேண்டும் என்று முஸ்லிம் சமுதாயத்தைப் புண்படுத்தக் கூடிய நிலையிலே செய்கிறார்கள். அது வேண்டாமென்று வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

வடபுலத்திலே [illegible] உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே சில பகுதிகளுக்கு [illegible] சேர்ந்த [illegible] அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு சென்றபோது தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்திலே டாக்டர் கலைஞர் உயரிய நோக்கம் கொண்ட [illegible] இருக்கிறார். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அநேக நன்மைகளைச் செய்கிறார்கள். இங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாகக் கட்சியில் டாக்டர் கலைஞரைப் போன்ற தலைவர்கள் இல்லை. அப்படியிருந்தால் எங்களுடைய உரிமைப் போராட்டத்திலே நாங்கள் நிச்சயமாக வெற்றிபெற்று தாழ்த்தப்பட்ட மக்களாக தொடர்ந்து இருக்கமாட்டோம் என்று டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார்கள். நாங்கள் கேட்டு வந்தோம்.

ஆகவே டாக்டர் கலைஞர் அவர்கள் வடபுலங்களிலேயும் இந்தமாநில அளவிலே மட்டுமல்லாமல் அகில இந்திய அளவிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் முன்னேற வழிவகை காண வேண்டும். நீங்கள் வாழவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

**திருமதி சத்தியவாணிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே சில முக்கியமான கருத்துக்களை நான் சொல்லவிரும்புகிறேன். அதற்காக எனக்கு அதிகக் குறுக்கீடுகள் இருந்தாலும் தாங்கள் அவைகளைத் தவிர்த்து அதிகமான நேரத்தைக் கொடுக்கவேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் இல்லாமல் பேசப்பாருங்கள். நேரம் அதிகமாக இல்லை, 10 நிமிடத்திலிருந்து 15 நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள். மாலையிலேயேறு சட்டமன்றக்கூட்டம் இருக்கிறது, ஒரு மானியம் இருக்கிறது. ஆகவே சீக்கிரம் முடித்தால்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கமுடியும். கான்ட்ரோவர்சி இல்லாமல் பேசுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** உண்மைக்குப் புறம்பானவற்றை நான் சொன்னால் குறுக்கிடலாம், ஆனால் உண்மையைச் சொல்லும்போது சில வேதனைகள் எழத்தான் செய்யும். ஆனால் குறுக்கிடக்கூடாது.

இந்த மானியத்திலே அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அமைச்சர் தந்திருக்கிற கருத்துக்களைப் பாராட்டினார்கள். இது ஒரு வழக்கம். நான் அமைச்சராக இருக்கும்போது இப்படித்தான் சில காரியங்கள் சென்ற ஆண்டு நடந்ததைவிட அதிகமாக இருக்கின்றன, இன்ன இன்ன திட்டங்களுக்காக இன்ன இன்ன ஒதுக்கீடுகள் செய்திருக்கிறோம் என்று இருக்கிறது, இங்கே பேசிய பல பேர்கள் எத்தனையோ ஆண்டுகளாக அவலநிலையில் இருந்த சமுதாயத்தின் துன்பங்களைப் போக்குவதற்கு அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நானும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். ஆனால் ஒதுக்குகின்ற நிதி போதாது, டாக்டர் கலைஞர் மற்றவர்கள் பாராட்டுவதைப் போல் இருந்தால், நல்ல அரசாக இருந்தால் இது போதாது என்று கொடுக்கலாம், டாக்டர் கலைஞர் போன்றவர்கள் கொடுக்கலாம், மனம் இருந்தால் மார்க்கம் உண்டு, ஆனால் யாருக்கும் செய்ய அவருக்கு மனம் இருக்கிறது, ஆனால் பரிதாபத்திற்குரிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ய மனம் இல்லை, அதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், அதை நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே இங்கே பேசுகிறார்கள், அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது அவர்கள் சொன்னார்கள், என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறீர்கள், நான் தாழ்ந்தப்பட்ட மக்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் எவ்வளவோ நன்மைகளையெல்லாம் செய்திருக்கிறேனே என்றெல்லாம் எடுத்துச் சொல்லி தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் உயர்தர பதவிகளுக்கு அளித்துள்ள அந்த ஒதுக்கீடுகளையெல்லாம் படித்துக்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 ஏப்ரல் 4

ஆகவே, அந்தப் பேர்களுக்கும் [illegible] அதைச் செய்தோமே தவிர, [illegible] பட்டியல் ஜாதி மக்களைப்போல ஒரு [illegible]. காரணம், [illegible] தேர்ச்சி உண்டு, [illegible] முறையிலே தேர்ச்சி உண்டு, [illegible] தேர்ச்சி உண்டு. அவர்கள் இப்படி நாட்டு மக்களின் மத்தியிலே சொல்கிறார்கள். நான் மனம் வருந்திக் கேட்கிறேன், இப்படிச் சொல்வதால் என்ன ஆகிறது? மற்ற ஜாதிக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள்? [illegible] அவர்களுக்குத்தான், பார்ப்பனர்கள், [illegible] அர்ச்சகர் பதவிகளும் அவர்களுக்குத் தான் என்று சொன்னதால் எங்கள் மீது மற்றவர்களுக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்படுகிறதே தவிர நன்மையையோ பார்த்தால் ஒன்றும் இல்லை.

ஆனால் எவ்வளவு தூரம் விந்தையாக நடக்கிறது? இதைப்பற்றியெல்லாம் சொல்வதற்கு, உங்களுக்கு நேரம் தாருங்கள். நான் அமைச்சர் [illegible] கேட்டுக்கொள்கிறேன், அவர்களுடைய நேரத்தையாவது கொடுங்கள், உறுப்பினர்கள் அந்த நேரம் பேசிவிட்டார்கள்.

ஜெகநீஸ்வரி என்ற பெண், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்—ரிபப்ளிகன் கட்சி—அவர் அம்பேத்கார் படத்தை இங்கே வைக்க வேண்டுமென்று ஏதோ அறிக்கைத் துண்டை வீசினார்கள். இந்த சட்டமன்றத்திலே இதுவரையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது கிடையாது. அம்பேத்கார் படத்தை வைக்க வேண்டுமென்று ஒரு பெண், அரிசன் [illegible] சேர்ந்தவர் ஒரு கோரிக்கையை அதே துண்டறிக்கையைப் போட்டார். என்ன செய்தார்கள் அவர்களை? ஒரு அமைச்சரின் [illegible] அவரை அடித்துக் கொண்டு போய் சாதாரண அறையிலே வைத்து, பிறகு அவை முன்னவர் அவர்கள் [illegible] இரண்டு வார சிறைத் தண்டனை என்று சொல்கிறார்கள். விசாரிக்கவில்லை. யார் என்று கேட்கவில்லை. நெடுஞ்செழியப் பாண்டியன் அன்றைக்கு நீதி கேட்ட பொழுது செத்துவிட்டான். ஆனால் அவை முன்னவர் நெடுஞ்செழியனே இரண்டு வாரம் தண்டனை கொடுத்தார். அது தொடர வேண்டாமா அவை முடிந்ததே?

ஆனால் அதற்கு, மாணவர்கள் துண்டறிக்கை போட்டதற்கு, அவர்கள் சில கோரிக்கைகளை வைத்துத் துண்டறிக்கை போட்டதற்கு, அந்த மாணவர்களை இந்த இடத்திலேயே மன்னிப்போம், மறப்போம், பெருந்தன்மைக்காரர்கள் தாம் என்று பேசி மாணவர்களை மன்னிக்கிறீர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் [illegible] ...றவர்கள் என்றால் அவர்களுக்கெல்லாம் [illegible]



1975 ஏப்ரல் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

என்றால், முதல் குற்றம் செய்த ஜெகநீஸ்வரியை அல்லவா மன்னித்திருக்க வேண்டும், அப்படிச் செய்யாதது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு காட்டுகிற தானத்தை அல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

அறங்காவலர்களை நியமிப்பது பற்றி எடுத்துக்கொண்டால் சட்டம் ஐந்தில் ஒன்று கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. எப்படிக் கொடுத்தார்கள்? கொடுத்த அறங்காவலர்களையாவது பழிவாங்காமல் விட்டார்களா?

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திருத்தணி அறங்காவலரைப்பற்றி தவறான கருத்தைச் சொல்லியிருக்கக் கூடாது. நடந்தது வேறு. ஆனால் அன்றைக்கு முதலமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கூறியது வேறு. 3-4-1973-இல் திருத்தணி அறங்காவலர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது, கற்பழித்ததாக ஒரு வழக்கு. 26—4—1973-இல் அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். 15 ஆம் தேதிக்குப் பிறகு அவர் அப்பீல் செய்கிறார். விசாரணை 30-6-1973-இல் நடக்கிறது. 12-7-1973-இல் தீர்ப்பு கூறப்படுகிறது. ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார்? 10-8-1973-இல் இந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள், யார் அந்த அறங்காவலர், ரோட்டில் நிறுத்தி அடிக்க வேண்டும், தம்பதிகளாக வந்தபொழுது கற்பழித்துள்ளார் என்றெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் எழுதியிருப்பதாகக் கூறினார்கள். உடனே நமது முதலமைச்சரவர்கள் கேட்டாரா? விசாரித்தாரா? ஆலயத்திலேயிருப்பவர்களையெல்லாம் கேட்டாரா? உடனே இங்கே சொல்கிறார், இந்த அறங்காவலர் பதவி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறார், சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். நடந்தது என்ன? 10—8—1973-இல் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். அவர் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர், நான் அவருக்கு எடுத்தேன், கவிழ்த்தேன் என்று தீர்ப்புக் கூறமாட்டேன், விசாரித்துத்தான் தீர்ப்பு கூறுவேன் என்று சொன்னார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் நடைபெற்றது என்ன? ஏற்கனவே, 23-7-1973-லேயே அவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கும் அறங்காவலரை ஒரு மாதம் கழித்து முதலமைச்சர் அவர்கள் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். பிறகு விசாரணை நடக்கிறது. விசாரணை என்றால் யாராவது கூப்பிட்டு விசாரித்தார்களா? அறங்காவலர்கள் என்னோடு இருந்தார்கள் என்று அந்த சாந்தகுமாரி சொல்கிறார். எந்தப் பெண் கற்பழிக்கப்பட்டதாகச் சொன்னார்களோ அந்தப் பெண்ணே இல்லையென்று சொல்லியிருக்கிறார். தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்ட புகார் பொய் புகார் என்று கூறியிருக்கிறார். அவர் கடிதமே எழுதிக் கொடுத்திருக்கிறார்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 ஏப்ரல் 4

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தரமாட்டார்கள். அது 'ஐ வாஷ்' தான் என்று சொல்லுகிறார்கள். அதிலே நான் எழுதுகிறேன்—

"I agree with the Social Welfare Secretary. C.M. may kindly decide."

'பகவதி பிட் சாந்தேதி' என்று பணம் கொடுங்கள் என்று முதலமைச்சரிடம் கேட்கிறேன்.

சி.எம்.-க்கு ஃபைல் போகிறது. அவர் என்ன சொல்லி இருக்க வேண்டும்? செயலாளர் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பணத்தை வாங்கி திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அது 'ஐ வாஷ்' என்று சொல்லுகிறார், ஆகவே, அரசிலிருந்து அதற்குப் பணம் கொடுங்கள்" என்று சொல்லியிருந்தால் அவரைப் பாராட்டி இருப்பேன். இறுதியாக செயலாளர் எழுதியதை எடுத்துக்கொள்ளாமல் பப்ளிக் டிபார்ட்மெண்டில் சொன்னார்களே, அந்த தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வாங்கிக்கொள் என்று சொல்லி விட்டார். எங்கே வாங்குவது?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் மனை என்றால் ஐயாயிரம் வீடு கட்ட ஒரு கோடி ரூபாய் ஆகும். மூவாயிரம் என்றால் ஐயாயிரம் வீடு கட்ட 1½ கோடி ரூபாய் ஆகும். பத்து லட்சம் வீடுகள் கட்ட எத்தனை கோடி ரூபாய் ஆகும்? பத்திரிகையில் அரிசனங்களுக்கு வீடுகள் என்று பெரிய விளம்பரம். அதைப் பார்த்துப் பார்த்து இருக்கிற மற்ற சாதிக்காரர்கள் எங்கள் பேரில் வயிற்றெரிச்சல்படுகிறார்கள். அப்படி உண்மையிலேயே செய்தாலும் பரவாயில்லை. இங்கே 10 வீடுகள், அங்கே 20 வீடுகள் என்று மொத்தமாக எல்லாம் சேர்த்தால் ஒரு வருஷத்திற்கு 5,000 வீடுகள் கட்டப்படுமோ என்னவோ தெரியாது. பத்திரிகையில் வருவது என்ன? ஒரு லட்சம் வீடுகள் இந்த ஆண்டு. எத்தனை காலத்தில் இது வரப் போகிறது? இப்படி விளம்பரங்கள் செய்கிறார்களே தவிர உண்மையிலேயே நல்ல காரியங்களைச் செய்கிறார்களா என்றால் இல்லை.

ஆரியசங்கரன் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர் லாரியில் அடிபட்டுச் செத்தார். லாரி வேண்டுமென்றே வந்து அவரை இடித்தது. ஆரியசங்கரன் வழக்கு, போலீஸ் வழக்கு என்னவாயிற்று? தனிப்பட்ட முறையிலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. போலீசாரும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். வேண்டுமென்றே லாரி வந்து மோதி சாகடித்தது. வழக்கு என்ன ஆனது?

நாகர்கோயிலில் இருக்கும் வக்கீல்—போலீஸ் ஸ்டேஷனில் சாதிப் பெயரைச் சொல்லிக் கேவலமாகத் தாக்கினார்கள். அதைக் கண்டித்து தலைவர் பொன்னப்ப நாடார் எல்லாம் சேர்ந்து ஊர்வலமாகச் சென்றார்கள். அந்த



1975 ஏப்ரல் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

வழக்கு என்னவாயிற்று? சாதிப் பெயரைச் சொல்லி அடித்த போலீஸ்காரர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஆதித் திராவிடரை அடித்ததற்கு வழக்கு இல்லை.

நிலம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னிடம் பல புகார்கள் இருக்கின்றன. கத்தை கத்தையாக இருக்கின்றன. நேரம் இல்லை. பொன்னேரி பக்கத்திலுள்ள தத்தமஞ்சிகொள்ளை காலனியில் மூன்று ஆண்டு காலமாக 15 ஏக்கர் நிலத்தைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்தார்கள். சிவானந்த முதலியார்—தி.மு.க., முதலமைச்சரைத் தெரிந்தவர்—புல்டோசரை வைத்து நிலத்தில் அடித்து அதிலே இருந்தவர்களை, உழுது பயிரிட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களைத் துரத்தியடித்து விட்டார். யாரிடத்தில் போய்ச் சொல்லுவது? அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு இல்லை. சரியான உயர்வு இல்லை. சட்டங்கள் ஒழுங்காகச் செயல்படுத்தப்படவில்லை.

அமைச்சர்கள் இன்றைக்கு சாதியைத் தூண்டுகிற அளவுக்கு சாதிக் கட்சியிலே துணிச்சலாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். சாதியை வளர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லும் அளவுக்கு நிலைமைகள் வளர்ந்து வருகின்றன. நேரம் இல்லாத காரணத்தால், சொல்ல வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருந்தாலும் இத்தோடு முடித்துக்கொள்கிறேன். கொடுத்த நேரத்திற்கு நன்றி.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல மானியம் ஏதோ இன்றைக்கு வந்தது நாம் இதை இன்றைக்கே முடித்துவிடுகிறோம் என்று சொல்கிற அளவிற்கு நாட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். அதேபோல் அப்படி இந்த மன்றத்தில் இருக்கிற யாரும் கருதமாட்டார்கள் என்றும் நினைக்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்ற ஒரு இனம் இந்த நாட்டில் இருக்கிறது என்று செம்ப்ஸ்போர்ட் கண்டறிந்து, மனிதனை மனிதனாக மதிக்காத மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, ஒரு சீர்திருத்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் எந்த வகையிலும் மற்றவர்களோடு சம அந்தஸ்து பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று ஒரு சீர்திருத்தத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆரம்பித்த சீர்திருத்தம் சைமன் கமிஷன் வருகைக்குப் பிறகு ஒரு உருவெடுத்தது. சைமன் கமிஷனோடு தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெருந்தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மூன்றுக்கு மேற்பட்ட மாநாடுகளை நடத்தி இந்திய துணைக்கண்டத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என் தாழ்ந்தார்கள் என்றும்

[திரு. என். இராசாங்கம்] [1975 ஏப்ரல் 4

தாழ்த்தியவர்கள் யார் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி தாழ்த்தப்பட்டிருந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் சுட்டிக்காட்டி இது அநியாயம், அக்கிரமம், இது ஒழிய வேண்டும் என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற அளவில் ஆங்கிலேயர்களின் கண்ணுக்கும், காதுக்கும், இவைகளை எட்டும்படிச் செய்தார்கள்.

அந்த அடிப்படையில் ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக பள்ளிக்கூடங்களைத் திறக்க ஆரம்பித்தார்கள். அரிசன நலப் பள்ளிகள் என்ற பள்ளிகளை, லேபர் இலாகா என்ற ஒரு இலாகாவை உருவாக்கி லேபர் பள்ளிகளைத் திறந்தார்கள். பெயர் மாற்றம் 50-ல் ஏற்பட்டது. இந்த நிலையில் இந்த சமுதாயத்திற்கு என்னென்ன தேவை, எவை எவைகளை நிறைவேற்றினால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மற்ற மக்களோடு சம அந்தஸ்து பெறமுடியும் என்று செம்ஸ்போர்ட் சீர்திருத்தம், ஸைமன் கமிஷன் சுற்றறிக்கை, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட போராட்டங்கள் இதற்கிடையில் மகாத்மா காந்தி அவர்கள் தன்னுடைய சுதந்திரப் போராட்டத்திற்கு இந்த மக்களுடைய துணை இருக்க வேண்டும் என்று, இந்த மக்களைக் காட்டி சுதந்திரம் வாங்குகிற ஒரு நிலையும் ஏற்பட்டது. இந்திய உபகண்டத்தின் நிலை லண்டன் பாராளு மன்றத்தில் ஊசலாடுகிறது, ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால் ஒழிய—பாகிஸ்தானால் ஏற்படுகிற தடை மற்றத் தடைகள் உள்ளவை—அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் சுதந்திரம் கிடைக்காமல் போனால் என்ன செய்வது என்று கண்ட காந்திஜி அவர்கள் உடனடியாக அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். இருவருக்கும் ஏற்பட்ட விவாதங்களின் அடிப்படையில் தான் தனித் தொகுதி ஏற்பட்டு பின்னர் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அவர்கள் உருவாக்கிக் கொடுத்த, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உருவாக்கிக் கொடுத்த அரசியல் அமைப்புச் சட்டப்படி அந்தந்த மாநிலங்கள் தனித்துச் செயல்பட வேண்டும்.

அப்படி தனித்து செயல்படுகிற விதத்தில் இருபத்திநாலு மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த என்னென்ன வகைகளில் அவை செயல்படுகின்றன என்று பார்க்கும்போது, காந்திஜீ அவர்களின் நினைவை வைத்தோ அல்லது டாக்டர் அம்பேத்காரின் குறிக்கோளை வைத்தோ அல்லது தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவர்களாக விளங்கிய பகுத்தறிவுவாதிகளின் கருத்துக்களை மனதில் வைத்தோ. எந்தெந்த மாநிலங்கள் என்னென்ன செய்திருக்கின்றன என்று பார்க்கும்போது இவர்கள் அனைவரும் சொன்ன கருத்துக்களை ஒன்றாக இணைத்து கல்வி சலுகைகள், பொருளாதாரச் சலுகைகள் இவற்றையெல்லாம் வழங்கி இவர்களின் நிலையை மேம்படுத்த பெரும்பாலான



1975 ஏப்ரல் 4] [திரு. என். இராசாங்கம்]

முயற்சிகளை மேற்கொண்டுள்ள மாநிலம் எது என்றால் அதுதான் தமிழ்நாடு மாநிலம் என்பதை புள்ளிவிவரங்கள் நமக்கு காட்டும்.

1974-75ம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர்—மலை ஜாதி வகுப்பினர் கமிஷன் அறிக்கையில் இவர்களின் நலனுக்காக அதிகப்படியாக பணம் ஒதுக்கியுள்ள மாநிலம் தமிழ்நாடு மாநிலம்தான் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. யார் எதைச் சொன்னாலும் சரி எதிர்த்துச் சொல்கிறவர்களை எதிர்த்து சொல்ல முடியாதா? சொல்ல வேண்டாம். நாம் சொல்வதல்ல வேதம். நாட்டு மக்கள் அனுபவிக்கிறார்களே அதுதான் வேதம். அவர்கள் புரிந்துகொள்வார்கள் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார், அன்புள்ளவர்கள் யார் அன்பில்லாதவர்கள் யார், முயற்சி எடுக்கிறவர்கள் யார் முயற்சி எடுக்காதவர்கள் யார், திறமையுள்ளவர்கள் யார் திறமை இல்லாதவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொண்டு அவர்கள் யாரை ஆதரிக்கிறார்கள் என்பது வேறு விஷயம்.

இந்த மாநிலத்தின் முதல்வர் அவர்கள் எந்த அளவில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சொல்ல வேண்டும். அம்மையார் அவர்கள் எனக்குச் சொந்தக்காரர். நான் அவர்களிடம் பணிவாக இருப்பவன். இன்றைக்கும் எங்களது உறவை யாராலும் பிரிக்க முடியாது. அரசியல் உறவு வேண்டுமென்றால் வேறுவிதமாக இருக்கலாம். அரசியல் சார்பில் கேட்காமல் சமூகத்தின் சார்பில் கேட்கிறேன். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக இருந்தவர்கள். ஏழு ஆண்டுகளாக இந்த மன்றத்தில் பொறுப்பேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில் நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். 18 இடம் தாழ்த்தப்பட்ட மக்களுக் [illegible] டுத்தார்கள். 69 பிற்பட்டோருக்கு, முற்பட்டோருக்கு [illegible] இடம், ஆக இப் [illegible] 89 இடங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 18 சதவிகி [illegible] என்றுதான் இருக்க வேண்டுமா அதற்கு மேல் நீளக் கூடாதா என்று [illegible] அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். நீளும். அவரே இந் [illegible] பட்டியலைத் தயாரித்திருந்தால் வேறுபாடு நிரம்ப இருக்கும். இது சர்வீ [illegible] மிஷன் செய்வது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** முதல் அ [illegible] ர் அவர்கள் செய்தால் இன்னும் அதிகமாக இருக்கும் என்று சொன்னார்க [illegible] சர்வீஸ் கமிஷன் எப் [illegible] றலாம்? 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு [illegible] ருப்பதை [illegible] மிஷன் மீறலாமா? அதை மீறியிருக்கும்போது ஏன் [illegible] ழ்த்தப்பட்ட [illegible] ள் [illegible] த்திலும் மீறிப் போகக்கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் முன்னேறிய [illegible] ளுக்கு உள்ளதை எப்படி பின்தங்கிய மக்களுக்கு சர்விஸ் கமிஷன் கொடுக் [illegible] என்று கேட்கிறார்கள். நல்ல கேள்வி. நாடு பாராட்டுகிற கேள்வி.

61706

**திருமதி சத்தியவாணிமுத்து:** நீங்கள் திருப்பி விடுகிறீர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களைப் பொறுத்து 18 சதவிகிதம் என்று கரெக்ட்டாக கொடுத்து வைத்திருக்கிறீர்கள். அந்தக் கமிஷன்தானே பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு 31 சதவிகிதம் என்றிருப்பதை ஏன் அதிகமாக்கியது? ஏன், எங்களுக்கும் அதிகம் கொடுக்கக்கூடாதா? எங்களுக்கு 18 சதவிகிதம், அவர்களுக்கு 31 சதவிகிதம் என்று போட்டுவிட்டு அவர்களுக்கு மட்டும் 69 இடங்கள் கொடுத்துவிட்டு எங்களுக்கு மட்டும் 18 என்றிருப்பானேன்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சர்வீஸ் கமிஷன் இந்த விவாதத்தில் வருகிற காரணத்தால் நான் ஒன்றை விளக்க விரும்புகிறேன். அவர்கள் தனி உரிமை பெற்று இந்த பங்கீட்டு முறையில் 18 சதவிகிதம் பெறுகிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம்தான் வழங்க முடியும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற முறையில் இடம் பெறும்போது 31 சதவிகிதம்தான். ஆனால் ஓப்பன் காம்பெட்டிஷனில், ஜெனரலில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் இடம் பெறலாம் தகுதி இருந்தால். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் கூட சில பேர்கள் ஒன்றிரண்டு இடங்களில் ஓப்பன் காம்பெட்டிஷனில் இடம் பெறுகிறார்கள். எந்த அளவிற்கு அவர்களுடைய போட்டி இருந்ததோ அதைப் பொறுத்ததே தவிர இடம் கிடைத்துவிட்டதால் அவையெல்லாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பதற்காகக் கொடுக்கப்பட்டது என்று கருதக் கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு 18 சதவிகிதம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம் ஒதுக்க வேண்டும். ஓப்பன் காம்பெட்டிஷனில் ஹரிஜனங்கள் யாருமே வராமல் போய் விட்டார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சர்வீஸ் கமிஷனை கேட்டு தெரிந்து விவரங்களை முடிந்தால் இங்கு அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** இதன் மீதான விவாதத்தில் நான் மேலும் இறங்க விரும்பவில்லை.

அடுத்தபடியாக, அதிமுக முதல்வர்தான் துரோகி என்று குறிப்பிட்டார்கள். அது அவருக்கு கிடைக்க வேண்டியதுதான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். முன்பு 9 சதவிகிதம் என்று கொடுத்து வந்ததை அண்ணா அவர்கள் ஒவ்வொரு இலாகாவினுடைய ரிக்கார்ட்டை எல்லாம் வரவழைத்து 16 சதவிகிதம் என்று கொடுக்க வேண்டுமென்று வைத்தியநாதன் குழு சிபார்சை, ஒரு வருடம் ஆன பிறகும் அது அமல்படுத்தாத காரணத்தால் 9 சதவிகிதம் என்றிருந்ததை 16 சதவிகிதமாக ஆக்கி அம்மையார் காலத்தில் 18 சதவிகிதமாக ஆக்கி 18 சத





விகிதம் வருகிறதா என்று கண்ணும் கருத்துமாக இருந்து சலுகைகள் வழங்கி வருகிறது இந்த அரசு. இந்த நிலை வேறு மாநிலத்தில் இருக்கிறதா என்பதை சுட்டிக்காட்டுங்களேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** ரிஸர்வேஷன் யார் செய்வது? ரிஸர்வேஷன் செய்வது மாநில அரசு இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு பேச்சுக்கும் குறுக்கிட முடியாது. அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த அம்மையார் இப்போது புதிதாக மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசி வருகிறார்கள். ரிசர்வேஷன் செய்வதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது. 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்றும், 26 சதவிகிதம் என்பதை 31 சதவிகிதம் என்றும் ஆக்கியது மாநில அரசாங்கம் என்பதை மறந்துவிட்ட அம்மையாருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சுக்குப் பேச்சு எழுந்து நிற்க முடியாது. நேரம் குறைவாக இருக்கிறது.

(திருமதி சத்தியவாணிமுத்து இருக்கையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பின்தங்கியவர்களுக்கு 25-ஆக இருந்ததை 31-ஆக, 5 அதிகமாக ஆக்குவதற்காக—இந்த 16 சதவிகிதம் என்பதை 2 சதவிகிதம் அதிகமாக்கி—அம்மையார் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள்—இது சந்தைக் கடை அல்ல—சட்டமன்றம்—பின்தங்கியவர்களுக்காக இருக்கும் 26 சதவிகிதம் என்று இருப்பதை 31 சதவிகிதம் என்று உயர்த்துவதற்காகத்தான், நீங்கள் 16 சதவிகிதம் என்பதை, 18 சதவிகிதம் அரிசன மக்களுக்கு என்று உயர்த்தினீர்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அது மிக மிகத் தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் பேசிய வடிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள்; தமிழகத்தில் 74 லட்சம் அரிசன மக்கள் இருக்கிறார்கள் என்று. பின்தங்கியோர் சதவிகிதம் என்ன? அதை எண்ணிப் பார்க்கவேண்டும். 74 லட்சம் பேர்களுக்கு 2 சதவிகிதம் என்றால், 2½ கோடி மக்களுக்கு பின்தங்கிய மக்களுக்கு 5 சதவிகிதம், இதை நாம் மறந்துவிடக்கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிகவும் ஆவேசமாகப் பேசினார்கள். அதற்கு அவசியம்கூட இருக்கலாம்.

அதற்காக 'சந்தைக்கடை' என்று நம்முடைய சட்டமன்றத்தைச் சொல்லலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சந்தைக் கடை அல்ல, சட்டமன்றம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மையார் அவர்கள் சொன்னார்கள், நேரம் குறைவாக இருக்கிறது, குறுக்கீடு வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அமைச்சர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து நின்று குறுக்கிட்டுப் பேசுவது பொருத்தமல்ல. முதலில் அமைச்சர் பேசி முடிக்கட்டும், அதற்குப் பிறகு தேவையானால், ஓரிரு விளக்கம் கேட்டுக் கொள்ளலாம். இப்போது குறுக்கீடு வேண்டாம்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி அதற்கு குற்றவாளியாக முடியும்? இந்திய அரசியல் சட்டத்திலே 'பிரபான்ஸ் டு தி ஷெட்யூல்ட் காஸ்ட் அண்டு அதர் பேக்வார்ட் கிளாசஸ்' என்று இருக்கிறது. அதை கவனித்துத்தான் ஆக வேண்டும். நம்முடைய உரிமை பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு நான் முதலில் வாதாட நிற்பேன். நம்முடைய உரிமையைப் பாதுகாக்க, அம்பேத்கார் அவர்கள் காட்டிய வழியில் நாம் நடந்து அதைத் தொடர்ந்து பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. நமக்கு வேண்டிய உரிமைகளை நாம் கேட்டுப் பெறவேண்டுமே ஒழிய மற்றவர்களுக்கு ஒன்றும் செய்யக் கூடாது என்ற முறையில் வாதங்கள் அமையக் கூடாது. அது நமக்கு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு சின்ன கிளாரிபிகேஷன். கனம் முதலமைச்சர் அவர்கள் பேக்வார்ட் கிளாஸ் என்று ஏன் இன்னும் சொல்கிறார், அவர்தான் சம்பந்தியாகிவிட்டாரே, ஏன் திரும்பவும் பேக்வார்ட் கிளாஸோடு சேர்ந்துகொள்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அடுத்து, அரசைப்பற்றி, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசினால் நாம் கவலைப்படவேண்டியது இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும், அவர்கள் கண்ணோட்டம் வேறு வகையில், வேறுபட்ட வகையில் இருக்கிறது. யாராவது வேறுபட்ட வகையில் சொல்வார்களானால், உள்ளபடியே அதற்காக நான் சொல்கிறேன், அதைப்பற்றி கவலை இல்லை. எங்களுடைய அபிப்பிராயம் அந்த மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். அப்படி நன்மை செய்தவர்களைப் பாராட்டாமல் வேறு விதத்தில் சொல்வார்களானால் இந்த நாடு மன்னிக்காது, ஏற்றுக்கொள்ளாது, பின் சந்ததியும் ஏற்றுக் கொள்ளாது.





நம்முடைய உறுப்பினர் வடிவேல் அவர்கள் சொன்னார்கள், திருவலஞ்சுழியில் வீடுகள் கட்டிக்கொடுக்கிறபோது, காங்கிரஸ்காரர்கள் காலத்திலும் கொடி கட்டினார்கள், விழா நடத்தினார்கள், இப்போது தி.மு.க. காலத்திலும் கொடி கட்டுகிறார்கள், விழா எடுக்கிறார்கள், ஆனால் ஓட்டு உங்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஓட்டைப்பற்றிய கவலை எங்களுக்கு இல்லை. யார் வந்தாலும், நாங்கள் இங்கே இப்போது கேட்டுக்கொண்டிருக்கிற மாதிரி கேட்டுக்கொண்டே இருப்போம். அதைப்பற்றி கவலை வேண்டாம். அன்று கூட முதலமைச்சர் அவர்கள் அந்த வீடுகளைத் திறந்து வைத்துப் பேசுகிற போது சொன்னார்கள், 'இந்த வீடுகளைத் திறந்துவிட்டு நான் சென்ற பிறகு இப்படிப்பட்ட அழகான வீடுகளின் சுவர்களில் "கருணாநிதி ஒழிக" என்று எழுதி வைப்பார்கள். அதைப்பற்றி கவலைப்படவில்லை இந்த அரசு.

மக்கள் மழை பொழிய வேண்டுமென்று விரும்புவார்கள், மழை பொழிந்து விட்டது என்று சொன்னால், அதற்குக் காரணமாக இருந்த மேகத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினால், மேகத்தைப் பார்க்க முடியாது. மேகம் அதுவரையில் நின்று கொண்டு இருக்குமா? மேகத்தைக் காணாததால் அதற்கு நன்றி சொல்ல முடியவில்லை என்று பின்னால் வருத்தப்படுவார்கள். ஆகவே, எங்களுடைய மனதில் பட்டதை இந்த மக்களுக்கு செய்யவேண்டுமென்ற அடிப்படையில் செய்துகொண்டு வருகிறோம். அதற்கு எந்த எதிர்ப்பு வந்தாலும் நாங்கள் செய்வோம். எனக்குப் பெயர் வேண்டுமென்பது இல்லை, நான் என்னுடைய பெயரைப்பற்றிக் கவலைப்படவில்லை' என்று சொன்னார்கள். இதைவிட என்ன சான்று வேண்டும் அவர்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு? அவையின் மூலமாக முதலமைச்சர் அவர்களே, உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், முதலமைச்சர் அவர்களே, நீங்கள் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டீர்கள். கல்லால் அடித்து முகமது நபியை விரட்டினார்கள், சிலுவையில் அறைந்து கிருஸ்துவ மதத்தினர் ஏசு என்று ஏற்றுக்கொண்டார்கள், மகாத்மா காந்தி அவர்கள் மத சீர்திருத்தம் பரப்பியதால் துப்பாக்கியால் கொல்லப்பட்டார்கள். முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு அந்தப் பெயரைப் பற்றி கவலை வேண்டாம். முதலமைச்சர் அவர்களே, இந்திய உபகண்டத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அந்த 78 லட்சம் குடும்பங்களுக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, பெயரைப்பற்றி கவலை வேண்டாம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ இடம் அளிப்பதற்காக, அந்த 78 லட்சம் குடும்பங்களுக்கும் மனைப்பட்டா வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே இன்று வரை கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது. இன்னும் பல லட்சக்கணக்கான மக்கள் அப்படியிருந்தும் மனைப்பட்டா பெறவில்லை. நம் காலத்தில் ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணத்தோடு, கட்டாயமாக அவர்களுக்கு முதலில்

[திரு. என். இராசாங்கம்] [1975 ஏப்ரல் 4

அந்த உரிமையை வழங்கவேண்டுமென்பதற்காக நடைமுறையில் அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சிகளை எடுத்துக்கொண்டேன். நிதிபற்றி அம்மையார் சொன்னார்கள். நிதி போன ஆண்டில் நீங்கள் வாங்கிக்கொடுத்து விட்டுப் போன தொகை 15 லட்சம். அதை நான் இடைக்காலத்தில் வந்து பெற்றுக்கொண்டேன்.

பல்லாண்டு காலமாக நூற்றுக்கணக்கான மனைக்கட்டு நிலங்களை எடுக்க முடியாத நிலையில் இருந்தது. ஆனாலும் அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு, அதற்கு பணம் கொடுத்து எடுக்க முடியாது இருக்கிற நிலைமையை மாற்றவேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டேன். மந்திரிசபை கூட்டத்தில் எல்லா அமைச்சர்களுக்கும் சில தொகை தேவைப்பட்டது. அவர்கள் எல்லாம் கேட்ட பிறகு, நான் கேட்டேன். என் குரல் கேட்பதற்கு முன் 9–10 அமைச்சர்கள் தங்களுடைய தேவைகளைக் கேட்டார்கள். நான் கடைசியாகக் கேட்டேன். அவர்கள் கேட்டதையெல்லாம் விட்டு விட்டு, அரிசன இலாகாவிற்கு 33 லட்சம் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். இப்படி கேட்டு வாங்க வேண்டியது நம்முடைய உரிமை. அப்படி வாங்கிச் செய்யவேண்டுமென்ற எண்ணம் நம்மிடத்தில் இருக்கிறது. அவர்களும் கேட்கிற தொகையைக் கொடுக்கிறபோது என்ன குறை இருக்கிறது. நான் கேட்டவுடன் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அந்த நிதியிலிருந்து எடுத்து, 16,000 மனைக் கட்டுகளை இப்போது விலைக்கு வாங்கி வழங்கப்பட்டு இருக்கிறது. கேட்டுக் கேட்டு வாங்கிச் செய்வது நம்முடைய கடமை. அதைத்தான் நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். அவர்களும் நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அந்த முயற்சிகளை வளர்ச்சி செய்கிற வகையில் இந்த அரசுக்கு உதவி செய்யுங்கள், அப்படிச் சொல்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது.

உறுப்பினர் வடிவேல் அவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அவர்களுக்குத் தெரியும். பகுத்தறிவு அடிப்படையில் வளர்ந்தவர்கள், முதலமைச்சரின் எண்ணம் தெரிந்தவர்கள். என்ன செய்கிறோம் என்று தெரிந்தவர்கள். இருந்தாலும், அரசியல் கட்சி. அதனால் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அரசியலைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர்களுடைய ஊருக்கும் செய்து இருக்கிறோம். 2-3 ஊர்களில் உங்கள் தொகுதியில் செய்து இருக்கிறோம். ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் கட்ட முடியாது. படிப் படியாகத்தான் கட்ட முடியும்.

1,100, 1,200 வீடுகள் ஒரு நேரத்தில் கட்டுகிறோம். அதை எல்லா [illegible] தொகுதிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பர்ஸ்ட் பேஸில் 10,000 வீடுகள் இப்போது கட்டுகிறோம். ஒரு தொகுதி மட்டும் என்று



1975 ஏப்ரல் 4] [திரு. என். இராசாங்கம்]

எடுத்துக்கொண்டால் சிலர் குறை சொல்வார்கள். ஆகவே, எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. வீடுகள் கட்டப்படுகிற நிலம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதாக இருந்தால், வீட்டு வசதி வாரியத்தால் கொடுக்கப்படும் வீடுகளும் அந்த சட்டத்திட்டத்தின் அடிப்படையில் அமையும். ஏற்கனவே அவர்கள் கட்டிக்கொண்டு இருக்கிற இடங்களாக இருந்தால் அந்த இடங்களில் சரியான முறையில் வீடுகள் கட்டப்பட்டு இருந்தால், அந்தமுறையில் கட்ட முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் கட்டினால் காலதாமதம் ஏற்படும். ஆனால் கட்டப்பட வேண்டுமென்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். முதற்கட்டமாக 10 லட்சம் வீடுகள் என்பது லட்சியம். முதலில் 10,000 வீடுகள் கட்டவேண்டுமென்று நடைமுறையில் இருக்கிறது. அப்படி செய்தாலும் நிலைமை மாறாது. ஏனெனில், நம் எண்ணிக்கைப்படி 21 வயது அடைந்து திருமணம் ஆகி இருப்பவர்களுக்குத்தான் வீடு என்கிற கணக்கு இருக்கிறது.

இந்த 78 லட்சம் குடும்பங்களில் இன்னும் எத்தனை பேர்கள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியவர்களாக இருந்தால் இன்னும் எத்தனை லட்சம் குடும்பமாகுமோ தெரியாது. இன்றைக்கு இருக்கிற கணக்கு இது தான். தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கிருந்தால் என்ன? அவர்கள் உயரவேண்டுமென்பதுதான் முதலமைச்சரவர்களின் எண்ணம். ஒரு பகுதியில், நூற்றுக்கு நூறு கம்யூனிஸ்டு தோழர்கள் இருக்கிற இடத்தில் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் முதலமைச்சரவர்களை எவ்வளவு ஆரவாரமாக வரவேற்றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். எங்கள் கட்சிக்காகச் செய்யவேண்டுமென்ற எண்ணமே கிடையாது, அதை விட்டு விட்டோம். ஆகவே, எங்கள் கட்சிக்காக செய்தோம் என்று எண்ணக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரி மாணவர்களுக்கு உதவிப் பணம் அளிப்பதிலே குறைந்த பட்சம் சென்ற ஆண்டு வரைக்கும் 411 பேர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. இப்போது ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கிறோம். ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கையை ஏற்றி ஏற்றி கொடுப்பது வழக்கம்தான் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் குறைக்கவில்லை; மாறாக, 400 என்று இருந்தது 1,000-க்கு மேல் என்று சொன்னால் இரண்டு மடங்குக்கு மேல் ஏற்றிக் கொடுத்திருக்கிறோம்.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்காக, அவர்கள் சட்டம் படித்து வெளியே வந்தவுடன் அவர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்க, ஒரு அறை எடுத்துக் கொள்ள, அவர்களுடைய வேலைக்கு ஆதரவான சில உபகரணங்களை வாங்கு[illegible] கடன்கள் கொடுக்க இந்த ஆண்டு ஆரம்ப கட்டமாக கொடுக்க [illegible]றோம்.

போய் கடவுளை கழுவி, கும்பிட்டு மற்றவர்களைப் பாருங்கள் என்று சொல்லக் கூடிய உரிமை கிடைக்கச் செய்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, மதுரைக் கோயிலிலே ராஜாஜி அவர்கள் மந்திரி சபையில் இருந்தபோது அவர் கோயிலை அரிசனங்களுக்கும் திறந்ததற்குப் பிறகுதான் என்னைப் போன்றவர்கள் உள்ளே போக முடிந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. வடிவேல் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கம்யூனிஸ்டு கட்சி இருக்கிற இடத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்துப் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் நாங்கள் போன இடங்களில் அவர்கள் எங்களை வரவேற்றார்கள். ஒவ்வொரு காலனிக்கும் சென்று அவர்களுக்கு என்ன தேவைகள் என்பதைச் செய்து வருகிறோம். திரு. வடிவேல் அவர்கள் தம் தொகுதிக்குப் போய்ப் பார்க்கட்டும். இதில் கட்சி வேறுபாடு இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, நாங்கள் பேசுகிற போது இடையிடையில் அமைச்சரவர்கள் குறுக்கிட்டார்கள். அப்படி நாங்களும் குறுக்கிட உரிமை உண்டு. நான் கம்யூனிஸ்டு கட்சி இருக்கிற இடத்தை கழக அரசு புறக்கணித்துவிட்டது என்று சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில் நான்காண்டு காலமாக நான் சொன்ன இடங்களில் ஒன்றில் கூட செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குறை. அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அதுதான் கஷ்டமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவரவர்களே, நாங்கள் இந்த வேலையை 8 மாதங்களாகத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் 4 ஆண்டு காலமாகச் சொல்லி வருகிறேன் என்கிறார்கள். அதற்கு என்ன செய்வது? ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களை எல்லா வகையிலும் முன்னேற்ற தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். கல்வியைப் பொறுத்தவரை, 840 பள்ளிகள் இருக்கின்றன. இவைகளில் 740 பள்ளிகள் தொடக்கப் பள்ளிகள், 83 நடு நிலைப் பள்ளிகள், 17 உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கின்றன.

(பிற்பகல் 1-30).





இவைகள் அனைத்தும் நல்ல முறையில் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அரிசன நலப் பள்ளிகள் பற்றி நான் உங்களுக்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ஆண்கள், பெண்கள் 86, 87 சதவிகிதம் பள்ளி இறுதி வகுப்பில் தேர்வு பெற்றிருந்து, முதன்மை இடம் பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல செவ்வாய்ப்பேட்டை பள்ளிக்கூட அமைப்பு சரியில்லை என்றாலும், ஆசிரியர்கள் பெரு முயற்சியுடன், மாணவர்கள் தேர்வில் நன்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல குளித்தலை. அதற்கு அடுத்தாற்போல திருச்சியிலே இன்னும் சில பள்ளிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. தேர்விலே அதிகமான மார்க்குகள் வாங்கியதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

செவ்வாய்ப்பேட்டையைப் பற்றி மாண்புமிகு துரைராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். செவ்வாய்ப்பேட்டையில் அரிசன நல உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதில் கழிவிடம் இல்லை என்று சொன்னார்கள். 3 மாதத்திற்கு முன்னால் நான் அந்தப் பள்ளிக்குச் சென்றேன். அங்கே ஆசிரியர்கள், மாணவர்களைப் பார்த்துவிட்டு, உடனடியாக நம் இலாக்கா இயக்குனர் அவர்களை அழைத்து அங்கு வேண்டிய வசதி செய்தாக வேண்டுமென்று சொன்னேன். இப்பொழுது அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி, கழிவிடம், குடிதண்ணீர் வசதி போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பித்தாகி விட்டது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் தொகுதி தான். நான் கேள்விப்பட்டு அங்கே போனேனே தவிர, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய தொகுதியில் இந்தெந்த குறைகள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. இப்பொழுதுதான் சொன்னார். அவருடைய கடமை சொன்னார். அதற்கு முன்பே செய்து விட்டோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் மேல் ஜாதி மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்திலிருந்து கிடைக்கிற சலுகைகள் விகிதாச்சாரம் சரியாகயில்லை என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கல்விச் சலுகைக்கு 30, 38 லட்சம் கொடுக்கிறார்கள். பாக்கி பணம் நாம் செலவழித்தாக வேண்டும். அதுபற்றி பொதுவாக குறிப்பிட்டுவிட்டார்கள். தனியாகக் குறிப்பிட வேண்டுமானால் தனியாக விவரம் தருகிறேன்.

இது மருத்துவத் துறையில் இருக்கிறவர்களுக்கு இனிமேல் வரலாம். ஸ்டான்லி, கே.எம்.சி., போன்ற மருத்துவமனைகளில் படிக்கிறவர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரைக்கும் இந்த அரசு எந்த வகையிலும் அவர்களுடைய படிப்பில் கவனம் இல்லாத அளவிற்கு, அவர்களுக்கு வருத்தம் கொடுக்கிற அளவிற்கு அவர்களை விட்டு விடவில்லை. மாணவர் விடுதிகள் அதிகமாக வேண்டுமென்ருர்கள். 1974-75ல் ஒதுக்கிய நிதியைக் கொண்டு 400 பேர்களுக்கு மேல் இடம் கொடுத்திருக்கிறோம். ஜனவரியில் சேர்ந்த மாணவனுக்கு மார்ச் மாதத்தில் கூட விடுதியில் இடம் இல்லை என்ருர்கள். இரண்டு விடுதிகள் சென்னையில் கட்டி திறக்கப்படுகிற நிலையில் இருக்கின்றன. இரண்டும் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டப்படுகிறது.

சட்டசபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு அரிசன காலனி என்று இருந்தால் அவர்கள் இருக்கிற இடம் மோசமானது, அங்கே போவதற்கு பாதை வசதி இல்லை, மின் விளக்கு வசதி இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை, பள்ளி இல்லை, அங்கே 100 அரிசனங்கள் வீடுகள் இருந்தால் அவர்கள் ஒன்று கூடி ஒரு காரியம் செய்வதற்கு வசதி இல்லை, இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் நீக்கி இந்த வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம் கட்டிக் கொடுக்கிற வீடுகளில் வசதிகள் அமைந்திருக்கின்றன. தொழிற் கருவிகள் கொடுக்கப்படுகின்றன. கறவை மாடுகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரு அரசு செய்கிறதென்ருல் இவைகளைச் செய்வதற்குரிய யோசனைகளை, திட்டங்களை வழங்கியது முதல்வரவர்கள். அவர்கள் இந்த மக்களுக்கு வழி காட்டியாக இருக்கிருர் என்பதை இருதயம் படைத்த எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சாபீஸ் நடத்த கடன் கொடுக்கிறோம். இப்படி கடன் கொடுத்து வருவது புதிதல்ல, அம்மையார் காலத்தில் நடந்து வந்தது என்ருர்கள்.

மெடிகல் ஸ்டோர் வைத்து பிழைக்க கடன் கொடுக்கப்படுகிறது.

சைக்கிள் ஸ்டோர் வைக்க அதிக தொகையைக் கேட்டார்கள். இதை அரசாங்கத்தில் கவனித்து முதலமைச்சரைக் கலந்து செய்யலாம். இந்த வகையில் கொடுக்கிற தொகை அதிகமில்லையென்று சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனல், கறவை மாடுகள் தேவையில்லையென்று சொல்வது பொருத்தமில்லை. கிராமங்களுக்கு ஏற்றது அது தான். நகர்ப்புறத்தில் தொழிற்கூடங்கள் கேட்கிற மாதிரி, கிராமங்களில் கறவை மாடுகளைத்தான் விரும்புவார்கள், அங்கத்தினர்களுக்குத் தெரியாததல்ல. அதையும் நாம் செய்து வருகிறோம்.





சமுதாய அந்தஸ்தைப் பற்றி விளக்கிஞர்கள். டாக்டர் அம்பேத்காருடைய வாதமே நம்மை தூரத்திய இந்து மதத்தை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது. நம் அரசாங்கத்தின் கொள்கை, அது தூரத்திஞலும், நாம் விடாது பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதுதான். நமக்கு ஒரு அந்தஸ்து வேண்டும், அதற்காகத்தான், அப்படி அந்தஸ்து வேண்டுமென்பதற்காகத்தான் அம்மையார் அவர்களும் சேர்ந்துதான் அர்ச்சகர் வேலைக்கு அரிசனங்களும் உரிமை உடையவர்கள் என்பதற்கு சட்டம் தீட்டிய போது அதை ஆதரித்துப் பேசிஞர்கள்.

இன்றைக்கு அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆலயங்களைப் பொறுத்த வரை சம்பந்தமில்லையென்று சொல்கிருர்கள். மற்றவர்களைப்பற்றி இந்த வாசகமே வராது. கோயில்களில் புக முடியாதவஞக இருந்தவன், அரிசனன்; வேறு ஜாதிக்காரர்கள் அல்ல. தீண்டாதவர்கள் என்ற பெயரை உடையவர்கள் நாம்தான். 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் ஷெட்யூல்ட் காஸ்ட் என்று அதாவது தாழ்த்தப்பட்டோர் என்ற பட்டத்தை நமக்கு வழங்கியது. அதற்கு முன்னுல் நாம் தீண்டாதவர்கள். நாம் கோயிலைத் தீண்டக்கூடாது, மரத்தைத் தீண்டக் கூடாது, கிணற்றைத் தீண்டக் கூடாது, மனிதனைத் தீண்டக் கூடாது. இப்படி அல்லோலகல்லோலமான தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மகன் அர்ச்சகர் வேலைக்கு உரிமை உடையவன் ஆகிருன் என்று சட்டம் இயற்றப்படும் போது இது மற்றவர்களைச் சாரும் என்று சொல்வது எப்படி பொருத்தமாகும்? மற்றவர்கள் கோயிலுக்குள் என்றைக்கும் போய்க் கொண்டிருந்தவர்கள் ஆயிற்றே. ஆகவே, அந்த வாதம் சரியல்ல. வேண்டுமென்ருல் ஒன்று, வேண்டாமென்ருல் ஒன்று என்று இருக்கக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அர்ச்சகர்களைப் பற்றிச் சொன்ஞர்கள். இது விஷயமாக இன்றைக்கு யாருக்கு இந்த வேதங்களை ஓதத் தெரியுமோ அவர்கள் அர்ச்சகர்களாக இருக்கவேண்டுமென்ற முறையில்தான் நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசை [illegible]ப்படுத்திஞர்களேயொழிய அரிசனங்களுக்கு மட்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, நான் சொன்னது கோயிலில் முதலில் போக முடியாமல் இருந்தவன் இவன். இவனுக்கு முதலில் சேர்க்கக் கூடிய அந்த நிலையை உருவாக்கி, இரண்டாவது கட்டமாக அங்கே

ஆகவே, இப்படி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி கல்வியானாலும் சரி, பொருளாதாரத் துறையில் முன்னேற்றமானாலும் சரி, அல்லது மற்ற வசதிகளானாலும் சரி, எல்லா விதத்திலும் தமிழக அரசு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதற்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.

கேரளாவில் கூட சென்ற ஆண்டு 1974-75 பட்ஜெட் வந்திருக்கிறது. அதில் 2 கோடி 16 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், மக்கள் தொகை இதைவிடக் குறைவாக இருக்கலாம். இருந்தாலும் நாம் 10 கோடி சொச்சம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே வீடு கட்டிக் கொடுத்த பிரச்னை வந்தது. நானும் நமது கம்யூனிஸ்ட் கட்சித் தோழரும் பார்த்தோம். அதைச் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். இருந்தாலும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அங்கே வீடுகள் கட்டுவது வெறும் இந்த அரிசனங்களுக்கு மட்டுமல்ல. இந்த அரிசனங்கள் வேறு. அங்கே வீக்கர் செக்ஷன் பொருளாதாரத்தில் குறைந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலை ஜாதியினர், அதற்கு சம்பந்தமானவர்களை சேர்த்து வீக்கர் செக்ஷன் என்கிறார்கள். அந்த வீக்கர் செக்ஷன் என்ற பெயரில கட்டியிருக்கிறார்கள். அந்த மந்திரி இங்கே வந்தார். திரு ஈஸ்வரன். அவரை அழைத்துக் கொண்டு போய் காட்டுப்பாக்கம் வீடுகளை காட்டினோம். அப்பொழுது சொன்னார்கள். நாங்கள் வீடு கட்டினோம் பெயருக்காக. இப்பொழுது பார்த்த வீடு மாதிரி இல்லை என்று சொன்னார்கள். சட்ட மன்றத்திற்குப் போய் சபாநாயகரை வைத்துக் கேட்டோம். என்னமோ, ஏதோ எப்படி எப்படியோ போய் விட்டது விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். அவர் சொன்னார். இது தனிப்பட்ட ஹரிஜனங்களுக்காக அல்ல. இப்ப வீக்கர் செக்ஷன் என்ற அந்த தலைப்பின்கீழ் கொடுத்திருக்கிறோம். இப்படி உங்களைப் போல இந்த அரிசனங்களுக்கு என்று அல்ல என்று சொன்னார். அமைச்சர் அவர்கள் காட்டுப்பாக்கம் சென்று பார்த்தார்கள். இதை பார்த்த பிறகு இவை சிறப்பான முன்னேற்ற திட்டங்கள் உங்களுடையது என்றார். 31—3—1975-ல் வந்திருக்கின்ற பத்திரிகைகளில் தமிழ் நாட்டை பின்பற்றி நடங்கள் என்று மற்ற மாநிலங்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள்.

அதையெல்லாம் நான் இங்கே அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. தமிழ் நாடு ஆற்றுகிற பணிகள், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கியுள்ள தொகை இனங்களில் எந்த மாநிலமாக இருந்தாலும், இதற்கு முதலிடம் கொடுத்து தான் மற்ற மாநிலங்கள் இருக்கும் என்ற நடைமுறையைப் பார்த்துள்ளோம். மேலும் செய்ய வேண்டுமென்று கேட்பது உங்கள் கடமை. அரசாங்கம் எதையெல்லாம் ஏற்றுக்கொண்டு முதல்வரிடம் எந்தெந்த இடத்தில்





பள்ளங்கள் இருக்கிறதோ, அதை மேடாக ஆக்குவதற்கு, சமமாக்குவதற்கு, அவரை அவ்வப்பொழுது கேட்டு, அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைக் கூறி, நீங்கள் அனைவரும் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிறீர்கள். இதைவிட அதிகம் கேட்ட உள்ளங்கள். அதைக் குறைக்க உள்ளபடியே மனம் இடம் தராது என்பது எனக்குத் தெரியும். ஆகவே வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று, இந்த மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** அம்மையார் இங்கு இருக்கும்போது கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்களா? நான் கேட்டால் கொடுத்திருப்பேன் என்றார். நான் இப்பொழுது ஆதாரத்தோடு சொன்னேன். இங்கிருந்து கேட்டு கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கமும் கொடுக்கவில்லை. 1971 சென்சஸபடி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமைச்சர் பேசிய பிறகு நீங்கள் அவருக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. ஒன்றிரண்டு விளக்கங்கள் கேட்கலாமே தவிர, அவர் பேசியது ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை குறிப்பிட்டார்கள். தெளிவு பெறுவதற்காகக் கேட்கிறேன். அவருடைய உரை புஸ்தகமாக தரப்பட்டிருக்கிறது. அதில் அரிசனங்கள் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை ஒட்டு மொத்தமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் அடுத்த பக்கத்தில் மத்திய அரசு ஓரளவு உதவி பெற்று படித்தவர்கள் எண்ணிக்கை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அவரிடத்தில் விளக்கம் கேட்டேன். அதிலே தமிழ் நாட்டிலே குறிப்பிட்ட மொத்த எண்ணிக்கையில் பழங்குடி மக்கள் கல்லூரியில் பயன்பெற்று இருப்பவர் ஒருவர் கூட வரவில்லை. மத்திய அரசு ஓரளவு உதவி பெற்று படித்தவர்கள் என்பதிலே இந்தப் பழங்குடி மக்கள் கல்லூரியில் படித்தவர்கள் எண்ணிக்கை வந்திருக்கிறது. அதற்கு என்ன விளக்கம்? ஒட்டு மொத்தத்திலிருந்து பிரித்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே, அங்கே வராதது இங்கே எப்படி வந்தது என்று கேட்டேன். அதற்கு விளக்கம் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசியது ஒவ்வொன்றிற்கும் விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால் நல்லதல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** பழங்குடி மக்கள் முன்னேற்றம், அருந்ததியர் முன்னேற்றம் பற்றி அமைச்சர் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆகவே . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மானியத்தில் பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் என்னைப் பற்றி குறிப்பிட்டிருக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 4

பின்தங்கிய மக்களுக்காகத்தான் அதிக ஒதுக்கீடாகச் செய்யப்படுகிறது என்று இங்கே திருமதி சத்தியவாணிமுத்து அவர்களால் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்படுகிற வாதம் முறையானதுமல்ல சரியானதுமல்ல; நியாயமானதும் அல்ல.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 4½ கோடி மக்களில், 2½ கோடி மக்கள் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; 80 லட்சம் பேர் ஆதிதிராவிடர் மக்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் இன்றைக்குச் சலுகைகள் செய்யப்படுகின்றன.

அதிலும் பின்தங்கிய மக்கள் சமுதாயம் கேட்பாரற்றுக் கிடந்த நிலையில்—காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் அப்போது—இந்த அவையிலேயே பின்தங்கிய மக்களுக்கென தனி இலாக்கா வேண்டுமென்று கேட்டிருந்த கோரிக்கை—இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் உருவாகியது. அதைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பின்தங்கிய மக்களுக்கு உள்ள அதே விகிதங்கள் 80 லட்சம் மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்பது சரியானது அல்ல. ஆனால் ஒன்று சொல்வேன். பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைவிட அதிகமான பணம்தான்—நிதி ஒதுக்கீடுதான்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

இந்த நிதி ஒதுக்கீடு அந்நிதியில் ஆண்டுக்காண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்காக மாத்திரம் 1974-75 இல் நான்கு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

"எவ்வளவு வீடு கட்டுனீர்கள்? எவ்வளவு வீடு கட்டினீர்கள்?" என்று கேட்கிறார்கள். ஒரு லட்சம் வீடு கட்டுவதற்கு இவ்வளவு செலவானால் பத்து லட்சம் வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு ஆகும்? என்று கேட்கிறார்கள். நல்ல கேள்விதான்.

ஆனால் இந்தியா 1947 இல் விடுதலை பெற்றதும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாதாடுகிறார்களே—பேசினார்களே அவர்கள்—1947 இல் ஓராண்டு காலத்தில் மட்டும் விடுதலை விழாவிற்காக செலவிட்டதுபோல—மீதியுள்ள ஆண்டுகளில்—இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டித் தருவது என்று ஆரம்பித்திருந்தால் இந்த இருபதாண்டு காலத்திற்குள் இன்றைக்கு தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத்



1975 ஏப்ரல் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

தேவைப்படுகிற ஏறத்தாழ பத்து லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும்

ஆனால், கடந்த ஓராண்டு காலமாகத்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம்.

முதல் கட்டமாக பத்தாயிரம் வீடுகளை கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம். பத்தாயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றால் முதலில் 17 ஆயிரம் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தால்தான் அது பத்தாயிரத்தில் வந்து நிற்கும் என்று அறிவித்து வேலைகள் நடந்து வருகின்றன.

மாவட்ட வாரியாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எவ்வளவு என்று கேட்டவர்களுக்கு விடையைத் தர விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, அங்கே 1,182 வீடுகள் கட்டத் தொடங்கப்பெற்று, இதுவரையில் 694 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

வடார்க்காடு மாவட்டத்தில் 1,000 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,827 வீடுகள் கட்டத் தொடங்கப்பெற்று, 784 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,379 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,001 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் இலக்கு 1,100 வீடுகள்; எடுத்துக் கொள்ளப்பட்டவை 2,697. முடிக்கப்பட்ட வீடுகள் 1,100.

திருச்சி மாவட்டத்தில் இலக்கு 1,000 வீடுகள். எடுத்துக் கொள்ளப்பட்டவை 2,058. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 2,038.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலக்கு 300. எடுத்துக்கொள்ளப்பட்டவை 560. முடிக்கப்பட்டவை 480.

மதுரையில் இலக்கு 800. எடுத்துக்கொள்ளப்பட்டவை 998; முடிக்கப்பட்டவை 882.

இராமநாதபுரத்தில் இலக்கு 700; எடுத்துக்கொள்ளப்பட்டவை 743; முடிக்கப்பட்டவை 580.

நெல்லை மாவட்டத்தில் இலக்கு 800; எடுத்துக்கொள்ளப்பட்டவை 767; முடிக்கப்பட்டவை 618.

நிதி தவறாக நடந்துகொண்டிருக்கிறது என்று இந்த விவரங்களைக் கொடுத்தார்கள். இதை அமைச்சரவர்களின் கவனத்திற்குத் தருகிறேன். இன்னும் பரிசீலித்துப் பார்த்தால் இன்னும் பலர் கூட இருக்கக்கூடும். அதிலே சில சமயங்களிலே யாருக்காவது வேண்டியவர்கள் என்றுகூட இருக்கலாம். ஆனால் அதைப் பார்த்து அந்த முறை சரியல்ல என்றுதான் செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டி ஆரம்பித்தவுடனே முதல் முதலாக ஹவுசிங் போர்டு சம்பந்தமாகத்தான் பரிசீலனை செய்தார்கள். அப்படிப் பரிசீலனை செய்து, பல வருஷ காலமாக கணக்கு முடிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. அது எந்த அளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது? இன்றைக்கு யாராவது ஹவுசிங் போர்டு சம்பந்தமாக எந்த அளவிற்கு வரவு-செலவு இருக்கிறது, எப்படித் திட்டம் இருக்கிறது என்று கேட்டால் சொல்லும் அளவில் இருக்கிறதா என்று பதில் சொல்லும்பொழுது சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் ஹவுசிங் சம்பந்தமாக நான் சொல்ல விருக்கிறது.

மற்றபடி குதிரை பந்தய காரியத்தைப்பற்றி வேறு பலரும் கண்டிப்பாகப் பேசுவார்கள், ஆகவே அதற்குள் நான் போகவில்லை.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு அமைச்சரவர்கள் நிகழ்த்திய பேச்சைப் படித்தேன், இந்த ஆண்டு அவர்கள் நிகழ்த்திய பேச்சையும் படித்தேன். அதில் அநேகமாக முதல் 4 பக்கங்கள் கிட்டத்தட்ட அதையே சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஓரளவிற்குச் சரிதான். ஒரே கொள்கையில் நிற்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் எங்களால் எந்த அளவிற்கு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கூடிய அம்சமாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்குப் பல ஆலைகளைப்பற்றி இங்கே ரெவியூ ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். அந்த ஆலைகளின் மேல் பற்றுதல் உள்ளவன் என்ற காரணத்தால் சொல்கிறேன்,

I must compliment the Labour Department for preparing and giving to us an excellent Review Report. It is an excellent review report.

அதைப் படித்தாலே ஒரு வருஷ காலத்திலே எந்த அளவிற்கு இந்தத் தமிழகத்திலே இந்த ஆலைகள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன, என்னென்ன சாதனைகள் நடந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கும் முடிவுகளை ஒரு வேளை ஏற்றுக்கொள்ளாமல்



இருக்கலாம், ஆனால் இந்த ஆய்வு செய்ததைப் பாராட்டுகிறேன் ஏன் என்றால் கடந்த 2 வருஷ காலமாக அதிக ஆட்களை வேலையில் சேர்க்க வேண்டுமென்றும், புதிய அசிஸ்டெண்ட் மானேஜர்களை வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். நான் இப்படிச் சொன்னவுடனேயே உங்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடக் கூடாது.

மாதாமாதம் ஒரு கெஜட் வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். ரிப்போர்ட்டிலேகூட லேபர் கெஜட் வருவதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த லேபர் கெஜட் போன வருஷம் ஏப்ரல் மாதம்தான் கடைசியாக வந்தது, ஒரு வருஷத்திற்கு முன்பு லேபர் கெஜட் வந்திருக்கிறது. அதற்குமுன்பு வந்த லேபர் கெஜட்டிலே அதற்குமுன் ஒரு வருஷத்திலே நடந்த விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு என்ன நடக்கிறது, இன்றைக்குப் பல ஆலைகளில் வந்திருக்கக்கூடிய சிக்கல்கள் என்ன, முக்கியமான தீர்ப்புகள் என்ன என்று சொன்னால்தான் இன்றைக்குத் தொழிற்சங்க இயக்கத்திலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு உபயோககரமாக இருக்கும். ஒரு வருஷத்திற்கு முன்னால் வந்த கெஜட்டில், அதற்கும் ஒரு வருஷத்திற்கு முன்னால் நடந்த செய்திகள் வந்தால் உதவிகரமாக இல்லை. அதைக் கிட்டத்தட்ட 'ஹேண்ட் புக்' மாதிரி தொழிற்சங்க இயக்கத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் பயன்படுத்துகிறார்கள். அதை இன்றைக்கு இவர்கள் தயார் செய்யவில்லையா அல்லது அரசாங்க அச்சகத்தில் தாமதமாக இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு எங்கள் கையில் அது கிடைக்கவில்லை. சாதாரணமாக ஒரு மாதமாவது, அதாவது ஏப்ரல் இறுதி வரையில் நடந்த சம்பவங்களைப் பொறுத்த வரையில் ஜூன் மாதம் 1-ஆம் தேதியாவது கையிலே கிடைத்தால்தான், அதிக வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்திலே, இந்த நாட்டினுடைய நிலைமைகளையும், தொழிலாளர்களைப் பற்றிய விவரங்களையும் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையைப் பற்றி முதலிலே என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டு வேறு விவரங்களுக்குப் போகிறேன். நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒரு 'இண்டஸ்ட்ரிவைஸ் செட்டில்மெண்ட்' செய்யவில்லை என்று சொன்னேன். பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால் தனித்தனி பஞ்சாலை களெல்லாம் தங்களுக்குள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டார்கள். பிறகு தமிழ்நாடு தழுவிய பஞ்சாலைகள் பூராவுக்கும் ஒரு தீர்ப்பு வருகிறது. அகில இந்திய நிலையில் ஒரு நிலை வருகிறது. எஞ்சினியரிங்கிலும் அப்படித்தான். ஆனால் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே சர்க்காருக்குச் சொந்தமாக 7 ஆலைகள் வந்திருக்கின்றன. சர்க்காரே

திருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.

எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது சிபாரிசு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப்பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபீசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிபோர்ட்டில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்னைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரணமாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஜீப் போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்கலாம். இதை போன் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.



அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போகவில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப்போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான்டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகையில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின்சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடமையாக்கப் போகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ருப், கொத்தாரி, பாரி அன்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக்கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயிலராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** சர்க்கரை ஆலைகளை தேசியமாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரிதாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற்சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்காரா மில்லில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் விரட்டுவார். மாநில

இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 1,000-க்கு 4 பேர் என்பதைவிட அதிகமான பெட் இல்லை. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் பூராவும், பின் கன்னியாகுமரி மாவட்டம்கூட அதற்கு வர வேண்டியிருக்கிறது.

(மாலை 4-30)

அவர்களுடைய ஆஸ்பத்திரி இதுதான். ராஜபாளையத்திலுள்ளவர் யாராவது இன்-பேஷன்டாகப் போகவேண்டுமென்று சொன்னால் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் மாற்றுத்தான் பிள்ளை மாதிரி வந்து இருக்க வேண்டியிருக்கிறது. கோவில்பட்டியில் யாராவது இன்-பேஷன்டாக வரவேண்டுமென்றால் மாற்றுந்தாள் பிள்ளை மாதிரி திருநெல்வேலி ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலில் இருக்க வேண்டியிருக்கிறது. 200 படுக்கைகள் என்பதை ஆயிரம் என்று ஆக்குங்கள். ஆயிரம் பேருக்கு நாலைந்து படுக்கைகள் என்று கணக்கு வைத்தால் கூட மூன்று நான்கு ஜில்லாக்கள் சேர்ந்து இதைப் பெரிதாக்கும் நிலைமை இருக்கிறது.

இப்போதுள்ள பல்வேறு நிலைமையைப் பாருங்கள். மதுரை ஆஸ்பத்திரியில் ஒரு சர்ஜன் இருக்கிறார், ஒரு ஃபிசிஷியன் இருக்கிறார், ஒரு பெண் டாக்டர் இருக்கிறார். மூன்று பேர் போதுமா? ஹவுஸ் சர்ஜன் வேலை நிறுத்தம் செய்தபோது கூட நான் இந்த நிலைமையைத்தான் சுட்டிக் காட்டினேன். மூன்று சர்ஜன்கள் மூன்று பிசிஷியன்ஸ், இரண்டு பெண் டாக்டர்கள் இருக்கவேண்டும். அந்த மாதிரி அதிகப்படுத்த முடியும். தேவை இருக்கிறது. நான் சுற்றிப் பார்த்துச் சொல்லுகிறேனே தவிர, ஆர்க்யூமென்டுக்காகச் சொல்லவில்லை. இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரி 'அண்டர் ஸ்டாஃப்ட்' என்ற முறையில் நடக்க வேண்டிய அளவில் இருக்கிறது. திறமையான டாக்டர்கள் நம்முடைய இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியின் கீழ் வரவேண்டும். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியை விட சிறந்த டாக்டர்கள் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில ரீதியிலும், அந்தந்தப் பகுதியில் இ.எஸ்.ஐ. அட்வைசரி கமிட்டி என்று வைத்து விட்டால் அவர்களுடைய ஆலோசனை வரும். அப்போது அவர்களுடைய ஆலோசனையை அமல் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படும்.

நம்முடைய சர்க்கார் பீடி-சிகார் தொழிலாளர்களுக்கான சட்டத்தை 1966-ம் ஆண்டு கொண்டு வந்தது. பீடி-சிகார் தொழில் சிறு தொழிலாகத் தெரிகிறது. ஆனால், 'பீடி கிங்ஸ்' பீடி முதலாளிகள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். தொழிலாளியைச் சுரண்டி அதிகமாக லாபம் பெறுகிறார்கள். சிறு தொழில் என்று சொல்லி அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள்.





அதே மாதிரிதான் சுருட்டும். 1966-ம் ஆண்டு வந்த சட்டம் செல்லாது என்று சொல்லி கடைசியில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் 'செல்லும்' என்று சொல்லியாகிவிட்டது. செல்லும் என்று சொன்ன பிறகு நம்முடைய சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதை அமல் படுத்த என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இன்றைக்குக் கூட ஐயாயிரத்துக்கும் அதிகமான சுருட்டுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

திருச்சி சுருட்டு வெளி நாட்டில் பெயர் பெற்றது. எவ்வளவு பெரிய டின்னர் நடந்தாலும் டின்னர் முடிந்த பிறகு உறையூர் சுருட்டுதான் வைப்பார்கள். அந்தக் காலத்திலேயே 50 ரூபாய் 60 ரூபாய் டின்னர் நடந்தாலும் கடைசியில் உறையூர் சுருட்டு வைப்பார்கள். அந்தச் சுருட்டு முதலாளிகள் கதவடைப்புச் செய்துவிட்டு அதே டிரேடு மார்க்கில் இரகசியமாக வேலை செய்கிறார்கள். போன வருஷம் ஆறும் மாதம் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை முறியடிக்க இங்கும், நாகப்பட்டினத்திலும் இப்படிச் செய்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள் எட்டு வருஷ காலமாகச் சட்டம் அமலாக வேண்டுமே என்று காத்துக் கொண்டிருந்தார்கள். சட்டம் அமலான பிறகு இந்த மாதிரி நிலைமை, பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை இந்த அரசு உண்டாக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லோரும் சொல்லுகிற குறை. இதைச் சொன்னால் இப்படித் தான் சொல்லுவார்கள் என்று நீங்கள் பதில் சொல்லி நாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். டிலே எந்த லெவலில் வருகிறது? கன்சிலியேஷன் நடக்கிறது. ரிப்போர்ட் அனுப்பி ஆயிற்று. ரிப்போர்ட் அனுப்பப்பட்ட பிறகு அது டிப்பார்ட்மென்டில் படுகிறபாடு இருக்கிறதே அதைச் சொல்லி முடியாது. லேபர் கமிஷனருக்கு மறுபடியும் அனுப்பி அது லேபர் ஆபீசருக்கு 'ஃபார் கிளாரிபிகேஷன்' என்று அனுப்புகிறார்கள். இந்த டிலேயைக் குறைப்பது நல்லது.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

மருதமலை ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸ்—

It was formerly Palamalai Renganathar.

இப்போது 220 தொழிலாளர்கள்; முன்பு 370 பேர்.

There was a lock-out on 18th February 1975. Narayanasamy suspended and 26 persons arrested. Proprietor's house is near Perur. D.C.L. has given false report. Parvathi met Collector.

பெரிய முதலாளி, இவர்களையும் சாப்பிடக்கூடிய மிகப் பெரிய முதலாளிகளும் இருக்கிறார்கள். இரண்டும் சேர்ந்து இன்றைக்கு இவர்களுக்கு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் என்னைக் கேட்டால், சர்க்கரை ஆலை முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபத்தோடு, உழைப்பின் தன்மையைப் பார்த்தால் இவர்கள் குறைந்த ஊதியத்தைத்தான் பெறுகிறார்கள். உடனடியாக, மற்ற மாநிலத்திலே இம்மாதிரி இல்லை என்று சொல்ல வேண்டாம். எப்பொழுதுமே மற்ற மாநிலங்களைவிட நாம் அதிக ஊதியத்தைப் பெற்று வந்திருக்கிறோம். டிசம்பர் 20 என்று நினைக்கிறேன், ஒரு நல்ல கட்டுப்பாடு அவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். ஒற்றுமை ஏற்படுவதை உடைப்பதுதான் பெருமை என்று நினைக்கக் கூடாது.

ஐ.என்.டி.யு.சி. ஏ.ஐ.டி.யு.சி., எச்.எம்.எஸ்., திராவிட முன்னேற்றக் கழகத்தின் சங்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சங்கம் என்றெல்லாம் இருக்கிறது, சி.ஐ.டி.யு. இருக்கிறது. இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கோரிக்கையை வைத்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்து தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய அந்த நேரத்தில்—இன்றைக்கு அவர்கள் எடுத்த நிலை சரியாக இல்லாமலிருக்கலாம்—ஆனால் அந்த ஒற்றுமையை உடைப்பதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கையிருக்கிறதே,

It does not do any credit to any Government.

என்று இதுதான் சொல்ல முடியும். அதை உடைக்க எடுத்த முயற்சியினால் அந்தத் தொழிலாளர்கள் நொந்து போயிருக்கும் நிலையிருக்கிறது. ஒவ்வொரு யூனிட்டாக ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்ற நிலையிருக்கிறது.

It is taking it to a reverse direction.

ஒரே ரிவர்ஸ் கியரில் இந்த மாதிரி செய்யக் கூடாது.

சிம்சனைப் பொறுத்தவரையில் என்ன நடந்தது? ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ள சிறந்த ஸ்தாபனமாக இருந்தது. அந்தச் சங்கத்திலே உள்ள தலைமையைப்பற்றி வெறுப்புக்கூட இருக்கலாம், ஆனால் தொழிலாளர்கள் திருப்தியாக இருந்தார்கள். வருஷா வருஷம் போனஸ் இருக்கிறது, அவர்களுக்கு ஒரு சீப் ஸ்டோர்ஸ் எல்லாம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தை உடைத்து, இன்றைக்குப் பழையபடி இருந்த நிலைமை வரவே வராது. அப்படிப்பட்ட அருமையான ஸ்தாபனத்தை உடைத்தார்கள்.

It is an anti-labour policy.

அதேபோல் ஒன்றுபட்டு வளர்ந்த இயக்கம், ஏற்கனவே சாதித்ததைப் பின் வழியில் செய்ய செய்தது இருக்கிறதே அது ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம். அதற்கு என்னதான் சமாதானம் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.





அரசு அதுபற்றித் தங்களைத் தாங்களே பரிசீலனை செய்து கொள்வது நல்லது. இரண்டு அருமையான தொழிற்சங்கத் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள், உங்களுடைய போக்கு பிடிக்காமல் வெளியேறியிருக்கிறார்கள். அவர்கள் வெளியேறியதற்கு வேறு காரணங்கள்கூட இருக்கலாம். ஆனால் எனக்கு என்ன படுகிறது என்றால், அவர்கள் தொழிலாளர்களோடு இணைந்திருக்கும் அருமையான தலைவர்கள், தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு எடுத்த முடிவினால் ஒதுங்கிக்கொண்டார்கள் என்றுதான் படுகிறது. ஒவ்வொருவரைப்பற்றியும் நான் நன்கறிந்தவன். கிட்டத்தட்ட 20 வருஷ காலமாகத் தொழிற்சங்க இயக்கத்திலே எப்படிப் பாடுபட்டார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் மனம் நொந்து போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்காரில் 'ஆண்டி லேபர் பாலிசிக்கு' உதாரணம் வேண்டுமென்றால் நான் இதைத்தான் சொல்ல முடியும்.

அடுத்து, இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. உதாரணமாக, இ.எஸ்.ஐ. பற்றி எடுத்துக் கொள்வோம். இ.எஸ்.ஐ. பற்றி பலவிவகாரங்கள் வருகின்றன. ஆனால் என்னை பொறுத்த வரையில் நான் என்ன நினைக்கிறேன் என்றால் ஆரம்ப காலத்திலே தொழிலாளர்கள் அதை வரவேற்கவில்லை. அதற்குக் காரணம் எங்களிடத்தில் பணத்தை வாங்குகிறார்கள், எங்களுக்கு வியாதி வரப் போவதில்லை, ஏதாவது வியாதி என்று லீவ் எடுத்தால் கொஞ்சம் பணம் கிடைக்கிறதே தவிர வேறில்லை என்று கூறினார்கள். அப்படியிருந்தவர்களிடம், இ.எஸ்.ஐ. இருக்க வேண்டும், இன்றைக்கு நம்முடைய நாட்டிலே எல்லாத் தொழிலாளர்களுக்கும் போதுமான வைத்திய வசதி கொடுக்கும் ஏற்பாடு இல்லை, ஆகவே, இதையாவது செய்ய உத்தரவாதம் இருக்கிறது என்று சொல்லி, E.S.I. Organisation has come to stay. அப்படி வந்தபிறகு இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு, தாங்கள் பணம் கொடுத்து வைத்திருக்கும் அந்த ஆஸ்பத்திரி நம்முடையதாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். 3 ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன.

ஐயனாவரத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் ரொம்ப நல்ல முறையில் இருக்கிறது என்று நேற்றுவரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அங்கே பல பேஷண்டுகள் கீழே படுத்திருக்கிறார்கள், அந்த ஐயனாவரம் ஆஸ்பத்திரியில் பெட் வசதி போதாது.

அடுத்து கோயம்புத்தூரில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது, மதுரையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. மதுரையில் அந்த இலாக்காவிலே ஈடுபட்டிருக்கும் அதிகாரியே என்னிடத்தில் சொன்னார்கள். மதுரை ஆஸ்பத்திரியைப் பார்த்தால் அது ஒரு நர்சிங் ஹோம் மாதிரிதான் இருக்கிறது, 202 பெட்தான் அங்கே

இருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.

எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது பிரச்சு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப்பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபீசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிபார்டில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்சனைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரணமாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஜி.ஜே.டி. போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்கலாம். இதை போனஸ் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.



அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போகவில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப்போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான்டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகையில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின்சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடைமையாக்கப் போகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ரூப், கொத்தாரி, பாரி அன்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக்கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயிலராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சர்க்கரை ஆலைகளை தேசியமாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரிதாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற்சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்காரா மில்ஸில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் விரட்டுவார். மாநில

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 4

சர்க்காரையும் விட்டுவைக்க மாட்டார். நீதிப் போனும் கேஸ் போடுவார். நமது இலாகா சீர்திருத்தங்களைக் கொண்டு அங்கு பாக்டரி ஆக்டை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.

டெக்ஸ்டைல் மில்லில் பாக்டரி ஆக்ட் அமலில் இல்லாத நிறைந்த இடத்தைத் தேடிப் பார்க்க வேண்டியதில்லை. அது திருச்செங்கோட்டில் இருக்கிறது. முதலாளியின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் சொல்வதற்கு முன்னால் அவர் யார் என்று தெரிந்திருக்கும். (ஒரு உறுப்பினர்: பெயரைச் சொல்லுங்கள்.) அங்கு யாருக்கு சொந்தம். நம் தொழிலாளர்களுக்குக் கொடுமையை யார் தடுக்க வேண்டியவர்? இன்றும் முறைந்த சர்க்காரத்தின் அதிகார கூலிகளாக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மற்றவர்களைப்போல் ஒப்பந்தம் செய்துகொண்டாலும் ஒப்பந்தம் அமலாகாத இடமாக அது இருக்கிறது.

இராஜபாளையத்தில் ஜானகிராம் மில்லில் ஒரு கருப்பு இருக்கிறது. சிறு சிறு வீவிங் செக்ஷன்கள் நிறைய இருக்கின்றன. 300 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதைக் கைக்கு எடுத்திருப்பது திருநெல்வேலி ஜில்லாக்காரர். அவர் எல்லோரும் வெளியே போங்கள் என்று சொல்லி எல்லோரும் போய் ஓரணியாக சரி செய்தார்கள். மறுபடியும் நான் மூடப்போகிறேன் என்று சொல்லி, மூடாதே என்று சொல்லிச் சென்ற தொழிலாளர்கள் நூறு பேர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் மறியல் செய்தால் உடனடியாக பதினைந்து நாட்கள் ரிமாண்ட் என்று போலீஸ் சாதாரணமாகப் போய் விட்டது. அதைக் கண்டிக்கிறேன். மூடப்போகிறேன் என்று சொன்னதற்கு, மூடாதே என்று அதற்கு இரண்டு நாட்கள் முன்னால் சென்று மறியல் செய்தால் உடனே மனுவைக் கொண்டால் ஜெயிலுக்கு அனுப்பியிருக்கிறார்கள் நூறு பேர்களையும். டி.சி.எல்.லிடம் பேச்சுவார்த்தை நடந்து தோற்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

Arm the D.C.L. with powers.

“திற ஐயா” என்று சொல்லுங்கள். அப்போதுதான் திறப்பார்கள். இங்கு அமைச்சர் அவர்கள் அல்லது லேபர் செகரட்டரி அல்லது சீப் கமிஷனர் ஆப் லேபர், “இருந்துதான் தீரவேண்டும், நீ பூட்டாமல் வைத்திருக்கிறாய், திறக்கப் போகிறாயா இல்லையா, இருந்துதான் தீரவேண்டும், இப்போது மூடிவிட்டு மூன்றரை மாதம் கழிந்து. வேறுவழி இல்லாமல் திறக்கப் போகிறாய்?” என்று சொன்னால் பயப்படுவார்கள். டி.சி.எல். இடம் சென்று பேசினால், எங்கள் பார்ட்னர்ஸ் இடையில் தகராறு, அதனால் மூடுகிறேன் என்பார்கள். சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்வார்கள். அந்த 300 பேர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.



1975 ஏப்ரல் 4] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பிராவிடெண்ட் பண்ட் சம்பந்தமாக, டெக்ஸ்டைல், இன்ஜினீரிங், ரோடு டிரான்ஸ்போர்ட் இவைகளில் உள்ள குறைகளைப் பற்றிக் கருத்துச் சொல்ல விழைகிறேன்.

Government hesitates to launch prosecutions.

நான் பிராவிடெண்ட் பண்டு சென்டிரல் போர்டில் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலத்தில், மத்திய சர்க்காரே எடுத்து பிராசிக்யூட் செய்வதற்கு அதிகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று வந்து இருக்கிறது. இப்போது மாநில சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இப்போது பிராசிக்யூட் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி பிராசிக்யூட் செய்கிறபோது நம்முடைய அரசாங்கத்திற்கு ரொம்பத் தயக்கம் வருகிறது. கொஞ்சநாள் பிராசிக்யூட் செய்யுங்கள்.

இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்றால், தொழிலாளி 10 ரூபாய் கட்டுகிறான் என்றால், முதலாளி 10 ரூபாய் போடுகிறார் என்றால் இரண்டையும் அனுப்புவது இல்லை. கடைசியாக என்ன செய்து இருக்கிறோம் என்றால் ஜி.பி.எப். தொழிலாளிக்குக் கொடுக்காமல் இருக்கக்கூடாது என்பதற்காகக் ரூ. 2,000 தொழிலாளி கட்டி, ரூ. 2,000 முதலாளி கட்டவேண்டுமென்றாலும்— தொழிலாளிக்கு அந்தப் பணம் கொடுக்கவேண்டுமென்பதற்காக ஸ்பெஷல் பண்டிலிருந்து தொழிலாளிக்குப் பணம் கொடுக்கிறோம்.

தொழிலாளி கட்டியிருக்கிற அளவுக்குப் பணம் கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டுமென்று சட்டம் போட்டு இருக்கிறோம். ஆனால், முதலாளியைக் கண்டிக்கும் கேட்கிற அளவுக்கு நிலைமை வரவில்லை. அப்படிப்பட்ட முதலாளிகளைக் கண்டிக்கலாம்

ஒரு சமயத்தில், பம்பாயில் ஒரு முதலாளியையும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு முதலாளியையும் 15 நாள் ஜெயிலில் வைத்தோம். 15 நாள் ஜெயிலில் வைத்த பிறகு தம்பி என்னை வைத்தால் சரி, உடனுக்குடன் பணம் வந்து சேரும். ஆனால் இந்த மாதிரி ஆட்களுக்கு குடி. ரொம்ப ஏற்படப் போவது இல்லை. இருந்தபோதிலும், ஒரு 15—10 நாள் ஜெயில் போடுகிறோம் என்ற நிலைமை வந்தால், சீக்கிரம் அரியர்ஸ் கலெக்டாகும். என்னிடம் விவரங்கள் இருந்தாலும், விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.

ஏற்கனவே சட்டத்தைப் பற்றி விவாதிக்கிறபோது, தொழிலாளிக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றும் சொன்னேன். அந்த வேண்டுகோளை நீண்ட நாட்களாக சொல்லி வருகிறோம். ஏ.ஐ.டி.யு.சி. சொல்லி வருகிறோம்; இப்போது இருக்கிற ஹைக்கோர்ட்டிலேயே ஒரு ‘லேபர் பெஞ்ச்’ ஏற்படுத்

நான் கூட ஐ.டி.சி. என்று அழைக்கப்படக் கூடிய இந்தியா டுபாக்கோ கம்பெனியில் இருக்கிறேன். எங்கள் தொழிலாளர்களுக்கு எங்கள் தொழிற்சங்கம் மூலமாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னாலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அந்தத் தொழிலாளிக்கு 5 ஆயிரம் ரூபாய் தொழிற் சங்கம் மூலமாக, வெல்ஃபேர் ஃபண்டு ஸ்கீம் என்று உருவாக்கி அதற்காகச் சட்ட திட்டங்கள் தோற்றுவித்துக் கொண்டு நாங்கள் வழங்கிவந்து கொண்டு இருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்கள் எல்லா இடங்களிலும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்த அந்தக் கட்டத்தில் யாருமே எதிர்பாராத முறையில் மிகச் சிறந்த திட்டத்தை, 10 ஆயிரம் ரூபாயை அரசு ஊழியருக்கு வழங்கும் அற்புதமான திட்டத்தை இந்த அரசு அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இன்றையதினம் நாங்களெல்லாம் தொழிற் சங்க இயக்கத்திலே அரசாங்கத்தினுடைய இந்தத் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக்கூடிய அளவிலே நிலைமைகள் இருப்பதைக் காண்கிறோம்.

தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே, தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, சமூக நீதி அடிப்படையிலே, உழைக்கிற மக்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை, அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலட்சிய சமுதாயத்தைக் காண வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்த அரசு பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையிலேதான் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையிலே தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத்தில் அநியாயமாக 15 தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார்கள் என்பதற்காக, பழி வாங்கப்பட்ட காரணத்தினால்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 15 தொழிலாளர்களை நீங்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்பதாக ஆலோசனைகளை வழங்கினார்கள். தகாராறுக்குரிய குற்றச்சாட்டுகள் இன்னின்ன என்று சொல்லக் கூடிய அளவிலே உள்ள 5 தொழிலாளர்கள் பிரச்சனையைக் குறித்து முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள், முன்னின்று நடத்தினார்கள் என்ற காரணத்திற்காக பழி வாங்கப்பட்ட 15 தொழிலாளர்களை நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவார்கள், சுமூகமான நிலைமை ஏற்படுமென்று சொன்னார்கள்.





ஆனால், அந்த சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகம் எந்த அளவிற்குப் பிரச்சனையை வளர்த்தார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்காகவே நாங்கள் உழைக்கிறோம் என்று சொல்லிய, சொல்லி வரக் கூடிய கட்சிகள் கூட இந்தப் பிரச்சினையிலே தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்காமல் சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகத்திற்கு ஆதரவாகவே சட்ட மன்றத்தில் குரல் எழுப்பிய வேதனையையும் கண்டோம். தொழிற்சங்க இயக்கத்தில் பல ஆண்டுக்காலம் பணியாற்றியவர்களைக் காண்கிறோம். சாதாரணமாக ஒரு தொழிலாளியை நீக்கவேண்டுமானால் அதற்கு சில அடிப்படை முறைகள் இருக்கின்றன. சி.எம்.சி. தொழில் தகராறு சட்டத்தின் கீழ் வருகிறதா இல்லையா என்பது பிரச்சனை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி: ஆகவே, அடிப்படை நியதிகள் இருக்கின்றன. யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு தொழிலாளி மீது ஒரு குற்றச்சாட்டு என்றால் இன்னின்ன குற்றச்சாட்டு என்று சொல்லி, அதற்கு விளக்கத்தைக் கேட்பார்கள். பஸ்ட், ஷோ காஸ் நோட்டீஸ். அந்த விளக்கம் திருப்திகரமாகயில்லை என்றால், இன்னின்ன குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடைபெறும் என்று சொல்லுவார்கள். விசாரணை முடிவுற்ற பிறகு அந்தத் தொழிலாளி எந்தக் குற்றங்களுக்கு இலக்கானவர் என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, அந்த விசாரணையை நடத்தியவர் அதற்குப் பைண்டிங்ஸ் தந்த பிறகு இன்ன தண்டனை வழங்கலாமென்று முடிவு பண்ணி, குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது, இன்ன தண்டனை வழங்கியிருக்கிறோம், விளக்கம் தாருங்கள் என்று சொல்லுவார்கள். இது செகண்ட் ஷோ காஸ் நோட்டீஸ். இதுதான் அடிப்படை நியதிகள். பிரின்ஸிபிள் ஆப் நாச்சுரல் ஜஸ்டிஸ். அந்தத் தொழிலாளிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரப்பட்டனவா என்றால் இல்லை.

ஆகையினால், நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமூகமான முறையில் பிரச்னை தீர வேண்டுமென்பதற்காக அந்தத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். உள்ளபடியே ஒரு நாட்டின் முதலமைச்சர் போராடுகின்ற தொழிலாளிகளுக்கு அவரே முன் வந்து ஒரு தீரம் மிக்க முடிவை எடுத்து, அடம் பிடிக்கக் கூடிய நிர்வாகத்திற்கு எப்படியும் நீங்கள் பின்பற்றியாக வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்தக் கட்டத்தில் அனைத்துக் கட்சிகளும், கட்சி வித்தியாசங்களை மறந்து, அந்த முதலமைச்சருக்குப் பின்னால், அவருடைய குரலை, அவர் கரத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் எல்லோரும் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் வேதனைமிக்க காட்சியைக் கண்டோம். அரசியல் ரீதியில் இதற்கு விமர்சனம் செய்தார்கள். தொழிற்சங்க ரீதியில் விமர்சனம் செய்யத் தவறி விட்டார்கள். ஆகையினால் நான்

கொள்ளவில்லை. அப்போது நாங்கள் சொன்னோம், வொர்க்கர்களுக்கு அதிகமாக [illegible] என்றும், தொழிற்சங்கங்கள் அதிகமாகச் சொல்லிக்கொடுக்க [illegible], தொழிற்சங்கம் [illegible] கஷ்டமாக இருக்கிறது [illegible] 1 மாதம், 2 மாதம் என்று வகுப்பு வைத்து, [illegible] சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். எ.ஐ.டி.யு.சி [illegible] ஆகிய எங்களது மூன்று தொழிற் சங்க இயக்கங்கள் [illegible] தெரிவித்தோம். [illegible] அமைச்சர்கள் எதிர்த் தார்கள். [illegible] இப்போது அந்த [illegible] முறையில் நடந்து வருகின்றன. சென்னையில், கோயம்புத்தூரில் [illegible] வருகிறது. அந்த வகுப்புகளை 'கெஸ்ட் லெக்சரர்' [illegible] நடத்தப்படுகிறது [illegible] பணம் தருகிறது. அதைக் கண்காணிக்கிற [illegible] இன்று [illegible] இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது,

Why this duplication? What is workers' training? நாம் [illegible] என்று இந்த [illegible] அவசியம் [illegible]? [illegible] வேண்டும். [illegible] இது நிறுத்தப்பட வேண்டும். [illegible] நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கும் மத்திய சர்க்காரின் டைரக்டர் சொல்ப நல்லவர், [illegible], அவர்கள் நல்ல விதத்தில் நமக்கு ஒத்துழைப்பு தருபவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் [illegible] தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இவைகளைத்தான் நான் பெரிய [illegible] வைத்து கருத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஹவுசிங் போர்டு சம்பந்தமாக, நாங்கள் கொடுத்து இருக்கும் 2-3 விஷயங்களை அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக நான் சொன்ன விஷயங்களை எல்லாம் அரசு நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய இந்த விவரங்கள் எல்லாம், அனுபவத்தில் இருக்கும் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேனே தவிர ஏதோ சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இன்று இருக்கும் நிலையில். இதிலே ஓரிரு விஷயங்களைத் தனியாகப் பார்த்தால் it is going in the anti-working class direction என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





பல விஷயங்களில் இந்த மாதிரி பல 'சிம்போசியம்' நடத்திப் பார்க்கிற நேரத்தில், பல பேர் தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்கிற நேரத்தில் வேதனையாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஏதோ பொறுப்பு இல்லாமல் இருப்பதுபோல் சொல்ல வேண்டியது இல்லை. தொழிலாளர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள். உற்பத்தியில் முறையாகத்தான் இருக்கிறார்கள். மின்சார வெட்டு என்ற உடனே கோயம்புத்தூரில் இருந்து எங்களுக்குத் தந்தி வருகிறது. முதலாளிகள் சாதாரணமாகவே எப்படி "லே-ஆப்" கொடுக்கலாம் என்று பார்ப்பார்கள். ஜெனரேட்டர் வைத்து இருப்பவர்கள் கூட அப்படிச் செய்கிறார்கள்.

கோயம்புத்தூரில் இருக்கும் ஆலை முதலாளிகளுக்கும், முதலமைச்சருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும், ஏப்ரல் மாதத்தில் அதிகமாக கிடைக்கும் என்று இருந்தது போக, அது குறைக்கப்படுமோ என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்த வகையில் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில், உத்தரவாதம் காணக்கூடிய முறையில் காரியங்கள் நடைபெற வேண்டும். நான் சில விஷயங்களை ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறேன். பல விஷயங்களில் காரியங்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன் என்று சொல்லி எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 5.00)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாலை நேரங்களில் மன்றம் நடக்கிறபோது வழக்கமாக காரம், டீ கொடுப்பது வழக்கம், கொடுப்பார்கள், நான் மறுக்கவில்லை. நம்முடைய அற நிலைய அமைச்சரவர்கள் பால் வளத்தைப் பார்க்கிற காரணத்தினால் அவர் முன்பு பால் கோவா கொடுத்தார்கள். நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் போனஸ் கொடுப்பதில் கெட்டிக்காரர் ஆவார்கள். ஆகவே அவர்கள் இன்றைக்கு போனஸாக பாதம் அல்வாவைச் சேர்த்து தருகிற நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பாதாம் அல்வா மார்க்கெட்டில் கிடைக்குமோ என்னவோ தெரியாது. ஏதாவது ஒரு ஸ்வீட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் கன்சிலியேஷன் ஆபீசர் வேலை செய்து வெற்றி அடைந்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த நிந்துபோ / கொடுத்துக் காரமாக பேசுபவர்களை மாற்றிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள் ஸ்விட்டிற்காக மாறி விடுகிறவர்களா?

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை இந்த மன்றமும், இந்த நாடும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. உழைக்கிற வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், அவர்களது பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் அந்தப் பிரச்சனைகள் தொழில் தகராறுகள் அந்தந்தத் தொழிற்சங்கங்களால் எழுப்பப்படும்போது நிச்சயமாக தொழிலாளர்களுக்குச் சாதகமான முடிவுகள், உடன்பாடுகள் ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு இருந்து வருகிற நிலையையும், அதற்கேற்ற வகையிலே நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மிகச் சிறப்பான முறையிலே பல்வேறு தொழில் தகராறுகளையெல்லாம் சுமுகமான உடன்பாடுகளின் மூலமாக தீர்த்து வைத்திருக்கிற உண்மையையும் நாம் மிக நன்றாக அறிவோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய உரையிலேயே அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பீடித் தொழிலில் ஏற்பட்ட தகராறு, சர்க்கரைத் தொழில் தகராறு, பிறகு நெய்வேலி தொழில் பிரச்சனையிலே ஏற்பட்ட உடன்பாடு, தோட்டத் தொழிலில் ஏற்பட்ட தகராறு, இவற்றிலேயெல்லாம் மிக நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு ஆதரவான முறையிலே பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வந்தன என்கிற உண்மையை நாமும் மிக நன்றாக உணர்கிறோம். ஆகையினாலே இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை யார் மறைத்தாலும், அல்லது மறுத்தாலும் நிச்சயமாக இந்த நாடு, இந்த நாட்டில் இருக்கக் கூடிய உழைக்கிற வர்க்கம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த அரசு பாட்டாளி மக்களுக்காக, அகில உலக பாட்டாளி மக்களுடைய தினமான 'மே தினத்தை' சட்ட பூர்வமான சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக செய்ததை யாரும் மறந்து இருக்க முடியாது.





அதே போல பல்வேறு பிரச்சனைகள், முற்போக்கான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே மட்டும் பங்கு அல்ல, லாபத்திலேயும் பங்கு என்று சொல்லக் கூடிய நிலையில் பொதுத் துறையிலே போக்குவரத்துத்துறையிலே செயல்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். தொழிலாளர் நல நிதி சட்டம் மிக சிறப்பான முறையில் தொழிலாளர்களுக்காக பணியாற்றிடக்கூடிய வகையில் அதற்கென உள்ள சட்டம் இந்தச் சட்டத்தின் கீழ் இயங்கக் கூடிய அளவிலே தொழிலாளர் நல நிதி வாரியம் என்று ஒரு வாரியத்தை அமைத்து அந்த வாரியம் இன்றையதினம் மிகச் சிறப்பான முறையில் தொடங்கியிருப்பதை நாம் காண்கிறோம்.

இங்கே தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் பேசுகிற அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் கூட இப்போது ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். தொழில் தகராறு என்றால் சாதாரணமாக முன்பெல்லாம் ரெஃபரன்ஸுக்காக தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமென்பதற்காகவே தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டம், இதற்கென்றே வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கி திட்டமிட்ட முறையில் போராடுவது என்ற நிலைமைகள் இருந்தன. அதை யாரும் மறந்து இருக்க முடியாது. ஆனால் இன்றையதினம் அது போன்ற கோரிக்கையிலே போராட்டங்கள் நடைபெறுவதில்லை. காரணம், இந்த அரசு கடுமையான வகையில் பிரச்சனைகளை முக்கூட்டு பேச்சுவார்த்தை என்ற முறையில் தொழிலாளர் நல அதிகாரிகள் திறம்பட பிரச்சனைகளை முடிக்க முயற்சிக்கிறார்கள். இறுதியிலே அமைச்சர் கட்டத்தில் பிரச்சனைகள் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டு வருவதால் தொழில் கோர்ட்டிற்குப் பிரச்சனைகளை விட வேண்டுமாவென்றால், வேண்டாம், வேண்டாம், நீங்களே முடித்துத் தாருங்கள் என்று சொல்லிவிடக் கூடிய நிலையினைக் காண்கிறோம். எந்த அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே பல்வேறு பிரச்சனைகளை நல்ல முறையில் தீர்த்துக் கொண்டு வருகிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் ஃபேமிலி பெனிபிட் ஸ்கீம் என்ற முறையில் அரசு ஊழியர் ஒருவர் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடக்கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்து அதனால் அரசு ஊழியர்கள் பயன் பெற்று வருவதைக் காண்கிறோம்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 4

இன்றைக்கு இது போன்ற ஒரு சூழ்நிலையில்தான் தொழிற்சங்கப் பிரச்னையை அணுகிக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது அரசு நல்ல பல திட்டங்களைத் தொழிலாளர்களுக்காகச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில் மத்திய அரசு ஊதிய முடக்குச் சட்டம்—கம்பல்சரி டெபாசிட் ஸ்கீம் என்று சொல்லி அந்தச் சட்டத்தின் மூலம் இன்றைக்குத் தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படக் கூடிய காட்சியை காண்கிறோம். அதற்கு கூட எதிர்பார்த்த அளவுக்குக் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கப் பலர் மறந்து விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனைதான் ஏற்படுகிறது.

வாய்ப்பே கிடையாது. 150 ரூபாய், 200 ரூபாய் என்று ஊதியம் பெறுகின்றவர்கள் கூட, தங்களது கோரிக்கைகள் மூலம் பிரச்னையை தீர்த்துக் கொண்டு, சுமுகமான முறையில், பேச்சு வார்த்தையின் மூலமோ, அரசாங்கத்தின் துணையோடோ, ஏதேனும் ஊதிய உயர்வு பெற்றால், அதை ரொக்கமாகப் பெற முடியாது. அடிப்படைச் சம்பளம் உயர்ந்தால் அந்தத் தொகையைப் பெற முடியாது. பஞ்சப்படி உயர்ந்தால் பாதிதான் தொழிலாளர்களுக்குச் செல்லும் என்ற அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்தச் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அதனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. கறுப்புப் பணம், கள்ளப் பணம், கள்ள மார்க்கெட்டுக்காரர்களின் பல்வேறு விதமான தவறான செயல்கள், இவை காரணமாக இன்றைக்கு விலைவாசியை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலைதான் இந்திய துணைக் கண்டத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே, தொழிலாளர்களுடைய வருவாயில், ஊதிய உயர்வில் கை வைக்கக் கூடிய அந்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் லிவிங் வேஜ் என்பதை முதலாளிகள் தொழிலாளிகளுக்குத் தரவில்லை. இப்பேர்ப்பட்ட கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை. தொழிற்சாலைகளில் பல ஆண்டுகளாக காஷுவல் தொழிலாளிகள், டெம்பரரி ஒர்க்கர்ஸ், காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸ் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூபாய் 3, 3½, 4 என்று குறைந்த அளவில் ஊதியம் தந்து மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகளெல்லாம் தற்காலிகத் தொழிலாளிகள். எந்தெந்தத் தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளிகளுக்குக் குறைந்த



1975 ஏப்ரல் 4] [திரு. மா. வே. நாராயணசாமி]

பட்ச ஊதியம் எவ்வளவு இருக்கிறதோ, அன்ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் மினிமம் வேஜ், அது அந்த கேஷுவல் தொழிலாளிக்கு, டெம்பரரி தொழிலாளிக்கு, வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் தனிச் சட்டத்தை நம் அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதுபோன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இன்றைக்கு நிரந்தர தொழிலாளி 15 ரூபாய் ஊதியம் பெறுகிறான் என்றால் தற்காலிக தொழிலாளிக்கு 4 ரூபாய், அதிகம் போனால் 5 ரூபாய் என்ற அளவில் கொடுத்து முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றுகின்ற காட்சியைக் காண்கிறோம். அதற்காக ஒரு சட்டம் தேவை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

லே ஆப் நாளைக்கு முழு ஊதியம் வேண்டும். இந்தக் கோரிக்கை ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசு ஆதரவான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று நான் மெத்த வேண்டுகிறேன்.

அடுத்தாற்போல, சத்தியா ஸ்டுடியோ பிரச்னை. உள்ளபடியே மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைமை. சத்தியா ஸ்டுடியோ முதலாளி—அவர் இன்றைக்கு ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. எம். ஜி. ஆர். அந்த ஒரு ஸ்டுடியோ மூடப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளிகளெல்லாம் மிக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2 தொழிலாளிகள் உயிர் இழந்து விட்டார்கள். ஆக, இது நம்முடைய அரசு இன்னும் அபிகடாட்சமாக அந்தத் தொழிலாளிகளுக்கு ஆதரவான முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும், இதை இன்னும் நல்ல முறையில் தீவிரமான முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் திருவொற்றியூரில் ஜூபி ரப்பர் ஒர்க்ஸ் 1½, 2 ஆண்டு காலமாக மூடப்பட்டு, தொழிலாளிகள் ஊதியம் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.

மற்றும் பைலட் என்ற கம்பெனி. அது மூடப்பட்ட நிலையில் இருக்கிறது. தொழிலாளிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி வில்லிவாக்கத்தில் வேண்டுமென்று ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் கட்டப் போவதாகச் சொன்ன இடங்களில் வில்லிவாக்கம் இல்லை. ஆக அங்கேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1975 மார்ச் [illegible]

திரு. [illegible] [illegible] [illegible] [illegible] சொல்கிறேன். [illegible] [illegible] பெரினேன். [illegible]

Principles of natural justice

[illegible]

திரு. [illegible] [illegible] அடிப்படையில் [illegible] தொழிலாளர் [illegible] அது. [illegible] இருக்கிறது [illegible] இந்த [illegible] [illegible] இருக்கிறது [illegible] தொழிலாளர் [illegible] [illegible]

[illegible] தொழி [illegible] [illegible] மாற்றி [illegible] [illegible] இருக்கிறது. [illegible] [illegible] இருக் [illegible] [illegible]

The way of approach by the D.M.K. Government is like that.
அவர் [illegible] முறையைப் பார்த்து, தொழிலாளர் [illegible], தொழிலாளர் பிரச்சினைபற்றி எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் என்பதை அன்றைய தினம் நாலும் மக்களும் உணர்ந்துகொண்டோம்.



1975 மார்ச் 4] [illegible]

உண்மையில் [illegible] தொழிலாளர்களை [illegible] [illegible] [illegible] ஏற்புறுத்த வில்லை. [illegible] போனார் [illegible] [illegible] [illegible] இருந்தால் [illegible] அந்த [illegible] இருக்கிறர் கள். [illegible] இருக் கின்றன.

[illegible] அங்கே இருக் கிறது. [illegible] நிர்வாகம். அந்த நிர்வாகம் [illegible] நாட்டில் [illegible] ஓட்டும் [illegible] பஸ் முதலாளிகளுக்கு பஸ் ஓட்டுவதற்கு அனுமதி [illegible]

[illegible] கொடுத்தார்கள். [illegible] இருக்கிறர். முன்னுள் தொழிலமைச்சர்— [illegible] ஜெயராமன் [illegible] கொடுத்தார்கள். [illegible] கொடுத்தார்கள். இப்பொழுது 5 ரூட்டுகளையும் [illegible] அந்தத் தொழிலாளர்களை [illegible] தொழிலாளர்களை [illegible] விருதுநகரில் [illegible] தொழிலாளர் கள் [illegible] தொழிலாளர்கள் எப்படிப் போகலாம்? என் [illegible] அந்த [illegible] அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு [illegible] இருக்கிறதோ இல்லையோ இந்த அரசுக்கு [illegible] கொள்ளக் கூடாது என்ற எண்ணம் திச்ச யமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** [illegible] [illegible] [illegible] [illegible] இப்பொழுது [illegible] உண்மை யிலும் இருக்கிற [illegible] எனக்குத் தெரியாது. [illegible]

ஹூவுசிங் ஸ்கீம் ஃபார் இன்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ். இந்தத் திட்டம் தொழிற்சாலைகள், தொழிலாளிகள் இருக்கக்கூடிய இடங்களில் தீவிரமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் கூட தொழிலாளிகளுக்கு வீடுகளை கட்டித் தரும்போது மான்யமாக ஒரு தொகை வழங்கப்பட வேண்டும். சப்சிடி; ரென்டல் அசிஸ்டென்ஸ், மத்திய அரசாங்கத்தின் உதவி அதற்கு நிச்சயம் தேவை. அதற்கென்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். மத்திய அரசு மான்யம் பெறக் கூடிய அளவில் அந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்கள். அங்கு போதிய அளவுக்கு ஸ்டாஃப் இல்லை என்று சென்ற ஆண்டு குறிப்பிட்டேன். அதில் இன்னும் ஒன்றும் செய்ததாக இல்லை. குறிப்பாக நந்தனம் அலுவலகத்தில் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசில் அதிகமான வேலைக்கு ஈடாக அதிக ஸ்டாஃப் இல்லை. அவற்றை அரசு கவனித்து உடனடியாக அதைத் தீர்க்க வேண்டும். சென்ற முறை நம்முடைய தொழிலாளர் நல இலாக்கா அதிகாரிகளுக்கு எல்லாம் போக்குவரத்து வசதிக்கு கார்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டேன். இன்றைக்கு ஓரளவுக்கு அவர்களுக்கு கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையிலே இந்தக் குறைகளைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* **திரு. பெ. சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யக் கோரிக்கை மீது எனக்கு முன்னாலே இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் இந்த அரசு தொழிலாளிகளுக்காக ஏராளமான நன்மைகள் செய்தது என்ற பெயரில் அவருடைய பாணியில் சில விளக்கங்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவர் பேச்சைக் கேட்கும்போது அவர் தமிழ் நாட்டைப் பற்றி பேசுகிறாரா அல்லது வேறு எந்த மாநிலத்தைப் பற்றியாவது பேசுகிறாரா என்ற சந்தேகம் வரக்கூடிய அளவில் செயற்கையான வாதத்தை, சிரமத்தோடு எடுத்து வைத்தார். அவர் காட்டிய உதாரணமே வேலூர் மருத்துவமனை விவகாரம். அதிலே 15 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு இழந்த தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம், குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு வேலை வாய்ப்புத் கிருர் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** நான் ஏதோ சிரமப்பட்டு சிலவற்றைச் சொன்னதாகவும், தமிழ்நாடு பற்றியதா என்ற சந்தேகம் கிளம்பக் கூடிய அளவில் இருந்தது என்றும் சொன்னார்கள். நேரமில்லை, அவர் உட்கார்ந்தால் 1 மணி





நேரம் நான் ஆதாரத்தோடு பல விளக்கங்களைத் தருவேன். இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்று விளக்க நான் அவசர அவசரமாகப் பேசி முடித்தேன். மன்றத்தில் நிறைய விளக்கங்கள் இருக்கின்றன. தனியாக விளக்கி அவையை அந்த அவைக்கு கன்வின்ஸ் செய்யத் தயாராக இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** வேலூர் மருத்துவமனையில் வேலை இழந்த 15 தொழிலாளர்களுக்கு வேலை தந்ததாக இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அது நல்ல செயல். வெளிப்படையாகப் பார்க்கும்போது, வேலை இழந்த 15 பேருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தார்கள் என்று பார்க்கும்போது அருமையான செயல் என்று பாராட்டத் தோன்றும். ஆனால் ஒரு மோசமான நோக்கத்தோடு செய்யப் பட்ட நல்ல செயல் என்று எண்ணும்போது தற்காலிகமாக, கிளர் விளம்பரத்திற்காக அரசாங்கம் செய்த வேலையே தவிர, தொழிலாளர்கள் மேல் எடுத்துக்கொண்ட அக்கறையினால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்குக் காட்டுகின்ற ஆர்வத்தால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாகச் செய்யவில்லை; அரசாங்கத்தின் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலூர் மருத்துவமனை மட்டுமல்ல. இந்த விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று ஆளும் கட்சி பத்திரிகைகளும், பேச்சாளர்களும் அவர்களுடைய பிரச்சார இயந்திரத்தை முடுக்கிவிட்டார்கள். வேலூர் மருத்துவமனை விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள்; எதிர்க்கட்சிகள் அந்த நிர்வாகத்தை ஆதரிக்கின்றன என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் இந்த நாட்டிலே இருப்பவர்கள் இதை ஒரு தொழிலாளர் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வேலூர் மருத்துவமனை விவகாரம் முடிந்துபோன ஒன்று. அது மட்டுமல்ல. அதற்கும் இந்தத் தொழிலாளர் நல மானியத்திற்கும் சம்பந்தமில்லை. அது ஐ.டி.-ஆக்டிலும் வராது இதிலும் வராது. அதனால் இந்த மானியத்தைப்பற்றி பேசினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அது இந்த மானியத்தில் வராது; அது தொழிலாளர் பிரச்சினை அல்ல; தொழில் தகராறு சட்டத்தில் வராது என்பதை நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதால் நான் இதைக் கூறினேன்.

உடனடியாகத் தீர்ந்துவிடாது. உடனடியாகத் தீர்வு காணவும் முடியாது. படிப்படியாகத்தான் அரசின் கவனத்திற்கு வந்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் தொலைபேசி மூலமாகக் கூட எனக்கு இந்த விபரத்தைச் சொல்லியிருக்கலாம். அப்படித் தெரிவித்திருந்தால், இப்படிப்பட்ட பிரச்சனை இருந்தால் உடனடியாக பரிகாரம் காண்பதற்கு கூட அல்ல, என்ன பிரச்சனை என்று விசாரித்துவிட்டு வந்திருக்கலாம்.

இங்கேயிருந்து நான் போகிற பாதையில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கலாம். அவ்வளவும் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. கன்னியாகுமரிக்கு நான் போய்க்கொண்டிருக்கிறேன். வழியிலே 10 சம்பவங்கள் இருக்கும். போகிற இடங்களில் எல்லாம் என்னென்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டு போக முடியாது. சூழ்நிலைகளை உணர்ந்து குற்றச்சாட்டுகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : very sorry, Mr. Deputy Speaker, the Hon. Minister seems to be offended. நான் அன்றைய தினம் அமைச்சரை அங்கே சந்திப்பதற்குள்ள சூழ்நிலை இல்லை. அவர்களுடைய கட்சிக்காரர்கள் நிறைய சூழ்ந்துகொண்டிருப்பார்கள். எனக்குத் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்னேன். நண்பர் கூப்பு அவர்கள் இந்தப் பிரச்சனைப்பற்றி அமைச்சரிடம் பேசியதாக கேள்விப்பட்டேன். அமைச்சர் நினைத்திருந்தால் இந்தப் பிரச்சனையை 20 நிமிடங்களில் தீர்த்திருக்கலாம். தனியார்களுக்கு அந்த ரூட்டுகளைக் கொடுத்ததை கான்சல் செய்திருக்கலாம். ஆர்.டி.ஓ.-வைக் கூப்பிட்டு டெம்பரரி பெர்மிட் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கலாம். பி.ஆர்.சி.யைக் கூப்பிட்டு அந்த ரூட்டுகளில் பஸ் விடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சரவர்கள் அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சரை அப்படி முயற்சி எடுத்துக்கொள்ள அங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் வட்டச் செயலாளர்களும் விட்டிருக்க மாட்டார்கள்; அவர்கள் எல்லாம் பூர்ஷ்வா மனப்பான்மையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருப்பதாகக் குறிப்பி-





டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்லிக்கொள்வதை வைத்துச் சகோதரர் அவர்கள்தான் திருத்திக்கொள்ள வேண்டுமே அல்லாமல் திருத்திக்கொள்ள வேண்டியவன் நான் அல்ல. இன்றைக்கு அப்படி ஒரு நிலைமை வளர்ந்திருக்கிறது. இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். ஒவ்வொரு தொகுதியிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் தொழிலாளர்களோடு உறவு கொண்டு இந்த மாதிரி பிரச்சினைகளில் தலையிட்டு அரசாங்க நிர்வாகத்தை முதலாளி நிர்வாகம் கெடுக்க முடியாது என்ற நிலை இருந்தால் நிச்சயமாக இவ்வளவு விவகாரங்கள் வந்திருக்காது. சிம்சன் போன்ற விவகாரங்கள் நிச்சயமாக வந்திருக்காது. இப்படிப்பட்ட விவகாரங்களை இந்தச் சர்க்கார் சந்தித்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த மனப்பான்மை இன்று முதலமைச்சரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசி உறுப்பினர் வரை நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறோம். நான் சொன்னது ஒரு சின்ன உதாரணம்.

(மாலை 5-30)

இன்றைக்கு நம்முடைய ஆறுமுகம் அவர்கள் இவ்வளவு வருத்தப்படுகிறார்கள். சர்க்கரை ஆலை வேலை நிறுத்தப் பிரச்சினையில் என்ன ஆயிற்று? அமைச்சர் அவர்கள் கூட பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடந்தது 20-ஆம் தேதி. வேலை நிறுத்தம் ஆரம்பமாகப் போகிறது. எனக்கு 3 நாட்கள் டைம் கொடுங்கள், சமரசப் பேச்சை தொடர்ந்து ஒரு நல்ல முடிவு காணலாம் என்றார். 23-ஆம் தேதி ஆன பிறகும் சமரசம் வரவில்லை. ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஒரு சமரசம் செய்து வைக்க முடியாத காரணத்தினால்—7 சர்க்கரை ஆலைகள் அரசாங்கத்தின் சர்க்கரை ஆலைகள்—9 சர்க்கரை ஆலைகள் தனியார் ஆலைகள்—இந்த 7 அரசாங்கக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றவற்றுக்கு முன்மாதிரியாக இருந்திருந்தால் கூட மற்ற தனியார் சர்க்கரை ஆலைகளிலும் ஒரு சமரசம் ஏற்பட உதவியாக இருந்திருக்கும். அவர்களும் பயப்படக்கூடும். ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியுற்று—வேலை நிறுத்தம் 23-ஆம் தேதி தொடங்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பங்கேற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற தொழிலாளர் சங்கத்திற்கு திரு. மூர்த்தி

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 4

இன்னும் அதில் பிரட்டனும் அடங்கியிருக்கிறது. "காலம் தாழ்த்தாமல் வேலைக்குத் திரும்புங்கள். எதிர்காலத்தில் நிர்வாகம் உங்களை வேலை நிறுத்தம் காரணமாக பழிவாங்காமல் பார்த்துக்கொள்கிறோம்" என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

**திரு. எம். செல்வராஜ் :** மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுகிறது என்கிற ஒரு எண்ணம் தொனிக்கிற வகையில் இங்கே சொன்னார்கள்.

ஏற்கனவே சர்க்கரை ஆலை சம்பந்தமாக—அந்தத் தொழிலாளர்களும்—நிர்வாகமும் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னைத் தலையிட்டு ஒரு சமரசம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்ட காரணத்தினால்—அதுவும் முதலில் நடத்திய சமரசம் தோல்வி அடைந்த பிறகுதான் 1 மாத காலத்திற்கு மேல் வேலைநிறுத்தம் நீடித்துச் சென்றுவிட்டது என்ற பிறகு—நான் தலையிட்டு ஒரு சமரச முடிவு அருணா ஆலை சம்பந்தமாக ஏற்பட்டது. அதைத் தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதோடு அறிவித்ததைவிட இரண்டு மூன்று சலுகைகள் அதிகமாகத் தொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்து நல்ல முறையில் அந்த ஆலை இன்றைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களில் யாரும் பழிவாங்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** [illegible] நேரமாக இருக்கிற காலத்தில் சிறு சிறு விவசாயிகள் எல்லாம் கரும்பு காய அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன—ரொம்ப பிரச்சினையான சமயம்—15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு—கதவடைப்பு செய்யப்படுகிற நேரத்தில் தொகுதி எம்.எல்.ஏ. என்ற அந்தப் பரிவும் அக்கறையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை—ஒரு மாதத்திற்குமேல் போராட்டம் நடக்கிறபோது தொழிலாளர்களது இணைப்பை உடைக்க சதி நடக்கிறது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் அருணா ஆலை சம்பந்தமாக எண்ணிப் பார்த்து அறிக்கை தருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி—அங்கே வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிப்புச் செய்திருக்கிற நேரத்திலேயே இவர் இங்கே இதுபோல அறிக்கை கொடுக்கிறார். கட்சி அவர்மீது எடுத்த நடவடிக்கை என்ன?



1975 ஏப்ரல் 4] [திரு. பெ. சீனிவாசன்]

தி.மு.க. தொழிற்சங்கத்தின் சார்பில் சத்தியா ஸ்டுடியோ கதாநாயகன் ரங்கசாமி—காட்டூர் கோபால் ஆகியவர்கள் அங்கே சக்தி சர்க்கரை ஆலை சம்பந்தமாக சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடுகிறார்கள். ரெங்கசாமி இண்டர்நேஷனல் தொழிற்சங்கத் தலைவர்—கட்சி என்கிற குறுகிய மனப் பான்மை கிடையாது—இங்கே தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற போது அங்கே சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடப்படுகிறது.

**திரு. எம். செல்வராஜ் :** தோழர் மூர்த்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நீக்கி வைத்த பிறகுதான் இந்த உடன்பாடு ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** சக்தி சர்க்கரை ஆலையில் காட்டூர் கோபால் கையெழுத்திடலாமா என்கிறார். தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எதை எதை கேட்டார்களோ அதை அந்த நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. உடனே அந்த ஆலைத் தொழிலாளர்களும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமான முறையில் அங்கே ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப் படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கச் செயலாளராக இருந்தவர். தனக்குச் சம்பந்தம் இல்லாத துறையில் ரொம்ப நாளாக இருந்தவர்—அதை வெளிப் படுத்திக்கொண்டு விட்டார். அங்கே 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் களது கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குப் போய்விட்டார்கள். அங்கே சமரசம் ஏற்பட்டு விட்ட பின் அதில் கையெழுத்திடுவதில் என்ன இருக்கிறது என்று தெரிய வில்லை. எனக்கும் தொழிற்சங்கத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றிச் சொன் னார்கள். நிறைய சம்பந்தம் இருக்கிறது. நான் பல தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தியும் இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வீராசாமி அவர்கள் அவருடைய வாதத் திற்காக அவரே எதிராக . . . .

என்ன குற்றம் சாட்டினார்கள்? பல குற்றச்சாட்டுக்கள். பெண்களைக் கடத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியை தீ வைத்துக் கொளுத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியிலிருந்த காஷ் பாக்ஸை எடுக்க முயற்சி செய்தார் என்றெல்லாம் பல செக்ஷன்களைப் போட்டார்கள். மாதவனுக்குத் தெரிந்துதான் கைது செய்தார்கள். நான், இங்கு வந்து அண்ணாவுடன் தீவிரமாக வாதாடினேன். அண்ணா அவர்கள் தலையிட்டு சமாசம் செய்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அரசாங்கம், கலைஞர் அவர்கள் தலைமையிலேயிருக்கிற அரசாங்கம் முழுக்க முழுக்க நீர்வா முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றே ஒன்று, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்று ஒன்று என்றால், இரவு 10.00 மணியாகும். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** 5, 6 பேர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிக்கொண்டே போனால் முடிவதற்கு ராத்திரி பத்து மணியாகிவிடும்.

**திரு. பெ. சீனிவாசன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இண்டியா மீட்டர்ஸ்பற்றி இங்கே கே.டி.கே. அவர்கள்கூடச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இடைக்கால நிவாரணம் தருவதாகச் சொன்னார்கள். தந்ததாகத் தெரியவில்லை. உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்கின்ற போது—இந்த ஸ்தாபனத்தை நடத்துகின்ற யாரோ சம் அய்யர் என்று நினைக்கிறேன், பெயர் ஞாபகமில்லை, ஆர். பி. ஐயர் என்கிறார்கள். அவரால் தான் இரண்டரை கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர் பிர்லாவினுடைய கையாள் என்றுகூடச் சொல்கிறார்கள்—டெல்லியிலே ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களே கூறுகிறார்கள்—ஆளுங்காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் அழைத்துக்கொண்டு அல்லது அவர்களை யாவது அனுப்பி அந்தத் தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்க்கவேண்டும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டும். அவர்கள் இப்போது எந்தக் கடையிலேயும் சாமான்கள் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். காரணம் 10 ரூபாய் ஷேர் 8 அணா மதிப்புக்கு வந்துவிட்டது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





***திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதித் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

வீட்டு வசதித் துறையிலே நம்முடைய தமிழகத்திலே மகத்தான சாதனையைப் புரிந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களுக்காகட்டும், நடுத்தர மக்களுக்காகட்டும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக இருக்கட்டும் சமுதாயத்திலே உள்ள அத்தனை பேர்களுக்கும் வீட்டு வசதித் துறையின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து வசதிகளைச் செய்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே கிராமப்புறங்களில் உள்ள மக்களை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். கிராமப்புறங்களிலே இப்போது வீட்டு வசதித் துறை செயல்படுகிறது. இருந்தாலும், மேலும் விரிவுபடுத்தவேண்டிய நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதி சங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஊராட்சிகளிலே உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குக் கடன்கள் கிடைத்து அவர்கள் வீடுகளைக் கட்டமுடியும். எங்கள் பகுதியிலே நீண்ட நாட்களாக ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேலூர் வட்டத்திலே உள்ள ஒடுகத்தூரிலே உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம். விரைவில் அதற்காக அனுமதி தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர் நல மானியத்திலே சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் தொழி லாளர் நிலை பற்றிப் பேசும்போது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தைப்பற்றி அதிகமாக இங்கே பேசினார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் எங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் 1 லட்சம் டன் கரும்பு அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்படுத்த எதிர்க் கட்சிக்காரர்கள் முயற்சிக்கக்கூடாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இதனால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயோ எடுத்துக் கொண்டு போகிற காரணத்தாலே குறுக்கிடுகிறேன். கடைசியிலே விளக்கம் சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் இந்தச் சர்க்கரை ஆலைப் பிரச்னையைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே பேசினார்கள். அது ஆண்டி-லேபர் பாலிசி என்று சொன்னார்கள். நான் இப்பொழுது ஆண்டி-லேபர் பாலிசி என்பதற்குப் பொருள் விளங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி—இலாகாவைப் பற்றி குற்றச்சாட்டு. அந்த இலாகாவிலே இருப்பவர்களுக்கு முதலாளிகளைத் தெரிகிற அளவுக்குத் தொழிலாளர்களைத் தெரியவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள். ரொம்பக் கடுமையான குற்றச்சாட்டு. தொழிற்சங்கத் தலைவர் யாரும் சொல்லாத குற்றச்சாட்டு. அந்த இலாகாமீது அப்படிப்பட்ட களங்கம் இது வரையில் வரவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைப் பிரச்னையிலே வேலை நிறுத்தம் நடந்தது என்று கூப்பிட்டுப் பேசவில்லையென்று திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். சர்க்கரை ஆலைப் பிரச்னையில் உட்கார்ந்து பேசினோம். உத்தரப் பிரதேசத்தில், முதலமைச்சர் பகுகுணா பேசினார். இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் பேசினார். அவர் ரூ. 305 தந்தார். தேவராஜ் அர்ஸ் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ரூ. 306 தந்தார்கள். நாங்கள், தொழிலாளர்களுக்கு எதிராக நடத்துகிற அரசாட்சியில் ரூ. 325 தந்தது குறைபாடே தவிர, எனக்குத் தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலே நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்களிடத்திலே பேசிவிட்டு, எதிர்பார்க்காத தொகையைத் தந்தேன். அவர்கள் எதிர்பாராதத் தொகையைத் தந்தவுடனே எங்கே தங்களுக்குத் தொழிற்சங்கத்திலிருக்கிற பிடிப்பு போய்விடுமோ என்று சில தவறுகள் நடத்தினார்கள். அவற்றையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்ல விரும்பவில்லை. தொழிற்சங்கம் நல்ல நோக்கத்தோடு நடக்க வேண்டுமென்பதால், அதைச் சொல்லவில்லை. ரூ. 325-க்கு மேல் யார் தந்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம். நீங்களே சொல்கிறீர்கள், மெஜாரிட்டி செய்வதால் எல்லாம் சரியாகிவிடுமா என்று கேட்கிறீர்கள்? மைனாரிட்டிக்குப் பாதகமா இல்லையா என்று கேட்கிறீர்கள். அரசாங்கம் செய்தது நியாயமான தீர்ப்பு அல்லவா? தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு சர்க்கரை ஆலைப் பிரச்னையில் எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லுங்கள். தனியாக வேண்டுமானால், உங்கள் தலைவர்களைக்



கூப்பிட்டுப் பேசிப் பாருங்கள், முதலாளிகள் எங்களிடத்தில் வேதனைப் பட்டார்கள்.

**திரு பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, நான் சொல்கிற கோணத்தை விட்டுவிட்டு, வேறு கோணத்தில் பேசுகிறார்கள். அவர்கள் கேட்டது ரூ. 425. நீங்கள் ரூ. 325 கொடுத்தீர்கள். இதிலே, நீங்கள் ஒப்புக் கொண்டீர்களா இல்லையா என்பது வேறு. நீங்கள் மெஜாரிட்டி தொழிலாளர்கள் சொல்வதைக் கேட்கவில்லை. 11 தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்கவில்லை. மூர்த்தி சொல்வதை அரசு கேட்கவில்லை. மைனாரிட்டி தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்டு, ஊருக்கு ஊர் அறிக்கை கொடுக்கிறீர்கள். ஒழுங்காக வேலைக்குப் போகாவிட்டால், நாளையதினம் பழிவாங்கப்படுவீர்கள் என்கிற பாவனையை அளிப்பதாகாதா உங்களது அறிக்கை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** மூர்த்தி அவர்கள் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர்தான். தமிழ்நாட்டிலே என்னுடைய ஊரைச் சேர்ந்த புகளூர் ஆலைதான் மாதக் கணக்கிலே மூடிக் கிடந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரிலேயிருந்த மில்லும் என்னுடைய ஊரிலேயிருந்த மில்லும் மூடியிருந்ததால், பேச வேண்டியிருந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரில் உள்ள மில் நீண்ட நாளைய மில். அவர்கள் தன்மைக்கு ஏற்ப பேசினார்கள். என்னுடைய ஊரில் டெக்கான் ஷுகர் மில்—அதனுடைய தன்மைக்கு ஏற்ப, அமைச்சர் சொல்வதற்காக ஸ்டிரைக் செய்து வந்தார்கள். அதாவது, அமைச்சர் பெரியவரா, மூர்த்தி பெரியவரா என்ற தனித் தன்மையைக் காண்பிக்க, தங்கள் பலத்தைக் காண்பித்தார்களேயொழிய, தொழிலாளர் போராட்டம் நடக்கவில்லை. அதனால்தான் கரும்பு உற்பத்தி செய்கிற தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 20 டன் குறைந்திருக்கிறது. தொழிலாளர் என்றால், ஒரு சாப்பினரை மட்டும் நமது அ.தி.மு.க. நண்பர் சீனிவாசன் பார்க்கிறார்கள். கரும்பு வைத்திருக்கிற தொழிலாளர் பிரச்னையை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களுடைய உண்மை நிலையைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. சர்க்கரை ஆலையிலே ஒரு போராட்டம் நடக்கிறபொழுது தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையோ அல்லது தனிப்பட்டவர்களையோ சொல்ல ஆரம்பித்தால்—இதிலே நடந்த விஷயம் பற்றி எங்களுக்கு ஒரு கருத்து இருக்கும்—முடிவில்லாமல் போகும். அதையெல்லாம் ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியிலே வைத்துக்கொள்ளலாம். இங்கு அவர் ஒரு கருத்து

சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, தனிப்பட்டு எப்படி நடந்துகொண்டு போனார் என்று சொல்ல ஆரம்பித்தால், அது எங்கோ போகும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் தனிப்பட்ட எந்தத் தொழிற்சங்கத் தலைவர் மீதும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. கன்சிலியேஷன் பேசும்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் விசாரித்துவிட்டுத் தான் தீர்ப்பளிக்கிறோம். அவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகத்தான் தீர்ப்பளித்திருக்கிறேன். அதைமட்டும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சரவர்கள் முயற்சியைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அவர்கள் கேட்டது—கொடுத்தது வேறு விவகாரம். ஆனால் அந்தப் போராட்டத்தை உடைக்க காட்டூர் கோபால், சர்வகட்சியின் ஒரு தலைவர் ரங்கசாமி என்பவர்—ஊருக்கு ஊர் போய் போராட்டத்தை உடைத்தது நோக்கத்தக்கது. . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: ரங்கசாமி ஒன்றும் சர்வகட்சித் தலைவர் இல்லை.

He is an I.N.T.U.C. Labour Leader. He belongs to Indian National Trade Union Congress.

அது சரியாகத் தெரியவில்லை . . . .

திரு. கு. காமாட்சி: ரங்கசாமி ஏதோ சத்தியா ஸ்டுடியோ நாடகத்திலே நடித்த கதாநாயகன் என்று சொன்னார். இப்பொழுது அம்மையார் ஐ.என்.டி.யு.சி லேபர் லீடர் என்கிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை அவர் . . .

திரு. பெ. சீனிவாசன்: காமாட்சி அவர்களுக்குப் புரிய வைக்கக் கூடிய சக்தி எனக்கும் இல்லை. யாராலும் புரிய வைக்கமுடியாது. உங்களுக்குப் புரிய வைப்பது ரொம்ப சிரமம்.

தொழிலாளர் பிரச்னையில் ஒரு தொழிற்சங்கம் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால், தொழிலாளர்களுக்கான நியாயமான காரணங்களை அணுகாமல் இந்த அரசாங்கம் செய்கிறது என்ற காரணத்தால்தான் இதனை மீண்டும் மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு ஆலங்குளம் சிமெண்ட் ஃபாக்டரியிலே ஸ்டிரைக் நடந்தது. அந்த ஸ்டிரைக்கை ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பு அவர்கள் நல்ல விதத்திலே உதவி செய்து நடத்திவைத்தார். அரசாங்கம் எந்த அளவு பிரச்னையைத் தீர்க்கத்





தவறியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். முன்னால் இருந்த தொழிலமைச்சருக்கு வேண்டிய அஸிஸ்டென்ட் டைரக்டரோ, யாரோ அங்கே இருக்கிறார். அவருடைய 'விம்ஸ் அன்ட் ஃபான்ஸி' க்காக, பிரச்னை தீர்க்கப்படாமல், அங்கே போராட்டம் நடந்தது. அந்த அளவுக்கு இந்த அரசு தொழிலாளர் நல அரசே இல்லையென்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சொந்த அனுபவத்தையே கூறுகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபொழுது—பேரறிஞர் அண்ணா இருந்த பொழுதும் அந்த அநியாயம் நடந்தது. நான் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்தினேன். அங்கே, துலுக்கப்பட்டியில் போராட்டம் நடத்தினேன். ஒரு துரும்புக்குக்கூட சேதமில்லை. 10,000 பேர் போராட்டம் நடத்தினோம். எல்லோரும் ஆதரவாக இருந்தார்கள். எல்லா கட்சிகளும் சேர்ந்து நாங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். ஆனால் திடீரென்று என்னைக் கைது செய்தார்கள். நான் சென்னைக்கு வந்தவுடன் அண்ணா அவர்களைப் பார்த்து, என்னைக் கைது செய்தது உங்களுக்கு முன்னாலே தெரியுமா, பின்னாலே தெரியுமா என்று கேட்டேன். அண்ணா அவர்கள், எனக்குப் பின்னால்தான் தெரியும். அதோடு விட்டுவிடு, அதற்கு மேல் கேட்காதே என்றார்கள் . . . (திரு. வீராசாமி குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

திரு. நா. வீராசாமி: சார், அவர் யீல்டாகிவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள், சீனிவாசன்.

திரு. கு. காமாட்சி: அவர்தான் யீல்டாகிவிட்டாரே. இரண்டு பேரும் யீல்டாகிறார்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் இரண்டுபேரும் யீல்டு ஆகிறார்கள்—அவர் யீல்டாகிறார் என்றால் நான் எதற்காக இருக்கிறேன்?

திரு. பெ. சீனிவாசன்: திரு. வீராசாமி அவர்களுக்கு அந்த நேரத்திலே நடந்திருப்பது தெரிந்திருக்காது. அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரி என்பது எனக்குத் தெரியாதா? அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரியாக இருக்கும்போது, ஆளுங்கட்சி உறுப்பினரை, தொழிற்சங்கத் தலைவரை கைது செய்தார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், என் மேல்

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

அதுவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே அதிகமாக அவர்கள் கவனம் செலுத்தாமல் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நல்ல நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்க வேண்டுகிறேன். அந்தப் பணியிலே அவர்கள் ஈடுபட்டால் அவர்களை நாம் மனமாரப் பாராட்டமுடியும். ஆனால் அதை விட்டு விட்டு காட்டூர் கோபால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படுவது விவசாயிகள், அன்னியச் செலாவணி குறைகிறது என்ற இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அவர்கள் கருத்திலே கொண்டு அப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவு அளிக்காமல் இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றுக்கொண்டதற்குப் பிறகு பல்வேறு தொழிலாளர்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைத்திருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றவை எவையென்று அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் பிரச்னை, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னை, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னை இப்படிப் பல்வேறு பிரச்னைகளை நம்முடைய அரசு தீர்த்து வைத்து இருக்கிறது. அதைப்போலவே மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே அச்சுத் தொழிலாளர்கள், திரையரங்குகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், வியாபாரக் கூடத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், கடைகளிலே உள்ள தொழிலாளர்கள், மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் அரசு சட்டத்தின் மூலமாகக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொல்லியதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள பீடித் தொழிலாளர்களும் தோல் பதனிடும் தொழிலாளர்களும் மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளார்கள். அவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் அறிவோம். நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு சட்டங்களைப் போட்டு அவர்களுக்கு உதவி செய்தாலும் கூட அவர்கள் இன்னும் கஷ்டப்படுகிற நிலைமையில்தான் இருக்கிறார்கள். இதிலே நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிலை மிகவும் வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் அந்தத் தொழிலாளர்கள் கணிசமான அளவிற்கு இருக்கிறார்கள். தோல் பதனிடுகிற தொழிற்சாலைக்குள் நுழைந்து பார்த்தால் நிச்சயமாக 5 நிமிடம்கூட நம்மால் இருக்கமுடியாது. அந்த அளவிற்கு



1975 ஏப்ரல் 4] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

நாற்றம் வீசும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அந்த முதலாளிகளோடு கலந்து பேசி நம்முடைய அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நம்முடைய அமைச்சர் . அவர்கள் தொழிலாளர் நலத்துறையோடு, வீட்டுவசதித் துறையையும் சேர்த்து நிர்வகிக்கின்றார்கள். பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி செய்து கொடுக்கக்கூடிய முறையில் அந்த முதலாளிகளோடும் கலந்துபேசி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிலிருந்து மானியம் பெற்றுக்கூட இந்த வீட்டுவசதித் திட்டத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். அங்கே இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்களையும் தோல் பதனிடும் தொழிலாளர்களையும் யாருக்காவது சொந்தமாக வீடு இருக்கிறதா என்று கேட்டுப் பார்த்தால் கிடையாது என்றுதான் சொல்வார்கள். ஆகவே அந்த பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று நெசவுத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த வசதியைச் செய்துகொடுக்கவேண்டும். பீடித் தொழிலாளர் காலனி, தோல் பதனிடும் தொழிலாளர் காலனி, நெசவுத் தொழிலாளர் காலனி என்ற முறைகளில் வீடுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிலேறன்.

சி.எம்.சி. பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் சட்டத்திற்கு அது உட்படாவிட்டாலும் மனிதாபிமானத்தோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 15 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் அல்லலுக்கு உள்ளாகாமல் அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து நம்முடைய அரசை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், சிம்சன் முதலாளிகளும் ஆரூரான் தொழிற்சாலை முதலாளிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அவர்கள் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்தே நம்முடைய அரசு தொழிலாளர்களின் பிரச்னையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

[திரு. கோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

சர்க்கரை ஆலைத் தொழில்பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் பேசினார்கள். சர்க்கரை ஆலை (Seasonal Industry) சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் 6 முதல் 8 மாத காலத்திற்குத்தான் வேலை கிடைக்கிறது. எஞ்சிய நாட்களுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை ஏதாவது ஒரு முறையிலே ஏற்படுத்தித் தரவேண்டும். வேலையில்லாத நாட் களுக்கு ஊதியமாக ஸ்கில்டு ஒர்க்கர்களாக இருந்தால் 50 சதவிகிதமும், செமி ஸ்கில்டு ஒர்க்கர்களாக இருந்தால் 25 சதவிகிதமும் அன்ஸ்கில்டு ஒர்க்கர்களாக இருந்தால் 10 சதவிகிதமும் தருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். அவர்களுக்குப் போதுமான ஊதியம் வேலையில்லாத நாட்களில் கிடைக்கக்கூடிய வகையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டும். சர்க்கரை ஆலை சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் இ.எஸ்.ஐ. திட்டத்தை அமுல்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.00)

அதைப்போல காட்டிலாக்கா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இது வரையிலும் அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைகளைச் செய்தும், அந்தப் பரிந்துரைகளை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டும், அதை இன்னும் அமலுக்கு கொண்டு வரவில்லை. அதை விரைவில் அமலுக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்டிலாக்காவில் கடைநிலை ஊழியர்கள், 'வாச்சர்கள்' நிரந்தரப் பணியாளர்களாக இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கடைநிலை ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்களை கெஜடெட் ஆபீசர் களாக அதாவது அரசுப் பதிவு அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக இருக்கிறது. அதையும் கவனத்திற் கொண்டு நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் சாலை ஆய்வாளர்களும், இதர ஊழியர்களும் பல ஆண்டுகாலமாக பணியாற்றினாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் இல்லை. ஆகவே, அவர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. கோப்பூர் திருவேங்கடம்]

குறிப்பாக நம்முடைய நாட்டிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலே மிக முக்கியமாக இருக்கக் கூடிய சர்க்கரைத் தொழிலிலும், தோல் தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அந்த அந்நியச் செலாவணியின் பலனைப் பெறுகின்ற மத்திய அரசிடமிருந்து அதிலே ஒரு பங்கையாவது நம்முடைய தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தர நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பாடுபட வேண்டும். அதற் காக மத்திய அரசைக் கோர வேண்டுமென்று இந்த நேரத்தில் மெத்தவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே தொழிற்சங்கங்கள் எப்படியிருக்கின்றன என்றால் ஒரு எண்டர்பிரைசுக்கு ஒரு யூனிட் என்ற விதத்தில், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற விதத்தில் செயல்பட்டு வருகிறது. இதுதான் நம்முடைய அரசின் கொள்கை என்றாலும் இப்பொழுது ஒரே தொழிலில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருப்பதால் பல்வேறு தொழிலாளர் பிரச்னைகளுக்கு வழியேற்படுகிறது. அதையும் அரசு கவனத்திற்கொண்டு அத்தகைய ஒரு திட்டத்தை விரைவில் அமல் படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்பொழுது எந்தவிதமான வேலை நிறுத்தத்திலும் ஈடு படுவதில்லை. அதைப்போல ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்பொழுது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டிலே இரயில்வே தொழிலாளர்கள் ஸ்டிரைக்கே செய்ய முடியாதாம். 'கோ ஸ்லோ' (Go Slow) என்ற விதத்தில்தான் வேலைநிறுத்தம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய நாட்டிலேயும் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் அங்கேயுள்ள பிரச்னை, 55 வயதில் இருப்பவர்கள் 60 வயது வரையில் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர் களுக்கு இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளிலே வாரத்திலே 5 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் பிரச்னையாக இருக்கிறது. இப்படிப் பட்ட மிகவும் குறைந்த பிரச்னைதான் ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலே இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் பிரச்னைகள் பல இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளில், குறிப்பாக நான் பேசிய பிரச்னைகள்

அவர்களுக்கு வசதி பண்ணிக் கொடுக்கக்கூடாது? கவர் போட்டு மூடுவது கிடையாது. இந்தக் குறைகளை எல்லாம் அப்போதைக்கப்போது கண் காணித்துக் களைய முயற்சிக்கவேண்டும்.

டவுனுக்குள்ளே குடியிருக்கும் தொழிலாளிக்கு மூன்று கிலோ அரிசி போடு கிறார்கள். கிராமத்திலிருந்து வந்து வேலை பார்த்துச் செல்லுகிற தொழி லாளிக்கு அந்த 3 கிலோ அரிசி கிடையாது. ஒரே ஸ்டோரில் ஏன் இந்த நிலை? ஒரே ஸ்டோரில் இரண்டு விதமான கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. கிராமத்தில் சோளம், ராகிதான் போடுகிறார்கள். அவன் அரிசி எப்படி வாங்குவது? அவர்களுடைய நிலையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையில் இதே பிரச்சினை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லாத் தொழிற்சங்கத்தையும் சேர்ந்த தொழிலாளர்களும் சேர்ந்து உணவு, அரிசி நியாய விலையில் போடவேண்டு மென்று கேட்டார்கள். அனைத்துச் சங்கம்—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம், எச்.எம்.எஸ்., ஏ.ஐ.டி.யு.சி. எல்லோரையும் தொழிலாளர் களுக்காக ரேஷன் கேட்ட காரணத்திற்காக கைது செய்து விட்டார்கள். மலையில் வாழ்பவர்களுக்கு வேறு வழி என்ன? அவர்களைக் கைது செய்திருக் கிறார்கள். அங்கிருந்து காதம் வருகிறது. தந்தியடிக்கிறார்கள். மலிவு விலையில் அங்கிருக்கும் முதலாளி அரிசி கொடுக்கவேண்டுமென்று அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் நிலை என்ன ஆவது?

சோன்கோட்டில் கூடலூர் தாலுகாவில் இலங்கை அகதிகள் தேயிலை தோட்டத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கூலி 3 ரூபாய்; வேறு எஸ்டேட்டில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு 6 ரூபாய். மற்றவர்கள் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய். இவர்கள் பத்து கிலோ பறித்தாலும் 30 கிலோ பறித்தாலும் 3 ரூபாய்தான். ஒரே எஸ்டேட்டில் இந்த நிலை ஏன் இருக்கிறது? வெளியே இருந்து வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை நீடிக்கக் கூடாது.

வீட்டு வசதி, மற்ற வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள் எல்லாம் மிகவும் குறைவு. பாம்பு மற்ற துஷ்ட ஜந்துக்கள் எல்லாம் அவர்கள் வீட்டில்தான் இருக்கும். புதர்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அமைச்சர்கள் அந்த வீடு களை எல்லாம் சென்று பார்க்க வேண்டும். மாண்புமிகு ஓ. பி. ராமன் அவர்கள்





ஒரு முறை இந்தக் குடியிருப்புகளைப் பார்வையிட வந்தார். மலை மேலே இருந்து பார்க்கக்கூடிய ஒரு வீட்டு லைனுக்கு மட்டும் வெள்ளை அடித்திருந் தார்கள். இந்த நிலை நீடிக்கக் கூடாது.

ஒருவனுக்கு சீக்கு என்றால் அவன் வைத்திய வசதி பெற ஆறு மைல் நடந்து செல்ல வேண்டும். பஸ் வசதி ஒன்றும் கிடையாது. அறிக்கையில் இந்த மலைவாழ் மக்களுக்காக என்னென்னவோ செய்வதாகக் குறிப்பிடப்பட் டிருந்தாலும் இதெல்லாம் அவர்களைப் போய்ச் சேருவதே கிடையாது. பணம் செலவழித்தால் மட்டும் போதாது, அது அவர்களை எட்டுகிறதா என்று கண் காணிக்க வேண்டும்.

சென்னையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிலாளர்கள் டி.ஏ. 18 பைசா கேட்கிறார்கள். லேபர் டிப்பார்ட்மெண்ட் வரை பேசியாயிற்று. தொழி லாளிக்கு 61 ரூபாய் டி.ஏ. கொடுங்கள் என்று கேட்டார்கள். முதலாளிகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். பிறகு 61 ரூபாய் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். லேபர் செக்ரடரி வரை பேசியாயிற்று. கமிஷன் பேசி யாயிற்று.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சதர்ன் ஸ்ட்ரக்சுரல் பிரச்சினை சுமுக மாக முடிந்து தற்போது வேலை நடந்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: அது விவரம் எனக்குத் தெரியாது. இதற்கு முன்னால் என்னிடம் புகார் சொன்னார்கள். எப்படி முடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

இந்தியா மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை என்னவாயிற்று? நமக்கு மீட்டர்கள் தேவை. நல்ல மீட்டர்கள் தயாரிக்கிறோம் என்று தொழிலா ளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் அதை மூடி வைத்திருக்கிறீர்கள்? அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டாமா?

பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966-ல் வந்தது. சுப்ரிம் கோர்ட் வரை முதலாளிகள் போனார்கள். அதை அமலுக்குக் கொண்டு வரலாம் என்று சொல்லிவிட்டார்கள். எத்தனை இடங்களில் அதை அமலாக்கியிருக்கிறார்கள்? பல பேர் இன்னும் திண்டாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டம் இருந்தும் ஏன் அமலாக்கப்படவில்லை?

காஸ்மாபாலிடன் கிளப் தொழிலாளர் பிரச்சினை. ஒரு ஆளுக்கு 42 வருஷம் சர்வீஸ். சம்பளம் மாதம் 180 ரூபாய். ஆங்கிலோ இந்தியன் லேடிக்கு—7 குழந்தைகள், 150 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு என்ன பண்ண முடியும்?

சிலவற்றைக் கவனத்திற்கொண்டு அமைச்சரவர்கள் அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொண்டு, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கட்சியின் சார்பிலேயும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் பேரிலேயும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி, தொழிலாளர் நலனோடு சமுதாயத்தின் நலனும் பிணைந்திருப்பதால் இந்தத் தொழிலிலே இருக்கிற இலாக்காவிலே சுறுசுறுப்பான நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதிலே அவசியமிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ஒவ்வொரு ஆண்டும் நாம் கணக்குப் பார்த்தால் கதவடைப்புகள் அதிகமாக அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்கள் அதிக வேலை நாட்களை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறி அமைச்சரவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், 1974 ஆம் ஆண்டில் 316 தொழில்கள் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறப்படுகிறது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற வாய்ப்பை அதிகமாக உண்டாக்க வேண்டும். அதன்மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அது எந்த நிலையிலிருக்கிறது? கிட்டத்தட்ட 44 இலட்சம் நாட்கள் வேலையிழப்புக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அந்த இலாகா கண்டுபிடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படியே போவதன் மூலம் சமாதானங்கள் சொல்வதின்மூலம் நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இன்றைக்கு நமது நிலைமைகள் முறைப்படியே முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம் என்னவென்றால், தொழில் முதலாளிகளின் வெறும் வறட்டுக் கௌரவத்தினாலேயே 75 சதவிகிதம் கதவடைப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதைச் சொல்லிக்



கொண்டே வருகிறோம். காரணம் என்னவென்று கேட்டால் இவ்வளவு முன்னேற்றமடைந்த பிறகும்கூட, இவ்வளவு தொழிற்சங்க இயக்கங்கள் நடந்து, போராட்டங்கள் நடந்து, தொழிலாளர்கள் உரிமைகளை பெற்ற பிறகும் கூட இன்னும் பல தொழிற்சாலைகளில் பெரிய முதலாளிகள், செல்வாக்கு பெற்றவர்கள் இன்னும் அந்தத் தொழிலாளர்களுடைய நியாயமான கஷ்டங்களை உணர மறுக்கிறார்கள். காரணம், அவர்களுடைய வறட்டுப் பிடிவாதம்தான்.

உண்மையிலேயே தொழில் தகராறுகளைப் பார்த்தால் நியாயமான உடன்பாடுகூட பல நாட்களுக்குப் பிறகுதான் வரும் நிலைமையிருக்கிறது. அந்த உடன்பாட்டிற்கு முதலிலேயே முயற்சியெடுக்கப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அப்படி வருவதில்லை. நம்முடைய இலாக்காவும், முதலாளிகளும் தொழிலாளர்களும் சலித்து ஓய்ந்த பிறகுதான் ஒரு முடிவிற்கு வருகிறார்களே தவிர இதற்கு முன் நியாயமான முடிவைக் காண முன் வருவதில்லை. எனவே, இதிலே சில முடிவுகளைக் கான நம்முடைய இலாக்கா சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.சி.எல்., டி.சி.எல்., ஆகியோருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்படுகிறது? இரண்டுபேரும் சொன்னால் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு வந்தால் தான் முடிவு சொல்ல முடியும். அவராகவே முடிவெடுத்து அந்த முடிவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும். இதுதான் நியாயம் என்று எடுத்துச் சொல்லும் அளவிற்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கில்லை. இரண்டாவதாக, மேனேஜ்மெண்ட் தரப்பிலே பேச்சுவார்த்தைக்கு வருபவர்கள் அதிகாரம் இருப்பவர்கள் வருகிறார்களோ அல்லது அதிகாரம் இல்லாதவர்கள் வருகிறார்களோ தெரியவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கும்பொழுது கேட்டுவிட்டு வருகிறேன், முதலாளியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லும் நிலையிருக்கிறது. இம்மாதிரி கூட்டுப்பேரம் நடத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை நிச்சயமாக மாற்ற சில அதிகாரங்களை லேபர் டிபார்ட்மெண்டுக்கு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டு உண்மையான நிலைமைகள் என்ன என்று கண்டுபிடித்து அவர்கள் செய்யும் முடிவுகளை அமலாக்க முதலாளிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் முடியாது.

கோவை பஞ்சாலையில் போனஸ் பிரச்னை ஏற்பட்டு, முதலமைச்சரவர்கள் சொன்ன உடன்பாட்டின்படி, போனஸ் பிரச்னையிலே ஏதாவது சம்பவங்கள் நடந்திருந்தால் எந்தத் தொழிலாளியின் பேரிலேயும் நடவடிக்கை எடுக்கக்

[திரு. கே. என். குமாரசாமி] [1975 ஏப்ரல் 4

கூடாது என்று முதலமைச்சரவர்கள் சொல்லி, அதை முதலாளிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரகாசா மில்லில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தீர்ப்பையும் மீறி இந்தப் பிரச்னையில் சிலரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். இதுபற்றி தொழில் இலாக்காவில் சொன்னால் அவர்கள் ஏ.சி.எல் நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரின் தீர்ப்பு ஆகி, எந்தத் தொழிலாளியையுமே டிஸ்மிஸ் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கும்பொழுது 6 தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் முதலாளிகள் பலம் பார்க்கிறார்களா? இப்படிப்பட்ட பிரச்னையில் வறட்டு கௌரவத்தின் காரணமாக இவ்வாறு இருக்கிறது, 3, 4 மாதங்களாக தொழில் இலாக்கா அதிகாரிகளும் தலையிடப் பயப்படுகிறார்கள், காரணம் என்னவென்று கேட்டால் செல்வாக்கு பெற்ற முதலாளி. செல்வாக்கு பெற்ற முதலாளி என்றால் எந்த முதலாளி என்று எங்களுக்குப் புரியவில்லை. பிரச்னை ஒன்றுதான், அதில் செல்வாக்கு பெற்றவர்கள், செல்வாக்கு பெறாதவர்கள் என்று இருக்க வேண்டுமா? ஒரே கருத்துதான், ஒரே பிரச்னைதான். அப்படியிருக்கும் பொழுதுகூட பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அலுமினியம் பேக்டரியில் திரு. சுரேந்திரன் அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்து படாதபாடு பட்டு தொழிற்சங்கமே இல்லாத அளவிற்கு ஆகிவிட்டது. இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு என்ன கூலி கொடுக்கிறார்கள்? எல்லா பேக்டரிகளிலேயும் சம்பள உயர்வு வருகிறது. ஆனால் அங்கே மட்டும் வரவில்லை. 300 ரூபாய்க்குக் குறைவாக அந்த பேக்டரியில் வேலை செய்கிறார்கள். அரசாங்கம் வேண்டுமளவு மின்சாரம் கொடுக்கிறது. ஆனால் இன்றைக்கு 'லே ஆஃப்' செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. எந்தவிதமான சம்பளமும் கிடையாது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தத் தொழிலாளர்கள் அழ வேண்டிய நிலைமையிருக்கிறது.

கார்ப்பரேஷனால் எடுக்கப்பட்ட ஆலைகளிலேயும் நிர்வாகத்தினர் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்த மறுக்கிறார்கள். உள்ளே இருக்கும் லோகல் தலைவர்கள் நிர்வாகிகளிடம் இப்பொழுது சொன்னால் 3 மாதம் கழித்துத்தான் அந்தப் பிரச்னையைப் பரிசீலனைக்கு எடுக்கிறார்கள். அது எப்பொழுது தீரும் என்று சொல்ல முடியாது.



1975 ஏப்ரல் 4] [திரு. கே. என். குமாரசாமி]

இப்போது இரட்டைக் கொள்கை அமலாகியிருக்கிறது. கார்ப்பரேஷன் மில்களுக்கு ஒரு லேபர் ஆபீசர் நிர்வாகம். கார்ப்பரேஷன் அல்லாத தனியார் மில்களுக்கு ஒரு நிர்வாகம். சமீபத்தில் மத்திய சர்க்கார் எடுத்ததற்குப் பிறகு என்ன செய்கிறார்கள்? 15 நாளைக்கு ஒரு முறை பாக்டரி மேனேஜ்மென்டார்கள் வந்து கையெழுத்துப் போட்டுப் போகிறார்கள். வாச்மேனைக் கேட்டுப் பாருங்கள். எப்படி இந்த ஆலைகளை நிர்வகிக்கப் போகிறார்கள் என்று தெரியாது. பிரச்சினைகளை யாரிடத்தில் சொல்லுவது? லேபர் தகராறு வருமானால் தொழிற்சங்கத் தலைவர்கள் யாரிடத்தில் சென்று பேசுவது? எப்படி தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவது? இந்த நிலை நீடித்தால் உற்பத்தி எப்படி பெருகும்? சமுதாயத்தின் நலனை எப்படிப் பாதுகாக்க முடியும்?

இந்த மாதிரி இரட்டைக் கொள்கைத் தேவையில்லை. அரசாங்க ஆலைகளானாலும் சரி, தனி நபர்கள் ஆலைகளானாலும் சரி, லேபர் டிப்பார்ட்மெண்ட் தலையிட அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் உற்பத்தி நஷ்டம் ஏற்படும். தேசவுடைமைக்கு விரோதமான கொள்கை கொண்டிருக்கும் தனி நபர்களுக்குச் சாதகமான நிலையை உண்டாக்கிவிடும். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது.

'லே ஆஃப்' செய்திருக்கிறார்கள். ஆறாயிரம் பர்மெனென்ட் தொழிலாளர்கள், டெம்பரரி தொழிலாளர்கள், ஆக பத்தாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வெட்டினால் எந்த வேலையும் கிடையாது. தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அமைச்சரிடமும், லேபர் டிபார்ட்மென்டிலும், திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிவிட்டோம். அவர்களுக்கு முழு நிவாரணம் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு வேறு தொழில்களுக்கு அவர்கள் செல்லவில்லை. அவர்கள் இந்தத் தொழிலையே நம்பியுள்ளமையால் என்ன செய்ய முடியும்? அவர்கள் எப்படி வாழ்வார்கள்? கோடிக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதித்தாலும் தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது. இதிலே அரசாங்கமும் முதலாளிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஃபாக்டரிகளில், குறிப்பாக பஞ்சாலைகளில் ஆக்சிடென்ட் நடக்கிறது. ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் வந்து பார்வையிடக் காலதாமதம் ஆகிறது. அவர்கள் பஸ்ஸில்தான் வரவேண்டும். இல்லாவிட்டால் முதலாளி காரில் வரவேண்டும். முதலாளி காரில் வந்தால் தொழிலாளி சத்தம் போடுகிறான். என்

இதைச் சொன்னால் சட்டம் கிடையாது என்று சொல்கிறார்கள். சட்டம் இல்லாவிட்டால் சாகவேண்டியதுதான். லாக் அவுட் செய்து விட்டு போய் விட்டார்கள். நாற்பது ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலை. எனவே, சட்டத்திற்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். பல க்ளப்களில் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ரூபாய் 300 வரை சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஜிம்கானா க்ளப்பில் கொடுத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. சட்டத்திற்காக மனிதன் வாழவேண்டும் என்றால் வாழ முடியாது.

டால்மியா சிமெண்ட் தொழிலாளர்கள் ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள். நெகோஷியேஷன் நடந்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 125 சதவீதம் அதிக உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு மின்சாரம் காரணமாக வேலை பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வாழ்க்கை நடத்த ஏதாவது நிவாரணம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலிவு விலையில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்கிறது என்று சொல்கிறீர்கள். அரசு 50 சதவீதம் மானியமும், 25 சதவீதம் முதலாளிகளும் கொடுத்து மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எந்த ஃபாக்டரி முதலாளிகளைக் கூப்பிட்டு இந்த மாதிரி தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது? ஒரு ஆலையில் கூட அமலாக்கப்படவில்லை. மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்றால் 25 சதவீதம் போடவேண்டுமே என்று முதலாளிகள் நினைப்பதால் அதைச் செய்யாது வைத்திருக்கிறார்கள். அதிகப்படியான லாபம் வரக்கூடிய முதலாளிகளிடமாவது இம்மாதிரி மலிவு விலை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமல் படுத்துங்கள் என்று எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும்.

இன்று சிங்காநல்லூரில் உள்ள லேபர் காலனியில் க்வார்ட்டர்ஸ் சுத்தப்படுத்தாமல் இருக்கிறது. லைட் போனால் அந்த ஆள் வாங்கி போடவேண்டும். 15 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு (வாடகை கொடுத்திருந்தால் அதைச் சொந்தமாக்கிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)





அடுத்தபடியாக, சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகளுக்கு வசதி இருக்கிறது. அங்கு குடும்பம் முழுவதும் வைத்திய வசதி பெறுவதால் அங்கு இட நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது 300 படுக்கைதான் உள்ளன. அந்த ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். சோமனூரில் உள்ள வாடகைக் கட்டடத்திற்குப் பதிலாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். பல்லடம் சோமனூர் ஏரியாவில் உள்ள தொழிலாளர்களுக்கு குடும்ப இன்சூரன்ஸ் திட்டம் இல்லை. அவர்களுக்கும் குடும்ப இன்சூரன்ஸ் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் ஆபீசர்கள் அலுவலகம் கோவையில் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அங்கு மனிதன் போக முடியாது. ஒரு கோடியில் வைத்திருக்கிறார்கள். கலக்டர் ஆபீஸ், ஜெயிலில் காலி இடம் இருக்கிறது. அந்த இடத்தில் லேபர் டிப்பார்ட்மெண்ட் தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதிகாரிகள் வந்து தங்குவதற்கு ரெஸ்ட் ஹௌஸ் கட்டித் தரவேண்டும். எங்கெங்கேயோ அதிகாரிகள் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வசதிகள் செய்து கொடுத்து நல்லமுறையில் பணி வாங்க முயற்சிக்கவேண்டும்.

மத்தியஸ்தம் முறையில் ஏற்படுகிற கோளாறுகளைத் தீர்க்க முக்கூட்டுக் கமிட்டி போட்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தால் தொழில் தகராறுகள் குறையும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வாங்கிக் கொடுத்தது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** தொழிலாளர் பிரச்னை குறித்து நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள்மீது அக்கறையில்லாத காரணத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர்கூட இல்லை. இதுகுறித்து தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையிலேயே சொன்னேன். அவர்கள் இருக்க வேண்டும், கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்கு அக்கறையில்லாவிட்டால் நான் என்ன செய்வது?

[1975 ஏப்ரல் 4

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு. சீனிவாசன் அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திரு. குமாரசாமி அவர்களும் தங்கள் தங்கள் கட்சிகளின் சார்பில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் பல்வேறு தொழிற்சங்கங்களில், குறிப்பாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய ஒரு பெரும் தலைவராவார். அதே போல் குமாரசாமி அவர்களும் ஒரு தொழிற்சங்கத் தலைவர்தான். அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கைக்காக பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிய நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக இன்றைக்கு அகில இந்தியாவில் வைத்தே எங்குமே பஞ்சாலைத் தொழிலாளர்கள் பெறாத அளவிற்கு அதிகபட்சமான போனஸை வாங்கிக் கொடுத்தார்கள். அதற்காக யாராவது ஒருவராவது நன்றி தெரிவித்தார்களா என்றால் ஒருவர் கூட இந்த மன்றத்தில் அதைப்பற்றிப் பேசவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் நன்றி தெரிவித்தேன். போனஸ்க்காக நன்றி செலுத்தினேன். அப்படி நன்றி செலுத்தியதை இல்லை என்று சொன்னால் நன்றாகயிருக்காது.

திரு. சு. துரைசாமி: அடுத்து, இங்கு பேசிய எல்லாத் தலைவர்களின் பேச்சுக்களையும் கேட்டேன். மத்திய அரசின் கட்டாய டெப்பாசிட் திட்டம் பற்றி இந்த மூன்று பேர்களில் ஒருவர் கூட கண்டித்துப் பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இன்று விலைவாசிகள் எல்லாம் பெருமளவிற்கு ஏறிவிட்டன என்று பேசுகிறார்கள். பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்று கேட்கிறோம். கொடுக்கப்படுகிற பஞ்சப்படி உயர்வும், சம்பள உயர்வும் தொழிலாளர்களின் கைகளுக்குப் போய் சேருவதில்லை. கட்டாய டெப்பாஸிட்டுக்கு சென்று விடுகிறது. இதைப்பற்றி தொழிலாளர் வர்க்கத்திற்காகப் பேசுகிற தலைவர்களில் ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லையே என்று வருத்தப் படுகிறேன்.



1975 ஏப்ரல் 4]

[திரு. சு. துரைசாமி]

இந்த மன்றத்தில் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் அவர்களுக்கு இருக்கிற சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டுவதே தவிர தொழிலாளர்கள் மீது அக்கறையோடு பேசியதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு முன்னாள் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீது வருத்தம் இருக்கலாம். விருதுநகர் பஸ் கம்பனி முதலாளியோடு நம் அமைச்சர் அவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று பேசுகிறார்—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகர் சென்றிருந்தார். அங்கு 33 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நிவாரணம் காண அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்று சொன்னார்கள். 21-ம் தேதியிலிருந்து அந்தக் கம்பனி கதவடைப்பு செய்யப்பட்டு அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அது கண்டிக்கத் தக்கதுதான். தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று சொல்வது நமது உரிமைதான். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன். அந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ 15 நாட்கள் இந்த மன்றம் நடைபெற்றிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாவது கொண்டுவந்து இந்த மன்றத்தில் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: உறுப்பினர் எப்படி தகவல் தெரியாமல் பேசுகிறார்? நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை என்று அவருக்கு எப்படித் தெரியும்? கொடுத்துவிட்டு நாள் தவறாமல் சபாநாயகர் அவர்களிடம் போய் கேட்டு, இரண்டு தடவை பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பி எக்ஸ்பங்க்ஷன் எல்லாம் நடந்து, இவ்வளவும் நடந்திருக்கின்றன.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி சென்றிருக்கிறார்கள். சென்ற இடத்தில் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையே என்றுதான் எனக்கு வருத்தம்.

(மாலை 6-30)

இந்த அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாக, பூர்ஷ்வா மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். இந்த மன்றத்தில் நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக்





கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக்





கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அகில இந்தியாவில் 203 மில் இல்லை. தவருகப் பேசக்கூடாது. 103 மில்கள் தான் இருக்கின்றன. அம்மையார் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் மட்டும் வைத்துக்கொள்ள விரும்புவதாகச் சொன்னர்கள், அவர்கள் கட்சி ஆளுகின்ற மாநில அமைச்சர்கள் கூட சேர்ந்து கேட்கிருர்கள், நாங்கள் மட்டும் கேட்கிறோம் என்று சொல்லக்கூடாது.

**திரு. சு. துரைசாமி :** அதனால்தான் போன ஆண்டு தொழிலாளர் நல மானியம் வந்தபோது நான் பேசினேன். அகில இந்தியாவில் 103 மில்கள் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வேறு மாநிலத்தில் எடுத்து கொண்ட மில்களில் சம்பளம் கூட சரியாகக் கொடுக்கப்படவில்லை--நம்முடைய பஞ்சாலைகளில் 25 சதவிதம் போனஸ் கொடுத்தோம். தனிப்பட்ட முதலாளிகள் கூட 20 சதவிதம்தான் போனஸ் கொடுத்தார்கள். நாம்தான் உயர்ந்தபட்சம் போனஸ் கொடுத்தோம். இப்போது மத்திய அரசாங்கத்தின் கையில் அது இருக்கிறது. வருகிற ஆண்டில் பார்க்கத்தான் போகிறோம், அங்கேயிருக்கும் தொழிலாளிக்கு என்ன போனஸ் கிடைக்கப்போகிறது என்று.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இன்று தொழிலாளர்களுக்கு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்து இருக்கிறோம். (மணியடிக்கப்பட்டது). பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

நம்முடைய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் பொறுத்தவரையில் இங்கேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசாங்கம்தான் அகில இந்தியாவில் இருக்கிற பஞ்சாலைகளிலேயே உயர்ந்தபட்ச போனஸ் கொடுத்து இருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசின் கட்டாயச் சேமிப்பு இருந்தாலும் கூட, அதிலே இருந்து பாதிக்கப்படாமல் வேறு ஒரு முறையில் நாம் அதிகபட்ச போனஸ் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். அதைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான், இந்த அரசுதான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்று பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், தொழிலாளர்கள் தகராறுகள் சம்பந்தமாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 7,550 வழக்குகள் தொடரப்பட்டன என்றும், சமரசப் பேச்சுவார்த்தையால் தீர்க்கப்பட்டவை 1,478 என்றும், நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை 417 என்றும், மீதி 5,655 இருக்கின்றன என்றும் குறிப்பேட்டில் இருக்கின்றன. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், இந்த வழக்குகளைத் தீர்ப்பதில் ஏன் இவ்வளவு



காலதாமதம், இது உள்ளபடியே வருந்தத்தக்கது. அதை விரைவில் தீர்த்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேகமாக அந்த வழக்குகள் தீர்க்கப்படவேண்டும். அந்த அளவில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சில இடங்களில் லேபர் ஆபீசர்கள், அசிஸ்டென்ட் லேபர் ஆபீசர்கள் கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்புவதில் காலதாமதம் செய்கிறார்கள். அது கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும். அதற்காக உள்ளபடியே அந்தத் துறைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் ஏ. சி. எல். (A.C.L.) கன்சிலியேஷன் ரிப்போர்ட் வருவதற்கு 1 வருஷம், 1½ வருஷம் கூட ஆகிறது. இதனால் உள்ளபடியே தொழிலாளிக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். ஆகவே, குறைந்தபட்சம் 3 மாத காலத்திற்குள் இந்த கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்பி விட வேண்டுமென்று ஒரு வரையறை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கணக்கு கொடுத்ததில் கூட சில வழக்குகள் வேறு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு இருந்தால், அவற்றை எல்லாம் என்று போட்டு அதனால் குறைத்து கணக்கைக் காட்டுகிறார்கள். இது யதார்த்தமான குறைபாடுதான். இதைப் போக்குவதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இப்படி ஏற்படாமல் இருப்பதற்கு அமைச்சர், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அறிக்கையில் நிர்வாகத்தில் 'தொழிலாளர்கள் பங்கு என்று தலைப்பிட்டு கொடுத்து இருக்கிறார்கள். ஏதோ ஒரு குழுவின் அறிக்கை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. விரைவாக அந்த அறிக்கை சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுக்கும் நிலையை ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டு காரணமாக, வேறு பல காரணங்களால் 'லே-ஆப்' கொடுக்கிறார்கள். அப்படி லே-ஆப் கொடுக்கிறபோது பாதிச் சம்பளம் நிரந்தரத் தொழிலாளிக்கு கிடைக்கும். அதை உயர்ந்தபட்சமாக 75 சதவிகிதம் அல்லது முழுமையாகக் கிடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியாவது, மத்திய

அமைத்து தொழிலாளர் பிரதிநிதிகளை வைத்து நியாய விலையில் உணவுப் பொருள்களைக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க முடியும். இந்த அத்தியாவசியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தற்காலிகமாக வேலை செய்பவர்கள் temporary workers who have put in service of 5 or 10 years have not been regularised. என்ற நிலை இருக்கிறது. 5, 10 வருஷங்கள் வேலை பார்த்தும்கூட தற்காலிகமாக பகுதிகளில் பல பேர்கள் பல ஆலைகளில் இருந்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. வேலை தற்காலிகமானது என்று கருதப்படுகிற காரணத்தினால் அதற்குரிய சலுகைகளை வைத்துக் கொள்கிற காரணத்தினால் இவர்களுக்கு நிரந்தரமான வேலை பார்க்கக் கூடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய Provident Fund and other benefits are not available. செக்யூரிட்டி ஆப் ஜாப் இல்லை. குறைந்தது இரண்டு வருஷம் ஒருவர் தற்காலிகமாக வேலை செய்திருந்தால் அவரை நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குரிய உத்தரவை தொழில் அதிகாரிகள் மூலமாக, கமிஷனர் மூலமாக உடனடியாக நிறைவேற்றுவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று முதலாளிகள் தங்களுடைய லாபத்தை அதிகப்படுத்துவதற்காக ரேஷனலைசேஷன் திட்டத்தை, நவீனமுறைப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, இது நல்லது என்பதை ஒத்துக்கொண்டாலும்கூட இதன் விளைவு after-effect of rationalisation cutting off or throwing of certain employees out of employment to improve the quality or the products என்ற நிலை வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, நான் வருந்துகிறேன். I am very Sorry.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே 8 நிமிஷம் ஆகி வி——து.



திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, முதலில் பேசியவருக்கும், பழைய [illegible] நேரம் கொடுக்கப்பட்டது. நாங்கள் [illegible] இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அனுமதி இல்லை [illegible] முதலிலேயே சொல்லியிருப்பேன். எங்கள் கட்சிக்கு இல்லை என்று [illegible] என்று சொல்லி விடுகிறேன்.

I am not able to coherently putforth my points. I am very sorry in Deputy Speaker. Sir, you must give me some more marginal time as you have given to other members. [illegible] கொடுத்துப் பேசினார். பழைய [illegible] வேகமாகப் பேசினார். நான் உண்மையான தொழிலாளர் பிரச்சினையை வேதனையோடு சொல்கிறேன். அமைதியான முறையிலே பேசுகிறேன். இப்படி மணி அடித்து என் நேரத்தைக் குறைப்பது தார்மிகமானதல்ல, நியாயமானதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: ஆகவே, ரேஷனலைசேஷன் மூலமாக ஒரு வகையில் உற்பத்தி பெருகலாம், ஆலையில் முன்னேற்றம் என்று இருந்தாலும்கூட இதை முதலாளிகள் செய்கிறார்கள், தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. [illegible] வேலைவாய்ப்பு அற்றவர் [illegible] என்பது கேள்விக்குறியாக [illegible] என்ன மாற்று முறை வைத்திருக்கிறோம் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, ரேஷனலைசேஷன் [illegible] தொழிற்சாலைகளை [illegible] தேசியமயமாக்கக் கூடாது என்பது என் கேள்வியாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு உண்மையான சோஷலிசத்தில் நம்பிக்கை உள்ள அரசு. பிரச்சாரம் செய்கிற அரசாக இல்லாமல், நடைமுறையில் இதில் நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தினால் பல நல்ல திட்டங்களை, ஆலை முதலாளிகள், பல முதலாளிகள் ஆகிய [illegible] தேசியமயமாக்கியிருப்பதை அனைவரும் பாராட்டுகிறார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள்கூட வெளியில் தனியாகப் பேசும்போது [illegible] இப்படி நல்ல பல திட்டங்களைக்கொண்டு வருகிற அரசு இன்று [illegible] சர்க்கரை ஆலைகளை [illegible] அனுமதி கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்திருக்கிறது. நம் அரசு ஏற்கனவே அந்தக் கருத்தை தெரிவித்திருந்தது. அதை விரைவில் கொண்டுவரவேண்டுமென்று கருதுகிறேன்.

[திரு. … ] [1975 மார்ச் 4

கடைசியாக, தொழிலாளர்களின் கம்பென்சேஷன் கொடுக்கிற காலத்தில், அப்படி கிடைக்கிற கம்பென்சேஷன் பெற்ற தொழிலாளர்களுக்கு அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஆகிவிடுகிறது. அவர்களுக்கு வேறு வேலை கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த கம்பென்சேஷன் காலத்திற்கு மறு ஊதியம் கொடுத்தால் நன்றாக இருக்கும். அல்லது குறைந்தபட்சம் மறுபடி சம்பளமாவது கொடுக்கக்கூடிய முறையில் சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, வீட்டு வசதி வாரியம், தொழிலாளர் நல சார்பாக இந்த அவையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பாக மனமுவந்து வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் சாதிக்காத அளவிற்கு வீட்டு வசதி வாரியம் பெரிய அளவிற்கு, யாரும் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு பல புதிய திட்டங்களைக் கொண்டு குறைந்த விலையில் நல்ல வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப் பட்ட மக்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கெல்லாம் விரைவாகக் கட்டிக் தருகிறது. இதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவாக அதிகச் செலவுகளையெல்லாம் செய்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவிற்கு அரசு ஊழியர்கள் குடி யிருக்கிற வீடுகளுக்கு வீட்டு வாடகைப்படியாக 15 சதவிகிதமும் வீட்டு வாடகை யாக அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதமும் ஆக இரண்டையும் சேர்த்து மொத்தம் 25 சதவீதம் அவர்களுடைய சம்பளத்தில் இழப்பு ஏற்படுவதாக இங்கே இருக்கும் அரசு ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்கு மானால், அவர்களுக்கு நாம் உதவி பண்ணுவதற்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்றாலும்கூட, நடைமுறையில் வருகிறபோது அவர் களுக்கு ஒரு கணிசமான இழப்பு சம்பளத்தில் இருப்பதாக அவர்கள் வேதனை யோடு என்னிடத்தில் தெரிவித்தார்கள். ஆகவே, இதில் ஒரு மாறுதல் செய்து அவர்களுக்கு சம்பளத்தில் கணிசமான அளவிற்கு பாதிக்காத நிலையில்



1975 மார்ச் 4] [திரு. கே. கந்தசாமி]

வாடகையின் தொகை குறைந்த வாடகை வசூலித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலனைப் பற்றி, தொழிலாளர் பிரச்னை பற்றி எனக்கு முன் பேசிய தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள். லே-ஆப் மூடல் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்றுமில்லாத வறட்சி பாதிப்பு இருக்கிறபோது, மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் கடுமையாக பாதிக் கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நிலையிலே ஆப் என்று அவர்கள் மாதத்தில் 10, 15 நாட்கள்தான் வேலை செய்யக் கூடிய நிலை இருக்கிறது. ஆகிய மாதச் சம்பளத்தில் பாதியோ அல்லது பாதிக்குக் குறை வாகவோதான் ஒவ்வொரு தொழிலாளியும் மாதாமாதம் பெறவேண்டிய நிர்ப் பந்தமான கட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் அவர்களுக்கு லே-ஆப் மூடல் சட்டத்தை தற்காலிகமாவது நிறுத்தி வைக்கவேண்டும். லே-ஆப் மூடல் சட்டம் நல்ல நோக்கத்தோடு வருகிற திட்டம் என்றாலும்கூட எதிர்பாராத வறட்சி நிலைமை முன்னிட்டு அதை தற்காலிகமாகவாவது, டெம்பரரி சஸ்பென்ஷன் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே அவ்வாறு, இந்த வறட்சி நிலை நீங்கும் வரையிலாவது இந்தத் திட்டத்தை ஒத்திவைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக, உதவிகரமாக இருக்கும் என்பதை அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன். இன்று அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை எளியவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு கலைஞர் அவர்கள் அரசு பல முறைகளில் முயற்சி செய்து வருகிறது என்பதை நான் பாராட்டு கிறேன். அதேபோல் தொழிலாளர்கள் ஏற்கெனவே முழுச் சம்பளம் கிடைத்த போதும் அவர்களுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது பாதிச் சம்பளம் கிடைக்கிறபோது எப்படி குடும்பத்தைக் காப்பாற்றுவது என்ற ஒரு கஷ்டமான, இக்கட்டான நிலையில் அவர்கள் இருக்கிறபோது அவர்களுக்கு கண்டிப்பாக நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்களை, அத்தியா வசியப் பொருள்களை வழங்குவது அவசியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தந்த முதலாளிகள், மேனேஜ்மெண்ட் மூலமாவது கூட்டுறவுச் சங்கங்கள்

அரசாங்கத்தின் சட்டத்தை [illegible] அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், டெம்பரரி தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள், காஷுவல் தொழிலாளர்களுக்கு வேறு சம்பளம் கிடைக்கவும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கோயம்புத்தூரில் இருக்கிறது. அதில் 300 படுக்கைகள் இருக்கின்றன. அதை 500-ஆக உயர்த்திக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே 6 படுக்கைகள்தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயிரம் பேருக்கு 4 படுக்கை என்றாலும் குறைந்தது 40 படுக்கை இருக்க வேண்டும். ஆனால் 6 தான் இருக்கிறது. ஆகவே, அங்கே குறைந்தது 40 படுக்கை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] வகையில் மருத்துவ மனை கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதியில் மருந்தக வசதி செய்து தர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

1952-ம் ஆண்டில் நான் முதன்முதலாக தமிழ்நாடு லேபர் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கே ஒரு லேபர் கமிஷனர்தான் இருந்தார். ஒரு டி.சி.எல்.தான் இருந்தார்.

இன்றைக்கு லேபர் கமிஷனர் ஆபீசில் அடிஷனல் ஜாயிண்ட் லேபர் கமிஷனர், ஸ்பெஷல் டெபுடி லேபர் கமிஷனர் என்று இப்படி 10 பேர்களைப் போட்டிருக்கிறோம். இந்தத் துறையில் [illegible] வேலை அதிகமாக நடைபெறவில்லை. வேலைகள் அதிகமாக நடைபெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நிறைய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போதே மணி 6-40 ஆகிறது. இன்னும் 8 பேர்கள் பேசவேண்டும். ஆளுக்கு 10 நிமிஷம் பேசினாலும் அமைச்சர் 8 மணி அளவில்தான் பேச ஆரம்பிக்க முடியும். [illegible] போதும்.





திரு. சு. துரைசாமி: இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, திரு. துரைசாமி போன்றவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலேயே அவர் ஸ்பெஷல் சப்ஜெக்டுகளைப் பேசியிருக்கலாம்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, அவர் சேர்ந்திருக்கின்ற கட்சிக்கு ஜஸ்டிஸ் செய்ய வேண்டும் அல்லவா?

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, கோவையில் இருக்கிற டி.சி.எல்., ஏ.சி.எல். அலுவலகங்களை ஒரு மையமான பகுதிக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல வசதி கிடைக்கும். நம்முடைய வெல்பேர் போர்டு மூலமாக திருப்பூரிலே சத்துணவுத் திட்டத்திற்காக ஒரு இடத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் நிறைவேற்றுவதற்கு வகை செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டம் எவ்வளவு ஏழை மக்களுக்குப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும். மில்களில் கூட்டுறவு பண்டக சாலைகளை அமைத்து அரிசி நியாய விலையில் போட வகை செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியம் சார்பாக தொழிலாளர்களுக்கு அல்லது வேறு பல சிறிய சாதாரண லோ இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும். மிடில் இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு நிலையத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஸ்டேட் லெவலில் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. மாவட்ட அளவில் அட்வைசரி கமிட்டி போட்டு அந்த அட்வைசரி கமிட்டியானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி வேலைவாய்ப்பு சம்பந்தமாக தகவல்கள் முறையாக அனுப்பப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில் அக்கறை எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 4

கலெக்டர் பார்த்தாகிறது.

Management refuses to recognise Government.

முதலாளி. கவர்மெண்டை மதிக்கா ஆள்தான்.

அதேபோல் மந்திரி பெருங்களத்தூர், பிளபேடு, ராதாகிருஷ்ணா பக்கத்தில் இருக்கிறது.

ஏழு பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். மூன்று நான்கு வருஷம் போய் வந்து கொண்டிருந்தது. இரண்டு மூன்று தடவை அதைப் பற்றிச் சட்ட மன்றத்தில் கூடக் கிளப்பினேன். நாங்கள் பிராசிக்யூட் பண்ணப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் பழைய நிலைமைதான் இருக்கிறது. டிலே அரசுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சொல்லு கிறேன்.

பொதுவாக லேபர் இலாகாவில் டிலே கூடாது. முன்பு 1952, 1956-ல் சென்னையில் லேபர் அப்பலேட் டிரிப்யூனல் இருந்தது. இரண்டு ஜட்ஜ்கள் இருந்தார்கள். அதிலே அதிகமாக ஆஜரானது நான்தான். லேபர் ட்ரிப்யூனல் தீர்ப்புக்குப் பிறகு நேராக ரிட்டுக்குப் போய்விடுவார்கள்.

We all moved for the abolition of Appellate Tribunal.

அப்பலேட் டிரிப்யூனலை எடுத்து விட வேண்டுமென்று சொன்னோம். இப்போது பார்த்தால் பேசாமல் அப்பலேட் ட்ரிப்யூனலே இருந்திருக்கலாம் போல் இருக்கிறது. என்ன தீர்ப்பு வந்தாலும் உடனே ரிட்டுக்குப் போகிறார்கள். தொழி லாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் ரிட் பெட்டிஷன் போட்டால் ஹைகோர்ட்டில் அட்மிஷன் கொடுக்காமல் இருப்பது நல்லது. (துணைத் தலைவரைப் பார்த்து) அப்போது கூட நாங்கள்தான் ஆட்சேபித்தோம். அந்த மாதிரி சொல்லக்கூடாது என்று. தொழிலாளர் அவ்வளவு கஷ்டப்பட்டும் ஒரு முடிவுக்கு வரும்போது ரொம்ப டிலே ஆகிறது. தொழிலாளியை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வருகிற போது தொழிலாளியை உயிரோடு பார்க்க முடியாது. ஒன்று வேலையை விட்டுப் போயி ருப்பார் அல்லது உலகத்தை விட்டே போயிருப்பார். இது ரொம்ப வேதனைக் குரிய விஷயம். டிப்பார்ட்மெண்ட் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

அடுத்து பக்கத்தில் இருக்கக்கூடிய விஷயம். காஸ்மோபாலிடன் கிளப் பக்கத்தில் இருக்கிறது. அது 102 வருஷ காலமாக இருக்கிறது. அங்கு வேலை செய்கிறவர்கள் 'காட்டரிங் எஸ்டாப்ளிஷ்மெண்ட்' என்பதன் கீழ் வருவார் கள். அந்தக் காலத்தில் காஸ்மோபாலிடன் கிளப்புக்கு பி.டி. ராஜன், டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் போன்ற பெரிய பெரிய பணக்காரர்கள்தான் போவார்கள். இரண்டு நாள் தங்குவார்கள். அந்தப் பணியாளர்களுக்கு 50



1975 ஏப்ரல் 4] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ரூபாய், 100 ரூபாய் என்று கொடுப்பார்கள். இப்போது போகிறவர்கள் கொடுக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது. அங்கு வேலை செய்கிறவர் களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம் இருக்கவேண்டும். 131 பேர் வேலை செய்கிறார்கள். 19 பேர் கோல்ஃப் கிளப்பில் வேலை செய்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன்பு அவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைக்கப் போகிறோம் என்றார்கள்; கோரிக்கை வைக்கப் போகிறோம் என்றார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. நேற்று நானும் திரு. குமாரசாமியும் போயிருந்தோம். அனந்தநாயகி அம்மையார் அவர்களும் போயிருந்தார்கள். தூண்டிவிடுவதற்கு அல்ல. அங்கு தொழிலாளிக்குக் குறைந்த சம்பளம் 100 ரூபாய். கூடிய சம்பளம் 150 ரூபாய்தான். 42 வருஷம் சர்வீஸ் போட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்தக் காலத்தில் சென்னை நகரத்தில் இந்த நிலைமை இருப்பது சரியல்ல. பணக்காரர்கள் கூடி யிருக்கும் அந்த கிளப்பில் வேலை நிறுத்தம் செய்தவுடன் முதலாளிகள் 'நாங்கள் லாக் அவுட்' பண்ணிவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். ரொம்ப கேலிக் கூத்தாக இருக்கிறது. அமைச்சரும்கூடச் சென்று பார்க்க வேண்டும். பார்த்து நியாயம், நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். ரொம்ப வயதானவர்கள், ரொம்பப் பெரியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துச் சங்கம் வைக்கத் தயங்குகிறார்கள்.

**திரு. கு. காமாட்சி:** நீங்கள் கெஸ்டாகப் போனீர்களா அல்லது அதிலே மெம்பராக இருக்கிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மெம்பரெல்லாம் கிடையாது. அந்தக் காலத் தில் சௌந்தரபாண்டியன் கெஸ்டாக அழைத்துக் கொண்டு போனார்.

அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை அறிந்து வர நானும், ஆளும் காங்கிரஸ் கட்சி குமாரசாமி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலம்புரி ஜானும் வந்தார்கள். ஹியூமன் பிராப்ளம் என்று பார்த்துத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுதான் எஸ்டிமேட் கமிட்டியின் 29-வது ரிப்போர்ட் வைக்கப்பட் டிருக்கிறது. இது பூராவும் தொழிலாளர்களைப் பற்றியது. கொஞ்சம் படித்துப் பார்த்தேன். அவர்கள் பண்ணியிருக்கக்கூடிய சிபாரிசுகளுக்குப் பதில் போதாது.

தொழிலாளர்களுக்கு உள்ள பதிலாக அது இருக்கவேண்டும். உண்டு இல்லை என்று சொல்லவேண்டும். இது இழுப்பாக இருக்கிறது. வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அமல் நடத்தவேண்டும். பூரன்சியைப் பொறுத்தவரையில் ஏதோ செய்

திருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.

எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது சிபார்சு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப் பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபீசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்சனைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரண மாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஸி.ஐ.டி. போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்க லாம். இதை டோன் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.



அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போக வில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப் போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான் டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகை யில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின் சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடமையாக்கப் போகிறது என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ருப், கோத்தாரி, பாரி அன்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக் கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயில ராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சர்க்கரை ஆலைகளை தேசிய மாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரி தாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற் சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்கார மில்லில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் விரட்டுவார். மாநில

சர்க்காரையும் விரட்டுவார். யாராவது மீறிப் போனால் கேஸ் போடுவார். நமது இலாகா சிறிதளவிற்காவது அங்கு பாக்டரி ஆக்டை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.

டெக்ஸ்டைல் மில்லில் பாக்டரி ஆக்ட் அமலில் இல்லாத சிறந்த இடத்தைத் தேடி பார்க்க வேண்டுமென்றால் அது திருச்செங்கோட்டில் இருக்கிறது. முதலாளியின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் சொல்வதற்கு முன்னால் அவர் யார் என்று தெரிந்திருக்கும். (ஒரு உறுப்பினர் : பெயரைச் சொல்லுங்கள் ) அங்கப்ப செட்டியாருக்கு சொந்தம். நம் தொழிலாளர் களுக்குக் கொஞ்சமாவது பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா? இன்றும் குறைந்த சம்பளத்தில் அத்துக் கூலிகளாக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மற்றவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டாலும் ஒப்பந்தம் அமலாகாத இடமாக அது இருக்கிறது.

இராஜபாளையத்தில் ஜானகிராம் மில்லையொட்டி ஒரு கிருப் இருக்கிறது. சிறு வீவிங் செக்ஷன்ஸ் நிறைய இருக்கின்றன. 300 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குத்தகைக்கு எடுத்திருப்பது திருநெல்வேலி ஜில்லாக்காரர். அவர் எல்லோரும் வெளியே போங்கள் என்று சொல்லி எல்லோரும் போய் ஓரளவிற்குச் சரி செய்தார்கள். மறுபடியும் நான் மூடப்போகிறேன் என்று சொல்லி, மூடாதே என்று சொல்லிச் சென்ற தொழிலாளர்கள் நூறு பேர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் மறியல் செய்தால் உடனடியாக பதினைந்து நாட்கள் ரிமான்ட் என்று போடுவது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. அதைக் கண்டிக்கிறேன். மூடப்போகிறேன் என்று சொன்னதற்கு, மூடாதே என்று அதற்கு இரண்டு நாட்கள் முன்னால் சென்று மறியல் செய்தால் உடனே மதுரை சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்புகிறார்கள் நூறு பேர்களையும். டி.சி.எல்.லிடம் பேச்சுவார்த்தை நடத்தி நேற்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

Arm the D.C.L. with powers.

"திற ஐயா" என்று சொல்லுங்கள். அப்போதுதான் திறப்பார்கள். இங்கு அமைச்சர் அவர்கள் அல்லது லேபர் செகரட்டரி அல்லது சீப் கமிஷனர் ஆப் லேபர், "திறந்துதான் தீரவேண்டும், நீ பூராவாக ஏமாற்றுகிறாய், திறக்கப் போகிறாயா இல்லையா, திறந்துதான் தீரவேண்டும், இப்போது மூடிவிட்டு ஒன்றரை மாதம் கழிந்து, வேறுவிதத்திலா திறக்கப் போகிறாய்?" என்று சொன்னால் பயப்படுவார்கள். டி.சி.எல். இடம் சென்று பேசினால், எங்கள் பார்ட்னர்ஸ் இடையில் தகராறு, அதனால் மூடுகிறேன் என்பார்கள். சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்வார்கள். அந்த 300 பேர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.



பிராவிடென்ட் ஃபண்ட் சம்பந்தமாக, டெக்ஸ்டைல், இன்ஜினீரிங், ரோடு டிரான்ஸ்போர்ட் இவைகளில் உள்ள குறைகளைப் பற்றிக் கருத்துச் சொல்ல விழைகிறேன்.

Government hesitates to launch prosecutions.

நான் பிராவிடென்ட் பண்டு சென்டிரல் போர்டில் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலத்தில், மத்திய சர்க்காரே எடுத்து பிராசிகியூட் செய்வதற்கு அதிகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று வந்து இருக்கிறது. இப்போது மாநில சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இப்போது பிராசிகியூட் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி பிராசிகியூட் செய்கிறபோது நம்முடைய அரசாங்கத்திற்கு ரொம்பத் தயக்கம் வருகிறது. கொஞ்ச நாள் பிராசிகியூட் செய்யுங்கள்.

இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்றால், தொழிலாளி 10 ரூபாய் கட்டுகிறான் என்றால், முதலாளி 10 ரூபாய் போடுகிறார் என்றால் இரண்டையும் அனுப்புவது இல்லை. கடைசியாக என்ன செய்து இருக்கிறோம் என்றால் ஜி.பி.எப். தொழிலாளிக்குக் கொடுக்காமல் இருக்கமுடியாது என்பதற்காகக் ரூ. 2,000 தொழிலாளி கட்டி, ரூ. 2,000 முதலாளி கட்டவேண்டுமென்றாலும்—தொழிலாளிக்கு அந்தப் பணம் கொடுக்கவேண்டுமென்பதற்காக ஸ்பெஷல் பண்டிலிருந்து தொழிலாளிக்குப் பணம் கொடுக்கிறோம்.

தொழிலாளி கட்டியிருக்கிற அளவுக்குப் பணம் கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டுமென்று சட்டம் போட்டு இருக்கிறோமே தவிர, முதலாளியைக் கண்டித்துக் கேட்கிற அளவுக்கு நிலைமை வரவில்லை. அப்படிப்பட்ட முதலாளிகளைக் கண்டிக்கலாம்.

ஒரு சமயத்தில், பம்பாயில் ஒரு முதலாளியையும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு முதலாளியையும் 15 நாள் ஜெயிலில் வைத்தோம். 15 நாள் ஜெயிலில் வைத்து, கம்பி எண்ண வைத்தால் சரி, சுறுசுறுப்பாகப் பணம் வந்து சேரும். ஆனால் இந்த மாதிரி ஆட்களுக்கு சூடு, சொரணை ஏற்படப் போவது இல்லை. இருந்தபோதிலும், ஒரு 15—10 நாள் ஜெயில் போடுகிறோம் என்ற நிலைமை வந்தால், சீக்கிரம் அரியர்ஸ் கலெக்டாகும். என்னிடம் விவரங்கள் இருந்தாலும், விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.

ஏற்கனவே சட்டத்தைப் பற்றி விவாதிக்கிறபோது, தொழிலாளிக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னேன். அந்த வேண்டுகோளை நீண்ட நாட்களாக சொல்லி வருகிறோம். ஏ.ஐ.டி.யு.சி. சொல்லி வருகிறோம்; இப்போது இருக்கிற ஹைகோர்ட்டிலேயே ஒரு 'லேபர் பெஞ்ச்' ஏற்படுத்

தாங்கள். 'லெட் தேர் பி எ லேபர் பெஞ்ச்'. லேபரைப் பற்றித் தெரிந்த இரண்டு ஜட்ஜுகள் அதில் இருக்கட்டும். கஜேந்திரகட்கர் போன்றவர்கள் அதிலே இருக்கட்டும். இதிலே சிவில் கோர்ட்டில் திறமையானவர்களை வைத்து இருக்கிறார்கள் அல்லது கிரிமினல் அப்பீலில் திறமையானவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அப்படி அவர்களைக் கொண்டு வந்து போடுவதால், அவர்களுக்கு லேபர் கேஸ் வருகிறபோது, எந்த அளவுக்கு அவர்கள் அதைப் புரிந்துகொள்ள முடியும்? அவர்களுக்கு இருக்கும் அனுபவம் வேறு. ஆகவே, லேபர் பிரச்னை தெரிந்தவர்களை அங்கு நீதிபதியாகப் போடவேண்டும். இதை நம்முடைய லேபர் அமைச்சர்—லா மினிஸ்டரிடம் சொல்லி—சட்ட அமைச்சரிடம் வற்புறுத்தி, அப்படி ஒரு பெஞ்ச் போட்டால், சீக்கிரம் லேபர் கேஸ்கள் முடியும். சில கேஸ்கள் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அதோடு, ஓரளவிற்குச் சாதகமான தீர்ப்பும் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சென்னையில் ஒரு லேபர் டிரிபியூனல் இருக்கிறது. 3 லேபர் கோர்ட்கள் இருக்கின்றன. மதுரையில் ஒரு லேபர் கோர்ட் இருக்கிறது. கோயம்புத்தூரில் ஒரு லேபர் கோர்ட் இருக்கிறது. லேபர் கோர்ட்டைப் பொறுத்தவரையில் நல்ல ஜட்ஜாக, சீனியர் ஜட்ஜாக, அதில் திறமையானவர்களாக, அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பவர்களைப் போடுங்கள், அப்படியில்லாமல் ஏதோ போடவேண்டுமென்பதற்காகப் போடக்கூடாது.

மதுரையில் இருக்கிறவர் நல்ல ஆள். அவர் ரொம்பத் திறமையானவர். வேறு சிலரைப் பற்றி கருத்து சொல்கிறார்கள். சென்னையில் இருக்கிற லேபர் கோர்ட் 'பஞ்சவடி', சேத்துப்பட்டில் இருக்கிறது. அங்கே 3 கோர்ட்டுகள் இருக்கின்றன. மூன்று ஜட்ஜ்கள் இருக்கிறார்கள். ஆனால் இரண்டு ரூம்கள் தான் இருக்கின்றன. எந்த ஜட்ஜ் எப்போது உட்காருவார் என்று தெரியாது. தொழிலாளர்கள் காத்துக் கிடக்கவேண்டும். மியூசிகல் சேர் மாதிரி இருக்கிறது. அதோடு, அங்கே பார்த்தால், 2 டைப்ரைட்டர்கள்தான் இருக்கின்றன. ஆனால், 5 டைப்பிஸ்ட்கள் இருக்கிறார்கள். அந்த டைப்ரைட்டர்கள் நிலைமை எப்படியிருக்கிறது என்றால்,

Parties are asked to supply ribbons and carban papers.

இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. பக்கத்தில் ஒரு வெத்திலை பாக்கு வாங்கவேண்டுமென்றாலும், சிகரெட் வாங்க வேண்டுமென்றாலும், அங்கே வசதி கிடையாது. இப்படிப்பட்ட ஒரு இடத்தில் போட்டு வைத்து இருப்பது சரியல்ல. டிரிப்யூனலை ஹைக்கோர்ட்டில் இருக்கிற மாதிரி வைக்கலாம். மதுரையில் நேரடியாக கோர்ட் ஹவுசிலேயே அது இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து அதை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



Government Agricultural Engineering Workshop at Madras.

No improvement—installed machines not utilised—Workshop 50 years old. Still kept as workcharged non-provincialised establishment—Drills, Tractors and all other agricultural implements are manufactured here—Work is diverted to private workshops while keeping machines and labour idle—Maladministration and management not interested—workers' pay very low—

இது சர்க்கார் நடத்தும் வொர்க்ஷாப் ஒன்றில் இருக்கும் நிலைமையைப் பற்றிய சுருக்கம், எங்களுடைய அசெஸ்மென்ட். இதைக் கொஞ்சம் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியா மீட்டர்ஸைப் பற்றி சொல்லாமல் போனால், எங்களுக்கு நிம்மதி ஏற்படாது. இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தில் 200 தொழிலாளிகள் கிட்டத்தட்ட 8 மாதமாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்தியா மீட்டர்ஸை நடத்துகிறவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் எத்தனையோ கோடி வாங்கியிருக்கிறார்கள், மாநில சர்க்காரிடத்தில் எத்தனையோ கோடி வாங்கியிருக்கிறார்கள். ஒரு பாங்கியிலிருந்து 2½ கோடி ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் தொழிற்சாலை மீது அக்கறை இல்லாத வகையில் இருக்கிறார்கள். நம்முடைய தொழிலாளிகள் 200 பேர் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே மீட்டர்ஸ் அதிகமாக உற்பத்தி செய்வது பிர்லா. பிர்லாவை எதிர்த்து யாரும் காரியம் செய்வது கஷ்டம். சிம்கோ மீட்டர்ஸ் பிர்லாவை எதிர்த்து நின்றபோது நாம் எல்லாம் பெரிய இயக்கம் நடத்தி சிம்கோ மீட்டரைக் காப்பாற்றினோம். இப்போது சிம்கோ மீட்டர்ஸ், பிர்லாவோடு சேர்ந்துகொண்டு, இந்தியா மீட்டர்ஸை க்ளோஸ் செய்யப் பார்க்கிறார்கள். இதுதான் நிலைமை. இந்தியா மீட்டர்ஸ் நமக்குக் கிடைத்தால், நாம் உண்மையிலேயே அதை மின்சார இலாகாவோடு சேர்த்துக்கொண்டு, அதை ஒரு மின்சார இலாகா டிபார்ட்மென்ட்டாக வைத்துக்கொண்டு, செய்யலாம். அப்படிச் செய்வதற்கு சாத்தியம் இருக்கிறது. டிசைனை மாற்றினால் நல்ல முறையில் செய்யலாம். அந்த மாதிரி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டூப்ளிகேஷன் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் 'வொர்க்கர்ஸ் எடுகேஷன் ஸ்கீம்' பற்றி ரொம்பத் தெளிவாக இருக்கிறது. 1957-ம் ஆண்டு நடந்த 15-வது முத்தரப்பு மாநாட்டில் இம்மாதிரியாக வொர்க்கர்ஸ் எடுகேஷன் ஸ்கீம் பற்றி விவாதம் வந்தது. அந்த நேரத்தில் நமது அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளவில்லை, முதலாளிகளும் ஏற்றுக்

கொள்ளவில்லை. அப்போது நாங்கள் சொன்னேம், வொர்க்கர்ஸுக்கு அதிகமாக நாம் சொல்லிக்கொடுக்கவேண்டும், தொழிற்சங்கங்கள் அதிகமாகச் சொல்லிக்கொடுக்க முடியவில்லை, தொழிற்சங்கம் நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது; ஆகவே, தொழிலாளர்களுக்கு 1 மாதம், 2 மாதம் என்று வகுப்பு வைத்து, சிலவற்றைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னேம். ஏ.ஐ.டி.யு.சி எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி. ஆகிய எங்களது மூன்று தொழிற் சங்க இயக்கங்கள் எடுத்துத் தெரிவித்தோம். மாநில அமைச்சர்கள் எதிர்த் தார்கள். முதலாளிகள் எதிர்த்தார்கள். மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டது. இப்போது அந்த வகுப்புகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. சென்னையில், கோயம்புத்தூரில் நன்றாக நடந்து வருகிறது. அந்த வகுப்புகளை 'கெஸ்ட் லெக்சரர்ஸ்' நல்ல வகையில் எடுத்து, பயிற்சி அளித்து வருகிருர்கள். அப்படி நடத்தப்படுகிற வகுப்புகளுக்கு மத்திய சர்க்கார் பணம் தருகிறது. அதைக் கண்காணிக்கிற பொறுப்பு, அதிகாரம் லேபர் கமிஷனரிடம் இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது,'

Why this duplication? What is workers' training?
நாம் ஏதோ வொர்க்கர்ஸ் டிரெயினிங் என்று இங்கே வைப்பதற்கு என்ன அவசியம் வந்தது? இது டூப்ளிகேஷன். வேண்டாம். இது நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் ரீஜினல் ஸ்கூல் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கும் மத்திய சர்க்காரின் டைரக்டர் ரொம்ப நல்லவர், வேலாயுதம் என்று பெயர், அவர்கள் நல்ல விதத்தில் நமக்கு ஒத்துழைப்பு தருபவர்களாக இருக்கிருர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் உற்சாகமும், ஊக்கமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இவைகளைத்தான் நான் மெயின் ஹெட்டிங்காக வைத்து கருத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஹவுசிங் போர்டு சம்பந்தமாக, நாங்கள் கொடுத்து இருக்கும் 2-3 விஷயங்களை அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக நான் சொன்ன விஷயங்களை எல்லாம் அரசு நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய இந்த விவரங்கள் எல்லாம், அனுபவத்தில் இருக்கும் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேனே தவிர ஏதோ சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இன்று இருக்கும் நிலைமையில், இதிலே ஓரிரு விஷயங்களைத் தனியாகப் பார்த்தால்
it is going in the anti-working class direction
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





பல விஷயங்களில் இந்த மாதிரி பல 'சிம்போசியம்' நடத்திப் பார்க்கிற நேரத்தில், பல பேர் தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்கிற நேரத்தில் வேதனையாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஏதோ பொறுப்பு இல்லாமல் இருப்பதுபோல் சொல்ல வேண்டியது இல்லை. தொழிலாளர்கள் சரியாகத்தான் இருக்கிருர்கள். உற்பத்தியில் முறையாகத்தான் இருக்கிருர்கள். மின்சார வெட்டு என்ற உடனே கோயம்புத்தூரில் இருந்து எங்களுக்குத் தந்தி வருகிறது. முதலாளிகள் சாதாரணமாகவே எப்படி "லே-ஆப்" கொடுக்கலாம் என்று பார்ப்பார்கள். ஜெனரேட்டர் வைத்து இருப்பவர்கள் கூட அப்படிச் செய்கிருர்கள்.

கோயம்புத்தூரில் இருக்கும் ஆலை முதலாளிகளுக்கும், முதலமைச்சருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும், ஏப்ரல் மாதத்தில் அதிகமாக கிடைக்கும் என்று இருந்தது போக, அது குறைக்கப்படுமோ என்ற அளவுக்கு நிலைமை யேற்பட்டு இருக்கிறது. அந்த வகையில் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில், உத்தரவாதம் காணக்கூடிய முறையில் காரியங்கள் நடைபெற வேண்டும். நான் சில விஷயங்களை ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறேன். பல விஷயங்களில் காரியங்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன் என்று சொல்லி எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 5-00)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாலை நேரங்களில் மன்றம் நடக்கிறபோது வழக்கமாக காரம், டீ கொடுப்பது வழக்கம், கொடுப்பார்கள், நான் மறுக்கவில்லை. நம்முடைய அற நிலைய அமைச்சரவர்கள் பால் வளத்தைப் பார்க்கிற காரணத்திஞல் அவர் முன்பு பால் கோவா கொடுத்தார்கள். நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் போனஸ் கொடுப்பதில் கெட்டிக்காரர் ஆவார்கள். ஆகவே அவர்கள் இன்றைக்கு போனஸாக பாதம் அல்வாவைச் சேர்த்து தருகிற நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிருர்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பாதாம் அல்வா மார்க்கெட்டில் கிடைக்குமோ என்னவோ தெரியாது. ஏதாவது ஒரு ஸ்வீட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, தலைவரவர்கள் கன்சிலியேஷன் ஆபீசர் வேலை செய்து வெற்றி அடைந்ததற்காக அவரை பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த நித்திப்பு கொடுத்து காரமாக பேசுபவர்களை மாற்றிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள் ஸ்விட்டிற்காக மாறி விடுகிறவர்களா?

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை இந்த மன்றமும், இந்த நாடும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. உழைக்கிற வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், அவர்களது பிரச்சனைகள் எதுவானாலும் அந்தப் பிரச்சனைகள் தொழில் தகராறுகள் அந்தந்தத் தொழிற்சங்கங்களால் எழுப்பப்படும்போது நிச்சயமாக தொழிலாளர்களுக்குச் சாதகமான முடிவுகள், உடன்பாடுகள் ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு இருந்து வருகிற நிலையையும், அதற்கேற்ற வகையிலே நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மிகச் சிறப்பான முறையிலே பல்வேறு தொழில் தகராறுகளையெல்லாம் சுமுகமான உடன்பாடுகளின் மூலமாக தீர்த்து வைத்திருக்கிற உண்மையையும் நாம் மிக நன்றாக அறிவோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய உரையிலேயே அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பீடித் தொழிலில் ஏற்பட்ட தகராறு, சர்க்கரைத் தொழில் தகராறு, பிறகு நெய்வேலி தொழில் பிரச்சனையிலே ஏற்பட்ட உடன்பாடு, தோட்டத் தொழிலில் ஏற்பட்ட தகராறு, இவற்றிலேயெல்லாம் மிக நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு ஆதரவான முறையிலே பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வந்தன என்கிற உண்மையை நாமும் மிக நன்றாக உணர்கிறோம். ஆகையினாலே இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை யார் மறைத்தாலும், அல்லது மறுத்தாலும் நிச்சயமாக இந்த நாடு, இந்த நாட்டில் இருக்கக் கூடிய உழைக்கிற வர்க்கம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த அரசு பாட்டாளி மக்களுக்காக, அகில உலக பாட்டாளி மக்களுடைய தினமான 'மே தினத்தை' சட்ட பூர்வமான சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக செய்ததை யாரும் மறந்து இருக்க முடியாது.



அதே போல பல்வேறு பிரச்சனைகள், முற்போக்கான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே மட்டும் பங்கு அல்ல, லாபத்திலேயும் பங்கு என்று சொல்லக் கூடிய நிலையில் பொதுத் துறையிலே போக்குவரத்துத் துறையிலே செயல்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். தொழிலாளர் நல நிதி சட்டம் மிக சிறப்பான முறையில் தொழிலாளர்களுக்காக பணியாற்றிடக்கூடிய வகையில் அதற்கென உள்ள சட்டம் இந்தச் சட்டத்தின் கீழ் இயங்கக் கூடிய அளவிலே தொழிலாளர் நல நிதி வாரியம் என்று ஒரு வாரியத்தை அமைத்து அந்த வாரியம் இன்றையதினம் மிகச் சிறப்பான முறையில் தொடங்கியிருப்பதை நாம் காண்கிறோம்.

இங்கே தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் பேசுகிற அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் கூட இப்போது ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். தொழில் தகராறு என்றால் சாதாரணமாக முன்பெல்லாம் ரெஃபரன்ஸுக்காக தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமென்பதற்காகவே தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டம், இதற்கென்றே வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கி திட்டமிட்ட முறையில் போராடுவது என்ற நிலைமைகள் இருந்தன. அதை யாரும் மறந்து இருக்க முடியாது. ஆனால் இன்றையதினம் அது போன்ற கோரிக்கையிலே போராட்டங்கள் நடைபெறுவதில்லை. காரணம், இந்த அரசு கூடுமான வரையில் பிரச்சனைகளை முக்கூட்டு பேச்சுவார்த்தை என்ற முறையில் தொழிலாளர் நல அதிகாரிகள் திறம்பட பிரச்சனைகளை முடிக்க முயற்சிக்கிறார்கள். இறுதியிலே அமைச்சர் கட்டத்தில் பிரச்சனைகள் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டு வருவதால் தொழில் கோர்ட்டிற்குப் பிரச்சனைகளை விடலாமாவென்றால், வேண்டாம், வேண்டாம், நீங்களே முடித்துத் தாருங்கள் என்று சொல்லிவிடக் கூடிய நிலையினைக் காண்கிறோம். அந்த அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே பல்வேறு பிரச்சனைகளை நல்ல முறையில் தீர்த்துக் கொண்டு வருகிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் ஃபேமிலி பெனிபிட் ஸ்கீம் என்ற முறையில் அரசு ஊழியர் ஒருவர் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடக்கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்து அதனால் அரசு ஊழியர்கள் பயன் பெற்று வருவதைக் காண்கிறோம்.

இன்றைக்கு இது போன்ற ஒரு சூழ்நிலையில்தான் தொழிற்சங்கப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது அரசு நல்ல பல திட்டங்களைத் தொழிலாளர்களுக்காகச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில் மத்திய அரசு ஊதிய முடக்குச் சட்டம்—கம்பல்சரி டெபாசிட் ஸ்கிம் என்று சொல்லி அந்தச் சட்டத்தின் மூலம் இன்றைக்குத் தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படக் கூடிய காட்சியை காண்கிறோம். அதற்கு கூட எதிர்பார்த்த அளவுக்குக் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கப் பலர் மறந்து விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனைதான் ஏற்படு கிறது.

வரம்பே கிடையாது. 150 ரூபாய், 200 ரூபாய் என்று ஊதியம் பெறுகின்றவர்கள் கூட, தங்களது கோரிக்கைகள் மூலம் பிரச்சினையை தீர்த்துக் கொண்டு, சுமுகமானமுறையில், பேச்சு வார்த்தையின் மூலமோ, அரசாங்கத்தின் துணையோடோ, பேசி முடித்து ஊதிய உயர்வு பெற்றால், அதை முழுமையாகப் பெற முடியாது. அடிப்படைச் சம்பளம் உயர்ந்தால் அந்தத் தொகையைப் பெற முடியாது. பஞ்சப்படி உயர்ந்தால் பாதிதான் தொழிலாளர்களுக்குச் செல்லும் என்ற அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்தச் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அதனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. கறுப்புப் பணம், கள்ளப் பணம், கள்ள மார்க்கெட்டுக்காரர்களின் பல்வேறு விதமான தவறான செயல்கள், இவை காரணமாக இன்றைக்கு விலைவாசியை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலைதான் இன்றைய காலகட்டத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே, தொழிலாளர்களுடைய வருவாயில், ஊதிய உயர்வில் கை வைக்கக் கூடிய அந்தச் சட்டத்தை நிச்சயம் திரும்பப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் விலிங் லெவி என்பதை முதலாளிகள் தொழிலாளிகளுக்குத் தரவில்லை. இப்பேர்ப்பட்ட கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. தொழிற்சாலைகளில் பல ஆண்டுகளாக காஷுவல் தொழிலாளிகள், டெம்பரரி ஒர்க்கர்ஸ், காண்டிராக்ட் ஒர்க்கர்ஸ் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூபாய் 3, 3½, 4 என்று குறைந்த அளவில் ஊதியம் தந்து மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகளெல்லாம் தற்காலிகத் தொழிலாளிகள். எந்தெந்தத் தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளிகளுக்குக் குறைந்த



பட்ச ஊதியம் எவ்வளவு இருக்கிறதோ, அன்ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் மினிமம் வேஜ், அது அந்த கேஷுவல் தொழிலாளிக்கு, டெம்பரரி தொழிலாளிக்கு, வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் தனிச் சட்டத்தை நம் அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதுபோன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இன்றைக்கு நிரந்தர தொழிலாளி 15 ரூபாய் ஊதியம் பெறுகிறான் என்றால் தற்காலிக தொழிலாளிக்கு 4 ரூபாய், அதிகம் போனால் 5 ரூபாய் என்ற அளவில் கொடுத்து முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றுகின்ற காட்சியைக் காண்கிறோம். அதற்காக ஒரு சட்டம் தேவை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

லே ஆப் நாளைக்கு முழு ஊதியம் வேண்டும். இந்தக் கோரிக்கை ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசு ஆதரவான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன் வேண்டுகிறேன்.

அடுத்தாற்போல, சத்தியா ஸ்டுடியோ பிரச்சினை. உள்ளபடியே மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைமை. சத்தியா ஸ்டுடியோ முதலாளி—அவர் இன்றைக்கு ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. எம். ஜி. ஆர். அந்த ஒரு ஸ்டுடியோ மூடப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளிகளெல்லாம் மிக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2 தொழிலாளிகள் உயிர் இழந்து விட்டார்கள். ஆக, இது நம்முடைய அரசு இன்னும் அதிகபட்சமாக அந்தத் தொழிலாளிகளுக்கு ஆதரவான முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும், இதை இன்னும் நல்ல முறையில் தீவிரமான முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் திருவொற்றியூரில் ரூபி ரப்பர் ஒர்க்ஸ் 1½, 2 ஆண்டு காலமாக மூடப்பட்டு, தொழிலாளிகள் ஊதியம் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.

மற்றும் பைலட் என்ற கம்பெனி. அது மூடப்பட்ட நிலையில் இருக்கிறது. தொழிலாளிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி வில்லிவாக்கத்தில் வேண்டுமென்று ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் கட்டப் போவதாகச் சொன்ன இடங்களில் வில்லிவாக்கம் இல்லை. ஆக அங்கேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் கூட ஐ.டி.சி. என்று அழைக்கப்படக் கூடிய இந்தியா டொபாக்கோ கம்பெனியில் இருக்கிறேன். எங்கள் தொழிலாளர்களுக்கு எங்கள் தொழிற்சங்கம் மூலமாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னுலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னுலே ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அந்தத் தொழிலாளிக்கு 5 ஆயிரம் ரூபாய் தொழிற் சங்கம் மூலமாக, வெல்ஃபேர் ஃபண்டு ஸ்கிம் என்று உருவாக்கி அதற்காகச் சட்ட திட்டங்கள் தோற்றுவித்துக் கொண்டு நாங்கள் வழங்கிவந்து கொண்டு இருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்கள் எல்லா இடங்களிலும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்த அந்தக் கட்டத்தில் யாருமே எதிர்பாராத முறையில் மிகச் சிறந்த திட்டத்தை, 10 ஆயிரம் ரூபாயை அரசு ஊழியருக்கு வழங்கும் அற்புதமான திட்டத்தை இந்த அரசு அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இன்றையதினம் நாங்களெல்லாம் தொழிற் சங்க இயக்கத்திலே அரசாங்கத்தினுடைய இந்தத் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக்கூடிய அளவிலே நிலைமைகள் இருப்பதைக் காண்கிறோம்.

தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே, தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, சமூக நீதி அடிப்படையிலே, உழைக்கிற மக்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை, அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலட்சிய சமுதாயத்தைக் காண வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்த அரசு பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையிலேதான் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையிலே தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத்தில் அநியாயமாக 15 தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைத் தொடங்கினுர்கள் என்பதற்காக, பழி வாங்கப்பட்ட காரணத்தினுல்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 15 தொழிலாளர்களை நீங்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்பதாக ஆலோசனைகளை வழங்கினுர்கள். தகாரறுக்குரிய குற்றச்சாட்டுகள் இன்னின்ன என்று சொல்லக் கூடிய அளவிலே உள்ள 5 தொழிலாளர்கள் பிரச்சனையைக் குறித்து முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனுல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள், முன்னின்று நடத்துகிறுர்கள் என்ற காரணத்திற்காக பழி வாங்கப்பட்ட 15 தொழிலாளர்களை நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவார்கள், சுமுகமான நிலைமை ஏற்படுமென்று சொன்னுர்கள்.





ஆனுல், அந்த சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகம் எந்த அளவிற்குப் பிரச்சனையை வளர்த்தார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்காகவே நாங்கள் உழைக்கிறோம் என்று சொல்லிய, சொல்லி வரக் கூடிய கட்சிகள் கூட இந்தப் பிரச்சினையிலே தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்காமல் சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகத்திற்கு ஆதரவாகவே சட்ட மன்றத்தில் குரல் எழுப்பிய வேதனையையும் கண்டோம். தொழிற்சங்க இயக்கத்தில் பல ஆண்டுக்காலம் பணியாற்றியவர்களைக் காண்கிறோம். சாதாரணமாக ஒரு தொழிலாளியை நீக்கவேண்டுமானுல் அதற்கு சில அடிப்படை முறைகள் இருக்கின்றன. சி.எம்.சி. தொழில் தகாராறு சட்டத்தின் கீழ் வருகிறதா இல்லையா என்பது பிரச்சனை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி: ஆகவே, அடிப்படை நியதிகள் இருக்கின்றன. யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு தொழிலாளி மீது ஒரு குற்றச்சாட்டு என்றுல் இன்னின்ன குற்றச்சாட்டு என்று சொல்லி, அதற்கு விளக்கத்தைக் கேட்பார்கள். பஸ்ட், ஷோ காஸ் நோட்டீஸ். அந்த விளக்கம் திருப்திகரமாகயில்லை என்றுல், இன்னின்ன குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடைபெறும் என்று சொல்லுவார்கள். விசாரணை முடிவுற்ற பிறகு அந்தத் தொழிலாளி எந்தக் குற்றங்களுக்கு இலக்கானவர் என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, அந்த விசாரணையை நடத்தியவர் அதற்குப் பைண்டிங்ஸ் தந்த பிறகு இன்ன தண்டனை வழங்கலாமென்று முடிவு பண்ணி, குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது, இன்ன தண்டனை வழங்கியிருக்கிறோம், விளக்கம் தாருங்கள் என்று சொல்லுவார்கள். இது செகண்ட் ஷோ காஸ் நோட்டீஸ். இதுதான் அடிப்படை நியதிகள். பிரின்சிபிள்ஸ் ஆப் நாச்சுரல் ஜஸ்டிஸ். அந்தத் தொழிலாளிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரப்பட்டனவா என்றுல் இல்லை.

ஆகையினுல், நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமுகமான முறையில் பிரச்சனை தீர வேண்டுமென்பதற்காக அந்தத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னுர். உள்ளபடியே ஒரு நாட்டின் முதலமைச்சர் போராடுகின்ற தொழிலாளிகளுக்கு அவரே முன் வந்து ஒரு தீரம் மிக்க முடிவை எடுத்து, அடம் பிடிக்கக் கூடிய நிர்வாகத்திற்கு எப்படியும் நீங்கள் பின்பற்றியாக வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்தக் கட்டத்தில் அனைத்துக் கட்சிகளும், கட்சி வித்தியாசங்களை மறந்து, அந்த முதலமைச்சருக்குப் பின்னுல், அவருடைய குரலை, அவர் கரத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் எல்லோரும் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனுல் வேதனைமிக்க காட்சியைக் கண்டோம். அரசியல் ரீதியில் இதற்கு விமர்சனம் செய்தார்கள். தொழிற் சங்க ரீதியில் விமர்சனம் செய்யத் தவறி விட்டார்கள். ஆகையினுல் நான்

திரு. மா. வெ. நாராயணசாமி: நானே பேசும்போது சொன்னேன். அந்த விவகாரம் தொழில் தகராறு சட்டத்தில் வராது என்றுதான் பேசினேன். அடிப்படையில் சில விதிகள் இருக்கின்றன. Principles of natural justice இருக்கிறது. அந்த முறையில் சொன்னேன். தொழில் தகராறு சட்டத்தில் வரும் என்று சொல்லவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: அது தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமல்ல [illegible] விவகாரத்திலும் வராது என்று. ஆனும் கட்சி தொழிலாளர் [illegible] சொல்வதுபோல் பேசினாலும் ஒரு நடவடிக்கைதான் அது. [illegible] தொழிலாளர்களிடம் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை நான் அன்றைக்கே பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த [illegible] இருக்கின்ற [illegible] தொழிலாளர் இயக்கத்தில் [illegible] அந்த வகையில் இந்தச் [illegible] தொழிலாளர் [illegible] இருக்கிறது என்பதை நான் அறிவேன். இந்த அரசாங்கம் [illegible] தொழிலாளர் [illegible] தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் [illegible] இந்த எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு மாதத்திற்கு முன்னால் தொழிலாளர் நல அமைச்சர் விருதுநகருக்கு வந்தார். அங்கே ஒரு பஸ் கம்பெனி— [illegible] மோட்டார் கம்பெனி, இப்போது அதன் பெயரை மாற்றி வைத்திருக்கிறார்கள்; [illegible] 5 பஸ் [illegible] ரூட்டுகளில் பஸ் விட்டுக்கொண்டிருக்கிறது. [illegible] என்று போட்டை [illegible] தொழிலாளர்களை விட்டுவிட்டார்கள். அதனால் தொழிலாளர்கள் அங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள். உடனடியாக அமைச்சர் அவர்கள் பரிகாரம் காணவில்லை என்றாலும், தற்செயலாக விருதுநகருக்கு வந்தார்கள். அங்கே தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அங்கே வந்த அமைச்சர் [illegible] மனப்பான்மையுடன் நடந்துகொண்டார் என்று சொல்லவில்லை.

The way of approach by the D.M.K. Government is like that. அவர் நடந்துகொண்ட முறையைப் பார்த்து, தொழிலாளர்மீது, தொழிலாளர் பிரச்னைபற்றி எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் என்பதை அன்றைய தினம் நானும் மக்களும் உணர்ந்துகொண்டோம்.





உண்ணாவிரதம் இருக்கிற தொழிலாளர்களை அமைச்சர் சந்திக்கவில்லை. சந்திக்க வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களும் வற்புறுத்தவில்லை. அதைவிட முக்கியமான பிரச்னை எதையாவது தீர்க்கப் போனாரா என்றால் அதுவும் இல்லை. ஒரு பொருட்காட்சியை திறக்கப் போனார். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் கொள்கை தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று இருந்தால் இந்தப் பிரச்னையில் ஒரு முன் உதாரணத்தைக் காட்டியிருக்க முடியும். அந்த கம்பெனி [illegible]. தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அந்த கம்பெனிக்கு விருதுநகர்-கோவில்பட்டியில் 5 ரூட்கள் இருக்கின்றன.

பி. ஆர். சி. என்ற பாண்டியன் ரோட்வேய்ஸ் கார்ப்பரேஷன் அங்கே இருக்கிறது. அது ஒரு அரசாங்க நிறுவனம். அந்த நிறுவனம் எந்த ரூட்டில் பார் பஸ் விட [illegible] உடனடியாக அந்த ரூட்டில் பஸ்ஸை ஓட்டும் சக்தி வாய்ந்தது. அப்படி இருந்தபோது அந்த அரசாங்க நிறுவனம் அதில் பஸ் விடவில்லை. அதற்கு மாறாக 2, 3 பஸ் முதலாளிகளுக்கு பஸ் ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

இரண்டு பர்மிட்டை அருப்புக்கோட்டை பஸ் முதலாளிக்குக் கொடுத்தார்கள். இராஜபாளையத்திலே ஒரு சீமான் இருக்கிறார். முன்னாள் தொழிலமைச்சர்—இன்றைய உணவு அமைச்சர்—மாதவனின் உயிர் நண்பர் அவர். ஜெயராமன் என்ற பஸ் முதலாளி அவர். அவருக்கு இரண்டு பர்மிட்டைக் கொடுத்தார்கள். இன்னொருவருக்கு ஒரு பர்மிட்டைக் கொடுத்தார்கள். இப்படி 5 ரூட்டுகளையும் பங்கு போட்டுக்கொண்டார்கள். ஏற்கனவே வேலை செய்த அந்தத் தொழிலாளர்களை விட்டுவிட்டு, அந்த பஸ் முதலாளிகளின் தொழிலாளர்களை வைத்து, பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது பகிரங்கமாக விருதுநகரில் நடைபெறுகிறது. தொழிலாளர் நல அமைச்சர் அங்கே வருகிறார். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது அந்த ரூட்டில் வேறு பஸ் எப்படிப் போகலாம்? வேறு தொழிலாளர்கள் எப்படிப் போகலாம்? ஏன் பி.ஆர்.சி. அந்த ரூட்டுகளில் பஸ் விடக்கூடாது? அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அமைச்சரவர்களுக்கு மனம் இருக்கிறதோ இல்லையோ இந்த அரசுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் நிச்சயமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் விருதுநகருக்கு கண்காட்சி திறக்கப்போனது உண்மை. ஆனால் இப்படிப்பட்ட உண்ணாவிரதம் இருக்கிற பிரச்னை எனக்குத் தெரியாது. எந்தப் பிரச்சனையும்

ஹவுசிங் ஸ்கீம் ஃபார் இன்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ். இந்தத் திட்டம் தொழிற்சாலைகள், தொழிலாளிகள் இருக்கக்கூடிய இடங்களில் தீவிரமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் கூட தொழிலாளிகளுக்கு வீடுகளை கட்டித் தரும்போது மான்யமாக ஒரு தொகை வழங்கப்பட வேண்டும். சப்சிடி; சென்ட்ரல் அசிஸ்டென்ஸ், மத்திய அரசாங்கத்தின் உதவி அதற்கு நிச்சயம் தேவை. அதற்கென்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். மத்திய அரசு மான்யம் பெறக் கூடிய அளவில் அந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, எம்பிளாய்மெண்ட் ஆபீஸ்கள். அங்கு போதிய அளவுக்கு ஸ்டாஃப் இல்லை என்று சென்ற ஆண்டு குறிப்பிட்டேன். அதில் இன்னும் ஒன்றும் செய்ததாக இல்லை. குறிப்பாக நந்தனம் அலுவலகத்தில் எம்பிளாய்மெண்ட் ஆபீசில் அதிகமான வேலைக்கு ஈடாக அதிக ஸ்டாஃப் இல்லை. அவற்றை அரசு கவனித்து உடனடியாக அதைத் தீர்க்க வேண்டும். சென்ற முறை நம்முடைய தொழிலாளர் நல இலாக்கா அதிகாரிகளுக்கு எல்லாம் போக்குவரத்து வசதிக்கு கார்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டேன். இன்றைக்கு ஓரளவுக்கு அவர்களுக்கு கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையிலே இந்தக் குறைகளைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

*திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யக் கோரிக்கை மீது எனக்கு முன்னாலே இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் இந்த அரசு தொழிலாளிகளுக்காக ஏராளமான நன்மைகள் செய்தது என்ற பெயரில் அவருடைய பாணியில் சில விளக்கங்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவர் பேச்சைக் கேட்கும்போது அவர் தமிழ் நாட்டைப் பற்றி பேசுகிறாரா அல்லது வேறு எந்த மாநிலத்தைப் பற்றியாவது பேசுகிறாரா என்ற சந்தேகம் வரக்கூடிய அளவில் செயற்கையான வாதத்தை, சிரமத்தோடு எடுத்து வைத்தார். அவர் காட்டிய உதாரணமே வேலூர் மருத்துவமனை விவகாரம். அதிலே 15 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு இழந்த தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம், குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு வேலை வாய்ப்புத் தந்தார் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி: நான் ஏதோ சிரமப்பட்டு சிலவற்றைச் சொன்னதாகவும், தமிழ்நாடு பற்றியதா என்ற சந்தேகம் கிளம்பக் கூடிய அளவில் இருந்தது என்றும் சொன்னார்கள். நேரமில்லை, அவர் உட்கார்ந்தால் 1 மணி





நேரம் நான் ஆதாரத்தோடு பல விளக்கங்களைத் தருவேன். இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்று விளக்க நான் அவசர அவசரமாகப் பேசி முடித்தேன். என்னிடத்தில் நிறைய விளக்கங்கள் இருக்கின்றன. தனியாக விளக்கி அவரை அந்த அவைக்கு கன்வின்ஸ் செய்யத் தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: வேலூர் மருத்துவமனையில் வேலை இழந்த 15 தொழிலாளர்களுக்கு வேலை தந்ததாக இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அது நல்ல செயல். வெளிப்படையாகப் பார்க்கும்போது, வேலை இழந்த 15 பேருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தார்கள் என்று பார்க்கும்போது அருமையான செயல் என்று பாராட்டத் தோன்றும். ஆனால் ஒரு மோசமான நோக்கத்தோடு செய்யப் பட்ட நல்ல செயல் என்று எண்ணும்போது தற்காலிகமாக, விமர் விளம்பரத்திற்காக அரசாங்கம் செய்த வேலையே தவிர, தொழிலாளர்கள் மேல் எடுத்துக்கொண்ட அக்கறையினால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்குக் காட்டுகின்ற ஆர்வத்தால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாகச் செய்யவில்லை; அரசாங்கத்தின் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலூர் மருத்துவமனை மட்டுமல்ல. இந்த விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று ஆளும் கட்சி பத்திரிகைகளும், பேச்சாளர்களும் அவர்களுடைய பிரச்சார இயந்திரத்தை முடுக்கிவிட்டார்கள். வேலூர் மருத்துவமனை விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள்; எதிர்க்கட்சிகள் அந்த நிர்வாகத்தை ஆதரிக்கின்றன என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் இந்த நாட்டிலே இருப்பவர்கள் இதை ஒரு தொழிலாளர் பிரச்சனையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வேலூர் மருத்துவமனை விவகாரம் முடிந்துபோன ஒன்று. அது மட்டுமல்ல. அதற்கும் இந்தத் தொழிலாளர் நல மானியத்திற்கும் சம்பந்தமில்லை. அது ஐ.டி.-ஆக்டிலும் வராது இதிலும் வராது. அதனால் இந்த மானியத்தைப்பற்றி பேசினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அது இந்த மானியத்தில் வராது; அது தொழிலாளர் பிரச்னை அல்ல; தொழில் தகராறு சட்டத்தில் வராது என்பதை நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதால் நான் இதைக் கூறினேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 4

[illegible]ருக்கிறார். ஒரு மாதத்திற்கு மேலாக இந்த ஸ்ட்ரைக் நடந்திருக்கிறது. இதிலே லேபர் கமிஷனர், லேபர் டிபார்ட்மெண்டு எல்லாம் ஒரு மாத காலத்திற்கு ஏன் தலையிடவில்லை? போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களது துயரைத் துடைக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது இடையிலே ஜனவரி 10 ஆம் தேதி திருச்சியிலே தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த தி.மு.க. திரு. மூர்த்தி அவர்கள் தலைமையிலே ஒரு தீர்மானமே போட்டார்கள். நாங்கள் கன்சிலியேஷனுக்குத் தயார்; அந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் ஏற்பாடு செய்தாலும் நாங்கள் கலந்துகொள்ளத் தயார் என்று முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துத் தபால் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கும் எந்த பதிலும் வரவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போகட்டும், அதனைத் தவிர அவர்களை, நான் தங்கள் மூலமாக இந்தத் துறை அமைச்சர் அவர்களிடமும், அரசாங்கத்தினிடமும் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். 35 நாட்கள் போராட்டம் நடைபெறுகிறது. [illegible] செய்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் என்ன காரணத்தினால் அரசு தலையிடாமல் தாமதம் செய்தது? ஒரு தொழிலாளர் நல அரசாங்கமாக இருந்திருந்தால் 15 ஆயிரம் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இவ்வளவு தாமதம் காட்டியிருக்குமா? ஒரு பக்கம் கரும்பு காய்கிறது—விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மறுபக்கம் 15 ஆயிரம் தொழிலாளர்கள்—அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் 10 ஆம் தேதியே [illegible] கன்சிலியேஷனுக்கு நாங்கள் தயார் என்று அறிவித்திருக்கிறார்கள். ஏன் அரசாங்கம் தலையிடவில்லை?

“போய், போய் நான் பேச முடியுமா? அமைச்சர்களே நேரில் போய்ப் பார்க்க முடியுமா?” என்று அமைச்சர் சொல்லலாம். தங்கள் லேபர் கமிஷனர் என்ன செய்கிறார்? டெபுடி கமிஷனர் என்ன செய்கிறார்? [illegible] சங்கம் வைத்துக்கொண்டு [illegible] அவர்களுக்குக் கொண்டிருக்கிறீர்களே, அந்த இலாகா என்ன செய்கிறது? அவர்கள் என்ன முயற்சி எடுத்துக்கொண்டார்கள்? இதுவரை தெரியவில்லை. அந்த



1975 ஏப்ரல் 4] [திரு. பெ. சீனிவாசன்]

இலாகாவின் மனப்பான்மையும் தொழிலாளர்களைத் தெரிவதைத் தவிர முதலாளிகளை மிக நன்றாகத் தெரியும். வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு மாத காலம் ஆகியும் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்கிறார்கள்.

இதற்கு முன்பு என்ன ஆயிற்று? திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களது முயற்சியின் காரணமாக அமைச்சர் அவர்கள் சமரசம் பேசினார்கள். அது தோல்வி அடைந்தது. இங்கே பெரிய தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். தொழிலாளர்களது விவகாரம் என்றால் கோர்ட்டுக்குப் போக வேண்டாம்—கோட்டைக்கு வந்தால் போதும். குளுகுளுவென்று முதலமைச்சர் அவர்கள் பேசிப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவார்கள். தொழிலாளர்கள் புன்னகையோடு திரும்புவார்கள் என்று சொன்னார்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் அல்லலுற்றுக்கொண்டிருந்த போது ஆளுகிற கட்சி என்ன செய்தது? முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள்? தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள்? மிகப் பயங்கரமான—முழு மோசடிதான் நடந்தது.

It is a total betrayal of the ruling party.

அங்கே தொழிற்சங்கத்தையே உடைப்பதற்கு சதித் திட்டத்தைத் தீட்டி இந்தப் பேரவையில் உறுப்பினராக இருக்கிற திரு. எம். செல்வராஜ் அவர்கள் பெயரைப் போட்டு தினத்தந்தி பத்திரிகையில் ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி அவர்கள்தான் அங்கே தலைவராக இருந்து—மற்ற கட்சி சங்கங்களுடன் ஒருங்கிணைந்து வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அருணா சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்டதாக ஒரு அறிவிப்பு செய்யப்படுகிறது. “அருணா சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஒரு வேண்டுகோள்—சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராஜ் அவர்கள் சமரசம் செய்து வைத்ததின் காரணத்தினால்—அருணா சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் சங்கமும், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தைச் சார்ந்த ஊழியர்களும் 13—1—1975 முதல் வேலைக்குத் திரும்பிவிட்டோம். ஆலையில் அரவை 13—1—1975 முதல் ஆரம்பமாகிவிட்டது. இதுவரை வேலைக்குச் செல்லாத ஊழியர்களும், பணியாளர்கள் எல்லோரும் உடனே வேலைக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்” என்று விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

உடனடியாகத் தீர்ந்துவிடாது. உடனடியாகத் தீர்வு காணவும் முடியாது. படிப்படியாகத்தான் அரசின் கவனத்திற்கு வந்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் தொலைபேசி மூலமாகக் கூட எனக்கு இந்த விபரத்தைச் சொல்லியிருக்கலாம். அப்படித் தெரிவித்திருந்தால், இப்படிப்பட்ட பிரச்சனை இருந்தால் உடனடியாக பரிகாரம் காண்பதற்கு கூட அல்ல, என்ன பிரச்சனை என்று விசாரித்துவிட்டு வந்திருக்கலாம்.

திடீரென்று நான் போகிற பாதையில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கலாம். அவ்வளவும் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. கன்னியாகுமரிக்கு நான் போய்க்கொண்டிருக்கிறேன். வழியிலே 10 சம்பவங்கள் இருக்கும். போகிற இடங்களில் எல்லாம் என்னென்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டு போக முடியாது. சூழ்நிலைகளை உணர்ந்து குற்றச்சாட்டுகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : very sorry, Mr. Deputy Speaker, the Hon. Minister seems to be offended.
நான் அன்றையதினம் அமைச்சரை அங்கே சந்திப்பதற்குள்ள சூழ்நிலை இல்லை. அவர்களுடைய கட்சிக்காரர்கள் நிறைய சூழ்ந்துகொண்டிருப்பார்கள். எனக்குத் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்னேன். நண்பர் சுப்பு அவர்கள் இந்தப் பிரச்சனைப்பற்றி அமைச்சரிடம் பேசியதாக கேள்விப்பட்டேன். அமைச்சர் நினைத்திருந்தால் இந்தப் பிரச்சனையை 20 நிமிடங்களில் தீர்த்திருக்கலாம். தனியார்களுக்கு அந்த ரூட்டுகளைக் கொடுத்ததை கான்சல் செய்திருக்கலாம். ஆர்.டி.ஓ.-வைக் கூப்பிட்டு டெம்பரரி பெர்மிட் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கலாம். பி.ஆர்.சி.யைக் கூப்பிட்டு, அந்த ரூட்டுகளில் பஸ் விடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சரவர்கள் அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சரை அப்படி முயற்சி எடுத்துக்கொள்ள அங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் வட்டச் செயலாளர்களும் விட்டிருக்க மாட்டார்கள்; அவர்கள் எல்லாம் பூர்ஷ்வா மனப்பான்மையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்லிக்கொள்வதை வைத்துச் சகோதரர் அவர்கள்தான் திருத்திக்கொள்ள வேண்டுமே அல்லாமல் திருத்திக்கொள்ள வேண்டியவன் நான் அல்ல. இன்றைக்கு அப்படி ஒரு நிலைமை வளர்ந்திருக்கிறது. இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். ஒவ்வொரு தொகுதியிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் தொழிலாளர்களோடு உறவு கொண்டு இந்த மாதிரி பிரச்சினைகளில் தலையிட்டு அரசாங்க நிர்வாகத்தை முதலாளி நிர்வாகம் கெடுக்க முடியாது என்ற நிலை இருந்தால் நிச்சயமாக இவ்வளவு விவகாரங்கள் வந்திருக்காது. சிம்சன் போன்ற விவகாரங்கள் நிச்சயமாக வந்திருக்காது. இப்படிப்பட்ட விவகாரங்களை இந்தச் சர்க்கார் சந்தித்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த மனப்பான்மை இன்று முதலமைச்சரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசி உறுப்பினர் வரை நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறோம். நான் சொன்னது ஒரு சின்ன உதாரணம்.

(மாலை 5-30)

இன்றைக்கு நம்முடைய ஆறுமுகம் அவர்கள் இவ்வளவு வருத்தப்படுகிறார்கள். சர்க்கரை ஆலை வேலை நிறுத்தப் பிரச்சினையில் என்ன ஆயிற்று? அமைச்சர் அவர்கள் கூட பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடந்தது 20-ஆம் தேதி. வேலை நிறுத்தம் ஆரம்பமாகப் போகிறது. எனக்கு 3 நாட்கள் டைம் கொடுங்கள், சமரசப் பேச்சை தொடர்ந்து ஒரு நல்ல முடிவு காணலாம் என்றார். 23-ஆம் தேதி ஆன பிறகும் சமரசம் வரவில்லை. ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஒரு சமரசம் செய்து வைக்க முடியாத காரணத்தினால்—7 சர்க்கரை ஆலைகள் அரசாங்கத்தின் சர்க்கரை ஆலைகள்—9 சர்க்கரை ஆலைகள் தனியார் ஆலைகள்—இந்த 7 அரசாங்கக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றவற்றுக்கு முன்மாதிரியாக இருந்திருந்தால் கூட மற்ற தனியார் சர்க்கரை ஆலைகளிலும் ஒரு சமரசம் ஏற்பட உதவியாக இருந்திருக்கும். அவர்களும் பயப்படக்கூடும். ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியுற்று—வேலை நிறுத்தம் 23-ஆம் தேதி தொடங்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பங்கேற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற தொழிலாளர் சங்கத்திற்கு திரு. மூர்த்தி

இன்னும் அதில் மிரட்டலும் அடங்கியிருக்கிறது. "காலம் தாழ்த்தாமல் வேலைக்குத் திரும்புங்கள். எதிர்காலத்தில் நிர்வாகம் உங்களை வேலை நிறுத்தம் காரணமாக பழிவாங்காமல் பார்த்துக்கொள்கிறோம்" என்று விளம்பரம் செய் திருக்கிறார்கள்.

**திரு. எம். செல்வராஜ்:** மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் தொழிலாளர் களுக்கு விரோதமாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுகிறது என்கிற ஒரு எண்ணம் தொனிக்கிற வகையில் இங்கே சொன்னார்கள்.

ஏற்கனவே சர்க்கரை ஆலை சம்பந்தமாக—அந்தத் தொழிலாளர்களும்— நிர்வாகியும் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னைத் தலையிட்டு ஒரு சமாசம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்ட காரணத்தினால்—அதுவும் முதலில் நடத்திய சமரசம் தோல்வி அடைந்து ஏறத்தாழ 1 மாத காலத்திற்கு மேல் வேலைநிறுத்தம் நீடித்துச் சென்றுவிட்டது என்ற பிறகு—நான் தலையிட்டு ஒரு சமாச முடிவு அருணை ஆலை சம்பந்தமாக ஏற்பட்டது. அதைத் தொழி லாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதோடு அறிவித்ததைவிட இரண்டு மூன்று சலுகைகள் அதிகமாகத் தொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்து நல்ல முறையில் அந்த ஆலை இன்றைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழி லாளர்களில் யாரும் பழிவாங்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** மிக மோசமான நேரமாக இருக்கிற காலத்தில் சிறு சிறு விவசாயிகள் எல்லாம் கரும்பு காய அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன—ரொம்ப விசித்திரமான வாதம்---15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு—கதவடைப்பு செய்யப்படுகிற நேரத்தில் தொகுதி எம்.எல்.ஏ. என்று எந்தப் பரிவும் அக்கறையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை—ஒரு மாதத்திற்குமேல் போராட்டம் நீடிக்கிறபோது தொழிலாளர்களது இணைப்பை உடைக்க சதி நடக்கிறது. தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்கிற முறையில் அருணை ஆலை சம்பந்தமாக எண்ணிப் பார்த்து அறிக்கை தருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி—அங்கே வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிப்புச் செய்திருக்கிற நேரத்திலேயே இவர் இங்கே இதுபோல அறிக்கை கொடுக்கிறார். கட்சி அவர்மீது எடுத்த நடவடிக்கை என்ன?



தி.மு.க. தொழிற்சங்கத்தின் சார்பில் சத்தியா ஸ்டுடியோ கதாநாயகன் ரங்கசாமி—காட்டூர் கோபால் ஆகியவர்கள் அங்கே சக்தி சர்க்கரை ஆலை சம் பந்தமாக சமாசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடுகிறார்கள். ரெங்கசாமி இண்டர்நேஷனல் தொழிற்சங்கத் தலைவர்—கட்சி என்கிற குறுகிய மனப் பான்மை கிடையாது—இங்கே தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட் டம் நடத்திக்கொண்டிருக்கிற போது அங்கே சமாசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடப்படுகிறது.

**திரு. எம். செல்வராஜ்:** தோழர் மூர்த்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நீக்கி வைத்த பிறகுதான் இந்த உடன்பாடு ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலையில் காட்டூர் கோபால் கையெழுத் திடலாமா என்கிறார். தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எதை எதை கேட்டார்களோ அதை அந்த நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. உடனே அந்த ஆலைத் தொழிலாளர்களும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தொழிலாளர் களுக்கு விரோதமான முறையில் அங்கே ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப் படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் திரா விட முன்னேற்றக் கழக தொழிற்சங்கச் செயலாளராக இருந்தவர். தனக்குச் சம்பந்தம் இல்லாத துறையில் ரொம்ப நாளாக இருந்தவர்—அதை வெளிப் படுத்திக்கொண்டு விட்டார். அங்கே 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் களது கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குப் போய்விட்டார்கள். அங்கே சமாசம் ஏற்பட்டு விட்ட பின் அதில் கையெழுத்திடுவதில் என்ன இருக்கிறது என்று தெரிய வில்லை. எனக்கும் தொழிற்சங்கத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றிச் சொன் னார்கள். நிறைய சம்பந்தம் இருக்கிறது. நான் பல தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தியும் இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** திரு. வீராசாமி அவர்கள் அவருடைய வாதத் திற்காக அவரே எதிராக . . . .

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 4

சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, தனிப்பட்டு எப்படி நடந்துகொண்டு போனார் என்று சொல்ல ஆரம்பித்தால், அது எங்கோ போகும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் தனிப்பட்ட எந்தத் தொழிற்சங்கத் தலைவர் மீதும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. கன்சிலியேஷன் பேசும்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் விசாரித்துவிட்டுத் தான் தீர்ப்பளிக்கிறோம். அவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகத்தான் தீர்ப்பளித்திருக்கிறேன். அதைமட்டும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அமைச்சரவர்கள் முயற்சியைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அவர்கள் கேட்டது—கொடுத்தது வேறு விவகாரம். ஆனால் அந்தப் போராட்டத்தை உடைக்க காட்டூர் கோபால், சர்வகட்சியின் ஒரு தலைவர் ரங்கசாமி என்பவர்—ஊருக்கு ஊர் போய் போராட்டத்தை உடைத்தது நோக்கத்தக்கது. . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரங்கசாமி ஒன்றும் சர்வகட்சித் தலைவர் இல்லை.

He is an I.N.T.U.C. Labour Leader. He belongs to Indian National Trade Union Congress.
அது சரியாகத் தெரியவில்லை . . . .

**திரு. கு. காமாட்சி :** ரங்கசாமி ஏதோ சத்தியா ஸ்டுடியோ நாடகத்திலே நடித்த கதாநாயகன் என்று சொன்னார். இப்பொழுது அம்மையார் ஐ.என்.டி.யு.சி லேபர் லீடர் என்கிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை அவர் . . .

**திரு. பெ. சீனிவாசன் :** காமாட்சி அவர்களுக்குப் புரிய வைக்கக் கூடிய சக்தி எனக்கும் இல்லை. யாராலும் புரிய வைக்கமுடியாது. உங்களுக்குப் புரிய வைப்பது ரொம்ப சிரமம்.

தொழிலாளர் பிரச்னையில் ஒரு தொழிற்சங்கம் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால், தொழிலாளர்களுக்கான நியாயமான காரணங்களை அணுகாமல் இந்த அரசாங்கம் செய்கிறது என்ற காரணத்தால்தான் இதனை மீண்டும் மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு ஆலங்குளம் சிமெண்ட் ஃபாக்டரியிலே ஸ்டிரைக் நடந்தது. அந்த ஸ்டிரைக்கை ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பு அவர்கள் நல்ல விதத்திலே உதவி செய்து நடத்திவைத்தார். அரசாங்கம் எந்த அளவு பிரச்னையைத் தீர்க்கத்



1975 ஏப்ரல் 4] [திரு. பெ. சீனிவாசன்]

தவறியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். முன்னால் இருந்த தொழிலமைச்சருக்கு வேண்டிய அசிஸ்டெண்ட் டைரக்டரோ, யாரோ அங்கே இருக்கிறார். அவருடைய 'விம்ஸ் அன்ட் ஃபான்ஸி' க்காக, பிரச்னை தீர்க்கப் படாமல், அங்கே போராட்டம் நடந்தது. அந்த அளவுக்கு இந்த அரசு தொழிலாளர் நல அரசே இல்லையென்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சொந்த அனுபவத்தையே கூறுகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபொழுது—பேரறிஞர் அண்ணா இருந்த பொழுதும் அந்த அநியாயம் நடந்தது. நான் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்தினேன். அங்கே, துலுக்கப்பட்டியில் போராட்டம் நடத்தினேன். ஒரு துரும்புக்குக்கூட சேதமில்லை. 10,000 பேர் போராட்டம் நடத்தினோம். எல்லோரும் ஆதரவாக இருந்தார்கள். எல்லா கட்சிகளும் சேர்ந்து நாங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். ஆனால் திடீரென்று என்னைக் கைது செய்தார்கள். நான் சென்னைக்கு வந்தவுடன் அண்ணா அவர்களைப் பார்த்து, என்னைக் கைது செய்தது உங்களுக்கு முன்னாலே தெரியுமா, பின்னாலே தெரியுமா என்று கேட்டேன். அண்ணா அவர்கள், எனக்குப் பின்னால்தான் தெரியும். அதோடு விட்டுவிடு, அதற்கு மேல் கேட்காதே என்றார்கள் . . . (திரு. வீராசாமி குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** சார், அவர் மீல்டாகிவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள், சீனிவாசன்.

**திரு. கு. காமாட்சி :** அவர்தான் மீல்டாகிவிட்டாரே. இரண்டு பேரும் மீல்டாகிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் இரண்டுபேரும் மீல்டு ஆகிறார்கள்—அவர் மீல்டாகிறார் என்றால் நான் எதற்காக இருக்கிறேன் ?

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வீராசாமி அவர்களுக்கு அந்த நேரத்திலே நடந்திருப்பது தெரிந்திருக்காது. அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரி என்பது எனக்குத் தெரியாதா ? அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரியாக இருக்கும்போது, ஆளுங்கட்சி உறுப்பினரை, தொழிற்சங்கத் தலைவரை கைது செய்தார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், என் மேல்

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயோ எடுத்துக் கொண்டு போகிற காரணத்தாலே குறுக்கிடுகிறேன். கடைசியிலே விளக்கம் சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் இந்தச் சர்க்கரை ஆலைப் பிரச்னையைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே பேசினார்கள். அது ஆண்டி-லேபர் பாலிசி என்று சொன்னார்கள். நான் இப்பொழுது ஆண்டி-லேபர் பாலிசி என்பதற்குப் பொருள் விளங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி—இலாகாவைப் பற்றி குற்றச்சாட்டு. அந்த இலாகாவிலே இருப்பவர்களுக்கு முதலாளிகளைத் தெரிகிற அளவுக்குத் தொழிலாளர்களைத் தெரியவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள். ரொம்பக் கடுமையான குற்றச்சாட்டு. தொழிற்சங்கத் தலைவர் யாரும் சொல்லாத குற்றச்சாட்டு. அந்த இலாகாமீது அப்படிப்பட்ட களங்கம் இது வரையில் வரவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைப் பிரச்னையிலே வேலை நிறுத்தம் நடந்தது என்று கூப்பிட்டுப் பேசவில்லையென்று திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். சர்க்கரை ஆலைப் பிரச்னையில் உட்கார்ந்து பேசினோம். உத்தரப் பிரதேசத்தில், முதலமைச்சர் பகுகுணா பேசினார். இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் பேசினார். அவர் ரூ. 305 தந்தார். தேவராஜ் அர்ஸ் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ரூ. 306 தந்தார்கள். நாங்கள், தொழிலாளர் களுக்கு எதிராக நடத்துகிற அரசாட்சியில் ரூ. 325 தந்தது குறைபாடே தவிர, எனக்குத் தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலே நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்களிடத்திலே பேசிவிட்டு, எதிர்பார்க்காத தொகையைத் தந்தேன். அவர்கள் எதிர்பாராதத் தொகையைத் தந்தவுடனே எங்கே தங்களுக்குத் தொழிற்சங்கத்திலிருக்கிற பிடிப்பு போய்விடுமோ என்று சில தவறுகள் நடத்தினார்கள். அவற்றையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்ல விரும்பவில்லை. தொழிற்சங்கம் நல்ல நோக்கத்தோடு நடக்க வேண்டுமென்பதால், அதைச் சொல்லவில்லை. ரூ. 325-க்கு மேல் யார் தந்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம். நீங்களே சொல்கி றீர்கள், மெஜாரிட்டி செய்வதால் எல்லாம் சரியாகிவிடுமா என்று கேட்கி றீர்கள்? மைனாரிட்டிக்குப் பாதகமா இல்லையா என்று கேட்கிறீர்கள். அரசாங்கம் செய்தது நியாயமான தீர்ப்பு அல்லவா? தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு சர்க்கரை ஆலைப் பிரச்னையில் எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லுங்கள். தனியாக வேண்டுமானால், உங்கள் தலைவர்களைக்



கூப்பிட்டுப் பேசிப் பாருங்கள், முதலாளிகள் எங்களிடத்தில் வேதனைப் பட்டார்கள்.

**திரு பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, நான் சொல்கிற கோணத்தை விட்டுவிட்டு, வேறு கோணத்தில் பேசுகிறார்கள். அவர்கள் கேட்டது ரூ. 425. நீங்கள் ரூ. 325 கொடுத்தீர்கள். இதிலே, நீங்கள் ஒப்புக் கொண்டவர்களா இல்லையா என்பது வேறு. நீங்கள் மெஜாரிட்டி தொழிலாளர் கள் சொல்வதைக் கேட்கவில்லை. 11 தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்க வில்லை. மூர்த்தி சொல்வதை அரசு கேட்கவில்லை. மைனாரிட்டி தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்டு, ஊருக்கு ஊர் அறிக்கை கொடுக்கிறீர்கள். ஒழுங்காக வேலைக்குப் போகாவிட்டால், நாளையதினம் பழிவாங்கப்படுவீர்கள் என்கிற பாவனையை அளிப்பதாகாதா உங்களது அறிக்கை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** மூர்த்தி அவர்கள் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர்தான். தமிழ்நாட்டிலே என்னுடைய ஊரைச் சேர்ந்த புகளூர் ஆலைதான் மாதக் கணக்கிலே மூடிக் கிடந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரிலேயிருந்த மில்லும் என்னுடைய ஊரிலேயிருந்த மில்லும் மூடியிருந்த தால், பேச வேண்டியிருந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரில் உள்ள மில் நீண்ட நாளைய மில். அவர்கள் தன்மைக்கு ஏற்ப பேசினார்கள். என்னுடைய ஊரில் டெக்கான் ஷுகர் மில்—அதனுடைய தன்மைக்கு ஏற்ப, அமைச்சர் சொல்வதற்காக ஸ்டிரைக் செய்து வந்தார்கள். அதாவது, அமைச்சர் பெரியவரா, மூர்த்தி பெரியவரா என்ற தனித் தன்மையைக் காண்பிக்க, தங்கள் பலத்தைக் காண்பித்தார்களேயொழிய, தொழிலாளர் போராட்டம் நடக்கவில்லை. அதனால்தான் கரும்பு உற்பத்தி செய்கிற தொழிலாளர் என்றால், ஒவ்வொருவருக்கும் 20 டன் குறைந்திருக்கிறது. தொழிலாளர் பார்வை ஒரு கோப்பினை மட்டும் நமது அ.தி.மு.க. நண்பர் சீனிவாசன் பார்க்கி றார்கள். கரும்பு வைத்திருக்கிற தொழிலாளர் பிரச்னையை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களுடைய உண்மை நிலையைச் சரியாகப் பார்க்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அந்த விவாதத்திற்குள்ளே போக வில்லை. சர்க்கரை ஆலையிலே ஒரு போராட்டம் நடக்கிறபொழுது தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையோ அல்லது தனிப்பட்டவர்களையோ சொல்ல ஆரம்பித்தால்—இதிலே நடந்த விஷயம் பற்றி எங்களுக்கு ஒரு கருத்து இருக்கும்—முடிவில்லாமல் போகும். அதையெல்லாம் ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியிலே வைத்துக்கொள்ளலாம். இங்கு அவர் ஒரு கருத்து

அதுவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே
அதிகமாக அவர்கள் கவனம் செலுத்தாமல் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நல்ல
நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்க வேண்டுகிறேன். அந்தப் பணியிலே அவர்கள்
ஈடுபட்டால் அவர்களை நாம் மனமாரப் பாராட்டமுடியும். ஆனால் அதை விட்டு
விட்டு காட்டூர் கோபால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம்
செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல.
வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படுவது விவசாயிகள், அன்னியச் செலாவணி
குறைகிறது என்ற இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அவர்கள் கருத்திலே
கொண்டு அப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவு அளிக்காமல்
இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றுக்கொண்டதற்குப்
பிறகு பல்வேறு தொழிலாளர்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைத்திருக்
கிறது. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றவை எவையென்று
அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பீடித் தொழிலா
ளர்கள் பிரச்னை, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னை, விவசாயத் தொழிலாளர்
கள் பிரச்னை இப்படிப் பல்வேறு பிரச்னைகளை நம்முடைய அரசு தீர்த்து வைத்து
இருக்கிறது. அதைப்போலவே மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே
அச்சுத் தொழிலாளர்கள், திரையரங்குகளிலே பணியாற்றுகின்ற தொழிலா
ளர்கள், வியாபாரக் கூடத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், கடைகளிலே
உள்ள தொழிலாளர்கள், மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம்
அரசு சட்டத்தின் மூலமாகக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் செய்யவேண்டு
மென்று சொல்லியதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய
தாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள பீடித் தொழிலாளர்களும் தோல்
பதனிடும் தொழிலாளர்களும் மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளார்கள்.
அவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம்
அறிவோம். நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு சட்டங்களைப்
போட்டு அவர்களுக்கு உதவி செய்தாலும் கூட அவர்கள் இன்னும்
கஷ்டப்படுகிற நிலைமையில்தான் இருக்கிறார்கள். இதிலே நம்முடைய அரசு
தனிக் கவனம் செலுத்தவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிலை
மிகவும் வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது, வட ஆர்க்காடு
மாவட்டத்தில் அந்தத் தொழிலாளர்கள் கணிசமான அளவிற்கு இருக்கி
றார்கள். தோல் பதனிடுகிற தொழிற்சாலைக்குள் நுழைந்து பார்த்தால்
நிச்சயமாக 5 நிமிடம்கூட நம்மால் இருக்கமுடியாது. அந்த அளவிற்கு



நாற்றம் வீசும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அந்தத் தொழிலா
ளர்கள் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய
அந்த முதலாளிகளோடு கலந்து பேசி நம்முடைய அரசு ஏற்பாடுகளைச்
செய்யவேண்டும்.

நம்முடைய அமைச்சர் . அவர்கள் தொழிலாளர் நலத்துறையோடு,
வீட்டுவசதித் துறையையும் சேர்த்து நிர்வகிக்கின்றார்கள். பீடித் தொழிலாளர்
களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி செய்து
கொடுக்கக்கூடிய முறையில் அந்த முதலாளிகளோடும் கலந்துபேசி ஏற்பாடு
களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிலிருந்து
மானியம் பெற்றுக்கூட இந்த வீட்டுவசதித் திட்டத்தை அவர்களுக்கு
ஏற்படுத்திக் கொடுக்கலாம். அங்கே இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்
களையும் தோல் பதனிடும் தொழிலாளர்களையும் யாருக்காவது சொந்தமாக
வீடு இருக்கிறதா என்று கேட்டுப் பார்த்தால் கிடையாது என்றுதான்
சொல்வார்கள். ஆகவே அந்த பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும்
தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அதைப்போன்று நெசவுத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.
அவர்களுக்கும் அந்த வசதியைச் செய்துகொடுக்கவேண்டும். பீடித் தொழி
லாளர் காலனி, தோல் பதனிடும் தொழிலாளர் காலனி, நெசவுத் தொழிலாளர்
காலனி என்ற முறைகளில் வீடுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிலேறன்.

சி.எம்.சி. பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் சட்டத்
திற்கு அது உட்படாவிட்டாலும் மனிதாபிமானத்தோடு நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதை நாம்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 15 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்
பட்டார்கள். அவர்கள் அல்லலுக்கு உள்ளாகாமல் அவர்களுக்கு வேலை
வாய்ப்பைக் கொடுத்து நம்முடைய அரசை எல்லோரும் பாராட்டுவார்கள்
என்று நம்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், சிம்சன்
முதலாளிகளும் ஆரூரான் தொழிற்சாலை முதலாளிகளும் வேலை நீக்கம்
செய்யப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி
அவர்கள் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்தே
நம்முடைய அரசு தொழிலாளர்களின் பிரச்னையில் எவ்வளவு அக்கறை
கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

என்ன குற்றம் சாட்டினார்கள்? பல குற்றச்சாட்டுக்கள். பெண்களைக் கடத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியை தீ வைத்துக் கொளுத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியிலிருந்த காஷ் பாக்ஸை எடுக்க முயற்சி செய்தார் என்றெல்லாம் பல செக்‌ஷன்களைப் போட்டார்கள். மாதவனுக்குத் தெரிந்துதான் கைது செய்தார்கள். நான், இங்கு வந்து அண்ணாவுடன் தீவிரமாக வாதாடினேன். அண்ணா அவர்கள் தலையிட்டு சமரசம் செய்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அரசாங்கம், கலைஞர் அவர்கள் தலைமையிலேயிருக்கிற அரசாங்கம் முழுக்க முழுக்க பூர்ஷ்வா முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றே ஒன்று, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்று ஒன்று என்றால், இரவு 10.00 மணியாகும். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** 5, 6 பேர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிக்கொண்டே போனால் முடிவதற்கு ராத்திரி பத்து மணியாகிவிடும்.

**திரு. பெ. சீனிவாசன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இண்டியா மீட்டர்ஸ்பற்றி இங்கே கே.டி.கே. அவர்கள்கூடச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இடைக்கால நிவாரணம் தருவதாகச் சொன்னார்கள். தந்ததாகத் தெரியவில்லை. உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்ற போது—இந்த ஸ்தாபனத்தை நடத்துகின்ற யாரோ சம் அய்யர் என்று நினைக்கிறேன், பெயர் ஞாபகமில்லை, ஆர். பி. ஐயர் என்கிறார்கள். அவரால் தான் இரண்டரை கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர் பிர்லாவினுடைய கையாள் என்றுகூடச் சொல்கிறார்கள்—டெல்லியிலே ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களே கூறுகிறார்கள்—ஆளுங்காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் அழைத்துக்கொண்டு அல்லது அவர்களை யாவது அனுப்பி அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டும். அவர்கள் இப்போது எந்தக் கடையிலேயும் சாமான்கள் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். காரணம் 10 ரூபாய் ஷேர் 8 அணா மதிப்புக்கு வந்துவிட்டது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





***திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கொண்டுவந்திருக் கின்ற தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதித் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

வீட்டு வசதித் துறையிலே நம்முடைய தமிழகத்திலே மகத்தான சாதனையைப் புரிந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களுக்காகட்டும், நடுத்தர மக்களுக்காகட்டும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக இருக்கட்டும் சமுதாயத்திலே உள்ள அத்தனை பேர்களுக்கும் வீட்டு வசதித் துறையின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து வசதிகளைச் செய்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே கிராமப்புறங்களில் உள்ள மக்களை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். கிராமப்புறங்களிலே இப்போது வீட்டு வசதித் துறை செயல்படுகிறது. இருந்தாலும், மேலும் விரிவுபடுத்தவேண்டிய நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதி சங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஊராட்சிகளிலே உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குக் கடன்கள் கிடைத்து அவர்கள் வீடுகளைக் கட்டமுடியும். எங்கள் பகுதியிலே நீண்ட நாட்களாக ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேலூர் வட்டத்திலே உள்ள ஒடுகத்தூரிலே உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம். விரைவில் அதற்காக அனுமதி தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர் நல மானியத்திலே சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் தொழி லாளர் நிலை பற்றிப் பேசும்போது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தைப்பற்றி அதிகமாக இங்கே பேசினார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் எங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் 1 லட்சம் டன் கரும்பு அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்படுத்த எதிர்க் கட்சிக்காரர்கள் முயற்சிக்கக்கூடாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இதனால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

சர்க்கரை ஆலைத் தொழில்பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் பேசினார்கள். சர்க்கரை ஆலை (Seasonal Industry) சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் 6 முதல் 8 மாத காலத்திற்குத்தான் வேலை கிடைக்கிறது. எஞ்சிய நாட்களுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை ஏதாவது ஒரு முறையிலே ஏற்படுத்தித் தரவேண்டும். வேலையில்லாத நாட்களுக்கு ஊதியமாக ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 50 சதவிகிதமும், செமி ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 25 சதவிகிதமும் அன்ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 10 சதவிகிதமும் தருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். அவர்களுக்குப் போதுமான ஊதியம் வேலையில்லாத நாட்களில் கிடைக்கக்கூடிய வகையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டும். சர்க்கரை ஆலை சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் இ.எஸ்.ஐ. திட்டத்தை அமுல்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.00)

அதைப்போல காட்டிலாக்கா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இது வரையிலும் அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைகளைச் செய்தும், அந்தப் பரிந்துரைகளை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டும், அதை இன்னும் அமலுக்கு கொண்டு வரவில்லை. அதை விரைவில் அமலுக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்டிலாக்காவில் கடைநிலை ஊழியர்கள், 'வாச்சர்கள்' நிரந்தரப் பணியாளர்களாக இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கடைநிலை ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்களை கெஜடெட் ஆபீசர்களாக அதாவது அரசுப் பதிவு அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக இருக்கிறது. அதையும் கவனத்திற்கொண்டு நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் சாலை ஆய்வாளர்களும், இதர ஊழியர்களும் பல ஆண்டுகாலமாக பணியாற்றினாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் இல்லை. ஆகவே, அவர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

குறிப்பாக நம்முடைய நாட்டிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலே மிக முக்கியமாக இருக்கக் கூடிய சர்க்கரைத் தொழிலிலும், தோல் தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அந்த அந்நியச் செலாவணியின் பலனைப் பெறுகின்ற மத்திய அரசிடமிருந்து அதிலே ஒரு பங்கையாவது நம்முடைய தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தர நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பாடுபட வேண்டும். அதற்காக மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மெத்தவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே தொழிற்சங்கங்கள் எப்படியிருக்கின்றன என்றால் ஒரு எண்டர்பிரைசுக்கு ஒரு யூனிட் என்ற விதத்தில், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற விதத்தில் செயல்பட்டு வருகிறது. இதுதான் நம்முடைய அரசின் கொள்கை என்றாலும் இப்பொழுது ஒரே தொழிலில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருப்பதால் பல்வேறு தொழிலாளர் பிரச்னைகளுக்கு வழியேற்படுகிறது. அதையும் அரசு கவனத்திற்கொண்டு அத்தகைய ஒரு திட்டத்தை விரைவில் அமல் படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்பொழுது எந்தவிதமான வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவதில்லை. அதைப்போல ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்பொழுது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டிலே இரயில்வே தொழிலாளர்கள் ஸ்டிரைக்கே செய்ய முடியாதாம். 'கோ ஸ்லோ' (Go Slow) என்ற விதத்தில்தான் வேலைநிறுத்தம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய நாட்டிலேயும் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் அங்கேயுள்ள பிரச்னை, 55 வயதில் இருப்பவர்கள் 60 வயது வரையில் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்கு இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளிலே வாரத்திலே 5 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் பிரச்னையாக இருக்கிறது. இப்படிப்பட்ட மிகவும் குறைந்த பிரச்னைதான் ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலே இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் பிரச்னைகள் பல இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளில், குறிப்பாக நான் பேசிய பிரச்னைகள்

கூடாது என்று முதலமைச்சரவர்கள் சொல்லி, அதை முதலாளிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரகாசா மில்லில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தீர்ப்பையும் மீறி இந்தப் பிரச்னையில் சிலரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். இதுபற்றி தொழில் இலாக்காவில் சொன்னால் அவர்கள் ஏ.சி.எல் நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரின் தீர்ப்பு ஆகி, எந்தத் தொழிலாளியையுமே டிஸ்மிஸ் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கும்பொழுது 6 தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் முதலாளிகள் பலம் பார்க்கிறார்களா? இப்படிப்பட்ட பிரச்னையில் வறட்டு கௌரவத்தின் காரணமாக இவ்வாறு இருக்கிறது, 3, 4 மாதங்களாக தொழில் இலாக்கா அதிகாரிகளும் தலையிடப் பயப்படுகிறார்கள், காரணம் என்னவென்று கேட்டால் செல்வாக்கு பெற்ற முதலாளி. செல்வாக்கு பெற்ற முதலாளி என்றால் எந்த முதலாளி என்று எங்களுக்குப் புரியவில்லை. பிரச்னை ஒன்றுதான், அதில் செல்வாக்கு பெற்றவர்கள், செல்வாக்கு பெறாதவர்கள் என்று இருக்க வேண்டுமா? ஒரே கருத்துதான், ஒரே பிரச்னைதான். அப்படியிருக்கும் பொழுதுகூட பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அலுமினியம் பேக்டரியில் திரு. சுரேந்திரன் அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்து படாதபாடு பட்டு தொழிற்சங்கமே இல்லாத அளவிற்கு ஆகிவிட்டது. இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு என்ன கூலி கொடுக்கிறார்கள்? எல்லா பேக்டரிகளிலேயும் சம்பள உயர்வு வருகிறது. ஆனால் அங்கே மட்டும் வரவில்லை. 300 ரூபாய்க்குக் குறைவாக அந்த பேக்டரியில் வேலை செய்கிறார்கள். அரசாங்கம் வேண்டுமளவு மின்சாரம் கொடுக்கிறது. ஆனால் இன்றைக்கு 'லே ஆஃப்' செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. எந்தவிதமான சம்பளமும் கிடையாது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தத் தொழிலாளர்கள் அழ வேண்டிய நிலைமையிருக்கிறது.

கார்ப்பரேஷனால் எடுக்கப்பட்ட ஆலைகளிலேயும் நிர்வாகத்தினர் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்த மறுக்கிறார்கள். உள்ளே இருக்கும் லோகல் தலைவர்கள் நிர்வாகிகளிடம் இப்பொழுது சொன்னால் 3 மாதம் கழித்துத்தான் அந்தப் பிரச்னையைப் பரிசிலனைக்கு எடுக்கிறார்கள். அது எப்பொழுது தீரும் என்று சொல்ல முடியாது.



இப்போது இரட்டைக் கொள்கை அமலாகியிருக்கிறது. கார்ப்பரேஷன் மில்களுக்கு ஒரு லேபர் ஆபிசர் நிர்வாகம். கார்ப்பரேஷன் அல்லாத தனியார் மில்களுக்கு ஒரு நிர்வாகம். சமீபத்தில் மத்திய சர்க்கார் எடுத்ததற்குப் பிறகு என்ன செய்கிறார்கள்? 15 நாளைக்கு ஒரு முறை பாக்டரி மேனேஜ்மென்டார்கள் வந்து கையெழுத்துப் போட்டுப் போகிறார்கள். வாச்மேனைக் கேட்டுப் பாருங்கள். எப்படி இந்த ஆலைகளை நிர்வகிக்கப் போகிறார்கள் என்று தெரியாது. பிரச்சினைகளை யாரிடத்தில் சொல்லுவது? லேபர் தகராறு வருமானால் தொழிற்சங்கத் தலைவர்கள் யாரிடத்தில் சென்று பேசுவது? எப்படி தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவது? இந்த நிலை நீடித்தால் உற்பத்தி எப்படி பெருகும்? சமுதாயத்தின் நலனை எப்படிப் பாதுகாக்க முடியும்?

இந்த மாதிரி இரட்டைக் கொள்கைத் தேவையில்லை. அரசாங்க ஆலைகளானாலும் சரி, தனி நபர்கள் ஆலைகளானாலும் சரி, லேபர் டிப்பார்ட்மென்ட் தலையிட அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் உற்பத்தி நஷ்டம் ஏற்படும். தேசவுடைமைக்கு விரோதமான கொள்கை கொண்டிருக்கும் தனி நபர்களுக்குச் சாதகமான நிலையை உண்டாக்கிவிடும். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது.

'லே ஆஃப்' செய்திருக்கிறார்கள். ஆறாயிரம் பர்மெனென்ட் தொழிலாளர்கள், டெம்பரரி தொழிலாளர்கள், ஆக பத்தாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வெட்டினால் எந்த வேலையும் கிடையாது. தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அமைச்சரிடமும், லேபர் டிபார்ட்மென்டிலும், திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிவிட்டோம். அவர்களுக்கு முழு நிவாரணம் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு வேறு தொழில்களுக்கு அவர்கள் செல்லவில்லை. அவர்கள் இந்தத் தொழிலையே நம்பியுள்ளமையால் என்ன செய்ய முடியும்? அவர்கள் எப்படி வாழ்வார்கள்? கோடிக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதித்தாலும் தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது. இதிலே அரசாங்கமும் முதலாளிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஃபாக்டரிகளில், குறிப்பாக பஞ்சாலைகளில் ஆக்சிடென்ட் நடக்கிறது. ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் வந்து பார்வையிடக் காலதாமதம் ஆகிறது, அவர்கள் பஸ்ஸில்தான் வரவேண்டும். இல்லாவிட்டால் முதலாளி காரில் வரவேண்டும். முதலாளி காரில் வந்தால் தொழிலாளி சத்தம் போடுகிறான். ஏன்

சிலவற்றைக் கவனத்திற்கொண்டு அமைச்சரவர்கள் அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொண்டு, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கட்சியின் சார்பிலேயும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் பேரி லேயும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி, தொழிலாளர் நலனோடு சமுதாயத்தின் நலனும் பிணைந்திருப்பதால் இந்தத் தொழிலிலே இருக்கிற இலாக்காவிலே சுறுசுறுப்பான நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதிலே அவசியமிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ஒவ்வொரு ஆண்டும் நாம் கணக்குப் பார்த்தால் கதவடைப்புகள் அதிகமாக அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்கள் அதிக வேலை நாட்களை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறி அமைச்சரவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், 1974 ஆம் ஆண்டில் 316 தொழில்கள் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறப் படுகிறது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற வாய்ப்பை அதிகமாக உண்டாக்க வேண்டும். அதன்மூலம் பிரச்னை களுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அது எந்த நிலையிலிருக்கிறது? கிட்டத்தட்ட 44 இலட்சம் நாட்கள் வேலையிழப்புக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அந்த இலாகா கண்டு பிடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படியே போவதன் மூலம் சமாதானங்கள் சொல்வதின்மூலம் நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இன்றைக்கு நமது நிலைமைகள் முறைப்படியே முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம் என்னவென்றால், தொழில் முதலாளிகளின் வெறும் வறட்டுக் கௌரவத்தினாலேயே 75 சதவிகிதம் கதவடைப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதைச் சொல்லிக்





கொண்டே வருகிறோம். காரணம் என்னவென்று கேட்டால் இவ்வளவு முன்னேற்றமடைந்த பிறகும்கூட, இவ்வளவு தொழிற்சங்க இயக்கங்கள் நடந்து, போராட்டங்கள் நடந்து, தொழிலாளர்கள் உரிமைகளை பெற்ற பிறகும் கூட இன்னும் பல தொழிற்சாலைகளில் பெரிய முதலாளிகள், செல்வாக்கு பெற்றவர்கள் இன்னும் அந்தத் தொழிலாளர்களுடைய நியாய மான கஷ்டங்களை உணர மறுக்கிறார்கள். காரணம், அவர்களுடைய வறட்டுப் பிடிவாதம்தான்.

உண்மையிலேயே தொழில் தகராறுகளைப் பார்த்தால் நியாயமான உடன் பாடுகூட பல நாட்களுக்குப் பிறகுதான் வரும் நிலைமையிருக்கிறது. அந்த உடன்பாட்டிற்கு முதலிலேயே முயற்சியெடுக்கப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அப்படி வருவதில்லை. நம்முடைய இலாக்காவும், முதலாளிகளும் தொழிலாளர்களும் சலித்து ஓய்ந்த பிறகுதான் ஒரு முடிவிற்கு வருகிறார்களே தவிர இதற்கு முன் நியாயமான முடிவைக் காண முன் வருவதில்லை. எனவே, இதிலே சில முடிவுகளைக் கான நம்முடைய இலாக்கா சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.சி.எல்., டி.சி.எல்., ஆகியோருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்படு கிறது? இரண்டுபேரும் சொன்னால் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு வந்தால் தான் முடிவு சொல்ல முடியும். அவராகவே முடிவெடுத்து அந்த முடிவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும். இதுதான் நியாயம் என்று எடுத்துச் சொல்லும் அளவிற்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கில்லை. இரண்டாவதாக, மேனேஜ்மெண்ட் தரப்பிலே பேச்சுவார்த்தைக்கு வருபவர்கள் அதிகாரம் இருப் பவர்கள் வருகிறார்களோ அல்லது அதிகாரம் இல்லாதவர்கள் வருகிறார்களோ தெரியவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கும்பொழுது கேட்டு விட்டு வருகிறேன், முதலாளியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லும் நிலையிருக்கிறது. இம்மாதிரி கூட்டுப்போம் நடத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை நிச்சயமாக மாற்ற சில அதிகாரங்களை லேபர் டிபார்ட்மெண்டுக்கு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டு உண்மையான நிலைமைகள் என்ன என்று கண்டுபிடித்து அவர்கள் செய்யும் முடிவுகளை அமலாக்க முதலாளிகளைக் கட்டுப் படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் முடியாது.

கோவை பஞ்சாலையில் போனஸ் பிரச்னை ஏற்பட்டு, முதலமைச்சரவர்கள் சொன்ன உடன்பாட்டின்படி, போனஸ் பிரச்னையிலே ஏதாவது சம்பவங்கள் நடந்திருந்தால் எந்தத் தொழிலாளியின் பேரிலேயும் நடவடிக்கை எடுக்கக்

அவர்களுக்கு வசதி பண்ணிக் கொடுக்கக்கூடாது? கவர் போட்டு மூடுவது கிடையாது. இந்தக் குறைகளை எல்லாம் அப்போதைக்கப்போது கண் காணித்துக் களைய முயற்சிக்கவேண்டும்

டவுனுக்குள்ளே குடியிருக்கும் தொழிலாளிக்கு மூன்று கிலோ அரிசி போடுகிறார்கள். கிராமத்திலிருந்து வந்து வேலை பார்த்துச் செல்லுகிற தொழிலாளிக்கு ,அந்த 3 கிலோ அரிசி கிடையாது. ஒரே ஸ்டோரில் ஏன் இந்த நிலை? ஒரே ஸ்டோரில் இரண்டு விதமான கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. கிராமத்தில் சோளம், ராகிதான் போடுகிறார்கள். அவன் அரிசி எப்படி வாங்குவது? அவர்களுடைய நிலையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையில் இதே பிரச்சினை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லாத் தொழிற்சங்கத்தையும் சேர்ந்த தொழிலாளர்களும் சேர்ந்து உணவு. அரிசி நியாய விலையில் போடவேண்டுமென்று கேட்டார்கள். அனைத்துச் சங்கம்—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம், எச்.எம்.எஸ்., ஏ.ஐ.டி.யு.சி. எல்லோரையும் தொழிலாளர்களுக்காக ரேஷன் கேட்ட காரணத்திற்காக கைது செய்து விட்டார்கள். மலையில் வாழ்பவர்களுக்கு வேறு வழி என்ன? அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அங்கிருந்து கடிதம் வருகிறது. தந்தியடிக்கிறார்கள். மலிவு விலையில் அங்கிருக்கும் முதலாளி அரிசி கொடுக்கவேண்டுமென்று அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் நிலை என்ன ஆவது?

சேரன்கோட்டில் கூடலூர் தாலுகாவில் இலங்கை அகதிகள் தேயிலை தோட்டத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கூலி 3 ரூபாய்; வேறு எஸ்டேட்டில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு 6 ரூபாய். மற்றவர்கள் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய். இவர்கள் பத்து கிலோ பறித்தாலும் 30 கிலோ பறித்தாலும் 3 ரூபாய்தான். ஒரே எஸ்டேட்டில் இந்த நிலை ஏன் இருக்கிறது? வெளியே இருந்து வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை நீடிக்கக் கூடாது.

வீட்டு வசதி, மற்ற வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள் எல்லாம் மிகவும் குறைவு. பாம்பு மற்ற துஷ்ட ஜந்துக்கள் எல்லாம் அவர்கள் வீட்டில்தான் இருக்கும். புதர்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அமைச்சர்கள் அந்த வீடுகளை எல்லாம் சென்று பார்க்க வேண்டும். மாண்புமிகு ஓ. பி. ராமன் அவர்கள் ஒரு முறை இந்தக் குடியிருப்புகளைப் பார்வையிட வந்தார். மலை மேலே இருந்து பார்க்கக்கூடிய ஒரு வீட்டு லைனுக்கு மட்டும் வெள்ளை அடித்திருந்தார்கள். இந்த நிலை நீடிக்கக் கூடாது.



ஒருவனுக்கு சிக்கு என்றால் அவன் வைத்திய வசதி பெற ஆறு மைல் நடந்து செல்ல வேண்டும். பஸ் வசதி ஒன்றும் கிடையாது. அறிக்கையில் இந்த மலைவாழ் மக்களுக்காக என்னென்னவோ செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இதெல்லாம் அவர்களைப் போய்ச் சேருவதே கிடையாது. பணம் செலவழித்தால் மட்டும் போதாது, அது அவர்களை எட்டுகிறதா என்று கண் காணிக்க வேண்டும்.

சென்னையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிலாளர்கள் டி.ஏ. 18 பைசா கேட்கிறார்கள். லேபர் டிப்பார்ட்மெண்ட் வரை பேசியாயிற்று. தொழிலாளிக்கு 61 ரூபாய் டி.ஏ. கொடுங்கள் என்று கேட்டார்கள். முதலாளிகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். பிறகு 61 ரூபாய் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். லேபர் செக்ரடரி வரை பேசியாயிற்று. கமிஷன் பேசியாயிற்று.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சதர்ன் ஸ்ட்ரக்சுரல் பிரச்சினை சுமுகமாக முடிந்து தற்போது வேலை நடந்து வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** அது விவரம் எனக்குத் தெரியாது. இதற்கு முன்னால் என்னிடம் புகார் சொன்னார்கள். எப்படி முடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

இந்தியா மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை என்னவாயிற்று? நமக்கு மீட்டர்கள் தேவை. நல்ல மீட்டர்கள் தயாரிக்கிறோம் என்று தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் அதை மூடி வைத்திருக்கிறீர்கள்? அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டாமா?

பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966-ல் வந்தது. சுப்ரீம் கோர்ட் வரை முதலாளிகள் போனார்கள். அதை அமலுக்குக் கொண்டு வரலாம் என்று சொல்லிவிட்டார்கள். எத்தனை இடங்களில் அதை அமலாக்கியிருக்கிறார்கள்? பல பேர் இன்னும் திண்டாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டம் இருந்தும் ஏன் அமலாக்கப்படவில்லை?

காஸ்மாபாலிடன் கிளப் தொழிலாளர் பிரச்சினை. ஒரு ஆளுக்கு 42 வருஷம் சர்வீஸ். சம்பளம் மாதம் 180 ரூபாய். ஆங்கிலோ இந்தியன் லேடிக்கு—7 குழந்தைகள், 130 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு என்ன பண்ண முடியும்?

இதைச் சொன்னால் சட்டம் கிடையாது என்று சொல்கிறார்கள். சட்டம் இல்லாவிட்டால் சாகவேண்டியதுதான். லாக் அவுட் செய்து விட்டு போய் விட்டார்கள். நாற்பது ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலை. எனவே, சட்டத்திற்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கு பாது காப்பு கொடுக்கவேண்டும். பல க்ளப்களில் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார் கள். ரூபாய் 300 வரை சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஜிம்கானா க்ளப்பில் கொடுத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. சட்டத்திற்காக மனிதன் வாழவேண்டும் என்றால் வாழ முடியாது.

டால்மியா சிமெண்ட் தொழிலாளர்கள் ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருந் தார்கள். நெகோஸியேஷன் நடந்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 125 சதவீதம் அதிக உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு மின்சாரம் காரணமாக வேலை பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வாழ்க்கை நடத்த ஏதாவது நிவாரணம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலிவு விலையில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்கிறது என்று சொல்கிறீர்கள். அரசு 50 சதவீதம் மானியமும், 25 சதவீதம் முதலாளிகளும் கொடுத்து மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எந்த ஃபாக்டரி முதலாளிகளைக் கூப்பிட்டு இந்த மாதிரி தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது? ஒரு ஆலையில் கூட அமலாக்கப்படவில்லை. மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்றால் 25 சதவீதம் போடவேண்டுமே என்று முதலாளிகள் நினைப்பதால் அதைச் செய்யாது வைத்திருக்கிறார்கள். அதிகப் படியான லாபம் வரக்கூடிய முதலாளிகளிடமாவது இம்மாதிரி மலிவு விலை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமல் படுத்துங்கள் என்று எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும்.

இன்று சிங்காநல்லூரில் உள்ள லேபர் காலனியில் க்வார்ட்டர்ஸ் சுத்தப் படுத்தாமல் இருக்கிறது. லைட் போனால் அந்த ஆள் வாங்கி போடவேண்டும். 16 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு (வாடகை கொடுத்திருந்தால் அதைச் சொந்தமாக்கிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)





அடுத்தபடியாக, சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 500 படுக்கை களுக்கு வசதி இருக்கிறது. அங்கு குடும்பம் முழுவதும் வைத்திய வசதி பெறுவதால் அங்கு இட நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது 300 படுக்கைதான் உள்ளன. அந்த ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். சோமனூரில் உள்ள வாடகைக் கட்டடத்திற்குப் பதிலாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். பல்லடம் சோமனூர் ஏரியாவில் உள்ள தொழிலாளர்களுக்கு குடும்ப இன்சூரன்ஸ் திட்டம் இல்லை. அவர்களுக்கும் குடும்ப இன்சூரன்ஸ் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும். (மணியடிக்கப் பட்டது.)

ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் ஆபீசர்கள் அலுவலகம் கோவையில் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அங்கு மனிதன் போக முடியாது. ஒரு கோடியில் வைத்திருக்கிறார்கள். கலக்டர் ஆபீஸ், ஜெயிலில் காலி இடம் இருக் கிறது. அந்த இடத்தில் லேபர் டிப்பார்ட்மெண்ட் தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதிகாரிகள் வந்து தங்குவதற்கு ரெஸ்ட் ஹௌஸ் கட்டித் தரவேண்டும். எங்கெங்கேயோ அதிகாரிகள் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வசதிகள் செய்து கொடுத்து நல்லமுறையில் பணி வாங்க முயற்சிக்கவேண்டும்.

மத்தியஸ்தம் முறையில் ஏற்படுகிற கோளாறுகளைத் தீர்க்க முக்கூட்டுக் கமிட்டி போட்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தால் தொழில் தகராறுகள் குறையும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வாங்கிக் கொடுத்தது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** தொழிலாளர் பிரச்னை குறித்து நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள்மீது அக்கறையில்லாத காரணத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர்கூட இல்லை. இதுகுறித்து தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையிலேயே சொன்னேன். அவர்கள் இருக்க வேண்டும், கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்கு அக் கறையில்லாவிட்டால் நான் என்ன செய்வது?

[1975 ஏப்ரல் 4

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு. சீனிவாசன் அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திரு. குமாரசாமி அவர்களும் தங்கள் தங்கள் கட்சிகளின் சார்பில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் பல்வேறு தொழிற்சங்கங்களில், குறிப்பாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய ஒரு பெரும் தலைவராவார். அதே போல் குமாரசாமி அவர்களும் ஒரு தொழிற்சங்கத் தலைவர்தான். அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கைக்காக பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிய நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக இன்றைக்கு அகில இந்தியாவில் வைத்தே எங்குமே பஞ்சாலைத் தொழிலாளர்கள் பெறாத அளவிற்கு அதிகபட்சமான போனஸை வாங்கிக் கொடுத்தார்கள். அதற்காக யாராவது ஒருவராவது நன்றி தெரிவித்தார்களா என்றால் ஒருவர் கூட இந்த மன்றத்தில் அதைப்பற்றிப் பேசவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் நன்றி தெரிவித்தேன். போனஸ்க்காக நன்றி செலுத்தினேன். அப்படி நன்றி செலுத்தியதை இல்லை என்று சொன்னால் நன்றாகயிருக்காது.

திரு. சு. துரைசாமி: அடுத்து, இங்கு பேசிய எல்லாத் தலைவர்களின் பேச்சுக்களையும் கேட்டேன். மத்திய அரசின் கட்டாய டெப்பாஸிட் திட்டம் பற்றி இந்த மூன்று பேர்களில் ஒருவர் கூட கண்டித்துப் பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இன்று விலைவாசிகள் எல்லாம் பெருமளவிற்கு ஏறிவிட்டன என்று பேசுகிறார்கள். பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்று கேட்கிறோம். கொடுக்கப்படுகிற பஞ்சப்படி உயர்வும், சம்பள உயர்வும் தொழிலாளர்களின் கைகளுக்குப் போய் சேருவதில்லை. கட்டாய டெப்பாஸிட்டுக்கு சென்று விடுகிறது. இதைப்பற்றி தொழிலாளர் வர்க்கத்திற்காகப் பேசுகிற தலைவர்களில் ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லையே என்று வருத்தப் படுகிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. சு. துரைசாமி]

இந்த மன்றத்தில் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் அவர்களுக்கு இருக்கிற சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டினாரே தவிர தொழிலாளர்கள் மீது அக்கறையோடு பேசியதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு முன்னாள் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீது வருத்தம் இருக்கலாம். விருதுநகர் பஸ் கம்பனி முதலாளியோடு நம் அமைச்சர் அவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று பேசுகிறவர்—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகர் சென்றிருந்தார், அங்கு 33 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நிவாரணம் காண அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்று சொன்னார்கள். 21-ம் தேதியிலிருந்து அந்தக் கம்பனி கதவடைப்பு செய்யப்பட்டு அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அது கண்டிக்கத் தக்கதுதான். தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று சொல்வது நமது உரிமைதான். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன். அந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ 15 நாட்கள் இந்த மன்றம் நடைபெற்றிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாவது கொண்டுவந்து இந்த மன்றத்தில் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: உறுப்பினர் எப்படி தகவல் தெரியாமல் பேசுகிறார்? நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை என்று அவருக்கு எப்படித் தெரியும்? கொடுத்துவிட்டு நாள் தவறாமல் சபாநாயகர் அவர்களிடம் போய் கெஞ்சி, இரண்டு தடவை பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்பி எக்ஸ்பங்க்ஷன் எல்லாம் நடந்து. இவ்வளவும் நடந்திருக்கின்றன.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி சென்றிருக்கிறார்கள். சென்ற இடத்தில் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையே என்றுதான் எனக்கு வருத்தம்.

(மாலை 6-30)

இந்த அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாக, பூர்ஷ்வா மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். இந்த மன்றத்தில் நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக்



கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

அரசாங்கத்தின் சட்டத்தை மாற்றியாவது நம்முடைய அரசாங்கம் அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், டெம்பரரி தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள், காஷுவல் தொழிலாளர்களுக்கு லே-ஆப் சம்பளம் கிடைக்கவும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கோயம்புத்தூரில் இருக்கிறது. அதில் 300 படுக்கைகள் இருக்கின்றன. அதை 500-ஆக உயர்த்திக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே 6 படுக்கைகள்தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயிரம் பேருக்கு 4 படுக்கை என்றாலும் குறைந்தது 40 படுக்கை இருக்க வேண்டும். ஆனால் 6 தான் இருக்கிறது. ஆகவே, அங்கே குறைந்தது 40 படுக்கை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் மருத்துவ மனை கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொழிலாளர்கள் குடும்பத்திற்கும் மருத்துவ வசதி செய்து தர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

1958-ம் ஆண்டில் நான் முதன்முதலாக நம்முடைய லேபர் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கே ஒரு லேபர் கமிஷனர்தான் இருந்தார். ஒரு டி.சி.எல்.தான் இருந்தார்.

இன்றைக்கு லேபர் கமிஷனர் ஆபீசில் ஏறக்குறைய ஜாயிண்ட் லேபர் கமிஷனர், ஸ்பெஷல் டெபுடி லேபர் கமிஷனர் என்று இப்படி 10 பேர்களைப் போட்டுங்கூட இந்தத் துறையில் நடைபெறுகிற வேலை துரிதமாக நடைபெறவில்லை. வேலைகள் துரிதமாக நடைபெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நிறைய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதே மணி 6-40 ஆயிற்று. இன்னும் 8 பேர்கள் பேசவேண்டும். அமைச்சர் 8 மணி அளவில்தான் பேச ஆரம்பிக்க முடியும். ஆளுக்கு 10 நிமிஷம் பேசினாலும் போதும்.



**திரு. க. துரைசாமி:** இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, திரு. துரைசாமி போன்றவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலேயே அவர் ஸ்பெஷல் சப்ஜெக்டுகளைப் பேசியிருக்கலாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, அவர் சேர்ந்திருக்கின்ற கட்சிக்கு ஜஸ்டிஸ் செய்ய வேண்டும் அல்லவா?

**திரு. க. துரைசாமி:** தலைவரவர்களே, கோவையில் இருக்கிற டி.சி.எல்., ஏ.சி.எல். அலுவலகங்களை ஒரு மையமான பகுதிக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல வசதி கிடைக்கும். நம்முடைய வெல்பேர் போர்டு மூலமாக திருப்பூரிலே சத்துணவுத் திட்டத்திற்காக ஒரு இடத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் திறப்பதற்கு வகை செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டம் எவ்வளவு ஏழை மக்களுக்குப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும். மில்களில் கூட்டுறவு பண்டகசாலைகளை அமைத்து அரிசி நியாய விலையில் போட வகை செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியம் சார்பாக தொழிலாளர்களுக்கு அல்லது வேறு பல சிறிய சாதாரண லோ இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும். மிடில் இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு நிலையத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஸ்டேட் லெவலில் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. மாவட்ட அளவில் அட்வைசரி கமிட்டி போட்டு அந்த அட்வைசரி கமிட்டியானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி வேலைவாய்ப்பு சம்பந்தமாக தகவல்கள் முறையாக அனுப்பப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில் அக்கறை எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமைத்து தொழிலாளர் பிரதிநிதிகளை வைத்து நியாய விலையில் உணவுப் பொருள்களைக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் குடும்பத்தைப் பராமரிக்க முடியும். இந்த ஆந்திரியாவசியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தற்காலிகமாக வேலை செய்பவர்கள் temporary workers who have put in service of 5 or 10 years have not been regularised. என்ற நிலை இருக்கிறது. 5, 10 வருஷங்கள் வேலை பார்த்தும் கூட தற்காலிகமாக பதவிகளில் பல பேர்கள் பல ஆலைகளில் இருந்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. வேலை தற்காலிகமானது என்று கருதப்படுகிற காரணத்தினால் அதற்குரிய ரிகார்டுகளை வைத்துக் கொள்கிற காரணத்தினால் இவர்களுக்கு நிரந்தரமான வேலை பார்க்கக் கூடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய

Provident Fund and other benefits are not available.

செக்யூரிட்டி ஆப் ஜாப் இல்லை. குறைந்தது இரண்டு வருஷம் ஒருவர் தற்காலிகமாக வேலை செய்திருந்தால் அவரை நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குரிய உத்தரவை தொழில் அதிகாரிகள் மூலமாக, கமிஷனர் மூலமாக உடனடியாக நிறைவேற்றுவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்று முதலாளிகள் தங்களுடைய லாபத்தை அதிகப்படுத்துவதற்காக ரேஷனலைசேஷன் திட்டத்தை, நவீனமுறைப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, இது நல்லது என்பதை ஒத்துக்கொண்டாலும்கூட இதன் விளைவு

after-effect of rationalisation cutting off or throwing of certain employees out of employment to improve the quality or the products என்ற நிலை வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, நான் வருந்துகிறேன். I am very Sorry.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே 8 நிமிஷம் ஆகி வி——து.





திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, முதலில் பேசியவருக்கும், பழைய அவை சபாநாயகருக்கும் அதிகப்படியான நேரம் கொடுக்கப்பட்டது. நாங்கள் தொழிற்சங்கத்தை இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அனுமதி இல்லை யென்றிருந்தால் முதலிலேயே உட்கார்ந்திருப்பேன். எங்கள் கட்சிக்கு இல்லை யென்று சொல்லிவிட்டார்கள் என்று சொல்லி விடுகிறேன்.

I am not able to coherently putforth my points. I am very sorry in Deputy Speaker. Sir, you must give me some more marginal time as you have given to other members.

பழைய அவைச் சபாநாயகர் வேகமாகப் பேசினார். கலர் கொடுத்துப் பேசினார். நான் உண்மையான தொழிலாளர் பிரச்சினையை வேதனையோடு சொல்கிறேன். அமைதியான சூழ்நிலையிலே பேசுகிறேன். இப்படி மணி அடித்து என் நேரத்தைக் குறைப்பது தார்மீகமானதல்ல. நியாயமானதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: ஆகவே, ரேஷனலைசேஷன் மூலமாக ஒரு வகையில் உற்பத்திப் பெருக்கம், தரத்தில் முன்னேற்றம் என்று இருந்தாலும்கூட தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதை முதலாளிகள் செய்கிறார்கள், தடுப்பதில்லை, எதிர்க்கிறோம் என்றாலும் வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு என்ன மாற்று முறை வைத்திருக்கிறோம் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, ரேஷனலைசேஷன் செய்கிற தொழிற்சாலைகளை ஏன் தேசியமயமாக்கக் கூடாது என்பது என் கேள்வியாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு உண்மையான சோஷலிசத்தில் நம்பிக்கை உள்ள அரசு. பிரச்சாரம் செய்கிற அரசுகளை விட, நடைமுறையில் இதில் நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தினால் பல நல்ல திட்டங்களை, ஆலை முதலாளிகள், பஸ் முதலாளிகள் ஆகிய லட்சாதிபதிகளின் தயவையெல்லாம் சுத்தியெறிந்து அவைகளை தேசியமயமாக்கியிருப்பதை அனைவரும் பாராட்டுவார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள்கூட வெளியில் தனியாகப் பேசும்போது பாராட்டுகிறார்கள், அரசியல் ரீதியாக எதிர்த்தாலும். இப்படி நல்ல பல திட்டங்களைக்கொண்டு வருகிற அரசு இன்று ஷுகர் மில்ஸ், சர்க்கரை ஆலைகளை மத்திய அரசு அனுமதி கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்திருக்கிறது. நம் அரசு ஏற்கனவே அந்தக் கருத்தை தெரிவித்திருந்தது. அதை விரைவில் கொண்டுவரவேண்டுமென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அகில இந்தியாவில் 203 மில் இல்லை. தவருகப் பேசக்கூடாது. 103 மில்கள் தான் இருக்கின்றன. அம்மையார் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் மட்டும் வைத்துக்கொள்ள விரும்புவதாகச் சொன்னார்கள், அவர்கள் கட்சி ஆளுகின்ற மாநில அமைச்சர்கள் கூட சேர்ந்து கேட்கிருர்கள், நாங்கள் மட்டும் கேட்கிருேம் என்று சொல்லக்கூடாது.

**திரு. சு. துரைசாமி :** அதனுல்தான் போன ஆண்டு தொழிலாளர் நல மானியம் வந்தபோது நான் பேசினேன். அகில இந்தியாவில் 103 மில்கள் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வேறு மாநிலத்தில் எடுத்து கொண்ட மில்களில் சம்பளம் கூட சரியாகக் கொடுக்கப்படவில்லை--நம்முடைய பஞ்சாலைகளில் 25 சதவிதம் போனஸ் கொடுத்தோம். தனிப்பட்ட முதலாளிகள் கூட 20 சதவிதம்தான் போனஸ் கொடுத்தார்கள். நாம்தான் உயர்ந்த பட்சம் போனஸ் கொடுத்தோம். இப்போது மத்திய அரசாங்கத்தின் கையில் அது இருக்கிறது. வருகிற ஆண்டில் பார்க்கத்தான் போகிறேம், அங்கேயிருக்கும் தொழிலாளிக்கு என்ன போனஸ் கிடைக்கப்போகிறது என்று.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இன்று தொழிலாளர்களுக்கு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்து இருக்கிருேம். (மணியடிக்கப்பட்டது). பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

நம்முடைய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் பொறுத்தவரையில் இங்கேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசாங்கம்தான் அகில இந்தியாவில் இருக்கிற பஞ்சாலைகளிலேயே உயர்ந்தபட்ச போனஸ் கொடுத்து இருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசின் கட்டாயச் சேமிப்பு இருந்தாலும் கூட, அதிலே இருந்து பாதிக்கப்படாமல் வேறு ஒரு முறையில் நாம் அதிகபட்ச போனஸ் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிருேம். அதைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான், இந்த அரசுதான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்று பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், தொழிலாளர்கள் தகராறுகள் சம்பந்தமாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 7,550 வழக்குகள் தொடரப்பட்டன என்றும், சமரசப் பேச்சுவார்த்தையால் தீர்க்கப்பட்டவை 1,478 என்றும், நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை 417 என்றும், மீதி 5,655 இருக்கின்றன என்றும் குறிப்பேட்டில் இருக்கின்றன. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், இந்த வழக்குகளைத் தீர்ப்பதில் என் இவ்வளவு





காலதாமதம், இது உள்ளபடியே வருந்தத்தக்கது. அதை விரைவில் தீர்த்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேகமாக அந்த வழக்குகள் தீர்க்கப்படவேண்டும். அந்த அளவில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சில இடங்களில் லேபர் ஆபிசர்கள், அசிஸ்டென்ட் லேபர் ஆபிசர்கள் கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்புவதில் காலதாமதம் செய்கிருர்கள். அது கண்டிக்கப்படவேண்டியதொன்ருகும். அதற்காக உள்ளபடியே அந்தத் துறைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் ஏ. சி. எல். (A.C.L.) கன்சிலியேஷன் ரிப்போர்ட் வருவதற்கு 1 வருஷம், 1½ வருஷம் கூட ஆகிறது. இதனுல் உள்ளபடியே தொழிலாளிக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். ஆகவே, குறைந்தபட்சம் 3 மாத காலத்திற்குள் இந்த கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்பி விட வேண்டுமென்று ஒரு வரையறை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கணக்கு கொடுத்ததில் கூட சில வழக்குகள் வேறு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு இருந்தால், அவற்றை எல்டிஎ். என்று போட்டு அதனுல் குறைத்து கணக்கைக் காட்டுகிருர்கள். இது யதார்த்தமான குறைபாடுதான். இதைப் போக்குவதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இப்படி ஏற்படாமல் இருப்பதற்கு அமைச்சர், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அறிக்கையில் நிர்வாகத்தில் 'தொழிலாளர்கள் பங்கு என்று தலைப்பிட்டு கொடுத்து இருக்கிருர்கள். ஏதோ ஒரு குழுவின் அறிக்கை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. விரைவாக அந்த அறிக்கை சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுக்கும் நிலையை ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டு காரணமாக, வேறு பல காரணங்களால் 'லே-ஆப்' கொடுக்கிருர்கள். அப்படி லே-ஆப் கொடுக்கிறபோது பாதிச் சம்பளம் நிரந்தரத் தொழிலாளிக்கு கிடைக்கும். அதை உயர்ந்தபட்சமாக 75 சதவிதம் அல்லது முழுமையாகக் கிடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியாவது, மத்திய

அதேபோல நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் பேமலி பென்ஷன், குடும்ப நலத் திட்டம் என்று கடைநிலை ஊழியர்களுக்கு—நிரந்தரம் அல்லது நிரந்தரமாக இல்லாமல் இருந்தாலும்—கூட, அவர் உத்தியோக காலத்தில் இறந்து விட்டால் 10 ஆயிரம் ரூபாய் சேமநல நிதியாக அளிக்கப்படுகிறது. அதுபோல தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் எதிர்பாராத விதமாக விபத்திற்கு உள்ளாகி இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு இதேமாதிரி எப்படி அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கிறதோ அது போல அந்த ஊழியர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தை ஏன் விஸ்தரிக்கக் கூடாது என்ற கருத்தை கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு எப்படி அந்த பிரின்சிபிளை அப்ளை செய்கிறார்களோ, அதேபோல இங்கும் அப்ளை செய்து, மானேஜ்மெண்ட் ஒரு பகுதி, தொழிலாளி ஒரு பகுதி, அரசு ஒரு மினிமம் பர்செண்டேஜ் என்ற விகிதாசாரத்தில் கான்ட்ரிபியூஷன் செய்து அதையும் ஏன் நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல் ஈ.எஸ்.ஐ.-யைப் பொறுத்த வரையில் ஆஸ்பத்திரி வசதிகள், சுகாதார வசதி இல்லாது கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு முன்னால் 500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இலவச வைத்தியம் என்று இருந்தது. அதை ஆயிரம் ஆக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதை ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி மூலம் இலவச வைத்தியம் அளிக்க வேண்டும் என்று உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பி.ஆர்.சி. தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். பி.ஆர்.சி.-யில் இருக்கக் கூடிய மேனேஜிங் டைரக்டர் அவர்கள் ஆன்டி-லேபர்-ஆக இருக்கிறார், ஆன்டி-ஒர்க்கர்ஸ்ஸாக இருக்கிறார் என்ற கருத்தை இன்று மத்தியானம் அமைச்சர் அவர்களைப் பார்க்க வந்த தொழிலாளர்கள் என்னிடம் கூறினார்கள். பொதுமக்களுடைய பிரதிநிதியைக் கூட அந்த மேனேஜிங் டைரக்டர், மதுரையில் இருப்பவர், மதிப்பதில்லை. தவறான வார்த்தைகளை, அகௌரவமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பட்டவர்களை நீக்குவது மூலமாக தொழிலாளர்கள் அமைதி காக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்து, பி.ஆர்.சி. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் 100-ஐ எடுத்தது மூலம், ஸ்டேடஸ்கோ டு பி மெயின்டெயின்டு என்ற



கோரிக்கையை வைத்து ஸ்டிரைக் செய்ததால், அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதை நாங்கள் நேரடியாக அறிவோம். அதைச் சுமுகமாக பேச்சு வார்த்தை மூலம் முடிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் பவர்லூம் ஒர்க்கர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு 3, 4, 4½ ரூபாய் தரப்படுகிறது. அவர்களுக்கு அந்த பாக்டரி லாஸ் அப்பிளிகேஷனை எக்ஸ்டெண்ட் செய்து, அவர்களுக்கு செக்யூரிட்டி ஆப் ஜாப், ட்யூ எமாலுமெண்ட்ஸ் ஃபார் தி லேபர் என்ற நிலையை நீங்கள் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, தொழிற்சங்க லேபர் அதிகாரிகள், கமிஷனர் உள்பட இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய யூனியனில் ட்யூப்ளிகேஷன் ஆப் மெம்பர்ஷிப் இருக்கிறது. டி.எல்.சி.-யைப் போய் சந்தித்தேன். கமிஷனர் அவர்களை சந்திக்க வந்தேன். அவர் கேம்ப் போயிருந்தார். ஒரே யூனியனில் இருக்கிற கந்தசாமி என்ற பெயர் 5 யூனியனில் இருக்கிறது. ஃபார் எக்சாம்பிள் மதுரை மில்லைப் பொறுத்த வரையில்--முக்கியமான பாயிண்ட்—கந்தசாமி என்பவர் ஐ.என்.டி.யூ.சி.-ல் இருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியில் மெம்பர். டி.எம்.கே.-யில் மெம்பர், அ.டி.எம்.கே.-யில் மெம்பராக இருக்கிறார். எத்தனை கந்தசாமி?

Why this duplication? Why we are duping ourselves? And what a wonderful law, I am not able to understand the significance or the very existance of this law at all! Therefore, I plead that there should be an amendment, an effective amendment of this sort of laws Otherwise we are duping ourselves.

என்ற வாதத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டால் சட்டம் இருக்கிறது; எடுக்கலாம், எடுக்காமலும் இருக்கலாம் என்று லேபர் கமிஷனர் சிரிக்கிறார். இது ஒண்டர்புல் லா என்ற கருத்தை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரைட் ஈஸ் ரைட் என்று சொன்னார்கள். தொழிற்சங்கத்திற்கு பாதுகாப்பு வேண்டும். பாவை மில்லில் புதிதாக நாங்கள் தொழிலாளர் நல உரிமைச் சங்கம் என்று பெயர் வைத்து, நாராயணச் செட்டியார், மில்லினர் மில்லில் ஏற்படுத்தினோம். அடியாட்களை வைத்து அடிக்கிறான். இது என்ன அநியாயம்? கொடி ஏற்றுபவனுக்கு மாலை கொடுத்தவனை, கொடி வாங்கிக் கொடுத்தவனை மறுநாள் சஸ்பெண்டு செய்கிறான். என்ன என்று கேட்டால்

(இரவு 7.00)

கடைசியாக, தொழிலாளர்களை சஸ்பெண்டு செய்கிற காலங்களில், அப்படி நிர்வாகம் சஸ்பெண்டு செய்த தொழிலாளர்களுக்கு அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள 3 மாதம், அல்லது 6 மாதம் ஆகி விடுகிறது. அவர்களுக்கு ஊதியம் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த சஸ்பெண்டு காலத்திற்கு முழு ஊதியம் கொடுத்தால் நன்மையாக இருக்கும். அல்லது குறைந்தபட்சம் பாதி சம்பளமாவது கொடுக்கக்கூடிய முறையில் சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, வீட்டு வசதி வாரியம், தொழிலாளர் நலன் சார்பாக இங்கே சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் சாதிக்காத அளவிற்கு வீட்டு வசதி வாரியம் பெரிய அளவிற்கு, யாரும் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு பல புதிய அம்சங்களைக் கொண்டு குறைந்த விலையில் நல்ல வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப் பட்ட மக்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கெல்லாம் விரைவாகக் கட்டிக் தருகிறது. இதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவாக அதிகச் சேவைகளையெல்லாம் செய்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவிற்கு அரசு ஊழியர்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு வீட்டு வாடகைப்படியாக 15 சதவிகிதமும் வீட்டு வாடகையாக அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதமும் ஆக இரண்டையும் சேர்த்து மொத்தம் 25 சதவிகிதம் அவர்களுடைய சம்பளத்தில் இழப்பு ஏற்படுவதாக இங்கே இருக்கும் அரசு ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்குமானால் அவர்களுக்கு நாம் உதவி பண்ணுவதற்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்றாலும்கூட, நடைமுறையில் வருகிறபோது அவர்களுக்கு ஒரு கணிசமான இழப்பு சம்பளத்தில் இருப்பதாக அவர்கள் வேதனையோடு என்னிடத்தில் தெரிவித்தார்கள். ஆகவே, இதில் ஒரு மாறுதல் செய்து அவர்களுக்கு சம்பளத்தில் கணிசமான அளவிற்கு பாதிக்காத நிலையில்



வாடகையில் தொகை குறைத்து வாடகை வசூலித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலனைப் பற்றி, தொழிலாளர் பிரச்சனை பற்றி எனக்கு முன் பேசிய தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள். ஊதிய முடக்கச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்றுமில்லாத வறட்சி பாவி இருக்கிறபோது, மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் கடுமையாக பாதிக் கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நிலையில் லே ஆஃப் என்று அவர்கள் மாதத்தில் 10, 15 நாட்கள்தான் வேலை செய்யக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மாதச் சம்பளத்தில் பாதியோ அல்லது பாதிக்குக் குறைவாகவோதான் ஒவ்வொரு தொழிலாளியும் மாதாமாதம் பெறவேண்டிய நிர்ப் பந்தமான கட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் அவர்களுக்கு ஊதிய முடக்கச் சட்டத்தை தற்காலிகமாவது நிறுத்தி வைக்கவேண்டும். ஊதிய முடக்கச் சட்டம் நல்ல நோக்கத்தோடு வருகிற திட்டம் என்றாலும்கூட எதிர்பாராத வறட்சி நிலையை முன்னிட்டு அதை தற்காலிகமாகவாவது, டெம்பரரி சஸ்பென்ஷன் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே அவ்வாறு, இந்த வறட்சி நிலை நீங்கும் வரையிலாவது இந்தத் திட்டத்தை ஒத்திவைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக, உதவிகரமாக இருக்கும் என்பதை அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன். இன்று அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை எளியவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு கலைஞர் அவர்கள் அரசு பல முறைகளில் முயற்சி செய்து வருகிறது என்பதை நான் பாராட்டு கிறேன். அதேபோல தொழிலாளர்கள் ஏற்கனவே முழுச் சம்பளம் கிடைத்த போதும் அவர்களுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது பாதிச் சம்பளம் கிடைக்கிறபோது எப்படி குடும்பத்தைக் காப்பாற்றுவது என்ற ஒரு கஷ்டமான, இக்கட்டான நிலையில் அவர்கள் இருக்கிறபோது அவர்களுக்கு கண்டிப்பாக நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்களை, அத்தியா வசியப் பொருள்களை வழங்குவது அவசியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தந்த முதலாளிகள், மேனேஜ்மெண்ட் மூலமாவது கூட்டுறவுச் சங்கங்கள்

மறுநாள் அங்கே 50 பேரை வீட்டுக்கு அனுப்புகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், கலவரம் மிக்க ஒரு சூழ்நிலையிலும் மிகச் சாதுரியமாக நம்முடைய அரசாங்கம் நடந்துகொண்டு, அமைதியான முறையிலே ஏற்பாடுகளைச் செய்து வருவதற்காக, எப்படிப்பட்ட கலவரம் நடந்தாலும் நாட்டிலே அமைதியை ஏற்படுத்தி வருவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக அரசில் சிறப்பாகச் செயல்படுகிற இலாகாக்களில் இந்த தொழிலாளர் நல இலாகாவும் ஒன்று என்பதை நான் நன்றாக அறிவேன். காரணம் இந்த இலாகாவோடு அதிகமான தொடர்பு கொண்டவன் நான் என்பது மட்டுமல்ல, நான் பல நேரங்களில் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளை எடுத்துச் சென்ற நேரங்களில் எல்லாம் அதைச் சுமுகமாகத் தீர்த்து வைத்து, தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்து வருகிறார்கள் நம்முடைய அமைச்சரவர்கள்.

தொழிற்சங்க விவகாரங்கள் வரும்போது நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினையை அனுதாபத்தோடு கவனித்து, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் பிரச்சினைகளை மிகச் சிறப்பான முறையில் அணுகி, தீர்ப்புகளை வழங்கி வெற்றிகரமாக நடத்திக்கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், இந்தத் தொழிற்சங்கங்கள் பற்றி கல்லூரி மாணவர்கள் பாஷையில் சொல்வதாக இருந்தால், தொழிற்சங்கம், தொழிலாளர் இயக்கம் என்பது கொஞ்சம் போர் அடிக்கிற சம்பவமாகும். பேச்சு வார்த்தைகள் அந்த முறையில் இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினையிலும் ஏதோ நாவல் படிப்பது போல் பேச்சுவார்த்தைகளை நடத்திக் காட்டுகிறார் நம்முடைய அமைச்சர் என்று சொன்னால் அது மிகையாகாது.

என்னுடைய தொழிற்சங்கப் பிரச்சினை ஒன்றில் கூட பகல் 12 மணி, அல்லது ஒரு மணிக்கு உட்கார்ந்து, இரவு 3 மணி வரை உட்கார்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி, மிகச் சிறந்த முறையில் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள்.





தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தையின்போது தொழிற்சங்கங்கள் பக்கம் ஆவேசம் தலைகாட்டும். ஆனால் விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதற்காக மானேஜ்மென்டார் அமைதியாக அழுத்தமாக இருப்பார்கள். இரண்டு பேரையும் சமாதானப்படுத்தி, அமைதி கண்டு, கலவரங்கள் நடைபெறாமல் பார்த்து, அமைச்சரவர்கள் இந்த இலாகாவிலே பெரும்பாடுபட்டு தொழிலாளர்களுக்கு நன்மைகள் புரிகிறார்கள் என்பதை மனமார உணர்ந்து, இந்த மாமன்றத்திலே அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஈடுபடுகிற காரணத்தால், தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும், பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் வந்தாலும் அவைகளை எல்லாம் வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கின்ற வகையில் நம்முடைய அமைச்சரவர்களும் இந்த இலாகா அதிகாரிகளும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இவ்வளவு வேகமாக வெற்றிநடை போடுகிற காரணத்தால்; திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்களால் தலைமை ஏற்று நடத்திச் செல்கின்ற தொழிற்சங்கங்கள் கூட இன்றைய தினம் இந்த இலாகாவைப் பாராட்டுகிறார்கள். நம்முடைய இலாகா, நம்முடைய அமைச்சர் என்கின்ற ஒரு பந்தபாசத்தோடு சொல்கிறார்கள். சமீபத்தில் இப்போது சேரியில் உட்கார்ந்திருந்தபோது சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் அமைச்சர் என்று தொழிலாளர் நல அமைச்சரவர்களைக் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் தொழிலாளர்கள் பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமென்ற முறையில் அமைச்சரவர்கள் காட்டுகின்ற அக்கறைதான். அதனால் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

இவ்வளவு வேகமாக நடைபோடுகிற இந்த இலாகாவிலே இன்னும் சிலவற்றைச் செய்யவேண்டுமென்று சொல்வது ஆசையால் கேட்பதல்ல ; அவசியம் செய்யப்பட வேண்டியவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,.

இன்றைக்கு எல்லோரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தக் கருத்துக்களை எல்லாம் மீறி, வாழைப்பழத்தில் ஊசி நுழைவதைப்போல ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற சூழ்நிலைதான் அது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறம் இருக்கிறது. படித்தவர்களுக்கு வேலை இல்லை. அதனால் படித்தவர்கள் நடுத்தெருவில் தாங்கள் படித்த சர்டிபிகேட்டை வைத்து அலைந்து

அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, நிலத்திற்கு கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று வைத்திருந்தார்கள். நம் கலைஞர் அரசு அதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல மதுரை கருமுத்து தியாகராஜ செட்டியார் மில்லை எடுப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 30 மில்கள் வைத்திருக்கிறார்கள். ஒரு மில்லுக்கு பல கோடி ஆஸ்தி இருக்கிறது. அதற்கு ஏன் சீலிங் வரவில்லை என்று கேட்கிறேன். சோஷலிஸத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் ஏன் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்று எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஆக, அதை அவர்கள் கட்சியின் சார்பாக குறிப்பிடத் தவறி இருந்தாலும், அவர்கள் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆக, மில்களை தேசியமயமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற திட்டத்தை பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. தொழிலாளிகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயாவது கடனாக ஏற்பாடு பண்ணவேண்டும். அதை நீண்ட நாள் கடனாக வழங்குவது மூலம், தற்போதைய நிலையிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். நிவாரணம் கிடைக்கும் என்ற கருத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லே ஆப் என்ற பிரச்னை பற்றி எலெக்ட்ரிசிடி கட், மின்சாரம் இல்லாத காரணத்தால் லே ஆப், வேலை இழக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? பாதி நாளைக்கு வேலை இழந்து, சம்பளம் இழந்து . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: கோரம் இல்லாமல் நாம் சபையை நடத்துவது முறையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரம் இருக்கிறது. அப்படி கோரம் இல்லை என்றால் 5 நிமிடம் வெயிட் பண்ணினால் எல்லா மெம்பர்களும் வந்து விடுவார்கள். நீங்கள் ஸ்வீட், காரம் எல்லாம் சாப்பிட்டு வந்துவிட்டீர்கள். மற்றவர்கள் சாப்பிடப் போயிருக்கிறார்கள்.



திரு. பெ. சீனிவாசன்: ஜேம்ஸ் வந்தவுடன் கோரம் வந்திருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: சினிமா முதலாளிகள், சினிமாக் கொட்டகை வைத்திருப்பவர்கள், பவர் ஜெனரேட்டர் மூலமாக அந்தத் தொழிலை நடத்துகிறார்கள். அதுபோல ஆலை முதலாளிகளும் நடத்தக் கூடாதா? அப்படி நடத்துவதின் மூலமாக நாட்டின் உற்பத்தியைப் பெருக்கலாம். பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. உழைப்புக்குத் தகுந்த அளவில் கூலி கிடைக்கிறது. ஆகவே, அதை வற்புறுத்த அரசு அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

லே ஆப் நாளைக்கு அந்தத் தொழிலாளிகளுக்கு ஒரு கணிசமான சம்பளம், வேலை செய்தால் எந்த அளவுக்கு சம்பளம் கிடைக்குமோ அந்தச் சம்பளத்தை, 60 சதவிகிதம் முதலாளியைக் கொடுக்கச் சொல்லி, 20 சதவிகிதம் தம்முடைய மாநில அரசு ஏற்று, மீதியிருக்கிற 20 சதவிகிதம் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றைச் செய்வது மூலமாக தொழிலாளிகளுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த எலெக்ட்ரிசிடி கட் என்பது இன்று மாத்திரமல்ல. அடிக்கடி ரிக்கரிங் பீச்சர் ஆக இருக்கிறது. ஆகவே அடிக்கடி பஞ்சாலைத் தொழிலாளிகள் கடுமையான சோதனைக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க இந்த இரண்டில் ஒன்றை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து கொண்டு வரவேண்டுமென்று வேண்டுகிறேன்.

அதேபோல பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதுதான் என்னுடைய கருத்தும். பல தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் பாக்டரி லாஸ்—பாக்டரி ஆக்ட், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்—போன்றவைகள், அந்தத் தொழிற்சாலைகளை கண்ட்ரோல் செய்யக் கூடிய சட்ட திட்டங்கள் அவுட் டேட்டாக இருக்கின்றன. பழையகாலத்திற்கு உகந்ததாக இருக்கலாமே ஒழிய, இன்று நவீன காலச் சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் அவைகள் இல்லாத காரணத்தால், பல கேஸ்களெல்லாம்—எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல—பல வருடங்களாக இழுத்துச் செல்லுகிறது. டிலே என்பது டெத் என்பதை உணர வேண்டும். அதிக டிலேயாக இருப்பதால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். முதலாளிகளுக்கு அது சாதகமாக இருக்கிறது. அந்த சட்ட திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்னொரு பிரச்சனைபற்றி இங்கே எல்லோரும் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். நம்முடைய கமிஷனர், டிபுடி கமிஷனர்களுக்கு எல்லாம் முதலாளிகளைக் கூப்பிடுகிற அதிகாரம் இல்லை; சமன் அனுப்புகிற அதிகாரம் அவர்களுக்கு இல்லை. சமன் அனுப்புகிற அதிகாரம் இருந்தால்தான் முதலாளிகள் உடனடியாக வந்து சேருவார்கள்.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் கூட, இயந்திரமயமாக்குவதைப் பற்றிப் பேசுவதற்கு மானேஜ்மென்டாரை வரச்சொன்னார்கள். எனக்கு இன்று வேலை இருக்கிறது, நாளை பம்பாய் போகிறேன், டில்லி போகிறேன், அங்கிருந்து கல்கத்தா போகிறேன் என்று பதில் சொன்னார்களே தவிர அழைத்ததற்கு வரவில்லை. வராவிட்டால் என்ன நடக்குமோ என்ற பயம் அவர்களுக்கு இல்லை. அந்த பயம் இல்லாததால் அவர்கள் வர மறுப்பது மட்டுமல்ல, சொல்கிற தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று போகிற ஒரு மதமதப்பு முதலாளிகளுக்கு இருக்கிறது. அந்த மதமதப்பை அடக்குவதற்கு, நம்முடைய கமிஷனருக்கு சமன் அனுப்புகின்ற 'அங்குசம்' என்ற அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துவிட்டால் அந்த மதமதப்பு தானாக அடங்கிவிடும்

என்னுடைய மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் பீடித் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்னுடைய தொகுதி. இந்த பீடித் தொழிலாளர்கள் வாழ்க்கையில் மிகக் கஷ்டப்படுகிற தொழிலாளிகள்—இந்த பீடித் தொழிலாளர்களைப் பார்த்தாலே தெரியும்—கைகள் மெலிந்து போய்—கண்கள் பஞ்சடைந்து—கால்கள் சூம்பி—நூற்றுக்கு 75 பேர்கள் டி.பி. வியாதியால் பாதிக்கப்பட்டவர்களாக—வாழ்க்கையில் அல்லலுற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெறுகிற ஊதியமோ மிக மிகக் குறைவு—ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய் என்று மத்திய சர்க்கார் வரி போட்டால் உடனே கொடுக்கிறேன் என்கிறார்கள் முதலாளிகள். தொழிலாளர்கள் ஒரு நாலணா கூலியை ஏற்றிக் கேட்டால் தொழிலாளர்களுக்குத் தர மறுக்கிறார்கள். மிஞ்சி வேலைநிறுத்தம் செய்தால் வடார்க்காடு மாவட்டத்திற்குப் பக்கத்தில்தான் ஆந்திர மாநிலம் இருக்கிறது—அங்கே போய்விடுகிறோம் என்று பயமுறுத்துகிறார்கள்.

தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் செயற்கரிய காரியங்களைச் செய்து வருகிறார்கள், முதல்வர் அவர்களோடு இணைந்து. அவர் பீடித் தொழிலாளர் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தி—அவர்களுக்கு இனி





பிரச்சினையே இல்லை என்ற அளவுக்கு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துவிட்டால் அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குப் பிறக்கிற தலைக் குழந்தைக்கு எல்லாம் அவர்களது பெயரையே வைத்துக் கொண்டாடுவார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பீடித் தொழிலாளர்களது பிரச்சினைக்கு நமது அமைச்சர் அவர்கள் நிரந்தரமான பரிகாரத்தை கண்டாகவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): சீக்கிரம் முடியுங்கள். நேரமாகிவிட்டது. அப்புறம் அமைச்சரிடம் டின்னர் கேட்பீர்கள். (சிரிப்பு.)

திரு. துரைமுருகன்: அடுத்து, சில நேரங்களில் தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். அரக்கோணத்தில் ராம்கோ சிமின்ட் பாக்டரி இருக்கிறது. அங்கே வேதாசலம் என்ற தொழிலாளி—என் கட்சிக்காரர் என்று சொல்வேன், அந்தத் தொழிலாளி வேலையைவிட்டு நீக்கப்பட்டு 6 மாத காலமாகிறது. வேலையைவிட்டு நீக்கப் பட்டதற்கு என்ன காரணம்? அவர்கள் தொழிலாளர்களது மத்தியில் கம்பெனியின் லாப நஷ்டக் கணக்கை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதுதான். லாப நஷ்டக் கணக்கை எடுத்துப் பேசினால்தான் போனசு வாங்க முடியும். தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பங்கைப் பெற முடியும். அப்படிப்பட்ட பிரச்சினையில் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று அதையும் என் நடைமுறைக்கு கொண்டு வரக்கூடாது என்பதை பரிசீலனை செய்ய கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒன்றைக் கேட்டால் நமது அமைச்சர் அவர்கள் பலவற்றைத் தருவார்கள்—இப்போதே பார்த்தோமே. நான் காரம், காபி, ஸ்வீட் தான் கேட்டேன்—அவர்கள் காஷ்யூநட் சிப்ஸ் எல்லாம் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். அப்படி தொழிலாளர்களுக்கும் போனஸ் பிரச்சினை என்பது மட்டுமல்ல—பல்வேறு சலுகைகளையும் முதலாளிகளிடம் இருந்து பெற்றுத் தரக்கூடியவர்—அவரை நான் மனம் திறந்து—அவரது தொண்டுப் பணியை வாழ்த்தி என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நல மானியத்தையும், வீட்டு வசதி மானியத்தையும் வரவேற்று என் கருத்துக்களை நான் சொல்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே இருக்கிற நல்லவர்கள் எல்லாம் வரவேற்றுப் போற்றக் கூடிய ஒரு துறையாக தொழிலாளர் நலத்துறை இருக்கிறதென்றால்

திரிகிறார்கள் ; எம்பிளாய்மென்ட் ஆபீசில் ஏறி இறங்கிய வண்ணம் கஷ்டப்படுகிற காட்சியைப் பார்க்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு பேருக்கு வேலை இல்லை என்ற புள்ளிவிவரம் எல்லாம் பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் தொழிலாளர்களை, தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களை வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காரணம் 'ஆட்டோமேஷன்' தான். எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கிக் கொண்டு வருகிறார்கள். இந்த இயந்திரமயம் பற்றி அதிகமாக நான் சொல்ல வேண்டியதில்லை.

(திரு. கு. காமாட்சி தலைமை)

காரணம் என்னவென்றால், என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால், அமைச்சர் மாதவன் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது இந்த மாமன்றத்திலே கூடச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்டோமேஷனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களானால் இந்த அரசு அதை எதிர்க்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பல்வேறு தொழிற்சாலைகளில் அத்தகைய நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் ; இயந்திரமயத்தை புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களை வெளியே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய அரசில் ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டியின் மூலம் 'ஆட்டோமேஷன் கமிட்டி ரிப்போர்ட்' ஒன்றை மத்திய அரசு தயாரித்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டிலும் பல்வேறு தலைவர்களும், கமிட்டி உறுப்பினர்களும் பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அது என்னவென்றால், இயந்திரமயமாக்குவதால் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கின்ற . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : உறுப்பினர் அவர்கள் இயந்திரமயம் என்று சொல்கிறாரா, அல்லது இந்திர மயம் என்று சொல்கிறாரா? அது சரியாகக் கேட்கவில்லை. (குறுக்கீடு—இந்திரா மயம்).

திரு. துரைமுருகன் : அம்மையார் அவர்கள் இந்திரா மோகத்தில் இருப்பதால் நான் என்ன சொல்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன. வேலை இல்லாத தொழிலாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஆகையால் ஆட்டோமேஷனை உடனடியாக நிறுத்தி ஆகவேண்டும். அதை நிறுத்த இந்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டாக வேண்டும்.



இப்போது சென்னையில் பாரி கம்பெனி, ஷா வாலஸ் கம்பெனி போன்ற மிகப் பெரிய கம்பெனிகளின் நிர்வாகம் இயந்திரங்களை வாடகைக்கு கொண்டு வந்து வைத்து, வேலை செய்கிறார்கள். அந்த இயந்திரங்கள் இங்கு உள்ளவை அல்ல. அமெரிக்காக்காரனிடமிருந்து இங்கே இருக்கிற சில ஏஜென்டுகள் மூலம் கொண்டு வருகிறார்கள். ஆகவே நம்முடைய பணம் எல்லாம் அமெரிக்காக்காரனுக்குப் போகிறது. அமெரிக்காக்காரரின் மெஷின்கள் எல்லாம் நம்முடைய தொழிற்சங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, உடனடியாக தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்னை. இப்போது போனஸ் ரிவ்யூ கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அது என்னவென்றால் போனஸ் சட்டத்தில் ஏற்கெனவே இருந்த செக்ஷன் 34 (3)-ஐ எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறது. அதை எடுத்துவிட்டால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். போனஸ் அதில் இருக்கிற சட்டத்திற்கு உட்பட்டுதான் கொடுக்க முடியும். போனஸ் சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் பல தொழிற்சாலைகளில் மானேஜ்மென்ட், தொழிலாளர் இரண்டு பேரும் கலந்து பேசி, ஒரு தொகையை தொழிலாளர்கள் பெறுகிறார்கள். இது சில நேரங்களில் தொழிலாளர்களுக்கு சாதகமாக இருக்கிறது. ஆனால் இப்போது இருக்கிற இந்த 34 (3) பிரிவை எடுத்துவிட்டால் அந்த வாய்ப்பு தொழிலாளர்களுக்குக் கிடைக்காது. எனவே, போனஸ் ரிவ்யூ கமிட்டி செய்திருக்கிற சிபாரிசை நம்முடைய அரசு எதிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு பிரச்னை. இப்போது ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நின்றுவிட்டால் போனஸ் வழங்கப்படுவதில்லை ; ஆனால் கிராசுட்டியாக வந்துவிடுகிறது. அதன் அடிப்படையில் சில தொழிலாளர்களுக்கு போனஸ் தொகை அதிகம் வரும். ஆனால் கிராச்சுட்டியைப் பார்த்தால் அவர்களுக்கு குறைவாக வரும். அவர்களுக்கு ஒரு எக்சம்ஷன் தரவேண்டியிருக்கிறது. எதற்காக என்றால், எதிர்பாராதவண்ணமாக இடையிலே அவர்கள் செத்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அதற்கு செக்ஷன் 5-ல் எக்சம்ஷன் தந்து, செத்துப் போனால் கூட, நியாயமாக போனஸ் வாங்கினால் எவ்வளவு வருமோ அந்தத் தொகையை முறைப்படி போய் சேரவேண்டியவர்களுக்கு வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம்—எனக்கு முன்னல் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியது போல இந்த ஆட்சியும்—மற்றவர்களும்—இந்தத் துறையை ஏற்று நடத்துகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும்—எவ்வளவு மனிதாபிமான உணர்வோடு வாடி வதங்குகிற தொழிலாளர்களுடைய பிரச்சினையை அணுகி அந்தத் தொழிலாளர்களுக்கு—முதலாளிகளிடத்தில் பேசி நன்மைகள் பலவற்றைச் செய்து வருகிருர்கள்—என்பதை விஸ்தாரமாக—விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எத்தனையோ உதவிகளை—சலுகைகளைச் செய்த பிறகும் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் வளம் காணப்படுகிறதா என்ருல்—இன்னமும் அவர்களது வாழ்க்கையில் நாம் வளத்தைக் காண முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன ?

குறிப்பாக, இன்றைக்கு தொழிலாளர்களது மத்தியில் அரசியல் கட்சிகள் தங்கள் கட்சியின் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி—தொழிலாளர்களை தங்களுக்குச் சாதகமாக—தங்கள் கட்சிக்கு சாதகமாக—தங்கள் லட்சியங்களுக்குக் கருவியாக ஆக்கிக்கொண்டு—அவர்களிடத்திலே குழப்பத்தை ஏற்படுத்தி—அவர்களது பிரச்சினைகளை சிக்கலானதாக்கி அதனுல் பலயிடங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அவதிப்படுகிற நிலைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மாறவேண்டுமென்ருல் ஏற்கனவே பலர் சொன்ஞர்கள். இங்கே கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். நாங்கள் எல்லாம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டுமென்ற கருத்தை எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டால்—தொழிலாளர்களது வாழ்வில் உண்மையான விடிவுகாலமாக அதுதான் இருக்க முடியும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசியல் கட்சிகள் தொழிலாளர்களை தங்களுக்கு ஆதரவாகப் பயன் படுத்திக்கொள்கிற நிலை மாறவேண்டும். சில பொய்யான வாதங்கள்—ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்கத்திற்கு வந்தால்தான் பல சலுகைகளைப் பெற முடியும் என்று நினைப்பதோ—கம்யூனிஸ்ட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்தால்தான்—எல்லாவற்றையும் போராடிப் பெற முடியும்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னரே—முதலாளிகளை எல்லாம் சிறையில் தள்ள வேண்டுமென்று—அந்த அளவுக்கு தொழிலாளர்களது மனதை வீராவேசமாகப் பேசி திருப்பி ஈர்ப்பதோ—நான் சோஷலிஸ்டு—முஸ்லிம் லீக் ஆகிய எல்லாக் கட்சிகளைப் பற்றியும் தான் சொல்கிறேன்—இப்படி தொழிலாளர்களை தங்களது அரசியல் கட்சிக்குப் பயன்படுத்துகிற நிலை இருக்கிற வரைக்கும் தொழிலாளர்களது வாழ்வில் வளத்தைக் காண முடியாது.





ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும்—அதுவும் அரசியல் கட்சி சார்பற்றதாக அமையவேண்டும். அதற்கு எல்லாக் கட்சிக் காரர்களும் உறுதுணையாக இருக்கவேண்டும்—அந்த முறையில் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் என்கிற அடிப்படையில் நமது அரசு ஒரு சட்டத்தையே கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால் இந்த அரசும்—தொழிலாளர் நல அமைச்சரும் தொழிலாளர்களால் பாராட்டப் பெறுவார்கள்.

அது மட்டுமல்ல. தொழிலாளர்களது பிரச்சினையை மனிதாபிமானக் கண்ணேட்டத்தோடு அணுக வேண்டும். அரசியல் கட்சிகள் எல்லாம் அதற்கு உதவியாக இருக்கலாம். மதங்களும் உதவலாம், இஸ்லாமிய மார்க்கத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. " தொழிலாளியின் வியர்வை உலர்வதற்கு முன்னல் கூலியைக் கொடு " என்பதாக ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அண்ணலார் நபிநாயகம் சொல்லியிருக்கிருர்கள்.

ஒரு சமயம் நபிநாயகத்திடம் ஒரு தொழிலாளி தம் கையைக் கொடுத்த போது அழுக்காக இருந்த அந்தத் தொழிலாளியின் கையை அவர் தம் கண்ணில் ஒத்திக்கொண்டாராம். ' இவ்வளவு பங்கரையாக—அழுக்காக இருக்கிற கையைப்போய் நீங்கள் என் கண்ணில் ஒத்திக்கொள்கிறீர்கள் ? " என்று அருகில் இருந்தவர் கேட்டதற்கு நபிநாயகம் அவர்கள் " நான் அந்தக் கையைப் பிடித்தபோது அதில் ஏற்பட்டுள்ள காப்பு—உறப்பு தெரிந்தது. அதுதான் உண்மையான தொழிலாளியின் கை—அவன் இறைவனுடைய பிரதிநிதி—ஆகவே கண்ணில் ஒற்றிக்கொண்டேன் " என்ருராம்.

இன்னும் கவிஞர்கள் எல்லாம் சொல்கிருர்களே,

" டங்கும் பொழுதளவும்
வாடித் தொழில் புரியும்

மக்களெல்லாம் இறைவன் வடிவல்லவோ ? "

என்று. இப்படி பலராலும் போற்றப்படுகிற தொழிலாளர் வர்க்கம் தம் வாழ்வில் வளம்பெற—ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான்—அரசியல் சார்பற்ற முறையில் அதுவும் பணியாற்றவேண்டும் என்கிற அடிப்படையில் தொழிற்சங்கங்கள் அமைய வழிவகுத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்த்தபொழுது, வேலை மிகமிக வேகமாக நடந்து கொண்டிருந்தது' என்று சொன்னார்கள். வேலை நிறுத்தத்தில் இப்படி மிகமிக வேகமாக வேலை நடக்கிறதேயென்று கேட்டதற்கு, நாங்கள் வேலை நிறுத்தம்தான் செய்கிறோம். ஆனால் எங்களுடைய உற்பத்தியைக் குறைக்க நாங்கள் விரும்பவில்லை. நாட்டு பொருளாதாரம் பாதிக்கக்கூடாது. எங்கள் முதலாளிகளுக்குச் சிரமம் ஏற்படுத்த வேண்டும். இங்கே மாதம் ஒன்றுக்கு 1,000 கார்கள் உற்பத்தியாகின்றன. நாங்கள் வேகமாக வேலை செய்து, 1,500 கார்கள் உற்பத்தி செய்வோம். அதிகமான கார்களை மார்க்கெட்டிலே விற்கமுடியாத நிலைமையை ஏற்படுத்தி, பொருளாதாரச் சிக்கலை முதலாளிகளுக்கு ஏற்படுத்தி, அந்தப் பொருளாதாரச் சிக்கலின் காரணமாக, அவர்களுக்கு ஸ்டிரைக்கைப் பற்றி தெரிவிக்கிறோம்' என்று சொல்கிறார்கள் அந்நாட்டுத் தொழிலாளிகள் என்றால், அணுகுண்டால் அழிந்த நாடு என்று சொல்கிறார்கள். அந்த நாடு, அமெரிக்காவோடு போட்டி போட்டு, இன்றைக்கு உச்சகட்டத்திலேயிருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமை தொழிலாளிகளுக்கு வரவேண்டும். கிளர்ச்சி செய்வதுதான் தொழிலாளர்களுடைய கடமை என்று எண்ணாமல் நாம் நாட்டுக்காக உழைக்க வேண்டும்—தேசியப் பிரச்னை என்ன என்பதையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு விலைவாசி உயர்வுக்குப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிற காரணம், ரெயில்வே வேலை நிறுத்தம்தான் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு விலைவாசிப் பட்டியலைப் பார்க்கிறபொழுது, ரெயில்வே வேலை நிறுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட பல சூழ்நிலைகளின் காரணமாக, நாட்டினுடைய பொருளாதாரமே சீர் கெடுகிற நிலைமை ஏற்படுகிறதென்றால், தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்வதை ஒரு கடமையாகக் கொள்ளாமல், நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்ற அக்கறையோடு அதைச் செய்யவேண்டுமென்பதை நான் எடுத்துக் காட்டுவது அவசியமாக இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஜப்பானிலே முதலாளிகளுக்குச் சிரமம் கொடுக்க, தொழிலாளிகள் கூடுதலாக உழைத்து சிக்கலை உண்டாக்கியிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இங்கேயிருக்கிற தொழிலாளிகளும் முதலாளிகள் வேண்டுமென்றே இயந்திரங்களை ஓட்டாமலிருந்தால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். 'லே ஆப்' விட்டால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். 'லாக் அவுட்' பண்ணாமலிருந்தால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். அரசு அதற்கு ஆதரவு அளித்து, ஏற்பாடு செய்தால், அம்மாதிரி தொழிலாளர்கள் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள்.





**திரு. கே. எ. வகாப்:** அரசுக்கும் முதலாளிகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இங்கே தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் பிரச்னை ஏற்படுகிறது. ஒன்று வேலையைச் செய்யாமல் முதலாளிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்த முடியும். இன்னொன்று, அதிகமான வேலை செய்து அதிலே முதலாளிகளுக்கு சிக்கலை ஏற்படுத்த வேண்டும். இரண்டாவது வகையில் அவர்கள் செய்கிறார்கள் என்றால், நாட்டினுடைய பொருளாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும், ஸ்டிரைக்கும் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் செய்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேன். நாம் ஒரே வழியிலே சிந்திக்கக் கூடாது. வேறு பல வழிகளை நினைத்து எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்று சிந்திப்பதற்காகத்தான் இந்த உதாரணத்தைச் சொல்கிறேன் (குறுக்கீடு). நம்முடைய நாட்டுத் தொழிலாளிகளை நான் மோசம் என்று சொல்லவில்லை. கட்சிகள் ஈடுபடாமல் இருந்தால், மற்ற குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால், உலகத்திலேயே சிறந்த தொழிலாளிகளாகத் தான் இருப்பார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** He is scandalising the workers. இந்த நாட்டுத் தொழிலாளிகள் ஏதோ உற்பத்தி செய்யாதது போலவும் அங்கே இருப்பவர்கள் வேலை செய்து உற்பத்தி செய்வது போலவும் பேசுகிறார்கள். 6 குருடர்கள் யானையைத் தொட்டுப் பார்த்த கதை மாதிரி பேசுகிறார்கள். இந்த நாட்டுத் தொழிலாளர்கள் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஊதியம் குறைந்து வந்த போதிலுங்கூட உற்பத்தியை கூறியிருக்கிறது. அப்படி தங்கள் குறைந்த ஊதியத்திற்கு அதிக உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்று "National Labour Commission" அவர்கள் செய்யும்போது, ஜப்பான் நாட்டுத் தொழிலாளர்கள்தான் தேசபக்தி கொண்டவர்கள் போலவும் இங்குள்ளவர்களுக்கு தேசபக்தி இல்லாதது போலவும் தொடர்ந்து திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறார். அது முறையல்ல.

That is scandalising our workers.

**திரு. கே. எ. வகாப்:** தொழிலாளர்களிடத்திலே அவர்களுக்குள்ள அக்கறையிலே சம பங்கு எங்களுக்கும் உண்டு. நம்முடைய நாட்டுத் தொழிலாளர்களை இழித்தோ, குறைத்தோ நான் சொல்லவில்லை. உதாரணத்திற்காக அதை நான் எடுத்துச் சொன்னேன். நீங்கள் நல்ல கோணத்திலேயிருந்து பார்ப்பீர்களென்று நினைத்து நான் சொன்னேன். ஆனால், அதற்கு உள் அர்த்தம் கற்பித்துத் தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் இருக்கிறோம் என்று பாவனை உண்டாகிற அளவுக்கு நீங்கள் நினைக்க வேண்டாம். நாங்கள்

மனிதாபிமானத்துடனும், மார்க்க ரீதியுடனும் அவர்களை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டினுடைய பொருளாதாரத்தை மனதில் வைத்துச் செய்யவேண்டுமென்றுதான் சொல்கிறேன். அரசியல் கட்சிகள் ஈடுபடாமலிருந்தால், நம்முடைய தொழிலாளர்கள் அதிகமாக உழைப்பவர்கள், சின்சியராக உழைப்பவர்கள், தீவிரமாக உழைப்பவர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதைவிட அதிகமாகச் செய்ய முடியும் என்ற நிலையிலே நான் இதைச் சொல்கிறேன்.

பல தொழிற்பேட்டைகள் என்னுடைய தொகுதியிலே உற்பத்தியாகி வருகின்றன. அத் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டிய நிலைமையிருக்கிறது. குடி நீர் வசதி செய்து கொடுக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் தன்னுடைய பணியைத் தொடங்கி வருகிறது. தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகள் குறைவாக இருக்கிற காரணத்தால், இராணிப்பேட்டையில் ஒரு தொழிலாளர் நல ஆஸ்பத்திரியைத் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி இரண்டொரு கருத்துக்களை கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நகரங்களிலே மட்டுமல்ல, வெளியூர்களிலும் வீட்டு வசதி வாரியம் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. நான் கூட அன்றைய தினம் கேள்வி நேரத்திலே கேள்வி கேட்கும்போது, நகரங்களைதான் நீங்கள் அதிகமாக கவனிக்கிறீர்கள், பேரூராட்சிகளைக்கூட நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும், பேரூராட்சிகளிலே வீட்டு வசதிகள் அதிகமாக இல்லாத காரணத்தாலே, வெளியூரிலேயிருந்து வருகிறவர்கள் அதிகமாக இருப்பதாலே தங்க முடியவில்லை—வீட்டு வாடகை அதிகமாகப் போகிறது. என்று சொன்னேன். ஆகவே, ஹட்கோ உதவியைப் பெற்று வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு ஊரிலே 40, 50 வீடுகள் இருந்தால் போதாது, குறைந்த பட்சம் 100 வீடுகள் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பொருளாதார ரீதியிலே அது சரியாக இருக்கலாம். ஆனால், அப்படி 40, 50 வீடுகளாக இருந்தாலும், பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட வசதிகளை ஏற்படுத்தி, ஹட்கோ மூலமாகவாவது, மத்திய அரசாங்க உதவி பெற்றாவது, மாநில அரசு உதவியுடனாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-30)

வீட்டு வசதி வாரியம் சென்னை நகரில் முன்பு வீடுகளைக் கட்டிக் கொடுத்து வந்தது என்று சொன்னார்கள். ஆனால் அண்மைக் காலத்திலே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஏன் என்று தெரியவில்லை. பல நடுத்தர மக்கள் வீடுகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள், வீட்டு வசதி வாரியமே வீடுகளைக் கட்டித்தருகின்ற பொறுப்பையும் எடுத்துக்கொண்டு வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தின் எல்லாப் பணிகளையும் நாடே கண்டு பாராட்டுகிறது என்று சொல்லி முடிக்கிறேன்.



திரு. எம். சுரேந்திரன்: ஒரு கிளாரிபிகேஷன், பேசுகின்றபோது இங்கே இருக்கிற தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். மார்க்கெட்டிலே எவ்வளவு சீப்பாக உழைப்பு . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: அவர் சொன்ன கருத்திலே சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். ஜப்பான் நாட்டிலே உழைப்பு சீப்பாக இருக்கிறது என்று கருதுகிறார்களா? அங்கே உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் போது உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருப்பதாகவும் இங்கேயுள்ள தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்காமல் இருக்கிறார்கள் என்ற கருத்து அவருடைய பேச்சில் வருகிறது . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அவருடைய கருத்தை அவர் சொல்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: அவரைக் குற்றம் சொல்லவில்லை. எனக்குத் தெரியவேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: ஒரு மெம்பர் பேசினார், கிளாரிபிகேஷன் கேட்கக் கூடாதா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): டைம் இல்லையே, 10½ மணியாகிவிடும், விவாதம் 5½ மணி நேரம் நடக்க வேண்டிய நிலைமை வரும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஜப்பான், ஜப்பான் என்று அடிக்கடி சொல்லியதால் சொல்லிவிடுகிறேன். ஜப்பானுக்கு நானும் போயிருக்கிறேன், ஆனால் அப்போதெல்லாம் அமைச்சராக வருவேன் என்று எதிர்பார்க்காத

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள், நெசவாளர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள்.

பீடித் தொழிலாளர்களது பரிதாபகரமான நிலையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் எடுத்துச்சொன்னார். பீடித்தொழிலாளர்களிடையேதான் 75 பங்கு க்ஷயரோகக்காரர்கள் இருக்கிறார்கள். அந்த வியாதி அந்தத் தொழிலாளர்களுக்குத்தான் அதிகம் ஏற்படுகிறது. காரணம் என்ன? அவர்கள் வேலை செய்கிற இடம்—ஒரு சிறிய அறையில் ஆண்களும்—பெண்களும்—குறைந்த கூலியில்—குறைந்த உணவை உண்டு வேலை செய்கிற நிலையினால் ஏற்படுகிறது. அதனால் அவர்களது உடல்நலம் கெடுகிறது. அவர்கள் வாங்குகிற கூலி போதுமானதாக இல்லை. அவர்கள் ஒன்றுபட்டு போராட்டம் நடத்தக்கூடிய வாய்ப்பும் இல்லை. அந்தத் தொழிலில் பெரும்பாலும் இஸ்லாமிய மக்கள்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தோல்பதனிடும் தொழிலை எடுத்துக்கொண்டால் முழுக்க முழுக்க அரிசன மக்கள்தான். நெசவாளர்களும் ஒன்றுபட்டு போராடுகிற நிலையில் இல்லை. அவர்களுக்கு அரசாங்கம்தான் உதவி செய்யவேண்டும். கட்சியின் அடிப்படையில் பீடித் தொழிலாளர்கள்—நெசவாளர்கள் போராட்டம் செய்தால்தான் அவர்களுக்கு வாழ்வில் வளம் கிடைக்கும் என்கிற நிலையை எதிர்பார்த்து இருக்க முடியாது.

பீடித் தொழிலை எடுத்துக்கொண்டால் முதலாளிகள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய வரியும், போடப்படுகிறது என்று எடுத்துக் காட்டினார்கள். பீடி முதலாளிகளும் கூட பொல்லாதவர்கள் அல்ல. அவர்களிடையே நல்லவர்களும் இருக்கிறார்கள். அரசு அவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்தினால் ஒரு சுமுகமான உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள அவர்களும் முன்வருவார்கள். பீடித்தொழிலில் 90 பங்கு முஸ்லிம்கள்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். தோல் பதனிடும் தொழிலில் 100-க்கு 100 பேரும் அரிசன மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படித்தான் நெசவுத் தொழிலிலே, சமுதாயத்திலே இருக்கிற எல்லா மக்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி பாதுகாப்பு இல்லாத தொழில்களில் தொழிலாளர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு தர வேண்டும். 17 தொழில்களுக்காக இந்த நாடே அதிர்ந்துவிடுகின்ற முறையில் பெரிய போராட்டங்கள்—அரசியல்—உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல்—நடந்தன. இங்கே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், ஊமைகளாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அதன்காரணமாக உங்கள் முன்னால்





குறைகளை எடுத்துச் சொல்ல அச்சப்படுகின்ற தொழிலாளர்கள், தங்கள் பசியைப் பற்றி உங்களிடம் எடுத்துச் சொல்லத் தைரியம் இல்லாத தொழிலாளர்கள்—அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அந்த அடிப்படையிலே பீடி தொழிலாளர்களுக்கும், தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும், நெசவுத் தொழிலாளர்களுக்கும் நீங்கள் ஒரு முக்கியமான இடம் தரவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, இந்த நாட்டிலே பாய் நெய்கின்ற தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கிலே இருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்கள் என்ற கணக்கிலேகூட வருவதில்லை. அவர்கள் ஒரு கோரைப் பாய் நெய்தால் ஒரு நாளைக்கு ரூபாய் 1½, ரூபாய் 1¼ தான் வருகிறது. அரசாங்க ஆதரவிலே அங்கங்கே கூட்டுறவு சங்கங்களை வைத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் வாங்கிவிடுகிறார்கள்—கொடுப்பதில்லை என்று தொழில் கூட்டுறவு சங்கங்கள்பற்றி புகார்கள் வருகின்றன. தொழில் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கிற ரூபாய் 50-ஐ, ரூபாய் 100-ஐச் சாப்பிட்டு விடுகிறார்கள், சங்கங்களே இருக்க முடியவில்லை. சங்கங்களே இல்லையென்ற நிலைமையாகிவிட்டது. அந்தப் பாய் நெய்யும் தொழிலில் 50,000 அல்லது 1 இலட்சம் பேர்கள் இருப்பார்கள். குழு அமைத்து உதவி செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களே, அதிலே அவர்களையும்—அப்படிப்பட்டவர்களையும் சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

என்னுடைய பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இராணிப்பேட்டை தொழில் பகுதியிலே அதிகமாக கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் நடப்பதில்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அண்மையிலேதான் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. அதிலே, நீங்கள் வேகமாக ஈடுபட்டதன் காரணமாக, 4, 5 நாட்களிலே தீர்த்து விட்டீர்கள். தொழிலாளர்களும் நல்ல தொழிலாளர்கள். தொழிலாளர்களிடத்திலே ஒரு கட்டுப்பாடு, நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியிருக்கிறது.

இங்கே ஜப்பான் பற்றி குறிப்பிட்டார்கள். நான் சென்றிருந்தபோது கூடக் கண்டு வந்திருக்கிறேன். வேலை நிறுத்தம் என்றால் அந்தத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்கள் கருப்பு பாட்ஜ் அணிந்துகொண்டிருக்கிறார்கள். அதுதான் வேலை நிறுத்தத்தின் அடையாளம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் ஜப்பானுக்குப் போய் வந்த பிறகு ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள். ஒரு கார் தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அதைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். அங்கே சென்று

காலம் அது. ஜப்பான் நாட்டிலே வேலை நிறுத்தம் என்றால் கறுப்பு பேட்ஜ் அல்லது சிவப்பு பேட்ஜ் போடுவார்கள். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் தொடர்ந்து போடுவார்களானால் தொழிலாளர்கள் மனக்குறைவாக இருக்கிறார்கள் என்று முதலாளிகள் வேதனைப்பட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள். அந்த வகையிலேதான் நான் பத்திரிகையிலே கட்டுரையிலே படித்தேன். திரு. வகாப் அவர்கள் சொல்வதைப் போன்று உற்பத்தியைப் பெருக்குகிறார்களா என்பது எல்லாம் அறியப்படவேண்டிய ஒன்று. இந்து பத்திரிகையில் ஒரு கட்டுரையில்கூட நான் அப்படித்தான் படித்தேன்.

திரு. எம். சுரேந்திரன்: நான் கேட்பது அதுவல்ல, யாரோ சொல்வதற்கு இடம் கொடுக்கிறீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): யாரோ அல்ல, அமைச்சர் சொல்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: நான் சொல்ல வந்தது எல்லாம் மூலதனத்திற்கு உடைமையாளர்களாக இருக்கிற முதலாளிகள், உழைப்பின் பிரதிநிதிகளாக இருக்கிற தொழிலாளர்களை சமமாக நடத்தினால் நல்லது. அதைப் பற்றிப் பேசிவிட்டு ஜப்பானைப் பற்றிப் பேசினால் நல்லதாக இருக்கும்.

திரு. பெ. சீனிவாசன்: திரு. வகாப் அவர்கள் தவறான ஒரு தகவலை தருகிறார்கள். ஜப்பான் நாட்டிலே அப்போது கார்கள் விற்பனையாகாத நேரம் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): எங்களுக்கு என்ன தெரியும், ஜப்பான் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்.

திரு. பெ. சீனிவாசன்: தீர்ப்பு சொல்லுங்கள், கார் உற்பத்தியை அதிகரித்து அதிகரித்து வேல்யூவை குறைக்கவேண்டுமென்ற முறையிலே முதலாளிகளுக்கு கஷ்டம் ஏற்படுத்துகின்ற முறையிலே அவர்கள் செய்தார்கள். நீங்கள் சொல்கிற மாதிரி யுட்டோபியன் நிலையிலிருந்து கொண்டு செய்யவில்லை. இல்லை.

திரு. கே. எ. வகாப்: இரண்டு விதங்களில் முதலாளிகளுக்குச் கஷ்டம் ஏற்படுத்தலாம். வேலை நிறுத்தம் செய்யலாம். இல்லாவிட்டால் உற்பத்தியை அதிகம் செய்து நெருக்கடியை ஏற்படுத்தலாம். ஜப்பான் சிறிய நாடு, இடநெருக்கடி இருக்கிறது. கப்பல் தொழிலாக இருந்தாலும் கார் தொழிலாக இருந்தாலும் இட நெருக்கடி ஏற்படுகிறது, ஆகவே அதிலே சிரமம் ஏற்படுத்தி



வேலை நிறுத்தத்தை காட்டவேண்டுமென்ற முறையிலே செய்கிறார்கள். நம்முடைய தொழிலாளர்களுக்கு களங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை, நல்ல எண்ணத்தில்தான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம், தொழிலாளர் நலத் துறை ஆகிய மானியங்களிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தமிழகத்திலே சென்னை நகரத்திலே மட்டுமல்ல, மாவட்டத் தலைநகரங்களிலும் சில வட்டங்களிலும் வீட்டு வசதி வாரியம் மிகப் பரவலாகவும் செம்மையாகவும் நடைபெறுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சமுதாயத்திலே உள்ள பல்வேறு வருமானம் உள்ளவர்களுக்கும் அவரவர்களுடைய சக்திக்கும் ஆற்றலுக்கும் பொருளாதார எல்லைக்கும் உட்பட்ட முறையில் வீடுகளைக் கட்டுகின்ற நல்ல பணியை இந்த வாரியம் செய்து வருகிறது, அதைப்போலவே சென்னை நகரத்திலே குடிசை மாற்று வாரியமும் நல்ல பணிகளைச் செய்து வருகிறது, அந்தப் பணிகளை மாவட்டத் தலைநகர்களிலே வீட்டுவசதி வாரியமே செய்கிறது, வீட்டு வசதி வாரியம் எதிர் காலத்திலே பணிகளை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று சமுதாயத்திலே இருக்கின்ற பல்வேறு தரப்பு வருமானம் உடையவர்களுக்கும் ஓரளவிற்கு சமுதாயத்தின் மேல் தட்டிலே இருக்கின்றவர்கள் எப்படியாவது தங்களுடைய வாய்ப்பு வசதிகளைப் பயன் படுத்திக்கொண்டு வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வசதியிருக்கிறது, ஆனால் சாதாரண நிலையில் உள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கக்கூடிய முறையில் ஸ்பெஷல் லோ காஸ்ட் ஹவுஸிங் ஸ்கீம் என்ற முறையிலே கட்டித்தர வேண்டும். மிடில் இன்கம் குரூப் என்று சொல்லக்கூடியவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றால் 35 ஆயிரம் ரூபாய் 40 ஆயிரம் ரூபாய் ஆகிறது, அந்தத் திட்டங்களை விட குறைந்த விலையில் உள்ள 15 ஆயிரம் ரூபாய் 20 ஆயிரம் ரூபாய் விலையில் உள்ள வீடுகளைக் கட்டித்தரவேண்டும். அதிகமான எண்ணிக்கையில் கட்டுவதற்கு வாரியம் முயற்சிக்கவேண்டும்.

இந்த சமுதாயத்திலே உள்ள தேசவாளப் பெருமக்களுக்கு இந்த அரசு பல்வேறு நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் சாக்கு மூட்டங்கிக்கிடப்பதைப் போக்கக்கூடிய வகையில் கோடிக்கணக்கான ரூபாய் அரசு ஒதுக்கக்கூடிய திட்டத்தை அறிவித்தார்கள். அதைப்போலவே

அவர்களை அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றக்கூடிய வகையிலே பெரும் அளவிலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தரவேண்டும். இங்கே உள்ள விளக்கவுரையில் நெசவாளர் பெருமக்களுக்கு சில மாவட்டங்களிலே ஆரம்பித்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள், அதிலே செங்கற்பட்டு, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படும் என்று இருக்கிறது. எங்கள் கோவை மாவட்டத்திலே அதிகமான நெசவாளர்கள் இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக எங்கள் கிராமத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் நெசவாளர்கள் இருக்கிறார்கள், முழுக்க நெசவாளர்கள் இருக்கக்கூடிய கிராமமாக இருக்கிறது, அங்கேயுள்ளவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டும். ரெவின்யூ டிபார்ட்மெண்டை சேர்ந்தவர்களுக்கு தாசில்தார், ஆர். டி. ஓ. போன்றவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன, அதைப்போலவே நீதித்துறையில் உள்ள மாஜிஸ்திரேட், முன்சிப் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன, ஆனால் காவல்துறையில் உள்ளவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படவில்லை, ஒரு சமயம் அவர்கள் இதற்காக இந்தத் துறையை அணுகவில்லையோ என்று நினைக்கிறேன். அவர்கள் அணுகினால் அதை அனுசரணையாகப் பரிசீலித்து அந்தத் துறையிலேயும் உள்ள இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். தக்கைக் கல் தயார் செய்வதற்கான தொழிற்சாலை என்னூரிலே இருக்கிறது. இந்தக் குறிப்பிலே மத்திய அரசு கொடுத்த நிதியை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கல் செங்கல்லைவிட நான்கில் ஒரு பாகம்தான் கனம் உள்ளதாக இருக்கிறது. கட்டுமானப் பணியிலும் விரைவில் கட்டலாம், விரைவிலே அடுக்கி விடலாம் என்று சொல்கிறார்கள். எனவே அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை அமைச்சரவர்கள் எப்படியாவது கண்டுபிடித்து, இந்தச் சென்னையிலே உற்பத்தி செய்யும் அந்தக் கல்லை மாவட்டப் பணிகளுக்குக்கூடப் பயன்படுத்தச் செய்ய வேண்டும். அதனால் கட்டுமானச் செலவும் குறையும், கூலி கொடுக்கின்ற செலவும் மிகவும் குறையும். இப்படிப்பட்ட கற்களை அதிகமாக உற்பத்தி செய்யும் வகையில் அந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் நிறையக் கற்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மற்ற ஜன்னல் கதவுகளைப் பொறுத்தவரையில் 'வுட் ஒர்க்ஸ்' அமைப்பதாக இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். அதை விரைவில் ஆரம்பித்து, அந்தச் சாமான்களை சென்னையில்





மட்டுமல்லாமல் இந்தப் பணி நடைபெறும் அத்தனை மாவட்டங்களுக்கும் அனுப்பினால் அந்த வீடுகளினுடைய செலவு குறையும், 30,000 ரூபாய் என்று ஆகின்ற செலவு 20,000 ரூபாய், 25,000 ரூபாய் என்ற அளவிற்குக் குறையும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள மரத்தை வாங்கிச் செய்வது என்றால் அதிக விலையாகிறது. இப்படி மத்தியிலே 'வுட் ஒர்க்ஸ்' என்று ஆரம்பித்தால் விலையும் குறையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நோக்கில் வீட்டு வசதி வாரியத்தினுடைய பணிகள் கிராமங்களிலும் தெரிகின்ற அளவில் செய்ய வேண்டும். இன்றைக்கு மாவட்ட அளவிலும், ஒருசில இடங்களில் வட்ட அளவிலும் இருக்கிறது. அதை இன்னும் கிராமப்புறங்களிலும் தெரியும் அளவில் மேலான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயுள்ள பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமப்புறங்களிலேயிருந்து வந்தவர்கள். இம்மாதிரி பணி பரவலாக நடக்கிறது என்று சொல்கிறார்கள், ஆனால் நம்முடைய பக்கத்தில் நடக்கவில்லையே என்ற ஆதங்கத்தோடு கேட்கிறார்கள். எனவே, எங்கே புறம்போக்கு நிலங்கள் அல்லது வீடு கட்டுவதற்கான நிலங்கள் கிடைக்கிறதோ அதைப்போன்ற இடங்களிலேயெல்லாம் அந்தந்த ரீஜினல் ஆபீசிலே உள்ள அதிகாரிகள் மூலமாகப் பரிசீலித்து இந்த வீடு கட்டும் திட்டத்தை பரவலாக்கி, வட்டத் தலைநகரங்களிலும், கிராமப்புறங்களிலும் வசதி கிடைக்கும் அளவிற்கு இதனுடைய எதிர்காலப் பணி அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. இந்தத் தொழிலாளர் மானியத்தின்மீது ஒரேயொரு கருத்தைமட்டும் சொல்கிறேன். இந்த அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொல்லியதைப்போல பல்வேறு பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றன. சர்க்கரைத் தொழிலில் 15,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததைப்பற்றிச் சொன்னார்கள். அதோடு கூட சமுதாய நிலைமையையும் கொஞ்சம் பார்க்க வேண்டும். 15,000 தொழிலாளர்களைப் பற்றிப் பேசும் நேரத்தில் கரும்பு ஆட்டும் தொழிலாளர்கள் 50,000 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தச் சர்க்கரைத் தொழிலில் உள்ள தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலாவது அவர்களுக்குத் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த கரும்பு ஆட்டும் தொழிலாளர்கள் வாயில்லாப் பூச்சிகளாக, அவர்களுடைய வேலையில்லாத பிரச்னையை எடுத்துச் சொல்ல யாரும் இல்லாத நிலையிலிருக்கிறார்கள். அதையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைவாக இருக்கிறது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் வசதி படைத்த தொழிலாளர்களுக்குச் செய்வதைக் காட்டிலும் வசதியில்லாத தொழிலாளர்களுக்கு என்ன செய்கிறோம் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அரசாங்க இலாக்காக்களால் நடத்தப்படும் பல தொழிற்சாலைகளிலேயாவது தொழிலாளர்களுக்கு உரிமை கொடுக்கப்படுகிறதா? முதலாளிகளைப் பற்றிச் சொல்கிறார்கள், ஆனால் சில அதிகாரிகள் முதலாளிகளைவிட மோசமாக இருக்கிறார்கள். இவர்கள் முதல் போட்டுச் செய்வது மாதிரி நடந்து கொள்கிறார்கள். பப்ளிக் அண்டர்டேக்கிங் கீழ் அரசாங்கம் நடத்தும் டான்சியில் தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்கிறார்களா?

Government should be an example for others; you are not an example now.

இங்கே பி. டபிள்யூ. டி.யை எடுத்துக்கொண்டாலும் எத்தனை பியூன்கள் 3 பைசாகூட இல்லாமல் போகிறார்கள். கேஷ்வல் லேபர் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள், அவர்களுக்குப் பென்ஷன் இல்லை. இப்படிப்பட்ட அளவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் நடத்துவதில் முதலில் முறையாக நடத்திவிட்டு மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும், அப்படியில்லாமல் ஊருக்கு மட்டும் என்ன உபதேசம் செய்ய வேண்டியிருக்கிறது? முதலில் நீங்கள் நடத்திக் காட்டுங்கள். எப்படி வசதி கொடுப்பது. 5 வருடங்களுக்குமேல் யார் வேலை செய்திருந்தாலும் அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று செய்யுங்கள். ராமுண்ணி மேனன் ரிப்போர்ட்டில் ஹைவேஸ் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது பி. டபிள்யூ. டி.யிலும் Guest House-இலும் உள்ள பணியாளர்கள் அழுகிறார்கள். நாங்கள் வீட்டிற்குப் போனால் எங்களுக்கு பென்ஷன் கிடையாது என்று சொல்கிறார்கள். அவர்களை கேஷ்வல் லேபர் மாதிரி வைத்திருக்கிறார்கள். கேஷ்வல் லேபர், காண்ட்ராக்ட் லேபர், மஸ்டர் ரோல் என்று இம்மாதிரி இருப்பதை எப்பொழுது ஒழிக்கப் போகிறீர்கள்? இப்படி எலக்ட்ரிசிட்டி போர்டில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குச் சலுகைகள் இல்லை, அவர்களுக்கு எப்பொழுது சலுகைகளைச் செய்யப் போகிறீர்கள் என்று கட்டாயமாக யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'நம்பர் ஆஃப் மேன்-டேஸ்' பற்றிப் பார்த்தால் 30 இலட்சமாக இருந்தது 44 இலட்சம் என்று ஆகியிருக்கிறது. 44 இலட்சம் நாட்கள் என்றால் அது எவ்வளவு பெரிய தேசிய நஷ்டம் என்பதைச் சிந்திக்க





வேண்டும். உற்பத்தி பெருகினால்தான் பிரச்னைகளைச் சமாளிக்க முடியும். இப்படி 44 இலட்சம் நாட்களாக ஆகியிருப்பதோடு நீங்கள்வேறு மின்சார வெட்டு என்று சொல்லி அதனால் 'லே ஆஃப்' என்று சொல்கிறார்கள்.

இந்தியா மீட்டர்ஸ் என்று அம்பத்தூரில் இருக்கிறதே அதை ஏன் அரசு எடுக்கக்கூடாது? தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கும்பொழுதே யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தபிறகு அதை மூட விடக்கூடாது? எந்தக் காரணத்தைக் கொண்டும் மூடவிடக் கூடாது. எவ்வளவு பெரிய தொழிலதிபர்கள் அதில் இன்டரஸ்டட் ஆகயிருந்தாலும் சரி, அங்கே கிட்டத்தட்ட 750 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். 'லே ஆஃப்' என்றாலும் ஏதோ கொஞ்சமாக பர்மனென்ட் தொழிலாளர்களுக்குப் பணம் கிடைக்கிறது, ஆனால் கேஷ்வல் லேபரர்களுக்கு அதுவும் இல்லை. பர்மனென்ட் லேபரர்களுக்கு எப்படி மினிமம் வேஜஸ் என்று கொடுக்கிறார்களோ அந்த அளவிற்கு கேஷ்வல் லேபரர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். கேஷ்வல் லேபர் காண்டிராக்ட் லேபர் என்று போட்டு அவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். இதையெல்லாம் போக்கினால்தான் தொழிலாளியின் பசியைத் தீர்க்க முடியும், ஓரளவு பிரச்சினையைத் தீர்க்க முடியும். இல்லையென்றால் நாம் பேசிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். சட்டம் போட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான். லேபர் ஒரு பக்கம் இருக்கும், தொழிலாளர்கள் தலைவர்கள் ஒரு பக்கம் இருப்பார்கள். இதிலே மாற்றம் ஒன்றும் ஏற்படாது.

வீட்டு வசதி பற்றி ஒரு வார்த்தை. மயிலாப்பூர் தொகுதி சாஸ்திரி நகரில் லோ இன்கம் குரூப், மிடில் இன்கம் குரூப் எல்லோரும் 1962ல் இரண்டாயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கி வீடு கட்டியிருக்கிறார்கள். இப்போது 1975ல் 6,950 ரூபாய் கட்டு என்று சொல்லுகிறார்கள். 13 வருஷத்திற்குப் பிறகு, சாதாரணமாக 12 வருஷத்திற்குப் பிறகு டைம் பார் ஆகிவிடும். அவர்கள் எப்படி இந்தத் தொகையைக் கொடுப்பது? இப்படி வீட்டு வசதி வாரியம் இஷ்டத்திற்கு விலையை ஏற்றி வருஷா வருஷம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டாயிரம் என்று நம்பி வாங்கியவர்களை இப்போது திடீரென்று ரூ. 6,950 கட்டு என்று சொன்னால் எப்படி?

குடிசை மாற்று வாரியம் கட்டும் வீட்டுக்குப் பத்து ரூபாய் வாடகைக்கு ஒரு டெனமென்ட் என்று சொன்னார்கள். இப்போது பத்து ரூபாய்க்குக் கொடுக்கிறீர்களா? இப்போது அதிலே குடியிருப்பவர் வேலை செய்தால் எச். ஆர். ஏ. அதற்கு மேல் 10 சதவிகிதம் என்றெல்லாம் போட்டு வாங்குகிறீர்கள் . . .

விவசாயிகளுக்கு 100 டன்னுக விளைய வேண்டிய இடத்தில் 70 டன், 80 டன் என்று ஆகியிருக்கிறது. இந்த நஷ்டத்தையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த கம்பல்சரி டெபாசிட் ஸ்கீமைப்பற்றி அநேகமாக இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சியினரும் எதிர்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மத்தியிலே ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே கடுமையாக எதிர்த்தார்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்திருந்தாலும் எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையும் மத்திய அரசு கவனிக்க வேண்டும். விலைவாசியேற்றம், மின்சார வெட்டு ஆகியவைகள் உள்ள இந்த நேரத்தில் அதிலேயிருந்து தொழிலாளர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உதவி சபாநாயகரவர்களே, ரொம்பக் கஷ்டப்பட்டு 10 நிமிடம் கொடுத்திருக்கிறீர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடம் அல்ல, 5 நிமிடங்கள்தான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 10 நிமிடங்கள்தான். இந்த லேபர் டிபார்ட்மெண்டில் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இங்கே சட்டம் எப்படியெல்லாம் அமல் நடத்துவதில் பின் தங்கியிருக்கிறது என்று பார்த்தால் In registered factory இல் இன்ஸ்பெக்ஷனே இல்லை. (Child labour– ஐ அமர்த்தக்கூடாது என்று இருந்தாலும், நெசவுத் தொழிலாகட்டும், இன்னும் ஹோட்டல் தொழிலாகட்டும், அங்கேயெல்லாம் 10 வயது 12 வயதுக்குட்பட்டவர்களையெல்லாம் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். அவர்கள் படிக்க வேண்டிய பையன்கள், அவர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். சட்டம் போட்டுப் பயனில்லை, அதை அமல் நடத்தினால் தான் பயனிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக Industrial Disputes Act என்று பார்த்தோமானால் 7 பேர் சேர்ந்துகொண்டு ஒரு யூனியனை ஆரம்பிக்கலாம் என்று இருக்கும்பொழுது அரசியல் கட்சிகள் கட்சிக்குக் கட்சி ஒரு யூனியன் என்று வைத்துக் கொண்டு, 8 யூனியன்கள் என்று வைத்துக் கொள்கிறார்கள். ஒரே



கட்சியிலேயேகூட இரண்டு இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனை எடுத்துக் கொண்டால் 2 தி.மு.க. வினர் இரண்டு யூனியன்களை வைத்து போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பல யூனியன்களை வைக்கும் நிலைமையிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் சட்டமாக இருந்தாலும்கூட ஒரு தொழிலுக்கு ஓரிரு தொழிற் சங்கங்களுக்கு மேல் இருக்கக் கூடாது, ஒரே தொழிற்சாலையாக இருந்தால் சில மால்-பிராக்டிஸஸ் வந்துவிடும், ஆகவே, ஒன்றிரண்டுக்கு மேல் இருக்கக் கூடாது என்று செய்ய வேண்டும். எவ்வளவு மெம்பர்ஷிப் இருக்க வேண்டும் என்று வரையறுக்க வேண்டும். இப்பொழுது போட்டிருக்கும் ஆக்டின்படி 7 பேர் என்றால் பல சங்கங்கள் என்று ஏற்பட்டு எந்தப் பிரச்னையும் தீர்க்கப்பட முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்தச் சங்கங்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் தலைவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். எல்லோரும் ஆர்கனைஸ்ட் லேபரிலேயே தலைவர்களாக இருக்கிறார்கள். ஏன் அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்கும் தலைமை தாங்கக் கூடாது? ஆர்கனைஸ்ட் லேபரிலே என்றால் சந்தா கிடைக்கும். அன்-ஆர்கனைஸ்ட் லேபரிலே சந்தா கிடைக்காது.

Mr. DEPUTY SPEAKER: How are you concerned? You are not a Labour Leader.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் சந்தா கிடைக்கும், அதற்காகத் தொழிலாளர் தலைவர்களெல்லாம் ஆர்கனைஸ்ட் லேபர்லைத் தேடிச் செல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அம்மையார் அவர்கள் ஆர்கனைஸ்ட் லேபரிலும் இல்லை, அன்-ஆர்கனைஸ்ட் லேபரிலும் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை குமாரசாமி அவர்கள் சொல்லிக்கொள்வார்கள், நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் இவர்களைச் சொல்லவில்லை, வெளியிலே இருப்பவர்களைப்பற்றிச் சொல்கிறேன். 80 சதவிகிதம் அன்-ஆர்கனைஸ்ட் லேபரர்களுக்கு சரியான கூலி இல்லை, மற்ற வசதிகள் இல்லை, வேலை நிரந்தரம் இல்லை. கமிட்டி போட்டிருக்கிறார்கள், அப்படிக் கமிட்டி போட்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. வேலையே நிரந்தரமாக்கப்படவில்லையே, அவர்கள் என்ன செய்வார்கள். அவர்களது கூலியும் மிகமிகக்

[திரு. க. சுப்பு] [1975 ஏப்ரல் 4

வைத்துக் கொண்டு தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்து விட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. லேபர் ஆபீசர், லேபர் செகரடரி என்றுதான் இருக்கிறதே தவிர, லேபர் வெல்பேர் ஆபீசர், லேபர் வெல்பேர் செகரடரி என்று வைக்கவில்லை. இந்த நிலையில் தொழிலாளர் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைப்பது?

எப்போது தீர்க்க முன் வருகிறீர்கள்? தொழிலாளி என்றைக்குப் போராட்டம் நடத்தி தொழிற்சாலை இழுத்து மூடப்படுகிறதோ அப்போது தான் சட்டம் வருகிறது. அதுவரை சட்டம் வராது. அதற்கு முன்னால் தொழிலாளிக்கு இந்தச் சலுகைகளை ஏன் செய்து கொடுக்கவில்லை என்று தலையிட முடியாது. இப்போதுள்ள அமைப்பு முறை அந்தத் தொழில் அதிபர்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

செஸ்ட் ஹவுஸ் காட்டும் முறை தமிழ் நாட்டில் மட்டும் இருக்கக்கூடிய முறை அல்ல. இந்த அமைப்பு முறையில் இருக்கக்கூடிய சீர்கேடு, சீர்கேடு என்று கூடச் சொல்ல முடியாது, நாம் வைத்திருக்கும் முதலாளித்துவ அமைப்பு முறையில் எப்படி எல்லாம் அவர்கள் அதிகாரிகளைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள், அரசியல்வாதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். லேபர் ஆபீசர் சாதாரணமாக தொழிலாளர் நலப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசமுடியாது. அங்கே தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் போன்றவை ஏற்பட்டால்தான் லேபர் ஆபீசர் தலையிட முடியும். அப்போதுதான் மினிஸ்டர் பேச முடியும்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் தீரமிக்க போராட்டத்தைத் தூத்துக்குடியில் நடத்தினார்கள். ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியிலும் அதே போராட்டந் தான். இரண்டு போராட்டத்திலும் அமைச்சர் அவர்கள் மூலமாக முடிவு ஏற்பட்டதே தவிர, கீழே இருந்து வரவில்லை. அமைச்சர் அவர்கள் நேரடியாகவே இரவு 12 மணி வரை இருந்து பேசிக்கூட ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

இந்த அதிகாரிகளை வைத்துக் கொண்டு, அந்த அளவுக்கு நிர்வாக இயந்திரம் சரியாக இல்லை என்றாலும் அதையும் வைத்துக் கொண்டு தொழிலாளர் பிரச்சினையில் தொழிலாளர்களுக்கு எப்படிச் சாதகமாக தீர்வு செய்வது என்பதற்கு அவரே நேரடியாக இருந்து பேசித் தீர்க்கிறார். லேபர் கமிஷனர் பேச வேண்டிய விவகாரங்களில் கூட தானே நேரடியாக இருந்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்த்து வைக்கிறார். தொழிலாளிக்குச் சாதகமாக இப்போது இருக்கக்கூடிய நிர்வாகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதற்காகத் தான் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. க. சுப்பு]

மற்றொரு பிரச்சினையை நண்பர்கள் சொன்னார்கள். தொழிற்சங்கத்தில் அரசியல்வாதிகள் தலையிட கூடாது என்று சொன்னார்கள். தொழிற்சங்கம் ஏன் இருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு வருவார்களானால் அதைச் சொல்ல மாட்டார்கள். தொழிலாளி என்ன இயந்திரமா? மனிதன் இல்லையா? ஆட்சி பீடத்திற்கு வரக்கூடாத ஒருவனா? தொழிலாளி என்ற அமைப்பு இருக்கிறது. எப்படி அவன் கட்சிக்கு அப்பாற்பட்டவனாக இருக்க முடியும்? ஏஜன்சியாக இருப்பது மட்டுமல்ல, போனஸ் வாங்கிக் கொடுக்க, சலுகை வாங்கிக் கொடுக்க மட்டுமல்ல. அவனுக்குச் சலுகை கிடைக்கிறதோ இல்லையோ சில தொழிற்சங்கத் தலைவர்கள், சில அரசியல்வாதிகளை மானேஜ்மெண்ட் தங்களுடைய பிழைப்புக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில கட்சிகள் அப்படி இருக்கின்றன. ஆனால் எல்லாக் கட்சிகளும் அப்படி அல்ல. தொழிலாளர்கள் சுரண்டப்படக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி இருக்க வேண்டுமென்று விரும்புபவன். கொள்கை அளவில் இல்லாமல் நடைமுறையில் இருக்க வேண்டும்.

டெம்பரரி தொழிலாளியை எப்படி எல்லாம் வேலை வாங்குகிறார்கள், பத்து வயது சிறுவர்களை வைத்து வேலை வாங்குகிறார்கள் என்பது பற்றி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிவகாசியில் அது நடக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மோகன் குமாரமங்கலம் அதைக் கண்டுவிட்டுக் கண்ணீர் வடித்தார். என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட கூடாரமாக நடத்தப்பட்டு வருகிறது. மூலதனத்தைப் போட்டு நிர்வாகத்தைச் சாதகமாகக் கொண்டு முதலாளிகள் அவர்களைப் பயன்படுத்தி வருகின்ற நிலைமைதான் இது. இல்லையென்றால் முதலாளியாக இருக்க முடியாது.

(இரவு 8-00)

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டு போராட்டத்தில் இறங்குவதில்லை. வளர்ந்து வருகிற விலைவாசி உயர்வில் தொழிலாளர்கள் பொருள்களை வாங்கக் கூட முடியாது கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அவர்களது ஊதியத்தைக் கேட்காமலேயே உயர்த்திக் கொடுக்கக் கூடிய எந்த அரசும் இருக்கமுடியாது. இரண்டையும் வைத்து பாலன்ஸ் செய்து கொண்டுபோகிறோம். ஸ்ட்ரைக்கே இல்லை ஜப்பானில் என்று சொன்னார்கள். சோவியத் யூனியனிலும் ஸ்ட்ரைக்கே கிடையாது. மக்கள் சீனாவில் விலைவாசி உயர்வும் கிடையாது, ஸ்ட்ரைக்கும் கிடையாது. சோவியத் யூனியனில் ஸ்ட்ரைக்கே இல்லை என்றால் அங்கு அப்படிப்பட்டதொரு சமுதாயத்தை, சுரண்டலற்ற சமுதாயத்தை அங்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: குடிசை மாற்று வாரியம் வசதி இல்லாத வாடகை அளிக்கப்பட வேண்டிய ஏழைகளுக்காக ஏற்பட்டது. அங்கே ஒன்றரை அல்லது இரண்டு சதவிகிதம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதிப் படி அரசாங்கம் அளிக்கிறது. அந்த வீட்டு வசதிப் படியை அளிக்க வேண்டுமென்பது அரசாங்க உத்தரவு. இப்போது அவர்களை வீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக தவணை முறையில் தர ஏற்பாடு செய்திருக்கிறோம். தவணை முறையில் மாதம் 25 ரூபாய் கட்டி நல்ல வீடுகளை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இருந்தாலும் முதலிலே 10 ரூபாய் வாடகையாகக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு இப்போது எச். ஆர். ஏ. பத்து சதவிகிதம் என்றெல்லாம் பிடிப்பது அநியாயம். திரும்ப இதுபற்றி யோசிக்க வேண்டும். அந்த வசதி இருந்தால் அவன் ஏற்கனவே குடிசையில் இருந்திருக்க மாட்டான், எங்காவது வாடகை கொடுத்துக் கொண்டு ஒரு வீட்டில் குடியிருந்திருப்பான். வசதி இல்லாத காரணத்தால் தான் குடிசையில் இருந்திருக்கிறான். இன்று நீங்கள் குடிசையையும் பிரித்துப் போட்டு விட்டு இந்த வாடகையைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படிக் கொடுக்க முடியும்? இதைப் பற்றிக் குடிசை மாற்று வாரியம் யோசிக்க வேண்டும்.

மினிமம் வேஜஸ் கமிட்டி என்று கூலி நிர்ணயம் செய்வதற்காக வைத்திருக்கிறார்கள். நெசவாளர்களானாலும் விவசாயிகளானாலும் இந்தக் கமிட்டி ஏற்கனவே வாங்கி வருகின்ற கூலிக்கும் குறைவாகத்தான் நிர்ணயிக்கிறார்கள். அந்த நிலையில் இந்தக் கமிட்டி எதற்காக? இந்தக் கமிட்டியைக் கலைத்து விடலாமே. அந்த மக்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதற்காக கூலி நிர்ணயம் செய்ய இருக்கும் கமிட்டி நடைமுறையில் இருக்கின்ற கூலியைவிடக் குறைத்து நிர்ணயம் செய்வது என்றால் இந்தக் கமிட்டி தேவையா இல்லை என்று கூறி இந்தக் கருத்துக்களோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முன்னாலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், மற்றவர்களும் இங்கு சொன்ன கருத்துக்களில் இருந்து இந்த அரசாங்கம் இருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு தொழிலாளர் நலப் பிரச்சினைகளை எப்படி



எல்லாம் சமாளித்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டு பேசியிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டேதான் இருக்கும், அதைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டேதான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் காலத்தில், மாண்புமிகு வெங்கட்டராமன் அவர்கள் காலத்தில் எந்த நிர்வாகம் இருந்ததோ அதே நிர்வாகத்தை வைத்துக் கொண்டுதான் இன்னும் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். வேறு நிர்வாகத்தை இப்போது கையில் வைத்துக் கொள்ளவில்லை. அந்த இரண்டு பேரும் பிரச்சினைகளை அணுகிய முறைக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்கள் பிரச்சினையில் அதே அதிகாரத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு அணுகும் முறைக்கும் வேறுபாடு இருக்கிறதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். அது அவர்களுக்கே தெரியும். அதைத்தான் எடுத்துக் காட்டுகிறேன், அதைத்தான் உரைகல்லாக வைத்து உரசிப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் முயற்சிகளை, அரசாங்கத்தின் பல நல்ல நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். சம்பிரதாயத்திற்காக அல்ல, நடைமுறையில் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம்.

மத்திய அமைச்சர் ரகுநாத ரெட்டி தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிறார், முன்பு கம்பெனி லா அஃபேர்ஸ் அமைச்சராக இருந்தார். அவர் நல்ல திட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தார். இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு தொழில் அதிபர்கள் வரக்கூடிய பணத்தை, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை, சேராமல் தடுக்க கெஸ்ட் ஹவுஸ் கட்டுகிறார்கள்; கார் வாங்கி வைக்கிறார்கள். அந்தச் செலவுகளெல்லாம் தொழிலாளர்களுக்கு வருவதில்லை. தொழிலாளர் தலைவர்களுக்குப் பயன்படுவதில்லை. அதிகாரிகளைப் பிடிக்க, அரசியல்வாதிகளைப் பிடிக்க விருந்தினர் மாளிகையைப் பரவலாகக் கட்டி வைக்கிறார்கள். தொழிலாளர்கள் உழைப்பிலிருந்து வரக்கூடிய பணத்தைக் கொண்டு இப்படிக் கட்டி வைக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

திரு. ரகுநாத ரெட்டி இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து இதை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வர முயற்சித்தார். விளைவு அந்த இலாகாவிலிருந்து மாற்றப்பட்டார். அதற்குக் கிடைத்த பரிசு வேறு ஒரு இலாகாவுக்கு, தொழிலாளர் நல இலாகாவுக்கு மாற்றப்பட்டார். தொழிலாளர் நல இலாகாவை

செய்வது என்பதை விட்டு எப்படி பிரச்னைகளுக்கு ஸொல்யூஷன் காண்பது என்ற விதத்தில் நிர்வாக இயந்திரத்தை மாற்றியமைக்க வேண்டும். எப்படி பிரச்னைகளுக்கு ஸொல்யூஷன் காண்பது என்பதைச் சொல்லவேண்டும்.

இன்று சாதாரணமாக ஒரு கொடுக்கல் வாங்கல் தகராறு என்றாலே அது கோர்ட்டுக்கு நேரடியாகப் போகிறது. ஆனால், தொழிலாளர்கள் நேரடியாக கோர்ட்டுக்குப் போகமுடியாது. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி தொழிலாளர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்குச் செல்லமுடியாது. முதலில் லேபர் ஆபீஸரிடம் போய் அவரிடம் சமாசத்திற்குச் சென்று முதலாளி வராமல் பத்து இருபது வாய்தாக்கள் வாங்கி சமாச முயற்சி தோல்வியுற்று அது குறித்து அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பி, அதன் பின்னர் செகரட்டேரியேட்டுக்குச் சென்று பின்னர் கோர்ட்டுக்குச் செல்ல அனுமதி வாங்க படுகிற பாடு சொல்லி முடியாது. கோர்ட்டுக்குப் போனால் படுகிற பாடு வழக்கறிஞர்களுக்கும் நீதி மன்றங்களுக்கு சென்றவர்களுக்குத் தெரியும். கடைசியில் ரிட் வருகிறது.

எனவே, இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் திருத்தப்படவேண்டும். நேரடியாகத் தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகலாம் என்று செய்ய வேண்டும். அவர்கள் கோர்ட்டுக்கு நேரடியாகச் செல்வதை ஏன் தடுக்கிறீர்கள்? ஏன் நேரடியாகப் போகக் கூடிய உரிமையைக் கொடுக்கவில்லை? திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தெரியும், இதைத் திருத்த வேண்டியது பாராளுமன்றம்தான் என்று. தமிழ்நாடு சர்க்காரால் இந்தச் சட்டத்தைத் திருத்தமுடியாது. எனவே, அந்தச் சட்டத்தை தகுந்தவகையில் திருத்துவதற்கு அந்தத் தரப்பில் உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் முன் வந்தால் அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரிக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டை ஸ்டேட்டுக்குள்ள எல்லைக்குள் இங்கேயே அமெண்ட் செய்யச் சொல்லுங்கள்.

**திரு. க. சுப்பு:** அது சென்ட்ரல் ஆக்ட். மாற்ற, அடிப்படையை மாற்ற நமக்கு அதிகாரம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பழைய பாம்பே, மத்திய பிரதேசத்தில் இன்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் ஆக்ட் என்று அந்தந்த மாநில அரசுகளே சட்டமியற்றி யிருக்கிறார்கள். ஏற்கனவே மாநில லேபர் அட்வைசரி போர்டின் பரிசீலனையில் இப்படி ஒரு பில் இருக்கிறது. இந்தச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.



**திரு. பெ. சீனிவாசன்:** இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் சென்ட்ரல் ஆக்ட். இதைப் பாராளுமன்றம் திருத்துவதுதான் சரி. இவ்வளவு ஆண்டுகள் திருத்தாமல் இருப்பது பரிதாபகரமானது. திரு. சுப்பு அவர்களின் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. க. சுப்பு:** இந்தியா முழுவதும் வரட்டுமே. கடைசியாக, இங்கு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது அவர்களது ஜாதிக்காரர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கும் ஒரு கெட்ட பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சன்ஸ் ஆப் தி சாயில் என்ற தியரி இல்லை, காஸ்டிசம், அந்தந்த ஜாதிக்காரர் களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் பைனான்ஸை வாங்கிக்கொண்டு, பப்ளிக் பைனான்ஸை வாங்கிக்கொண்டு அவர்களது ஜாதிக் காரர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும் இந்தக்காலத்தில் ரிட்டயர் மென்ட் வயதைக் குறைத்து—வேண்டுமானால் அதிகப்படியான க்ராஜுவிட்டி கொடுங்கள், அதிகமாகப் பென்ஷன் கொடுங்கள்—இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும். தனியார் துறை தொழிற்சாலைகளானாலும் சரி அல்லது பொதுத்துறையில் உள்ள தொழிற்சாலைகளானாலும் சரி ரிட்டயர்மென்ட் வயதைக் குறைத்து வயதானவர்களுக்கு ஓய்வு கொடுத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, நானும் நான்கு மணி நேரமாக பொறுமையாக பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். ஆகவே, அங்கத் தினர்கள் அமைதியின்மை இழந்து இருப்பது தெரிந்து இருந்தாலும், எனது கருத்துக்களைச் சொல்வதற்கு சற்று வாய்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரியாக 8-20-க்கு முடித்து விடுங்கள். அதற்கு மேல் டைம் அலாட் செய்ய முடியாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்து இருக்கும் மானியங்கள் மீது எனது கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் சுப்பு அவர்கள் ஏதோ தொழிலாளர் நல அமைச்சர் சிறப்பாக இந்தப் பணியைச் செய்து இருக்கிறார்கள் என்று உரை யாற்றினார்கள். அந்தக் கருத்தில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை, என் பங்கையும் நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர் நல அமைச்சர் திறம்பட செயலாற்றினாலும் கூட இந்த அரசு எந்த முறையில்

அங்கு கள்ளக்கணக்கு வைக்கமுடியாது. ஏகநாத செட்டியை மாற்றி தூர எறிய முடியாது. அங்கு ஏன் ஸ்ட்ரைக் ஏற்படுகிறது? அங்கு அவர்கள்தான் தொழிலாளிகள், அவர்கள்தான் முதலாளிகள். தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய லாபத்தை அவர்களே அனுபவித்து வருகிறார்கள். பின் ஏன் ஸ்ட்ரைக் வருகிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அங்கும் தகராறுகள் வருகின்றன. குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்குள் தீர்த்துவிட வேண்டும். வருடக் கணக்கில் இழுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அங்கும்தான் தொழிலாளர்கள் தகராறு வருகிறது. எல்லோரும் மனிதர்கள்தானே.

**திரு. க. சுப்பு :** நான் சொல்வது மனிதர்களின் கோளாறு அல்ல, அமைப்பின் கோளாறுதான் காரணம். அந்த இடங்களிலுள்ள அமைப்பு முறைக்கும் இங்குள்ள அமைப்பு முறைக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கிறது. அங்கு எதற்கு ஒரு லேபர் கமிஷனர்? அவர்கள் ஏன் கெஸ்ட் ஹௌஸில் தங்கி ஏர் கண்டிஷன்ட் காரில் பவனி வரவேண்டும்? இங்கு தனிப்பட்ட முதலாளிகளாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்து சாதகமாக்கிக் கொள்ளலாம். இங்கு தொழில்களுக்கு மூலதனம் போடுகிறோம், அவர்கள் அதற்கான வட்டியை எதிர்பார்க்கிறார்கள். முதலும் பத்திரமாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். அமைச்சர் அவர்களை சமாளித்தார்கள் என்பதற்காகப் பாராட்டுகிறேனே தவிர எப்படித் தீர்த்து வைத்தார் என்பதல்ல. தீர்க்கவே முடியாது.

இப்போது நூறு ரூபாய் போனஸ் கொடுக்கிறோம் என்றால் நாளையதினமே இட்டிலியின் விலையும் எண்ணெயின் விலையும் ஏறி அந்தத் தொகை போதாது என்ற நிலை ஏற்படும்.

நான் நமது அமைச்சர் அவர்களைப் பாராட்டக் காரணம் பிரச்னைகளை சமாளிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதால்தான்.

தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடக்கூடாது, அவர்களை பழி வாங்கக் கூடாது என்பவை ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைகள்தான்.

ராஜபாளையத்தில் ஷண்முகர் மில்லில் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

விருதுநகரில் 33 பேர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பழி வாங்கப்பட்டவர்களின் கதி என்ன?





ஷண்முகா மில்லில் இருபது ஆண்டுகள் சர்வீஸ் ஆனவரை நீக்கிவிட்டு டெம்பரரி லேபரை எடுத்துக்கொள்கிறார்கள்.

எனவே, இப்படிப்பட்ட முதலாளிகள் திரும்ப லைசென்ஸ் கேட்கும்போது ஏற்கனவே பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக் கொள்வீர்களா என்று கேட்டு அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு கண்டிஷன் போடவேண்டும். பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அதற்கு அரசு முன்வரவேண்டும். மற்றத் துறைகளைப் பொறுத்து சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் சிம்சனில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு பிரச்னை தீருகிற வரையில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளச் செய்தார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். அது வேறு விஷயம். சிலவிடங்களில் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

அரசியல் சட்டப்படி தொழிலாளர்கள் சங்கங்கள் வைத்துக்கொள்வது அவர்களது அடிப்படை உரிமை.

ஜயவிலாஸ் மில்லை எடுத்துக் கொண்டால் அதுமாதிரி சங்கமே இல்லை அங்கு. அவர்கள்தான் அயோக்கியர்கள் மற்றவர்கள் எல்லாம் யோக்கியமானவர்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த முறையில் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைத்துக்கொள்ள முடியாத நிலை கூட நம் நாட்டில் இருக்கிறது.

சிவகாசியில் தொழிற்சங்கம் வைக்கமுடியுமா? அங்கு பட்டாசுத் தொழிற்சாலைகள் இருக்கிறன, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு தொழிற்சங்கங்கள் வைத்துக்கொள்ள முடியுமா? தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்வளிப்பதற்கும் அவர்களுக்கு தக்க ஊதியம் கிடைக்கச் செய்யவும் அதிகாரிகள் உதவி செய்யவேண்டும். இருக்கிற நிர்வாக இயந்திரத்தை வைத்துத்தான் வேலை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இது என்ன தி.மு.க. வந்து செய்த இயந்திரமா அல்லது முன்னால் காங்கிரஸ் உற்பத்தி செய்து வைத்த இயந்திரமா?

எப்படி டிஸ்போஸல் காட்டுவது என்பதுதான் அதிகாரிகளின் வேலையாக இருக்கிறது. பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது என்பதல்ல. எப்படி டிஸ்போஸ் செய்வது என்பதில்தான் கவனம் செலுத்துகிறார்கள். எப்படி டிஸ்போஸ்

செயலாற்றியிருக்கிறது என்றால், இந்த அரசு செயலால் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு நன்மை கிடைத்தது, எந்த அளவுக்குத் தீமை விளைந்தது அதைப் பார்க்கிறபோது, நிச்சயமாகத் தொழிலாளர்களின் நலன் கருதி பதைப் பார்க்கிறபோது, நிச்சயமாக தொழிலாளர்களின் நலன் கருதி செயலாற்றவில்லை என்ற குறைபாட்டை நான் முதற்கண் கூறிக்கொள்கிறேன்.

ஏனெனில் இந்த மாநிலத்தில் பல்வேறு தனியார் துறை நிறுவனங்கள் இருக்கின்றன. அதுபோல் பொதுத்துறை நிறுவனங்களும் இருக்கின்றன. பொதுத்துறையில் செயலாற்றும் தொழிலாளர்களுக்கு எந்த முறையில் நீதி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் மாநிலத்தில் இருக்கும் தனியார் துறைத் தொழிலாளர்களுக்கும் நீதி வழங்கப்படுகிறது. இந்த குறைந்த பட்ச உண்மையைக்கூட இந்த அரசு உணரவில்லை என்று கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த அரசால் நடத்தப்பட்டு வருகிற பல்வேறு துறைகள்—பொதுத்துறையில் ஏற்று நடத்துகிற டிரான்ஸ்போர்ட் துறையை எடுத்துக்கொண்டால், எந்த அளவுக்கு அங்கே இருக்கும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தெரியும்.

சென்ற ஏப்ரல் மாதம் முதல் தேதி மதுரை பாண்டியன் கார்ப்பரேஷனில் நடைபெற்ற வேலைநிறுத்தம் அதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஏற்கனவே டி.வி.எஸ். கம்பெனியில் அல்லது அரசு டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் வேலை செய்து கொண்டு இருந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு சம்பள விகிதங்கள் அமைத்து, அதைப் பெற்று பணியாற்றிக்கொண்டு வந்தார்கள். அவர்களெல்லாம் கார்ப்பரேஷனின் கீழ் கொண்டுவந்தபோது அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த ஊதியம், பல்வேறு சலுகைகளைக் கொடுக்காமல் மறுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். குறைந்தது அவர்கள் ஏற்கனவே பெற்று வந்த ஊதியம், சலுகைகள் மறுக்கப்படக்கூடாது என்ற கோரிக்கையை வைத்துத்தான் ஏப்ரல் மாதத்தில் 1-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் மேற்கொண்டார்கள்.

அதுபோல், பல்வேறு கார்ப்பரேஷன்களை எடுத்துக்கொண்டால், ஒரு கார்ப்பரேஷனில் வேலை செய்யும் தொழிலாளிக்கு மற்றொரு கார்ப்பரேஷனில் வேலை செய்யும் தொழிலாளிக்குக் கிடைக்கிற சம்பளம் ஆகியவற்றில் பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த அரசு நடத்துகிற போக்குவரத்து இலாகாவில் இருக்கின்ற கார்ப்பரேஷன்களில் வேலை செய்யும் தொழிலாளிக்குக் கூட ஒழுங்கான முறையில் ஊதியம் கொடுக்க முன் வரவில்லை என்றால், தனியார்



நடத்துகிற நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளிக்கு எப்படி நியாயமான ஊதியம் வழங்குவார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தேர்தல் நேரங்களில் ஓட்டுகள் கேட்கச் செல்கிறநேரத்தில், இந்த நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் என்று சொல்கிறோம், இந்த அரசு தொழிலாளர் அரசு என்று சொல்கிறோம், அப்படிச்சொல்லி வாக்குகளைப் பெறுகிறோம். ஆனால் இன்றையதினம் எந்த அளவுக்கு நாம் தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்றால், தொழிலாளர் பிரச்னையில் எந்த அளவுக்கு சுமுகமான முறையில் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றால், எந்த அளவுக்கு தொழிலாளர்கள் நன்மை பெற்று இருக்கிறார்கள் என்றால், நிச்சயமாக அவர்கள் எந்தவிதமான நலனையும் பெறவில்லை என்றுதான் கூறிக்கொள்வேன். அது மட்டுமல்ல. நியாயமான சலுகைகள் கூட அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

அம்மையார் அவர்கள் கூறியதுபோல், சென்ற ஆண்டு வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட "மேன்-டேஸ் லாஸ்"—20 லட்சம் என்று சொன்னால், இந்த ஆண்டு அதைவிட 24 லட்சம் கூடுதலாக இருக்கிறது. இது நிச்சயமாக வரவேற்கக் கூடியது அல்ல. 44 லட்சம் மேன்-டேஸ் லாஸ் என்று சொன்னால், அதனால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடியவர்கள் நிச்சயமாக முதலாளிகள் இல்லை, தொழிலாளர்கள் தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த அரசுக்குத் தொழிலாளர்களின் மேல் அக்கறை இருக்குமானால், இந்த அளவுக்கு மேன்-டேஸ் லாஸ் இல்லாமல் பார்த்திருக்கவேண்டும்.

அடுத்ததாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற அறிக்கையைப் பார்க்கிறபோது, தொழில் தகராறுகள் 1974-ம் ஆண்டில் 7,550 என்றும் அதில் 1938 தகராறுகள் தான் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அதில் 417 அட்ஜுடிகேஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள், 43 தகராறுகள் ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள், செட்டில்மென்ட் காரணமாகத் தீர்க்கப்பட்டவை 1,478, ஆக 1,938 டிஸ்பியூட்டுகள் செட்டில்மென்டாகியிருக்கின்றன. மீதி 5,612 டிஸ்பியூட்டுகள் என்ன ஆயிற்று? அது இந்த அறிக்கையில் இடம் பெறவில்லை. நிச்சயமாக இந்த அறிக்கையில் அது காணப்படவில்லை என்றால், தொழிலாளர்களுக்குப் பாதகமாகத்தான் அந்த டிஸ்பியூட்டுகள் தீர்க்கப்பட்டு இருக்கும் என்று கூறினால், இந்த அரசு தொழிலாளர் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்கத் தவறி விட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற சில வேலை நிறுத்தங்களைப் பற்றி நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். சங்ககிரி இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்தில்

அடுத்த வேஜ் ரிவிஷன் செய்யப்படவில்லை என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லாவில் 60 கேஷ்யூநட் ஃபாக்டரிகள் இருக்கின்றன. அங்கே தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜ் கொடுக்கப்பட வில்லை. அவர்களுக்கு மினிமம் வேஜ் சட்டம் இல்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு மினிமம் வேஜ் கொடுக்க ஒரு சட்டம் இயற்றப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஃபாக்டரிகளை கேரளாவில் இருக்கிற முதலாளிகள் நடத்துகிறார்கள். கேரளாவில் அவர்கள் ஃபாக்டரிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கேரளாவில் கொடுக்கிற ஊதியத்தை விட பாதி இவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. அந்தத் தொழிலாளர்களுடைய கைகள், அந்தப் பருப்பை எடுக்கிற போது எண்ணை கையில் பட்டு புண்ணாகி விடுகிறது. அவர்களுக்குப் பல வியாதிகள் வருகின்றன. ஆகவே இதற்கெல்லாம் தடுப்பு ஏற்பாடுகளை அந்த நிர்வாகம் செய்யத் தவறியிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் சமீபம் இட்டகவேலி என்ற இடத்தில் ஒரு முந்திரி ஆலை இருக்கிறது. அதன் நிர்வாகம் அந்த ஆலையை தற்போது கதவடைப்பு செய்திருக்கிறது. அதனால் அங்குள்ள 400 தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே அந்த ஆலையிலுள்ள தொழி லாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த ஆலையைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பவர் கட் ஏற்படுகிற காலத்தில், லே ஆஃப் காம்பன்சேஷன் 50 சதவீதம் கொடுக்க வழி வகை இருக்கிறது. அதை மாற்றி முழு ஊதியம் காம்பன்சேஷனைக் கொடுக் கப்படவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.டி. ஆக்ட் 25 (c) பிரிவுபடி லே ஆப் நாட்களுக்கு இடையில் வருகிற இண்டர்வினிங் விடுமுறை நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு வகை இல்லை. அந்த நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு இந்தச் சட்டத்தைத் திருத்து வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக இப்போது இந்த ஆண்டு அகில உலகப் பெண்கள் ஆண்டாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே இப்பொழுது இருக்கிறது ஒரு பெண்தான்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பெண் தொழிலாளர் ஊதியம் சம்பந்தமாக ஆலோசிக்கப்படுவதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அந்தக் கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரே வேலை செய்கிற ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது, ஒரே ஊதியம் கொடுக்கப்படவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். . அது மட்டுமல்ல, இந்த ஏற்பாடு பல்வேறு மாநிலங்களில் கைக்கொள்ளப்பட்டிருக் கிறது. நமது மாநிலத்தில் இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜேம்ஸ், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்கு மேல் பேசுவதை அமைச்சரவர்களிடம் எழுதிக் கொடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, எங்கள் பகுதிக்கு இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண்டேஷன்ஸ் வேண்டுமென்று கோரி இப்போது இன்ஸ்பெக்டர் ஆப் பிளாண்டேஷன்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவருடைய அலுவலகம் செயல்படுகிறதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண் டேஷன்ஸ் பிளாண்டேஷனைப் பார்ப்பதோ அல்லது கண்காணிப்பதோ இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. 1970 ஆம் ஆண்டில் உள்ள ஃபைல்களே இன்னும் டிஸ்போசல் ஆகாத அவல நிலை இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

கடைசியாக, மினிமம் வேஜ் ஆக்டில் பல்வேறு தொழிலாளர்கள் இன்னமும் சேர்க்கப்படவில்லை. குறிப்பாக ஃபார்ம் லேபர்களுக்கு இது வரையில் மினிமம் வேஜ் நிர்ணயிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சீக்கிரமாக முடிக்கிறேன். அறிக்கையில் குறிப்பிட் டிருப்பது போல லோடு மென், ஹெட் லோடு மென், அதாவது மூட்டை சுமக்கிற தொழிலாளர்களுக்கு, மற்றும் பல்வேறு தொழிலாளர்களுக்கு இன்னும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. இதற்குத் தேவையான சட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தம் ஏற்பட்டது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். சாதாரணமாக 20 சதவிகிதம் போனஸ் வாங்கிய தொழிலாளர்கள், இந்த ஆண்டு அவர்களுக்கு அந்த 20 சதவிகிதம் தர மறுத்ததால் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அமைச்சர் முன்னிலையில் அதற்கு ஒத்துத் தீர்ப்பு ஏற்பட்டு கடைசியில் 1½ மாதம் சம்பளம் அட்வான்ஸாகக் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு அந்த நிர்வாகம் தொழிலாளர்களைப் பழிவாங்கும் முறையில், 'லே ஆப்' வந்ததன் காரணமாக தொழிலாளர்களுக்கு சம்பளம் குறைந்தது—அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் சம்பளத்தைப் பிடித்துக்கொண்டு, தொழிலாளர்களுக்கு எம்டி கவரைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அது வரவேற்கத்தக்கது அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்படி 'லே ஆப்' என்று நிர்வாகம் சொல்கிறபோது, கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் சம்பளத்தைப் பிடிக்கக்கூடாது என்று இந்த அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா மீட்டர்ஸ் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் 750 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சென்ற 3 மாதகாலமாக அங்கே 'லே ஆப்' காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை. அந்த நிர்வாகமானது மத்திய அரசாங்கத்தின் பணத்தையும், மாநில அரசாங்கத்தின் பணத்தையும் பெற்றுக்கொண்டு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த நிர்வாகத்தை உடனடியாக அரசு எடுத்துக்கொள்வதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்கத் தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அதை உடனடியாக அரசு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசோசம் லெதர் தொழிலாளர்கள் கடந்த ஒரு வருடகாலமாகப் பல்வேறு பிரச்னைகளில் ஈடுபட்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் பெறவேண்டுமென்றால், ஊர்வலம் நடத்தி, தொழிலாளர் நல அமைச்சரைப் பார்த்து, முதலமைச்சரைப் பார்த்து, அந்த வகையில் தான் சம்பளம் பெற முடியும். இதைத் தொடர்ந்து அனுமதிக்கக்கூடாது. அந்த நிர்வாகமானது தொழிலாளர்களிடமிருந்து வசூல் செய்யும் பிராவிடென்ட் பண்ட், கட்டாய சேமிப்பு பணத்தையும் கட்டத் தவறி இருக்கிறது. ஆகவே, முறை தவறி நடக்கும் அந்த நிர்வாகத்தை அரசு அதிகமான அளவில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிர்வாகம் கோர்ட் ஆணை பிறப்பித்து இருந்தும் இதுவரையில் கிராட்டியுட்டி கொடுக்கத் தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ரப்பர் பிளான்டேஷனைப் பற்றி கூறவிரும்புகிறேன். அரசாங்கம் நடத்தும் பிளான்டேஷனில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம், தனியார் பிளான்டேஷனில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைவிடக் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் நிர்வாகத்தோடு சென்ற ஆண்டு செய்து கொண்ட ஒத்துத் தீர்ப்பு பற்றி குறிப்பிட்டு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் தகராறு தீர்த்து வைக்கப்பட்டதாக அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் அந்த அக்ரிமென்ட்படி இதுவரையில் அமல் நடத்தப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அக்ரிமென்டில் தொழிலாளர்களுக்கு போனஸ் அல்லது எக்ஸ்கிரேஷியா பேமென்ட் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஓராண்டு ஆகியும் நிர்வாகம் அதைத் தரத் தவறி இருக்கிறது. அது அமல் நடத்தப்படவில்லை. இப்படி அரசாங்கப் பொதுத்துறையில் இருக்கும் நிர்வாகமே இந்தத் துறையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அவர்கள் அமலாக்கவில்லை என்றால், எப்படி தனியார்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதிப்பார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் நலன் காக்கும் அரசாக இருந்தால் நிச்சயமாக இந்தக் காரியங்களை உடனடியாக செய்வதற்கு முன் வரவேண்டும். அதற்குத் தொழிலாளர் நல அமைச்சர் தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் பல்வேறு சிறிய ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அந்த ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கிற முறை அமுல்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் மினிமம் வேஜ் ஆக்டில் அந்தத் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொண்டு குறைந்த பட்சம் அவர்களுக்கு எந்த அளவிற்கு ஊதியம் கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிற கூட்டுறவு ஸ்பின்னிங் மில்லில் இது வரையிலும் ஒரு ஆண்டு ஆகியும் கொடுக்க வேண்டிய ஊதிய உடன்பாடு ஏற்படவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாததன் காரணமாக அனைத்துக் கூட்டுறவு மில்களிலும் சத்தியாக்கிரஹம் நடந்து கொண்டிருக்கிறது. அக்ரிமெண்டு செய்து முடித்து ஒரு ஆண்டு ஆகியும்

[திரு. ஜெ. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 4

கடைசியாக, டாக்சி டிரைவர்களைப் பற்றி ஓரிரு வார்த்தை கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இப்போதெல்லாம் பெட்ரோல் விலை அதிகரித்திருக்கிறது. ஆகவே அதிகமாக டாக்ஸி டிரைவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மத்திய அரசாங்கத்தில் இருக்கிற தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குத் தனியாக மத்திய லேபர் டிபார்ட்மெண்ட் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த ஏற்பாடு இருக்கிற காரணத்தினால் பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே மத்திய அரசு தொழிற்கூடங்களானாலும் அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அந்த அதிகாரம் மாநில அரசு லேபர் டிபார்ட்மெண்டுக்கு இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

1948-ஆம் ஆண்டு முதல் இது வரையில் வந்திருக்கிற சட்டங்களெல்லாம் குறைந்த பட்சம் எல்லையை ஊதியம் நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேறு சலுகைகள் கொடுப்பதற்கு வகை செய்கிற சட்டங்கள் அமுலில் இருந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் 1974-ஆம் ஆண்டு வந்திருக்கிற ஊதிய முடக்குச் சட்டத்தைப் பார்க்கிற போது தொழிலாளர்களுக்கு இந்த அளவிற்குமேல் சம்பளம் கொடுக்கக்கூடாது என்ற நிபந்தனை இருப்பதைத் தொழிலாளர் உலகம் வன்மையாகக் கண்டிக்கிறது. தொழிலாளர்களுக்கு இதைவிட அதிகமான துரோகம் செய்வதற்கு இன்னொரு சட்டம் இருக்க முடியாது. விலைவாசி ஏற்றத்தினால் அவர்கள் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு கூட இந்த ஊதிய முடக்கச் சட்டத்தினால் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஊதிய முடக்கச் சட்டத்தை பொறுத்த வரை, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற தமிழகத்திற்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்கவேண்டுமென்று கோரி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிலாளர் நல இலாகா, வீட்டு வசதி வாரியம் ஆகிய இரண்டினுடைய பிரச்னைகளையும் ஒரு சேர எடுத்துக் கொண்டு இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பேசினார்கள் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடாமலே இருந்தது குறித்து நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்



1975 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

கிறேன். ஏராளமான வேலைகளை வீட்டு வசதி வாரியம் செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கிற தன்மையில் இந்த விவாதத்தில் பேசினார்கள். நல்ல கருத்துக்களை வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி ஒரு சிலர் எடுத்துச் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் எல்லா மக்களுக்கும், பல்வேறு வகைப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறது என்பதை இந்த மாமன்றம் நன்றாக அறியும் என்பதைத் தங்கள் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வீட்டு வசதி வாரியம் நெசவாளர்களுக்கு அதிகமான வீடுகளைக் கட்ட வேண்டுமென்று இங்கே உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நெசவாளர்களுக்கு உறையூரில், திருச்சியில், தஞ்சாவூரில் கட்டப்பட்டு வருகின்றன. சின்னாளப்பட்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிறது. இப்போது சேலத்திலே 3,500 வீடுகள் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப் பட்டு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு என்று 10 ஆயிரம் ரூபாயில் கட்டப்படுகிற வீடுகள் பேரூராட்சியில் கட்டப்படவேண்டுமென்று பழனிச்சாமி அவர்கள் தெரிவித்தார்கள். பேரூராட்சிகளில் இருக்கிற சிரமங்களை நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். குறைந்தது 100 வீடுகளாவது ஒரு சேர வந்தால் தான் பேரூராட்சிகளிலே வீட்டு வசதி வாரியம் ஏற்று கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும். இப்போது தாலுகா தலைநகரங்களிலுள்ள வீடு பற்றாக்குறையைப் போக்கி விட்டு அதற்குப் பிறகு பேரூராட்சிகளுக்கு இந்த திட்டங்களை விஸ்தரிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

கிராமப் புறங்களில் வீடுகள் கட்டுவதற்குக் கூட்டுறவு சங்கங்கள் தேவை என்று திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த கூட்டுறவுச் சங்கங்களைக் கிராமங்களுக்கெல்லாம் விஸ்தரிக்க இப்போது ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம் என்பதையும் இதற்கான ஆக்க பூர்வமான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி ந. ந. அனந்தநாயகி: மகாராஷ்டிராவில் அபார்ட்மென்ட் ஆக்ட் என்று இருக்கிறது. நிறைய வீடுகள் இருக்கின்றன. எல்.ஐ.சி.-யில் லோன் கொடுப்பதில்லை. அந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்கனவே ஏற்பாடாகி விட்டது. விரைவில் இந்த மாமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்பர் டாங்க் ரோடில் அங்கே நிறைய நிலம் இருக்கிறது. பெல்ஜியம் அம்பாசிடர் நிலம் இருக்கிறது. அது அற்புதமான இடம். அதிலே 2 கோடி 30 லட்சம் செலவில் அங்கே ஒரு பெரிய 224 அறைகள் கொண்ட வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. 9 மாடிக் கட்டிடம். அதிலே 3 படுக்கை அறை கொண்ட கட்டிடங்கள் ஃப்ளாட் 128, இரண்டு படுக்கை அறைகள் கொண்ட ப்ளாட் 96 அங்கே கட்டுவதற்காக இருக்கிறது. இரண்டு படுக்கை அறைகள் கொண்டது ரூபாய் 78,470. மூன்று படுக்கைகள் கொண்டது ரூபாய் 94,164.

டாம்ஸ் ரோடு அண்ணாசாலைக்குப் பக்கத்தில் அங்கே தான் பில்டிங்ஸ் காஸ்மாபாலிடன்-க்கு எதிரில் ஒரு நிலம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தில் 96 லட்சம் ரூபாயில் 9 அடுக்கு மாளிகை கட்டுவதற்கு ஏற்பாடாகி யிருக்கிறது. அது பூராவும் கட்டப்பட்டு முடிந்த பிறகு வீட்டுவசதி வாரியம் சொந்தத்திற்கு வைத்துக் கொள்ளலாம், விற்பதற்கில்லை என்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். அதைப் போல ராஜா அண்ணாமலைபுரத்திற்குப் பக்கத்தில் இங்கே காவல்துறை வீடுகள் கட்டப்படுகிற இடத்தில் அங்கே 50 கிரவுண்டு இருக்கிறது. அந்த இடத்திலே 208 ஃப்ளாட்டுகள் கட்டுவதென்றும், 3 படுக்கை அறைகள் கொண்டது 32, 2 படுக்கை அறைகள் கொண்டது 136, ஆக 3 படுக்கை அறைகள் ரூபாய் 94,260, 2 படுக்கை அறைகள் ரூபாய் 78,550-க்கு கட்டி அவற்றை விற்பது என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

பைலட் தியேட்டர், அருகில் ராயப்பேட்டையில் 28 கிரவுண்டு இருக்கிறது. அதிலே ரூபாய் 104.04 லட்சத்தில் ஃப்ளாட்டுகள், 3 படுக்கை அறைகள் கொண்டது 18, 2 படுக்கை அறைகள் கொண்டது 106; 3 படுக்கை அறைகள் கொண்டது ரூபாய் 98,190, 2 படுக்கை அறைகள் கொண்டது ரூபாய் 81,860-க்கு கட்டி விலைக்கு விற்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த வீடுகள் வேண்டுமென்று சொல்லுபவர்கள், முதலில் கால் பங்கு தந்து அதற்குப் பிறகு வீடு கட்டும் நேரத்தில் . . .





திரு. கே. டி. கே. தங்கமணி: அதிசயக்கத்தக்க விவரங்களை கொடுத்தார்கள். சென்னையைப் பற்றி தான் இருக்கிறது. அதிலே மதுரை, கோயம்பத்தூர் திருச்சி இப்படி இருக்கக் கூடிய தலைநகரங்கள் பற்றி ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சேலத்தைப் பற்றிக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நம் துணைச் சபாநாயகருக்கு தஞ்சாவூரைப் பற்றிக் கவலை.

இது சென்னை நகரத்தில் நமக்கு கிடைத்திருக்கிற நிலப் பகுதிகளைப் பயன்படுத்தி, அந்த வீட்டு வசதி வாரியத்திற்கு நல்ல வேலை தரப்படுகிறது. இன்றைக்கு, சென்னையைச் சுற்றிப் பார்த்தால், ஒரு விட்டில் நியூயார்க் என்ற அளவுக்கு மாற்றுவது என்ற நோக்கத்துடன் அந்த முறையில் காரியங்கள் செய்து கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு வேலைகள் வீட்டு வசதி வாரியம் மூலம் செய்து கொண்டு வருகிறோம் என்பதையும் நான் உறுப்பினர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். குடிசைமாற்று வாரியத்தில் நல்ல பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வேலைகளையெல்லாம் நீங்கள் பார்த்து வருகிறீர்கள். இந்த வேலைகள் தமிழகத்திலே எல்லா மாவட்டத் தலைநகரங்களில் கட்டிக் கொண்டு வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். சென்னை குடிசைவாழ் மக்கள் மத்தியில் நல்ல சமூக சேவை நடைபெற்று வருகிறது. அவர்கள் மத்தியில் ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்குவதற்கு புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை, தன்னியக்க சுகாதாரப் பணி, சேவா சங்கம், சென்னை கிறிஸ்துவ சங்கம், இந்தியாவிலுள்ள சுவாலோஸ், பாலிகன்ஸ், சமுதாய நல நிலையங்கள், ஜெர்மன் தொழுநோய் சிகிச்சை சங்கம், சென்னை சமூகப்பணி பள்ளி, சிவில் இண்டர்நேஷனல் சர்வீஸ் இந்தியா, கிறித்துவ மகளிர் கல்லூரி, சென்னை, மகளிர் நலத்துறை, குழந்தைகள் காப்பகம், லெனின் மருத்துவ மனை, இந்திய மருத்துவர்கள் சங்கம், கிறித்துவ இளைஞர் சங்கம், அரிமா சங்கம் (கிழக்கு), ஊதரன் உலக நிறுவனம், ஜெனிவா, சிரணி போன்ற அத்தனை பேரும் இந்தக் குடிசைவாழ் மக்களுக்கு பலவேறு சமுதாய சேவைகளை இங்கே செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் காரியங்களையெல்லாம் குடிசைமாற்று வாரியம் மிகச் சிறப்பான முறையில் செய்து கொண்டு வருகிறது. ஆகவே வீட்டு வசதி வாரியம் மூலமாக, குடிசைமாற்று வாரியம் மூலமாக நல்ல பல பணிகளை இந்த ஆட்சி செய்து

தான் நள்ளிரவு இரண்டு மணிக்கு ஒரு முதலமைச்சரை எழுப்பி, இந்தக் காரியத்தைக் கேட்டு, பரிகாரம் காண்பது என்பது இந்த அரசுக்குத் தொழிலாளர் மேல் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறதே தவிர வேறல்ல. இப்பேர்ப்பட்ட செயல் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிறதா பாதகமாக இருக்கிறதா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதலமைச்சரை எழுப்பி இருக்க வேண்டியதில்லையே. தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிற நீங்களே தீர்த்து வைத்திருக்கலாம். அந்த அளவுக்கு அதிகாரம் பெற்று, ஒவ்வொரு அமைச்சரும் பணியாற்றினால் நல்லது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இது நிதி விவகாரம். நிதிப் பொறுப்பை வகிக்கின்றவர் முதலமைச்சர் அவர்கள். நிதி அமைச்சரைக் கேட்டுத்தான் இதைச் செய்ய முடியும். 200 ரூபாய் வீதம் கொடுப்பது என்றால் அதற்கு நான் எங்கே போவது? அதனால் முதலமைச்சரவர்களைக் கலந்து பேசினேன். அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, இதேப் போன்ற ஒரு பிரச்சனையில், கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சனைப் பற்றிப் பேசுவதற்கு காமராஜர், சுப்பிரமணியம் போன்றவர்கள் வந்தார்கள். அப்போது காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார்கள். அவர்கள் உள்ளே ஒரு சீட்டை கொடுத்து அனுப்பினார்கள். அப்போது இருந்த முதலமைச்சர் அந்த சீட்டில் தொழிலாளர் நல அமைச்சரைச் சென்று காணவேண்டும் என்று எழுதி காமராஜருக்குப் பேட்டி கொடுக்காமல் அனுப்பி விட்டார்கள். அப்போது காமராஜர், 'நான் இந்த கோட்டைக்கு ஒரு நாள் வருவேன். அப்போது பேசிக்கொள்கிறேன்' என்று சொல்லிப் போய் விட்டார்கள்.

காமராஜர் கோட்டைக்கு வந்த பிறகு, அவர் முதலமைச்சரான பிறகு, தொழிலாளர்கள் முதலமைச்சரைக் காணவேண்டுமென்று ஒரு சீட்டை எழுதி அனுப்பினார்கள். அந்தச் சீட்டில் தொழிலாளர் நல அமைச்சரைப் பாருங்கள் என்று அவரும் எழுதி அனுப்பிவிட்டார்கள். இதுதான் முன்னால் நடந்திருக்கிற வரலாறு. இப்போது அந்த நிலை இல்லை. பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.



பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சனை வந்தபோது, என்னையும் அழைத்து வைத்து, முதலமைச்சரும் உட்கார்ந்து, தொழிற்சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டு வைத்து, நியாயமான உணர்வுகளோடு பேசித் தீர்த்து, போனஸ் பிரச்சனையை சுமுகமாகத் தீர்த்து வைத்த வரலாற்றை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அன்றைக்குத் தொழிலாளர் நல அமைச்சருக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கவில்லை என்றுதான் இது காட்டுகிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும்போது ஒரு முதலமைச்சர் தானே முன்வந்து, நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமாகத் தீர்த்து வைத்தது இதுவரை கிடையாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் காரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதன் பிறகு தொடர்ச்சியாக அது நடந்து வருகிறது. இதிலிருந்து நாங்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிறோமா பாதகமாக இருக்கிறோமா என்பதை வெளியே சொல்லாவிட்டாலும் நீங்கள் மனதிலே வைத்துக் கொண்டால் போதும்.

இ. எஸ். ஐ. மருத்துவமனை பற்றி சில சந்தேகங்களைச் சொன்னார்கள். பல நல்ல காரியங்களை இந்த இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் செய்து கொண்டிருக்கின்றன. 1974 ஏப்ரல் 1-ந் தேதி முதல் 31—12—1974 முடிய கொடுக்கப்பட்ட மருத்துவத் தொகைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நோய்க்கால உதவி 1,41;43,645 ரூபாய்,

நாள்பட்ட நோய்க்கால உதவி 6,45,343 ரூபாய்,

தற்காலிக ஏலாமை உதவி 11,46,607 ரூபாய்,

நிலையாக ஏலாமையுற்றோர்க்கு உதவி 9,15,586 ரூபாய்,

சார்ந்துள்ளவர்கள் நல உதவி 2,33,313 ரூபாய்,

பேறுகால உதவி 5,31,157 ரூபாய்,

இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை 65,896 ரூபாய்.

என்று பல்வேறு வகைகளில் உதவியிருக்கிறது. ஆக, எந்த அளவுக்கு தொழிலாளர்களோடு இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனைத் திட்டம் ஒட்டிப் போயிருக்கிறது; புரிந்து போயிருக்கிறது என்பதற்காக இத்தகவல்களைச் சொல்லியிருக்கிறேன்.

கூட்டுறவு வீடு கட்டுகிற சங்கம் கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் ஏராளமான தொகைகளை வீடுகள் கட்டுவதற்கு எல்லா ஊர்களிலேயும் தந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1972-73 ஆம் ஆண்டிலே ஏறக்குறைய 5,01,43,500 ரூபாய் செலவழித்துக் கொண்டிருந்த சங்கம் இப்போது 10,21,80,300 ரூபாய் வரையில் செலவழிக்கிற ஒரு ஆற்றலைப் பெற்றிருக்கிறது, செலவழித்துக் கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாலே 25 ஆயிரம் ரூபாய் வரையில்

(இரவு 8-30)

வீடுகளைக் கட்டுவதற்குப் பணம் தந்து கொண்டு வந்தோம். பல உறுப்பினர்கள் வீடு கட்டுகின்ற செலவுகள் அதிகமாகப் போய்விட்டது. ஆகவே அதற்கு தொகையை அதிகப்படுத்தி தர வேண்டுமென்ற வேண்டுகோள் விட்டதன் விளைவாக அதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டு வீடுகள் கட்டுவதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை தந்து கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறக்குறைய மொத்தம் புதிதாக 31—3—1975 வரையில் தமிழ்நாடு கூட்டுறவு வசதிச் சங்கம் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட சங்கங்கள் மட்டும் வீட்டு அடமானச் சங்கங்கள், பல்வேறு வீடு கட்டும் சங்கங்கள், கிராமீய கூட்டுறவு வசதி சங்கங்கள், ஆகிய அத்தனையும் சேர்ந்து 432 சங்கங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றும், அந்த 432 சங்கங்களும் ஏராளமான தொகைகளை ஏறக்குறைய அந்த 10 கோடி ரூபாயில் நாடு பூராவிலும் கடனுகை வழங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல கிராமங்களில் வீடு கட்ட வேண்டுமென்பதற்காக 55.75 லட்சம் ரூபாய் ஒதுக்கி வீடு கட்டுவதற்கு 3 சென்ட், அல்லது 5 சென்ட் நிலம் அல்லது பட்டா நிலமாக இருந்தாலும், அவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, எந்த நிலமாக இருந்தாலும், அவர்கள் உழைப்பின் மூலம் ஆயிரம் ரூபாய் வரையில் செய்யக் கூடியது போக, 4 ஆயிரம் ரூபாய் தவணை முறையில் வீடு கட்டித் தருவதற்கு, ஆயிரம், ஆயிரம் ரூபாய், ஆயிரத்து ஐந்நூறு, ஐந்நூறு என்ற அளவுக்குத் தான் தந்து கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக ஏராளமான வீடுகள் இன்றைக்குக் கிராமப் புறங்களில் கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஆக, வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் மூலம் நல்ல பல வேலைகள் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதை நான் மாமன்றத்திற்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வீட்டு வசதி வாரியம் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குத் தான் அதிகமாக வீடு கட்டுகிறதா என்ற கேள்வி ஒன்றை உறுப்பினர் ஒருவர் எழுப்பினார். உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் அதிகமான தொகையுள்ள வீடுகளை விட, குறைந்த வருவாய்யுள்ளோருக்கு ஏறக்குறைய 85 சதவிகிதம் இந்த வீட்டு வசதி வாரியம் உதவிகரமாக வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறது. ஆகவே, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு நிறைந்த வசதிகளை, மனிதனுடைய தேவையில் முக்கியமான தேவையான வீட்டு வசதியை செய்து கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இப்பொழுது சென்னை நகரத்தில் கூவம் நதி சீர்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி சீர்படுத்தப்பட்ட நேரத்தில் பல இடங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட நிலம் நல்ல விலையுள்ள நிலமாக அமைந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கிரின்ஸ் ரோடு, அந்த இடத்திலே 21.5, 21½ கிரவுண்டு அங்கே கிடைத்திருக்கிறது. அதன் மொத்த மதிப்பு போட்டால், இன்றைக்கு மார்க்கெட் நிலவரம் 99 லட்சமாகிறது. அதற்கு அங்கே ஒரு பெரிய வீட்டை, ஏறக்குறைய 1 கோடி ரூபாயில் ஒரு 9 அடுக்கு மாடி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய வரைபடம் எல்லாம் இந்தப் பக்கத்தில் லாபியில் வைத்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் போகும்போது அவைகளையெல்லாம் பார்க்க வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே 17 ஆயிரத்து 500 சதுர அடி ஆபீஸ் அக்காமடேஷன் போன்றவைகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. 96 மூன்று படுக்கை அறைகள் உள்ள ஃப்ளாட் (Flat) கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 64 இரண்டு படுக்கை அறைகள் உள்ள வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று படுக்கை அறைகள் உள்ள ப்ளாட் ரூபாய் 93,990 என்றும், 2 படுக்கை அறைகள் உள்ள வீடு ப்ளாட் ரூபாய் 78,320 என்றும் ஆகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** யாருக்குக் கட்டப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மக்களுக்கு. அதை மவுண்ட் ரோடில் கட்டுவதற்கு 93 ஆயிரம் மதிப்பாகிறது. நீங்கள் அங்கே வரக் கூடாது.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

அதுமட்டுமல்ல, இந்த ஆட்சி பொறுப்புக்கு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களும் மற்றவர்களும் வந்த பிறகு ஏற்பட்டிருக்கிற ஒரு சின்ன மாறுதலை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது சிறிய மாறுதல் என்று சிலரால் கருதப் பட்டாலும் தொழிலாளர்களுக்கு அது எவ்வளவு பெரிய மாறுதல் என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

50 ரூபாய் என்று மருத்துவ மனையில் உச்சவரம்பு இருந்தது. அதை மாற்றி இந்த உச்சவரம்பை உயர்த்த வேண்டுமென்று பலமுறை இந்திய அரசோடு வாதாடி, போராடி, தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் மருத்துவ வசதிக்குக் குறைந்த அளவு ரூபாய் 65 என்றும், அதிக மருத்துவ கவனிப்புக்கு 70 ரூபாய் என்றும், முழு மருத்துவ கவனிப்புக்கு 85 ரூபாய் என்றும் உயர்த்தியிருப்பது இந்த அரசுதான்.

தொழிலாளர் நல காப்புறுதிக் கழகம் அளிக்கும் தொகையைவிட இந்த அரசு அதிகப்படியான தொகையை இந்த இ.எஸ்.ஐ. மருத்துவச் செலவுக்கு செலவழித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1972-73 இல் இந்த அரசு ஒரு கோடிக்கு மேல் செலவிட்டிருக்கிறது. 1973-74 இல் 58 இலட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. புதிய மருந்தகங்கள் திருச்சி மாவட்டத்தில் கரூர், சென்னையில் அடையார், நந்தம்பாக்கம், வடஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், கோவையில் காரமடை ஆகிய இடங்களில் 1974-75 இல் திறக்கப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில் இருக்கும் இ.எஸ்.ஐ. மருந்தகங்களைச் சொந்த கட்டடத்திற்கு மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்து வருகிறது.

தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் தொழிலாளர் கல்வி நிலையங்கள் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இது ரொம்பப் பயனுள்ளதாக இருக்கிறது. சென்னையில் 7,049 தொழிலாளர்களும் மதுரையில் 5,243 தொழிலாளர்களும், கோவையில் 5,177 தொழிலாளர்களும் இந்தக் கல்வித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதற்கு என்று தொழிலாளர் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, சென்னையில் 137 பேரும் மதுரையில் 56 பேரும், கோவையில் 112 பேரும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தொழில் பாதுகாப்பு பற்றியும், இன்னும் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அளவுக்கு பல நல்ல வகுப்புகளை நடத்தி வருகிறது.



1975 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

நேற்றைய தினம் [illegible]ன் லேபர் வெல்பேர் போர்டு முதல் முறையாக கோட்டையில் கூடியது. அதில் தொழிலாளர் நலனுக்கு என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்பதுபற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. வேழவேந்தன் அவர்களும் அவர்களைப்போன்ற மற்றும் பலரும் அதில் ஆலோசனை உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைச் சொல்வார்கள். தொழிலாளர் நலத் துறை அந்த நிதியை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்கு நல்ல ஆலோசனைகளை இங்கே கூறியிருக்கிறார்கள்.

50 கிரவுண்டு நிலம்—நம்முடைய ராயபுரம் பகுதியில் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. அந்த நிலத்தை அரசினிடத்தில் இருந்து பெற்று—தொழிலாளர்களது நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமாக—மே தின அணிவகுப்புக்கான இடமாக—இன்னும் அங்கே இண்டோர் கேம்ஸ்—அவுட் டோர் கேம்ஸ் நடைபெறுவதற்கு வசதியாக தொழிலாளர்களுக்கு ஆக்கித் தரவேண்டுமென்ற ஆலோசனையை இந்தக் குழு சொல்லியிருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஒவ்வொரு ஊரிலும் தொழிலாளர்களது குழந்தைகள் படிப்பதற்கு—தொழிலாளர்களது குடியிருப்புப் பகுதியில்—தொழிற்சாலைப் பகுதியில் கிண்டர்கார்டன் ஸ்கூல்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்தக் குழுவில் எடுத்துச்சொல்லப்பட்டது. அதற்கான செலவுகளைச் செய்து விரைவில் இந்த அரசு அதுபற்றி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு வழக்காடுவதற்கு ஒரு ரிட் மனுவிற்கு ரூபாய் 150 விதம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் சங்கங்களுக்கு நிதி உதவவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தொழிலாளர்களுக்குச் சத்து உணவுத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், சீரான உணவு வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது 138 தொழிற்சாலை மலைத் தோட்டங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தின் கீழ் 37,378 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

விலைவாசி உயர்ந்து இருக்கிற நேரத்தில் எடைகளையும், அளவுகளையும் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்பதுபற்றியும் ஆங்காங்கு திடீர் திடீர் என்று டைரக்டர் ஆப் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் மூலம் பரிசோதனைகள் நடத்தப்

பட்டு வருகின்றன. எல்லா இடங்களிலும் பல பரிசோதனைகள் நடந்திருக்கின்றன. தவறான எடைகளைப் பயன்படுத்தியிருக்கிறவர்கள் மீது நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

1974 ஆம் ஆண்டு 7,640 வழக்குகள் தொடரப்பட்டு அவற்றில் 4,338 தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூபாய் 1,87,130 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதிலும் 2,203 திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டு, 2,412 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

1974 இல் 8,970 கிராமங்களில் 60,209 விற்பனையாளர்களிடம் சோதனை நடத்தி, தவறான எடைகள் அளவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கலப்பு உலோகத்தால் செய்யப்பட்ட எடைகள் 14,928 வெவ்வேறு கொள்ளளவு கொண்ட அளவுகள் சுமார் 19,416 தவறான நிறுத்தல் கருவிகள் சுமார் 3,333 அளவுகள் சரியாக உள்ளதா என்று பார்ப்பதற்கு கைப்பற்றப்பட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்புக்கிணங்க இவைகள் பறிமுதல் செய்வது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வேலைவாய்ப்புப் பணியின் கீழ் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரை உள்ள கால அளவில் 903 உடல் ஊனமுற்றோர் அதாவது குருடர்கள் 165, செவிடர்கள் 114, முடவர்கள் 624 பதிவு செய்து, அவர்களில் 150 உடல் ஊனமுற்றோர்—அதாவது 10 குருடர்கள், 18 செவிடர்கள், 122 முடவர்கள் ஆகியவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

1974 நவம்பர் திங்கள்படி மொத்தம் 2,132 உடல் ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

தொழிலாளர் நலத்துறை இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

தொழில் தகராறுகளைத் தீர்ப்பதிலும் அவ்வப்போது தொழிலாளர் நலத்துறை—தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகிற நல்லபல ஆலோசனைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு பல பிரச்சினைகளைத் தீர்த்து இருக்கின்றன. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. நாராயணசாமி அவர்களும், இன்னும் திரு. சுப்பு, காட்டூர்கோபால்—என் இராகவானந்தம் போன்றவர்கள் நல்லபல கருத்துக்களை அவ்வப்போது கூறி தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக பல சந்தர்ப்பங்களில் இருந்து வருகிறார்கள்.





இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது—வேலை நிறுத்தம், வேலை இழப்பு நாட்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசினார்கள்.

மொத்தத்தில் 1974 இல் 316 வேலை நிறுத்தங்கள் தமிழ் நாட்டில் நடந்தன. இதன் விளைவாக 44,07,909 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் போன்ற தொழில் மயமான மாநிலங்களைவிடக் குறைவாகத்தான் இருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் இது பற்றிக் குறிப்பிட்டதற்காக நான் சில புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன்.
மகாராஷ்டிரத்தில் 1974 ஆம் ஆண்டு 653 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அதன் விளைவாக 75,10,000 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது.

மேற்கு வங்கத்தில் 339 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக 1,07,25,859 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது.

கேரளத்தில் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முடிய—முழு விவரங்களும் கிடைக்கவில்லை—341 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே, இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் மிக அதிகமானவை என்று சொல்வதற்கில்லை. ஆனால் தமிழ் நாட்டில் தொழில் அமைதி ஓரளவு நிலவி வருகிறதென்று கூற விரும்புகிறேன். திருப்பூரில் நடைபெற்ற பனியன் தொழிற்சாலை வேலை நிறுத்தம் தான் அதிக நாட்கள் எடுத்துக் கொண்டுவிட்டது. அதுவும் முடிவில் மிகச் சுமுகமாக முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வீட்டுவசதி வாரியம்—சர்க்கார் ஒப்பந்திகளிடம் இருந்து 10 சதவிகிதம் சாலரியில் வீட்டுவாடகை என்று வாங்கிக்கொள்வதோடு, 15 சதவிகிதம் வீட்டுவாடகை அலவன்சையும் பெற்று வருகிறது. பத்து சதவிகிதம் வாடகை என்றால் அதோடு இருக்க வேண்டும், வீட்டு வாடகை அலவன்சையும் பிடித்துக்கொள்ளக்கூடாது என்றார்கள். இப்படிச் செய்கிற அதிகாரம் எங்களிடத்தில் இல்லை. நிதித்துறை எண்ணிப்பார்த்து—அரசுதான் அவர்களுக்கு எத்தனையோ சலுகைகள் அளிப்பதைப்போல இதுபற்றியும் சலுகை அளிக்க முடிவு செய்ய வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள் சம்பந்தமாக தவறுகள் நடைபெற்றுவிட்டதாக திரு. கே. டி. கே. தங்கமணி சுட்டிக்காட்டினார்கள். அதில் ஏதாவது தவறு இருக்குமானால்—அந்தக் குறைபாட்டை நீக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

கொண்டு வந்தார்கள். அந்தத் தொழிலாளிகள் மதுரையிலே என்னைச் சந்தித்தார்கள். அப்பொழுதே சொல்லவேண்டுமென்று நினைத்தேன், மறந்துவிட்டேன். அந்த மாவட்டத்திலிருக்கிற டெபுடி லேபர் கமிஷனருக்கு, அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணுங்கள் என்று உத்தரவு போட்டுவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் காரியத்தை அவர்கள் செய்யவிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல உறுப்பினர்கள் 'லே ஆஃப்-லே' முழுத் தொகை தரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திரு. குமாரசாமி கூடக் குறிப்பிட்டார்கள். இதற்காக, தூத்துக்குடியில் ஒரு மாநாடு கூட்டப்பெற்றது. 75 சதவிகிதம் அவர்கள் தருவார்கள், 12½ சதவிகிதம் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம்; 12½ சதவிகிதம் மத்திய அரசு தரட்டும். அதற்குப் பிறகு பரிகாரம் காணலாம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நான், 'லே ஆஃப்லே' முழு ஊதியம் தரவேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்துக் கொண்டவன் அல்ல. மத்திய அரசு தெரிவிக்கும் முடிவைப் பொறுத்துத்தான் இந்தியா முழுமைக்கும் ஒரு சீரான நிலைமை ஏற்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. SUBRAMANIAM: Sir this is a burning problem So for as non-permanent workers are concerned.........

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, டிஃபன்தான் அரேஞ்ச் பண்ணினார்கள். பாய், தலையணைகூட அரேஞ்ச் பண்ணவேண்டிய நிலை வருகிறது. மினிஸ்டரை மட்டும் பேசச் சொன்னீர்களானால் சீக்கிரம் முடிக்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நான்-பர்மனென்ட் ஒர்க்கர்ஸுக்குச் சட்டரீதியாகக் கொடுக்கவேண்டிய லேஆப் நஷ்ட ஈட்டைக்கூட கொடுப்பதில்லை இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு லேபர் கமிஷன் தீர்ப்புப்படி கோவைப் பஞ்சாலைகளிலே கொடுத்தார்கள். ஆனால் இன்று கொடுக்க மறுக்கிறார்கள். பல முறை லேபர் கமிஷன் சொல்லியதைச் சட்டப்படி இன்று கொடுக்க மறுக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், இப்பொழுதே கோரம் இல்லை. இன்னும் எவ்வளவு நேரம் அவை நடக்கும் என்று தெரிந்துவிட்டால், அதற்குத் தகுந்தபடி சாப்பாடெல்லாம் சாப்பிட்டுவிட்டு வந்துவிடலாம்.



1975 ஏப்ரல் 4]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதர் ஆஃப் பார்லிமெண்டில்—லோக்சபாவில் இரவு 2 மணி, 3 மணி வரையிலும் கூடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அதற்குள் பதில் சொல்லிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், உறுப்பினர்கள் சோர்வாக இருப்பார்கள் என்றுதான் சிற்றுண்டி கொடுத்திருக்கிறோம். அதைச் சாப்பிட்டபிறகு சீக்கிரம் முடிக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் சொல்வது சரியல்ல. நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு முடியுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** சார், மாலையே திரு. துரைமுருகன் கேட்டார், டிபன் கொடுக்கப்படுமா, டிபன் கொடுக்கப்படுமா என்று. வெளியே இரண்டு மூன்று பேர் என்னைக் கேட்டார்கள். இது வெளியே போனால், ஒரு மாதிரி என்னுவார்கள் நம்மைப்பற்றி. We have enjoyed the joke Let us expunge it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது குறிப்பிலிருந்தால் என்ன? வெறிக்லெர்ர் செக்காட்டேரியட்டிலேதானே சப்ளை பண்ணுகிறோம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இண்டியா மீட்டர்ஸைப்பற்றி எல்லா தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இண்டியா மீட்டர்ஸ் பொறுத்தவரை எப்படி அதன் பிரச்னைகளைக் கவனிப்பது என்பதற்காகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கிற நானும், மின்சாரத் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களும், பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் ஏதாவது பரிகாரம் காண முடியுமா என்பதை நாம் கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அந்தக் கம்பெனியிலே சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால், அதன் முதலாளி பம்பாயிலே இருக்கிறார். முதலமைச்சருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) விசாரிக்கிறேன், பார்க்கிறேன் என்று சொன்னார். தங்கமணி அவர்கள் கேட்டதற்குப் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதனால் தப்பில்லை—கொடுப்பதில் தப்பில்லை. ஒரு மாதம், 2 மாதம் சம்பளம் இல்லாமலிருந்தால், கடையிலே பாக்கி கொடுக்கமாட்டார்கள். ரூ. 100, ரூ. 50-வது கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** முதலமைச்சரே வாக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு பிரச்னை கிடையாது. வாக்குக் கொடுத்தார்களா என்பதைக் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு சபைக்கு அறிவிக்கிறேன்.

பல்வேறு பிரச்னைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சிறு பையன்களையெல்லாம் வேலைக்கு அமர்த்துகிறார்கள் என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதிலேயிருக்கிற சங்கடங்களைப் பார்க்க தக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எல்லாவற்றையும் பேசிவிட்டு ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய மனதிற்குப் பிடித்தமான கருத்து. முதலாளிகள் அவரவர்கள் ஜாதி ஆட்களைத் தொழில்களில் வைக்கிறார்கள், என்று சொன்னார்கள். அது இந்த ஆட்சிக்குப் பிடிக்காது. அதை நானும் கண்டிக்கிறேன். அப்படி எதிர்காலத்திலே ஏற்படாமல் பார்த்துக்கொள்வேன் என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியத்திலே பல உறுப்பினர்கள் கலந்துகொண்டு, அதன் மூலமாக பல நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு எல்லா பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேடுகின்ற வகையில் இந்த ஆட்சி நடக்கும் என்று தெரிவித்து . . . . .

**திரு. கே. கந்தசாமி :** லே ஆஃப் பீரியடிலே மத்திய அரசு—மாநில அரசு—முதலாளிகள் கொடுக்க வேண்டிய பங்குபற்றி பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. சினிமாத் தொழிலிலே, முதலாளிகள் தாங்களாகவே ஜெனரேட்டர்கள் வைத்து ஓர்க் பண்ணுகிறார்கள். அதுமாதிரி, ஏன் மற்ற தொழில்களுக்கும் என்ஃபோர்ஸ் பண்ணக் கூடாது. அவர்கள் ஜெனரேட்டர்களைக் கட்டாயம் வைத்துத் தொழில்களை நடத்த வேண்டுமென்று ஏன் செய்யக் கூடாது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஜெனரேட்டர்களை இந்தியாவிலே கொஞ்சம்தான் செய்கிறார்கள். பெரிய ஆலைகளுக்குத் தேவையான ஜெனரேட்டர்கள் இல்லை. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்திலேயிருந்து அனுமதி வேண்டும். அதற்குப் பணம் வேண்டும். இவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன. இந்த மின்சாரத்தை ஜெனரேட்டர் மூலமாக எல்லாத் தொழில்களுக்கும் கொண்டு வருவது என்பது முடியாத காரியம். ஆகவே அதிலே பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. நல்ல, வளர்ந்திருக்கிற, லாபம் வருகிற ஆலைகள்தான் ஜெனரேட்டர்கள் வைத்துக் கொள்ள முடியும். எல்லா ஆலைகளும் ஜெனரேட்டர்களை வைத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு . . . .





**திரு. பெ. சீனிவாசன் :** எந்த தனியார் ஸ்தாபனமாக இருந்தாலும், எப்படி அரசாங்க அலுவலகங்களுக்கு வேலைக்கு எடுக்கும்போது வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அதன் மூலமாக எடுக்கப்படுகிறதோ அதைப்போன்று எந்த தனியார் ஸ்தாபனமாக இருந்தாலும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்துதான் அதன் மூலமாகத்தான் எடுக்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டுமென்ற முறையைக் கொண்டு வருவார்களா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** காஸ்மாபாலிட்டன் கிளப் ஓர்க்கர்ஸ் ஸ்ட்ரைக்கிலே அதைத் தீர்க்கக் கூடிய வகையிலே ஏதாவது அமைச்சர் அவர்கள் சொன்னால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதைப்பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் முதலிலே என்னிடத்திலே சொன்னார்கள். என்னிடத்திலே வந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அநேகமாக எல்லா உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்திலே கொண்டு பதில் சொல்லியிருக்கிறேன், எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களும் குறிப்பெடுக்கப் பட்டிருக்கின்றன, அவற்றையெல்லாம் அரசாங்கம் கவனத்திலே கொண்டு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,35,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.**

திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, வி. சுப்பிரமணியம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,67,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9.13 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

161. Notification issued in G.O. Ms. No. 2207, Revenue, dated the 25th May 1974, in regard to appointment of officers to carry out the functions and duties assigned to the Settlement Officers and Assistant Settlement Officers under the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. (*Laid on the table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari Act*, 1948 (*Tamil Nadu Act XXVI of* 1948).

### *B. Reports, Notifications and Other Papers.*

144. Notification issued in G.O. Ms. No. 71, Commercial Taxes and Religious Endowments, dated the 27th January 1975, in regard to remission of stamp duty and Registration fees in respect of sale deeds to be executed in favour of the Secretary, College Purchase Committee Wallajapet and gift deed in favour of the Government of Tamil Nadu.



@ 145. Review of Labour in Tamil Nadu, 1974–75 (English and Tamil).

@ 146. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 29—Labour including Factories (English and Tamil).

147. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories.

148. Eighth Report of the Committee on Government Assurances.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

திரு. ஆரைமுருகன் பேசும்போது ஆட்டோமேஷன் பற்றிச் சொன்னார்கள். ஆட்டோமேஷனை கூடாது என்ற கருத்து இந்த அரசுக்கு ஒத்த கருத்துதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆட்டோமேஷன் எந்த நோக்கிலும் கூடாது என்பது அல்ல இந்த அரசின் கருத்து. ஆட்டோமேஷன் மூலம் ஏற்கெனவே இருக்கிற தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்றால் அதை இந்த அரசு வன்மையாக எதிர்க்கும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பீடித் தொழிலாளர்களது பிரச்சினை பற்றி அவரும், திரு. வகாப் அவர்களும் சொன்னார்கள். தோல் பதனிடும் தொழிலாளர்களைப் பற்றியும் சொன்னார்கள். பீடித்தொழிலாளர்களது பிரச்சினையில் கவனம் செலுத்தி நிறையக் காரியங்களைச் செய்திருக்கிறோம். ஒரு சின்ன சிக்கலை இந்த மன்றத்தில் சொல்லியாகவேண்டும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மகாநாடு டெல்லியில் நடைபெற்றபோது இந்தியா பூராவுக்கும் ஒரேவிதமான கூலி விகிதத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினோம். அதில் சரியான முடிவு ஏற்படவில்லை.

நம்முடைய அண்டையில் இருக்கிற ஆந்திர மாநிலத்தில் இன்னமும் ஆயிரம் பீடிகளுக்கு கூலி 3½ ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் ஆயிரம் பீடிக்கு ரூபாய் 4, ரூபாய் 4.10 என்று வைத்திருக்கிறோம். இதன் காரணமாக சில பாக்டரிக்காரர்கள் ஆந்திராவுக்கே பாக்டரியை எடுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். ஆகவே இந்தியா பூராவும் இல்லை என்றாலும் ஆந்திரா, மைசூர், கேரளம்—தமிழகம் ஆகிய தென்மாநிலங்களிலாவது பீடித் தொழிலாளர்களது ஒரேவிதமான கூலி விகிதம் என்று இருந்தாலொழிய பீடித் தொழிலாளர்களது பிரச்சினையில் முழு வெற்றியைக் காண முடியாது. அவர்களும் நான்

(இரவு 9-00)

விரைவிலே செய்கிறேன் செய்கிறேன் என்று நேரம் கேட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலே செய்துவிடுவோமென்று சமீபத்தில் சொன்னார்கள். அவர்கள் கூலியை உயர்த்துகின்ற வரையில் நாம் மேலும் அளிக்க முடியாது என்ற சூழ்நிலையிலே இந்த அரசு கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி பீடித் தொழிலாளிகளுக்குப் பல்வேறு காரியங்களைச் செய்ய இந்த ஆட்சி பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

அம்மையார் அவர்கள் சொன்னார்கள், ஆர்கனைஸ்ட் லேபருக்காக எல்லோரும் போராடுகிறார்கள், அன்-ஆர்கனைஸ்ட் லேபரைப் பற்றி யாரும் பார்ப்பதில்லை, என்று. கைத்தறி, பீடி, நெசவு, தங்க நகைகள், ஆபரணம் செய்யும் தொழில் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே வாங்கிக்கொண்டிருப்பதை விடக் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே ஏற்கெனவே இருப்பதை 50 சதவிகிதம் அதிகமாக்க வேண்டுமென்று நானும் வெகு நாளாகச் சொல்கிறேன். அப்படியிருக்கும்போது இருப்பதைக் குறைத்து என்ன பிரயோசனம்? இருப்பதை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லி ரொம்பக் காலமாகிறது. ஆகவே, 50 சதவிகிதம்-ஆவது உயர்த்தி நிர்ணயம் செய்ய ஆர்டினன்ஸ் போட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நூல் என்றாலே ரொம்பவும் சிக்கல்தான். இப்பொழுதுதான் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதே மீண்டும் மீண்டும் திருத்துவது என்றால், பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாவோம். கொஞ்சம் காலம் கழித்துத்தான் அந்த நிலைமையில் ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கமே இல்லாத ரோடு போடுகிற தொழிலாளிகளுக்குக் கூடுதல் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கல் உடைக்கும் தொழிலாளிகள், தோட்டத் தொழிலாளிகள், உணவு விடுதித் தொழிலாளிகள், இன்னும் மோட்டார் தொழிலாளிகள், பஞ்சடிக்கும் தொழிலாளிகள், மோட்டார் தொழிலிலேயுள்ள தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள் ஆகியோருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கூலியை மீண்டும் நிர்ணயிக்க ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் சில மாறுதல்கள் வரவேண்டுமென்று சொல்லி, மோட்டார் தொழிலாளிகள், பஞ்சடிக்கும் தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள் போன்றோருக்கு மீண்டும் கூடுதலாக ஊதியம் அளிக்கக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த வகையில் தொழிலாளிகளுக்குச் செய்யப்படுகின்ற காரியங்களை நல்ல வகையில் செய்து வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் ஒரு பஸ் கம்பெனியைப்பற்றி குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) பழனியப்பா கம்பெனி என்று சொல்கிறார்கள். அந்தக் கம்பெனியைப் பற்றி மாண்புமிகு சுப்பு அவர்கள் என்னிடத்தில் சொல்லிக்

## இணைப்பு —I

[122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் உரை

### கோரிக்கை 29—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் "கோரிக்கை 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்" என்பதன்கீழ் ரூ. 3,35,12,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்னுரைக்கின்றேன். இக்கோரிக்கையில், வேலை தேடித்தரும் பணிகளுக்கும் கைவினைப் பணியாளர் பயிற்சிக்கும் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத் துறை, வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை ஆகிய துறைகள் 1974-75 இல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை பேரவையின்கண் வைக்கப்பட்டுள்ளது. அதனைக் காணுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை கொள்கையின் முக்கியமான சில அம்சங்கள் பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்கச் சொல்லி விளக்க விரும்புகிறேன்.

2. தொழில் துறையில் அமைதியும் தொழில் செழித்து வளரவும், தொழிலாளர் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலையும் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாக விளங்குகின்றன. தொழிலதிபர், தொழிலாளர் ஆகிய இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த முழுவாய்ப்பு அளிக்கப்படுகின்ற அதே சமயத்தில், தொழில் துறை அமைதி குலையும்போது அல்லது உற்பத்தி தடைப்படும்போது அந்நிலையில் அரசு தலையிட்டு அமைதி மீண்டும் நிலைப்பெறச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்; ஏனெனில், தொழிலாளர் நலன், தொழில் துறையின் நலன் மட்டுமின்றி சமுதாய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது; அத்தகைய சூழ்நிலையில், இம்மூவகையினரின் நலனுக்கும் தீங்கு விளையக்கூடுமென்றிருக்கையில் அரசு வாளா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தொழிலாளர் பாதுகாப்பிற்கும், அவர்தம் சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கும் பொருட்டும், தனியார் துறை, பொதுத் துறை இவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துமாறு செய்தலும் அரசின் கொள்கையாகும். நமது தொழிலாளர் நலக் கொள்கையின் புதிய அம்சமான தொழிலாளர் நலத் திட்டங்கள் தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் செயல் வரம்பிற்குள் வராத துறைகளில் தொழிலாளர்க்கு வசதிகளைச் செய்து தர விழைவன ஆகும்.





3. மாநில அளவில் தொழிலாளர் நலன் தொடர்பான கொள்கை அனைத்திலும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவே தலைமை ஆலோசனைக் குழுவாகும். அரசு தனது தொழிலாளர் நலக் கொள்கைகளை உருவாக்குவதிலும் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், பெயர் பெற்ற தொழிலாளர் நலத் தலைவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரது ஆலோசனையையும் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் மூலமாகப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்கிறது.

4. இம்மாநிலத் தொழிலாளர் நிலைமையைக் காண்போம். முந்திய ஆண்டுப் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிட, வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் அதிக வேறுபாடு இல்லையென்றாலும் இவ்வாண்டில் நாம் இழந்த மனித ஆற்றல் நாட்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 1973 இல் நிகழ்ந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை 314 ; இழந்த மனித ஆற்றல் நாட்கள் 20,56,995 ; அதற்கெதிராக 1974 ஆம் ஆண்டில் நிகழ்ந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை 316 ; இழந்த மனித ஆற்றல் நாட்கள் 44,07,909 ஆகும். மாநில முழுவதும் பரந்து பஞ்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெற்றது என்பதையும், அதேபோல், திருப்பூரில் உள்ளாடைத் தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெற்றது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இவ்விரு வேலைநிறுத்தங்களால் மட்டுமே 18.95 இலட்சம் மனித ஆற்றல் நாட்கள் இழப்பு நேர்ந்தது. இந்த அம்சத்தையும் கருத்திற்கொண்டால் 1973 ஆம் ஆண்டில் தொழிலாளர் நிலைமை அதற்கு முந்திய ஆண்டிலிருந்த நிலைமையைவிடப் பெருமளவிற்கு சீரடைந்திருந்ததென்பதைக் கருதும்போது 1974 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் தொழிலாளர் நிலையானது 1973 இல் நிலவிய நிலைமையைக் காட்டிலும் கணிசமாக வேறுபட்டு விட்டதெனச் சொல்லிட இயலாது.

5. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்ட பெரிய தொழில் தகராறுகளில் பீடித் தொழில், சர்க்கரைத் தொழில், மலைத் தோட்டத் தொழில் ஆகிய தொழில்களிலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலும் ஏற்பட்ட தொழில் தகராறுகள் குறித்து செய்யப்பட்ட உடன்பாடுகளை இங்குக் குறிப்பிட விழைகின்றேன். பஞ்சாலைத் தொழிலில் ஊதியக்கொடை குறித்து எழுந்த தொழில் தகராறு மாண்புமிகு முதல் அமைச்சரவர்களின் நன்முயற்சியின் பலனாக இருதரப்பினர்க்கும் இசைந்த வகையில் தீர்த்து வைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஏற்பட்ட உடன்பாட்டையொட்டி அதற்கு முன்னர் சிம்சன் நிறுவனங்கள் குழுவின் நிர்வாகம் வேலைநீக்கம் செய்திருந்த 122 தொழிலாளர் தொடர்பாகத் தனது முடிவையும்

முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அம் முடிவிற்கிணங்க, தொழிலாளர்கள் மூன்று கட்டங்களில் வேலைக்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். நிர்வாகமும் இம் முடிவைச் செயற்படுத்தியுள்ளது.

6. கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில், கைத்தறி நெசவுத் தொழில், தங்க நகைகள் தயாரிப்புத் தொழில் ஆகியவற்றில் வேலை நியமனங்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களை அரசு, இது குறித்து அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் அளித்த ஆலோசனைப்படி வரையறுத்துள்ளது.

7. 1974 ஆம் ஆண்டில், அரசு, பின்வரும் தொழில் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்களை வரையறுக்கும் வகையில் அத்தொழில் நிறுவனங்களிற் செயற்படும் வேலை நியமனங்களைக் குறைந்த அளவு ஊதிய விதங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துள்ளது :—

(1) அச்சகங்கள்,

(2) திரைப்பட அரங்குகள்,

(3) கடைகள், வாணிக நிறுவனங்கள்,

(4) மீன்பிடி தொழில்.

8. 1974 ஆம் ஆண்டு செப்டம்பரில் புது டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இம் மாநாட்டில், பின்வருவன போன்ற முக்கியப் பொருள்கள் விவாதிக்கப்பட்டன. பீடித் தொழில் வேலை நியமனங்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்களைத் திருத்தியமைத்தல், 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தைச் செயற்படுத்துதல், ஆண், பெண் தொழிலாளர் இருபாலருக்கும், சம மதிப்புள்ள வேலைக்குச் சம ஊதியம் வழங்குதல் குறித்து உலகத் தொழிலாளர் நிறுவனத்தின் மாநாட்டின் பரிவுரைகளைச் செயற்படுத்துதல், வழக்காடுவதற்குத் தொழிலாளருக்கு உதவியளித்தல் ஆகியன. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தைச் செயற்படுத்துதல் குறித்து எழும் பிரச்சினைகளைக் கவனித்து அவற்றுக்குத் தீர்வுகாணும் வழிகளை எடுத்துரைக்க அதிகாரிகளடங்கிய சிறு குழுவொன்றை மத்திய அரசு அமைக்க வேண்டுமென அம் மாநாடு முடிவு செய்தது.

9. தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம் ஆகியவற்றின்கீழ் எழும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, வழக்குகளை முடிப்பது ஆகியவற்றை



விரைவுபடுத்தும் நோக்குடன், நிர்வாகப் பணியாளர் அமைப்பை அரசு வலுப்படுத்தியுள்ளது. இதன் பொருட்டு, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட, தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையாளர் ஒருவரது தலைமையில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களடங்கிய புதிய வட்டாரம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

ஊதியக் கொடை வழங்கல் சட்டம், பணிக்கொடை வழங்கல் சட்டம் ஆகியவற்றை நிர்வகிக்கும் பொருட்டு தனிப் பணியாளரமைப்பை அமைக்கும் கருத்து, 1973 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மாநாட்டில் பரிசிலனைக்கு வந்தது. இப்பணியை மேற்பார்வை அதிகாரிகளடங்கிய தனி அமைப்பிடம் விடுவது உகந்தது எனவும், அவ்வமைப்பு, இச்சட்ட விதித் துறைகளை மிகத் திறம்பட குறிப்பாக, தொழிலாளர்கட்குத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இல்லாத நிறுவன அமைப்புற்ற துறையில்-மிக திறம்படச் செயற்படுத்தும் என்றும் அம் மாநாட்டில் பரிவுரைக்கப்பட்டது. இப் பணியைக் கவனிக்கும் பொருட்டும், தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை நிர்வகிப்பதில் உதவும் பொருட்டும், அரசு தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் பதவிகள் நான்கிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் முறையே சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்களைத் தலைமையிடமாகக் கொண்டு அந்தந்தப் பகுதியின் தொழிலாளர் நலத் துணை ஆணையாளரது கட்டுப்பாட்டு அதிகாரத்தின்கீழ் பணிபுரிவர்.

10. இத் துறையின் அதிகாரிகட்குப் போக்குவரத்து வசதிகள் அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றி இம் மன்ற உறுப்பினர்கள் பன்முறையும் வலியுறுத்தியுள்ளனர். இந்த அவசியத்தை உணர்ந்து, படிப்படியாக நிறைவேற்றும் திட்ட அடிப்படையில் இந்த அதிகாரிகளுக்கு பணித் துறை வண்டிகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மதுரை, சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்களுக்கும், கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளருக்கும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் போன்ற முக்கிய தொழில் நகரங்களிலுள்ள தொழிலாளர் நல அதிகாரிகள் ஐவருக்கும் முதல் நடவடிக்கையாக பணித்துறை வண்டிகள் அளிக்கப்பட்டுள்ளன.

11. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு குறித்து அரசு பரிசீலித்து வருவதாக கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின்போது நான் குறிப்பிட்டதை

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ரூ. 58.56 லட்சம் செலவிற்கு மேற்படாமல் இந்த அதிகாரிகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு அரசு தற்போது அனுமதி வழங்கியுள்ளது. இதில் 1974-75ல் செலவிட ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. மலைத் தோட்ட அதிபர்கள் நடத்தும் மருத்துவ மனையிலிருந்து நோயாளிகள் குணமாகும் முன்பே அனுப்பப்பட்டுவிடுகின்றனர், நோயாளிகளுக்குத் தகுந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுவதில்லை, மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் மருந்துகள், மருந்துப்பொருள்கள் கிடைப்பதில்லை என்றெல்லாம் மலைத்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்த வண்ணம் உள்ளன. மருந்தகங்களையும், மருத்துவ மனைகளையும் அடிக்கடியும் திறமையாகவும் பார்வையிடுவதற்காகவும், மருத்துவ வசதிகள் உள்ளனவா என்பதைச் சோதனை செய்ய மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகள் செவ்விய முறையில் செயல்படுத்தப் படுகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்வதற்காகவும் நாகர்கோயில், உதகமண்டலம் ஆகிய இடங்களில் தேவையான துணைப்பணியாளருடன் உதவி மருத்துவ அதிகாரிகள் பதவித்தரத்தில் மருத்துவ அதிகாரிகள் இருவரை நியமித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மருத்துவ அதிகாரிகள் சென்னை மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளரின் கீழ் பணியாற்றுவர். அவர்கள் தங்கள் பணியைச் செவ்வையாக நிறைவேற்றிட அவர்களுக்குப் பணித்துறை வண்டிகள் இரண்டை வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. தொழிற்சங்கத் தலைவர்களை உருவாக்குதல், தொழிலாளர் நல அதிகாரிகள், பணியாளர் அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சியளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டு வகுப்புகளை நடத்துதல் போன்ற முக்கிய நோக்கங்களுடன் 1973-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வுநிலையம் இந்த ஆய்வாண்டில் தனது பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தியது. இந்நிலையம் தொழிற்சங்கத் தலைமை குறித்த பயிற்சி வகுப்புகளில் 104 தொழிலாளர்களுக்கு இதுவரை பயிற்சி அளித்துள்ளது. தொழிற்சாலை நிறுவனங்களிலுள்ள 56 தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைப் பாதுகாப்பை தெளிவுபடுத்தும் இருவகைப் படிப்புகளை இந்நிலையம் நடத்தியது.

14. 1973 ஜனவரி 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்த தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் தொழிலதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும், தொழிலாளர் நல நிதிக்குத் தொகை வசூலிப்பதற்கும் இத்திட்டத்தை சட்டபூர்வமான திட்டமாக ஆக்கவும் வகை செய்கிறது. தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத்தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல



உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் அவரவர் பகுதிகளில் இச்சட்டத்தின் கீழ் "ஆய்வாளர்களாக" செயல்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளனர். அரசு இந்நிதிக்கு முதலில் அளித்த ரூ. 5 லட்சம் மானியம் உட்பட இந்நிதிக்கு இதுவரை ரூ. 40 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருந்த தமிழ்நாடு தொழிலாளர் நலக்குழு தற்போது அமைக்கப்பட்டுவிட்டது.

15. மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக்குழு 5—2—74, 6—2—74, 23—4—74, 4—2—75 ஆகிய நாட்களில் கூடியது.

16. தொழிலாளர் நல அதிகாரிகளின் ஆண்டுக் கூட்டம் 1974 செப்டம்பரில் நடைபெற்றது. மூன்று நாட்கள் வரை நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு நான் தலைமை வகித்தேன். பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் "தொழிலாளர்" என்ற சொல்லுக்கு உள்ள தொகை வரம்புகளை உயர்த்துதல், தொழிலாளர் நல இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத்தொகை அளிப்பதற்கான அளவை உயர்த்துதல், உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சலவைப்படியளித்தல், பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழுள்ள தண்டனை விதித்துறைகளைக் கடுமையாக்குதல், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தின் சார்பாக வழக்குகளை நடத்துதல், சட்ட ஆலோசனைகள் நல்குதல், வட்டார சட்ட அதிகாரிகளை நியமித்தல் ஆகியவை இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கியப் பொருளாகும்.

17. தொழிற்சாலையில் பாதுகாப்பை மேம்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும் இத்துறையில் தொழிற்சாலை இயக்குநர் அலுவலகம் நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. தொழிற்சாலைச் சூழலில் ஈயநச்சு, சிலிகோஸிஸ், சரும வியாதி ஏனைய நச்சு நோய்கள் போன்றவை வருவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து வெப்பம், தொழிற்சாலை இரைச்சல் போன்ற பிரச்சினைகளைத் தடுப்பதற்கான நடைமுறைகளைத் தெரிவிக்க மாநிலத் தொழிற்சாலை இயக்குநர் அலுவலகத்தில் மருத்துவ ஆய்வாளர் ஒருவரின் கீழ் ஒருங்கிணைந்த தொழிற்சாலை சுகாதாரம்—உடல் நலப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொழில் சார்ந்த ஆபத்துக்களிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க இப்பிரிவு அவர்களுக்குப் பேருதவியாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

18. 'ஆசிய உற்பத்தி ஆண்டு 1970' என்ற கருத்தை விளக்கும் வகையில் "உற்பத்தியின் தரமும் நம்பகமும்" என்ற செய்திப்படம் ஒன்றை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தொழிலாளர் நலத்துறையின் ஆதரவில் தயாரித்து 31—1—1975 அன்று வெளியிட்டது.

19. தொழிலாளர் நலத்துறையின் ஆய்வுப் பிரிவு தமிழ்நாடு எடைகள் அளவைகள் (அமுல்) சட்டத்தைத் தொடர்ந்து நிர்வகித்து வந்தது.

இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றம், பற்றாக்குறை காரணமாக குறை எடைகள், மோசடி எடைகள், அளவைகள் இவற்றைப் பயன்படுத்துதலி லுள்ள, முறைகேடுகளைச் சோதனையிடும் பணி சிறப்பு முக்கியத்துவம் பெற் றுள்ளது. அடிக்கடி திடீர்ச் சோதனைகள் மூலமும் அவ்வப்போது சென்று பார்வையிடுவதன் மூலமும் மேற்படி முறைகேடுகளை அறவே நீக்கிட துறை தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1974-ல் 7,640 வழக்குகள் தொடர அனுமதிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அபராதமாக ரூ. 1.87 லட்சம் வசூலிக்கப்பட்டது. சிலருக்குச் சிறைத் தண்டனைகள் அளிக்கப் பட்டுள்ளன. குறைந்த எடைகளையும் அளவைகளையும் பயன்படுத்துவதைத் தடுப்பதற்குத் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகளை இவை எதிரொலிக்கின்றன.

20. அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித்திட்டம்.—இத்திட்டம், தற் போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத் திலும் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 39 பெரிய தொழில் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றன. தற்போது அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் 3, நிலையியல் மருந்தகங்கள் 95, இயல் ஊர்தி மருந்தகங்கள் 9, பகுதி நேர மருந் தகங்கள் 2, தொழிலதிபர் பயன்பாட்டு மருந்தகங்கள் 3 ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் இம்மாநிலத்திலே 400,000 காப்புறுதி செய்து கொண்டவர்கள் பயனடைகின்றனர்.

21. இத்திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு, தொழிலாளர் ஒருவர் பெறும் மருத்துவ வசதிக்கான செலவிற்கு உச்ச வரம்பினை 1—4—1970 ஆம் நாளி லிருந்து அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் வரையறுத்தது. இந்த உச்சவரம்பிற்கு மேல் ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. இந்த அரசு மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்பச் செய்து கொண்ட முறையீடுகளுக்குப் பிறகு தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், உச்சவரம்பு வீதங்களை நான்கு முறை உயர்த்தியது. 1—4—1974 ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்படும் மருத்துவச் செலவு குறித்த உச்ச வரம்பு வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| வரையறுத்த மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 65 ரூபாய் |
| விரிவான மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 70 ரூபாய் |
| முழு மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 85 ரூபாய் |



மருந்து, மருந்துப் பொருட்கள், கட்டுக்கட்டும் பொருள்கள் குறித்துத் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு அதிகமாக ஆனால் 45 ரூபாய்க்கு குறைவாக மாநில அரசுக்கு ஏற்படும் எந்தவொரு செலவும், உச்சவரம்பிற்கு அப்பால் சாதாரண விகிதாசாரத்தில் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் பகிர்ந்து கொள்ளப்படும். உச்சவரம்பு அளவை அவ்வப்போது உயர்த்தியிருந்தாலுங்கூட உச்சவரம்பிற்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் பெருந்தொகையை மாநில அரசு செலவிட வேண்டி வந்துள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | மொத்தச் செலவுத் தொகை. | அரசுத் தொழிலாளர் காப்புறுதிக் கழகத்தின் பங்குத் தொகை. | மாநில அரசு செலவிட்ட தொகை. | மாநில அரசு கூடுதலாகச் செலவிட்ட தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1969–70 | .. | 248·70 | 221·65 | 27·05 | .... |
| 1970–71 | .. | 266·14 | 169·29 | 96·85 | 73·66 |
| 1971–72 | .. | 322·99 | 203·44 | 119·55 | 91·46 |
| 1972–73 | .. | 356·40 | 214·88 | 141·52 | 111·32 |
| 1973–74 | .. | 360·45 | 266·10 | 94·35 | 58·72 |

1974–75-ம் ஆண்டிலும்கூட, கூடுதல் செலவு சுமார் ரூபாய் ஐம்பது இலட்சம் ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1974-75-ஆம் ஆண்டிற்குள் கீழ்க்காணும் பகுதிகளில் அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன :—

(1) மேலூர்—மதுரை மாவட்டம்.

(2) ஆத்தூர்—சேலம் மாவட்டம்.

கீழ்க்கண்ட இடங்களில் அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் 1974-75 இறுதிக்குள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) கரூர்—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(2) நந்தம்பாக்கம்—சென்னை புறநகர்ப் பகுதி.

(3) அடையாறு—சென்னை புறநகர்ப் பகுதி.

(4) ஆம்பூர்—வட ஆற்காடு மாவட்டம்.

(5) காரமடை—கோயம்புத்தூர் மாவட்டம்.

22. சென்னை மாநகரில் இரண்டாவது அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையை தொடக்கத்தில் 200 படுக்கைகளும் முடிவில் 500 படுக்கைகளும் உள்ளவையாகக் கட்டுவதற்கு புதுதில்லியிலுள்ள அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இது கலைஞர் கருணாநிதி நகரில் கட்டப்படும்.

23. நமது நாட்டில் உள்ள வேலை தேடும் ஒவ்வொரு வகையான நபருக்கும் பலனளிப்பதற்காக, தேசிய வேலை வாய்ப்புப் பணி நிறுவனம் தனது நிர்வாகப் பகுதியை தொடர்ந்து விரிவுபடுத்தி வந்துள்ளது. தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்களுக்காக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்று சென்னை மாநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் தவிர சென்னை, அண்ணாமலைநகர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் வழிகாட்டுக் கழகங்கள் மூன்று உள்ளன. இப் பணி நிறுவனம் வேலை தேடுபவர்களுக்கு வேலை தேடித்தருவது மட்டுமின்றி தொழில்கள் செய்ய வழிகாட்டியாக இருந்தும், வேலைவாய்ப்பு ஆலோசனை வழங்கியும் வாழ்க்கைத் தொழில் பற்றிய தகவல்களைத் தந்தும் உதவுகிறது. இதைத் தவிர, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும், உயர்கல்வி பெற்று வேலை தேடுபவர்களுக்காக தொழில்—நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும் உள்ளன. மாநில இயக்குநர் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு-விளம்பரப் பிரிவு ஒன்று அண்மையில் இணைக்கப்பட்டுள்ளது. பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிவரும் அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த அகதிகளை முறையாகக் குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி, தனிப்பட்ட தொழிலதிபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இதில் அக்கறையுள்ள நிறுவனங்களுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டு வருகிறார். அரிசனங்கள் பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்குச் செம்மையான



வழிகளில் வழிகாட்டி உதவியளிக்க நடந்தாண்டில் "பயிற்சியளித்து வழிகாட்டியுதவும் நிலையம்" ஒன்று மத்திய அரசின் கீழ் சென்னையில் பணியாற்றி வருகிறது.

24. தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களிடையேயுள்ள வேலையின்மையைப் போக்க, வேலையில்லாமல் இருக்கும் பொறியாளர்கள், பட்டயம் பெற்றவர்கள், கைவினைப் பணியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சியுதவித் தொகைத் திட்டம் ஒன்றுக்கு அரசு 1970 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகளிலும், அரசுப் பங்கு பெற்ற துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவர்களில் சிலர், இந்தக்கால அளவில் முறையான காலியிடங்களில் பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

25. ஆட்படை ஊற்றம், பகுதித் தொழில் அமைப்பு முறை, குறை நிலைத் தொழில்கள் ஆகியவை பற்றி தனி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இயக்குநர் அலுவலகத்தில் ஆய்ந்த ஆய்வுக்குழு ஒன்று உள்ளது. இந்த ஆய்வுகள், வேலை வாய்ப்பு குறித்த தகவல் திட்டத்தின் கீழ் குறித்த காலத்திற்கொருமுறை மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்குத் துணையாக இருக்கும். இவை, ஆட்படை ஊற்றத்தைத் திட்டமிடுதல் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல் வளர்ச்சித் திட்டம் வகுத்தல் ஆகியவற்றிற்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

26. வேலையின்மை குறித்த பிரச்சினையில், இந்த அரசு இடைவிடாத நாட்டத்தைச் செலுத்தி வந்துள்ளது. இப் பிரச்சினையை தீர்ப்பதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும் இயன்ற அளவுக்கு மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதும் அரசின் இரட்டை நோக்கங்களாகும். கடந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட 5 இலட்சம் மக்கள் வேலைவாய்ப்புத் திட்டமும் இந்தக் கருத்துக்களையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. ஐந்து இலட்சம் மக்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1973-74-ல் ரூ. 461.32 லட்சம் செலவிடப்பட்டது. படித்து வேலையற்றிருந்த 26,000 பேருக்கு வேலை அளிக்கப்பட்டது.

27. இக் காரியத்திற்காக நடப்பாண்டில் இந்திய அரசு "வேலை வாய்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தை" தொடங்கியுள்ளது. இத் திட்டம், சொந்தத் தொழில் வாய்ப்புத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கின்றது. "வேலை வாய்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தை" செயற்படுத்துவதற்காக தமிழ்நாட்டிற்கு 1974-75-ல் இந்திய அரசு ரூ. 205 லட்சம் ஒதுக்கியுள்ளது.

28. இதுவரையில் 52 புதிய வேலைவாய்ப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகள் வகுக்கப்பட்டு திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர 5 லட்சம் மக்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திட்

அத்தகைய நிதியுதவி அளிக்கப்பட்டபின் 1974 மார்ச் 31-ஆம் நாளுக்குள் மேற்கொள்ளப்படாமல் அல்லது முடிக்கப்படாமலிருந்த ஐந்து திட்டப் பணிகள் நடைமுறை செலவினங்களை மேற்கொண்டு திட்டத்தினின்று நீக்கப்பட்டன. இவ்வாறு, ரூ. 301.82 லட்சம் மொத்தச் செலவில் 37 திட்டப் பணிகள் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக அதற்கு அனுப்பப்பட்டன. திட்ட ஆணைக் குழு இவற்றை நடைமுறைப் படுத்துவதற்காக 42 திட்டப் பணிகளுக்கு—37 புதிய திட்டப் பணிகள், மேலும் எஞ்சியுள்ள 5 பணிகள்—ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கென மத்திய நிதியுதவி ரூ. 205 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

29. விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை முன் தேவை பயிற்சி பெற்ற தொழில் நுட்ப ஆட்களை உருவாக்குவதேயாகும். கைத்திறத் தொழிலாளர் பயிற்சித் திட்டங்களின் கீழ் நம் மாநிலத்தில் கீழ்க்காணும் வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன—

(i) தொழில் பயிற்சி நிலையத்தில் நிறுவனப் பயிற்சி.

(ii) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுநர் பயிற்சி.

(iii) 1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் தொழில் வகுப்புகள்).

(iv) வேலையிலுள்ள பொறியாளர்கள், வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்திறத் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி (பகுதி நேரம்).

சென்னையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையம் உட்பட தற்போது 31 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. சென்னையிலுள்ள நிலையம், மாநிலத்தில் மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்காகவென்றே உள்ளதாகும்.

30. மாநிலத்திலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் தொடர்ந்து மிக உயர்ந்த நிலையிலிருந்து வருகிறது. அனைத் திந்தியத் திறமைப் போட்டிகளில் கிட்டத்தட்ட ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது இரண்டு தொழில்களில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் நிலையை அடைந்து வந்துள்ளது. 1974, நவம்பர் திங்களில் நடந்த 11-வது அனைத் திந்தியத் திறமைப் போட்டியில் 5-வது முறையாகவும் தமிழ்நாடு "சிறந்த மாநிலம்" என்பதற்காக "குடியரசுத் தலைவர் சுழல் கேடயத்தைப்" பெற் றுள்ளது. இயந்திரம் இயக்கும் (ஒருங்கிணைந்த) தொழில், கடைசல் பிடிக்கும் தொழில் ஆகியவற்றில் நம் மாநிலத்திலிருந்து பயிற்சி பெறுபவர்கள் முதல் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.



31. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 1974 ஆம் ஆண்டு கூடுதல் ஊதியங்கள் (கட்டாய வைப்பீடு) சட்டம், 1974 ஆம் ஆண்டு கம்பெனிகள் (ஆதாய ஈவுத் தொகைகள் மீதான தற்காலிக வரையறைகள்) சட்டம் ஆகிய இரண்டு புதிய சட்டங்களை இந்திய அரசு இயற்றியுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்தச் சட்டங்களினால், தொழில் உறவுமுறை பாதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், தொழில் நலன்களுக்குக் குந்தகம் ஏதும் ஏற்படாமல் தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படும் வகையில் இப் பிரச்சினை களைத் தீர்ப்பதில் தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் அரசுடன் ஒத்துழைப்பார் என நான் நம்புகிறேன்.

32. தொழில் அமைதியையும் உற்பத்தியையும் பேணி வருவதில் அரசுடன் தங்கள் ஒத்துழைப்பை நல்கியதற்காக இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம்மாநிலத்தில் தொழிலாளரின் நலனை உயர்த்தும் பணியில் தங்களது மேலான அறிவுரைகளைத் தொடர்ந்து நல்கிவர வேண்டுமென மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு II

[122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டில் வீட்டு வசதி

**1974-75.**

வளங்கெழு அரசுக் கொள்கையையும் நிலையான ஜனநாயகத் தொண்மை யையும் செயற்படுத்துவது என்று இவ்வரசு ஏற்று உறுதிபூண்டு உள்ளது. அதற்கிணங்க இம் மாநிலத்தில் வீட்டுவசதி நிலைமை பற்றாக்குறையாக உள்ளதை இவ்வரசு அறிந்துகொண்டு மக்களின் வீட்டுவசதிப் பற்றாக்குறையை தீர்த்துவைக்க பல்வேறு நிலைகளில் உண்மையான மனமொன்றிய பல முயற்சிகளை எடுத்துவந்துள்ளது. முதல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொழுது "குறைந்த வருவாய்த் தொகையினருக்கான வீட்டுவசதித் திட்டம்" "மலிவு வீட்டுவசதித் திட்டம்" போன்ற இரண்டொரு திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அதனையடுத்துவந்த திட்டக் காலங்களில் குடிசைப் பகுதி மாற்றுப் பணி, தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி, கிராமப் பகுதி வீட்டு வசதி, போன்ற திட்டப் பணிகளில் முன்னேற்றம் மும்முரமாக நிகழ்ந்தது. தமிழ்நாடு அரசு முதன்முதலில் முக்கியமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கே வீடுகள் கட்டுவதற்காக நிதி உதவி அளித்தது. 1947-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கான மாநகர மேம்பாட்டுப் பொறுப்புக்

கழகம் நிறுவப்பட்டது. இது, அரசு அளித்த நிதி வசதியைக் கொண்டு கணிசமான அளவிற்கு வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்ய முடிந்தது. வீட்டு வசதித் திட்டங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் மாநகருக்கு மட்டுமேயென முடங்கிவிடலாகாது என்றும், மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டபடியால் மாவட்ட வீட்டு வசதிப் பிரிவுகள் மூன்றுடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. இம்மூன்று பிரிவுகளும் முறையே திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றும் மூன்று அல்லது அதற்கதிகமாக மாவட்டங்களில் தனது அதிகார வரம்பைக் கொண்டு அமைந்தன. இவையன்றி ஏற்கெனவே சென்னை மாநகருக்கென ஒரு வீட்டு வசதிப் பிரிவு இருந்தது. தற்போது வேலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலும் வீட்டுவசதிக் குழுக்கள் உள்ளன. இவ்வாரியம் சட்டப்படிக்கு இணைந்த கழகமாகும். இதன்கண் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்களும் மற்றும் அரசு அலுவலர் அல்லாதாரும் உறுப்பினராய் உள்ளனர். இது மாநிலத்தில் வீட்டுவசதி நடவடிக்கைகளைக் குறித்துத் திட்டமிட்டு அவற்றை ஒருங்கிணைத்து வீட்டுவசதித் திட்டங்களை மிக விரைந்தும் திறமையுடனும் செயற்படுத்தப்படுவதற்கு உறுதி செய்ய முடிகிறது. முன்னர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவு தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் மாற்றப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்கள் தவிர, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியுடன், நடுத்தர வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதி, நிலம் கையகப்படுத்தலும் மேம்படுத்தலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டுவசதித் திட்டம் ஆகியன போன்ற பல திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டன.

2. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதி அளிக்கும்பொருட்டு அதிக கவனம் செலுத்தப்பட்டது. சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும்பொருட்டு மாநகரிலுள்ள குடிசைப்பகுதிகளை ஏழாண்டு காலத்திற்குள் ஒழித்து அவற்றுக்குப் பதிலாகப் புதிய பன்மாடிக் கட்டிடங்கள் கட்டித்தரும்பொருட்டு இவ்வரசு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் இதுவரை கவனிக்கப்பட்டுவந்த குடிசைப்பகுதிகள் மாற்றுப் பணி, அதற்குரிய பணியாளர்கள் சொத்துக்க்ள், பொறுப்புக்களுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இவ்வாரியம் சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள் மாற்றுப் பணியை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும்பொருட்டு தமிழ்



நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்றுதல்) சட்டம் எனப்படும் சட்டமொன்றையும் இவ்வரசு இயற்றியுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் குடிசை மாற்று வாரியம் ரூ. 1,321.88 இலட்சம் செலவில் குடிசைப் பகுதிகளில் பன்மாடிக் கட்டிட அங்கணங்கள் 12,978-ஐக் கட்டியுள்ளது. நடப்பாண்டில் 4,000 அங்கணங்கள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. வெளியூர்களில் குடிசை மாற்றுப் பணி தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கவனிக்கப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் ஆண்டு வருமானம் ரூ. 4,200 மேற்படாத மக்களின் நலனுக்காக மலிவு விலையிலான சிறப்பு வீட்டு வசதித் திட்டமும் கொண்டுவரப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 176 வீடுகள் கட்டித் தரப்பட்டன. 1975-76-ல் இத்திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் 2,153 வீடுகளைக் கட்டிடத் தரத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

3. வீட்டு வசதித் திட்டம் ஒவ்வொன்றையும் குறித்துச் சுருக்கமான அறிக்கை அடுத்து வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

4. தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்.—தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்கட்கு அருகாமையிலேயே மலிவு வாடகையில் நல்ல வீட்டு வசதி அமைத்துத் தருவதென்ற சமூகப் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. எனவே, அதற்காக தொழிற்சாலைத் தொழிலாளருக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இது வாடகை வீட்டு வசதித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் அரசுத் துறை, தனியார்துறை ஆகிய இரண்டு வழியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அவை குறைந்த வாடகையில், அதாவது 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவை, ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்படவில்லையென்றால் மிக மலிவான வாடகையிலும், தொழிலாளர் ஒருவரின் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 500-க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப் படுகின்றன. வீடு கட்டுவதற்காகும் செலவு உச்சவரம்பில் கடனாக 50 சதவீதம், மானிய உதவியாக 25 சதவீதம் என்னும் வீதாச்சாரத்தில் தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்த உச்சவரம்புச் செலவில் எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டு வரும் செலவும் அந்தந்தத் தனிப்பட்ட தொழிலதிபர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு கடனுதவி அளிக்கும் பொருட்டு பின்வரும் செலவு உச்சவரம்புகள் விதிக்கப் பட்டுள்ளன; இரட்டை மாடிக் கட்டிடங்களில் இரண்டு சிறிய அறைகள் கொண்ட அங்கணம் ஒன்றுக்கு ரூ. 5,350; பன்மாடிக் கட்டிடங்களில் இரண்டு

போன்ற அமைப்பில், மானியவுதவி பெறும் திட்டமாக 1—4—1966 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதனை 1970-71 ஆம் ஆண்டிலிருந்து, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகக் கருத இந்திய அரசு முடிவு செய்தது.

இத்திட்டத்தின் கீழ், இரண்டு அறை கொண்ட சிறிய வீடு ஒன்று கட்டுவதற்குச் செலவு உச்சவரம்பு ரூ. 3,200 ஆகும். திருத்தியமைத்த மத்தியத் திட்டத்தின்கீழ், உச்சவரம்புச் செலவுத் தொகையில் 50 சதவீதம் கடனும், 37½ சதவீதம் மானியமும் பெறுவதற்கு மலைத்தோட்ட அதிபர்கள் தகுதியுடையவர்களாவர். இம்மாநிலத்தில், இத்திட்டத்தின்கீழ் இதுவரையில், தகுதி வாய்ந்த தோட்டத் தொழிலாளர்களில் 97 சதவீதம் பேருக்கு வீட்டு வசதியளிக்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 60 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 61,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

II. தோட்டத் தொழிலாளருக்கான மலிவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், திட்டக் காலத்தில் எய்திய சாதனை.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 195 | வீடுகள். |
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பயன் படுத்தப்பட்ட தொகை. | ரூ. | 3·72 | இலட்சம் |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கம். | ரூ. | 10 | இலட்சம். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட திட்ட இலக்கு. | | 440 | வீடுகள். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1969–74) செலவு செய்த தொகை. | ரூ. | 2·62 | இலட்சம். |
| 1969–74 நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 78 | வீடுகள். |
| 1974–75 ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | ரூ. | 2·20 | இலட்சம். |
| 1974–75 (1974 டிசம்பர் வரை) செலவு செய்த தொகை. | ரூ. | 0·13 | இலட்சம். |



| | | | |
|---|---|---|---|
| 1974–75 (1974 டிசம்பர் வரை) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 42 | வீடுகள். |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு. | ரூ. | 0·61 | இலட்சம் |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு. | | 60 | வீடுகள். |

6. குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம்.

(i) இத்திட்டம் 1955-56-ல் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாலும், அதன் கூட்டுறவுப் பிரிவாலும் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்படாதவர்களின் நலனுக்கென இது வகுக்கப்பட்டுள்ளது.

(ii) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்.—ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்படாத குறைந்த வருவாயினரின் நலனுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டித் தருகிறது. வீட்டு வசதி வாரியம் இவ் வீடுகளைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில், தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கித் தருகிறது. கட்டிடச் செலவில் 20 சதவீதம், அது ஒதுக்கப்படுவதற்கு முன்பே வசூலிக்கப்பட்டு விடுகிறது; எஞ்சிய 80 சதவீதம், வீடுகள் யாருக்கு ஒதுக்கித் தரப்பட்டதோ அவர்களால் 20 ஆண்டு காலத்தில் தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். 1975-76-ல் 150 வீடுகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றைத் தவிர, வீட்டுவசதி வாரியம் தனது நிதியிலிருந்து, இத் திட்டத்தின் கீழ் 1,205 வீடுகளைக் கட்டக் கருதியுள்ளது.

(iii) கூட்டுறவுப் பிரிவு.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்கிவருகிறது. தற்போது கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அனைத்தும் தலைமைச் சங்கமான தமிழ் நாடு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் நிதியைக் கொண்டு, வீடு கட்டக் கடன்கள் வழங்குகின்றது. எனவே, கூட்டுறவுத் துறையின்கீழ், குறைந்த வருவாய்த்

அறைகொண்ட சிறிய அங்கணத்திற்கு ரூ. 6,050; இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 7,600, பன்மாடிக் கட்டிடத்தில் முறையான அளவிலான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 8500, தொழிலதிபர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் தங்கள் பணியாளரது எண்ணிக்கையில் நான்கு சதவீதம் பேருக்காகிலும் வீட்டு வசதி அளிக்கவேண்டுமென சிறப்பு வேண்டுகோள் விடப் பட்டுள்ளது.

*1974-75* ஆம் ஆண்டில் தனியார் துறையில் மொத்தம் ரூ. 66 இலட்சம் செலவில் 540 வீடுகள் கட்டுவதற்கு கீழ்க் காணும் நிறுவனங்களில் வீட்டு வசதித் திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டிருக்கின்றன :—

1. அருணா சுகர்ஸ் லிமிடெட்.
2. கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட், மேட்டூர் அணை.
3. சக்தி சுகர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
4. தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்.
5. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர்.
6. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை.
7. வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வேலூர்.

கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் ரூ. 2.19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 30 அங்கணங்களைக் கட்டித் தருவதற்கு பொதுத் துறையில் வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு வசதித் திட்டத்திற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், வீட்டு வசதி வாரியத்தின் மூலம், பசுமலையில் ரூ. 15.18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 218 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும் கருதப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பொதுத் துறையில் இத்திட்டத்திற்கு ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையில், தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு மானியமும், கடனும் வழங்குவதற்கு ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகளிலும் 1975-76-ல் 170 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் திட்ட காலங்களில் எய்திய சாதனைகள் பின்வருமாறு.



| | பொதுத் துறை. | கூட்டுறவுத் துறை. | தனியார் துறை. |
|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,998 | 2,055 | 278 |
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்). | 182 43 | 94·27 | 7·34 |
| 1966-67 முதல் 1968-69 வரையிலான ஆண்டுத் திட்டங்களின்போது கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 327 | 561 | .. |
| 1966-67 முதல் 1968-69 வரையில் செய்த செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | 28.62 | 25·46 | .. |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 258 | 470 | 80 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) செய்த செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | 25·28 | 15·63 | 8·78 |
| 1974-75 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | 7·00 | .. | 11·16 |
| 1974-75-ல் (1974 டிசம்பர் வரை) செலவு செய்த தொகை (ரூ. இலட்சத்தில்). | 3·02 | .. | .. |
| 1974-75-ல் (1974 டிசம்பர் வரையில்) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | .. | இல்லை. | 120 |
| 1975-76 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு .. | 3·00 | .. | 7·00 |
| 1975-76 திட்ட இலக்கு .. .. .. | 30 | .. | 140·00 |

**5. தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதித் திட்டம்.**

மலைத் தோட்ட அதிபர்கள் தமது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, அவர்களுக்குக் கடனுதவி வழங்கும்பொருட்டு இந்திய அரசால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் தொழிற்சாலைத் தொழிலாளருக்கான மலிவு வீட்டுவசதித் திட்டத்தின் அமைப்பு முறை

கொண்டு சுமார் 400 வீடுகள் கட்டப்படும். மேற்சொன்னவை தவிர, இத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1,753 வீடுகளைக் கட்டக் கருதியுள்ளது.

குறைந்த செலவிலான சிறப்பு வீட்டு வசதித் திட்டத்தின் கீழும், பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தின் கீழும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் பற்றியும், கட்டப்பட்டுவரும் வீடுகளின் எண்ணிக்கை பற்றியும் விவரங்கள் இணைப்பு I -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நான்காவது திட்டக் காலத்தில் முடிக்கப்பட்ட வீடுகள். | 176 | வீடுகள். |
| நான்காவது திட்டக்காலத்தில் செலவிடப்பட்ட தொகை. | ரூ. 59.91 | இலட்சம். |
| 1974–75-ல் (1974 டிசம்பர் வரையில்) செலவிடப்பட்ட தொகை. | ரூ. 52·13 | இலட்சம். |
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரையில்) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | 292 | வீடுகள். |
| 1975–76 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | ரூ. 40·00 | இலட்சம். |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான திட்டப் பயன் இலக்கு. | 400 | வீடுகள். |

8. நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

( i ) இத் திட்டம் 1959 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வகுக்கப்பட்டது. ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கு மேற்படுகிற ஆனால் ரூ. 18,000-க்கு மேற்படாதவர்களுக்கு வீட்டு வசதி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தாலும், அதன் கூட்டுறவுப் பிரிவாலும் நிறைவேற்றப்படுகிறது. வீடு ஒன்றுக்கு ரூ. 30,000 என்ற உயரளவிற்குட்பட்டு, நிலத்தின் விலையுட்பட, வீடு கட்டுவதற்காகும் விலையில் 80 சதவீதத்திற்கு மேற்படாத தொகை கடனாக வழங்கப்படுகிறது. கட்டுமானச் செலவு ரூ. 35,000-க்கு மேற்படக்கூடாது. நிலத்தின் விலை இதில் அடங்காது. தகுதி வாய்ந்தவர்களுக்கு விற்பனை செய்வதற்காக, அல்லது தகுதி வாய்ந்த தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக வீடுகள் கட்டும் பொருட்டு, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் இக்கடன்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. 1975-76 ஆம் ஆண்டில் மாநில வரவு-செலவுத் திட்டத்தில்



ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 20.00 இலட்சம் தொகையைக் கொண்டு 50 வீடுகள் கட்டுவதற்குத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் கருதியுள்ளது. மேற்சொன்னவை தவிர, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது நிதியைக் கொண்டு, இத்திட்டத்தின் கீழ் 1,125 வீடுகள் கட்டக் கருதியுள்ளது.

கூட்டுறவுப் பிரிவு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, வீடுகள் கட்டுவதற்குத் தனிப்பட்டவர்களுக்குக் கடன்கள் வழங்கி வந்தது. தற்போது தலைமைச் சங்கம் (தமிழ் நாடு வீட்டு வசதிச் சங்கம்) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் இணைக்கப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கி வருகிறது. எனவே, 1975-76 ஆம் ஆண்டிற்கு கூட்டுறவுத் துறையில், இத் திட்டத்திற்கு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

( நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் திட்டக் காலங்களில் எய்திய சாதனை :—

| | கூட்டுறவுச் சங்கங்கள். | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 838 | 776 |
| இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பயன்படுத்திய தொகை (ரூ. இலட்சத்தில்). | 139·50 | 209·15 |
| 1966–67 முதல் 1968–69 முடிய ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 146 | 489 |
| 1966–67 முதல் 1968–69 முடிய செலவிட்ட தொகை (ரூ. இலட்சத்தில்). | 37·50 | 83·01 |
| நான்காவது திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் (ரூ. இலட்சத்தில்). | 500·00 இரு துறைகளுக்கும். | |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969–74) செலவிட்ட தொகை (ரூ. இலட்சத்தில்). | 102·56 | 640 79 |

| (1) | கூட்டுறவுச் சங்கங்கள். (2) | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம். (3) |
|---|---|---|
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969–74). கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 546 | 2,528 |
| 1974–75 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | இல்லை | 25·00 |
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரையில்) செலவிட்ட தொகை. | 0·10 | 150·09 |
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரையில்) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | — | 471 |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | — | 20·00 |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு (வீடுகள்). | — | 50 |

### 9. நிலம் கையகப்படுத்தல்—வீட்டுமனை மேம்பாட்டுத் திட்டம்.

(i) நிலத்தின் விலைகளில் ஊக பேரங்களைத் தடுக்கும் பொருட்டும் வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தணிக்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை ஆதாயம் விரயம் அற்ற அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. இது நகரங்களுக்குள்ளும் வெளியிலும் பெருமளவு நிலங்களைக் கையகப்படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள, சிறிய நகரியங்களாக அல்லது நகர அண்மைப் பகுதிகளாக மேம்படுத்துகிறது; அப்பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீர்க் கால்கள், விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற ஏனைய பொது வசதிகளை அமைத்துத் தருகின்றது. இத்திட்டத்தின் கீழ் வீட்டுமனைகள், தனிப்பட்ட பொது மக்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கும் ஒதுக்கித் தரப்படுகின்றன. அவர்களில் சிலருக்கு வீடுகள்





அங்கணங்கள், குடியிருப்புகள் ஆகியன இலவச உரிமை அடிப்படையில் அளிக்கப்படுகின்றன. அவர்கள் 15 முதல் 20 ஆண்டுக் காலத்தில் மூலதன முதலீடுகளைத் திருப்பிச் செலுத்துகின்றனர். பொது ஏலத்தில் மனைகள் ஒதுக்கப்படுகின்ற அல்லது விற்பனை செய்யப்படுகின்ற விற்பனை நிபந்தனையின் கீழ் அந்த மனைகள் குறைந்தது ஐந்தாண்டுக் காலத்திற்குள் வேறொருவருக்கு விற்கப்படக் கூடாது என்பதோடு அக்கால அளவிற்குள் அவர் அந்த மனையில் வீடு ஒன்றைக் கட்ட வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. இவ்வாறு இதில் ஓர் அக்கறை ஏற்படுத்திய பிறகு அந்த நபர் அந்த நிலத்தை அல்லது வீட்டை மற்றவருக்கு விற்பனை செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. இவ்விதி நிலத்தின் மதிப்பில் ஊக பேரம் செய்வதைத் தடுக்கிறது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மேம்படுத்திய அங்கணங்களை மனையொன்றுக்கு ரூ. 7,000 முதல் 8,500 வரை விற்கிறது. தவிரவும், மூலையிலுள்ள மனைகள் பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் அளிக்கும் நிதியிலிருந்தும், மனை விற்றுமுதல் தொகைகளிலிருந்தும் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 125 ஏக்கர் பரப்பை மேம்படுத்துவதற்காக 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ii) நிலம் கையகப்படுத்தல்—நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டக் காலத்தில் எய்திய சாதனை.

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலத்தில் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு. | 2,759·54 ஏக்கர்கள். |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 383·23 இலட்சம். |
| 1966–67 முதல் 1968–69 முடிய ஆண்டுத் திட்டங்களில் மேம்படுத்தப்பட்ட நிலப் பரப்பு. | 796·15 ஏக்கர்கள். |
| 1966–67 முதல் 1968–69 முடிய செலவு செய்த தொகை. | ரூ. 449·14 இலட்சம். |
| நான்காவது திட்டத்தில் செலவு செய்த தொகை. | ரூ. 1,096·98 இலட்சம். |
| நான்காவது திட்டத்தில் (1969–74) மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு. | 854·31 ஏக்கர்கள். |
| 1974–75 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | ரூ. 25·00 இலட்சம். |

தொகுதியினருக்கான விட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்க, 1975-76 ஆம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(   ) குறைந்த வருவாயினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் திட்ட காலங்களில் எய்திய சாதனை.

| (1) | கூட்டுறவுச் சங்கங்கள். (2) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். (3) |
|---|---|---|
| முதலாம், இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 3,223 | 2,142 |
| முதலாம், இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்). | 215 10 | 169·67 |
| 1966–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 737 | 1,126 |
| 1966–67 முதல் 1968–69 வரையில் செலவு செய்த தொகை (ரூ. இலட்சத்தில்). | 60 50 | 76·19 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு (வீடுகள்). | இரு பிரிவுகளுக்கும் 6,300. | |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1969–74). | 1,883 | 2,244 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவு செய்த தொகை (1969–74) (ரூ. இலட்சத்தில்). | 190·96 | 295 95 |
| 1974–75 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | 0·98 | 30·00 |
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரையில்) செலவு செய்த தொகை (ரூ. இலட்சத்தில்). | 0·04 | 106·50 |
| 1974–75 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1974 டிசம்பர் வரையில்.) | 1 | 845 |



| (1) | கூட்டுறவுச் சங்கங்கள். (2) | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம். (3) |
|---|---|---|
| 1975–76 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | — | 3·00 |
| 1975–76 ஆம் ஆண்டு திட்ட இலக்கு (வீடுகள்). | — | 150 |

7. குறைந்த செலவிலான வீட்டு வசதி சிறப்புத் திட்டம்.

இத்திட்டம், மாவட்டங்களிலுள்ள, பொருளாதார வகையில் நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு குறைந்த விலையில் வீடுகள் கட்டித் தருவதற்காக வகுக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ. 4,200 அல்லது அதற்குக் குறைவாக வருவாயுள்ளவர்கள் பொருளாதார வகையில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளனர். இது ஒரு புதிய திட்டம். இது 1973 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ் நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம், தற்போது எங்கெல்லாம் சிலர் கூட்டாகச் சேர்ந்து ஏற்கெனவே வீட்டு மனைகள் வாங்கியிருந்து, தமக்கு வீட்டு வசதி வாரியம் வீடுகளை கட்டித் தர வேண்டுமென விரும்புகின்றனரோ, அங்கெல்லாம் செயற்படுத்தப்படுகிறது. இதற்காக பொருத்தமான அரசு நிலங்கள் கிடைக்குமாயின் அவை வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றித் தரப்படும். அரசு நிலங்கள் கிடைக்காத இடங்களில் நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டின் உயர்ந்த அளவு விலை ரூ. 13,000 ஆகும். பணியைத் தொடங்கு முன்னர், தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களால், கட்டிடச் செலவில் 10 சதவீதம் முதற்கண் செலுத்தப்பட வேண்டும். எஞ்சிய 90 சதவீதம் தொகை, 20 ஆண்டுக்கு மேற்படாத கால அளவில் சமவீதத் தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். மாதத் தவணையாக ரூ. 60 முதல் ரூ. 100 வரை செலுத்தலாம். இவ்வீடுகள் கட்டுவதற்காகும் செலவு ரூ. 6,000 முதல் ரூ. 13,000 வரையில் ஆகும். வீடு கட்டுவதற்காகும் செலவு இயன்ற அளவிற்குக் குறைவாக இருக்கும் வகையில் கட்டிட வடிவமைப்பில் சிறப்புக் கூறுகள் கையாளப்பட்டுள்ளன. மாநில வீட்டு வசதி வாரியம், சிறப்பு நேர்வாக, மேற்பார்வைக் கட்டணமாக 6¼ சதவீதம் மட்டுமே வசூலிக்கிறது. வீட்டுவசதி—நகர்ப் பகுதி வளர்ச்சிக் கழகமும் மாநில அரசும் முக்கியமாக இதற்கு நிதியுதவி அளிக்கின்றன. 1975-76 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 40 இலட்சம் தொகையைக்

[1975 ஏப்ரல் 4

| | |
|---|---|
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரை) செலவு செய்த தொகை. | ரூ. 124·53 இலட்சம். |
| 1974–75 ஆம் ஆண்டில் (1974 டிசம்பர் வரை) மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு. | ஏறத்தாழ 200 ஏக்கர்கள். |
| 1975–76 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | ரூ. 50·00 இலட்சம். |
| 1975–76 ஆம் ஆண்டுத் திட்ட இலக்கு .. | 125 ஏக்கர்கள். |

*10. தமிழ் நாடு அரசுப் பணியாளருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.*—(i) இத் திட்டம் ரூ. 200 அடிப்படை ஊதியம் பெறும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையிலே வீட்டு வசதி அளிப்பதை முதன்மையாகக் கருதி வகுக்கப்பட்டது. மாதமொன்றுக்கு ரூ. 200-க்குக் குறைவாக அடிப்படை ஊதியம் பெறும் கடைநிலை ஊழியர்கள் போன்ற அரசு ஊழியர்களுக்கு இத்திட்டம் 1973 ஏப்ரலிலிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வகை அரசு ஊழியர்களுக்கு தமிழ் நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 10 சதவீதத் தொகை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து, குறைந்த வாடகையாக, சம்பளத்தில் 10 சதவீதத்தை மாநில அரசுப் பணியாளர் ஊதியத்திலிருந்து பிடித்துக் கொள்கின்றது. அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படுவதில்லை. சாதாரணமாக, இந்த அடிப்படையில் பிடிக்கப் படுகின்ற வாடகை கட்டுப்படியாகும் வாடகையை விடக் குறைவாகும். தொகை வேறுபாடு, மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசு ஊழியர்கள் அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின்றனர். திட்டத்தைச் செயல் படுத்தும் முகவர் அமைப்பாக தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் உள்ளது. கட்டி முடிக்கப்பட்ட பின், வீடுகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பினையும் அதுவே ஏற்கிறது. கட்டிடங்களின் உரிமை மாநில அரசினிடம் நிலை பெறுகிறது. பொதுவாக, இத் திட்டத்தின் கீழ் வீடுகள், அரசாங்க நிலங்களில் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 750 அங்கணங்கள் கட்டுவதற்காக 1975-76-ல் ரூ. 150 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்ட சாதனை.**

| | |
|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.** | **2,228** |



1975 ஏப்ரல் 4]

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் பயன் படுத்தப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 187·15 |
| 1966–67 முதல் 1968–69 வரையில் ஆண்டுத் திட்டக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,560 |
| 1966–67 முதல் 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 130·82 |
| நான்காவது திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்). | 500·00 |
| நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) .. | 5,000 |
| 1969–74 நான்காவது திட்ட காலத்தில் கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 3,166 |
| 1969–74-ல் செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட் சத்தில்). | 467·53 |
| 1974–75-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | 125·00 |
| 1974–75-ல் செலவிடப்பட்ட தொகை (1974 டிசம்பர் வரை) (ரூ. இலட்சத்தில்). | 101·11 |
| 1974–75-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1974 டிசம்பர் வரை). | 294 அங்கணங்கள்/வீடுகள். |
| 1975–76-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | 150·00 |
| 1975–76-க்கான திட்ட இலக்கு | 750 அங்கணங்கள். |

*11. கிராம வீட்டு வசதித் திட்டம்.*—கிராம மக்களுக்குச் சீரான முறையில் வீடுகள் கட்டுவதற்கு வகை செய்யும் இத்திட்டம், மாநில அரசுத் திட்டமாகும். இத்திட்டம் போதுமான சுகாதார வசதிகள், ஏனைய வசதிகளுடன் ஒரே சீரான வீடுகளைக் கட்டுவதற்கு வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த அளவு மூன்று சென்டுகள் நிலம் வைத்திருந்து, ஆண்டுக்கு ரூ. 6,000-க்கு மேற் படாமல் வருமானம் உள்ள நபர்களுக்கு வீடு கட்டுவதற்கு ரூ. 4,000 என்ற உயரளவிற்குட்பட்டு கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு 80 சதவீதம் முன் பணமாக அனுமதிக்கப்படுகிறது. எஞ்சிய 20 சதவீதம் பணியின்போது

தொழிலாளர் கூலி, உள்ளூர் பொருட்கள், சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கட்டிடம் கட்டுபவர்களால் ஈடு செய்யப்பட வேண்டும். இக்கடன் 20 ஆண்டுத் தவணைகளுக்கு மேற்படாமல் தனி வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும்.

தன் கையே தனக்கு உதவி என்ற அடிப்படையில் கிராம மக்கள் தங்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள அவர்களே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு கட்டப்படும் வீடுகள் அவர்களுக்கு நல்ல இடவசதியை அளிப்பதுடன் அவை 20 ஆண்டுகளில் அவர்களுக்குச் சொந்தமாகின்றன.

வீடுகள் கட்டப்பட்டுள்ள கிராமங்களில் தெருக்கள் அமைத்தல், சாக்கடைகள் கட்டுதல் போன்ற வசதிகளுக்காக கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000-ம் வரை நிதியுதவியை இத்திட்டம் அளிக்கிறது.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, 'நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறையின்' தனிப்பட்ட பிரிவான 'கிராம வீட்டு வசதிப் பிரிவு' என்றழைக்கப் படும் பிரிவால் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ் நாட்டில் 17,000 கிராமங்களுக்கு மேல் 375 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கி உள்ளன. இத்திட்டம் 1,450 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1,710 கிராமங்களுக்கு பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1973-74-லிருந்து இத்திட்டம் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இம்மாநிலத்தில் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான கடன் விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

கிராம வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்.

| கால அளவு. | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | கட்டி முடிக்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| முதல் திட்டம் .. .. | முதல் திட்டக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. | |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில். | 54·91 | 2,053 |
| 1966-67-லிருந்து 1968-69 வரை உள்ள ஆண்டுத் திட்டக் காலங்களில். | 29·73 | 472 |



| கால அளவு | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கட்டி முடிக்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நான்காவது திட்டக் காலத்தில் .. | 129·91 | 2,638 |
| 1973-74 ஆம் ஆண்டில் மட்டும் .. | 72·16 | 1,459 |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால நிதி ஒதுக்கம் (தற்காலிகமானது). | 500·00 | 12,500 |
| 1974-75-ல் செலவிட்ட தொகை (1974 டிசம்பர் வரை). | 37·24 | .. |
| 1974-75-ல் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் (1974 டிசம்பர் வரை.) | .. | 635 |
| 1975-76-க்கான வேலைத் திட்டம். | | |
| 1975-76-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 30·00 | .. |
| 1975-76 திட்ட இலக்கு .. | | 750 |

12. மலைப் பகுதிகளில் சிறு குடில்கள்.—உதகமண்டலம், கோடைக்கானல், ஏற்காடு, ஜவ்வாது மலை போன்ற மலைப் பகுதிகளில் சிறு குடில்களைக் கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியம் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கோடைக்கானலில் 10 குடில்களும், உதகமண்டலத்தில் 10 குடில்களும் கட்டப்பட்டன.

13. பர்மா அகதிகளுக்கான வீடுகள்.—( ) ரூபாய் 16.28 லட்சம் செலவில், மதுரை, மதுரை தென் வட்டம், தனக்கன்குளம் கிராமத்தில், 407 இரட்டை வீடுகளைக் (Catenary type twin houses.) கட்டும் பணி, அரசின் வருவாய்த் துறையால் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த 407 வீடுகளில் 200 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கேட்டுக்கொண்டதற்கு இணங்க வீட்டின் வடிவமைப்பு மாற்றப்பட்டு, ரூ. 2.33

(ii) வியாசர்பாடி ஏரிக்கரையில், ரூ. 113.16 லட்சம் செலவில் பர்மா அகதிகளுக்காக 2,760 வீடுகள் கட்டும் பணி குறித்த மற்றொரு திட்டத்திற்கு அரசு ஒப்பளித்து, அப்பணியைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம்

ஒப்படைத்துள்ளது. சற்று விசாலமான வீடு வேண்டும் என்று அகதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வீட்டின் வடிவமைப்பு மாற்றப்பட்டு, ரூ. 2.33 கோடி செலவில் 2,760 வீடுகள் கட்டுவதற்கான திருத்தப்பட்ட திட்டமொன்று வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டுமானங்களுக்கு முன்னரே தயாரித்து வைக்கப்பட்ட பாளங்களைப் (Prefabricated slabs) பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. நாளொன்றுக்கு ரூபாய் ஒன்று சேர்க்கும் திட்டம்.—(i) இப்புதிய திட்டம் 1972 ஜனவரியில் பொங்கல் நாளன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஒவ்வொருவரும், தனது வீட்டில், வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் சிறப்பு உண்டியல் பெட்டியில், நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் சேமித்து வரவேண்டும். ஒவ்வொரு திங்கள் இறுதியிலும், இந்த உண்டியலில் சேமிக்கப்பட்ட தொகையானது, வீட்டு வசதி வாரியத்திடமுள்ள, அந்த நபரின் கணக்கில், உரிய முறையில் வரவு வைக்கப்படும். அவ்வாறு சேமிக்கப்படும் தொகையானது, ஐந்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, வீட்டு மனை வாங்கி, அதில் வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

( ) இத்திட்டத்தில் 1,439 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவர்களிடமிருந்து ரூ. 27 லட்சம் வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதன்மீது சிண்டிகேட் வங்கி ஐந்தாவது ஆண்டின் இறுதியில் வரவாகும் தொகை உட்பட ரூ. 100 லட்சம் கடனுகை அளிக்கும். சிண்டிகேட் வங்கியின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் நாளொன்றுக்கு ஒரு ரூபாய் சேமிக்கும் திட்டத்தில் போதுமான அளவு விண்ணப்பதாரர்கள் சேர்ந்து விட்டதால் அத்திட்டம் தற்போது முடித்து வைக்கப்பட்டுள்ளது. இந்திய வங்கி தற்போது இதுபோன்றதொரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. பொதுமக்களுக்கு விண்ணப்பங்கள் முதலியன கொடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் 150 பேர் சேர்ந்துள்ளனர்.

15. கிராமப் புறத்திலுள்ள நிலமற்ற தொழிலாளிகளுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.—கிராமப் பகுதிகளிலுள்ள நிலமற்ற விவசாயிகளுக்கு வீட்டு மனைகள் வழங்க மத்திய அரசுத் துறை திட்டம் ஒன்றை இந்திய அரசு வகுத்துள்ளது. மாநில திட்டப் பணியல்லாத இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும். கிராமப் பகுதிகளில் நிலமற்ற விவசாயிகளின் குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்க மாநில அரசுக்கு உதவியளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் வீட்டுமனை பெறும் விவசாயிக்கு ஏற்கெனவே சொந்தமாக வீட்டு மனை இருக்கக் கூடாது. அல்லது அவருக்குச் சொந்தமான நிலத்தில் கட்டப்





பட்டுள்ள வீடு அல்லது குடிசை இருக்கக் கூடாது. 33,692 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் ரூ. 75.51 இலட்சம் செலவில் இத்திட்டம் 1972-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறைந்த அளவுத் தேவைத் திட்டத்தின் கீழ் 1974-75 ஆம் ஆண்டுக்கான மாநிலத் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்று மாநில அரசு ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால், அது மாநில அரசின் நிதி வாயில்களைப் பொறுத்ததாகும்.

16. தக்கைக்கல் தொழிற்சாலை.—(i) இப்புதியக் கட்டிடப் பொருளின் சிறப்புத் தன்மையானது எடையில் குறைந்தது (செங்கல் அல்லது அடர்த்தியக் கற்கலவையில் 1/3 அல்லது ¼ பங்கு) அதிக பளுவையும் அழுத்தத்தையும் தாங்கக்கூடியது. கட்டுமானங்களின் தாங்க முடியாத பளுவைக் குறைக் கின்றது. மரத்தைப் போலவே அது பயன்படுகிறது. தக்கைக் கற்களின் சிறப்புத் தன்மைகள் காரணமாக செலவில் சிக்கனம் ஏற்படுவது அல்லாமல், கட்டுவதற்கு ஆகும் காலமும் அரைப் பங்கு குறைகின்றது.

(ii) இந்தியாவில் முதல் தக்கைகல் தொழிற்சாலையை நிறுவும் திட்டம், புது டெல்லி தேசியக் கட்டிடய கட்டும் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. மத்திய அரசு போலந்து நாட்டுடன் பொருளாதாரக் கூட்டுறவு உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டுள்ளது. அதன்கீழ், ஏனைய இனங்களுள், ரூ. 3.65 கோடி செலவில் சென்னைக்கு அருகில் எண்ணூரில் தக்கைக் கல் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதும் ஒன்றாகும். மக்களின் பெரும் பகுதி வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றும் பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம், தக்கைக் கல் தொழிற்சாலையை நிறுவி, அதனை நடத்தும் பணி ஒப்படைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான நிதியை மத்திய அரசு தமிழ்நாடு அரசு மூலமாக வழங்கியுள்ளது. இந்த நிதி வட்டியுடன் திருப்பிச் செலுத்தத் தக்க கடன் தொகையாகும்.

(iii) சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்குவதற்காக இத் தொழிற்சாலை 1972 பிப்ரவரியில் தொடங்கப்பட்டது. இந்தத் தக்கைக் கல்லின் தரத்தையும், சிறப்புத் தன்மையையும் மாற்றாது, உற்பத்திச் செலவை மட்டும் கணிசமான அளவிற்குக் குறைக்கும் நோக்குடன், அடுத்து இருக்கும் எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலிருந்து வெளியாகும் தொழிற்சாலைக் கழிவாகிய சாம்பலைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

(iv) இத்திட்டத்திற்காக இந்திய அரசு இதுவரை ரூ. 260 லட்சம் அனுமதியளித்துள்ளது. எஞ்சிய ரூபாய் 105 லட்சத்தை வழங்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆனால் இத்தொழிற்சாலைக்கான சாத

னங்களை இறக்குமதி செய்வதற்காக ரூ. 104.40 லட்சத்தை அவர்கள் கொடுத்துள்ளதால், எந்திர தொகையை வழங்க இயலாது என இந்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் அவர்கள் இந்தத் தொழிற்சாலையை ஒரு கம்பெனியாக மாற்றுமாறு கருத்தும் தெரிவித்துள்ளனர். இக்கருத்து இந்த அரசின் பரிசீலனையிலுள்ளது.

(V) இந்தத் தொழிற்சாலையை மாநிலத் திட்டத்தின்கீழ் கொண்டு வரவும், 1974-75 திருத்த மதிப்பீடு, 1975-76 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஒவ்வொன்றிலும் ரூ. 30 லட்சத்திற்கு வகை செய்யவும் இந்த அரசு கருதியுள்ளது.

## 17. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

1923-ம் ஆண்டிலேயே கூட்டுறவுகளின் மூலம் வீட்டு வசதியை மேம்படுத்த வேண்டியதின் அவசியம் உணரப்பட்டிருந்தது. கூட்டுறவுகளின் மூலம் வீட்டு வசதிக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டங்களை மாநில அரசு வகுத்தது. 1972-73 வரை அரசால் வகை செய்யப்பட்ட நிதி வாயில்களைக் கொண்டு கூட்டுறவுகள் மூலம் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்டன.—

(i) மாநில வீட்டு வசதித் திட்டம்.

(ii) நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

(iii) குறைந்த வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

(iv) தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம். (இந்திய அரசின் நிதியுதவி பெறுவது.)

(V) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம். 1961-62 முதல் 1972-73 வரை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 7.85 கோடி கடன்கள் வழங்கப்பட்டன. மேற்சொன்ன நிதியுதவியைக் கொண்டு 18,500 வீடுகள் கட்டப்பட்டன.

1972 மார்ச் திங்கள் அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் மத்தியக் கூட்டுறவு வீட்டு அடைமானச் சங்கத்துடன் (தற்போதுள்ள தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க நிறுவனம்) தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். மாநிலத்திலுள்ள வீட்டு வசதிச் சங்கங்கள் அனைத்திற்கும் இந்தச் சங்கம் தலைமைச் சங்கமாகயிருக்கும்.



இச்சங்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு சேப்பாக்கம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரிடமிருந்து தமிழ் நாடு வீட்டு வசதி (கூட்டுறவுப் பிரிவு) வாரியத் தலைவருக்கு மாற்றப்பட்டது. இவர் அலுவல் முறையில் மாநிலத்திலுள்ள வீட்டு வசதி குறித்த கூட்டுறவுகளின் பதிவாளர் ஆவார். அரசின் மேற்சொன்ன கொள்கைகளையொட்டி வீட்டு வசதிச் சங்கங்களுக்கு தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய கூட்டுறவுப் பிரிவின் மூலம் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்காக அரசுக் கடன் வழங்க அனுமதியளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க நிறுவனம், தங்களுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் வீட்டு வசதிக் கடன் தேவைகளைக் கவனிக்கிறது. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க நிறுவனத்தின் நிர்வாகம் 25 உறுப்பினர்கள் கொண்ட இயக்குநர்கள் வாரியத்திடம் உள்ளது.

தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க நிறுவனம் தன் வரிசையில் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது :—

| | |
|---|---|
| (i) ஆரம்ப வீட்டு வசதிச் சங்கங்கள் (ஆரம்ப வீட்டு அடைமானச் சங்கங்கள்). | 122 |
| (ii) ஏனைய வகை வீட்டு வசதிச் சங்கங்கள். | 290 |

இச்சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களின் கடன் தேவையை நிறைவு செய்வதற்காக, தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திடமிருந்து கடன் பெற்றுள்ளன. 1971-72, 1972-73, 1973-74, 1974-75 (1975 பிப்ரவரி 8 ஆம் நாள் வரை). கூட்டுறவு ஆண்டுகளில் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அனுமதித்து, வழங்கிய கடன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | அனுமதிக்கப்பட்ட கடன். | வழங்கப்பட்ட கடன். |
|---|---|---|
| | (ரூபாய் | இலட்சத்தில்.) |
| 1971–72 | 212·86 | 200·63 |
| 1972–73 | 501·43 | 304·05 |
| 1973–74 | 1,009·81 | 676·16 |
| 1974–75 | | |
| (1-7-74 முதல் 8-2-75 வரை) | 6·76 கோடி. | 3·49 கோடி. |

ஆராய்ச்சியின் முடிவுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில் நுட்ப அறிவை வீட்டு வசதி வாரியம் பாமரர்கள் பயன்படுத்திய அளவிற்கு நாட்டில் உள்ள வேறெந்த நிறுவனமும் பயன்படுத்தவில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம்.

(i) உறுதியாக்கப்பட்ட காங்கிரீட் கூரைக்குப் பதிலாக, கெட்டியான [illegible] பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கூரை தரமான மாற்றுக் கூரையாகப் பயன்படுத்தப்படுகிறது. கூரைக்காகும் செலவு இதன் மூலம் 40 சதவிகிதம் வரையில் குறைகிறது.

(ii) சிமிட்டி, இரும்பு உருக்குப் பொருள், காங்கிரீட் ஆகியவற்றைப் பயன்படுத்தாமல் கட்டிடங்கள் கட்டுவதற்காகும் செலவைக் குறைக்கும் முறையில் எளிமையான அமைப்பு வீடுகள் முறையை வீட்டு வசதி வாரியம் கண்டுபிடித்துள்ளது. இவ்வகையான வீடு கட்டுவதற்கு வழக்கமான முறையில் கட்டப்படும் வீட்டிற்காகும் செலவில் 50 சதவிகிதமே செலவாகும். வீட்டு வசதி வாரியம் இவ்வகையான வீட்டைப் பிரபலப்படுத்தியுள்ளது. பர்மா அகதிகளுக்கு சென்னை மாநகரில் 200 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான வீட்டிற்கு பொதுமக்களிடையே வரவேற்பு காணப்படுகிறது.

(iii) எளிமையான வடிவமைந்த வீடுகள் கட்டுவதற்கு செங்கற்களுக்குப் பதிலாக [illegible] களிமண் கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஓடுகள் பெருமளவில் வெப்பம் தாங்குவதுடன் இலேசான எடை கொண்டவையாகவும் இருக்கின்றன.

(iv) ஓரிரண்டு மாடிக் கட்டிடம் கட்டுவதற்குக் கூட, உறுதியாக்கப்பட்ட சிமிட்டிச் சட்டங்கள், செங்கல், ஆகியவற்றைக் கொண்டு கட்டிடம் கட்டும் [illegible] கட்டுமான முறை, களிமண் நிலங்களில் வீடுகள் கட்டுவதில் சிக்கனமானதாகக் காணப்படுகிறது.

(v) இந்நாட்டிலுள்ள வெட்டு மரங்களை நல்ல முறையில் பயன்படுத்தும் வகையில், மிகவும் அதிகமாகக் கிடைக்கக்கூடிய தேக்கு மரத்தைப் பாது [illegible] கொண்டு, இரண்டாம் தர வெட்டு மரங்களை [illegible] பயன்படுத்தியிருந்த நிறுவனங்களில் வீட்டு வசதி வாரியமும் ஒன்றாகும்.

(vi) குறைந்த வருமானமுள்ள தொகுதியைச் சேர்ந்த மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, ஆயத்த வீடுகள் கட்டும் முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரியான வீடு கட்டுவதற்கு சாதாரணமான வீடு கட்டுவதற்காகும் செலவில் 1/3 பங்குதான் செலவாகும். இதன் மூலம் இரும்பு உருக்குப் பொருளில் 30 சதவிகிதமும், கட்டுமானச் செலவில் 75 சதவிகிதமும் குறையும்.



(vii) ஆயத்த வீடுகள் தயாரிப்பதில் மணல்-சிமிட்டிக் கலவைகள் பயன்படுத்துவது வீட்டு வசதி வாரியம் பிரபலப்படுத்தவிருக்கும் மற்றோர் உத்தியாகும். இம்முறையைக் கொண்டு நான்கு அடுக்குகள் வரை கட்ட இயலும். இம்முறையினால் 20 முதல் 30 சதவிகிதம் வரை சிமிட்டியும், இரும்பு உருக்கும் மிச்சமாவதுடன் கட்டுமானச் செலவில் 25 சதவிகிதமும் மிச்சமாகும்.

(viii) சிமிட்டிக்குப் பதிலாக, பகுதியளவில் மாற்றுப் பொருளாக சாம்பலையே வீட்டு வசதி வாரியம் பெருமளவில் பயன்படுத்தி வருகிறது. இதன் மூலம் இரண்டு முதல் ஐந்து சதவிகிதம் வரை செலவு மிச்சமாகும்.

(ix) இவ்வகையில் செலவு குறைப்புக்கான ஏற்பாடுகளுடன், "உயரளவு சிக்கனம்" என்ற நோக்கத்தை அடையும் பொருட்டு கட்டிடக் கலையிலும், கட்டுமான வகையிலும், சிக்கனமாகச் செலவாகக்கூடிய வடிவமைப்புகள் அவசியம் என்பதை வீட்டு வசதி வாரியம் எப்போதுமே வலியுறுத்தி வருகிறது.

26 பொதுக் கடன்.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆண்டுதோறும் ரூபாய் 100 லட்சம் வரையில் பொதுக் கடன்கள் திரட்டுவதற்கு தமிழ் நாடு அரசு அனுமதியளித்துள்ளது. பொருள்கள் இருப்பு குறித்த சான்றிதழ்கள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றின் பேரில் வட்டியும் அசலும் திருப்பிக் கொடுக்கப்படுவதற்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. இதுவரையில் வீட்டு வசதி வாரியம் ரூ. 880 லட்சம் பொதுக்கடன் திரட்டியுள்ளது.

பத்து சதவிகிதம் வட்டியுடன் கூடிய 8 ஆண்டுகளுக்குக் குறைவில்லா கால அளவிலான உத்தரவாதம் இல்லாத கடனீட்டு உறுதி ஆவணக் கடன்களை நடப்பாண்டில் பெறுவதற்குத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பொதுமக்களிடமிருந்து குறித்த கால கையடைத் தொகை வடிவில் வீட்டு வசதி வாரியம் நிதி வாயில்களைத் திரட்டுகிறது. ஆறு மாதங்கள், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் கால அளவிற்கான கையடைத் தொகைகள் மீது கொடுக்கப்படும் வட்டி வீதங்கள் அண்மையில் முறையே 8 சதவிகிதம், 10 சதவிகிதம், 11 சதவிகிதம், 12 சதவிகிதம் ஆக உயர்த்தப் பட்டுள்ளன.

27. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம்.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ரூ. 1,206 இலட்சம் செலவிலான 29 திட்டங்களுக்கு புது டில்லி வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (HUDCO) ரூ. 1,027 இலட்சம் கடன் உதவியைப் பெற அனுமதி பெற்றுள்ளது. இதில் 1973-74-ல்

**தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அளித்த உயர்ந்த அளவு கடன்.**

தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அனுமதித்த உயர்ந்த அளவுக் கடன் ரூ. 30,000 ஆகும். அது இருபது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப் படத்தக்கதாகும். கிராம வீட்டு வசதிச் சங்கங்களைப் பொறுத்தவரை உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கப்படத்தக்க உயர்ந்த அளவு கடன் ரூ. 10,000. இக்கடன்கள் மூன்று தவணைகளில் 30 சதவீதம், 60 சதவீதம், 10 சதவீதம் என்ற வீதங்களில் வழங்கப்படுகின்றன. அடைமானப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த பின்னர் முதல் தவணைக் கடனும், நிலமட்டம் வரை கட்டு மானப் பணி முடித்த பின்னர் இரண்டாவது தவணைக் கடனும், கட்டிடத்தைக் கட்டி முடித்த பின்னர் மூன்றாவது தவணைக் கடனும் வழங்கப்படுகிறது.

**சங்கத்தின் நிதிவாயில்கள்.**

இந்த அரசு அளிக்கும் உத்தரவாதத்தின் பேரில் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறும் கடனே சங்கத்தின் கடனுதவி நடவடிக்கைகளுக்கு முக்கியமான நிதி வாயில்களாகும். இது தவிர, சங்கத்தின் பங்கு மூலதனத் திற்காக அரசு ரூ. 85 லட்சம் அளித்துள்ளது. சங்கம் ரூ. 50 லட்சம் அளவுக்குப் பெற்ற குறித்த கால வைப்பீடுகளுக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் வழங்கிய ரூ. 19.92 கோடி மதிப்புள்ள 15 கடன்களுக்கு தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் சார்பில் தமிழக அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. சங்கம் தான் வழங்கும் கடனுக்கு ½ சதவீத ஆதாயத்தை மட்டுமே அனுமதிக்கிறது. 1974-75-ல் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் ரூ. 6 கோடி கடன் வழங்கியுள்ளது. 1975-76-ல் சங்கம் ரூ. 10 கோடி முதல் 12 கோடி வரை கடன் வழங்கும் நிலையில் இருக்கும்.

தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் கடன் வழங்கு நடவடிக்கைகளும், கடன் பெறுவதற்கு தகுதியுள்ள நபர்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

வீட்டு வசதிச் சங்கங்களின் ஏதாவது ஒன்றின் ஆட்சி வரம்பிற்குள் வீட்டு மனையை வைத்துள்ள 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் சங்கத்தின் உறுப்பினரா வதற்கு தகுதியுடையவராவார். தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணைக்கப்பட்ட தொடக்க வீடு அடைமானச் சங்கம், கட்டிடச் சங்கம் அல்லது கிராம வீட்டு வசதிச் சங்கம் ஆகியவற்றின் மூலமாக தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் கடன்களை வழங்குகிறது. இக் கடன்கள் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். வயது தொகுதிக்கேற்ப இந்தக் கால அளவு முடிவு செய்யப்படுகிறது.





45 வயது வரை—20 ஆண்டுக் கடன்.

50 வயது வரை—15 ஆண்டுக் கடன்.

55 வயது வரை—10 ஆண்டுக் கடன்.

குடும்பத்தின் சம்பாதிக்கும் உறுப்பினர்களின் வயதையொட்டி கடனைத் திருப்பித் தருவதற்கான கால அளவு முடிவு செய்யப்படுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவருடைய வருமானமே முக்கியமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**18. மீனவருக்கான திட்டம்.**

பூம்புகாரிலுள்ள மீனவர்களுக்காக தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் குறைந்த செலவில் 100 வீடுகள் (இரட்டை வீடுகள் வகை) கட்டுவதற்கான புதியதொரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதலில் 250 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 132 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு பூம்புகாரில் உள்ள மீனவர்களுக்கு தவணைக் கொள் முதல் அடிப் படையில் 5-2-1975-ல் ஒதுக்கப்பட்டுள்ளன. 1975 ஏப்ரல் இறுதிக்குள் 368 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**19. கைவினைஞர்களுக்கு வீட்டு மனைகள்.**—இயந்திரக்கம்மியர், தையல் தொழிலாளிகள், சலவைத் தொழிலாளிகள், முடிதிருத்துவோர் போன்ற கைவினைஞர்களுக்குச் சுமார் 900 சதுர அடி முதல் 1,000 சதுர அடிவரை வீட்டு மனைகள் பலவற்றை வீட்டுவசதி வாரியம் வழங்கி வருகிறது. மனையின் விலை 10 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தத் தக்கதாகும். எஞ்சிய தொகை மாதத் தவணைகளில் பத்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும். வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று விரும்புவோர்களுக்கு, குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான அதே நிபந்தனைகளின்கீழ், வீடு கட்டித் தரும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொள்கிறது.

**20. முன்னாள் படை வீரர்களுக்கு வீடு கட்டித் தருதல்.**—கிடைக்கக்கூடிய மனைகளில், வாடகைக் கொள்முதல் அடிப்படையில் முன்னாள் படை வீரர் களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஒன்றை வீட்டு வசதி வாரியம் மேற் கொண்டுள்ளது. ஓய்வு பெற்ற முப்படை வீரர்களுக்கான ஒருங்கிணைந்த நிதியிலிருந்து (Amalgamated Funds) இத் திட்டத்திற்கான முழுத் தொகையும் அளிக்கப்படுகிறது. கடைகள் கட்டுதல், மணமாகாதோருக்கான குடியிருப்புக்களைக் கட்டுதல், சிற்றுண்டிச் சாலைகள் கட்டுதல் போன்ற ஆதாய

மலிக்கும் திட்டத்தின்கீழ், 'ஜவான் பவன்' கட்டும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. விற்பனை நிலையம் ஒன்று முன்னரே கட்டப்பட்டுள்ளது. அது திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வருகிறது.

**21. நெசவாளர்களுக்கு வீடுகள்.**—பொருளாதார வகையில் பின்தங்கிய நெசவுத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகளுடன் வீடுகள் கட்டித்தர இத்திட்டம் விழைகிறது. நெசவாளர் ஒவ்வொருவரும் வீடு கட்டும் பணி தொடங்கப்படுவதற்கு முன்னர் நிலம், கட்டிடம் ஆகியவற்றிற்காகும் செலவில் 10 சதவீதத் தொகையை செலுத்த வேண்டும். எஞ்சிய 90 சதவீதத் தொகை 10 ஆண்டுக் கால அளவில் மாதாந்தத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு வீடும் (i) 233 சதுர அடி பரப்பளவு கொண்ட அறை ஒன்றும், (ii) சுமார் 200 சதுர அடி கொண்ட பணிக் கொட்டகை ஒன்றுமாக இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் தேவைப்படும் மனை சுமார் 900 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையில் பரப்பளவு கொண்டதாயிருக்கும். வீடு பணிக் கொட்டகை, நிலம் உட்பட அதன் நிலத்திற்கான செலவு உட்பட இதன் மொத்த மதிப்பு ரூபாய் 9,000 ஆகும். செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதன் தேவை உணரப்படும் ஏனைய மாவட்டங்களிலுள்ள நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

**22. காவலர் வீட்டு வசதித் திட்டம்.**—வாடகையற்ற குடியிருப்புகள் அல்லது வாடகையில்லாத குடியிருப்புகளுக்குப் பதிலாக வீட்டு வாடகைப்படி பெறுவதற்குக் காவல் துறை சார்ந்த பணியாளர் தகுதியுடையவராவர். காவல் துறை சார்ந்த பணியாளர்களுக்கு சென்னை மாநகருக்குள்ளும் மாவட்டங்களிலும், குறைந்த வாடகையில் பொருத்தமான வீடுகள் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டும், மனநிறைவு, ஒழுங்குமுறை, ஒழுக்கம் ஆகியவற்றின் நலன் கருதியும் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இத்திட்டம் முதலில் 1955-56-ல் கொண்டுவரப்பட்டது. காவல்துறை சார்ந்த பணியாளர்களில் 80 சதவீதத்தினருக்கு குடியிருப்புகளைக் கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 30-9-1974 வரை காவலர் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ. 759.05 லட்சம் செலவிடப்பட்டது. 30—9—1974 அன்றுள்ளவாறு, இன்ஸ்பெக்டர்களிலிருந்து காவலர்கள் வரை உள்ள நிர்வாகப் படையினரின் மொத்த எண்ணிக்கை 45,050 ஆகும். இதில் 80 சதவீதம் 36,040 ஆகும். 30-9-1974 வரை காவலர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 22,003 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இது 61 சதவீதமாகும். இத்திட்டத்திற்காக 1975-76-ல் ரூ. 32.52 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



**23. துணைப் பணித் திட்டம்.**—தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகக் கட்டடத்திற்கு எதிரே 1,31,000 சதுர அடி நிலப்பரப்பில் பத்து மாடி அலுவலகக் கட்டடம் ஒன்று ரூ. 64 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது 1975 ஏப்ரலில் கட்டி முடிக்கப்படும். அதேபோல, மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் கோழிப் பண்ணைக்கு எதிரே 55,000 சதுர அடி நிலப்பரப்பில் ரூ. 26 லட்சம் செலவில் எட்டு மாடி அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இது 1975 ஜூனில் கட்டி முடிக்கப்படும். அறிஞர் அண்ணா நகரில், உள்ளவர்களின் பயனுக்காக அண்ணா நகரில் ரூ. 6.3 லட்சம் செலவில் கடைகள் உள்ள நான்கு மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இது 1975 ஏப்ரலில் கட்டி முடிக்கப்படும். மறைமலை துணை நகரிலும் மணலியிலும் சென்னை பெருநகர் மேம்பாட்டு அதிகார மன்றத்தின் சார்பாக வீடுகள் கட்டும் பணியைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

**24. தச்சுப் பிரிவு.**—கதவுகளும், சன்னல்களும் தயாரிப்பதற்கென்று வீட்டு வசதி வாரியம் சென்னையில் தச்சு வேலைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வனத் துறைகளிடமிருந்து குறைந்த விலையில் பல்வேறு வகையான மரங்கள் தருவித்து வைக்கப்படுகின்றன. மரத்தைப் பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. மரத்தைப் பயனுள்ளதாக்குவதற்கான பிரிவு ஒன்றும் நிறுவக் கருதப்பட்டுள்ளது. இப்பிரிவின் வளர்ச்சிக்காக வீட்டு வசதி-நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் ரூபாய் 14 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

**25. செலவுக் குறைப்பு குறித்த ஆராய்ச்சியும் மேம்பாடும்.**—வீடற்று, பொருளாதார வகையில் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக அல்லது குறைந்த வருவாய் பெறும் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்க நேர்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வீட்டு வசதியளிக்கும் பொறுப்பேற்றுள்ள முதன்மையான நிறுவனமாக விளங்கும் வீட்டு வசதி வாரியம், தன்னிடமுள்ள குறைந்த நிதிவாயில்களைக் கொண்டே, மிகப் பெரும்பான்மையான மக்களுக்குச் சேவை செய்வதைத் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, அனைத்து வகையிலும் விலைவாசிகள் உயர்ந்துள்ள போதிலும், கட்டடச் செலவை உயராமல் பார்த்துக் கொள்வதற்கு அரும்பாடுபட்டு வருகிறது.

இம்முயற்சியில், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியமானது மத்திய அறிவியல்-ஆராய்ச்சி நிறுவனம், மத்தியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் போன்ற ஆராய்ச்சி அமைப்புகளுடனும், தேசிய கட்டிட நிறுவனம், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு வருகிறது. இவ்வகையில் இயன்ற இடங்களிலெல்லாம் மேற்சொன்ன

ரூ. 263.05 இலட்சத்தையும், 1974-75-ல் (31-12-1974 வரை) ரூ. 116.20 இலட்சத்தையும் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் பெற்றிருந்தது. 31-3-1975 இறுதிக்குள் ரூ. 98.73 இலட்சத்தையும், 1975-76-ல் ரூ. [illegible] இலட்சத்தையும் வீட்டு வசதி வாரியம் கடனாகப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்களின்படி பொருளாதார நிலையில் நலிந்த மக்களுக்காக 2,421 வீடுகள், 846 வீட்டு மனைகள், 182 ஆயத்த வீடுகள், 96 அங்கணங்கள், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 979 வீடுகள், 514 வீட்டு மனைகள், 422 அங்கணங்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 185 வீடுகள், 963 வீட்டு மனைகள், 718 அங்கணங்கள், உயர் வருமானம் உடையவர்களுக்கு 24 வீடுகள், 548 வீட்டு மனைகள் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றில் 31-12-1974 அன்றுள்ளவாறு 386 வீடுகள், 1,575 மனைகள், 284 அங்கணங்கள் முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள் வீட்டு வசதி வாரியத்திடம் ஏற்கெனவே உள்ளன என்பதும், பல்வேறு வருமானப் பிரிவினருக்குப் பயன்படும் வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி வசதிகள் பயன்படுத்தப்படும் என்பதும் இத்திட்டங்களின் சிறப்பு அம்சங்களாகும்.

அதில் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் அளிக்கும் கடன்கள் நேர்வில், பொருளாதார வகையில் நலிந்தோர் செலுத்த வேண்டிய தொகை மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்திற்கும் மேற்பட்டிருக்கும் நேர்வில், ஆண்டு ஒன்றுக்கு 6.5 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு செலுத்தப்படும் தொகை மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்திற்குக் குறைந்தால் ஆண்டு ஒன்றுக்கு 7.5 சதவீதமும் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 6.5 சதவிகிதத்தில் வட்டியுடன் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களுக்குரிய அசல் தொகையையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. கீழ்க்காணும் திட்டங்களுக்கான அடைமானப் பத்திரங்கள் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது.

1. கொரட்டூர் நகர்ப்புற வசதித் திட்டம்.

2. கலூர் கருணாநிதி நகரில் மரவேலைப் பிரிவு.

3. அமிஞ்ஜூர் அண்ணா நகர் மேற்கு நீட்டிப்புப் பகுதியில் ஓரளவு இயந்திர முறையிலான செங்கல் சூளை.

4. கடலூரில் வீட்டு வசதித் திட்டம்.



5. தஞ்சாவூரில் வீட்டு வசதித் திட்டம்.

6. அமிஞ்ஜூர் அண்ணா நகர் மேற்குக் கட்டிடப் பகுதித் திட்டம்.

7. திருவான்மியூர் புறநகர்ப் பகுதித் திட்டம் முதல்நிலை.

அனுமதி வழங்கப்படும் திட்டங்களுக்காக, வாரியத்தின் சொத்துக்களை அடைமானம் வைக்கச் சொல்லும் தனது கொள்கையை வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் தற்போது திருத்தி அமைத்துள்ளது. இத்திட்டங்களுக்கு அரசு உத்திரவாதத்தையும் ஏற்றுக் கொள்கிறது.

வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் ஒப்பளிக்கப்பட்ட வீட்டு வசதி திட்டங்களின் விவரங்கள் இணைப்பு I -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

28. **அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன் பணம் வழங்கல்.**—மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படுகின்றன. அரசில் நிலையான பணியாளர்களும், அல்லது ஐந்தாண்டு தொடர்ந்து அரசின்கீழ் பணி புரிபவர்களும், இந்த மாநிலத்தில் பணி புரியும் அனைத்திந்தியப் பணி அதிகாரிகளும், இக் கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன் பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துவதற்குள்ள திறனின் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது. 1974-75-ல் இதற்காக அரசு ரூ. 80 லட்சம் நிதி ஒதுக்கியிருந்ததற்கு மாறாக, 1975-76-ல் ரூ. 155 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. 1975-76-லிருந்து இச்செலவை திட்டம் சாராப் பணிகளிலிருந்து செலவிடுவதற்குப் பதிலாக திட்டத்தில் சேர்த்த பணிகளிலிருந்து செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1974-75-ல் 582 பணியாளர்களுக்கு இந்த முன் பணம் வழங்கப்பட்டது. 1975-76-ல் 1,000 பணியாளர்களுக்கு முன் பணம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

29. இம்மாநிலத்தில் நிலவும் நெருக்கடியான வீட்டு வசதிப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு இயன்ற முயற்சியை எடுத்துள்ளது என்பது தெளிவாகும். பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், கிராம வீட்டு வசதிப் பிரிவு, அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் போன்ற பல அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்புகளுக்கு அரசு இயன்றவரை நிதிகளை

[1975 ஏப்ரல் 4

ஒதுக்குகிறது. நமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு நிதி மட்டும் போதாது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது நிதிகளை முதலீடு செய்வதுடன் அரசு உத்தரவாதத்தின் பேரில் வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவியையும் பெறுகிறது, குடிசை மாற்றுத் திட்டங்களுக்காக நிதியுதவியளிக்குமாறு தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுள்ளது.

1958-59-லிருந்து பல்வேறு சமூக வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து இந்த அரசு பெற்ற கடன் ரூ. 2,187 இலட்சம். இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தனி திட்ட நிதிகளோடு சேர்க்கப்பட்டுள்ளன. 1974-75-ல் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழக நிதியிலிருந்து ரூ. 1,065 இலட்சம் ஒதுக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசு ரூ. 126 இலட்சம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகிற கடுமையான நிதிக் கொள்கை காரணமாக வீட்டு வசதித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் முன் வரவில்லை. எனவே, பல்வேறு வகைப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்ய சமூக வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வசதி இல்லாமையே முக்கியமான தடையாகும் என்பது வெள்ளிடைமலை.

## இணைப்பு III

(122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)

## தமிழ் நாட்டில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

### முகவுரை.

நாகரிகமான எந்தச் சமுதாயத்திலும் குடிசைப் பகுதிகள் இருப்பது சகஜமாகும். சென்னை மாநகரிலோ அல்லது இந்தியாவிலோ குடிசைப் பகுதிகள் அமைந்திருப்பது வியப்புக்குரியதல்ல. அது உலகெங்கிலுமுள்ள மிகப் பெரியதோர் சமூகப் பிரச்சினையாகும். இருக்கின்ற வேறுபாடு எல்லாம் அந்தக் குடிசைப் பகுதிகள் எந்த அளவிற்கு இருக்கின்றன, அவற்றின் தன்மை யாது என்பது தான்.

பட்டி தொட்டிகளில் உள்ள பாமர மக்கள் வேலை நாடி நகரங்களுக்கு வருவதே குடிசைப் பகுதிகள் அமைவதற்கு முக்கிய காரணமாகும். சென்னை மாநகரத்தைப் பொருத்தமட்டில் முதன் முதலில் மீனவர்கள்தான் கடலோரத்தில் குடிசை அமைத்தார்கள். அதனைத் தொடர்ந்து நகராட்சி துப்புரவாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் ஆகியோர் குடிசைகளை அமைத்துக் கொண்டனர்.



1975 ஏப்ரல் 4]

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதே இந்த அரசின் கொள்கையாகும். வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் குடிசைப் பகுதி மாற்றுப் பணியும் ஒரு கூறாகும். திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து பெறும் பயனைவிட குடிசைவாசிகளை மாடி குடியிருப்புகளில் குடியேற்றி அவர்களின் வாழ்க்கை மலரச் செய்வதே சிறப்பான பணி என்பது உண்மையாகும்.

## 1. சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை ஏழு ஆண்டுக் கால அளவுக்குள் அறவே மாற்றியமைக்கும் திட்டம் ஒன்றைப் படிப்படியாக நிறைவேற்றத் தொடங்குவது என்று 1970-ல் அரசு முடிவு செய்தது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்திற்குப் புதிய வடிவம் கொடுக்கவும் அரசு முடிவு செய்தது. இந்த முடிவிற்கிணங்க, அரசு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒன்றை அமைத்து, சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம் குறித்த கீழ்க்காணும் பணிகளை அதனிடம் ஒப்படைத்தது:-

(1) குடிசைப் பகுதி மேம்பாட்டைக் காட்டிலும், குடிசைப் பகுதியை மாற்றியமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து குடிசைப்பகுதி மாற்றும் பணியின் அளவை மதிப்பிடுதல்;

(2) புதிதாகக் குடிசைப் பகுதிகள் தோன்றுவதைத் தடுப்பதற்குச் செம்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(3) சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளை ஏழாண்டுக் காலத்திற்குள் அறவே நீக்கும் நோக்குடன், குடிசைப் பகுதி மாற்றுத் திட்ட நடவடிக்கைகளை [illegible] ஒருங்கிணைத்தல்;

(4) குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தி, மேம்படுத்தி, குடியிருப்புகள் கட்டுதலும், அவசியமான பணிகளை மேற்கொள்ளுதலும்;

(5) வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள், மேம்படுத்தப்பட்ட மனைகள், மற்றைய உடைமைகளைப் பேணி வருதல், ஒதுக்குதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வகையில் பயன்படுத்துதல்;

(6) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்தல்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த 1971 ஆம் ஆண்டில் தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/நீக்க) சட்டம் ஒன்றை அரசு இயற்றியுள்ளது. குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும் உடனடியாக, குடிசைவாசிகள் ஒவ்வொருவருடைய சமூகப் பொருளாதாரச் சூழல் பற்றிய விவரங்களோடு குடிசைப் பகுதிகள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காக, சமூகப் பொருளாதார ஆய்வுப் பணி நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் 7,37,531 பேர் மக்கட் தொகையுடன் (1,63,804 குடும்பங்கள்) 1,202 குடிசைப்பகுதிகள் உள்ளதாக ஆய்வுப் பணிப் புலப்படுத்தியது.

தொடக்க நிலை ஆய்வின் அடிப்படையில், மிகவும் மோசமான குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் குறுகிய கால திட்டம் ஒன்றை வாரியம் வகுத்து, குடிசைப் பகுதிகளில் வேலையைத் தொடங்கியது.

குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதில் நடைமுறையில் எதிர் நோக்கியுள்ள இடையூறுகளை இங்கு விளக்குவதுதான் இதுவரை ஆற்றிய பணியின் சிறப்பு மிகுதியாகும். நல்ல வசதிகளையுடைய குடியிருப்புகளைக் கட்டுவதற்காக மக்களைத் தயார்படுத்துவதற்கு குடிசைகளை அப்புறப்படுத்தும் போது, குடிசைவாசிகள் வேலை செய்யும் இடங்களை விட்டு வெகு தொலைவில் அவர்களைத் தற்காலிகமாகக் குடியேற்றுவதில் சொல்லொணாத் துயரங்கள் ஏற்படுகின்றன என்பதாலேயே, முதலில் சொல்லிய குடிசைப் பகுதிக்கு மிக அருகாமையிலேயே அவர்களைக் குடியமர்த்துவதற்கு மாற்றிடம் தேட வேண்டியுள்ளது. சென்னை மாநகரைப் போன்றதோரிடத்தில் காலி மனையைத் தேடிக் கண்டுபிடிப்பதில் உள்ள பிரச்னையைச் சொல்லித் தெரிய வேண்டும் என்பதல்ல. அங்குக் குடியிருப்பது 18 திங்களுக்கு அல்லது அதைப்போன்ற தற்காலிகக் கால அளவுக்குத்தான் என்ற போதிலும், விளக்கு வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியின் ஒத்துழைப்புடன் தற்காலிகக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியதாயுள்ளது. மனைச் சொந்தக்காரர்கள் சம்மதத்துடன் ஓரளவு அரைகுறையாகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் இடிந்துக் தள்ளப்பட வேண்டியுள்ளது. குடிசைவாசிகளில் பலர் தனி வீடுகளையே விரும்புவதால், பல அடுக்குகள் கொண்ட குடியிருப்புகளில் வசிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டியுள்ளது. எனவே, கடந்த நான்காண்டு குறுகிய கால அளவில் மிகவும் மோசமான 82-க்கும் மேலான குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்தும், பதினாயிரம் குடியிருப்புகளைக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டிக் கொடுத்தும் ஆற்றியுள்ள பணி மிகவும் போற்றுவதற்குரியதாகும்.

## 2. சமூகப் பொருளாதார ஆய்வின் அறிக்கை.

குடிசைப் பகுதிகளை மாற்றுவதற்கு முன்னால் அவைகளின் நிலைமை, பரப்பளவு, வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை, குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலைமை ஆகியவற்றைப் பற்றி கணக்கெடுப்பது இன்றியமையாதது. வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது குடும்பங்களை அடையாளம் கண்டுகொள்வதற்குப் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்ட ஆய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட குடிசைப் பகுதிகளைப் பற்றிய கணக்கெடுப்பின்படி 1971-ல், 1,202 குடிசைப் பகுதிகள் சென்னை மாநகரத்தில் அங்கும் இங்குமாக சிதறிக் கிடந்தன. 1973-ல் சென்னை மாநகரம் 7,37,531 குடிசை வாழ் மக்களை உட்கொண்டிருக்கின்றது. 1,63,804 குடும்பங்கள் உள்ளன. 1961-ல் 4,12,168 மக்களைக் கொண்ட 97,851 குடும்பங்கள் இருந்தன. மொத்தமுள்ள மக்கள் தொகையில் 3,76,419 ஆண்களும், 3,61,112 பெண்களும் உள்ளனர். ஒரு குடும்பத்தின் சராசரி அளவு 4 முதல் 5 நபர்களாம். குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் 85·99 சதவீதம், இஸ்லாமியர்கள் 7·77 சதவீதம், கிருஸ்தவர்கள்



6·20 சதவீதம், மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 34·85 சதவீதமும், ஆதி ஆந்திரர் 1·43 சதவீதமும் ஆவர். எஞ்சியிருப்பவர்கள் புத்த மதம், சமண மதம், சீக்கிய சமயம் முதலியவற்றை தழுவியவர்களாகவும் உள்ளனர். குடிசை வாழ் மக்களில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், அருகாமையிலுள்ள மாநிலங்களிலிருந்தும் மற்ற வெளிநாடுகளிலிருந்தும் (பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் வந்த அகதிகள்) சென்னையில் குடியேறியிருக்கின்றனர். இவர்கள் 68,274 குடும்பங்கள் ஆகும். 41·88 சதவீதம் குடிசை வாழ் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஆனால் 1961-ல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 33·8 சதவீதம்தான் இருந்தது. 1961-ல் இருந்த நிலைமையைவிட அவர்களின் கல்வி நிலை ஓரளவு உயர்ந்திருக்கின்றது. குடிசை வாழ் மக்கள் பெரும்பாலும் தினக்கூலி பெற்று வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். அவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் காய்கறி விற்பவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், ரிக்ஷா ஓட்டுபவர்கள், கைவண்டி இழுப்போர், சிறு வாணிகம் செய்பவர்கள், மற்றும் உடலை வருத்தி கூலிவேலை செய்பவர்களும் இருக்கின்றனர். குடிசையில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 2,00,620 நபர்கள் (27·20 சதவீதம்) தொழிலாளர்கள். மொத்தமுள்ள 56·99 சதவீதம் தொழில் செய்ய தகுதியுடையவர்களில் 47·73 சதவீதம் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு குடிசை வாழ் குடும்பத்தின் சராசரி மாத வருமானம் 164 ரூபாய். மொத்தமுள்ள குடும்பங்களில் 17·87 சத வீதம் குடும்பங்களுக்கு மட்டும் மாத வருமானம் தலா 200 ரூபாய்க்கு மேல் இருக்கின்றது.

குறிப்பிடத்தக்க குடிசைப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைகள் போதிய இடவசதியில்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான குடிசைகள் மண், ஓலை, தகரம், கோணிகள் மற்றும் பலவகை பொருள்களால் கட்டப்பட்டுள்ளன. பருவ மழையில் அவைகள் இடிந்து வீழ்கின்றன. ஓலை மற்றும் கோணிகளால் குடிசைகள் கட்டப்பட்டுள்ளதால் எளிதில் தீப்பிடிக்கின்றன. பெரும்பாலான குடிசைகள் சுகாதாரமில்லாத இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையான குடும்பங்கள் 20 சதுர மீட்டருக்குக் குறைவான பரப்பளவுள்ள குடிசைகளில் வாழ்கின்றன. 53·24 சத வீதம் குடிசை வாழ் மக்கள் சொந்தக் குடிசைகளிலும், 45·09 சதவீதம் வாடகைக் குடிசைகளிலும், மற்றும் 1·67 சத வீதம் வாடகையின்றியும் வாழ்கின்றனர். வாடகைக்குக் குடியிருப்பவர்களில் 62·72 சதவீதம் 5 முதல் 10 ரூபாயும், 29·39 சதவீதம் 11 முதல் 20 ரூபாயும், 1·87 சதவீதம் 21 ரூபாயும் அதற்கு மேலும் எஞ்சியுள்ள 6·02 சதவீதம் 4 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் கொடுக்கின்றனர். சில குடிசைப் பகுதிகளில் நிலம் ஒருவருக்கும் அதில் கட்டப்பட்டுள்ள குடிசைகள் வேறொருவருக்கும் சொந்தமாக இருக்கின்றன. ஆனால் வாடகைக்கு குடியிருப்பவர்கள் இரண்டு பேருக்கும் வாடகை கொடுக்கின்றனர். இந்தப் பகுதிகளில் 7,37,531 மக்கள் வாழ்கின்றனர். மாநகரத்தில் மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். குடிசை வாழ் மக்கள் அடிப்படை வசதிகளில்லாமல், சுகாதாரமின்றி மிகவும் துயர் மிகுந்த வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அன்றாட அடிப்படை தேவைகளை சரிகட்டுவதற்குக்

ரூ. 263.05 இலட்சத்தையும், 1974-75-ல் (31-12-1974 வரை) ரூ. 116.20 இலட்சத்தையும் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் வழங்கியுள்ளது. 31-3-1975 இறுதிக்குள் ரூ. 98.73 இலட்சத்தையும், 1975-76-ல் ரூ. 498.12 இலட்சத்தையும் வீட்டு வசதி வாரியம் கடனாகப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்களின்படி பொருளாதார நிலையில் நலிந்த மக்களுக்காக 2,421 வீடுகள், 846 வீட்டு மனைகள், 182 ஆயத்த வீடுகள், 96 அங்கணங்கள், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 979 வீடுகள், 514 வீட்டு மனைகள், 422 அங்கணங்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 185 வீடுகள், 963 வீட்டு மனைகள், 718 அங்கணங்கள், உயர் வருமானம் உடையவர்களுக்கு 24 வீடுகள், 548 வீட்டு மனைகள் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றில் 31-12-1974 அன்றுள்ளவாறு 386 வீடுகள், 1,575 மனைகள், 284 அங்கணங்கள் முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள் வீட்டு வசதி வாரியத்திடம் ஏற்கெனவே உள்ளன என்பதும், பல்வேறு வருவாய்த் தொகுதியினருக்குப் பயன்படும் வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி வசதிகள் பயன்படுத்தப்படும் என்பதும் இத்திட்டங்களின் சிறப்பு அம்சங்களாகும்.

அதில் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் அளிக்கும் கடன்கள் நேர்வில், பொருளாதார வகையில் நலிந்தோர் செலுத்த வேண்டிய தொகை மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்திற்கும் மேற்பட்டிருக்கும் நேர்வில், ஆண்டு ஒன்றுக்கு 6.5 சதவிகித வட்டி வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு செலுத்தப்படும் தொகை மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்திற்குக் குறைந்தால் ஆண்டு ஒன்றுக்கு 7.5 சதவிகிதமும் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 6.5 சதவிகிதத்தில் வட்டியுடன் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களுக்குரிய அசல் தொகையையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. கீழ்க்காணும் திட்டங்களுக்கான அடைமானப் பத்திரங்கள் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு ஆண்டொன்றுக்கு 7.5 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது.

1. கொரட்டூர் நகர்ப்புற வசதித் திட்டம்.

2 கலைஞர் கருணாநிதி நகரில் மரவேலைப் பிரிவு.

3. அறிஞர் அண்ணா நகர் மேற்கு நீட்டிப்புப் பகுதியில் ஓரளவு இயந்திர முறையிலான செங்கல் சூளை.

4. கடலூரில் வீட்டு வசதித் திட்டம்.





5. தஞ்சாவூரில் வீட்டு வசதித் திட்டம்.

6. அறிஞர் அண்ணா நகர் மேற்குக் கட்டிடப் பகுதித் திட்டம்.

7. திருவான்மியூர் புறநகர்ப் பகுதித் திட்டம் முதல்நிலை.

அனுமதி வழங்கப்படும் திட்டங்களுக்காக, வாரியத்தின் சொத்துக்களை அடைமானம் வைக்கச் சொல்லும் தனது கொள்கையை வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் தற்போது திருத்தி அமைத்துள்ளது. இத்திட்டங்களுக்கு அரசு உத்திரவாதத்தையும் ஏற்றுக் கொள்கிறது.

வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் ஒப்பளிக்கப்பட்ட வீட்டு வசதி திட்டங்களின் விவரங்கள் இணைப்பு I -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

28. **அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன் பணம் வழங்கல்.**—மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படுகின்றன. அரசில் நிலையான பணியாளர்களும், அல்லது ஐந்தாண்டு தொடர்ந்து அரசில் பணி புரிபவர்களும், இந்த மாநிலத்தில் பணி புரியும் அனைத்திந்தியப் பணி அதிகாரிகளும், இக் கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன் பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துவதற்குள்ள திறனின் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது. 1974-75-ல் இதற்காக அரசு ரூ. 80 லட்சம் நிதி ஒதுக்கியிருந்ததற்கு மாறாக, 1975-76-ல் ரூ. 155 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. 1975-76-லிருந்து இச்செலவை திட்டம் சாராப் பணிகளிலிருந்து செலவிடுவதற்குப் பதிலாக திட்டத்தில் சேர்ந்த பணிகளிலிருந்து செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1974-75-ல் 592 பணியாளர்களுக்கு இந்த முன் பணம் வழங்கப்பட்டது. 1975-76-ல் 1,000 பணியாளர்களுக்கு முன் பணம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

29. இம்மாநிலத்தில் நிலவும் நெருக்கடியான வீட்டு வசதிப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு இயன்ற முயற்சியை எடுத்துள்ளது என்பது தெளிவாகும். பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், கிராம வீட்டு வசதிப் பிரிவு, அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் போன்ற பல அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்புகளுக்கு அரசு இயன்றவரை நிதிகளை

ஒதுக்குகிறது. நமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு நிதி மட்டும் போதாது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது நிதிகளை முதலீடு செய்வதுடன் அரசு உத்தரவாதத்தின் பேரில் வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவியையும் பெறுகிறது, குடிசை மாற்றுத் திட்டங்களுக்காக நிதியுதவியளிக்குமாறு தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுள்ளது.

1958-59-லிருந்து பல்வேறு சமூக வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து இந்த அரசு பெற்ற கடன் ரூ. 2,187 இலட்சம். இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தனி திட்ட நிதிகளோடு சேர்க்கப்பட்டுள்ளன. 1974-75-ல் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழக நிதியிலிருந்து ரூ. 1,065 இலட்சம் ஒதுக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசு ரூ. 126 இலட்சம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகிற கடுமையான நிதிக் கொள்கை காரணமாக வீட்டு வசதித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் முன் வரவில்லை. எனவே, பல்வேறு வகைப் பட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்ய சமூக வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வசதி இல்லாமையே முக்கியமான தடையாகும் என்பது வெள்ளிடைமலை.

## இணைப்பு III

(122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## தமிழ் நாட்டில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

### முகவுரை.

நாகரிகமான எந்தச் சமுதாயத்திலும் குடிசைப் பகுதிகள் இருப்பது சகஜமாகும். சென்னை மாநகரிலோ அல்லது இந்தியாவிலோ குடிசைப் பகுதிகள் அமைந்திருப்பது வியப்புக்குரியதல்ல. அது உலகெங்கிலுமுள்ள மிகப் பெரியதோர் சமூகப் பிரச்சினையாகும். இருக்கின்ற வேறுபாடு எல்லாம் அந்தக் குடிசைப் பகுதிகள் எந்த அளவிற்கு இருக்கின்றன, அவற்றின் தன்மை யாது என்பது தான்.

பட்டி தொட்டிகளில் உள்ள பாமர மக்கள் வேலை நாடி நகரங்களுக்கு வருவதே குடிசைப் பகுதிகள் அமைவதற்கு முக்கிய காரணமாகும். சென்னை மாநகரத்தைப் பொருத்தமட்டில் முதன் முதலில் மீனவர்கள்தான் கடலோரத்தில் குடிசை அமைத்தார்கள். அதனைத் தொடர்ந்து நகராட்சி துப்புரவாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் ஆகியோர் குடிசைகளை அமைத்துக் கொண்டனர்.



ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதே இந்த அரசின் கொள்கையாகும். வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் குடிசைப் பகுதி மாற்றுவாரியம் ஒரு படையாகும். திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து பெறும் பயனைவிட குடிசைவாசிகளை மாடி குடியிருப்புகளில் குடியேற்றி அவர்களின் வாழ்க்கையை மலரச் செய்வதே சிறப்பான பணி என்பது உண்மையாகும்.

### 1. சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை ஏழு ஆண்டுக் கால அளவுக்குள் அறவே மாற்றியமைக்கும் திட்டம் ஒன்றைப் படிப்படியாக நிறைவேற்றத் தொடங்குவது என்று 1970-ல் அரசு முடிவு செய்தது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்திற்குப் புதிய வடிவம் கொடுக்கவும் அரசு முடிவு செய்தது. இந்த முடிவிற்கிணங்க, அரசு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒன்றை அமைத்து, சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டம் குறித்த கீழ்க்காணும் பணிகளை அதனிடம் ஒப்படைத்தது:-

(1) குடிசைப் பகுதி மேம்பாட்டைக் காட்டிலும், குடிசைப் பகுதியை மாற்றியமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து குடிசைப்பகுதி மாற்றும் பணியின் அளவை மதிப்பிடுதல்;

(2) புதிதாகக் குடிசைப் பகுதிகள் தோன்றுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(3) சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளை ஏழாண்டுக் காலத்திற்குள் அறவே நீக்கும் நோக்குடன், குடிசைப் பகுதி மாற்றுத் திட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் திட்டமிட்டு ஒருங்கிணைத்தல்;

(4) குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தி, மேம்படுத்தி, குடியிருப்புகள் கட்டுதலும், அவசியமான பணிகளை மேற்கொள்ளுதலும்;

(5) வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள், மேம்படுத்தப்பட்ட மனைகள், ஏனைய உடைமைகளைப் பேணி வருதல், ஒதுக்குதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வகையில் பயன்படுத்துதல்;

(6) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்தல்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த 1971-ஆம் ஆண்டில் தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/நீக்க) சட்டம் ஒன்றை அரசு இயற்றியுள்ளது. குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும் உடனடியாக, குடிசைவாசிகள் ஒவ்வொருவருடைய சமூகப் பொருளாதாரச் சூழல் பற்றிய விவரங்களோடு குடிசைப் பகுதிகள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காக, சமூகப் பொருளாதார ஆய்வுப் பணி நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் 7,37,531 பேர் மக்கட் தொகையுடன் (1,63,804 குடும்பங்கள்) 1,202 குடிசைப்பகுதிகள் உள்ளதாக ஆய்வுப் பணிப் புலப்படுத்தியது.

தொடக்க நிலை ஆய்வின் அடிப்படையில், மிகவும் மோசமான குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் குறுகிய காலத் திட்டம் ஒன்றை வாரியம் வகுத்து, குடிசைப் பகுதிகளில் வேலையைத் தொடங்கியது.

குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதில் நடைமுறையில் எதிர் நோக்கியுள்ள இடர்ப்பாடுகளை இங்கு விளக்குவதால் இதுவரை ஆற்றிய பணியின் சிறப்பு தெரியவரும். நல்ல வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளைக் கட்டுவதற்காக மக்களைத் தயார்படுத்துவதற்கு குடிசைகளை அப்புறப்படுத்தும் போது, குடிசைவாசிகள் வேலை செய்யும் இடங்களை விட்டு வெகு தொலைவில் அவர்களைத் தற்காலிகமாகக் குடியேற்றுவதில் சொல்லொணாத் துயரங்கள் ஏற்படுகின்றன என்பதாலேயே, முதலில் சொன்ன குடிசைப் பகுதிக்கு வெகு அருகாமையிலேயே அவர்களைக் குடியமர்த்துவதற்கு மாற்றிடம் தேட வேண்டியுள்ளது. சென்னை மாநகரைப் போன்றதோரிடத்தில் காலி மனையைத் தேடிக் கண்டுபிடிப்பதில் உள்ள பிரச்னையைச் சொல்லித் தெரிய வேண்டும் என்பதல்ல. அங்குக் குடியிருப்பது 18 திங்களுக்கு அல்லது அதைப்போன்ற தற்காலிகக் கால அளவுக்குத்தான் என்ற போதிலும், விளக்கு வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியின் ஒத்துழைப்புடன் தாற்காலிகக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியதாயுள்ளது. மனைச் சொந்தக்காரர்கள் சம்மதத்துடன் ஓரளவு அரைகுறையாகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் இடித்துத் தள்ளப்பட வேண்டியுள்ளது. குடிசைவாசிகளில் பலர் தனி வீடுகளையே விரும்புவதால், பல அடுக்குகள் கொண்ட குடியிருப்புகளில் வசிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டியுள்ளது. எனவே, அடுத்த நான்காண்டு குறுகிய கால அளவில் மிகவும் மோசமான 82-க்கும் மேலான குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்தும், பதினாறாயிரம் குடியிருப்புகளைக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டிக் கொடுத்தும் ஆற்றியுள்ள பணி மிகவும் போற்றுவதற்குரியதாகும்.

### 2. சமூகப் பொருளாதார ஆய்வின் அறிக்கை.

குடிசைப் பகுதிகளை மாற்றுவதற்கு முன்னால் அவைகளின் நிலைமை, பரப்பளவு, வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை, குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலைமை ஆகியவற்றைப் பற்றி கணக்கெடுப்பது இன்றியமையாதது. வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது குடும்பங்களை அடையாளம் கண்டுகொள்வதற்குப் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்ட ஆய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட குடிசைப் பகுதிகளைப் பற்றிய கணக்கெடுப்பின்படி 1971-ல், 1,202 குடிசைப் பகுதிகள் சென்னை மாநகரத்தில் அங்கும் இங்குமாக சிதறிக் கிடந்தன. 1973-ல் சென்னை மாநகரம் 7,37,531 குடிசை வாழ் மக்களை உட்கொண்டிருக்கின்றது. 1,63,804 குடும்பங்கள் உள்ளன. 1961-ல் 4,12,168 மக்களைக் கொண்ட 97,851 குடும்பங்கள் இருந்தன. மொத்தமுள்ள மக்கள் தொகையில் 3,76,419 ஆண்களும், 3,61,112 பெண்களும் உள்ளனர். ஒரு குடும்பத்தின் சராசரி அளவு 4 முதல் 5 நபர்களா. குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் 85·99 சதவீதம், இஸ்லாமியர்கள் 7·77 சதவீதம், கிருஸ்தவர்கள்





6·20 சதவீதம், மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 34·85 சதவீதமும், ஆதி ஆந்திரர் 1·43 சதவீதமும் ஆவர். எஞ்சியிருப்பவர்கள் புத்த மதம், சமண மதம், சீக்கிய சமயம் முதலியவற்றை தழுவியவர்களாகவும் உள்ளனர். குடிசை வாழ் மக்களில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், அருகாமையிலுள்ள மாநிலங்களிலிருந்தும் மற்ற வெளிநாடுகளிலிருந்தும் (பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் வந்த அகதிகள்) சென்னையில் குடியேறியிருக்கின்றனர். இவர்கள் 68,274 குடும்பங்கள் ஆகும். 41·88 சதவீதம் குடிசை வாழ் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஆனால் 1961-ல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 33·8 சதவீதம்தான் இருந்தது. 1961-ல் இருந்த நிலைமையைவிட அவர்களின் கல்வி நிலை ஓரளவு உயர்ந்திருக்கின்றது. குடிசை வாழ் மக்கள் பெரும்பாலும் தினக்கூலி பெற்று வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். அவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் காய்கறி விற்பவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், ரிக்ஷா ஓட்டுபவர்கள், கைவண்டி இழுப்போர், சிறு வாணிகம் செய்பவர்கள், மற்றும் உடலை வருத்தி கூலிவேலை செய்பவர்களும் இருக்கின்றனர். குடிசையில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 2,00,620 நபர்கள் (27·20 சதவீதம்) தொழிலாளர்கள். மொத்தமுள்ள 56·99 சதவீதம் தொழில் செய்ய தகுதியுடையவர்களில் 47·73 சதவீதம் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு குடிசை வாழ் குடும்பத்தின் சராசரி மாத வருமானம் 164 ரூபாய். மொத்தமுள்ள குடும்பங்களில் 17·87 சத வீதம் குடும்பங்களுக்கு மட்டும் மாத வருமானம் தலா 200 ரூபாய்க்கு மேல் இருக்கின்றது.

குறிப்பிடத்தக்க குடிசைப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைகள் போதிய இடவசதியில்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான குடிசைகள் மண், ஓலை, தகரம், கோணிகள் மற்றும் பலவகை பொருள்களால் கட்டப்பட்டுள்ளன. பருவ மழையில் அவைகள் இடிந்து வீழ்கின்றன. ஓலை மற்றும் கோணிகளால் குடிசைகள் கட்டப்பட்டுள்ளதால் எளிதில் தீப்பிடிக்கின்றன. பெரும்பாலான குடிசைகள் சுகாதாரமில்லாத இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையான குடும்பங்கள் 20 சதுர மீட்டருக்குக் குறைவான பரப்பளவுள்ள குடிசைகளில் வாழ்கின்றன. 53·24 சத வீதம் குடிசை வாழ் மக்கள் சொந்தக் குடிசைகளிலும், 45·09 சதவீதம் வாடகைக் குடிசைகளிலும், மற்றும் 1·67 சத வீதம் வாடகையின்றியும் வாழ்கின்றனர். வாடகைக்குக் குடியிருப்பவர்களில் 62·72 சதவீதம் 5 முதல் 10 ரூபாயும், 29·39 சதவீதம் 11 முதல் 20 ரூபாயும், 1·87 சதவீதம் 21 ரூபாயும் அதற்கு மேலும் எஞ்சியுள்ள 6·02 சதவீதம் 4 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் கொடுக்கின்றனர். சில குடிசைப் பகுதிகளில் நிலம் ஒருவருக்கும் அதில் கட்டப்பட்டுள்ள குடிசைகள் வேறொருவருக்கும் சொந்தமாக இருக்கின்றன. ஆனால் வாடகைக்கு குடியிருப்பவர்கள் இரண்டு பேருக்கும் வாடகை கொடுக்கின்றனர். இந்தப் பகுதிகளில் 7,37,531 மக்கள் வாழ்கின்றனர். மாநகரத்தில் மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். குடிசை வாழ் மக்கள் அடிப்படை வசதிகளில்லாமல், சுகாதாரமின்றி மிகவும் துயர் மிகுந்த வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அன்றாட அடிப்படை தேவைகளை சரிகட்டுவதற்குக்

களுக்கும் வகை செய்தல்; (5) மழைக் காலங்களில் மழைத் தண்ணீரால் வெள்ளம் வருதல், தண்ணீர் தேங்கி நிற்றல் ஆகியவற்றிலிருந்து அப்பகுதிகளை விடுவிப்பதற்காக மழைநீர் வடிகால்களை அமைத்தல்.

### 6. ஆதாயம் தரும் திட்டங்கள்.

குடியிருப்புகளுக்கு ஏற்படும் வாடகை இழப்பை சரிக்கட்டுவதற்காக அரசால் ஆண்டுதோறும் தரப்படுகின்ற பெரிய உதவித் தொகைச் சுமையைக் குறைப்பதற்காக பல்வேறு வழிகள் ஆலோசிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றே ஆதாயம் தரும் தொழில் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், கடைகள், காட்சி அறைகள், உணவு விடுதி, அலுவலகக் கட்டிடம், திருமணமாகாதவர்கள் தங்கும் அறைகள், கிடங்குகள் முதலானவை கட்டப்பட இருக்கின்றன. இத்திட்டங்கள் பல்வேறு குடிசை மாற்றுத் திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களுக்குத் தேவையான முதலீடு நீண்ட காலக் கடனாக வணிக வங்கிகளிடமிருந்தும், இந்திய அரசு நிறுவனமான "ஹட்கோ" விடமிருந்தும் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு கடன்கள் முழுவதையும் 10 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திய பின்னர், இக் கட்டிடங்கள் வாரியத்திற்கு நிலையான வருவாயை ஈட்டித் தரும்.

இவ்வாரியம் இதுகாறும் ரூ. 1.34 கோடி மதிப்பீட்டில் 11 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. நான்கு திட்டங்களில் பணி துவங்கப்பட்டுள்ளது. மற்ற திட்டங்களுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் தீர்மானித்தல் போன்ற ஆரம்ப கட்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத் திட்டங்களிலிருந்து எதிர் பார்க்கப்படும் ஆண்டு வருவாய் ரூபாய் 22.51 இலட்சமாகும்.

வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட 11 ஆதாயம் தரும் திட்டங்களின் விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வாரியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களின் மேற்பகுதியில் வாணிப நோக்குடன், நியான் விளக்கு விளம்பரங்கள் அமைப்பதற்கு சில நிறுவனங்களுக்கு ஆண்டு வாடகை அடிப்படையில் அனுமதிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வடிப்படையில், நொச்சிக்குப்பத்தில் ஆண்டு வாடகை ரூ. 8,000-க்கு நியான் விளக்கு விளம்பரங்கள் அமைப்பதற்கு இரண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருகிற அண்மைக் காலத்தில் இந்த நியான் விளக்கு விளம்பரங்கள் மூலம் நிறைய வருவாய், வாரியத்திற்குக் கிடைக்க வாய்ப்புள்ளது.

### 7. ஹட்கோ நிதி உதவியால் பணி துவங்கப்பட்டுள்ள திட்டங்கள்.

அரசின் நிதி நிலைப் பளுவைக் குறைக்கும் பொருட்டு, தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஹட்கோ கடன் உதவியுடன் இன்னும் அதிகமான குடியிருப்புக்கள் கட்டி ஒதுக்கீடு செய்ய தீர்மானித்துள்ளது. ரூ. 20 இலட்ச மதிப்பீட்டில் வெங்கடநாராயண சாலை மற்றும்



ஆலையம்மன் கோவில் என்னும் இரு ஒருங்கிணைந்த திட்டங்கள் ஹட்கோவின் ஒப்புதல் பெற்று கட்டுமானப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. ரூ. 246.75 இலட்சம் மதிப்புள்ள வால்டாக்ஸ் சாலை, மேற்குக் கல்லறைச் சாலை, குயில் தோட்டம் மற்றும் அயோத்தியா நகர் ஆகிய நான்கு ஒருங்கிணைந்த திட்டங்களும், ஹட்கோவின் ஒப்புதலுக்கு பரிசீலனையில் இருந்து வருகின்றன.

மேற்கூறிய திட்டங்களுக்கான விவரங்கள் 5 மற்றும் 6 இணைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 8. குடியிருப்புகள் ஒதுக்கீடு.

**மாத அனுமதித் தொகை முறை.**

குடிசைகளடங்கிய ஒரு பகுதியினை குடிசைப் பகுதி என அறிவிக்கப்பட்ட பின்பு ஒதுக்கீட்டின்போது ஏற்படும் மோசடிகளைத் தவிர்க்க ஏதுவாக அப் பகுதிகளிலுள்ள குடிசைவாசிகளனைவரிடமும் புள்ளி விவரம் சேகரிக்கப் பட்டுப் புகைப்படம் எடுக்கப்படுகிறது. அப்பகுதியில் மாடிக் குடியிருப்புக்கள் கட்ட ஏதுவாக, கணக்கெடுக்கப்பட்ட குடிசை வாசிகள் அனைவரும் வேறு பகுதியில் தற்காலிகமாக குடியிருக்க ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

குடியிருப்புகளை விற்றல், மேல்வாடகைக்கு விடுதல் போன்ற மோசடிகளை தவிர்க்க ஏதுவாக ஒதுக்கீடுதாரரின் குடும்பத்தாருடைய புகைப்படம் ஒட்டிய கைச் சிட்டை அனைத்து ஒதுக்கீட்டுதாரர்க்கும் வழங்கப்படுகிறது. வாரியப் பண வசூலாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் அவ்வப்போது திடீர் சோதனை செய்து குடியிருப்புகளில் ஒதுக்கீடுதாரர்கள்தான் வசிக்கின்றனரா என கண்டறிகின்றனர்.

**தவணை முறை விற்பனைத் திட்டம்.**

குறைந்த, நடுத்தர, உயர்ந்த மாத வருவாயுடையவர்களுக்கு சொந்தமாக வீடு வழங்கும் திட்டம் இருந்து வருவதைப்போலவே நிரந்தர வருமானம் உடைய குடிசை வாசிகளின் ஆசையைப் பூர்த்தி செய்ய தவணை முறை விற்பனைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு பகுதியிலும் தவணை முறை விற்பனைத் திட்டத்தின்கீழ் குடியிருப்புக்கள் ஒதுக்கீடு செய்யும்போது அவ்வப்பகுதியில் கணக்கெடுக்கப் பட்ட குடிசை வாசிகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. அரசு பொது நிறுவனங்களில் பணிபுரிந்து மாதம் ரூ. 350-க்குக் குறைவாக வருவாயுடைய குடிசை வாசிகளுக்கும் இத் திட்டத்தில் குடியிருப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சொந்த வீடு வேண்டுவோர்

கூட வாய்ப்பும், வசதியில்லாமல் அவதிப்படுகின்றனர். எழுத்தறி
வின்றி, குடிமக்களுக்குரிய தகுதியில்லாமல் வாழ்ந்து வருகின்றனர். அழ
கிய சென்னை மாநகரத்தின் பெருமைக்கு இது ஒரு களங்கமாக இருக்
கின்றது. இந்தப் பகுதிகளை வளரவிட்டால் நகரத்தின் அழகு கெடுவது
மட்டுமல்லாமல், மக்களின் சுகாதாரத்தையும் அலைக்கழிக்கின்றன.
குடிசைப் பகுதிகளை மாற்றி, குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து
கொடுப்பதில் தமிழ் நாடு அரசு பிற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டி
யாகவும், முன் மாதிரியாகவும் திகழ்கின்றது. தமிழ் நாடு அரசின்
நல்ல பல திட்டங்களில் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது.

## 3. நிதி வாயில்.

பாதி மானியமாகவும், 30 ஆண்டுகளில் சம தவணைகளில் வட்டியுடன்
திருப்பிச் செலுத்தும் பாதிக் கடனாகவும், மாநில அரசு நிதி வழங்கு
கிறது.

(1) இந்த அரசு நடப்பாண்டில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டப்
பணிகளுக்கு ரூபாய் 3·50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

(2) அரசு நடப்பாண்டில் குடிசைப் பகுதி சுற்றுப்புற மேம்பாடு
திட்டப் பணிகளுக்கு ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(3) சில குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களில் ஆதாயம் தரும்
திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. 1973–74-ம் ஆண்டில் ஆதாயம்
தரும் திட்டப் பணிகளுக்கு வாரியம் கடன் ஈட்டுப் பத்திரம் மூலமாக
ரூ. 50 லட்சம் கடன் எழுப்பியுள்ளது. மேலும் நடப்பாண்டில் ஹட்கோ
நிறுவனத்திலிருந்து ரூ. 21·47 லட்சம் கடன் பெறுவதற்கு நடவடிக்கை
எடுக்கப்பட்டுள்ளது.

(4) குடிசைப் பகுதி மாற்றும் திட்டப் பணிகளுக்கு நடப்பாண்டில்
அரசு ஒதுக்கீடு செய்துள்ள ரூ. 3·50 கோடியில் டிசம்பர் மாதம் முடிய
ரூ. 2·60 கோடி பெறப்பட்டுள்ளது. குடிசைப் பகுதி சுற்றுப்புற மேம்
பாட்டுத் திட்டப் பணிகளுக்கு இவ்வாண்டு டிசம்பர் திங்கள் முடிய அரசு
ரூ. 64 லட்சம் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குக் கொடுத்துள்ளது.

## 4. செய்த பணியின் முன்னேற்றம் (குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்).

வாரியம் அமைக்கப்பட்ட பின்னர், தனியாருக்கும், கோயில்களுக்கும்
சொந்தமான நிலங்களைத் தன்வசம் எடுத்துக் கொண்டது. இந்த நில
களோடு சென்னை மாநகரத்திற்குள் குடியிருப்புக்களைக் கட்டும் காரியத்
திற்காக வாரியம் அரசிடமிருந்தும் நிலங்களைப் பெற்றுக் கொண்டது.
1971–72 முதல் 1973–74 முடிய சென்னை மாநகரத்திற்குள் குடியிருப்புகள்
கட்டும் பணி 63 பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதிகளில் படிப்படி
யான திட்டத்தின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளின் இலக்கு 24,407 ஆகும்.
தற்போது, அதாவது, 1974 டிசம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட
திட்டங்களின் எண்ணிக்கை 82 ஆகும். இதுகாறும் கட்டப்பட்ட குடி
யிருப்புகளின் எண்ணிக்கை 15,102. 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
31 ஆம். நாளுக்கு முன்னர் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும்
குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,092 ஆகும்.





குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும் வீட்டு வசதி வாரியத்
திடமிருந்து 13 திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு எடுத்துக்
கொண்டது. பிறகு நிறைவேற்றப்படுவதற்காக வாரியத்தால் ஒப்பளிப்பு
வழங்கப்பட்ட திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 100 ஆகும்.
இவற்றுள் 12 திட்டங்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. இந்த 113
திட்டங்களின் விவரங்கள் இணைப்பு 1–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை
பணி மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற விபரங்கள் இணைப்பு
2–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. குடிசைப் பகுதிச் சுற்றுப்புற மேம்பாடு.

சென்னை மாநகரிலுள்ள குடிசைகள் அனைத்தையும் உடனடியாக
ஒழித்து விட முடியாது. அதைப் படிப்படியாகத்தான் நிறைவேற்ற வேண்
டும். அது வரையில், அக்குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கு
வகை செய்வது அவசியமானதாகும். குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
இத்தகைய கடினமான பணியை மேற்கொண்டுள்ளது.

குடிசைவாழ் மக்களின் அமைதியான, சுகாதார வாழ்க்கைக்கு வகை
செய்ய இயலும் நோக்கத்துடன், அடுத்த 10 ஆண்டு காலத்திற்குள்,
குடிசைப் பகுதி மாற்றம் பணியை மேற்கொள்ள இயலாத, மேம்படுத்தப்
படாத, நெருக்கமான குடிசைப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை
நீட்டிப்பதற்காக இம்மாநிலத்திற்கு இந்திய அரசு 1972–73–ல் நிதிஒதுக்கம்
செய்துள்ளது. இத்திட்டத்தின் கருத்தும் நோக்கமும், அடிப்படை வசதி
களில்லாத சுகாதாரமற்றப் பகுதிகளில் வசிக்கும் குடிசை வாழ் மக்களுக்கு
உடனடியாக வசதியளிப்பதேயாகும். மேற்சொன்ன திட்டத்தையொட்டி,
1972–73 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் சுமார் 2·52 இலட்
சம் குடிசைவாழ் மக்கள் பயனடையும் பொருட்டு, சென்னை மாநகரில் 104
குடிசைப் பகுதிகளில் 13 நிலைகளின் கீழ் அடிப்படை வசதிகள் வழங்கு
வதற்காக ரூ. 258·152 இலட்சம் செலவு தொடர்பான செயற்குறிப்புக்களைத்
தயாரித்து இந்திய அரசின் ஒப்பளிப்பைப் பெற்றுள்ளது. 1973–74 ஆம்
ஆண்டில் 1·36 இலட்சம் குடிசைவாழ் மக்கள் பயனடையும் பொருட்டு,
சென்னை மாநகரில் 73 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் வழங்கு
வதற்காக ரூ. 152·190 இலட்சம் செலவு தொடர்பான செயற்குறிப்பு
தயாரிக்கப்பட்டு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்
1–ஆம் தேதி முதல் இத்திட்டம் மாநில அரசு அமல் படுத்து
வதற்காக மாற்றப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1974–75–ல், 1.37 இலட்
சம் குடிசைவாழ் மக்கள் பயனடையும் பொருட்டு சென்னை மாநகரில் 115
குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் வழங்குவதற்காக ரூ. 95.708
இலட்சம் செலவில் செயற் குறிப்பு தயார் செய்து குடிசைப் பகுதி மாற்று
வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. இதுவரை ஒப்புதல் செய்யப்பட்ட சுற்றுப்
புற மேம்பாட்டுத் திட்டத்தின் விபரம் மற்றும் பணிமுன்னேற்ற விபரங்கள்
இணைப்பு 3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள
அடிப்படை வசதிகளாவன :—

(1) ஒழுங்காக அமைக்கப்பட்ட நடைபாதைகளும், வழிகளும் ; (2) தெரு
விளக்குப் போடுதல் ; (3) பொது நீர் ஊற்றுகள் மூலம் குடிநீர் வழங்கு
தல் ; (4) போதுமான அளவு குளியல் அறைகளுக்கும், கழிப்பிடங்

முதலில்பொறுப்புத் தொகையாக ரூ. 500 செலுத்த வேண்டும். பின்னர் செலுத்த வேண்டிய மாதத் தவணைத் தொகைகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.—

| | ரூ. பை. |
|---|---|
| கீழ்த் தளம் | 40.00 |
| முதல் மாடி | 35.00 |
| இரண்டாம் மாடி | 30.00 |
| மூன்றும் மாடி | 25.00 |

இத்தொகை 25 ஆண்டுகளில் வசூலிக்கப்படும்.

தவணை முறை விற்பனைத் திட்டத்தின்கீழ் குடியிருப்புக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்பேரில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன:—

(1) ஒதுக்கீடுதாரர் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டக் குடியிருப்பினை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைத் தவிர வேறு எவருக்கும் சுவாதீனப் படுத்தக் கூடாது.

(2) ஒதுக்கீடுதாரர் குடியிருப்பில் ஏதேனும் அபிவிருத்தியோ அல்லது மாற்றமோ செய்ய விரும்பின் அவைகள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஒப்புதலுடன்தான் செய்யப்பட வேண்டும்.

(3) குடியிருப்பினை ஒதுக்கீடுதாரரே பேணி வருதல் வேண்டும்.

## 9. சென்னையில் வாழும் ஆதி ஆந்திரர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்

சென்னை நகரில் உள்ள சுமார் 50 வெவ்வேறு குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற, ஆதி ஆந்திரர்களின் மறுவாழ்விற்காக குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தரும் குறிப்பிற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து கீழ்க்கண்ட செயற் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது :—

(1) ஆதி ஆந்திரர்களுக்காக வீடு கட்டும் திட்டத்திற்காக சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களும், அரசு நிலங்களும், மனை ஒன்றுக்கு ரூ. 3,000 வீதம் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றப்படும்.

(2) சென்னையில் 12 காலனிகளில் மாநகராட்சியால் கட்டப்பட்டு ஆதி ஆந்திரர்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட குடியிருப்பு வீடுகள் ஆதி ஆந்திரர்களுக்கே தவணை முறையில் விற்பனை செய்யப்படும்.

(3) தற்போது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினரால் கட்டப்பட்டு வழங்கப்படுகிற குடியிருப்புகளைப் போலவே ஆந்திரர்களுக்கும் இத்தகைய குடியிருப்புகள் கட்டப்பட்டு வாடகைக்கோ அல்லது தவணை முறையில் விற்பனைக்கோ வழங்கப்படும்.



(4) ஆதி ஆந்திரர்களுக்கு, தமிழ் நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் நிதி உதவியுடன் குடிசை மாற்று வாரியம் தனித்தனி வீடுகளைக் கட்டித்தரும். இதற்காக, ஆதி ஆந்திரர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து அதை தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துடன் இணைத்துக் கொள்ளவேண்டும்.

(5) ஆதி ஆந்திரர்களுக்குச் சொந்தமான வீடுகளில் வசித்துவரும் மற்ற குடிசை வாசிகள் அதிலிருந்து வெளியேற்றப்பட்டு தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கும் மாடிக் குடியிருப்புகளில் அமர்த்தப்படுவார்கள்.

## 10. ஏனைய நடவடிக்கைகள்.

குடிசைவாழ் மக்களை புதுக் குடியிருப்புகளில் அமர்த்துவது மட்டுமே வாரியத்தின் பணியல்ல. நவீன முறையில் கட்டப்பட்ட வீடுகளில் குடிசைவாழ் மக்களை குடியமர்த்துவதினால் மட்டும் அவர்களுடைய வாழ்க்கை சீர்பெறாது. அவர்களுடைய பொருளாதார நிலைமை சீரடைய வேண்டும்; சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்வது பற்றி அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் வாழ்க்கை சீரடையும். இந்த நோக்கத்தை எய்துவதற்காகப் பல்வேறு சமூகத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு—

### புது குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை.

தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை ஆரோக்கிய கிறித்துவ மன்றம், 77 சங்கம் ஆகியோரின் கூட்டாகச் சேர்ந்து 1971 டிசம்பர் 30-ம் நாள் பதிவு செய்து நிறுவியது இப்புது குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை.

**நோக்கம்.**—தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் புதிதாகக் கட்டியுள்ள வீடுகளில் குடியமர்த்தப்படும் குடும்பத்தினருக்கு "சமூகப் பணியை அளிப்பதோடு ஆலோசனையும் நல்குதல்".

**திட்டம்.**—இந்தப் பேரவை ஒரு நிர்வாக அதிகாரி, இரு மருத்துவ அதிகாரிகள், 14 சமூக நல ஊழியர்கள், ஒரு மேற்பார்வை சமூக நல மருத்துவ பணிப்பெண், 12 மருத்துவ பணிப்பெண்களும் கொண்டு குடும்ப நல சேவையும் செய்து வருகிறது. கீழ்க்கண்ட குடிசை மாற்று வாரிய திட்டப் பகுதிகளில் செயலாற்றி வருகின்றது :—

1. நொச்சிக்குப்பம், நொச்சி நகர்.
2. விசாலாட்சி தோட்டம்.
3. பிருந்தாவனம்.
4. மாம்பலம் ஏரிக்கரை.
5. சுபேதார் தோட்டம்.

[1975 ஏப்ரல் 4

## 6. பாலிகன்ஸ் (Polygans).

இந்நிறுவனம் ஆண்டிமானியத் தோட்டத்தில் கீழ்க் கண்ட பணிகளைச் செய்து வருகிறது :—

(அ) வாரத்திற்கு ஒரு முறை துப்புரவு செய்தல்.
(ஆ) குப்பைகளைத் திரட்டி வெளியேற்றுதல்.
(இ) குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மருத்துவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்ற மருந்துகளைக் கொண்டு குடிசைவாழ் மக்களுக்கு மருத்துவ உதவி அளித்தல்.

## 7. சமுதாய நல நிலையங்கள்

இந்நிறுவனம் முக்கியமாக வியாசர்பாடி, கொருக்குப்பேட்டை ஆகிய இடங்களில் கீழ்க் கண்ட பணிகளை நிறைவேற்றி வருகிறது :—

(அ) குழந்தை காப்பகங்கள் அமைத்தல்.
(ஆ) தினம் 300 நோயாளிகளுக்கு மருத்துவ வசதி செய்தல்.
(இ) 300 பேர்களுக்கு தொழுநோய் மருத்துவமனை அமைத்தல்.
(ஈ) ஆதரவற்றவர்களுக்கான 100 இல்லங்கள் அமைத்தல்.
(உ) 780 மாணவர்களைக் கொண்ட பகல் நேர பள்ளிகள் நடத்துதல்.
(ஊ) இரவு நேர பள்ளிகள் நடத்துதல்.
(எ) இளைஞர் சங்கம் நடத்துதல்.
(ஏ) உடலூனமுற்றவர்களுக்கான தொழிற்கூடங்கள் நடத்துதல்.
(ஐ) 40 தையல் எந்திரங்களைக் கொண்டு 70 பேர்களுக்கு பயிற்சி அளித்தல்.

## 8. ஜெர்மன் தொழுநோய் சிகிச்சை சங்கம்.

இச் சங்கம் குடிசைப் பகுதிகளில் பின்வரும் பணிகளை ஆற்றிவருகிறது:—

(அ) தொடக்கநிலையில் உள்ள தொழுநோய் பிணியாளர்களின் எண்ணிக்கையை கண்டறிய குடிசைப்பகுதிகளில் ஆய்வு நடத்துதல்.
(ஆ) தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடக்க நிலையிலேயே சிகிச்சை அளித்தல்.

தாண்டவராயப்பிள்ளை சத்திரத்தில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பில் தொழுநோய் மருந்தகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

நொச்சி நகரில் உள்ள பிணியாளர்களுக்கு வாரத்திற்கு இரண்டு முறை இயங்கும் சிகிச்சை பிரிவின் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வ.உ.சி. நகர், வியாசர்பாடி ஆகிய இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்பில் மருந்தகம் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.



1975 ஏப்ரல் 4]

## 9. சென்னை சமூகப்பணி பள்ளி.

இந்நிறுவனம், இந்திய அரசும் அனைத்து நாடுகள் சிறுவர் நல நிதி நிறுவனமும் சேர்ந்து பொறுப்பேற்கின்ற திட்டத்தை, தண்டையார்பேட்டை ஜீவாநகர், செரியன் நகர் ஆகிய இடங்களில் செயற்படுத்த முன்வந்துள்ளது. திட்டத்தின் விபரம் வருமாறு :—

(அ) மகப்பேறு மருத்துவ உதவியும், 1 முதல் 5 வயதுக்குட்பட்ட சிறுர்களுக்கான சுகாதாரப் பணிகள் ஆகியவற்றை முழு அளவில் நிறைவேற்றுவது.

(ஆ) சிசுவிலிருந்து 5 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கான பகல் நேர கவனிப்பு பணி.

(இ) 6 முதல் 11 வயதுக்குட்பட்ட சிறுர்களுக்கான தொடக்கக் கல்வியை முழு அளவில் செயற்படுத்துதல்.

(ஈ) சிசுவிலிருந்து 6 வயதுக்குட்பட்ட சிறுர்கள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு சத்துணவு வழங்கல்.

(உ) குழந்தைகளின் சுகாதாரம், கல்வி நலன் ஆகியவற்றை மேம்படுத்துவது பற்றி பெற்றேருக்கு அறிவுரைகள் வழங்குதல்.

## 10. சிவில் இண்டர்நேஷனல் சர்வீஸ் இந்தியா.

நாவலர் நகரில் (லாக் நகர்) பால்வாடி நடத்தி வருகின்றனர்.

## 11. கிறித்துவ மகளிர் கல்லூரி, சென்னை-6.

இக் கல்லூரியைச் சார்ந்த சமூகப் பணி மன்றம் சேத்துப்பட்டு குடிசைப் பகுதிகளில் கீழ்க் கண்ட பணிகளைச் செய்து வருகின்றது:—

(அ) தொழில் வகுப்பு, தையல், சிறப்பாக குழந்தைகளுக்கான துணிகள் தைத்தல், பூத்தையல், பொம்மை செய்தல், பிளாஸ்டிக் பை தயார் செய்தல் முதலியவை கற்றுக் கொடுத்தல்.

(ஆ) சத்துணவு பற்றி எடுத்துச் சொல்லுதல், சமையல் பற்றிய கட்புல விளக்கம்.

(இ) உடல் நலன், சமூகத்தினர் நலன் பற்றி வகுப்புகள் நடத்துதல்.

(ஈ) கேளிக்கைகள், படக் காட்சிகள், கல்வி மற்றும் கேளிக்கை பொம்மலாட்டங்கள், குழுவாகப் பாடுதல், ஒத்திகையில்லா நடிப்பு.

(உ) விளையாட்டுகள்—சிறப்பாக குழந்தைகளுக்கான விளையாட்டுகள்.

(ஊ) முதியோர் கல்வித் திட்டங்கள்.

6. எம்.எஸ். நகர்.
7. அயோத்தியா குப்பம்.
8. டாக்டர் சந்தோஷ் நகர்.
9. சீனிவாசபுரம்.
10. டொம்மிங் குப்பம்.
11. கோட்டூர்புரம்.
12. கல்லறைச்சாலை.
13. தாண்டவராயப்பிள்ளை சத்திரம்.
14. கலைஞர் கருணாநிதி நகர்.
15. வியாசர்பாடி.
16. ஜாபர்கான்பேட்டை.

எல்லா திட்டப்பகுதிகளிலும், சிறூர் பள்ளி, துப்புரவுப் பணி, நோய் தடை காப்பு பற்றி விளக்குதல், குடும்ப நலத் திட்டம் போன்றவையும் இவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாடு அரசின் சத்துணவு திட்டத்துக்கும், சமூக நலத்துறையினருக்கும் இவர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள்.

இந்தத் திட்டப் பகுதிகளில் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள், 10 தனி மருத்துவமனை (போதனை மருத்துவமனை), 6 இரவுப் பள்ளிகள், 6 முதியோர் கல்வி வகுப்புகள், சிறுசேமிப்புத் திட்டங்கள், 7 தையல் வகுப்புகள் முதலியவையும் இவர்களின் மேற்பார்வையின்கீழ்தான் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நடமாடும் மருத்துவ ஊர்தி ஒன்றினை இப்பேரவைக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம், மருத்துவ வசதியில்லாத திட்டப்பகுதிகளில் சென்று மருத்துவம் செய்யப்படுகிறது. எல்லாத் திட்டப் பகுதிகளிலும் பெண்கள் குழு (Women's Federation) இளைஞர் குழு (Youth Federation) அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் இத்திட்டப் பகுதிகளிலும் மேலும் சமூக சேவைகளை செய்து வருகின்றனர்.

**வருவாய் ஈட்டுத்திட்டம்** :—300 பெண்களுக்கு மேல் கையால் ஓட்டுப் போட்டு ஆடை தயாரித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களால் தயாரிக்கப்படும் ஆடைகளை அனுப்ப சுவீடன், டென்மார்க், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வேண்டல் கடிதங்கள் இப்பேரவைக்கு வந்துள்ளன.

**2. தன்னியக்க சுகாதாரப்பணி.**

இந்நிறுவனத்தார் குடிசைவாழ் மக்களுக்கு ஊதியமற்ற சிகிச்சை அளிக்க குடிசைப் பகுதிகளில் மருத்துவமனை நிறுவியுள்ளனர். இம்மனைகளில் குறைந்த சந்தாத் தொகை செலுத்துவதன்மூலம் அப்பகுதி



குடிசைவாழ் மக்கள் உறுப்பினர்களாகின்றனர். இவர்களுக்குக் குறிப்பிட்ட கால சிகிச்சையும் அவசியமானால் அறுவை சிகிச்சை உதவியும் அளிக்கப்படுகிறது. ஆரம்ப கட்டமாக கோட்டூர்புரம், மாம்பலம் ஏரிக்கரை ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார தனி மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**3. சேவாசங்கம் (கில்ட் ஆப் சர்வீஸ்).**

இந்நிறுவனம் கீழ்க்கண்ட பணிகளைச் செய்து வருகிறது :—

(அ) தேவையறிந்து குடிசைவாழ் மக்களுக்குப் பணிபுரிதல்.

(ஆ) பணியாற்றும் மகளிரின் குழந்தைகளுக்காக பாலர் பள்ளியும் காப்பகமும் ஏற்படுத்துதல்.

(இ) மகளிர்க்குக் கைவினைத் தொழில் கற்றுக்கொடுத்தல்.

(ஈ) சுமார் 200 தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்குக் காலை உணவு அளிப்பதன் மூலம் ஊட்டச்சத்துணவுத் திட்டத்தைப் படிப்படியாகத் தொடங்குதலும், 25 குழந்தைகள் கொண்ட பாலர் வகுப்பினைத் தொடங்குதலும்

**செயல்புரியுமிடங்கள் :—**

(அ) தாண்டவராயச் சத்திரம்.
(ஆ) மொகிதி விளையாட்டுத் திடல்.
(இ) கொய்யாத் தோப்பு.
(ஈ) எல்லீஸ்புரம்.
(உ) இந்திரா நகர்.
(ஊ) மங்கலபுரம்.

**4. சென்னை கிறித்துவ சங்கம்:**

பொதுக்கழிப்பிட வசதி குறைவாயுள்ள குடிசைப் பகுதிகளில் கழிவறைகள் கட்டிக்கொடுக்கும் பணியை 25 திட்டங்களில் மேற்கொண்டுள்ளது. ஆண்டிமானிய தோட்டத்தில் பல அடுக்கு கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**5. இந்தியாவிற்குள்ளான ஊைாலோஸ்.**

இது சுவீடன் நாட்டு நிறுவனமாகும். வட சென்னையில் சமூகப்பணி செய்து வருகிறது. பாலர் பள்ளி, முதியோர் பள்ளி நடத்துவதோடு 250 குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். தனி மருத்துவமனை, நூலகம், படிக்கும் அறை ஆகியவற்றுடன் உள்ளூரில் வேலையற்றிருப்பவர்களுக்கும், முறையான தகுதி பெறாத சிறுவர்களுக்கும் தொழிற் பயிற்சி அளிக்கும் பொருட்டு அடிப்படை தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை சென்னை-81 செரியன் நகரில் நடத்தி வருகின்றனர்.

(எ) குழந்தைகளுக்கு பாலர் பாடல்கள் படிக்க, எழுதக் கற்றுக் கொடுத்தல்.

(ஏ) வரவு-செலவு திட்டங்கள் தயாரித்தல், பணத்தைச் சேமித்து வைத்தல் ஆகியவற்றில் குடும்பங்களுக்கு உதவி செய்தல்.

(ஐ) எளிய தொடக்க முதல் உதவிப் பணி.

### 12. மகளிர் நலத்துறை.

இத்துறையின் பணித் திட்டங்கள் பின்வருமாறு :—

(அ) பாலர் வகுப்புகள் நடத்துதல்; தற்பொழுது வெங்கடாபுரத்தில் 40 சிறுவர்கள் இவ்வகுப்புகளில் படிக்கின்றனர்.

(ஆ) தையல் பயிற்சி பெறுமாறு வீடு வீடாகச் சென்று பெண்களுக்கு அறிவுறுத்தலும், குழந்தை வளர்ப்பில் அவர்களுக்கு ஆலோசனை நல்குதலும்.

(இ) தையல் வகுப்புகள் நடத்துதல்; வெங்கடாபுரத்தில் 38 உறுப்பினர்கள் பயிற்சி பெறுகின்றனர். இத்துறையால் ஒரு தையல் எந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையினர் தற்போது வெங்கடாபுரம், வ.உ.சி. நகர் ஆகிய பகுதிகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

### 13. குழந்தைகள் காப்பகம்.

சென்னை நகரில் எல்லா குடிசைப் பகுதிகளிலும் தமிழ் நாடு அரசின் சமூக நலத்துறையினரால் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இருபத்து மூன்று குடிசைப் பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதிகளில் குழந்தைகளின் நலனுக்காக குழந்தைகள் காப்பகம் துவங்கப்பட்டுள்ளது.

### 14. லெனின் மருத்துவ மனை.

இம் மருத்துவ மனை ஜாபர்கான்பேட்டை திட்டப் பகுதியில் நாள் தோறும் 2 மணி வீதம் மாறி மாறி செயல்பட்டு வருகிறது. இப்பகுதியில் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம் மருத்துவ மனைகளில் தானாக முன்வந்து எட்டு மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.



### 15. இந்திய மருத்துவர்கள் சங்கம்.

இச் சங்கம் கீழ்க்கண்ட இடங்களில் பணி புரிந்து வருகின்றது :—

(அ) சீனிவாசபுரம்.

(ஆ) விசாலாட்சி தோட்டம்.

பணிபுரியும் நேரம்.—மாலை 3 மணி முதல் 4 வரை, ஞாயிறு தவிர.

பணிகள்.—

(அ) மருத்துவ பரிசோதனை.

(ஆ) டாக்டர்களிடமிருந்து உதவியாக பெற்ற மருந்துகளைக் கொண்டு குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு நோய் தடுப்பு ஊசி போடுதல்.

(இ) இப்பகுதியில் உள்ள 6 வயதுக்குட்பட்ட 1,800 குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போடுதல்.

(ஈ) மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, பல், மனோதத்துவம், கண் நோய் முதலியவைகளுக்கு சிகிச்சை அளிக்க நிபுணர்கள் மருத்துவ மனை துவங்கவும் திட்டமிட்டுள்ளனர்.

(உ) இந்திய மருத்துவ சங்கத்தின் உறுப்பினர்கள் ஆல்காட்டுக் குப்பத்தில் செப்டம்பர் 1973-ல் மருந்தகமும் நல்வாழ்வுத் திட்டமும் துவங்கியுள்ளனர். இச்சங்கம் ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமையில் பணிபுரிகின்றது.

### 16. கிறித்துவ இளைஞர் சங்கம்.

இச்சங்கம் நந்தனம், சி.ஐ.டி. நகரில் தங்களின் சமூகப் பணியினைச் செய்து வருகின்றது. தெருக்களைச் சுத்தம் செய்தல், சுகாதாரம், அது தொடர்பான பிரச்னைகள் பற்றி பகுதி மக்களுடன் உரையாடுதல், ஞாயிறு தோறும் கல்லூரிக்கு அருகில் குழந்தைகளுக்காக விளையாட்டு நடத்துதல் போன்றவற்றைச் செய்து வருகின்றனர்.

### 17. அரிமா சங்கம் (கிழக்கு).

இந்நிறுவனத்தால் தாண்டவராயப்பிள்ளை சத்திரத்தில் ஒரு மருத்துவ மனை நிறுவப்பட்டு தினமும் மருத்துவப்பணி செய்யப்படுகிறது.

### 18. லூதரன் உலக நிறுவனம், ஜெனிவா.

இது ஒரு உலக சமூக சேவை நிறுவனம். இந்நிறுவனம் குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்பட்ட சென்னை குடிசைகள் மருத்துவ சுகாதார சேவைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 3,000 இவ்வாண்

நன்கொடையாக அளித்துள்ளது. இந்தத் தொகையிலிருந்து ரூ. 2·24 இலட்சம் செலவில் 5 நடமாடும் மருத்துவ ஊர்திகளை வாங்கியது. அவற்றில் நான்கு ஊர்திகள் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் மருத்துவ வசதி செய்து வருகின்றது. மீதமுள்ள ஒரு ஊர்தியை புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை நிறுவனத்தின் உதவியால் புதுக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ள திட்டப்பகுதிகளில் மருத்துவ வசதி செய்து வருகின்றது.

### 19. படக் காட்சி.

தமிழ் நாடு அரசு செய்தி விளம்பரத் துறையினரால் எல்லா குடிசைப் பகுதிகளிலும் மக்களுக்கின்றியமையாத சுகாதாரம், தீண்டாமை ஒழிப்பு, ஒற்றுமையாக வாழ்தல் போன்ற படக் காட்சிகள் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன.

### 20. சிரணி.

குடிசைப் பகுதி மாற்று வாரிய கட்டிட பணிக்கு ஒத்துழைப்பு தருகின்றனர். ரொட்டி, பால் முதலானவை குழந்தைகளுக்கு இவர்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

குடிசை வாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் நோக்குடன் குடிசைப் பகுதி மாற்று வாரியம், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கதர்—கிராமத்தொழில் வாரியம் ஆகியவற்றின் உதவியுடன் புதுக் குடியிருப்புகளில் சிறு தொழில்களைத் துவக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னோடித் திட்டமாக மாம்பலம் ஏரிக்கரைத் திட்டத்தில் அச்சகமும், உறை தயாரிப்புக் கூடமும், தாண்டவராயபிள்ளைச் சத்திரத்தில் சர்க்காவில் நூல் நூற்கும் நிலையமும் துவக்கப்பட்டுள்ளன.

### வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் பணி.

வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் பணி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஆற்றப்படுகிறது. வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்காக 1971-72, 1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொராண்டிற்கும் ரூ. 35 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1974-75-ஆம் ஆண்டில் ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1975-76-ம் ஆண்டில் ரூ. 40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப் பட்டுள்ளது.

1975 ஜனவரி 1-ம் நாள் நிலவரப்படி வீட்டு வசதி வாரியப் பிரிவுகளால் முடிக்கப்பட்ட/நிறைவேற்றப்பட்டுவரும் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களின் பட்டியல் இணைப்பு 7-ல் தரப்பட்டுள்ளது.



### முடிவுரை.

சமூகத் தொண்டு உணர்விலும், குடும்பத்துக்கு ஒரு வீடு என்னும் குறிக்கோளுடனும் சமுதாயத்தில் ஏழை எளியோரை மேல்நிலைக்குக் கொண்டுவரும் முயற்சியிலும், தமிழ் நாடு அரசு குடிசைகளை மாற்றிக் குடியிருப்புகள் அமைக்கும் மகத்தான பணியினை மேற்கொண்டுள்ளது. இத்தகு பெருமுயற்சியில் இந்நாட்டில் மட்டுமின்றி வெளி நாடுகளில் உள்ள எல்லா சமூகப்பணி நிறுவனங்களும் நல்லெண்ணம் கொண்டவர்களும் இதில் பங்குகொண்டு உதவியளிக்க முன்வருமாறு இவ்வரசு அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

“ ஏழைக்கு ஆற்றும் தொண்டே
இறைவனுக்கு செய்யும் வழிபாடு. ”

—மகாத்மா காந்தி.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

## சனிக்கிழமை, 1975 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) அரசினர் தீர்மானம்.

### வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, " சட்டமன்றப் பேரவை விதி 22-இன் கீழ் முதலில் ஒரு மணி நேரம் 'வினா-விடைகள்' என்று உள்ளதை இன்று தளர்த்தி, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

**(அ) நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரம் குறைந்ததால் ஏற்கனவே மின்வெட்டு இருக்கும் நிலையில், தொழில்கள் பாதிப்பு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, சோ. அழகர்சாமி, எ. சுப்பிரமணியம், பெ. சீனிவாசன், செ. அரங்கநாயகம் ஆகியோர்

" The serious situation arising out of fall in the supply of power by 50 per cent from Neiveli affecting the already acute power position in the State leading to further lay off in textile and other industries and similar consequences. "

என்கிற பொருள் பற்றி விவாதிக்க பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து திரு. தங்கமணி அவர்கள் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று பேரவையின் 42-வது விதியின் கீழ் திரு. எ. சுப்பிரமணியம், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகிய இருவரும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இதே போன்ற கருத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு சௌந்தர பாண்டியன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவிற்கு பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் என்பதைப்பற்றி சுருக்கமாக விளக்கிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, சென்ற மார்ச் மாதம் கடைசி நாளில் திருச்சி அரசு மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டரில் வைத்து ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு நோயாளி இறந்து போனதாகவும், அதற்குக் காரணம் என்ன என்று பார்த்தபொழுது டெட்டனஸ்தான் காரணமாக இருந்ததால் இப்படிப்பட்ட திடீர் மரணம் ஏற்பட்டதாகவும் செய்திகள் வந்தன. அதைத் தவிர, இதே மருத்துவமனையில் இதேபோன்ற நிகழ்ச்சி இதற்கு முன்னதாகவும் பல தடவைகள் நடைபெற்று அப்பொழுதைக்கப்பொழுது மருத்துவமனையிலுள்ள ஆபரேஷன் தியேட்டர் குளோஸ் பண்ணப்பட்டு வந்திருக்கிறது.

இந்தமாதிரி நிகழ்ச்சி இப்பொழுது ஏற்பட்டது மட்டும் முதல் தடவை அல்ல, இதற்கு முன்பும் பல தடவைகள் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆகவே, அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களுக்குப் பெரும் பீதியேற்பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. உண்மையிலேயே ஆபரேஷன் தியேட்டரில் ஆபரேஷன் செய்யப்படுகின்ற வியாதியஸ்தர்கள் இறந்து போகிறார்கள் என்றால் நிச்சயமாக இது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். சாதாரணமாக, ஆபரேஷன் தியேட்டரில் ஆபரேஷன் நடக்கும்பொழுது இம்மாதிரி நிகழ்ச்சி நடைபெறுவதை ஒரு மோசமான நிகழ்ச்சியாகத்தான் நாம் கருதுகிறோம். அதுமட்டுமல்ல, சாதாரணமாக நமது மாநிலத்தை எடுத்துக் கொண்டால் மருத்துவர்களின் தவறினால் இப்படிப்பட்ட





நிகழ்ச்சி நடைபெறும்பொழுது இதை விசாரித்து ஒரு என்கொயரி நடத்தி இதற்குக் காரணமாக இருந்தவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேல்நாடுகளில் மருத்துவமனையில் யாராவது இறந்தால், ஒரு மரணம் ஏற்பட்டாலும்கூட அதற்காக ஒரு தனி என்கொயரி நடத்தி அதற்கு உண்மையிலேயே அந்த மருத்துவர்தான் பொறுப்பு என்றால் தக்க பனிஷ்மெண்ட் கூட கொடுக்கும் அளவிற்கு விதிமுறைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், நமது நாட்டைப் பொறுத்தவரையில் வியாதியஸ்தர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றால், ஏதோ சாதாரண மிருகங்களைப் போல அவர்கள் இறந்து போகிறார்கள். இதைப்பற்றிக் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. இந்தமாதிரி நடைமுறை நமது மாநிலத்தில் மட்டுமல்ல, நமது தேசத்தில் நடைபெறுவது விரும்பத்தக்கூடிய காரியம் அல்ல. ஆகவே, இவற்றையெல்லாம் தீர்படுத்த வேண்டிய கடமை நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதற்கு இப்பொழுது திருச்சியில் நடந்த நிகழ்ச்சி வழி காட்டுகிறது. ஆகவே, இதுபோன்ற நிகழ்ச்சி மறுபடியும் நடைபெறாத வண்ணம் அரசு கண்காணிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே இந்த நிகழ்ச்சியைப்பற்றி இன்று இந்த அவைமுன் இருக்கின்ற தீர்மானத்தை விவாதிக்க இதர நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் ஒத்திவைத்து விவாதித்தால் உண்மையிலேயே நமது நாட்டிற்கு மிகவும் பயன்தரக்கூடியதாக இருக்கும் என்று தங்கள் மூலம் தெரிவித்து, இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, திருச்சியிலுள்ள அரசினர் பொது மருத்துவமனையில் ஆப்பரேஷன் தியேட்டர் மூடிக் கிடப்பதால் அறுவைச் சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் சிரமப்படுவது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் இதை 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்பு வேண்டுகோள் தீர்மானமாகவும், திரு. சௌந்தரபாண்டியன்

படுவதை எதிர்பார்த்து மெம்பர்கள் கொஞ்ச நேரம் கழித்து வருவார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் குவெஸ்சன் ஹவர் இருக்காது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது—2-ம் தேதியே சர்குலர் போட்டு அனுப்பினார்கள். முன்கூட்டியே அப்படி எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பினால் உதவிகரமாக இருக்கும்.

(பிற்பகல் 9.30)

**திரு. து. ப. அழகமுத்து:** நேற்று நான் அவர்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்களிடம் சொன்னேன். அவர்களிடம் நான் குவெஸ்சன் ஹவர் வேண்டாம் என்று சொன்னேன். அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதை மெம்பர் அவர்களுக்கு அவர் அறிவிக்கவில்லை என்றால் அது பேரவைத் தலைவரின் குற்றம் அல்ல.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நேற்றையதினம் குவெஸ்சன் ஹவர் இல்லை என்று அசெம்பிளி செகரட்டரி சர்குலர் போட்டிருக்கும் போது, நேற்று போட்ட சர்குலர் மாதிரி இப்போதும் ஏன் போடவில்லை என்பதுதான் என் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அசெம்பிளி செகரட்டரிக்கு இதெல்லாம் பிஸினஸ் கிடையாது. அவர்களுக்கு இதில் பொறுப்பே கிடையாது. செகரட்டரி என்றாலும் சரி செகரெட்டேரியேட் ஆனாலும் சரி. இங்கு வந்த தீர்மானம் மூவ் செய்கிறார்கள். ஒரு மெம்பர் கூட டிஸென்ட் செய்தாலும் குவெஸ்சன் ஹவரை சஸ்பெண்ட் செய்ய முடியாது.

'mutual understanding behind the Speaker's chair'

என்று பார்லிமென்டரி கன்வென்ஷன் இருக்கிறது.

அரசாங்கக் கொறடா மற்றவர்களிடம் கலந்துகொண்டு குவெஸ்சன் ஹவர் வேண்டாம் என்ற முடிவிற்கு வந்த பிறகு—அவர்களுக்கு கட்சித் துணைத் தலைவரோடு தொடர்பு இல்லையோ என்னவோ—தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு குவெஸ்சன் ஹவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் கரெக்டாக ஒன்பது மணிக்கு இங்கு வரவேண்டும். அப்படி அவர்கள் அவைக்குச் சரியாக அவைக்கு என்றால், அதற்காக செகரட்டரியையோ வரவில்லை செகரட்டேரியேட்டையோ அல்லது குறை சொல்ல முடியாது.



அடுத்து, பேரவை விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கே. என். குமாரசாமி அவர்களும் திரு. மருதாசலம் அவர்களும் கொண்டு வருவார்கள்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

## திருச்சி தலைமை மருத்துவ மனையில் அறுவை அரங்கு மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து—தொடர்ச்சி.

THIRU P. SOUNDARAPANDIAN: Sir, I want some more clarification about the Tiruchirappalli Operation Theatre. தலைவர் அவர்களே, திருச்சி அரசினர் மருத்துவமனையில் இருக்கிற அறுவை சிகிச்சை அரங்கு அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதற்கே ஒரு அச்ச உணர்வு ஏற்படுகிறது. எனவே, அந்த அச்ச உணர்வைப் போக்குவதற்கு அரசு தனி முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, டெட்டனஸ் என்பது அறுவை சிகிச்சை அரங்கில் கொண்டுபோய் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டவர் ஒருவருக்கு ஏற்பட்டது. டெட்டனஸ் என்ற சூழல் ஏற்படுமானால், அந்த அபெக்டேஷன் ஏற்படுமானால் அது அந்த நேரத்தில் மூன்று நான்கு பேர்களைப் பாதித்து விடுகிறது. இந்த முறை நல்லவேளையாக ஒருவருக்கு ஏற்பட்டதே தவிர வேறு யாருக்கும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரங்கு மூடப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் டெட்டனஸ் ஏற்பட்ட பின்னால் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து பின்னால் அந்த அறை திறந்திருந்தால் ஒரு மாதம் கழித்து யாருக்கும் வந்துவிடும், வந்துவிடலாம். ஆகவே டெட்டனஸ் முழுவதையும் ஒழிப்பதற்கு 100 சதவிகிதமும் ஒழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

அந்தத் துறையைச் சேர்ந்தவர்களை நன்றாக என்னென்ன பரிசீலனை செய்யமுடியுமோ அவற்றைச் செய்யும்படி கேட்டிருக்கிறேன். ஒருவேளை திருச்சியில் வருகிறது, தஞ்சையில் வருகிறது என்றால் அந்த வட்டாரத்தில் கொஞ்சம் புழுதி அதிகம். அரசியல்

ஒரு தொழிலாளருக்கு கார்டு கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கச் செய்யலாம்.

பொதுவாக கிராமங்களில் நாம் இதை வழங்காவிட்டாலும் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று பிரத்தியேக ஏற்பாட்டின்படி இது செய்யப்படுகிறது. ஆகவே, எந்த ஆலை என்று குறிப்பிட்டு எழுதியனுப்புவார்களேயானால் அதை நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** மில் தொழிலாளர்கள் கிராமங்களிலிருந்து வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் அந்தந்த கிராமங்களில் கார்டுகளை பதிவு செய்துகொண்டுள்ளார்கள். அவர்களுக்கு மில்லில் உணவு தானியம் போடுவதில்லை. கிராமப் பகுதிகளிலும் உணவு தானியங்கள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உடனடியாக உணவு தானியங்கள் கிடைக்கச் செய்யவேண்டும். லே அவுட் அநேகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் உணவு தானியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு கிராமப்பகுதிகளில் கூட்டுறவுக் கடைகளில் உணவு தானியங்கள் வழங்க அரசாங்கம் உத்தரவு இடுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** லே அவுட் அல்ல, லே ஆப் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் எடுத்திருக்கிற கொள்கைப்படி சில கிராமங்களில் உணவு தானியங்கள் கிடைக்கவில்லை என்று சொல்வது தவறு. கிராமங்களில் உணவு தானியங்கள் இருக்கிற காரணத்தால் உற்பத்தி ஸ்தானங்களில் நாம் உணவு தானியம் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். தொழிலாளர்கள் இருக்கிற பகுதிகளானால் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். அப்போதுதான் கட்டுப்பாடாகக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும்.

**(ஆ) தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு அளிக்க மின்வாரியம் காலம் கடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.**

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி





1—12—1974 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் மின்சார வாரியம் காலம் கடத்திக்கொண்டு வருகிறபடியால் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் கொந்தளிப்பான நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு தொழில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, இந்த அறிக்கை @ கிட்டத்தட்ட 6 பக்கம் இருப்பதால்—இதை மன்றத்தில் வைத்து இருக்கிறேன்—மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்தால், இதை வாசிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மன்றத்தில் வைத்தால் போதும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த அறிக்கை பெரிய அறிக்கையாக 6 பக்கம் அளவில் இருக்கிறது. இதை இங்கே வந்துதான் படிக்கவேண்டியிருக்கிறது. அப்படி அந்த அறிக்கையைப் படிக்கின்றபோது பல பிரச்னைகளை, கிளாரிபிகேஷன்களை கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இரண்டு, மூன்று விளக்கங்கள் கேட்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே ஒரு கிளாரிபிகேஷன் தான் கேட்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** இரண்டு கேள்விகள் கேட்க அனுமதி அளிக்கப்பட வேண்டும். மூன்றாவதாகக் கேட்பதற்குத்தான் கன்செஷன் வேண்டும் என்று கேட்டேன்.

1—12—1974-முதல் புதிய சம்பள விகிதங்கள் பேச்சு வார்த்தைகள் மூலம் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் 1—12—1974-க்குப் பிறகு தான் அந்தத் தொழிற் சங்கங்களை அழைத்து, 6 முறை பேசியிருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. அப்படிப் பேசியும் எந்த விதமான முடிவுக்கும் வரவில்லை. அந்த சங்கங்களோடு பேசி எப்போது முடிவுக்கு வரும்? ஏற்கனவே 1—12—74 முதல் புதிய

---

@ 136–141-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. க. அன்பழகன்] [1975 ஏப்ரல் 5

புழுதியோ எந்தப் புழுதியோ, திருச்சியிலும் தஞ்சையிலும் இருக்கிறது. புழுதிக் காற்று அடிக்கும் இடத்தில் பொதுவாக இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கலாம். அந்தப் புழுதியின் விளைவுகளைத் தடுப்பதற்கு என்னென்ன பாதுகாப்பு முறைகளைக் கையாள முடியுமோ அவைகளைக் கையாள்கிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியனுக்கு கேள்வி கேட்க அனுமதி அளித்த தலைவர் அவர்கள் எனக்கும் மின்சாரம் சம்பந்தமாக ஒரு விளக்கம் கேட்க அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பரஸ்ட் சப்ஜக்ட்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பர்ஸ்ட் சப்ஜக்ட் முடிந்து பர்ஸ்ட் சப்ஜக்ட்டுக்கு மறுபடியும் ரிவர்ட் செய்வது சரியல்ல. தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இது ஒரு முக்கியமான விஷயம். சிறிது லீனியன்ஸ் காட்டுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஷார்ட் நோட்டீஸ் குவஸ்ச்சன் ஒன்று கொடுத்தால் நாளைக்கே அமைச்சர் அவர்களை விடையளிக்கச் சொல்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) பல்லடம் தாலுக்கா கூட்டுறவுத்துறை கடைகளில் நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்காததால் ஆலைத் தொழிலாளர் பட்டினி கிடக்க வேண்டிய நிலை குறித்து.

**திரு கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காததால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. என். மருதாசலம்:** பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காததால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி



1975 ஏப்ரல் 5] [திரு. என். மருதாசலம்]

கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்காவில் பொதுவாக நூற்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாய விலையில் அரிசியும், கோதுமையும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அங்கு தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்ற நிலை இல்லை. பொதுவாக தொழிலாளர்களுக்கு குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டு வாரம் இரண்டு கிலோ அரிசியும், இரண்டு கிலோ கோதுமையும் கார்டுக்கு வழங்க அமைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** அமைச்சர் அவர்கள் கூட்டுறவு ஸ்டோர்களில் அவர்களுக்கு மீண்டும் இரண்டு கிலோ அரிசி போட அமைப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அங்கிருக்கிற நிலை சீர்படவில்லையென்ற தகவல் வந்திருக்கிறது. அந்தக் கார்டுகள் மில் கூட்டுறவு ஸ்டோரில் பதிவு செய்தால்தான் அரிசி கிடைக்கும். அந்த கார்டுகளைக் கொண்டுபோய் ஊரிலுள்ள கூட்டுறவுக் கடைகளுக்குப் போய் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று மில் ஸ்டோர் நிர்வாகிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அவசியம் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்து அந்த கூட்டுறவு ஸ்டோர்களிலேயே அவர்களுக்கு அரிசி விநியோகிக்கின்ற அளவிற்குச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இரண்டு கிலோ அளவில் என்பது 15 நாளைக்குக் கூட வருவது கிடையாது. ஆகவே, அதை சிறிது கூடுதலாக்கி ஒரு வாரத்திற்கு ஐந்து கிலோ அரிசியாவது கிடைக்க உத்தரவு போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வேறு பக்கத்தில் எதுவும் வாங்கமுடியாது. மில் ஸ்டோரில்தான் கடன் பெற வேண்டியிருக்கிறது. எனவே, அங்கேயே கூடுதல் அரிசி வழங்கும் சூழ்நிலையை எற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆலைகளில் தொழிலாளர்கள் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் அரிசி, கோதுமை வழங்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். எதாவது ஒரு குறிப்பிட்ட ஆலையில் வழங்கப்படவில்லை அல்லது யாராவது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீராசாமி, உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன?

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இது ரொம்ப சீரியஸான மேட்டர். மற்றவர்களுக்கு எல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த மாதிரி லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால் 2 நாட்களுக்கு முன்னால் வைத்து விடுவது நல்லது. காலையில் கொடுத்துவிட்டு, உடனே எடுத்துக்கொண்டு விட்டால், நேரம் கொடுக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஆகவே, லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் வையுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் மாண்புமிகு தலைவரின் அனுமதியைக் கேட்டேன். படிக்கட்டுமா என்று கேட்டேன். 5-6 பக்கம் இருப்பதால், காலம் விரயம் ஆகுமே என்ற காரணத்தால் கேட்டேன். மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்ததால்தான், படிக்கவில்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டேன். இல்லையென்றால் படித்து இருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய அனுமதி பெற்றுதான் செய்தீர்கள். பெரிய ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் சர்க்குலேட் செய்யுங்கள். அதற்குப்பிறகு எடுத்துக்கொண்டால், டிஸ்கஸ் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. நா. வீராசாமி:** பெரிய ஸ்டேட்மெண்டாக இருக்கிறது, அதிலே சில விளக்கங்களும் கேட்க வேண்டியிருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** ரூல் — 41 கொடுத்தவருக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி அளிக்கிறபோது, பாராளுமன்றத்தில் கூட, ஒரு கேள்வியில் எ, பி, சி, டி என்று உப கேள்வி போட்டுக் கேட்டு விடுவார்கள். அந்த வகையில் கேட்டு இருக்கலாம். இன்று கேட்கவில்லையென்றாலும், எதிர்காலத்தில் அவர் அப்படிக் கேட்கலாம்.





**திரு. நா. வீராசாமி:** எனக்குக் கேள்வி கேட்பது எப்படி என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லவேண்டாம். அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால், அறிக்கையில் சில குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "வேஜ் கைய்ட்லைன்ஸ் கமிட்டி".

MR. DEPUTY SPEAKER: I have passed over to the next subject. உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** 6 பக்கம் அறிக்கையைப் படித்து விட்டு, கேள்வி போட வேண்டும் என்றால், ஒரு கேள்வி தான் அனுமதி கொடுத்தீர்கள். ரூல் 41-ன் கீழ் இது கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இப்படிக் கேள்வி கேட்க அனுமதிக்காமல் செல்வது நியாயமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தப் பிரச்னையைவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற விஷயங்களைப் பெறவேண்டுமென்றால், குறுகிய கால கேள்வி போடலாம். குறுகிய கால கேள்வி என்று வருகிறபோது, வருகின்ற நாட்களில் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

## 7. 1975-76-ம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### நிதிக்கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

சம்பள விகிதங்கள் மாற்றி அமைத்து இருக்க வேண்டும். ஆகவே, உடனடியாக ஒரு மாத காலத்திற்குள் அந்தச் சங்கங்களை அழைத்துப் பேசி முடிவுக்கு வருமா?

இரண்டாவதாக, அந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், அந்தச் சங்கங்களுக்கு எந்த யூனியனுக்கும் ரெகக்னிஷன் இல்லாததால், மின்சார வாரியமே ரெகக்னிஷன் கொடுத்து, அந்தச் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. இப்போது ஏற்கனவே இருந்த சங்கங்களைத் தவிர புதிதாகச் சங்கங்கள் ஏற்பட்டு உள்ளன. உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும் சங்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சங்கங்களையும் அழைத்து நம்முடைய அரசாங்கம், வாரியம் பேச்சு வார்த்தை நடத்த முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1—12—74-ல் ஏற்கனவே இருந்த சம்பள விகிதம், பேச்சுவார்த்தை முடிந்து, உயர்த்தி இருக்க வேண்டும். அதற்காக 'வேஜ் ரிவிஷன் குழு' என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1 மாத காலத்திற்குள் முடித்து விடவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், ரெகக்னைஸ்டு சங்கங்களோடு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார்கள். மற்ற சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தவும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

**MR. DEPUTY SPEAKER:** That is not allowed.

**திரு. நா. வீராசாமி:** ஒரே நேரத்தில் எத்தனைக் கேள்விகள் கேட்க முடியும்? அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கிறது என்றால், ஆப்-அவர் டிஸ்கஷன், ஹன்-அவர் டிஸ்கஷன் வேண்டுமென்று சொல்லுங்கள்.



**திரு. நா. வீராசாமி:** சார், ஒரு கிளாரிபிகேஷன்...?

**MR. DEPUTY SPEAKER:** You are not allowed to speak.

## 5. தீர்மானம்

### உறுப்பினர் திரு. ஓ. என். சுந்தரம் அவர்களுக்கு விடுப்பு கொடுப்பது பற்றி

**THIRU R. PONNAPPA NADAR:** Sir, under rule 15 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move—

> 'That leave of absence be granted by this House to Thiru O. N. Sundaram, M.L.A., for a period of sixty days from 28-8-1974.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**திரு. நா. வீராசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது முடியட்டும்.

## 6. அரசினர் சட்ட முன் வடிவு

### தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. நா. வீராசாமி நின்றுகொண்டிருந்தார்.)

THIRU K. P. GOPAL: Sir, to discuss about the necessity to reorganise the Town and Village Panchayats as viable units, I move—

'That the allotment of Rs. 29,00,09,000 underr Demand No. 28 — Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, வளர்ச்சித் திட்டங்களில் மக்களை இணைத்துச் செயல்படுத்த வழிகாண்பது பற்றி விவாதிக்க

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சிப் பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெற துறையில் ஏற்படும் நீண்டகாலத் தாமதங்களை தவிர்ப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் சமுதாயக் கிணறு வெட்டும் பணியை விரைவுபடுத்தவேண்டும் என்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 28. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, கோவில்பட்டி, தாலுக்கா போன்ற வறட்சிப் பகுதிகளில் அதிகமான குழாய்க் கிணறுகளைப் பாசன ஏற்பாட்டிற்காக அமைக்க விசேடத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கிராமப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேளாண்மையில் நல்ல ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவதற்கும், இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதன் மூலம், அந்த கிராம மக்கள், உழைக்கின்ற மக்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 1958-லே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வருகிறபோது அதற்கான செலவினங்கள், அதற்கான வரவினங்கள்—1958-லே நிர்ணயித்து இருந்தாலும்—நாளடைவில் அது மிக வேகமாக வளர்ந்து, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல வளர்ச்சியைப் பெற்று இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்வேன்.

கல்விக்காக 1958-லே 3.50 என்ற அளவிலே செலவினங்கள் ஒரு நபருக்கு வைத்து இருந்தாலும், 1975-76-லே இந்த ஆண்டிலே அது 13.50 என்ற அளவிலே உயர்த்தப்பட்டு இருக்கிறது. வருமானம் என்ற அளவிலே, உள்ளூர் மேல் வரியில் 50 பைசா என்று இருந்தது, இன்று 2.50 பைசா என்ற வகையிலே நாம் உயர்த்திக் கொள்வதற்கு அந்த மன்றங்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறோம். அதேபோல், வீட்டு வரி 30 பைசா என்று இருந்தது, 1975-76-லே 60 பைசா என்று உயர்ந்து இருக்கிறது. அதுபோல், மேல்வரி, இணைமானியம் 50 பைசா என்று இருந்தது. இப்போது 3.75 என்று உயர்வு பெற்று இருக்கிறது. இன்று ஊராட்சிகள், ஒன்றியங்கள் மக்களுக்கு செய்கிற எல்லாக் காரியங்களிலும், நம்முடைய மாநிலம் தான் முதன்மையாக இருக்கிற வகையில் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல 1958-ல் மேல்வரி இணை மானியம் ரூ. 0.50 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 3.75 ஆகியுள்ளது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 156 கோடி. இது 4-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 330 கோடியாகவும் 5-ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 500 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகம் எந்த அளவிற்கு மிக வேகமாக முன்னேறி இருக்கிறது என்பதற்கு நான் காட்டிய புள்ளிவிவரங்கள் போதும் என்றே கருதுகிறேன். மகாத்மா காந்தி, சுதந்திரம் பெற்றதும், கிராம ராஜ்யம் ஏற்பட-

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 5

வேண்டுமென்று விரும்பினார். நகரத்திலுள்ள மக்களுக்குக் கிடைத்துள்ள வசதிகள் கிராமத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற லட்சியம் வளர்ந்தது. 1958-லேயே இதற்கென திட்டங்கள் ஏற்பாடு செய்தார்கள். என்றாலும் இந்த அரசு வந்த பிறகுதான் அவைகள் நிறைவேற்றப்படுகின்றன. 1975-76-வது ஆண்டிற்கு ரூ. 29 கோடி அளவில் அவைகளுக்கு செலவிட அரசு திட்டங்கள் தயாரித்துள்ளது. எனவே, இத்திட்டங்களில் உள்ள குறைகள், ஏற்படக் கூடிய செலவினங்கள், அரசின் நிதிவசதிக்குத் தகுந்த மாதிரியான ஆலோசனைகளை உறுப்பினர்கள் இங்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கும், அவர்கள் யோசனைகளுக்குப் பதில் அளிக்க அதிக நேரம் ஒதுக்கித் தரும்படியும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சி கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் 80 சதவிகிதத்தினர் கிராமவாசிகள். கிராமம் முன்னேறினால் தான் நாடு முன்னேறினதாகக் கருத முடியும். கிராமங்களை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக, அரசியல் சட்டத்தில் 40-ஆவது ஷரத்தில், பஞ்சாயத்து முறைகள் மூலம் கிராமங்கள் வாழ வழிவகுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றை அதிக அளவில் அமைக்க வழிவகுக்கப்பட்டிருக்கிறது. நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும். கல்வி வசதி, ரோடு வசதி, குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டியது மிக அவசியம். ஆனால் இந்த லட்சியங்கள் பூரணமாக நிறைவேற முடியாமல் பல சிக்கல்கள் இருந்து வருகின்றன.

அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதற்காக மாநில சுயாட்சி கேட்கின்ற இந்த அரசு அதன் கீழ் உள்ள பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதன் அலுவல்களை நிறைவேற்ற அதிகாரம் இருக்கிறதா என்றால் பூரணமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஜெனரல் ஃபண்ட்டை பயன்படுத்த வேண்டுமென்றால் கூட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கோர வேண்டியிருக்கிறது.



1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

பஞ்சாயத்து யூனியன் கட்டடங்கள் பழுது பார்க்கக்கூட அரசின் அனுமதி கோர வேண்டியிருக்கிறது.

இதுவரை பஞ்சாயத்துக் கமிட்டியின் மூலம் நியமனங்கள் நடைபெற்று வந்தன. இப்பொழுது அந்த அதிகாரமும் போய், அதுவும் கலெக்டரிடம் போய்விட்டது. இப்படி அதிகாரங்கள் உள்ளாட்சி ஸ்தாபனங்களுக்கு இல்லாததால் வேலைப் பணிகளை நிறைவேற்ற நிறைய காலதாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்து ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் மறைமுக தேர்தல் இருந்து வருகிறது. டைரக்ட் எலக்ஷனுக்கு வழி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தேர்தல் ஒழுங்கீனங்கள் குறையும்.

சட்டசபை உறுப்பினர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் ஓட்டுரிமை அதிகாரம் கொண்ட பூரண அங்கத்துவம் வழங்கவேண்டும். இப்பொழுது அவர்களுக்கு அந்த உரிமை இல்லை.

பஞ்சாயத்து யூனியன் ஏரியா வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட பொது காரியங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை மாதத்திற்கு இரண்டு தடவையாவது அவர்கள் பயன்படுத்த அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

இன்று பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் பெரிய பஞ்சாயத்திற்கும் சிறிய பஞ்சாயத்திற்கும் ஒரு பிரதிநிதிதான். 300 ஜனத்தொகை கொண்ட கிராமப் பஞ்சாயத்துக்கும் 2,000 ஜனத்தொகை கொண்ட ஒரு டவுன் பஞ்சாயத்திற்கும் ஒரு பிரதிநிதி. இந்த நிலை மாறி அவர்களுக்கு ஜனத்தொகைக்கு பொருத்தமாக பஞ்சாயத்து யூனியனில் பிரதிநிதித்துவம் கொடுக்க வழிவகுக்க வேண்டும்.

நகரசபைத் தேர்தல் நடக்கவில்லை. பஞ்சாயத்துக்கான தேர்தல்கள் ஆகஸ்ட் செப்டம்பரில் நடக்க வேண்டும். அதற்கான வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் வேலை இப்பொழுதே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஜீப்புக்கள் வேறு காரியங்களுக்காகப் பஞ்சாயத்து யூனியன் பகுதிக்கு வெளியில் பயன்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிப் பணிகளுக்கு அவைகளைப் பயன்படுத்த வழிவகுக்க வேண்டும்.

[திரு. என். டென்னிஸ்] [1975 ஏப்ரல் 5

மதிய உணவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் சரிவர கண்காணிக்காத நிலை இருக்கிற இதைச் பலவிதமான ஒழுங்கீனங்கள் காரணத்தினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊராட்சித் தலைவரை இந்தத் திட்டத்திற்குத் தலைவராகவும், தலைமை ஆசிரியரை செயலாளராகவும் கொண்டு இந்தக் கமிட்டி இருக்கிறது. ஆனால் நடைமுறையில் செயல்படவில்லை. பேப்பர் கமிட்டியாகவே இருக்கிறது. இது செயல்படுத்தச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இதைச் அப்படிச் செயல்படுத்தி, இந்த ஒழுங்கீனங்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிய உணவிற்கான மானியத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, லோகல் ரோடு கிராண்ட்ஸ் குறைவாக இருக்கிறது. இந்த மானியம் மூன்று தரங்களாக சாலை பிரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. நபருக்கு 18 காசு என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அதோடு சாலையின் நீளம் கணக்கிடப்படுகிறது. எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மேடு, பள்ளம் நிறைந்த இடமாக அந்தப் பிரதேசம் இருக்கிறது. இந்தக் காரணத்தினால், இதை 3 ஆவது தரத்தில் சேர்த்து அதாவது மலை பாகத்திற்கான 1,340 ரூபாய் வழங்கக் கூடிய சாலைகளாக இதை கிளாசிபிகேஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதமாக கிளாசிபிகேஷன் செய்யப்பட்டால்தான் அந்தச் சாலைகள் நல்ல விதமாகப் பராமரிக்கப்பட இயலும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னபடி, லோகல் ரோடு கிராண்ட்சுக்கான மானியம் போதுமானதாக இல்லை. இதனால் பாலங்கள் அமைக்க முடியவில்லை, ரோடுகளைப் பராமரிக்க முடியவில்லை. ஆகவே இந்த மானியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோல வில்லேஜ் வொர்க்ஸ் புரோக்கிராமில் குடி தண்ணீர் சப்ளை, இணைப்புச் சாலைகளுக்கான மானியமும் போதுமானதாக இல்லை. பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் இவைகளைப் பராமரிக்க நிதிநிலை போதுமானதாக இல்லை. ஆதலால்,



1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

இவைகளுக்கான வழி வகைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் போகும் சாலைகளை எல்லாம் ஹைவேஸ் சாலைகளாக மாற்ற வேண்டும்.

மைனர் இர்ரிகேஷனைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் குறைவாக இருந்ததால் அந்தத் தொகை செலவு செய்யப்படாமல் லாப்ஸ் ஆனது. இந்த ஆண்டு இதுவரையிலும் மைனர் இர்ரிகேஷனுக்காக தொகை ஒதுக்கப்படவில்லை. ஆகவே, தொகை ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகள் நடைபெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டரை எடுத்துக் கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும், இரண்டு அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டர்கள் இருக்கின்றன. இவைகள் போதாது. இவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சங்கை என்ற இடத்தில் ஒரு அனிமெல் ஹஸ்பெண்டரி சப்-செண்டரை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூரல் ரோட்ஸ் ப்ரொக்கிராமை எடுத்துக் கொண்டால் சில பஞ்சாயத்து யூனியனில் பல சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனில் ஒரு வேலையும் நடக்காத நிலை இருக்கிறது. ரூரல் ரோட்ஸ் ப்ரொக்கிராமில் ரோடுகள் எடுக்கப்படாத பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்ளைட் ந்யூட்ரிஷன் ப்ரொக்கிராமை எடுத்துக் கொண்டால் அப்ளைட் ந்யூட்ரிஷன் ப்ரொக்கிராம், ரூரல் மேன் பவர் ஆகியவைகள் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் ரெகமண்ட் செய்தார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

பஞ்சாயத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லை. செகண்ட் கிரேட் கிராம சேவக் முதல் வகுப்பு கிராம சேவக் ஆவதற்கு 12, 15 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன.

டிராவலிங் அலவன்ஸ் ஃபர்ஸ்ட் கிரேட் கிராம சேவக்கிற்கு ரூ. 20, செகண்ட் கிரேடுக்கு ரூ. 15 என்று இருப்பதை, ரூ. 40, ரூ. 20 என்ற அளவிற்கு உயர்த்த வேண்டும்.

எ.ஆர்.சி. சிபாரிசுப்படி, கிராம சேவக்குகளில் 200 பேருக்கு டிபுடி அக்ரிகல்சரல் ஆபீசர்களாக பதவி உயர்வு தரப்பட வேண்டும்.

கேரளத்தில் கிராம சேவக்குகளுக்கு வில்லெஜ் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். இங்கே அவர்களுக்கு ஆதால் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற பெயர் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஃபேமிலி பிளானிங்கில் ஹெல்த் எடுகேட்டர் வேலையில் கிராம சேவக்குகள் அமர்த்தப்பட வேண்டும். அவர்கள்தான் இன்று இந்த வேலையில் எண்பது சதவீத வேலையைச் செய்கிறார்கள்.

ப்ரொடக்டட் வாட்டர் சப்ளைக்காக இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்ட வேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது. அது, பஞ்சாயத்து நிதி வசதிகளுக்கு அதிக நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. நிதிநிலை குறைந்த ஊராட்சிகளுக்கு அதைக் கட்ட முடியவில்லை.

(முற்பகல் 10-00)

ஆதலால், பல திட்டங்களை அமுல் நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்வெஸ்டிகேஷன் சார்ஜை அரசு ஏற்று நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல ஊராட்சிகள் சிறியதாக இருக்கின்றன. ஆகையால் அவைகள் எகானமிகலி வையபில் யூனிட்டாக செயல்பட முடியாத நிலை இருக்கிறது. நிதி நிலை இல்லாத காரணத்தினால் நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சிறிய பஞ்சாயத்துக்களை அமல்கமேட் செய்யும் வேலையை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில



1975 ஏப்ரல் 5] [திரு. என். டென்னிஸ்]

ஊராட்சி எல்லைகள் அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வீனியன்ஸ் இல்லாத நிலையில் இருக்கின்றன. அவைகளை அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வீனியன்ஸ் உள்ளதாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மாதர் சங்கங்களை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மாதர் சங்கங்களுக்கு மாத்திரம் மானியம் வழங்கப்படுகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தை இந்த அடிப்படையில் பார்த்தால் ஏகதேசம் ஒரு லட்சம் என்பதினாயிரம் ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்து யூனியனுக்கு 5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு மாதர் சங்கம் இருக்கிறது. இது போதாது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு மாதர் சங்கமாவது கொடுக்க வழி வகுக்க வேண்டும். அதிக மாதர் சங்கங்கள் ஏற்படுத்த அதிக மானியம் வழங்கக் கேட்டுக்கொள்வதோடு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் போல சோஷியல் எஜுகேஷன் செண்டர் குறைவாக இருக்கிறது. இது ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு செண்டர் என்று இருக்க வேண்டும். இப்போது அப்படி இல்லை. மேலும் சோஷியல் எஜுகேஷன் செண்டருக்கு கொடுக்கக்கூடிய நிதி, மானியம் குறைவாக இருக்கிறது, அதனால் அவைகள் ஒரு பத்திரிகையும் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அவைகளுக்கு மானியத்தை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் செண்டரில் மூன்றாவது மருத்துவ அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டாவது பிரைமரி ஹெல்த் செண்டரை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். பிளாக் டெவலப்மெண்ட் கமிட்டி ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் செண்டருக்கும் இருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இதைச் செயல்முறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஹால் இன்னும் கட்டப்படாத பல பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் போன்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு கவுன்சில் ஹால் இல்லாத நிலை இருக்கிறது. அதை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிரமதான வேலைகளை எடுத்துக் கொண்டால் ஒரு உயர்ந்த நோக்கத்தோடு இந்த சிரமதானம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று கண்டிராக்ட் மூலம் இந்த வேலைகள் நடத்தப்படுகின்றன. சிரமதானத் தொண்டர்களைக் கொண்டே வேலைகளை நடத்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நகரப் பஞ்சாயத்துக்களின் நிதி போதுமானதாக இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் மிக ஆத்திரம் ஆத்திரமாக, சில பஞ்சாயத்துக்கள் நகரப் பஞ்சாயத்துக்களாகத் தரம் பிரிக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட அவைகளை திரும்பவும் வில்லேஜ் பஞ்சாயத்து ஆக்கவும் அப்போது அந்த நகரப் பஞ்சாயத்திலுள்ள ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் ஓரிரு கருத்துக்களை வைக்க முன்வந்திருக்கிறேன்.

இன்றைய தமிழகத்தில் 374 பஞ்சாயத்து ஒன்றியங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த 374 பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் 1967-க்கு முன்பு இருந்த நிலையை மாற்றி 1967-க்குப் பிறகு இந்த 7, 8 ஆண்டு காலத்தில் அந்த ஒன்றியங்களெல்லாம் இப்போது எந்த அளவிற்குச் செம்மையாகச் செயல்படுகின்றன என்பதைப் பார்க்கிறபோது நாடும், நாட்டு மக்களும் இந்த அரசைப் பாராட்டிப் புகழ்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வறட்சி வந்து நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. அப்படி வறட்சி உள்ள இந்த நேரத்திலும் கூட ஒன்றியங்கள் மூலமாக நாட்டு மக்களுக்குச் செய்யப்படுகிற தொண்டுகள் மிக ஏராளம்.





குறிப்பாகக் கூறவேண்டுமானால் இப்போது வறட்சி உள்ள இந்த நேரத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் கூட, ஒன்றியங்கள் மூலமாக மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து தர சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கிறபோது மகிழ்ச்சியாக இருக்கிறது.

எங்கள் பகுதியான தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதிகளில் கிணறுகளிலே கற்கள் மட்டும் இருந்து கொண்டிருக்கிற நிலையில் வறட்சி இருக்கிறது. தமிழகத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவரவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி அந்த செஞ்சிப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது எங்கள் பகுதி மக்கள் தமிழக அரசையும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் உள்ள ஒன்றியத்தில் குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு அந்த மக்களெல்லாம் இந்த ஆண்டு திருவிழா நடைபெறாது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களோடு தொடர்பு கொண்டு, குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களோடு தொடர்பு கொண்டு எடுத்துச் சொல்லி, உடனடியாக இரண்டு வார காலத்தில் அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் குடி தண்ணீர் தந்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய வட்டார மக்கள் தமிழக அரசையும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரவர்களையும் பாராட்டுகிறார்கள். நாங்கள் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

குறிப்பாக, ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்வி இலாகா பற்றி நாம் தயவுசெய்து சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற கல்வி இலாகாவுக்கும், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற மக்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு சில அடிப்படை பிரச்சனைகளை கவனிக்கிறபோது கல்வி இலாகா தடை போட்டு, ஒன்றியம் அவர்களுக்குச் செய்வதை செய்ய முடியாத

நிதி போதாது. ஆகவே, இன்னும் அதிகத் தொகை ஒதுக்கி, 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஜீப்புகள் தந்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீப்புகள் இருந்தால்தான் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற சில பல துறை வேலைகளை எல்லாம் செய்ய முடியும். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஆணையாளரும், பொறியாளரும் செம்மையாக வேலைகளைக் கவனித்து, முடிப்பதற்கு ஜீப் இருந்தால்தான் ஏதுவாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான பிரச்னையைக் குறிப்பிட விரும்புகிறேன். 1967-ல் இந்த மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது அந்தப் பிரச்னையை வைத்தேன். அது முடிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் செயல் வடிவத்தில் வரவில்லை. ஊராட்சி ஒன்றியத்தில் எரிகிற தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே பலமுறை பேசியிருக்கிறேன். அதை இந்த அரசு ஏற்று, உடனடியாக மீட்டர் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்த வேலை செய்யப்படவில்லை. எல்லாக் கிராமப்புற மக்களுக்கும் மின்சாரம் தரப்பட்டும் ஊராட்சி ஒன்றிய தெரு விளக்குகள் எரியவில்லை என்ற குறை மக்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. தெரு விளக்கு எரியவில்லை என்று ஒன்றியத்தில் புகார் கூறுகிறார்கள். ஆனால் மின்சாரக் கட்டணம் மட்டும் எல்லா விளக்குகளுக்கும் கட்ட வேண்டியிருக்கிறது. இந்தப் புகாருக்கு இடமில்லாமல் செய்ய வேண்டும். எரிகின்ற விளக்குகளுக்கு மட்டும் கட்டணம் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு மீட்டர் பொருத்த வேண்டும். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, இந்த உள்ளாட்சித் துறை மானியத்தை வரவேற்று, அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதாது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த கம்யூனிட்டி டெவலப்மெண்ட் மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல முன்வந்துள்ளேன்.



இந்த கம்யூனிட்டி டெவலப்மெண்ட் என்பது, பஞ்சாயத்து இராஜ்யம் என்ற காந்தியடிகளின் ஜீவாதாரமான லட்சியத்தை வைத்து, நாட்டிலே பரவலாக அடித்தளத்தில் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுடைய நிலையை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின் பலனாக கிராமப்புறங்களில் இருக்கிற மக்களை உற்சாகப்படுத்தி, செயல்பட வைத்து, கிராமப்புற மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி இன்றைய தினம் தேய்ந்து, தேய்ந்து, கவனக் குறைவு ஏற்பட்டு, ஆரம்பக் காலத்தில் என்ன உற்சாகம் காட்டி, எந்த நேரத்தில் இந்த அமைப்பு வேண்டுமென்று உற்சாகத்தோடு ஊக்கத்தோடு கருதினேமோ அதெல்லாம் குறைந்து போய், இன்றைக்கு ஏதோ அதிகாரிகள் மட்டத்தில் செயல்படக்கூடிய (இதரத் துறைகளில் இருப்பதைப் போல) அளவில் இந்த கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ஆகிவிட்டது என்று காணும்போது வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. ஏதோ அதிகாரிகள் அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு ஸ்தாபனமாக இது ஆகிவிட்டதே தவிர, மக்கள் நலனைக் கருதி, நாட்டின் நிலையை உயர்த்துவதற்கு ஒரு உணர்ச்சியை மக்களிடையே தூண்டுவதற்கு இந்த அமைப்பு தவறிவிட்டது.

இன்னும் சொல்லப் போனல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இம்மாதிரி மக்களை உற்சாகத்தோடு செயல்பட வைக்க வேண்டுமென்ற எண்ணம் குறைந்துவிட்டது. இப்படி பஞ்சாயத்துக்கள், ஒன்றியங்கள் எல்லாம் ஏதோ உயிர் இல்லாத ஒரு ஜடம் போலாகிவிட்டது என்று கூறும் நிலை வந்து விட்டது. ஆகையால் நமக்கு ஏற்பட்டிருக்கிற புதிய சிந்தனையின் பயனாக, அமைப்பின் பயனாக இதை எப்படி மேம்படுத்தி, மக்களை உற்சாகத்தோடு கிராமப்புற வேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடச் செய்கின்ற வகையில் செயல்படுவது என்பதை புதிய நோக்கத்தோடு இந்தப் பிரச்னையை அரசு அணுக வேண்டுமே தவிர, கடந்த காலத்தில் இருப்பதை அப்படியே நடைமுறைப் படுத்தி, புதிய சிந்தனை இல்லாமல் போய்க் கொண்டிருப்பது இந்த பஞ்சாயத்து இராஜ்யத்தை எப்படி உருவாக்க வேண்டுமென்று கருதினேமோ அதைச் செய்யவில்லை என்பதைத் தான் குறிக்கும்.

நிலையை ஏற்படுத்துகிறது. அதை உடனடியாக மாற்ற வேண்டும். இந்த இரட்டை ஆட்சி முறை இன்றைக்குக் கல்வி இலாகாவில் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற கல்வி இலாகா அந்த ஒன்றிய அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உட்பட்டு செயல்பட வேண்டும். இல்லை என்றால், ஒன்றியத்தில் இருக்கிற பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி அரசாங்கமே எடுத்துக்கொள்வதாக இருந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற இணைப்புச் சாலைகள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு இணைப்புச் சாலைகள் போடுகிறார்கள். அப்படி இணைப்புச் சாலை போடும் போது அது அந்த ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் படுவதில்லை. அதனால் எப்படி, யாரால் அந்த இணைப்புச் சாலை போடப்படுகிறது என்ற விவரம் ஒன்றியத்தின் தலைவருக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாமல் போய்விடுகிறது. ஒன்றியத்தின் பொறியாளருக்குக் கூட தெரிவதில்லை. அந்த வேலையை ஒன்றியத்தில் இருக்கிற தலைவருக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவித்துவிட்டுச் செய்வதாக இருந்தால், எதை எதை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சரியான முறையில் எடுத்துச் சொல்லப்பட்டு, முறைபடுத்தித் தா ஏதுவாக இருக்கும். அதற்குக் கூட சந்தர்ப்பம் இல்லாமல் ரூரல் ரோட்ஸ் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகள் ஒன்றியத்தின் கவனத்திற்கு வந்த பின்னால் செய்யப் படும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற சாலைகளுக்கு ஊராட்சி ஒன்றியமே பராமரிப்புச் செலவு செய்கிறது. ஆனால் ஓடுகிற பஸ்களிலிருந்து கிடைக்கும் வருமானம் முழுவதும் அரசாங்கத்திற்கு வருகிறது. சாலைகளுக்குச் செலவு செய்வது, ஊராட்சி ஒன்றியம். ஆனால் வருமானம் அரசாங்கத்திற்கு. அதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணக் கஷ்டம் ஏற்படுகிறது.



ஆகவே, ஊராட்சி ஒன்றிய ரோடுகளில் பஸ்கள் ஓடத் தொடங்கி, 1, 2, 3 ஆண்டுகளில் அந்த ரோடுகளை ஹைவேஸ் எடுத்துக் கொள்ள வேண்டும். 3 ஆண்டுகளுக்குள் எப்படியாவது எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொள்ளும்போது அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் 'கேங்' கூலிகளையும் அரசாங்கத்தில் அல்லது ஹைவேசில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் டென்னிஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு 374 ஊராட்சி ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்த ஒன்றியங்களில் ஒன்றிய வேலைகளைச் செய்வதற்கு ஜீப்புகள் உண்டா என்றால் இல்லை. சில ஒன்றியங்களில் இருக்கிற ஜீப்புகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்படும் ஜீப்புகள் ஒரு மாதம், இரண்டு மாதமானாலும் திரும்ப வருவதில்லை.

குறிப்பாக, என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு மாதமாக ஜீப் இல்லை. அதனால் ஒன்றியத்தில் செயல்பட வேண்டிய வேலைகள் தடைப்பட்டுக் கிடக்கின்றன. அங்கு இருக்கிற பொறியாளர்கள் ஒன்றியத்தில் நடைபெற வேண்டிய வேலைகளைப் பார்வையிட்டு, செயல்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது ஜீப் வசதி இல்லாததால் வேலைகள் தடைபடுகின்றன. அதனால் ஒன்றியத்தில் இருக்கிற ஜீப்புகளை ஒன்றிய வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும். ஒன்றிய வேலைகளுக்கு ஜீப் பயன்படுத்தப்படவில்லையானால் அரசாங்கம் போடுகின்ற திட்டங்களை நாட்டு மக்களுக்குச் சரியான முறையில் எடுத்துச் சொல்ல இயலாது, நாட்டு மக்கள் அரசாங்கம் செய்யும் நன்மைகளை அனுபவிக்க முடியாது. அரசாங்கம் போடுகிற திட்டங்களைக் கிராமப்புறங்களில், பட்டி தொட்டிகளில் இருக்கிற மக்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒன்றியங்களுக்குக் கண்டிப்பாக ஜீப்புகள் இருக்க வேண்டும். ஒன்றியங்களுக்குச் சொந்தமான ஜீப்புகளை ஒன்றிய வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்திற்கும் அந்த ஜீப்புகளுக்கும் தொடர்பு இருக்கக்கூடாது. இன்னும் சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஜீப்புகள் இல்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டும். அதற்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1975 ஏப்ரல் 5

அட்மினிஸ்டிரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் இப்போது இருக்கிற பஞ்சாயத்து அமைப்பு, சரியான முறையில் பஞ்சாயத்தை நடத்த போதிய நிதியைத் தயார் செய்துகொள்ளக் கூடிய ஒரு அமைப்பாக இல்லாததால் இந்த அமைப்புகளை ஒரு வயபிள் யூனிட்டாக மாற்றி அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்தச் சிபாரிசு பற்றி இந்த அரசு எந்தவிதமான முடிவும் இதுவரை செய்யவில்லை. இது ரொம்ப அடிப்படையாகச் செய்ய வேண்டிய ஒரு பெரும் மாறுதல். இந்தப் பஞ்சாயத்துக்களை மாற்றி அமைத்து, வயபிள் யூனிட்டாகச் செய்யவில்லை என்றால் ஏதோ ஒரு தலைவர் இருக்கிறார்; அவர் தலைவராக நடித்துக் கொண்டிருக்கிறார் என்ற நிலைதான் இருக்குமே தவிர, அவர் கடமையைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஆகையால், அட்மினிஸ்டிரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் எப்படி 5,000 மக்கள் தொகை கொண்டதாக ஒரு பஞ்சாயத்து இருக்க வேண்டுமென்றும், அதற்குக் குறைவாக இருக்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறதோ அதைப்போல பஞ்சாயத்துக்களை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் நல்ல முறையில் இந்த அமைப்புகள் இயங்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு, அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே சில சிரமங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவர்களாக சில வேண்டியவர்கள் இருக்கலாம். அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். "எங்கள் தலைமை போய்விடும்" என்று சொல்லக்கூடும். மாற்றங்கள் ஏற்படுகிறபோது சில எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். அதைப் பொருட்படுத்தக் கூடாது. வயபிள் யூனிட்டுகளாக பஞ்சாயத்துக்களை எல்லாம் மாற்றி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி மிகக் குறைவானது. தெருவிளக்குகளுக்குக் கூட பணம் கட்ட முடியாத நிலையில் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒரு கிளார்க்கைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்றால் கூட நிதி



1975 ஏப்ரல் 5] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

போதவில்லை. எப்படி இந்தப் பஞ்சாயத்துக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்க முடியும் என்பதை அரசு கவனித்தாக வேண்டும். அரசு நிதியில் இருந்தாவது இன்னும் அதிக உதவி அளித்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் செயல்பட உதவியாக இருக்கும்.

அதோடு மட்டுமல்லாமல் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தாகவேண்டும். இன்றைக்கு எல்லாவற்றையும் சேர்த்து கோட்டையில் இருந்துகொண்டு மூக்கணாங்கயிறைப் பிடித்து இழுப்பதைப் போல — எதுவாக இருந்தாலும் அவர்கள் இங்கே டி.ஆர்.டி. இடம் அனுமதி பெற்றே செய்ய வேண்டுமென்ற நிலையில் வைத்திருக்கக்கூடாது. எதைச் செய்ய வேண்டுமென்றாலும் இங்கே எழுதி—ஆறு மாதங்கள் கழித்தே அனுமதி வந்தால் செய்யவேண்டும் என்ற நிலை இருந்தால் அவர்களால் எதைச் செய்ய முடியும்? ஆகவே அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக இப்போது இங்கே மூக்கணாங்கயிறு போட்டு பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறோம் என்றால் — இப்போது தவறு நடக்கவில்லையா என்ன? அது ஒரு சரியான காரணமாக இருக்க முடியாது. ஊராட்சிகளுக்கு இன்றைக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது. ஆகவே அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவேண்டும்.

அடுத்து, அவர்களுடைய நிதி வசதியை அதிகப்படுத்திக் கொள்ள லோகல் செஸ்ஸை ரூபாய்க்கு 2½ போட்டுக் கொள்ளலாம் என்று அதிகாரம் கொடுத்திருக்கிறோம். இது மிகமிக அதிகமான தொகை என்று கருதுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு 30 ரூபாய் மேல் வரி கொடுத்து வந்தால் இந்த 2½ லோகல் செஸ் 75 ரூபாய் அளவுக்கு கொடுக்க வேண்டிய நிலைமை வந்து விடுகிறது. பலவிடங்களில் இந்த அதிகபட்ச அளவு வரியைப் போட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. கட்டாயப்படுத்தப்படவில்லை என்றாலும் இதைப்போல போடச் சொல்லி மேலே இருக்கிற அதிகாரிகள் தீர்மானம் போடுங்கள் என்று சொல்கிறபோது ஊராட்சியில் உள்ளவர்கள் தாங்கள்

போடவில்லை என்றால் அந்த அதிகாரிகளால் என்ன துன்பம் வருமோ என்று போட்டுவிடக்கூடிய நிலைமைகளையும் பார்க்கிறோம். இது கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்கு மிகுந்த சிரமம் அளிக்கும். கட்டாயப்படுத்தப்படுவது—மறைமுகமாகக் கூட—தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து—இணைப்பு ரோடுகள் போடுவது—இரண்டாண்டுகளாக நாம் ரோடுகளைப் போட்டுக்கொண்டுதான் வருகிறோம். இது ரொம்ப முக்கியம். எத்தனை நாட்கள் தான் ஒரு கிராமம் இன்னொரு கிராமத்தோடு ரோடு இணைப்புக் கூட இல்லாமல் இருப்பது ? ரோடு இணைப்பு இல்லாத கிராமங்களே—இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் திட்டமிட்டு இன்னும் வேகமாக இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இன்னும் குடிநீர் திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்படுகிறது. இன்றைக்கு மேஜர் பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டாலும் கூட தங்களுடைய வருவாயை வைத்துக் கொண்டு செயல்பட முடியாத நிலைமைகளில் தான் இருக்கின்றன. குடிநீர் வாரியம் இன்வெஸ்டிகேஷன் சார்ஜைக் கட்ட வேண்டும் என்கிறார்கள். அதைக் கட்டினால்தான் இன்வெஸ்டிகேஷனையே எடுத்துக் கொள்வோம் என்கிறார்கள். வசதி உள்ளவர்களைப் பற்றி கவலையில்லை. வசதி இல்லாத பஞ்சாயத்துகளிலாவது அவர்கள் இன்வெஸ்டிகேஷனை நடத்தி—பிறகு ஸ்கீமிற்கு லோன் சாங்ஷன் செய்கிறபோது இதையும் சேர்த்து லோனை வசூலித்துக் கொள்ளலாம்.

**திரு. செ. கந்தப்பன் :** ஒரு சின்ன விளக்கம்—பொதுவாக மேஜர் பஞ்சாயத்துக்களிடம் தான் ஆய்வுக் கட்டணம் கேட்கப்படுகிறது. மைனர் பஞ்சாயத்துக்களில் கேட்பது இல்லை. இன்னும் இந்த ஆய்வுக் கட்டணத்தை தவணை முறையில் செலுத்த முன்வந்தாலும் மேஜர் பஞ்சாயத்துக்களின் இந்தக் கோரிக்கையை இப்போது ஏற்றுக்கொள்கிறோம். முன்னால் வசூலிக்கவில்லை என்றால்—பின்னால் அந்தத் திட்டத்தை கைவிடுகிற நிலை வந்தால்—இந்த ஆய்வுக் கட்டணத்தை



அவர்களிடம் இருந்து எப்படி வசூலிப்பது என்பதில் நடைமுறைச் சிக்கல் வரும். ஆகவேதான் இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நிதி வசதி இல்லாத மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் இதை கன்சிடர் பண்ணினால் போதும். ஆய்வுக் கட்டணத்தைக் கட்ட முடியாத நிலையில் இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு இம்மாதிரியான சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இன்றைக்கு எல்லாக் காரியங்களையும்—மீன் வளர்ப்பு—பழத் தோட்டம் என்பதாக—பஞ்சாயத்துக்களில் ஒப்படைத்து இருக்கிறோம் என்றாலும் செலவழிக்கப்படுகின்ற பணம் ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுகின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். அங்கங்கே நிரம்ப தவறுகள் ஏற்படுகிற சூழ்நிலை எல்லா இடங்களிலும் வளர்ந்து விட்டது.

சத்துணவுத் திட்டம் என்பதாக—பழத் தோட்டங்களை அங்கங்கே ஏற்படுத்துகிறோம் என்றால் அங்கே உற்பத்தியாகிற பழங்கள் ஏழைகளுக்காகப் போய்ச் சேருகின்றன ? பணத்தைச் செலவழிக்கிறோம். ஒருசில இடங்களில் பழத் தோட்டங்கள் நல்லமுறையில் கவனிக்கப்படுகின்றன. பலயிடங்களில் கிணறு இல்லாது — பம்புசெட்டு இல்லாது. சரியான முறையில் கவனித்து பராமரிக்கப்படவே இல்லை. பொதுப் பணம்—இப்படி வீணடிக்கப்பட்டால் அது நாட்டுக்குத்தான் நஷ்டம் என்பதை சிந்திக்க வேண்டும்.

மீன் உற்பத்தி செய்கிறோம் என்று அங்கங்கே தொட்டிகள் மீன் குஞ்சு வளர்ப்புக்காக கட்டப்பட்டன. தொட்டிக்கு ஐயாயிரம் செலவு—அவை எல்லாம் இடிந்துபோய் கிடக்கின்றன. இடிந்து நாசமாகப் போனதைப்பற்றி கவலையில்லை. எஞ்சி இருக்கக் கூடியவற்றையாவது எப்படி பாமரிப்பது என்பதைப் பார்க்க வேண்டும். உள்நாட்டு மீன் வளர்ப்புத் திட்டம் என்று ஆரம்பித்தார்கள். அதைக் கொஞ்சம் சரியான முறையில் நடைமுறைப்படுத்த கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களை மாற்றம் செய்வது—இப்போது ஒரு மாநகராட்சியில் இருந்து இன்னொரு மாநகராட்சிக்கு—ஒரு முனிசிபாலிட்டியில் இருந்து இன்னொரு முனிசிபாலிட்டிக்கு மாற்றம் செய்யலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். முனிசிபாலிட்டியில் இருந்து மாநகராட்சிக்கும், மாநகராட்சியில் இருந்து முனிசிபாலிட்டிக்கும் மாற்றம் செய்வதற்கும் வழிவகை செய்தாக வேண்டும்.

இன்னும் கோவை சிங்காநல்லூர் பகுதியில் குடிதண்ணீரே இல்லை—மக்கள் கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீர் வாரியம் உடனடியாக அந்தப் பகுதிக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10.30)

* **திரு. எஸ். கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

கிராம மக்களுடைய நல்வாழ்வை, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற இந்த உள்ளாட்சித் துறை மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளைச் செய்து வருகிறது என்பதை யாரும் மறுத்துப் பேசுவதற்கு இயலாது. அந்த அளவுக்கு, நகரப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் போல், கல்வி, சுகாதாரம், வேளாண்மை இவைகளிலெல்லாம் உற்சாகப்படுத்துகின்ற முறையிலே இந்தத் துறை சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறதென்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

1960-வது ஆண்டிலிருந்து படிப்படியாக தமிழகத்திலே இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்டு, இன்றைக்குத் தமிழ்நாடு பூராவிலும் ஏறக்குறைய 374 ஊராட்சி ஒன்றியங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், அரசினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற பல்வேறு புதிய புதிய திட்டங்களையும் இன்றைக்குச் செயல்





படுத்துகின்ற முக்கியமான துறை—உள்ளாட்சித் துறையென்று சொன்னால் அது மிகைப்படுத்திச் சொல்வதாக நிச்சயமாக இருக்கமுடியாது.

ஆனால், இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 1960-வது ஆண்டிலே எவ்வளவு பணியாளர்கள் இருந்தார்களோ அந்த அளவுக்குத்தான் இருக்கிறார்கள். துவக்கக் காலத்திலே ஊராட்சி ஒன்றியங்களுடைய வேலை மிகக் குறைவாக இருந்தது. இன்றைக்கு வளர்ந்து வருகிற நமது சமுதாய அமைப்பில் ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பணிபுரிகின்ற அலுவலாளர்களின் எண்ணிக்கை அதே அளவில் தானிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, ஊராட்சி ஒன்றியங்களில் எந்த அளவு பணிகள் வளர்ந்திருக்கின்றனவோ அந்த அளவு அலுவலாளர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இங்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களால், கிராம சேவக்குகள் முழுவதுமாகத் தங்களுடைய வேளாண்மை உற்பத்தியைக் கவனிக்கமுடியாத நிலையில் அவர்களுக்குக் குடும்ப நலத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், இவற்றால் உழைப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. என்னுடைய கருத்தெல்லாம் இந்தத் துறைக்கென்று இருக்கிற அந்த இலாகா சம்பந்தப்பட்டவர்களும் குடும்ப நலத் திட்டம், வேளாண்மைத் துறை இவைகளில் அதிகமாக நாட்டம் செலுத்துவதில்லையென்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நோக்கிலே வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஊர் நல ஊழியர்கள், அதாவது, கிராம சேவக்குகள் பணி அத்தியாவசியமாக இருக்கின்றது. அவர்கள், கிராமங்களுக்குப் பிரித்து அனுப்பப்படுகிற நோக்கில் வீடுகள் கிடைக்காமல் கஷ்டப்படுகிற நிலையிருப்பதை அரசு ஆராய்ந்து, எந்தெந்த இடங்களிலே தலைமை நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த இடங்களிலே அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உபரி நிதியிலிருந்து பல வளர்ச்சித் திட்டங்கள், சாலை அமைப்பது, அல்லது கட்டிடங்கள் கட்டுவது போன்ற அந்தப் பணிகளுக்குப் பொது நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டிய அந்தத் தொகையை, சில மாதங்களுக்கு முன்பு வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அனுமதி வாங்கி முடித்துக் கொள்ளலாம் என்ற தாக்கீது இருந்தது. ஆனால், அண்மைக் காலத்திலே, மறுபடியும் டி.ஆர்.டி. அவர்களுக்குச் சென்றுதான் வரவேண்டும் என்று மாற்றியிருப்பதாக நான் அறிகிறேன். இங்கே பேசியவர்களும் குறிப்பிட்டார்கள். பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் என்ற அடிப்படையிலே, சாலை அமைப்பது போன்றவற்றிற்கு ஊராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ. 50,000, ரூ. 1 இலட்சம் செலவு செய்ய வேண்டுமென்ற நிலை வரும்போது, உதவிப் பொறியாளர்களுக்குச் சென்று, மதிப்பீடு அங்கே தங்கி, அதற்குப் பிறகு கோட்டப் பொறியாளருக்குச் சென்று, அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சென்று, டி.ஆர்.டி.-க்கு வந்து திரும்புவதற்கு ஓராண்டுக்காலம் பிடித்து விடுகிறது. ஓராண்டுக்கு மேலேயும் ஆகிறது. ஆகவே, அப்படி உபரி நிதியிலிருந்து, பொது நிதியிலிருந்து வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்படுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அனுமதி இருந்தால் போதுமென்றால், நிச்சயமாகப் பல வளர்ச்சித் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாகச் செய்து முடிக்கலாம் என்ற கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இப்படிச் சாலைகள் அமைக்கிற நோக்கில், ரூ. 10,000 மதிப்பீடு வரையிலே உதவிப் பொறியாளர்கள் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம். அதற்கு மேற்பட்ட தொகைக்கு கோட்டப் பொறியாளர் ரூ. 50,000 வரையிலும், ரூ. 1 இலட்சம் என்றால் எஸ்.இ. ஒப்புதல் அளிக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறது. இன்றைக்கு என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையிலே, மாயூரத்தில் ஒரே ஒரு உதவிப் பொறியாளர் இருக்கிறார். அங்கே 5 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இரண்டு தாலுகாக்களையும் சேர்த்து 5 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு உதவிப் பொறியாளர் நெடுஞ்சாலையையும் பார்த்துக் கொள்ளவேண்டும், ஊராட்சி ஒன்றிய சாலைகளையும்



பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்லவேண்டுமென்றால், அவர் வேறு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்கிறேன், நாளைக்கு வருகிறேன், நாளைய மறுதினம் வருகிறேன் என்று கூறத்தக்க அளவுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிற காரணத்தாலே, குறிப்பிட்ட திட்டங்களைச் செயல் படுத்த முடியவில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக போடப்படுகிற சாலை, கல்விக் கூடங்கள் இவைகளுக்கென ஒரு தனி உதவிப் பொறியாளர் நியமிக்கப்பட்டால் பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இந்த ஆசிரியர் மாற்றங்கள் நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்கள் சங்கத்தினரால் அது வற்புறுத்தப்பட்டு வருகிறது. அண்மைக்காலத்திலே அதைப்பற்றி நிச்சயமாகச் செய்கிறோம் என்ற ஒப்புதலை அரசு தந்திருக்கிறது. ஆசிரியர் மாற்றம் கல்வித் துறையிலே இருப்பதன் காரணமாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நிர்வாகச் சங்கடங்கள் காரணமாக ஒரு ஆசிரியரை வேறு ஓரிடத்திற்கு அல்லது பொதுமக்கள் குறை கூறுகிறார்கள் என்ற அடிப்படையிலே ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்றால் கல்வி இலாகாவிற்குச் சென்று வருவதால், மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆசிரியர்களை மாற்றுகிற அந்தப் பணி ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவருக்கே இருக்கும் என்று, உத்தரவை மாற்ற வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்கு மின் விளக்குகள் கட்டணம் பற்றி ஒன்று கூறவிரும்புகிறேன். உள்ளாட்சித்துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த மாண்புமிகு அன்பில் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு—அவரிடத்திலே பல்வேறு இடங் களிலே சொல்லப்பட்டதற்கு—மீட்டர் பொருத்தித் தருகிறேன் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். என்னுடைய ஊராட்சியைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ ரூ. 6,000 வருமானம் வருகிறது. ஆண்டொன்றுக்கு எரிகின்ற விளக்குகள், எரியாத விளக்குகள் எல்லாவற்றிற்கும் ரூ. 5, ரூ. 2½ என்று பிளாட் ரேட்டாகப் போட்டு விடுகிறார்கள். எரியாத லைட்டுக்கும்

கட்டணம் போட்டுவிடுகிறார்கள். அன்றைக்கிருந்த அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட சங்கடங்களைக் கேட்டு, மீட்டர் பொருத்தித் தருவதாகச் சொன்னார்கள். அதையும் விரைவாகச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளுக்குத் தற்பொழுது நிதி வசதி சரியாக இல்லாத காரணத்தால், இன்று வளர்ச்சிப் பணிகளை அவர்களால் செய்ய முடியவில்லை. எனவே, சிற்றூர்களுக்கு ஈட்டு வரி கொடுப்பதைப் போலவே, பேரூராட்சிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாடு எதிர்நோக்கியிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 3 அல்லது 4 ஊராட்சிகளை இணைத்து, நாட்டிலே வேலையில்லாமலிருக்கிற எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை —அவர்கள் நிறைய இருக்கிறார்கள்—நியமிக்கலாம். அது பணியாளர்கள் சிறந்தவகையில் பணியாற்ற ஏற்றதாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

தாய்-சேய் நல விடுதிகள். இந்த விடுதிகளுக்கு மருத்துவத் தாதிகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய பகுதியில் பல சென்டர்களுக்கு ஏறத்தாழ ஓராண்டுக்காலமாக மருத்துவத் தாதிகள் இல்லாமலிருக்கிறார்கள். வேலை தேடித் தரும் நிலையத்திலே கேட்டோம். அப்படிப்பட்ட தாதிகள் இல்லையென்று பதில் கொடுக்கிறார்கள். அவர்கள் தினசரியிலே விளம்பரம் போட்டுப் பார்த்தோம்—தாதிகள் கிடைக்கவில்லை—அப்பதவிகள் நிரப்பப்படவில்லை. காரணம், அரசு மருத்துவ மனைகளிலே பயின்றவர்கள்தான் அப்படிப்பட்ட வேலைக்கு வரவேண்டுமென்ற நிலையிருக்கிறது. அதற்குக் தனியார்கள்கூட அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்துவதாக அறிகிறோம். அதிலே பயின்று வருகின்றவர்களையாவது, இந்தத் தாய் சேய் நல விடுதிகளுக்கு நியமிக்க அரசு அனுமதிக்க வேண்டும். இறுதியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பணியாற்றி வரும் கிராம சேவக்குகள் கிராமப் புறங்களில் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மற்றும், அரசாங் கத்தினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு உறுதுணை புரிவதற்காக அவர்கள் இருக்கிறார்கள். அரசாங்க அலுவலாளர்கள் 8 மணி நேரம் வேலை செய்யக்கூடிய சமயத்தில், இவர்கள் இரவு பகலாக பணிபுரியக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசின் அடிப்படைப் பணியாளர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியமும், பயணப் படியும் நிரந்தரத் தன்மையும் மற்ற உதவிகளும் அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கூறி இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மானியத்தின் பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற இந்த மானியத்தைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள், இந்த நாட்டிலே ஆறு லட்சம் இதயங்கள் இருக்கின்றன, 6 லட்சம் இதயங்களும் நல்ல முறையிலே செயல்பட்டால்தான் இந்த நாடு நல்லபடியாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த 6 லட்சம் இதயங்கள், இந்த நாட்டிலேயுள்ள 6 லட்சம் கிராமங்கள்தான், இதயம் கெட்டுவிட்டால் அதோடு கூட சேர்ந்து எப்படி உடம்பும் கெட்டு சோர்வு அடைந்து விடுகிறதோ அதைப் போன்று இந்த நாட்டிலே கிராமங்கள் வளர்ச்சியடையவில்லையென்றால் நாடு முன்னேற முடியாது என்ற நிலைமையில்தான் அவர்கள் கிராம ராஜ்யம் என்றும் ராமராஜ்யம் என்றும் பஞ்சாயத்து ராஜ்யம் என்றும் சொன்னார்கள். அந்த முறையிலேதான் இந்தத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தார்கள். கிராமங்களிலே இருக்கிற மக்களிடத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் அவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்று நல்ல நோக்கத்திலே கூறியிருக்கிறார்கள்.

ஆனால், 20 ஆண்டுக் கால சமுதாய வளர்ச்சியைப் பார்த்தால், அந்த நம்பிக்கை வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் தளர்ந் திருக்கிறது என்று சொல்லக்கூடிய போக்கில்தான் அமைந்

Pages.

*Friday, 4th April 1975*—cont.


3. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

4. Statements by Ministers—
   (*a*) Utilisation of drought relief aid ... ... 26—27
   (*b*) Power-cut ... ... ... ... ... 122—125

5. Papers laid on the Table ... ... ... 250—251


*Saturday, 5th April* 1975.


1. Government Motion—
   Suspension of Question Hour ... ... ... 311

2. Adjournment Motions—
   (*a*) Fall in power supply from Neyveli and consequent lay-off in industries ... ... ... 311—319
   (*b*) Closure of operation theatre of Tiruchi H.Q., Hospital ... ... ... ... ... 319—324

3. Point of Order—
   Suspension of Question Hour ... ... ... 324—326

4. Calling Attention—
   (*a*) Foodgrains scarcity in Palladam taluk and consequential starvation of mill workers ... 328—330
   (*b*) Delay in granting increased wages to the Electricity Board workers ... ... ... 330—332

5. Motion—
   Leave of absence to Thiru O. N. Sundaram, M.L.A. 332—333

6. Government Bill—
   The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 ... ... 333

7. Voting on Demands for Grants for the year, 1975—76—*cont.*
   Demand No 28—Community Development Projects, etc. ... ... ... ... ... ... 335—447

8. Papers laid on the Table ... ... ... ... 447




Pages.

*Monday, 7th April* 1975.


1. Obituary Reference—
   Demise of Thiru A. Appu, ex-M.L.A. ... ... 455

2. Questions and Answers ... ... ... ... 455—488

3. Calling Attention—
   Lack of employment opportunities to Ceylon repatriates at Gudalore taluk ... ... ... 488—491

4. Presentation of Report—
   Committee on Public Undertakings—Report on audit of Electricity Board .. .. .. 491—492

5. Points of Information—
   (*a*) Death due to accident at public meeting in North Arcot district and assistance to the affected family from Chief Minister's Fund ... 492—493
   (*b*) Burglary at Thiruvanmiyur ... ... 493
   (*c*) University Examination Questions *re* Prime Minister's political view ... ... ... 493—494

6. Point of Order—
   Non-supply of accounts of Transport Corporations to Members ... ... ... ... 494—496

7. Voting on Demands for Grants for the year, 1975-76—*cont.*
   (*a*) Demand No. 3—Motor Vehicles Acts—Administration ... ... ... ... ...
   (*b*) Demand No. 40—Road Transport Services ... 496—608
   (*c*) Demand No. 44—Stationery and Printing ...
   (*d*) Demand No. 54—Capital Outlay on Road Transport Services ... ... ... ...

8. Papers laid on the Table ... ... ... ... 609—610

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்புருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக்கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு. எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், நெடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர்க் இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம். கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங் கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers

1. The Hon. Dr. M. KARUNANIDHI : (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN : (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN : (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. The Hon. Thiru N. V. NATARAJAN : (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. The Hon. Thiru S. MADHAVAN : (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. The Hon. Thiru S. J. SADIQ PASHA : (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals. Iron and Steel Control, Companies, Electricity and Wa[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk. Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 34 இராமன், திரு. மூ. .. .. .. | சண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பேரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குநேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வை. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திகேயன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம் |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை |
| 79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம் |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம் |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாதுரை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திக்குளம் |
| 20 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம் 2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர். (செ.வ.) |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். | தண்டராம்பட்டு |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 91 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜெ. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்காநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம் |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. சி. | சேலம்–1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நெருமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முசைபூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. கை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே. எ | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர் |
| 196 மாதவன், மாண்புமிகு திரு செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. டா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | [illegible]ல்குடி. |
| 202 முத்து, திரு. வ. | [illegible]ங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஓட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. சா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில் |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| | பவானிசாகர் (செ. வ.) |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானி. |
| 218 இராஜா, திரு. எ. எம். | திண்டிவனம். |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திருமங்கலம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | வீரபாண்டி. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்து, பேரவைக்கு அறிவித்துள்ளதற்கிணங்க, பேரவை விதி 22-இன் கீழ், முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ளதை இன்று தளர்த்தி, இன்றைய நிகழ்ச்சி நிரலிலுள்ள 'இனம் 2—அறிக்கைகளை அளித்தல்' என்றுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

### 2. அறிக்கைகள் அளித்தல்

(அ) தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை.

THIRU THOPPUR THIRUVENGADAM : Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories.

(ஆ) அரசினர் உறுதி மொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை

THIRU J. JAMES : Sir, I rise to present the Eighth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. 1975–76ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

**(அ) நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.**

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் —

“நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,48,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.”

**திரு. சு. ம. துரைராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த தியாகத்தின் நினைவாக, அவரது திருவுருவப் படத்தினை சட்டமன்றத்திலும், பள்ளிக் கூடங்களிலும் வைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூற—

“நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,00 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss about the necessity to suggest to the Central Government to include the converted Harijans also in the Scheduled Caste list, I move—

“That the allotment of Rs. 9,48,00,000 under Demand No. 31 — Welfare of the Scheduled Tribes and Castes, etc.—be reduced by Rs. 100.”.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும்போது அவர்களிடமிருந்து எந்தத் தொகையும் பெறக் கூடாது என்பது குறித்து விவாதிக்க—

“நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**திரு. எ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அரிசன மக்களை ஊரின் ஒதுக்குப்புறத்தில் குடியமர்த்தாமல் ஊருக்குள்ளேயே பிற சாதி மக்களோடு சேர்த்துக் குடியமர்த்தும் முறையினை வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்த—

“நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்”

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. என் இராசாங்கம்:** தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. சு. ம. துறைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை மானியத்தின்மீது எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை நல்கியமைக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்வன்றேன்.

அரிசன நலத் துறை மானியம் குறித்து இங்கே ஒரு புத்தகத்தை அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தைப் பார்த்தால் சில புள்ளிவிவரங்களை அதில் தந்திருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே அதன் பிரகாரம் நாட்டில் செய்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் கல்வியை எடுத்துக்கொண்டால், அரிசன நல இலாகாப் பள்ளிகளில் கல்வியினுடைய தரம் மிகவும் கேவலமான முறையில் போய்க் கொண்டிருக்கிறதென்பது நாடு அறியும் உண்மையாகும். கல்வித் தரம் அங்கே நல்ல விதத்தில் இருக்கச் செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை நான் மிகவும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதித் தேர்வில் 60 சதவீதத்திற்குமேல் மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்ற மாணவர்களுக்கு மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின்கீழ் விடுதிக்காக ஒன்றரை மடங்கு வழங்கப்படுவதைப்போல ‘டே-ஸ்காலர்’களுக்கும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 1975–76 ஆம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

[திரு. சு. ம. துரைராஜ்] [1975 எப்ரல் 4

செங்கை மாவட்ட நலப் பள்ளி ஆசிரியர்கள் 1973 இலிருந்து மத்திய அரசின் அரை மிலியன் ப்ரோக்ராம் திட்டப்படி பணிபுரிகிறார்கள். அப்படி பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் முதல் தேதியன்று சம்பளம் பட்டுவாடா செய்ய முடியவில்லை. அவர்களுக்கு 20 23-ந் தேதிதான் சம்பளம் கிடைக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. அதைப் போக்கி, அவர்களுக்கு முதல் தேதியே சம்பளம் கிடைக்க வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு ஒழுங்குபடுத்தும் பணி இதுவரையில் செய்து முடிக்கப்படவில்லை. மற்ற அரசினர் பள்ளிகளில், குறிப்பாக யூனியன் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஒழுங்குபடுத்தும் முறையினைச் செய்து விட்டார்கள். ஆனால், அரிசன நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இன்றுவரை ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் இதனைச் செய்து தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நலத்துறைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1970-ஆம் ஆண்டிலிருந்து பிராவிடெண்ட் பண்டு பிடிப்பதை விட்டுவிட்டு, இன்றைக்கு வாங்குகிற சம்பளத்தில் மொத்தமாக ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளுகிறார்கள். இது என்ன நியாயம்?

சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கு மற்ற கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தருவதுபோல் இன்னும் பட்டியல் போட்டுத் தரவில்லை. குறிப்பாக, எம்.ஏ. படிக்கின்ற மாணவர்களுக்கும், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் இதுவரை ஸ்காலர்ஷிப் தரப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்குக்கூட இன்னும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இன்றைக்குப் பார்த்தால் அரசினர் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். மூன்று இடங்களில் தங்கும் முறையில் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஜனவரி மாதம் கல்லூரி ஆரம்பித்தும் மார்ச் மாதம்தான் விடுதியில் இடம் தருகிறார்கள் என்றால் அதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

1936 ஆம் ஆண்டுக்குப் பிறகு சட்டக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட பேராசிரியர் இதுவரை யாரும் பதவி ஏற்கவில்லை. 1936 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய தந்தை சிவராஜ் அவர்கள் பேராசிரியராகத் திகழ்ந்தார்கள். அவர்களுக்குப் பிறகு இன்றுவரை எந்தத் தாழ்த்தப்பட்டவரும் அங்கே பேராசிரியராக நியமிக்கப்படவில்லை. இது என்ன நியாயம்? தகுதி வாய்ந்த



## 1975–76 ஆம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

1975 எப்ரல் 4] [திரு. சு. ம. துரைராஜ்]

தாழ்த்தப்பட்டவர் யாரும் இல்லையா? சட்டக் கல்லூரிப் பேராசிரியாக வரத் தகுதி பெற்றவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்தும் அவர்களுக்குப் பதவி தராதது வெட்கக் கேடாகும். இதுவரை முன்சீப்கள், மாஜிஸ்ட்ரேட்கள் ஆகிய பதவிகள் எத்தனை பேருக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு மதிய உணவு தருகிறார்கள். குறிப்பாக, கண்டிராக்டர்களுக்கு மதிய உணவுக்கான ரேஷன் கொடுத்து சலுகை தந்திருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளில் மதிய உணவு அளிப்பதற்கு தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படாமல், அவர்கள் அரிசி கிடைக்காமல் கஷ்டப்பட்டு அதிக விலை கொடுத்து மதிய உணவு வழங்கி வருகிறார்கள். அவர்களுக்கும் மதிய உணவு அளிப்பதற்காக ரேஷன் வழங்கும் நல்ல காரியத்தை இந்த இலாக்கா பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நல இயக்குநர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சூபரின்டெண்டெண்ட் ஒருவர் பதினான்கு ஆண்டு காலமாக இருந்தும், இன்னும் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஏன் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்று பார்த்தால் நிச்சயமாகக் கேவலமாக இருக்கிறது. மூன்று பேர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கிளார்க் வேலை பார்க்கிறார்கள். 8 பேர்தான் பியூன் வேலை பார்க்கிறார்கள். இந்த அவல நிலை ஏன் என்பதும் கேள்விக் குறியாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக இயங்கும் அலுவலகத்திலேயே இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்றால், மற்ற இடங்களில் எப்படிக் கிடைக்கும்? கனம் அமைச்சர் சிந்தித்துப் பார்த்து இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பகுதி நேர ஆசிரியர்கள் நலப்பள்ளிகளில் அமர்த்தப்படுகிறார்கள். பகுதி நேர ஆசிரியர்கள் நல்ல தேர்ச்சி பெற்றவர்களா என்பதை சிந்தித்து, நல்ல தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு நல்ல திறமையும் சட்டப் படிப்பும் படித்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பேராசிரியர்களாக நியமித்து நல்ல முறையில் தேர்ச்சி பெற ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. ம. துரைராஜ்] [1975 ஏப்ரல் 4

சமீபத்தில் [illegible] தாழ்த்தப்பட்டவர்களின் வீட்டை ஜாதி இந்துக்கள் கொளுத்தியது மட்டுமல்லாமல் கொலை செய்யக் கூட முயற்சித்து, காவல்துறையினர் பிடித்து நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்கள். நீதிபதி அந்தக் கொலைக்கு 7 பேருக்கு கடுங்காவல் தண்டனையும், அபராதமும் கொடுத்து தீர்ப்பளித்தார்கள். ஆனால் வெண்மணியிலே அவ்வளவு பேர் இறந்தும் அவர்களை எப்படி விடுதலை செய்தார்கள் என்று தெரியவில்லை. சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. [illegible] அவர்கள் வெண்மணியைப் பற்றிப் பேசும்பொழுது, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது, எனவே இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள் என்று. இன்றுவரையிலும் அது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. இதுவரையில் நிலைமை என்னவாயிற்று என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இறப்பதற்கு முன்னால் பாலர் அரங்கத்தில்—இன்றைக்கு கலைவாணர் அரங்கத்தில்—பேசியிருக்கிறார்கள், இந்தச் சட்டமன்றத்தில் முப்பெரும் தலைவர்களின் படத்தை வைக்க வேண்டுமென்று. இந்த நாட்டிலே சிலைகள் வைக்க வேண்டுமென்று, பேசியிருக்கிறார்கள். முதலாவதாக மகாத்மா காந்தியடிகளின் படம், இரண்டாவதாக பகுத்தறிவுச் சிங்கம் நமது தந்தை பெரியார் அவர்களின் படத்தை வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மூன்றாவதாக சட்ட மேதை பெரியார் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை வைக்கவேண்டுமென்று அன்றைக்குப் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு அண்ணாவின் தம்பி என்று சொல்லிக் கொள்பவர்களின் அமைச்சரவை இந்தச் சட்டமன்றத்திலே மதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை வைப்பதற்கு ஏன் தயங்குகிறது என்று புரியவில்லை. நிச்சயமாக அந்த முடிவை எடுத்து அந்த உத்தமர் படத்தை இங்கே மாட்ட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, இன்றையதினம் அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

எங்களுடைய ஒப்பற்ற தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களின் இதய தெய்வமாக விளங்கக்கூடிய டாக்டர் முதல்வரவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நல்ல பல காரியங்களையெல்லாம் இன்றையதினம் ஆற்றி வருகிறார்கள். அப்படிப் பணியாற்றிவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களைப் பற்றி இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்கள் ஏது



1975 ஏப்ரல் 4] [திரு. தாழை மு. கருணாநிதி]

ஏதேதோ சொல்லுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காக தங்களுடைய இயக்கங்கள்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விளக்கங்களை எடுத்துச் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் உன்னிப்பாக எந்தெந்த இயக்கங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன, எந்த இயக்கம் தாழ்த்தப்பட்டவர்களைப் பாதுகாக்கிறேன் என்று சொல்லி தாழ்த்தப்பட்டவர்களைப் படுகுழிக்கு அழைத்துச் செல்கிறது என்ற விளக்கங்களையெல்லாம் மிகத் தெளிவாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இங்கே பேசிய அ.தி.மு.க.-வினர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக இன்னின்ன காரியங்களைச் செய்யவில்லை என்ற குறிப்புகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்களைப் படுகுழிக்கு அழைத்துச் செல்லும் ஒரு இயக்கமாக அ.தி.மு.க. இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள்.

தகுதியின் அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும், தகுதியின் அடிப்படையிலேதான் கல்விச் சலுகை கொடுக்கவேண்டும், தகுதியின் அடிப்படையிலேதான் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அந்தத் தகுதி என்று வரும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் 100, 200 ஆண்டுகளுக்குப் பிற்படுத்தப்பட்டவர்களாக, பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களாக ஆக்கப்படுவார்கள் என்பது அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை என்று நான் நிச்சயமாக வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு கொள்கை இந்த நாட்டிலே நிறைவேற்றப்படுமானால், இராஜாஜி அவர்கள் சொன்னார்களே குலக்கல்வி திட்டம் என்று, அந்தக் குலக்கல்வித் திட்டத்தை இன்றைய தினம் அ.தி.மு.க.-வினர் மறைமுகமாக—தாழ்த்தப்பட்டவர்கள் கலைஞருடைய ஆட்சியிலே நீதிபதிகளாக வருகிறார்களே, டாக்டர்களாக வருகிறார்களே, ஐ.பி.எஸ். அதிகாரிகளாக வருகிறார்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வருகிறார்களே, இப்படி அவர்கள் முன்னுக்கு வந்துவிட்டால் மக்கள் சமுகம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுமோ என்ற எண்ணத்தோடு—இராஜாஜியின் வாரிசாக இன்றைய தினம் அ.தி.மு.க.-வினர் செயல்படுகிறார்கள் என்பதை இந்த நோக்கில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர்களே, ஆளுங்கட்சியின் சார்பில் பேசும் உறுப்பினரவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாமல் இந்த மன்றத்தில் பேசிக்கொண்டிருக்

## 1975–76 ஆம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

[திரு. சு. ம. துரைராஜ்] [1975 ஏப்ரல் 4

அரிசன நலப் பள்ளிகளில், குறிப்பாக என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் செவ்வாப்பேட்டையில் ஒரு அரிசன நலப் பள்ளி இருக்கிறது. அந்த நலப் பள்ளியில் கழிவு அறை கட்டப்படவில்லை. பஞ்சாயத்துத் தலைவரிடம் சொல்லியும், சமூக நலத்துறைக்குத் தெரிவித்தும் இன்னும் கழிவு அறை கட்டப்படவில்லை. அதை உடனடியாகக் கட்ட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சிறு தொழில் கழகங்களை எடுத்துக்கொண்டால் சென்னையிலே உள்ள ஆபிசிலே மிகவும் கேவலமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக குழு அமைத்திருந்தாலும் கூட அதில் ஏமாற்றம் நிறைய இருக்கிறது. ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் 200 ரூபாய் லோன் வாங்க வேண்டுமென்றால் படுகின்ற பாடு கொஞ்சநஞ்சமல்ல. அந்த 200 ரூபாய் லோன் வாங்குவதற்கு 150 ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டிய நிலைமையிருக்கிறது. எனவே, நல்லபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சீக்கிரத்தில் லோன் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிட்கோ, இன்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ் போன்ற நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் இதுவரையில் எத்தனை பேர் லோன் மனுச் செய்திருக்கிறார்கள் ; அவர்களில் எத்தனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு லோன் கொடுத்திருக்கிறீர்கள் என்ற விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் ஒரு அரிசன காலனி இருக்கிறது. அதைப் பார்வையிட்ட அதிகாரிகள் உடனடியாகக் கட்ட வேண்டுமென்று ரிக்கார்டுகள் எல்லாம் வைத்து முயற்சித்தார்கள். ஆனால் அது இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி ஒன்றியத்தில் ஒட்டல்காடு என்ற இடத்தில் காலனி கட்ட வேண்டுமென்று இருந்தார்கள். அதுவும் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை.

சுமார் எண்பது ஆண்டுக்காலமாக பேசின் பிரிட்ஜ் பகுதியிலுள்ள மூலக்கொத்தளத்தில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் எத்தனையோ இலட்சம் பேர்களுக்கு பட்டா கொடுத்திருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த இடத்தில் ஒருவருக்குமே பட்டா கொடுக்கவில்லை என்றால் என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



## 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

1975 ஏப்ரல் 4] [திரு. சு. ம. துரைராஜ்]

அதேபோல திருத்தணி பகுதியில் ஆகூர் என்ற இடத்தில் உள்ள காலனியில் குடிதண்ணீர் இல்லை என்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாகப் போடப்பட்ட குழாய்களில் ஊர்மக்கள் தான் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர, காலனி மக்கள் எடுக்கச் சென்றால் அடித்து விரட்டுகிறார்கள். அந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை வியாசர்பாடியில் சிவகாமி காலனியில் பாதைகள் சரிவர அமைந்துத் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வள்ளுவர்புரம் என்று, நகரத்திற்கு அருகில் இருக்கிறது. அந்த மக்களுக்கு வீட்டு வசதியில்லாமல் இருக்கிறது. இது சம்பந்தமாகப் பல அதிகாரிகளிடம் கேட்டேன். இதுவரையிலும் அந்த நிலைமை அப்படியே இருக்கிறதே தவிர வேறு நிலைமை ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டித்தரும்பொழுது சிமெண்ட் மூலம் தான் இதுவரையில் கட்டப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. இன்றைக்கு ஓட்டு வீடுகள் கட்டும் பிரச்னை இருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஓடு போடும் பிரச்னையை இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால் அதில் நிறைய ஊழல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாகச் சிலர் கோளாலிலுள்ள ஓட்டுக் கம்பெனியில் பங்குதாரர்களாக இருப்பதால், ஓடுகளை வியாபாரம் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் அதைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அதனால் உளுத்துப்போன மரங்களை திருவொற்றியூரில் பாலிஷ் செய்து கட்ட வேண்டுமென்ற முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கேவலமான நிலைமையை நீக்க வேண்டுமென்று இந்தச் சட்டசபையின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீண்டாமையைப் பற்றி எடுத்துக்கொண்டால், சில மாவட்டங்களில், வலம் வரும் காவற்படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று இந்தப் புத்தகத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காவற்படைப்பிரிவினர் எத்தனை கேஸ்களைப் போட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1975 ஏப்ரல் 4

கிறார்கள். வெளியே உள்ள மக்கள் அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தவறான எண்ணம் கொள்ளவும், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த அரசுக்கும்தான் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது மிகுந்த அக்கறை இருப்பதாகவும், அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுடைய வளர்ச்சியைக் கண்டு பொறுமைப்படுவதாகவும் தவறான கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

அன்றையதினம்கூட இந்த மன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் மறுக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் ஒரு பங்கு இருந்தாலும், உயர்ந்த ஜாதியிலே இருப்பவர்கள் அங்கேயிருக்கின்ற திறமை உள்ளவர்களையும் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு, திறமையிருந்தும் பொருளாதாரச் சிக்கல் இருப்பதால் முன்னேற முடியாதவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர, ஏதோ தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிபதியாகவோ, டாக்டராகவோ, எஞ்சினியராகவோ வருவதில் எங்களுக்கும் காழ்ப்புணர்ச்சி இல்லை என்று கூறி இப்படிப்பட்ட தவறான கருத்தை உறுப்பினரவர்கள் மன்றத்திலே சொல்ல வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** அதுமட்டுமல்ல; இன்றையதினம் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் 12 சதவிகிதமாக இருந்த வேலை வாய்ப்பு, கல்விச் சலுகையை நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 18 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள். நாங்கள் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம். 18 சதவிகிதம் போதாது. அதிகமாக ஆக்க வேண்டுமென்று தங்கள் உணர்வைத் தாழ்த்தப்பட்ட மக்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அ.தி.மு.க.-வினர் அப்படிச் செய்யக் கூடாது, தகுதியின் அடிப்படையில்தான் செய்ய வேண்டுமென்று சொன்னால் எப்படி அந்த மக்களின் உணர்வுகளை, உணர்ச்சிகளை . . . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அப்படிச் செய்யக் கூடாது என்று எங்கே சொல்லியிருக்கிறோம் என்று உறுப்பினர் சுட்டிக்காட்டிப் பேசட்டும். ஆகாயத்தில் பேசுவது மாதிரி பொறுப்புள்ள சட்டமன்றத்தில் பேசுவது சரியல்ல. நாட்டு மக்கள் பத்திரிகைகளில் இவற்றை எல்லாம் படிக்க இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடாது என்று தடுத்திருக்கிறோமா?



1975 ஏப்ரல் 4]

**திரு. தாழை மு. கருணாநிதி:** தடுத்திருக்கிறார்களா இல்லையா என்பதை அவர்களுடைய சட்ட மன்றப் பேச்சைப் படித்துப் பார்த்தாலே தெரியும். இன்றையதினம் நாயைத் தொடுகிறார்கள், பன்றியைக்கூடத் தொடுகிறார்கள், ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைத் தொட மறுக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற உணர்வோடு செயல்படுகிறபோது அது கூடாது, தகுதியின் அடிப்படையில்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது மறைமுகமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் இழைக்கக்கூடிய அளவுக்குச் செயல்படுவதே தவிர, வேறு என்னவாக இருக்குமென்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் பல விவாதங்களின்போது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீங்கள் செய்த காரியம் என்ன? சொல்ல முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆற்றி வருகிற தொண்டுகளைச் சிந்தித்துப் பாருங்கள். 22 லட்சம் தாழ்த்தப்பட்ட அரிசன கிறித்தவ மக்கள் எங்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேருங்கள் என்று உணர்ச்சி பூர்வமாகக் கேட்கிறார்கள். அவர்கள் கிறித்தவர்களாக மாறிவிட்டதால் உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்டாலும் அவர்களும் இந்த அரிசனங்களைப் போல் மிகமிக மோசமான நிலைமையிலேதான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்தச் சலுகைகளை எல்லாம் பெறக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டத்தில் இடம் தாருங்கள் என்று நாங்கள் கேட்கிறோம் . . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் கட்சியின் சாதனைகளைச் சிறப்பித்துச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்களுக்காகப் பல ஏற்பாடுகள் இருக்கின்றன . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுரேந்திரன் அவர்கள் பேசப் போகிறார்கள். அப்போது அவரும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னென்ன கருத்துக்களைக் கூற வேண்டுமோ கூறலாம்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் பெறுகிற அத்தனை வாய்ப்புகளும், சலுகைகளும் கிறித்தவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தின் அறிகுறியாக,

[திரு. தாழை மு. கருணாநிதி]

அந்த மனச் சிகரத்தை மதிப்பளித்து மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய சர்க்காருக்கு எவ்வளவோ தபால்கள் எழுதியும், நேரடியாக எடுத்துச் சொல்லியும் இதுவரை அவர்கள் அரிசனங்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அந்த அரிசன மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்கள், அவர்களை மதிக்காதவர்கள் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உரிமைகளைப் பறிக்கக்கூடிய நிலையில் . . . .

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஒரு விளக்கம் கோர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் எல்லாம் வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்த மன்றத்தில் யாரும் பேசாததை அதைப் பற்றி எந்த விதமான கருத்தும் சொல்லாத நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் சொல்லியிருக்கிறது, சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் அப்படி எல்லாம் பேசியிருக்கிறார்கள் என்று பேசுவது முறையல்ல. இரண்டு முறை அவ்வாறு சொல்லவில்லை என்று கூறியும் அவர் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அதைத்தான் படித்துக் கொண்டு வந்தாரோ என்னவோ தெரியவில்லை. அவர் தயாரித்துக் கொண்டு வந்த பேச்சைப் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயாரித்து வந்த பேச்சு என்று சொல்லக் கூடாது. நீங்கள் உங்கள் மறுப்பைக் கூறுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மறுப்பைத் தெரிவித்த பிறகும் திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி? நாங்கள் சொல்லவில்லை என்று சொன்ன பிறகும் திரும்பத் திரும்ப அதையே பேசுவது முறையல்ல.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இங்கே கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகிற கருத்து— இன்றைய தினம் திரு. எட்மண்ட் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியில் பேசப்பட்ட கருத்தின் விளைவாகும். சாதி, திறமை, வறுமை இவற்றின் அடிப்படையில் வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று பேசுகிறபோது சமூக தாழ்ச்சி அடிப்படையில் தரப்படுகிற அப்படிப்பட்ட வாய்ப்புகளுக்கு அது எதிர்ப்பாக அமைகிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** எப்படி அமையும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது அவருடைய கருத்து.



**திரு. க. உரொ. எட்மண்ட் :** சொல்லாததைச் சொன்னதாகக் கற்பனை பண்ணிக் கொண்டால் எப்படி?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கற்பனை பண்ணத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** இங்கே அவர்கள் பரிமாறிக் கொண்டதைப் போல் திறமை அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்ற விவாதம் 15 நாட்களுக்கு முன்னால் ஏற்கனவே நடந்தது. நேற்று நானே பதில் சொல்லியிருக்கிறேன். நேற்று மேலவையில் திரு. வெங்கா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிப் பள்ளிகள் கூடாது என்றார். அதை மறுத்து அதற்கான ஆதாரங்களைக் கொடுத்து நேற்று பேசியிருக்கிறேன். இதை வைத்துப் பார்க்கும்போது, ஒரு களங்கம் இருக்கிறது, ஒரு கெட்ட எண்ணம் இருக்கிறது என்ற தொனியில் அதைச் சுட்டிக்காட்டுவது உறுப்பினர்கள் கடமையாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகிறபோது அப்படி, சாதியின் அடிப்படையில், வறுமையின் அடிப்படையில் கொடுப்பது என்று வந்தால் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வாய்ப்புகள் கிடைக்காது அடிப்பட்டுப் போகும் என்பது அவருடைய வாதம். நீங்கள் சாதியின் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறீர்கள். அதை அடிப்படையாக வைத்து அவர் பேசுகிறார். இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகும்?

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல அமைச்சர் அவர்கள் மேலவையில் எங்கள் கட்சி உறுப்பினர் வெங்கா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னதாகச் சொன்னார்கள். அதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர்ந்த சாதி மாணவர்களோடு கலந்து படிக்கக்கூடிய விதத்தில் நிலைமை உருவானால்தான் அவர்கள் முன்னேற முடியுமே தவிர, அவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பதால் எப்படி முன்னேற முடியும்?

**திரு. தி. பொன்னுமலை :** பாயிண்ட் ஆப் ஆர்டர். சென்ற ஆண்டு இதே சட்ட மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் பேசிய பேச்சை திரு. எட்மண்ட் அவர்கள் திரும்பவும் படித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 4

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியினுடைய ஒரு கொள்கையைப்பற்றி இங்கே பேசுகிறபோது அது நாடு, உலகம் முழுவதும் பரவுகிறது. அதை வைத்து ஒரு கட்சியைப்பற்றித் தவறாக நினைக்க வாய்ப்பு இருக்கிறது. ஏனைத் தலைவர் [illegible] அவர்களும், மற்றும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அல்லது பின்தங்கியவர்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடாது என்று பேராசிரியர் எதை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்? எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னது—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்கு என்னென்ன வசதிகள், என்னென்ன சலுகைகள் தரவேண்டுமோ அவைகளை எல்லாம் தரவேண்டும்; மற்றவர்களுக்குத் தருவதைவிட அதிகமான அளவுக்கு ஆதரவோ முன்வந்து தரவேண்டும், அவர்களுக்கு எல்லா உதவியும் செய்து அவர்களும் சமுதாயத்தில் மற்றவர்களோடு சமமாக வருகிற அளவுக்கு எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். ஆனால் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்களாகவே வைக்கப்படக் கூடாது; எதிர்காலத்திலே அப்படிப்பட்ட நிலை நீடிக்கக்கூடாது என்றுதான் கூறியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சுயமரியாதை இயக்க பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை :** இந்தச் சட்ட மன்றத்தில் எம்.ஜி.ஆர். சொல்லவில்லை. நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் அவர்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வெள்ளையன் அவர்கள் தகுதி அடிப்படையில் தான் உதவிகள் வழங்க வேண்டுமென்று உறுதியாகச் சொன்னார்கள். அதைத் தான் மறுபடியும் உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை மீண்டும் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மேல் சபையில் நடந்த விவாதத்தை இங்கு எடுத்துச் சொல்லலாமா? மேல் சபையில் உறுப்பினர்கள் ஏதாவது கருத்துத் தெரிவித்திருப்பார்களானால் அந்த விஷயம் உங்களுக்கு வந்து தாங்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, மேல் சபையில் பேசியதாகப் பத்திரிகையில் வந்ததை இங்கே எடுத்துக் கூறலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேல் சபையில் கருத்துக்கள் சொல்லப் பட்டிருக்கின்றன என்று சொல்லுவதில் தப்பு இல்லை. அங்கு இருப்பவர்களைக் குற்றம் சாட்டுகிற முறையில், பழி சொல்லுகிற முறையில் போகக் கூடாது என்பதுதானே தவிர, அங்கே சொன்ன கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதில் முறைகேடு ஒன்றும் இல்லை.

(முற்பகல் 9.30)



1975 ஏப்ரல் 4]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இரண்டு சபைகள் இருக்கிறபோது ஒரு சபையில் நடந்த விஷயங்களைக் கூட எடுத்துச் சொல்லக் கூடாது என்ற நியதி இருக்கிறது. ஒரு தடவை நானே இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் மேல் சபையில் நடந்த ஒன்றைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் ஆட்சேபணை கிளப்பியிருக்கிறேன். மேல் சபையில் யார் யார் என்னென்ன பேசினார்கள் என்பதைப்பற்றி இங்கு எடுத்துச் சொல்வது சரிதானா என்பதைப் பற்றி தாங்கள் சிறிது தீர்க்கமாக யோசித்து முடிவு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரே ஒரு கருத்து. நம்முடைய தமிழ் சமுதாயமாகட்டும் அல்லது வேறு எந்த சமுதாயமானாலும் ஆண்டாண்டுக்கு, நூறு ஆண்டுகளுக்குப் பின்னாலும் ஜாதி அடிப்படையில் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றளவில் என்றைக்குமே இருந்து கொண்டிருக்க வேண்டுமென்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வரவில்லை.

**திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதற்கு என்னுடைய கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன், நீங்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால். அவர்கள் வலியுறுத்திக் கூறிய காரணத்தால் சொல்கிறேன். பொதுவாக நாடாளு மன்றமானாலும் சரி அல்லது வேறு சட்ட மன்றங்களானாலும் சரி அல்லது நமது சட்ட மன்றத்தில் கூட மேலவை, கீழவை என்று வரும்போது ஒரு சபையினுடைய நடவடிக்கைகளை, அந்த சபை நடவடிக்கைக் குறிப்பில் ஏறப்படுகிற குறிப்புகளை மேற்கோள் காட்டுவதில் எந்தவிதமான தவறும் இருப்பதாக எங்கும் இதுவரையில் ரூலிங் தரப்பட்டது கிடையாது. ஆனால் விமர்சிக்கக் கூடாது. விமர்சனம் கூட மாசு கற்பிக்கக்கூடிய வகையில் செய்யக் கூடாது. புகழ் தருகிற வகையில் போற்றிச் சொல்வதாக இருந்தால் அது ஆட்சேபிக்கப்படுவதில்லை. மாசு தருகிற வகையில் ஒரு சபையில் கூறப்பட்ட கருத்தை இன்னொரு சபையில் விமர்சிக்கக் கூடாது என்பதைத் தவிர, அந்தக் கருத்தை எடுத்துக்காட்டாக காட்டுவதில் அல்லது அந்தக் கருத்தைப் பெருமைப்படக் கூறுவதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கூட எனக்கு ஆதாரமாக மற்ற அவைகளில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறேன். அப்படி காட்டக் கூடாது என்பதில்லை. அவைகளைப் பழித்துப்

பேசக் கூடாது அல்லது விமர்சிக்கிற முறையில் மற்றொரு அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துச் சொல்லக் கூடாதே தவிர ஆதாரத்திற்குத் துணையாக பாராட்டக்கூடிய அளவில் எடுத்துக்காட்டுவதில் தவறு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இரண்டு சபைகளும் இன்டிபென்டன்ட் பாடீஸ். அந்த சபையில் இருப்பவர்கள் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். அதேமாதிரி நாமும் நம் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். லோக் சபாவைப் பொறுத்தவரையில் பொதுவாக ராஜ்ய சபாவில் பேசியதை இங்கு எடுத்துச் சொன்னது தவறு என்று ரூலிங் இருக்கிறது. நீங்கள் வேண்டுமென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

It is more for maintaining the autonomy and the power of each body.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பலமுறை மாநில சுயாட்சிபற்றி பேசுகிற நேரத்தில் மேலவையில் டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்கள் பேசிய பேச்சுக்கள்கூட இங்கு எடுத்துக்காட்டுகளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்வதை அல்லது வாதத்திற்குப் பொருந்துகிற விஷயங்களை எடுத்துச் சொல்வதைத் தவறானதாகக் கருதுவதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில்கூட இன்னொரு அவையில் நடந்ததைப்பற்றி குறைவாகப் பேசக் கூடாது என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறோம். அதைத் தவிர அங்கு சொல்லப்பட்ட கருத்துக்கள் எதையுமே சொல்லக் கூடாது என்ற மாபு ஏற்றுக்கொள்ளக் கூடாத மரபு.

THIRU R. PONNAPPA NADAR : Our rule only says :

*Rule 67 (iii)*—" Use Offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legislature or of the other House."

என்றுதானிருக்கிறது. அபன்ஸிவ் எக்ஸ்ப்ரஷன்ஸ் என்றுதானிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன்.

" When a Member objected to a Minister's referring to the discussion in the other House and also to the views of a person outside who could not reply, the Chair observed that while the Minister was entitled to paraphrase the contents of the White



Paper under discussion, he need not criticise the statement of, nor make any adverse remarks against, a Member of any other House ".

அப்படித்தானிருக்கிறதே தவிர குறிப்பிடக்கூடாது என்ற முறையில் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** எங்களது கட்சி உறுப்பினர் தாழை கருணாநிதி அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சனம் செய்தார். அதற்கு எட்மண்ட் அவர்கள் ஆத்திரப்பட்டு நாங்கள் இப்படித்தான் சொன்னோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே அதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள்கூட இதற்கு முன்னால் ஆனந்தவிகடனில் அவர்களது கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆத்திரம் வருகிறது எட்மண்ட்க்கு. அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசும்போது சொல்லலாம்.

திரு. கு. காமாட்சி : தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது திரு. எட்மண்ட் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அப்போது நாங்கள் எல்லாம் எழுந்து நின்றோம். எங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. விவாதத்தில் கலந்து கொள்ளாத அளவிற்கு திடீரென்று நுழைந்த கோவை செழியன் அவர்களுக்கு இரண்டு முறை நீங்கள் வாய்ப்பளித்திருக்கிறீர்கள். ஆகவே எங்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன். நான் நான்கு முறை எழுந்தேன்.

**திரு. கோவை செழியன் :** திடீரென்று நுழைந்த என்று சொல்லி. . .

**திரு. கு. காமாட்சி :** திடீரென்று நுழைந்தார், அவருக்கு வாய்ப்பு அளிக்கிறீர்கள். எங்களுக்கு அளிக்கவில்லை என்பதுதான் என் முறையீடு.

**திரு. எஸ். வடிவேல் :** ஹரிஜன மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு நாள். சமுதாயத்தின் கடைக்கோடியில் ஒதுக்கப்பட்டவர்கள் நாங்கள். கடைக்கோடியில் விவாதத்திற்கு வந்திருப்பதை இடையில் இன்டரப்ட் செய்து கொண்டிருந்தால் அரை நாள் போய்விடும். அப்போது நாங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல முடியாது. எழுபத்துநாலு லட்சம் பேர்கள் வாழ்க்கையிலும் மண்தான் விழும். எனவே நேரத்தை வீணாக்காமல் எங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

[1975 ஏப்ரல் 4

**திரு. தாழை மு. கருணாநிதி:** தயாரிக்கப்பட்ட பேச்சு என்று எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அவர் பிறரால் தயாரிக்கப்பட்டவர் என்பதை அவர் ஒத்துக் கொண்டதற்கு நன்றி.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நானும் அண்ணாவால் தயாரிக்கப்பட்டவன் தான்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** நானும் அண்ணாவால் தயாரிக்கப்பட்டவன்
தான். இன்றையதினம் மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர்
அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கம்யூனிஸ்ட்
காரர்களின் பிடியில் அகப்பட்டு மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.
1947-ம் ஆண்டு இந்த நாடு சுதந்திரம் பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள்.
நாங்கள்கூட நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள்
சுதந்திரம் பெற்றிருக்கிறார்களா என்று சொன்னால் நிச்சயமாக சுதந்திரம் பெற
வில்லை. கம்யூனிஸ்ட் கட்சியில், அந்த இயக்கத்தில் இருப்பவர்கள் அந்த
இயக்கத்தை விட்டுவிட்டு ஹரிஜனங்கள் வெளியேறிவிட்டால் அவர்களுடைய
வீடுகளைக் கொளுத்துகிறார்கள். அவர்களுடைய கைகளை வெட்டுகிறார்கள்,
கொலை செய்கிறார்கள். புளிச்சக்காடியில் ஒரு கொலை நடந்திருக்கிறது.
திருக்கண்ணங்குடியில் ஒரு கொலை நடந்திருக்கிறது. வீடுகளைக் கொளுத்து
வது, கொலை செய்வது, கைகளை வெட்டுவது என்பது போன்ற கொடுமையான
செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே ஹரிஜனங்கள் விடுதலை
பெறவேண்டுமென்றால் கம்யூனிஸ்ட்களின் பிடியிலிருந்து அவர்கள் விடுதலை
பெறவேண்டும். அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இருக்க
வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக
இருக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எதையாவது பேசலாம் என்ற முறையில்
கம்யூனிஸ்ட்கள் கொலை செய்தார்கள், கைகளை வெட்டினார்கள் என்றெல்லாம்
சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் அங்கிருக்கக்கூடிய
அதிகாரிகளைத் தொந்தரவு செய்து—நேற்று கூட ஒரு விஷயத்தைச் சொன்
னேன்—ஒரு குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டதற்குக் காரணம்
இன்றைக்கு பேசக் கூடிய உறுப்பினர்தான். இன்றைக்குத்தான் நான் அவர்
களைப் பார்க்கிறேன். இம்மாதிரி செய்து கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்ட்
கட்சியைப்பற்றி சொல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்று சொன்னால் எந்த
கம்யூனிஸ்ட் என்று சொல்ல வேண்டும். அன்று ஒருவர் சொன்னார்,
கம்யூனிஸ்ட் நெருப்பு வைக்கிறார்கள் என்று. அப்படியெல்லாம் மேடையில்
பேசுவது பொருத்தமாக இருக்கலாமே தவிர இந்த மன்றத்தில் பேசும்போது
கொஞ்சம் பொறுப்போடும் அடக்கத்தோடும் பேசுவது நல்லது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு
வெளியேறியவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்று சொன்னால், ஒரு
உறுப்பினரை குற்றஞ்சாட்டிப் பேசுவது முறையல்ல.

**திரு. தாழை மு. கருணாநிதி:** எந்த கம்யூனிஸ்ட் என்று கேட்டார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இருக்கிற இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், வேலூரில் வீட்டைக் கொளுத்தியிருக்
கிறார்கள். தச்சணத்தில் கையை வெட்டியிருக்கிறார்கள். திருக்கண்ணங்குடியில்
கொலை செய்திருக்கிறார்கள். செய்தவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு.
கே. டி. கே. தங்கமணி அவர்கள் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சார்ந்தவர்கள்தான். போதும் என்று கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கொடுமைகளை ஹரிஜனங்கள்மீது செய்திருப்பவர்கள் இங்கு
வந்து எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் செய்கிற காரியங்களைக் குறை சொல்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு
துரோகம் இழைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நாட்டிலுள்ள ஹரிஜன
மக்களுக்கு நன்கு தெரியும் யார் யார் தவறு செய்கிறார்கள், யார் நல்லது
செய்கிறார்கள் என்று. நாட்டு மக்களுக்கும் அது நன்கு தெரியும்.

எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்
தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக 11 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்
கிறார்கள். அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றி கூறிக்
கொள்கிறேன்.

இன்றையதினம் கொடுமையில் வாழ்ந்துகொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட
மக்கள் இடுகாடுகளுக்கு, சுடுகாடுகளுக்குக்கூட செல்வதற்கு வழி அற்றவர்
களாக பாதை அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் இன்னல்களையும்,
இடையூறுகளையும் சிந்தித்துப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தி 30 லட்ச ரூபாய் செலவில் சுடுகாடுகளுக்கு
பாதை அமைத்துத் தர இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே நான்
நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தர வேண்டு
மென்று சொல்லி, 10 லட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு, அதில் 1 லட்சம்
வீடுகள் தற்போது கட்டித்தரும் முனைப்பான திட்டத்தில் ஈடுபட்டு இருக்
கிறார்கள்.

வீட்டு மனைப் பட்டா—இருப்பதற்கே இடம் அற்றவர்களாக—எலி
களுக்கும், எறும்புகளுக்கும் இருக்க இடம் இருக்கிறது—ஆனால் தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு இருப்பதற்குச் சொந்தமாக இடம் கிடையாது. ஆனால், எங்க

[1975 ஏப்ரல் 4

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டப்படி வழக்கு மன்றத்தில் முறையாக சார்ஜ் ஷீட் செய்யப்பட்டு பிறகு அது பூர்ணமாக வெற்றி பெற முடியவில்லை என்றால், போலீஸ்காரர்கள் டிபக்டிவ் வாக சார்ஜ் ஷீட் போட்டார்கள் என்பது மட்டுமல்ல, சொல்லக்கூடிய சாட்சிகள் அங்கே தரமாக கிராஸ் எக்சாமினேஷனுக்கு நின்று சாட்சிகள் சொல்லப்பட்டு இருக்குமானால் வழக்கு தள்ளுபடி ஆகியிருக்காது. அப்படிச் சாட்சி சொல்ப வர்கள் நம்ம ஜாதியைச் சேர்ந்தவர்கள், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான் மாற்றிச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் சொல்கிற சாட்சி சரியாக இல்லாத காரணத்தால், தள்ளுபடி ஆகியிருக்கலாம் அல்லவா ?

திரு. எஸ். வடிவேல் : நான் தள்ளுபடி செய்யப்பட்டதை தப்பாகச் சொல்ல வில்லை. சார்ஜ் ஷீட் எப்படி தயார் செய்கிறார்கள்—இந்த கேஸுக்கு என்று சொல்லவில்லை, பொதுவாகச் சொல்கிறேன், அதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

இதே மாதிரி வடபாதிமங்கலம் வீட்டில் ஆகி இருந்தால், உடனே பட்டாளம், பட்டாளமாக 800 போலீஸ் போட்டு நின்று இருக்கும். ஆயிரக் கணக்கான அரிசன சேரிகள் நாசம் செய்யப்பட்டு இருக்கும். ஏனென்றால் அவர்கள் சமுதாயத்தில் கடைசி தட்டில் இருப்பவர்கள். எப்படி அவர்களுக்கு நியாயம் கிடைக்கும்? நீதி இலாகாவை நான் குறை சொல்லவில்லை. அவர்கள் சட்ட ரீதியாக அதைச் செய்து இருக்கலாம். ஆனால், இன்று சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்கள் சம்பந்தப்பட்ட கேஸ்களில் கேஸ்கள் சரியாக ஜோடிக்கப்படுவது இல்லை. எந்த அளவுக்கு அவர்கள் ஜாதியைச் சொல்லி இழித்து பேசப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும் * "என்னடா, இங்கே வேலை, போங்கடா" என்று சொல்லி யிருக்கிறார்கள், நிறைய நேரம் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த போலீஸ் ஸ்டேஷனில் எல்லாம் சொல்லப்பட்டு இருக்கிறது என்று என்னால் எடுத்துச் சொல்ல முடியும். மன்னார்குடியில் அரவிந்தர் காலனியில் உள்ள அரிசன மக்கள்மீது மன்னை எஸ்.ஐ. பொய் வழக்கு போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு போலீஸ ஸ்டேஷனில் அரிசன மக்களை இழிவாகப் பேசினார்கள் என்று குறிப் பிட்டார்கள். அந்த அளவிலே அது இருக்கலாம். அந்த ஜாதியின் பெயரைச் சொல்லி, விவரங்கள் எல்லாம் சொன்னார்கள். அந்த வார்த்தையை எடுத்து விட்டு, போலீஸ் ஸ்டேஷனில் அரிசன மக்களை இழிவாகப் பேசினார்கள் என்று திருத்திக்கொண்டால் நன்றாக இருக்கும். நண்பர் வடிவேல் அவர்களும் இதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 ஏப்ரல் 4]

திரு. எஸ். வடிவேல் : ஜாதியின் பெயரைச் சொல்லி கேஸ் போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் சொல்வதை நான் மறுக்க வில்லை. அந்த இரண்டு வார்த்தைகள் சொன்னீர்கள்—அதை நான் திரும்ப ச் சரிக்க இயலவில்லை—அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் நல்லது.

திரு. எஸ். வடிவேல் : வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். அது இருந்தால் என் சமுதாயத்திற்கு அவமானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

திரு. எஸ். வடிவேல் : ஜாதியின் பெயரைச் சொல்லி, துன்புறுத்தி வருகிறார்கள். ஆகவே பொருளாதார மாற்றம் ஏற்பட்டால்தான், அந்த அடித்தளத்தில் வாழ்கிற மக்கள் முன்னேற்றம் காண முடியும்.

11 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. தன்னி நிலம் இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த 11 லட்சம் ஏக்கர் நிலத்தை அரிசன தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து, அவர்களைக் கை தூக்கி விட்டால், அந்தச் சமுதாயத்தில் மாற்றம் காண முடியும்.

அதைத்தான் காலம் சென்ற தமிழகத்தின் தலை சிறந்த தலைவன் ஜீவானந்தம் அவர்கள்

"காலுக்கு செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்கு உழைத்தோமடா
பசையற்றுப் போனோமடா"

என்று சொன்னார்கள்.

இன்றைக்கு 28 ஆண்டு காலம் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னாலே என்ன நிலைமை ஏற்பட்டு இருக்கிறது? காங்கிரஸ் காலத்தில் அரிசன மக்களுக்காக கோவிலுக்குள்ளே நுழைவதற்கு வாயில்கள் அகல திறந்து விடப்பட்டன. ஆனால் மாற்றம் எதுவும் நடக்கவில்லை.

வீடு கட்டித் தரும் திட்டம் கொண்டுவந்து இருக்கிறோம் என்று சொன் னார்கள். அது வரவேற்கத்தக்கது. அதை நான் எதிர்க்கவில்லை. வீடு கட்டித் தருவதிலே நிலைமை என்னவென்றால், காங்கிரஸ் காலத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனை வழங்கினார்கள், கழக காலத்தில் அதே மாதிரி நிலைமை நீடிக்கிறது.

[திரு. தாழை மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 4

னுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞரின் ஆட்சி காலத்தில் அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருப்பதற்கு இடம் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, இந்த சிறப்பான மானியத்தை வரவேற்று வழிமொழிந்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 15 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இருப்பது நான்கு மணி நேரம். அதில் அமைச்சருக்கு ஒரு மணி நேரம் போக, மூன்று மணி நேரம் உறுப்பினர்கள் பேசுவதற்கு இருக்கிறது. ஆகவே, ஒரு உறுப்பினருக்கு 10 நிமிடத்திற்கு மேல் வராது.

**திரு. எஸ். வடிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்த அரிசன மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சமுதாயத்தில் ஏறத்தாழ 74 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களின் முன்னேற்றத்திற்காக 9¼ கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த 9¼ கோடி ரூபாயில் அவர்களுடைய நலனைப் பாதுகாக்க முடியும் என்று அரசுத் தரப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஏதோ யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டதுபோல் இருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் இது கடலில் பெருங்காயம் கரைத்த கதையாகத்தான் இருக்கும். குறைந்தது 25 கோடி ரூபாய் ஒதுக்கினால்தான், அவர்களின் நலனை ஓரளவுக்குப் பாதுகாக்க முடியும், அந்த வகையில் செய்தால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த நாட்டிலே குறிப்பாக அரிசன மக்கள், வறட்சி என்று எடுத்துக் கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான், காலரா என்று எடுத்துக் கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான், பட்டினி பஞ்சம் வந்தால் பாதிக்கப்படக்கூடியவர்கள் அவர்கள்தான், கல்வியை எடுத்துக் கொண்டாலும், வறுமையின் பிடிப்பில் என்று எடுத்துக்கொண்டாலும்—முதலமைச்சரின் கூற்றுப்படி—நிச்சயமாக பாதிக்கப்படுவது இந்த அரிசன மக்கள்தான்.

இந்த அரிசன மக்களின் மாறுதலை, மாறுபாட்டைக் காண்பதற்கு தேசப்
பிதா காந்தியடிகள் சொன்னார்கள், சமுதாயத்தில் பாதிக்கப்படக்கூடிய சமு
தாயம், உழைக்கக்கூடிய சமுதாயம், அடித்தளத்தில் இருக்கும் சமுதாயம்,
மாற்றம் காணவேண்டிய சமுதாயம், பொருளாதார மாற்றத்தில் படிப்படியாக
முன்னேற்றம் கண்டால்தான் அவர்களுடைய சமுதாய கலாசாரத்திலும் முன்
னேற்றம் ஏற்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு சுதந்திரம் அடைந்து
28 ஆண்டுகாலம் ஆனபின்னாலும்கூட, சமுதாயத்தில் இன்று ஓரளவு சலுகைகள்
பெற்று இருந்தாலும்கூட, நல்ல பரிமளிக்கத்தக்க மாற்றம் இல்லை என்பதுதான்
என்னுடைய தாழ்மையான கருத்து.



1975 ஏப்ரல் 4] [திரு. எஸ். வடிவேல்]

அந்த நிலைமையில் பார்க்கிறபோதுதான், இன்று தாழ்த்தப்பட்ட மக்கள்
அவர்கள் கேட்கிற வேண்டுகோளாக இருந்தாலும் சரி, அவர்கள் சொல்கிறது
நியாயமாக இருந்தாலும் சரி, அதை நீதி இலாகாவாக இருந்தாலும் சரி, மற்ற
இலாகாவாக இருந்தாலும் சரி, சரியாக எடுத்துக் கொள்வது இல்லை என்பதை
கண்கூடாகப் பார்க்கிறோம்.

குறிப்பாக நான் சொல்வோன், இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு
கீழ்வெண்மணியில் ஒரு சம்பவம் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள்,
கீழ்வெண்மணி சம்பவம் குறித்த வழக்கு உச்சநீதி மன்றத்திற்கு அப்பீல்
செய்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நேற்றையதினம் போலீஸ்
மானியத்தில் பதில் சொல்கிறபோது, நீதி இலாகா அதைத் தள்ளுபடி செய்து
விட்டது என்று குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்பீல் கொடுத்தோம், உயர் நீதி
மன்றம் தள்ளி விட்டது. மறுபடி அப்பீலுக்கு உச்ச நீதி மன்றத்திற்கு
முறையீடு அனுப்பிக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. எஸ். வடிவேல் :** ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அரிசன சமுதா
யத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எவ்வளவுதான் கொடுமைப்படுத்தப்
பட்டாலும், எவ்வளவுதான் தாக்கப்பட்டாலும், தீக்கிரையாக்கப்பட்டாலும்,
அதற்கு போலீஸ் இலாகாவோ, மற்ற, மற்ற இலாகாவோ எடுக்க வேண்டிய
நடவடிக்கைகளை சரியாக எடுப்பது இல்லை. வழக்குகளை சரியாக ஜோடிப்பது
இல்லை. ஏனெனில், அண்ணா அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் முதலமைச்
சராக இருந்த நேரத்தில் அந்த 44 பேர் கொளுத்தப்பட்டு இறந்ததற்காக அவர்
களுடைய உள்ளம் வேதனையால் துடித்ததையும், மனம் வேதனையால் கஷ்டப்
பட்டதையும் பார்த்தோம். நான் இருக்கும் இந்த ஆட்சி காலத்திலே, இந்த
44 பேர் எரிந்து இறந்தது மிகவும் மோசம், வருந்தத் தக்கது என்று மனம்
வருந்தி சொன்னார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உயிரோடு 44
பேர் கொளுத்தப்பட்டு இறந்து இருக்கிறார்கள். தங்களுடைய வலது கரம்
எரிந்து கொண்டிருக்கிறபோது, இடது காதில் தான் பெற்றெடுத்த
குழந்தையை வைத்துக்கொண்டு ஒரு தாய் செத்து இருக்கிறாள். மாண்புமிகு
மன்னை நாராயணசாமி, அன்று கலெக்டராக இருந்த ரங்கபாஷ்யம், நான்
அந்தக் காட்சியைக் கண்ணால் கண்டோம். கைக் குழந்தையோடு அந்தத் தாய
இறந்து இருந்தாலும், முகம் கருகவில்லை. அப்படி ஒரு கோர நிகழ்ச்சியைப்
பார்த்தபின்பும், வழக்கு ஜோடித்த போலீஸ் தரப்பினர் அந்த அரிசன மக்களை
இப்படிப் பார்க்கிறார்கள் என்றால், அவர்களுக்கு எப்படி நீதி கொடுக்க முடியும்?

இருக்கின்றவர்கள் மேம்பாடு அடைய வேண்டுமானால், சர்க்கார் செலவில் சகலரும் படிக்க வேண்டும். அந்த முறையில் கல்வி முறை மாற்றி அமைக்கப் படவேண்டும்.

மேலும் பூண்டி வாண்டையார் கிராமத்தில் தகராறு நடந்திருக்கிறது. அம்பலக்காரர், அரிசனங்கள் விஷயத்தில் போலீஸ் தலையிட்டிருக்கிறது. அங்குள்ள எஸ்.ஐ. வேதய்யன் என்பவர் தாறுமாறான முறையில் பேசியதாகக் கேள்விப்படுகிறோம். பூண்டி வாண்டையார் குடும்பத்தில் உள்ளவர்கள் கீழ் வெண்மணியில் எப்படி வீட்டில் வைத்துக் கொளுத்தினார்களோ, அப்படி நாங்கள் மரத்தில் வைத்துக் கொளுத்துவோம் என்று சபதம் பூண்டிருக்கிறார்களாம். அந்த மாதிரி இடங்களில் சர்க்கார் பாதுகாப்பில்லை. அப்படி கொளுத்துகிற இடம் தான் அலைகள். பின் தங்கிய ஏரியா. அமைச்சர்கள் தலையிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதைப் புனர் பரிசீலனை பண்ண வேண்டும்.

ஓலப்பாடி என்ற பகுதியில் கன்னையன் என்ற அரிசனனை குளத்தில் வெட்டிக் கொன்றார்கள். அவர் அண்ணா தி.மு. கழகம் என்று சொன்னார்கள். வழக்குப் போடுவதற்கு முன்பு தி.மு. கழகம் என்று சொன்னார்கள். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு ஒரு வருஷம் ஆகி விட்டது. அரிசனங்கள் சம்பந்தப்பட்ட அவர்கள் கொடுக்கின்ற வழக்குகளை நியாயமாகப் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியான முறையாகாது. எங்களுக்குச் சொந்தம் பந்தம் மேலிடத்தில் யார் இருக்கிறார்கள்? அந்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. ஆகவே நீதி இலாக்கா, நிர்வாக இலாக்கா சரியாக இயங்கினால் தான் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 4. அமைச்சரின் அறிக்கைகள்

### (அ) வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணத்திற்கென்று 1974-75 நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 10 கோடி. இதில் 31—3—1975 முடிய, செலவழிக்கப்பட்ட





தொகை சுமார் ரூபாய் 8 கோடியே 70 லட்சமாகும். தொடர்ந்து வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாலும், ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் துரிதமாக தொடர்ந்து நடைபெறவும், நடப்பு ஆண்டில் (1975-76), திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சிப் பணிகளுக்கென்று நிதி நிலை அறிக்கையில் கண்டிட்டுக் காட்டிய ரூபாய் 20 கோடியில் முதல் கட்டமாக இப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ரூபாய் 6 கோடியே 30 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்து இன்று ஆணை பிறப்பிக்கின்றது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திட்டத்திற்கு அப்பாற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளோடு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (3) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (அ) நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள் அரிசனங்கள் முதலியோர் நலன்—தொடர்ச்சி

**திரு. சி. பாண்டுரங்கன் :** இன்று விவாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் அரிசனங்கள், மற்றும் மலைவாழ் ஜாதியினர் மானியத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றை அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரிசனங்கள் என்று சொல்லும்போது அரிசனங்கள் என்பது இடையில் வந்த பெயராகும். அதாவது ஆதித் திராவிடர்கள், பழங் குடிமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது தான், அவர்களுக்கு முதன்மையாக இருந்தது. இந்த அரிசனங்கள் மீது, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகவும் பேரன்பு கொண்டு, அவர்களுக்காகக் கண்ணீர் வடித்த தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள், இந்த அரிசனங்களை யாருமே கைதூக்கி விட முடியாது, யாராலும் காப்பாற்ற முடியாது என்பதை அறிந்து அவர்களை அரிசனங்கள், கடவுளின் பிள்ளைகள் என்று விட்டு விட்டார். இவர்களை மனிதர்கள் காப்பாற்ற முடியாது, கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்ற நிலைமையில் தான் அப்படிச் சொன்னாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் சுதந்திரம் 1947-ல் வாங்கினோம். இப்பொழுது 1975-ம் வருடம். இன்று வரை சுதந்திர விழா கொண்டாடுகிறோம். அரிசன விழாவும் கொண்டாடுகிறோம். இதற்கு முடிவே இல்லையா என்று நினைத்து வேதனைப்பட

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதோ ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன், நான் பிறந்த சொந்த ஊரான திருக்குவளையில் 75 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வடிவேல் அவர்களின் தொகுதியில் இருக்கும் மக்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** முதலமைச்சர் அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது. திருக்குவளை, இடையூர் ஆகிய இடங்களில் கட்டி இருப்பது உண்மை. என் தொகுதியில் என்ன நடந்து இருக்கிறது என்றால், நான்கு வருஷத்திற்கு முன்னாலேயே நான் எழுதிக் கொடுத்தேன். அம்மையார் அவர்கள் இருந்த போது எழுதிக் கொடுத்தேன். அதாவது நான் எழுதிக் கொடுத்தது, ஆலஞ்சேரி, அரூர், ராயபுரம், பனங்காட்டாங்குடி, மாதரைவேலூர், வடரங்கம், கற்கோவில், எற்குடி, அகனி இம்மாதிரி ஊர்களில் கட்ட வேண்டுமென்று எழுதிக் கொடுத்தேன்.

அம்மையார் அவர்கள் சொன்னார்கள், என்னிடத்தில் பெட்டிஷனே வரவில்லை என்று. அதற்கு நான் 'பச்சைப் பொய்' என்று சொன்னேன், 'பச்சைப் பொய்' என்று சொல்லக் கூடாது என்று நீங்கள் சொன்னீர்கள், அதனால் நான் அந்த வார்த்தையை வாபஸ் பெற்றுக்கொண்டேன். ஆனால் இப்போது நான்கு வருஷத்திற்குப் பிறகு இப்போது இந்த அரிசன நல அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிக் கொடுத்த பகுதியில் கட்டவில்லை. கே. பி. எஸ். மணி அவர்கள் எழுதிக் கொடுத்த இடத்தில் கட்டுகிறார்கள். முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கிற இடத்தில் கட்டுகிறார்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை, அங்கேயிருப்பவர்களும் அரிசன மக்கள்தான், அவர்களுக்கும் கட்டிக் கொடுக்கவேண்டியதுதான். ஆனால் நான் ஒரு தொகுதி எம்.எல்.ஏ. என்கிறபோது, ஒரு 10 இடத்தில் அந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் செயல்படுத்தினால் எனக்கு நன்றாக இருக்கும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தெந்த ஊரில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். இப்போது திட்டம் போட்டு கட்டச் சொல்லுகிறோம்.

**திரு. எஸ். வடிவேல்:** இன்னும் ஒரு ஊருக்குக் கூட இல்லை. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அரிசனங்கள் என்ன முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்றால் ஆளுகிற கட்சிக்குச் சாதகமாக காங்கிரஸ் கொடியை கட்டினார்கள். தி.மு. கழக ஆட்சி காலத்தில் இந்தக் கொடியை கட்டுகிறான். கடைசியாக என் கொடி செங்கொடி, கம்யூனிஸ்ட் கட்சிக் கொடி தான்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தன்னை அறியாமல் தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் தெளிவை குறை கூறுகிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** ஆளுகின்ற அரசின் சார்பாக போகின்றதற்கு அடிப்படைக் காரணத்தை இழிவாகக் கருதவில்லை. நான் அந்த சமுதாயத்தில் பிறந்தவன். நான் எப்படி இழிவாகக் கருத முடியும்? இன்றைக்கு நிலைமை அப்படி இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும், மறுபடியும் சொல்லத் தேவையில்லை. அவர்களே ஒப்புக் கொண்டார்கள். திருக்குவளை, இடையூர் போன்ற பகுதிகளில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி அரிசனங்கள் வாழ்கின்ற இடங்களில் கட்டித் தரப்பட்டதாக ஒப்புக் கொண்டார்கள். அவர் குறித்துக் கொடுத்திருக்கிற இடங்களில் படிப்படியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள். இன்னும் 17 பேர் பேச வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** உபரி நில விநியோகம் என்கிற போது, தாழ்த்தப்பட்ட சமுதாயம், அரிசனங்களுக்கு முன் உரிமை தரவேண்டும். அந்த மாதிரி முன்னுரிமை கொடுத்தால் பல லட்சக்கணக்கான ஏழை விவசாயத் தொழிலாளிகள், உழுது பயிரிடுகின்றவர்கள், அவர்கள் பெயரை வைத்துக் கொண்டு பல பேர் பட்டாவை அனுபவித்துக் கொண்டு இருக்கின்ற அந்த நிலைமை இருக்கிறது. மன்னார்குடி ஓவர்ச்சேரி பகுதியில் குன்னியூர் அம்மாள் பெரிய பண்ணைக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிசனங்கள் வயலில் அறுத்ததாக அவர்கள் மீது வழக்கு பதிவாகியிருக்கின்ற நிலைமை இருக்கிறது.

அடுத்தபடி கல்வியை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு ஆரம்பத்தில் 73 லட்சம், 74 லட்சம் பேர் படிக்கிறார்கள் என்றாலும், இடைக் காலத்தில் பாதி பேர் படிக்காமல் விட்டு விடுகிறார்கள். அது யார் என்றால் தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய சமூகத்தினராகவும் தான் இருக்கிறார்கள். காரணம் பொருளாதார நிலைமை. அம்மா, அப்பனுக்கு வயதாகி, பொருளாதார நிலைமை சீரழிந்து, அவர்கள் படிப்பை பாதியில் முடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் சோவியத் நாட்டில் 18 வயது நிரம்பியவர்கள் படிப்பை முடித்து, பட்டம் பெற்று, வேலையோடு வீட்டிற்குத் திரும்புகிறார்கள். அவர்களுக்கு என்ன சலுகை அளித்தாலும், அவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டால் நிலைமை என்னவாகும்? ஆகவே, சமுதாயத்தில் கீழ்த் தட்டில்

[திரு. சி. பாண்டுரங்கன்] [1975 ஏப்ரல் 4

வேண்டியிருக்கிறது. இது தமிழ் நாட்டிற்குமட்டும் உரித்தான பிரச்னை இல்லை. இது அகில இந்தியாவிலும் கடைபிடிக்க வேண்டிய நிலைமை. இது அகில இந்தியப் பிரச்னை. தமிழ்நாட்டில் அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்னையைத் தீர்த்து விட்டாலும் இது அகில இந்திய அளவில் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கிறதா என்றால் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. எப்படி?

(முற்பகல் 10-00)

பிரிட்டிஷ் காலத்தில் இருந்த நிலைமை, இன்று இருக்கிற நிலைமை இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஓரளவு இன்றைக்கு அவர்களுக்கு செய்திருக்கலாம். ஆனால் பூரணமாக செய்திருக்கிறோமா என்று கேட்டால் இல்லை என்பதைத்தான் நான் சொல்லவேண்டியிருக்கிறது. சரியாகச் செயல்பட்டிருந்தால் 1947-லிருந்து 1975 வரையில் அரிசன விழாக்கள் கொண்டாட வேண்டிய நிலைமை ஏற்படுமா? அரிசனங்களுக்கு என்று ஒரு வாரியம் தனியாகத் தேவைப்பட்டிருக்குமா? சரியாகச் செயல்படாததால் தான் இன்றைக்கும் அரிசன விழா கொண்டாடுகிறோம், ஒரு தனித் துறையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஒரு தனி அமைச்சரைப் போட்டிருக்கிறோம். ஆகவேதான் இன்று வரையில் அந்த மக்களுக்காக சரியான முறையில் செயல்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்த அரிசனங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அவர்கள் தீராத நோய் பிடித்துள்ள ஒரு மனிதனைப் போல் இருக்கிறார்கள். இந்த நோயாளியைக் குணப்படுத்த பல டாக்டர்கள் முயற்சி செய்தார்கள். மகாத்மா காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், பேரறிஞர் அண்ணா, இப்போது முதலமைச்சராக இருக்கிற டாக்டர் கலைஞர் இவர்கள் எல்லாம் அந்த நோயாளியைக் குணப்படுத்த முயற்சி எடுத்த டாக்டர்கள். கலைஞர் அவர்கள் இப்போதும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள்? காந்தியடிகள் அரிசனங்களுக்கு சில சலுகைகளைக் கொடுத்து, சமுதாயத்தில் மற்றவர்களோடு சரிநிகராக வாழ வைக்க வேண்டுமென்பதற்காக சட்ட திட்டங்களைத் தீட்டச் சொன்னார்கள். டாக்டர் அம்பேத்கார் சட்ட திட்டங்களைத் தீட்டினார்கள். அதன் பின்னால் அவர்களால் சீர்பண்ண முடியாது என்று எண்ணி, எங்களுக்கு என்று தனியான ஒரு இடத்தைக் கொடுத்துவிடுங்கள், நாங்கள் வாழ்கிறோம் அல்லது சாகிறோம் என்று சொன்னார்கள். காந்தியடிகள் அதை ஒப்புக்கொள்ளவில்லை.



1975 ஏப்ரல் 4] [திரு. சி. பாண்டுரங்கன்]

மற்றவர்களோடு அவர்களும் சரிநிகர் சமமாக வாழ வேண்டும்; பொருளாதாரத்தில், கல்வியில், சமுதாயத்தில் மற்றவர்களோடு சரிநிகர் சமமாக வாழ வேண்டும்; அதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்; சட்ட திட்டங்களைப் போட்டார்கள். ஆனால் அந்த சட்ட திட்டங்களை எந்த அளவுக்கு செயல்படுத்தினார்கள் என்று பார்த்தால், அகில இந்திய அடிப்படையில் பார்த்தால் அரிசனங்கள் அன்று எப்படி இருந்தார்களோ அப்படியேதான் இன்றும் இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களில் எத்தனை பேர் முழுமையாகத் துணி அணிந்து கொள்கிறார்கள், எத்தனை பேர் அரை நிர்வாணமாக இருக்கிறார்கள், எத்தனை பேர் கால் நிர்வாணமாக இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால் இவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை அறிய வாய்ப்பு ஏற்படும்.

நிலம் உள்ளவர்கள் எத்தனை பேர், நிலம் இல்லாதவர்கள் எத்தனை பேர், வீட்டு மனை உள்ளவர்கள் எத்தனை பேர், வீட்டு மனை இல்லாதவர் எத்தனை பேர், வீடு உள்ளவர் எத்தனை பேர், வீடு இல்லாதவர் எத்தனை பேர், கல்வி பெற்றோர் எத்தனை பேர், கல்வி அறிவே இல்லாதவர் எத்தனை பேர், பதவியில் இருப்பவர் எத்தனை பேர், பதவியில் இல்லாதவர் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கை எல்லாம் எடுத்துப் பார்த்தால் அவர்களின் நிலைமை இந்த சமுதாயத்தில் எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

ஆனால் யாரும் இந்தக் கணக்கை எடுப்பதில்லை; இந்த சர்வே எடுக்க யாரும் முயற்சி செய்யவில்லை, சரியாக எடுக்கவும் முடியாது. அகில இந்திய அடிப்படையிலே இந்தக் கணக்கை எடுத்து, அவர்களை எந்தெந்த வழி முறைகளில் முன்னேறச் செய்யலாம், சமுதாயத்தில் எந்த அடிப்படையிலே முன்னேறச் செய்யலாம் என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக அவர்களைப் பற்றிய சர்வேயை சரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும்.

மின்சாரம் பற்றாக்குறை என்றால் வெளிமாநிலங்களிலிருந்து வாங்குகிறோம் அல்லது உற்பத்தியைப் பெருக்குகிறோம். உணவுப் பிரச்னை என்றாலும் இதே முறையைக் கையாளுகிறோம். ஆனால் இந்த அரிசனங்கள் பிரச்னைக்கு முடிவு காண வேண்டுமென்றால் முதலில் இந்த மாதிரியான ஒரு சர்வே எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் இந்த மக்களை எப்படி முன்னேற்ற வேண்டும் என்று பார்த்து, ஒரு சீர்திருத்தமான ஏற்பாட்டைச் செய்தால் இந்த சமுதாயம் முன்னேறும். அப்போது இந்த அரிசனத் துறை இருக்க வேண்டிய

இல்லை; அதற்கென்று தனி அமைச்சரும் இருக்க வேண்டியதில்லை. அந்த நிலைமை ஏற்படும் வரையில் ஏதோ செய்கிறோம், ஏதோ செய்கிறோம் என்று சொன்னால் முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்காகத்தான் சொன்னார்கள். 'உங்களுடைய பார்வை இந்த நாட்டிலிருக்கிற ஏழை எளிய மக்கள் பக்கம் திரும்ப வேண்டும்' என்று சொன்னார்கள். ஏழை எளிய மக்கள் என்றால் சமுதாயத்திலே பின்தங்கி இருப்பவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள். அவர்கள் பக்கம் இந்த அரசின் பார்வை திரும்ப வேண்டும்; அவர்களுக்கு வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அண்ணா சொன்னார்கள்.

காந்தியடிகள் இந்தத் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக ஒரு அரிசன பெண்ணை தன்னுடைய வீட்டில் இருத்தி வளர்த்து வந்தார்கள். இந்தச் சமுதாயம் மற்ற சமுதாயத்தோடு இணைந்து வாழவேண்டும்; தீண்டாதவர் என்று யாரையும் வைக்கக்கூடாது என்று சொன்னார்கள். மேலும் அவர்களே சொன்னார்கள். மீண்டும் மனிதப் பிறவி எடுக்க வேண்டுமென்றிருந்தால் ஒரு அரிசனனாக, ஒரு தாழ்த்தப்பட்டவனாகத்தான் பிறக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அரிசன சமுதாயத்தையே தன்னுடையதாக்கிக் கொண்டார்கள். தன்னுடைய குடும்பத்தோடு அரிசனங்களை இணைத்துக்கொண்டார்கள். காந்தியடிகள் நினைந்தார்கள், கலைஞர் அவர்கள் செய்து காட்டினார்கள். தன்னுடைய பிள்ளைக்கு ஒரு அரிசன பெண்ணை மணமுடித்துவைத்து, இந்தச் சமுதாயம் சீர்கெட்டது அல்ல, இந்தச் சமுதாயம் தீண்டப்படாதது அல்ல என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தீண்டப்படாத சமுதாயம், சீர்கெட்ட சமுதாயம் என்று சொல்லக்கூடாது. சொல்வது தவறு என்பதை இந்த நாட்டிற்கு நிரூபித்துக் காட்டி, இந்த சமுதாயத்தைச் சொந்தமாக்கிக்கொண்டார்கள். இந்தச் சமுதாயத்திற்கு டாக்டர் கலைஞர் மட்டும் இப்படிச் செய்தால் போதாது. நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, இந்த அரிசன மக்கள் பற்றிய சர்வேயை எடுத்து, எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை இருக்கிறது, எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை இல்லை; எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள், எத்தனை பேர் நிலமில்லாமல் இருக்கிறார்கள் என்பன போன்றவைகளை எல்லாம் பார்த்து, இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கே இருக்கிறோம். இப்படி இந்த நாட்டிலுள்ள எல்லா இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு இடம் கொடுக்க



வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் அரிசனங்களின் தொகை குறைந்து இந்த நாட்டிலுள்ள மற்ற ஜாதிக்காரர்கள் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லா இடங்களிலும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதோடு முக்கியமாக உங்களுடைய உள்ளத்தில் இடம் கொடுங்கள். உங்களுடைய உள்ளத்திலே இடம் கொடுத்து விட்டால் எல்லா இடங்களிலும் அவர்களுக்குப் பதவி கிடைக்கும், பட்டம் கிடைக்கும், கல்வி கிடைக்கும், பொருளாதார முன்னேற்றம் கிடைக்கும். ஆகவே, எல்லா இடங்களிலும் இடம் கொடுப்பதை விட உங்கள் உள்ளத்திலே இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு பிரச்சனைக்கும் ஆளாகி இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? பொருளாதாரத்தில் வசதி இல்லை, கல்வியில் வசதி இல்லை என்று நினைக்கும்போது, இது தொன்றுதொட்டு வந்த ஒரு குறையாக இருக்கிறது. அவர்களிடம் உழைப்பு இல்லையா என்றால் அவர்கள்தான் நல்ல உழைப்பாளிகள். மேலே ஒரு கந்தல், கீழே ஒரு கந்தல் கட்டிக்கொண்டு ஜாக்கெட் போட வழியில்லாமல் பெண்கள் எல்லாம் வயலிலே உழைக்கிறார்கள். ஆண்களும் அப்படி உழைக்கிறார்கள். உழைத்து, உழைத்து உடல் உரம் பெற்றவர்கள்தான் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்கள் கடமையைச் செய்கிறார்கள். கடமையில் இருந்து எப்பொழுதுமே தவறுவது கிடையாது. அவர்களிடம் கண்ணியம் இருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள விவசாய அறுவடையை செய்கிறார்கள் என்றாலும், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் அவர்களை நம்பி, அவர்களிடம் விட்டு விடுகிறார்; வயலுக்குப் போக மாட்டார். அந்த அளவுக்கு அவர்களிடம் கடமை இருக்கிறது; கண்ணியம் இருக்கிறது. ஆனால் கட்டுப்பாடு கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் சாட்சி சொல்ல வரவில்லை என்று சொன்னார்கள். சாட்சி கூற அவர்கள் வர முடியாது. ஏனென்றால் மற்றவர்களை நம்பி, மற்றவர்கள் கையை நம்பி, மற்றவர்கள் உபகாரத்தை எதிர்பார்த்து வாழக்கூடியவர்கள். ஆகையால் அவர்களால் தனியாக நின்று வாழ முடியாது. அதனால் மற்றவர்களுக்கு எதிராக சாட்சி கூற வர முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடு மட்டும் அவர்களிடம் இருந்தால், உண்மையிலேயே இந்தச் சமுதாயம் இவ்வளவு கேவலமாக, கீழ்த்தரமாக எண்ணப்பட மாட்டாது. கட்டுப்பாடு வந்துவிட்டால் அவர்களுக்கு இப்படி ஒரு தனித் துறையே தேவைப்படாது; இந்த மானியமும் தேவைப்படாது. இந்தக் கட்டுப்பாட்டை அடையும் நாள் எந்நாளோ என்று கேட்க விரும்புகிறேன்.

பழங்குடி மாணவர்களை எடுத்துக்கொண்டாலும்—அவர்களுக்காக நாம் 1973-74-இல் 23 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்றால் இந்த நடப்பு ஆண்டில்—1974 75-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 21 ஆயிரம்தான். இந்த அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு, இந்த மாணவர்கள் உதவித் தொகை பெற வேண்டுமென்று சொன்னால் வருமான வரம்பை 6,000-இல் இருந்து 9,000 ரூபாயாக மத்திய அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. ஆனால் மாநில அரசோ வருமான வரம்பை 2,500-இல் இருந்து 3,000 ஆகத்தான் ஆக்கியிருக்கிறது. இந்த அளவுக்கு வைத்துக்கொண்டிருந்தால் அந்தச் சமுதாய மக்களுக்கு எவ்வளவு பண உதவி அளிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த அளவு அளிக்க முடியாது போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருமான வரம்பை அதிகப்படுத்தி—தகுதி உடைய மாணவர்களுக்கு எல்லாம், அந்தச் சமுதாயம் பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைய, கல்விக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று. கடந்த பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வரும் இலவசக் கல்வித் திட்டத்தைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அமைச்சர் சொன்னார் என்பதாக பத்திரிகையில் பார்த்தேன். கவர்னர் அவர்களும் இதைப்பற்றி ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இலவசக் கல்வித் திட்டத்தின் காரணமாகத்தான் கொஞ்சமாவது தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஏற்கனவே நாட்டில் இருந்த குலக் கல்வி முறையை ஒழித்துவிட்டு—இலவசக் கல்வி முறையை காங்கிரஸ் அரசுதான் கொண்டுவந்தது. எந்தக் காரணம் கொண்டும் இந்த இலவசக் கல்வி முறையை ஒழித்துவிடக் கூடாது. தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இலவசக் கல்வியினால்தான் அதிகப் பயன் பெறுகிறார்கள். இலவசக் கல்வியை ஒழிப்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். யார் எதைச் சொன்னாலும் இந்த இலவசக் கல்வித் திட்டத்தை ஒழிப்பதற்கு நமது அரிசன நலத் துறை அமைச்சர் ஒத்துக்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்து, அரிசன மாணவர்களுக்கு தனி இல்லங்கள் அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கதாக இல்லை. அவர்களும் மற்ற சமுதாய மாணவர்கள் தங்குகின்ற இல்லங்களிலேயே தங்கி கல்வி பயில்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தீண்டாமை ஒழிய வாய்ப்பு



ஏற்படும்—மற்ற சமுதாய மக்கள் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைவதைப் போல அவர்களும் கல்வித் துறையில் முன்னேற்றம் காண முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மற்ற சமுதாய மாணவர்கள் தங்குகின்ற விடுதிகளிலேயே இவர்களையும் சேர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவு—சத்துணவு என்பதாக எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து வருவதாகக் காண்கிறோம். 1968 ஆம் ஆண்டு நான் எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினராக இருந்தபோது பல விடுதிகளைச் சென்று பார்வையிட வாய்ப்புக் கிடைத்தது. பெரும்பாலான அந்தச் சமுதாய மாணவர்கள் வாய்ப்புண்ணினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். காரணம் டெபிஷியன்ஸி—இந்த மாணவர்களுக்கு சத்துணவு என்று கொடுத்தாலும்—பிறப்பில்—அவர்கள் தாய்க்கருவில் இருந்தபோது சரியான சத்துணவு இல்லாத காரணத்தினால் குழந்தைகளாகிய இவர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையையும் பார்த்தோம். ஆகவே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள்—கருவுறுகிறபோதே நல்ல சத்துணவைப் பெற—தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ட்ரைபல் அட்வைசரி கமிட்டி இருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. 29—2—72-இல் அது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரத்தில் 50 படுக்கை கொண்ட மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கிறது. அந்தத் தீர்மானம் இதுவரை செயல் படுத்தப்படவில்லை. அதை இந்த அரசாங்கம் சிந்தித்ததாகக்கூடத் தெரியவில்லை. அங்கே அரிசன மக்கள்—மலைவாசி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பது குறைவாக இருக்கிறது. எதற்காகக் கூறுகிறேன் என்றால் காணி சமுதாயத்தைச் சேர்ந்த மலை சாதி மக்களுக்கு அம்மை நோய் வருகிறது. அம்மை நோய் வந்துவிட்டால் அம்மை நோய் வந்தவரை அங்கேயே போட்டுவிட்டு அங்கிருந்து மற்றவர்கள் போய்விடுகிற பழக்கம் அவர்களிடம் இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான மருத்துவ வசதி பெற வழியில்லாத காரணத்தினால் இது போல அவர்களை விட்டுவிட்டுப் போகிற பழக்கம் பழங்காலம் தொட்டே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் நிச்சயமாக ஒரு மருத்துவ மனையை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

அடுத்து, அரிசன மக்களுக்குத் தரிசு நிலப்பட்டா செய்து கொடுப்பதாக இந்த அறிக்கையிலிருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே களியல் பகுதியில் ஏறத்தாழ 300 குடும்பங்கள் 786-வது சர்வே எண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் ஃபாரஸ்ட் இலாகாவானது, அந்த நிலம் ரெவின்யூ புறம்போக்கு அல்ல, ஃபாரஸ்ட் லான்ட் என்று சொல்லி, அங்குள்ள ஏழை அரிசனங்களை அப்புறப்படுத்துகிறது. மாண்புமிகு அரிசன நல அமைச்சரிடம்கூட ஒரு கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில், அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலம் இன்னும் பதித்துக் கொடுக்கப்படாததால், அவற்றை அவர்களுக்குப் பதித்துக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் அரிசன மக்களுக்கு இதுவரையிலும் பட்டா வழங்கப்படவில்லை. நான், அத்துறை அதிகாரிகளைக் கேட்டால், நீலகிரி மாவட்டத்திற்குக் குறிப்பாக, குன்னூருக்கு இந்தச் சட்டம் பொருந்தி வராது என்று கூறுகிறார்கள். அதனால் அங்கே பட்டா செய்து கொடுக்கவில்லையென்ற புகார் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அங்கேயிருக்கிற அரிசன மக்களுக்கு தற்போதுள்ள 200 ஏக்கர் நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம் அரசு இன்னும் அரிசன மக்களை இரண்டு விதமாகப் பிரித்து வைத்திருக்கிற அவல நிலை நிச்சயமாக மாறவேண்டும். கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாத இந்துக்கள் என இரு பிரிவுகளாக அவர்களை வைத்து கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கு சலுகைகள் மறுப்பது சரியல்ல, ஏதோ சூழ்நிலை காரணமாகச் சமுதாயத்தில் இருந்த நெருக்கடியின் காரணமாக, ஆங்கிலேயன் இருந்த காலத்தில், இங்கேயிருந்த இந்துக்கள் கிறிஸ்தவர்களாகியிருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர்களாகிவிட்ட காரணத்தால், பொருளாதார ரீதியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இன்னும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொருளாதாரத்தில் எந்த மாற்றமும் இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே, இந்துக்களுக்குக் கொடுக்கின்ற சகல நன்மைகளையும், மத்திய அரசிலே கொடுக்கிற அனைத்துச் சலுகைகளையும் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்க, இங்கேயிருக்கிற அரசு ஆணை எண் 19—பிரிவு 3 ஐ மாற்றியமைக்க வேண்டும். அந்த ஆணையில், இந்து அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அரிசன் என்று கருதப்படுவார்கள், மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் அரிசன் என்று கருதப்பட மாட்டார்கள் என்ற விதிமுறையிருக்கிற காரணத்தால், இப்பொழுது கிறிஸ்தவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கவில்லை. ஆகவே, அரசாங்கம் சட்டத்தைத்





திருத்த ஆலோசிக்க வேண்டும். நான் தனியார் தீர்மானம் கொடுத்திருக்கிறேன், அதற்காக. அதை இந்த அரசாங்கம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மாநிலங்களில், கிறிஸ்தவர்களானாலும்கூட, இந்துக்களைப் போல், பல சலுகைகள் கிடைக்கின்றன. கேரளத்தில், எம். எஸ். ஜோசப் என்ற அதிகாரி காணிக்காரராக இருந்தாலும், அவருக்கு இந்துவைப்போல், ஐ.ஏ.எஸ். அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் கிறிஸ்தவராக இருந்தாலும், அரிசன் என்ற முறையில் ஐ.ஏ.எஸ். கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், நாகாலாந்தில் இருக்கிற கிறிஸ்தவ அரிசனங்களும், இந்து அரிசனங்களைப் போல், மத்திய அரசாங்கச் சலுகைகளையும், மாநில அரசின் சலுகைகளையும் பெற்றுவருகிறார்கள். இங்கே நமது அரசும் வேறுபாடு காட்டாமல், சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரிசன மேம்பாட்டு வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி ஒன்றைக் கூற முற்படுகிறேன். அது உண்மையிலே அரிசனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டதா அல்லது இந்த அரசாங்கத்திற்கு விளம்பரம் தேடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதாகத் திட்டம். ஆனால், இதுவரையில் கட்டியிருப்பது 10,000 வீடுகளே. திறப்பு விழாவுக்காக எந்த அளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறவேண்டும். எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் வந்திருக்கிறது. கட்டப்பட்டிருக்கிற வீடுகள் ஒரு காற்றுக்குக் கூடத் தாக்குப் பிடிக்காது என்று கூறுகிறார்கள். சாந்து சரியாகச் செய்யப்படவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, அது சரியான அளவுக்கு அரிசனங்களுக்குப் பயன்படுமா என்ற ஐயப்பாடிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் பயன் தரக்கூடிய அளவு நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தச்சூர் அரிசன கிராமத்திற்கு பாதை போட உத்தரவு பிறப்பிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

கைடயாக, கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நமது இன்ஃபர்மேஷன் டிபார்ட்மென்டானது ஒழுங்கான முறையில் அதை விளம்பரம் செய்யவில்லை. இந்த மன்றத்தில் சில நாட்

மேலும், 1947-லிருந்து 1975 வரை நோயாளியாக வாழ்கிற இந்தச் சமுதாயம் இந்திய நாட்டையே நோயாளியாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நோயைக் குணப்படுத்த வேண்டும். ஏனென்றால் ஒரு வீட்டில் இருக்கிற குடும்பத்தில் ஒருவருக்கு 'கிரானிக் டிஸீஸ்' என்றால் அது தீராத நோயாக இருந்தால் அது அவனை மட்டும் கொல்லாது, அந்தக் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரையும் அந்த நோய் பிடித்து, அந்தக் குடும்பத்தையே கொன்று விடும். அதைப்போல இந்த சமுதாயத்தைப் பிடித்த நோய் இந்த நாட்டையே பிடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, டில்லி அரசை நோக்கி உங்கள் மூலமாகச் சொல்கிறேன். இந்த 'கிரானிக் டிஸீஸ்' குணப்படுத்தப்படவில்லை என்றால் அவர்களுக்கும் துன்பம், இந்த நாட்டில் உள்ள மற்றவர்களுக்கும் துன்பம்தான். எனவே, விரைந்து மத்திய அரசும் மாநில அரசும் தங்களுடைய கடமையைச் செய்து, இந்தச் சமுதாயம் வாழ வழிவகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 28 ஆண்டுகள் ஆகியும்கூட அரிசன மக்கள் வாழ்க்கையில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தைக் காணவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அதற்கு நாம் சமாதானம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டிலே பெரிய அளவு எண்ணிக்கையுள்ள சமுதாயம்—இந்த நாட்டிலே சுதந்திரத்தைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த சமுதாயம்—இந்த நாட்டில் எல்லாத் துறைகளிலும் உழைக்கின்ற சமுதாயம்—மிகத் தாழ்ந்த நிலையிலேயே கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலையிலேயே வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நாட்டு மக்களுக்கு குறிப்பாக நமது அரசாங்கம் அதற்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

சென்ற எட்டு ஆண்டுக் காலமாக பல்வேறு துறைகளில் ஏதோ அரிசனங்களுக்காக நாம் அதிக அளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம்—இந்த அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்து வந்திருக்கிறது என்று கூறினாலும்கூட, அரசு கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் எந்த அளவுக்குப் பணம் ஒதுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையும்கூட ஆண்டுக்கு ஆண்டு குறைந்தே வந்திருக்கிறது.





இந்தச் சமுதாயத்தில் இன்னும் தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் அது எந்த அளவுக்கு இந்த அரசாங்கத்திற்கு இழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் கவனித்தே ஆகவேண்டும். தீண்டாமை தடுப்புச் சட்டம் இருக்கிறது. அதை அமல்படுத்த பல்வேறு துறைகள் இருக்கின்றன. இன்னும் இந்த நாட்டில் இருந்து தீண்டாமை என்னும் கொடிய, தீமையை அகற்றியாகவில்லை என்று சொன்னால் அதற்கு இந்த அரசாங்கத்தைப் பாராட்ட முடியாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கொடிய வியாதி நிச்சயமாக இல்லை என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் பல்வேறு மாவட்டங்களில் இது எந்த அளவுக்கு நம்முடைய சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றது என்பதை எண்ணும்போது நிச்சயமாக நாம் எல்லாம் வருத்தப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன். இதற்குக் காரணம் என்ன? அரிசன மக்கள் எந்த அளவுக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை. அதுதான் இந்த நாட்டில் தீண்டாமை இருப்பதற்குக் காரணம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதார முன்னேற்றம் காண வேண்டுமென்று சொன்னால் அந்தச் சமுதாய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை நாம் வகுத்துக் கொடுத்தாக வேண்டும். கல்வித் துறையில் அவர்கள் முன்னேற்றம் காண வழி செய்தாக வேண்டும்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் அரசின் இலாக்காவில் கல்விக்காக ஒதுக்கப்பட்டு வந்த பணம் ஆண்டுக்காண்டு குறைந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1972-73-ஆம் ஆண்டில் கல்லூரியில் பயில்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவ சமுதாயத்திற்காக ஒதுக்கிய படிப்பு உதவித் தொகை 98.79 லட்சம் ரூபாய். ஆனால் இந்த 1974-75 ஆம் ஆண்டு—நடப்பு ஆண்டில்—அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது 91.6 லட்சம் ரூபாய்தான்.

அதுமட்டுமல்ல—1972-73 ஆம் ஆண்டு கல்லூரியில் படித்த அரிசன மாணவர்களின் எண்ணிக்கை 7,604—ஆனால் இந்த நடப்பு ஆண்டில்—1974-75-இல் 4,749 பேர்கள் என்று விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் இருந்தே அந்தச் சமுதாய மாணவர்கள் படிப்புக்கு நாம் அதிகமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

களுக்கு முன்னால் வைத்த ஒரு புத்தகத்தில் உள்ள படத்தில் 4 தம்பதிகளில்
4 ஆண்கள் இருக்கிறார்கள்; ஆனால் 3 பெண்கள்தான் இருக்கிறார்கள். இந்த
இன்ஃபர்மேஷன் டிபார்ட்மென்ட்டானது ஏன் இந்த அளவு செயலாற்றுகிறது
என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்தப்
புத்தகத்தைத் தருகிறேன். கலப்புத் திருமணம் 4 தம்பதிகளுக்கு நடத்தப்
பட்டிருக்கிறது. ஆனால் அதில் 2 ஆண்கள் இருக்கிறார்கள், 3 பெண்கள்
தானிருக்கிறார்கள். போடப்படாத இன்னொரு பெண்ணினுடைய கணவன்
அரசாங்கம்மீது வழக்கு தொடர்ந்தால், ரூ. 1 இலட்சம் டாமேஜஸ் வேண்டு
மென்று கேட்டால்கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அந்த அளவு இன்ஃபர்
மேஷன் துறை வேலை செய்தால், அதைக் கண்காணிக்க அரசு சரியான
நடவடிக்கையை எடுக்க வேண்டும். அமைச்சரவர்கள் நல்லது செய்ய வேண்டு
மென்று நினைத்தாலும், அந்த இலாகா, அவர் செய்பவைகளுக்குக் களங்கம்
கற்பிக்கின்ற முறையில் இருக்கிறது என்று கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

* திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத்
துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆத
ரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1967-க்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப்
பின்னாலே, தமிழகத்திலேயுள்ள அரிசன மக்களுக்கு எண்ணற்ற வசதிகளைச்
செய்து முடித்து, இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையிலே நம்பிக்கை
ஒளியை ஊட்டுகின்ற அளவிலே அரசு சேவை செய்து வருகின்றது என்பதைத்
தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் நன்றிப் பெருக்கோடு பாராட்டுத் தெரிவித்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு செய்யக்கூடிய ஒவ்வொரு காரியத்தையும்—
இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்த 1947-லிருந்து 1967 வரையிலே, 20 ஆண்டுக்
காலம் எண்ணற்ற தீர்மானங்கள் மூலமாகப், போராட்டங்கள் மூலமாக, பல
வற்றை எடுத்துத் தெரிவித்தும் ஒன்றும் நடைபெறவில்லை—ஆனால் இன்று அவர்
களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருப்பதையும் யாரும் மறக்க முடியாது.
வீட்டு மனைப் பட்டா, வீட்டு வசதி வாரியம் இவற்றையெல்லாம் சாதாரண
மானதாகச் சொல்ல முடியாது.

அது மட்டுமல்ல, நகர்ப்புறங்களிலே வசிக்கவே முடியாமலிருந்த தாழ்த்தப்
பட்ட மக்களுக்கு இன்றைய அரசு வழங்குகின்ற வட்டியில்லாக் கடன் மூலமாக,
தொழில்களை, கடைகளை நல்ல முறையிலே அவர்கள் நடத்திட, சமுதாயத்தோடு
இரண்டறக் கலந்து வாசம் செய்ய வாய்ப்பாக இருக்கிறது.





இன்றைக்கு அரிசன வீட்டு வசதி வாரியம் என்று எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவுக்கு இந்த அரசு செய்திருக்கிறது. அதனை எனக்கு முன்னாலே
பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எவரேனும் குறிப்பிடுவார்கள்
என்று எதிர்பார்த்தேன். எந்த மாநிலத்திலாவது வீட்டு மனைப் பட்டா
அல்லது அரிசனங்களுக்கு வட்டியில்லாக் கடன் அல்லது அவர்களுக்கென்று
வீட்டு வசதி வாரியம், கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப்
பதக்கம், கல்லூரியிலே இலவசப் படிப்பு, அவர்கள் தங்கிப் படிக்க விடுதிகள்
இப்படிப்பட்ட காரியங்களை இந்த அரசு செய்ததைப்போல், அகில இந்தியா
விலும் எந்த மாநிலத்திலாவது செய்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாகச்
செய்திருக்க மாட்டார்கள். இவ்வளவு காரியங்களைச் செய்து கொடுத்த
பின்னாலும்கூட, நாம் எந்த நோக்கத்தோடு ....

(முற்பகல் 10-30)

திரு. எஸ். வடிவேல்: அவைத் தலைவரவர்களே, நம்முடைய ஆளும்
கட்சியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் கடன் இந்த சர்க்கார்
கொடுக்கிற மாதிரி வேறு எந்த சர்க்காரும் கொடுக்கவில்லையென்று சொன்
னார்கள். உத்திரப் பிரதேச சர்க்காரிலே, அரிசனங்கள் பல நூறு ஆண்டுக்
காலம் கடன் பட்டிருந்தாலும், அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று
சொல்லியும், அப்படி அவர்களை மீறி வற்புறுத்தினால் அவர்களுக்கு தண்டனை
கொடுக்கப்படும் என்றும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம்: அவைத் தலைவரவர்களே, நான் சொன்னது,
தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வட்டியில்லாமல் கடன்
கொடுத்து இந்த சர்க்கார் உதவி செய்திருக்கிறது, வேறு எந்த அரசு இப்படி
உதவி செய்திருக்கிறது என்று கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.
நம்முடைய மரியாதைக்குரிய திரு. வடிவேலு அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள்
பெரும்பாலோர் லாபம் பெறும் அளவிற்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு பாக்கி
வைத்திருந்தாலும் அவர்கள் 1381 பசலி ஒரு வருடம் மட்டும் குத்தகை செலுத்
தினால் மீதியெல்லாம் செலுத்த வேண்டாமென்று நமது அரசு சட்டம்
போட்டது. இப்படிப்பட்ட வசதிகளை எந்த அரசாங்கம் செய்து கொடுத்திருக்
கிறது என்று கேட்டேனே தவிர, கடன் தள்ளி விடுவது என்பது எல்லா
மாநிலங்களிலும் உள்ள நிலையாக இருக்கலாம்.

இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்ததற்குப் பின்னால் இவைகளை எந்த
நோக்கத்திற்காகச் செய்தோமோ அந்த நோக்கம் நிறைவேறியதாவென்றால்
உள்ளபடியே ஜாதி ஒழிய வேண்டுமென்பதற்காக, தாழ்த்தப்பட்டவர்கள்

[திரு. ந. சோமசுந்தரம்] [1975 ஏப்ரல் 4

பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக செய்யப்பட்ட காரியங்கள் மனத் திருப்தி அளித்திருக்கிறதாவென்றால், இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டும். கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுக்கிறோம். இது மட்டும் அவர்களை வாழ வைக்குமா என்பதை இந்தத் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து கேட்டுக் கொண்டு வருகிறோம். கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு எண்ணற்ற வசதிகளைச் செய்து தர வேண்டும்.

ஊரில் ஒதுக்குப் புறமாக வாழ வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள். அவர்கள் குறைந்த கல்வி படித்திருந்தாலும், வேலை வாய்ப்பு அளியுங்கள். அவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுங்கள். இப்படி அவர்களுக்கு வாழ அத்தியாவசியமான பல தேவைகளைச் செய்தால் இந்த நாட்டில் இன்னும் ஆயிரக்கணக்கான கலப்புத் திருமணங்கள் நடைபெறுவதற்கு வழி வகை ஏற்படும். 1967-க்குப் பின்னாலேதான் அதிகமாக கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்த சர்க்கார் வந்த பிறகுதான் கலப்புத் திருமணங்களுக்குப் பாதுகாப்பு கிடைத்தது. ஆனாலும் 1967-க்கு முன்னால் கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கலப்புத் திருமணங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.

ஒரு காலத்தில் மாநாடு நடத்தி சமபந்தி போஜனம் என்று சாப்பாடு போடுவதாகச் சொல்லி அவர்களுக்கு மொட்டை அடித்து அனுப்பினார்கள். அப்படி பாதுகாப்பு இல்லாத நேரத்திலே, 1967-க்கு முன்னால் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கும் மேலே சொன்ன சலுகைகளை அளிப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால் இந்த கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுப்பது மட்டுமல்லாமல் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே அவர்களுக்கு சதவிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். 18 சதவிதம் வேலை வாய்ப்பு அரசாங்க வேலைகளில் அளிக்கப்படுகிறது.

இந்த நாட்டில் அரசு சார்புடைய வேலை வாய்ப்புகள் குறைந்தவை. ஆனால் தனியார் துறையில் எத்தனையோ ஆலைகள், மில்கள், பல நிறுவனங்கள், எவ்வளவோ கல்லூரிகள், பள்ளிகள் இப்படி எண்ணற்ற இடங்கள் இருக்கின்றன. அவைகளிலேயெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களை காவல்காரனுக்குக்கூட நியமிப்பது



1975 ஏப்ரல் 4] [திரு. ந. சோமசுந்தரம்]

கிடையாது. தனியார் கல்லூரிகள் தனிப்பட்டவர்கள் சொந்த முதலில் நடைபெறுவதில்லை. அரசாங்க மானியத்தில் நடைபெறுகின்றன. பல தனிப்பட்டோர் ஆலைகளுக்கு அரசாங்க மானியம், அல்லது கடன் கிடைக்கிறது. ஆனால் காவல் காப்பதற்குக்கூட தாழ்த்தப்பட்டவர்களை இந்த நிறுவனங்களுக்கு உரியவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

அரசாங்கத்தில் மட்டும் 18 சதவிதம் கொடுத்தால், ஒரு கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்க முடியுமா என்பதை தயவு செய்து அமைச்சரவர்கள் எண்ணிப்பார்த்து, வழிவகைகளைச் செய்ய வேண்டும். தனியார் துறைகளைப் பற்றிச் சொன்னேன்.

அரசு சார்புடைய துறையிலேகூட, இந்த நிலை இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தபோது போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதியை கொடுத்தார்கள். இது வரையிலே போக்குவரத்துத் துறையிலே 2½ சதவிதம்தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அரசாங்க இலாகாவான இந்த இலாகாவில் 18 சதவிதம் வரை நிரம்புகிற வரையில் இருக்கிற காலி இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுமென்று பொது மேடையில் வாக்குறுதி அளித்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் மிக நன்றிப் பெருக்கோடு, மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவர்கூட இந்த 1½ ஆண்டு காலத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிக்குப் பின்னாலே எங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணங்களாக எதை எதையோ சொல்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நம்பர் வரவில்லை, போர்டு அனுமதிக்கவில்லை என்று இப்படி பல காரணங்களைச் சொல்கிறார்கள். இப்படி எந்த சட்டம் இடையூறாக இருந்தாலும், குறுக்கீடாக இருந்தாலும், அரசு சார்புடைய போக்குவரத்துத் துறை, மாநகராட்சி, நகராட்சி அல்லது கூட்டுறவுத் துறை அல்லது மின்சாரத் துறை இப்படிப்பட்ட துறைகளிலேயாவது இந்த 18 சதவிதம் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டு, இதற்கு இன்று பதில் சொல்லும்போது தகுந்த பதிலைச் சொல்லி, எங்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி இங்கே கூட பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி விளம்பரம் அதிகமாக செய்யப்படுகிறதென்று சொன்னார்கள், அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, 1967-க்கு முன்னாலே பல இடங்களில் அரிசனங்களுக்காக வீடுகளை அவர்கள் கட்டினார்கள். அந்த இடங்களிலேயெல்லாம் அப்படி வீடுகள் கட்டினதற்கான அடிகூட

இப்போது கிடையாது. ஆனால் இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் சிமெண்டால் கட்டப்பட்ட வீடுகளாகும். முன்பு மண்ணால் கட்டினார்கள். இப்போது கட்டிய பல வீடுகளும் அடிமட்டத்தி லிருந்து சிமெண்ட் கான்கிரீட்டால் கட்டியிருக்கிறோம். இப்போது சிமெண்ட் கட்டுப்பாட்டினால் சுண்ணாம்பு வைத்து கட்டுகிறோம். அவர்களுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தருகிறோம். ஒரு தனி இனம்தான் மாடி வீடு கட்டிக் கொள்ள முடியும் என்று இருந்த நிலை மாறி, தாழ்த்தப்பட்டவர்களுக்குக்கூட மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 100 ஆண்டு காலத்திற்குப் பிறகு, திரு. ஜேம்ஸ் காலத்திற்குப் பிற்பாடுகூட அவைகளைப் பார்க்கக்கூடிய அளவிற்கு அந்தக் கட்டிடங்கள் நிச்சயமாக நிலையாக இருக்கும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எங்கே இருந்த கட்டிடங்களைப் பார்த்தாரோ தெரியவில்லை.

எங்களுக்கு இருக்கிற குறையெல்லாம் இது முறைபடுத்தப்படவில்லை. வீடு கட்டுகிற இடத்தைத் தேர்ந்தெடுப்பது யார்? அமைச்சரா, அல்லது இந்த வாரியத் தலைவரா? இந்த இலாகா நல இயக்குநரா? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரா, அல்லது இதற்காக போடப்பட்ட தனி அதிகாரியா? அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களா?

இதற்கென்று இருக்கிற வாரியம் வீடுகளை நினைத்த இடங்களில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசப்பட்டதைப்போல திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்கல்ல, எங்கள் தொகுதியில் இரண்டு இடங்களில் திறப்பு விழா செய்திருக்கிறோம். ஒரு இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேலு அவர்கள் கட்சியைச் சேர்ந்த கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களுக்கு கட்டிக் கொடுத் திருக்கிறோம். அம்மாபேட்டைக்கு அருகில் இன்றைக்கு காங்கிரஸ்கார அரிசனங்களுக்காக வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆக பாரபட்சமற்ற முறையில் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றும் எத்தனையோ வாரியங்களுக்கு தலைவர்களாக அரசு சார்பற்றவர்கள் இருக்கும்போது இந்த வாரியத்திற்கு மட்டும் ஏன் ஒரு அதிகாரியைத் தலைவராக போட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதை மறு பரிசிலனை செய்து, தாழ்த்தப்பட்டவர்கள் திறமையை இதில் சோதித்துப் பாருங்கள். ஒரு தாழ்த்தப்பட்டவனை இந்த வாரியத்தின் தலைவராக நியமித்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நான் என் கட்சியைச் சேர்ந்தவர் களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. நான் சொன்னது 15, 16 கிராமங்களை நான் எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிக் கொடுத்ததிலே ஒரு



இடத்திலேகூட வீடு கட்டிக் கொடுக்கவில்லை. நான் சொன்னதற்கு ஒரு இடத்தில் வீடு கட்டிக் கொடுத்தால் உபயோகமாக இருக்கும். என் கட்சிக் காரர்களுக்கு கட்டிக் கொடுக்கவில்லை, கழகக்காரர்களுக்கு கட்டிக் கொடுத் தார்கள் என்று நான் சொல்லவில்லை. யாருக்குக் கட்டிக் கொடுத்தாலும், தாழ்த்தப்பட்டவர்களுக்குத்தானே கட்டிக் கொடுக்கிறார்கள். ஆகவே, நான் ஆட்சேபிக்கவில்லை. நான் ஒரு தொகுதி எம்.எல்.ஏ. வாக இருக்கிறேன். நான் 15 இடங்களைச் சொன்னேனே, ஒரு இடத்திலேயாவது கட்டிக் கொடுக்கக் கூடாதா என்று கேட்டேன். இதைப் புரிந்து கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, அவர்கள் சொல்லும்போது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுப்ரவேலு அவர்கள் சொல்கிற இடங்களில் கட்டிக் கொடுக்கிறார்கள், அவர் தி.மு.க. வைச் சார்ந்தவர், ஆகவே தி.மு.க. காரர்களுக்கே கட்டிக் கொடுக்கப்படுகிறது என்ற தொனியிலே அவர் பேசுகிறார் என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு இல்லை. திரு. ஜேம்ஸ் அவர்கள்கூட கட்சிக் கண்ணோட்டத்தோடு காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்ன தற்காக இவைகளைக் குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரை, போலீஸ் இலாகாவிலே போலீஸ் காரனாக சேர்ந்தவன் போலீஸ்காரனாக செத்துக் கொண்டிருக்கிறான். அவர் களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டிய நேரத்தில், உயர் அதிகாரிகளுக்கு பண்ணை வேலை செய்தவர்களுக்குத்தான் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. பெரிய பணக்காரர்களுக்கு பண்ணை வேலை ஒருவன் செய்வது போல, அரசாங்கத் துறையில் மேல் அதிகாரிகளுக்குப் பண்ணை வேலை செய்பவர்களாக இருந்தால்தான் அவர்களுக்குத்தான் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. ஒருவன் நாணயமாக நடந்து கொண்டால் அவனுக்குப் பதவி உயர்வு அளிக்காமல் விட்டு விடுகிறார்கள். 18 சதவீதம் என்று நாம் சொல்கிறோம். ஆனால் ஆயிரம் இன்ஸ்பெக்டர்கள் இருந்தால் அதில் 10 பேர்கள்கூட தாழ்த்தப்பட்டவர்கள் கிடையாது. ஆயிரம் சப்-இன்ஸ்பெக்டர்கள் இருந்தால் அதில் 10 பேர்கள் கூட தாழ்த்தப்பட்டவர்களாக இல்லாத நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்கள் கண்காணித்து அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அற நிலையத் துறை பொறுத்தவரை, அரிசனங்கள் இல்லாத கோயில்களே இருக்கக் கூடாது என்று சட்டம் போட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வாரியத்தைப்பற்றிப் பேசுங்கள். திரு. வடிவேலு அவர்கள் பேசினவுடனே, வாரியத்தைப் பேசிவந்தவர் அதை அப்படியே முடித்து விட்டீர்களே.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, வாரியத்தைப் பொறுத்தவரையிலே சிறப்பான பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு வகைப் படுத்தி, எப்படி வீடுகள் கட்டுவது, எப்படி இடங்களை தேர்ந்தெடுப்பது என்பதற்கு முறையான அபிப்பிராயங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அற நிலையத் துறையைப் பொறுத்த வரையிலே இந்த மன்றத்திலே சட்டம் போட்டோம். அரிசனங்கள் இல்லாத ஆலயங்கள் இருக்கக் கூடாதென்று சட்டம் போட்டோம். ஏற்படுத்தியிருக்கக் கூடிய அத்தனை வாரியங்களுக்கும் அரசுச் சார்பு இல்லாதவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அரிசன வாரியத்திற்கு மட்டும் ஒரு அதிகாரியைத் தலைவராகப் போட்டிருப்பது அரிசன மக்களை கேவலப்படுத்துவது மாதிரியாக இருக்கிறது என்பதை மனதிலேகொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்கும் தனி நபர் ஒருவரை, அதிகாரச் சார்பு இல்லாதவரை, அரசுச் சார்பு இல்லாதவரைத் தலைவராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் சட்டம் போட்டுக்கூட பல இடங்களிலே அரிசனங்கள் அல்லாதவர்கள்தான் காவலர்களாக நியமிக்கப் பட்டு நியமன உத்திரவுகள் சென்று கொண்டிருக்கின்றன. இதே மன்றத்திலே ஒரு முறையை எடுத்துச் சொல்லியும்கூட இந்த அதிகாரிகள் அப்படிச் செய்யாமல் அவர்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதை மாற்றக்கூடிய முறையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போலீஸ் துறையில் பதவி உயர்வு அவர்கள் பெறுவதற்கு ஏற்ற முறையில் நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர் தாழை மு. கருணாநிதி அவர்கள் பேசுகின்றபோது தெரிவித்த கருத்துக்கு அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் குறுக்கிட்டு அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை என்று கூறினார்கள். அண்ணாயிஸம் என்று அவர்களுடைய கொள்கையை அறிவித்த நேரத்திலேயே ஒரு ஜாதியினருக்கே ஏராளமான தனிச் சலுகைகளைக் கொடுத்துக்கொண்டே போனால் அந்த ஜாதி மலைபோல் மேலேபோய் உயர்ந்த ஜாதியாக இருக்கக் கூடிய ஜாதி கீழே போய்விடுமானால் பிறகு அதைத் தடுக்கக்கூடிய முறையிலே திட்டம் கொண்டு வரவேண்டியிருக்குமே என்று சொன்னார்கள் . . . .

**திரு. குழ. செல்லையா :** அண்ணாயிஸம் கொள்கையில் அரிசன மக்களுக்குத் தனிச் சலுகைகள் வேண்டாமென்று சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாக





அவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். அரிசன மக்களுக்கு தனிச் கவனம் செலுத்தி அவர்களுக்கு மேலும் மேலும் தனிச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலேதான் எங்கள் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர், புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவிலே ஒரு பேட்டியிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம், நீங்கள் உங்கள் பிரச்னையைப் பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** அதிலே என்ன சொல்லியிருக்கிறார் என்று திரு. செல்லையா சொல்லவேண்டும்.

**திரு. குழ. செல்லையா :** நானும் படித்திருக்கிறேன், அவர்களும் அதைப் படித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம். சோமசுந்தரம் பேசட்டும்.

**திரு. ந. சோமசுந்தரம் :** அமெரிக்காவிலே சொன்னதைப்பற்றி இல்லை, தமிழகத்திலே அரிசனங்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்துக்கொண்டே போனால் அவர்கள் உயர்ந்த நிலைக்குப் போய்விடுவார்கள், இப்போது உயர்ந்த ஜாதியாக இருக்கிறவர்கள் கீழே போய்விடுவார்கள், அவர்களை உயர்த்துவதற்கு பிறகு திட்டம் போட வேண்டுமே என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள், பல பத்திரிகைகளிலே எல்லாம்கூட வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குழ. செல்லையா :** எந்தப் பத்திரிக்கை என்று சொல்லுங்கள்.

**திரு. ந. சோமசுந்தரம் :** இந்து அரிசனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் மற்ற அரிசனங்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்குச் சொல்லியும்கூட அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த ஆண்டே இங்கே ஒரு தீர்மானம் போட்டு அகில இந்தியாவிற்கும் நம்முடைய மாநிலம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய முறையிலே இந்து அரிசனங்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் மற்றவர்களுக்கும் அளிக்கப்படக்கூடிய முறையிலே ஏற்பாடுகள், வழிவகைகள் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் யாவும் சரியாக இந்த நாட்டிலே அமல் நடத்தப்படுவதில்லை. பல கமிட்டிகள் இருக்கின்றன, எஸ்டிமேட்ஸ் கமிட்டி, அஷ்யூரன்ஸ் கமிட்டி என்றெல்லாம் இருப்பதைப்போல்

இதற்கும் ஒரு கமிட்டியைப் போடவேண்டும். அப்படி நிறுவி பல இடங்களிலே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் கொடுக்கப்படவில்லை; அவற்றைக் கண்காணிப்பதற்கு ஏற்ற வழிவகைகளைக் காணவேண்டும்.

வீட்டுவசதி வாரியத்திலேகூட அரிசனங்களுக்கு அதிகமான பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. நான் அறிந்தவரை பிராமணர்களுக்கும் மலையாளிகளுக்கும்தான் அதிகமாக வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது, இவர்களுக்கு இடம் இல்லை. ஆகவே, ஒரு கமிட்டியை நிறுவி அந்தக் காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக இந்தத் துறையைப்பற்றிச் சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அதிகமான சலுகைகள், வாய்ப்புகள், சிறப்புகளைக் கொடுக்கக் கூடிய முறையிலே உலகத்திலே வழிகாட்டியாக இருக்கக் கூடிய முறையிலே அவர்கள் தலைநிமிர்ந்து செல்லக் கூடிய முறையிலே ஒரு நிலையைப் பெற வேண்டுமானால் இந்த இலாகாவை—இந்த சமுதாயத்தை காலமெல்லாம் மனதிலேகொண்டு எண்ணற்ற நல்ல காரியங்கள் அவர்களுக்கு செய்து வருகின்ற நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே வாழ்கிற, தாழ்த்தப்பட்ட மக்களின் சம்பந்தியாக இருக்கிற—டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்று, இந்தத் துறையை நிர்வகிக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு வேறு ஒரு சிறப்பான துறையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுரேந்திரன்:** துணைச் சபாநாயகர் அவர்களே, இங்கே அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சபையிலே பேசிய பலபேர்கள் இந்த அரிசன சம்பந்தமான பழைய காலச் சரித்திரத்தைத் திரித்துக் கூறுவதுபோல் சில பிரச்னைகளை இங்கே கூறினார்கள் சரித்திரத்தைத் திரித்து திரிபுவாதம் பேச வேண்டிய அவசியம் ஆளுங் கட்சிக்கோ அல்லது இந்தச் சபைக்கோ இல்லை என்று நினைக்கிறேன். சரித்திரத்தைத் திரித்துக் கூறினாலும் சரித்திரம் சரித்திரமாகவே இருக்கிறது. சமுதாயத்திலே ஏற்பட்ட எழுச்சியிலே சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னாலே ஏற்பட்ட எழுச்சியின் விளைவுதான் அரிசனங்களையும் மிகப் பொறுப்புடன் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய அமைப்பாக செயல்படுகிறதே தவிர மத்தியிலே யாரும் எடுத்துச் செய்தார்கள் என்ற வாதம் பொருத்தமல்ல.

அரிசனங்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவர்களுக்கு விசேஷமான சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற கருத்து சுதந்திரப் போராட்ட காலத்திலேயே தோன்றிய ஒன்றாகும். இதற்காக மகாத்மா காந்தியடிகள் அவர்களை அரிஜனம் என்று அழைத்தார். அவர்கள் தேவர்களுடைய குழந்தைகள்,



தெய்வக் குழந்தைகள் என்று சொல்ல வேண்டுமென்ற கருத்திலேதான் அப்படிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியதே அவர்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகள், துன்பங்கள், கஷ்டங்கள், அடிமைத்தனங்கள் இவற்றை மாற்றியமைக்க இந்த தேசத்திலே இருக்கக் கூடிய மற்றப் பிரிவினரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் செய்ய மாட்டார்கள், தெய்வம்தான் செய்ய வேண்டுமென்ற அளவிற்குப் பரிதாபமான நிலையில் இருந்தார்கள் என்ற கருத்திலேதான் சொன்னார்கள். தெய்வம்தான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னால் சாதாரண மனிதர்களைவிட தெய்வாம்சம் பொருந்தியவர்கள் அந்தப் பணியைச் செய்தால்தான் அவர்கள் முன்னேற முடியுமே தவிர இல்லாவிட்டால் முடியாது என்ற கருத்திலேதான் அப்படிச் சொன்னார்கள்.

அந்தக் கருத்தை, மகாத்மா காந்தி போன்றவர்கள் எல்லாம் அந்தப் பணியை எடுத்து இந்த தேசத்திலே செய்திருக்கிறார்கள், அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிற நோக்கிலே நம்முடைய இந்து மதத்திலே வெஜிடேரியன் தெய்வம் என்றும் நான்-வெஜிடேரியன் தெய்வம் என்றும் இருக்கின்றன. வெஜிடேரியன் முறையில் ஒரு வகையினரும் நான்-வெஜிடேரியன் முறையிலே ஒரு வகையினரும் இந்தப் பணியை எடுத்துச் செய்தால் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்னால் அரசியல் சட்டத்திலே அவர்களுக்கு என்று தனிச் சலுகைகள் அப்போதே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்ற முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ததன் காரணமாகத்தான் இவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றனவே தவிர வேறு காரணமல்ல. இப்படி நான் கூறுவதற்குக் காரணம் நம்முடைய மாநிலத்திலே எடுத்துக்கொண்டால் ஜாதி அமைப்புகள் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கிறிஸ்தவ சமுதாயத்தை ஆராய்ந்து பார்த்தால் தெரியும். கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்திருக்கிற இந்துக்கள் பல பேர்கள் கிறிஸ்தவ சமுதாயத்திலே உள்ள மத ஆசாரங்களைக் கையாள்கிறார்களே தவிர கிறித்துவ மதத்திலே சேர்ந்ததற்குப் பின்னால் இந்து மதத்திலே அவர்கள் இருக்கிறபோது எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்களோ அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் கொள்வினை கொடுப்பினை செய்வது எல்லாம் அவர்களுக்குள்ளேயேதான். ஒரு கவுண்டர் கிறித்துவ மதத்திற்குச் சென்றிருந்தாலும் அங்கே சென்ற பிறகும் கூட அந்த கவுண்டருக்குள்ளேயேதான் கொள்வினை கொடுப்பினை எல்லாம் இருக்கிறது. அதைப்போலவேதான் முதலியார் சென்றாலும், நாயுடு சென்றாலும் வேறு எந்தப் பகுதியினர் சென்றாலும் அப்படித்தான். கிறித்துவ சமுதாயத்

அந்த ஊருக்கு ஒரு பாதை போட வேண்டுமென்று 1967-ஆம் ஆண்டிலே யிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இதுவரையிலேயும் அந்தப் பழங்குடி மக்களுக்கு ஒரு பாதை போட இந்த அரசு முன்வரவில்லை என்றால் நாங்கள் அவர்களை முன்னேற்றுகிறோம் முன்னேற்றுகிறோம் என்று சொல்லும் வாதம். . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு, மூன்று நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இன்னும் கொஞ்சம் அதிக நேரம் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிற்பகல் 4 மணிக்கு வேறு செஷன் இருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஆக, அம்பாநிரி பழங்குடி மக்கள் முன்னேற வில்லை. ஆகவே, கீழே இருக்கின்ற மக்களை முன்னேற்றுவது என்றால், முன்னேறிய மக்களை மீண்டும் முன்னேற்றுவதுதான் என்று கருதிக்கொண் டிருக்கிறீர்கள். வீடு கட்டுவதைப்பற்றி ஏற்கனவே சட்டசபையிலே சொல்லி யிருக்கிறேன். எந்தெந்த இடத்தில் தவிர்க்க முடியாத நிலையில் மிகவும் சங்கடப்படுகிறார்களோ அதை சர்வே எடுத்து அந்த இடங்களிலே கட்டாயம் முன்னுரிமை கொடுத்து வீடு கட்டுவதற்கான வழிமுறைகளை வகுப்பதுதான் சரியானது என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறினேன். ஆனால் அப்படிச் செய்ய வில்லை. எங்கே நிலம் வைத்திருக்கிறார்களோ, எங்கே அவர்கள் முன் வரு கிறார்களோ அங்கே வீடு கட்டித் தருகிறோம் என்று கூறுகிறீர்களே தவிர உண்மையிலே முன்னேற்றுவதை எங்கிருந்து துவங்குவது, எப்படி முடிவு செய்வது, எந்தெந்த முறைகளிலே செய்வது என்ற தெளிவான கண்ணோட்டம் இருக்கிறதா என்று கேட்டால் கட்டாயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அரிசனங்களில் கலப்புத் திருமணத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால், கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு பரிசுகள் தருவதாகச் சொல் கிறீர்கள். ஒரு கலப்புத் திருமணத்திலே பி.ஏ. படித்துவிட்ட ஒருவர், உயர்ந்த ஜாதிக்காரர், ஒரு அரிசனப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். அப்படிச் செய்து கொண்ட அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அந்த அரிசனப் பெண்ணுக்கும் வேலை கிடைக்கவில்லை. அந்த அரிசனப் பெண் நர்சாக டிரெயினிங் முடித்து அவளுக்கும் வேலை கிடைக்கவில்லை. ஆகவே, கலப்புத் திருமணம் செய்து கொண்ட அவர்கள் இரண்டு குடும்பத் தாராலும் நீக்கப்பட்டு துன்பத்திற்குள்ளாகி கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரி நிலைமைகள் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பட்டது)





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. முத்துவேல் அவர்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இன்னும் ஓரிரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 10 பேர் பேச வேண்டும். மணி 11 ஆகப் போகிறது. மாலை லேபர் மானியத்தின் மீது பேசுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** இன்னும் ஒரேயொரு பாயிண்டை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

பொருளாதாரத்திலே முன்னேறுவதற்கு நீங்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரக் கணக்குகளைப் பார்க்கும்பொழுது இந்தப் பொருளாதாரத்திலே பங்கேற்றுக் கொண்டவர்கள் 1973-74-ஆம் ஆண்டில் 1,546 பேர்கள் 10.02 என்றும் 1974-75-ஆம் ஆண்டில் 1,313 பேர்கள், 9.32 என்றும் பொருளாதார முன்னேற்றத்தின் கணக்கு இருக்கிறது. அதேபோல் சிறு தொழில்களைப் பற்றி எடுத்துக்கொண்டாலும் அதேபோன்ற முன்னேற்றம்தான் இருக்கிறது. இப்படி முன்னேற்றம் என்று சொல்வதற்கு, படிப்படியாக முன்னேறும் நிலையிலே உங்கள் புள்ளிவிவரம் இல்லை, அதிலே தெளிவான கண்ணோட்டம் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையிலே தெளிவான கண்ணோட்டத்தோடு சமுதாயத்தில் முன்னேறியவர்கள் போக, அருந்ததியர்கள் போன்றவர்கள், பழங்குடி மக்கள் போன்றவர்கள் மிகவும் கீழ்நிலையிலே இருக்கிறார்கள், அவர்களை முன்னேற்றுவதற்கு ஒரு விசேஷத் திட்டம் போட்டு நிறைவேற்ற வேண்டும். அமைச்சரவர்கள் அதைக் கட்டாயம் செய்வார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. ந. முத்துவேல்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1975-76 ஆம் ஆண்டுக்கான அரிசன மக்கள், பழங்குடி மக்களுக்காக ஒதுக்கிய 10,89,58,000 ரூபாய்க்கான மானியத்தை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் இந்தப் பணத்தில் கல்விக்காக மட்டும் 6,81,17,000 ரூபாய் செலவு செய்யப்படுகிறது. மீதியில் 1 கோடி ரூபாய் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகச் செலவு செய்யப்படுகிறது என்று அறிகிறோம். இருந்தாலும் மீதியுள்ள 3 கோடி ரூபாயைக் கொண்டு மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செலவு செய்ய

[திரு. எம். சுரேந்திரன்] [1975 எப்ரல் 4

திலே உள்ள அரிசனங்களும் அம்மாதிரித்தான் இருக்கிறார்கள். அவர்களும்
கொள்ளினை கொடுப்பினை செய்வது எல்லாம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த
வர்களுக்குள்ளேதான்.

இதைப் பார்க்கிறபோது இந்து மதத்திற்குள்ளே ஜாதி எந்த அளவிற்கு
ஆழமாகப் பதிந்து இருக்கிறது, வேரூன்றி இருக்கிறது, வேறு மதத்திற்குச்
சென்றாலும் இந்த ஆணிவேரைப் பிடுங்கி எறிய முடியாது என்ற நிலைமையிலே
இந்து மதம் இருக்கிற காரணத்தினால் மகாத்மா காந்தியடிகள் அவர்களை
தெய்வக் குழந்தைகள் என்றும் தெய்வம்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்
என்ற கருத்திலே சொன்னார்கள். இன்றைக்கு நாம் செய்திருக்கிற, தி.மு.க.
அரசு செய்திருக்கிற காரியங்களை இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆகவே, இந்த மாநிலத்திலேதான் இந்த அரிசனங்களுக்கும், பழங்குடி
மக்களுக்கும் நாம் அதிகமாகச் செய்திருக்கிறோம் என்று பெருமைப்படும் ஒரு
நிலையை நீங்கள் எடுத்துக் கொள்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

ஆனால், நீங்கள் சொல்கிறீர்கள், கல்வியிலே, பொருளாதாரத்திலே,
சமுதாயத்திலே, வேலைவாய்ப்பிலே, இன்னும் பல்வேறுவிதமான இனங்களிலே
யும் சொல்லியிருக்கிறீர்கள். கல்வியைப் பற்றிக் கொடுத்திருப்பதை நான்
பார்த்தேன். அந்தப் புள்ளிவிவரக் கணக்கைப் பார்க்கும்பொழுது எனக்கு
என்ன தெரிகிறது என்றால் அரிசனக் கல்வியிலே 1973-74-ஆம் ஆண்டின் புள்ளி
விவரம் என்ன சொல்கிறது என்றால் 99.68 என்று சொல்கிறது. 1974-75-ஆம்
ஆண்டைப்பற்றி என்ன சொல்கிறது என்றால் 91.64 என்று சொல்கிறது.
ஆகவே, இது முன்னேற்றமா அல்லது பின்னேற்றமா? எண்ணிக்கையிலே
அதிகம் இருந்தால்தான் முன்னேற்றம் என்று நான் கருதி இருக்கிறேன்.
குறைவாகப் போனால் பின்னேற்றம் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே
எல்லாம் முன்னேறியிருக்கிறது, முன்னேறியிருக்கிறது என்று சொல்லும்
பொழுது புள்ளிவிவரங்களைப் பார்த்தால் பின்னேறியிருக்கிறது என்பதைத்
தான் காட்டுகிறது.

அதேபோன்று பழங்குடியினரைப் பற்றி எடுத்துக்கொண்டாலும், பழங்
குடி மக்களின் கல்வி எப்படியிருக்கிறது என்று பார்க்கும்பொழுது 1973-74-
ஆம் ஆண்டிலே 0.23 என்று இருக்கிறது, 1974-75-ஆம் ஆண்டிலே 0.21 என்று
இருக்கிறது. இது முன்னேற்றமா பின்னேற்றமா என்று எனக்குப் புரிய
வில்லை. உங்களுடைய முன்னேற்றங்களை எந்த அளவுகோலை வைத்துக்
கொண்டு முன்னேற்றம் என்று சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.
ஆகவே, முன்னேற்றம் என்பதற்கான அளவுகோலைச் சரியாகக் கணக்கிட
வில்லை, அப்படிக் கணக்கிடுவதற்கான எண்ணம் உங்களுக்கில்லை என்றுதான்



1975 எப்ரல் 4] [திரு. எம். சுரேந்திரன்]

தெரிகிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள், வீடு கட்டிக் கொடுக்கும்பொழுது
பிரச்சாரத்திற்காகக் கட்டுவதாகக் கூறினார்கள். அப்படியில்லையென்றால்
அவர்களுக்கானச் செய்யும்பொழுது மற்ற சமுதாயத்தினரோடு மேம்படும்
அளவிற்கு முன்னேற்ற வேண்டுமென்ற கருத்தாழம் இருக்க வேண்டும்,
அதற்கான பரிவு இருக்க வேண்டும், தயவு இருக்க வேண்டும். அரிசனங்களில்
முக்கியமானவர்கள் யார் என்று பார்த்தால் பல பிரிவுகள் இருக்கின்றன. அந்
தப் பிரிவுகளுக்கும் மிகக் கீழே உள்ள பிரிவினரை முன்னேற்ற நீங்கள் என்ன
செய்திருக்கிறீர்கள்? கீழே உள்ள பிரிவு யார் என்று பார்த்தால் உங்களுக்குத்
தெரியும், அவர்கள்தான் அருந்ததியர் என்று சொல்லப்படும், குறிப்பாக சக்கி
லியர் என்று சொல்லப்படும் அந்த அருந்ததியர்கள் இன்றைக்கு எவ்வளவு
தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்று கணக்கிட வேண்டும். அரிசனங்களை
முன்னேற்றி விட்டோம், முன்னேற்றி விட்டோம் என்று சொன்னால் மட்டும்
போதாது. அரிசனங்களிலேயும் மிகவும் தாழ்த்தப்பட்ட பிரிவிலே இருப்
பவர்களையும் சேர்த்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்தால்தான் முன்
னேற்றியதாகப் பொருளே தவிர அப்படியில்லை என்றால் முன்னேற்றியதாகப்
பொருள் இல்லை.

பழங்குடி மக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் அரிசனங்களைவிட
பின்னால், கடையிலே இருக்கிறார்கள். அவர்களது முன்னேற்றம் எப்படி
இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவர்களுக்காக 15 மாணவர்
இல்லங்கள் கட்டியிருக்கிறார்கள் மொத்தம் இருப்பவர்கள் 660 பேர்.
இவ்வளவுதான் அவர்களுக்காகக் கட்டியிருக்கிறோம். மாணவர் இல்லங்களைப்
பொறுத்தவரையில், மிகப் பின்தங்கியவர்களை முன்னேறுவதை மிகப்
பிரதானமாக முதல் வேலையாக எடுக்கவில்லை. என்னுடைய தொகுதியிலே
பாலமலை என்ற பகுதியில் ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. தனியாக மாண
வர்கள் கல்வி கற்று, தங்கிப் படிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டு
மென்று வெகு காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது இன்னும்
செய்யப்படவில்லை.

வறட்சி நிவாரணம் எல்லாயிடத்திலும் நடக்கிறது. ஆனால் அந்தப் பகுதி
யிலே கிணறுகளை வெட்ட காண்டிராக்டர்கள் வரமாட்டேன் என்கிறார்கள்.
அங்கேயிருப்பவர்களும் அதை எடுத்துச் செய்ய முடியவில்லை. அங்கே
வறட்சிப் பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும். அங்கே குடிதண்ணீர்
இல்லாமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு நடவடிக்கை
எடுக்கப்படவில்லை. கிணறுகள் வற்றிப்போயிருக்கின்றன. அங்கே அம்
மாதிரி வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை.

இயலாது என்ற நிலைமைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாதை வசதிகளைச் செய்யவும், குடிநீர் வசதிகளைச் செய்யவும், வீட்டுமனை கட்டிக் கொடுக்கவும் போதிய பணமாக இந்த 3 கோடி ரூபாய் போதவில்லை என்பதால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த வாரியத்திற்கு மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, கிராமங்களின் பகுதிகளிலேயும், நகரங்களின் பகுதிகளிலேயும் அரிசன முன்னேற்றம் என்று நாம் பேசிக்கொண்டிருந்தாலும், நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களால் திட்டப்பட்டிருந்தாலும் சட்டங்கள் பல சரிவரச் செயல்பட முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், அரிசனங் களுக்கு 18 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களிலேயும், போக்குவரத்துத் துறைகளிலேயும், இன்னும் பல அரசாங்க அலுவலகங்களிலேயும் அது சரிவரச் செயல்பட முடியவில்லை என் பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய திண்டிவனம் பகுதியில் 4 ஊராட்சி ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஜூனியர் அசிஸ்டெண்டாகக் கூட இருக்க முடிய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதேபோல் போக்குவரத்துத் துறையிலேயும் எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமசுந்தரம் அவர்கள் கூறியதைப்போல 2½ சதவிகிதம் அரிசனங்கள்தான வேலை செய்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன்.

அதேநேரத்தில் இந்த மக்கள் தொகை பெருக்கமுள்ள இந்த நேரத்தில், அரிசன மக்களுக்காக இந்த நேரத்தில் எப்படித் தனித் தொகுதி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் தமிழ்நாடு சர்க்கார் பெரிதும் மனம் வைத்து, ஒன்றியங்களிலும் தனித் தொகுதியிலிருந்து ஒரு அரிசன் பெருந் தலைவராக வருவதற்கான வாய்ப்பை உண்டாக்கும் முறையில் தனித் தொகுதி நிறுவித் தரும்படி நான் தமிழ்நாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அடுத்தபடியாக, பல நியமனங்களைச் செய்கிற நேரத்தில் தாழ்த்தப்பட்ட மகன்—இயக்குநராக இருக்கிறார்கள்—பாங்குகளிலோ, வாரியத்திலோ தலைவர் களாக வரமுடியவில்லை. இனிமேலாவது வாரியங்களில் அரிசனங்கள் தலைவராக வர வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அரிசனங்களுக்காக பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் அரிசன மக்களை சுகாதார வசதியோடு வாழ வேண்டுமென்று நல்ல பணிகளைச் செய்து வருகிறார்கள். பழைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது காங்கிரஸ்காரர்கள் தொகுதியில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். திண்டிவனம் வட்டத்தில் பழைய காங்கிரஸ் சார்ந்த ஊர்களில் குறூர், கொல்லிருளை, மங்கலம் ஆகிய மூன்று ஊர்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த ஊர்களில் இந்தமாதிரி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் யாரால் இந்த ஊர்கள் தேர்ந்தெடுக் கப்படுகின்றன என்பதும் புரியவில்லை. சட்டசபை உறுப்பினர்கள் கொடுக்கும் லிஸ்டில் வருகிறதா, கலெக்டர் லிஸ்ட்படி வருகிறதா அல்லது அமைச்சர் லிஸ்ட்படி வருகிறதா என்று தெரியவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் பல கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. சில வட்டங் களில் இரண்டு மூன்று கிராமங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தனியாக பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ரூரல் ஹவுசிங் ஸ்கீம் Rural Hous'ng Scheme என்று இருந்தது. மூவாயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டு அரிசனங்கள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இனமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படு வதால் ஏற்கனவே வீடுகள் கட்டியவர்கள் 3,000 ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இனிமேலாவது அப்படிக் கட்டுகிற வீட்டை புதிய திட்டத்தின்கீழ் வாரியம் கட்டிக் கொடுப்பதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழைய ரேட்டில் கட்டப்படுகிற வீடுகள் பூர்த்தியாகாமல் இருக்கின்றன. ஃபைனல் பில் ((Final bill) ஆகாமல் இருக்கிறது. இன்று விலைவாசி ஏற்றத்தின் காரணமாக குறிப்பிட்ட தொகையில் கட்ட முடியவில்லை. இன்றைய ரேட்டில் ஃபைனல் பில் முடிவு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு சிறு தொழில்களுக்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன் நகர்ப்புறங்களில 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று கொடுக்கப் படுகிறது. அதை நிறுத்திவிட்டால் கூட நல்லது. அதனால் அரிசன மக்கள் பெரும்பலன் பெறுவதில்லை. அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கு ஒரு லட்சம் ரூபாயாவது சிறு தொழில் கடன் கொடுக்க வேண்டும். பெரு நகரங்களில் ஒரு லட்சம் ரூபாய் கடனைப் பெற்று ஒருவராவது முன்னுக்கு வந்தால் அவர்களிடம் மற்றவர்கள் வேலை செய்து முன்னுக்கு வர முடியும். சிறு தொழில் கடனைப் போல் மற்றப் பொறுப்புகளும் அரிசனங்

களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வாழ்க்கை வசதிகளைப் பெருக்க வேண்டிய கடன் தொகைகளை சொந்த அடமானம் முறையில் கொடுக்க வேண்டும். அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளோ அரிசன நல இலாகாவின் மூலம் நடைபெறும் வேலைகளோ அரிசனங்கள் நல்ல முறையில் பலன் பெறும் வகையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் ஹாஸ்டல்கள் (Hostel) சில இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்கள் விடப்பட்டிருக்கின்றன. மரக்காணம், புதுக்குப்பம் உயர்நிலைப்பள்ளி இருக்கும் பகுதிகள். அங்கு ஹாஸ்டல் கட்டவேண்டும்.

மதிய உணவுத் திட்டம் ஏற்கனவே இருந்தது மாற்றப்பட்டு புதிய திட்டம் வந்தும் சரிவர இயங்கவில்லை. இந்தத் திட்டத்தின் முழுப்பயன் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாணவர்களுக்கான சலுகைகள் கிடைப்ப இருந்தும் அது ஒழுங்காக அரிசன மாணவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்க அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தவேண்டும். என்னுடைய தொகுதியில் உப்புவேலூர், காரட்டை, அருவிடை, நல்லாளூர், எந்தூர், பிரம்மதேசம் ஆகிய பகுதிகளில் மனைகள் ஒதுக்கப்பட்டும் மனைப் பட்டா வழங்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அரிசனநல அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் வளம் காணவேண்டுமென்று காந்தியாரும், டாக்டர் அம்பேத்காரும் கனவு கண்டார்கள். அவர்கள் கண்ட கனவு இன்றைக்கு நினைவாகின்ற வகையில் தமிழகத்தில் பெரியாரும், பெரியாருக்குப் பின்னால் அண்ணாவும், அண்ணாவுக்குப் பின்னால் இன்றைய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞரும் அந்த மக்களுடைய நல்வாழ்விலே நாட்டம் கொண்டு செயலாற்றி வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. அவர்கள் கண்ட கனவு அகில இந்திய ரீதியிலே நடைபெறுகிறதோ என்னவோ; ஆனால் தமிழ் நாட்டில் எப்படி ஒளிமயமாகப் பிரகாசிக்கிறது என்று நல்ல உள்ளம் கொண்டவர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.



தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்க்கையில் வளம் காண பல திட்டங்களை நம்முடைய அரசு செய்து கொண்டு வருகிறது. இனியும் செய்யும் என்ற நம்பிக்கை அந்த மக்களிடத்தில் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் ஆரம்ப காலத்திலே நசுக்கப்பட்டார்கள். நசுக்கப்பட்ட காரணத்தால் அவர்களுக்கு வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழியே இல்லை என்ற நிலை மாறி இன்றையதினம் சலுகை என்ற பெயராலே அவர்களுக்கு வழங்கப்படுகிற முக்கியத்துவம் அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் படிக்கட்டுகளாக அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய அறிகுறியாகத்தான் வாழ்க்கையில் நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் நிலம் இல்லாத ஏழைகளுக்கெல்லாம், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் இந்த அரசு நிலம் வழங்குகிறது என்பதையும், அதே நேரத்திலே நிலம் இருந்தால் மட்டும் போதாது, அவர்கள் சொந்த வீட்டுக்காரர்களாக மாற வேண்டுமென்று சொல்லும் அளவுக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கும் இடங்கள் எல்லாம் அழகான நகரமாக மாறி வருகிற உன்னதமான காட்சியை முதல்வர் கலைஞர் அவர்கள் செய்து வருகிறார்கள். உள்ளபடியே டாக்டர் அம்பேத்காரும், காந்தியாரும் இன்றைக்கு இருந்திருப்பார்களேயானால் அவர் இந்திய நாட்டினுடைய பெரும் தலைவராக வரக்கூடிய வாய்ப்பாக இருந்திருக்கும். காந்தியார் வாரிசாக, அம்பேத்கார் வாரிசாக தமிழக முதல்வரைத்தான் சொல்லுவார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிச் சலுகைகளை வழங்குகின்ற நேரத்தில் எல்லாம் இன்று ஆட்சி நடத்தும் முதல்வர் அவர்கள் துணிந்து பல காரியங்களைச் செய்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சலுகை என்ற பெயரிலே பல புரட்சிகளைச் செய்கிறார்கள். இப்படிச் செய்கிற புரட்சிகளைத் தாங்கிக் கொள்ள இதயம் இல்லாதவர்கள் இன்றையதினம் எப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வரலாம், ஆனால் அர்ச்சகனாக வரமுடியாது என்ற தத்துவத்தை உணர்ந்த காரணத்தால் தமிழக அரசு அரிசனங்கள் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற சட்டத்தை அங்கீகரித்து நம்முடைய மன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றினோம். ஆனால் உயர்நீதிமன்றத்தில் அது ஊசலாடி அழிந்து போய்

விட்டது என்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, அதற்கு மத்திய சர்க்கார்தான் உயிர் கொடுக்க வேண்டும். உயிர் கொடுக்கும் சக்தியாக, கடவுளாக மத்திய சர்க்கார்தான் இருக்கிறது என்ற காரணத்தால் தமிழக அரசு கோரிக்கையாக விட்டது.

ஆனால், மத்தியில் இருப்பவர்கள் ஏனோ தெரியவில்லை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் பிரச்சினைகளை அலட்சியம் செய்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர்கள் பாரபட்சம் காட்டுகிறார்கள். இன்றையதினம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் அர்ச்ச கர்கள் ஆகலாம் என்பதற்கான சட்ட அங்கீகாரத்தை, சட்டத் திருத்தத்தை மத்திய சர்க்கார் இதுவரையில் செய்யாதது தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மத்திய சர்க்கார் இழைக்கும் பெரும் துரோகம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் அப்படிப்பட்ட புரட்சி கரமான காரியங்களைச் செய்து வருகிற இந்த அரசைச் சாடுகிற முறையில் சிலர் இறங்கியிருக்கிறார்கள். துணிந்து பல சலுகைகள் இந்த அரசின் மூலம் செய்யப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சலுகைகள் மூலம் ஆதாயம் பெற்று எங்கே மேலே ஏறி உட்கார்ந்துவிடுவார்களோ என்கிற அச்சம் காரணமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிலும் குறிப் பாக அவர்கள் தலைவராக இருக்கக்கூடிய திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மக்களைப் பழிவாங்குகிற படலத்தில் ஈடுபட்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் செல்கிற இடங்களில் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய் தாலும்சரி அல்லது உள்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தாலும் நான் ஆட்சிக்கு வருவேனேயானால் தகுதி அடிப்படையில்தான், திறமையின் அடிப்படையில் நான் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும், சலுகைகள் தரப்படும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. பூ. எட்டியப்பன் :** இன்று நடக்கிற மானியத்தைப் புறக்கணிக்க வேண்டி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட இன்று இந்த மன்றத்தில் இல்லை. அதற்கு விளக்கம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சி என்றால் இருந்துதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்களை நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.



**திரு. செ. கந்தப்பன் :** தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அனுதாபம் காட்டக் கூடியவகையில் இருக்கக்கூடாதா என்ற முறையில்தான் இந்தக் கேள்வி எழு கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு நான் விளக்கம் கொடுக்க முடியாது.

**திரு. வை. பாலசுந்தரம் :** எந்த அளவிற்கு அந்த மக்கள்மீது அவர்களுக்கு அனுதாபம் இருக்கிறது என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அவர்களின் தலைவர் ஏனோ இந்த மக்கள் மீது இந்தப் பழிவாங்கும் படலத்தில் ஈடுபட்டு விட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை நான் சொல்லவேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குத் தனிச் சலுகைகள் கூடவே கூடாது என்று சொன்னார்கள்.

மரியாதைக்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வேறுவிதத்தில் வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் அடுத்து பேசிய திருவாளர் எட்மண்ட் அவர்கள் அதை வலியுறுத்திச் சொல்லிவிட்டார்கள். தகுதியின் அடிப்படை யில்தான், திறமையின் அடிப்படையில்தான் சலுகைகள் வழங்கவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொல்லிவிட்ட காரணத்தால் இன்று தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது, ஒரு சஞ்சலம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிற நோக்கில் அதற்குத் தகுந்த விளக்கத்தை நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தந்துவிட்டார்கள்.

தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேட்டுக்குடி மக்களுக்கு நீங்கள் மேடை கட்டி மாலை கூடச் சூட்டி லாலி பாடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட சமு தாய மக்களுக்குச் சலுகைகள் மேலும் இருந்தால் அது எப்படி உயர்மட்டத்தில் இருக்கக்கூடிய மேட்டுக்குடி மக்களுக்குப் பயன் தராது என்று கருது கிறீர்கள்? இன்றிருக்கிற சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சலுகைகள் பல வழங்கப்படுவதன் மூலம் நல்ல ஆதாயம் பெற்று வருகிறார்கள். இன்றிருக்கிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்க்கையில் முன்னேற் றம் காணவில்லை என்றால் பின்னர் எப்போது அவர்கள் வாழ்க்கையில் முன் னேற்றம் காண முடியும் என்ற நம்பிக்கையில் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

றார்கள். இந்த அரசுக்கு அவர்கள் எவ்வளவோ மனுக்கள் போட்டும் பதில் வரவில்லை. சென்ற பட்ஜட் கூட்டத்தின்போதுகூட ஒரு லிஸ்ட் தயார் செய்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அது என்ன வாயிற்று என்று தெரியவில்லை. சட்டசபை உறுப்பினர் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு தகவல் ஒன்றும் இல்லை. மனு கொடுத்தவர்களுக்கும் இல்லை. இப்படிப்பட்ட மனுக்கள் இந்த நிலையில் அரசாங்கத்தில் ஓடிக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது.

மாநிலத்திலே மனைக்கட்டுகள் எவ்வளவு கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றால், 2,33,954 ஆகும். அதில் கொடுக்கப்பட்டு இருப்பது 2,17,630, மீதி 16,324 கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஏன் கொடுக்கப்படவில்லை? அதிலே என்ன சிக்கல் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அரிசனங்களுக்கு உடனடியாக வீட்டு மனைப்பட்டா கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருந்தும், கொடுக்காமல் இருக்கிறது என்றால் எந்த இடத்தில் தவறு நடந்து இருக்கிறது என்பதை அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கடன்களைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ பல தொழில்களுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. அதை ஒப்புக்கொள்கிறேன். அது வரவேற்கத்தக்கது. உதாரணத்திற்கு ஒன்று மட்டும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சைக்கிள்கள் வாங்குவதற்குக் கடன் கேட்டால் ரூ. 750 கொடுக்கப்படுகிறது. ரூ. 750-க்கு எத்தனை சைக்கிள் வாங்கமுடியும்? இன்று இருக்கும் நிலைமையில் ஒரு சைக்கிள் விலை கிட்டத்தட்ட ரூ. 500 முதல் 600 ரூபாய் ஆகிறது. அந்த ஒரு சைக்கிளை வைத்துக்கொண்டு அவன் எப்படி ஜீவிக்க முடியும்? அந்த மாதிரி தொழில் செய்பவர்களைப் பொறுத்தவரையில், இப்போது கொடுக்கும் கடன் தொகையை உயர்த்திக்கொடுக்கவேண்டும். மூன்று சைக்கிள்கள் இருந்தால் தான் அவர்கள் ஜீவனம் செய்ய முடியும். ஏனெனில் ஒரு சைக்கிள் பழுதாகிவிட்டால், அவன் மற்ற சைக்கிள்களை வைத்துக்கொண்டு பிழைக்க முடியும். ஆகவே, அந்தக் கடன் தொகையை ரூ. 2,500 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு என்று சொல்கிறோம். ஆறு மாவட்டங்களில் உலவி வரும் காவல் படை வைக்கப்பட்டு இருக்கிறது, அப்படியானால் மற்ற மாவட்டங்களில் தீண்டாமை இல்லையா என்று கேட்கிறேன். எல்லா இடங்களிலும் தீண்டாமை இருக்கிறது. நேற்று கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீண்டாமை கேஸ் என்ற முறையில் எங்கெங்கே எல்லாம் நட





வடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, எல்லா மாவட்டங்களிலும் அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அரிசன மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

வீட்டு வசதி வாரியம் 1 லட்சம் வீடுகளைக் கட்டுவது என்றும், இந்த ஆண்டில் 10,000 வீடுகள் கட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். வீடுகள் எங்கே கட்டப்பட்டு இருக்கின்றன? யூனியன், பஞ்சாயத்து போன்ற இடங்களில் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டு, அங்கே கட்டப்பட்டு இருக்கின்றன. நகர்ப்புறங்களில் அரிசனங்கள் இல்லையா? அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. அவர்களுக்கு வீடு வேண்டாமா? அரிசனங்களுக்கு வீடு கட்ட நிலங்கள் நகர்ப்புறத்தில் கிடைக்காது என்று சொல்லலாம். ஆனால் நிலங்கள் கையகப்படுத்துவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, அந்தப் பணத்தில் நகர்ப்புறத்தில் உள்ள தனிப்பட்டவர்களின் நிலங்களை ஆர்ஜிதம் செய்து, நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்கும்—எல்லா மாவட்டங்களிலும்—வீடு கட்டித் தர அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொபைல் மெடிகல் வேன் என்று எங்கள் மாவட்டத்தில் வைத்து இருக்கிறார்கள். அந்த மொபைல் மெடிகல் வேன், தோடர்கள் இருக்கும் பகுதியை மட்டும் பார்த்துவிட்டு சென்று விடுகிறது. மற்ற மலைவாசிகள் வசிக்கும் பகுதிகளுக்குச் செல்வது இல்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். வெண்ணசால்-கூடலூரில் இருந்து 45 மைல் தூரத்தில் இருக்கிறது—அங்கே பழங்குடி மக்கள் பள்ளி ஒன்று இருக்கிறது. கடந்த மாதத்தில் அங்குள்ள மாணவர்களுக்கு சிரங்கு வந்துவிட்டது. அதற்கு வைத்தியம் செய்ய வேண்டுமென்றால் கூடலூருக்கு, 45 மைல் வந்துதான் செய்ய வேண்டும். அதற்கு செலவு என்ன ஆகும்? ஆசிரியர்கள் அந்த மாணவர்களை அழைத்துவர கன்வேயன்ஸ் ஏதாவது தருகிறார்களா? ஆகவே, மாதம், ஒருமுறை அங்கேயுள்ள பள்ளிகளுக்கும் மற்ற அரிசன, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்கும் சென்று வரவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்லர்கள்—அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கிருஸ்துவ அரிசனங்கள். அவர்கள் இந்துக்களாக இருந்தவர்கள் தான். வெள்ளைக்காரனோடு பழகிவந்த காரணத்தால், முனுசாமி 'மில்லட்' என்று வைத்துக்கொண்டான். ஆறுமுகம், 'ஆல்பர்ட்' என்று வைத்துக் கொண்டான். அவன் நகரத்தில் வாழ்ந்து பழக்கப்பட்டவன். அவனுக்கு

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 ஏப்ரல் 4

இந்த உணர்வு அந்த மக்களுக்கு இருப்பதால் நான் முதல் அமைச்சர் அவர்களிடம் தாழ்மையான முறையில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்பு கிறேன். அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வகையில் திட்டங்கள் திட்டி பொருளாதார அடிப்படையில் திட்டங்கள் திட்டித் தந்தால்தான் இந்த ஜாதிப் பாகுபாடு ஒழிவதற்கு சாத்தியக்கூறு பிறக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காகத் திட்டப்படுகிற திட்டங்கள், சற்று சிந்தித்துத் திட்டப்படுகிற அளவிற்கு திட்டங்கள் திட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அரிசன வீட்டு வாரியம் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளம் குளிர இத் திட்டத்தைத் திட்டி நமக்கு வாழ்வு வந்துவிட்டது என்று அவர்கள் கருது கிறார்கள்.

அதேநேரத்தில் ஒரு பகுதியில் ரூரல் டெவலப்மெண்ட் என்ற திட்டத்தின் மூலம் மூவாயிரம் ரூபாய் கடன் தந்து வீடு கட்டுகிற ஒரு சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் இனமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். கடையநல்லூர் தொகுதி, என் அச்சரப்பாக்கம் தொகுதி, மற்றப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஒரு யிடத்தில் கடன் கொடுத்து வீடு கட்டிக்கொள்ள வசதி செய்கிறார்கள், இன்னொரு இடத்தில் சும்மா வீடு கட்டித் தருகிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை சிலர் அரசியலுக்கு பயன்படுத்துகிறார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு தவறான எண்ணங் களை, திசை திருப்பி விடுகிற அளவிற்கு ஏற்படுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்து வரும்போது, இப்படிக் கடன் கொடுப் பதை விட்டுவிட்டு அவர்களுக்கும் இனமாக வீடுகள் கட்டித் தரும் நல்ல திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்று கேட்டு இந்த மானியத்தை வர வேற்று, அமைகிறேன்.

**திரு. கு. அ. பொம்மன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிஜன நல மானியக் கோரிக்கைமீது சுதந்திராக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை இந்த அவைமுன் வைப்பது சாலச் சிறந்தது என்று கருது கிறேன்.

முதலில் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் மானியத்தின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக் காகவும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் பாடுபட்டுக்கொண்டு வருகிறது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.



1975 ஏப்ரல் 4] [திரு. கு. அ. பொம்மன்]

நல்ல உள்ளம் படைத்த முதல் அமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் நான் எடுத்துச் சொல்வது என்னவென்றால், நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு உள்ள இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக இன்று இந்த மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 948 லட்சம் ஆகும். இதில் கல்விக்கு மட்டும் ஆறு கோடி ரூபாய் மற்றபடி மூன்றுகோடி சில்லறை ரூபாய் மற்றக் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று விளக்கக் குறிப்பில் தரப்பட்டிருக்கிறது.

அரிசன, பழங்குடி மக்களின் நலன்களைப் பேண மூன்று தலைப்புகளில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வி, பொருளாதார மேம்பாடு, சுகாதாரம்—வீட்டு வசதித் திட்டங்கள் என்று போடப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அரிசனங்களுக்குள்ள குறைபாடுகள்பற்றியும் அவற்றை எப்படி நிவர்த்திக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி நான் விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. பொருளாதார மேம்பாடு என்று சொல்லும்போது அரசு செய்கிற சலுகைகள் என்ன என்று கவனிக்கும்போது நிலம் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், தொழிற் கருவிகள் அளித்தல், நீண்ட காலக் கடன்கள் வழங்குவது போன்றவைகளைச் செய்து வருகிறது. பதினைந்து நாட் களுக்கு முன்னர் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள், 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாக. அவற்றை ஏன் அரிசனங்களுக்கு ஒதுக்கக்கூடாது என்று கேட்கிறேன். மற்ற மாவட்டங்களில் வளங்களைச் சார்ந்த நிலங்கள் தலைக்கு மூன்று ஏக்கர் வீதம் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வன இலாகாவில் நிலமே இல்லை என்று சொல்லப்படுகிறது. ஏன் இல்லை என்று கேட்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் செடி கொடிகள் வளராத நிலங்களை வன இலாகா ஏராளமாக வைத்துக் கொண்டிருக்கிறது. அதை சர்வே செய்து அரிசனங்களுக்குத் தலைக்கு மூன்று ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி ட்ரை லான்ட், வெட் லான்ட் அல்ல. ஆகவே, மூன்று ஏக்கர் வீதம் கொடுக்கவேண்டும். பின்னர் மசனக்குடி என்ற கிராமத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்து, நூறு பேர்கள் இருப்பார்கள். அதாவது அரிஜனங்கள், பழங்குடி மக்கள் என்று கருதுகிறேன். நிலத்தை இதுவரை உழுதுகொண்டு வருகிறார்கள். அவர்கள் தண்டத் தீர்வையும் கட்டி வருகி

[திரு. கு. அ. பொம்மன்] [1975 ஏப்ரல் 4

விவசாயம், மற்ற எந்தத் தொழிலையும் செய்யத் தெரியாது. அவன் அடிமையாக வெள்ளைக்காரனோடு இருந்தவன். அவர்களுக்கு, மாடுகள் வாங்குவதற்கு மான்யமும் கடனும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அவர்கள் சற்று நிம்மதியாக ஜீவனம் செய்யமுடியும். அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் வாழும் படுகாக்களைப் பொறுத்தமட்டில் போன பிற்பட்டோர் மானியத்திலே கூட பேசினேன்— அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் கொண்டு வந்து விட்டார்கள். நான் சென்ற முறை பேசியதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியாது. ஆகவே, அதை மீண்டும் இங்கே சொல்கிறேன். அந்த 'படுகா' இனத்தையும் 'ஹில் ட்ரைப்ஸ்' லிஸ்டில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன கிருஸ்தவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அரிசன கிருஸ்தவர் களுக்குக் கல்விச் சலுகை மட்டுமே தற்போது கொடுக்கிறோம். மற்றச் சலுகை கள் கொடுப்பது இல்லை. ஒரு கேள்விக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி இதற்கு ஒரு முடிவு எடுத்து, அதைச் செய்யவேண்டும். அதை தாங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அருந்ததியர் சமூகம் மிகவும் பிற்போக்கான சமூகம். அந்தச் சமூகம் முன்னுக்கு வரவில்லை. அவர்களுக்கு ஸ்தாபனங்களில் முதன்மை ஸ்தானம் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அருந்ததியர் சமூகத்தில் யார் சிறப்பான முறையில் படித்து இருக்கிறார்களோ, அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதற்கு, நியமனம் செய்வதற்கு, அதற்குத் தகுந்த வகையில் முன்னுரிமை பெற ஆணை வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

1965-ம் ஆண்டில் ஜி.ஓ. 38 என்று ஐ.சி.எஸ். விஸ்வநாதன் அவர்கள் போட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் உத்தியோகத்தில் இருக்கும் அரிசனங்களுக்கு எலிஜிபிலிடி கன்சிடர் செய்து அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. அது எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது என்று தெரியவில்லை. அதையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அந்தச் சலுகையை அவர்களுக்கு வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. கு. அ. பொம்மன்]

உழவு மாடுகள் வாங்குவதற்கு எல்லா மாவட்டங்களிலும் கடன் கொடுக்கிறார்கள். எங்களுக்கு நீலகிரி ஜில்லாவில், கூடலூர் வட்டத்தைத் தவிர உழ முடியாது. ஆகவே இதற்குப் பதிலாக குன்னூர் உதகை வட்டத்தில் உழவர் களுக்கு மம்மட்டி, உழவுக் கருவிகள் கொடுத்து வந்தார்கள், இப்போது அதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எதற்காக நிறுத்தினார்கள், கொடுக்க முடியாது என்று சொன்னார்கள் என்று தெரியவில்லை. அங்கே விவசாய மக்களுக்கு பூச்சி மருந்து அடிக்க உதவும் வகையில், பவர் ஸ்ப்ரேயர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ந. தருமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கொண்டு வந்து இருக்கின்ற மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களை நான் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

முதலில், சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கான அனுமதியை மேலும் 10 நிமிடம் அதிகமாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு உடல் நிலை சரியில்லை. எங்களுடைய மானியக் கோரிக்கை என்ற காரணத்தால் விரிவாக சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்பதற்காக இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நமது காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர், அருமை நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசும்போது, சரித்திரத்தை திசை திருப்பிக் கூறுகிறீர்களே என்று சொன்னார்கள். உள்ளபடியே, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் சரித்திரத்தை திருப்பித்தான் வைத்து இருக்கிறார்கள். 1967-க்கு முன் என்னென்ன செய்து இருக்கிறார்கள் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் என்ன செய்து இருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஏற்கனவே படித்துப் பார்த்து இருக்கிறோம். அப்படியிருந்தும் அவர் கூறியது உள்ளபடியே வருந்தத்தக்கது என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர் பொம்மன் அவர்கள் உழவு மாடுகள் வாங்குவதற்கு அளிக்கப்படும் கடன் குறித்துப் பேசினார்கள். 1967-க்கு முன்னால் ரூ. 250 மாடுகள் வாங்க மானியம் கொடுத்தார்கள். இந்த அரசு ரூ. 600 ஆக உயர்த்திக் கொடுக்கிறது. அதேபோல், கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 1,500 கொடுத்து வந்தார்கள், அது இப்போது ரூ. 2,000 ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

[1975 ஏப்ரல் 4

**திரு. எம். சுரேந்திரன் :** கிணறு வெட்டுவதற்கும், மாடு வாங்குவதற்கும் ஒதுக்கிய பணம் எவ்வளவு என்பதைப் பாருங்கள். 3.5 லட்சம், 6 லட்சம் என்றுதான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இருக்கிற நேரமே குறைவு, அதிலே குறுக்கீடுகள் வேண்டாம்.

**திரு. ந. தருமலிங்கம் :** இதேபோல் என்னுடைய தொகுதியில் இப்போது அரிசன நலத்துறையால் பல செயல்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நேரத்தில், ஒரு சில திட்டங்கள் எங்கள் பகுதியில் செய்யப்படவில்லை. அதையும் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உழவு மாடுகள் வாங்க ரூ. 600 கொடுப்பது, இந்த நேரத்தில் இருக்கும் விலைவாசியில் போதாது. ஆகவே, அதை ஆயிரம் ரூபாய் என்ற வகையில் உயர்த்தவேண்டும். கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,000 என்று இருக்கிறது, அதை வைத்து மண் கூட வெட்ட முடியாது—எனவே ரூ. 5,000 என்று உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதேபோல இங்கே குடிதண்ணீர் கிணறுகளெல்லாம் வெட்டித் தரப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறோம். இதற்காக நிறைய திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன என்றாலும், மூவாயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு குடி-தண்ணீர் கிணறு வெட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மூவாயிரம் ரூபாய்க்கு மேலே ஐயாயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர சூப்பர்வைசர் மூவாயிரம் ரூபாய் தான் மதிப்பீடு கொடுக்கிறார். இதற்குள்ளே வெட்டவேண்டு மென்றால் காண்ட்ராக்ட்காரர்கள் வருவது கிடையாது. ஆகவே, இதை ஐயாயிரமாக உயர்த்தவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். தோட்டக்கலை என்று ஒரு புதிய திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து காய்கறித் தோட்டம், பழத்தோட்டம் போன்ற தோட்டங்களுக்காக 1.48 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என் பகுதியைப் பொறுத்தவரை இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை. இதை கிராமப்புறங்களில் அமுல்படுத்தினால் நன்றாக இருக்கும். இதற்காக துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருவிகள் வழங்குவதற்கு 2.5 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. கருமார் தொழில், தச்சுத் தொழில் இவைகளுக்கு கருவிகள்



1975 ஏப்ரல் 4] [திரு. ந. தருமலிங்கம்]

வாங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியான கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் தொழில் கருவிகள் வழங்கப் பட்டு இருக்கின்றன. மீதி எங்கே செய்கிறார்கள் என்று தெரியவில்லை. தாலுகா வாரியாக, கூடுமான வரையில் தொழில் தெரிந்த 100 பேர்களுக்கு கருவிகள் வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டு, அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் நடத்துவதற்கு வட்டி இல்லாக் கடன் கொடுப்பது சம்பந்தமாக அருமை அண்ணன் பொம்மன் அவர்கள் சொல்லியதுபோல ஒரு சைக்கிள் கடை வைக்கவேண்டுமென்றால் 500 ரூபாய் கொடுக்கிறார்கள். இதனால் ஒரு சைக்கிள் தான் வாங்கமுடியும். நகர்ப்புறங்களில் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். இதை வைத்து சைக்கிள் கடை வைக்க முடியாது. கிராமப்புறங்களிலும் சைக்கிள் கடை வைப்பதற்கு இரண்டாயிரம் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் உயர்த்தி கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'டீ' கடை வைப்பதற்கு 150 ரூபாய் கொடுக்கிறார்கள். இதைக் கொண்டு பால் கூட வாங்க முடியாது. 150 ரூபாய் என்று இருப்பதை மாற்றி 500 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழக்கடை வைப்பதற்கு 300 ரூபாய் கொடுக்கிறார்கள். இதையும் மாற்றி ஆயிரம் ரூபாய் வரை அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் நான் கேள்விப்படுகிறேன். இது எங்கள் பகுதிக்கு இன்னமும் வரவில்லை. எங்கே அமைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. 352 சங்கங்களைத் திறந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு சங்கம் கூட திறக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக 1972-ல் எங்கள் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் அதைப் புறக்கணித்திருக் கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எங்கள் பகுதியில் மழை இல்லை. வரட்சி காணப்படுகிறது. பின்தங்கிய பகுதி, எங்கள் பகுதியிலும் சங்கங்கள் அமைத்து செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறத்தில் தோட்டி போன்ற சுகாதாரப் பணியாளர்களை நியமிப்பதைப் போல கிராமப்புறத்திலும் நியமிக்கவேண்டும். கிராமப்புறத்தில் இருக்கிறவர்கள் சுகாதாரமாக வாழவேண்டாமா? ஆகவே கிராமப்புறங்களிலும் இப்படிப்பட்ட சுகாதாரப் பணியாளர்களைப் போடவேண்டும். அப்போதுதான் கிராமப் புறங்களில் இருக்கிறவர்களும் சுகாதாரமாக வாழ வசதியாக இருக்கும். நான்காவது தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதுகின்ற அரிசன மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மாநிலத்தில் 15 இடங்களில் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. என்னுடைய பகுதியில் ஒன்றுகூட

[திரு. ந. தருமலிங்கம்]

[1975 ஏப்ரல் 4

ஆரம்பிக்கப்பட இல்லையென்று என் தொகுதி மக்கள் கேட்கிறார்கள். இந்தத்
திட்டம் எங்கள் பகுதிக்கு வரவில்லை. இதை எங்கே செயல்படுத்துகிறார்கள்
என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தை பின்தங்கிய பகுதியான எங்கள் பகுதி
முன்னேறுவதற்கு செயல்படுத்தவேண்டுமென்று விரும்பி கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோலத்தான் வீட்டு மனைப் பட்டாக்களைப் பற்றி எடுத்துச்
சொன்னார்கள். இதை அதிகமாக வற்புறுத்திச் சொல்வதற்குத் தேவையில்லை
என்பதற்காக சுருக்கமாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நாம்
மக்களிடம் ஓட்டு கேட்கிற நோக்கில் வீட்டு மனைப் பட்டா வாங்கித் தருகிறோம்
என்று சொல்கிறோம். இதேபோலத்தான் எனக்கு முன்னாலே இருந்த சட்ட
மன்ற உறுப்பினர் கூடச் சொன்னார். நிலங்கள் சில பகுதிகளில் எடுக்கப்பட்டும்
உடன் மனைப் பட்டா வழங்க முடியவில்லை. ஐகோர்ட்டில் மனு செய்து நிலச்
சொந்தக்காரர்கள் ஸ்டே வாங்கி நிறுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
நிலைமையை அகற்றுவதற்கு சட்டத்தைத் திருத்தியாகவேண்டும். அரசு
ஒருவரின் நிலத்தை எடுக்கிறதென்றால், அவருக்கு எந்தவிதத்திலும்
அனுகூலம் இல்லாத வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும் (மணியடிக்கப்
பட்டது). தலைவரவர்கள் மணி அடிக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரம் பேச
வேண்டுமென்று முதலிலேயே அனுமதி கேட்டேன்.

**திரு. அ. சின்னசாமி :** தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.
இந்த மானியத்தைப் பொறுத்தவரை, அரிசன் வெல்ஃபேர் டைரக்டர் அவர்கள்
இங்கே இருக்கவேண்டும். ஆனால் அரிசன் வெல்ஃபேர் டைரக்டர் அவர்கள்
காணவில்லை. இந்த இலாகாவைப் பொறுத்தவரை பெரும்பாலான வேலைகளை
அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் வருவாரா அல்லது வர
மாட்டாரா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவரவர்களே, டில்லியில் அகில
இந்திய தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினருடைய மாநாடு நடைபெறுகிறது.
அதற்கு எல்லா மாநிலங்களுடைய இயக்குநர்களும் போகவேண்டி வந்தது.
நேற்று இந்த இலாகா மானியக் கோரிக்கையைப் பற்றி அவர் பேசி விட்டு
அரசாங்க அனுமதியோடு டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆபீசர்கள் காலரியில்
இருக்கிறார்களா இல்லையா என்பது பிரச்சனை அல்ல. சம்பந்தப்பட்ட
அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும். டைரக்டர் இல்லையென்றாலும்
பரவாயில்லை We are not concerned. இது இப்போது பிரச்சனை இல்லை.



[1975 ஏப்ரல் 4]

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவரவர்களே, அடுத்தபடியாக இரண்டு
தாலுகாக்களுக்கு ஒரு தனி தாசில்தாரைப் போட்டிருக்கிறார்கள். இதனால்
எதைச் சொன்னாலும் அந்த தாசில்தாரால் செய்ய முடியவில்லை. அப்படியே
தாசில்தாரைத் தேடிக் கொண்டு போனால் அவர் ஹெட் குவார்ட்டர்ஸில்
இருப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு தனி தாசில்தாரைப்
போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியக் கழகத்தைப் பற்றிப் பேசியவர்களெல்லாம்
எடுத்துச் சொன்னார்கள். மேலும் நான் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஒரு
சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவிலே 12 கோடி
அரிஜன மக்கள் வாழ்கிறார்கள். அப்படியிருந்தும் இன்றைக்கு இந்தியாவில்
எந்த மாநிலத்திலும் சாதிக்க முடியாத ஒரு சாதனையை டாக்டர் கலைஞர்
அவர்கள் தமிழ் நாட்டில் 75 லட்சம் மக்கள் நலனைக் கருதி ஒரு பெரிய
திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரிசன
மக்களிடத்தில் அவர் எவ்வளவு பற்றுதல் வைத்திருக்கிறார்கள் என்பதைத்
தெள்ளத் தெளிவாக இது எடுத்துக் காட்டுகிறது. இதை விட்டு பொம்மை
மாதிரி விளம்பரத்திற்குக் கட்டுகிறார்கள் என்று மற்றவர்கள் மனச்சாட்சியை
விட்டுப் பேசினால் அது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரே நிமிஷம். முடித்துவிடுங்கள்.
அடுத்தவர் பேசினதை விமரிசனம் பண்ணவேண்டாம், நேரமில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவரவர்களே, குடி தண்ணீருக்காக 10 ஆயிரம்
ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது எங்கள் பகுதிக்குப்
பயன்படவில்லை. இதைப்பற்றிப் பலமுறை எடுத்து சொல்லியும்
அமைச்சரவர்கள் இதை ஏன் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சமுதாயக் கூடம் கட்டுகிறார்களாம். அதற்கு 15 ஆயிரம் ரூபாய்
செலவாகும் என்று புள்ளி கொடுத்திருக்கிறார்கள். என் தொகுதியில்
கடம்பூர், மரூர், கள்ளக்குறிச்சி போன்ற கிராமங்களில் சமுதாயக் கூடங்கள்
கட்டிக் கொடுப்பதைப் பற்றிச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். என்ன
காரணம் என்று தெரியவில்லை.

கலப்புத் திருமணம் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
முன்பு பேசியவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை ஊக்குவிக்க
வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று
சொன்னால், குறைந்தது 3 ஏக்கர் நிலமாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.
அப்படிக் கொடுத்தால் படிக்காதவர்கள் கூட உடனே திருமணம் செய்து
கொள்ள ஆவலாக இருப்பார்கள். படித்த வாலிபர்களாக இருந்தால்

உத்தியோகத்தில் உயர்வுதன் கொடுத்தால் கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன் வருவார்கள். ஆகவே இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967-க்கு முன்னால் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்பு பற்றிச் சொன்னார்கள். சில மாவட்டங்களில் தீண்டாமை ஒழிப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டு அமுலில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரி இருப்பதில்லை, காரணம் அலுவலகம் அவர்களுக்கு இல்லை. நாம் எழுதிய கடிதங்களுக்கு 6 மாதங்களுக்குப் பிறகு தான் பதில் வருகிறது. தீண்டாமை ஒழிப்பு அதிகாரிகளுக்குத் தனி அலுவலகம், தொலைபேசி, வண்டி ஆகியவைகள் கொடுக்கப்பட வேண்டும். இதை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வார்டனாக இருப்பவர்கள் தொடர்ந்து இருப்பதால் அவர்கள் ஊழல் செய்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து வார்டனாக இல்லாமல் மாற்றி ஆசிரியர்களாகப் போட வேண்டும். ஒருவர் வார்டனாக இரண்டு வருஷங்களுக்கு மேல் இருக்கக் கூடாது. அப்படி இந்தச் சட்டத்தை மாற்றவேண்டும். தென்னாற்காடு மாவட்ட நல அதிகாரி தவறு செய்கிறார்கள். அவர்களை மாற்றவேண்டுமென்று 4, 5 எம்.எல்.ஏ.-க்கள் சொல்லியிருக்கிறோம். சோஷியல் வெல்ஃபேர் செக்ரடரி, ரெவின்யூ செக்ரடரி இவர்களிடம் சொல்லி இருக்கிறோம். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. என் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை.

மாவட்ட நல அதிகாரிகள் 5, 6 வார்டன்களைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்கிற நேரத்தில் கவனிக்கிறேன் என்று சொல்கிறார். அதற்குள்ளே எவ்வளவு கொள்ளை அடிக்கமுடியுமோ அவ்வளவும் கொள்ளை அடிப்பார்கள். நான்கு, ஐந்து எம்.எல்.ஏ.-க்கள் இதைப் பற்றி வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். டிரான்ஸ்ஃபர் செய்கிறோம் என்றார்கள். ஆனால் அந்த அதிகாரி இன்னும் அங்கேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார். ஏழைப் பிள்ளைகளுக்குப் போடுகிற சாதத்தை அவர்கள் வயிற்றில் அடித்து, கொள்ளை அடிக்கிறார்கள். அந்த வார்டன்கள் இந்த அதிகாரி அங்கேயே இருக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு அவருக்கு ஸ்வீட் கொடுக்கிறார்கள். ஆகவே, மக்கள் எங்களிடம் சொல்கிற புகார்களை அரசுக்குத்தானே எடுத்துச் சொல்லுகிறோம். இதில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த அதிகாரி



டிரான்ஸ்ஃபர் செய்யப்படமாட்டார் என்கிறார்கள். கேட்டால் ரிலீவர் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஏன் ரிலீவர் வரவேண்டும்? இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது நேர்முக உதவியாளர் இவர்கள் யாரிடமாவது அவர் பொறுப்பைக் கொடுத்து ரிலீவ் ஆகவேண்டியதுதானே. இது பற்றி என்னவென்று தெரியவில்லை.

என்னுடைய பகுதியில் ஒன்றியங்களில் ஒரு அரிசன் கூட வேலை பார்க்கவில்லை. நான் உள்ளபடியே வருந்துகிறேன். அதை முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து இந்த மக்களுக்கு விமோசனம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எனக்கு 26-ந் தேதி உடல் நிலைமை சரியில்லாமல் சீரியசாக இருந்தது. விடுதியில் இருக்கின்ற டாக்டர் எமெர்ஜென்ஸி வார்டில் அட்மிட் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். பொது மருத்துவமனைக்குக் கொண்டு போனவுடன் டாக்டர்கள் கிடையாது. சாதாரண ஆபரேஷன் செய்யப்படக் கூடிய படுக்கையில் கொண்டு விடுகிறார்கள். உள்ளபடியே வருந்துகிறேன். எல்லா டாக்டர்களும் அதற்குப் பிறகு தான் வருகிறார்கள். வந்தவுடன் ஸ்பெஷல் வார்டு வேண்டும் என்று வற்புறுத்தினேன். அதற்குப் பிறகு நான் போராடியதன் காரணமாக இரவு 9 மணிக்கு என்னை ஸ்பெஷல் வார்டுக்குக் கொண்டு செல்லுகிறார்கள். எமர்ஜென்ஸி வார்டு என்றால் என்ன அர்த்தம்? அதற்கு பெரிய டாக்டர் டீன், சூப்பிரண்ட் இருக்கிறார்கள். அவர் அந்த இடத்தை விட்டு நகருவதில்லை. என்னை வந்து பார்க்கவில்லை. நான் டிஸ்சார்ஜ் செய்து கொண்டு பிரைவேட் டிரீட்மெண்ட் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்படி நிலைமை இருக்கிறதென்றால் சாதாரண மக்கள் நிலைமை என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.எல்.ஏ.-க்கு உடல் நிலை சரியில்லை, சீரியஸாக இருந்தது என்று சொன்னார்கள். இந்த மாதிரி குறைகளுக்கு மருத்துவர்கள் இனி இடம் கொடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும், டாக்டர்கள் கவனிக்கவில்லை என்றும் கூறினார். இது சாதாரண புகார் அல்ல. அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர் தவறாகச் சொன்னாரா அல்லது அங்கே தவறாக நடந்ததா என்பதைப் பொறுத்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருக்கு என்ன சீரியஸான வியாதி என்ற விவரங்களை 5 நிமிடம் ஆனாலும் சொல்ல வேண்டுகிறேன்.

திரு. ந. தருமலிங்கம்: முதலமைச்சர் அவர்களை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு வயிற்று வலி என்று சொல்லி விடுதியில் இருந்த டாக்டர் அவர்கள் பொது மருத்துவமனை எமெர்ஜன்ஸி வார்டில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார், சாதாரண ஆபரேஷன் வார்டில் கொண்டு வந்து போட்டார்கள். நான் வருத்தப்பட்டு, வாதாடிய பிறகு தான் ஸ்பெஷல் வார்டு கொடுத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திடீரென்று வயிற்றுவலி என்று சொல்லி எமெர்ஜன்ஸி வார்டுக்கு அனுப்புவதில் என்ன தவறு? சில நேரங்களில் வயிற்றுவலி ஏற்பட்டால் உடனடி ஆபரேஷன் செய்யாவிட்டால் ஆபத்து ஏற்படும். ஆகவே எமெர்ஜன்ஸி வார்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆபரேஷன் கேஸ் அல்ல என்று தெரிந்தவுடன் வேறு வார்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

* திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து நானும் எனது கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் இந்த மான்யத்தில் வரக் கூடிய சில காரியங்களை சுட்டிக் காட்டி ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள். நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு முன்பு பேசிய சித்தமல்லி சோமசுந்தரம் ஒரு வார்த்தை குறிப்பிட்டார்கள். அதை ஒட்டி நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குப் பழைய ஞாபகம் வருகிறது. 1937-லே ராஜாஜி மந்திரி சபை இருந்தபோது, இங்கு ஆலயப் பிரவேசச் சட்டம் பிரகடனம் செய்தபோது, அதை முன் நின்று நடத்திச் செல்லுவதற்கு அநேகம் பேர் தயங்கினாலும், அதிலே முக்கியமானவர்கள் ராஜாஜி, மதுரை வைத்தியநாத அய்யர் போன்றவர்கள், என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களும், முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களும் அதை முன் நின்று நடத்தினார்கள். அப்படி நடத்துகின்ற நேரத்திலே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஜாதி துவேஷம் காரணமாக ஒரு சிலர் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள். அதிலும் முக்கியமானவர் தவத்திரு முத்துராமலிங்கத் தேவர், அரிசன மக்களுக்குத் துரோகமானவர் என்று அவர் மேல் காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அப்பொழுதிருந்த மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களால் புறக்கணிக்கப்பட்டு. கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, அரசியலிலிருந்து அவர் ஒதுக்கப்பட்டிருந்தார். அப்பேற்பட்ட நிலையிலும் கூட அவர்கள் அரசியலுக்காக அரிசனங்களை பகடைக் காய்களாக உபயோகித்தார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே அரிசனங்களுக்கு முன் நின்று இப்பேர்பட்ட தலைவர்களெல்லாம் ஒதுக்கப்பட்டார்கள்



என்று தெரிந்தும் [illegible] கலைஞர் அவர்கள் எந்த அரிசனங்களுக்கு [illegible] முன் நின்று செய்தார்களோ, [illegible] அதே மீனாட்சி அம்மன் கோவிலுக்கு [illegible] கொண்டு வந்தார் என்றால் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அப்பேற்பட்ட [illegible] தலைவரை, மதிப்பிற்குரிய நம் கலைஞரைப் பாராட்டுவதோடு அல்லாமல், நான் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தேசத் தந்தை மகாத்மா காந்தி என்று சொல்லப்பட்ட மகாத்மாவாலே அரிசன் என்று [illegible] பெயர் கொடுத்து பாடுபட்டார். இன்னும் [illegible] அரிசன் என்ற பத்திரிகை கூட நடத்தினார். அவர் எழுத்திலே, பேச்சிலே சொல்லியுள்ளார். ஆனால் செயலில் [illegible] இல்லை இல்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பேற்பட்ட மகாத்மா மகனுக்குக் கல்யாணம் எங்கே செய்தார் என்றால் அவரை விட உயர்ந்த ஜாதி, ஒரு அந்தணர் ராஜாஜி வீட்டில் தான் சம்பந்தம் செய்தார். நம் போன்ற தாழ்த்தப்பட்ட ஒரு அரிசன் வீட்டில் அவர் சம்பந்தம் செய்யவில்லை. ஆனால் நமது மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு அரிசனப் பெண்ணை அவர் மகனுக்குக் கட்டியிருக்கிறார். அவர் செயலில் செய்த ஒரு தியாகத்திற்கு நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மனப்பூர்வமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட செயல் வீரருக்கு இந்த அரிசன, தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்றும் நன்றியுள்ளதாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு அல்லாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயம், கலைஞர் அவர்களுக்கு என்றென்றும் [illegible] நீண்ட நாள் அவர் உடல், உயிர், அத்தனைக்கும் நாம் பாதுகாப்புக் கொடுப்போம் என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனைபேரும் சபதம் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால், நான் சார்ந்திருக்கக்கூடிய கட்சி வேறு, கலைஞர் சார்ந்திருக்கக் கூடிய கட்சி வேறு. அவர் எங்கள் சமுதாயத்திற்குச் செய்த நன்றிக் கடன், செயல் வீரர் என்ற முறையில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது தான் சித்தமல்லி சோமசுந்தரம் சொன்னார். என்னுடைய சம்பந்தி என்று. அதற்கு நான் விளக்கம் சொன்னேன். தோழமைக் கட்சி நான். சில நேரத்தில் ஆட்சியில் உள்ள சில குறைகளைப் பற்றிப் பேசியிருப்பேன். அதனால் ஒரு [illegible] தெரிந்து இருக்கும். எது நியாயம் என்று படுகிறதோ அதைப் பேசுவேன். மனதில் வைத்துக் கொள்ள

[1975 ஏப்ரல் 4

திரு. எம். முத்தையா: இன்னும் [illegible] விவசாயிகள் [illegible] வருத்தப்படுகிறேன். [illegible] அதிகாரிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். [illegible] என்ற 35 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலத்தை உரிமையாளர் [illegible] செய்ய கொடுக்காமல் [illegible] விஷயம், புகார் [illegible] செய்திருக்கிறார்கள். அதைப்பற்றிக் கலெக்டர் இன்னும் [illegible] அங்குள்ள ஆதி [illegible] கொடுத்தார்கள். இன்னும் அரிசனங்களுக்குப் பட்டா [illegible] 35 ஆண்டுகள் விவசாயம் செய்துவந்த [illegible] கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட [illegible] அமைச்சர்கள் [illegible] தக்க நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அரிசனங்களுக்கு [illegible] எந்த நிலையிலும் [illegible] எல்.எல்.எல்.சி. படித்திருக்க வேண்டும்; [illegible] வேண்டும் என்று சொல்கிறார்கள். [illegible] மதிப்பு உள்ளவர்கள் இருந்தும் ஒரு விஷயம். அப்படி சொத்து நாட்டில் இல்லை. ஆனால் இந்த அரிசனங்களுக்கும் இந்த [illegible] 18 வயதிலிருந்து [illegible] கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எங்களுக்கு ஓரளவு [illegible] இருக்கும்; ஆகவே, கலைஞர் அவர்கள் இதை [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, [illegible] பாக்கெட் [illegible] கொடுக்கிறார்கள், அரிசனங்களுக்குத் [illegible] கொடுக்கிறார்கள். [illegible] மாணவர்களுக்கு உதவித்தொகை கொடுக்க வேண்டும். [illegible] முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். [illegible] வேண்டும். அப்படி இருந்தால்தான் தீண்டாமை [illegible] இப்போது இந்த நகரத்தில் தீண்டாமை நிறைய இருக்கிறது. இவர்கள் பல ஜாதி சங்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். [illegible] அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் சங்கம், என்று ஜாதிச் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது இவ்வளவு [illegible] சங்கம் வைக்கக் கூடாது. அப்போதுதான் தீண்டாமை ஒழியும். கலைஞர் அவர்கள் இந்த ஜாதிச் சங்கங்களுக்கு [illegible] கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 11

திரு. மு. இராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் நலன் பற்றிய மானியங்களை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் கிட்டத்தட்ட 80 லட்சத்திற்குமேல் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது 9 கோடியே 48 லட்சம் ரூபாய். இதில் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் கல்வித் திட்டத்திற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள தொகை பொருளாதார மேம்பாடு வசதிக்காகவும், சுகாதார வசதிக்காகவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்காகப் பல குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, பிற்பட்ட மாணவர் விடுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டிருக்கிறது; ஆனால் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினேன். அதைக் கருத்திற்கொண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் மனமுவந்து, 1974-75-ஆம் ஆண்டுத் திட்டத்தில் பின்னர் அந்த எல்லா தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் சீருடை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்காக தாழ்த்தப்பட்ட உழவர்களுக்கு, நிலம் உள்ளவர்களுக்கு, 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சில இடங்களில் கிணறு வெட்டியும் தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் குழாய்க் கிணறு அமைத்துக்கொள்ள அரசு 2,000 ரூபாய் என்பதை 3,000 மாக உயர்த்திக் கொடுத்தால் பயனுடையதாக இருக்கும்.

கிணறு வெட்டி தண்ணீர் கிடைக்கவில்லை என்று வருகிறபோதும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு மாவட்ட நல அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். கிணறு வெட்டி, நல்லமுறையில் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் இந்தக் கடனைக் கண்டிப்பாக வஜா செய்ய வேண்டும். கடனை வசூல் செய்வது நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள்—9-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை—தங்கிப் படிக்கின்ற இல்லங்களில் அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் தற்போது நவம்பர் மாதத்திற்குப் பின்னால்தான் நியமிக்கப்படுகின்றார்கள். 5-மாத காலத்தில் அவர்களுக்குப் போதிய

[illegible] இதற்காக அரிசன இலாக்காக்களை இயக்கம் [illegible] வேண்டியதை நல்ல முறையில் செய்கிறார் என்பதற்காக நான் பாராட்டினேன்.

ஆனால், அந்த இலாக்காவில் சில அதிகாரிகள் அதை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது மாவட்டத்தில் அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன சமுதாயத்தினுடைய மாணவர்களுக்கு பிப்ரவரி கடைசி வரை இன்னும் ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. அதைத் தான் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவராக இருக்கக் கூடியவர் [illegible] அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன். அதைப் [illegible]. இதைச் சொல்லும்போது வருத்தமாக இருக்கிறது. இதேபோல் சில விஷயங்களில் அதிகாரிகள் தவறு செய்து விடுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

இதற்கு முன்பாக மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்கார் மூலமாக அரிசனங்களுக்கு வியாபாரம் செய்வதற்காக லோன் கொடுக்கப்படும் என்று அறிக்கை வந்தது. அதைப்பார்த்து எத்தனையோ அரிசனங்கள் மனு செய்தார்கள். அந்த மனுக்கள் அரிசன நலத்துறை அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டன. பணம் கிடைக்கும் என்று பலரும் பல்வகைகளில் அதற்காகச் செலவிட்டார்கள். ஆனால், இன்று வரையில் அந்த லோன் கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரிகளின் போக்கால்தான் இந்த நிலைமை என்று தெரிகிறது. ஆகவே, அதிகாரிகள் கட்சிக் கண்ணோட்டம் பார்க்காமல், ஜாதிக் கண்ணோட்டம் பார்க்காமல் நியாயமான நடவடிக்கை எடுக்கிறார்களா, இல்லையா என்பதை அமைச்சரவர்கள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ் துறையில் நடைபெறுவது பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சம்பவம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. போலீசார் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால், சாதாரணமாக சந்தேக கேஸ் போடுவதாக இருந்தாலும் மற்ற கேஸ்களை போடுவதாக இருந்தாலும் அரிசன மக்கள் மீதுதான் போடுகிறார்கள். ஏன் அப்படி கேஸ் போடுகிறார்கள் என்றால், அரிசனங்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள், அப்பீல் செய்ய வசதி இல்லை. ஆகையால் சாராய கேஸா, அரிசனம் தான்; சந்தேக கேஸா, அரிசனம் தான் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. ஒரு லிஸ்டே கொடுத்திருக்கிறேன். அதிலிருந்து ஒன்றிரண்டைக் குறிப்பிடுகிறேன்.



சிவகிரி போலீஸ் ஸ்டேஷனில் ஒரு முறைகேடு நடந்திருக்கிறது. திருமலாபுரம் தேவேந்திரனை அந்த போலீஸ் ஸ்டேஷனில் கூட்டிக்கொண்டு போய் அடக்குமுறை செய்திருக்கிறார்கள். கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போன செய்தி தெரிந்து அவருடைய மனைவி அன்னபாக்கியம் போலீஸ் ஸ்டேஷனில் போய் முறையிட்டிருக்கிறார். அப்படியும் விடாமல் நன்றாக அடித்திருக்கிறார்கள். பின் அவர் வீட்டுக்கு வந்த பின்னால் பார்த்ததில் அவருடைய காலில் பெருத்த காயம். இதில் நிறைய விவரம் இருக்கிறது; நான் மனு முழுவதும் படிக்கவில்லை. அந்த அம்மையார் இதுபற்றி கோர்ட்டில் கூட போய்ச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கூடப் பரிசீலனை செய்து பார்க்காமல் தள்ளிவிட்டார்கள். ஜாதி இந்துக்களால் தாழ்த்தப்பட்டவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், போலீசுக்கு பெட்டிஷன் போட்டால் தள்ளி விடுகிறார்கள்; போலீஸ் இலாகாவில் இந்தமாதிரி நடக்கிறது. அரிசனங்கள் என்றால் இவ்வளவு அலட்சியமாக நினைக்கிறார்கள் காவல்துறையினர்.

போலீஸ் இலாகா தவிர, மற்ற எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் சரியான அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள். ஹைகோர்ட்டிலும் ஜட்ஜ் பதவி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் போலீஸ் இலாகா தவிர, மற்ற எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர் போலீஸ் இலாகாவில் டிஸ்டிரிக்ட் சூப்பிரண்டு ஆப் போலீஸ் என்ற அந்தஸ்தில் தான் தாழ்த்தப்பட்டவர்கள் பதவியில் இருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சியிலும் இல்லை; இப்போதும் இல்லை. அதாவது மாநில அளவில் எங்களுக்கு என்று ஒரு ஆள் இல்லாததால் போலீஸ் இலாகாவினர் இப்படி நடத்துகிறார்கள். மாநில அளவில் இந்த இலாகாவில் ஒருவர் இருந்தால்தான் எங்களுக்கு நன்மை கிடைக்கும். அதுவரையில் போலீசார் இப்படித்தான் நடந்துகொள்வார்கள்.

சந்தேக கேஸ் என்றாலும், பொய் கேஸ் என்றாலும் எல்லாவற்றுக்கும் அரிசனங்களைத்தான் போலீசார் பிடிக்கிறார்கள். பெட்டிஷன் போட்டாலும் யாரும் கேட்பதில்லை; தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, அரிசனங்கள்மீது பொய் கேஸ் போட்டாலோ அல்லது சந்தேக கேஸ் போட்டாலோ அதை அமைச்சரவர்கள் தக்க முறையில் பரிசீலனை செய்து பார்த்து, எங்களுக்குப் பரிகாரம் தேடித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : எல்லோரும் அரிசன மானியத்தில் பேசவேண்டும். ஆனால் நேரம் இல்லை. இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்[illegible]ங்கள்.

[திரு. மு. இராமன்]

தேர்வு பயிற்சி அளிக்க முடியாது. ஆகையால் பள்ளிகள் திறக்கப்படுகின்ற ஜூன் மாதத்திலிருந்தே பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற வகையில் பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில், தமிழ்நாட்டில் போக்குவரத்துக்கு இக்கட்டான இடங்களில் போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் அரிசன மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக 100 ஆசிரியர்கள் கொண்ட பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகை செய்திருக்கிறார்கள். அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் 80 லட்சத்திற்கு மேற்பட்ட இந்த மக்கள் இருக்கின்ற இந்த நாட்டில் 100 ஆசிரியர்கள் போதுமா என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் படிக்க அதிக வசதி இல்லாமல் போய்விடுகிறது. இதைக் கருத்திற் கொண்டு, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்த இடங்களில் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க முடியுமோ அங்கெல்லாம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வீட்டுவசதி வாரியம் என்ற தலைப்பின் கீழ் ஒரு கோடி ரூபாய்க்குமேல் இந்த ஆண்டு வகை செய்திருக்கிறார்கள். வீடுகளைக் கட்டிக்கொடுக்கும்போது அங்கே போதுமான பாதை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சாதாரணமாக, ஓடுகளைப் போடும்போது சாதாரண ஓடுகளை மாற்றி, ஆர்.சி. போட வேண்டும். புதிதாகப் போடும்போதும் ஆர்.சி. போட்டால் பயனுள்ளதாக இருக்கும். சற்றுச் செலவு கூடுதலாக இருந்தாலும் நல்ல முறையில் போட்டுத்தர வேண்டுமென்று இலாகா அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல காரியங்களை, தாழ்த்தப்பட்ட மக்களின் கருத்திற்கேற்ப செய்து கொடுத்தால் அந்த மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டுவார்கள்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் குடிநீர் வசதிக்காக, 1969-ல் 13 காலனிகளுக்குக் குடிநீர் வசதிக்காக கிணறு வெட்ட முடிவு செய்தார்கள். கிணறு வெட்டினால் நிச்சயமாகத் தண்ணீர் கொடுக்க முடியாது என்று கூறி



[திரு. மு. இராமன்]

நீரேற்று முறையில் தண்ணீர் கொடுக்க ஒரு திட்டத்தை 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்து அரசுக்கு அனுப்பி, அதை நிதித் துறையில் பரிசீலனை செய்து, அவர்கள் அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லி, மீண்டும் கிணறுகளை வெட்டுங்கள் என்று சொல்லி, திருப்பி விட்டார்கள். அந்த இடத்தில், வீராணம் கிழப்பாதி அரிசன காலனி, இளங்காடு அரிசன காலனி, கெங்கராம்பாளையம் அரிசன காலனி, நரையூர் அரிசன காலனி போன்ற காலனிகளில் அரிசன நலத்துறை மூலம் 3,000 ரூபாய் செலுத்தி, போர் குழாய் போட்டு, கிட்டத்தட்ட 5 ஆண்டு ஆகிறது. இன்றுவரையில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, அரிசன நலத்துறை அமைச்சரவர்களும் முதலமைச்சரவர்களும் ஏழை அரிசன மக்களுக்கு உடனடியாகக் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு குடிநீருக்காக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தாலும், அவர்களுக்குக் குறைந்தபட்சம் 50 லட்சம் ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனைகள் விஷயத்தில் சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, பின்னர் 49.72 லட்சம் ரூபாயாக அது உயர்த்தப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும், தென்னார்க்காடு மாவட்டத்தில் நில ஆர்ஜித வேலை தொடங்கப்படவில்லை. போதுமான அளவுக்குப் பணம் இல்லாததால், தேவையான மனைகள் வாங்கப்படவில்லை. ஆகவே, இப்போது 22 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை 50 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இலவச கல்வி வசதி. மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், பொறியியலில் படிக்கின்ற மாணவர்கள், உழவியல் கல்வி கற்கும் மாணவர்கள் ஆகியோர்களுக்கு 3 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்க இந்த ஆண்டு வகை செய்யப்பட்டிருக்கிறது. எல்லாத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் கொடுக்கின்ற உதவித் தொகை போதாது என்பதால் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அது எல்லோருக்கும் கிடைக்கவில்லை. இந்தக் கடன் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும், அதோடு அளவையும் சற்று கூட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விடுதிக் காப்பாளர்கள் நியமனம் செய்யப்படுவதில் பல தவறுகள் நடக்கின்றன. அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். விடுதிக் காப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள்

[திரு. கு. இராமன்]

வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். இன்னமையில் அது கடைப்பிடிக்கப்படவில்லை. 45 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு நல்ல அனுபவமும், மாணவர்களைக் கண்டிக்கும் திறமையும், சக்தியும் இருக்கும். ஆகையால் 45 வயதுக்கு மேற்பட்டவர்களையே விடுதிக் காப்பாளர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு அரிசன மக்களும் மலை ஜாதி மக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் 9½ கோடி ரூபாயாகும். இது மிக மிகக் குறைவான ஒரு தொகை ஆகும். இந்தத் தொகையில் கூட கல்விக்காக ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவு செய்து விடுகிறோம். மற்றச் செலவுகளுக்கு, பொதுவாகச் சொல்லப்போனால், வீட்டுவசதி போன்றவைகளுக்கு மீதித் தொகை செலவிடப்படுகிறது. இது மிக மிகக் குறைவான தொகையாகும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தொகை கூட முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல முடியும். அதற்கு நிர்வாகத்தில் ஏற்படுகிற சிக்கல்கள் காரணமாகும். இந்த நிர்வாகச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமானால் அரிசன நலத்துறை தனியாக இயங்க வேண்டும். இப்போது ரெவின்யூ இலாகாவும், அரிசன நல இலாகாவும் இரண்டறக் கலந்திருப்பதால் பல்வேறு கட்டங்களில் வேலைகள் சுலபமாக நடப்பதில்லை.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், அரிசன நலத் துறையிலே இருக்கக்கூடியவர்களில் பெரும்பகுதி ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆர்.டி.ஓ. வாக இருக்கக்கூடியவர்களை மாவட்ட நல அதிகாரிகளாக நியமிக்கிறார்கள். கிளார்க்குகள் கலெக்டர் ஆபீஸிலிருந்து நியமனம் செய்யப்படுகிறார்கள். அம்மாதிரி நியமனம் செய்யப்படுவதால் கிளார்க்குகள் முறையாக வேலைகளைச் செய்வதில்லை. வேலைக்கு வந்தாலும் அவர்கள் பல மாதம் லீவ் போடுகிறார்கள். அதுமட்டுமல்ல; இந்த இலாகாவுக்கு நியமனம் செய்யப்படுகின்றவர்கள் வேலையில் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை ஒழுங்காக நடப்பதில்லை.





மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதுவும் உரிய நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. கடந்த ஆண்டுக்கான உபகாரச் சம்பளம் இன்னும் சில மாவட்டங்களில் கொடுக்கப்படவில்லை. தொழில் படிப்புக்கு மாணவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. கடன் பெறத் தகுதி இருந்தும் வேலை சரியாக நடைபெறாததால், அவர்களுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைப்பதில்லை. வேலை ஒழுங்காக நடைபெறாததால், தொழில் கருவிகள் வாங்குவதற்கு ஒதுக்கப்படும் தொகை கூடத் தக்க சமயத்தில் கிடைப்பதில்லை. இந்தத் தொகையும் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த ஆண்டு பணம் இதுவரை வாங்கிக் கொடுக்கவில்லை; இப்போதுதான் வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்த மாதிரியான காலதாமதத்தைப் போக்க நாம் இந்த இலாகாவை, பஞ்சாயத்து அபிவிருத்தி இலாகாபோல் அமைத்து, இயக்குநர் இலாகா எப்படி தனிப்பட்ட அமைப்பாக இயங்கி வருகிறதோ அதைப்போல அரிசன நலத்துறை அதிகாரிகளைக் கொண்டு மேலிடத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் தனி இலாகாவாக இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால் தாமதத்தைத் தவிர்க்க முடியும். ஒதுக்கப்படுகின்ற தொகை முறையாகச் செலவழிக்கப்படும்; உரிய நேரத்தில் செலவழிக்கப்படும். இப்போது இந்தக் காலதாமதத்தினால் ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக இன்றையதினம் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஏதாவது சொன்னால், கலெக்டருக்கு எழுதுகிறார்கள். கலெக்டர் மாவட்ட நல அதிகாரிக்கு எழுதுகிறார். அதற்குப் பல மாதம் ஆகிறது. இம்மாதிரிக் காலதாமதம் ஏற்படுகிறது. இதை நீக்க வேண்டும்.

இன்றையதினம் அரிசன நல அதிகாரிகளாக நியமனம் செய்யப்படக்கூடியவர்கள் அரிசன மக்களோடு அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அரிசனங்கள்மீது அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் நாம் எதிர்பார்க்கின்ற பயனை அந்த மக்கள் அடைவார்கள். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தில் 154 பள்ளிகள் இருக்கின்றன; 44 ஆஸ்டல்கள் இருக்கின்றன. ஆக 198 ஸ்தாபனங்கள் இருக்கின்றன. வேலை செய்யக்கூடிய கிளார்க்குகள் 18 பேர்கள்தான். பாக்வெர்டு கிளாசை எடுத்துக்கொண்டால் 18 ஆஸ்டல்கள்தான் இருக்கின்றன; 4 கிளார்க்குகள் வேலை செய்கிறார்கள். இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும்.

அதைப்போல ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் 559 ஆசிரியர்களும் 44 வார்டன்களும் வேலை செய்கிறார்கள். மொத்தம் 605 பேர் பணியாற்றுகிறார்கள். இந்த 18 கிளார்க்குகளை வைத்துதான் அவர்கள் சம்பந்தப்பட்ட

வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதிலும் 4, 5 பேர் லீவ் போட்டு விடுகிறார்கள்; 6 மாதமானாலும் வேலைக்கு வருவதில்லை. 18 ஹாஸ்டல் இருக்கிற பாக்வார்டு கிளாசில் 4 கிளார்க்குகள் வேலை செய்கிறார்கள். இவ்வளவு பெரிய அரிசன நல இலாகாவுக்கு இன்றையதினம் நியமனம் செய்யப்பட்டிருக்கிற கிளார்க்குகள் மிகவும் குறைவு.

அதைப்போல, இன்றையதினம் ஜாதியை ஒழிப்பதற்காக நம்முடைய அரசு தீவிரமாகக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இன்றையதினம் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுகிறது; தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைப் போல நம் மாநிலத்திலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். மகாராஷ்டிராவில் ஐந்தாயிரம் ரூபாய்க்கு நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறார்கள். அம்மாதிரி கொடுக்க வேண்டும். சும்மா இருநூறு, நானூறு ரூபாய்க்குத் தங்கப் பதக்கம், அல்லது 3 சென்டு நிலம்—குழந்தைகளுக்குப் படிப்பு வசதி என்று கொடுப்பதன் மூலமாக இது ஒரு கவர்ச்சி அளிக்கக்கூடியதாக நம் மாநிலத்தில் இல்லை என்பது என் கருத்தாகும்.

இம்மாதிரி கலப்புத் திருமணம் செய்துகொண்டு ஆணாக—இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துகிறார்கள் என்றால் அவர்களுக்கு அரசாங்கம் எல்லாவற்றிலும் முன்னுரிமை அளித்து—எல்லாவிதமான வசதிகளையும் அளிக்க வேண்டும்.

சிறு தொழில் நடத்த அரசாங்கம் வட்டி இல்லாக் கடன் கொடுத்து வருகிறார்கள். அதற்காக ஒதுக்கியுள்ள 10 லட்சம் ரூபாய் மிகக் குறைவான தொகையாகும். மேலும் ரூ. 250-ல் ஆரம்பித்து 15 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஒரு காய்கறிக் கடை வைக்கக்கூட ரூ. 250 போதாது. ஆகவே, குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாய்வரை கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(திரு. கு. காமாட்சி தலைமை.)

ப்ரஸ் வைக்க 15 ஆயிரம் ரூபாய் தருகிறேன், 3 பேர்களாக சேர்ந்து வைக்க வேண்டும் என்கிறார்கள், 3 பேர்கள் சேர்வது என்பது முடியாத காரியம். ஆகவே ஒரு நபராக இருந்தாலும் ப்ரஸ் வைக்க முன்வந்தால் 15 ஆயிரம் வரை கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



இன்றையதினம் நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் ஆசிரியர்களுக்காகப் படித்துவிட்டு வேலையில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள். அரிசன நல இலாக்கா வேலையளிக்கிற ஸ்தாபனமாகவும் இருந்தாக வேண்டும். பஞ்சாயத்துகளில், பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில்—முனிசிபாலிட்டிகளில் இவர்களுக்கு வேலை கொடுப்பது கிடையாது. பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே, அரிசன நலத்துறை மூலமாக இவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பும் அளித்தாக வேண்டும். ஆசிரியர்கள்—மாணவர்களது விகிதாசாரத்தைக் குறைத்தாவது இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல இன்றையதினம் மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள்—புத்தகங்கள் ஆகியவற்றை வாங்கி ஆரம்ப காலத்திலேயே கொடுத்து விட வேண்டும்—பள்ளியாண்டு முடிகிறபோது கொடுத்துப் பயன் இல்லை. பள்ளி ஆண்டு துவங்குகிறபோது கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் கொடுக்கிற பணத்தில் பத்து இருபது தையல் மிஷின்களை மட்டும் வாங்கிக் கொடுத்து விட்டால் போதாது. இன்னும் அதிகமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அரிசன மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். மாணவிகள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கிறார்கள். அதில் பாசாவதும் கிடையாது. மறுபடியும் குடும்ப வாழ்க்கைக்கு வருகிறார்கள். அவர்களுக்குத் தையலைக் கற்றுக் கொடுத்து—மிஷினும் கொடுத்தால் குடும்பத்திற்கு வேண்டிய துணிமணிகளையும் தைத்துக்கொள்ளலாம். வெளியில் தைய்த்துக் கொடுத்தும் குடும்ப வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

தாழ்த்தப்பட்ட அதிகாரிகள்—சிப்பந்திகள் ஆகியவர்களை அடிக்கடி மாற்றுகிறார்கள்—கேள்வி முறையே கிடையாது. அந்த அளவுக்கு மாற்றுகிறார்கள். அவர்களை அனுதாப உள்ளத்தோடு பார்க்க வேண்டும். டாக்டர்களாக இருந்தாலும்—எஞ்சினியர்களாக இருந்தாலும்—சிப்பந்திகளாக இருந்தாலும்—தனி நபர்களுடைய விருப்பத்திற்கு, வேறு விஷயங்களுக்கு மாற்றுகிறார்கள். இவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு சரியாக அளிக்கப்படவில்லை. இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தான். அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால்தான், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை வைத்திருக்கிற காரணத்தால்தான், தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரலாம் என்று இந்த அரசு சட்டம் வகுத்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கு, எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவரவர்கள் தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில்தான் உத்தியோகம் கொடுப்போம் என்று சொன்னார்கள். அப்படி, தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் என்றிருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் படுபாதாளத்திற்குப் போய்விடுவார்கள். அந்த நிலை அபாயகரமானது. அவர்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டால், தி.மு. கழகத்திற்கு அந்நிலை ஏற்படும். எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கொள்கையை ஆதரிப்பதாக இல்லையென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கடந்த 4, 5 ஆண்டுகளாக நமது டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு ஆற்றிவருகின்ற பணிகளை என்னைப்போன்ற தாழ்த்தப்பட்டவர்கள் பாராட்டாமலிருக்க முடியாது. அவர்கள் இந்த சாதி இழிவைப் போக்க, தன்னுடைய மகனுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தில் உள்ள பெண்ணைத் திருமணம் செய்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள்தான் சாதியைக் கடவுள் படைக்கவில்லை, மனிதன்தான் படைத்தான் என்று உத்திரப்பிரதேசத்தில் சொன்னார்கள். நமது பெருமதிப்பிற்குரிய காந்தியடிகள் Varnasrama Dharma is a part and parcel of Hinduism என்றார். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா வழியிலே, பெரியார் வழியிலே வந்த டாக்டர் கலைஞர் அவர்கள், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் எடுத்து வருகின்ற முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட தலைவரைத் தமிழகம் போற்றியிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த மானியத்திலே நான் சில சலுகைகளைக் கேட்கும் முன்னால் டாக்டர் கலைஞர் அவர்களைப் புகழாமலிருக்க முடியாது. டாக்டர் கலைஞர் அவர்கள் மிகப் பெரிய தலைவர் என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.





Dr. Kalaignar, you are dedicating yourself heart and soul for the uplift of the downtrodden and the backward classes. Whatever may be the complex nature of the problems of the State, they could at your hands get simplified resulting in their solution.

Undaunted you have faced and won many a battle, political and other, never for a moment running away from realities or responsibilities. Crisis did not overcome you, but you revelled in them. History will give you a pre-eminent place as an eminent and popular Chief Minister and a pioneering social reformer.

என்று நான் டாக்டர் கலைஞர் அவர்களைப் புகழ்வதற்குப் பெருமைப்படுகிறேன்.

அதே சமயத்திலே என்னுடைய இந்தச் சமுதாயத்தைப் பற்றி ஒரு சில குறைகளைக் கூறி, அவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு—தொழில் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு—அதிலும் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, விவசாயக் கல்லூரியாக இருந்தாலும் சரி, மாணவர்களது செலவினங்கள் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட செலவினங்களை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். கடன் கொடுப்பதைவிட, செலவை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படுமானால் நான் பெரு மகிழ்ச்சி அடைவேன். ஏழை எளிய மக்கள் செலவினங்களைச் சரிக்கட்ட முடியாமல் தொல்லைப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகிற செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாசர்பாடியில், தேசிகாநந்தபுரம் அரிசன சங்கம் ஒன்றிருக்கிறது. அது மாதிரி எத்தனையோ சங்கங்களிருக்கின்றன. 1962-லேயிருந்தே மனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக ரூ. 13,000 கட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த நிலத்தைக் குடிசை மாற்று வாரியம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எந்த நோக்கத்திற்காக அவர்கள் ரூ. 13,000 கட்டியிருக்கிறார்களோ, அந்த நோக்கத்தில் அவர்களுக்கு வீட்டு மனையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட நலத்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சி சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடைசியாக அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர அமைக்கப்பட்ட வாரியம் சிறந்த முறையில் பணியாற்றுகிறது. இதற்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் எங்கே போனது என்றே தெரியவில்லை. காங்கிரஸ் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து நாசமாகப் போய்விட்டன. அதுபோல இல்லாமல் இந்த வீடுகள் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. இதை இன்னும் வேகமாக நல்ல முறையில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் கருதி இதுபோன்றதொரு திட்டத்தை ஏற்படுத்தித் தந்தமைக்கு நான் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக அவருக்குப் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இந்தத் திட்டம் விரைவாகச் செயல்பட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய தடைகளையும் அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வீ. இராசகோபால்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு ஏறக்குறைய 11 கோடி ரூபாயை திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறது. அதற்கு உள்ளபடியே இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்த வேண்டும் என்கிற அடிப்படையில் இந்த அரசு செயல்பட்டு வருவதற்கு நான் என் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற இந்தச் சமுதாய மக்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு ஒரே வழி கல்வி ஒன்றுதான். அத்தகைய கல்வியைத் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக அளவில் கொடுத்துக்கொண்டிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

கல்வி பயின்று வேலைக்கு வரக்கூடியவர்களுக்கு இந்த அரசு 18 சதவிகிதம் கல்வித்துறைகளிலும், தொழில்துறைகளிலும் அளித்து வருகிறது. இதுபோல தனியார் கல்வித் துறைகளிலும், தொழில் துறைகளிலும் அளிக்கப்படுவதில்லை. தனியார் துறையிலும் இதுபோல 18 சதவிகிதம் வேலையில் ஒதுக்கித்தரவேண்டுமென்று—அதற்கான ஒரு சட்டத்தையே மாநில அரசு இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திராவிட முன்னேற்றக் கழக அரசு கிணறுகள் வெட்டுவதற்காக அரிசனங்களுக்கு மானியம் கொடுக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தவரை நிலமுள்ள அரிசனங்கள் சொந்தமாகச் சாகுபடி செய்கிறார்கள். நிலமற்றவர்கள் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். நிலம் உள்ளவர்களுக்குக் கிணறு வெட்ட இரண்டாயிரம் என்று கொடுப்பது போதாது. அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல பம்பு செட்டு போடுவதற்கு அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து மின்சார கனெக்ஷன் கொடுக்க வேண்டும். ஒருசில இடங்களில் மின்சார பம்புசெட்டு போட்டுக்கொள்ளக்கூடிய அளவில் அவர்கள் இருக்கிறார்கள். விண்ணப்பித்தும் இதுவரை மின்சாரம் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். இதைக் கண் கூடாகக் காண்கிறோம். ஆகவே உடனடியாக அவர்களுக்கு பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு திட்டத்தை வகுத்து டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய இழிவைப் போக்கவேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் எடுத்து வருகிற முயற்சிகளை எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களில் அர்ச்சகர்களாகவும் வரலாம் என்கிற முறையில் ஒரு சட்டத்தையே நிறைவேற்றினார்கள். நீதிமன்றங்களினால் அது செயல்படாமல் இருக்கிறது. அதற்காகவே மாநில சுயாட்சி வேண்டும் என்று நானும் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவில்களில் அறங்காவலர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் காலத்தில் இதற்காக ஒரு போராட்டமே நடந்தது. அடிபட்டு ரத்தக் காயம் அடைந்தவர்கள் பலர். ஆனால் சட்டத்தின் மூலமாகவே இத்தகைய மாறுபாட்டைக் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தவேண்டும் என்கிற அடிப்படை பாரம்பரியத்தில் வந்திருக்கிற காரணத்தினால் இப்படிச் செய்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட, திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்தது என்று கேட்டால், உள்ளபடியே பொருத்தமாக இருக்கும். இன்றைய தினம் நாட்டிலே எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. இந்தியா முழுமைக்கும் எடுத்துக் கொண்டாலும், சமுதாயப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய கட்சி

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1975 ஏப்ரல் 4

இந்தச் சட்டமன்றத்திலே, இந்த மானியத்திலே பேசியவர்களை நான் கவனித்தேன். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் இதிலே அதிகமாக பங்கு வகித்தார்கள். சமுதாயத்திலேயிருக்கிற 6-லே 1 பங்கினரது நல்வாழ்விற்காகக் கோரப்படுகின்ற மானியத்தின்மீது விவாதம் நடக்கும் போது, பிரதம எதிர்க்கட்சியினரில் ஒருவரைக்கூட இப்பொழுது நான் பார்க்க முடியவில்லை. அவர்கள் இந்த அளவு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்மீது வைத்திருக்கிற அக்கறையைப் பார்க்கும்போது, இவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப்பட்டோர் நலனில் எந்த அளவு அக்கறை கொள்வார்கள் என்பதை வேதனையோடு எடுத்துச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இந்த விவாதத்தில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோரைச் சேர்ந்தவர்கள்தான் பேசினார்கள்.

எங்களுக்கு இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள், எங்களுக்கு இவ்வளவு சிரமங்களெல்லாம் இருக்கின்றன என்று அவர்கள் வாதாடுவதைவிட, உயர்ந்தவர்கள், உயர்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மேம்பாடு அடைந்தவர்கள், எழுந்து அவர்களும் எங்கள் சகோதரர்கள், அவர்கள் சமுதாயத்திலே சமமாக வாழவேண்டும், அவர்கள் முன்னேற்றத்திலேதான் நாட்டு முன்னேற்றமிருக்கிறது, நாட்டில் ஒரு பகுதி நைந்திருக்குமானால், அது நாட்டுக்கு நன்மையல்ல. ஆகவே, இதை யெல்லாம் செய்யவேண்டுமென்று அரசிடம் வாதாட வேண்டியவர்கள் உயர்ந்தவர்களாக இருந்தால் நான் இன்னும் மகிழ்ச்சியுற்றிருப்பேன்.

முஸ்லீம்கள் தங்களுடைய மார்க்க முறைகளிலே, வழிபாட்டு முறைகளிலே, 1,400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நபிகள் நாயகம் அவர்களின் கூற்றுப்படி, மனிதனுக்கு மனிதன், பிறப்பின் காரணமாக வேற்றுமை காட்டுவதில்லை; அதுபோல், தான் செய்கிற தொழிலின் காரணமாகவும் வேற்றுமை காட்டுவதில்லை, என்று வைத்திருக்கிறார்கள்.

நான், மெக்கா நகரத்திற்குச் சென்றிருந்தபோது, எனது மிதியடியை சரி செய்ய ஒருவரிடம் கொடுத்தேன். அவரைப் பார்த்து நானே தடுமாறி விட்டேன். ஒரு மத குருவைப் போன்று தாடியெல்லாம் வைத்துக்கொண்டு இருந்த அவரைப் பார்த்து, மிதியடியைக் கொடுக்க மறுத்தேன். ஆனால், அவரோ என்னுடைய மிதியடியைப் பலவந்தமாக எடுத்து சரிசெய்து கொடுத்தார். எனக்கு முன்பாக நின்று தொழுகை நடத்துவாரானால், அதனை மிக்க மகிழ்ச்சியோடு செய்வேன். அவரோடு ஒரே தட்டிலே சாதத்தை வைத்து உண்பதையும் நாங்கள் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம். அப்படி தாழ்த்தப்பட்டவர்களை தங்களுடைய சகோதரர்களாக, ஆக்கிக் கொள்வதிலே என்ன தடையிருக்கிறது?



1975 ஏப்ரல் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

எத்தனையோ சட்டங்களிருக்கின்றன—திட்டங்கள் போடப்படுகின்றன. அரிசனங்களை கோயில் கோயிலினுள்ளே விடுவதால் மட்டும், இந்தச் சமுதாயம் உயர்ந்து விடாது. நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்து 27 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து இருக்கின்றனவென்று சொன்னால், இந்த நாட்டிற்கோ, நம்முடைய சமுதாயத்திற்கோ அவை நன்மை தருவதாக, பெருமை தருவதாக இல்லை யென்றுதான் சொல்லவிரும்புகிறேன்.

பல பெரிய குடும்பங்கள் தாழ்த்தப்பட்டவர்களை அருகில்கூட நிற்க வைப்பது இல்லை. வட ஆற்காடு மாவட்டத்தில், முஸ்லிம் குடும்பங்களிலே பல அரிசனப் பெண்கள் வேலை செய்கிறார்கள். எந்தவித பாகுபாட்டையும் அக்குடும்பப் பெண்கள் காட்டுவதில்லை. அவர்கள் அரிசனங்கள் என்ற நினைப்பு கூட எங்கள் உள்ளங்களிலே ஏற்படுவதில்லை. அந்த அளவில் பழகிக் கொண்டிருக்கிறோம். அந்த முறைகள் எல்லா இடங்களிலும் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இவ்வளவு செய்தும்கூட, இன்னும் கூட அரிசனங்கள் முன்னேறவில்லையென்றால் அதற்கு என்ன காரணம் என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். அடிப்படையான கோளாறு என்ன? அரசாங்கத்திலே அவர்களுக்காக ரூ. 10, ரூ 11 கோடி ஒதுக்கினால் அவர்கள் முன்னேற முடியாது. ரூ. 500 கோடிக்கு அறிக்கை தயார் செய்யப்படுகிற நோக்கிலே. ஆறிலே ஒரு பங்கு சமுதாயம் பல நூற்றாண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருப்பது உண்மையிலே இந்நாட்டின் சொந்தக்காரர்களாக இருக்கிற அவர்களுக்கு ரூ. 11 கோடி ஒதுக்குவதென்பது நியாயத்தின் அடிப்படையில் இல்லை என்பதை முஸ்லீம் லீக் சொல்லித்தான் ஆகவேண்டும். இன்னும் பெரும் தொகை ஒதுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-30)

நான் முன்பு கூடப் பேசியிருக்கிறேன். கிராஷ் புரோகிராம் என்ற முறையிலே தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற ஒரு தனித்த வரியை விதித்து, அந்த வரியிலேயிருந்து பல கோடி ரூபாய்களைத் திரட்டி, இந்தச் சமுதாயத்திற்குச் செலவழித்து, இந்தச் சமுதாயம் மேம்பாடு அடையச் செய்தால், அது நாம் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடியவர்களாவோம் என்றுகூட நான் நினைக்கிறேன். இந்த மக்களிடத்திலேயே ஒரு இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் இருக்கிறது, நாம் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிற ஒரு நிலைமை அவர்களுடைய உள்ளத்திலே புகுந்து விட்டது, வாழையடிவாழையாக அவர்கள் உள்ளத்திலே வந்துவிட்ட எண்ணம் கிள்ளி எறியப்படவேண்டும். நானும் உயர்ந்தவன் தான் யாருக்கும் தாழ்ந்தவன் அல்ல என்ற எண்ணத்தை அவர்கள் உள்ளத்திலே

ஏற்படுத்தினால்தான் அவர்கள் மேம்பாடு அடையமுடியும். இந்த தாழ்வுமனப்பான்மையைப் போக்குவதற்கு அரசு செய்ய வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. நகரத்திலே பெரிய பெரிய ஓட்டல்கள் இருக்கின்றன, அந்த ஓட்டல்களிலே எல்லாம் கட்டாயமாக 20 சதவிகிதம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை சர்வர்களாக நியமிக்கவேண்டுமென்று சட்டம் போட வேண்டும். நான் ஒரு அரிசன் என்று அவர்கள் நெஞ்சிலே போர்டு போட்டுக்கொண்டு வந்து பரிமாறினால் நான் அதைச் சாப்பிடுவேன் என்று சொல்லக்கூடிய நிலைமையில் புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் அரசு கொண்டுவர வேண்டும்.

தீண்டாமையைக் கையாளக்கூடாது, கையாண்டால் தண்டனை என்றெல்லாம் போட்டிருக்கிறோம். அப்படியிருந்தாலும் இன்னும் நிலைமை மாறவில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயம் முழுவதையும் நாம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, அவன் தாழ்த்தப்படவில்லை என்று கருதப்படக்கூடிய முறையிலே பெரிய பெரிய ஓட்டல்களிலே 20 சதவிகிதம் பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களை நியமித்தால் தான் லைசென்ஸ் கொடுக்கமுடியும் இல்லாவிட்டால் கிடையாது. அப்படிச் செய்தால் தான் நீங்கள் கேட்டரிங் சர்வீசாக இருக்கமுடியும் என்ற நிலைமையைக் கொண்டுவரவேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மேலேயே எனக்கு ஒரு குறை இருக்கிறது. என்ன குறையென்றால் ஒரு சிலருக்கு உத்தியோகம் போன்றவை கிடைத்துவிடுகிறது. வாழ்க்கையிலே அவர்கள் முன்னேறிவிடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் முன்னாள் அமைச்சராக இருந்த திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் போன்றவர்கள் வாழ்க்கையில் இப்போது முன்னேறி விட்டார்கள். இப்போது சின்னசாமி போன்றவர்கள் இருக்கிறார்கள், தம்பி தேவேந்திரன் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்த்து இப்போது நீ தாழ்த்தப்பட்டவன் ஒதுங்கியிருங்கள் என்று அப்படிச் சொல்லிவிடமுடியாது. அவர்கள் என்னதான் இருந்தாலும் அவர்கள் எந்த குடிசைவாழ் மக்கள் மத்தியில் இருந்து அவர்களாலே உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள், இன்றைக்கு அவர்கள் எல்லாம் குடிசையிலேதான் வசிக்கிறார்களா? அந்த மக்கள் மத்தியிலேதான் வாழ்கிறார்களா அவர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றிவிட்டார்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன். அவர்கள் தன்னை உயர்த்திக்கொண்டவுடனே அவர்கள் மேம்பாடு அடைய உதவியாக இருந்த மக்களை மறந்துவிட்டார்கள், குடிசை வாழ் மக்கள் மத்தியிலே அவர்கள் வாழ்வதில்லை, அவர்களுடைய சுகதுக்கங்களிலே பங்குகொண்டு அவர்களுக்கு தங்கள் உள்ளங்களிலே இடம் கொடுக்கவில்லை, அவர்களால் மேம்பாடு அடைந்துவிட்டு இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவவில்லை என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது, இனிமேலாவது அவர்கள் அப்படிச் செய்ய



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக வாழ்க்கையிலே முன்னேறிவிட்டவர்கள் அப்படிப்பட்ட முன்னேற்றமான வாழ்வை குடிசை வாழ்மக்கள் மத்தியிலேயும் ஏற்படுத்துவதற்கு அவர்கள் மத்தியிலே அவர்கள் வாழ்வதற்கு ஏற்றமுறையில் அவர்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு அது ஊக்கத்தையும் தெம்பையும் தரமுடியும்.

நான் கிராம அதிகாரிகளைப்பற்றி சொன்னேன், அதனைப்பற்றி கிராம அதிகாரிகள் அசோசியேஷனிலே கண்டனத் தீர்மானம் என்னைப்பற்றிப் போட்டிருக்கிறார்கள் என்றுகூட கேள்விப்பட்டேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் ஆற்றக்கூடிய பணிபற்றிக்கூட கண்டனத் தீர்மானம் வருகிறது. நான் ஒரு கல்லை எறிந்தேன், அவர்கள் ஒரு கல்லை எறிகிறார்கள். அதிலே ஒன்றும் எனக்கு ஆச்சரியம் இல்லை. பல இடங்களிலே கிராம அதிகாரிகளாக முழுநேர ஊழியர்களாக, மாற்றுதல் பெறக்கூடிய முழுநேர ஊழியர்களாக, வில்லேஜ் முன்சீப்களாக, மணியக்காரர்களாக நியமியுங்கள். எங்களிடத்திலே அந்த ஊர் மக்கள் கைகட்டி நிற்கட்டும், இனிமேல் கிராம அதிகாரி பதவி காலியானால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலிடம் தரப்படும் என்ற சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகட்டும் திட்டத்திலே அதிகாரிகளின் கவனக்குறைவினாலே இரண்டு சமுதாயத்தினருக்கும் சிண்டு முடிகிற வேலையைச் சிலர் செய்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் ரத்தத்தோடு ரத்தமாக சகோதரர்களாக இருந்து வருகிறார்கள். அப்படியிருக்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய மதக்கோட்பாடு ஆகும். ஆனால் சில அதிகாரிகள் சிண்டுமுடிகிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிண்டுமுடிவது என்று சொன்னார்கள். அப்படியே சிண்டுமுடிவது என்றாலும்கூட சிண்டே கிடையாது, மொட்டையாக இருக்கிறது, ஆகவே எப்படி சிண்டுமுடியமுடியும் என்று கேட்கவிரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** எங்களுக்கு கிருதா விடுகிற முறையும் இருக்கிறது, அது சாத்தியம்தான்.

வீடுகளை ஊரின் மத்தியிலே கட்டிக்கொடுங்கள், வரவேற்கிறோம். 10 ஏக்கர், 20 ஏக்கர், நிலம் என்று இருந்தால் எடுத்து வீடுகளைக் கட்டிக்கொடுங்கள். புறம்போக்கு நிலமாக இருந்தாலும் வீடுகளைக் கட்டிக்கொடுக்கலாம். ஆனால்

காட்டினார்கள். அப்படிப் பிரித்துக்காட்டிச் சொன்ன பொழுது 99 இடங்கள், அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 இடங்கள், 100-க்கு 18, முடிந்து விட்டது. பிறகு அவர்கள் இங்கு சொன்னார்கள், நேற்றுகூட, ஜாதியிலே ஜாதி பிரிக்கக் கூடாது, தாழ்த்தப்பட்ட மக்களிலேயே பிரிக்கக் கூடாது, பின்தங்கிய மக்களிலேயே பிரிக்கக் கூடாது, நாதிநற்சமையாக நாம் அப்படிப் பிரித்துக் கொண்டு போராடுகிறோம் என்று. இன்றைக்கு நான் குற்றஞ்சாட்டுவது அப்படிப் பிரிப்பதே இந்த முதலமைச்சர்தான்.

அப்படிப் பிரிப்பதைப்பற்றி நான் ஆதாரம் காட்ட வேண்டுமென்று விரும்பினால், 99 இடத்தில் 18 இடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 100-க்கு 18 என்று பூர்த்தியாகிறது. ஆனால் அன்றைக்கு அவர் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. மற்றச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட்ட பதவிகளைப் பற்றிக் கணக்கிடும்பொழுது, கள்ளர் 6 பேர், மறவர் 5 பேர், அகமுடையார் 6 பேர், வன்னியர் 11, நாடார் 8, பிள்ளைமார் 1, முஸ்லீம் 7, செங்குந்தர் 3, கௌரா 3, படகா 1, வீரக்குடி வெள்ளாளர் 2, சலவைத் தொழிலாளி 2, பாக்கநாடு குல நத்தமான் 2, துளுவ வெள்ளாளர் 1, குறும்பர் 1, ஊப்பனர் 1, தொண்டமான் 1, வடுகர் 2, தேவாங்கர் 1, வலையர் 1, சங்கிலி 1, யாதவர் 4, சேனைத் தலைவர் 1, செட்டி பாலாஜி 1, வேட்டுவக் கவுண்டர் 1, மருத்துவர் 1, ஒட்டர் 1 என்று பின் தங்கிய மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. 99-இல் 69 பின்தங்கியவர்களுக்கு, ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18. ஏன் அவர்களுக்கு 69 என்று கேட்கமாட்டேன், அதைச் சொன்னால் அவர்களுக்கு ஏனோ அலர்ஜி என்று சொல்லலாம். ஆனால் 18-ஐ, 31-ஐ, 69 ஆக வரையறை யில்லாமல் கொடுக்கும் அந்த சுவு இரக்கம் பெற்றுள்ள அந்தக் கை படு பாதாளத்தில் இருக்கின்ற அந்த மக்களுக்கு—அவர்களோடு சம்பந்தியாகி விட்ட பிறகும்—18-க்கு மேலே போகாமல் ஒரு 'கட்', கரெக்டாக 18 என்று போடுகிறீர்களே, அது நியாயம்தானா என்று கேட்கிறேன்.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் செய்தது, அரசு அல்ல. தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் மட்டும் பின்தங்கிய மக்களுக்குத் துருவித் துருவிப் பார்த்து, பட்டியலை வைத்து வைத்துப் பார்த்து குறும்பர், தொண்டமான், வடுகர், சேனைத் தலைவர் என்றெல்லாம் பார்த்துப் பார்த்து 69 இடத்தை, 31-ஐயும் மீறி கொடுக்க மனமிருக்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யும் அரசு, அகில இந்தியாவிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தலைவராக வேண்டுமென்று விரும்புகிற முதலமைச்சர் 18 என்று வரையறுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோடு கட்டுவதில் நியாயம் என்ன





இருக்கிறது? இதுதான் என்னுடைய நியாயமான கேள்வியாகும். அதையும் 18-க்கு மேல் 28, 30 என்று உயர்த்திக் கொடுத்திருந்தால் நான் இந்த அரசாங்கத்தையும் பாராட்டுவேன், முதலமைச்சரையும் பாராட்டுவேன். ஆனால் அன்றைக்கு அவர் பக்கத்தில் நான்காம் இடத்தில் அமர்ந்திருந்தேன், அதனால் வாய் மூடிக் கிடைப்பதைத் தவிர பேச முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகி நம்பர் ஒன் இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கிற கருணாநிதி அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அர்ச்சகர் அர்ச்சகர் என்று இங்கே பேசுகிறார்கள். நாம் கொண்டு வந்த சட்டம் என்ன தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆலயத்திலே அர்ச்சகராக இருக்க முடியாது என்று எக்ஸிஸ்டிங் சட்டமாக இருந்து அதை மாற்றி, எல்லா ஜாதிக்காரர்களும் அர்ச்சகராக சட்டம் இருக்கும்பொழுது ஏனோ தாழ்த்தப்பட்ட மக்கள் அர்ச்சகராக இருக்க முடியவில்லை என்று மாற்றி தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று போடப்பட்ட சட்டமா அது?

இந்த மன்றத்திலே பேசுகின்ற ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களையும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களையும் அத்தனை பேர்களையும் நான் கேட்கிறேன், அன்றைக்கு நாம் போட்ட சட்டம் பரம்பரை பரம்பரையாக ஆலயத்திலேயிருந்து அர்ச்சகம் செய்யலாம் என்ற முறையை மாற்றி யார் வேண்டுமானாலும் அர்ச்சகராக வரலாம் என்றுதான் போட்டோமே தவிர, செட்டியாரோ, நாயுடுவோ அல்லது வேறு பின்தங்கிய சமுதாய மக்கள் அத்தனை பேரும் அர்ச்சகராக வரலாம் என்றுதான் போட்டிருக்கிறோம்.

ஆலய ஆகம விதிகளின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் வரக்கூடாது என்று இருந்து அதை மாற்றி புதுச் சட்டம் போட்டு, தாழ்த்தப்பட்ட மக்களாக இருப்பவர்கள் அர்ச்சகர்களாக வருவதற்கே இந்தச் சுயமரியாதைப் பரம்பரை உணர்ச்சி கொண்ட அரசு சட்டமாக மாற்றியது என்று சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சி கொண்டிருப்பேன். இன்றைக்கு அந்த வார்த்தையை நான் கூறமாட்டேன். இதை இங்கு மட்டுமல்ல சட்டமன்றத்திலேயும் பேசுகிறார்கள். தேர்தல் காலத்திலேயும் செவி கொடுத்துக் கேட்க முடியவில்லை. ஏன், இங்கே வந்திருக்கின்ற அமைச்சர்கள் அர்ச்சகராக வரமுடியுமா? என்னவோ உயர்ந்த ஜாதிக்காரராக இருக்கிற அறநிலைய அமைச்சர் அர்ச்சகராக வரமுடியுமா அல்லது சுகாதாரத் துறை அமைச்சரவர்கள் அர்ச்சகராக வரமுடியுமா அல்லது உயர்ந்த ஜாதிக்காரராக இருக்கின்ற கல்வியமைச்சரவர்களோ அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களோ அர்ச்சகராக வர முடியுமா? வர முடியாது.

[திரு. ஏ. கே. அப்துல் [illegible]] [1975 ஏப்ரல் 4

வேண்டுமென்கிறோம். ஐ. 3 ஏக்கர் என்று முஸ்லிம் சமுதாயத்தினருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்து அதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று [illegible] சில அதிகாரிகள் [illegible] விடுகிறார்கள். ஆனால் அவர்கள் [illegible] தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிலம் கேட்கிறார்கள், [illegible] [illegible] என்று [illegible] இடத்திலே [illegible] நிலைமை இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்திலே ஆலங்காயத்திலே [illegible] பாட்சா விஷயத்திலே இந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த பிரிவு முடிகிற வேலை செய்கிற அதிகாரிகள் விஷயத்திலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே [illegible] தர்காவுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது, அருகாமையிலே ஒரு இத்தாவுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது, அதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்—ஆனால், அது வேண்டாம் தர்காவுக்குச் சொந்தமான அந்த புனிதமான நிலம் தான் வேண்டும் என்று முஸ்லிம் சமுதாயத்தைப் புண்படுத்தக் கூடிய நிலைமையிலே செய்கிறார்கள். அது வேண்டாமென்று வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

வடபுலத்திலே மத்ய உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே சில பகுதிகளுக்கு சென்றபோது [illegible] சேர்ந்த லக்ஷ்மீப் அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு சென்றபோது தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்திலே டாக்டர் கலைஞர் உயரிய நோக்கம் கொண்ட [illegible] இருக்கிறார். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அநேக நன்மைகளைச் செய்கிறார்கள். இங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். குடியாகக் கட்சியில் டாக்டர் கலைஞரைப் போன்ற தலைவர்கள் இல்லை. அப்படியிருந்தால் [illegible] போராட்டத்திலே நாங்கள் நிச்சயமாக வெற்றிபெற்று தாழ்த்தப்பட்ட மக்களாக தொடர்ந்து இருக்கமாட்டோம் என்று டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார்கள். நாங்கள் கேட்டு வந்தோம்.

ஆகவே டாக்டர் கலைஞர் அவர்கள் வடபலங்களிலேயும் இந்தமாநில அளவிலே மட்டுமல்லாமல் அகில இந்திய அளவிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் முன்னேற வழிவகை காண வேண்டும், நீங்கள் வாழவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

**திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே சில முக்கியமான கருத்துக்களை நான் சொல்லவிரும்புகிறேன். அதற்காக எனக்கு அதிகக் குறுக்கீடுகள் இருந்தாலும் தாங்கள் அவைகளைத் தவிர்த்து அதிகமான நேரத்தைக் கொடுக்கவேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடுகள் இல்லாமல் பேசப்பாருங்கள். நேரம் அதிகமாக இல்லை, 10 நிமிடத்திலிருந்து 15 நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள். மாலையிலேயேறு சட்ட மன்றக்கூட்டம் இருக்கிறது, ஒரு மானியம் இருக்கிறது, ஆகவே சீக்கிரம் முடித்தால்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கமுடியும். கான்ட்ரோவர்சி இல்லாமல் பேசுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** உண்மைக்குப் புறம்பானவற்றை நான் சொன்னால் குறுக்கிடலாம், ஆனால் உண்மையைச் சொல்லும்போது சில வேதனைகள் எழத்தான் செய்யும், ஆனால் குறுக்கிடக்கூடாது.

இந்த மானியத்திலே அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அமைச்சர் தந்திருக்கிற கருத்துக்களைப் பாராட்டினார்கள். இது ஒரு வழக்கம். நான் அமைச்சராக இருக்கும்போது இப்படித்தான் சில காரியங்கள் சென்ற ஆண்டு நடந்ததைவிட அதிகமாக இருக்கின்றன, இன்ன இன்ன திட்டங்களுக்காக இன்ன இன்ன ஒதுக்கீடுகள் செய்திருக்கிறோம் என்று இருக்கிறது, இங்கே பேசிய பல பேர்கள் எத்தனையோ ஆண்டுகளாக அவலநிலையில் இருந்த சமுதாயத்தின் துன்பங்களைப் போக்குவதற்கு அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நானும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். ஆனால் ஒதுக்குகின்ற நிதி போதாது, டாக்டர் கலைஞர் மற்றவர்கள் பாராட்டுவதைப் போல் இருந்தால், நல்ல அரசாக இருந்தால் இது போதாது என்று கொடுக்கலாம், டாக்டர் கலைஞர் போன்றவர்கள் கொடுக்கலாம், மனம் இருந்தால் மார்க்கம் உண்டு, ஆனால் யாருக்கும் செய்ய அவருக்கு மனம் இருக்கிறது, ஆனால் பரிதாபத்திற்குரிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ய மனம் இல்லை, அதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், அதை நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே இங்கே பேசுகிறார்கள், அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது அவர்கள் சொன்னார்கள், என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறீர்கள், நான் தாழ்ந்தப்பட்ட மக்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் எவ்வளவோ நன்மைகளையெல்லாம் செய்திருக்கிறேனே என்றெல்லாம் எடுத்துச் சொல்லி தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் [illegible] பதவிகளுக்கு அளித்துள்ள அந்த ஒதுக்கீடுகளையெல்லாம் படித்துக்

அந்த லெட்டர் போட்டோ ஸ்டாட் காப்பி என்னிடம் இருக்கிறது. அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர் அல்ல, கையெழுத்துப் போடத் தெரியாதவர் அல்ல. தன் கைப்பட அவர் எழுதியிருக்கிறார்—

"திருத்தணி கோயில் தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்டுள்ள பின் புகார் குறித்து எனது வாக்கு மூலத்தை என் சொந்தக் கையெழுத்து மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். 2—4—1973 அன்று திருத்தணி தேவஸ்தான பயணிகள் விடுதியில் என்னை அழைத்துக் கொண்டு போய் ஜெகதீசன் தங்க வைத்தார்—அங்கே கோயில் தர்மகர்த்தா சந்தேகித்ததாகத் தெரிகிறது. இது குறித்து ஜெகதீசன் ஆத்திரம் அடைந்தார். கோயில் நிர்வாகிகள் தர்மகர்த்தா மீது புகார் கொடுக்கும்படி ஜெகதீசனைத் தூண்டினார்கள். புகார் மனுவில் என்னையும் கையெழுத்துப் போடும்படி வற்புறுத்தினார்கள். நானும் கையெழுத்துப் போட்டேன். ஆனால் உண்மையில் நாங்கள் தேவஸ்தான பயணிகள் விடுதியில் தங்கியிருந்த 18-ம் எண் அறைக்கு யாரும் வரவும் இல்லை. என்னிடம் யாரும் தகாத முறையில் நடந்துகொள்ளவும் இல்லை. என்னைத் துன்புறுத்தவும் இல்லை. தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்ட புகார் அபாண்டமானது. இந்தப் புகார் பெரிதாக்கப்பட்டு தர்மகர்த்தா பழி வாங்கப்பட்டிருப்பது அறிந்து மிகவும் வருந்துகிறேன். ஜெகதீசன் என்பவனுடைய கெட்ட நடவடிக்கைகளையும் திருட்டுத் தொழிலையும் உணர்ந்து நான் மனம் திருந்தி இப்போது என் கணவனுடன், என் குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகிறேன். நான் நேரடியாக வந்து வாக்குமூலம் கொடுக்க முடியாத குடும்ப சூழ்நிலையில் இருக்கிறேன். மன்னித்தருளும்படி தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தர்மகர்த்தா மீது கொடுக்கப்பட்ட புகார் அபாண்டமான பொய் என்பதை தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்—சாந்தகுமாரி"

விசாரணைக்கு இந்த வாக்குமூலம் கொடுத்த பெண்ணையும் கூப்பிடவில்லை, ஜெகதீசனையும் கூப்பிடவில்லை, மற்றவர்களையும் கூப்பிடவில்லை. வழக்கைத் தொடுத்தது யார்? எக்சிக்யூட்டிவ் ஆபீசர். விசாரணை பண்ணுது தீர்ப்புக் கூறியதும் அவர்தான். இதிலேயும் அப்பீலுக்கு வழக்கு மன்றம் செல்வார்களானால் சின்னசாமி கேஸ் போல்தான் இதுவும் போகும்.

காரணம் என்ன? அவசரம். எதாவது சொல்ல வேண்டும். பதவி நீக்கம் செய்யப்பட்டவரை சஸ்பெண்ட் செய்திருப்பதாக சரியாக விசாரிக்காமல் முதலமைச்சர் அவர்கள் இங்கு சொல்லிவிட்ட காரணத்தால், பின்னர் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்ற காரணத்தால் செய்ததாகச் சொல்லுகிறார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் பழி





வாங்குகிறார் முதலமைச்சர். எதிர்க்கட்சிக்காரர்கள் என்னென்னவோ சொல்லுகிறார்கள். அமைச்சர் ப.உ.ச. மீது சொல்லாத குற்றச்சாட்டா? மணலி கந்தசாமி சொல்லிவிட்டார் என்பதற்காக அந்தத் தாழ்த்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கிற நீங்கள் அமைச்சர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இப்போது இருக்கிற முதலமைச்சருக்கு நல்லெண்ணம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பால் பண்ணை பற்றிக் குறிப்பிடும்போது 6 லட்சம் ரூபாய் கடன் பற்றிக் கூறப்பட்டது. (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே 15 நிமிஷம் ஆகிவிட்டது. ஒரு மணிக்குள் முடித்து விடுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** ஒரு லட்சம் கடன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் கடன் எப்படித் தருகிறார்கள்? எந்த வகையில் தருகிறார்கள்? அரிசன நலத் துறை அமைச்சர் 10 சொசைடிக்குப் பணம் கேட்டார்—நான் அமைச்சராக இருக்கும்போது, காரம்பாடி சொசைடிக்கு நிதி உதவி கேட்டார். இலாகாவில் பரிசீலனை செய்யப்பட்டு பப்ளிக் டிப்பார்ட்மெண்டில் எழுதுகிறார்கள்—

'தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இந்தப் பணத்தை பெற்றுக் கொள்ளுங்கள்; அரசாங்கத்தில் நிதி இல்லை'

என்று.

சமூக நலத் துறைச் செயலாளர் எழுதுகிறார்—

I personally consider that the scheme for tre provision of loan from the nationalised bank is an eye-wash. So, Government should provide finance.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பணம் வாங்கி இதுபோன்ற திட்டங்களைச் செய்வது என்பது வெறும் கண்துடைப்பு. அவர்கள் கொடுக்க மாட்டார்கள்—

So, the Government should provide finance. Finance is really the problem. அதே வார்த்தை அல்ல. கருத்து இதுதான். நீங்கள் ஃபைலை எடுத்துப் பாருங்கள்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 ஏப்ரல் 4

ஆகவே, அந்தந்த பேர்களுக்கும் சேர்க்கத்தான் அதைச் செய்தோமே தவிர, வேறோ ஆதி திராவிடர்களுக்கு மட்டும் வழி வகுத்ததைப்போல ஒரு தோற்றத்தைக் காண்பிக்கிறீர்கள். காரணம், அவர்களுக்கு காலத்திலே தேர்ச்சி உண்டு, எழுத்து முறையிலே தேர்ச்சி உண்டு, பேச்சிலே தேர்ச்சி உண்டு. அவர்கள் இப்படி நாட்டு மக்களின் மத்தியிலே சொல்கிறார்கள். நான் மனம் வெதும்பிக் கேட்கிறேன், இப்படிச் சொல்வதால் என்ன ஆகிறது? மற்ற ஜாதிக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள்? எல்லாப் பதவிகளும் அவர்களுக்குத்தான், பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாத அர்ச்சகர் பதவிகளும் அவர்களுக்குத் தான் என்று சொல்வதால் எங்கள் மீது மற்றவர்களுக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்படுகிறதே தவிர நன்மையேயோ பார்த்தால் ஒன்றும் இல்லை.

ஆனால் எவ்வளவு தூரம் வஞ்சனையாக நடக்கிறது? இதைப்பற்றியெல்லாம் சொல்வதற்கு, அவைகளை எனக்கு நேரம் தாருங்கள். நான் அமைச்சரவைகளைக் கூடக் கேட்டுக்கொள்கிறேன், அவர்களுடைய நேரத்தையாவது கொடுங்கள், உறுப்பினர்கள் அந்த நேரமும் பேசிவிட்டார்கள்.

ஜெகதீஸ்வரி என்ற பெண், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்—தீப்பொறிகள் கட்சி—அவர் அர்ச்சகர் பட்டத்தை இங்கே வைக்க வேண்டுமென்று ஏதோ அறிக்கைத் தண்டை விடுகிறார்கள். இந்த சட்டமன்றத்திலே இதுவரையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது கிடையாது. அர்ச்சகர் பட்டத்தை வைக்க வேண்டுமென்று ஒரு பெண், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் ஒரு கோரிக்கைக்காக ஏதோ அறிக்கையைப் போட்டார்கள். என்ன செய்தார்கள் அவர்களை? ஒரு அமைச்சரின் தலைவர் அவரை அடித்துக் கொன்றுபோட்டு சாதாரணக் குறையிலே வைத்தார். பிறகு அவரை முன்னவர் அவர்கள் எழுந்து இரண்டு வார சிறைத் தண்டனை என்று சொல்கிறார்கள். விசாரிக்கவில்லை. யார் என்று கேட்கவில்லை. நெடுஞ்செழியப் பாண்டியன் அன்றைக்கு நீதி கெட்டபொழுது செத்துவிட்டான். ஆனால் அதை முன்னவர் நெடுஞ்செழியனே இரண்டு வாரம் தண்டனை கொடுத்தார். அது தொடரா வேண்டாமா அனைவருக்குமே?

ஆனால் அதேபோல, மாணவர்கள் ஆண்டறிக்கை போட்டதற்கு, அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தும் ஆண்டறிக்கை போட்டதற்கு, அந்த மாணவர்களை இந்த இடத்திலேயே மன்னிப்போம், மறப்போம், பெருந்தன்மைக்காரர்கள் நாம என்று பேசி மாணவர்களை மன்னிக்கிறீர்கள். தாழ்த்தப்பட்டவர்களை [illegible] ...ற்றவர்கள் என்றால் அவர்களுக்கெல்லாம் [illegible]



1975 ஏப்ரல் 4] [திருமதி சத்தியவாணிமுத்து]

என்றால், முதல் குற்றம் செய்த ஜெகதீஸ்வரியை அல்லவா மன்னித்திருக்க வேண்டும், அப்படிச் செய்யாதது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு காட்டுகிற தாவைநீதி அல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

அறங்காவலர்களை நியமிப்பது பற்றி எடுத்துக்கொண்டால் சட்டம் ஐந்தில் ஒன்று கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. எப்படிக் கொடுத்தார்கள்? கொடுத்த அறங்காவலர்களையாவது பழிவாங்காமல் விட்டார்களா?

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திருத்தணி அறங்காவலரைப்பற்றி தவறான கருத்தைச் சொல்லியிருக்கக் கூடாது. நடந்தது வேறு. ஆனால் அன்றைக்கு முதலமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கூறியது வேறு. 3-4-1973-இல் திருத்தணி அறங்காவலர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது, கற்பழித்ததாக ஒரு வழக்கு. 26—4—1973-இல் அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். 15 ஆம் தேதிக்குப் பிறகு அவர் அப்பீல் செய்கிறார். விசாரணை 30-6-1973-இல் நடக்கிறது. 12-7-1973-இல் தீர்ப்பு கூறப்படுகிறது. ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார்? 10-8-1973-இல் இந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள், யார் அந்த அறங்காவலர், ரோட்டில் நிறுத்தி அடிக்க வேண்டும், தம்பதிகளாக வந்தபொழுது கற்பழித்துள்ளார் என்றெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் எழுதியிருப்பதாகக் கூறினார்கள். உடனே நமது முதலமைச்சரவர்கள் கேட்டாரா? விசாரித்தாரா? அவையிலேயிருப்பவர்களையெல்லாம் கேட்டாரா? உடனே இங்கே சொல்கிறார், இந்த அறங்காவலர் பதவி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறார், சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். நடந்தது என்ன? 10—8—1973-இல் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். அவர் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர், நான் அவருக்கு எடுத்தேன், கவிழ்த்தேன் என்று தீர்ப்புக் கூறமாட்டேன், விசாரித்துத்தான் தீர்ப்பு கூறுவேன் என்று சொன்னார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் நடைபெற்றது என்ன? ஏற்கனவே, 23-7-1973-லேயே அவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கும் அறங்காவலரை ஒரு மாதம் கழித்து முதலமைச்சர் அவர்கள் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். பிறகு விசாரணை நடக்கிறது. விசாரணை என்றால் யாராவது கூப்பிட்டு விசாரித்தார்களா? அறங்காவலர்கள் என்னோடு இருந்தார்கள் என்று அந்த சாந்தகுமாரி சொல்கிறார். எந்தப் பெண் கற்பழிக்கப்பட்டதாகச் சொன்னார்களோ அந்தப் பெண்ணே இல்லையென்று சொல்லியிருக்கிறார். தர்மகர்த்தா திருவேங்கடம் என்பவர் மீது கொடுக்கப்பட்ட புகார் பொய் புகார் என்று கூறியிருக்கிறார். அவர் கடிதமே எழுதிக் கொடுத்திருக்கிறார்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தரமாட்டார்கள். அது 'ஐ வாஷ்' தான் என்று சொல்லுகிறார்கள். அதிலே நான் எழுதுகிறேன்—

"I agree with the Social Welfare Secretary. C.M. may kindly decide."

'பசுமதி பிட்சாந்தேகி' என்று பணம் கொடுங்கள் என்று முதலமைச்சரிடம் கேட்கிறேன்.

சி.எம்.-க்கு ஃபைல் போகிறது. அவர் என்ன சொல்லி இருக்க வேண்டும்? செயலாளர் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பணத்தை வாங்கி திட்டத்தைச் செயலாற்ற வேண்டுமென்றால் அது 'ஐ வாஷ்' என்று சொல்லுகிறார், ஆகவே, அரசிலிருந்து அதற்குப் பணம் கொடுங்கள்" என்று சொல்லியிருந்தால் அவரைப் பாராட்டி இருப்பேன். இறுதியாக செயலாளர் எழுதியதை எடுத்துக்கொள்ளாமல் பப்ளிக் டிப்பார்ட்மெண்டில் சொன்னார்களே, அந்த தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வாங்கிக்கொள் என்று சொல்லி விட்டார். எங்கே வாங்குவது?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் மனை என்றால் ஐயாயிரம் வீடு கட்ட ஒரு கோடி ரூபாய் ஆகும். மூவாயிரம் என்றால் ஐயாயிரம் வீடு கட்ட 1½ கோடி ரூபாய் ஆகும். பத்து லட்சம் வீடுகள் கட்ட எத்தனை கோடி ரூபாய் ஆகும்? பத்திரிகையில் அரிசனங்களுக்கு வீடுகள் என்று பெரிய விளம்பரம். அதைப் பார்த்துப் பார்த்து இருக்கிற மற்ற சாதிக்காரர்கள் எங்கள் பேரில் வயிற்றெரிச்சல்படுகிறார்கள். அப்படி உண்மையிலேயே செய்தாலும் பரவாயில்லை. இங்கே 10 வீடுகள், அங்கே 20 வீடுகள் என்று மொத்தமாக எல்லாம் சேர்த்தால் ஒரு வருஷத்திற்கு 5,000 வீடுகள் கட்டப்படுமோ என்னவோ தெரியாது. பத்திரிகையில் வருவது என்ன? ஒரு லட்சம் வீடுகள் இந்த ஆண்டு. எத்தனை காலத்தில் இது வரப் போகிறது? இப்படி விளம்பரங்கள் செய்கிறார்களே தவிர உண்மையிலேயே நல்ல காரியங்களைச் செய்கிறார்களா என்றால் இல்லை.

ஆரியசங்கரன் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர் லாரியில் அடிபட்டுச் செத்தார். லாரி வேண்டுமென்றே வந்து அவரை இடித்தது. ஆரியசங்கரன் வழக்கு, போலீஸ் வழக்கு என்னவாயிற்று? தனிப்பட்ட முறையிலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. போலீசாரும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். வேண்டுமென்றே லாரி வந்து மோதி சாகடித்தது. வழக்கு என்ன ஆனது?

நாகர்கோயிலில் இருக்கும் வக்கீல்—போலீஸ் ஸ்டேஷனில் சாதிப் பெயரைச் சொல்லிக் கேவலமாகத் தாக்கினார்கள். அதைக் கண்டித்து தலைவர் பொன்னப்ப நாடார் எல்லாம் சேர்ந்து ஊர்வலமாகச் சென்றார்கள். அந்த





வழக்கு என்னவாயிற்று? சாதிப் பெயரைச் சொல்லி அடித்த போலீஸ்காரர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஆதித் திராவிடரை அடித்ததற்கு வழக்கு இல்லை.

நிலம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னிடம் பல புகார்கள் இருக்கின்றன. கத்தை கத்தையாக இருக்கின்றன. நேரம் இல்லை. பொன்னேரி பக்கத்திலுள்ள தத்தமஞ்சிகொள்ளுநர் காலனியில் மூன்று ஆண்டு காலமாக 15 ஏக்கர் நிலத்தைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்தார்கள். சிவாநந்த முதலியார்—தி.மு.க., முதலமைச்சரைத் தெரிந்தவர்—புல்டோசரை வைத்து நிலத்தில் அடித்து அதிலே இருந்தவர்களை, உழுது பயிரிட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களைத் துரத்தியடித்து விட்டார். யாரிடத்தில் போய்ச் சொல்லுவது? அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு இல்லை. சரியான உயர்வு இல்லை. சட்டங்கள் ஒழுங்காகச் செயல்படுத்தப்படவில்லை.

அமைச்சர்கள் இன்றைக்கு சாதியைத் தூண்டுகிற அளவுக்கு சாதிக் கட்சியிலே துணிச்சலாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். சாதியை வளர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லும் அளவுக்கு நிலைமைகள் வளர்ந்து வருகின்றன. நேரம் இல்லாத காரணத்தால், சொல்ல வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருந்தாலும் இத்தோடு முடித்துக்கொள்கிறேன். கொடுத்த நேரத்திற்கு நன்றி.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல மானியம் ஏதோ இன்றைக்கு வந்தது நாம் இதை இன்றைக்கே முடித்துவிடுகிறோம் என்று சொல்கிற அளவிற்கு நாட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். அதேபோல் அப்படி இந்த மன்றத்தில் இருக்கிற யாரும் கருதமாட்டார்கள் என்றும் நினைக்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்ற ஒரு இனம் இந்த நாட்டில் இருக்கிறது என்று செம்ப்ஸ்போர்ட் கண்டறிந்து, மனிதனை மனிதனாக பாவிக்காத மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, ஒரு சீர்திருத்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் எந்த வகையிலும் மற்றவர்களோடு சம அந்தஸ்து பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று ஒரு சீர்திருத்தத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆரம்பித்த சீர்திருத்தம் சைமன் கமிஷன் வருகைக்குப் பிறகு ஒரு உருவெடுத்தது. சைமன் கமிஷனோடு தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெருந்தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மூன்றுக்கு மேற்பட்ட மாநாடுகளை நடத்தி இந்திய உபகண்டத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் ஏன் தாழ்ந்தார்கள் என்றும்

தாழ்த்தியவர்கள் யார் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி தாழ்த்தப்பட்டிருந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் சுட்டிக்காட்டி இது அநியாயம், அக்கிரமம், இது ஒழியவேண்டும் என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற அளவில் ஆங்கிலேயர்களின் கண்ணுக்கும், காதுக்கும், இவைகளெல்லாம் படும்படிச் செய்தார்கள்.

அந்த அடிப்படையில் ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக பள்ளிக்கூடங்களைத் திறக்க ஆரம்பித்தார்கள். அரிசன நலப் பள்ளிகள் என்ற பள்ளிகளை, லேபர் இலாகா என்ற ஒரு இலாகாவை உருவாக்கி லேபர் பள்ளிகளைத் திறந்தார்கள். பெயர் மாற்றம் 50-ல் ஏற்பட்டது. இந்த நிலையில் இந்த சமுதாயத்திற்கு என்னென்ன தேவை, எவை எவைகளை நிறைவேற்றினால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மற்ற மக்களோடு சம அந்தஸ்து பெறமுடியும் என்று பெம்பர்ஸ்போர்ட் சீர்திருத்தம், ஸைமன் கமிஷன் சுற்றறிக்கை, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட போராட்டங்கள் இதற்கிடையில் மகாத்மா காந்தி அவர்கள் தன்னுடைய சுதந்திரப் போராட்டத்திற்கு இந்த மக்களுடைய துணை இருக்க வேண்டும் என்று, இந்த மக்களைக் காட்டி சுதந்திரம் வாங்குகிற ஒரு நிலையும் ஏற்பட்டது. இந்திய உபகண்டத்தின் நிலை லண்டன் பாராளு மன்றத்தில் ஊசலாடுகிறது, ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால் ஒழிய—பாகிஸ்தானுல் ஏற்படுகிற தடை மற்றத் தடைகள் உள்ளன—அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் சுதந்திரம் கிடைக்காமல் போனுல் என்ன செய்வது என்று கண்ட காந்திஜி அவர்கள் உடனடியாக அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். இருவருக்கும் ஏற்பட்ட விவாதங்களின் அடிப்படையில் தான் தனித் தொகுதி ஏற்பட்டு பின்னர் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அவர்கள் உருவாக்கிக் கொடுத்த, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உருவாக்கிக் கொடுத்த அரசியல் அமைப்புச் சட்டப்படி அந்தந்த மாநிலங்கள் தனித்துச் செயல்பட வேண்டும்.

அப்படி தனித்து செயல்படுகிற விதத்தில் இருபத்துநாலு மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த என்னென்ன வகைகளில் அவை செயல்படுகின்றன என்று பார்க்கும்போது, காந்திஜி அவர்களின் நினைவை வைத்தோ அல்லது டாக்டர் அம்பேத்காரின் குறிக்கோளை வைத்தோ அல்லது தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவர்களாக விளங்கிய பகுத்தறிவுவாதிகளின் கருத்துக்களை மனதில் வைத்தோ. எந்தெந்த மாநிலங்கள் என்னென்ன செய்திருக்கின்றன என்று பார்க்கும்போது இவர்கள் அனைவரும் சொன்ன கருத்துக்களை ஒன்றாக இணைத்து கல்வி சலுகைகள், பொருளாதாரச் சலுகைகள் இவற்றையெல்லாம் வழங்கி இவர்களின் நிலையை மேம்படுத்த பெரும்பாலான



V21,31 N75
31(75.57:2



முயற்சிகளை மேற்கொண்டுள்ள மாநிலம் எது என்றால் அதுதான் தமிழ்நாடு மாநிலம் என்பதை புள்ளிவிவரங்கள் நமக்கு காட்டும்.

1974-75ம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர்—மலை ஜாதி வகுப்பினர் கமிஷன் அறிக்கையில் இவர்களின் நலனுக்காக அதிகப்படியாக பணம் ஒதுக்கியுள்ள மாநிலம் தமிழ்நாடு மாநிலம்தான் என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. யார் எதைச் சொன்னாலும் சரி எதிர்த்துச் சொல்கிறவர்களை எதிர்த்து சொல்ல முடியாதா? சொல்ல வேண்டாம். நாம் சொல்வதல்ல வேதம். நாட்டு மக்கள் அனுபவிக்கிறார்களே அதுதான் வேதம். அவர்கள் புரிந்துகொள்வார்கள் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார், அன்புள்ளவர்கள் யார் அன்பில்லாதவர்கள் யார், முயற்சி எடுக்கிறவர்கள் யார் முயற்சி எடுக்காதவர்கள் யார், திறமையுள்ளவர்கள் யார் திறமை இல்லாதவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொண்டு அவர்கள் யாரை ஆதரிக்கிறார்கள் என்பது வேறு விஷயம்.

இந்த மாநிலத்தின் முதல்வர் அவர்கள் எந்த அளவில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சொல்ல வேண்டும். அம்மையார் அவர்கள் எனக்குச் சொந்தக்காரர். நான் அவர்களிடம் பணிவாக இருப்பவன். இன்றைக்கும் எங்களது உறவை யாராலும் பிரிக்க முடியாது. அரசியல் உறவு வேண்டுமென்றால் வேறுவிதமாக இருக்கலாம். அரசியல் சார்பில் கேட்காமல் சமூகத்தின் சார்பில் கேட்கிறேன். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக இருந்தவர்கள். ஏழு ஆண்டுகளாக இந்த மன்றத்தில் பொறுப்பேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில் நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். 18 இடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்[illegible]டுத்தார்கள். 69 பிற்பட்டோருக்கு, முற்பட்டோருக்கு [illegible] இடம், ஆக இப்படி 99 இடங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 18 சதவிகி[illegible] என்றுதான் இருக்க வேண்டுமா அதற்கு மேல் நீளக் கூடாதா என்று [illegible] அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். நீளும். அவரே இந்தப் பட்டியலைத் தயாரித்திருந்தால் வேறுபாடு நிரம்ப இருக்கும். இது சர்வீஸ் கமிஷன் செய்வது.

61706

**திருமதி சத்தியவாணிமுத்து:** முதல் அமைச்சர் அவர்கள் செய்தால் இன்னும் அதிகமாக இருக்கும் என்று சொன்னார்கள். சர்வீஸ் கமிஷன் எப்படி மீறலாம்? 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு என்றிருப்பதை [illegible] கமிஷன் மீறலாமா? அதை மீறியிருக்கும்போது ஏன் தாழ்த்தப்பட்ட [illegible]கள் [illegible]யத்திலும் மீறிப் போகக்கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் முன்னேறிய [illegible]களுக்கு உள்ளதை எப்படி பின்தங்கிய மக்களுக்கு சர்வீஸ் கமிஷன் கொடுக்கும் என்று கேட்கிறார்கள். நல்ல கேள்வி. நாடு பாராட்டுகிற கேள்வி.

திருமதி சத்தியவாணிமுத்து: திரை திருப்பி விடுகிறீர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களைப் பொறுத்து 18 சதவிகிதம் என்று கரெக்ட்டாக கொடுத்து வைத்திருக்கிறீர்கள். அந்தக் கமிஷன்தானே பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு 31 சதவிகிதம் என்றிருப்பதை ஏன் அதிகமாக்கியது? ஏன், எங்களுக்கும் அதிகம் கொடுக்கக்கூடாதா? எங்களுக்கு 18 சதவிகிதம், அவர்களுக்கு 31 சதவிகிதம் என்று போட்டுவிட்டு அவர்களுக்கு மட்டும் 69 இடங்கள் கொடுத்துவிட்டு எங்களுக்கு மட்டும் 18 என்றிருப்பானேன்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சர்வீஸ் கமிஷன் இந்த விவாதத்தில் வருகிற காரணத்தால் நான் ஒன்றை விளக்க விரும்புகிறேன். அவர்கள் தனி உரிமை பெற்று இந்த பங்கீட்டு முறையில் 18 சதவிகிதம் பெறுகிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம்தான் வழங்க முடியும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற முறையில் இடம் பெறும்போது 31 சதவிகிதம்தான். ஆனால் ஓப்பன் காம்பெட்டிஷனில், ஜெனரலில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் இடம் பெறலாம் தகுதி இருந்தால். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் கூட சில பேர்கள் ஒன்றிரண்டு இடங்களில் ஓப்பன் காம்பெட்டிஷனில் இடம் பெறுகிறார்கள். அந்த அளவிற்கு அவர்களுடைய போட்டி இருந்ததோ அதைப் பொறுத்ததே தவிர இடம் கிடைத்துவிட்டதால் அவையெல்லாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பதற்காகக் கொடுக்கப்பட்டது என்று கருதக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு 18 சதவிகிதம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம் ஒதுக்க வேண்டும். ஓப்பன் காம்பெட்டிஷனில் ஹரிஜனங்கள் யாருமே வராமல் போய் விட்டார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சர்வீஸ் கமிஷனை கேட்டு தெரிந்து விபரங்களை முடிந்தால் இங்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இதன் மீதான விவாதத்தில் நான் மேலும் இறங்க விரும்பவில்லை.

அடுத்தபடியாக, தமிழக முதல்வர்தான் துரோகி என்று குறிப்பிட்டார்கள். அது அவருக்கு கிடைக்க வேண்டியதுதான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். முன்பு 9 சதவிகிதம் என்று கொடுத்து வந்ததை அண்ணா அவர்கள் ஒவ்வொரு இலாகாவினுடைய ரிக்கார்ட்டை எல்லாம் வரவழைத்து 16 சதவிகிதம் என்று கொடுக்க வேண்டுமென்ற வைத்தியநாதன் குழு சிபார்சை, ஒரு வருடம் ஆன பிறகும் அது அமல்படுத்தாத காரணத்தால் 9 சதவிகிதம் என்றிருந்ததை 16 சதவிகிதமாக ஆக்கி அம்மையார் காலத்தில் 18 சதவிகிதமாக ஆக்கி 18 சத



விகிதம் வருகிறதா என்று கண்ணும் கருத்துமாக இருந்து சலுகைகள் வழங்கி வருகிறது இந்த அரசு. இந்த நிலை வேறு மாநிலத்தில் இருக்கிறதா என்பதை சுட்டிக்காட்டுங்களேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: ரிஸர்வேஷன் யார் செய்வது? ரிஸர்வேஷன் செய்வது மாநில அரசு இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு பேச்சுக்கும் குறுக்கிட முடியாது. அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த அம்மையார் இப்போது புதிதாக மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசி வருகிறார்கள். ரிசர்வேஷன் செய்வதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது. 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்றும், 26 சதவிகிதம் என்பதை 31 சதவிகிதம் என்றும் ஆக்கியது மாநில அரசாங்கம் என்பதை மறந்துவிட்ட அம்மையாருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சுக்குப் பேச்சு எழுந்து நிற்க முடியாது. நேரம் குறைவாக இருக்கிறது.

(திருமதி சத்தியவாணிமுத்து இருக்கையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பின்தங்கியவர்களுக்கு 26 ஆக இருந்ததை 31 ஆக, 5 அதிகமாக ஆக்குவதற்காக—இந்த 16 சதவிகிதம் என்பதை 2 சதவிகிதம் அதிகமாக்கி—அம்மையார் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள்—இது சந்தைக் கடை அல்ல—சட்டமன்றம்—பின்தங்கியவர்களுக்காக இருக்கும் 26 சதவிகிதம் என்று இருப்பதை 31 சதவிகிதம் என்று உயர்த்துவதற்காகத்தான், நீங்கள் 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் அரிசன மக்களுக்கு என்று உயர்த்தினீர்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அது மிக மிகத் தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் பேசிய வடிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள்; தமிழகத்தில் 74 லட்சம் அரிசன மக்கள் இருக்கிறார்கள் என்று. பின்தங்கியோர் சதவிகிதம் என்ன? அதை எண்ணிப் பார்க்கவேண்டும். 74 லட்சம் பேர்களுக்கு 2 சதவிகிதம் என்றால், 2½ கோடி மக்களுக்கு பின்தங்கிய மக்களுக்கு 5 சதவிகிதம், இதை நாம் மறந்துவிடக்கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிகவும் ஆவேசமாகப் பேசினார்கள். அதற்கு அவசியம்கூட இருக்கலாம்.

அதற்காக 'சந்தைக்கடை' என்று நம்முடைய சட்டமன்றத்தைச் சொல்லலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சந்தைக் கடை அல்ல, சட்டமன்றம் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மையார் அவர்கள் சொன்னார்கள், நேரம் குறைவாக இருக்கிறது, குறுக்கீடு வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அமைச்சர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து நின்று குறுக்கிட்டுப் பேசுவது பொருத்தமல்ல. முதலில் அமைச்சர் பேசி முடிக்கட்டும், அதற்குப் பிறகு தேவையானால், ஓரிரு விளக்கம் கேட்டுக் கொள்ளலாம். இப்போது குறுக்கீடு வேண்டாம்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி அதற்கு குற்றவாளியாக முடியும்? இந்திய அரசியல் சட்டத்திலே 'பிரபான்ஸ் டு தி ஷெட்யூல்ட் காஸ்ட் அண்டு அதர் பேக்வார்ட் கிளாசஸ்' என்று இருக்கிறது. அதை கவனித்துத்தான் ஆக வேண்டும். நம்முடைய உரிமை பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு நான் முதலில் வாதாட நிற்பேன். நம்முடைய உரிமையைப் பாதுகாக்க, அம்பேத்கார் அவர்கள் காட்டிய வழியில் நாம் நடந்து அதைத் தொடர்ந்து பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. நமக்கு வேண்டிய உரிமைகளை நாம் கேட்டுப் பெறவேண்டுமே ஒழிய மற்றவர்களுக்கு ஒன்றும் செய்யக் கூடாது என்ற முறையில் வாதங்கள் அமையக் கூடாது. அது நமக்கு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரு சின்ன கிளாரிபிகேஷன். கனம் முதலமைச்சர் அவர்கள் பேக்வார்ட் கிளாஸ் என்று ஏன் இன்னும் சொல்கிறார், அவர்தான் சம்பந்தியாகிவிட்டாரே, ஏன் திரும்பவும் பேக்வார்ட் கிளாஸோடு சேர்ந்துகொள்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** அடுத்து, அரசைப்பற்றி, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசினால் நாம் கவலைப்படவேண்டியது இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும், அவர்கள் கண்ணோட்டம் வேறு வகையில், வேறுபட்ட வகையில் இருக்கிறது. யாராவது வேறுபட்ட வகையில் சொல்வார்களானால், உள்ளபடியே அதற்காக நான் சொல்கிறேன், அதைப்பற்றி கவலை இல்லை. எங்களுடைய அபிப்பிராயம் அந்த மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். அப்படி நன்மை செய்தவர்களைப் பாராட்டாமல் வேறு விதத்தில் சொல்வார்களானால் இந்த நாடு மன்னிக்கவே ஏற்றுக்கொள்ளாது, பின் சந்ததியும் ஏற்றுக் கொள்ளாது.





நம்முடைய உறுப்பினர் வடிவேல் அவர்கள் சொன்னார்கள். திருவலஞ்சுழியில் வீடுகள் கட்டிக்கொடுக்கிறபோது, காங்கிரஸ்காரர்கள் காலத்திலும் கொடி கட்டினார்கள், விழா நடத்தினார்கள், இப்போது தி.மு.க. காலத்திலும் கொடி கட்டுகிறார்கள், விழா எடுக்கிறார்கள், ஆனால் ஓட்டு உங்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஓட்டைப்பற்றிய கவலை எங்களுக்கு இல்லை. யார் வந்தாலும், நாங்கள் இங்கே இப்போது கேட்டுக்கொண்டிருக்கிற மாதிரி கேட்டுக்கொண்டே இருப்போம். அதைப்பற்றி கவலை வேண்டாம். அன்று கூட முதலமைச்சர் அவர்கள் அந்த வீடுகளைத் திறந்து வைத்துப் பேசுகிற போது சொன்னார்கள், 'இந்த வீடுகளைத் திறந்துவிட்டு நான் சென்ற பிறகு இப்படிப்பட்ட அழகான வீடுகளின் சுவர்களில் "கருணாநிதி ஒழிக" என்று எழுதி வைப்பார்கள். அதைப்பற்றி கவலைப்படவில்லை இந்த அரசு.

மக்கள் மழை பொழிய வேண்டுமென்று விரும்புவார்கள். மழை பொழிந்து விட்டது என்று சொன்னால், அதற்குக் காரணமாக இருந்த மேகத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினால், மேகத்தைப் பார்க்க முடியாது. மேகம் அதுவரையில் நின்று கொண்டு இருக்குமா? மேகத்தைக் காணாததால் அதற்கு நன்றி சொல்ல முடியவில்லை என்று பின்னால் வருத்தப்படுவார்கள். ஆகவே, எங்களுடைய மனதில் பட்டதை இந்த மக்களுக்கு செய்யவேண்டுமென்ற அடிப்படையில் செய்துகொண்டு வருகிறோம். அதற்கு எந்த எதிர்ப்பு வந்தாலும் நாங்கள் செய்வோம். எனக்குப் பெயர் வேண்டுமென்பது இல்லை. நான் என்னுடைய பெயரைப்பற்றிக் கவலைப்படவில்லை' என்று சொன்னார்கள். இதைவிட என்ன சான்று வேண்டும் அவர்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு? அவையின் மூலமாக முதலமைச்சர் அவர்களே, உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், முதலமைச்சர் அவர்களே, நீங்கள் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டீர்கள். கல்லால் அடித்து முகமது நபியை விரட்டினார்கள், சிலுவையில் அறைந்து கிருஸ்துவ மதத்தினர் ஏசு என்று ஏற்றுக்கொண்டார்கள், மகாத்மா காந்தி அவர்கள் மத சீர்திருத்தம் பரப்பியதால் துப்பாக்கியால் கொல்லப்பட்டார்கள். முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு அந்தப் பெயரைப் பற்றி கவலை வேண்டாம். முதலமைச்சர் அவர்களே, இந்திய உபகண்டத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அந்த 78 லட்சம் குடும்பங்களுக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, பெயரைப்பற்றி கவலை வேண்டாம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ இடம் அளிப்பதற்காக, அந்த 78 லட்சம் குடும்பங்களுக்கும் மனைப்பட்டா வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே இன்று வரை கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது. இன்னும் பல லட்சக்கணக்கான மக்கள் அப்படியிருந்தும் மனைப்பட்டா பெறவில்லை. நம் காலத்தில் ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணத்தோடு, கட்டாயமாக அவர்களுக்கு முதலில்

அந்த உரிமையை வழங்கவேண்டுமென்பதற்காக நடைமுறையில் அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சிகளை எடுத்துக்கொண்டேன். நிதிபற்றி அம்மையார் சொன்னார்கள். நிதி போன ஆண்டில் நீங்கள் வாங்கிக்கொடுத்து விட்டுப் போன தொகை 15 லட்சம். அதை நான் இடைக்காலத்தில் வந்து பெற்றுக்கொண்டேன்.

பல்லாண்டு காலமாக நூற்றுக்கணக்கான மனைக்கட்டு நிலங்களை எடுக்க முடியாத நிலையில் இருந்தது. ஆனாலும் அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு, அதற்கு பணம் கொடுத்து எடுக்க முடியாது இருக்கிற நிலைமையை மாற்றவேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டேன். மந்திரிசபை கூட்டத்தில் எல்லா அமைச்சர்களுக்கும் சில தொகை தேவைப்பட்டது. அவர்கள் எல்லாம் கேட்ட பிறகு, நான் கேட்டேன். என் குரல் கேட்பதற்கு முன் 9–10 அமைச்சர்கள் தங்களுடைய தேவைகளைக் கேட்டார்கள். நான் கடைசியாகக் கேட்டேன். அவர்கள் கேட்டதையெல்லாம் விட்டு விட்டு, அரிசன இலாகாவிற்கு 33 லட்சம் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். இப்படி கேட்டு வாங்க வேண்டியது நம்முடைய உரிமை. அப்படி வாங்கிச் செய்யவேண்டுமென்ற எண்ணம் நம்மிடத்தில் இருக்கிறது. அவர்களும் கேட்கிற தொகையைக் கொடுக்கிறபோது என்ன குறை இருக்கிறது. நான் கேட்டவுடன் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அந்த நிதியிலிருந்து எடுத்து, 16,000 மனைக் கட்டுகளை இப்போது விலைக்கு வாங்கி வழங்கப்பட்டு இருக்கிறது. கேட்டுக் கேட்டு வாங்கிச் செய்வது நம்முடைய கடமை. அதைத்தான் நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். அவர்களும் நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அந்த முயற்சிகளை வளர்ச்சி செய்கிற வகையில் இந்த அரசுக்கு உதவி செய்யுங்கள், அப்படிச் சொல்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது.

உறுப்பினர் வடிவேல் அவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அவர்களுக்குத் தெரியும். பகுத்தறிவு அடிப்படையில் வளர்ந்தவர்கள், முதலமைச்சரின் எண்ணம் தெரிந்தவர்கள். என்ன செய்கிறோம் என்று தெரிந்தவர்கள். இருந்தாலும், அரசியல் கட்சி. அதனால் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அரசியலைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர்களுடைய ஊருக்கும் செய்து இருக்கிறோம். 2-3 ஊர்களில் உங்கள் தொகுதியில் செய்து இருக்கிறோம். ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் கட்ட முடியாது. படிப்படியாகத்தான் கட்ட முடியும்.

1,100, 1,200 வீடுகள் ஒரு நேரத்தில் கட்டுகிறோம். அதை எல்லா எம்.எல்.ஏ. தொகுதிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பர்ஸ்ட் பேஸில் 10,000 வீடுகள் இப்போது கட்டுகிறோம். ஒரு தொகுதி மட்டும் என்று



எடுத்துக்கொண்டால் சிலர் குறை சொல்வார்கள். ஆகவே, எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. வீடுகள் கட்டப்படுகிற நிலம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதாக இருந்தால், வீட்டு வசதி வாரியத்தால் கொடுக்கப்படும் வீடுகளும் அந்த சட்டத்திட்டத்தின் அடிப்படையில் அமையும். ஏற்கனவே அவர்கள் கட்டிக்கொண்டு இருக்கிற இடங்களாக இருந்தால் அந்த இடங்களில் சரியான முறையில் வீடுகள் கட்டப்பட்டு இருந்தால், அந்தமுறையில் கட்ட முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் கட்டினால் காலதாமதம் ஏற்படும். ஆனால் கட்டப்பட வேண்டுமென்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். முதற்கட்டமாக 10 லட்சம் வீடுகள் என்பது லட்சியம். முதலில் 10,000 வீடுகள் கட்டவேண்டுமென்று நடைமுறையில் இருக்கிறது. அப்படி செய்தாலும் நிலைமை மாறாது. ஏனெனில், நம் எண்ணிக்கைப்படி 21 வயது அடைந்து திருமணம் ஆகி இருப்பவர்களுக்குத்தான் வீடு என்கிற கணக்கு இருக்கிறது.

இந்த 78 லட்சம் குடும்பங்களில் இன்னும் எத்தனை பேர்கள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியவர்களாக இருந்தால் இன்னும் எத்தனை லட்சம் குடும்பமாகுமோ தெரியாது. இன்றைக்கு இருக்கிற கணக்கு இது தான். தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கிருந்தால் என்ன? அவர்கள் உயரவேண்டுமென்பதுதான் முதலமைச்சரவர்களின் எண்ணம். ஒரு பகுதியில், நூற்றுக்கு நூறு கம்யூனிஸ்டு தோழர்கள் இருக்கிற இடத்தில் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் முதலமைச்சரவர்களை எவ்வளவு ஆரவாரமாக வரவேற்றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். எங்கள் கட்சிக்காகச் செய்யவேண்டுமென்ற எண்ணமே கிடையாது, அதை விட்டு விட்டோம். ஆகவே, எங்கள் கட்சிக்காக செய்தோம் என்று எண்ணக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரி மாணவர்களுக்கு உதவிப் பணம் அளிப்பதிலே குறைந்த பட்சம் சென்ற ஆண்டு வரைக்கும் 411 பேர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. இப்போது ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கிறோம். ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கையை ஏற்றி ஏற்றி கொடுப்பது வழக்கம்தான் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் குறைக்கவில்லை; மாறாக, 400 என்று இருந்தது 1,000-க்கு மேல் என்று சொன்னால் இரண்டு மடங்குக்கு மேல் ஏற்றிக் கொடுத்திருக்கிறோம்.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்காக, அவர்கள் சட்டம் படித்து வெளியே வந்தவுடன் அவர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்க, ஒரு அறை எடுத்துக் கொள்ள, அவர்களுடைய வேலைக்கு ஆதாரவான சில உபகரணங்களை வாங்கு [illegible] கடன்கள் கொடுக்க இந்த ஆண்டு ஆரம்ப கட்டமாக கொடுக்க [illegible]ருக்கிறோம்.

[திரு. என். இராஜாங்கம்] [1975 ஏப்ரல் 4

இது மருத்துவத் துறையில் இருக்கிறவர்களுக்கு இனிமேல் வரலாம். ஸ்டான்லி, கே.எம்.சி., போன்ற மருத்துவமனைகளில் படிக்கிறவர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரைக்கும் இந்த அரசு எந்த வகையிலும் அவர்களுடைய படிப்பில் கவனம் இல்லாத அளவிற்கு, அவர்களுக்கு வருத்தம் கொடுக்கிற அளவிற்கு அவர்களை விட்டு விடவில்லை. மாணவர் விடுதிகள் அதிகமாக வேண்டுமென்றார்கள். 1974-75ல் ஒதுக்கிய நிதியைக் கொண்டு 400 பேர்களுக்கு மேல் இடம் கொடுத்திருக்கிறோம். ஜனவரியில் சேர்ந்த மாணவனுக்கு மார்ச் மாதத்தில் கூட விடுதியில் இடம் இல்லை என்றார்கள். இரண்டு விடுதிகள் சென்னையில் கட்டி திறக்கப்படுகிற நிலையில் இருக்கின்றன. இரண்டும் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டப்படுகிறது.

சட்டசபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு அரிசன காலனி என்று இருந்தால் அவர்கள் இருக்கிற இடம் மோசமானது, அங்கே போவதற்கு பாதை வசதி இல்லை, மின் விளக்கு வசதி இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை, பள்ளி இல்லை, அங்கே 100 அரிசனங்கள் வீடுகள் இருந்தால் அவர்கள் ஒன்று கூடி ஒரு காரியம் செய்வதற்கு வசதி இல்லை, இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் நீக்கி இந்த வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம் கட்டிக் கொடுக்கிற வீடுகளில் வசதிகள் அமைந்திருக்கின்றன. தொழிற் கருவிகள் கொடுக்கப்படுகின்றன. கறவை மாடுகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளை யெல்லாம் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரு அரசு செய்கிற தென்றால் இவைகளைச் செய்வதற்குரிய யோசனைகளை, திட்டங்களை வழங்கியது முதல்வரவர்கள். அவர்கள் இந்த மக்களுக்கு வழி காட்டியாக இருக்கிறார் என்பதை இருதயம் படைத்த எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சாபீஸ் நடத்த கடன் கொடுக்கிறோம். இப்படி கடன் கொடுத்து வருவது புதிதல்ல, அம்மையார் காலத்தில் நடந்து வந்தது என்றார்கள்.

மெடிகல் ஸ்டோர் வைத்து பிழைக்க கடன் கொடுக்கப்படுகிறது.

சைக்கிள் ஸ்டோர் வைக்க அதிக தொகையைக் கேட்டார்கள். இதை அரசாங்கத்தில் கவனித்து முதலமைச்சரைக் கலந்து செய்யலாம். இந்த வகையில் கொடுக்கிற தொகை அதிகமில்லையென்று சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், கறவை மாடுகள் தேவையில்லையென்று சொல்வது பொருத்தமில்லை. கிராமங்களுக்கு ஏற்றது அது தான். நகர்ப்புறத்தில் தொழிற்கூடங்கள்



1975 ஏப்ரல் 4] [திரு. என். இராசாங்கம்]

கேட்கிற மாதிரி, கிராமங்களில் கறவை மாடுகளைத்தான் விரும்புவார்கள், அங்கத்தினர்களுக்குத் தெரியாததல்ல. அதையும் நாம் செய்து வருகிறோம்.

சமுதாய அந்தஸ்தைப் பற்றி விளக்கினார்கள். டாக்டர் அம்பேத்காருடைய வாதமே நம்மை தூர்த்திய இந்து மதத்தை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது. நம் அரசாங்கத்தின் கொள்கை, அது தூரத்தினாலும், நாம் விடாது பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதுதான். நமக்கு ஒரு அந்தஸ்து வேண்டும், அதற்காகத்தான், அப்படி அந்தஸ்து வேண்டுமென்பதற்காகத்தான் அம்மையார் அவர்களும் சேர்ந்துதான் அர்ச்சகர் வேலைக்கு அரிசனங்களும் உரிமை உடையவர்கள் என்பதற்கு சட்டம் தீட்டிய போது அதை ஆதரித்துப் பேசினார்கள்.

இன்றைக்கு அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆலயங்களைப் பொறுத்த வரை சம்பந்தமில்லையென்று சொல்கிறார்கள். மற்றவர்களைப்பற்றி இந்த வாசகமே வராது. கோயில்களில் புக முடியாதவனாக இருந்தவன், அரிசனன்; வேறு ஜாதிக்காரர்கள் அல்ல. தீண்டாதவர்கள் என்ற பெயரை உடையவர்கள் நாம்தான். 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் ஷெட்யூல்ட் காஸ்ட் என்று அதாவது தாழ்த்தப்பட்டோர் என்ற பட்டத்தை நமக்கு வழங்கியது. அதற்கு முன்னால் நாம் தீண்டாதவர்கள். நாம் கோயிலைத் தீண்டக்கூடாது, மரத்தைத் தீண்டக் கூடாது, கிணற்றைத் தீண்டக் கூடாது, மனிதனைத் தீண்டக் கூடாது. இப்படி அல்லோலகல்லோலமான தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மகன் அர்ச்சகர் வேலைக்கு உரிமை உடையவன் ஆகிறான் என்று சட்டம் இயற்றப்படும் போது இது மற்றவர்களைச் சாரும் என்று சொல்வது எப்படி பொருத்தமாகும்? மற்றவர்கள் கோயிலுக்குள் என்றைக்கும் போய்க் கொண்டிருந்தவர்கள் ஆயிற்றே. ஆகவே, அந்த வாதம் சரியல்ல. வேண்டுமென்றால் ஒன்று, வேண்டாமென்றால் ஒன்று என்று இருக்கக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அர்ச்சகர்களைப் பற்றிச் சொன்னார்கள். இது விஷயமாக இன்றைக்கு யாருக்கு இந்த வேதங்களை ஓதத் தெரியுமோ அவர்கள் அர்ச்சகர்களாக இருக்கவேண்டுமென்ற முறையில்தான் நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசை எடுத்திருக்கிறார்களேயொழிய அரிசனங்களுக்கு மட்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, நான் சொன்னது கோயிலில் முதலில் போக முடியாமல் இருந்தவன் இவன். இவனுக்கு முதலில் போகக் கூடிய அந்த நிலையை உருவாக்கி, இரண்டாவது கட்டமாக அங்கே

போய் கடவுளை கழுவி, கும்பிட்டு மற்றவர்களைப் பாருங்கள் என்று சொல்லக் கூடிய உரிமை கிடைக்கச் செய்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, மதுரைக் கோயிலிலே ராஜாஜி அவர்கள் மந்திரி சபையில் இருந்தபோது அவர் கோயிலை அரிசனங்களுக்கும் திறந்ததற்குப் பிறகுதான் என்னைப் போன்றவர்கள் உள்ளே போக முடிந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. வடிவேல் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கம்யூனிஸ்டு கட்சி இருக்கிற இடத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்துப் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் நாங்கள் போன இடங்களில் அவர்கள் எங்களை வரவேற்றார்கள். ஒவ்வொரு காலனிக்கும் சென்று அவர்களுக்கு என்ன தேவைகள் என்பதைச் செய்து வருகிறோம். திரு. வடிவேல் அவர்கள் தம் தொகுதிக்குப் போய்ப் பார்க்கட்டும். இதில் கட்சி வேறுபாடு இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நாங்கள் பேசுகிற போது இடையிடையில் அமைச்சரவர்கள் குறுக்கிட்டார்கள். அப்படி நாங்களும் குறுக்கிட உரிமை உண்டு. நான் கம்யூனிஸ்டு கட்சி இருக்கிற இடத்தை கழக அரசு புறக்கணித்துவிட்டது என்று சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில் நான்காண்டு காலமாக நான் சொன்ன இடங்களில் ஒன்றில் கூட செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குறை. அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்று எனக்கும் புரியவில்லை. அதுதான் கஷ்டமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, நாங்கள் இந்த வேலையை 8 மாதங்களாகத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் 4 ஆண்டு காலமாகச் சொல்லி வருகிறேன் என்கிறார்கள். அதற்கு என்ன செய்வது? ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களை எல்லா வகையிலும் முன்னேற்ற தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். கல்வியைப் பொறுத்தவரை, 840 பள்ளிகள் இருக்கின்றன. இவைகளில் 740 பள்ளிகள் தொடக்கப் பள்ளிகள், 83 நடு நிலைப் பள்ளிகள், 17 உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கின்றன.

(பிற்பகல் 1-30).



இவைகள் அனைத்தும் நல்ல முறையில் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அரிசன நலப் பள்ளிகள் பற்றி நான் உங்களுக்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ஆண்கள், பெண்கள் 86, 87 சதவிகிதம் பள்ளி இறுதி வகுப்பில் தேர்வு பெற்றிருந்து, முதன்மை இடம் பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல செவ்வாய்ப்பேட்டை பள்ளிக்கூட அமைப்பு சரியில்லை என்றாலும், ஆசிரியர்கள் பெரு முயற்சியுடன், மாணவர்கள் தேர்வில் நன்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல குளித்தலை. அதற்கு அடுத்தாற்போல திருச்சியிலே இன்னும் சில பள்ளிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. தேர்விலே அதிகமான மார்க்குகள் வாங்கியதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

செவ்வாய்ப்பேட்டையைப் பற்றி மாண்புமிகு துரைராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். செவ்வாய்ப்பேட்டையில் அரிசன நல உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதில் கழிவிடம் இல்லை என்று சொன்னார்கள். 3 மாதத்திற்கு முன்னால் நான் அந்தப் பள்ளிக்குச் சென்றேன். அங்கே ஆசிரியர்கள், மாணவர்களைப் பார்த்துவிட்டு, உடனடியாக தம் இலாக்கா இயக்குனர் அவர்களை அழைத்து அங்கு வேண்டிய வசதி செய்தாக வேண்டுமென்று சொன்னேன். இப்பொழுது அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி, கழிவிடம், குடிதண்ணீர் வசதி போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பித்தாகி விட்டது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் தொகுதி தான். நான் கேள்விப்பட்டு அங்கே போனேனே தவிர, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய தொகுதியில் இந்தெந்த குறைகள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. இப்பொழுதுதான் சொன்னார். அவருடைய கடமை சொன்னார். அதற்கு முன்பே செய்து விட்டோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் மேல் ஜாதி மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்திலிருந்து கிடைக்கிற சலுகைகள் விகிதாச்சாரம் சரியாகவில்லை என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கல்விச் சலுகைக்கு 30, 38 லட்சம் கொடுக்கிறார்கள். பாக்கி பணம் நாம் செலவழித்தாக வேண்டும். அதுபற்றி பொதுவாக குறிப்பிட்டுவிட்டார்கள். தனியாகக் குறிப்பிட வேண்டுமானால் தனியாக விவரம் தருகிறேன்.

ஆகவே, இப்படி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி கல்வியானாலும் சரி, பொருளாதாரத் துறையில் முன்னேற்றமானாலும் சரி, அல்லது மற்ற வசதிகளானாலும் சரி, எல்லா விதத்திலும் தமிழக அரசு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதற்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.

கேரளாவில் கூட சென்ற ஆண்டு 1974-75 பட்ஜெட் வந்திருக்கிறது. அதில் 2 கோடி 16 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், மக்கள் தொகை இதைவிடக் குறைவாக இருக்கலாம். இருந்தாலும் நாம் 10 கோடி சொச்சம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே வீடு கட்டிக் கொடுத்த பிரச்னை வந்தது. நானும் நமது கம்யூனிஸ்ட் கட்சித் தோழரும் பார்த்தோம். அதைச் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். இருந்தாலும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அங்கே வீடுகள் கட்டுவது வெறும் இந்த அரிசனங்களுக்கு மட்டுமல்ல. இந்த அரிசனங்கள் வேறு. அங்கே வீக்கர் செக்ஷன் பொருளாதாரத்தில் குறைந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலை ஜாதியினர், அதற்கு சம்பந்தமானவர்களைச் சேர்த்து வீக்கர் செக்ஷன் என்கிறார்கள். அந்த வீக்கர் செக்ஷன் என்ற பெயரில் கட்டியிருக்கிறார்கள். அந்த மந்திரி இங்கே வந்தார். திரு கஸ்வாஸ். அவரை அழைத்துக் கொண்டு போய் காட்டுப்பாக்கம் வீடுகளை காட்டினோம். அப்பொழுது சொன்னார்கள். நாங்கள் வீடு கட்டினோம் பெயருக்காக. இப்பொழுது பார்த்த வீடு மாதிரி இல்லை என்று சொன்னார்கள். சட்ட மன்றத்திற்குப் போய் சபாநாயகரை வைத்துக் கேட்டோம். என்னமோ, ஏது எப்படி எப்படியோ போய் விட்டது விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். அவர் சொன்னார். இது தனிப்பட்ட ஹரிஜனங்களுக்காக அல்ல. இப்படி வீக்கர் செக்ஷன் என்ற அந்த தலைப்பின்கீழ் கொடுத்திருக்கிறோம். இப்படி உங்களைப் போல இந்த அரிசனங்களுக்கு என்று அல்ல என்று சொன்னார். அமைச்சர் அவர்கள் காட்டுப்பாக்கம் சென்று பார்த்தார்கள். இதை பார்த்த பிறகு இவை சிறப்பான முன்னேற்ற திட்டங்கள் உங்களுடையது என்றார். 31—3—1975-ல் வந்திருக்கின்ற பத்திரிகைகளில் தமிழ் நாட்டை பின்பற்றி நடங்கள் என்று மற்ற மாநிலங்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள்.

அதையெல்லாம் நான் இங்கே அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. தமிழ் நாடு ஆற்றுகிற பணிகள், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கியுள்ள தொகை இவைகளில் எந்த மாநிலமாக இருந்தாலும், இதற்கு முதலிடம் கொடுத்து தான் மற்ற மாநிலங்கள் இருக்கும் என்ற நடைமுறையைப் பார்த்துள்ளோம். மேலும் செய்ய வேண்டுமென்று கேட்பது உங்கள் கடமை. அரசாங்கம் எதையெல்லாம் ஏற்றுக்கொண்டு முதல்வரிடம் எந்தெந்த இடத்தில்





பள்ளங்கள் விழுகிறதோ, அதை மேடாக ஆக்குவதற்கு, சமமாக்குவதற்கு, அவரை அவ்வப்பொழுது கேட்டு, அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைக் கூறி, நீங்கள் அனைவரும் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிறீர்கள். இதைவிட அதிகம் கேட்ட உள்ளங்கள். அதைக் குறைக்க உள்ளபடியே மனம் இடம் தராது என்பது எனக்குத் தெரியும். ஆகவே வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று, இந்த மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** அம்மையார் இங்கு இருக்கும்போது கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்களா? நான் கேட்டால் கொடுத்திருப்பேன் என்றார். நான் இப்பொழுது ஆதாரத்தோடு சொன்னேன். இங்கிருந்து கேட்டு கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கமும் கொடுக்கவில்லை. 1971 சென்சஸபடி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமைச்சர் பேசிய பிறகு நீங்கள் அவருக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. ஒன்றிரண்டு விளக்கங்கள் கேட்கலாமே தவிர, அவர் பேசியது ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை குறிப்பிட்டார்கள். தெளிவு பெறுவதற்காகக் கேட்கிறேன். அவருடைய உரை புஸ்தகமாக தரப்பட்டிருக்கிறது. அதில் அரிசனங்கள் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை மொட்டு மொத்தமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் அடுத்த பக்கத்தில் மத்திய அரசு ஓரளவு உதவி பெற்று படித்தவர்கள் எண்ணிக்கை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அவரிடத்தில் விளக்கம் கேட்டேன். அதிலே தமிழ் நாட்டிலே குறிப்பிட்ட மொத்த எண்ணிக்கையில் பழங்குடி மக்கள் கல்லூரியில் பயன்பெற்று இருப்பவர் ஒருவர் கூட வரவில்லை. மத்திய அரசு ஓரளவு உதவி பெற்று படித்தவர்கள் என்பதிலே இந்தப் பழங்குடி மக்கள் கல்லூரியில் படித்தவர்கள் எண்ணிக்கை வந்திருக்கிறது. அதற்கு என்ன விளக்கம்? மொட்டு மொத்தத்திலிருந்து பிரித்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே, அங்கே வராதது இங்கே எப்படி வந்தது என்று கேட்டேன். அதற்கு விளக்கம் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசியது ஒவ்வொன்றிற்கும் விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால் நல்லதல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** பழங்குடி மக்கள் முன்னேற்றம், அருந்ததியர் முன்னேற்றம் பற்றி அமைச்சர் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆகவே . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மானியத்தில் பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் என்னைப் பற்றி குறிப்பிட்டிருக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 4

பின்தங்கிய மக்களுக்காகத்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று இங்கே திருமதி சத்தியவாணிமுத்து அவர்களால் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்படுகிற வாதம் முறையானதுமல்ல சரியானதுமல்ல; நியாயமானதும் அல்ல.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ [illegible] கோடி மக்களில், 2½ கோடி மக்கள் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; 80 லட்சம் பேர் ஆதித்திராவிடர் மக்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் இன்றைக்குச் சலுகைகள் செய்யப்படுகின்றன.

அதிலும் பின்தங்கிய மக்கள் சமுதாயம் பெரும்பாலும் கிடந்த நிலையிலே—காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் அடிக்கடி—இந்த அவையிலேயே பின்தங்கிய மக்களுக்காக தனி இலாகா வேண்டுமென்று கேட்டுவந்த கோரிக்கை—இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் உருவாகியது. அதுபற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பின்தங்கிய மக்களுக்கு உள்ள அதே விகிதங்கள் 80 லட்சம் மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்பது சரியானது அல்ல. ஆனால் ஒன்று சொல்வேன். பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைவிட அதிகமான பணம்தான்—நிதி ஒதுக்கீடுதான்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

இந்த நிதி ஒதுக்கீடு அறிக்கையில் ஆண்டுக்காண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்காக மாத்திரம் 1974-75 இல் நான்கு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

"எவ்வளவு வீடு கட்டினீர்கள்? எவ்வளவு வீடு கட்டினீர்கள்?" என்று கேட்கிறார்கள். ஒரு லட்சம் வீடு கட்டுவதற்கு இவ்வளவு செலவானால் பத்து லட்சம் வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு ஆகும்? என்று கேட்கிறார்கள். நல்ல கேள்விதான்.

ஆனால் இந்தியா 1947 இல் விடுதலை பெற்றதும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாதாடினார்களே—பேசினார்களே அவர்கள்—1947 இல் ஓராண்டு காலத்தில் மட்டும் விடுதலை விழாவிற்காக செலவிட்டதுபோல—மீதியுள்ள ஆண்டுகளில்—இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டித் தருவது என்று ஆரம்பித்திருந்தால் இந்த இருபதாண்டு காலத்திற்குள் இன்றைக்கு தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத்



1975 ஏப்ரல் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

தேவைப்படுகிற ஏறத்தாழ பத்து லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும்.

ஆனால், கடந்த நாலாண்டு காலமாகத்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம்.

முதல் கட்டமாக பத்தாயிரம் வீடுகளை கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம். பத்தாயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றால் முதலில் 17 ஆயிரம் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தால்தான் அது பத்தாயிரத்தில் வந்து நிற்கும் என்று அறிவித்து வேலைகள் நடந்து வருகின்றன.

மாவட்ட வாரியாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எவ்வளவு என்று கேட்டவர்களுக்கு விடையாகத் தர விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, அங்கே 1,182 வீடுகள் கட்டத் தொடங்கப்பெற்று, இதுவரையில் 694 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

வடார்க்காடு மாவட்டத்தில் 1,000 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,827 வீடுகள் கட்டத் தொடங்கப்பெற்று, 784 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,379 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,001 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் இலக்கு 1,100 வீடுகள்; எடுத்துக் கொள்ளப்பட்டவை 2,697. முடிக்கப்பட்ட வீடுகள் 1,100.

திருச்சி மாவட்டத்தில் இலக்கு 1,000 வீடுகள். எடுத்துக் கொள்ளப்பட்டவை 3,058. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 2,038.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலக்கு 300. எடுத்துக்கொள்ளப்பட்டவை 560. முடிக்கப்பட்டவை 460.

மதுரையில் இலக்கு 800. எடுத்துக்கொள்ளப்பட்டவை 998; முடிக்கப்பட்டவை 882.

இராமநாதபுரத்தில் இலக்கு 700; எடுத்துக்கொள்ளப்பட்டவை 743; முடிக்கப்பட்டவை 580.

நெல்லை மாவட்டத்தில் இலக்கு 800; எடுத்துக்கொள்ளப்பட்டவை 767; முடிக்கப்பட்டவை 618.

விடு தவறாக நடந்துகொண்டிருக்கிறது என்ற இந்த விவரங்களைக் கொடுத்தார்கள். இதை அமைச்சரவர்களின் கவனத்திற்குத் தருகிறேன். இன்னும் பரிசீலித்துப் பார்த்தால் இன்னும் பல கூட இருக்கக்கூடும். அதிலே சில சமயங்களிலே யாருக்காவது வேண்டியவர்கள் என்றுகூட இருக்கலாம். ஆனால் அதைப் பார்த்து அந்த முறை சரியில்லை என்று நான் செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டி ஆரம்பித்தவுடனே முதன் முதலாக ஹவுசிங் போர்டு சம்பந்தமாகத்தான் பரிசீலனை செய்தார்கள். அப்படிப் பரிசீலனை செய்து, பல வருஷ காலமாக கணக்கு முடிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. அது எந்த அளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது? இன்றைக்கு யாராவது ஹவுசிங் போர்டு சம்பந்தமாக எந்த அளவிற்கு வரவு-செலவு இருக்கிறது, எப்படித் திட்டம் இருக்கிறது என்று கேட்டால் சொல்லும் அளவில் இருக்கிறதா என்று பதில் சொல்லும்பொழுது சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் ஹவுசிங் சம்பந்தமாக நான் சொல்லவிருக்கிறது.

மற்றபடி குடிசை மாற்று வாரியத்தைப்பற்றி வேறு பலரும் கண்டிப்பாகப் பேசுவார்கள், ஆகவே அதற்குள் நான் போகவில்லை.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு அமைச்சரவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தையும் பார்த்தேன், இந்த ஆண்டு அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தையும் பார்த்தேன். அதில் அநேகமாக முதல் 4 பக்கங்கள் கிட்டத்தட்ட அதையே சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஓரளவிற்குச் சரிதான். ஒரே கொள்கையில் நிற்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் எங்களால் எந்த அளவிற்கு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கூடிய அம்சமாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்குப் பல ஆலைகளைப்பற்றி இங்கே ரெவியூ ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். அந்த ஆலைகளின் மேல் பற்றுதல் உள்ளவன் என்ற காரணத்தால் சொல்கிறேன்,

I must compliment the Labour Department for preparing and giving to us an excellent Review Report. It is an excellent review report.

அதைப் பார்த்தாலே ஒரு வருஷ காலத்திலே எந்த அளவிற்கு இந்தத் தமிழகத்திலே [illegible] ஆலைகள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன, [illegible] [illegible] நடந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கும் முடிவுகளை ஒரு வேளை ஏற்றுக்கொள்ளாமல்



இருக்கலாம், ஆனால் இந்த ஆய்வு செய்ததைப் பாராட்டுகிறேன் ஏன் என்றால் கடந்த 2 வருஷ காலமாக அதிக ஆட்களை வேலையில் சேர்க்க வேண்டுமென்றும், புதிய அப்ரெண்டீஸ் பயிற்சியாளர் வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒழுங்காக வேலை செய்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். நான் இப்படிச் சொன்னவுடனேயே உங்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடக் கூடாது.

மாதாமாதம் ஒரு கெஜட் வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். ரிப்போர்ட்டிலேகூட லேபர் கெஜட் வருவதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த லேபர் கெஜட் போன வருஷம் ஏப்ரல் மாதம்தான் கடைசியாக வந்தது, ஒரு வருஷத்திற்கு முன்பு லேபர் கெஜட் வந்திருக்கிறது. அதற்குமுன்பு வந்த லேபர் கெஜட்டிலே அதற்குமுன் ஒரு வருஷத்திலே நடந்த விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு என்ன நடக்கிறது, இன்றைக்குப் பல ஆலைகளில் வந்திருக்கக்கூடிய சிக்கல்கள் என்ன, முக்கியமான தீர்ப்புகள் என்ன என்று சொன்னால்தான் இன்றைக்குத் தொழிற்சங்க இயக்கத்திலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு உபயோககரமாக இருக்கும். ஒரு வருஷத்திற்கு முன்னால் வந்த கெஜட்டில், அதற்கும் ஒரு வருஷத்திற்கு முன்னால் நடந்த செய்திகள் வந்தால் உதவிகரமாக இல்லை. அதைக் கிட்டத்தட்ட 'ஹேண்ட் புக்' மாதிரி தொழிற்சங்க இயக்கத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் பயன்படுத்துகிறார்கள். அதை இன்றைக்கு இவர்கள் தயார் செய்யவில்லையா அல்லது அரசாங்க அச்சகத்தில் தாமதமாக இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு எங்கள் கையில் அது கிடைக்கவில்லை. சாதாரணமாக ஒரு மாதமாவது, அதாவது ஏப்ரல் இறுதி வரையில் நடந்த சம்பவங்களைப் பொறுத்த வரையில் ஜூன் மாதம் 1-ஆம் தேதியாவது கையிலே கிடைத்தால்தான், அதிக வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்திலே, இந்த நாட்டினுடைய நிலைமைகளையும், தொழிலாளர்களைப் பற்றிய விவரங்களையும் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையைப் பற்றி முதலிலே என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டு வேறு விவரங்களுக்குப் போகிறேன். நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒரு 'இண்டஸ்ட்ரிவைஸ் செட்டில்மெண்ட்' செய்யவில்லை என்று சொன்னேன். பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால் தனித்தனி பஞ்சாலைகளெல்லாம் தங்களுக்குள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டார்கள். பிறகு தமிழ்நாடு தழுவிய பஞ்சாலைகள் பூராவுக்கும் ஒரு தீர்ப்பு வருகிறது. அகில இந்திய நிலையில் ஒரு நிலை வருகிறது. எஞ்சினியரிங்கிலும் அப்படித்தான். ஆனால் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே சர்க்காருக்குச் சொந்தமாக 7 ஆலைகள் வந்திருக்கின்றன. சர்க்காரே

பெரிய முதலாளி, இவர்களையும் சாப்பிடக்கூடிய மிகப் பெரிய முதலாளிகளும் இருக்கிறார்கள். இரண்டும் சேர்ந்து இன்றைக்கு இவர்களுக்கு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் என்னைக் கேட்டால், சர்க்கரை ஆலை முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபத்தோடு, உழைப்பின் தன்மையைப் பார்த்தால் இவர்கள் குறைந்த ஊதியத்தைத்தான் பெறுகிறார்கள். உடனடியாக, மற்ற மாநிலத்திலே இம்மாதிரி இல்லை என்று சொல்ல வேண்டாம். எப்பொழுதுமே மற்ற மாநிலங்களைவிட நாம் அதிக ஊதியத்தைப் பெற்று வந்திருக்கிறோம். டிசம்பர் 20 என்று நினைக்கிறேன், ஒரு நல்ல கட்டுப்பாடு அவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். ஒற்றுமை ஏற்படுவதை உடைப்பதுதான் பெருமை என்று நினைக்கக் கூடாது.

ஐ.என்.டி.யு.சி. ஏ.ஐ.டி.யு.சி., எச்.எம்.எஸ்., திராவிட முன்னேற்றக் கழகத்தின் சங்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சங்கம் என்றெல்லாம் இருக்கிறது, சி.ஐ.டி.யு. இருக்கிறது. இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கோரிக்கையை வைத்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்து தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய அந்த நேரத்தில்—இன்றைக்கு அவர்கள் எடுத்த நிலை சரியாக இல்லாமலிருக்கலாம்—ஆனால் அந்த ஒற்றுமையை உடைப்பதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கையிருக்கிறதே,

It does not do any credit to any Government.
என்று இதுதான் சொல்ல முடியும். அதை உடைக்க எடுத்த முயற்சியினால் அந்தத் தொழிலாளர்கள் நொந்து போயிருக்கும் நிலையிருக்கிறது. ஒவ்வொரு யூனிட்டாக ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்ற நிலையிருக்கிறது.
It is taking it to a reverse direction.
ஒரே ரிவர்ஸ் கியரில் இந்த மாதிரி செய்யக் கூடாது.

சிம்சனைப் பொறுத்தவரையில் என்ன நடந்தது? ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ள சிறந்த ஸ்தாபனமாக இருந்தது. அந்தச் சங்கத்திலே உள்ள தலைமையைப்பற்றி வெறுப்புக்கூட இருக்கலாம், ஆனால் தொழிலாளர்கள் திருப்தியாக இருந்தார்கள். வருஷா வருஷம் போனஸ் இருக்கிறது, அவர்களுக்கு ஒரு சிப் ஸ்டோர்ஸ் எல்லாம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தை உடைத்து, இன்றைக்குப் பழையபடி இருந்த நிலைமை வரவே வராது. அப்படிப்பட்ட அருமையான ஸ்தாபனத்தை உடைத்தார்கள்.
It is an anti-labour policy.

அதேபோல் ஒன்றுபட்டு வளர்ந்த இயக்கம், ஏற்கனவே சாதித்ததைப் பின் வழியில் செய்ய செய்தது இருக்கிறதே அது ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம். அதற்கு என்னதான் சமாதானம் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.





அரசு அதுபற்றித் தங்களைத் தாங்களே பரிசீலனை செய்து கொள்வது நல்லது. இரண்டு அருமையான தொழிற்சங்கத் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள், உங்களுடைய போக்கு பிடிக்காமல் வெளியேறியிருக்கிறார்கள். அவர்கள் வெளியேறியதற்கு வேறு காரணங்கள்கூட இருக்கலாம். ஆனால் எனக்கு என்ன படுகிறது என்றால், அவர்கள் தொழிலாளர்களோடு இணைந்திருக்கும் அருமையான தலைவர்கள், தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு எடுத்த முடிவினால் ஒதுங்கிக்கொண்டார்கள் என்றுதான் படுகிறது. ஒவ்வொருவரைப்பற்றியும் நான் நன்கறிந்தவன். கிட்டத்தட்ட 20 வருஷ காலமாகத் தொழிற்சங்க இயக்கத்திலே எப்படிப் பாடுபட்டார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் மனம் நொந்து போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்காரில் 'ஆண்டி லேபர் பாலிசிக்கு' உதாரணம் வேண்டுமென்றால் நான் இதைத்தான் சொல்ல முடியும்.

அடுத்து, இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. உதாரணமாக, இ.எஸ்.ஐ. பற்றி எடுத்துக் கொள்வோம். இ.எஸ்.ஐ. பற்றி பலவிவகாரங்கள் வருகின்றன. ஆனால் என்னை பொறுத்த வரையில் நான் என்ன நினைக்கிறேன் என்றால் ஆரம்ப காலத்திலே தொழிலாளர்கள் அதை வரவேற்கவில்லை. அதற்குக் காரணம் எங்களிடத்தில் பணத்தை வாங்குகிறார்கள், எங்களுக்கு வியாதி வரப் போவதில்லை, ஏதாவது வியாதி என்று லீவ் எடுத்தால் கொஞ்சம் பணம் கிடைக்கிறதே தவிர வேறில்லை என்று கூறினார்கள். அப்படியிருந்தவர்களிடம், இ.எஸ்.ஐ. இருக்க வேண்டும், இன்றைக்கு நம்முடைய நாட்டிலே எல்லாத் தொழிலாளர்களுக்கும் போதுமான வைத்திய வசதி கொடுக்கும் ஏற்பாடு இல்லை, ஆகவே, இதையாவது செய்ய உத்தரவாதம் இருக்கிறது என்று சொல்லி, E.S.I. Organisation has come to stay. அப்படி வந்தபிறகு இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு, தாங்கள் பணம் கொடுத்து வைத்திருக்கும் அந்த ஆஸ்பத்திரி நம்முடையதாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். 3 ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன.

ஐயனாவரத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் ரொம்ப நல்ல முறையில் இருக்கிறது என்று நேற்றுவரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அங்கே பல பேஷண்டுகள் கீழே படுத்திருக்கிறார்கள், அந்த ஐயனாவரம் ஆஸ்பத்திரியில் பெட் வசதி போதாது.

அடுத்து கோயம்புத்தூரில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது, மதுரையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. மதுரையில் அந்த இலாக்காவிலே ஈடுபட்டிருக்கும் அதிகாரியே என்னிடத்தில் சொன்னார்கள். மதுரை ஆஸ்பத்திரியைப் பார்த்தால் அது ஒரு நர்சிங் ஹோம் மாதிரிதான் இருக்கிறது, 202 பெட்தான் அங்கே

திருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.

எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது சிபாரிசு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப் பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபிசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிபோர்ட்டில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்சனைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரண மாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஜீப்.டி. போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்க லாம். இதை போன் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.



அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போக வில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப் போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான் டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகை யில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின் சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடைமையாக்கப் போகிறது என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ருப், கொத்தாரி, பாரி அண்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக் கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயில ராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சர்க்கரை ஆலைகளை தேசிய மாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரி தாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற் சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்காரா மில்லில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் விரட்டுவார். மாநில

இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 1,000-க்கு 4 பேர் என்பதைவிட அதிகமான பெட் இல்லை. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் பூராவும், ஏன் கன்னியாகுமரி மாவட்டம்கூட அதற்கு வர வேண்டியிருக்கிறது.

(மாலை 4-30)

அவர்களுடைய ஆஸ்பத்திரி இதுதான். ராஜபாளையத்திலுள்ளவர் யாராவது இன்-பேஷன்டாகப் போகவேண்டுமென்று சொன்னால் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் மாற்றுத்தாய் பிள்ளை மாதிரி வந்து இருக்க வேண்டியிருக்கிறது. கோவில்பட்டியில் யாராவது இன்-பேஷன்டாக வரவேண்டுமென்றால் மாற்றுத் தாய் பிள்ளை மாதிரி திருநெல்வேலி ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலில் இருக்க வேண்டியிருக்கிறது. 200 படுக்கைகள் என்பதை ஆயிரம் என்று ஆக்குங்கள். ஆயிரம் பேருக்கு நாலைந்து படுக்கைகள் என்று கணக்கு வைத்தால் கூட மூன்று நான்கு ஜில்லாக்கள் சேர்ந்து இதைப் பெரிதாக்கும் நிலைமை இருக்கிறது.

இப்போதுள்ள பல்வேறு நிலையைப் பாருங்கள். மதுரை ஆஸ்பத்திரியில் ஒரு சர்ஜன் இருக்கிறார், ஒரு ஃபிசிஷியன் இருக்கிறார், ஒரு பெண் டாக்டர் இருக்கிறார். மூன்று பேர் போதுமா? ஹவுஸ் சர்ஜன் வேலை நிறுத்தம் செய்தபோது கூட நான் இந்த நிலையைத்தான் சுட்டிக் காட்டினேன். மூன்று சர்ஜன்கள் மூன்று பிசிஷியன்ஸ், இரண்டு பெண் டாக்டர்கள் இருக்கவேண்டும். அந்த மாதிரி அதிகப்படுத்த முடியும். தேவை இருக்கிறது. நான் சுற்றிப் பார்த்துச் சொல்லுகிறேனே தவிர, ஆர்க்யூமென்டுக்காகச் சொல்லவில்லை. இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரி 'அண்டர் ஸ்டாஃப்ட்' என்ற முறையில் நடக்க வேண்டிய அளவில் இருக்கிறது. திறமையான டாக்டர்கள் நம்முடைய இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியின் கீழ் வரவேண்டும். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியை விட சிறந்த டாக்டர்கள் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில ரீஜியிலும், அந்தந்தப் பகுதியில் இ.எஸ்.ஐ. அட்வைசரி கமிட்டி என்று வைத்து விட்டால் அவர்களுடைய ஆலோசனை வரும். அப்போது அவர்களுடைய ஆலோசனையை அமல் நடத்தக்கூடிய நிலைமை ஏற்படும்.

நம்முடைய சர்க்கார் பீடி-சிகார் தொழிலாளர்களுக்கான சட்டத்தை 1966-ம் ஆண்டு கொண்டு வந்தது. பீடி-சிகார் தொழில் சிறு தொழிலாகத் தெரிகிறது. ஆனால், 'பீடி கிங்ஸ்' பீடி முதலாளிகள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். தொழிலாளியைச் சுரண்டி அதிகமாக லாபம் பெறுகிறார்கள். சிறு தொழில் என்று சொல்லி அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள்.





அதே மாதிரிதான் சுருட்டும். 1966-ம் ஆண்டு வந்த சட்டம் செல்லாது என்று சொல்லி கடைசியில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் 'செல்லும்' என்று சொல்லியாகிவிட்டது. செல்லும் என்று சொன்ன பிறகு நம்முடைய சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதை அமல்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இன்றைக்குக் கூட ஐயாயிரத்துக்கும் அதிகமான சுருட்டுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

திருச்சி சுருட்டு வெளி நாட்டில் பெயர் பெற்றது. எவ்வளவு பெரிய டின்னர் நடந்தாலும் டின்னர் முடிந்த பிறகு உறையூர் சுருட்டுதான் வைப்பார்கள். அந்தக் காலத்திலேயே 50 ரூபாய் 60 ரூபாய் டின்னர் நடந்தாலும் கடைசியில் உறையூர் சுருட்டு வைப்பார்கள். அந்தச் சுருட்டு முதலாளிகள் கதவடைப்புச் செய்துவிட்டு அதே டிரேடு மார்க்கில் இரகசியமாக வேலை செய்கிறார்கள். போன வருஷம் ஆறும் மாதம் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை முறியடிக்க இங்கும், நாகப்பட்டினத்திலும் இப்படிச் செய்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள் எட்டு வருஷ காலமாகச் சட்டம் அமலாக வேண்டுமே என்று காத்துக் கொண்டிருந்தார்கள். சட்டம் அமலான பிறகு இந்த மாதிரி நிலைமை, பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை இந்த அரசு உண்டாக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லோரும் சொல்லுகிற குறை. இதைச் சொன்னால் இப்படித் தான் சொல்லுவார்கள் என்று நீங்கள் பதில் சொல்லி நாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். டிலே எந்த லெவலில் வருகிறது? கன்சிலியேஷன் நடக்கிறது. ரிப்போர்ட் அனுப்பி ஆயிற்று. ரிப்போர்ட் அனுப்பப்பட்ட பிறகு அது டிப்பார்ட்மெண்டில் படுகிறபாடு இருக்கிறதே அதைச் சொல்லி முடியாது. லேபர் கமிஷனருக்கு மறுபடியும் அனுப்பி அது லேபர் ஆபீசருக்கு 'ஃபார் கிளாரிபிகேஷன்' என்று அனுப்புகிறார்கள். இந்த டிலேயைக் குறைப்பது நல்லது.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

மருதமலை ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸ்—

It was formerly Palamalai Renganathar.

இப்போது 220 தொழிலாளர்கள்; முன்பு 370 பேர்.

There was a lock-out on 18th February 1975. Narayanasamy suspended and 26 persons arrested. Proprietor's house is near Perur. D.C.L. has given false report. Parvathi met Collector.

திருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.

எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது சிபாரிசு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப்பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபீசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிபோர்ட்டில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்னைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரணமாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஜி.ஐ.டி. போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்கலாம். இதை போன் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.





அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போகவில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப்போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான்டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகையில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின்சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடைமையாக்கப் போகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ரூப், கொத்தாரி, பாரி அன்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக்கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயிலராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** சர்க்கரை ஆலைகளை தேசியமாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரிதாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற்சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்காரா மில்ஸில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் மிரட்டுவார். மாநில

சர்க்காரையும் விட்டுவார். யாரையும் விடப் போனும் கேஸ் போடுவார். நமது இலாகா சிறந்தவர்களை அங்கு பாக்டரி ஆக்டை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.

டெக்ஸ்டைல் மில்லில் பாக்டரி ஆக்ட் அமலில் இல்லாத சிறந்த இடத்தைத் தேடிப் பார்க்க வேண்டுமென்றால் அது திருச்செங்கோட்டில் இருக்கிறது. முதலாளியின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் சொல்வதற்கு முன்னால் அவர் யார் என்று தெரிந்திருக்கும். (ஒரு உறுப்பினர் : பெயரைச் சொல்லுங்கள்) அங்கப்ப செட்டியாருக்கு சொந்தம். நம் தொழிலாளர்களுக்குச் சௌகரியமாக பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா? இன்றும் குறைந்த சம்பளத்தில் அடிமைகளாக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மற்றவர்களைவிட ஒப்பந்தம் செய்துகொண்டாலும் ஒப்பந்தம் அமலாகாத இடமாக அது இருக்கிறது.

இராஜபாளையத்தில் ஜானகிராம் மில்லில் ஒரு க்ருப் இருக்கிறது. சிறு விவிங் செக்ஷன்ஸ் நிறைய இருக்கின்றன. 300 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அத்தனைக்கு எடுத்திருப்பது திருநெல்வேலி ஜில்லாக்காரர். அவர் எல்லோரும் வெளியே போங்கள் என்று சொல்லி எல்லோரும் போய் ஓரளவிற்குச் சரி செய்தார்கள். மறுபடியும் நான் மூடப்போகிறேன் என்று சொல்லி, மூடாதே என்று சொல்லிச் சென்ற தொழிலாளர்கள் நூறு பேர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் மறியல் செய்தால் உடனடியாக பதினைந்து நாட்கள் ரிமாண்ட் என்று போலீஸ் சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. அதைக் கண்டிக்கிறேன். மூடப்போகிறேன் என்று சொன்னதற்கு, மூடாதே என்று அந்த இரண்டு நாட்கள் முன்னால் சென்று மறியல் செய்தால் உடனே மதுரை சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்புகிறார்கள் நூறு பேர்களையும். டி.சி.எல்.லிடம் பேச்சுவார்த்தை நடந்து தோற்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

Arm the D.C.L. with powers.

“திற ஐயா” என்று சொல்லுங்கள். அப்போதுதான் திறப்பார்கள். இங்கு அமைச்சர் அவர்கள் அல்லது லேபர் செகரட்டரி அல்லது ஒப் கமிஷனர் ஆப் லேபர், “திறந்துதான் தீரவேண்டும், நீ பொய்யாக ஏமாற்றுகிறாய், திறக்கப் போகிறாயா இல்லையா, திறந்துதான் தீரவேண்டும், இப்போது மூடி விட்டு மூன்றரை மாதம் கழிந்து. வேறுவழியில்லா திறக்கப் போகிறாய்?” என்று சொன்னால் பயப்படுவார்கள். டி.சி.எல். இடம் சென்று பேசினால், எங்கள் பார்ட்னர்ஸ் இடையில் தகராறு, அதனால் மூடுகிறேன் என்பார்கள். சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்வார்கள். அந்த 300 பேர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.





பிராவிடெண்ட் பண்ட் சம்பந்தமாக, டெக்ஸ்டைல், இன்ஜினீரிங், ரோடு டிரான்ஸ்போர்ட் இவைகளில் உள்ள குறைகளைப் பற்றிக் கருத்துச் சொல்ல விழைகிறேன்.

Government hesitates to launch prosecutions.

நான் பிராவிடெண்ட் பண்டு சென்ட்ரல் போர்டில் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலத்தில், மத்திய சர்க்காரே எடுத்து பிராசிக்யூட் செய்வதற்கு அதிகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று வந்து இருக்கிறது. இப்போது மாநில சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இப்போது பிராசிக்யூட் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி பிராசிக்யூட் செய்கிறபோது நம்முடைய அரசாங்கத்திற்கு ரொம்பத் தயக்கம் வருகிறது. கொஞ்ச நாள் பிராசிக்யூட் செய்யுங்கள்.

இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்றால், தொழிலாளி 10 ரூபாய் கட்டுகிறான் என்றால், முதலாளி 10 ரூபாய் போடுகிறார் என்றால் இரண்டையும் அனுப்புவது இல்லை. கடைசியாக என்ன செய்து இருக்கிறோம் என்றால் ஜி.பி.எப். தொழிலாளிக்குக் கொடுக்காமல் இருக்கமுடியாது என்பதற்காகக் ரூ. 2,000 தொழிலாளி கட்டி, ரூ. 2,000 முதலாளி கட்டவேண்டுமென்றாலும்—தொழிலாளிக்கு அந்தப் பணம் கொடுக்கவேண்டுமென்பதற்காக ஸ்பெஷல் பண்டிலிருந்து தொழிலாளிக்குப் பணம் கொடுக்கிறோம்.

தொழிலாளி கட்டியிருக்கிற அளவுக்குப் பணம் கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டுமென்று சர்க்கார் சொல்லியிருக்கிறோமே தவிர, முதலாளியைக் கண்டிக்கக் கேட்கிற அளவுக்கு நிலைமை வரவில்லை. அப்படிப்பட்ட முதலாளிகளைக் கண்டிக்கலாம்.

ஒரு சமயத்தில், பம்பாயில் ஒரு முதலாளியையும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு முதலாளியையும் 15 நாள் ஜெயிலில் வைத்தோம். 15 நாள் ஜெயிலில் வைத்து, கம்பி எண்ண வைத்தால் சரி, கடகடவென்று பணம் வந்து சேரும். ஆனால் இந்த மாதிரி ஆட்களுக்கு ஒரு தொல்லை ஏற்படப் போவது இல்லை. இருந்தபோதிலும், ஒரு 15—10 நாள் ஜெயில் போடுகிறோம் என்ற நிலைமை வந்தால், சீக்கிரம் அரியர்ஸ் கலெக்டாகும். என்னிடம் விவரங்கள் இருந்தாலும், விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.

ஏற்கனவே சட்டத்தைப் பற்றி விவாதிக்கிறபோது, தொழிலாளிக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னேன். அந்த வேண்டுகோளை நீண்ட நாட்களாக சொல்லி வருகிறோம். எ.ஐ.டி.யு.சி. சொல்லி வருகிறோம்; இப்போது இருக்கிற ஹைக்கோர்ட்டிலேயே ஒரு ‘லேபர் பெஞ்ச்’ ஏற்படுத்

கொள்ளவில்லை. அப்போது நாங்கள் சொன்னோம், வொர்க்கர்ஸ்லெவலுக்கு அதிகமாக [illegible] வேண்டும், தொழிற்சங்கங்கள் அதிகமாகச் சொல்லிக்கொடுக்க [illegible], தொழிற்சங்கம் நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது [illegible] 1 மாதம், 2 மாதம் என்று வகுப்பு வைத்து, [illegible] சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். எ.ஐ.டி.யு.சி [illegible]. அதில் எங்களது மூன்று தொழிற் சங்க இயக்கங்கள் [illegible] தெரிவித்தோம். மாநில அமைச்சர்கள் எதிர்த் தார்கள். [illegible]. இப்போது அந்த [illegible] முறையில் நடந்து வருகின்றன. சென்னையில், கோயம்புத்தூரில் [illegible] வருகிறது. அந்த [illegible] 'கெஸ்ட் லெக்சரர்' [illegible]. அப்படி [illegible] தருகிறது. அதைக் கண்காணிக்கிற [illegible] இருக்கிறது. அப்படிப் பார்க்[illegible]

Why this duplication? What is workers' training? நாம் [illegible] என்று இங்கே [illegible] அதற்கு என்ன அவசியம் [illegible]? இது [illegible] வேண்டாம். இது நிறுத்தப்பட வேண்டும். [illegible] நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கும் மத்திய சர்க்காரின் டைரக்டர் [illegible], அவர்கள் நல்ல விதத்தில் நமக்கு ஒத்துழைப்பு [illegible] இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் [illegible] தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இவைகளைத்தான் நான் [illegible] வைத்து கருத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். ஹவுசிங் போர்டு சம்பந்தமாக, நாங்கள் கொடுத்து இருக்கும் 2-3 விஷயங்களை இந்த அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக நான் சொன்ன விஷயங்களை எல்லாம் அரசு நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய இந்த விவரங்கள் எல்லாம், அனுபவத்தில் இருக்கும் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேனே தவிர ஏதோ சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இன்று இருக்கும் நிலைமையில். இதிலே ஓரிரு விஷயங்களைத் தனியாகப் பார்த்தால் it is going in the anti-working class direction என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





பல விஷயங்களில் இந்த மாதிரி பல 'சிம்போசியம்' நடத்திப் பார்க்கிற நேரத்தில், பல பேர் தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்கிற நேரத்தில் வேதனையாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஏதோ பொறுப்பு இல்லாமல் இருப்பதுபோல் சொல்ல வேண்டியது இல்லை. தொழிலாளர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள். உற்பத்தியில் முறையாகத்தான் இருக்கிறார்கள். மின்சார வெட்டு என்ற உடனே கோயம்புத்தூரில் இருந்து எங்களுக்குத் தந்தி வருகிறது. முதலாளிகள் சாதாரணமாகவே எப்படி "லே-ஆப்" கொடுக்கலாம் என்று பார்ப்பார்கள். ஜெனரேட்டர் வைத்து இருப்பவர்கள் கூட அப்படிச் செய்கிறார்கள்.

கோயம்புத்தூரில் இருக்கும் ஆலை முதலாளிகளுக்கும், முதலமைச்சருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும், ஏப்ரல் மாதத்தில் அதிகமாக கிடைக்கும் என்று இருந்தது போக, அது குறைக்கப்படுமோ என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்த வகையில் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில், உத்தரவாதம் காணக்கூடிய முறையில் காரியங்கள் நடைபெற வேண்டும். நான் சில விஷயங்களை ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறேன். பல விஷயங்களில் காரியங்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன் என்று சொல்லி எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 5.00)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாலை நேரங்களில் மன்றம் நடக்கிறபோது வழக்கமாக காரம், டீ கொடுப்பது வழக்கம், கொடுப்பார்கள், நான் மறுக்கவில்லை. நம்முடைய அற நிலைய அமைச்சரவர்கள் பால் வளத்தைப் பார்க்கிற காரணத்தினால் அவர் முன்பு பால் கோவா கொடுத்தார்கள். நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் போனஸ் கொடுப்பதில் கெட்டிக்காரர் ஆவார்கள். ஆகவே அவர்கள் இன்றைக்கு போனஸாக பாதம் அல்வாவைச் சேர்த்து தருகிற நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பாதாம் அல்வா மார்கெட்டில் கிடைக்குமோ என்னவோ தெரியாது. ஏதாவது ஒரு ஸ்வீட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன்.

நான் கூட ஐ.டி.சி. என்று அழைக்கப்படக் கூடிய இந்தியா டுபாக்கோ கம்பெனியில் இருக்கிறேன். எங்கள் தொழிலாளர்களுக்கு எங்கள் தொழிற்சங்கம் மூலமாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னாலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அந்தத் தொழிலாளிக்கு 5 ஆயிரம் ரூபாய் தொழிற் சங்கம் மூலமாக, வெல்பேர் ஃபண்டு ஸ்கிம் என்று உருவாக்கி அதற்காகச் சட்ட திட்டங்கள் தோற்றுவித்துக் கொண்டு நாங்கள் வழங்கிவந்து கொண்டு இருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்கள் எல்லா இடங்களிலும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்த அந்தக் கட்டத்தில் யாருமே எதிர்பாராத முறையில் மிகச் சிறந்த திட்டத்தை, 10 ஆயிரம் ரூபாயை அரசு ஊழியருக்கு வழங்கும் அற்புதமான திட்டத்தை இந்த அரசு அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இன்றையதினம் நாங்களெல்லாம் தொழிற்சங்க இயக்கத்திலே அரசாங்கத்தினுடைய இந்தத் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக்கூடிய அளவிலே நிலைமைகள் இருப்பதைக் காண்கிறோம்.

தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே, தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, சமூக நீதி அடிப்படையிலே, உழைக்கிற மக்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை, அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலட்சிய சமுதாயத்தைக் காண வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்த அரசு பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையிலேதான் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையிலே தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத்தில் அநியாயமாக 15 தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார்கள் என்பதற்காக, பழி வாங்கப்பட்ட காரணத்தினால்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 15 தொழிலாளர்களை நீங்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்பதாக ஆலோசனைகளை வழங்கினார்கள். தகாராறுக்குரிய குற்றச்சாட்டுகள் இன்னின்ன என்று சொல்லக் கூடிய அளவிலே உள்ள 5 தொழிலாளர்கள் பிரச்சனையைக் குறித்து முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள், முன்னின்று நடத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக பழி வாங்கப்பட்ட 15 தொழிலாளர்களை நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவார்கள், சமூகமான நிலைமை ஏறபடுமென்று சொன்னார்கள்.



ஆனால், அந்த சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகம் எந்த அளவிற்குப் பிரச்சனையை வளர்த்தார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்காகவே நாங்கள் உழைக்கிறோம் என்று சொல்லிய, சொல்லி வரக் கூடிய கட்சிகள் கூட இந்தப் பிரச்சினையிலே தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்காமல் சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகத்திற்கு ஆதரவாகவே சட்ட மன்றத்தில் குரல் எழுப்பிய வேதனையையும் கண்டோம். தொழிற்சங்க இயக்கத்தில் பல ஆண்டுக்காலம் பணியாற்றியவர்களைக் காண்கிறோம். சாதாரணமாக ஒரு தொழிலாளியை நீக்கவேண்டுமானால் அதற்கு சில அடிப்படை முறைகள் இருக்கின்றன. சி.எம்.சி. தொழில் தகாறு சட்டத்தின் கீழ் வருகிறதா இல்லையா என்பது பிரச்சனை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி : ஆகவே, அடிப்படை நியதிகள் இருக்கின்றன. யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு தொழிலாளி மீது ஒரு குற்றச்சாட்டு என்றால் இன்னின்ன குற்றச்சாட்டு என்று சொல்லி, அதற்கு விளக்கத்தைக் கேட்பார்கள். பஸ்ட், ஷோ காஸ் நோட்டீஸ். அந்த விளக்கம் திருப்திகரமாகயில்லை என்றால், இன்னின்ன குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடைபெறும் என்று சொல்லுவார்கள். விசாரணை முடிவுற்ற பிறகு அந்தத் தொழிலாளி எந்தக் குற்றங்களுக்கு இலக்கானவர் என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, அந்த விசாரணையை நடத்தியவர் அதற்குப் பைண்டிங்ஸ் தந்த பிறகு இன்ன தண்டனை வழங்கலாமென்று முடிவு பண்ணி, குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது, இன்ன தண்டனை வழங்கியிருக்கிறோம், விளக்கம் தாருங்கள் என்று சொல்லுவார்கள். இது செகண்ட் ஷோ காஸ் நோட்டீஸ். இதுதான் அடிப்படை நியதிகள். பிரின்ஸிபிள்ஸ் ஆப் நாச்சுரல் ஜஸ்டிஸ். அந்தத் தொழிலாளிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரப்பட்டனவா என்றால் இல்லை.

ஆகையினால், நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமுகமான முறையில் பிரச்னை தீர வேண்டுமென்பதற்காக அந்தத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். உள்ளபடியே ஒரு நாட்டின் முதலமைச்சர் போராடுகின்ற தொழிலாளிகளுக்கு அவரே முன் வந்து ஒரு தீரம் மிக்க முடிவை எடுத்து, அடம் பிடிக்கக் கூடிய நிர்வாகத்திற்கு எப்படியும் நீங்கள் பின்பற்றியாக வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்தக் கட்டத்தில் அனைத்துக் கட்சிகளும், கட்சி வித்தியாசங்களை மறந்து, அந்த முதலமைச்சருக்குப் பின்னால், அவருடைய குரலை, அவர் கரத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் எல்லோரும் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் வேதனைமிக்க காட்சியைக் கண்டோம். அரசியல் ரீதியில் இதற்கு விமர்சனம் செய்தார்கள். தொழிற்சங்க ரீதியில் விமர்சனம் செய்யத் தவறி விட்டார்கள். ஆகையினால் நான்

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர்களே, தலைவர்கள் கன்சிலியேஷன் ஆபீசர் வேலை செய்து வெற்றி அடைந்ததற்காக அவரை பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர்களே, இந்த [illegible] கொடுத்து காரமாக பேசுபவர்களை மாற்றிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள் ஸ்விட்டிற்காக மாறி விடுகிறவர்களா?

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் தலைவர்களே, இன்றைய தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை இந்த மன்றமும், இந்த நாடும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. உழைக்கிற வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், அவர்களது பிரச்சனைகள் எதுவானாலும் அந்தப் பிரச்சனைகள் தொழில் தகராறுகள் அந்தந்தத் தொழிற்சங்கங்களால் எழுப்பப்படும்போது நிச்சயமாக தொழிலாளர்களுக்குச் சாதகமான முடிவுகள், உடன்பாடுகள் ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு இருந்து வருகிற நிலையையும், அதற்கேற்ற வகையிலே நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மிகச் சிறப்பான முறையிலே பல்வேறு தொழில் தகராறுகளையெல்லாம் சுமுகமான உடன்பாடுகளின் மூலமாக தீர்த்து வைத்திருக்கிற உண்மையையும் நாம் மிக நன்றாக அறிவோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய உரையிலேயே அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பீடித் தொழிலில் ஏற்பட்ட தகராறு, சர்க்கரைத் தொழில் தகராறு, பிறகு நெய்வேலி தொழில் பிரச்சனையிலே ஏற்பட்ட உடன்பாடு, தோட்டத் தொழிலில் ஏற்பட்ட தகராறு, இவற்றிலேயெல்லாம் மிக நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு ஆதரவான முறையிலே பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வந்தன என்கிற உண்மையை நாமும் மிக நன்றாக உணர்கிறோம். ஆகையினாலே இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை யார் மறைத்தாலும், அல்லது மறுத்தாலும் நிச்சயமாக இந்த நாடு, இந்த நாட்டில் இருக்கக் கூடிய உழைக்கிற வர்க்கம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த அரசு பாட்டாளி மக்களுக்காக, அகில உலக பாட்டாளி மக்களுடைய தினமான 'மே தினத்தை' சட்ட பூர்வமான சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக செய்ததை யாரும் மறந்து இருக்க முடியாது.



அதே போல பல்வேறு பிரச்சனைகள், முற்போக்கான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே மட்டும் பங்கு அல்ல, லாபத்திலேயும் பங்கு என்று சொல்லக் கூடிய நிலையில் பொதுத் துறையிலே போக்குவரத்துத்துறையிலே செயல்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். தொழிலாளர் நல நிதி சட்டம் மிக சிறப்பான முறையில் தொழிலாளர்களுக்காக பணியாற்றிடக்கூடிய வகையில் அதற்கென உள்ள சட்டம் இந்தச் சட்டத்தின் கீழ் இயங்கக் கூடிய அளவிலே தொழிலாளர் நல நிதி வாரியம் என்று ஒரு வாரியத்தை அமைத்து அந்த வாரியம் இன்றையதினம் மிகச் சிறப்பான முறையில் தொடங்கியிருப்பதை நாம் காண்கிறோம்.

இங்கே தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் பேசுகிற அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் கூட இப்போது ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். தொழில் தகராறு என்றால் சாதாரணமாக முன்பெல்லாம் ரெஃபரன்ஸுக்காக தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமென்பதற்காகவே தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டம், இதற்கென்றே வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கி திட்டமிட்ட முறையில் போராடுவது என்ற நிலைமைகள் இருந்தன. அதை யாரும் மறந்து இருக்க முடியாது. ஆனால் இன்றையதினம் அது போன்ற கோரிக்கையிலே போராட்டங்கள் நடைபெறுவதில்லை. காரணம், இந்த அரசு கூடுமான வரையில் பிரச்சனைகளை முக்கூட்டு பேச்சுவார்த்தை என்ற முறையில் தொழிலாளர் நல அதிகாரிகள் திறம்பட பிரச்சனைகளை முடிக்க முயற்சிக்கிறார்கள். இறுதியிலே அமைச்சர் கட்டத்தில் பிரச்சனைகள் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டு வருவதால் தொழில் கோர்ட்டிற்குப் பிரச்சனைகளை விட வேண்டுமாவென்றால், வேண்டாம், வேண்டாம், நீங்களே முடித்துத் தாருங்கள் என்று சொல்லிவிடக் கூடிய நிலையினைக் காண்கிறோம். அந்த அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே பல்வேறு பிரச்சனைகளை நல்ல முறையில் தீர்த்துக் கொண்டு வருகிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் ஃபெமிலி பெனிபிட் ஸ்கீம் என்ற முறையில் அரசு ஊழியர் ஒருவர் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடக்கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்து அதனால் அரசு ஊழியர்கள் பயன் பெற்று வருவதைக் காண்கிறோம்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 4

இன்றைக்கு இது போன்ற ஒரு சூழ்நிலையில்தான் தொழிற்சங்கப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது அரசு நல்ல பல திட்டங்களைத் தொழிலாளர்களுக்காகச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில் மத்திய அரசு ஊதிய முடக்குச் சட்டம்—கம்பல்சரி டெபாசிட் ஸ்கீம் என்று சொல்லி அந்தச் சட்டத்தின் மூலம் இன்றைக்குத் தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படக் கூடிய காட்சியை காண்கிறோம். அதற்கு கூட எதிர்பார்த்த அளவுக்குக் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கப் பலர் மறந்து விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனைதான் ஏற்படுகிறது.

வரம்பே கிடையாது. 150 ரூபாய், 200 ரூபாய் என்று ஊதியம் பெறுகின்றவர்கள் கூட, தங்களது கோரிக்கைகள் மூலம் பிரச்சினையை தீர்த்துக் கொண்டு, சுமுகமானமுறையில், பேச்சு வார்த்தையின் மூலமோ, அரசாங்கத்தின் ஆணையோடோ, பேசி முடித்து, ஊதிய உயர்வு பெற்றால், அதை முழுமையாகப் பெற முடியாது. அடிப்படைச் சம்பளம் உயர்ந்தால் அந்தத் தொகையைப் பெற முடியாது. பஞ்சப்படி உயர்ந்தால் பாதிதான் தொழிலாளர்களுக்குச் செல்லும் என்ற அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்தச் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அதனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. கறுப்புப் பணம், கள்ளப் பணம், கள்ள மார்க்கெட்டுக்காரர்களின் பல்வேறு விதமான தவறான செயல்கள், இவை காரணமாக இன்றைக்கு விலைவாசியை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலைதான் இந்திய அரசாங்கத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே, தொழிலாளர்களுடைய வருமையில், ஊதிய உயர்வில் கை வைக்கக் கூடிய அந்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் லிவிங் வேஜ் என்பதை முதலாளிகள் தொழிலாளிகளுக்குத் தர வில்லை. இப்பேர்ப்பட்ட காலத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. தொழிற்சாலைகளில் பல ஆண்டுகளாக காஷுவல் தொழிலாளிகள், டெம்பரரி ஒர்க்கர்ஸ், காண்டிராக்ட் ஒர்க்கர்ஸ் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூபாய் 3, 3½, 4 என்று குறைந்த அளவில் ஊதியம் தந்து மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகளெல்லாம் தற்காலிகத் தொழிலாளிகள். எந்தெந்தத் தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளிகளுக்குக் குறைந்த



1975 ஏப்ரல் 4] [திரு. மா. வே. நாராயணசாமி]

பட்ச ஊதியம் எவ்வளவு இருக்கிறதோ, அன்ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் மினிமம் வேஜ், அது அந்த கேஷுவல் தொழிலாளிக்கு, டெம்பரரி தொழிலாளிக்கு, வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் புதிய சட்டத்தை நம் அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதுபோன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இன்றைக்கு நிரந்தர தொழிலாளி 15 ரூபாய் ஊதியம் பெறுகிறான் என்றால் தற்காலிக தொழிலாளிக்கு 4 ரூபாய், அதிகம் போனால் 5 ரூபாய் என்ற அளவில் கொடுத்து முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றுகின்ற காட்சியைக் காண்கிறோம். அதற்காக ஒரு சட்டம் தேவை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

லே ஆப் நாளைக்கு முழு ஊதியம் வேண்டும். இந்தக் கோரிக்கை ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசு ஆதரவான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று நான் மெத்த வேண்டுகிறேன்.

அடுத்தாற்போல, சத்தியா ஸ்டுடியோ பிரச்சினை. உள்ளபடியே மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைமை. சத்தியா ஸ்டுடியோ முதலாளி—அவர் இன்றைக்கு ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. எம். ஜி. ஆர். அந்த ஒரு ஸ்டுடியோ மூடப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளிகளெல்லாம் மிக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2 தொழிலாளிகள் உயிர் இழந்து விட்டார்கள். ஆக, இது நம்முடைய அரசு இன்னும் அதிகபட்சமாக அந்தத் தொழிலாளிகளுக்கு ஆதரவான முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும், இதை இன்னும் நல்ல முறையில் தீவிரமான முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் திருவொற்றியூரில் ஹூமி ரப்பர் ஒர்க்ஸ் 1½, 2 ஆண்டு காலமாக மூடப்பட்டு, தொழிலாளிகள் ஊதியம் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.

மற்றும் பைலட் என்ற கம்பெனி. அது மூடப்பட்ட நிலையில் இருக்கிறது. தொழிலாளிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி வில்லிவாக்கத்தில் வேண்டுமென்று ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் கட்டப் போவதாகச் சொன்ன இடங்களில் வில்லிவாக்கம் இல்லை. ஆக அங்கேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1975 மார்ச் [illegible]

திரு. [illegible]: [illegible] சொல்கிறேன். [illegible] பேசினேன். [illegible]

Principles of natural justice

[illegible]

திரு. [illegible]: [illegible] அடிப்படையில் [illegible] தொழிலாளர் [illegible] அது. [illegible] இருக்கிறது [illegible] இந்த [illegible] இருக்கிறது [illegible] தொழிலாளர் [illegible] [illegible]

[illegible] தொழி[illegible] [illegible] [illegible] இருக்கிறது. [illegible] சொல்கிறார்கள். [illegible] இருக்கிறார்கள். [illegible] [illegible] இருக் [illegible] சொல்லவில்லை.

The way of approach by the D.M.K. Government is like that.
அவர் நடந்துகொண்ட முறையைப் பார்த்து, தொழிலாளர்[illegible], தொழிலாளர் பிரச்னைப்பற்றி எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் என்பதை அன்றைய தினம் நாலும் மக்களும் உணர்ந்துகொண்டோம்.



1975 மார்ச் 4] [திரு. [illegible]]

உண்[illegible] [illegible] தொழிலாளர்களை [illegible] [illegible]வில்லை. [illegible] ஏற்படுத்த வில்லை. [illegible] போனார் [illegible] [illegible] தொழிலாளர்கள் [illegible] இருந்தால் [illegible] அந்த [illegible] இருக்கிறார்கள். [illegible] இருக் கின்றன.

பி. ஆர். சி. [illegible] அங்கே இருக் கிறது. [illegible] நிறுவனம். அந்த நிறுவனம் [illegible] நாட்டில் [illegible] ஓட்டும் [illegible] அதில் [illegible] பஸ் முதலாளிகளுக்கு பஸ் ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

[illegible] முதலாளிகளுக் கொடுத்தார்கள். [illegible] இருக்கிறது. முன்னாள் தொழிலமைச்சர்— இன்றைய [illegible] ஜெயராமன் [illegible] கொடுத்தார்கள். [illegible] கொடுத்தார்கள். இப்படி 5 ரூட்டுகளையும் [illegible] அந்தத் தொழிலாளர்களை [illegible] தொழிலாளர்களை [illegible] விருதுநகரில் [illegible] தொழிலாளர் கள் [illegible] எப்படிப் போகலாம்? [illegible] தொழிலாளர்கள் எப்படிப் போகலாம்? என் பி.ஆர்.சி. அந்த [illegible] அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது [illegible] இருக்கிறதோ இல்லையோ இந்த அரசுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் நிச்சயமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: [illegible], [illegible] நன்றாகத் [illegible] ஆனால் இப்பொழுது [illegible] உண்[illegible] இருக்கிற [illegible] எனக்குத் தெரியாது. [illegible] பிரச்னையும்

ஹவுசிங் ஸ்கீம் ஃபார் இண்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ். இந்தத் திட்டம் தொழிற்சாலைகள், தொழிலாளிகள் இருக்கக்கூடிய இடங்களில் தீவிரமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் கூட தொழிலாளிகளுக்கு வீடுகளை கட்டித் தரும்போது மான்யமாக ஒரு தொகை வழங்கப்பட வேண்டும். சப்சிடி; ரெண்டல் அசிஸ்டென்ஸ், மத்திய அரசாங்கத்தின் உதவி அதற்கு நிச்சயம் தேவை. அதற்கென்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். மத்திய அரசு மான்யம் பெறக் கூடிய அளவில் அந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, எம்பிளாய்மெண்ட் ஆபீஸ்கள். அங்கு போதிய அளவுக்கு ஸ்டாஃப் இல்லை என்று சென்ற ஆண்டு குறிப்பிட்டேன். அதில் இன்னும் ஒன்றும் செய்ததாக இல்லை. குறிப்பாக நந்தனம் அலுவலகத்தில் எம்பிளாய்மெண்ட் ஆபீசில் அதிகமான வேலைக்கு ஈடாக அதிக ஸ்டாஃப் இல்லை. அவற்றை அரசு கவனித்து உடனடியாக அதைத் தீர்க்க வேண்டும். சென்ற முறை நம்முடைய தொழிலாளர் நல இலாக்கா அதிகாரிகளுக்கு எல்லாம் போக்குவரத்து வசதிக்கு கார்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டேன். இன்றைக்கு ஓரளவுக்கு அவர்களுக்கு கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையிலே இந்தக் குறைகளைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* **திரு. பெ. சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யக் கோரிக்கை மீது எனக்கு முன்னாலே இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் இந்த அரசு தொழிலாளிகளுக்காக ஏராளமான நன்மைகள் செய்தது என்ற பெயரில் அவருடைய பாணியில் சில விளக்கங்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவர் பேச்சைக் கேட்கும்போது அவர் தமிழ் நாட்டைப் பற்றி பேசுகிறாரா அல்லது வேறு எந்த மாநிலத்தைப் பற்றியாவது பேசுகிறாரா என்ற சந்தேகம் வரக்கூடிய அளவில் செயற்கையான வாதத்தை, சிரமத்தோடு எடுத்து வைத்தார். அவர் காட்டிய உதாரணமே வேலூர் மருத்துவமனை விவகாரம். அதிலே 15 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு இழந்த தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம், குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு வேலை வாய்ப்புத் கிறார் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** நான் ஏதோ சிரமப்பட்டு சிலவற்றைச் சொன்னதாகவும், தமிழ்நாடு பற்றியதா என்ற சந்தேகம் கிளம்பக் கூடிய அளவில் இருந்தது என்றும் சொன்னார்கள். நேரமில்லை, அவர் உட்கார்ந்தால் 1 மணி





நேரம் நான் ஆதாரத்தோடு பல விளக்கங்களைத் தருவேன். இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்று விளக்க நான் அவசர அவசரமாகப் பேசி முடித்தேன். என்னிடத்தில் நிறைய விளக்கங்கள் இருக்கின்றன. தனியாக விளக்கி அவரை அந்த அவைக்கு கன்வின்ஸ் செய்யத் தயாராக இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** வேலூர் மருத்துவமனையில் வேலை இழந்த 15 தொழிலாளர்களுக்கு வேலை தந்ததாக இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அது நல்ல செயல். வெளிப்படையாகப் பார்க்கும்போது, வேலை இழந்த 15 பேருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தார்கள் என்று பார்க்கும்போது அருமையான செயல் என்று பாராட்டத் தோன்றும். ஆனால் ஒரு மோசமான நோக்கத்தோடு செய்யப் பட்ட நல்ல செயல் என்று எண்ணும்போது தற்காலிகமாக, வெளி விளம்பரத்திற்காக அரசாங்கம் செய்த வேலையே தவிர, தொழிலாளர்கள் மேல் எடுத்துக்கொண்ட அக்கறையினால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்குக் காட்டுகின்ற ஆர்வத்தால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாகச் செய்யவில்லை; அரசாங்கத்தின் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலூர் மருத்துவமனை மட்டுமல்ல. இந்த விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று ஆளும் கட்சி பத்திரிகைகளும், பேச்சாளர்களும் அவர்களுடைய பிரச்சார இயந்திரத்தை முடுக்கிவிட்டார்கள். வேலூர் மருத்துவமனை விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள்; எதிர்க்கட்சிகள் அந்த நிர்வாகத்தை ஆதரிக்கின்றன என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் இந்த நாட்டிலே இருப்பவர்கள் இதை ஒரு தொழிலாளர் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வேலூர் மருத்துவமனை விவகாரம் முடிந்துபோன ஒன்று. அது மட்டுமல்ல. அதற்கும் இந்தத் தொழிலாளர் நல மானியத்திற்கும் சம்பந்தமில்லை. அது ஐ.டி. ஆக்டிலும் வராது இதிலும் வராது. அதனால் இந்த மானியத்தைப்பற்றி பேசினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அது இந்த மானியத்தில் வராது; அது தொழிலாளர் பிரச்சினை அல்ல; தொழில் தகராறு சட்டத்தில் வராது என்பதை நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதால் நான் இதைக் கூறினேன்.

உடனடியாகத் தீர்ந்துவிடாது. உடனடியாகத் தீர்வு காணவும் முடியாது. படிப்படியாகத்தான் அரசின் கவனத்திற்கு வந்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் தொலைபேசி மூலமாகக் கூட எனக்கு இந்த விபரத்தைச் சொல்லியிருக்கலாம். அப்படித் தெரிவித்திருந்தால், இப்படிப்பட்ட பிரச்சனை இருந்தால் உடனடியாக பரிகாரம் காண்பதற்கு கூட அல்ல, என்ன பிரச்சனை என்று விசாரித்துவிட்டு வந்திருக்கலாம்.

இங்கேயிருந்து நான் போகிற பாதையில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கலாம். அவ்வளவும் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. கன்னியாகுமரிக்கு நான் போய்க்கொண்டிருக்கிறேன். வழியிலே 10 சம்பவங்கள் இருக்கும். போகிற இடங்களில் எல்லாம் என்னென்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டு போக முடியாது. சூழ்நிலைகளை உணர்ந்து குற்றச்சாட்டுகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : very sorry, Mr. Deputy Speaker, the Hon. Minister seems to be offended. நான் அன்றைய தினம் அமைச்சரை அங்கே சந்திப்பதற்குள்ள சூழ்நிலை இல்லை. அவர்களுடைய கட்சிக்காரர்கள் நிறைய சூழ்ந்துகொண்டிருப்பார்கள். எனக்குத் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்னேன். நண்பர் கருப்பு அவர்கள் இந்தப் பிரச்சனைப்பற்றி அமைச்சரிடம் பேசியதாக கேள்விப்பட்டேன். அமைச்சர் நினைத்திருந்தால் இந்தப் பிரச்சனையை 20 நிமிடங்களில் தீர்த்திருக்கலாம். தனியார்களுக்கு அந்த ரூட்டுகளைக் கொடுத்ததை கான்சல் செய்திருக்கலாம். ஆர்.டி.ஓ.-வைக் கூப்பிட்டு டெம்பரரி பெர்மிட் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கலாம். பி.ஆர்.சி.யைக் கூப்பிட்டு அந்த ரூட்டுகளில் பஸ் விடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சரவர்கள் அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சரை அப்படி முயற்சி எடுத்துக்கொள்ள அங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் வட்டச் செயலாளர்களும் விட்டிருக்க மாட்டார்கள்; அவர்கள் எல்லாம் பூர்ஷ்வா மனப்பான்மையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருப்பதாகக் குறிப்பிட்-





டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்லிக்கொள்வதை வைத்துச் சகோதரர் அவர்கள்தான் திருத்திக்கொள்ள வேண்டுமே அல்லாமல் திருத்திக்கொள்ள வேண்டியவன் நான் அல்ல. இன்றைக்கு அப்படி ஒரு நிலைமை வளர்ந்திருக்கிறது. இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். ஒவ்வொரு தொகுதியிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் தொழிலாளர்களோடு உறவு கொண்டு இந்த மாதிரி பிரச்சினைகளில் தலையிட்டு அரசாங்க நிர்வாகத்தை முதலாளி நிர்வாகம் கெடுக்க முடியாது என்ற நிலை இருந்தால் நிச்சயமாக இவ்வளவு விவகாரங்கள் வந்திருக்காது. சிம்சன் போன்ற விவகாரங்கள் நிச்சயமாக வந்திருக்காது. இப்படிப்பட்ட விவகாரங்களை இந்தச் சர்க்கார் சந்தித்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த மனப்பான்மை இன்று முதலமைச்சரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசி உறுப்பினர் வரை நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறோம். நான் சொன்னது ஒரு சின்ன உதாரணம்.

(மாலை 5-30)

இன்றைக்கு நம்முடைய ஆறுமுகம் அவர்கள் இவ்வளவு வருத்தப்படுகிறார்கள். சர்க்கரை ஆலை வேலை நிறுத்தப் பிரச்சினையில் என்ன ஆயிற்று? அமைச்சர் அவர்கள் கூட பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடந்தது 20-ஆம் தேதி. வேலை நிறுத்தம் ஆரம்பமாகப் போகிறது. எனக்கு 3 நாட்கள் டைம் கொடுங்கள், சமரசப் பேச்சை தொடர்ந்து ஒரு நல்ல முடிவு காணலாம் என்றார். 23-ஆம் தேதி ஆன பிறகும் சமரசம் வரவில்லை. ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஒரு சமரசம் செய்து வைக்க முடியாத காரணத்தினால்—7 சர்க்கரை ஆலைகள் அரசாங்கத்தின் சர்க்கரை ஆலைகள்—9 சர்க்கரை ஆலைகள் தனியார் ஆலைகள்—இந்த 7 அரசாங்கக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றவற்றுக்கு முன்மாதிரியாக இருந்திருந்தால் கூட மற்ற தனியார் சர்க்கரை ஆலைகளிலும் ஒரு சமரசம் ஏற்பட உதவியாக இருந்திருக்கும். அவர்களும் பயப்படக்கூடும். ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியுற்று—வேலை நிறுத்தம் 23-ஆம் தேதி தொடங்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பங்கேற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற தொழிலாளர் சங்கத்திற்கு திரு. மூர்த்தி

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 4

இன்னும் அதில் மிரட்டலும் அடங்கியிருக்கிறது. "காலம் தாழ்த்தாமல் வேலைக்குத் திரும்புங்கள். எதிர்காலத்தில் நிர்வாகம் உங்களை வேலை நிறுத்தம் காரணமாக பழிவாங்காமல் பார்த்துக்கொள்கிறோம்" என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

**திரு. எம். செல்வராஜ்:** மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுகிறது என்கிற ஒரு எண்ணம் தொனிக்கிற வகையில் இங்கே சொன்னார்கள்.

ஏற்கனவே சர்க்கரை ஆலை சம்பந்தமாக—அந்தத் தொழிலாளர்களும்—நிர்வாகியும் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னைத் தலையிட்டு ஒரு சமரசம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்ட காரணத்தினால்—அதாவது முதலில் நடத்திய சமரசம் தோல்வி அடைந்து சுமார் 1 மாத காலத்திற்கு மேல் வேலைநிறுத்தம் நீடித்துச் சென்றுவிட்டது என்ற பிறகு—நான் தலையிட்டு ஒரு சமரச முடிவு அருணா ஆலை சம்பந்தமாக ஏற்பட்டது. அதைத் தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதோடு அறிவித்ததைவிட இரண்டு மூன்று சலுகைகள் அதிகமாகத் தொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்தது நல்ல முறையில் அந்த ஆலை இன்றைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களில் யாரும் பழிவாங்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** மிக நெருக்கடியான நேரமாக இருக்கிற காலத்தில் சிறு சிறு விவசாயிகள் எல்லாம் கரும்பு காய அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன—ரொம்ப சிக்கலான மாதம்—15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு—கதவடைப்பு செய்யப்படுகிற நேரத்தில் தொகுதி எம்.எல்.ஏ. என்ற அந்தப் பரிவும் அக்கறையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை—ஒரு மாதத்திற்குமேல் போராட்டம் நீடிக்கிறபோது தொழிலாளர்களது இணைப்பை உடைக்க சதி நடக்கிறது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் அருணா ஆலை சம்பந்தமாக எண்ணிப் பார்த்து அறிக்கை தருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி—அங்கே வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிப்புச் செய்திருக்கிற நேரத்திலேயே இவர் இங்கே இதுபோல அறிக்கை கொடுக்கிறார். கட்சி அவர்மீது எடுத்த நடவடிக்கை என்ன?



1975 ஏப்ரல் 4] [திரு. பெ. சீனிவாசன்]

தி.மு.க. தொழிற்சங்கத்தின் சார்பில் சத்தியா ஸ்டுடியோ கதாநாயகன் ரங்கசாமி—காட்டூர் கோபால் ஆகியவர்கள் அங்கே சக்தி சர்க்கரை ஆலை சம்பந்தமாக சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடுகிறார்கள். ரெங்கசாமி இண்டர்நேஷனல் தொழிற்சங்கத் தலைவர்—கட்சி என்கிற குறுகிய மனப்பான்மை கிடையாது—இங்கே தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற போது அங்கே சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடப்படுகிறது.

**திரு. எம். செல்வராஜ்:** தோழர் மூர்த்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நீக்கி வைத்த பிறகுதான் இந்த உடன்பாடு ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலையில் காட்டூர் கோபால் கையெழுத்திடலாமா என்கிறார். தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எதை எதை கேட்டார்களோ அதை அந்த நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. உடனே அந்த ஆலைத் தொழிலாளர்களும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமான முறையில் அங்கே ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கச் செயலாளராக இருந்தவர். தனக்குச் சம்பந்தம் இல்லாத துறையில் ரொம்ப நாளாக இருந்தவர்—அதை வெளிப்படுத்திக்கொண்டு விட்டார். அங்கே 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறாகள்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகிகள் தொழிலாளர்களது கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குப் போய்விட்டார்கள். அங்கே சமரசம் ஏற்பட்டுவிட்ட பின் அதில் கையெழுத்திடுவதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. எனக்கும் தொழிற்சங்கத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றிச் சொன்னார்கள். நிறைய சம்பந்தம் இருக்கிறது. நான் பல தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தியும் இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** திரு. வீராசாமி அவர்கள் அவருடைய வாதத்திற்காக அவரே எதிராக . . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயோ எடுத்துக் கொண்டு போகிற காரணத்தாலே குறுக்கிடுகிறேன். கடைசியிலே விளக்கம் சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் இந்தச் சர்க்கரை ஆலைப் பிரச்னையைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே பேசினார்கள். அது ஆண்டி-லேபர் பாலிசி என்று சொன்னார்கள். நான் இப்பொழுது ஆண்டி-லேபர் பாலிசி என்பதற்குப் பொருள் விளங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி—இலாகாவைப் பற்றி குற்றச்சாட்டு. அந்த இலாகாவிலே இருப்பவர்களுக்கு முதலாளிகளைத் தெரிகிற அளவுக்குத் தொழிலாளர்களைத் தெரியவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள். ரொம்பக் கடுமையான குற்றச்சாட்டு. தொழிற்சங்கத் தலைவர் யாரும் சொல்லாத குற்றச்சாட்டு. அந்த இலாகாமீது அப்படிப்பட்ட களங்கம் இது வரையில் வரவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைப் பிரச்னையிலே வேலை நிறுத்தம் நடந்தது என்று கூப்பிட்டுப் பேசவில்லையென்று திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். சர்க்கரை ஆலைப் பிரச்னையில் உட்கார்ந்து பேசினோம். உத்தரப் பிரதேசத்தில், முதலமைச்சர் பகுகுணா பேசினார். இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் பேசினார். அவர் ரூ. 305 தந்தார். தேவராஜ் அர்ஸ் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ரூ. 306 தந்தார்கள். நாங்கள், தொழிலாளர்களுக்கு எதிராக நடத்துகிற அரசாட்சியில் ரூ. 325 தந்தது குறைபாடே தவிர, எனக்குத் தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலே நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்களிடத்திலே பேசிவிட்டு, எதிர்பார்க்காத தொகையைத் தந்தேன். அவர்கள் எதிர்பாராதத் தொகையைத் தந்தவுடனே எங்கே தங்களுக்குத் தொழிற்சங்கத்திலிருக்கிற பிடிப்பு போய்விடுமோ என்று சில நவடிக்கைகள் நடத்தினார்கள். அவற்றையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்ல விரும்பவில்லை. தொழிற்சங்கம் நல்ல நோக்கத்தோடு நடக்க வேண்டுமென்பதால், அதைச் சொல்லவில்லை. ரூ. 325-க்கு மேல் யார் தந்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம். நீங்களே சொல்கிறீர்கள், மெஜாரிட்டி செய்வதால் எல்லாம் சரியாகிவிடுமா என்று கேட்கிறீர்கள்? மைனாரிட்டிக்குப் பாதகமா இல்லையா என்று கேட்கிறீர்கள். அரசாங்கம் செய்தது நியாயமான தீர்ப்பு அல்லவா? தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு சர்க்கரை ஆலைப் பிரச்னையில் எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லுங்கள். தனியாக வேண்டுமானால், உங்கள் தலைவர்களைக்



கூப்பிட்டுப் பேசிப் பாருங்கள், முதலாளிகள் எங்களிடத்தில் வேதனைப் பட்டார்கள்.

**திரு பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, நான் சொல்கிற கோணத்தை விட்டுவிட்டு, வேறு கோணத்தில் பேசுகிறார்கள். அவர்கள் கேட்டது ரூ. 425. நீங்கள் ரூ. 325 கொடுத்தீர்கள். இதிலே, நீங்கள் ஒப்புக் கொண்டீர்களா இல்லையா என்பது வேறு. நீங்கள் மெஜாரிட்டி தொழிலாளர்கள் சொல்வதைக் கேட்கவில்லை. 11 தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்கவில்லை. மூர்த்தி சொல்வதை அரசு கேட்கவில்லை. மைனாரிட்டி தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்டு, ஊருக்கு ஊர் அறிக்கை கொடுக்கிறீர்கள். ஒழுங்காக வேலைக்குப் போகாவிட்டால், நாளையதினம் பழிவாங்கப்படுவீர்கள் என்கிற பாவனையை அளிப்பதாகாதா உங்களது அறிக்கை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** மூர்த்தி அவர்கள் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர்தான். தமிழ்நாட்டிலே என்னுடைய ஊரைச் சேர்ந்த புகளூர் ஆலைதான் மாதக் கணக்கிலே மூடிக் கிடந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரிலேயிருந்த மில்லும் என்னுடைய ஊரிலேயிருந்த மில்லும் மூடியிருந்ததால், பேச வேண்டியிருந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரில் உள்ள மில் நீண்ட நாளைய மில். அவர்கள் தன்மைக்கு ஏற்ப பேசினார்கள். என்னுடைய ஊரில் டெக்கான் ஷுகர் மில்—அதனுடைய தன்மைக்கு ஏற்ப, அமைச்சர் சொல்வதற்காக ஸ்டிரைக் செய்து வந்தார்கள். அதாவது, அமைச்சர் பெரியவரா, மூர்த்தி பெரியவரா என்ற தனித் தன்மையைக் காண்பிக்க, தங்கள் பலத்தைக் காண்பித்தார்களேயொழிய, தொழிலாளர் போராட்டம் நடக்கவில்லை. அதனால்தான் கரும்பு உற்பத்தி செய்கிற தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 20 டன் குறைந்திருக்கிறது. தொழிலாளர் என்றால், ஒரு சாப்பினரை மட்டும் நமது அ.தி.மு.க. நண்பர் சீனிவாசன் பார்க்கிறார்கள். கரும்பு வைத்திருக்கிற தொழிலாளர் பிரச்னையை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களுடைய உண்மை நிலையைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. சர்க்கரை ஆலையிலே ஒரு போராட்டம் நடக்கிறபொழுது தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையோ அல்லது தனிப்பட்டவர்களையோ சொல்ல ஆரம்பித்தால்—இதிலே நடந்த விஷயம் பற்றி எங்களுக்கு ஒரு கருத்து இருக்கும்—முடிவில்லாமல் போகும். அதையெல்லாம் ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியிலே வைத்துக்கொள்ளலாம். இங்கு அவர் ஒரு கருத்து

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 4

என்ன குற்றம் சாட்டினார்கள்? பல குற்றச்சாட்டுக்கள். பெண்களைக் கடத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியை தீ வைத்துக் கொளுத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியிலிருந்த காஷ் பாக்ஸை எடுக்க முயற்சி செய்தார் என்றெல்லாம் பல செக்ஷன்களைப் போட்டார்கள். மாதவனுக்குத் தெரிந்து நான் கைது செய்தார்கள். நான், இங்கு வந்து அண்ணாவுடன் தீவிரமாக வாதாடினேன். அண்ணா அவர்கள் தலையிட்டு சமாசம் செய்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அரசாங்கம், கலைஞர் அவர்கள் தலைமையிலேயிருக்கிற அரசாங்கம் முழுக்க முழுக்க பூர்வீகமா முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றே ஒன்று, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்று ஒன்று என்றால், இரவு 10.00 மணியாகும். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** 5, 6 பேர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிக்கொண்டே போனால் முடிவதற்கு ராத்திரி பத்து மணியாகிவிடும்.

**திரு. பெ. சீனிவாசன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இண்டியா மீட்டர்ஸ்பற்றி இங்கே கே.டி.கே. அவர்கள்கூடச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இடைக்கால நிவாரணம் தருவதாகச் சொன்னார்கள். தந்ததாகத் தெரியவில்லை. உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்கின்ற போது—இந்த ஸ்தாபனத்தை நடத்துகின்ற யாரோ சம் அய்யர் என்று நினைக்கிறேன், பெயர் ஞாபகமில்லை, ஆர். பி. ஐயர் என்கிறார்கள். அவரால் தான் இரண்டரை கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர் பிர்லாவினுடைய கையாள் என்றுகூடச் சொல்கிறார்கள்—டெல்லியிலே ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களே கூறுகிறார்கள்—ஆளுங்காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் அழைத்துக்கொண்டு அல்லது அவர்களை யாவது அனுப்பி அந்தத் தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்க்கவேண்டும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டும். அவர்கள் இப்போது எந்தக் கடையிலேயும் சாமான்கள் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். காரணம் 10 ரூபாய் ஷேர் 8 அணா மதிப்புக்கு வந்துவிட்டது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

***திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதித் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

வீட்டு வசதித் துறையிலே நம்முடைய தமிழகத்திலே மகத்தான சாதனையைப் புரிந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களுக்காகட்டும், நடுத்தர மக்களுக்காகட்டும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக இருக்கட்டும் சமுதாயத்திலே உள்ள அத்தனை பேர்களுக்கும் வீட்டு வசதித் துறையின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து வசதிகளைச் செய்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே கிராமப்புறங்களில் உள்ள மக்களை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். கிராமப்புறங்களிலே இப்போது வீட்டு வசதித் துறை செயல்படுகிறது. இருந்தாலும், மேலும் விரிவுபடுத்தவேண்டிய நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதி சங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஊராட்சிகளிலே உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குக் கடன்கள் கிடைத்து அவர்கள் வீடுகளைக் கட்டமுடியும். எங்கள் பகுதியிலே நீண்ட நாட்களாக ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேலூர் வட்டத்திலே உள்ள ஒடுகத்தூரிலே உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம். விரைவில் அதற்காக அனுமதி தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர் நல மானியத்திலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் தொழிலாளர் நிலை பற்றிப் பேசும்போது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தைப்பற்றி அதிகமாக இங்கே பேசினார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் எங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் 1 லட்சம் டன் கரும்பு அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்படுத்த எதிர்க் கட்சிக்காரர்கள் முயற்சிக்கக்கூடாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இதனால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, தனிப்பட்டு எப்படி நடந்துகொண்டு போனார் என்று சொல்ல ஆரம்பித்தால், அது எங்கோ போகும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் தனிப்பட்ட எந்தத் தொழிற்சங்கத் தலைவர் மீதும் குற்றச்சாட்டு சொல்ல வில்லை. கன்சிலியேஷன் பேசும்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் விசாரித்துவிட்டுத் தான் தீர்ப்பளிக்கிறோம். அவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகத்தான் தீர்ப்பளித்திருக்கிறேன். அதைமட்டும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அமைச்சரவர்கள் முயற்சியைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அவர்கள் கேட்டது—கொடுத்தது வேறு விவகாரம். ஆனால் அந்தப் போராட்டத்தை உடைக்க காட்டூர் கோபால், சர்வகட்சியின் ஒரு தலைவர் ரங்கசாமி என்பவர்—ஊருக்கு ஊர் போய் போராட்டத்தை உடைத்தது நோக்கத்தக்கது. . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரங்கசாமி ஒன்றும் சர்வகட்சித் தலைவர் இல்லை.

He is an I.N.T.U.C. Labour Leader. He belongs to Indian National Trade Union Congress.

அது சரியாகத் தெரியவில்லை . . . .

**திரு. கு. காமாட்சி :** ரங்கசாமி ஏதோ சத்தியா ஸ்டுடியோ நாடகத்திலே நடித்த கதாநாயகன் என்று சொன்னார். இப்பொழுது அம்மையார் ஐ.என்.டி.யு.சி லேபர் லீடர் என்கிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை அவர் . . .

**திரு. பெ. சீனிவாசன் :** காமாட்சி அவர்களுக்குப் புரிய வைக்கக் கூடிய சக்தி எனக்கும் இல்லை. யாராலும் புரிய வைக்கமுடியாது. உங்களுக்குப் புரிய வைப்பது ரொம்ப சிரமம்.

தொழிலாளர் பிரச்னையில் ஒரு தொழிற்சங்கம் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால், தொழிலாளர்களுக்கான நியாயமான காரணங்களை அணுகாமல் இந்த அரசாங்கம் செய்கிறது என்ற காரணத்தால்தான் இதனை மீண்டும் மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு ஆலங்குளம் சிமெண்ட் ஃபாக்டரியிலே ஸ்டிரைக் நடந்தது. அந்த ஸ்டிரைக்கை ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பு அவர்கள் நல்ல விதத்திலே உதவி செய்து நடத்திவைத்தார். அரசாங்கம் எந்த அளவு பிரச்னையைத் தீர்க்கத்



தவறியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். முன்னால் இருந்த தொழிலமைச்சருக்கு வேண்டிய அஸிஸ்டென்ட் டைரக்டரோ, யாரோ அங்கே இருக்கிறார். அவருடைய 'விம்ஸ் அன்ட் ஃபான்ஸி' க்காக, பிரச்னை தீர்க்கப் படாமல், அங்கே போராட்டம் நடந்தது. அந்த அளவுக்கு இந்த அரசு தொழிலாளர் நல அரசே இல்லையென்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சொந்த அனுபவத்தையே கூறுகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபொழுது—பேரறிஞர் அண்ணா இருந்த பொழுதும் அந்த அநியாயம் நடந்தது. நான் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்தினேன். அங்கே, தூதுக்கப்பட்டியில் போராட்டம் நடத்தினேன். ஒரு துரும்புக்குக்கூட சேதமில்லை. 10,000 பேர் போராட்டம் நடத்தினோம். எல்லோரும் ஆதரவாக இருந்தார்கள். எல்லா கட்சிகளும் சேர்ந்து நாங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். ஆனால் திடீரென்று என்னைக் கைது செய்தார்கள். நான் சென்னைக்கு வந்தவுடன் அண்ணா அவர்களைப் பார்த்து, என்னைக் கைது செய்தது உங்களுக்கு முன்னாலே தெரியுமா, பின்னாலே தெரியுமா என்று கேட்டேன். அண்ணா அவர்கள், எனக்குப் பின்னால்தான் தெரியும். அதோடு விட்டுவிடு, அதற்கு மேல் கேட்காதே என்றார்கள் . . . (திரு. வீராசாமி குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** சார், அவர் யீல்டாகிவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள், சீனிவாசன்.

**திரு. கு. காமாட்சி :** அவர்தான் யீல்டாகிவிட்டாரே. இரண்டு பேரும் யீல்டாகிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் இரண்டுபேரும் யீல்டு ஆகிறார்கள்—அவர் யீல்டாகிறார் என்றால் நான் எதற்காக இருக்கிறேன்?

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வீராசாமி அவர்களுக்கு அந்த நேரத்திலே நடந்திருப்பது தெரிந்திருக்காது. அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரி என்பது எனக்குத் தெரியாதா? அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரியாக இருக்கும்போது, ஆளுங்கட்சி உறுப்பினரை, தொழிற்சங்கத் தலைவரை கைது செய்தார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், என் மேல்

அதுவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே அதிகமாக அவர்கள் கவனம் செலுத்தாமல் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நல்ல நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்க வேண்டுகிறேன். அந்தப் பணியிலே அவர்கள் ஈடுபட்டால் அவர்களை நாம் மனமாரப் பாராட்டமுடியும். ஆனால் அதை விட்டு விட்டு காட்டூர் கோபால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படுவது விவசாயிகள், அன்னியச் செலாவணி குறைகிறது என்ற இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அவர்கள் கருத்திலே கொண்டு அப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவு அளிக்காமல் இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றுக்கொண்டதற்குப் பிறகு பல்வேறு தொழிலாளர்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைத்திருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றவை எவையென்று அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் பிரச்னை, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னை, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னை இப்படிப் பல்வேறு பிரச்னைகளை நம்முடைய அரசு தீர்த்து வைத்து இருக்கிறது. அதைப்போலவே மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே அச்சுத் தொழிலாளர்கள், திரையரங்குகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், வியாபாரக் கூடத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், கடைகளிலே உள்ள தொழிலாளர்கள், மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் அரசு சட்டத்தின் மூலமாகக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொல்லியதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள பீடித் தொழிலாளர்களும் தோல் பதனிடும் தொழிலாளர்களும் மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளார்கள். அவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் அறிவோம். நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு சட்டங்களைப் போட்டு அவர்களுக்கு உதவி செய்தாலும் கூட அவர்கள் இன்னும் கஷ்டப்படுகிற நிலைமையில்தான் இருக்கிறார்கள். இதிலே நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிலை மிகவும் வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் அந்தத் தொழிலாளர்கள் கணிசமான அளவிற்கு இருக்கிறார்கள். தோல் பதனிடுகிற தொழிற்சாலைக்குள் நுழைந்து பார்த்தால் நிச்சயமாக 5 நிமிடம்கூட நம்மால் இருக்கமுடியாது. அந்த அளவிற்கு



நாற்றம் வீசும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அந்த முதலாளிகளோடு கலந்து பேசி நம்முடைய அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத்துறையோடு, வீட்டுவசதித் துறையையும் சேர்த்து நிர்வகிக்கின்றார்கள். பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி செய்து கொடுக்கக்கூடிய முறையில் அந்த முதலாளிகளோடும் கலந்துபேசி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிலிருந்து மானியம் பெற்றுக்கூட இந்த வீட்டுவசதித் திட்டத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். அங்கே இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்களையும் தோல் பதனிடும் தொழிலாளர்களையும் யாருக்காவது சொந்தமாக வீடு இருக்கிறதா என்று கேட்டுப் பார்த்தால் கிடையாது என்றுதான் சொல்வார்கள். ஆகவே அந்த பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று நெசவுத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த வசதியைச் செய்துகொடுக்கவேண்டும். பீடித் தொழிலாளர் காலனி, தோல் பதனிடும் தொழிலாளர் காலனி, நெசவுத் தொழிலாளர் காலனி என்ற முறைகளில் வீடுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சி.எம்.சி. பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் சட்டத்திற்கு அது உட்படாவிட்டாலும் மனிதாபிமானத்தோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 15 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் அல்லலுக்கு உள்ளாகாமல் அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து நம்முடைய அரசை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், சிம்சன் முதலாளிகளும் ஆரூரான் தொழிற்சாலை முதலாளிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அவர்கள் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்தே நம்முடைய அரசு தொழிலாளர்களின் பிரச்னையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

சர்க்கரை ஆலைத் தொழில்பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் பேசினார்கள். சர்க்கரை ஆலை (Seasonal Industry) சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் 6 முதல் 8 மாத காலத்திற்குத்தான் வேலை கிடைக்கிறது. எஞ்சிய நாட்களுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை ஏதாவது ஒரு முறையிலே ஏற்படுத்தித் தரவேண்டும். வேலையில்லாத நாட் களுக்கு ஊதியமாக ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 50 சதவிகிதமும், செமி ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 25 சதவிகிதமும் அன்ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 10 சதவிகிதமும் தருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். அவர்களுக்குப் போதுமான ஊதியம் வேலையில்லாத நாட்களில் கிடைக்கக்கூடிய வகையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டும். சர்க்கரை ஆலை சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் இ.எஸ்.ஐ. திட்டத்தை அமுல்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.00)

அதைப்போல காட்டிலாக்கா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இது வரையிலும் அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைகளைச் செய்தும், அந்தப் பரிந்துரைகளை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டும். அதை இன்னும் அமுலுக்கு கொண்டு வரவில்லை. அதை விரைவில் அமுலுக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்டிலாக்காவில் கடைநிலை ஊழியர்கள். 'வாச்சர்கள்' நிரந்தரப் பணியாளர்களாக இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கடைநிலை ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்களை கெஜடெட் ஆபீசர் களாக அதாவது அரசுப் பதிவு அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக இருக்கிறது. அதையும் கவனத்திற் கொண்டு நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் சாலை ஆய்வாளர்களும், இதர ஊழியர்களும் பல ஆண்டுகாலமாக பணியாற்றினாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் இல்லை. ஆகவே, அவர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

குறிப்பாக நம்முடைய நாட்டிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலே மிக முக்கியமாக இருக்கக் கூடிய சர்க்கரைத் தொழிலிலும், தோல் தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அந்த அந்நியச் செலாவணியின் பலனைப் பெறுகின்ற மத்திய அரசிடமிருந்து அதிலே ஒரு பங்கையாவது நம்முடைய தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தர நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பாடுபட வேண்டும். அதற் காக மத்திய அரசைக் கோர வேண்டுமென்று இந்த நேரத்தில் மெத்தவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே தொழிற்சங்கங்கள் எப்படியிருக்கின்றன என்றால் ஒரு எண்டர்பிரைசுக்கு ஒரு யூனிட் என்ற விதத்தில், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற விதத்தில் செயல்பட்டு வருகிறது. இதுதான் நம்முடைய அரசின் கொள்கை என்றாலும் இப்பொழுது ஒரே தொழிலில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருப்பதால் பல்வேறு தொழிலாளர் பிரச்னைகளுக்கு வழியேற்படுகிறது. அதையும் அரசு கவனத்திற்கொண்டு அத்தகைய ஒரு திட்டத்தை விரைவில் அமல் படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்பொழுது எந்தவிதமான வேலை நிறுத்தத்திலும் ஈடு படுவதில்லை. அதைப்போல ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்பொழுது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டிலே இரயில்வே தொழிலாளர்கள் ஸ்டிரைக்கே செய்ய முடியாதாம். 'கோ ஸ்லோ' (Go Slow) என்ற விதத்தில்தான் வேலைநிறுத்தம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய நாட்டிலேயும் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் அங்கேயுள்ள பிரச்னை, 55 வயதில் இருப்பவர்கள் 60 வயது வரையில் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர் களுக்கு இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளிலே வாரத்திலே 5 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் பிரச்னையாக இருக்கிறது. இப்படிப் பட்ட மிகவும் குறைந்த பிரச்னைதான் ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலே இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் பிரச்னைகள் பல இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளில், குறிப்பாக நான் பேசிய பிரச்னைகள்

சிலவற்றைக் கவனத்திற்கொண்டு அமைச்சரவர்கள் அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொண்டு, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கட்சியின் சார்பிலேயும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் பேரிலேயும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி, தொழிலாளர் நலனோடு சமுதாயத்தின் நலனும் பிணைந்திருப்பதால் இந்தத் தொழிலிலே இருக்கிற இலாக்காவிலே சுறுசுறுப்பான நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதிலே அவசியமிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ஒவ்வொரு ஆண்டும் நாம் கணக்குப் பார்த்தால் கதவடைப்புகள் அதிகமாக அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்கள் அதிக வேலை நாட்களை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறி அமைச்சரவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், 1974 ஆம் ஆண்டில் 316 தொழில்கள் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறப் படுகிறது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற வாய்ப்பை அதிகமாக உண்டாக்க வேண்டும். அதன்மூலம் பிரச்னை களுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அது எந்த நிலையிலிருக்கிறது? கிட்டத்தட்ட 44 இலட்சம் நாட்கள் வேலையிழப்புக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அந்த இலாகா கண்டு பிடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படியே போவதன் மூலம் சமாதானங்கள் சொல்வதின்மூலம் நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இன்றைக்கு நமது நிலைமைகள் முறைப்படியே முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம் என்னவென்றால், தொழில் முதலாளிகளின் வெறும் வறட்டுக் கௌரவத்தினாலேயே 75 சதவிகிதம் கதவடைப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதைச் சொல்லிக்



கொண்டே வருகிறோம். காரணம் என்னவென்று கேட்டால் இவ்வளவு முன்னேற்றமடைந்த பிறகும்கூட, இவ்வளவு தொழிற்சங்க இயக்கங்கள் நடந்து, போராட்டங்கள் நடந்து, தொழிலாளர்கள் உரிமைகளை பெற்ற பிறகும் கூட இன்னும் பல தொழிற்சாலைகளில் பெரிய முதலாளிகள், செல்வாக்கு பெற்றவர்கள் இன்னும் அந்தத் தொழிலாளர்களுடைய நியாய மான கஷ்டங்களை உணர மறுக்கிறார்கள். காரணம், அவர்களுடைய வறட்டுப் பிடிவாதம்தான்.

உண்மையிலேயே தொழில் தகராறுகளைப் பார்த்தால் நியாயமான உடன் பாடுகூட பல நாட்களுக்குப் பிறகுதான் வரும் நிலைமையிருக்கிறது. அந்த உடன்பாட்டிற்கு முதலிலேயே முயற்சியெடுக்கப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அப்படி வருவதில்லை. நம்முடைய இலாக்காவும், முதலாளிகளும் தொழிலாளர்களும் சலித்து ஓய்ந்த பிறகுதான் ஒரு முடிவிற்கு வருகிறார்களே தவிர இதற்கு முன் நியாயமான முடிவைக் காண முன் வருவதில்லை. எனவே, இதிலே சில முடிவுகளைக் கான நம்முடைய இலாக்கா சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.சி.எல்., டி.சி.எல்., ஆகியோருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்படு கிறது? இரண்டுபேரும் சொன்னால் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு வந்தால் தான் முடிவு சொல்ல முடியும். அவராகவே முடிவெடுத்து அந்த முடிவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும். இதுதான் நியாயம் என்று எடுத்துச் சொல்லும் அளவிற்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கில்லை. இரண்டாவதாக, மேனேஜ்மெண்ட் தரப்பிலே பேச்சுவார்த்தைக்கு வருபவர்கள் அதிகாரம் இருப் பவர்கள் வருகிறார்களோ அல்லது அதிகாரம் இல்லாதவர்கள் வருகிறார்களோ தெரியவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கும்பொழுது கேட்டு விட்டு வருகிறேன், முதலாளியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லும் நிலையிருக்கிறது. இம்மாதிரி கூட்டுப்பேரம் நடத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை நிச்சயமாக மாற்ற சில அதிகாரங்களை லேபர் டிபார்ட்மெண்டுக்கு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டு உண்மையான நிலைமைகள் என்ன என்று கண்டுபிடித்து அவர்கள் செய்யும் முடிவுகளை அமலாக்க முதலாளிகளைக் கட்டுப் படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் முடியாது.

கோவை பஞ்சாலையில் போனஸ் பிரச்னை ஏற்பட்டு, முதலமைச்சரவர்கள் சொன்ன உடன்பாட்டின்படி, போனஸ் பிரச்னையிலே ஏதாவது சம்பவங்கள் நடந்திருந்தால் எந்தத் தொழிலாளியின் பேரிலேயும் நடவடிக்கை எடுக்கக்

[திரு. கே. என். குமாரசாமி] [1975 ஏப்ரல் 4

அவர்களுக்கு வசதி பண்ணிக் கொடுக்கக்கூடாது? கவர் போட்டு மூடுவது கிடையாது. இந்தக் குறைகளை எல்லாம் அப்போதைக்கப்போது கண்காணித்துக் களைய முயற்சிக்கவேண்டும்.

டவுனுக்குள்ளே குடியிருக்கும் தொழிலாளிக்கு மூன்று கிலோ அரிசி போடுகிறார்கள். கிராமத்திலிருந்து வந்து வேலை பார்த்துச் செல்லுகிற தொழிலாளிக்கு அந்த 3 கிலோ அரிசி கிடையாது. ஒரே ஸ்டோரில் ஏன் இந்த நிலை? ஒரே ஸ்டோரில் இரண்டு விதமான கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. கிராமத்தில் சோளம், ராகிதான் போடுகிறார்கள். அவன் அரிசி எப்படி வாங்குவது? அவர்களுடைய நிலையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையில் இதே பிரச்சினை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லாத் தொழிற்சங்கத்தையும் சேர்ந்த தொழிலாளர்களும் சேர்ந்து உணவு. அரிசி நியாய விலையில் போடவேண்டுமென்று கேட்டார்கள். அனைத்துச் சங்கம்—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம், எச்.எம்.எஸ்., ஏ.ஐ.டி.யு.சி. எல்லோரையும் தொழிலாளர்களுக்காக ரேஷன் கேட்ட காரணத்திற்காக கைது செய்து விட்டார்கள். மலையில் வாழ்பவர்களுக்கு வேறு வழி என்ன? அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அங்கிருந்து கடிதம் வருகிறது. தந்தியடிக்கிறார்கள். மலிவு விலையில் அங்கிருக்கும் முதலாளி அரிசி கொடுக்கவேண்டுமென்று அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் நிலை என்ன ஆவது?

சேன்கோட்டில் கூடலூர் தாலுகாவில் இலங்கை அகதிகள் தேயிலை தோட்டத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கூலி 3 ரூபாய்; வேறு எஸ்டேட்டில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு 6 ரூபாய். மற்றவர்கள் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய். இவர்கள் பத்து கிலோ பறித்தாலும் 30 கிலோ பறித்தாலும் 3 ரூபாய்தான். ஒரே எஸ்டேட்டில் இந்த நிலை ஏன் இருக்கிறது? வெளியே இருந்து வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை நீடிக்கக் கூடாது.

வீட்டு வசதி, மற்ற வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள் எல்லாம் மிகவும் குறைவு. பாம்பு மற்ற துஷ்ட ஜந்துக்கள் எல்லாம் அவர்கள் வீட்டில்தான் இருக்கும். புதர்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அமைச்சர்கள் அந்த வீடுகளை எல்லாம் சென்று பார்க்க வேண்டும். மாண்புமிகு ஓ. பி. ராமன் அவர்கள்



1975 ஏப்ரல் 4] [திரு. கே. என். குமாரசாமி]

ஒரு முறை இந்தக் குடியிருப்புகளைப் பார்வையிட வந்தார். மலை மேலே இருந்து பார்க்கக்கூடிய ஒரு வீட்டு லைனுக்கு மட்டும் வெள்ளை அடித்திருந்தார்கள். இந்த நிலை நீடிக்கக் கூடாது.

ஒருவனுக்கு சீக்கு என்றால் அவன் வைத்திய வசதி பெற ஆறு மைல் நடந்து செல்ல வேண்டும். பஸ் வசதி ஒன்றும் கிடையாது. அறிக்கையில் இந்த மலைவாழ் மக்களுக்காக என்னென்னவோ செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இதெல்லாம் அவர்களைப் போய்ச் சேருவதே கிடையாது. பணம் செலவழித்தால் மட்டும் போதாது, அது அவர்களை எட்டுகிறதா என்று கண்காணிக்க வேண்டும்.

சென்னையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிலாளர்கள் டி.ஏ. 18 பைசா கேட்கிறார்கள். லேபர் டிப்பார்ட்மெண்ட் வரை பேசியாயிற்று. தொழிலாளிக்கு 61 ரூபாய் டி.ஏ. கொடுங்கள் என்று கேட்டார்கள். முதலாளிகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். பிறகு 61 ரூபாய் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். லேபர் செக்ரடரி வரை பேசியாயிற்று. கமிஷன் பேசியாயிற்று.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சதர்ன் ஸ்ட்ரக்சரல் பிரச்சினை சுமுகமாக முடிந்து தற்போது வேலை நடந்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: அது விவரம் எனக்குத் தெரியாது. இதற்கு முன்னால் என்னிடம் புகார் சொன்னார்கள். எப்படி முடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

இந்தியா மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை என்னவாயிற்று? நமக்கு மீட்டர்கள் தேவை. நல்ல மீட்டர்கள் தயாரிக்கிறோம் என்று தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் அதை மூடி வைத்திருக்கிறீர்கள்? அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டாமா?

பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966-ல் வந்தது. சுப்ரீம் கோர்ட் வரை முதலாளிகள் போனார்கள். அதை அமலுக்குக் கொண்டு வரலாம் என்று சொல்லிவிட்டார்கள். எத்தனை இடங்களில் அதை அமலாக்கியிருக்கிறார்கள்? பல பேர் இன்னும் திண்டாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டம் இருந்தும் ஏன் அமலாக்கப்படவில்லை?

காஸ்மாபாலிடன் கிளப் தொழிலாளர் பிரச்சினை. ஒரு ஆளுக்கு 42 வருஷம் சர்வீஸ். சம்பளம் மாதம் 180 ரூபாய். ஆங்கிலோ இந்தியன் லேடிக்கு—7 குழந்தைகள், 150 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு என்ன பண்ண முடியும்?

கூடாது என்று முதலமைச்சரவர்கள் சொல்லி, அதை முதலாளிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரகாசா மில்லில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தீர்ப்பையும் மீறி இந்தப் பிரச்னையில் சிலரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். இதுபற்றி தொழில் இலாக்காவில் சொன்னால் அவர்கள் ஏ.சி.எல் நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரின் தீர்ப்பு ஆகி, எந்தத் தொழிலாளியையுமே டிஸ்மிஸ் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கும்பொழுது 6 தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் முதலாளிகள் பலம் பார்க்கிறார்களா? இப்படிப்பட்ட பிரச்னையில் வறட்டு கௌரவத்தின் காரணமாக இவ்வாறு இருக்கிறது, 3, 4 மாதங்களாக தொழில் இலாக்கா அதிகாரிகளும் தலையிடப் பயப்படுகிறார்கள், காரணம் என்னவென்று கேட்டால் செல்வாக்கு பெற்ற முதலாளி. செல்வாக்கு பெற்ற முதலாளி என்றால் எந்த முதலாளி என்று எங்களுக்குப் புரியவில்லை. பிரச்னை ஒன்றுதான், அதில் செல்வாக்கு பெற்றவர்கள், செல்வாக்கு பெறாதவர்கள் என்று இருக்க வேண்டுமா? ஒரே கருத்துதான், ஒரே பிரச்னைதான். அப்படியிருக்கும் பொழுதுகூட பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அலுமினியம் பேக்டரியில் திரு. சுரேந்திரன் அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்து படாதபாடு பட்டு தொழிற்சங்கமே இல்லாத அளவிற்கு ஆகிவிட்டது. இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு என்ன கூலி கொடுக்கிறார்கள்? எல்லா பேக்டரிகளிலேயும் சம்பள உயர்வு வருகிறது. ஆனால் அங்கே மட்டும் வரவில்லை. 300 ரூபாய்க்குக் குறைவாக அந்த பேக்டரியில் வேலை செய்கிறார்கள். அரசாங்கம் வேண்டுமளவு மின்சாரம் கொடுக்கிறது. ஆனால் இன்றைக்கு 'லே ஆஃப்' செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. எந்தவிதமான சம்பளமும் கிடையாது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தத் தொழிலாளர்கள் அழ வேண்டிய நிலைமையிருக்கிறது.

கார்ப்பரேஷனால் எடுக்கப்பட்ட ஆலைகளிலேயும் நிர்வாகத்தினர் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்த மறுக்கிறார்கள். உள்ளே இருக்கும் லோகல் தலைவர்கள் நிர்வாகிகளிடம் இப்பொழுது சொன்னால் 3 மாதம் கழித்துத்தான் அந்தப் பிரச்னையைப் பரிசிலனைக்கு எடுக்கிறார்கள். அது எப்பொழுது தீரும் என்று சொல்ல முடியாது.





இப்போது இரட்டைக் கொள்கை அமலாகியிருக்கிறது. கார்ப்பரேஷன் மில்களுக்கு ஒரு லேபர் ஆபீசர் நிர்வாகம். கார்ப்பரேஷன் அல்லாத தனியார் மில்களுக்கு ஒரு நிர்வாகம். சமீபத்தில் மத்திய சர்க்கார் எடுத்ததற்குப் பிறகு என்ன செய்கிறார்கள்? 15 நாளைக்கு ஒரு முறை பாக்டரி மேனேஜ்மெண்டார்கள் வந்து கையெழுத்துப் போட்டுப் போகிறார்கள். வாச்மேனைக் கேட்டுப் பாருங்கள். எப்படி இந்த ஆலைகளை நிர்வகிக்கப் போகிறார்கள் என்று தெரியாது. பிரச்சினைகளை யாரிடத்தில் சொல்லுவது? லேபர் தகராறு வருமானால் தொழிற்சங்கத் தலைவர்கள் யாரிடத்தில் சென்று பேசுவது? எப்படி தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவது? இந்த நிலை நீடித்தால் உற்பத்தி எப்படி பெருகும்? சமுதாயத்தின் நலனை எப்படிப் பாதுகாக்க முடியும்?

இந்த மாதிரி இரட்டைக் கொள்கைத் தேவையில்லை. அரசாங்க ஆலைகளானாலும் சரி, தனி நபர்கள் ஆலைகளானாலும் சரி, லேபர் டிப்பார்ட்மென்ட் தலையிட அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் உற்பத்தி நஷ்டம் ஏற்படும். தேசவுடைமைக்கு விரோதமான கொள்கை கொண்டிருக்கும் தனி நபர்களுக்குச் சாதகமான நிலையை உண்டாக்கிவிடும். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது.

'லே ஆஃப்' செய்திருக்கிறார்கள். ஆறாயிரம் பர்மெனென்ட் தொழிலாளர்கள், டெம்பரரி தொழிலாளர்கள், ஆக பத்தாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வெட்டினால் எந்த வேலையும் கிடையாது. தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அமைச்சரிடமும், லேபர் டிபார்ட்மென்டிலும், திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிவிட்டோம். அவர்களுக்கு முழு நிவாரணம் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு வேறு தொழில்களுக்கு அவர்கள் செல்லவில்லை. அவர்கள் இந்தத் தொழிலையே நம்பியுள்ளமையால் என்ன செய்ய முடியும்? அவர்கள் எப்படி வாழ்வார்கள்? கோடிக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதித்தாலும் தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது. இதிலே அரசாங்கமும் முதலாளிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஃபாக்டரிகளில், குறிப்பாக பஞ்சாலைகளில் ஆக்சிடென்ட் நடக்கிறது. ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் வந்து பார்வையிடக் காலதாமதம் ஆகிறது, அவர்கள் பஸ்ஸில்தான் வரவேண்டும். இல்லாவிட்டால் முதலாளி காரில் வரவேண்டும். முதலாளி காரில் வந்தால் தொழிலாளி சத்தம் போடுகிறான். ஏன்

இதைச் சொன்னால் சட்டம் கிடையாது என்று சொல்கிறார்கள். சட்டம் இல்லாவிட்டால் சாகவேண்டியதுதான். வாக் அவுட் செய்து விட்டு போய் விட்டார்கள். நாற்பது ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலை. எனவே, சட்டத்திற்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். பல கம்பெனிகளில் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ரூபாய் 300 வரை சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஜிம்கானா கிளப்பில் கொடுத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. சட்டத்திற்காக மனிதன் வாழவேண்டும் என்றால் வாழ முடியாது.

டால்மியா சிமெண்ட் தொழிலாளர்கள் ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள். நெகோஷியேஷன் நடந்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 125 சதவீதம் அதிக உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு மின்சாரம் காரணமாக வேலை பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வாழ்க்கை நடத்த ஏதாவது நிவாரணம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலிவு விலையில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்கிறது என்று சொல்கிறீர்கள். அரசு 50 சதவீதம் மானியமும், 25 சதவீதம் முதலாளிகளும் கொடுத்து மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எந்த ஃபாக்டரி முதலாளிகளைக் கூப்பிட்டு இந்த மாதிரி தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது? ஒரு ஆலையில் கூட அமலாக்கப்படவில்லை. மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்றால் 25 சதவீதம் போடவேண்டுமே என்று முதலாளிகள் நினைப்பதால் அதைச் செய்யாது வைத்திருக்கிறார்கள். அதிகப்படியான லாபம் வரக்கூடிய முதலாளிகளிடமாவது இம்மாதிரி மலிவு விலை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமல் படுத்துங்கள் என்று எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும்.

இன்று சிங்காநல்லூரில் உள்ள லேபர் காலனியில் க்வார்ட்டர்ஸ் சுத்தப் படுத்தாமல் இருக்கிறது. லைட் போனால் அந்த ஆள் வாங்கி போடவேண்டும். 15 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு (வாடகை கொடுத்திருந்தால் அதைச் சொந்தமாக்கிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)



அடுத்தபடியாக, சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகளுக்கு வசதி இருக்கிறது. அங்கு குடும்பம் முழுவதும் வைத்திய வசதி பெறுவதால் அங்கு இட நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது 300 படுக்கைதான் உள்ளன. அந்த ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். சோமனூரில் உள்ள வாடகைக் கட்டடத்திற்குப் பதிலாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். பல்லடம் சோமனூர் ஏரியாவில் உள்ள தொழிலாளர்களுக்கு குடும்ப இன்சூரன்ஸ் திட்டம் இல்லை. அவர்களுக்கும் குடும்ப இன்சூரன்ஸ் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும். (மணியடிக்கப் பட்டது.)

ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் ஆபீசர்கள் அலுவலகம் கோவையில் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அங்கு மனிதன் போக முடியாது. ஒரு கோடியில் வைத்திருக்கிறார்கள். கலக்டர் ஆபீஸ், ஜெயிலில் காலி இடம் இருக்கிறது. அந்த இடத்தில் லேபர் டிப்பார்ட்மெண்ட் தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதிகாரிகள் வந்து தங்குவதற்கு ரெஸ்ட் ஹௌஸ் கட்டித் தரவேண்டும். எங்கெங்கேயோ அதிகாரிகள் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வசதிகள் செய்து கொடுத்து நல்லமுறையில் பணி வாங்க முயற்சிக்கவேண்டும்.

மத்தியஸ்தம் முறையில் ஏற்படுகிற கோளாறுகளைத் தீர்க்க முக்கூட்டுக் கமிட்டி போட்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தால் தொழில் தகராறுகள் குறையும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வாங்கிக் கொடுத்தது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இரத்தினசபாபதி :** தொழிலாளர் பிரச்னை குறித்து நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள்மீது அக்கறையில்லாத காரணத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர்கூட இல்லை. இதுகுறித்து தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காலையிலேயே சொன்னேன். அவர்கள் இருக்க வேண்டும், கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்கு அக்கறையில்லாவிட்டால் நான் என்ன செய்வது?

*திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு. சீனிவாசன் அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திரு. குமாரசாமி அவர்களும் தங்கள் தங்கள் கட்சிகளின் சார்பில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் பல்வேறு தொழிற்சங்கங்களில், குறிப்பாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய ஒரு பெரும் தலைவராவார். அதே போல் குமாரசாமி அவர்களும் ஒரு தொழிற்சங்கத் தலைவர்தான். அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கைக்காக பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிய நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக இன்றைக்கு அகில இந்தியாவில் வைத்தே எங்குமே பஞ்சாலைத் தொழிலாளர்கள் பெருத அளவிற்கு அதிகபட்சமான போனஸை வாங்கிக் கொடுத்தார்கள். அதற்காக யாராவது ஒருவராவது நன்றி தெரிவித்தார்களா என்றால் ஒருவர் கூட இந்த மன்றத்தில் அதைப்பற்றிப் பேசவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் நன்றி தெரிவித்தேன். போனஸ்க்காக நன்றி செலுத்தினேன். அப்படி நன்றி செலுத்தியதை இல்லை என்று சொன்னால் நன்றாகயிருக்காது.

**திரு. சு. துரைசாமி:** அடுத்து, இங்கு பேசிய எல்லாத் தலைவர்களின் பேச்சுக்களையும் கேட்டேன். மத்திய அரசின் கட்டாய டெப்பாஸிட் திட்டம் பற்றி இந்த மூன்று பேர்களில் ஒருவர் கூட கண்டித்துப் பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இன்று விலைவாசிகள் எல்லாம் பெருமளவிற்கு ஏறிவிட்டன என்று பேசுகிறார்கள். பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்று கேட்கிறோம். கொடுக்கப்படுகிற பஞ்சப்படி உயர்வும், சம்பள உயர்வும் தொழிலாளர்களின் கைகளுக்குப் போய் சேருவதில்லை. கட்டாய டெப்பாஸிட்டுக்கு சென்று விடுகிறது. இதைப்பற்றி தொழிலாளர் வர்க்கத்திற்காகப் பேசுகிற தலைவர்களில் ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லையே என்று வருத்தப் படுகிறேன்.



இந்த மன்றத்தில் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் அவர்களுக்கு இருக்கிற சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டுவதோ தவிர தொழிலாளர்கள் மீது அக்கறையோடு பேசியதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு முன்னாள் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீது வருத்தம் இருக்கலாம். விருதுநகர் பஸ் கம்பனி முதலாளியோடு நம் அமைச்சர் அவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று பேசுகிறார்—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகர் சென்றிருந்தார். அங்கு 33 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நிவாரணம் காண அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்று சொன்னார்கள். 21-ம் தேதியிலிருந்து அந்தக் கம்பனி கதவடைப்பு செய்யப் பட்டு அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அது கண்டிக்கத் தக்கதுதான். தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று சொல்வது நமது உரிமைதான். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன். அந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ 15 நாட்கள் இந்த மன்றம் நடைபெற்றிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாவது கொண்டுவந்து இந்த மன்றத்தில் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** உறுப்பினர் எப்படி தகவல் தெரியாமல் பேசுகிறார்? நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை என்று அவருக்கு எப்படித் தெரியும்? கொடுத்துவிட்டு நாள் தவறாமல் சபாநாயகர் அவர்களிடம் போய் கேட்டு, இரண்டு தடவை பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பி எக்ஸ்பங்ஷன் எல்லாம் நடந்து, இவ்வளவும் நடந்திருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி சென்றிருக்கிறார்கள். சென்ற இடத்தில் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையோ என்றுதான் எனக்கு வருத்தம்.

(மாலை 6-30)

இந்த அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாக, பூர்ஷ்வா மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். இந்த மன்றத்தில் நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. துரைசாமி] [1975 ஏப்ரல் 4

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.



**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக்





கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அகில இந்தியாவில் 203 மில் இல்லை. தவருகப் பேசக்கூடாது. 103 மில்கள் தான் இருக்கின்றன. அம்மையார் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் மட்டும் வைத்துக்கொள்ள விரும்புவதாகச் சொன்னார்கள், அவர்கள் கட்சி ஆளுகின்ற மாநில அமைச்சர்கள் கூட சேர்ந்து கேட்கிருர்கள். நாங்கள் மட்டும் கேட்கிறோம் என்று சொல்லக்கூடாது.

**திரு. சு. துரைசாமி :** அதனால்தான் போன ஆண்டு தொழிலாளர் நல மானியம் வந்தபோது நான் பேசினேன். அகில இந்தியாவில் 103 மில்கள் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வேறு மாநிலத்தில் எடுத்து கொண்ட மில்களில் சம்பளம் கூட சரியாகக் கொடுக்கப்படவில்லை--நம்முடைய பஞ்சாலைகளில் 25 சதவிதம் போனஸ் கொடுத்தோம். தனிப்பட்ட முதலாளிகள் கூட 20 சதவிதம்தான் போனஸ் கொடுத்தார்கள். நாம்தான் உயர்ந்த பட்சம் போனஸ் கொடுத்தோம். இப்போது மத்திய அரசாங்கத்தின் கையில் அது இருக்கிறது. வருகிற ஆண்டில் பார்க்கத்தான் போகிறோம், அங்கேயிருக்கும் தொழிலாளிக்கு என்ன போனஸ் கிடைக்கப்போகிறது என்று.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இன்று தொழிலாளர்களுக்கு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்து இருக்கிறோம். (மணியடிக்கப்பட்டது). பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

நம்முடைய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் பொறுத்தவரையில் இங்கேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசாங்கம்தான் அகில இந்தியாவில் இருக்கிற பஞ்சாலைகளிலேயே உயர்ந்தபட்ச போனஸ் கொடுத்து இருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசின் கட்டாயச் சேமிப்பு இருந்தாலும் கூட, அதிலே இருந்து பாதிக்கப்படாமல் வேறு ஒரு முறையில் நாம் அதிகபட்ச போனஸ் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். அதைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான், இந்த அரசுதான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்று பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், தொழிலாளர்கள் தகராறுகள் சம்பந்தமாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 7,550 வழக்குகள் தொடரப்பட்டன என்றும், சமரசப் பேச்சுவார்த்தையால் தீர்க்கப்பட்டவை 1,478 என்றும், நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை 417 என்றும், மீதி 5,655 இருக்கின்றன என்றும் குறிப்பேட்டில் இருக்கின்றன. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், இந்த வழக்குகளைத் தீர்ப்பதில் என் இவ்வளவு



காலதாமதம், இது எவ்வளவுபடியோ வருந்தத்தக்கது. அதை விரைவில் தீர்த்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேகமாக அந்த வழக்குகள் தீர்க்கப்படவேண்டும். அந்த அளவில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சில இடங்களில் லேபர் ஆபீசர்கள், அசிஸ்டென்ட் லேபர் ஆபீசர்கள் கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்புவதில் காலதாமதம் செய்கிறார்கள். அது கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும். அதற்காக உள்ளபடியே அந்தத் துறைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் ஏ. சி. எல். (A.C.L.) கன்சிலியேஷன் ரிப்போர்ட் வருவதற்கு 1 வருஷம், 1½ வருஷம் கூட ஆகிறது. இதனால் உள்ளபடியே தொழிலாளிக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். ஆகவே, குறைந்தபட்சம் 3 மாத காலத்திற்குள் இந்த கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்பி விட வேண்டுமென்று ஒரு வரையறை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கணக்கு கொடுத்ததில் கூட சில வழக்குகள் வேறு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு இருந்தால், அவற்றை எல்லாம் என்று போட்டு அதனால் குறைத்து கணக்கைக் காட்டுகிறார்கள். இது யதார்த்தமான குறைபாடுதான். இதைப் போக்குவதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இப்படி ஏற்படாமல் இருப்பதற்கு அமைச்சர், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அறிக்கையில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு என்று தலைப்பிட்டு கொடுத்து இருக்கிறார்கள். ஏதோ ஒரு குழுவின் அறிக்கை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. விரைவாக அந்த அறிக்கை சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுக்கும் நிலையை ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டு காரணமாக, வேறு பல காரணங்களால் 'லே-ஆப்' கொடுக்கிறார்கள். அப்படி லே-ஆப் கொடுக்கிறபோது பாதிச் சம்பளம் நிரந்தரத் தொழிலாளிக்கு கிடைக்கும். அதை உயர்ந்தபட்சமாக 75 சதவீதம் அல்லது முழுமையாகக் கிடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியாவது, மத்திய

[திரு. [illegible]] [1975 மார்ச் 4

கடைசியாக, தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்கிற காலங்களில், அப்படி டிஸ்மிஸ் அல்லது சஸ்பெண்ட் செய்த தொழிலாளர்களுக்கு அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மாதங்கள் அல்லது வருடங்கள் ஆகிவிடுகிறது. அவர்களுக்கு வேலையில்லாத காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த சஸ்பெண்ட் காலத்திற்கு முழு ஊதியம் கொடுத்தால் நன்றாக இருக்கும். அல்லது குறைந்தபட்சம் பாதி சம்பளமாவது கொடுக்கக்கூடிய முறையில் சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, வீட்டுவசதி வாரியம், தொழிலாளர் நலன் சார்பாக இந்த சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் சாதிக்காத அளவிற்கு வீட்டு வசதி வாரியம் பெரிய அளவிற்கு, யாரும் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு பல புதிய திட்டங்களைக் கொண்டு குறைந்த விலையில் நல்ல வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கெல்லாம் விரைவாகக் கட்டிக் தருகிறது. இதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவாக அதிகப் பணிகளையெல்லாம் செய்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவிற்கு அரசு ஊழியர்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு வீட்டு வாடகைப்படியாக 15 சதவிகிதமும் வீட்டு வாடகையாக அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதமும் ஆக இரண்டையும் சேர்த்து மொத்தம் 25 சதவிகிதம் அவர்களுடைய சம்பளத்தில் இழப்பு ஏற்படுவதாக இங்கே இருக்கும் அரசு ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்குமானால், அவர்களுக்கு நாம் உதவி பண்ணுவதற்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்றாலும்கூட, நடைமுறையில் வருகிறபோது அவர்களுக்கு ஒரு கணிசமான இழப்பு சம்பளத்தில் இருப்பதாக அவர்கள் வேதனையோடு என்னிடத்தில் தெரிவித்தார்கள். ஆகவே, இதில் ஒரு மாறுதல் செய்து அவர்களுக்கு சம்பளத்தில் கணிசமான அளவிற்கு பாதிக்காத நிலையில்



1975 மார்ச் 4] [திரு. கே. கந்தசாமி]

வாடகையில் நியாயமான குறைந்த வாடகை வசூலித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலனைப் பற்றி, தொழிலாளர் பிரச்சனை பற்றி எனக்கு முன் பேசிய தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள். ஊதிய முடக்கச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்றுமில்லாத வறட்சி பரவி இருக்கிறபோது, மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நிலையிலே ஆலைப் என்று அவர்கள் மாதத்தில் 10, 15 நாட்கள்தான் வேலை செய்யக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மாதச் சம்பளத்தில் பாதியோ அல்லது பாதிக்குக் குறைவாகவோதான் ஒவ்வொரு தொழிலாளியும் மாதாமாதம் பெறவேண்டிய நிர்ப்பந்தமான கட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் அவர்களுக்கு ஊதிய முடக்கச் சட்டத்தை தற்காலிகமாவது நிறுத்தி வைக்கவேண்டும். ஊதிய முடக்கச் சட்டம் நல்ல நோக்கத்தோடு வருகிற திட்டம் என்றாலும்கூட எதிர்பாராத வறட்சி நிலையை முன்னிட்டு அதை தற்காலிகமாகவாவது, டெம்பரரி சஸ்பென்ஷன் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே அவ்வாறு, இந்த வறட்சி நிலை நீங்கும் வரையிலாவது இந்தத் திட்டத்தை ஒத்திவைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக, உதவிகரமாக இருக்கும் என்பதை அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன். இன்று அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை எளியவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு கலைஞர் அவர்கள் அரசு பல முறைகளில் முயற்சி செய்து வருகிறது என்பதை நான் பாராட்டுகிறேன். இப்போது தொழிலாளர்கள் ஏற்கனவே முழுச் சம்பளம் கிடைத்த போதும் அவர்களுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது பாதிச் சம்பளம் கிடைக்கிறபோது எப்படி குடும்பத்தைக் காப்பாற்றுவது என்பது ஒரு கஷ்டமான. இக்கட்டான நிலையில் அவர்கள் இருக்கிறபோது அவர்களுக்கு கண்டிப்பாக நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்களை, அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது அவசியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தந்த முதலாளிகள், மேனேஜ்மெண்ட் மூலமாவது கூட்டுறவுச் சங்கங்கள்

அமைத்து தொழிலாளர் பிரதிநிதிகளை வைத்து நியாய விலையில் உணவுப் பொருள்களைக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க முடியும். இந்த அத்தியாவசியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தற்காலிகமாக வேலை செய்பவர்கள் temporary workers who have put in service of 5 or 10 years have not been regularised. என்ற நிலை இருக்கிறது. 5, 10 வருஷங்கள் வேலை பார்த்தும் கூட தற்காலிகமாக பகுதிகளில் பல பேர்கள் பல ஆலைகளில் இருந்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. வேலை தற்காலிகமானது என்று கருதப்படுகிற காரணத்தினால் அதற்குரிய சலுகைகளை வைத்துக் கொள்கிற காரணத்தினால் இவர்களுக்கு நிரந்தரமான வேலை பார்க்கக் கூடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய

Provident Fund and other benefits are not available.

செக்யூரிட்டி ஆப் ஜாப் இல்லை. குறைந்தது இரண்டு வருஷம் ஒருவர் தற்காலிகமாக வேலை செய்திருந்தால் அவரை நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குரிய உத்தரவை தொழில் அதிகாரிகள் மூலமாக, கமிஷனர் மூலமாக உடனடியாக நிறைவேற்றுவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்று முதலாளிகள் தங்களுடைய லாபத்தை அதிகப்படுத்துவதற்காக ரேஷனலைசேஷன் திட்டத்தை, நவீனமுறைப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, இது நல்லது என்பதை ஒத்துக்கொண்டாலும்கூட இதன் விளைவு

after-effect of rationalisation cutting off or throwing of certain employees out of employment to improve the quality or the products என்ற நிலை வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, நான் வருந்துகிறேன். I am very Sorry.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே 8 நிமிஷம் ஆகி வி——து.





திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, முதலில் பேசியவருக்கும், பழைய [illegible] நேரம் கொடுக்கப்பட்டது. நாங்கள் [illegible] தொழிற்சங்கத்தை இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அனுமதி இல்லை [illegible] எங்கள் கட்சிக்கு இல்லை [illegible] என்று சொல்லி விடுகிறேன்.

I am not able to coherently putforth my points. I am very sorry in Deputy Speaker. Sir, you must give me some more marginal time as you have given to other members.

பழைய ஆலைக் காரர்கள் வேகமாகப் பேசினார். கவர் கொடுத்தும் பேசினார். நான் உண்மையான தொழிலாளர் பிரச்சினையை வேதனையோடு சொல்கிறேன். அமைதியான முறையிலே பேசுகிறேன். இப்படி மணி அடித்து என் நேரத்தைக் குறைப்பது தார்மிகமானதல்ல, நியாயமானதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: ஆகவே, ரேஷனலைசேஷன் மூலமாக ஒரு வகையில் உற்பத்திப் பெருக்கம், [illegible] முன்னேற்றம் என்று இருந்தாலும்கூட தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதை முதலாளிகள் செய்கிறார்கள், [illegible] என்றாலும் வேலைவாய்ப்பு அற்றவர் [illegible] இருக்கிறோம் என்பது கேள்விக்குறியாக [illegible] ரேஷனலைசேஷன் இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, [illegible] தொழிற்சாலைகளை [illegible] தேசியமயமாக்கக் கூடாது என்பது என் கேள்வியாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு உண்மையான சோஷலிசத்தில் நம்பிக்கை உள்ள அரசு. [illegible] செய்கிற அரசு [illegible] நடைமுறையில் [illegible] இதில் நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தினால் பல நல்ல திட்டங்களை, ஆலை முதலாளிகள், பல முதலாளிகள் ஆகிய [illegible] எல்லாம் [illegible] பாராட்டு [illegible] வெளியில் தனியாகப் பேசும்போது [illegible] பாராட்டுகிறார்கள், [illegible] இப்படி நல்ல பல திட்டங்களைக் கொண்டு வருகிற அரசு இன்று [illegible] சர்க்கரை ஆலைகளை [illegible] அனுமதி கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்திருக்கிறது. நம் அரசு ஏற்கனவே அந்தக் கருத்தை தெரிவித்திருந்தது. அதை விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கருதுகிறேன்.

[திரு. க. துரைசாமி] [1975 ஏப்ரல் 4

அரசாங்கத்தின் சட்டத்தை மாற்றி [illegible] அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், டெம்பரரி தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள், காஷுவல் தொழிலாளர்களுக்கு வேஜ் சம்பளம் கிடைக்கவும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கோயம்புத்தூரில் இருக்கிறது. அதில் 300 படுக்கைகள் இருக்கின்றன. அதை 500-ஆக உயர்த்திக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே 6 படுக்கைகள்தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயிரம் பேருக்கு 4 படுக்கை என்றாலும் குறைந்தது 40 படுக்கை இருக்க வேண்டும். ஆனால் 6 தான் இருக்கிறது. ஆகவே, அங்கே குறைந்தது 40 படுக்கை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] வகையில் மருத்துவ மனை கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொழிலாளர்கள் நடுப்பத்தில் [illegible] மருந்துகள் வசதி செய்து தர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

1958-ம் ஆண்டில் நான் [illegible] தற்போதைய லேபர் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்றபோது, [illegible] லேபர் கமிஷனர்தான் இருந்தார். ஒரு டி.சி.எல்.தான் இருந்தார்.

இன்றைக்கு லேபர் கமிஷனர் ஆபீசில் [illegible] அடிஷனல் லேபர் கமிஷனர், டெபுடி லேபர் கமிஷனர் என்று இப்படி 10 பேர்களைப் போட்டிருக்கிற இந்தத் துறையில் [illegible] வேலைகள் அதிகமாக நடைபெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நிறைய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போதே மணி 6-40 ஆகிறது இன்னும் 8 பேர்கள் பேசவேண்டும். ஆளுக்கு 10 நிமிஷம் பேசினாலும் அனைவர்க்கும் 8 மணி அளவில்தான் பேச ஆரம்பிக்க முடியும். பேசினது போதும்.



1975 ஏப்ரல் 4]

**திரு. க. துரைசாமி :** இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, திரு. துரைசாமி போன்றவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதலிலேயே நான் ஸ்பெஷல் சப்ஜெக்ட்டுகளைப் பேசியிருக்கலாம்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, அவர் சேர்ந்திருக்கின்ற கட்சிக்கு ஜஸ்டிஸ் செய்ய வேண்டும் அல்லவா?

**திரு. க. துரைசாமி :** தலைவரவர்களே, கோவையில் இருக்கிற டி.சி.எல்., ஏ.சி.எல். அலுவலகங்களை ஒரு மையமான பகுதிக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல வசதி கிடைக்கும். நம்முடைய வெல்பேர் போர்டு மூலமாக திருப்பூரிலே சத்துணவுத் திட்டத்திற்காக ஒரு இடத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் நிறைவேற்றுவதற்கு வகை செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டம் எவ்வளவு ஏழை மக்களுக்குப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும். மில்களில் கூட்டுறவு பண்டக சாலைகளை அமைத்து அரிசி நியாய விலையில் போட வகை செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியம் சார்பாக தொழிலாளர்களுக்கு அல்லது வேறு பல சிறிய சாதாரண லோ இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும். மிடில் இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு நிலைமையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஸ்டேட் லெவலில் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. மாவட்ட அளவில் அட்வைசரி கமிட்டி போட்டு அந்த அட்வைசரி கமிட்டியானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி வேலைவாய்ப்பு சம்பந்தமாக தகவல்கள் முறையாக அனுப்பப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில் அக்கறை எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

கலெக்டர் பார்த்தாயிற்று.

Management refuses to recognise Government.
மானேஜ்மெண்ட் கவர்மெண்டை ஏற்க மறுக்கிறது.

அதேபோல் ...த்திர பெ...க்கை ..., பி.ஏ.பேடு, ராதாகிருஷ்ணா பக்கத்தில் இருக்கிறது.

ஏழு பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். மூன்று நான்கு வருஷம் போய் வந்து கொண்டிருந்தது. இரண்டு மூன்று தடவை அதைப் பற்றிச் சட்ட மன்றத்தில் கூடக் கிளப்பினோம். நாங்கள் பிராசிக்யூட் பண்ணப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் பழைய நிலைமைதான் இருக்கிறது. டிலே அரசுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்.

பொதுவாக லேபர் இலாகாவில் டிலே கூடாது. முன்பு 1952, 1956-ல் சென்னையில் லேபர் அப்பலேட் டிரிப்யூனல் இருந்தது. இரண்டு ஜட்ஜ்கள் இருந்தார்கள். அதிலே அதிகமாக ஆஜரானது நான்தான். லேபர் ட்ரிப்யூனல் அதற்குப் பிறகு நேராக ரிட்டுக்குப் போய்விடுவார்கள்.

We all moved for the abolition of Appellate Tribunal.
அப்பலேட் டிரிப்யூனலை எடுத்து விட வேண்டுமென்று சொன்னோம். இப்போது பார்த்தால் பேசாமல் அப்பலேட் டிரிப்யூனலே இருந்திருக்கலாம் போல் இருக்கிறது. என்ன தீர்ப்பு வந்தாலும் உடனே ரிட்டுக்குப் போகிறார்கள். தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் ரிட் பெட்டிஷன் போட்டால் ஹைகோர்ட்டில் அட்மிஷன் கொடுக்காமல் இருப்பது நல்லது. (துணைத் தலைவரைப் பார்த்து) அப்போது கூட நீங்கள்தான் ஆட்சேபித்தீர்கள். அந்த மாதிரி சொல்லக்கூடாது என்று. தொழிலாளர் அவ்வளவு கஷ்டப்பட்டும் ஒரு முடிவுக்கு வரும்போது ரொம்ப டிலே ஆகிறது. தொழிலாளியை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வருகிற போது தொழிலாளியை உயிரோடு பார்க்க முடியாது. ஒன்று ஊரை விட்டுப் போயிருப்பார் அல்லது உலகத்தை விட்டே போயிருப்பார். இது ரொம்ப வேதனைக்குரிய விஷயம். டிப்பார்ட்மெண்ட் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

அடுத்த பக்கத்தில் இருக்கக்கூடிய விஷயம். காஸ்மோபாலிடன் கிளப் பக்கத்தில் இருக்கிறது. அது 102 வருஷ காலமாக இருக்கிறது. அங்கு வேலை செய்கிறவர்கள் 'கேட்டரிங் எஸ்டாப்ளிஷ்மெண்ட்' என்பதன் கீழ் வருவார்கள். அந்தக் காலத்தில் காஸ்மோபாலிடன் கிளப்புக்கு பி.டி. ராஜன், டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் போன்ற பெரிய பெரிய பணக்காரர்கள்தான் போவார்கள். இரண்டு நாள் தங்குவார்கள். அந்தப் பணியாளர்களுக்கு 50



ரூபாய், 100 ரூபாய் என்று கொடுப்பார்கள். இப்போது போகிறவர்கள் கொடுக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது. அங்கு வேலை செய்கிறவர்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம் இருக்கவேண்டும். 131 பேர் வேலை செய்கிறார்கள். 19 பேர் கோல்ஃப் கிளப்பில் வேலை செய்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன்பு அவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைக்கப் போகிறோம் என்றார்கள்; கோரிக்கை வைக்கப் போகிறோம் என்றார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. நேற்று நானும் திரு. குமாரசாமியும் போயிருந்தோம். அனந்தநாயகி அம்மையார் அவர்களும் போயிருந்தார்கள். தூண்டிவிடுவதற்கு அல்ல. அங்கு தொழிலாளிக்குக் குறைந்த சம்பளம் 100 ரூபாய். கூடிய சம்பளம் 150 ரூபாய்தான். 42 வருஷம் சர்வீஸ் போட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்தக் காலத்தில் சென்னை நகரத்தில் இந்த நிலைமை இருப்பது சரியல்ல. பணக்காரர்கள் கூடியிருக்கும் அந்த கிளப்பில் வேலை நிறுத்தம் செய்தவுடன் முதலாளிகள் 'நாங்கள் லாக் அவுட்' பண்ணிவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். ரொம்ப கேலிக்கூத்தாக இருக்கிறது. அமைச்சரும்கூடச் சென்று பார்க்க வேண்டும். பார்த்து நியாயம், நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். ரொம்ப வயதானவர்கள், ரொம்பப் பெரியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துச் சங்கம் வைக்கத் தயங்குகிறார்கள்.

**திரு. கு. காமாட்சி:** நீங்கள் கெஸ்டாகப் போனீர்களா அல்லது அதிலே மெம்பராக இருக்கிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மெம்பரெல்லாம் கிடையாது. அந்தக் காலத்தில் சௌந்தரபாண்டியன் கெஸ்டாக அழைத்துக் கொண்டு போனார்.

அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை அறிந்து வர நானும், ஆளும் காங்கிரஸ் கட்சி குமாரசாமி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலம்புரி ஜானும் வந்தார்கள். ஹியூமன் பிராப்ளம் என்று பார்த்துத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுதான் எஸ்டிமேட் கமிட்டியின் 29-வது ரிப்போர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. இது பூராவும் தொழிலாளர்களைப் பற்றியது. கொஞ்சம் படித்துப் பார்த்தேன். அவர்கள் பண்ணியிருக்கக்கூடிய சிபாரிசுகளுக்குப் பதில் போதாது.

தொழிலாளர்களுக்கு உள்ள பதிலாக அது இருக்கவேண்டும். உண்டு இல்லை என்று சொல்லவேண்டும். இது இழுப்பாக இருக்கிறது. வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அமல் நடத்தவேண்டும். பூரன்சியைப் பொறுத்தவரையில் ஏதோ செய்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 4

திருப்பதாகச் சொல்கிறார்கள். மோட்டார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக பக்கத்தில் கேரளாவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரவில்லை? அது வந்தால்,

There is a question of revision of wages.
எங்கள் மோட்டார் தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள ரிவிஷனும் கிடைக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேஜ் போர்ட் அவார்ட் வந்தால் அதை அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இது சிபார்சு.

லேபர் ஆபீசர்களுக்கு அதிக பவர் கொடுக்கவேண்டும். முதலாளிகளைக் கூப் பிட்டால் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். இரண்டு தடவை கூப்பிட்ட பிறகு எந்த முதலாளியாவது வரவில்லை என்றால் இறுதியாக ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று டைரக்ஷன் கொடுங்கள். இப்போது லேபர் ஆபீசர்களுக்கு பவர் கிடையாது. முதலாளிகள் மிரட்டுகிறார்கள். போனிலேயே வர மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

இராஜபாளையத்தில் இருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். இங்கு மில் முதலாளி வரவில்லை என்றால் அவர்கள் திரும்பி போகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சில் எக்ஸ்பார்ட்டியாக அனுப்பலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைச் செய்யவேண்டும்.

ஹோட்டல் சம்பந்தமாக அது நீண்ட நாளையப் (long standing) பிரச்னை. லேபர் டிப்பார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு அந்தப் பிரச்சனைகள் தெரியும். இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறார்கள். பிரயோஜனமில்லை. சாதாரண மாக ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு இன்ஸ்பெக்டர் போடவேண்டும். குறிப்பிட்ட ஊரிலாவது, மதுரையில் ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு போடுங்கள். அவர் காலையில் என்ன செய்கிறார்? வந்து விட்டுத் திரும்பி விடுகிறார். சில குறிப்பிட்ட ஹோட்டல்களில் கோளாறுகள் நடக்கின்றன. நான் தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. ஷாப்ஸ் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட் இன்ஸ்பெக்டர் பேரிலும் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. சில நியாயமாக இருக்கலாம், சில நியாயம் இல்லாமலிருக்க லாம். இதை டோன் அப் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹோட்டல் பெயரை மாற்றுவது அல்லது ஆறு மாதங்கள் கழித்து அவர்களை வெளியே போகச் செய்வது என்றில்லாமல் இருக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளர்களைக் குறைந்தபட்ச சம்பள பட்டியலில் சேர்த்து விட்டதாக நினைக்கிறேன். ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு என்று நிச்சயிப்பது அவசியம்.



1975 ஏப்ரல் 4] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அடுத்தபடியாக, ப்ளான்டேஷன்ஸ். எல்லா ப்ளான்டேஷன்ஸ்க்கும் போக வில்லை. சர்க்காருக்கு உட்பட்ட ப்ளான்டேஷன் சின்கோனா. அதன் நிலைமை இன்று பரிதாபகரமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் சம்பள உயர்வு இப் போது ஏற்பட்டாலும் அது போதாது என்றுதான் இருக்கிறது. மற்ற ப்ளான் டேஷன்களில் உள்ள வாய்ப்பு வசதிகள் இங்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, பவர் சம்பந்தமாகச் சொன்னார்கள். காலையில் பத்திரிகை யில் பார்த்தேன். பெரிய பாய்லராக ஆக்கினால் டர்பைன் வைத்து அதில் மின் சாரம் கிடைக்கும் என்றிருக்கிறது.

That can be examined.

சர்க்கரை ஆலைகளை சர்க்கார் தேசியவுடைமையாக்கப் போகிறது என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. ஆரூரான், மகாலிங்கம், கருமுத்து க்ரூப், கொத்தாரி, பாரி அன்ட் கோ இவைகளை எல்லாம் எடுப்போம் என்று முடிவு செய்திருக் கிறோம். அப்படி எடுக்கும்போது இப்போது உள்ள பாய்லரை ஹெவி பாயில ராக்கினால் மின்சாரம் எடுக்கலாம் என்றிருக்கிறது.

I am not a technician; that can be examined.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சர்க்கரை ஆலைகளை தேசிய மாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஆக்கப்போகிறீர்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அதிகாரத்தில் இருந்தால் அல்லது நான் சொல்வதை அதிகாரத்தில் இருப்பவர்கள் கேட்பதாகயிருந்தால் கண்டிப்பாக ஆக்கிவிடுவேன். அதில் சந்தேகம் இல்லை.

தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கும்போது பாய்லர்களை பெரி தாக்கினால் மின்சாரம் எடுக்கமுடியும் என்று ஆலோசனை வந்திருக்கிறது. அதையும்கூட பரிசீலனை செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக்கூட உற் சாகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும் அது.

பின், சப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் என்று தனியாகப் போட்டு தனி இலாகா என்றளவில் இருக்கிறது. இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் பதில் வந்திருக்கிறது. அது நல்லதாக இருக்கும்.

திருச்செங்கோட்டில் புல்லிக்கார மில்லில் பாக்டரி ஆக்டை அமல் படுத்த வேண்டும். அங்கு நைட் ஷிப்ட் பூராவும் பெண்கள். அதை நடத்தும் முதலாளி யாருக்கும் பயப்படாதவர்; மத்திய சர்க்காரையும் விரட்டுவோர். மாநில

சர்க்காரையும் விரட்டுவார். யாராவது மீறிப் போனால் கேஸ் போடுவார். நமது இலாகா சிறிதளவிற்காவது அங்கு பாக்டரி ஆக்டை அமல்படுத்த வகை செய்ய வேண்டும்.

டெக்ஸ்டைல் மில்லில் பாக்டரி ஆக்ட் அமலில் இல்லாத சிறந்த இடத்தைத் தேடி பார்க்க வேண்டுமென்றால் அது திருச்செங்கோட்டில் இருக்கிறது. முதலாளியின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் சொல்வதற்கு முன்னால் அவர் யார் என்று தெரிந்திருக்கும். (ஒரு உறுப்பினர் : பெயரைச் சொல்லுங்கள் ) அங்கப்ப செட்டியாருக்கு சொந்தம். நம் தொழிலாளர் களுக்குக் கொஞ்சமாவது பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா? இன்றும் குறைந்த சம்பளத்தில் அத்துக் கூலிகளாக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மற்றவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டாலும் ஒப்பந்தம் அமலாகாத இடமாக அது இருக்கிறது.

இராஜபாளையத்தில் ஜானகிராம் மில்லையொட்டி ஒரு க்ரூப் இருக்கிறது. சிறு சிறு வீவிங் செக்ஷன்ஸ் நிறைய இருக்கின்றன. 300 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குத்தகைக்கு எடுத்திருப்பது திருநெல்வேலி ஜில்லாக்காரர். அவர் எல்லோரும் வெளியே போங்கள் என்று சொல்லி எல்லோரும் போய் ஓரளவிற்குச் சரி செய்தார்கள். மறுபடியும் நான் மூடப்போகிறேன் என்று சொல்லி, மூடாதே என்று சொல்லிச் சென்ற தொழிலாளர்கள் நூறு பேர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் மறியல் செய்தால் உடனடியாக பதினைந்து நாட்கள் ரிமான்ட் என்று போடுவது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. அதைக் கண்டிக்கிறேன். மூடப்போகிறேன் என்று சொன்னதற்கு, மூடாதே என்று அதற்கு இரண்டு நாட்கள் முன்னால் சென்று மறியல் செய்தால் உடனே மதுரை சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்புகிறார்கள் நூறு பேர்களையும். டி.சி.எல்.லிடம் பேச்சுவார்த்தை நடத்தி நேற்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

Arm the D.C.L. with powers.

"திற ஐயா" என்று சொல்லுங்கள். அப்போதுதான் திறப்பார்கள். இங்கு அமைச்சர் அவர்கள் அல்லது லேபர் செகரட்டரி அல்லது சீப் கமிஷனர் ஆப் லேபர், "திறந்துதான் தீரவேண்டும், நீ பூராவாக ஏமாற்றுகிறாய், திறக்கப் போகிறாயா இல்லையா, திறந்துதான் தீரவேண்டும், இப்போது மூடிவிட்டு ஒன்றரை மாதம் கழிந்து, வேறுவிதத்திலா திறக்கப் போகிறாய்?" என்று சொன்னால் பயப்படுவார்கள். டி.சி.எல். இடம் சென்று பேசினால், எங்கள் பார்ட்னர்ஸ் இடையில் தகராறு, அதனால் மூடுகிறேன் என்பார்கள். சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்வார்கள். அந்த 300 பேர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.



பிராவிடென்ட் ஃபண்ட் சம்பந்தமாக, டெக்ஸ்டைல், இன்ஜினீரிங், ரோடு டிரான்ஸ்போர்ட் இவைகளில் உள்ள குறைகளைப் பற்றிக் கருத்துச் சொல்ல விழைகிறேன்.

Government hesitates to launch prosecutions.

நான் பிராவிடென்ட் பன்டு சென்டிரல் போர்டில் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலத்தில், மத்திய சர்க்காரே எடுத்து பிராசிகியூட் செய்வதற்கு அதிகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று வந்து இருக்கிறது. இப்போது மாநில சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இப்போது பிராசிகியூட் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி பிராசிகியூட் செய்கிறபோது நம்முடைய அரசாங்கத்திற்கு ரொம்பத் தயக்கம் வருகிறது. கொஞ்ச நாள் பிராசிகியூட் செய்யுங்கள்.

இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்றால், தொழிலாளி 10 ரூபாய் கட்டுகிறான் என்றால், முதலாளி 10 ரூபாய் போடுகிறார் என்றால் இரண்டையும் அனுப்புவது இல்லை. கடைசியாக என்ன செய்து இருக்கிறோம் என்றால் ஜி.பி.எப். தொழிலாளிக்குக் கொடுக்காமல் இருக்கமுடியாது என்பதற்காகக் ரூ. 2,000 தொழிலாளி கட்டி, ரூ. 2,000 முதலாளி கட்டவேண்டுமென்றாலும்— தொழிலாளிக்கு அந்தப் பணம் கொடுக்கவேண்டுமென்பதற்காக ஸ்பெஷல் பண்டிலிருந்து தொழிலாளிக்குப் பணம் கொடுக்கிறோம்.

தொழிலாளி கட்டியிருக்கிற அளவுக்குப் பணம் கண்டிப்பாக கொடுத்துவிட வேண்டுமென்று சட்டம் போட்டு இருக்கிறோமே தவிர, முதலாளியைக் கண்டித்துக் கேட்கிற அளவுக்கு நிலைமை வரவில்லை. அப்படிப்பட்ட முதலாளிகளைக் கண்டிக்கலாம்.

ஒரு சமயத்தில், பம்பாயில் ஒரு முதலாளியையும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு முதலாளியையும் 15 நாள் ஜெயிலில் வைத்தோம். 15 நாள் ஜெயிலில் வைத்து, கம்பி எண்ண வைத்தால் சரி, சுறுசுறுப்பாகப் பணம் வந்து சேரும். ஆனால் இந்த மாதிரி ஆட்களுக்கு சூடு, சொரணை ஏற்படப் போவது இல்லை. இருந்தபோதிலும், ஒரு 15—10 நாள் ஜெயில் போடுகிறோம் என்ற நிலைமை வந்தால், சீக்கிரம் அரியர்ஸ் கலெக்டாகும். என்னிடம் விவரங்கள் இருந்தாலும், விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.

ஏற்கனவே சட்டத்தைப் பற்றி விவாதிக்கிறபோது, தொழிலாளிக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னேன். அந்த வேண்டுகோளை நீண்ட நாட்களாக சொல்லி வருகிறோம். ஏ.ஐ.டி.யு.சி. சொல்லி வருகிறோம்; இப்போது இருக்கிற ஹைகோர்ட்டிலேயே ஒரு 'லேபர் பெஞ்ச்' ஏற்படுத்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 4

தாங்கள். 'லெட் தேர் பி எ லேபர் பெஞ்ச்". லேபரைப் பற்றித் தெரிந்த இரண்டு ஜட்ஜ்கள் அதில் இருக்கட்டும். கஜேந்திரகட்கர் போன்றவர்கள் அதிலே இருக்கட்டும். இதிலே சிவில் கோர்ட்டில் திறமையானவர்களை வைத்து இருக்கிறார்கள். அல்லது கிரிமினல் அப்பீலில் திறமையானவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அப்படி அவர்களைக் கொண்டு வந்து போடுவதால், அவர்களுக்கு லேபர் கேஸ் வருகிறபோது, எந்த அளவுக்கு அவர்கள் அதைப் புரிந்துகொள்ள முடியும்? அவர்களுக்கு இருக்கும் அனுபவம் வேறு. ஆகவே, லேபர் பிரச்னை தெரிந்தவர்களை அங்கு நீதிபதியாகப் போடவேண்டும். இதை நம்முடைய லேபர் அமைச்சர்—லா மினிஸ்டரிடம் சொல்லி—சட்ட அமைச்ச ரிடம் வற்புறுத்தி, அப்படி ஒரு பெஞ்ச் போட்டால், சீக்கிரம் லேபர் கேஸ்கள் முடியும். சில கேஸ்கள் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அதோடு, ஓரளவிற்குச் சாதகமான தீர்ப்பும் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சென்னையில் ஒரு லேபர் டிரிபியூனல் இருக்கிறது. 3 லேபர் கோர்ட்கள் இருக்கின்றன. மதுரையில் ஒரு லேபர் கோர்ட் இருக்கிறது. கோயம்புத்தூரில் ஒரு லேபர் கோர்ட் இருக்கிறது. லேபர் கோர்ட்டைப் பொறுத்தவரையில் நல்ல ஜட்ஜாக, சீனியர் ஜட்ஜாக, அதில் திறமையானவர்களாக, அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பவர்களைப் போடுங்கள், அப்படி யில்லாமல் ஏதோ போடவேண்டுமென்பதற்காகப் போடக்கூடாது.

மதுரையில் இருக்கிறவர் நல்ல ஆள். அவர் ரொம்பத் திறமையானவர். வேறு சிலரைப் பற்றி கருத்து சொல்கிறார்கள். சென்னையில் இருக்கிற லேபர் கோர்ட் 'பஞ்சவடி', சேத்துப்பட்டில் இருக்கிறது. அங்கே 3 கோர்ட்டுகள் இருக்கின்றன. மூன்று ஜட்ஜ்கள் இருக்கிறார்கள். ஆனால் இரண்டு ரூம்கள் தான் இருக்கின்றன. எந்த ஜட்ஜ் எப்போது உட்காருவார் என்று தெரியாது. தொழிலாளர்கள் காத்துக் கிடக்கவேண்டும். மியூசிகல் சேர் மாதிரி இருக்கிறது. அதோடு, அங்கே பார்த்தால், 2 டைப்ரைட்டர்கள்தான் இருக்கின்றன. ஆனால், 5 டைப்பிஸ்ட்கள் இருக்கிறார்கள். அந்த டைப்ரைட்டர்கள் நிலைமை எப்படி யிருக்கிறது என்றால்,

Parties are asked to supply ribbons and carban papers.

இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. பக்கத்தில் ஒரு வெத்திலை பாக்கு வாங்கவேண்டுமென்றாலும், சிகரெட் வாங்க வேண்டுமென்றாலும், அங்கே வசதி கிடையாது. இப்படிப்பட்ட ஒரு இடத்தில் போட்டு வைத்து இருப்பது சரியல்ல. டிரிப்யூனலை ஹைக்கோர்ட்டில் இருக்கிற மாதிரி வைக்கலாம். மதுரையில் நேரடியாக கோர்ட் ஹவுசிலேயே அது இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து அதை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. கே. டி. கே. தங்கமணி]

Government Agricultural Engineering Workshop at Madras.

No improvement—installed machines not utilised—Workshop 50 years old. Still kept as workcharged non-provincialised establishment—Drills, Tractors and all other agricultural implements are manufactured here—Work is diverted to private workshops while keeping machines and labour idle—Maladministration and management not interested—workers' pay very low—

இது சர்க்கார் நடத்தும் வொர்க்ஷாப் ஒன்றில் இருக்கும் நிலைமையைப் பற்றிய சுருக்கம், எங்களுடைய அசெஸ்மெண்ட். இதைக் கொஞ்சம் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியா மீட்டர்ஸைப் பற்றி சொல்லாமல் போனால், எங்களுக்கு நிம்மதி ஏற்படாது. இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தில் 200 தொழிலாளிகள் கிட்டத்தட்ட 8 மாதமாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்தியா மீட்டர்ஸை நடத்துகிறவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் எத்தனையோ கோடி வாங்கியிருக்கிறார்கள், மாநில சர்க்காரிடத்தில் எத்தனையோ கோடி வாங்கியிருக்கிறார்கள். ஒரு பாங்கியிலிருந்து 2½ கோடி ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் தொழிற்சாலை மீது அக்கறை இல்லாத வகையில் இருக்கிறார்கள். நம்முடைய தொழிலாளிகள் 200 பேர் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே மீட்டர்ஸ் அதிகமாக உற்பத்தி செய்வது பிர்லா. பிர்லாவை எதிர்த்து யாரும் காரியம் செய்வது கஷ்டம். சிம்கோ மீட்டர்ஸ் பிர்லாவை எதிர்த்து நின்றபோது நாம் எல்லாம் பெரிய இயக்கம் நடத்தி சிம்கோ மீட்டரைக் காப்பாற்றினோம். இப்போது சிம்கோ மீட்டர்ஸ், பிர்லாவோடு சேர்ந்துகொண்டு, இந்தியா மீட்டர்ஸை க்ளோஸ் செய்யப் பார்க்கிறார்கள். இதுதான் நிலைமை. இந்தியா மீட்டர்ஸ் நமக்குக் கிடைத்தால், நாம் உண்மையிலேயே அதை மின்சார இலாகாவோடு சேர்த்துக்கொண்டு, அதை ஒரு மின்சார இலாகா டிபார்ட்மெண்ட்டாக வைத்துக்கொண்டு, செய்யலாம். அப்படிச் செய்வதற்கு சாத்தியம் இருக்கிறது. டிசைனை மாற்றினால் நல்ல முறையில் செய்யலாம். அந்த மாதிரி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டூபிளிகேஷன் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் 'வொர்க்கர்ஸ் எடுகேஷன் ஸ்கீம்' பற்றி ரொம்பத் தெளிவாக இருக்கிறது. 1957-ம் ஆண்டு நடந்த 15-வது முத்தரப்பு மாநாட்டில் இம்மாதிரியாக ஒர்க்கர்ஸ் எடுகேஷன் ஸ்கீம் பற்றி விவாதம் வந்தது. அந்த நேரத்தில் நமது அரசாங்கமும் ஒத்துக்கொள்ளவில்லை, முதலாளிகளும் ஏற்றுக்

கொள்ளவில்லை. அப்போது நாங்கள் சொன்னோம், வொர்க்கர்ஸுக்கு அதிகமாக நாம் சொல்லிக்கொடுக்கவேண்டும், தொழிற்சங்கங்கள் அதிகமாகச் சொல்லிக்கொடுக்க முடியவில்லை, தொழிற்சங்கம் நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது; ஆகவே, தொழிலாளர்களுக்கு 1 மாதம், 2 மாதம் என்று வகுப்பு வைத்து, சிலவற்றைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். ஏ.ஐ.டி.யு.சி எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி. ஆகிய எங்களது மூன்று தொழிற் சங்க இயக்கங்கள் எடுத்துத் தெரிவித்தோம். மாநில அமைச்சர்கள் எதிர்த் தார்கள். முதலாளிகள் எதிர்த்தார்கள். மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டது. இப்போது அந்த வகுப்புகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. சென்னையில், கோயம்புத்தூரில் நன்றாக நடந்து வருகிறது. அந்த வகுப்புகளை 'கெஸ்ட் லெக்சரர்ஸ்' நல்ல வகையில் எடுத்து, பயிற்சி அளித்து வருகிறார்கள். அப்படி நடத்தப்படுகிற வகுப்புகளுக்கு மத்திய சர்க்கார் பணம் தருகிறது. அதைக் கண்காணிக்கிற பொறுப்பு, அதிகாரம் லேபர் கமிஷனரிடம் இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது,'

Why this duplication? What is workers' training? நாம் ஏதோ வொர்க்கர்ஸ் டிரெயினிங் என்று இங்கே வைப்பதற்கு என்ன அவசியம் வந்தது? இது டூப்ளிகேஷன். வேண்டாம். இது நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் ரீஜினல் ஸ்கூல் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கும் மத்திய சர்க்காரின் டைரக்டர் ரொம்ப நல்லவர், வேணுகோபால் என்று பெயர், அவர்கள் நல்ல விதத்தில் நமக்கு ஒத்துழைப்பு தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் உற்சாகமும், ஊக்கமும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இவைகளைத்தான் நான் மெயின் ஹெட்டிங்காக வைத்து கருத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஹவுசிங் போர்டு சம்பந்தமாக, நாங்கள் கொடுத்து இருக்கும் 2-3 விஷயங்களை அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக நான் சொன்ன விஷயங்களை எல்லாம் அரசு நல்ல முறையில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய இந்த விவரங்கள் எல்லாம், அனுபவத்தில் இருக்கும் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேனே தவிர ஏதோ சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இன்று இருக்கும் நிலைமையில், இதிலே ஓரிரு விஷயங்களைத் தனியாகப் பார்த்தால் it is going in the anti-working class direction என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



பல விஷயங்களில் இந்த மாதிரி பல 'சிம்போசியம்' நடத்திப் பார்க்கிற நேரத்தில், பல பேர் தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்கிற நேரத்தில் வேதனையாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஏதோ பொறுப்பு இல்லாமல் இருப்பதுபோல் சொல்ல வேண்டியது இல்லை. தொழிலாளர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள். உற்பத்தியில் முறையாகத்தான் இருக்கிறார்கள். மின்சார வெட்டு என்ற உடனே கோயம்புத்தூரில் இருந்து எங்களுக்குத் தந்தி வருகிறது. முதலாளிகள் சாதாரணமாகவே எப்படி "லே-ஆப்" கொடுக்கலாம் என்று பார்ப்பார்கள். ஜெனரேட்டர் வைத்து இருப்பவர்கள் கூட அப்படிச் செய்கிறார்கள்.

கோயம்புத்தூரில் இருக்கும் ஆலை முதலாளிகளுக்கும், முதலமைச்சருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டாலும், ஏப்ரல் மாதத்தில் அதிகமாக கிடைக்கும் என்று இருந்தது போக, அது குறைக்கப்படுமோ என்ற அளவுக்கு நிலைமை யேற்பட்டு இருக்கிறது. அந்த வகையில் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில், உத்தரவாதம் காணக்கூடிய முறையில் காரியங்கள் நடைபெற வேண்டும். நான் சில விஷயங்களை ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறேன். பல விஷயங்களில் காரியங்கள் தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன் என்று சொல்லி எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 5-00)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாலை நேரங்களில் மன்றம் நடக்கிறபோது வழக்கமாக காரம், டீ கொடுப்பது வழக்கம், கொடுப்பார்கள், நான் மறுக்கவில்லை. நம்முடைய அற நிலைய அமைச்சரவர்கள் பால் வளத்தைப் பார்க்கிற காரணத்தினால் அவர் முன்பு பால் கோவா கொடுத்தார்கள். நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் போனஸ் கொடுப்பதில் கெட்டிக்காரர் ஆவார்கள். ஆகவே அவர்கள் இன்றைக்கு போனஸாக பாதம் அல்வாவைச் சேர்த்து தருகிற நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பாதாம் அல்வா மார்க்கெட்டில் கிடைக்குமோ என்னவோ தெரியாது. ஏதாவது ஒரு ஸ்வீட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, தலைவரவர்கள் கன்சிலியேஷன் ஆபீசர் வேலை செய்து வெற்றி அடைந்ததற்காக அவரை பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த தித்திப்பு கொடுத்து காரமாக பேசுபவர்களை மாற்றிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள் ஸ்விட்டிற்காக மாறி விடுகிறவர்களா?

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை இந்த மன்றமும், இந்த நாடும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. உழைக்கிற வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், அவர்களது பிரச்சனைகள் எதுவானாலும் அந்தப் பிரச்சனைகள் தொழில் தகராறுகள் அந்தந்தத் தொழிற்சங்கங்களால் எழுப்பப்படும்போது நிச்சயமாக தொழிலாளர்களுக்குச் சாதகமான முடிவுகள், உடன்பாடுகள் ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு இருந்து வருகிற நிலையையும், அதற்கேற்ற வகையிலே நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மிகச் சிறப்பான முறையிலே பல்வேறு தொழில் தகராறுகளையெல்லாம் சுமுகமான உடன்பாடுகளின் மூலமாக தீர்த்து வைத்திருக்கிற உண்மையையும் நாம் மிக நன்றாக அறிவோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய உரையிலேயே அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பீடித் தொழிலில் ஏற்பட்ட தகராறு, சர்க்கரைத் தொழில் தகராறு, பிறகு நெய்வேலி தொழில் பிரச்சனையிலே ஏற்பட்ட உடன்பாடு, தோட்டத் தொழிலில் ஏற்பட்ட தகராறு, இவற்றிலேயெல்லாம் மிக நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு ஆதரவான முறையிலே பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வந்தன என்கிற உண்மையை நாமும் மிக நன்றாக உணர்கிறோம். ஆகையினாலே இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற உண்மையை யார் மறைத்தாலும், அல்லது மறுத்தாலும் நிச்சயமாக இந்த நாடு, இந்த நாட்டில் இருக்கக் கூடிய உழைக்கிற வர்க்கம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த அரசு பாட்டாளி மக்களுக்காக, அகில உலக பாட்டாளி மக்களுடைய தினமான 'மே தினத்தை' சட்ட பூர்வமான சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக செய்ததை யாரும் மறந்து இருக்க முடியாது.



அதே போல பல்வேறு பிரச்சனைகள், முற்போக்கான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே மட்டும் பங்கு அல்ல, லாபத்திலேயும் பங்கு என்று சொல்லக் கூடிய நிலையில் பொதுத் துறையிலே போக்குவரத்துத்துறையிலே செயல்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். தொழிலாளர் நல நிதி சட்டம் மிக சிறப்பான முறையில் தொழிலாளர்களுக்காக பணியாற்றிடக்கூடிய வகையில் அதற்கென உள்ள சட்டம் இந்தச் சட்டத்தின் கீழ் இயங்கக் கூடிய அளவிலே தொழிலாளர் நல நிதி வாரியம் என்று ஒரு வாரியத்தை அமைத்து அந்த வாரியம் இன்றையதினம் மிகச் சிறப்பான முறையில் தொடங்கியிருப்பதை நாம் காண்கிறோம்.

இங்கே தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் பேசுகிற அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் கூட இப்போது ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். தொழில் தகராறு என்றால் சாதாரணமாக முன்பெல்லாம் ரெஃபரன்ஸுக்காக தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமென்பதற்காகவே தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டம், இதற்கென்றே வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கி திட்டமிட்ட முறையில் போராடுவது என்ற நிலைமைகள் இருந்தன. அதை யாரும் மறந்து இருக்க முடியாது. ஆனால் இன்றையதினம் அது போன்ற கோரிக்கையிலே போராட்டங்கள் நடைபெறுவதில்லை. காரணம், இந்த அரசு கூடுமான வரையில் பிரச்சனைகளை முக்கூட்டு பேச்சுவார்த்தை என்ற முறையில் தொழிலாளர் நல அதிகாரிகள் திறம்பட பிரச்சனைகளை முடிக்க முயற்சிக்கிறார்கள். இறுதியிலே அமைச்சர் கட்டத்தில் பிரச்சனைகள் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டு வருவதால் தொழில் கோர்ட்டிற்குப் பிரச்சனைகளை விடலாமாவென்றால், வேண்டாம், வேண்டாம், நீங்களே முடித்துத் தாருங்கள் என்று சொல்லிவிடக் கூடிய நிலையினைக் காண்கிறோம். அந்த அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே பல்வேறு பிரச்சனைகளை நல்ல முறையில் தீர்த்துக் கொண்டு வருகிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் ஃபெமிலி பெனிபிட் ஸ்கீம் என்ற முறையில் அரசு ஊழியர் ஒருவர் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடக்கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்து அதனால் அரசு ஊழியர்கள் பயன் பெற்று வருவதைக் காண்கிறோம்.

இன்றைக்கு இது போன்ற ஒரு சூழ்நிலையில்தான் தொழிற்சங்கப் பிரச்னையை அணுகிக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது அரசு நல்ல பல திட்டங்களைத் தொழிலாளர்களுக்காகச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில் மத்திய அரசு ஊதிய முடக்குச் சட்டம்—கம்பல்சரி டெபாசிட் ஸ்கீம் என்று சொல்லி அந்தச் சட்டத்தின் மூலம் இன்றைக்குத் தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படக் கூடிய காட்சியை காண்கிறோம். அதற்கு கூட எதிர்பார்த்த அளவுக்குக் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கப் பலர் மறந்து விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனைதான் ஏற்படு கிறது.

வரம்பே கிடையாது. 150 ரூபாய், 200 ரூபாய் என்று ஊதியம் பெறுகின்ற வர்கள் கூட, தங்களது கோரிக்கைகள் மூலம் பிரச்னையை தீர்த்துக் கொண்டு, சுமுகமானமுறையில், பேச்சு வார்த்தையின் மூலமோ, அரசாங்கத்தின் துணை யோடோ, பேசி முடித்து, ஊதிய உயர்வு பெற்றால், அதை முழுமையாகப் பெற முடியாது. அடிப்படைச் சம்பளம் உயர்ந்தால் அந்தத் தொகையைப் பெற முடியாது. பஞ்சப்படி உயர்ந்தால் பாதிதான் தொழிலாளர்களுக்குச் செல்லும் என்ற அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்தச் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அதனால் விலை வாசியைக் கட்டுப்படுத்த முடியாது. கறுப்புப் பணம், கள்ளப் பணம், கள்ள மார்க்கெட்டுக்காரர்களின் பல்வேறு விதமான தவறான செயல்கள், இவை காரணமாக இன்றைக்கு விலைவாசியை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலைதான் இருக்கிறது என்பதைக் கண்டத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே, தொழிலாளர்களுடைய வருமானத்தில், ஊதிய உயர்வில் கை வைக்கக் கூடிய அந்தச் சட்டத்தை நிச்சயம் திரும்பப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் லிவிங் வேஜ் என்பதை முதலாளிகள் தொழிலாளிகளுக்குத் தர வில்லை. இப்பேர்ப்பட்ட கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை. தொழிற்சாலைகளில் பல ஆண்டுகளாக காஷுவல் தொழிலாளிகள், டெம்பரரி ஒர்க்கர்ஸ், காண்டிராக்ட் ஒர்க்கர்ஸ் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூபாய் 3, 3½, 4 என்று குறைந்த அளவில் ஊதியம் தந்து மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகளெல்லாம் தற்காலிகத் தொழிலாளி கள். எந்தெந்தத் தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளிகளுக்குக் குறைந்த





பட்ச ஊதியம் எவ்வளவு இருக்கிறதோ, அன்ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் மினிமம் வேஜ், அது அந்த கேஷுவல் தொழிலாளிக்கு, டெம்பரரி தொழிலாளிக்கு, வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ப முறையில் தனிச் சட்டத்தை நம் அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதுபோன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இன்றைக்கு நிரந்தர தொழிலாளி 15 ரூபாய் ஊதியம் பெறுகிறான் என்றால் தற்காலிக தொழிலாளிக்கு 4 ரூபாய், அதிகம் போனால் 5 ரூபாய் என்ற அளவில் கொடுத்து முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றுகின்ற காட்சியைக் காண்கிறோம். அதற் காக ஒரு சட்டம் தேவை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

லே ஆப் நாளைக்கு முழு ஊதியம் வேண்டும். இந்தக் கோரிக்கை ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசு ஆதரவான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று நான் மெத்த வேண்டுகிறேன்.

அடுத்தாற்போல, சத்தியா ஸ்டுடியோ பிரச்னை. உள்ளபடியே மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைமை. சத்தியா ஸ்டுடியோ முதலாளி—அவர் இன் றைக்கு ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். திரு. எம். ஜி. ஆர். அந்த ஒரு ஸ்டுடியோ மூடப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளிகளெல்லாம் மிக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 2 தொழிலாளிகள் உயிர் இழந்து விட்டார்கள். ஆக, இது நம்முடைய அரசு இன்றும் அநுகூலமாக அந்தத் தொழிலாளிகளுக்கு ஆதரவான முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும், இதை இன்னும் நல்ல முறையில் தீவிரமான முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் திருவொற்றியூரில் ரூபி ரப்பர் வொர்க்ஸ் 1½, 2 ஆண்டு கால மாக மூடப்பட்டு, தொழிலாளிகள் ஊதியம் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.

மற்றும் பைலட் என்ற கம்பெனி. அது மூடப்பட்ட நிலையில் இருக்கிறது. தொழிலாளிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி வில்லிவாக்கத்தில் வேண்டுமென்று ஒவ்வொரு ஆண் டும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் கட்டப் போவதாகச் சொன்ன இடங்களில் வில்லிவாக்கம் இல்லை. ஆக அங்கேயும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 4

நான் கூட ஐ.டி.சி. என்று அழைக்கப்படக் கூடிய இந்தியா டுபாக்கோ கம் பெனியில் இருக்கிறேன். எங்கள் தொழிலாளர்களுக்கு எங்கள் தொழிற்சங்கம் மூலமாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னாலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அந்தத் தொழிலாளிக்கு 5 ஆயிரம் ரூபாய் தொழிற் சங்கம் மூலமாக, வெல்ஃபேர் ஃபண்டு ஸ்கீம் என்று உருவாக்கி அதற்காகச் சட்ட திட்டங்கள் தோற்று வித்துக் கொண்டு நாங்கள் வழங்கிவந்து கொண்டு இருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்கள் எல்லா இடங்களிலும் ஆக்கபூர்வமான பணி களைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்த அந்தக் கட்டத்தில் யாருமே எதிர்பாராத முறையில் மிகச் சிறந்த திட்டத்தை, 10 ஆயிரம் ரூபாயை அரசு ஊழியருக்கு வழங்கும் அற்புதமான திட்டத்தை இந்த அரசு அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இன்றையதினம் நாங்களெல்லாம் தொழிற் சங்க இயக்கத்திலே அரசாங்கத்தினுடைய இந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக்கூடிய அளவிலே நிலைமைகள் இருப்ப தைக் காண்கிறோம்.

தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையிலே, தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, சமூக நீதி அடிப்படையிலே, உழைக்கிற மக்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை, அடிப்படைத் தேவை களையாவது நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலட்சிய சமுதாயத்தைக் காண வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்த அரசு பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையிலேதான் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையிலே தொழி லாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத் தில் அநியாயமாக 15 தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார்கள் என்பதற்காக, பழி வாங்கப்பட்ட காரணத்தினால்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 15 தொழிலாளர்களை நீங்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்பதாக ஆலோசனைகளை வழங் கினார்கள். தகாரறுக்குரிய குற்றச்சாட்டுகள் இன்னின்ன என்று சொல்லக் கூடிய அளவிலே உள்ள 5 தொழிலாளர்கள் பிரச்சனையைக் குறித்து முறைப் படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டார்கள், முன்னின்று நடத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக பழி வாங் கப்பட்ட 15 தொழிலாளர்களை நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவார்கள், சுமுகமான நிலைமை ஏற் படுமென்று சொன்னார்கள்.



1975 ஏப்ரல் 4] [திரு. மா. வே. நாராயணசாமி]

ஆனால், அந்த சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகம் எந்த அளவிற்குப் பிரச் சனையை வளர்த்தார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்காகவே நாங்கள் உழைக்கிறோம் என்று சொல்லிய, சொல்லி வரக் கூடிய கட்சிகள் கூட இந்தப் பிரச்சினையிலே தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்காமல் சி.எம்.சி. மருத்துவ மனை நிர்வாகத்திற்கு ஆதரவாகவே சட்ட மன்றத்தில் குரல் எழுப்பிய வேதனை யையும் கண்டோம். தொழிற்சங்க இயக்கத்தில் பல ஆண்டுக்காலம் பணியாற் றியவர்களைக் காண்கிறோம். சாதாரணமாக ஒரு தொழிலாளியை நீக்கவேண்டு மானால் அதற்கு சில அடிப்படை முறைகள் இருக்கின்றன. சி.எம்.சி. தொழில் தகராறு சட்டத்தின் கீழ் வருகிறதா இல்லையா என்பது பிரச்சனை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி: ஆகவே, அடிப்படை நியதிகள் இருக் கின்றன. யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு தொழி லாளி மீது ஒரு குற்றச்சாட்டு என்றால் இன்னின்ன குற்றச்சாட்டு என்று சொல்லி, அதற்கு விளக்கத்தைக் கேட்பார்கள். பர்ஸ்ட், ஷோ காஸ் நோட்டீஸ். அந்த விளக்கம் திருப்திகரமாகயில்லை என்றால், இன்னின்ன குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடைபெறும் என்று சொல்லுவார்கள். விசாரணை முடிவுற்ற பிறகு அந்தத் தொழிலாளி எந்தக் குற்றங்களுக்கு இலக்கானவர் என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, அந்த விசாரணையை நடத்தியவர் அதற்குப் பைண்டிங்ஸ் தந்த பிறகு இன்ன தண்டனை வழங்கலாமென்று முடிவு பண்ணி, குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது, இன்ன தண்டனை வழங்கியிருக்கிறோம், விளக்கம் தாருங்கள் என்று சொல்லுவார்கள். இது செகண்ட் ஷோ காஸ் நோட்டீஸ். இதுதான் அடிப்படை நியதிகள். பிரின்சிபிள்ஸ் ஆப் நாச்சுரல் ஜஸ்டிஸ். அந்தத் தொழிலாளிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரப் பட்டனவா என்றால் இல்லை.

ஆகையினால், நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமுகமான முறையில் பிரச்சினை தீர வேண்டுமென்பதற்காக அந்தத் தொழிலாளர்களை எடுத்துக் கொள் ளுங்கள் என்று சொன்னார். உள்ளபடியே ஒரு நாட்டின் முதலமைச்சர் போரா டுகின்ற தொழிலாளிகளுக்கு அவரே முன் வந்து ஒரு தீரம் மிக்க முடிவை எடுத்து, அடம் பிடிக்கக் கூடிய நிர்வாகத்திற்கு எப்படியும் நீங்கள் பின்பற்றி யாக வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்தக் கட்டத்தில் அனைத்துக் கட்சி களும், கட்சி வித்தியாசங்களை மறந்து, அந்த முதலமைச்சருக்குப் பின்னால், அவருடைய குரலை, அவர் கரத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் எல்லோரும் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் வேதனைமிக்க காட்சியைக் கண்டோம். அரசியல் ரீதியில் இதற்கு விமர்சனம் செய்தார்கள். தொழிற் சங்க ரீதியில் விமர்சனம் செய்யத் தவறி விட்டார்கள். ஆகையினால் நான்

ஹவுசிங் ஸ்கீம் ஃபார் இன்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ். இந்தத் திட்டம் தொழிற்சாலைகள், தொழிலாளிகள் இருக்கக்கூடிய இடங்களில் தீவிரமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் கூட தொழிலாளிகளுக்கு வீடுகளை கட்டித் தரும்போது மான்யமாக ஒரு தொகை வழங்கப்பட வேண்டும். சப்சிடி; சென்ட்ரல் அசிஸ்டென்ஸ், மத்திய அரசாங்கத்தின் உதவி அதற்கு நிச்சயம் தேவை. அதற்கென்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். மத்திய அரசு மான்யம் பெறக் கூடிய அளவில் அந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, எம்பிளாய்மெண்ட் ஆபீஸ்கள். அங்கு போதிய அளவுக்கு ஸ்டாஃப் இல்லை என்று சென்ற ஆண்டு குறிப்பிட்டேன். அதில் இன்னும் ஒன்றும் செய்ததாக இல்லை. குறிப்பாக நந்தனம் அலுவலகத்தில் எம்பிளாய்மெண்ட் ஆபீசில் அதிகமான வேலைக்கு ஈடாக அதிக ஸ்டாஃப் இல்லை. அவற்றை அரசு கவனித்து உடனடியாக அதைத் தீர்க்க வேண்டும். சென்ற முறை நம்முடைய தொழிலாளர் நல இலாக்கா அதிகாரிகளுக்கு எல்லாம் போக்குவரத்து வசதிக்கு கார்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டேன். இன்றைக்கு ஓரளவுக்கு அவர்களுக்கு கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையிலே இந்தக் குறைகளைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யக் கோரிக்கை மீது எனக்கு முன்னாலே இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் இந்த அரசு தொழிலாளிகளுக்காக ஏராளமான நன்மைகள் செய்தது என்ற பெயரில் அவருடைய பாணியில் சில விளக்கங்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவர் பேச்சைக் கேட்கும்போது அவர் தமிழ்நாட்டைப் பற்றி பேசுகிறாரா அல்லது வேறு எந்த மாநிலத்தைப் பற்றியாவது பேசுகிறாரா என்ற சந்தேகம் வரக்கூடிய அளவில் செயற்கையான வாதத்தை, சிரமத்தோடு எடுத்து வைத்தார். அவர் காட்டிய உதாரணமே வேலூர் மருத்துவமனை விவகாரம். அதிலே 15 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு இழந்த தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம், குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு வேலை வாய்ப்புத் தந்தார் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. மா. வே. நாராயணசாமி: நான் ஏதோ சிரமப்பட்டு சிலவற்றைச் சொன்னதாகவும், தமிழ்நாடு பற்றியதா என்ற சந்தேகம் கிளம்பக் கூடிய அளவில் இருந்தது என்றும் சொன்னார்கள். நேரமில்லை, அவர் உட்கார்ந்தால் 1 மணி





நேரம் நான் ஆதாரத்தோடு பல விளக்கங்களைத் தருவேன். இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்று விளக்க நான் அவசர அவசரமாகப் பேசி முடித்தேன். என்னிடத்தில் நிறைய விளக்கங்கள் இருக்கின்றன. தனியாக விளக்கி அவரை அந்த அளவுக்கு கன்வின்ஸ் செய்யத் தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: வேலூர் மருத்துவமனையில் வேலை இழந்த 15 தொழிலாளர்களுக்கு வேலை தந்ததாக இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அது நல்ல செயல். வெளிப்படையாகப் பார்க்கும்போது, வேலை இழந்த 15 பேருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தார்கள் என்று பார்க்கும்போது அருமையான செயல் என்று பாராட்டத் தோன்றும். ஆனால் ஒரு மோசமான நோக்கத்தோடு செய்யப் பட்ட நல்ல செயல் என்று எண்ணும்போது தற்காலிகமாக, நிமிர் விளம்பரத்திற்காக அரசாங்கம் செய்த வேலையே தவிர, தொழிலாளர்கள் மேல் எடுத்துக்கொண்ட அக்கறையினால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்குக் காட்டுகின்ற ஆர்வத்தால் செய்யவில்லை; தொழிலாளர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாகச் செய்யவில்லை; அரசாங்கத்தின் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலூர் மருத்துவமனை மட்டுமல்ல. இந்த விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று ஆளும் கட்சி பத்திரிகைகளும், பேச்சாளர்களும் அவர்களுடைய பிரச்சார இயந்திரத்தை முடுக்கிவிட்டார்கள். வேலூர் மருத்துவமனை விவகாரத்தில் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள்; எதிர்க்கட்சிகள் அந்த நிர்வாகத்தை ஆதரிக்கின்றன என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் இந்த நாட்டிலே இருப்பவர்கள் இதை ஒரு தொழிலாளர் பிரச்சனையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வேலூர் மருத்துவமனை விவகாரம் முடிந்துபோன ஒன்று. அது மட்டுமல்ல. அதற்கும் இந்தத் தொழிலாளர் நல மானியத்திற்கும் சம்பந்தமில்லை. அது ஐ.டி.-ஆக்டிலும் வராது இதிலும் வராது. அதனால் இந்த மானியத்தைப்பற்றி பேசினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அது இந்த மானியத்தில் வராது; அது தொழிலாளர் பிரச்னை அல்ல; தொழில் தகராறு சட்டத்தில் வராது என்பதை நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டதால் நான் இதைக் கூறினேன்.

திரு. மா. வெ. நாராயணசாமி: நானே பேசும்போது சொன்னேன். அந்த விவகாரம் தொழில் தகராறு சட்டத்தில் வராது என்றுதான் பேசினேன். அரசியலமைப்பில் சில விதிகள் இருக்கின்றன. Principles of natural justice இருக்கிறது. அந்த முறையில் சொன்னேன். தொழில் தகராறு சட்டத்தில் வரும் என்று சொல்லவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: அது தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமல்ல; எந்த விவகாரத்திலும் வராது என்று. ஆனாலும் கட்சி தொழிலாளர் [illegible] செய்வதுபோல் பேசியிட்ட ஒரு நடவடிக்கைதான் அது. இந்த ஆட்சிக்குத் தொழிலாளர்களிடம் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை நாம் அன்றாடம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த மாநிலத்திலே இருக்கின்ற பல உறுப்பினர்கள் தொழிலாளர் இயக்கத்தில் [illegible]. [illegible] அந்த வகையில் இந்தச் சர்க்கார் எந்த அளவுக்குத் தொழிலாளர்களுக்கு [illegible] இருக்கிறது என்பதை நான் அறிவேன். இந்த அரசாங்கம் [illegible] தொழிலாளர் [illegible] இல்லை என்று [illegible] தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் [illegible] இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு மாதத்திற்கு முன்னால் தொழிலாளர் நல அமைச்சர் விருதுநகருக்கு வந்தார். அங்கே ஒரு பஸ் கம்பெனி— [illegible] மோட்டார் கம்பெனி, இப்போது அதன் பெயரை மாற்றி சீனிவாசா டிரான்ஸ்போர்ட் என்று வைத்திருக்கிறார்கள்— [illegible] ஊழியர்களை வைத்திருக்கிறது; 5 பஸ் ரூட்டுகளில் பஸ் விட்டுக்கொண்டிருக்கிறது. [illegible] 'லே-ஆஃப்' செய்து 'குளோஷர்' என்று நோட்டீஸ் [illegible] யாக அறிவித்துத் தொழிலாளர்களை விட்டுவிட்டு [illegible] விட்டார்கள். அதனால் தொழிலாளர்கள் அங்கே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். [illegible] அமைச்சர் அவர்கள் பரிகாரம் காணவில்லை என்றாலும், தற்செயலாக விருதுநகருக்கு வந்தார்கள். அங்கே தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அங்கே வந்த அமைச்சர் [illegible] நடந்து கொண்டார் என்று சொல்லவில்லை.

The way of approach by the D.M.K. Government is like that. அவர் நடந்துகொண்ட முறையைப் பார்த்து, தொழிலாளர்மீது, தொழிலாளர் பிரச்னைபற்றி எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் என்பதை அன்றைய தினம் நானும் மக்களும் உணர்ந்துகொண்டோம்.



உண்ணாவிரதம் இருக்கிற தொழிலாளர்களை அமைச்சர் சந்திக்கவில்லை. சந்திக்க வேண்டுமென்ற [illegible] முன்னேற்றக் கழகத்தவர்களும் வற்புறுத்தவில்லை. அதைவிட முக்கியமான பிரச்னை எதையாவது தீர்க்கப் போனாரா என்றால் அதுவும் இல்லை. ஒரு பொருட்காட்சியை திறக்கப் போனார். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் [illegible] தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்று இருந்தால் இந்தப் பிரச்னையில் ஒரு முன் உதாரணத்தைக் காட்டியிருக்க முடியும். அந்த கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அந்த கம்பெனிக்கு விருதுநகர்-கோவில்பட்டியில் 5 ரூட்கள் இருக்கின்றன.

பி. ஆர். சி. என்ற பாண்டியன் ரோட்வேய்ஸ் கார்ப்பரேஷன் அங்கே இருக்கிறது. அது ஒரு அரசாங்க நிறுவனம். அந்த நிறுவனம் எந்த ரூட்டில் பார் பஸ் விட [illegible] உடனடியாக அந்த ரூட்டில் பஸ்ஸை ஓட்டும் சக்தி வாய்ந்தது. அப்படி இருந்தபோது அந்த அரசாங்க நிறுவனம் அதில் பஸ் விடவில்லை. அதற்கு மாறாக 2, 3 பஸ் முதலாளிகளுக்கு பஸ் ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

இரண்டு பர்மிட்டை அருப்புக்கோட்டை பஸ் முதலாளிக்குக் கொடுத்தார்கள். இராஜபாளையத்திலே ஒரு சீமான் இருக்கிறார். முன்னாள் தொழிலமைச்சர்—இன்றைய உணவு அமைச்சர்—மாதவனின் உயிர் நண்பர் அவர். ஜெயராமன் என்ற பஸ் முதலாளி அவர். அவருக்கு இரண்டு பர்மிட்டைக் கொடுத்தார்கள். இன்னொருவருக்கு ஒரு பர்மிட்டைக் கொடுத்தார்கள். இப்படி 5 ரூட்டுகளையும் பங்கு போட்டுக்கொண்டார்கள். ஏற்கனவே வேலை செய்த அந்தத் தொழிலாளர்களை விட்டுவிட்டு, அந்த பஸ் முதலாளிகளின் தொழிலாளர்களை வைத்து, பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது பகிரங்கமாக விருதுநகரில் நடைபெறுகிறது. தொழிலாளர் நல அமைச்சர் அங்கே வருகிறார். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கும்போது அந்த ரூட்டில் வேறு பஸ் எப்படிப் போகலாம்? வேறு தொழிலாளர்கள் எப்படிப் போகலாம்? ஏன் பி.ஆர்.சி. அந்த ரூட்டுகளில் பஸ் விடக்கூடாது? அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அமைச்சரவர்களுக்கு மனம் இருக்கிறதோ இல்லையோ இந்த அரசுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் நிச்சயமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் விருதுநகருக்கு கண்காட்சி திறக்கப்போனது உண்மை. ஆனால் இப்படிப்பட்ட உண்ணாவிரதம் இருக்கிற பிரச்னை எனக்குத் தெரியாது. எந்தப் பிரச்சனையும்

...க்கிறார். ஒரு மாதத்திற்கு மேலாக இந்த ஸ்ட்ரைக் நடந்திருக்கிறது. இதிலே லேபர் கமிஷனர், லேபர் டிபார்ட்மெண்டு எல்லாம் ஒரு மாத காலத்திற்கு ஏன் தலையிடவில்லை? போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களது ஆயாசத்தை ஆற்ற இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது இடையிலே ஜனவரி 10 ஆம் தேதி திருச்சியிலே தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த தி.மு.க. திரு. மூர்த்தி அவர்கள் தலைமையிலே ஒரு தீர்மானமே போட்டார்கள். நாங்கள் கன்சிலியேஷனுக்குத் தயார்; எந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் ஏற்பாடு செய்தாலும் நாங்கள் கலந்துகொள்ளத் தயார் என்று முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும் தீர்மானத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதற்கும் எந்த பதிலும் வரவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போகட்டும். ஆலைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக இந்தத் துறை அமைச்சர் அவர்களிடமும், அரசாங்கத்திடமும் இருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சர்க்கரை ஆலையைச் சேர்ந்த 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். 35 நாட்கள் போராட்டம் நடைபெறுகிறது. ... இந்தப் பிரச்சினையில் என்ன காரணத்தினால் அரசு தலையிடாமல் தாமதம் செய்தது? ஒரு தொழிலாளர் நல அரசாங்கமாக இருந்திருந்தால் 15 ஆயிரம் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இவ்வளவு தாமதம் காட்டியிருக்குமா? ஒரு பக்கம் கரும்பு காய்கிறது—விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மறுபக்கம் 15 ஆயிரம் தொழிலாளர்கள்—அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் 10 ஆம் தேதியே தீர்மானம் போட்டு கன்சிலியேஷனுக்கு நாங்கள் தயார் என்று அறிவித்திருக்கிறார்கள். ஏன் அரசாங்கம் தலையிடவில்லை?

"போய், போய் நான் பேச முடியுமா? அமைச்சர்களைத் தேடிப் போய்ப் பார்க்க முடியுமா?" என்று அமைச்சர் சொன்னார். உங்கள் லேபர் கமிஷனர் என்ன செய்கிறார்? டெபுடி கமிஷனர் என்ன செய்கிறார்? ... ஒரு சங்கம் வைக்கக் கூடிய அளவுக்கு ... அவர்களுக்குக் கொண்டிருக்கிறீர்களே, அந்த இலாகா என்ன செய்கிறது? அவர்கள் என்ன முயற்சி எடுத்துக்கொண்டார்கள்? இதுவரை தெரியவில்லை. அந்த





இலாக்காவின் மன்னர்களுக்குத் தொழிலாளர்களைத் தெரிவதைத் தவிர முதலாளிகளை மிக நன்றாகத் தெரியும். வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு மாத காலம் ஆகியும் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்கிறார்கள்.

இதற்குப் பின்னால் என்ன ஆயிற்று? திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களது முயற்சியின் காரணமாக அமைச்சர் அவர்கள் சமரசம் பேசினார்கள். அது தோல்வி அடைந்தது. இங்கே பெரிய தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். தொழிலாளர்களது விவகாரம் என்றால் கோர்ட்டுக்குப் போக வேண்டாம்—கோட்டைக்கு வந்தால் போதும். குளுகுளுவென்று முதலமைச்சர் அவர்கள் பேசிப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவார்கள். தொழிலாளர்கள் புன்னகையோடு திரும்புவார்கள் என்று சொன்னார்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் அல்லலுற்றுக்கொண்டிருந்த போது ஆளுகிற கட்சி என்ன செய்தது? முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள்? தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள்? மிகப் பயங்கரமான—முழு மோசடிதான் நடந்தது.

It is a total betrayal of the ruling party.

அங்கே தொழிற்சங்கத்தையே உடைப்பதற்கு சதித் திட்டத்தைத் தீட்டி இந்தப் பேரவையில் உறுப்பினராக இருக்கிற திரு. எம். செல்வராஜ் அவர்கள் பெயரைப் போட்டு தினத்தந்தி பத்திரிகையில் ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி அவர்கள்தான் அங்கே தலைவராக இருந்து—மற்ற கட்சி சங்கங்களுடன் ஒருங்கிணைந்து வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அருணா சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்டதாக ஒரு அறிவிப்பு செய்யப்படுகிறது. "அருணா சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஒரு வேண்டுகோள்—சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராஜ் அவர்கள் சமரசம் செய்து வைத்துவிட்ட காரணத்தினால்—அருணா சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் சங்கமும், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தைச் சார்ந்த ஊழியர்களும் 13—1—1975 முதல் வேலைக்குத் திரும்பிவிட்டோம். ஆலையில் அரவை 13—1—1975 முதல் ஆரம்பமாகிவிட்டது. இதுவரை வேலைக்குச் செல்லாத ஊழியர்களும், பணியாளர்கள் எல்லோரும் உடனே வேலைக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்று விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

உடனடியாகத் தீர்ந்துவிடாது. உடனடியாகத் தீர்வு காணவும் முடியாது. படிப்படியாகத்தான் அரசின் கவனத்திற்கு வந்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் தொலைபேசி மூலமாகக் கூட எனக்கு இந்த விபரத்தைச் சொல்லியிருக்கலாம். அப்படித் தெரிவித்திருந்தால், இப்படிப்பட்ட பிரச்சனை இருந்தால் உடனடியாக பரிகாரம் காண்பதற்கு கூட அல்ல, என்ன பிரச்சனை என்று விசாரித்துவிட்டு வந்திருக்கலாம்.

திடீரென்று நான் போகிற பாதையில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கலாம். அவ்வளவும் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. கன்னியாகுமரிக்கு நான் போய்க்கொண்டிருக்கிறேன். வழியிலே 10 சம்பவங்கள் இருக்கும். போகிற இடங்களில் எல்லாம் என்னென்ன இருக்கிறது என்று தெரிந்துகொண்டு போக முடியாது. சூழ்நிலைகளை உணர்ந்து குற்றச்சாட்டுகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : very sorry, Mr. Deputy Speaker, the Hon. Minister seems to be offended. நான் அன்றையதினம் அமைச்சரை அங்கே சந்திப்பதற்குள்ள சூழ்நிலை இல்லை. அவர்களுடைய கட்சிக்காரர்கள் நிறைய சூழ்ந்துகொண்டிருப்பார்கள். எனக்குத் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்னேன். நண்பர் சுப்பு அவர்கள் இந்தப் பிரச்சனைப்பற்றி அமைச்சரிடம் பேசியதாக கேள்விப்பட்டேன். அமைச்சர் நினைத்திருந்தால் இந்தப் பிரச்சனையை 20 நிமிடங்களில் தீர்த்திருக்கலாம். தனியார்களுக்கு அந்த ரூட்டுகளைக் கொடுத்ததை கான்சல் செய்திருக்கலாம். ஆர்.டி.ஓ.-வைக் கூப்பிட்டு டெம்பரரி பெர்மிட் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கலாம். பி.ஆர்.சி.யைக் கூப்பிட்டு, அந்த ரூட்டுகளில் பஸ் விடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சரவர்கள் அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சரை அப்படி முயற்சி எடுத்துக்கொள்ள அங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் வட்டச் செயலாளர்களும் விட்டிருக்க மாட்டார்கள்; அவர்கள் எல்லாம் பூர்ஷ்வா மனப்பான்மையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பூர்ஷ்வா மனப்பான்மையோடு இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்லிக்கொள்வதை வைத்துச் சகோதரர் அவர்கள்தான் திருத்திக்கொள்ள வேண்டுமே அல்லாமல் திருத்திக்கொள்ள வேண்டியவன் நான் அல்ல. இன்றைக்கு அப்படி ஒரு நிலைமை வளர்ந்திருக்கிறது. இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். ஒவ்வொரு தொகுதியிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் தொழிலாளர்களோடு உறவு கொண்டு இந்த மாதிரி பிரச்சினைகளில் தலையிட்டு அரசாங்க நிர்வாகத்தை முதலாளி நிர்வாகம் கெடுக்க முடியாது என்ற நிலை இருந்தால் நிச்சயமாக இவ்வளவு விவகாரங்கள் வந்திருக்காது. சிம்சன் போன்ற விவகாரங்கள் நிச்சயமாக வந்திருக்காது. இப்படிப்பட்ட விவகாரங்களை இந்தச் சர்க்கார் சந்தித்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த மனப்பான்மை இன்று முதலமைச்சரிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசி உறுப்பினர் வரை நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறோம். நான் சொன்னது ஒரு சின்ன உதாரணம்.

(மாலை 5-30)

இன்றைக்கு நம்முடைய ஆறுமுகம் அவர்கள் இவ்வளவு வருத்தப்படுகிறார்கள். சர்க்கரை ஆலை வேலை நிறுத்தப் பிரச்சினையில் என்ன ஆயிற்று? அமைச்சர் அவர்கள் கூட பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடந்தது 20-ஆம் தேதி. வேலை நிறுத்தம் ஆரம்பமாகப் போகிறது. எனக்கு 3 நாட்கள் டைம் கொடுங்கள், சமரசப் பேச்சை தொடர்ந்து ஒரு நல்ல முடிவு காணலாம் என்றார். 23-ஆம் தேதி ஆன பிறகும் சமரசம் வரவில்லை. ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஒரு சமரசம் செய்து வைக்க முடியாத காரணத்தினால்—7 சர்க்கரை ஆலைகள் அரசாங்கத்தின் சர்க்கரை ஆலைகள்—9 சர்க்கரை ஆலைகள் தனியார் ஆலைகள்—இந்த 7 அரசாங்கக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றவற்றுக்கு முன்மாதிரியாக இருந்திருந்தால் கூட மற்ற தனியார் சர்க்கரை ஆலைகளிலும் ஒரு சமரசம் ஏற்பட உதவியாக இருந்திருக்கும். அவர்களும் பயப்படக்கூடும். ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியுற்று—வேலை நிறுத்தம் 23-ஆம் தேதி தொடங்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பங்கேற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற தொழிலாளர் சங்கத்திற்கு திரு. மூர்த்தி

இன்னும் அதில் பிரட்டலும் அடங்கியிருக்கிறது. "காலம் தாழ்த்தாமல் வேலைக்குத் திரும்புங்கள். எதிர்காலத்தில் நிர்வாகம் உங்களை வேலை நிறுத்தம் காரணமாக பழிவாங்காமல் பார்த்துக்கொள்கிறோம்" என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

**திரு. எம். செல்வராஜ்:** மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் தொழிலாளர் களுக்கு விரோதமாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுகிறது என்கிற ஒரு எண்ணம் தொனிக்கிற வகையில் இங்கே சொன்னார்கள்.

ஏற்கனவே சர்க்கரை ஆலை சம்பந்தமாக—அந்தத் தொழிலாளர்களும்—நிர்வாகமும் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னைத் தலையிட்டு ஒரு சமரசம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்ட காரணத்தினால்—அதுவும் முதலில் நடத்திய சமரசம் தோல்வி அடைந்து ஏறத்தாழ 1 மாத காலத்திற்கு மேல் வேலைநிறுத்தம் நீடித்துச் சென்றுவிட்டது என்ற பிறகு—நான் தலையிட்டு ஒரு சமாச முடிவு அருணா ஆலை சம்பந்தமாக ஏற்பட்டது. அதைத் தொழி லாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதோடு அறிவித்ததைவிட இரண்டு மூன்று சலுகைகள் அதிகமாகத் தொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்து நல்ல முறையில் அந்த ஆலை இன்றைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழி லாளர்களில் யாரும் பழிவாங்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** மிக நீண்ட நேரமாக இருக்கிற காலத்தில் சிறு சிறு விவசாயிகள் எல்லாம் கரும்பு காய அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன—ரொம்ப விசித்திரமான வாதம்—15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு—கதவடைப்பு செய்யப்படுகிற நேரத்தில் தொகுதி எம்.எல்.ஏ. என்று எந்தப் பரிவும் அக்கறையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை—ஒரு மாதத்திற்குமேல் போராட்டம் நீடிக்கிறபோது தொழிலாளர்களது இணைப்பை உடைக்க சதி நடக்கிறது. தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்கிற முறையில் அருணா ஆலை சம்பந்தமாக எண்ணிப் பார்த்து அறிக்கை தருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி—அங்கே வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிப்புச் செய்திருக்கிற நேரத்திலேயே இவர் இங்கே இதுபோல அறிக்கை கொடுக்கிறார். கட்சி அவர்மீது எடுத்த நடவடிக்கை என்ன?



தி.மு.க. தொழிற்சங்கத்தின் சார்பில் சத்தியா ஸ்டுடியோ கதாநாயகன் ரங்கசாமி—காட்டூர் கோபால் ஆகியவர்கள் அங்கே சக்தி சர்க்கரை ஆலை சம் பந்தமாக சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடுகிறார்கள். ரெங்கசாமி இண்டர்நேஷனல் தொழிற்சங்கத் தலைவர்—கட்சி என்கிற குறுகிய மனப் பான்மை கிடையாது—இங்கே தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட் டம் நடத்திக்கொண்டிருக்கிற போது அங்கே சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கையெழுத்திடப்படுகிறது.

**திரு. எம். செல்வராஜ்:** தோழர் மூர்த்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நீக்கி வைத்த பிறகுதான் இந்த உடன்பாடு ஏற்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலையில் காட்டூர் கோபால் கையெழுத் திடலாமா என்கிறார். தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எதை எதை கேட்டார்களோ அதை அந்த நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. உடனே அந்த ஆலைத் தொழிலாளர்களும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தொழிலாளர் களுக்கு விரோதமான முறையில் அங்கே ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப் படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் திரா விட முன்னேற்றக் கழக தொழிற்சங்கச் செயலாளராக இருந்தவர். தனக்குச் சம்பந்தம் இல்லாத துறையில் ரொம்ப நாளாக இருந்தவர்—அதை வெளிப் படுத்திக்கொண்டு விட்டார். அங்கே 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் களது கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குப் போய்விட்டார்கள். அங்கே சமரசம் ஏற்பட்டு விட்ட பின் அதில் கையெழுத்திடுவதில் என்ன இருக்கிறது என்று தெரிய வில்லை. எனக்கும் தொழிற்சங்கத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றிச் சொன் னார்கள். நிறைய சம்பந்தம் இருக்கிறது. நான் பல தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தியும் இருக்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** திரு. வீராசாமி அவர்கள் அவருடைய வாதத் திற்காக அவரே எதிராக . . . .

சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, தனிப்பட்டு எப்படி நடந்துகொண்டு போனார் என்று சொல்ல ஆரம்பித்தால், அது எங்கோ போகும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் தனிப்பட்ட எந்தத் தொழிற்சங்கத் தலைவர் மீதும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. கன்சிலியேஷன் பேசும்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் விசாரித்துவிட்டுத் தான் தீர்ப்பளிக்கிறோம். அவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகத்தான் தீர்ப்பளித்திருக்கிறேன். அதைமட்டும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அமைச்சரவர்கள் முயற்சியைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அவர்கள் கேட்டது—கொடுத்தது வேறு விவகாரம். ஆனால் அந்தப் போராட்டத்தை உடைக்க காட்டூர் கோபால், சர்வகட்சியின் ஒரு தலைவர் ரங்கசாமி என்பவர்—ஊருக்கு ஊர் போய் போராட்டத்தை உடைத்தது நோக்கத்தக்கது. . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரங்கசாமி ஒன்றும் சர்வகட்சித் தலைவர் இல்லை.

He is an I.N.T.U.C. Labour Leader. He belongs to Indian National Trade Union Congress.

அது சரியாகத் தெரியவில்லை . . . .

**திரு. கு. காமாட்சி :** ரங்கசாமி ஏதோ சத்தியா ஸ்டுடியோ நாடகத்திலே நடித்த கதாநாயகன் என்று சொன்னார். இப்பொழுது அம்மையார் ஐ.என்.டி.யு.சி லேபர் லீடர் என்கிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை அவர் . . .

**திரு. பெ. சீனிவாசன் :** காமாட்சி அவர்களுக்குப் புரிய வைக்கக் கூடிய சக்தி எனக்கும் இல்லை. யாராலும் புரிய வைக்கமுடியாது. உங்களுக்குப் புரிய வைப்பது ரொம்ப சிரமம்.

தொழிலாளர் பிரச்னையில் ஒரு தொழிற்சங்கம் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால், தொழிலாளர்களுக்கான நியாயமான காரணங்களை அணுகாமல் இந்த அரசாங்கம் செய்கிறது என்ற காரணத்தால்தான் இதனை மீண்டும் மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு ஆலங்குளம் சிமெண்ட் ஃபாக்டரியிலே ஸ்டிரைக் நடந்தது. அந்த ஸ்டிரைக்கை ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பு அவர்கள் நல்ல விதத்திலே உதவி செய்து நடத்திவைத்தார். அரசாங்கம் எந்த அளவு பிரச்னையைத் தீர்க்கத்



தவறியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். முன்னால் இருந்த தொழிலமைச்சருக்கு வேண்டிய அசிஸ்டென்ட் டைரக்டரோ, யாரோ அங்கே இருக்கிறார். அவருடைய 'விம்ஸ் அன்ட் ஃபான்ஸி' க்காக, பிரச்னை தீர்க்கப் படாமல், அங்கே போராட்டம் நடந்தது. அந்த அளவுக்கு இந்த அரசு தொழிலாளர் நல அரசே இல்லையென்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சொந்த அனுபவத்தையே கூறுகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபொழுது—பேரறிஞர் அண்ணா இருந்த பொழுதும் அந்த அநியாயம் நடந்தது. நான் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்தினேன். அங்கே, துலுக்கப்பட்டியில் போராட்டம் நடத்தினேன். ஒரு துரும்புக்குக்கூட சேதமில்லை. 10,000 பேர் போராட்டம் நடத்தினோம். எல்லோரும் ஆதரவாக இருந்தார்கள். எல்லா கட்சிகளும் சேர்ந்து நாங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். ஆனால் திடீரென்று என்னைக் கைது செய்தார்கள். நான் சென்னைக்கு வந்தவுடன் அண்ணா அவர்களைப் பார்த்து, என்னைக் கைது செய்தது உங்களுக்கு முன்னாலே தெரியுமா, பின்னாலே தெரியுமா என்று கேட்டேன். அண்ணா அவர்கள், எனக்குப் பின்னால்தான் தெரியும். அதோடு விட்டுவிடு, அதற்கு மேல் கேட்காதே என்றார்கள் . . . (திரு. வீராசாமி குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** சார், அவர் யீல்டாகிவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள், சீனிவாசன்.

**திரு. கு. காமாட்சி :** அவர்தான் யீல்டாகிவிட்டாரே. இரண்டு பேரும் யீல்டாகிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் இரண்டுபேரும் யீல்டு ஆகிறார்கள்—அவர் யீல்டாகிறார் என்றால் நான் எதற்காக இருக்கிறேன்?

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வீராசாமி அவர்களுக்கு அந்த நேரத்திலே நடந்திருப்பது தெரிந்திருக்காது. அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரி என்பது எனக்குத் தெரியாதா? அண்ணா அவர்கள் போலீஸ் மந்திரியாக இருக்கும்போது, ஆளுங்கட்சி உறுப்பினரை, தொழிற்சங்கத் தலைவரை கைது செய்தார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், என் மேல்

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயோ எடுத்துக் கொண்டு போகிற காரணத்தாலே குறுக்கிடுகிறேன். கடைசியிலே விளக்கம் சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் இந்தச் சர்க்கரை ஆலைப் பிரச்னையைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே பேசினார்கள். அது ஆண்டி-லேபர் பாலிசி என்று சொன்னார்கள். நான் இப்பொழுது ஆண்டி-லேபர் பாலிசி என்பதற்குப் பொருள் விளங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி—இலாகாவைப் பற்றி குற்றச்சாட்டு. அந்த இலாகாவிலே இருப்பவர்களுக்கு முதலாளிகளைத் தெரிகிற அளவுக்குத் தொழிலாளர்களைத் தெரியவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள். ரொம்பக் கடுமையான குற்றச்சாட்டு. தொழிற்சங்கத் தலைவர் யாரும் சொல்லாத குற்றச்சாட்டு. அந்த இலாகாமீது அப்படிப்பட்ட களங்கம் இது வரையில் வரவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைப் பிரச்னையிலே வேலை நிறுத்தம் நடந்தது என்று கூப்பிட்டுப் பேசவில்லையென்று திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். சர்க்கரை ஆலைப் பிரச்னையில் உட்கார்ந்து பேசினோம். உத்தரப் பிரதேசத்தில், முதலமைச்சர் பகுகுணா பேசினார். இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் பேசினார். அவர் ரூ. 305 தந்தார். தேவராஜ் அர்ஸ் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ரூ. 306 தந்தார்கள். நாங்கள், தொழிலாளர்களுக்கு எதிராக நடத்துகிற அரசாட்சியில் ரூ. 325 தந்தது குறைபாடே தவிர, எனக்குத் தனிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலே நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்களிடத்திலே பேசிவிட்டு, எதிர்பார்க்காத தொகையைத் தந்தேன். அவர்கள் எதிர்பாராதத் தொகையைத் தந்தவுடனே எங்கே தங்களுக்குத் தொழிற்சங்கத்திலிருக்கிற பிடிப்பு போய்விடுமோ என்று சில தவறுகள் நடத்தினார்கள். அவற்றையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்ல விரும்பவில்லை. தொழிற்சங்கம் நல்ல நோக்கத்தோடு நடக்க வேண்டுமென்பதால், அதைச் சொல்லவில்லை. ரூ. 325-க்கு மேல் யார் தந்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம். நீங்களே சொல்கிறீர்கள், மெஜாரிட்டி செய்வதால் எல்லாம் சரியாகிவிடுமா என்று கேட்கிறீர்கள்? மைனாரிட்டிக்குப் பாதகமா இல்லையா என்று கேட்கிறீர்கள். அரசாங்கம் செய்தது நியாயமான தீர்ப்பு அல்லவா? தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு சர்க்கரை ஆலைப் பிரச்னையில் எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லுங்கள். தனியாக வேண்டுமானால், உங்கள் தலைவர்களைக்



கூப்பிட்டுப் பேசிப் பாருங்கள், முதலாளிகள் எங்களிடத்தில் வேதனைப் பட்டார்கள்.

**திரு பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, நான் சொல்கிற கோணத்தை விட்டுவிட்டு, வேறு கோணத்தில் பேசுகிறார்கள். அவர்கள் கேட்டது ரூ. 425. நீங்கள் ரூ. 325 கொடுத்தீர்கள். இதிலே, நீங்கள் ஒப்புக் கொண்டீர்களா இல்லையா என்பது வேறு. நீங்கள் மெஜாரிட்டி தொழிலாளர்கள் சொல்வதைக் கேட்கவில்லை. 11 தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்கவில்லை. மூர்த்தி சொல்வதை அரசு கேட்கவில்லை. மைனாரிட்டி தொழிற்சங்கங்கள் சொல்வதைக் கேட்டு, ஊருக்கு ஊர் அறிக்கை கொடுக்கிறீர்கள். ஒழுங்காக வேலைக்குப் போகாவிட்டால், நாளையதினம் பழிவாங்கப்படுவீர்கள் என்கிற பாவனையை அளிப்பதாகாதா உங்களது அறிக்கை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** மூர்த்தி அவர்கள் என்னுடைய ஊரைச் சேர்ந்த புகளூர் சேர்ந்தவர்தான். தமிழ்நாட்டிலே என்னுடைய ஊரைச் சேர்ந்த புகளூர் ஆலைதான் மாதக் கணக்கிலே மூடிக் கிடந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரிலேயிருந்த மில்லும் என்னுடைய ஊரிலேயிருந்த மில்லும் மூடியிருந்ததால், பேச வேண்டியிருந்தது. திரு. கிருஷ்ணமூர்த்தி ஊரில் உள்ள மில் நீண்ட நாளைய மில். அவர்கள் தன்மைக்கு ஏற்ப பேசினார்கள். என்னுடைய ஊரில் டெக்கான் ஷுகர் மில்—அதனுடைய தன்மைக்கு ஏற்ப, அமைச்சர் சொல்வதற்காக ஸ்டிரைக் செய்து வந்தார்கள். அதாவது, அமைச்சர் பெரியவரா, மூர்த்தி பெரியவரா என்ற தனித் தன்மையைக் காண்பிக்க, போராட்டம் தங்கள் பலத்தைக் காண்பித்தார்களேயொழிய, தொழிலாளர் தொழிலாளர் நடக்கவில்லை. அதனால்தான் கரும்பு உற்பத்தி செய்கிற தொழிலாளர் என்றால், ஒவ்வொருவருக்கும் 20 டன் குறைந்திருக்கிறது. தொழிலாளர் நண்பர் சீனிவாசன் பார்வை ஒரு தரப்பினரை மட்டும் நமது அ.தி.மு.க. பார்க்கிறார்கள். கரும்பு வைத்திருக்கிற தொழிலாளர் பிரச்னையை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களுடைய உண்மை நிலையைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அந்த விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை. சர்க்கரை ஆலையிலே ஒரு போராட்டம் நடக்கிறபொழுது தனிப்பட்டவர்களையோ தொழிற்சங்கத் தலைவர்களையோ அல்லது தனிப்பட்டவர்களையோ சொல்ல ஆரம்பித்தால்—இதிலே நடந்த விஷயம் பற்றி எங்களுக்கு ஒரு கருத்து இருக்கும்—முடிவில்லாமல் போகும். அதையெல்லாம் ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியிலே வைத்துக்கொள்ளலாம். இங்கு அவர் ஒரு கருத்து

[திரு. பெ. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 4

என்ன குற்றம் சாட்டினார்கள்? பல குற்றச்சாட்டுக்கள். பெண்களைக் கடத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியை தீ வைத்துக் கொளுத்த முயற்சி செய்தார், ஃபாக்டரியிலிருந்த காஷ் பாக்ஸை எடுக்க முயற்சி செய்தார் என்றெல்லாம் பல செக்ஷன்களைப் போட்டார்கள். மாதவனுக்குத் தெரிந்துதான் கைது செய்தார்கள். நான், இங்கு வந்து அண்ணாவுடன் தீவிரமாக வாதாடினேன். அண்ணா அவர்கள் தலையிட்டு சமரசம் செய்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அரசாங்கம், கலைஞர் அவர்கள் தலைமையிலேயிருக்கிற அரசாங்கம் முழுக்க முழுக்க பூர்ஷ்வா முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றே ஒன்று, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒன்று ஒன்று என்றால், இரவு 10.00 மணியாகும். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** 5, 6 பேர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசிக்கொண்டே போனால் முடிவதற்கு ராத்திரி பத்து மணியாகிவிடும்.

**திரு. பெ. சீனிவாசன் :** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இண்டியா மீட்டர்ஸ்பற்றி இங்கே கே.டி.கே. அவர்கள்கூடச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இடைக்கால நிவாரணம் தருவதாகச் சொன்னார்கள். தந்ததாகத் தெரியவில்லை. உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்கின்ற போது—இந்த ஸ்தாபனத்தை நடத்துகின்ற யாரோ சம் அய்யர் என்று நினைக்கிறேன், பெயர் ஞாபகமில்லை, ஆர். பி. ஐயர் என்கிறார்கள். அவரால் தான் இரண்டரை கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர் பிர்லாவினுடைய கையாள் என்றுகூடச் சொல்கிறார்கள்—டெல்லியிலே ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களே கூறுகிறார்கள்—ஆளுங்காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் அழைத்துக்கொண்டு அல்லது அவர்களை யாவது அனுப்பி அந்தத் தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்க்கவேண்டும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டும். அவர்கள் இப்போது எந்தக் கடையிலேயும் சாமான்கள் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். காரணம் 10 ரூபாய் ஷேர் 8 அணா மதிப்புக்கு வந்துவிட்டது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4]

***திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதித் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

வீட்டு வசதித் துறையிலே நம்முடைய தமிழகத்திலே மகத்தான சாதனையைப் புரிந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களுக்காகட்டும், நடுத்தர மக்களுக்காகட்டும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக இருக்கட்டும் சமுதாயத்திலே உள்ள அத்தனை பேர்களுக்கும் வீட்டு வசதித் துறையின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து வசதிகளைச் செய்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே கிராமப்புறங்களில் உள்ள மக்களை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். கிராமப்புறங்களிலே இப்போது வீட்டு வசதித் துறை செயல்படுகிறது. இருந்தாலும், மேலும் விரிவுபடுத்தவேண்டிய நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதி சங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஊராட்சிகளிலே உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குக் கடன்கள் கிடைத்து அவர்கள் வீடுகளைக் கட்டமுடியும். எங்கள் பகுதியிலே நீண்ட நாட்களாக ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேலூர் வட்டத்திலே உள்ள ஒடுகத்தூரிலே உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம். விரைவில் அதற்காக அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர் நல மானியத்திலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் தொழிலாளர் நிலை பற்றிப் பேசும்போது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தைப்பற்றி அதிகமாக இங்கே பேசினார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் எங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் 1 லட்சம் டன் கரும்பு அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்படுத்த எதிர்க் கட்சிக்காரர்கள் முயற்சிக்கக்கூடாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இதனால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

அதுவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே
அதிகமாக அவர்கள் கவனம் செலுத்தாமல் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நல்ல
நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்க வேண்டுகிறேன். அந்தப் பணியிலே அவர்கள்
ஈடுபட்டால் அவர்களை நாம் மனமாரப் பாராட்டமுடியும். ஆனால் அதை விட்டு
விட்டு காட்டூர் கோபால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம்
செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல.
வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படுவது விவசாயிகள், அன்னியச் செலாவணி
குறைகிறது என்ற இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அவர்கள் கருத்திலே
கொண்டு அப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவு அளிக்காமல்
இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றுக்கொண்டதற்குப்
பிறகு பல்வேறு தொழிலாளர்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைத்திருக்
கிறது. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றவை எவையென்று
அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பீடித் தொழிலா
ளர்கள் பிரச்னை, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னை, விவசாயத் தொழிலாளர்
கள் பிரச்னை இப்படிப் பல்வேறு பிரச்னைகளை நம்முடைய அரசு தீர்த்து வைத்து
இருக்கிறது. அதைப்போலவே மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே
அச்சுத் தொழிலாளர்கள், திரையரங்குகளிலே பணியாற்றுகின்ற தொழிலா
ளர்கள், வியாபாரக் கூடத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், கடைகளிலே
உள்ள தொழிலாளர்கள், மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம்
அரசு சட்டத்தின் மூலமாகக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் செய்யவேண்டு
மென்று சொல்லியதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய
தாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்திலே உள்ள பீடித் தொழிலாளர்களும் தோல்
பதனிடும் தொழிலாளர்களும் மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளார்கள்.
அவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம்
அறிவோம். நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு சட்டங்களைப்
போட்டு அவர்களுக்கு உதவி செய்தாலும் கூட அவர்கள் இன்னும்
கஷ்டப்படுகிற நிலைமையில்தான் இருக்கிறார்கள். இதிலே நம்முடைய அரசு
தனிக் கவனம் செலுத்தவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிலை
மிகவும் வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது, வட ஆர்க்காடு
மாவட்டத்தில் அந்தத் தொழிலாளர்கள் கணிசமான அளவிற்கு இருக்கி
றார்கள். தோல் பதனிடுகிற தொழிற்சாலைக்குள் நுழைந்து பார்த்தால்
நிச்சயமாக 5 நிமிடம்கூட நம்மால் இருக்கமுடியாது. அந்த அளவிற்கு



1975 ஏப்ரல் 4] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

நாற்றம் வீசும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அந்தத் தொழிலா
ளர்கள் பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய
அந்த முதலாளிகளோடு கலந்து பேசி நம்முடைய அரசு ஏற்பாடுகளைச்
செய்யவேண்டும்.

நம்முடைய அமைச்சர் . அவர்கள் தொழிலாளர் நலத்துறையோடு,
வீட்டுவசதித் துறையையும் சேர்த்து நிர்வகிக்கின்றார்கள். பீடித் தொழிலாளர்
களுக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி செய்து
கொடுக்கக்கூடிய முறையில் அந்த முதலாளிகளோடும் கலந்துபேசி ஏற்பாடு
களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிலிருந்து
மானியம் பெற்றுக்கூட இந்த வீட்டுவசதித் திட்டத்தை அவர்களுக்கு
ஏற்படுத்திக் கொடுக்கலாம். அங்கே இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்
களையும் தோல் பதனிடும் தொழிலாளர்களையும் யாருக்காவது சொந்தமாக
வீடு இருக்கிறதா என்று கேட்டுப் பார்த்தால் கிடையாது என்றுதான்
சொல்வார்கள். ஆகவே அந்த பீடித் தொழிலாளர்களுக்கும் தோல் பதனிடும்
தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன், அதைப்போன்று நெசவுத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.
அவர்களுக்கும் அந்த வசதியைச் செய்துகொடுக்கவேண்டும். பீடித் தொழி
லாளர் காலனி, தோல் பதனிடும் தொழிலாளர் காலனி, நெசவுத் தொழிலாளர்
காலனி என்ற முறைகளில் வீடுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சி.எம்.சி. பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் சட்டத்
திற்கு அது உட்படாவிட்டாலும் மனிதாபிமானத்தோடு நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதை நாம்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 15 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்
பட்டார்கள். அவர்கள் அல்லலுக்கு உள்ளாகாமல் அவர்களுக்கு வேலை
வாய்ப்பைக் கொடுத்து நம்முடைய அரசை எல்லோரும் பாராட்டுவார்கள்
என்று நம்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், சிம்சன்
முதலாளிகளும் ஆரூரான் தொழிற்சாலை முதலாளிகளும் வேலை நீக்கம்
செய்யப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி
அவர்கள் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்தே
நம்முடைய அரசு தொழிலாளர்களின் பிரச்னையில் எவ்வளவு அக்கறை
கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1975 ஏப்ரல் 4

சர்க்கரை ஆலைத் தொழில்பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் பேசினார்கள். சர்க்கரை ஆலை (Seasonal Industry) சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் 6 முதல் 8 மாத காலத்திற்குத்தான் வேலை கிடைக்கிறது. எஞ்சிய நாட்களுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை ஏதாவது ஒரு முறையிலே ஏற்படுத்தித் தரவேண்டும். வேலையில்லாத நாட்களுக்கு ஊதியமாக ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 50 சதவிகிதமும், செமி ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 25 சதவிகிதமும் அன்ஸ்கில்டு ஓர்க்கர்களாக இருந்தால் 10 சதவிகிதமும் தருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். அவர்களுக்குப் போதுமான ஊதியம் வேலையில்லாத நாட்களில் கிடைக்கக்கூடிய வகையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டும். சர்க்கரை ஆலை சீஸனல் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் இ.எஸ்.ஐ. திட்டத்தை அமுல்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.00)

அதைப்போல காட்டிலாக்கா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இது வரையிலும் அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைகளைச் செய்தும், அந்தப் பரிந்துரைகளை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டும், அதை இன்னும் அமலுக்கு கொண்டு வரவில்லை. அதை விரைவில் அமலுக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்டிலாக்காவில் கடைநிலை ஊழியர்கள், 'வாச்சர்கள்' நிரந்தரப் பணியாளர்களாக இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கடைநிலை ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்களை கெஜடெட் ஆபீசர்களாக அதாவது அரசுப் பதிவு அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக இருக்கிறது. அதையும் கவனத்திற்கொண்டு நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் சாலை ஆய்வாளர்களும், இதர ஊழியர்களும் பல ஆண்டுகாலமாக பணியாற்றினாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால் அவர்களுக்கு பென்ஷன் போன்ற திட்டங்கள் இல்லை. ஆகவே, அவர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

குறிப்பாக நம்முடைய நாட்டிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதிலே மிக முக்கியமாக இருக்கக் கூடிய சர்க்கரைத் தொழிலிலும், தோல் தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அந்த அந்நியச் செலாவணியின் பலனைப் பெறுகின்ற மத்திய அரசிடமிருந்து அதிலே ஒரு பங்கையாவது நம்முடைய தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தர நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பாடுபட வேண்டும். அதற்காக மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மெத்தவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலே தொழிற்சங்கங்கள் எப்படியிருக்கின்றன என்றால் ஒரு எண்டர்பிரைசுக்கு ஒரு யூனிட் என்ற விதத்தில், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற விதத்தில் செயல்பட்டு வருகிறது. இதுதான் நம்முடைய அரசின் கொள்கை என்றாலும் இப்பொழுது ஒரே தொழிலில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருப்பதால் பல்வேறு தொழிலாளர் பிரச்னைகளுக்கு வழியேற்படுகிறது. அதையும் அரசு கவனத்திற்கொண்டு அத்தகைய ஒரு திட்டத்தை விரைவில் அமல் படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்பொழுது எந்தவிதமான வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவதில்லை. அதைப்போல ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்பொழுது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டிலே இரயில்வே தொழிலாளர்கள் ஸ்டிரைக்கே செய்ய முடியாதாம். 'கோ ஸ்லோ' (Go Slow) என்ற விதத்தில்தான் வேலைநிறுத்தம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய நாட்டிலேயும் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளிலேயெல்லாம் அங்கேயுள்ள பிரச்னை, 55 வயதில் இருப்பவர்கள் 60 வயது வரையில் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்கு இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளிலே வாரத்திலே 5 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் பிரச்னையாக இருக்கிறது. இப்படிப்பட்ட மிகவும் குறைந்த பிரச்னைதான் ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலே இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் பிரச்னைகள் பல இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளில், குறிப்பாக நான் பேசிய பிரச்னைகள்

சிலவற்றைக் கவனத்திற்கொண்டு அமைச்சரவர்கள் அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொண்டு, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கட்சியின் சார்பிலேயும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் பேரி லேயும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி, தொழிலாளர் நலனோடு சமுதாயத்தின் நலனும் பிணைந்திருப்பதால் இந்தத் தொழிலிலே இருக்கிற இலாக்காவிலே சுறுசுறுப்பான நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதிலே அவசியமிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ஒவ்வொரு ஆண்டும் நாம் கணக்குப் பார்த்தால் கதவடைப்புகள் அதிகமாக அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்கள் அதிக வேலை நாட்களை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறி அமைச்சரவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், 1974 ஆம் ஆண்டில் 316 தொழில்கள் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறப் படுகிறது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற வாய்ப்பை அதிகமாக உண்டாக்க வேண்டும். அதன்மூலம் பிரச்னை களுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அது எந்த நிலையிலிருக்கிறது? கிட்டத்தட்ட 44 இலட்சம் நாட்கள் வேலையிழப்புக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அந்த இலாகா கண்டு பிடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படியே போவதன் மூலம் சமாதானங்கள் சொல்வதின்மூலம் நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இன்றைக்கு நமது நிலைமைகள் முறைப்படியே முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம் என்னவென்றால், தொழில் முதலாளிகளின் வெறும் வறட்டுக் கௌரவத்தினாலேயே 75 சதவிகிதம் கதவடைப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதைச் சொல்லிக்



கொண்டே வருகிறோம். காரணம் என்னவென்று கேட்டால் இவ்வளவு முன்னேற்றமடைந்த பிறகும்கூட, இவ்வளவு தொழிற்சங்க இயக்கங்கள் நடந்து, போராட்டங்கள் நடந்து, தொழிலாளர்கள் உரிமைகளை பெற்ற பிறகும் கூட இன்னும் பல தொழிற்சாலைகளில் பெரிய முதலாளிகள், செல்வாக்கு பெற்றவர்கள் இன்னும் அந்தத் தொழிலாளர்களுடைய நியாய மான கஷ்டங்களை உணர மறுக்கிறார்கள். காரணம், அவர்களுடைய வறட்டுப் பிடிவாதம்தான்.

உண்மையிலேயே தொழில் தகராறுகளைப் பார்த்தால் நியாயமான உடன் பாடுகூட பல நாட்களுக்குப் பிறகுதான் வரும் நிலைமையிருக்கிறது. அந்த உடன்பாட்டிற்கு முதலிலேயே முயற்சியெடுக்கப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அப்படி வருவதில்லை. நம்முடைய இலாக்காவும், முதலாளிகளும் தொழிலாளர்களும் சலித்து ஓய்ந்த பிறகுதான் ஒரு முடிவிற்கு வருகிறார்களே தவிர இதற்கு முன் நியாயமான முடிவைக் காண முன் வருவதில்லை. எனவே, இதிலே சில முடிவுகளைக் கான நம்முடைய இலாக்கா சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.சி.எல்., டி.சி.எல்., ஆகியோருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்படு கிறது? இரண்டுபேரும் சொன்னால் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு வந்தால் தான் முடிவு சொல்ல முடியும். அவராகவே முடிவெடுத்து அந்த முடிவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும். இதுதான் நியாயம் என்று எடுத்துச் சொல்லும் அளவிற்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கில்லை. இரண்டாவதாக, மேனேஜ்மெண்ட் தரப்பிலே பேச்சுவார்த்தைக்கு வருபவர்கள் அதிகாரம் இருப் பவர்கள் வருகிறார்களோ அல்லது அதிகாரம் இல்லாதவர்கள் வருகிறார்களோ தெரியவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கும்பொழுது கேட்டு விட்டு வருகிறேன், முதலாளியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லும் நிலையிருக்கிறது. இம்மாதிரி கூட்டுப்பேரம் நடத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை நிச்சயமாக மாற்ற சில அதிகாரங்களை லேபர் டிபார்ட்மெண்டுக்கு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டு உண்மையான நிலைமைகள் என்ன என்று கண்டுபிடித்து அவர்கள் செய்யும் முடிவுகளை அமலாக்க முதலாளிகளைக் கட்டுப் படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் முடியாது.

கோவை பஞ்சாலையில் போனஸ் பிரச்னை ஏற்பட்டு, முதலமைச்சரவர்கள் சொன்ன உடன்பாட்டின்படி, போனஸ் பிரச்னையிலே ஏதாவது சம்பவங்கள் நடந்திருந்தால் எந்தத் தொழிலாளியின் பேரிலேயும் நடவடிக்கை எடுக்கக்

கூடாது என்று முதலமைச்சரவர்கள் சொல்லி, அதை முதலாளிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரகாசா மில்லில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தீர்ப்பையும் மீறி இந்தப் பிரச்னையில் சிலரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். இதுபற்றி தொழில் இலாக்காவில் சொன்னால் அவர்கள் ஏ.சி.எல் நடுவர் தீர்ப்புக்கு விடலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரின் தீர்ப்பு ஆகி, எந்தத் தொழிலாளியையுமே டிஸ்மிஸ் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கும்பொழுது 6 தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் முதலாளிகள் பலம் பார்க்கிறார்களா? இப்படிப்பட்ட பிரச்னையில் வறட்டு கௌரவத்தின் காரணமாக இவ்வாறு இருக்கிறது, 3, 4 மாதங்களாக தொழில் இலாக்கா அதிகாரிகளும் தலையிடப் பயப்படுகிறார்கள், காரணம் என்னவென்று கேட்டால் செல்வாக்கு பெற்ற முதலாளி. செல்வாக்கு பெற்ற முதலாளி என்றால் எந்த முதலாளி என்று எங்களுக்குப் புரியவில்லை. பிரச்னை ஒன்றுதான், அதில் செல்வாக்கு பெற்றவர்கள், செல்வாக்கு பெறாதவர்கள் என்று இருக்க வேண்டுமா? ஒரே கருத்துதான், ஒரே பிரச்னைதான். அப்படியிருக்கும் பொழுதுகூட பயப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அலுமினியம் பேக்டரியில் திரு. சுரேந்திரன் அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்து படாதபாடு பட்டு தொழிற்சங்கமே இல்லாத அளவிற்கு ஆகிவிட்டது. இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு என்ன கூலி கொடுக்கிறார்கள்? எல்லா பேக்டரிகளிலேயும் சம்பள உயர்வு வருகிறது. ஆனால் அங்கே மட்டும் வரவில்லை. 300 ரூபாய்க்குக் குறைவாக அந்த பேக்டரியில் வேலை செய்கிறார்கள். அரசாங்கம் வேண்டுமளவு மின்சாரம் கொடுக்கிறது. ஆனால் இன்றைக்கு 'லே ஆஃப்' செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. எந்தவிதமான சம்பளமும் கிடையாது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தத் தொழிலாளர்கள் அழ வேண்டிய நிலைமையிருக்கிறது.

கார்ப்பரேஷனால் எடுக்கப்பட்ட ஆலைகளிலேயும் நிர்வாகத்தினர் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்த மறுக்கிறார்கள். உள்ளே இருக்கும் லோகல் தலைவர்கள் நிர்வாகிகளிடம் இப்பொழுது சொன்னால் 3 மாதம் கழித்துத்தான் அந்தப் பிரச்னையைப் பரிசீலனைக்கு எடுக்கிறார்கள். அது எப்பொழுது தீரும் என்று சொல்ல முடியாது.





இப்போது இரட்டைக் கொள்கை அமலாகியிருக்கிறது. கார்ப்பரேஷன் மில்களுக்கு ஒரு லேபர் ஆபீசர் நிர்வாகம். கார்ப்பரேஷன் அல்லாத தனியார் மில்களுக்கு ஒரு நிர்வாகம். சமீபத்தில் மத்திய சர்க்கார் எடுத்ததற்குப் பிறகு என்ன செய்கிறார்கள்? 15 நாளைக்கு ஒரு முறை பாக்டரி மேனேஜ்மென்டார்கள் வந்து கையெழுத்துப் போட்டுப் போகிறார்கள். வாச்மேனைக் கேட்டுப் பாருங்கள். எப்படி இந்த ஆலைகளை நிர்வகிக்கப் போகிறார்கள் என்று தெரியாது. பிரச்சினைகளை யாரிடத்தில் சொல்லுவது? லேபர் தகராறு வருமானால் தொழிற்சங்கத் தலைவர்கள் யாரிடத்தில் சென்று பேசுவது? எப்படி தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவது? இந்த நிலை நீடித்தால் உற்பத்தி எப்படி பெருகும்? சமுதாயத்தின் நலனை எப்படிப் பாதுகாக்க முடியும்?

இந்த மாதிரி இரட்டைக் கொள்கைத் தேவையில்லை. அரசாங்க ஆலைகளானாலும் சரி, தனி நபர்கள் ஆலைகளானாலும் சரி, லேபர் டிப்பார்ட்மென்ட் தலையிட அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் உற்பத்தி நஷ்டம் ஏற்படும். தேசவுடைமைக்கு விரோதமான கொள்கை கொண்டிருக்கும் தனி நபர்களுக்குச் சாதகமான நிலையை உண்டாக்கிவிடும். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது.

'லே ஆஃப்' செய்திருக்கிறார்கள். ஆறாயிரம் பர்மெனென்ட் தொழிலாளர்கள், டெம்பரரி தொழிலாளர்கள், ஆக பத்தாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வெட்டினால் எந்த வேலையும் கிடையாது. தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அமைச்சரிடமும், லேபர் டிபார்ட்மென்டிலும், திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிவிட்டோம். அவர்களுக்கு முழு நிவாரணம் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு வேறு தொழில்களுக்கு அவர்கள் செல்லவில்லை. அவர்கள் இந்தத் தொழிலையே நம்பியுள்ளமையால் என்ன செய்ய முடியும்? அவர்கள் எப்படி வாழ்வார்கள்? கோடிக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதித்தாலும் தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது. இதிலே அரசாங்கமும் முதலாளிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஃபாக்டரிகளில், குறிப்பாக பஞ்சாலைகளில் ஆக்சிடென்ட் நடக்கிறது. ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் வந்து பார்வையிடக் காலதாமதம் ஆகிறது. அவர்கள் பஸ்ஸில்தான் வரவேண்டும். இல்லாவிட்டால் முதலாளி காரில் வர வேண்டும். முதலாளி காரில் வந்தால் தொழிலாளி சத்தம் போடுகிறான். என்

அவர்களுக்கு வசதி பண்ணிக் கொடுக்கக்கூடாது? கவர் போட்டு மூடுவது கிடையாது. இந்தக் குறைகளை எல்லாம் அப்போதைக்கப்போது கண் காணித்துக் களைய முயற்சிக்கவேண்டும்

டவுனுக்குள்ளே குடியிருக்கும் தொழிலாளிக்கு மூன்று கிலோ அரிசி போடு கிறார்கள். கிராமத்திலிருந்து வந்து வேலை பார்த்துச் செல்லுகிற தொழி லாளிக்கு அந்த 3 கிலோ அரிசி கிடையாது. ஒரே ஸ்டோரில் ஏன் இந்த நிலை? ஒரே ஸ்டோரில் இரண்டு விதமான கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. கிராமத்தில் சோளம், ராகிதான் போடுகிறார்கள். அவன் அரிசி எப்படி வாங்குவது? அவர்களுடைய நிலையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையில் இதே பிரச்சினை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லாத் தொழிற்சங்கத்தையும் சேர்ந்த தொழிலாளர்களும் சேர்ந்து உணவு. அரிசி நியாய விலையில் போடவேண்டு மென்று கேட்டார்கள். அனைத்துச் சங்கம்—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம், எச்.எம்.எஸ்., ஏ.ஐ.டி.யு.சி. எல்லோரையும் தொழிலாளர் களுக்காக ரேஷன் கேட்ட காரணத்திற்காக கைது செய்து விட்டார்கள். மலையில் வாழ்பவர்களுக்கு வேறு வழி என்ன? அவர்களைக் கைது செய்திருக் கிறார்கள். அங்கிருந்து கடிதம் வருகிறது. தந்தியடிக்கிறார்கள். மலிவு விலையில் அங்கிருக்கும் முதலாளி அரிசி கொடுக்கவேண்டுமென்று அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் நிலை என்ன ஆவது?

சேரன்கோட்டில் கூடலூர் தாலுகாவில் இலங்கை அகதிகள் தேயிலை தோட்டத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கூலி 3 ரூபாய்; வேறு எஸ்டேட்டில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு 6 ரூபாய். மற்றவர்கள் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய். இவர்கள் பத்து கிலோ பறித்தாலும் 30 கிலோ பறித்தாலும் 3 ரூபாய்தான். ஒரே எஸ்டேட்டில் இந்த நிலை ஏன் இருக்கிறது? வெளியே இருந்து வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை நீடிக்கக் கூடாது.

வீட்டு வசதி, மற்ற வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள் எல்லாம் மிகவும் குறைவு. பாம்பு மற்ற துஷ்ட ஜந்துக்கள் எல்லாம் அவர்கள் வீட்டில்தான் இருக்கும். புதர்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அமைச்சர்கள் அந்த வீடு களை எல்லாம் சென்று பார்க்க வேண்டும். மாண்புமிகு ஓ. பி. ராமன் அவர்கள்





ஒரு முறை இந்தக் குடியிருப்புகளைப் பார்வையிட வந்தார். மேலே மேலே இருந்து பார்க்கக்கூடிய ஒரு வீட்டு லைனுக்கு மட்டும் வெள்ளை அடித்திருந் தார்கள். இந்த நிலை நீடிக்கக் கூடாது.

ஒருவனுக்கு சிக்கு என்றால் அவன் வைத்திய வசதி பெற ஆறு மைல் நடந்து செல்ல வேண்டும். பஸ் வசதி ஒன்றும் கிடையாது. அறிக்கையில் இந்த மலைவாழ் மக்களுக்காக என்னென்னவோ செய்வதாகக் குறிப்பிடப்பட் டிருந்தாலும் இதெல்லாம் அவர்களைப் போய்ச் சேருவதே கிடையாது. பணம் செலவழித்தால் மட்டும் போதாது, அது அவர்களை எட்டுகிறதா என்று கண் காணிக்க வேண்டும்.

சென்னையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் தொழிலாளர்கள் டி.ஏ. 18 பைசா கேட்கிறார்கள். லேபர் டிப்பார்ட்மெண்ட் வரை பேசியாயிற்று. தொழி லாளிக்கு 61 ரூபாய் டி.ஏ. கொடுங்கள் என்று கேட்டார்கள். முதலாளிகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். பிறகு 61 ரூபாய் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். லேபர் செக்ரடரி வரை பேசியாயிற்று. கமிஷன் பேசி யாயிற்று.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சதர்ன் ஸ்ட்ரக்சுரல் பிரச்சினை சுமூக மாக முடிந்து தற்போது வேலை நடந்து வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** அது விவரம் எனக்குத் தெரியாது. இதற்கு முன்னால் என்னிடம் புகார் சொன்னார்கள். எப்படி முடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

இந்தியா மீட்டர்ஸ் தொழிலாளர் பிரச்சினை என்னவாயிற்று? நமக்கு மீட்டர்கள் தேவை. நல்ல மீட்டர்கள் தயாரிக்கிறோம் என்று தொழிலா ளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் அதை மூடி வைத்திருக்கிறீர்கள்? அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டாமா?

பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966-ல் வந்தது. சுப்ரீம் கோர்ட் வரை முதலாளிகள் போனார்கள். அதை அமலுக்குக் கொண்டு வரலாம் என்று சொல்லிவிட்டார்கள். எத்தனை இடங்களில் அதை அமலாக்கியிருக்கிறார்கள்? பல பேர் இன்னும் திண்டாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டம் இருந்தும் ஏன் அமலாக்கப்படவில்லை?

காஸ்மாபாலிடன் கிளப் தொழிலாளர் பிரச்சினை. ஒரு ஆளுக்கு 42 வருஷம் சர்வீஸ். சம்பளம் மாதம் 180 ரூபாய். ஆங்கிலோ இந்தியன் லேடிக்கு—7 குழந்தைகள், 130 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு என்ன பண்ண முடியும்?

[திரு. கே. என். குமாரசாமி] [1975 ஏப்ரல் 4

இதைச் சொன்னால் சட்டம் கிடையாது என்று சொல்கிறார்கள். சட்டம் இல்லாவிட்டால் சாகவேண்டியதுதான். லாக் அவுட் செய்து விட்டு போய் விட்டார்கள். நாற்பது ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலை. எனவே, சட்டத்திற்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கு பாது காப்பு கொடுக்கவேண்டும். பல க்ளப்களில் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார் கள். ரூபாய் 300 வரை சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஜிம்கானா க்ளப்பில் கொடுத்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இப்படிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. சட்டத்திற்காக மனிதன் வாழவேண்டும் என்றால் வாழ முடியாது.

டால்மியா சிமெண்ட் தொழிலாளர்கள் ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருந் தார்கள். நெகோஸியேஷன் நடந்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 125 சதவீதம் அதிக உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு மின்சாரம் காரணமாக வேலை பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வாழ்க்கை நடத்த ஏதாவது நிவாரணம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலிவு விலையில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்கிறது என்று சொல்கிறீர்கள். அரசு 50 சதவீதம் மானியமும், 25 சதவீதம் முதலாளிகளும் கொடுத்து மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எந்த ஃபாக்டரி முதலாளிகளைக் கூப்பிட்டு இந்த மாதிரி தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது? ஒரு ஆலையில் கூட அமலாக்கப்படவில்லை. மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்றால் 25 சதவீதம் போடவேண்டுமே என்று முதலாளிகள் நினைப்பதால் அதைச் செய்யாது வைத்திருக்கிறார்கள். அதிகப் படியான லாபம் வரக்கூடிய முதலாளிகளிடமாவது இம்மாதிரி மலிவு விலை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமல் படுத்துங்கள் என்று எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும்.

இன்று சிங்காநல்லூரில் உள்ள லேபர் காலனியில் க்வார்ட்டர்ஸ் சுத்தப் படுத்தாமல் இருக்கிறது. லேட் போனால் அந்த ஆள் வாங்கி போடவேண்டும். 16 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு (வாடகை கொடுத்திருந்தால் அதைச் சொந்தமாக்கிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)



1975 ஏப்ரல் 4] [திரு. கே. என். குமாரசாமி]

அடுத்தபடியாக, சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 500 படுக்கை களுக்கு வசதி இருக்கிறது. அங்கு குடும்பம் முழுவதும் வைத்திய வசதி பெறுவதால் அங்கு இட நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது 300 படுக்கைதான் உள்ளன. அந்த ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். சோமனூரில் உள்ள வாடகைக் கட்டடத்திற்குப் பதிலாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். பல்லடம் சோமனூர் ஏரியாவில் உள்ள தொழிலாளர்களுக்கு குடும்ப இன்சூரன்ஸ் திட்டம் இல்லை. அவர்களுக்கும் குடும்ப இன்சூரன்ஸ் கொடுப்பதற்கு வகை செய்யவேண்டும். (மணியடிக்கப் பட்டது.)

ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் ஆபீசர்கள் அலுவலகம் கோவையில் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அங்கு மனிதன் போக முடியாது. ஒரு கோடியில் வைத்திருக்கிறார்கள். கலக்டர் ஆபீஸ், ஜெயிலில் காலி இடம் இருக் கிறது. அந்த இடத்தில் லேபர் டிப்பார்ட்மெண்ட் தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதிகாரிகள் வந்து தங்குவதற்கு ரெஸ்ட் ஹௌஸ் கட்டித் தரவேண்டும். எங்கெங்கேயோ அதிகாரிகள் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வசதிகள் செய்து கொடுத்து நல்லமுறையில் பணி வாங்க முயற்சிக்கவேண்டும்.

மத்தியஸ்தம் முறையில் ஏற்படுகிற கோளாறுகளைத் தீர்க்க முக்கூட்டுக் கமிட்டி போட்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தால் தொழில் தகராறுகள் குறையும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வாங்கிக் கொடுத்தது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி: தொழிலாளர் பிரச்னை குறித்து நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள்மீது அக்கறையில்லாத காரணத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர்கூட இல்லை. இதுகுறித்து தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையிலேயே சொன்னேன். அவர்கள் இருக்க வேண்டும், கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்கு அக் கறையில்லாவிட்டால் நான் என்ன செய்வது?

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு முன் பேசிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு. சீனிவாசன் அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திரு. குமாரசாமி அவர்களும் தங்கள் தங்கள கட்சிகளின் சார்பில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் பல்வேறு தொழிற்சங்கங்களில், குறிப்பாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய ஒரு பெரும் தலைவராவார். அதே போல் குமாரசாமி அவர்களும் ஒரு தொழிற்சங்கத் தலைவர்தான். அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கைக்காக பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிய நேரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக இன்றைக்கு அகில இந்தியாவில் வைத்தே எங்குமே பஞ்சாலைத் தொழிலாளர்கள் பெருத அளவிற்கு அதிகபட்சமான போனஸை வாங்கிக் கொடுத்தார்கள். அதற்காக யாராவது ஒருவராவது நன்றி தெரிவித்தார்களா என்றால் ஒருவர் கூட இந்த மன்றத்தில் அதைப்பற்றிப் பேசவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் நன்றி தெரிவித்தேன். போனஸ்க்காக நன்றி செலுத்தினேன். அப்படி நன்றி செலுத்தியதை இல்லை என்று சொன்னால் நன்றாகயிருக்காது.

**திரு. சு. துரைசாமி:** அடுத்து, இங்கு பேசிய எல்லாத் தலைவர்களின் பேச்சுக்களையும் கேட்டேன். மத்திய அரசின் கட்டாய டெப்பாஸிட் திட்டம் பற்றி இந்த மூன்று பேர்களில் ஒருவர் கூட கண்டித்துப் பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இன்று விலைவாசிகள் எல்லாம் பெருமளவிற்கு ஏறிவிட்டன என்று பேசுகிறார்கள். பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்று கேட்கிறோம். கொடுக்கப்படுகிற பஞ்சப்படி உயர்வும், சம்பள உயர்வும் தொழிலாளர்களின் கைகளுக்குப் போய் சேருவதில்லை. கட்டாய டெப்பாஸிட்டுக்கு சென்று விடுகிறது. இதைப்பற்றி தொழிலாளர் வர்க்கத்திற்காகப் பேசுகிற தலைவர்களில் ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லையே என்று வருத்தப் படுகிறேன்.





இந்த மன்றத்தில் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் அவர்களுக்கு இருக்கிற சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டினாரே தவிர தொழிலாளர்கள் மீது அக்கறையோடு பேசியதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு முன்னாள் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீது வருத்தம் இருக்கலாம். விருதுநகர் பஸ் கம்பனி முதலாளியோடு நம் அமைச்சர் அவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று பேசுகிறவர்—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகர் சென்றிருந்தார், அங்கு 33 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நிவாரணம் காண அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்று சொன்னார்கள். 21-ம் தேதியிலிருந்து அந்தக் கம்பனி கதவடைப்பு செய்யப்பட்டு அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அது கண்டிக்கத் தக்கதுதான். தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று சொல்வது நமது உரிமைதான். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன். அந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ 15 நாட்கள் இந்த மன்றம் நடைபெற்றிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாவது கொண்டுவந்து இந்த மன்றத்தில் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** உறுப்பினர் எப்படி தகவல் தெரியாமல் பேசுகிறார்? நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை என்று அவருக்கு எப்படித் தெரியும்? கொடுத்துவிட்டு நாள் தவறாமல் சபாநாயகர் அவர்களிடம் போய் கெஞ்சி, இரண்டு தடவை பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பி எக்ஸ்பிளனேஷன் எல்லாம் நடந்து. இவ்வளவும் நடந்திருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி சென்றிருக்கிறார்கள். சென்ற இடத்தில் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையே என்றுதான் எனக்கு வருத்தம்.

(மாலை 6-30)

இந்த அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாக, பூர்ஷ்வா மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். இந்த மன்றத்தில் நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிற்பாடு எந்த முதலாளிக்கு ஆதரவாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலாளிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தயவு செய்து தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் போனஸ் கோரிக்கை நடைபெற்றது. அங்கே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார்கள். முதலாளிகள் பல்வேறு புகைப்படங்களைக் காட்டினார்கள், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லாம், இங்கே சமரச உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னாலே, அதன் காரணமாக எந்தத் தொழிலாளி மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று முடிவு அறிவித்தார்கள். அதன் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுமாதிரி எவ்வளவோ உதாரணங்களைக் காட்ட முடியும். எவ்வளவோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதில் எத்தனையோ பேருக்கு சிறை தண்டனை கொடுத்து இருக்கிறார்கள். யாரையும் வேண்டுமென்றே சிறைச்சாலைக்கு அனுப்பி, தண்டனை கொடுக்க வேண்டுமென்று செய்யவில்லை. யார் போராட்டத்தின் காரணமாக சிறைச்சாலைக்குச் சென்றாலும், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக விடுதலை செய்து அனுப்பி வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சிறைக்குள் வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்றைக்குமே கருத்து இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. குமாரசாமி அவர்கள் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வைத்து இருக்கும் ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது ஏதோ கேட்பாரற்ற நிலையில் இருப்பது போல் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிர்வாக அதிகாரிகள் 15 நாளைக்கு ஒரு முறை வந்து கையெழுத்து போடுகிறார்கள் என்று சொன்னார்கள். தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் சென்ற முறை தொழிலாளர் நல மானியக்கோரிக்கை மீது பேசுகிற நேரத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக்



கொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்கு தீமை ஏற்படும், தமிழ் நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பஞ்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாலைகள், தமிழக அரசின் நிர்வாகத்தில் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் பேசினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள், அது கூடாது, அது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும், மாநில அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேசிய கார்ப்பரேஷனிடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே மன்றத்தில் அப்படிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சுக்களை குறிப்பேட்டில் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே தமிழ் நாடு அரசாங்கத்திடம் இருந்த நேரத்தில், மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது தேசிய பஞ்சாலைக்கழகத்திடம் சென்றவுடன் குறைகூறுவது என்றால் எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, எனக்கு இருக்கும் சந்தேகம் அங்கேயிருக்கிற சில ஆலை நிர்வாகிகள் நடந்து கொள்கிற முறையைப் பார்க்கிறபோது, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டதாலேயே அதைச் சரிவரக் கவனிக்கவில்லை என்ற அளவுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரு தொழிலாளர் தலைவர்களும் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். அதன் விளைவாக அங்கே அந்த மில்களை நல்லவகையில் லாபகரமாக பிரமாதமாக நடத்திக் காட்டிய அந்த ஆலை அலுவலர்களை, மற்றவர்களைப் பற்றி குறைவாகப் பேசக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முன்னாலே அப்படி இருந்தது. இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு சில கோளாறுகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. நான் தங்களிடம் தனியாக வேண்டுமானால் அதைத் தெரிவிக்கிறேன். இங்கே சொல்லவில்லை. அதற்காகத்தான் குமாரசாமி அவர்கள் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அகில இந்தியாவில் 203 ஆலைகளை எடுத்துக்கொள்கிறபோது, அப்படி முடிவு எடுத்த பின்னால், இங்கே இருக்கும் 13 மில்களை மட்டும் தனியாக நாங்கள் வைத்திருப்போம் என்று சொல்வது என்ன முறை?

அரசாங்கத்தின் சட்டத்தை மாற்றியாவது நம்முடைய அரசாங்கம் அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், டெம்பரரி தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள், காஷுவல் தொழிலாளர்களுக்கு லே-ஆப் சம்பளம் கிடைக்கவும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கோயம்புத்தூரில் இருக்கிறது. அதில் 300 படுக்கைகள் இருக்கின்றன. அதை 500-ஆக உயர்த்திக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே 6 படுக்கைகள்தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயிரம் பேருக்கு 4 படுக்கை என்றாலும் குறைந்தது 40 படுக்கை இருக்க வேண்டும். ஆனால் 6 தான் இருக்கிறது. ஆகவே, அங்கே குறைந்தது 40 படுக்கை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் மருத்துவ மனை கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொழிலாளர்கள் குடும்பத்திற்கும் மருத்துவ வசதி செய்து தர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

1958-ம் ஆண்டில் நான் முதன்முதலாக நம்முடைய லேபர் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கே ஒரு லேபர் கமிஷனர்தான் இருந்தார். ஒரு டி.சி.எல்.தான் இருந்தார்.

இன்றைக்கு லேபர் கமிஷனர் ஆபிசில் ஏறக்குறைய ஜாயிண்ட் லேபர் கமிஷனர், ஸ்பெஷல் டெபுடி லேபர் கமிஷனர் என்று இப்படி 10 பேர்களைப் போட்டும்கூட இந்தத் துறையில் நடைபெறுகிற வேலை துரிதமாக நடைபெறவில்லை. வேலைகள் துரிதமாக நடைபெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நிறைய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போதே மணி 6-40 ஆயிற்று. இன்னும் 8 பேர்கள் பேசவேண்டும். ஆளுக்கு 10 நிமிஷம் பேசினாலும் அமைச்சர் 8 மணி அளவில்தான் பேச ஆரம்பிக்க முடியும். பேசினது போதும்.



திரு. க. துரைசாமி : இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, திரு. துரைசாமி போன்றவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலிலேயே அவர் ஸ்பெஷல் சப்ஜெக்டுகளைப் பேசியிருக்கலாம்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அவர் சேர்ந்திருக்கின்ற கட்சிக்கு ஜஸ்டிபை செய்ய வேண்டும் அல்லவா?

திரு. க. துரைசாமி : தலைவரவர்களே, கோவையில் இருக்கிற டி.சி.எல்., ஏ.சி.எல். அலுவலகங்களை ஒரு மையமான பகுதிக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல வசதி கிடைக்கும். நம்முடைய வெல்பேர் போர்டு மூலமாக திருப்பூரிலே சத்துணவுத் திட்டத்திற்காக ஒரு இடத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் திறப்பதற்கு வகை செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டம் எவ்வளவு ஏழை மக்களுக்குப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்குச் செய்யவேண்டும். மில்களில் கூட்டுறவு பண்டகசாலைகளை அமைத்து அரிசி நியாய விலையில் போட வகை செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியம் சார்பாக தொழிலாளர்களுக்கு அல்லது வேறு பல சிறிய சாதாரண லோ இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும். மிடில் இன்கம் க்ரூப்பில் இருக்கிறவர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு நிலையத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஸ்டேட் லெவலில் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. மாவட்ட அளவில் அட்வைசரி கமிட்டி போட்டு அந்த அட்வைசரி கமிட்டியானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி வேலைவாய்ப்பு சம்பந்தமாக தகவல்கள் முறையாக அனுப்பப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில் அக்கறை எடுத்துக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அகில இந்தியாவில் 203 மில் இல்லை. தவறாகப் பேசக்கூடாது. 103 மில்கள் தான் இருக்கின்றன. அம்மையார் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் மட்டும் வைத்துக்கொள்ள விரும்புவதாகச் சொன்னார்கள், அவர்கள் கட்சி ஆளுகின்ற மாநில அமைச்சர்கள் கூட சேர்ந்து கேட்கிறார்கள், நாங்கள் மட்டும் கேட்கிறோம் என்று சொல்லக்கூடாது.

**திரு. சு. துரைசாமி :** அதனால்தான் போன ஆண்டு தொழிலாளர் நல மானியம் வந்தபோது நான் பேசினேன். அகில இந்தியாவில் 103 மில்கள் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வேறு மாநிலத்தில் எடுத்து கொண்ட மில்களில் சம்பளம் கூட சரியாகக் கொடுக்கப்படவில்லை--நம்முடைய பஞ்சாலைகளில் 25 சதவிதம் போனஸ் கொடுத்தோம். தனிப்பட்ட முதலாளி கள் கூட 20 சதவிதம்தான் போனஸ் கொடுத்தார்கள். நாம்தான் உயர்ந்த பட்சம் போனஸ் கொடுத்தோம். இப்போது மத்திய அரசாங்கத்தின் கையில் அது இருக்கிறது. வருகிற ஆண்டில் பார்க்கத்தான் போகிறோம், அங்கே யிருக்கும் தொழிலாளிக்கு என்ன போனஸ் கிடைக்கப்போகிறது என்று.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இன்று தொழிலாளர் களுக்கு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்து இருக்கிறோம். (மணியடிக் கப்பட்டது). பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள் கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

நம்முடைய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் பொறுத்தவரையில் இங்கேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசாங்கம்தான் அகில இந்தியாவில் இருக்கிற பஞ்சாலைகளிலேயே உயர்ந்தபட்ச போனஸ் கொடுத்து இருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசின் கட்டாயச் சேமிப்பு இருந்தாலும் கூட, அதிலே இருந்து பாதிக்கப்படாமல் வேறு ஒரு முறையில் நாம் அதிகபட்ச போனஸ் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். அதைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான், இந்த அரசுதான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்று பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், தொழிலாளர்கள் தகராறுகள் சம்பந்தமாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 7,550 வழக்குகள் தொடரப்பட்டன என்றும், சமரசப் பேச்சுவார்த்தையால் தீர்க்கப் பட்டவை 1,478 என்றும், நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை 417 என்றும், மீதி 5,655 இருக்கின்றன என்றும் குறிப்பேட்டில் இருக்கின்றன. நான் பணி வன்போடு கேட்டுக்கொள்வேன், இந்த வழக்குகளைத் தீர்ப்பதில் ஏன் இவ்வளவு



காலதாமதம், இது உள்ளபடியே வருந்தத்தக்கது. அதை விரைவில் தீர்த்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேகமாக அந்த வழக்குகள் தீர்க்கப்படவேண்டும். அந்த அளவில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சில இடங்களில் லேபர் ஆபிசர்கள், அசிஸ்டென்ட் லேபர் ஆபிசர்கள் கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்புவதில் காலதாமதம் செய்கிறார்கள். அது கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும். அதற்காக உள்ளபடியே அந்தத் துறைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் ஏ. சி. எல். (A.C.L.) கன்சிலியேஷன் ரிப்போர்ட் வருவதற்கு 1 வருஷம், 1½ வருஷம் கூட ஆகிறது. இதனால் உள்ளபடியே தொழிலாளிக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். ஆகவே, குறைந்தபட்சம் 3 மாத காலத்திற்குள் இந்த கன்சிலியேஷன் ரிப்போர்ட் அனுப்பி விட வேண்டு மென்று ஒரு வரையறை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கணக்கு கொடுத்ததில் கூட சில வழக்குகள் வேறு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு இருந்தால், அவற்றை எல்டிஎல், என்று போட்டு அதனால் குறைத்து கணக்கைக் காட்டுகிறார்கள். இது யதார்த்தமான குறைபாடுதான். இதைப் போக்குவதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டு மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இப்படி ஏற்படாமல் இருப்பதற்கு அமைச்சர், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அறிக்கையில் நிர்வாகத்தில் 'தொழிலாளர்கள் பங்கு என்று தலைப்பிட்டு கொடுத்து இருக்கிறார்கள். ஏதோ ஒரு குழுவின் அறிக்கை எதிர் பார்ப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. விரைவாக அந்த அறிக்கை சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பங்கு கொடுக்கும் நிலையை ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டு காரணமாக, வேறு பல காரணங்களால் 'லே-ஆப்' கொடுக்கிறார்கள். அப்படி லே-ஆப் கொடுக்கிறபோது பாதிச் சம்பளம் நிரந்தரத் தொழிலாளிக்கு கிடைக்கும். அதை உயர்ந்தபட்சமாக 75 சதவிதம் அல்லது முழுமையாகக் கிடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியாவது, மத்திய

அமைத்து தொழிலாளர் பிரதிநிதிகளை வைத்து நியாய விலையில் உணவுப் பொருள்களைக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதான் அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க முடியும். இந்த அத்தியாவசியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தற்காலிகமாக வேலை செய்பவர்கள் temporary workers who have put in service of 5 or 10 years have not been regularised. என்ற நிலை இருக்கிறது. 5, 10 வருஷங்கள் வேலை பார்த்தும் கூட தற்காலிகமாக பதவிகளில் பல பேர்கள் பல ஆலைகளில் இருந்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. வேலை தற்காலிகமானது என்று கருதப்படுகிற காரணத்தினால் அதற்குரிய நிபந்தனைகளை வைத்துக் கொள்கிற காரணத்தினால் இவர்களுக்கு நிரந்தரமான வேலை பார்க்கக் கூடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய

Provident Fund and other benefits are not available.

செக்யூரிட்டி ஆப் ஜாப் இல்லை. குறைந்தது இரண்டு வருஷம் ஒருவர் தற்காலிகமாக வேலை செய்திருந்தால் அவரை நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குரிய உத்தரவை தொழில் அதிகாரிகள் மூலமாக, கமிஷனர் மூலமாக உடனடியாக நிறைவேற்றுவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்று முதலாளிகள் தங்களுடைய லாபத்தை அதிகப்படுத்து வதற்காக ரேஷனலைசேஷன் திட்டத்தை, நவீனமுறைப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, இது நல்லது என்பதை ஒத்துக்கொண்டாலும்கூட இதன் விளைவு

after-effect of rationalisation cutting off or throwing of certain employees out of employment to improve the quality or the products என்ற நிலை வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, நான் வருந்துகிறேன். I am very Sorry.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 8 நிமிஷம் ஆகி வி——து.





**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, முதலில் பேசியவருக்கும், பழைய ஆளை சபாநாயகருக்கும் அதிகப்படியான நேரம் கொடுக்கப்பட்டது. நாங்கள் தொழிற்சங்கத்தை இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அனுமதி இல்லை என்றிருந்தால் முதலிலேயே உட்கார்ந்திருப்பேன். எங்கள் கட்சிக்கு இல்லை யென்று சொல்லிவிட்டார்கள் என்று சொல்லி விடுகிறேன்.

I am not able to coherently putforth my points. I am very sorry in Deputy Speaker. Sir, you must give me some more marginal time as you have given to other members.

பழைய ஆளைச் சபாநாயகர் வேகமாகப் பேசினார். கலர் கொடுத்துப் பேசினார். நான் உண்மையான தொழிலாளர் பிரச்சினையை வேதனையோடு சொல்கிறேன். அமைதியான சூழ்நிலையிலே பேசுகிறேன். இப்படி மணி அடித்து என் நேரத்தைக் குறைப்பது தார்மிகமானதல்ல. நியாயமானதல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. கே. கந்தசாமி:** ஆகவே, ரேஷனலைசேஷன் மூலமாக ஒரு வகையில் உற்பத்திப் பெருக்கம், தரத்தில் முன்னேற்றம் என்று இருந்தாலும்கூட தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதை முதலாளிகள் செய்கிறார்கள், தடுப்பதில்லை, எதிர்க்கிறோம் என்றாலும் வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு என்ன மாற்று முறை வைத்திருக்கிறோம் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, ரேஷனலைசேஷன் செய்கிற தொழிற்சாலைகளை ஏன் தேசியமயமாக்கக் கூடாது என்பது என் கேள்வியாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு உண்மையான சோஷலிசத்தில் நம்பிக்கை உள்ள அரசு. பிரச்சாரம் செய்கிற அரசுகளை விட, நடைமுறையில் இதில் நம்பிக்கை வைத்திருக்கிற காரணத்தினால் பல நல்ல திட்டங்களை, ஆலை முதலாளிகள், பஸ் முதலாளிகள் ஆகிய லட்சாதிபதிகளின் தயவையெல்லாம் எதிர்பார்க்காமல் அவைகளை தேசியமயமாக்கியிருப்பதை அனைவரும் பாராட்டு வார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள்கூட வெளியில் தனியாகப் பேசும்போது பாராட்டுகிறார்கள், அரசியல் ரீதியாக எதிர்த்தாலும். இப்படி நல்ல பல திட்டங்களைக்கொண்டு வருகிற அரசு இன்று ஷுகர் மில்ஸ், சர்க்கரை ஆலைகளை மத்திய அரசு அனுமதி கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்திருக்கிறது. நம் அரசு ஏற்கனவே அந்தக் கருத்தை தெரிவித்திருந்தது. அதை விரைவில் கொண்டுவரவேண்டுமென்று கருதுகிறேன்.

கடைசியாக, தொழிலாளர்களை சஸ்பெண்டு செய்கிற காலங்களில், அப்படி நிர்வாகம் சஸ்பெண்டு செய்த தொழிலாளர்களுக்கு அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள 3 மாதம் அல்லது 6 மாதம் ஆகி விடுகிறது. அவர்களுக்கு ஊதியம் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த சஸ்பெண்டு காலத்திற்கு முழு ஊதியம் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அல்லது குறைந்தபட்சம் பாதி சம்பளமாவது கொடுக்கக்கூடிய முறையில் சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, வீட்டுவசதி வாரியம், தொழிலாளர் நலன் சார்பாக இங்கே சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் சாதிக்காத அளவிற்கு வீட்டு வசதி வாரியம் பெரிய அளவிற்கு, யாரும் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு பல புதிய அம்சங்களைக் கொண்டு குறைந்த விலையில் நல்ல வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கெல்லாம் விரைவாகக் கட்டித் தருகிறது. இதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவாக அரிய சேவைகளையெல்லாம் செய்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவிற்கு அரசு ஊழியர்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு வீட்டு வாடகைப்படியாக 15 சதவீதமும் வீட்டு வாடகையாக அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதமும் ஆக இரண்டையும் சேர்த்து மொத்தம் 25 சதவீதம் அவர்களுடைய சம்பளத்தில் இழப்பு ஏற்படுவதாக இங்கே இருக்கும் அரசு ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்குமானால், அவர்களுக்கு நாம் உதவி பண்ணுவதற்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்றாலுங்கூட, நடைமுறையில் வருகிறபோது அவர்களுக்கு ஒரு கணிசமான இழப்பு சம்பளத்தில் இருப்பதாக அவர்கள் வேதனையோடு என்னிடத்தில் தெரிவித்தார்கள். ஆகவே, இதில் ஒரு மாறுதல் செய்து அவர்களுக்கு சம்பளத்தில் கணிசமான அளவிற்கு பாதிக்காத நிலையில்





வாடகையில் ஓரளவு குறைந்த வாடகை வசூலித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்தபடியாக, தொழிலாளர் நலனைப் பற்றி, தொழிலாளர் பிரச்சினை பற்றி எனக்கு முன் பேசிய தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள். ஊதிய முடக்கச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்றுமில்லாத வறட்சி பாவி இருக்கிறபோது, மின்வெட்டு காரணமாக தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த நிலையிலே லே ஆஃப் என்று அவர்கள் மாதத்தில் 10, 15 நாட்கள்தான் வேலை செய்யக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மாதச் சம்பளத்தில் பாதியோ அல்லது பாதிக்குக் குறைவாகவோதான் ஒவ்வொரு தொழிலாளியும் மாதாமாதம் பெறவேண்டிய நிர்ப்பந்தமான கட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் அவர்களுக்கு ஊதிய முடக்கச் சட்டத்தை தற்காலிகமாவது நிறுத்தி வைக்கவேண்டும். ஊதிய முடக்கச் சட்டம் நல்ல நோக்கத்தோடு வருகிற திட்டம் என்றாலுங்கூட எதிர்பாராத வறட்சி நிலையை முன்னிட்டு அதை தற்காலிகமாகவாவது. டெம்பரரி சஸ்பென்ஷன் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே அவ்வாறு, இந்த வறட்சி நிலை நீங்கும் வரையிலாவது இந்தத் திட்டத்தை ஒத்திவைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக, உதவிகரமாக இருக்கும் என்பதை அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். இன்று அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை எளியவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு கலைஞர் அவர்கள் அரசு பல முறைகளில் முயற்சி செய்து வருகிறது என்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல தொழிலாளர்கள் ஏற்கெனவே முழுச் சம்பளம் கிடைத்த போதும் அவர்களுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது பாதிச் சம்பளம் கிடைக்கிறபோது எப்படி குடும்பத்தைக் காப்பாற்றுவது என்ற ஒரு கஷ்டமான, இக்கட்டான நிலையில் அவர்கள் இருக்கிறபோது அவர்களுக்கு கண்டிப்பாக நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்களை, அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது அவசியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தந்த முதலாளிகள், மேனேஜ்மெண்ட் மூலமாவது கூட்டுறவுச் சங்கங்கள்

அதேபோல நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் போலீஸ் பென்ஷன், குடும்ப நலத் திட்டம் என்று கடைநிலை ஊழியர்களுக்கு—நிரந்தரம் அல்லது நிரந்தரமாக இல்லாமல் இருந்தாலும்—கூட, அவர் உத்தியோக காலத்தில் இறந்து விட்டால் 10 ஆயிரம் ரூபாய் சேமநல நிதியாக அளிக்கப்படுகிறது. அதுபோல தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் எதிர்பாராத விதமாக விபத்திற்கு உள்ளாகி இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு இதேமாதிரி எப்படி அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கிறதோ அது போல அந்த ஊழியர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தை ஏன் விஸ்தரிக்கக் கூடாது என்ற கருத்தை கருணையோடு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு எப்படி அந்த பிரின்சிபிளை அப்ளை செய்கிறார்களோ, அதேபோல இங்கும் அப்ளை செய்து, மானேஜ்மெண்ட் ஒரு பகுதி, தொழிலாளி ஒரு பகுதி, அரசு ஒரு மினிமம் பர்செண்டேஜ் என்ற விகிதாசாரத்தில் காண்ட்ரிபியூஷன் செய்து அதையும் ஏன் நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை பரிசிலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல் ஈ.எஸ்.ஐ.-யைப் பொறுத்த வரையில் ஆஸ்பத்திரி வசதிகள், சுகாதார வசதி இல்லாது கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு முன்னால் 500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இலவச வைத்தியம் என்று இருந்தது. அதை ஆயிரம் ஆக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதை ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி மூலம் இலவச வைத்தியம் அளிக்க வேண்டும் என்று உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பி.ஆர்.சி. தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். பி.ஆர்.சி.-யில் இருக்கக் கூடிய மேனேஜிங் டைரக்டர் அவர்கள் ஆன்டி-லேபர்-ஆக இருக்கிறார், ஆன்டி-ஒர்க்கர்ஸாக இருக்கிறார் என்ற கருத்தை இன்று மத்தியானம் அமைச்சர் அவர்களைப் பார்க்க வந்த தொழிலாளர்கள் என்னிடம் கூறினார்கள். பொதுமக்களுடைய பிரதிநிதியைக் கூட அந்த மேனேஜிங் டைரக்டர், மதுரையில் இருப்பவர், மதிப்பதில்லை. தவறான வார்த்தைகளை, அகௌரவமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களை நீக்குவது மூலமாக தொழிலாளர்கள் அமைதி காக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்து, பி.ஆர்.சி. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் 100-ஐ எடுத்தது மூலம், ஸ்டேடஸ்கோ டு பி மெயின்டெயின்டு என்ற







கோரிக்கையை வைத்து ஸ்டிரைக் செய்ததால், அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதை நாங்கள் நேரடியாக அறிவோம். அதைச் சுமுகமாக பேச்சு வார்த்தை மூலம் முடிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் பவர்லூம் ஒர்க்கர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு 3, 4, 4½ ரூபாய் தரப்படுகிறது. அவர்களுக்கு அந்த பாக்டரி லாஸ் அப்ளிகேஷனை எக்ஸ்டெண்ட் செய்து, அவர்களுக்கு செக்யூரிட்டி ஆப் ஜாப், ட்யூ எமாலுமெண்ட்ஸ் ஃபார் தி லேபர் என்ற நிலையை நீங்கள் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, தொழிற்சங்க லேபர் அதிகாரிகள், கமிஷனர் உள்பட இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய யூனியனில் ட்யூப்ளிகேஷன் ஆப் மெம்பர்ஷிப் இருக்கிறது. டி.எல்.சி.-யைப் போய் சந்தித்தேன். கமிஷனர் அவர்களை சந்திக்க வந்தேன். அவர் கேம்ப் போயிருந்தார். ஒரே யூனியனில் இருக்கிற கந்தசாமி என்ற பெயர் 5 யூனியனில் இருக்கிறது. ஃபார் எக்சாம்பிள் மதுரை மில்லைப் பொறுத்த வரையில்--முக்கியமான பாயிண்ட்—கந்தசாமி என்பவர் ஐ.என்.டி.யூ.சி.-ல் இருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியில் மெம்பர். டி.எம்.கே.-யில் மெம்பர், ஏ.டி.எம்.கே.-யில் மெம்பராக இருக்கிறார். எத்தனை கந்தசாமி?

Why this duplication? Why we are duping ourselves? And what a wonderful law, I am not able to understand the significance or the very existance of this law at all! Therefore, I plead that there should be an amendment, an effective amendment of this sort of laws Otherwise we are duping ourselves.

என்ற வாதத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டால் சட்டம் இருக்கிறது; எடுக்கலாம், எடுக்காமலும் இருக்கலாம் என்று லேபர் கமிஷனர் சிரிக்கிறார். இது ஒண்டர்புல் லா என்ற கருத்தை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைட் ஈஸ் ரைட் என்று சொன்னார்கள். தொழிற்சங்கத்திற்கு பாதுகாப்பு வேண்டும். பரவை மில்லில் புதிதாக நாங்கள் தொழிலாளர் நல உரிமைச் சங்கம் என்று பெயர் வைத்து, நாராயணச் செட்டியார், மில்லியனர் மில்லில் ஏற்படுத்தினோம். அடியாட்களை வைத்து அடிக்கிறான். இது என்ன அநியாயம்? கொடி ஏற்றுபவனுக்கு மாலை கொடுத்தவனை, கொடி வாங்கிக் கொடுத்தவனை மறுநாள் சஸ்பெண்டு செய்கிறான். என்ன என்று கேட்டால்

(இரவு 7.00)

அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, நிலத்திற்கு கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று வைத்திருந்தார்கள். நம் கலைஞர் அரசு அதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல மதுரை கருமுத்து தியாகராஜ செட்டியார் மில்லை எடுப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 30 மில்கள் வைத்திருக்கிறார்கள். ஒரு மில்லுக்கு பல கோடி ஆஸ்தி இருக்கிறது. அதற்கு ஏன் சீலிங் லிமிட் இல்லை என்று கேட்கிறேன். சோஷலிஸத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் ஏன் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்று எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஆக, அதை அவர்கள் கட்சியின் சார்பாக குறிப்பிடத் தவறி இருந்தாலும், அவர்கள் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆக, மில்களை தேசியமயமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்ற திட்டத்தை பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை வெகுவாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. தொழிலாளிகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயாவது கடனாக வழங்கப்பட வேண்டும். அதை நீண்ட நாள் கடனாக வழங்குவது மூலம், தற்போதைய நிலையிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். நிவாரணம் கிடைக்கும் என்ற கருத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லே ஆப் என்ற பிரச்னை பற்றி எலெக்ட்ரிசிடி கட், மின்சாரம் இல்லாத காரணத்தால் லே ஆப், வேலை இழக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? பாதி நாளைக்கு வேலை இழந்து, சம்பளம் இழந்து . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: கோரம் இல்லாமல் நாம் சபையை நடத்துவது முறையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரம் இருக்கிறது. அப்படி கோரம் இல்லை என்றால் 5 நிமிடம் வெயிட் பண்ணினால் எல்லா மெம்பர்களும் வந்து விடுவார்கள். நீங்கள் ஸ்வீட், காரம் எல்லாம் சாப்பிட்டு வந்துவிட்டீர்கள். மற்றவர்கள் சாப்பிடப் போயிருக்கிறார்கள்.



திரு. பெ. சீனிவாசன்: ஜேம்ஸ் வந்தவுடன் கோரம் வந்திருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: சினிமா முதலாளிகள், சினிமாக் கொட்டகை வைத்திருப்பவர்கள், பவர் ஜெனரேட்டர் மூலமாக அந்தத் தொழிலை நடத்துகிறார்கள். அதுபோல ஆலை முதலாளிகளும் நடத்தக் கூடாதா? அப்படி நடத்துவதின் மூலமாக நாட்டின் உற்பத்தியைப் பெருக்கலாம். பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. உழைப்புக்குத் தகுந்த அளவில் கூலி கிடைக்கிறது. ஆகவே, அதை வற்புறுத்த அரசு அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

லே ஆப் நாளைக்கு அந்தத் தொழிலாளிகளுக்கு ஒரு கணிசமான சம்பளம், வேலை செய்தால் எந்த அளவுக்கு சம்பளம் கிடைக்குமோ அந்தச் சம்பளத்தை, 60 சதவிகிதம் முதலாளியைக் கொடுக்கச் சொல்லி, 20 சதவிகிதம் தம்முடைய மாநில அரசு ஏற்று, மீதியிருக்கிற 20 சதவிகிதம் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றைச் செய்வது மூலமாக தொழிலாளிகளுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த எலெக்ட்ரிசிடி கட் என்பது இன்று மாத்திரமல்ல. அடிக்கடி ரிக்கரிங் பீச்சர் ஆக இருக்கிறது. ஆகவே அடிக்கடி பஞ்சாலைத் தொழிலாளிகள் கடுமையான சோதனைக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க இந்த இரண்டில் ஒன்றை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து கொண்டு வரவேண்டுமென்று வேண்டுகிறேன்.

அதேபோல பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதுதான் என்னுடைய கருத்தும். பல தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் பாக்டரி லாஸ்—பாக்டரி ஆக்ட், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்—போன்றவைகள், அந்தத் தொழிற்சாலைகளை கண்ட்ரோல் செய்யக் கூடிய சட்ட திட்டங்கள் அவுட் மோடட்டாக இருக்கின்றன. பழையகாலத்திற்கு உகந்ததாக இருக்கலாமே ஒழிய, இன்று நவீன காலச் சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் அவைகள் இல்லாத காரணத்தால், பல கேஸ்களெல்லாம்—எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல—பல வருடங்களாக இழுத்துச் செல்லுகிறது. டிலே என்பது டெத் என்பதை உணர வேண்டும். அதிக டிலேயாக இருப்பதால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். முதலாளிகளுக்கு அது சாதகமாக இருக்கிறது. அந்த சட்ட திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மறுநாள் அங்கே 50 பேரை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், கலவரம் மிக்க ஒரு சூழ்நிலையிலும் மிகச் சாதுரியமாக நம்முடைய அரசாங்கம் நடந்துகொண்டு, அமைதியான முறையிலே ஏற்பாடுகளைச் செய்து வருவதற்காக, எப்படிப்பட்ட கலவரம் நடந்தாலும் நாட்டிலே அமைதியை ஏற்படுத்தி வருவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக அரசில் சிறப்பாகச் செயல்படுகிற இலாகாக்களில் இந்த தொழிலாளர் நல இலாகாவும் ஒன்று என்பதை நான் நன்றாக அறிவேன். காரணம் இந்த இலாகாவோடு அதிகமான தொடர்பு கொண்டவன் நான் என்பது மட்டுமல்ல, நான் பல நேரங்களில் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளை எடுத்துச் சென்ற நேரங்களில் எல்லாம் அதைச் சுமுகமாகத் தீர்த்து வைத்து, தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்து வருகிறார்கள் நம்முடைய அமைச்சரவர்கள்.

தொழிற்சங்க விவகாரங்கள் வரும்போது நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினையை அனுதாபத்தோடு கவனித்து, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் பிரச்சினைகளை மிகச் சிறப்பான முறையில் அணுகி, தீர்ப்புகளை வழங்கி வெற்றிகரமாக நடத்திக்கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், இந்தத் தொழிற்சங்கங்கள் பற்றி கல்லூரி மாணவர்கள் பாஷையில் சொல்வதாக இருந்தால், தொழிற்சங்கம், தொழிலாளர் இயக்கம் என்பது கொஞ்சம் போர் அடிக்கிற சம்பவமாகும். பேச்சு வார்த்தைகள் அந்த முறையில் இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினையிலும் ஏதோ நாவல் படிப்பது போல் பேச்சுவார்த்தைகளை நடத்திக் காட்டுகிறார் நம்முடைய அமைச்சர் என்று சொன்னால் அது மிகையாகாது.

என்னுடைய தொழிற்சங்கப் பிரச்சினை ஒன்றில் கூட பகல் 12 மணி, அல்லது ஒரு மணிக்கு உட்கார்ந்து, இரவு 3 மணி வரை உட்கார்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி, மிகச் சிறந்த முறையில் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள்.



தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தையின்போது தொழிற்சங்கங்கள் பக்கம் ஆவேசம் தலைகாட்டும். ஆனால் விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதற்காக மானேஜ்மெண்டார் அமைதியாக அழுத்தமாக இருப்பார்கள். இரண்டு பேரையும் சமாதானப்படுத்தி, அமைதி கண்டு, கலவரங்கள் நடைபெறாமல் பார்த்து, அமைச்சரவர்கள் இந்த இலாகாவிலே பெரும்பாடுபட்டு தொழிலாளர்களுக்கு நன்மைகள் புரிகிறார்கள் என்பதை மனமார உணர்ந்து, இந்த மாமன்றத்திலே அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஈடுபடுகிற காரணத்தால், தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும், பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தாலும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் வந்தாலும் அவைகளை எல்லாம் வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கின்ற வகையில் நம்முடைய அமைச்சரவர்களும் இந்த இலாகா அதிகாரிகளும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இவ்வளவு வேகமாக வெற்றிநடை போடுகிற காரணத்தால்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்களால் தலைமை ஏற்று நடத்திச் செல்கின்ற தொழிற்சங்கங்கள் கூட இன்றைய தினம் இந்த இலாகாவைப் பாராட்டுகிறார்கள். நம்முடைய இலாகா, நம்முடைய அமைச்சர் என்கின்ற ஒரு பந்தபாசத்தோடு சொல்கிறார்கள். சமீபத்தில் இப்போது சபையில் உட்கார்ந்திருந்தபோது சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் அமைச்சர் என்று தொழிலாளர் நல அமைச்சரவர்களைக் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் தொழிலாளர்கள் பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமென்ற முறையில் அமைச்சரவர்கள் காட்டுகின்ற அக்கறைதான். அதனால் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

இவ்வளவு வேகமாக நடைபோடுகிற இந்த இலாகாவிலே இன்னும் சிலவற்றைச் செய்யவேண்டுமென்று சொல்வது ஆசையால் கேட்பதல்ல; அவசியம் செய்யப்பட வேண்டியவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லோரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தக் கருத்துக்களை எல்லாம் மீறி, வாழைப்பழத்தில் ஊசி நுழைவதைப்போல ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற சூழ்நிலைதான் அது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறம் இருக்கிறது. படித்தவர்களுக்கு வேலை இல்லை. அதனால் படித்தவர்கள் நடுத்தெருவில் தாங்கள் படித்த சர்டிபிகேட்டை வைத்து அலைந்து

திரிகிறார்கள் ; எம்பிளாய்மென்ட் ஆபீசில் ஏறி இறங்கிய வண்ணம் கஷ்டப்படுகிற காட்சியைப் பார்க்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு பேருக்கு வேலை இல்லை என்ற புள்ளிவிவரம் எல்லாம் பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் தொழிலாளர்களை, தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களை வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காரணம் 'ஆட்டோமேஷன்' தான். எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கிக் கொண்டு வருகிறார்கள். இந்த இயந்திரமயம் பற்றி அதிகமாக நான் சொல்ல வேண்டியதில்லை.

(திரு. கு. காமாட்சி தலைமை)

காரணம் என்னவென்றால், என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால், அமைச்சர் மாதவன் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது இந்த மாமன்றத்திலே கூடச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்டோமேஷனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களானால் இந்த அரசு அதை எதிர்க்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பல்வேறு தொழிற்சாலைகளில் அந்தநிலைமை உருவாக்கியிருக்கிறார்கள் ; இயந்திரமயத்தை புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களை வெளியே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை மத்திய அரசில் ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டியின் மூலம் 'ஆட்டோமேஷன் கமிட்டி ரிப்போர்ட்' என்பதை மத்திய அரசு தயாரித்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டிலும் பல்வேறு தலைவர்களும், கமிட்டி உறுப்பினர்களும் பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அது என்னவென்றால், இயந்திரமயமாக்குவதால் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கின்ற . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : உறுப்பினர் அவர்கள் இயந்திரமயம் என்று சொல்கிறாரா, அல்லது இந்திர மயம் என்று சொல்கிறாரா? அது சரியாகக் கேட்கவில்லை. (குறுக்கீடு—இந்திரா மயம்).

திரு. துரைமுருகன் : அம்மையார் அவர்கள் இந்திரா மோகத்தில் இருப்பதால் நான் என்ன சொல்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன. வேலை இல்லாத தொழிலாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஆகையால் ஆட்டோமேஷனை உடனடியாக நிறுத்தி ஆகவேண்டும். அதை நிறுத்த இந்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டாக வேண்டும்.



இப்போது சென்னையில் பாரி கம்பெனி, ஷா வாலஸ் கம்பெனி போன்ற மிகப் பெரிய கம்பெனிகளின் நிர்வாகம் இயந்திரங்களை வாடகைக்கு கொண்டு வந்து வைத்து, வேலை செய்கிறார்கள். அந்த இயந்திரங்கள் இங்கு உள்ளவை அல்ல. அமெரிக்காக்காரனிடமிருந்து இங்கே இருக்கிற சில ஏஜென்டுகள் மூலம் கொண்டு வருகிறார்கள். அதனால் நம்முடைய பணம் எல்லாம் அமெரிக்காக்காரனுக்குப் போகிறது. அமெரிக்காக்காரரின் மெஷின்கள் எல்லாம் நம்முடைய தொழிற்சங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, உடனடியாக தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்சனை. இப்போது போனஸ் ரிவ்யூ கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அது என்னவென்றால் போனஸ் சட்டத்தில் ஏற்கெனவே இருந்த செக்ஷன் 34 (3)-ஐ எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறது. அதை எடுத்துவிட்டால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். போனஸ் அதில் இருக்கிற சட்டத்திற்கு உட்பட்டுதான் கொடுக்க முடியும். போனஸ் சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் பல தொழிற்சாலைகளில் மானேஜ்மெண்ட், தொழிலாளர் இரண்டு பேரும் கலந்து பேசி, ஒரு தொகையை தொழிலாளர்கள் பெறுகிறார்கள். இது சில நேரங்களில் தொழிலாளர்களுக்கு சாதகமாக இருக்கிறது. ஆனால் இப்போது இருக்கிற இந்த 34 (3) பிரிவை எடுத்துவிட்டால் அந்த வாய்ப்பு தொழிலாளர்களுக்குக் கிடைக்காது. எனவே, போனஸ் ரிவ்யூ கமிட்டி செய்திருக்கிற சிபாரிசை நம்முடைய அரசு எதிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு பிரச்சனை. இப்போது ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நின்றுவிட்டால் போனஸ் வழங்கப்படுவதில்லை ; ஆனால் கிராசுட்டியாக வந்துவிடுகிறது. அதன் அடிப்படையில் சில தொழிலாளர்களுக்கு போனஸ் தொகை அதிகம் வரும். ஆனால் கிராச்சுட்டியைப் பார்த்தால் அவர்களுக்கு குறைவாக வரும். அவர்களுக்கு ஒரு எக்சம்ஷன் தரவேண்டியிருக்கிறது. எதற்காக என்றால், எதிர்பாராதவண்ணமாக இடையிலே அவர்கள் செத்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அதற்கு செக்ஷன் 5-ல் எக்சம்ஷன் தந்து, செத்துப் போனால் கூட, நியாயமாக போனஸ் வாங்கினால் எவ்வளவு வருமோ அந்தத் தொகையை முறைப்படி போய் சேரவேண்டியவர்களுக்கு வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. துரைமுருகன்] [1975 ஏப்ரல் 4

அடுத்து, இன்னொரு பிரச்சனைபற்றி இங்கே எல்லோரும் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். நம்முடைய கமிஷனர், டிபுடி கமிஷனர்களுக்கு எல்லாம் முதலாளிகளைக் கூப்பிடுகிற அதிகாரம் இல்லை; சமன் அனுப்புகிற அதிகாரம் அவர்களுக்கு இல்லை. சமன் அனுப்புகிற அதிகாரம் இருந்தால்தான் முதலாளிகள் உடனடியாக வந்து சேருவார்கள்.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் கூட, இயந்திரமயமாக்குவதைப் பற்றிப் பேசுவதற்கு மானேஜ்மென்டாரை வரச்சொன்னார்கள். எனக்கு இன்று வேலை இருக்கிறது, நாளை பம்பாய் போகிறேன், டில்லி போகிறேன், அங்கிருந்து கல்கத்தா போகிறேன் என்று பதில் சொன்னார்களே தவிர அழைத்ததற்கு வரவில்லை. வராவிட்டால் என்ன நடக்குமோ என்ற பயம் அவர்களுக்கு இல்லை. அந்த பயம் இல்லாததால் அவர்கள் வர மறுப்பது மட்டுமல்ல, சொல்கிற தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று போகிற ஒரு மதமதப்பு முதலாளிகளுக்கு இருக்கிறது. அந்த மதமதப்பை அடக்குவதற்கு, நம்முடைய கமிஷனர்களுக்கு சமன் அனுப்புகின்ற 'அங்குசம்' என்ற அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துவிட்டால் அந்த மதமதப்பு தானாக அடங்கிவிடும்.

என்னுடைய மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் பீடித் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்னுடைய தொகுதி. இந்த பீடித் தொழிலாளர்கள் வாழ்க்கையில் மிகக் கஷ்டப்படுகிற தொழிலாளிகள்—இந்த பீடித் தொழிலாளர்களைப் பார்த்தாலே தெரியும்—கைகள் வெளிறிப் போய்—கண்கள் பஞ்சடைந்து—கால்கள் சூம்பி—நூற்றுக்கு 75 பேர்கள் டி.பி. வியாதியால் பாதிக்கப்பட்டவர்களாக—வாழ்க்கையில் அல்லலுற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெறுகிற ஊதியமோ மிக மிகக் குறைவு—ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய் என்று மத்திய சர்க்கார் வரி போட்டால் உடனே கொடுக்கிறேன் என்கிறார்கள் முதலாளிகள். தொழிலாளர்கள் ஒரு நான்கணா கூலியை ஏற்றிக் கேட்டால் தொழிலாளர்களுக்குத் தர மறுக்கிறார்கள். மீறி வேலைநிறுத்தம் செய்தால் வடஆர்க்காடு மாவட்டத்திற்குப் பக்கத்தில்தான் ஆந்திர மாநிலம் இருக்கிறது—அங்கே போய்விடுகிறோம் என்று பயமுறுத்துகிறார்கள்.

தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் செயற்கரிய காரியங்களைச் செய்து வருகிறார்கள், முதல்வர் அவர்களோடு இணைந்து. அவர் பீடித் தொழிலாளர் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தி—அவர்களுக்கு இனி



1975 ஏப்ரல் 4] [திரு. துரை முருகன்]

பிரச்சினையே இல்லை என்ற அளவுக்கு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துவிட்டால் அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குப் பிறக்கிற தலைக் குழந்தைக்கு எல்லாம் அவர்களது பெயரையே வைத்துக் கொண்டாடுவார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பீடித் தொழிலாளர்களது பிரச்சினைக்கு நமது அமைச்சர் அவர்கள் நிரந்தரமான பரிகாரத்தை கண்டாகவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): சீக்கிரம் முடியுங்கள். நேரமாகிவிட்டது. அப்புறம் அமைச்சரிடம் டின்னர் கேட்பீர்கள. (சிரிப்பு.)

திரு. துரைமுருகன்: அடுத்து, சில நேரங்களில் தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். அரக்கோணத்தில் ராம்கோ சிமின்ட் பாக்டரி இருக்கிறது. அங்கே வேதாசலம் என்ற தொழிலாளி—என் கட்சிக்காரர் என்று சொல்வேன், அந்தத் தொழிலாளி வேலையைவிட்டு நீக்கப்பட்டு 6 மாத காலமாகிறது. வேலையைவிட்டு நீக்கப் பட்டதற்கு என்ன காரணம்? அவர்கள் தொழிலாளர்களது மத்தியில் கம்பெனியின் லாப நஷ்டக் கணக்கை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதுதான். லாப நஷ்டக் கணக்கை எடுத்துப் பேசினால்தான் போனசு வாங்க முடியும். தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பங்கைப் பெற முடியும். அப்படிப்பட்ட பிரச்சினையில் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று அதையும் என் நடைமுறைக்கு கொண்டு வரக்கூடாது என்பதை பரிசிலனை கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒன்றைக் கேட்டால் நமது அமைச்சர் அவர்கள் பலவற்றைத் தருவார்கள்—இப்போதே பார்த்தோமே. நான் காரம், காபி, ஸ்வீட் தான் கேட்டேன்—அவர்கள் காஷ்யூநட் சிப்ஸ் எல்லாம் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். அப்படி தொழிலாளர்களுக்கும் போனஸ் பிரச்சினை என்பது மட்டுமல்ல—பல்வேறு சலுகைகளையும் முதலாளிகளிடம் இருந்து பெற்றுத் தரக்கூடியவர்—அவரை நான் மனம் திறந்து—அவரது தொண்டுப் பணியை வாழ்த்தி என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நல மானியத்தையும், வீட்டு வசதி மானியத்தையும் வரவேற்று என் கருத்துக்களை நான் சொல்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே இருக்கிற நல்லவர்கள் எல்லாம் வரவேற்றுப் போற்றக் கூடிய ஒரு துறையாக தொழிலாளர் நலத்துறை இருக்கிறதென்றால்

[திரு. கே. எ. வகாப்] [1975 ஏப்ரல் 4

அதற்குக் காரணம்—எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியது போல இந்த ஆட்சியும்—மற்றவர்களும்—இந்தத் துறையை ஏற்று நடத்துகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும்—எவ்வளவு மனிதாபிமான உணர்வோடு வாடி வதங்குகிற தொழிலாளர்களுடைய பிரச்சினையை அணுகி அந்தத் தொழிலாளர்களுக்கு—முதலாளிகளிடத்தில் பேசி நன்மைகள் பலவற்றைச் செய்து வருகிறார்கள்—என்பதை விஸ்தாரமாக —விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் தொழிலாளர் களுக்கு எத்தனையோ உதவிகளை—சலுகைகளைச் செய்த பிறகும் தொழிலாளர் களுடைய வாழ்க்கையில் வளம் காணப்படுகிறதா என்றால்—இன்னமும் அவர்களது வாழ்க்கையில் நாம் வளத்தைக் காண முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன ?

குறிப்பாக, இன்றைக்கு தொழிலாளர்களது மத்தியில் அரசியல் கட்சிகள் தங்கள் கட்சியின் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி—தொழிலாளர்களை தங்களுக் குச் சாதகமாக—தங்கள் கட்சிக்கு சாதகமாக—தங்கள் லட்சியங்களுக்குக் கருவியாக ஆக்கிக்கொண்டு—அவர்களிடத்திலே குழப்பத்தை ஏற்படுத்தி —அவர்களது பிரச்சினைகளை சிக்கலானதாக்கி அதனால் பலயிடங்களில் பல்லாயி ரக்கணக்கான தொழிலாளர்கள் அவதிப்படுகிற நிலைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மாறவேண்டுமென்றால் ஏற்கனவே பலர் சொன்னார்கள். இங்கே கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டுமென்ற கருத்தை எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டால்—தொழிலாளர்களது வாழ்வில் உண்மையான விடிவுகாலமாக அதுதான் இருக்க முடியும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசியல் கட்சிகள் தொழிலாளர்களை தங்களுக்கு ஆதரவாகப் பயன் படுத்திக்கொள்கிற நிலை மாறவேண்டும். சில பொய்யான வாதங்கள்—ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்கத்திற்கு வந்தால்தான் பல சலுகைகளைப் பெற முடியும் என்று நினைப்பதோ—கம்யூனிஸ்ட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்தால்தான்—எல்லாவற்றையும் போராடிப் பெற முடியும்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னாரே—முதலாளிகளை எல்லாம் சிறையில் தள்ள வேண்டுமென்று—அந்த அளவுக்கு தொழிலாளர்களது மனதை வீராவேச மாகப் பேசி திருப்பி ஈர்ப்பதோ—நான் சோஷலிஸ்டு—முஸ்லிம் லீக் ஆகிய எல்லாக் கட்சிகளைப் பற்றியும் தான் சொல்கிறேன்—இப்படி தொழிலாளர்களை தங்களது அரசியல் கட்சிக்குப் பயன்படுத்துகிற நிலை இருக்கிற வரைக்கும் தொழிலாளர்களது வாழ்வில் வளத்தைக் காண முடியாது.



1975 ஏப்ரல் 4] [திரு. கே. எ. வகாப்]

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும்—அதுவும் அரசியல் கட்சி சார்பற்றதாக அமையவேண்டும். அதற்கு எல்லாக் கட்சிக் காரர்களும் உறுதுணையாக இருக்கவேண்டும்—அந்த முறையில் ஒரு தொழி லுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் என்கிற அடிப்படையில் நமது அரசு ஒரு சட்டத்தையே கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால் இந்த அரசும்—தொழிலாளர் நல அமைச்சரும் தொழிலாளர்களால் பாராட்டப் பெறுவார்கள்.

அது மட்டுமல்ல. தொழிலாளர்களது பிரச்சினையை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும். அரசியல் கட்சிகள் எல்லாம் அதற்கு உதவியாக இருக்கலாம். மதங்களும் உதவலாம், இஸ்லாமிய மார்க்கத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. "தொழிலாளியின் வியர்வை உலர்வதற்கு முன்னால் கூலியைக் கொடு" என்பதாக ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அண்ணலார் நபிநாயகம் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் நபிநாயகத்திடம் ஒரு தொழிலாளி தம் கையைக் கொடுத்த போது அழுக்காக இருந்த அந்தத் தொழிலாளியின் கையை அவர் தம் கண்ணில் ஒத்திக்கொண்டாராம். 'இவ்வளவு பங்கரையாக—அழுக்காக இருக்கிற கையைப்போய் நீங்கள் என் கண்ணில் ஒத்திக்கொள்கிறீர்கள் ?" என்று அருகில் இருந்தவர் கேட்டதற்கு நபிநாயகம் அவர்கள் "நான் அந்தக் கையைப் பிடித்தபோது அதில் ஏற்பட்டுள்ள காப்பு—உறப்பு தெரிந்தது. அதுதான் உண்மையான தொழிலாளியின் கை—அவன் இறைவனுடைய பிரதிநிதி—ஆகவே கண்ணில் ஒற்றிக்கொண்டேன்" என்றாராம்.

இன்னும் கவிஞர்கள் எல்லாம் சொல்கிறார்களே,

"மங்கும் பொழுதளவும்
வாடித் தொழில் புரியும்

மக்களெல்லாம் இறைவன் வடிவல்லவோ ?"

என்று. இப்படி பலராலும் போற்றப்படுகிற தொழிலாளர் வர்க்கம் தம் வாழ்வில் வளம்பெற—ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான்—அரசியல் சார்பற்ற முறையில் அதுவும் பணியாற்றவேண்டும் என்கிற அடிப் படையில் தொழிற்சங்கங்கள் அமைய வழிவகுத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்த்தபொழுது, வேலை மிகமிக வேகமாக நடந்து கொண்டிருந்தது' என்று சொன்னார்கள். வேலை நிறுத்தத்தில் இப்படி மிகமிக வேகமாக வேலை நடக்கிறதேயென்று கேட்டதற்கு, நாங்கள் வேலை நிறுத்தம்தான் செய்கிறோம். ஆனால் எங்களுடைய உற்பத்தியைக் குறைக்க நாங்கள் விரும்பவில்லை. நாட்டு பொருளாதாரம் பாதிக்கக்கூடாது. எங்கள் முதலாளிகளுக்குச் சிரமம் ஏற்படுத்த வேண்டும். இங்கே மாதம் ஒன்றுக்கு 1,000 கார்கள் உற்பத்தியாகின்றன. நாங்கள் வேகமாக வேலை செய்து, 1,500 கார்கள் உற்பத்தி செய்வோம். அதிகமான கார்களை மார்க்கெட்டிலே விற்கமுடியாத நிலைமையை ஏற்படுத்தி, பொருளாதாரச் சிக்கலை முதலாளிகளுக்கு ஏற்படுத்தி, அந்தப் பொருளாதாரச் சிக்கலின் காரணமாக, அவர்களுக்கு ஸ்டிரைக்கைப் பற்றி தெரிவிக்கிறோம்' என்று சொல்கிறார்கள் அந்நாட்டுத் தொழிலாளிகள் என்றால், அணுகுண்டால் அழிந்த நாடு என்று சொல்கிறார்கள். அந்த நாடு, அமெரிக்காவோடு போட்டி போட்டு, இன்றைக்கு உச்சகட்டத்திலேயிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தொழிலாளிகளுக்கு வரவேண்டும். கிளர்ச்சி செய்வதுதான் தொழிலாளர்களுடைய கடமை என்று எண்ணாமல் நாம் நாட்டுக்காக உழைக்க வேண்டும்—தேசியப் பிரச்னை என்ன என்பதையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு விலைவாசி உயர்வுக்குப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிற காரணம், ரெயில்வே வேலை நிறுத்தம்தான் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு விலைவாசிப் பட்டியலைப் பார்க்கிறபொழுது, ரெயில்வே வேலை நிறுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட பல சூழ்நிலைகளின் காரணமாக, நாட்டினுடைய பொருளாதாரமே சீர் கெடுகிற நிலைமை ஏற்படுகிறதென்றால், தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்வதை ஒரு கடமையாகக் கொள்ளாமல், நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்ற அக்கறையோடு அதைச் செய்யவேண்டுமென்பதை நான் எடுத்துக் காட்டுவது அவசியமாக இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஜப்பானிலே முதலாளிகளுக்குச் சிரமம் கொடுக்க, தொழிலாளிகள் கூடுதலாக உழைத்து சிக்கலை உண்டாக்கியிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இங்கேயிருக்கிற தொழிலாளிகளும் முதலாளிகள் வேண்டுமென்றே இயந்திரங்களை ஓட்டாமலிருந்தால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். 'லே ஆப்' விட்டால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். 'லாக் அவுட்' பண்ணாமலிருந்தால் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள். அரசு அதற்கு ஆதரவு அளித்து, ஏற்பாடு செய்தால், அம்மாதிரி தொழிலாளர்கள் வேலை செய்யத் தயாராக இருப்பார்கள்.





**திரு. கே. எ. வகாப்:** அரசுக்கும் முதலாளிகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இங்கே தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் பிரச்னை ஏற்படுகிறது. ஒன்று வேலையைச் செய்யாமல் முதலாளிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்த முடியும். இன்னொன்று, அதிகமான வேலை செய்து அதிலே முதலாளிகளுக்கு சிக்கலை ஏற்படுத்த வேண்டும். இரண்டாவது வகையில் அவர்கள் செய்கிறார்கள் என்றால், நாட்டினுடைய பொருளாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும், ஸ்டிரைக்கும் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் செய்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேன். நாம் ஓரே வழியிலே சிந்திக்கக் கூடாது. வேறு பல வழிகளை நினைத்து எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்று சிந்திப்பதற்காகத்தான் இந்த உதாரணத்தைச் சொல்கிறேன் (குறுக்கீடு). நம்முடைய நாட்டுத் தொழிலாளிகளை நான் மோசம் என்று சொல்லவில்லை. கட்சிகள் ஈடுபடாமல் இருந்தால், மற்ற குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால், உலகத்திலேயே சிறந்த தொழிலாளிகளாகத் தான் இருப்பார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** He is scandalising the workers. இந்த நாட்டுத் தொழிலாளிகள் ஏதோ உற்பத்தி செய்யாதது போலவும் அங்கே இருப்பவர்கள் வேலை செய்து உற்பத்தி செய்வது போலவும் பேசுகிறார்கள். 6 குருடர்கள் யானையைத் தொட்டுப் பார்த்த கதை மாதிரி பேசுகிறார்கள். இந்த நாட்டுத் தொழிலாளர்கள் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஊதியம் குறைந்து வந்த போதிலுங்கூட உற்பத்தியை கூட்டியிருக்கிறது. அப்படி தங்கள் குறைந்த ஊதியத்திற்கு அதிக உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்று "National Labour Commission" அவர்கள் செய்யும்போது, ஜப்பான் நாட்டுத் தொழிலாளர்கள்தான் தேசபக்தி கொண்டவர்கள் போலவும் இங்குள்ளவர்களுக்கு தேசபக்தி இல்லாதது போலவும் தொடர்ந்து திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறார். அது முறையல்ல.

That is scandalising our workers.

**திரு. கே. எ. வகாப்:** தொழிலாளர்களிடத்திலே அவர்களுக்குள்ள அக்கறையிலே சம பங்கு எங்களுக்கும் உண்டு. நம்முடைய நாட்டுத் தொழிலாளர்களை இழித்தோ, குறைத்தோ நான் சொல்லவில்லை. உதாரணத்திற்காக அதை நான் எடுத்துச் சொன்னேன். நீங்கள் நல்ல கோணத்திலேயிருந்து பார்ப்பீர்களென்று நினைத்து நான் சொன்னேன். ஆனால், அதற்கு உள் அர்த்தம் கற்பித்துத் தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் இருக்கிறோம் என்று பாவனை உண்டாகிற அளவுக்கு நீங்கள் நினைக்க வேண்டாம். நாங்கள்

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள், நெசவாளர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள்.

பீடித் தொழிலாளர்களது பரிதாபகரமான நிலையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் எடுத்துச்சொன்னார். பீடித்தொழிலாளர்களிடையேதான் 75 பங்கு க்ஷயரோகக்காரர்கள் இருக்கிறார்கள். அந்த வியாதி அந்தத் தொழிலாளர்களுக்குத்தான் அதிகம் ஏற்படுகிறது. காரணம் என்ன? அவர்கள் வேலை செய்கிற இடம்—ஒரு சிறிய அறையில் ஆண்களும்—பெண்களும்—குறைந்த கூலியில்—குறைந்த உணவை உண்டு வேலை செய்கிற நிலையினால் ஏற்படுகிறது. அதனால் அவர்களது உடல்நலம் கெடுகிறது. அவர்கள் வாங்குகிற கூலி போதுமானதாக இல்லை. அவர்கள் ஒன்றுபட்டு போராட்டம் நடத்தக்கூடிய வாய்ப்பும் இல்லை. அந்தத் தொழிலில் பெரும்பாலும் இஸ்லாமிய மக்கள்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தோல்பதனிடும் தொழிலை எடுத்துக்கொண்டால் முழுக்க முழுக்க அரிசன மக்கள்தான். நெசவாளர்களும் ஒன்றுபட்டு போராடுகிற நிலையில் இல்லை. அவர்களுக்கு அரசாங்கம்தான் உதவி செய்யவேண்டும். கட்சியின் அடிப்படையில் பீடித் தொழிலாளர்கள்—நெசவாளர்கள் போராட்டம் செய்தால்தான் அவர்களுக்கு வாழ்வில் வளம் கிடைக்கும் என்கிற நிலையை எதிர்பார்த்து இருக்க முடியாது.

பீடித் தொழிலை எடுத்துக்கொண்டால் முதலாளிகள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய வரியும் போடப்படுகிறது என்று எடுத்துக் காட்டினார்கள். பீடி முதலாளிகளும் கூட பொல்லாதவர்கள் அல்ல. அவர்களிடையே நல்லவர்களும் இருக்கிறார்கள். அரசு அவர்களிடையே பேச்சு வார்த்தை நடத்தினால் ஒரு சுமுகமான உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள அவர்களும் முன்வருவார்கள். பீடித்தொழிலில் 90 பங்கு முஸ்லிம்கள்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். தோல் பதனிடும் தொழிலில் 100-க்கு 100 பேரும் அரிசன மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படித்தான் நெசவுத் தொழிலிலே, சமுதாயத்திலே இருக்கிற எல்லா மக்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி பாதுகாப்பு இல்லாத தொழில்களில் தொழிலாளர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு தர வேண்டும். 17 தொழில்களுக்காக இந்த நாடே அதிர்ந்துவிடுகின்ற முறையில் பெரிய போராட்டங்கள்—அரசியல்—உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல்—நடந்தன. இங்கே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், [illegible]களாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அதன்காரணமாக உங்கள் முன்னால்



குறைகளை எடுத்துச் சொல்ல அச்சப்படுகின்ற தொழிலாளர்கள், தங்கள் பசியைப் பற்றி உங்களிடம் எடுத்துச் சொல்லத் தைரியம் இல்லாத தொழிலாளர்கள்—அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அந்த அடிப்படையிலே பீடி தொழிலாளர்களுக்கும், தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும், நெசவுத் தொழிலாளர்களுக்கும் நீங்கள் ஒரு முக்கியமான இடம் தரவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, இந்த நாட்டிலே பாய் நெய்கின்ற தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கிலே இருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்கள் என்ற கணக்கிலேகூட வருவதில்லை. அவர்கள் ஒரு கோரைப் பாய் நெய்தால் ஒரு நாளைக்கு ரூபாய் 1½, ரூபாய் 1¼ தான் வருகிறது. அரசாங்க ஆதரவிலே அங்கங்கே கூட்டுறவு சங்கங்களை வைத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் வாங்கிவிடுகிறார்கள்—கொடுப்பதில்லை என்று தொழில் கூட்டுறவு சங்கங்கள்பற்றி புகார்கள் வருகின்றன. தொழில் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கிற ரூபாய் 50-ஐ, ரூபாய் 100-ஐச் சாப்பிட்டு விடுகிறார்கள், சங்கங்களே இருக்க முடியவில்லை. சங்கங்களே இல்லையென்ற நிலைமையாகிவிட்டது. அந்தப் பாய் நெய்யும் தொழிலில் 50,000 அல்லது 1 இலட்சம் பேர்கள் இருப்பார்கள். குழு அமைத்து உதவி செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களே, அதிலே அவர்களையும்—அப்படிப்பட்டவர்களையும் சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

என்னுடைய பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இராணிப்பேட்டை தொழில் பகுதியிலே அதிகமாக கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் நடப்பதில்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அண்மையிலேதான் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. அதிலே, நீங்கள் வேகமாக ஈடுபட்டதன் காரணமாக, 4, 5 நாட்களிலே தீர்த்து விட்டீர்கள். தொழிலாளர்களும் நல்ல தொழிலாளர்கள். தொழிலாளர்களிடத்திலே ஒரு கட்டுப்பாடு, நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியிருக்கிறது.

இங்கே ஜப்பான் பற்றி குறிப்பிட்டார்கள். நான் சென்றிருந்தபோது கூடக் கண்டு வந்திருக்கிறேன். வேலை நிறுத்தம் என்றால் அந்தத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்கள் கருப்பு பாட்ஜ் அணிந்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் வேலை நிறுத்தத்தின் அடையாளம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் ஜப்பானுக்குப் போய் வந்த பிறகு ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள். ஒரு கார் தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அதைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். அங்கே சென்று

மனிதாபிமானத்துடனும், மார்க்க ரீதியுடனும் அவர்களை ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நாட்டினுடைய பொருளாதாரத்தை மனதில் வைத்துச் செய்யவேண்டுமென்றுதான் சொல்கிறேன். அரசியல் கட்சிகள் ஈடுபடாம லிருந்தால், நம்முடைய தொழிலாளர்கள் அதிகமாக உழைப்பவர்கள், சின்சியராக உழைப்பவர்கள், தீவிரமாக உழைப்பவர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதைவிட அதிகமாகச் செய்ய முடியும் என்ற நிலையிலே நான் இதைச் சொல்கிறேன்.

பல தொழிற்பேட்டைகள் என்னுடைய தொகுதியிலே உற்பத்தியாகி வருகின்றன. அத் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டிய நிலைமையிருக்கிறது. குடி நீர் வசதி செய்து கொடுக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் தன்னுடைய பணியைத் தொடங்கி வருகிறது. தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகள் குறைவாக இருக்கிற காரணத்தால், இராணிப்பேட்டையில் ஒரு தொழிலாளர் நல ஆஸ்பத்திரியைத் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி இரண்டொரு கருத்துக்களை கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நகரங்களிலே மட்டுமல்ல, வெளியூர் களிலும் வீட்டு வசதி வாரியம் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. நான் கூட அன்றைய தினம் கேள்வி நேரத்திலே கேள்வி கேட்கும்போது, நகரங்களை தான் நீங்கள் அதிகமாக கவனிக்கிறீர்கள், பேரூராட்சிகளைக்கூட நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும், பேரூராட்சிகளிலே வீட்டு வசதிகள் அதிகமாக இல்லாத காரணத்தாலே, வெளியூரிலேயிருந்து வருகிறவர்கள் அதிகமாக இருப்பதாலே தங்க முடியவில்லை—வீட்டு வாடகை அதிகமாகப் போகிறது. என்று சொன்னேன். ஆகவே, ஹட்கோ உதவியைப் பெற்று வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு ஊரிலே 40, 50 வீடுகள் இருந்தால் போதாது, குறைந்த பட்சம் 100 வீடுகள் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பொருளாதார ரீதியிலே அது சரியாக இருக்கலாம். ஆனால், அப்படி 40, 50 வீடுகளாக இருந்தாலும், பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட வசதிகளை ஏற்படுத்தி, ஹட்கோ மூலமாக வாங்குவது, மத்திய அரசாங்க உதவி பெறுவது, மாநில அரசு உதவியுடனுைவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-30)

வீட்டு வசதி வாரியம் சென்னை நகரில் முன்பு வீடுகளைக் கட்டிக் கொடுத்து வந்தது என்று சொன்னார்கள். ஆனால் அண்மைக் காலத்திலே அந்தத்





திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஏன் என்று தெரியவில்லை. பல நடுத்தர மக்கள் வீடுகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள், வீட்டு வசதி வாரியமே வீடுகளைக் கட்டித்தருகின்ற பொறுப்பையும் எடுத்துக்கொண்டு வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தின் எல்லாப் பணிகளையும் நாடே கண்டு பாராட்டுகிறது என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: ஒரு கிளாரிபிகேஷன், பேசுகின்றபோது இங்கே இருக்கிற தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். மார்க்கெட்டிலே எவ்வளவு சிப்பாக உழைப்பு . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: அவர் சொன்ன கருத்திலே சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். ஜப்பான் நாட்டிலே உழைப்பு சிப்பாக இருக்கிறது என்று கருதுகிறார்களா? அங்கே உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் போது உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருப்பதாகவும் இங்கேயுள்ள தொழி லாளர்கள் உற்பத்தியைப் பெருக்காமல் இருக்கிறார்கள் என்ற கருத்து அவருடைய பேச்சில் வருகிறது . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அவருடைய கருத்தை அவர் சொல்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: அவரைக் குற்றம் சொல்லவில்லை. எனக்குத் தெளிவு வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: ஒரு மெம்பர் பேசினார், கிளாரிபிகேஷன் கேட்கக் கூடாதா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): டைம் இல்லையே, 10½ மணியாகிவிடும், விவாதம் 5½ மணி நேரம் நடக்க வேண்டிய நிலைமை வரும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஜப்பான், ஜப்பான் என்று அடிக்கடி சொல்லியதால் சொல்லிவிடுகிறேன். ஜப்பானுக்கு நானும் போயிருக்கிறேன், ஆனால் அப்போதெல்லாம் அமைச்சராக வருவேன் என்று எதிர்பார்க்காத

காலம் அது. ஜப்பான் நாட்டிலே வேலை நிறுத்தம் என்றால் கறுப்பு பேட்ஜ் அல்லது சிவப்பு பேட்ஜ் போடுவார்கள். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் தொடர்ந்து போடுவார்களானால் தொழிலாளர்கள் மனக்குறைவாக இருக்கிறார்கள் என்று முதலாளிகள் வேதனைப்பட்டு பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள். அந்த வகையிலேதான் நான் பத்திரிகையிலே கட்டுரையிலே படித்தேன். திரு. வகாப் அவர்கள் சொல்வதைப் போன்று உற்பத்தியைப் பெருக்குகிறார்களா என்பது எல்லாம் அறியப்படவேண்டிய ஒன்று. இந்து பத்திரிகையில் ஒரு கட்டுரையில்கூட நான் அப்படித்தான் படித்தேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** நான் கேட்பது அதுவல்ல, யாரோ சொல்வதற்கு இடம் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி):** யாரோ அல்ல, அமைச்சர் சொல்கிறார்.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் சொல்ல வந்தது எல்லாம் மூலதனத்திற்கு உடைமையாளர்களாக இருக்கிற முதலாளிகள், உழைப்பின் பிரதிநிதிகளாக இருக்கிற தொழிலாளர்களை சமமாக நடத்தினால் நல்லது. அதைப் பற்றிப் பேசிவிட்டு ஜப்பானைப் பற்றிப் பேசினால் நல்லதாக இருக்கும்.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வகாப் அவர்கள் தவறான ஒரு தகவலை தருகிறார்கள். ஜப்பான் நாட்டிலே அப்போது கார்கள் விற்பனையாகாத நேரம் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி):** எங்களுக்கு என்ன தெரியும், ஜப்பான் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** தீர்ப்பு சொல்லுங்கள், கார் உற்பத்தியை அதிகரித்து அதிகரித்து வேல்யூவை குறைக்கவேண்டுமென்ற முறையிலே முதலாளிகளுக்கு கஷ்டம் ஏற்படுத்துகின்ற முறையிலே அவர்கள் செய்தார்கள். நீங்கள் சொல்கிற மாதிரி யுட்டோபியன் நிலையிலிருந்து கொண்டு செய்யவில்லை, இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** இரண்டு விதங்களில் முதலாளிகளுக்குச் கஷ்டம் ஏற்படுத்தலாம். வேலை நிறுத்தம் செய்யலாம். இல்லாவிட்டால் உற்பத்தியை அதிகம் செய்து நெருக்கடியை ஏற்படுத்தலாம். ஜப்பான் சிறிய நாடு, இடநெருக்கடி இருக்கிறது. கப்பல் தொழிலாக இருந்தாலும் கார் தொழிலாக இருந்தாலும் இட நெருக்கடி ஏற்படுகிறது, ஆகவே அதிலே சிரமம் ஏற்படுத்தி



வேலை நிறுத்தத்தை காட்டவேண்டுமென்ற முறையிலே செய்கிறார்கள். நம்முடைய தொழிலாளர்களுக்கு களங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை, நல்ல எண்ணத்தில்தான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம், தொழிலாளர் நலத் துறை ஆகிய மானியங்களிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தமிழகத்திலே சென்னை நகரத்திலே மட்டுமல்ல, மாவட்டத் தலைநகரங்களிலும் சில வட்டங்களிலும் வீட்டு வசதி வாரியம் மிகப் பரவலாகவும் செம்மையாகவும் நடைபெறுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சமுதாயத்திலே உள்ள பல்வேறு வருமானம் உள்ளவர்களுக்கும் அவரவர்களுடைய சக்திக்கும் ஆற்றலுக்கும் பொருளாதார எல்லைக்கும் உட்பட்ட முறையில் வீடுகளைக் கட்டுகின்ற நல்ல பணியை இந்த வாரியம் செய்து வருகிறது, அதைப்போலவே சென்னை நகரத்திலே குடிசை மாற்று வாரியமும் நல்ல பணிகளைச் செய்து வருகிறது, அந்தப் பணிகளை மாவட்டத் தலைநகர்களிலே வீட்டுவசதி வாரியமே செய்கிறது, வீட்டு வசதி வாரியம் எதிர்காலத்திலே பணிகளை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று சமுதாயத்திலே இருக்கின்ற பல்வேறு தரப்பு வருமானம் உடையவர்களுக்கும் ஓரளவிற்கு சமுதாயத்தின் மேல் தட்டிலே இருக்கின்றவர்கள் எப்படியாவது தங்களுடைய வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வசதியிருக்கிறது, ஆனால் சாதாரண நிலையில் உள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கக்கூடிய முறையில் ஸ்பெஷல் லோ காஸ்ட் ஹவுஸிங் ஸ்கீம் என்ற முறையிலே கட்டித்தர வேண்டும். மிடில் இன்கம் குரூப் என்று சொல்லக்கூடியவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றால் 35 ஆயிரம் ரூபாய் 40 ஆயிரம் ரூபாய் ஆகிறது, அந்தத் திட்டங்களை விட குறைந்த விலையில் உள்ள 15 ஆயிரம் ரூபாய் 20 ஆயிரம் ரூபாய் விலையில் உள்ள வீடுகளைக் கட்டித்தரவேண்டும். அதிகமான எண்ணிக்கையில் கட்டுவதற்கு வாரியம் முயற்சிக்கவேண்டும்.

இந்த சமுதாயத்திலே உள்ள நெசவாளப் பெருமக்களுக்கு இந்த அரசு பல்வேறு நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் சக்கு மூட்டக்கிடப்பதைப் போக்கக்கூடிய வகையில் கோடிக்கணக்கான [illegible] அரசு ஒதுக்கக்கூடிய திட்டத்தை அறிவித்தார்கள். அதைப்போலவே

விவசாயிகளுக்கு 100 டன்னுக விளைய வேண்டிய இடத்தில் 70 டன், 80 டன் என்று ஆகியிருக்கிறது. இந்த நஷ்டத்தையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த கம்பல்சரி டெபாசிட் ஸ்கீமைப்பற்றி அநேகமாக இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சியினரும் எதிர்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மத்தியிலே ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே கடுமையாக எதிர்த்தார்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்திருந்தாலும் எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையும் மத்திய அரசு கவனிக்க வேண்டும். விலைவாசியேற்றம், மின்சார வெட்டு ஆகியவைகள் உள்ள இந்த நேரத்தில் அதிலேயிருந்து தொழிலாளர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உதவி சபாநாயகரவர்களே, ரொம்பக் கஷ்டப்பட்டு 10 நிமிடம் கொடுத்திருக்கிறீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடம் அல்ல, 5 நிமிடங்கள்தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 10 நிமிடங்கள்தான். இந்த லேபர் டிபார்ட்மெண்டில் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இங்கே சட்டம் எப்படியெல்லாம் அமல் நடத்துவதில் பின் தங்கியிருக்கிறது என்று பார்த்தால் In registered factory இல் இன்ஸ்பெக்ஷனே இல்லை. (Child labour– ஐ அமர்த்தக்கூடாது என்று இருந்தாலும், நெசவுத் தொழிலாகட்டும், இன்னும் ஹோட்டல் தொழிலாகட்டும், அங்கேயெல்லாம் 10 வயது 12 வயதுக்குட்பட்டவர்களையெல்லாம் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். அவர்கள் படிக்க வேண்டிய பையன்கள், அவர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். சட்டம் போட்டுப் பயனில்லை, அதை அமல் நடத்தினால்தான் பயனிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக Industrial Disputes Act என்று பார்த்தோமானால் 7 பேர் சேர்ந்துகொண்டு ஒரு யூனியனை ஆரம்பிக்கலாம் என்று இருக்கும்பொழுது அரசியல் கட்சிகள் கட்சிக்குக் கட்சி ஒரு யூனியன் என்று வைத்துக் கொண்டு, 8 யூனியன்கள் என்று வைத்துக் கொள்கிறார்கள். ஒரே





கட்சியிலேயேகூட இரண்டு இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனை எடுத்துக் கொண்டால் 2 தி.மு.க. வினர் இரண்டு யூனியன்களை வைத்து போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பல யூனியன்களை வைக்கும் நிலைமையிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் சட்டமாக இருந்தாலும்கூட ஒரு தொழிலுக்கு ஓரிரு தொழிற் சங்கங்களுக்கு மேல் இருக்கக் கூடாது, ஒரே தொழிற்சாலையாக இருந்தால் சில மால்-பிராக்டிஸஸ் வந்துவிடும், ஆகவே, ஒன்றிரண்டுக்கு மேல் இருக்கக் கூடாது என்று செய்ய வேண்டும். எவ்வளவு மெம்பர்ஷிப் இருக்க வேண்டும் என்று வரையறுக்க வேண்டும். இப்பொழுது போட்டிருக்கும் ஆக்டின்படி 7 பேர் என்றால் பல சங்கங்கள் என்று ஏற்பட்டு எந்தப் பிரச்னையும் தீர்க்கப்பட முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்தச் சங்கங்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் தலைவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். எல்லோரும் ஆர்கனைஸ்ட் லேபரிலேயே தலைவர்களாக இருக்கிறார்கள். ஏன் அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்கும் தலைமை தாங்கக் கூடாது? ஆர்கனைஸ்ட் லேபரிலே என்றால் சந்தா கிடைக்கும். அன்-ஆர்கனைஸ்ட் லேபரிலே சந்தா கிடைக்காது.

**Mr. DEPUTY SPEAKER:** How are you concerned? You are not a Labour Leader.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் சந்தா கிடைக்கும், அதற்காகத் தொழிலாளர் தலைவர்களெல்லாம் ஆர்கனைஸ்ட் லேபரைத் தேடிச் செல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அம்மையார் அவர்கள் ஆர்கனைஸ்ட் லேபரிலும் இல்லை, அன்-ஆர்கனைஸ்ட் லேபரிலும் இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை குமாரசாமி அவர்கள் சொல்லிக்கொள்வார்கள், நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் இவர்களைச் சொல்லவில்லை, வெளியிலே இருப்பவர்களைப்பற்றிச் சொல்கிறேன். 80 சதவிகிதம் அன்-ஆர்கனைஸ்ட் லேபரர்களுக்கு சரியான கூலி இல்லை, மற்ற வசதிகள் இல்லை, வேலை நிரந்தரம் இல்லை. கமிட்டி போட்டிருக்கிறார்கள், அப்படிக் கமிட்டி போட்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. வேலையே நிரந்தரமாக்கப்படவில்லையே, அவர்கள் என்ன செய்வார்கள். அவர்களது கூலியும் மிகமிகக்

அவர்களை அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றக்கூடிய வகையிலே பெரும் அளவிலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தரவேண்டும். இங்கே உள்ள விளக்கவுரையில் நெசவாளப் பெருமக்களுக்கு சில மாவட்டங்களிலே ஆரம்பித்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள், அதிலே செங்கற்பட்டு, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படும் என்று இருக்கிறது. எங்கள் கோவை மாவட்டத்திலே அதிகமான நெசவாளர்கள் இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக எங்கள் கிராமத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் நெசவாளர்கள் இருக்கிறார்கள், முழுக்க முழுக்க நெசவாளர்கள் இருக்கக்கூடிய கிராமமாக இருக்கிறது, அங்கேயுள்ளவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டும். ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டை சேர்ந்தவர்களுக்கு தாசில்தார், ஆர். டி. ஓ. போன்றவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன, அதைப்போலவே நீதித்துறையில் உள்ள மாஜிஸ்திரேட், முன்சிப் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன, ஆனால் காவல்துறையில் உள்ளவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படவில்லை, ஒரு சமயம் அவர்கள் இதற்காக இந்தத் துறையை அணுகவில்லையோ என்று நினைக்கிறேன். அவர்கள் அணுகினால் அதை அனுசரணையாகப் பரிசீலித்து அந்தத் துறையிலேயும் உள்ள இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். தக்கைக் கல் தயார் செய்வதற்கான தொழிற்சாலை என்னூரிலே இருக்கிறது. இந்தக் குறிப்பிலே மத்திய அரசு கொடுத்த நிதியை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கல் செங்கல்லைவிட நான்கில் ஒரு பாகம்தான் கனம் உள்ளதாக இருக்கிறது. கட்டுமானப் பணியிலும் விரைவில் கட்டலாம், விரைவிலே அடுக்கிவிடலாம் என்று சொல்கிறார்கள். எனவே அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை அமைச்சரவர்கள் எப்படியாவது கண்டுபிடித்து, இந்தச் சென்னையிலே உற்பத்தி செய்யும் அந்தக் கல்லை மாவட்டப் பணிகளுக்குக்கூடப் பயன்படுத்தச் செய்ய வேண்டும். அதனால் கட்டுமானச் செலவும் குறையும், கூலி கொடுக்கின்ற செலவும் மிகவும் குறையும். இப்படிப்பட்ட கற்களை அதிகமாக உற்பத்தி செய்யும் வகையில் அந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் நிறையக் கற்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மற்ற ஜன்னல் கதவுகளைப் பொறுத்த வரையில் 'வுட் ஒர்க்ஸ்' அமைப்பதாக இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். அதை விரைவில் ஆரம்பித்து, அந்தச் சாமான்களை சென்னையில்



மட்டுமல்லாமல் இந்தப் பணி நடைபெறும் அத்தனை மாவட்டங்களுக்கும் அனுப்பினால் அந்த வீடுகளினுடைய செலவு குறையும், 30,000 ரூபாய் என்று ஆகின்ற செலவு 20,000 ரூபாய், 25,000 ரூபாய் என்ற அளவிற்குக் குறையும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள மரத்தை வாங்கிச் செய்வது என்றால் அதிக விலையாகிறது. இப்படி மத்தியிலே 'வுட் ஒர்க்ஸ்' என்று ஆரம்பித்தால் விலையும் குறையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வீட்டு வசதி வாரியத்தினுடைய பணிகள் கிராமங்களிலும் தெரிகின்ற அளவில் செய்ய வேண்டும். இன்றைக்கு மாவட்ட அளவிலும், ஒருசில இடங்களில் வட்ட அளவிலும் இருக்கிறது. அதை இன்னும் கிராமப்புறங்களிலும் தெரியும் அளவில் மேலான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயுள்ள பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமப்புறங்களிலேயிருந்து வந்தவர்கள். இம்மாதிரி பணி பரவலாக நடக்கிறது என்று சொல்கிறார்கள், ஆனால் நம்முடைய பக்கத்தில் நடக்கவில்லையே என்ற ஆதங்கத்தோடு கேட்கிறார்கள். எனவே, எங்கே புறம்போக்கு நிலங்கள் அல்லது வீடு கட்டுவதற்கான நிலங்கள் கிடைக்கிறதோ அதைப்போன்ற இடங்களிலேயெல்லாம் அந்தந்த ரீஜினல் ஆபீசிலே உள்ள அதிகாரிகள் ஆலமாகப் பரிசீலித்து இந்த வீடு கட்டும் திட்டத்தை பரவலாக்கி, வட்டத் தலைநகரங்களிலும், கிராமப்புறங்களிலும் வசதி கிடைக்கும் அளவிற்கு இதனுடைய எதிர்காலப் பணி அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. இந்தத் தொழிலாளர் மானியத்தின்மீது ஒரேயொரு கருத்தைமட்டும் சொல்கிறேன். இந்த அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொல்லியதைப்போல பல்வேறு பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றன. சர்க்கரைத் தொழிலில் 15,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததைப்பற்றிச் சொன்னார்கள். அதோடு கூட சமுதாய நிலைமையையும் கொஞ்சம் பார்க்க வேண்டும். 15,000 தொழிலாளர்களைப் பற்றிப் பேசும் நேரத்தில் கரும்பு ஆட்டும் தொழிலாளர்கள் 50,000 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தச் சர்க்கரைத் தொழிலில் உள்ள தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலாவது அவர்களுக்குத் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த கரும்பு ஆட்டும் தொழிலாளர்கள் வாயில்லாப் பூச்சிகளாக, அவர்களுடைய வேலையில்லாத பிரச்னையை எடுத்துச் சொல்ல யாரும் இல்லாத நிலையிலிருக்கிறார்கள். அதையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைவாக இருக்கிறது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் வசதி படைத்த தொழிலாளர்களுக்குச் செய்வதைக் காட்டிலும் வசதியில்லாத தொழிலாளர்களுக்கு என்ன செய்கிறோம் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அரசாங்க இலாக்காக்களால் நடத்தப்படும் பல தொழிற்சாலைகளிலேயாவது தொழிலாளர்களுக்கு உரிமை கொடுக்கப்படுகிறதா? முதலாளிகளைப் பற்றிச் சொல்கிறார்கள், ஆனால் சில அதிகாரிகள் முதலாளிகளைவிட மோசமாக இருக்கிறார்கள். இவர்கள் முதல் போட்டுச் செய்வது மாதிரி நடந்து கொள்கிறார்கள். பப்ளிக் அண்டர்கேக்கிங் கீழ் அரசாங்கம் நடத்தும் டான்சியில் தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்கிறார்களா?

Government should be an example for others; you are not an example now.

இங்கே பி. டபிள்யூ. டி.யை எடுத்துக்கொண்டாலும் எத்தனை பியூன்கள் 3 பைசாகூட இல்லாமல் போகிறார்கள். கேஷ்வல் லேபர் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள், அவர்களுக்குப் பென்ஷன் இல்லை. இப்படிப்பட்ட அளவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் நடத்துவதில் முதலில் முறையாக நடத்திவிட்டு மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும், அப்படியில்லாமல் ஊருக்கு மட்டும் என்ன உபதேசம் செய்ய வேண்டியிருக்கிறது? முதலில் நீங்கள் நடத்திக் காட்டுங்கள். எப்படி வசதி கொடுப்பது. 5 வருடங்களுக்குமேல் யார் வேலை செய்திருந்தாலும் அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று செய்யுங்கள். ராமுண்ணி மேனன் ரிப்போர்ட்டில் ஹைவேஸ் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது பி. டபிள்யூ. டி.யிலும் Guest House-லும் உள்ள பணியாளர்கள் அழுகிறார்கள். நாங்கள் வீட்டிற்குப் போனால் எங்களுக்கு பென்ஷன் கிடையாது என்று சொல்கிறார்கள். அவர்களை கேஷ்வல் லேபர் மாதிரி வைத்திருக்கிறார்கள். கேஷ்வல் லேபர், காண்ட்ராக்ட் லேபர், மஸ்டர் ரோல் என்று இம்மாதிரி இருப்பதை எப்பொழுது ஒழிக்கப் போகிறீர்கள்? இப்படி எலக்ட்ரிசிட்டி போர்டில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குச் சலுகைகள் இல்லை, அவர்களுக்கு எப்பொழுது சலுகைகளைச் செய்யப் போகிறீர்கள் என்று கட்டாயமாக யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'நம்பர் ஆஃப் மேன்-டேஸ்' பற்றிப் பார்த்தால் [illegible] இலட்சமாக இருந்தது 44 இலட்சம் என்று ஆகியிருக்கிறது. 44 இலட்சம் நாட்கள் என்றால் அது எவ்வளவு பெரிய தேசிய நஷ்டம் என்பதைச் சிந்திக்க



வேண்டும். உற்பத்தி பெருகினால்தான் பிரச்னைகளைச் சமாளிக்க முடியும். இப்படி 44 இலட்சம் நாட்களாக ஆகியிருப்பதோடு நீங்கள்வேறு மின்சார வெட்டு என்று சொல்லி அதனால் 'லே ஆஃப்' என்று சொல்கிறார்கள்.

இந்தியா மீட்டர்ஸ் என்று அம்பத்தூரில் இருக்கிறதே அதை ஏன் அரசு எடுக்கக்கூடாது? தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கும்பொழுதே யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தபிறகு அதை மூட விடக்கூடாது? எந்தக் காரணத்தைக் கொண்டும் மூடவிடக் கூடாது. எவ்வளவு பெரிய தொழிலதிபர்கள் அதில் இண்டரஸ்டட் ஆகயிருந்தாலும் சரி, அங்கே கிட்டத்தட்ட 750 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். 'லே ஆஃப்' என்றாலும் ஏதோ கொஞ்சமாக பர்மனெண்ட் தொழிலாளர்களுக்குப் பணம் கிடைக்கிறது, ஆனால் கேஷ்வல் லேபர்களுக்கு அதுவும் இல்லை. பர்மனெண்ட் லேபர்களுக்கு எப்படி மினிமம் வேஜஸ் என்று கொடுக்கிறார்களோ அந்த அளவிற்கு கேஷ்வல் லேபர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். கேஷ்வல் லேபர் காண்டிராக்ட் லேபர் என்று போட்டு அவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். இதையெல்லாம் போக்கினால்தான் தொழிலாளியின் பசியைத் தீர்க்க முடியும், ஓரளவு பிரச்சினையைத் தீர்க்க முடியும். இல்லையென்றால் நாம் பேசிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். சட்டம் போட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான். லேபர் ஒரு பக்கம் இருக்கும், தொழிலாளர்கள் தலைவர்கள் ஒரு பக்கம் இருப்பார்கள். இதிலே மாற்றம் ஒன்றும் ஏற்படாது.

வீட்டு வசதி பற்றி ஒரு வார்த்தை. மயிலாப்பூர் தொகுதி சாஸ்திரி நகரில் லோ இன்கம் குரூப், மிடில் இன்கம் குரூப் எல்லோரும் 1962ல் இரண்டாயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கி வீடு கட்டியிருக்கிறார்கள். இப்போது 1975ல் 6,950 ரூபாய் கட்டு என்று சொல்லுகிறார்கள். 13 வருஷத்திற்குப் பிறகு, சாதாரணமாக 12 வருஷத்திற்குப் பிறகு டைம் பார் ஆகிவிடும். அவர்கள் எப்படி இந்தத் தொகையைக் கொடுப்பது? இப்படி வீட்டு வசதி வாரியம் இஷ்டத்திற்கு விலையை ஏற்றி வருஷா வருஷம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டாயிரம் என்று நம்பி வாங்கியவர்களை இப்போது திடீரென்று ரூ. 6,950 கட்டு என்று சொன்னால் எப்படி?

குடிசை மாற்று வாரியம் கட்டும் வீட்டுக்குப் பத்து ரூபாய் வாடகைக்கு ஒரு டெனமெண்ட் என்று சொன்னார்கள். இப்போது பத்து ரூபாய்க்குக் கொடுக்கிறீர்களா? இப்போது அதிலே குடியிருப்பவர் வேலை செய்தால் எச். ஆர். ஏ. அதற்கு மேல் 10 சதவிகிதம் என்றெல்லாம் போட்டு வாங்குகிறீர்கள் . . .

திரு. இராம. அரங்கண்ணல்: குடிசை மாற்று வாரியம் வசதி இல்லாத வீடு அளிக்கப்பட வேண்டிய ஏழைகளுக்காக ஏற்பட்டது. அங்கே ஒன்றை அல்லது இரண்டு சதவிகிதம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதிப் படி அரசாங்கம் அளிக்கிறது. அந்த வீட்டு வசதிப் படியை அளிக்க வேண்டுமென்பது அரசாங்க உத்தரவு. இப்போது அவர்களே வீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக தவணை முறையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். தவணை முறையில் மாதம் 25 ரூபாய் கட்டி நல்ல வீடுகளை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இருந்தாலும் முதலிலே 10 ரூபாய் வாடகையாகக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு இப்போது எச். ஆர். ஏ. பத்து சதவிகிதம் என்றெல்லாம் பிடிப்பது அநியாயம். திரும்ப இதுபற்றி யோசிக்க வேண்டும். அந்த வசதி இருந்தால் அவன் ஏற்கனவே குடிசையில் இருந்திருக்க மாட்டான், எங்காவது வாடகை கொடுத்துக் கொண்டு ஒரு வீட்டில் குடியிருந்திருப்பான். வசதி இல்லாத காரணத்தால் தான் குடிசையில் இருந்திருக்கிறான். இன்று நீங்கள் குடிசையையும் பிரித்துப் போட்டு விட்டு இந்த வாடகையைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படிக் கொடுக்க முடியும்? இதைப் பற்றிக் குடிசை மாற்று வாரியம் யோசிக்க வேண்டும்.

மினிமம் வேஜஸ் கமிட்டி என்று கூலி நிர்ணயம் செய்வதற்காக வைத்திருக்கிறார்கள். நெசவாளர்களானாலும் விவசாயிகளானாலும் இந்தக் கமிட்டி ஏற்கனவே வாங்கி வருகின்ற கூலிக்கும் குறைவாகத்தான் நிர்ணயிக்கிறார்கள். அந்த நிலையில் இந்தக் கமிட்டி எதற்காக? இந்தக் கமிட்டியைக் கலைத்து விடலாமே. அந்த மக்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதற்காக கூலி நிர்ணயம் செய்ய இருக்கும் கமிட்டி நடைமுறையில் இருக்கின்ற கூலியைவிடக் குறைத்து நிர்ணயம் செய்வது என்றால் இந்தக் கமிட்டி தேவையே இல்லை என்று கூறி இந்தக் கருத்துக்களோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முன்னாலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், மற்றவர்களும் இங்கு சொன்ன கருத்துக்களில் இருந்து இந்த அரசாங்கம் இருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு தொழிலாளர் நலப் பிரச்சினைகளை எப்படி



எல்லாம் சமாளித்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டு பேசியிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டேதான் இருக்கும், அதைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டேதான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் காலத்தில், மாண்புமிகு வெங்கட்டராமன் அவர்கள் காலத்தில் எந்த நிர்வாகம் இருந்ததோ அதே நிர்வாகத்தை வைத்துக் கொண்டுதான் இன்னும் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். வேறு நிர்வாகத்தை இப்போது கையில் வைத்துக் கொள்ளவில்லை. அந்த இரண்டு பேரும் பிரச்சினைகளை அணுகிய முறைக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்கள் பிரச்சினையில் அதே அதிகாரத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு அணுகும் முறைக்கும் வேறுபாடு இருக்கிறதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்த்துச் சொல்லட்டும். அது அவர்களுக்கே தெரியும். அதைத்தான் எடுத்துக் காட்டுகிறேன், அதைத்தான் உரை கல்லாக வைத்து உரசிப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் முயற்சிகளை, அரசாங்கத்தின் பல நல்ல நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். சம்பிரதாயத்திற்காக அல்ல, நடைமுறையில் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம்.

மத்திய அமைச்சர் ரகுநாத ரெட்டி தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிறார், முன்பு கம்பெனி லா அஃபேர்ஸ் அமைச்சராக இருந்தார். அவர் நல்ல திட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தார். இன்றைக்கு இருக்கக்கூடிய பல வேறு தொழில் அதிபர்கள் வரக்கூடிய பணத்தை, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை, சேராமல் தடுக்க கெஸ்ட் ஹவுஸ் கட்டுகிறார்கள்; கார் வாங்கி வைக்கிறார்கள். அந்தச் செலவுகளெல்லாம் தொழிலாளர்களுக்கு வருவதில்லை. தொழிலாளர் தலைவர்களுக்குப் பயன்படுவதில்லை. அதிகாரிகளைப் பிடிக்க, அரசியல்வாதிகளைப் பிடிக்க விருந்தினர் மாளிகையைப் பங்களாக் கட்டி வைக்கிறார்கள். தொழிலாளர்கள் உழைப்பிலிருந்து வரக்கூடிய பணத்தைக் கொண்டு இப்படிக் கட்டி வைக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

திரு. ரகுநாத ரெட்டி இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து இதை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வர முயற்சித்தார். விளைவு அந்த இலாகாவிலிருந்து மாற்றப்பட்டார். அதற்குக் கிடைத்த பரிசு வேறு ஒரு இலாகாவுக்கு, தொழிலாளர் நல இலாகாவுக்கு மாற்றப்பட்டார். தொழிலாளர் நல இலாகாவை

வைத்துக் கொண்டு தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்து விட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. லேபர் ஆபீசர், லேபர் செகரடரி என்றுதான் இருக்கிறதே தவிர, லேபர் வெல்பேர் ஆபீசர், லேபர் வெல்பேர் செகரடரி என்று வைக்கவில்லை. இந்த நிலையில் தொழிலாளர் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைப்பது?

எப்போது தீர்க்க முன் வருகிறீர்கள்? தொழிலாளி என்றைக்குப் போராட்டம் நடத்தி தொழிற்சாலை இழுத்து மூடப்படுகிறதோ அப்போது தான் சட்டம் வருகிறது. அதுவரை சட்டம் வராது. அதற்கு முன்னால் தொழிலாளிக்கு இந்தச் சலுகைகளை ஏன் செய்து கொடுக்கவில்லை என்று தலையிட முடியாது. இப்போதுள்ள அமைப்பு முறை அந்தத் தொழில் அதிபர்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

கெஸ்ட் ஹவுஸ் கட்டும் முறை தமிழ் நாட்டில் மட்டும் இருக்கக்கூடிய முறை அல்ல. இந்த அமைப்பு முறையில் இருக்கக்கூடிய சீர்கேடு, சீர்கேடு என்று கூடச் சொல்ல முடியாது, நாம் வைத்திருக்கும் முதலாளித்துவ அமைப்பு முறையில் எப்படி எல்லாம் அவர்கள் அதிகாரிகளைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள், அரசியல்வாதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். லேபர் ஆபீசர் சாதாரணமாக தொழிலாளர் நலப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசமுடியாது. அங்கே தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் போன்றவை ஏற்பட்டால்தான் லேபர் ஆபீசர் தலையிட முடியும். அப்போதுதான் மினிஸ்டர் பேச முடியும்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் தீரமிக்க போராட்டத்தைத் தூத்துக்குடியில் நடத்தினார்கள். ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியிலும் அதே போராட்டந்தான். இரண்டு போராட்டத்திலும் அமைச்சர் அவர்கள் மூலமாக முடிவு ஏற்பட்டதே தவிர, கீழே இருந்து வரவில்லை. அமைச்சர் அவர்கள் நேரடியாகவே இரவு 12 மணி வரை இருந்து பேசிக்கூட ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

இந்த அதிகாரிகளை வைத்துக் கொண்டு, அந்த அளவுக்கு நிர்வாக இயந்திரம் சரியாக இல்லை என்றாலும் அதையும் வைத்துக் கொண்டு தொழிலாளர் பிரச்சினையில் தொழிலாளர்களுக்கு எப்படிச் சாதகமாக தீர்வு செய்வது என்பதற்கு அவரே நேரடியாக இருந்து பேசித் தீர்க்கிறார். லேபர் கமிஷனர் பேச வேண்டிய விவகாரங்களில் கூட தானே நேரடியாக இருந்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்த்து வைக்கிறார். தொழிலாளிக்குச் சாதகமாக இப்போது இருக்கக்கூடிய நிர்வாகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





மற்றொரு பிரச்சினையை நண்பர்கள் சொன்னார்கள். தொழிற்சங்கத்தில் அரசியல்வாதிகள் தலையிடு கூடாது என்று சொன்னார்கள். தொழிற்சங்கம் ஏன் இருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு வருவார்களானால் அதைச் சொல்ல மாட்டார்கள். தொழிலாளி என்ன இயந்திரமா? மனிதன் இல்லையா? ஆட்சி பீடத்திற்கு வரக்கூடாத ஒருவனா? தொழிலாளி என்ற அமைப்பு இருக்கிறது. எப்படி அவன் கட்சிக்கு அப்பாற்பட்டவனாக இருக்க முடியும்? ஏஜன்சியாக இருப்பது மட்டுமல்ல, போனஸ் வாங்கிக் கொடுக்க, சலுகை வாங்கிக் கொடுக்க மட்டுமல்ல. அவனுக்குச் சலுகை கிடைக்கிறதோ இல்லையோ சில தொழிற்சங்கத் தலைவர்கள், சில அரசியல்வாதிகளை மானேஜ்மெண்ட் தங்களுடைய பிழைப்புக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில கட்சிகள் அப்படி இருக்கின்றன. ஆனால் எல்லாக் கட்சிகளும் அப்படி அல்ல. தொழிலாளர்கள் சுரண்டப்படக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி இருக்க வேண்டுமென்று விரும்புபவன். கொள்கை அளவில் இல்லாமல் நடைமுறையில் இருக்க வேண்டும்.

டெம்பரரி தொழிலாளியை எப்படி எல்லாம் வேலை வாங்குகிறார்கள், பத்து வயது சிறுவர்களை வைத்து வேலை வாங்குகிறார்கள் என்பது பற்றி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிவகாசியில் அது நடக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மோகன் குமாரமங்கலம் அதைக் கண்டுவிட்டுக் கண்ணீர் வடித்தார். என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட கூடாரமாக நடத்தப்பட்டு வருகிறது. மூலதனத்தைப் போட்டு நிர்வாகத்தைச் சாதகமாகக் கொண்டு முதலாளிகள் அவர்களைப் பயன்படுத்தி வருகின்ற நிலைமைதான் இது. இல்லையென்றால் முதலாளியாக இருக்க முடியாது.

(இரவு 8-00)

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டு போராட்டத்தில் இறங்குவதில்லை. வளர்ந்து வருகிற விலைவாசி உயர்வில் தொழிலாளர்கள் பொருள்களை வாங்கக் கூட முடியாது கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அவர்களது ஊதியத்தைக் கேட்காமலேயே உயர்த்திக் கொடுக்கக் கூடிய எந்த அரசும் இருக்கமுடியாது. இரண்டையும் வைத்து பாலன்ஸ் செய்து கொண்டுபோகிறோம். ஸ்ட்ரைக்கே இல்லை ஜப்பானில் என்று சொன்னார்கள். சோவியத் யூனியனிலும் ஸ்ட்ரைக்கே கிடையாது. மக்கள் சீனாவில் விலைவாசி உயர்வும் கிடையாது, ஸ்ட்ரைக்கும் கிடையாது. சோவியத் யூனியனில் ஸ்ட்ரைக்கே இல்லை என்றால் அங்கு அப்படிப்பட்டதொரு சமுதாயத்தை, சுரண்டலற்ற சமுதாயத்தை அங்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

செய்வது என்பதை விட்டு எப்படி பிரச்னைகளுக்கு ஸொல்யூஷன் காண்பது என்ற விதத்தில் நிர்வாக இயந்திரத்தை மாற்றியமைக்க வேண்டும். எப்படி பிரச்னைகளுக்கு ஸொல்யூஷன் காண்பது என்பதைச் சொல்லவேண்டும்.

இன்று சாதாரணமாக ஒரு கொடுக்கல் வாங்கல் தகராறு என்றாலே அது கோர்ட்டுக்கு நேரடியாகப் போகிறது. ஆனால், தொழிலாளர்கள் நேரடியாக கோர்ட்டுக்குப் போகமுடியாது. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி தொழிலாளர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்குச் செல்லமுடியாது. முதலில் லேபர் ஆபீஸரிடம் போய் அவரிடம் சமாசத்திற்குச் சென்று முதலாளி வராமல் பத்து இருபது வாய்தாக்கள் வாங்கி சமாச முயற்சி தோல்வியுற்று அது குறித்து அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பி அதன் பின்னர் செகரட்டேரியேட்டுக்குச் சென்று பின்னர் கோர்ட்டுக்குச் செல்ல அனுமதி வாங்க படுகிற பாடு சொல்லி முடியாது. கோர்ட்டுக்குப் போனால் படுகிற பாடு வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்றங்களுக்கு சென்றவர்களுக்குத் தெரியும். கடைசியில் ரிட் வருகிறது.

எனவே, இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் திருத்தப்படவேண்டும். நேரடியாகத் தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகலாம் என்று செய்ய வேண்டும். அவர்கள் கோர்ட்டுக்கு நேரடியாகச் செல்வதை ஏன் தடுக்கிறீர்கள்? ஏன் நேரடியாகப் போகக் கூடிய உரிமையைக் கொடுக்கவில்லை? திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தெரியும், இதைத் திருத்த வேண்டியது பாராளுமன்றம்தான் என்று. தமிழ்நாடு சர்க்காரால் இந்தச் சட்டத்தைத் திருத்தமுடியாது. எனவே, அந்தச் சட்டத்தை தகுந்தவகையில் திருத்துவதற்கு அந்தத் தரப்பில் உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் முன் வந்தால் அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரிக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டை ஸ்டேட்டுக்குள்ள எல்லைக்குள் இங்கேயே அமெண்ட் செய்யச் சொல்லுங்கள்.

**திரு. க. சுப்பு:** அது சென்ட்ரல் ஆக்ட். மாற்ற, அடிப்படையை மாற்ற நமக்கு அதிகாரம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பழைய பாம்பே, மத்திய பிரதேசத்தில் இன்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் ஆக்ட் என்று அந்தந்த மாநில அரசுகளே சட்டமியற்றியிருக்கிறார்கள். ஏற்கனவே மாநில லேபர் அட்வைசரி போர்டின் பரிசீலனையில் இப்படி ஒரு பில் இருக்கிறது. இந்தச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.



**திரு. பெ. சீனிவாசன்:** இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் சென்ட்ரல் ஆக்ட். இதைப் பாராளுமன்றம் திருத்துவதுதான் சரி. இவ்வளவு ஆண்டுகள் திருத்தாமல் இருந்தது பரிதாபகரமானது. திரு. சுப்பு அவர்களின் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. க. சுப்பு:** இந்தியா முழுவதும் வரட்டுமே. கடைசியாக, இங்கு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது அவர்களது ஜாதிக்காரர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கும் ஒரு கெட்ட பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சன்ஸ் ஆப் தி சாயில் என்ற தியரி இல்லை, காஸ்டிசம், அந்தந்த ஜாதிக்காரர்களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் பைனான்ஸை வாங்கிக்கொண்டு, பப்ளிக் பைனான்ஸை வாங்கிக்கொண்டு அவர்களது ஜாதிக்காரர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும் இந்தக்காலத்தில் ரிட்டயர்மெண்ட் வயதைக் குறைத்து—வேண்டுமானால் அதிகப்படியான க்ராஜுவிட்டி கொடுங்கள், அதிகமாகப் பென்ஷன் கொடுங்கள்—இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும். தனியார் துறை தொழிற்சாலைகளானாலும் சரி அல்லது பொதுத்துறையில் உள்ள தொழிற்சாலைகளானாலும் சரி ரிட்டயர்மெண்ட் வயதைக் குறைத்து வயதானவர்களுக்கு ஓய்வு கொடுத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, நானும் நான்கு மணி நேரமாக பொறுமையாக பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். ஆகவே, அங்கத்தினர்கள் அமைதியின்மை இழந்து இருப்பது தெரிந்து இருந்தாலும், எனது கருத்துக்களைச் சொல்வதற்கு சற்று வாய்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரியாக 8-20-க்கு முடித்து விடுங்கள். அதற்கு மேல் டைம் அலாட் செய்ய முடியாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்து இருக்கும் மானியங்கள் மீது எனது கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் சுப்பு அவர்கள் ஏதோ தொழிலாளர் நல அமைச்சர் சிறப்பாக இந்தப் பணியைச் செய்து இருக்கிறார்கள் என்று உரையாற்றினார்கள். அந்தக் கருத்தில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. என்னையும் நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர் நல அமைச்சர் திறம்பட செயலாற்றினாலும் கூட இந்த அரசு எந்த முறையில்

அங்கு கள்ளக்கணக்கு வைக்கமுடியாது. ஏகுநாத செட்டியை மாற்றி தூர எறிய முடியாது. அங்கு ஏன் ஸ்டிரைக் ஏற்படுகிறது? அங்கு அவர்கள்தான் தொழிலாளிகள், அவர்கள்தான் முதலாளிகள். தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய லாபத்தை அவர்களே அனுபவித்து வருகிறார்கள். பின் ஏன் ஸ்டிரைக் வருகிறது?

திருமதி த. ந. அனந்தநாயகி: அங்கும் தகராறுகள் வருகின்றன. குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்குள் தீர்த்துவிட வேண்டும். வருடக் கணக்கில் இழுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அங்கும்தான் தொழிலாளர்கள் தகராறு வருகிறது. எல்லோரும் மனிதர்கள்தானே.

திரு. க. சுப்பு: நான் சொல்வது மனிதர்களின் கோளாறு அல்ல, அமைப்பின் கோளாறுதான் காரணம். அந்த இடங்களிலுள்ள அமைப்பு முறைக்கும் இங்குள்ள அமைப்பு முறைக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கிறது. அங்கு எதற்கு ஒரு லேபர் கமிஷனர்? அவர்கள் ஏன் கெஸ்ட் ஹௌஸில் தங்கி ஏர் கண்டிஷன்ட் காரில் பவனி வரவேண்டும்? இங்கு தனிப்பட்ட முதலாளிகளாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்து சாதகமாக்கிக் கொள்ளலாம். இங்கு தொழில்களுக்கு மூலதனம் போடுகிறோம், அவர்கள் அதற்கான வட்டியை எதிர்பார்க்கிறார்கள். முதலும் பத்திரமாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். அமைச்சர் அவர்களை சமாளித்தார்கள் என்பதற்காகப் பாராட்டுகிறேனே தவிர எப்படித் தீர்த்து வைத்தார் என்பதல்ல. தீர்க்கவே முடியாது.

இப்போது நூறு ரூபாய் போனஸ் கொடுக்கிறோம் என்றால் நாளையதினமே இட்டிலியின் விலையும் எண்ணெயின் விலையும் ஏறி அந்தத் தொகை போதாது என்ற நிலை ஏற்படும்.

நான் நமது அமைச்சர் அவர்களைப் பாராட்டக் காரணம் பிரச்னைகளை சமாளிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதால்தான்.

தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடக்கூடாது, அவர்களை பழி வாங்கக் கூடாது என்பவை ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைகள்தான்.

ராஜபாளையத்தில் ஷண்முகர் மில்லில் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

விருதுநகரில் 33 பேர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பழி வாங்கப்பட்டவர்களின் கதி என்ன?





ஷண்முகா மில்லில் இருபது ஆண்டுகள் சர்விஸ் ஆனவரை நீக்கிவிட்டு டெம்பரரி லேபரை எடுத்துக்கொள்கிறார்கள்.

எனவே, இப்படிப்பட்ட முதலாளிகள் திரும்ப லைசென்ஸ் கேட்கும்போது ஏற்கனவே பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களை எடுத்துக் கொள்வீர்களா என்று கேட்டு அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு கண்டிஷன் போடவேண்டும். பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அதற்கு அரசு முன்வரவேண்டும். மற்றத் துறைகளைப் பொறுத்து சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் சிம்சனில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு பிரச்னை தீருகிற வரையில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளச் செய்தார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். அது வேறு விஷயம். சிலவிடங்களில் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

அரசியல் சட்டப்படி தொழிலாளர்கள் சங்கங்கள் வைத்துக்கொள்வது அவர்களது அடிப்படை உரிமை.

ஜயவிலாஸ் மில்லை எடுத்துக் கொண்டால் அதுமாதிரி சங்கமே இல்லை அங்கு. அவர்கள்தான் அயோக்கியர்கள் மற்றவர்கள் எல்லாம் யோக்கியமானவர்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த முறையில் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைத்துக்கொள்ள முடியாத நிலை கூட நம் நாட்டில் இருக்கிறது.

சிவகாசியில் தொழிற்சங்கம் வைக்கமுடியுமா? அங்கு பட்டாசுத் தொழிற்சாலைகள் இருக்கிறன, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு தொழிற்சங்கங்கள் வைத்துக்கொள்ள முடியுமா? தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்வளிப்பதற்கும் அவர்களுக்கு தக்க ஊதியம் கிடைக்கச் செய்யவும் அதிகாரிகள் உதவி செய்யவேண்டும். இருக்கிற நிர்வாக இயந்திரத்தை வைத்துத்தான் வேலை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இது என்ன தி.மு.க. வந்து செய்த இயந்திரமா அல்லது முன்னால் காங்கிரஸ் உற்பத்தி செய்து வைத்த இயந்திரமா?

எப்படி டிஸ்போஸல் காட்டுவது என்பதுதான் அதிகாரிகளின் வேலையாக இருக்கிறது. பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது என்பதல்ல. எப்படி டிஸ்போஸ் செய்வது என்பதில்தான் கவனம் செலுத்துகிறார்கள். எப்படி டிஸ்போஸ்

செயலாற்றியிருக்கிறது என்றால், இந்த அரசு செயலால் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு நன்மை கிடைத்தது, எந்த அளவுக்குத் தீமை விளைந்தது அதைப் பார்க்கிறபோது, நிச்சயமாகத் தொழிலாளர்களின் நலன் கருதி பதைப் பார்க்கிறபோது, நிச்சயமாக தொழிலாளர்களின் நலன் கருதி செயலாற்றவில்லை என்ற குறைபாட்டை நான் முதற்கண் கூறிக்கொள்கிறேன்.

ஏனெனில் இந்த மாநிலத்தில் பல்வேறு தனியார் துறை நிறுவனங்கள் இருக்கின்றன. அதுபோல் பொதுத்துறை நிறுவனங்களும் இருக்கின்றன. பொதுத்துறையில் செயலாற்றும் தொழிலாளர்களுக்கு எந்த முறையில் நீதி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் மாநிலத்தில் இருக்கும் தனியார் துறைத் தொழிலாளர்களுக்கும் நீதி வழங்கப்படுகிறது. இந்த குறைந்தபட்ச உண்மையைக்கூட இந்த அரசு உணரவில்லை என்று கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த அரசால் நடத்தப்பட்டு வருகிற பல்வேறு துறைகள்—பொதுத்துறையில் ஏற்று நடத்துகிற டிரான்ஸ்போர்ட் துறையை எடுத்துக்கொண்டால், எந்த அளவுக்கு அங்கே இருக்கும் தொழிலாளர் களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தெரியும்.

சென்ற ஏப்ரல் மாதம் முதல் தேதி மதுரை பாண்டியன் கார்ப்பரேஷனில் நடைபெற்ற வேலைநிறுத்தம் அதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஏற்கனவே டி.வி.எஸ். கம்பெனியில் அல்லது அரசு டிரான்ஸ்போர்ட் டிபார்ட் மென்டில் வேலை செய்து கொண்டு இருந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு சம்பள விகிதங்கள் அமைத்து, அதைப் பெற்று பணியாற்றிக்கொண்டு வந்தார்கள். அவர்களெல்லாம் கார்ப்பரேஷனின் கீழ் கொண்டுவந்தபோது அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த ஊதியம், பல்வேறு சலுகைகளைக் கொடுக்காமல் மறுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். குறைந்தது அவர்கள் ஏற்கனவே பெற்று வந்த ஊதியம், சலுகைகள் மறுக்கப்படக்கூடாது என்ற கோரிக்கையை வைத்துத்தான் ஏப்ரல் மாதத்தில் 1-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் மேற்கொண்டார்கள்.

அதுபோல், பல்வேறு கார்ப்பரேஷன்களை எடுத்துக்கொண்டால், ஒரு கார்ப் பரேஷனில் வேலை செய்யும் தொழிலாளிக்கு மற்றொரு கார்ப்பரேஷனில் வேலை செய்யும் தொழிலாளிக்குக் கிடைக்கிற சம்பளம் ஆகியவற்றில் பல்வேறு வேறு பாடுகள் இருக்கின்றன. இந்த அரசு நடத்துகிற போக்குவரத்து இலாகாவில் இருக்கின்ற கார்ப்பரேஷன்களில் வேலை செய்யும் தொழிலாளிக்குக் கூட ஒழுங் கான முறையில் ஊதியம் கொடுக்க முன் வரவில்லை என்றால், தனியார்



நடத்துகிற நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளிக்கு எப்படி நியாயமான ஊதியம் வழங்குவார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தேர்தல் நேரங்களில் ஓட்டுகள் கேட்கச் செல்கிறநேரத்தில், இந்த நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் என்று சொல்கிறோம், இந்த அரசு தொழிலாளர் அரசு என்று சொல்கிறோம், அப்படிச்சொல்லி வாக்குகளைப் பெறு கிறோம். ஆனால் இன்றையதினம் எந்த அளவுக்கு நாம் தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்றால், தொழிலாளர் பிரச்னையில் எந்த அளவுக்கு சுமுகமான முறையில் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றால், எந்த அளவுக்கு தொழிலாளர்கள் நன்மை பெற்று இருக் கிறார்கள் என்றால், நிச்சயமாக அவர்கள் எந்தவிதமான நலனையும் பெறவில்லை என்றுதான் கூறிக்கொள்வேன். அது மட்டுமல்ல. நியாயமான சலுகைகள் கூட அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

அம்மையார் அவர்கள் கூறியதுபோல், சென்ற ஆண்டு வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட "மேன்-டேஸ் லாஸ்"—20 லட்சம் என்று சொன்னால், இந்த ஆண்டு அதைவிட 24 லட்சம் கூடுதலாக இருக்கிறது. இது நிச்சயமாக வரவேற்கக் கூடியது அல்ல. 44 லட்சம் மேன்-டேஸ் லாஸ் என்று சொன்னால், அதனால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடியவர்கள் நிச்சயமாக முதலாளிகள் இல்லை, தொழிலாளர்கள் தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த அரசுக்குத் தொழிலாளர்களின் மேல் அக்கறை இருக்குமானால், இந்த அளவுக்கு மேன்-டேஸ் லாஸ் இல்லாமல் பார்த்திருக்கவேண்டும்.

அடுத்ததாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற அறிக்கை யைப் பார்க்கிறபோது, தொழில் தகராறுகள் 1974-ம் ஆண்டில் 7,550 என்றும் அதில் 1938 தகராறுகள் தான் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அதில் 417 அட்ஜூடிகேஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள், 43 தகராறுகள் ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள், செட்டில்மென்ட் காரணமாகத் தீர்க்கப்பட்டவை 1,478, ஆக 1,938 டிஸ்பியூட்டுகள் செட்டில்மென்டாகியிருக்கின்றன. மீதி 5,612 டிஸ்பியூட்டுகள் என்ன ஆயிற்று? அது இந்த அறிக்கையில் இடம் பெறவில்லை. நிச்சயமாக இந்த அறிக்கையில் அது காணப்படவில்லை என்றால், தொழிலாளர் களுக்குப் பாதகமாகத்தான் அந்த டிஸ்பியூட்டுகள் தீர்க்கப்பட்டு இருக்கும் என்று கூறினால், இந்த அரசு தொழிலாளர் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்கத் தவறி விட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற சில வேலை நிறுத்தங்களைப் பற்றி நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். சங்ககிரி இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தில்

அடுத்த வேஜ் ரிவிஷன் செய்யப்படவில்லை என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லாவில் 60 கேஷ்யூநட் ஃபாக்டரிகள் இருக்கின்றன. அங்கே தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜ் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு மினிமம் வேஜ் சட்டம் இல்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு மினிமம் வேஜ் கொடுக்க ஒரு சட்டம் இயற்றப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஃபாக்டரிகளை கேரளாவில் இருக்கிற முதலாளிகள் நடத்துகிறார்கள். கேரளாவில் அவர்கள் ஃபாக்டரிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கேரளாவில் கொடுக்கிற ஊதியத்தை விட பாதி இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களுடைய கைகள், அந்தப் பருப்பை எடுக்கிற போது எண்ணெய் கையில் பட்டு புண்ணாகி விடுகிறது. அவர்களுக்குப் பல வியாதிகள் வருகின்றன. ஆகவே இதற்கெல்லாம் தடுப்பு ஏற்பாடுகளை அந்த நிர்வாகம் செய்யத் தவறியிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் சமீபம் இட்டகவேலி என்ற இடத்தில் ஒரு முந்திரி ஆலை இருக்கிறது. அதன் நிர்வாகம் அந்த ஆலையை தற்போது கதவடைப்பு செய்திருக்கிறது. அதனால் அங்குள்ள 400 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே அந்த ஆலையிலுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த ஆலையைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பவர் கட் ஏற்படுகிற காலத்தில், லே ஆஃப் காம்பன்சேஷன் 50 சதவீதம் கொடுக்க வழி வகை இருக்கிறது. அதை மாற்றி முழு ஊதியம் காம்பன்சேஷனைக் கொடுக்கப்படவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.டி. ஆக்ட் 25 (c ) பிரிவு-படி லே ஆப் நாட்களுக்கு இடையில் வருகிற இண்டர்வினிங் விடுமுறை நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு வகை இல்லை. அந்த நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக இப்போது இந்த ஆண்டு அகில உலகப் பெண்கள் ஆண்டாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே இப்பொழுது இருக்கிறது ஒரு பெண்தான்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பெண் தொழிலாளர் ஊதியம் சம்பந்தமாக ஆலோசிக்கப்படுவதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அந்தக் கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரே வேலை செய்கிற ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது, ஒரே ஊதியம் கொடுக்கப்படவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். . அது மட்டுமலே, இந்த ஏற்பாடு பல்வேறு மாநிலங்களில் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜேம்ஸ், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்கு மேல் பேசுவதை அமைச்சரவர்களிடம் எழுதிக் கொடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, எங்கள் பகுதிக்கு இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண்டேஷன்ஸ் வேண்டுமென்று கோரி இப்போது இன்ஸ்பெக்டர் ஆப் பிளாண்டேஷன்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவருடைய அலுவலகம் செயல்படுகிறதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண்டேஷன்ஸ் பிளாண்டேஷனைப் பார்ப்பதோ அல்லது கண்காணிப்பதோ இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. 1970 ஆம் ஆண்டில் உள்ள ஃபைல்களை இன்னும் டிஸ்போசல் ஆகாத அவல நிலை இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

கடைசியாக, மினிமம் வேஜ் ஆக்டில் பல்வேறு தொழிலாளர்கள் இன்னமும் சேர்க்கப்படவில்லை. குறிப்பாக ஃபார்ம் லேபர்களுக்கு இது வரையில் மினிமம் வேஜ் நிர்ணயிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சீக்கிரமாக முடிக்கிறேன். அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல லோடு மென், ஹெட் லோடு மென், அதாவது மூட்டை சுமக்கிற தொழிலாளர்களுக்கு, மற்றும் பல்வேறு தொழிலாளர்களுக்கு இன்னும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. இதற்குத் தேவையான சட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தம் ஏற்பட்டது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். சாதாரணமாக 20 சதவிகிதம் போனஸ் வாங்கிய தொழிலாளர்கள், இந்த ஆண்டு அவர்களுக்கு அந்த 20 சதவிகிதம் தர மறுத்ததால் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அமைச்சர் முன்னிலையில் அதற்கு ஒத்துத் தீர்ப்பு ஏற்பட்டு கடைசியில் 1½ மாதம் சம்பளம் அட்வான்ஸாகக் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு அந்த நிர்வாகம் தொழிலாளர்களைப் பழிவாங்கும் முறையில், 'லே ஆப்' வந்ததன் காரணமாக தொழிலாளர்களுக்கு சம்பளம் குறைந்தது—அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் சம்பளத்தைப் பிடித்துக்கொண்டு, தொழிலாளர்களுக்கு எம்.டி. கவரைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அது வரவேற்கத்தக்கது அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்படி 'லேஆப்' என்று நிர்வாகம் சொல்கிறபோது, கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் சம்பளத்தைப் பிடிக்கக்கூடாது என்று இந்த அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா மீட்டர்ஸ் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் 750 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சென்ற 3 மாதகாலமாக அங்கே 'லேஆப்' காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை. அந்த நிர்வாகமானது மத்திய அரசாங்கத்தின் பணத்தையும், மாநில அரசாங்கத்தின் பணத்தையும் பெற்றுக்கொண்டு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த நிர்வாகத்தை உடனடியாக அரசு எடுத்துக்கொள்வதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்கத் தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அதை உடனடியாக அரசு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசோசம் செட்டர் தொழிலாளர்கள் கடந்த ஒரு வருஷகாலமாகப் பல்வேறு பிரச்சினைகளில் ஈடுபட்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் பெறவேண்டுமென்றால், ஊர்வலம் நடத்தி, தொழிலாளர் நல அமைச்சரைப் பார்த்து, முதலமைச்சரைப் பார்த்து, அந்த வகையில் தான் சம்பளம் பெற முடியும். இதைத் தொடர்ந்து அனுமதிக்கக்கூடாது. அந்த நிர்வாகமானது தொழிலாளர்களிடமிருந்து வசூல் செய்யும் பிராவிடெண்ட் பண்ட், கட்டாய சேமிப்பு பணத்தையும் கட்டத் தவறி இருக்கிறது. ஆகவே, முறை தவறி நடக்கும் அந்த நிர்வாகத்தை அரசு அதிகமான அளவில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிர்வாகம் கோர்ட் ஆணை பிறப்பித்து இருந்தும் இதுவரையில் கிராட்டுயுட்டி கொடுக்கத்தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ரப்பர் பிளான்டேஷனைப் பற்றி கூறவிரும்புகிறேன். அரசாங்கம் நடத்தும் பிளான்டேஷனில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம், தனியார் பிளான்டேஷனில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைவிடக் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் நிர்வாகத்தோடு சென்ற ஆண்டு செய்து கொண்ட ஒத்துத் தீர்ப்பு பற்றி குறிப்பிட்டு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் தகராறு தீர்த்து வைக்கப்பட்டதாக அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் அந்த அக்ரிமென்ட்படி இதுவரையில் அமல் நடத்தப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அக்ரிமென்டில் தொழிலாளர்களுக்கு போனஸ் அல்லது எக்ஸ்கிரேஷியா பேமென்ட் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஓராண்டு ஆகியும் நிர்வாகம் அதைத் தரத் தவறி இருக்கிறது. அது அமல் நடத்தப்படவில்லை. இப்படி அரசாங்கப் பொதுத்துறையில் இருக்கும் நிர்வாகமே இந்தத் துறையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அவர்கள் அமலாக்கவில்லை என்றால், எப்படி தனியார்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதிப்பார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் நலன் காக்கும் அரசாக இருந்தால் நிச்சயமாக இந்தக் காரியங்களை உடனடியாக செய்வதற்கு முன் வரவேண்டும். அதற்குத் தொழிலாளர் நல அமைச்சர் தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் பல்வேறு சிறிய ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அந்த ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கிற முறை அமுல்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் மினிமம் வேஜ் ஆக்டில் அந்தத் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொண்டு குறைந்த பட்சம் அவர்களுக்கு எந்த அளவிற்கு ஊதியம் கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிற கூட்டுறவு ஸ்பின்னிங் மில்லில் இது வரையிலும் ஒரு ஆண்டு ஆகியும் கொடுக்க வேண்டிய ஊதிய உடன்பாடு ஏற்படவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாததன் காரணமாக அனைத்துக் கூட்டுறவு மில்களிலும் சத்தியாக்கிரஹம் நடந்து கொண்டிருக்கிறது. அக்ரிமெண்டு செய்து முடித்து ஒரு ஆண்டு ஆகியும்

கடைசியாக, டாக்ஸி டிரைவர்களைப் பற்றி ஓரிரு வார்த்தை கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இப்போதெல்லாம் பெட்ரோல் விலை அதிகரித்திருக்கிறது. ஆகவே அதிகமாக டாக்ஸி டிரைவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மத்திய அரசாங்கத்தில் இருக்கிற தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குத் தனியாக மத்திய லேபர் டிபார்ட்மெண்ட் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த ஏற்பாடு இருக்கிற காரணத்தினால் பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே மத்திய அரசு தொழிற்கூடங்களானாலும் அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அந்த அதிகாரம் மாநில அரசு லேபர் டிபார்ட்மெண்டுக்கு இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

1948-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வந்திருக்கிற சட்டங்களெல்லாம் குறைந்த பட்சம் [illegible] ஊதியம் நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேறு சலுகைகள் கொடுப்பதற்கு வகை செய்கிற சட்டங்கள் அமுலில் இருந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் 1974-ஆம் ஆண்டு வந்திருக்கிற ஊதிய முடக்குச் சட்டத்தைப் பார்க்கிற போது தொழிலாளர்களுக்கு இந்த அளவிற்குமேல் சம்பளம் கொடுக்கக்கூடாது என்ற நிபந்தனை இருப்பதைத் தொழிலாளர் உலகம் வன்மையாகக் கண்டிக்கிறது. தொழிலாளர்களுக்கு இதைவிட அதிகமான துரோகம் செய்வதற்கு இன்னொரு சட்டம் இருக்க முடியாது. விலைவாசி ஏற்றத்தினால் அவர்கள் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு கூட இந்த ஊதிய முடக்கச் சட்டத்தினால் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஊதிய முடக்கச் சட்டத்தைப் பொறுத்த வரை, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற தமிழகத்திற்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்கவேண்டுமென்று கோரி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிலாளர் நல இலாகா, வீட்டு வசதி வாரியம் ஆகிய இரண்டினுடைய பிரச்னைகளையும் ஒரு சேர எடுத்துக் கொண்டு இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பேசினார்கள் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடாமலே இருந்தது குறித்து நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்





கிறேன். ஏராளமான வேலைகளை வீட்டு வசதி வாரியம் செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கிற தன்மையில் இந்த விவாதத்தில் பேசினார்கள். நல்ல கருத்துக்களை வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி ஒரு சிலர் எடுத்துச் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் எல்லா மக்களுக்கும், பல்வேறு வகைப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறது என்பதை இந்த மாமன்றம் நன்றாக அறியும் என்பதைத் தங்கள் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வீட்டு வசதி வாரியம் நெசவாளர்களுக்கு அதிகமான வீடுகளைக் கட்ட வேண்டுமென்று இங்கே உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நெசவாளர்களுக்கு உறையூரில், திருச்சியில், தஞ்சாவூரில் கட்டப்பட்டு வருகின்றன. சின்னாளப்பட்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிறது. இப்போது சேலத்திலே 3,500 வீடுகள் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப் பட்டு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு என்று 10 ஆயிரம் ரூபாயில் கட்டப்படுகிற வீடுகள் பேரூராட்சியில் கட்டப்படவேண்டுமென்று பழனிச்சாமி அவர்கள் தெரிவித்தார்கள். பேரூராட்சிகளில் இருக்கிற சிரமங்களை நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். குறைந்தது 100 வீடுகளாவது ஒரு சேர வந்தால் தான் பேரூராட்சிகளிலே வீட்டு வசதி வாரியம் ஏற்று கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும். இப்போது தாலுகா தலைநகரங்களிலுள்ள வீடு பற்றுக்குறையைப் போக்கி விட்டு அதற்குப் பிறகு பேரூராட்சிகளுக்கு இந்த திட்டங்களை விஸ்தரிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

கிராமப் புறங்களில் வீடுகள் கட்டுவதற்குக் கூட்டுறவு சங்கங்கள் தேவை என்று திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த கூட்டுறவுச் சங்கங்களைக் கிராமங்களுக்கெல்லாம் விஸ்தரிக்க இப்போது ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம் என்பதையும் இதற்கான ஆக்க பூர்வமான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

கூட்டுறவு வீடு கட்டுகிற சங்கம் கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் ஏராளமான தொகைகளை வீடுகள் கட்டுவதற்கு எல்லா ஊர்களிலேயும் தந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1972-73 ஆம் ஆண்டிலே ஏறக்குறைய 5,01,43,500 ரூபாய் செலவழித்துக் கொண்டிருந்த சங்கம் இப்போது 10,21,80,300 ரூபாய் வரையில் செலவழிக்கிற ஒரு ஆற்றலைப் பெற்றிருக்கிறது, செலவழித்துக் கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாலே 25 ஆயிரம் ரூபாய் வரையில்

(இரவு 8-30)

வீடுகளைக் கட்டுவதற்குப் பணம் தந்து கொண்டு வந்தோம். பல உறுப்பினர்கள் வீடு கட்டுகின்ற செலவுகள் அதிகமாகப் போய்விட்டது. ஆகவே அதற்கு தொகையை அதிகப்படுத்தி தர வேண்டுமென்ற வேண்டுகோள் விட்டதன் விளைவாக அதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டு வீடுகள் கட்டுவதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை தந்து கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறக்குறைய மொத்தம் புதிதாக 31—3—1975 வரையில் தமிழ்நாடு கூட்டுறவு வசதிச் சங்கம் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட சங்கங்கள் மட்டும் வீட்டு அடமானச் சங்கங்கள், பல்வேறு வீடு கட்டும் சங்கங்கள், கிராமீய கூட்டுறவு வசதி சங்கங்கள், ஆகிய அத்தனையும் சேர்ந்து 432 சங்கங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றும், அந்த 432 சங்கங்களும் ஏராளமான தொகைகளை ஏறக்குறைய அந்த 10 கோடி ரூபாயில் நாடு பூராவிலும் கடனுக வழங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல கிராமங்களில் வீடு கட்ட வேண்டுமென்பதற்காக 55,75 லட்சம் ரூபாய் ஒதுக்கி வீடு கட்டுவதற்கு 3 சென்ட், அல்லது 5 சென்ட் நிலம் அல்லது பட்டா நிலமாக இருந்தாலும், அவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, எந்த நிலமாக இருந்தாலும், அவர்கள் உழைப்பின் மூலம் ஆயிரம் ரூபாய் வரையில் செய்யக் கூடியது போக, 4 ஆயிரம் ரூபாய் தவணை முறையில் வீடு கட்டித் தருவதற்கு, ஆயிரம், ஆயிரம் ரூபாய், ஆயிரத்து ஐந்நூறு, ஐந்நூறு என்ற அளவுக்குத் தான் தந்து கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக ஏராளமான வீடுகள் இன்றைக்குக் கிராமப் புறங்களில் கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1975 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

ஆக, வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் மூலம் நல்ல பல வேலைகள் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதை நான் மாமன்றத்திற்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வீட்டு வசதி வாரியம் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குத் தான் அதிகமாக வீடு கட்டுகிறதா என்ற கேள்வி ஒன்றை உறுப்பினர் ஒருவர் எழுப்பினார். உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் அதிகமான தொகையுள்ள வீடுகளை விட, குறைந்த வருவாய்யுள்ளோருக்கு ஏறக்குறைய 85 சதவிகிதம் இந்த வீட்டு வசதி வாரியம் உதவிகரமாக வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறது. ஆகவே, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு நிறைந்த வசதிகளை, மனிதனுடைய தேவையில் முக்கியமான தேவையான வீட்டு வசதியை செய்து கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இப்பொழுது சென்னை நகரத்தில் கூவம் நதி சீர்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி சீர்படுத்தப்பட்ட நேரத்தில் பல இடங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட நிலம் நல்ல விலையுள்ள நிலமாக அமைந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கிரின்ஸ் ரோடு, அந்த இடத்திலே 21.5, 21½ கிரவுண்டு அங்கே கிடைத்திருக்கிறது. அதன் மொத்த மதிப்பு போட்டால், இன்றைக்கு மார்க்கெட் நிலவரம் 99 லட்சமாகிறது. அதற்கு அங்கே ஒரு பெரிய வீட்டை, ஏறக்குறைய 1 கோடி ரூபாயில் ஒரு 9 அடுக்கு மாடி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய வரைபடம் எல்லாம் இந்தப் பக்கத்தில் லாபியில் வைத்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் போகும்போது அவைகளையெல்லாம் பார்க்க வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே 17 ஆயிரத்து 500 சதுர அடி ஆபீஸ் அக்காமடேஷன் போன்றவைகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. 96 மூன்று படுக்கை அறைகள் உள்ள ஃப்ளாட் (Flat) கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 64 இரண்டு படுக்கை அறைகள் உள்ள வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று படுக்கை அறைகள் உள்ள ப்ளாட் ரூபாய் 93,990 என்றும், 2 படுக்கை அறைகள் உள்ள வீடு ப்ளாட் ரூபாய் 78,320 என்றும் ஆகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** யாருக்குக் கட்டப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மக்களுக்கு. அதை மவுண்ட் ரோடில் கட்டுவதற்கு 93 ஆயிரம் மதிப்பாகிறது. நீங்கள் அங்கே வரக் கூடாது.

தான் நள்ளிரவு இரண்டு மணிக்கு ஒரு முதலமைச்சரை எழுப்பி, இந்தக் காரியத்தைக் கேட்டு, பரிகாரம் காண்பது என்பது இந்த அரசுக்குத் தொழிலாளர் மேல் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறதே தவிர வேறல்ல. இப்பேர்பட்ட செயல் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிறதா பாதகமாக இருக்கிறதா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. டி. சே. தங்கமணி: முதலமைச்சரை எழுப்பி இருக்க வேண்டியதில்லையே. தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிற நீங்களே தீர்த்து வைத்திருக்கலாம். அந்த அளவுக்கு அதிகாரம் பெற்று, ஒவ்வொரு அமைச்சரும் பணியாற்றினால் நல்லது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இது நிதி விவகாரம். நிதிப் பொறுப்பை வகிக்கின்றவர் முதலமைச்சர் அவர்கள். நிதி அமைச்சரைக் கேட்டுத்தான் இதைச் செய்ய முடியும். 200 ரூபாய் வீதம் கொடுப்பது என்றால் அதற்கு நான் எங்கே போவது? அதனால் முதலமைச்சரவர்களைக் கலந்து பேசினேன். அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, இதைப் போன்ற ஒரு பிரச்சனையில், கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சனைப் பற்றிப் பேசுவதற்கு காமராஜர், சுப்பிரமணியம் போன்றவர்கள் வந்தார்கள். அப்போது காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார்கள். அவர்கள் உள்ளே ஒரு சீட்டை கொடுத்து அனுப்பினார்கள். அப்போது இருந்த முதலமைச்சர் அந்த சீட்டில் தொழிலாளர் நல அமைச்சரைச் சென்று காணவேண்டும் என்று எழுதி காமராஜருக்குப் பேட்டி கொடுக்காமல் அனுப்பி விட்டார்கள். அப்போது காமராஜர், 'நான் இந்த கோட்டைக்கு ஒரு நாள் வருவேன். அப்போது பேசிக்கொள்கிறேன்' என்று சொல்லிப் போய் விட்டார்கள்.

காமராஜர் கோட்டைக்கு வந்த பிறகு, அவர் முதலமைச்சரான பிறகு, தொழிலாளர்கள் முதலமைச்சரைக் காணவேண்டுமென்று ஒரு சீட்டை எழுதி அனுப்பினார்கள். அந்தச் சீட்டில் தொழிலாளர் நல அமைச்சரைப் பாருங்கள் என்று அவரும் எழுதி அனுப்பிவிட்டார்கள். இதுதான் மூன்றால் நடந்திருக்கிற வரலாறு. இப்போது அந்த நிலை இல்லை. பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.



பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சனை வந்தபோது, என்னையும் அழைத்து வைத்து, முதலமைச்சரும் உட்கார்ந்து, தொழிற்சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டு வைத்து, நியாயமான உணர்வுகளோடு பேசித் தீர்த்து, போனஸ் பிரச்சனையை சுமுகமாகத் தீர்த்து வைத்த வரலாற்றை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அன்றைக்குத் தொழிலாளர் நல அமைச்சருக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கவில்லை என்றுதான் இது காட்டுகிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும் போது ஒரு முதலமைச்சர் தானே முன்வந்து, நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமாகத் தீர்த்து வைத்தது இதுவரை கிடையாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் காரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதன் பிறகு தொடர்ச்சியாக அது நடந்து வருகிறது. இதிலிருந்து நாங்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிறோமா பாதகமாக இருக்கிறோமா என்பதை வெளியே சொல்லாவிட்டாலும் நீங்கள் மனதிலே வைத்துக் கொண்டால் போதும்.

இ. எஸ். ஐ. மருத்துவமனை பற்றி சில சந்தேகங்களைச் சொன்னார்கள். பல நல்ல காரியங்களை இந்த இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் செய்து கொண்டிருக்கின்றன. 1974 ஏப்ரல் 1-ந் தேதி முதல் 31—12—1974 முடிய கொடுக்கப்பட்ட மருத்துவத் தொகைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நோய்க்கால உதவி 1,41;43,645 ரூபாய்,

நாள்பட்ட நோய்க்கால உதவி 6,45,343 ரூபாய்,

தற்காலிக ஏலாமை உதவி 11,46,607 ரூபாய்,

நிலையாக ஏலாமையுற்றோர்க்கு உதவி 9,15,586 ரூபாய்,

சார்ந்துள்ளவர்கள் நல உதவி 2,33,313 ரூபாய்,

பேறுகால உதவி 5,31,157 ரூபாய்,

இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை 65,896 ரூபாய்.

என்று பல்வேறு வகைகளில் உதவியிருக்கிறது. ஆக, எந்த அளவுக்கு தொழிலாளர்களோடு இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனைத் திட்டம் ஒட்டி போயிருக்கிறது; புரிந்து போயிருக்கிறது என்பதற்காக இத்தகவல்களைச் சொல்லியிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

அதுமட்டுமல்ல, இந்த ஆட்சி பொறுப்புக்கு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களும் மற்றவர்களும் வந்த பிறகு ஏற்பட்டிருக்கிற ஒரு சின்ன மாறுதலை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது சிறிய மாறுதல் என்று சிலரால் கருதப்பட்டாலும் தொழிலாளர்களுக்கு அது எவ்வளவு பெரிய மாறுதல் என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

50 ரூபாய் என்று மருத்துவ மனையில் உச்சவரம்பு இருந்தது. அதை மாற்றி, இந்த உச்சவரம்பை உயர்த்த வேண்டுமென்று பலமுறை இந்திய அரசோடு வாதாடி, போராடி, தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் மருத்துவ வசதிக்குக் குறைந்த அளவு ரூபாய் 65 என்றும், அதிக மருத்துவ கவனிப்புக்கு 70 ரூபாய் என்றும், முழு மருத்துவ கவனிப்புக்கு 85 ரூபாய் என்றும் உயர்த்தியிருப்பது இந்த அரசுதான்.

தொழிலாளர் நல காப்புறுதிக் கழகம் அளிக்கும் தொகையைவிட இந்த அரசு அதிகப்படியான தொகையை இந்த இ.எஸ்.ஐ. மருத்துவச் செலவுக்கு செலவழித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1972-73 இல் இந்த அரசு ஒரு கோடிக்கு மேல் செலவிட்டிருக்கிறது. 1973-74 இல் 58 இலட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. புதிய மருந்தகங்கள் திருச்சி மாவட்டத்தில் கரூர், சென்னையில் அடையார், நந்தம்பாக்கம், வடஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், கோவையில் காரமடை ஆகிய இடங்களில் 1974-75 இல் திறக்கப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில் இருக்கும் இ.எஸ்.ஐ. மருந்தகங்களைச் சொந்த கட்டடத்திற்கு மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்து வருகிறது.

தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் தொழிலாளர் கல்வி நிலையங்கள் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் செயலாற்றி வருகின்றன. இது ரொம்பப் பயனுள்ளதாக இருக்கிறது. சென்னையில் 7,049 தொழிலாளர்களும் மதுரையில் 5,243 தொழிலாளர்களும், கோவையில் 5.177 தொழிலாளர்களும் இந்தக் கல்வித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதற்கு என்று தொழிலாளர் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, சென்னையில் 137 பேரும் மதுரையில் 56 பேரும், கோவையில் 112 பேரும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தொழில் பாதுகாப்பு பற்றியும், இன்னும் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அளவுக்கு பல நல்ல வகுப்புகளை நடத்தி வருகிறது.



1975 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

நேற்றைய தினம்தான் லேபர் வெல்பேர் போர்டு முதல் முறையாக கோட்டையில் கூடியது. அதில் தொழிலாளர் நலனுக்கு என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்பதுபற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. வேழவேந்தன் அவர்களும் அவர்களைப்போன்ற மற்றும் பலரும் அதில் ஆலோசனை உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைச் சொல்வார்கள். தொழிலாளர் நலத் துறை அந்த நிதியை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்கு நல்ல ஆலோசனைகளை இங்கே கூறியிருக்கிறார்கள்.

50 கிரவுண்டு நிலம்—நம்முடைய ராயபுரம் பகுதியில் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. அந்த நிலத்தை அரசினிடத்தில் இருந்து பெற்று—தொழிலாளர்களது நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமாக—மே தின அணிவகுப்புக்கான இடமாக—இன்னும் அங்கே இண்டோர் கேம்ஸ்—அவுட் டோர் கேம்ஸ் நடைபெறுவதற்கு வசதியாக தொழிலாளர்களுக்கு ஆக்கித் தரவேண்டுமென்ற ஆலோசனையை இந்தக் குழு சொல்லியிருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஒவ்வொரு ஊரிலும் தொழிலாளர்களது குழந்தைகள் படிப்பதற்கு—தொழிலாளர்களது குடியிருப்புப் பகுதியில்—தொழிற்சாலைப் பகுதியில் கிண்டர்கார்டன் ஸ்கூல்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்தக் குழுவில் எடுத்துச்சொல்லப்பட்டது. அதற்கான செலவுகளைச் செய்து விரைவில் இந்த அரசு அதுபற்றி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு வழக்காடுவதற்கு ஒரு ரிட் மனுவிற்கு ரூபாய் 150 வீதம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் சங்கங்களுக்கு நிதி உதவவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தொழிலாளர்களுக்குச் சத்து உணவுத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், சீரான உணவு வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது 138 தொழிற்சாலை மலைத் தோட்டங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தின் கீழ் 37,378 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

விலைவாசி உயர்ந்து இருக்கிற நேரத்தில் எடைகளையும், அளவுகளையும் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்பதுபற்றியும் ஆங்காங்கு திடீர் திடீர் என்று டைரக்டர் ஆப் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் மூலம் பரிசோதனைகள் நடத்தப்

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

பட்டு வருகின்றன. எல்லா இடங்களிலும் பல பரிசோதனைகள் நடந்திருக்கின்றன. தவறான எடைகளைப் பயன்படுத்தியிருக்கிறவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

1974 ஆம் ஆண்டு 7,640 வழக்குகள் தொடரப்பட்டு அவற்றில் 4,338 தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூபாய் 1,67,130 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதிலும் 2,203 திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு, 2,412 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

1974 இல் 8,970 கிராமங்களில் 60,209 விற்பனையாளர்களிடம் சோதனை நடத்தி, தவறான எடைகள் அளவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கலப்பு உலோகத்தால் செய்யப்பட்ட எடைகள் 14,928 வெவ்வேறு கொள்ளளவு கொண்ட அளவுகள் சுமார் 19,416 தவறான நிறுத்தல் கருவிகள் சுமார் 3,333 அளவுகள் சரியாக உள்ளதா என்று பார்ப்பதற்கு கைப்பற்றப்பட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்புக்கிணங்க இவைகள் பறிமுதல் செய்வது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வேலைவாய்ப்புப் பணியின் கீழ் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரை உள்ள கால அளவில் 903 உடல் ஊனமுற்றோர் அதாவது குருடர்கள் 165, செவிடர்கள் 114, முடவர்கள் 624 பதிவு செய்து, அவர்களில் 150 உடல் ஊனமுற்றோர்—அதாவது 10 குருடர்கள், 18 செவிடர்கள், 122 முடவர்கள் ஆகியவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

1974 நவம்பர் திங்கள்படி மொத்தம் 2,132 உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

தொழிலாளர் நலத்துறை இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

தொழில் தகராறுகளைத் தீர்ப்பதிலும் அவ்வப்போது தொழிலாளர் நலத்துறை—தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகிற நல்லபல ஆலோசனைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு பல பிரச்சினைகளைத் தீர்த்து இருக்கின்றன. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. நாராயணசாமி அவர்களும், இன்னும் திரு. சுப்பு, காட்டூர்கோபால்—ஏன் இராகவானந்தம் போன்றவர்கள் நல்லபல கருத்துக்களை அவ்வப்போது கூறி தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக பல சந்தர்ப்பங்களில் இருந்து வருகிறார்கள்.



1975 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது—வேலை நிறுத்தம், வேலை இழப்பு நாட்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசினார்கள்.

மொத்தத்தில் 1974 இல் 316 வேலை நிறுத்தங்கள் தமிழ் நாட்டில் நடந்தன. இதன் விளைவாக 44,07,909 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் போன்ற தொழில் மயமான மாநிலங்களைவிடக் குறைவாகத்தான் இருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் இது பற்றிக் குறிப்பிட்டதற்காக நான் சில புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன். மகாராஷ்டிரத்தில் 1974 ஆம் ஆண்டு 653 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அதன் விளைவாக 75,10,000 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது.

மேற்கு வங்கத்தில் 339 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக 1,07,25,859 மேன்டேஸ் இழப்பாகியுள்ளது.

கேரளத்தில் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முடிய—முழு விவரங்களும் கிடைக்கவில்லை—341 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே, இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் மிக அதிகமானவை என்று சொல்வதற்கில்லை. ஆனால் தமிழ் நாட்டில் தொழில் அமைதி ஓரளவு நிலவி வருகிறதென்று கூற விரும்புகிறேன். திருப்பூரில் நடைபெற்ற பனியன் தொழிற்சாலை வேலை நிறுத்தம் தான் அதிக நாட்கள் எடுத்துக் கொண்டுவிட்டது. அதுவும் முடிவில் மிகச் சுமுகமாக முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வீட்டுவசதி வாரியம்—சர்க்கார் ஒப்பந்திகளிடம் இருந்து 10 சதவிகிதம் சாலரியில் வீட்டுவாடகை என்று வாங்கிக்கொள்வதோடு, 15 சதவிகிதம் வீட்டுவாடகை அலவன்சையும் பெற்று வருகிறது. பத்து சதவிகிதம் வாடகை என்றால் அதோடு இருக்க வேண்டும், வீட்டு வாடகை அலவன்சையும் பிடித்துக்கொள்ளக்கூடாது என்றார்கள். இப்படிச் செய்கிற அதிகாரம் எங்களிடத்தில் இல்லை. நிதித்துறை எண்ணிப்பார்த்து—அரசுதான் அவர்களுக்கு எத்தனையோ சலுகைகள் அளிப்பதைப்போல இதுபற்றியும் சலுகை அளிக்க முடிவு செய்ய வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள் சம்பந்தமாக தவறுகள் நடைபெற்றுவிட்டதாக திரு. கே. டி. கே. தங்கமணி சுட்டிக்காட்டினார்கள். அதில் ஏதாவது தவறு இருக்குமானால்—அந்தக் குறைபாட்டை நீக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

கொண்டு வந்தார்கள். அந்தத் தொழிலாளிகள் மதுரையிலே என்னைச் சந்தித்தார்கள். அப்பொழுதே சொல்லவேண்டுமென்று நினைத்தேன், மறந்து விட்டேன். அந்த மாவட்டத்திலிருக்கிற டெபுடி லேபர் கமிஷனருக்கு, அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணுங்கள் என்று உத்தரவு போட்டுவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் காரியத்தை அவர்கள் செய்யவிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல உறுப்பினர்கள் 'லே ஆஃப்-லே' முழுத் தொகை தரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திரு. குமாரசாமி கூடக் குறிப்பிட்டார்கள். இதற்காக, தூத்துக்குடியில் ஒரு மாநாடு கூட்டப்பெற்றது. 75 சதவிகிதம் அவர்கள் தருவார்கள், 12½ சதவிகிதம் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம்; 12½ சதவிகிதம் மத்திய அரசு தரட்டும். அதற்குப் பிறகு பரிகாரம் காணலாம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நான், 'லே ஆஃப்லே' முழு ஊதியம் தர வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்துக் கொண்டவன் அல்ல. மத்திய அரசு தெரிவிக்கும் முடிவைப் பொறுத்துத்தான் இந்தியா முழுமைக்கும் ஒரு சீரான நிலைமை ஏற்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. SUBRAMANIAM : Sir this is a burning problem So for as non-permanent workers are concerned.........

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, டிஃபன்தான் அரேஞ்ச் பண்ணினார்கள். பாய், தலையணைகூட அரேஞ்ச் பண்ணவேண்டிய நிலை வருகிறது. மினிஸ்டரை மட்டும் பேசச் சொன்னீர்களானால் சீக்கிரம் முடிக்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நான்-பர்மனென்ட் ஒர்க்கர்ஸுக்குச் சட்டரீதியாகக் கொடுக்கவேண்டிய லேஆப் நஷ்ட ஈட்டைக்கூட கொடுப்பதில்லை இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு லேபர் கமிஷன் தீர்ப்புப்படி கோவைப் பஞ்சாலைகளிலே கொடுத்தார்கள். ஆனால் இன்று கொடுக்க மறுக்கிறார்கள். பல முறை லேபர் கமிஷன் சொல்லியதைச் சட்டப்படி இன்று கொடுக்க மறுக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், இப்பொழுதே கோரம் இல்லை. இன்னும் எவ்வளவு நேரம் அவை நடக்கும் என்று தெரிந்து விட்டால், அதற்குத் தகுந்தபடி சாப்பாடெல்லாம் சாப்பிட்டுவிட்டு வந்துவிடலாம்.



1975 ஏப்ரல் 4]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதர் ஆஃப் பார்லிமெண்டில்—லோக்சபாவில் இரவு 2 மணி, 3 மணி வரையிலும் கூடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அதற்குள் பதில் சொல்லிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் என்ன சொல்கிறேன் என்றால், உறுப்பினர்கள் சோர்வாக இருப்பார்கள் என்றுதான் சிற்றுண்டி கொடுத்திருக்கிறார்கள். அதைச் சாப்பிட்டபிறகு சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் சொல்வது சரியல்ல. நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு முடியுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** சார், மாலையே திரு. துரைமுருகன் கேட்டார், டிபன் கொடுக்கப்படுமா, டிபன் கொடுக்கப்படுமா என்று. வெளியே இரண்டு மூன்று பேர் என்னைக் கேட்டார்கள். இது வெளியே போனால், ஒரு மாதிரி என்றுவார்கள் நம்மைப்பற்றி. We have enjoyed the joke Let us expunge it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது குறிப்பிலிருந்தால் என்ன? வெற்றிலைச் சீவல் செக்ரடேரியட்டிலேதானே சப்ளை பண்ணுகிறோம்.

எல்லா

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இண்டியா மீட்டர்ஸைப்பற்றி இண்டியா மீட்டர்ஸ் பொறுத்தவரை தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர் நலத் எப்படி அதன் பிரச்னைகளைக் கவனிப்பது என்பதற்காகத் துறை அமைச்சராக துறை அமைச்சராக இருக்கிற நானும், மின்சாரத் பேச்சு வார்த்தையிலே இருக்கிற மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களும், கடமைப்பட்டிருக் கிறோம். இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் என்பதை நாம் கவனிக் கிறேன். அதில் ஏதாவது பரிகாரம் காண முடியுமா கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** அந்தக் கம்பெனியிலே சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால், அதன் முதலாளி பம்பாயிலே இருக்கிறார். முதலமைச்சர்கூட வாக்குறுதி கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) விசாரிக்கிறேன், பார்க்கிறேன் என்று சொன்னார். தங்கமணி அவர்கள் கேட்டதற்குப் பார்க் கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதனால் தப்பில்லை—கொடுப்பதில் தப் பில்லை. ஒரு மாதம், 2 மாதம் சம்பளம் இல்லாமலிருந்தால், கடையிலே பாக்கி கொடுக்கமாட்டார்கள். ரூ. 100, ரூ. 50-வது கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** முதலமைச்சரே வாக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு பிரச்னை கிடையாது. வாக்குக் கொடுத்தார்களா என்பதைக் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு சபைக்கு அறிவிக்கிறேன்.

பல்வேறு பிரச்னைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சிறு பையன்களையெல்லாம் வேலைக்கு அமர்த்துகிறார்கள் என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதிலேயிருக்கிற சங்கடங்களைப் பார்க்க தக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எல்லாவற்றையும் பேசிவிட்டு ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய மனதிற்குப் பிடித்தமான கருத்து. முதலாளிகள் அவரவர்கள் ஜாதி ஆட்களைத் தொழில்களில் வைக்கிறார்கள், என்று சொன்னார்கள். அது இந்த ஆட்சிக்குப் பிடிக்காது. அதை நானும் கண்டிக்கிறேன். அப்படி எதிர்காலத்திலே ஏற்படாமல் பார்த்துக்கொள்வேன் என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியத்திலே பல உறுப்பினர்கள் கலந்துகொண்டு, அதன் மூலமாக பல நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு எல்லா பிரச்னைகளுக்கும் பரிகாரம் தேடுகின்ற வகையில் இந்த ஆட்சி நடக்கும் என்று தெரிவித்து . . . . .

**திரு. கே. கந்தசாமி:** லே ஆஃப் பீரியடிலே மத்திய அரசு—மாநில அரசு—முதலாளிகள் கொடுக்க வேண்டிய பங்குபற்றி பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. சினிமாத் தொழிலிலே, முதலாளிகள் தாங்களாகவே ஜெனரேட்டர்கள் வைத்து ஒர்க் பண்ணுகிறார்கள். அதுமாதிரி, ஏன் மற்ற தொழில்களுக்கும் என்ஃபோர்ஸ் பண்ணக் கூடாது. அவர்கள் ஜெனரேட்டர்களைக் கட்டாயம் வைத்துத் தொழில்களை நடத்த வேண்டுமென்று ஏன் செய்யக் கூடாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஜெனரேட்டர்களை இந்தியாவிலே கொஞ்சம்தான் செய்கிறார்கள். பெரிய ஆலைகளுக்குத் தேவையான ஜெனரேட்டர்கள் இல்லை. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்திலேயிருந்து அனுமதி வேண்டும். அதற்குப் பணம் வேண்டும். இவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன. இந்த மின்சாரத்தை ஜெனரேட்டர் மூலமாக எல்லாத் தொழில்களுக்கும் கொண்டு வருவது என்பது முடியாத காரியம். ஆகவே அதிலே பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. நல்ல, வளர்ந்திருக்கிற, லாபம் வருகிற ஆலைகள்தான் ஜெனரேட்டர்கள் வைத்துக் கொள்ள முடியும். எல்லா ஆலைகளும் ஜெனரேட்டர்களை வைத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு . . . .





**திரு. பெ. சீனிவாசன்:** எந்த தனியார் ஸ்தாபனமாக இருந்தாலும், எப்படி அரசாங்க அலுவலகங்களுக்கு வேலைக்கு எடுக்கும்போது வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அதன் மூலமாக எடுக்கப்படுகிறதோ அதைப்போன்று எந்த தனியார் ஸ்தாபனமாக இருந்தாலும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்துதான் அதன் மூலமாகத்தான் எடுக்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டுமென்ற முறையைக் கொண்டு வருவார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காஸ்மாபாலிட்டன் கிளப் ஒர்க்கர்ஸ் ஸ்ட்ரைக்கிலே அதைத் தீர்க்கக் கூடிய வகையிலே ஏதாவது அமைச்சர் அவர்கள் சொன்னால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதைப்பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் முதலிலே என்னிடத்திலே சொன்னார்கள். என்னிடத்திலே வந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அநேகமாக எல்லா உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்திலே கொண்டு பதில் சொல்லியிருக்கிறேன், எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களும் குறிப்பெடுக்கப் பட்டிருக்கின்றன, அவற்றையெல்லாம் அரசாங்கம் கவனத்திலே கொண்டு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,35,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.**

[திரு. க. இராசாராம்] [1975 ஏப்ரல் 4

திரு. துரைமுருகன் பேசும்போது ஆட்டோமேஷன் பற்றிச் சொன்னார்கள். ஆட்டோமேஷனை கூடாது என்ற கருத்து இந்த அரசுக்கு ஒத்த கருத்துதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆட்டோமேஷன் எந்த நேரத்திலும் கூடாது என்பது அல்ல இந்த அரசின் கருத்து. ஆட்டோமேஷன் மூலம் ஏற்கெனவே இருக்கிற தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்றால் அதை இந்த அரசு வன்மையாக எதிர்க்கும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பீடித் தொழிலாளர்களது பிரச்சினை பற்றி அவரும், திரு. வகாப் அவர்களும் சொன்னார்கள். தோல் பதனிடும் தொழிலாளர்களைப் பற்றியும் சொன்னார்கள். பீடித்தொழிலாளர்களது பிரச்சினையில் கவனம் செலுத்தி நிரம்பக் காரியங்களைச் செய்திருக்கிறோம். ஒரு சின்ன சிக்கலை இந்த மன்றத்தில் சொல்லியாகவேண்டும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மகாநாடு டெல்லியில் நடைபெற்றபோது இந்தியா பூராவுக்கும் ஒரேவிதமான கூலி விகிதத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினோம். அதில் சரியான முடிவு ஏற்படவில்லை.

நம்முடைய அண்டையில் இருக்கிற ஆந்திர மாநிலத்தில் இன்னமும் ஆயிரம் பீடிகளுக்கு கூலி 3½ ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் ஆயிரம் பீடிக்கு ரூபாய் 4, ரூபாய் 4.10 என்று வைத்திருக்கிறோம். இதன் காரணமாக சில பாக்டரிக்காரர்கள் ஆந்திராவுக்கே பாக்டரியை எடுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். ஆகவே இந்தியா பூராவும் இல்லை என்றாலும் ஆந்திரா, மைசூர், கேரளம்—தமிழகம் ஆகிய தென்மாநிலங்களிலாவது பீடித் தொழிலாளர்களது ஒரேவிதமான கூலி விகிதம் என்று இருந்தாலொழிய பீடித் தொழிலாளர்களது பிரச்சினையில் முழு வெற்றியைக் காண முடியாது. அவர்களும் நான்

(இரவு 9-00)

விரைவிலே செய்கிறேன் செய்கிறேன் என்று நேரம் கேட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலே செய்துவிடுவோமென்று சமீபத்தில் சொன்னார்கள். அவர்கள் கூலியை உயர்த்துகின்ற வரையில் நாம் மேலும் அளிக்க முடியாது என்ற சூழ்நிலையிலே இந்த அரசு கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி பீடித் தொழிலாளிகளுக்குப் பல்வேறு காரியங்களைச் செய்ய இந்த ஆட்சி பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 4] [திரு. க. இராசாராம்]

அம்மையார் அவர்கள் சொன்னார்கள், ஆர்கனேஸ்ட் லேபருக்காக எல்லோரும் போராடுகிறார்கள், அன்-ஆர்கனேஸ்ட் லேபரைப் பற்றி யாரும் பார்ப்பதில்லை, என்று. கைத்தறி, பீடி, நெசவு, தங்க நகைகள், ஆபரணம் செய்யும் தொழில் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே வாங்கிக்கொண்டிருப்பதை விடக் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே ஏற்கெனவே இருப்பதை 50 சதவிகிதம் அதிகமாக்க வேண்டுமென்று நானும் வெகு நாளாகச் சொல்கிறேன். அப்படியிருக்கும்போது இருப்பதைக் குறைத்து என்ன பிரயோசனம்? இருப்பதை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லி ரொம்பக் காலமாகிறது. ஆகவே, 50 சதவிகிதம்-ஆவது உயர்த்தி நிர்ணயம் செய்ய ஆர்டினன்ஸ் போட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நூல் என்றாலே ரொம்பவும் சிக்கல் தான். இப்பொழுதுதான் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதே மீண்டும் மீண்டும் திருத்துவது என்றால், பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாவோம். கொஞ்சம் காலம் கழித்துத்தான் அந்த நிலைமையில் ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கமே இல்லாத ரோடு போடுகிற தொழிலாளிகளுக்குக் கூடுதல் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கல் உடைக்கும் தொழிலாளிகள், தோட்டத் தொழிலாளிகள், உணவு விடுதித் தொழிலாளிகள், இன்னும் மோட்டார் தொழிலாளிகள், பஞ்சடிக்கும் தொழிலாளிகள், மோட்டார் தொழிலிலேயுள்ள தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள் ஆகியோருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கூலியை மீண்டும் நிர்ணயிக்க ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் சில மாறுதல்கள் வரவேண்டுமென்று சொல்லி, மோட்டார் தொழிலாளிகள், பஞ்சடிக்கும் தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள் போன்றோருக்கு மீண்டும் கூடுதலாக ஊதியம் அளிக்கக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த வகையில் தொழிலாளிகளுக்குச் செய்யப்படுகின்ற காரியங்களை நல்ல வகையில் செய்து வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் ஒரு பஸ் கம்பெனியைப்பற்றி குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) பழனியப்பா கம்பெனி என்று சொல்கிறார்கள். அந்தக் கம்பெனியைப் பற்றி மாண்புமிகு சுப்பு அவர்கள் என்னிடத்தில் சொல்லிக்

திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. சுப்பிரமணியம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,67,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9.13 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

161. Notification issued in G.O. Ms. No. 2207, Revenue, dated the 25th May 1974, in regard to appointment of officers to carry out the functions and duties assigned to the Settlement Officers and Assistant Settlement Officers under the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. (*Laid on the table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari Act*, 1948 (*Tamil Nadu Act XXVI of* 1948).

### *B. Reports, Notifications and Other Papers.*

144. Notification issued in G.O. Ms. No. 71, Commercial Taxes and Religious Endowments, dated the 27th January 1975, in regard to remission of stamp duty and Registration fees in respect of sale deeds to be executed in favour of the Secretary, College Purchase Committee Wallajapet and gift deed in favour of the Government of Tamil Nadu.



@ 145. Review of Labour in Tamil Nadu, 1974–75 (English and Tamil).

@ 146. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 29—Labour including Factories (English and Tamil).

147. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories.

148. Eighth Report of the Committee on Government Assurances.

---

@ Despatched to members on 2nd April 1975.

முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அம் முடிவிற்கிணங்க, தொழிலாளர்கள் மூன்று கட்டங்களில் வேலைக்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். நாவாகமும் இம் முடிவைச் செயற்படுத்தியுள்ளது.

6. கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில், கைத்தறி நெசவுத் தொழில், தங்க நகைகள் தயாரிப்புத் தொழில் ஆகியவற்றில் வேலை நியமனங்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களை அரசு, இது குறித்து அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் அளித்த ஆலோசனைப்படி வரையறுத்துள்ளது.

7. 1974 ஆம் ஆண்டில், அரசு, பின்வரும் தொழில் நிறுவனங்களில் வேலைக்மர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்களை வரையறுக்கும் வகையில் அத்தொழில் நிறுவனங்களிற் செயற்படும் வேலை நியமனங்களைக் குறைந்த அளவு ஊதிய விதங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துள்ளது :—

(1) அச்சகங்கள்.

(2) திரைப்பட அரங்குகள்,

(3) கடைகள், வாணிக நிறுவனங்கள்,

(4) மீன்பிடி தொழில்.

8. 1974 ஆம் ஆண்டு செப்டம்பரில் புது டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இம் மாநாட்டில், பின்வருவன போன்ற முக்கியப் பொருள்கள் விவாதிக்கப்பட்டன. பீடித் தொழில் வேலை நியமனங்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்களைத் திருத்தியமைத்தல், 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தைச் செயற்படுத்துதல், ஆண், பெண் தொழிலாளர் இருபாலருக்கும், சம மதிப்புள்ள வேலைக்குச் சம ஊதியம் வழங்குதல் குறித்து உலகத் தொழிலாளர் நிறுவனத்தின் மாநாட்டின் பரிந்துரைகளைச் செயற்படுத்துதல், வழக்காடுவதற்குத் தொழிலாளருக்கு உதவியளித்தல் ஆகியன. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தைச் செயற்படுத்துதல் குறித்து எழும் பிரச்சினைகளைக் கவனித்து அவற்றுக்குத் தீர்வுகாணும் வழிகளை எடுத்துரைக்க அதிகாரிகளடங்கிய சிறு குழுவொன்றை மத்திய அரசு அமைக்க வேண்டுமென அம் மாநாடு முடிவு செய்தது.

9. தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம் ஆகியவற்றின்கீழ் எழும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, வழக்குகளை முடிப்பது ஆகியவற்றை



விரைவுபடுத்தும் நோக்குடன், நிர்வாகப் பணியாளர் அமைப்பை அரசு வலுப்படுத்தியுள்ளது. இதன் பொருட்டு, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட, தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையாளர் ஒருவரது தலைமையில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களடங்கிய புதிய வட்டாரம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

ஊதியக் கொடை வழங்கல் சட்டம், பணிக்கொடை வழங்கல் சட்டம் ஆகியவற்றை நிர்வகிக்கும் பொருட்டு தனிப் பணியாளரமைப்பை அமைக்கும் கருத்து, 1973 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மாநாட்டில் பரிசீலனைக்கு வந்தது. இப்பணியை மேற்பார்வை அதிகாரிகளடங்கிய தனி அமைப்பிடம் விடுவது உகந்தது எனவும், அவ்வமைப்பு, இச்சட்ட விதித் துறைகளை மிகத் திறம்பட குறிப்பாக, தொழிலாளர்கட்குத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இல்லாத நிறுவன அமைப்பற்ற துறையில்—மிக திறம்படச் செயற்படுத்தும் என்றும் அம் மாநாட்டில் பரிந்துரைக்கப்பட்டது. இப் பணியைக் கவனிக்கும் பொருட்டும், தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை நிர்வகிப்பதில் உதவும் பொருட்டும், அரசு தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் பதவிகள் நான்கிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் முறையே சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்களைத் தலைமையிடமாகக் கொண்டு அந்தந்தப் பகுதியின் தொழிலாளர் நலத் துணை ஆணையாளரது கட்டுப்பாட்டு அதிகாரத்தின்கீழ் பணிபுரிவர்.

10. இத் துறையின் அதிகாரிகட்குப் போக்குவரத்து வசதிகள் அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றி இம் மன்ற உறுப்பினர்கள் பன்முறையும் வலியுறுத்தியுள்ளனர். இந்த அவசியத்தை உணர்ந்து, படிப்படியாக நிறைவேற்றும் திட்ட அடிப்படையில் இந்த அதிகாரிகளுக்கு பணித் துறை வண்டிகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மதுரை, சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்களுக்கும், கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளருக்கும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் போன்ற முக்கிய தொழில் நகரங்களிலுள்ள தொழிலாளர் நல அதிகாரிகள் ஐவருக்கும் முதல் நடவடிக்கையாக பணித்துறை வண்டிகள் அளிக்கப்பட்டுள்ளன.

11. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு குறித்து அரசு பரிசீலித்து வருவதாக கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின்போது நான் குறிப்பிட்டதை

[1975 ஏப்ரல் 4

## இணைப்பு —I

[122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் உரை

### கோரிக்கை 29—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் "கோரிக்கை 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்" என்பதன்கீழ் ரூ. 3,35,12,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்னுரைக்கின்றேன். இக் கோரிக்கையில், வேலை தேடித்தரும் பணிகளுக்கும் கைவினைப் பணியாளர் பயிற்சிக்கும் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத் துறை, வேலைவாய்ப்பு–பயிற்சித் துறை ஆகிய துறைகள் 1974-75 இல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை பேரவையின்கண் வைக்கப்பட்டுள்ளது. அதனைக் காணுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை கொள்கையின் முக்கியமான சில அம்சங்கள் பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்கச் சொல்லி விளக்க விரும்புகிறேன்.

2. தொழில் துறையில் அமைதியும் தொழில் செழித்து வளரவும், தொழிலாளர் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலையும் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாக விளங்குகின்றன. தொழிலதிபர், தொழிலாளர் ஆகிய இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த முழுவாய்ப்பு அளிக்கப்படுகின்ற அதே சமயத்தில், தொழில் துறை அமைதி குலையும்போது அல்லது உற்பத்தி தடைப்படும்போது அந்நிலையில் அரசு தலையிட்டு அமைதி மீண்டும் நிலைப்பெறச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்; ஏனெனில், தொழிலாளர் நலன், தொழில் துறையின் நலன் மட்டுமின்றி சமுதாய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது; அத்தகைய சூழ்நிலையில், இம்மூவகையினரின் நலனுக்கும் தீங்கு விளையக்கூடுமென்றிருக்கையில் அரசு வாளா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தொழிலாளர் பாதுகாப்பிற்கும், அவர்தம் சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கும் பொருட்டும், தனியார் துறை, பொதுத் துறை இவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துமாறு செய்தலும் அரசின் கொள்கையாகும். நமது தொழிலாளர் நலக் கொள்கையின் புதிய அம்சமான தொழிலாளர் நலத் திட்டங்கள் தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் செயல் வரம்பிற்குள் வராத துறைகளில் தொழிலாளர்க்கு வசதிகளைச் செய்து தர விழைவன ஆகும்.



1975 ஏப்ரல் 4]

3. மாநில அளவில் தொழிலாளர் நலன் தொடர்பான கொள்கை அனைத்திலும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவே தலைமை ஆலோசனைக் குழுவாகும். அரசு தனது தொழிலாளர் நலக் கொள்கைகளை உருவாக்குவதிலும் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், பெயர் பெற்ற தொழிலாளர் நலத் தலைவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரது ஆலோசனையையும் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் மூலமாகப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்கிறது.

4. இம் மாநிலத் தொழிலாளர் நிலைமையைக் காண்போம். முந்திய ஆண்டுப் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிட, வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் அதிக வேறுபாடு இல்லையென்றாலும் இவ்வாண்டில் நாம் இழந்த மனித ஆற்றல் நாட்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 1973 இல் நிகழ்ந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை 314 ; இழந்த மனித ஆற்றல் நாட்கள் 20,56,995 ; அதற்கெதிராக 1974 ஆம் ஆண்டில் நிகழ்ந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை 316 : இழந்த மனித ஆற்றல் நாட்கள் 44,07,909 ஆகும். மாநில முழுவதும் பரந்த பஞ்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெற்றது என்பதையும், அதேபோல், திருப்பூரில் உள்ளாடைத் தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெற்றது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இவ்விரு வேலைநிறுத்தங்களால் மட்டுமே 18.95 இலட்சம் மனித ஆற்றல் நாட்கள் இழப்பு நேர்ந்தது. இந்த அம்சத்தையும் கருத்திற்கொண்டால் 1973 ஆம் ஆண்டில் தொழிலாளர் நிலைமை அதற்கு முந்திய ஆண்டிலிருந்த நிலைமையைவிடப் பெருமளவிற்கு சீரடைந்திருந்ததென்பதைக் கருதும்போது 1974 ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் தொழிலாளர் நிலையானது 1973 இல் நிலவிய நிலைமையைக் காட்டிலும் கணிசமாக வேறுபட்டு விட்டதெனச் சொல்லிட இயலாது.

5. 1974 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்ட பெரிய தொழில் தகராறுகளில் பீடித் தொழில், சர்க்கரைத் தொழில், மலைத் தோட்டத் தொழில் ஆகிய தொழில்களிலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலும் ஏற்பட்ட தொழில் தகராறுகள் குறித்து செய்யப்பட்ட உடன்பாடுகளை இங்குக் குறிப்பிட விழைகின்றேன். பஞ்சாலைத் தொழிலில் ஊதியக்கொடை குறித்து எழுந்த தொழில் தகராறு மாண்புமிகு முதல் அமைச்சரவர்களின் நன்முயற்சியின் பலனாக இருதரப்பினர்க்கும் இசைந்த வகையில் தீர்த்து வைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஏற்பட்ட உடன்பாட்டையொட்டி அதற்கு முன்னர் சிம்ஸன் நிறுவனங்கள் குழுவின் நிர்வாகம் வேலைநீக்கம் செய்திருந்த 122 தொழிலாளர் தொடர்பாகத் தனது முடிவையும்

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ரூ. 58.56 லட்சம் செலவிற்கு மேற்படாமல் இந்த அதிகாரிகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு அரசு தற்போது அனுமதி வழங்கியுள்ளது. இதில் 1974-75ல் செலவிட ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. மலைத் தோட்ட அதிபர்கள் நடத்தும் மருத்துவ மனையிலிருந்து நோயாளிகள் குணமாகும் முன்பே அனுப்பப்பட்டுவிடுகின்றனர், நோயாளிகளுக்குத் தகுந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுவதில்லை, மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் மருந்துகள், மருந்துப்பொருள்கள் கிடைப்பதில்லை என்றெல்லாம் மலைத்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்த வண்ணம் உள்ளன. மருந்தகங்களையும், மருத்துவ மனைகளையும் அடிக்கடியும் திறமையாகவும் பார்வையிடுவதற்காகவும், மருத்துவ வசதிகள் உள்ளனவா என்பதைச் சோதனை செய்ய மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகள் செவ்வியமுறையில் செயல்படுத்தப் படுகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்வதற்காகவும் நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய இடங்களில் தேவையான துணைப்பணியாளருடன் உதவி மருத்துவ அதிகாரிகள் பதவித்தரத்தில் மருத்துவ அதிகாரிகள் இருவரை நியமித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மருத்துவ அதிகாரிகள் சென்னை மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளரின் கீழ் பணியாற்றுவர். அவர்கள் தங்கள் பணியைச் செவ்வையாக நிறைவேற்றிட அவர்களுக்குப் பணித்துறை வண்டிகள் இரண்டை வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. தொழிற்சங்கத் தலைவர்களை உருவாக்குதல், தொழிலாளர் நல அதிகாரிகள், பணியாளர் அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சியளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டு வகுப்புகளை நடத்துதல் போன்ற முக்கிய நோக்கங்களுடன் 1973-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வுநிலையம் இந்த ஆய்வாண்டில் தனது பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தியது. இந்நிலையம் தொழிற்சங்கத் தலைமை குறித்த பயிற்சி வகுப்புகளில் 104 தொழிலாளர்களுக்கு இதுவரை பயிற்சி அளித்துள்ளது. தொழிற்சாலை நிறுவனங்களிலுள்ள 56 தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைப் பாதுகாப்பை தெரிப்படுத்தும் இருவகைப் படிப்புகளை இந்நிலையம் நடத்தியது.

14. 1973 ஜனவரி 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்த தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் தொழிலதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும், தொழிலாளர் நல நிதிக்குத் தொகை வசூலிப்பதற்கும் இத்திட்டத்தை சட்டபூர்வமான திட்டமாக ஆக்கவும் வகை செய்கிறது. தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத்தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல



-தவி ஆய்வாளர்கள் ஆகியோர் அவரவர் பகுதிகளில் இச்சட்டத்தின் கீழ் 'ஆய்வாளர்களாக" செயல்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளனர். அரசு இந் திக்கு முதலில் அளித்த ரூ. 5 லட்சம் மானியம் உட்பட இந்நிதிக்கு இது வரை ரூ. 40 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருந்த தமிழ்நாடு தொழிலாளர் நலக்குழு தற்போது அமைக்கப் பட்டுவிட்டது.

15. மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக்குழு 5—2—74, 6—2—74, 23—4—74, 4—2—75 ஆகிய நாட்களில் கூடியது.

16. தொழிலாளர் நல அதிகாரிகளின் ஆண்டுக் கூட்டம் 1974 செப்டம்பரில் நடைபெற்றது. மூன்று நாட்கள் வரை நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு நான் தலைமை வகித்தேன். பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் "தொழிலாளர்" என்ற சொல்லுக்கு உள்ள தொகை வரம்புகளை உயர்த்துதல், தொழிலாளர் நல இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத்தொகை அளிப்பதற்கான அளவை உயர்த்துதல், உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சலவைப்படியளித்தல், பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழுள்ள தண்டனை விதித்துறைகளைக் கடுமையாக்குதல், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தின் சார்பாக வழக்குகளை நடத்துதல், சட்ட ஆலோசனைகள் நல்குதல், வட்டார சட்ட அதிகாரிகளை நியமித்தல் ஆகியவை இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கியப் பொருளாகும்.

17. தொழிற்சாலையில் பாதுகாப்பை மேம்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும் இத்துறையில் தொழிற்சாலை இயக்குநர் அலுவலகம் நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. தொழிற்சாலைச் சூழலில் ஈயநச்சு, சிலிகோஸிஸ், சரும வியாதி ஏனைய நச்சு நோய்கள் போன்றவை வருவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து வெப்பம், தொழிற்சாலை இரைச்சல் போன்ற பிரச்சினைகளைத் தடுப்பதற்கான நடைமுறைகளைத் தெரிவிக்க மாநிலத் தொழிற்சாலை இயக்குநர் அலுவலகத்தில் மருத்துவ ஆய்வாளர் ஒருவரின் கீழ் ஒருங்கிணைந்த தொழிற் சாலை சுகாதாரம்—உடல் நலப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொழில் சார்ந்த ஆபத்துக்களிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க இப்பிரிவு அவர்களுக்குப் பெருதவியாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

18. 'ஆசிய உற்பத்தி ஆண்டு 1970' என்ற கருத்தை விளக்கும் வகையில் "உற்பத்தியின் தாமும் நம்பகமும்" என்ற செய்திப்படம் ஒன்றை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தொழிலாளர் நலத்துறையின் ஆதரவில் தயாரித்து 31—1—1975 அன்று வெளியிட்டது.

19. தொழிலாளர் நலத்துறையின் ஆய்வுப் பிரிவு தமிழ்நாடு எடைகள் அளவைகள் (அமுல்) சட்டத்தைத் தொடர்ந்து நிர்வகித்து வந்தது.

இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றம், பற்றாக்குறை காரணமாக குறை எடைகள், மோசடி எடைகள், அளவைகள் இவற்றைப் பயன்படுத்துதலி லுள்ள, முறைகேடுகளைச் சோதனையிடும் பணி சிறப்பு முக்கியத்துவம் பெற் றுள்ளது. அடிக்கடி திடீர்ச் சோதனைகள் மூலமும் அவ்வப்போது சென்று பார்வையிடுதன் மூலமும் மேற்படி முறைகேடுகளை அறவே நீக்கிட துறை தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1974-ல் 7,640 வழக்குகள் தொடர அனுமதிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அபராதமாக ரூ. 1.87 லட்சம் வசூலிக்கப்பட்டது. சிலருக்குச் சிறைத் தண்டனைகள் அளிக்கப் பட்டுள்ளன. குறைவான எடைகளையும் அளவைகளையும் பயன்படுத்துவதைத் தடுப்பதற்குத் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகளை இவை எதிரொலிக்கின்றன.

20. அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித்திட்டம்.—இத்திட்டம், தற் போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத் திலும் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 39 பெரிய தொழில் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றன. தற்போது அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் 3, நிலை யியல் மருத்தகங்கள் 95, இயல் ஊர்தி மருந்தகங்கள் 9, பகுதி நேர மருந் தகங்கள் 2, தொழிலதிபர் பயன்பாட்டு மருந்தகங்கள் 3 ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் இம்மாநிலத்திலே 400,000 காப்புறுதி செய்து கொண்டவர்கள் பயனடைகின்றனர்.

21. இத்திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு, தொழிலாளர் ஒருவர் பெறும் மருத்துவ வசதிக்கான செலவிற்கு உச்ச வரம்பினை 1—4—1970 ஆம் நாளி லிருந்து அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் வரையறுத்தது. இந்த உச்சவரம்பிற்கு மேல் ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. இந்த அரசு மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்பத் செய்து கொண்ட முறையீடுகளுக்குப் பிறகு தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், உச்சவரம்பு வீதங்களை நான்கு முறை உயர்த்தியது. 1—4—1974 ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்படும் மருத்துவச் செலவு குறித்த உச்ச வரம்பு வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| வரையறுத்த மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 65 ரூபாய் |
| விரிவான மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 70 ரூபாய் |
| முழு மருத்துவ வசதி | .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 85 ரூபாய் |





...ருந்து, மருந்துப் பொருட்கள், கட்டுக்கட்டும் பொருள்கள் குறித்துத் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு அதிகமாக ...னால் 45 ரூபாய்க்கு குறைவாக மாநில அரசுக்கு ஏற்படும் ஒவ்வொரு ...செலவும், உச்சவரம்புக்கு அப்பால் சாதாரண விகிதாசாரத்தில் தொழிலாளர் ...லக் காப்புறுதிக் கழகத்தால் பகிர்ந்து கொள்ளப்படும். உச்சவரம்பு அளவை அவ்வப்போது உயர்த்தியிருந்தும்கூட உச்சவரம்பிற்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் பெருந்தொகையை மாநில அரசு செலவிட வேண்டி வந்துள்ளது. ...விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | மொத்த மருத்துவச் செலவு. | அரசுத் தொழிலாளர் காப்புறுதித் திட்டக் கழகத்தின் பங்குத் தொகை. | மாநில அரசு செலுத்திய தொகை. | மாநில அரசு கூடுதலாகச் செலுத்திய தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1969–70 | .. | 248·70 | 221·65 | 27·05 | .... |
| 1970–71 | .. | 266·14 | 169·29 | 96·85 | 73·66 |
| 1971–72 | .. | 322·99 | 203·44 | 119·55 | 91·46 |
| 1972–73 | .. | 356·40 | 214·88 | 141·52 | 111·32 |
| 1973–74 | .. | 360·45 | 266·10 | 94·35 | 58·72 |

1974–75-ம் ஆண்டிலும்கூட, கூடுதல் செலவு சுமார் ரூபாய் ஐம்பது இலட்சம் ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1974-75-ஆம் ஆண்டிற்குள் கீழ்க்காணும் பகுதிகளில் அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன :—

(1) மேலூர்—மதுரை மாவட்டம்.

(2) ஆத்தூர்—சேலம் மாவட்டம்.

கீழ்க்கண்ட இடங்களில் அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் 1974-75 இறுதிக்குள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) கரூர்—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(2) நந்தம்பாக்கம்—சென்னை புறநகர்ப் பகுதி.

(3) அடையாறு—சென்னை புறநகர்ப் பகுதி.

(4) ஆம்பூர்—வட ஆர்க்காடு மாவட்டம்.

(5) காரமடை—கோயம்புத்தூர் மாவட்டம்.

22. சென்னை மாநகரில் இரண்டாவது அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையை தொடக்கத்தில் 200 படுக்கைகளும் முடிவில் 500 படுக்கைகளும் உள்ளவகையில் கட்டுவதற்கு புதுடில்லியிலுள்ள அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இது கலைஞர் கருணாநிதி நகரில் கட்டப்படும்.

23. நமது நாட்டில் உள்ள வேலை தேடும் ஒவ்வொரு வகையான நபருக்கும் பலனளிப்பதற்காக, தேசிய வேலை வாய்ப்புப் பணி நிறுவனம் தனது நிர்வாகப் பகுதியை தொடர்ந்து விரிவுபடுத்தி வந்துள்ளது. தொழில் நுட்பம் கல்வி பெற்றவர்களுக்காக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்று சென்னை மாநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் தவிர சென்னை, அண்ணாமலைநகர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் வழிகாட்டிக் கழகங்கள் மூன்று உள்ளன. இப் பணி நிறுவனம் வேலை தேடுபவர்களுக்கு வேலை தேடித்தருவது மட்டுமின்றி தொழில்கள் செய்ய வழிகாட்டியாய் இருந்தும், வேலைவாய்ப்பு ஆலோசனை வழங்கியும் வாழ்க்கைத் தொழில் பற்றிய தகவல்களைத் தந்தும் உதவுகிறது. இதைத் தவிர, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும், உயர்கல்வி பெற்று வேலை தேடுபவர்களுக்காக தொழில்—நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும் உள்ளன. மாநில இயக்குநர் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு-விளம்பரப் பிரிவு ஒன்று அண்மையில் இணைக்கப்பட்டுள்ளது. பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிவரும் அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த அகதிகளை முறையாகக் குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி, தனிப்பட்ட தொழிலதிபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இதில் அக்கறையுள்ள நிறுவனங்களுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டு வருகிறார். அரிசனங்கள் பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்குச் செம்மையான





வழிகளில் வழிகாட்டி உதவியளிக்கும் நோக்கத்துடன் "பயிற்சியளித்து வழிகாட்டியுதவும் நிலையம்" ஒன்று இந்திய அரசின் கீழ் சென்னையில் பணியாற்றி வருகிறது.

24. தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களிடையேயுள்ள வேலையின்மையைப் போக்க, வேலையில்லாமல் இருக்கும் பொறியாளர்கள், பட்டயம் பெற்றவர்கள், கைவினைப் பணியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சியுதவித் தொகைத் திட்டம் ஒன்றுக்கு அரசு 1970 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகளிலும், அரசுப் பங்கு பெற்ற துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவர்களில் சிலர், இந்தக்கால அளவில் முறையான காலியிடங்களில் பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

25. ஆட்படை ஊற்றம், பகுதித் தொழில் அமைப்பு முறை, குறை நிலைத் தொழில்கள் ஆகியவை பற்றி தனி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இயக்குநர் அலுவலகத்தில் ஆழ்ந்த ஆய்வுக்குழு ஒன்று உள்ளது. இந்த ஆய்வுகள், வேலை வாய்ப்பு குறித்த தகவல் திட்டத்தின் கீழ் குறித்த காலத்திற்கொருமுறை மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்குத் துணையாக இருக்கும். இவை, ஆட்படை ஊற்றத்தைத் திட்டமிடுதல் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல் வளர்ச்சித் திட்டம் வகுத்தல் ஆகியவற்றிற்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

26. வேலையின்மை குறித்த பிரச்சினையில், இந்த அரசு இடைவிடாத நாட்டத்தைச் செலுத்தி வந்துள்ளது. இப் பிரச்சினையை தீர்ப்பதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும் இயன்ற அளவுக்கு மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதும் அரசின் இரட்டை நோக்கங்களாகும். கடந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட 5 இலட்சம் மக்கள் வேலைவாய்ப்புத் திட்டமும் இந்தக் கருத்துக்களையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. ஐந்து இலட்சம் மக்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1973-74-ல் ரூ. 461.32 லட்சம் செலவிடப்பட்டது. படித்து வேலையற்றிருந்த 26,000 பேருக்கு வேலை அளிக்கப்பட்டது.

27. இக் காரியத்திற்காக நடப்பாண்டில் இந்திய அரசு "வேலை வாய்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தை" தொடங்கியுள்ளது. இத் திட்டம், சொந்தத் தொழில் வாய்ப்புத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கின்றது. "வேலை வாய்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தை" செயற்படுத்துவதற்காக தமிழ்நாட்டிற்கு 1974-75-ல் இந்திய அரசு ரூ. 205 லட்சம் ஒதுக்கியுள்ளது.

28. இதுவரையில் 52 புதிய வேலைவாய்ப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகள் வகுக்கப்பட்டு திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர 5 லட்சம் மக்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திட்ட

ஆணைக்குழுவிடம் ஒப்புதல்பெறப்பட்டு 1974 மார்ச் 31-ஆம் நாளுக்குள் மேற்கொள்ளப்படாமல் அப்படியே முடிக்கப்படாமலிருந்த ஐந்து திட்டப் பணிகள் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாறாக, ரூ. 301.82 லட்சம் மொத்தச் செலவில் 37 திட்டப் பணிகள் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக அதற்கு அனுப்பப்பட்டன. திட்ட ஆணைக்குழு இதுவரை மாவட்டங்களைத் தொடர்புபடுத்துவதற்காக 42 திட்டப் பணிகளுக்கு—37 புதிய திட்டப்பணிகள், வேலை நடந்துவரும் 5 பணிகள்—ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றிற்கு ஒதுக்கிய நிதியுதவி ரூ. 205 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

29. விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை முன் தேவை பயிற்சி பெற்ற தொழில் நுட்ப ஆட்படை எளிதில் கிடைப்பதேயாகும். கைத்திறத் தொழிலாளர் பயிற்சித் திட்டங்களின் கீழ் நம் மாநிலத்தில் கீழ்க்காணும் வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன—

(i) தொழில் பயிற்சி நிலையத்தில் நிறுவனப் பயிற்சி.

(ii) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுநர் பயிற்சி.

(iii) 1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் தொழில் வகுப்புகள்).

(iv) வேலையிலிருக்கும் பொற்கொல்லர்கள், வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்குக் குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி (பகுதி நேரம்).

சென்னையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று உட்பட தற்போது 31 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. சென்னையிலுள்ள நிலையம், மாநிலத்தில் மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்காகவென்றே உள்ளதாகும்.

30. மாநிலத்திலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் தொடர்ந்து மிக உயர்ந்த நிலையிலிருந்து வருகிறது. அனைத்திந்தியத் திறமைப் போட்டிகளில் கிட்டத்தட்ட ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது இரண்டு தொழில்களில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் நிலையை அடைந்து வந்துள்ளது. 1974, நவம்பர் திங்களில் நடந்த 11-வது அனைத்திந்தியத் திறமைப் போட்டியில் 5-வது முறையாகவும் தமிழ்நாடு "சிறந்த மாநிலம்" என்பதற்காக "குடியரசுத் தலைவர் சுழல் கேடயத்தைப்" பெற்றுள்ளது. இயந்திரம் இயக்கும் (ஒருங்கிணைந்த) தொழில், கடைசல் பிடிக்கும் தொழில் ஆகியவற்றில் நம் மாநிலத்திலிருந்து பயிற்சி பெறுபவர்கள் முதல் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.



31. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 1974 ஆம் ஆண்டு கூடுதல் ஊதியங்கள் (கட்டாய வைப்பீடு) சட்டம், 1974 ஆம் ஆண்டு கம்பெனிகள் (ஆதாய ஈவுத் தொகைகள் மீதான தற்காலிக வரையறைகள்) சட்டம் ஆகிய இரண்டு புதிய சட்டங்களை இந்திய அரசு இயற்றியுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்தச் சட்டங்களினால், தொழில் உறவுமுறை பாதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், தொழில் நலன்களுக்குக் குந்தகம் ஏதும் ஏற்படாமல் தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படும் வகையில் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் அரசுடன் ஒத்துழைப்பார் என நான் நம்புகிறேன்.

32. தொழில் அமைதியையும் உற்பத்தியையும் பேணி வருவதில் அரசுடன் தங்கள் ஒத்துழைப்பை நல்கியதற்காக இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம்மாநிலத்தில் தொழிலாளரின் நலனை உயர்த்தும் பணியில் தங்களது மேலான அறிவுரைகளைத் தொடர்ந்து நல்கிவர வேண்டுமென மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு II

[122-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டில் வீட்டு வசதி

**1974-75.**

வளங்கெழு அரசுக் கொள்கையையும் நிலையான ஜனநாயகக் கொள்கையையும் செயற்படுத்துவது என்று இவ்வரசு ஏற்று உறுதிபூண்டு உள்ளது. அதற்கிணங்க இம் மாநிலத்தில் வீட்டுவசதி நிலைமை பற்றாக்குறையாக உள்ளதை இவ்வரசு அறிந்துகொண்டு மக்களின் வீட்டுவசதிப் பற்றாக்குறையை தீர்த்துவைக்க பல்வேறு நிலைகளில் உண்மையான மனமொன்றிய பல முயற்சிகளை எடுத்துவந்துள்ளது. முதல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொழுது "குறைந்த வருவாய்த் தொகையினருக்கான வீட்டுவசதித் திட்டம்" "மலிவு வீட்டுவசதித் திட்டம்" போன்ற இரண்டொரு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதனையடுத்துவந்த திட்டக் காலங்களில் குடிசைப் பகுதி மாற்றுப் பணி, தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி, கிராமப் பகுதி வீட்டு வசதி, போன்ற திட்டப் பணிகளில் முன்னேற்றம் மும்முரமாக நிகழ்ந்தது. தமிழ்நாடு அரசு முதன்முதலில் முக்கியமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கே வீடுகள் கட்டுவதற்காக நிதி உதவி அளித்தது. 19[illegible]-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கான மாநகர மேம்பாட்டுப் பொறுப்புக்

கழகம் நிறுவப்பட்டது. இது, அரசு அளித்த நிதி வசதியைக் கொண்டு கணிசமான அளவிற்கு வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்ய முடிந்தது. வீட்டு வசதித் திட்டங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் மாநகருக்கு மட்டுமேயென முடங்கிவிடலாகாது என்றும், மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டபடியால் மாவட்ட வீட்டு வசதிப் பிரிவுகள் மூன்றுடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. இம்மூன்று பிரிவுகளும் முறையே திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றும் மூன்று அல்லது அதற்கதிகமாக மாவட்டங்களில் தனது அதிகார வரம்பைக் கொண்டு அமைந்தன. இவையன்றி ஏற்கெனவே சென்னை மாநகருக்கென ஒரு வீட்டு வசதிப் பிரிவு இருந்தது. தற்போது வேலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலும் வீட்டுவசதிக் குழுக்கள் உள்ளன. இவ்வாரியம் சட்டப்படிக்கு இணைந்த கழகமாகும். இதன்கண் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்களும் மற்றும் அரசு அலுவலர் அல்லாதாரும் உறுப்பினராய் உள்ளனர். இது மாநிலத்தில் வீட்டுவசதி நடவடிக்கைகளைக் குறித்துத் திட்டமிட்டு அவற்றை ஒருங்கிணைத்து வீட்டுவசதித் திட்டங்களை மிக விரைந்தும் திறமையுடனும் செயற்படுத்தப்படுவதற்கு உறுதி செய்ய முடிகிறது. முன்னர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவு தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் மாற்றப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்கள் தவிர, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியுடன், நடுத்தர வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதி, நிலம் கையகப்படுத்தலும் மேம்படுத்தலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டுவசதித் திட்டம் ஆகியன போன்ற பல திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டன.

2. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதி அளிக்கும்பொருட்டு அதிக கவனம் செலுத்தப்பட்டது. சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும்பொருட்டு மாநகரிலுள்ள குடிசைப்பகுதிகளை ஏழாண்டு காலத்திற்குள் ஒழித்து அவற்றுக்குப் பதிலாகப் புதிய பன்மாடிக் கட்டிடங்கள் கட்டித்தரும்பொருட்டு இவ்வரசு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் இதுவரை கவனிக்கப்பட்டுவந்த குடிசைப்பகுதிகள் மாற்றுப் பணி, அதற்குரிய பணியாளர்கள் சொத்துக்க்ள், பொறுப்புக்களுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இவ்வாரியம் சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள் மாற்றுப் பணியை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும்பொருட்டு தமிழ்



நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்றுதல்) சட்டம் எனப்படும் சட்டமொன்றையும் இவ்வரசு இயற்றியுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் குடிசை மாற்று வாரியம் ரூ. 1,321.88 இலட்சம் செலவில் குடிசைப் பகுதிகளில் பன்மாடிக் கட்டிட அங்கணங்கள் 12,978-ஐக் கட்டியுள்ளது. நடப்பாண்டில் 4,000 அங்கணங்கள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. வெளியூர்களில் குடிசை மாற்றுப் பணி தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கவனிக்கப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் ஆண்டு வருமானம் ரூ. 4,200 மேற்படாத மக்களின் நலனுக்காக மலிவு விலையிலான சிறப்பு வீட்டு வசதித் திட்டமும் கொண்டுவரப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 176 வீடுகள் கட்டித் தரப்பட்டன. 1975-76-ல் இத்திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் 2,153 வீடுகளைக் கட்டிடத் தரத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

3. வீட்டு வசதித் திட்டம் ஒவ்வொன்றையும் குறித்துச் சுருக்கமான அறிக்கை அடுத்து வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

4. தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்.—தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்கட்கு அருகாமையிலேயே மலிவு வாடகையில் நல்ல வீட்டு வசதி அமைத்துத் தருவதென்ற சமூகப் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. எனவே, அதற்காக தொழிற்சாலைத் தொழி லாளருக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இது வாடகை வீட்டு வசதித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் அரசுத் துறை, தனியார்துறை ஆகிய இரண்டு வழியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அவை குறைந்த வாடகையில், அதாவது 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவை, ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்படவில்லையென்றால் மிக மலிவான வாடகையிலும், தொழிலாளர் ஒருவரின் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 500-க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப் படுகின்றன. வீடு கட்டுவதற்காகும் செலவு உச்சவரம்பில் கடனாக 50 சதவீதம், மானிய உதவியாக 25 சதவீதம் என்னும் வீதாச்சாரத்தில் தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்த உச்சவரம்புச் செலவில் எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டு வரும் செலவும் அந்தந்தத் தனிப்பட்ட தொழிலதிபர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு கடனுதவி அளிக்கும் பொருட்டு பின்வரும் செலவு உச்சவரம்புகள் விதிக்கப் பட்டுள்ளன; இரட்டை மாடிக் கட்டிடங்களில் இரண்டு சிறிய அறைகள் கொண்ட அங்கணம் ஒன்றுக்கு ரூ. 5,350; பன்மாடிக் கட்டிடங்களில் இரண்டு

அறைகொண்ட சிறிய அங்கணத்திற்கு ரூ. 6,050; இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 7,600, பன்மாடிக் கட்டிடத்தில் முறையான அளவிலான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 8500, தொழிலதிபர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் தங்கள் பணியாளரது எண்ணிக்கையில் நான்கு சதவீதம் பேருக்காகிலும் வீட்டு வசதி அளிக்கவேண்டுமென சிறப்பு வேண்டுகோள் விடப் பட்டுள்ளது.

1974-75 ஆம் ஆண்டில் தனியார் துறையில் மொத்தம் ரூ. 66 இலட்சம் செலவில் 540 வீடுகள் கட்டுவதற்கு கீழ்க் காணும் நிறுவனங்களில் வீட்டு வசதித் திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டிருக்கின்றன :-

1. அருணா சுகர்ஸ் லிமிடெட்.
2. கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட், மேட்டூர் அணை.
3. சக்தி சுகர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
4. தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்.
5. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர்.
6. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை.
7. வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வேலூர்.

கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் ரூ. 2.19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 30 அங்கணங்களைக் கட்டித் தருவதற்கு பொதுத் துறையில் வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு வசதித் திட்டத்திற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், வீட்டு வசதி வாரியத்தின் மூலம், பசுமலையில் ரூ. 15.18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 218 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும் கருதப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பொதுத் துறையில் இத்திட்டத்திற்கு ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையில், தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு மானியமும், கடனும் வழங்குவதற்கு ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகளிலும் 1975-76-ல் 170 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் திட்ட காலங்களில் எய்திய சாதனைகள் பின்வருமாறு.

| | பொதுத் துறை. | கூட்டுறவுத் துறை. | தனியார் துறை. |
|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,998 | 2,055 | 278 |
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்). | 182 43 | 94·27 | 7·34 |
| 1966-67 முதல் 1968-69 வரையிலான ஆண்டுத் திட்டங்களின்போது கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 327 | 561 | .. |
| 1966-67 முதல் 1968-69 வரையில் செய்த செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | 28.62 | 25·46 | .. |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 258 | 470 | 80 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) செய்த செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | 25·28 | 15·63 | 8 78 |
| 1974-75 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்). | 7·00 | .. | 11·16 |
| 1974-75-ல் (1974 டிசம்பர் வரை) செலவு செய்த தொகை (ரூ. இலட்சத்தில்). | 3·02 | .. | .. |
| 1974-75-ல் (1974 டிசம்பர் வரையில்) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | .. | இல்லை. | 120 |
| 1975-76 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு .. | 3·00 | .. | 7·00 |
| 1975-76 திட்ட இலக்கு .. .. .. | 30 | .. | 140·00 |



### 5. தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதித் திட்டம்.

மலைத் தோட்ட அதிபர்கள் தமது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, அவர்களுக்குக் கடனுதவி வழங்கும்பொருட்டு இந்திய அரசால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் தொழிற்சா[illegible] தொழிலாளருக்கான மலிவு வீட்டுவசதித் திட்டத்தின் அமைப்பு முறை

போன்ற அமைப்பில், மானியவுதவி பெறும் திட்டமாக 1—4—1966 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதனை 1970-71 ஆம் ஆண்டிலிருந்து, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகக் கருத இந்திய அரசு முடிவு செய்தது.

இத்திட்டத்தின் கீழ், இரண்டு அறை கொண்ட சிறிய வீடு ஒன்று கட்டுவதற்குச் செலவு உச்சவரம்பு ரூ. 3,200 ஆகும். திருத்தியமைத்த மத்தியத் திட்டத்தின்கீழ், உச்சவரம்புச் செலவுத் தொகையில் 50 சதவீதம் கடனும், 37½ சதவீதம் மானியமும் பெறுவதற்கு மலைத்தோட்ட அதிபர்கள் தகுதியுடையவர்களாவர். இம்மாநிலத்தில், இத்திட்டத்தின்கீழ் இதுவரையில், தகுதி வாய்ந்த தோட்டத் தொழிலாளர்களில் 97 சதவீதம் பேருக்கு வீட்டு வசதியளிக்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 60 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 61,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

II. தோட்டத் தொழிலாளருக்கான மலிவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், திட்டக் காலத்தில் எய்திய சாதனை.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 195 | வீடுகள். |
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பயன் படுத்தப்பட்ட தொகை. | ரூ. | 3·72 | இலட்சம் |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கம். | ரூ. | 10 | இலட்சம். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட திட்ட இலக்கு. | | 440 | வீடுகள். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1969–74) செலவு செய்த தொகை. | ரூ. | 2·62 | இலட்சம். |
| 1969–74 நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 78 | வீடுகள். |
| 1974–75 ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | ரூ. | 2·20 | இலட்சம். |
| 1974–75 (1974 டிசம்பர் வரை) செலவு செய்த தொகை. | ரூ. | 0·13 | இலட்சம். |



| | | | |
|---|---|---|---|
| 1974–75 (1974 டிசம்பர் வரை) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | | 42 | வீடுகள். |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு. | ரூ. | 0·61 | இலட்சம் |
| 1975–76 ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு. | | 60 | வீடுகள். |

6. குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம்.

(i) இத்திட்டம் 1955-56-ல் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாலும், அதன் கூட்டுறவுப் பிரிவாலும் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்படாதவர்களின் நலனுக்கென இது வகுக்கப்பட்டுள்ளது.

(ii) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்.—ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்படாத குறைந்த வருவாயினரின் நலனுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டித் தருகிறது. வீட்டு வசதி வாரியம் இவ் வீடுகளைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில், தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கித் தருகிறது. கட்டிடச் செலவில் 20 சதவீதம், அது ஒதுக்கப்படுவதற்கு முன்பே வசூலிக்கப்பட்டு விடுகிறது; எஞ்சிய 80 சதவீதம், வீடுகள் யாருக்கு ஒதுக்கித் தரப்பட்டதோ அவர்களால் 20 ஆண்டு காலத்தில் தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். 1975-76-ல் 150 வீடுகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றைத் தவிர, வீட்டுவசதி வாரியம் தனது நிதியிலிருந்து, இத் திட்டத்தின் கீழ் 1,205 வீடுகளைக் கட்டக் கருதியுள்ளது.

(iii) கூட்டுறவுப் பிரிவு.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்கிவருகிறது. தற்போது கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அனைத்தும் தலைமைச் சங்கமான தமிழ் நாடு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் நிதியைக் கொண்டு, வீடு கட்டக் கடன்கள் வழங்குகின்றது. எனவே, கூட்டுறவுத் துறையின்கீழ், குறைந்த வருவாய்த்

M—*cont.*

PAGES

MOTION(S)—*cont.*

Leave of absence to Thiru O. N. Sundaram, M.L.A. ... 333

Question hour, suspension ... ... ... ... 1, 311

MUNUSAMI, THIRU R. R.—

Budget, 1975-76, Voting—

Community Development Projects, etc. ... ... 344—348

MUTHIAH, THIRU M.—

Budget, 1975-76, Voting—

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 70—74

MUTHUVEL, THIRU N.—

Budget, 1975-76, Voting:

Motor Vehicles Acts—Administration ... ...

Road Transport Services ... ... ... ...

Stationery and Printing ... ... ... ...

Capital Outlay on Road Transport Services ...

539—542

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 51—54

N

NALLASAMY, THIRU S.—

Budget, 1975-76, Voting—

Labour including Factories Housing ... ... ... ... ... ... 161

NARAYANASWAMY, THIRU MANNAI P.—

Budget, 1975-76, Voting—

Community Development Projects, etc. ... ... 335, 337—338 425, 426—436, 437



N—*cont.*

PAGES

NARAYANASWAMY, THIRU M. V.—

Budget, 1975-76, Voting:

Community Development Projects, etc. ... ... 335, 337—338 4000—404

Labour including Factories, Housing ... ... 144—150 151, 152

NEDUNCHEZHIYAN, DR. V. R.—

Question hour, suspension (M) ... .. ... 311

O

OBITUARY REFERENCE—

Appu, Thiru A. ... ... ... ... ... 455

P

PALANIAPPAN, DR. S. M.—

Budget, 1975-76, Voting:

Labour including Factories, Housing ... ... 209—212

PALANISAMY, THIRU N. K.—

Handloom goods, export ... ... ... ... 472

Milk, supply in Polythene bags ... ... ... 483—484

Rehabilitation Commissioners' Conference ... ... 484—486

Yarn and cloth, accumulation ... ... ... 472—474

PAGES

P—*cont.*

PALANISAMY, PULAVAR C.—
Budget, 1975-76, Voting:
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 556—560, 572

PANDURANGAM, THIRU C.—
Budget, 1975-76, Voting:
Welfare of Scheduled Tribes and Castes, etc. ... 27—32

PAPERS LAID ON THE TABLE—
Assurances Committee, eighth report ... ... 251
Commercial Taxes and Religious Endowments, notification ... ... ... ... ... 250
Community Development and Panchayats Development, 1975-76, policy note ... ... ... 448
Community Development Demand, 1975-76, Financial Supplement ... ... ... ... ... 448
Co-operative Land Development Bank Act, 1934, notification ... ... ... ... ... 609
Companies Act, 1956, review ... ... ... 447
Electricity Board, Public Undertakings Committee's report ... ... ... ... ... ... 610
Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, notification ... ... ... ... 250
General Sales Tax Act, 1959, notification ... ... 447
Labour Demand, Minister's speech ... ... ... 251
Labour including Factories, Estimate Committee's report ... ... ... ... ... ... 251
Labour, review ... ... ... ... ... **251**



P—*cont.* PAGES

APERS LAID ON THE TABLE—*cont.*
Motor Vehicles Acts—Administration, 1975-76, policy note ... ... ... ... ... ... 609
Nationalised Transport, review ... ... ... 609
Prohibition Act, 1937, notifications ... ... ... 447
Road Transport, review ... ... ... ... 609
Road Transport Services, policy note ... ... 609
Transport Department, performance budget ... ... 609

ERIASAMY, THIRU K.—
Budget, 1975-76, Voting:
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 549—552

ONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1975-76, Voting:
Labour including factories, Housing ... ... 121
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ..
Capital Outlay on Road Transport Services ... ... 499, 568—572,
Welfare of the Scheduled Tribes and Castes, etc. 573—574
Leave of absence to Thiru O. N. Sundaram, M.L.A. (M) ... ... ... ... ... ... 16

NNUMALAI, THIRU T.— 333
Budget, 1975-76, Voting:
Welfare of the Scheduled Tribes and Castes, etc. **13, 14**

PAGES

R

RAJA, THIRU A. M.—

Budget, 1975-76, Voting:

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 560—563, 564—565

RAJAGOPAL, THIRU V.—

Budget, 1975-76, Voting :

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 82—85

RAJAH PILLAI, THIRU V. K.—

Budget, 1975-76, Voting :

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 509—517, 518—520

Rice, production from tapioca ... ... ... 479—481

RAJANGAM, THIRU N.—

Budget, 1975-76, Voting :

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 2, 99—101, 102, 104—113

Ceylon repatriates, employment in Gudalore taluk (C.A. St.) ... ... ... ... ... ... 488—491



R—*cont.*

RAJARAM, THIRU K.—

Budget, 1975-76, Voting—

Labour including Factories Housing ... ... 120—122, 151, 153—154, 207—208, 230—250

RAMACHANDRAN, THIRU S.—

Budget, 1975-76, Voting—

Community Development Projects, etc. ... ... 415
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 496, 497, 498, 499—509, 527, 535, 536—537, 582, 585—591, 592, 593, 594, 595—596, 597—605, 606, 607.

Transport Corporations, non-supply of accounts to Members (Point of order) ... ... ... 494—496

RAMAN, THIRU M.—

Budget, 1975-76, Voting—

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 75—78

RATHINASABAPATHY, THIRU M.—

Budget, 1975-76, Voting—

Community Development Projects, etc. ... ... 385—389
Labour including Factories, Housing ... ... 177

## S

PAGES

SADIQ PASHA, THIRU S. J.—
Fall in power supply from Neyveli and consequent lay-off in industries (A.M.) ... ... ... 314—319
Increased wages to Electricity Board workers (C.A. St.) ... ... ... ... ... 331, 332, 334
Power cut (St.) ... .. ... ... 122—125

SATHIAVANIMUTHU, THIRUMATHI—
Budget, 1975-76, Voting—
Welfare of the Scheduled Castes and Tribes, etc. 91—99, 101, 102, 103

SEENIVASAN, THIRU P.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. ... ... 417—418, 421, 428, 436, 437, 440.
Labour including Factories, Housing ... ... 150—164, 179, 185, 247.

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. ... ... 415
Question hour, suspension (M) ... ... 1

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. .. 382—385
Thiruvalluvar portrait in Government offices ... 455—463

SOMASUNDARAM, THIRU N.—
Budget, 1975-76, Voting—
Welfare of the Scheduled Tribes and Castes, etc. 38—46



PAGES

S—*cont.*

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. ... ... 336, 440
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 496
Cashew, intensive cultivation in Tiruchirappalli ... 474—475
Closure of operation theatre of Tiruchirappalli Head Quarters Hospital (C.A.) ... ... ... 321, 327
Harijan students hostel (Kulithalai), non-supply of egg and milk ... ... ... ... 487—488
Krishnaveni Textile Mills (Coimbatore), representation ... ... ... ... ... ... 470—471
Tapioca cultivation, Coimbatore district ... ... 475

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. ... 373—378
Welfare of the Scheduled Tribes and Castes, etc 78—82

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1975-76, Voting—
Labour including Factories, Housing ... ... 120—121, 181, 204, 205, 245, 246
Welfare of the Scheduled Tribes and Castes, etc. 3, 11
Power cut (St.) ... ... ... ... ... 124—125
Question hour, suspension (Point of order) ... 325—326

PAGES

S—*cont.*

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc. ... ... 397—398
Motor Vehicles Acts—Administration
Road Transport Services ... ...
Stationery and Printing ... ... ...
Capital Outlay on Road Transport Services ... ...
... 534—536, 537—538, 539.
Public Undertakings Committee, Report on Audit of Electricity Board ... ... ... ... 491—492

SUPPU, THIRU K.—
Budget, 1975-76, Voting—
Labour including Factories, Housing ... 216—223

SURENDRAN, THIRU M.—
Budget, 1975-76, Voting—
Community Development Projects, etc.
Motor Vehicles Acts—Administration ... 336
Road Transport Services ... ...
Stationery and Printing ... ... ...
Capital Outlay on Road Transport Services ... ... ...
... 497
Welfare of the Scheduled Tribes and Castes, etc. 46—51

SURULIVEL, THIRU M.—
Budget, 1975-76, Voting—
Motor Vehicles Acts—Administration
Road Transport Services ... ...
Stationery and Printing ... ... ...
Capital Outlay on Road Transport Services ... ... ...
... 530—534



PAGES

T

TANGAMANI, THIRU K. T K.—
Budget, 1975-76, Voting:
Community Development Projects, etc. — — 433, ,439
Labour including Factories, Housing ... ... 125—144 247
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Services ... ... ...
Stationery and Printing ... ... ...
Capital Outlay on Road Transport Services ... 497, 498, 575, 585
Welfare of Scheduled Tribes and Castes, etc. ... 14, 15, 16, 18, 102—109 110

Burglary at Thiruvanmiyur (Point of information). 493

Fall in power supply from Neyveli and consequent lay-off in industries (A.M.) ... ... ... 312—314, 318.

TAPIOCA—
... 475
Cultivation, Coimbatore district ... ... 475—479
Package scheme in Killiyur Panchayat ... ...

THIRUVENGADAM, THIRU THOPPUR—
Budget, 1975-76, Voting:
Labour including Factories, Housing ... ... 165—170
Estimates Committee, Report on Labour including Factories ... ... ... 1

PAGES

V

VADIVEL, THIRU S.—

Budget, 1975-76, Voting:

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 20—26, 39, 41—42,

VEERASAMI, THIRU N.—

Budget, 1975-76, Voting:

Labour including Factories, Housing ... ... 159

Welfare of the Scheduled Tribes and Castes, etc. 17

Death due to accident at a public meeting in North Arcot district, assistance to family from C.M's Fund (Point of information) ... ... 492—493

Increased wages to Electricity Board workers (C.A.) ... ... 330—332, 334, 335

VENCATACHELLUM, THIRUMATHI JOTHI—

Budget, 1975-76, Voting:

Community Development Projects, etc. ... 399—400

VENKATASWAMY, THIRU B.—

Multi-Media Festival, Adiyamankottai ... 482—483

W

WAHAB, THIRU K. A.—

Budget, 1975-76, Voting—

Community Development Projects, etc. ... 336, 359—365



PAGES

W—*cont.*

WAHAB, THIRU K. A.—*cont.*

Budget, 1975-76, Voting:—*cont.*

Labour including Factories, Housing ... ... 199—209

Madhavaram Milk Project, loans ... ... 484

Y

YARN—

Yarn and Cloth, accumulation ... ... ... 472—474

D
V2.11,31 N75
31N75-6932

61706